Kovitoor Digital Library

பிரபுலிங்கலீலை

மூலமும் உரையும்



A.No. 16233
Q23

மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு

Koviloor Digital Library

Koviloor Digital Library

2/5

வெளியீடு எண்: 82

நல்லாற்றூர், துறைமங்கலம்

கற்பனைக் களஞ்சியம்

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய

பிரபுலிங்க லீலை

மூலமும் உரையும்

உரையாசிரியர்

அடிகளாசிரியர்

KOVILOOR ANDAVAR
A. No. 16233
LIBRARY, KOVILOOR

மயிலம் பொம்மபுர ஆதீனம்

Koviloor Digital Library

நூல் குறிப்பு

தலைப்பு	:	நல்லாற்றூர் - துறைமங்கலம் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியருளிய **பிரபுலிங்க லீலை** மூலமும் உரையும்
ஆசிரியர்	:	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்
முதற்பதிப்பு	:	2012
உரிமை மற்றும் வெளியீடு	:	மயிலம் பொம்மபுர ஆதீனம் மயிலம் & பொம்மையபாளையம்
பொருள்	:	இலக்கியம்
தாள்	:	70 GSM மேப்லித்தோ தாள்
அளவு	:	1/8 Demmy size
எழுத்து	:	12 புள்ளி
பக்கங்கள்	:	900 பக்கங்கள்
விலை	:	ரூ. 600/-
அச்சிட்டோர்	:	ஸ்ரீ மாருதி லேசர் பிரிண்டர்ஸ் 173, பீட்டர்ஸ் ரோடு, இந்திரா கார்டன் சென்னை - 600 014. 28524256

Koviloor Digital Library

உ

மயிலம் பொம்மபுர ஆதீனம்,
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்,
மயிலம் திருமடத்தில் எழுந்தருளியுள்ள
ஸ்ரீவிநாயகர், ஸ்ரீபாலசித்தர் ஜீவசமாதி மற்றும்
ஸ்ரீவள்ளி, தெய்வானை உடனுறை
ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி முதலிய
திருச்சந்நிதிகளுக்கு
ஸ்ரீகர வருடம் தைத்திங்கள் 23ஆம் நாள்
(06-02-2012) திங்களன்று நடைபெற்ற
மகா கும்பாபிடேக விழாவின்போழ்து
வெளியிடப் பெற்றது.

Koviloor Digital Library

கற்பனைக் களஞ்சியம்

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய

பிரபுலிங்க லீலை

என்னும் இந்நூல்

மயிலம் பொம்மபுர ஆதீனம் 19ஆம் பட்டம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்களின்

திருவடித் தாமரை மலர்களுக்குக்

காணிக்கையாக அர்ப்பணிக்கப் பெறுகின்றது.

Koviloor Digital Library

2/5


உ
ஸ்ரீ முருகன் துணை
ஸ்ரீ பாலசித்தர் பதமலர் போற்றி
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க

குருமரபு வாழ்த்து

பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்
வீரசைவ பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த
சங்குகன்னப் பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன்
வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற்
குருமரபு சிறந்து வாழி.

Koviloor Digital Library

Koviloor Digital Library



திருக்கயிலாய பரம்பரை
மயிலம் பொம்மபுர ஆதீனம்
மயிலம் திருமடம்

ஸ்ரீ வள்ளி தெய்வயானை உடனுறை
ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி

Koviloor Digital Library


Koviloor Digital Library



திருக்கயிலாய பரம்பரை
மயிலம் பொம்மபுர ஆதீனம்
மயிலம் திருமடம்
ஆதீன குரு முதல்வர் ஸ்ரீ பாலசித்தர்

Koviloor Digital Library

Koviloor Digital Library



திருக்கயிலாய பரம்பரை
மயிலம் பொம்மபுர ஆதீனம்
பொம்மைய பாளையம் திருமடம்
இரண்டாம் பட்டம் குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஆதி சிவஞான பாலய சுவாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library



திருக்கயிலாய பரம்பரை
மயிலம் பொம்மபுர ஆதீனம்
பத்தொன்பதாம் பட்டம் குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library



திருக்கயிலாய பரம்பரை
மயிலம் பொம்மபுர ஆதீனம்
இருபதாம் பட்டம் குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library



நல்லாற்றூர் - துறைமங்கலம்
கற்பனைக் களஞ்சியம்
ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

மயிலம் - பொம்மபுர ஆதீனத்தைத் தோற்றுவித்தருளியவர் மற்றும் அவர்தம்வழி குரு மரபினர்

வ.எண்	குருமகா சந்நிதானங்கள்	அருளாட்சி முறைமை	அருளாட்சி செய்த ஆண்டுகள்		குருபூசை நட்சத்திரம்
1.	ஸ்ரீ பாலசித்தர்	(ஆதீனத்தை தோற்றுவித்த முதல் குரவர்) 500 ஆண்டுகளுக்குமேல்			ஆனி - திருவாதிரை
2.	ஆதிசிவஞானி தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	2ஆம் பட்டம்	கி.பி.12 – 17ஆம் நூற்றாண்டு வரை		வைகாசி - விசாகம்
3.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	3ஆம் பட்டம்	குன்னம்பாளையம்	கி.பி. 1645 – 1695	தை - திருவாதிரை
4.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	4ஆம் பட்டம்	சிதம்பரம்	கி.பி. 1695 – 1727	கார;த்திகை - திருவாதிரை
5.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	5ஆம் பட்டம்	கந்தப்பனூர்	கி.பி. 1727 – 1733	மாசி - சதயம்
6.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	6ஆம் பட்டம்	கரையாம்புத்தூர்	கி.பி. 1733 – 1746	வைகாசி - பூசம்
7.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	7ஆம் பட்டம்	மாத்தூர்	கி.பி. 1746 – 1761	மாசி - பூராடம்
8.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	8ஆம் பட்டம்	குமாரசார்வாய்	கி.பி. 1761 – 1770	புரட்டாசி - கார;த்திகை
9.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	9ஆம் பட்டம்	சிவகுன்றம்	கி.பி. 1770 – 1773	வைகாசி - மூலம்
10.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	10ஆம் பட்டம்	விருத்தாசலம்	கி.பி. 1773 – 1784	மார;கழி - சித்திரை
11.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	11ஆம் பட்டம்	சிதம்பரம்	கி.பி. 1784 – 1809	புரட்டாசி - சுவாதி
12.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	12ஆம் பட்டம்	கல்யாணபட்டினம்	கி.பி. 1809 – 1817	வைகாசி - பூரட்டாதி
13.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	13ஆம் பட்டம்	விருத்தாசலம்	கி.பி. 1871ல்; 18 நாட்கள் மட்டும்	வைகாசி - சுவாதி
14.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	14ஆம் பட்டம்	சிதம்பரம்	கி.பி. 1871 – 1843	புரட்டாசி - ரேவதி
15.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	15ஆம் பட்டம்	நல்லாற்றூர்	கி.பி. 1843 – 1887	சித்திரை - புனர;பூசம்
16.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	16ஆம் பட்டம்	நல்லாற்றூர்	கி.பி. 1887 – 1916	ஆடி - பூராடம்
17.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	17ஆம் பட்டம்	நல்லாற்றூர்	கி.பி. 1916 – 1928	மாசி - அசுவினி
18.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	18ஆம் பட்டம்	சிதம்பரம்	கி.பி. 1928 – 1965	புரட்டாசி - ஆயில்யம்
19.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	19ஆம் பட்டம்	பொம்மையபாளையம்	கி.பி. 1965 – 2011	ஆனி - உத்திராடம்
20.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	20ஆம் பட்டம்	மயிலம்	கி.பி. 2011 முதல்	

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

ஸ்ரீ முருகன் துணை

ஸ்ரீ பாலசித்தர் பதமலர் போற்றி

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க

மயிலம் பொம்மபுர ஆதீனம்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்

மயிலம் - பொம்மையபாளையம்

விழுப்புரம் மாவட்டம்.

அருண்மிகு குருமகா சந்நிதானம் 20ஆம் பட்டம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்கள்

ஆசியுரை

உயிரின வரலாற்றில் அறிவு, ஆற்றல், ஆனந்தம் முதலியன வற்றால் சிறந்து விளங்குவது மனித உயிரினம். இவ்உயிர்கள் ஈடேற்றம் பெற்று நன்மை அடைவதற்கென்றே ஞானியர் பலர் அவ்வப்பொழுது திருவவதாரம் செய்துள்ளனர். இத்தகு ஞான பரம்பரையில் மண்ணுலகம் உய்ய வந்த மகாசித்தபுருடராக ஸ்ரீ பால சித்தர் திருவவதாரம் செய்தார். இவரது ஞான சந்தானத்தில் வந்தவர் ஆதிஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் ஆவார். இவரது அருட்சீடராக விளங்கியவர் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார்.

சிவப்பிரகாச சுவாமிகளால் அருளிச் செய்யப்பெற்ற நூல்கள் முப்பத்து இரண்டு ஆகும். காப்பியம், தத்துவம், தோத்திரம் முதலியன இவற்றுள் அடங்கியுள்ளன. காப்பிய வகையில் இவர் இயற்றியது பிரபுலிங்க லீலை என்பதாகும். தமிழ் அறிஞர் உலகம் இக்காப்பியத்தை காவிய இரத்தினம் என்று போற்றிப் பாராட்டுகின்றது.

பிரபுலிங்க லீலையை உரையுடன் வெளியிட வேண்டும் என்று நமது ஞானகுரு 19ஆம் பட்டம் சுவாமிகள் திருவுள்ளம் எண்ணியது. இதற்கு தகுதியுடையவரைச் சிந்திக்கும்பொழுது குகையூர் சித்தநாதேசுவரர் ஆதீனம் வித்துவான் திரு. அடிகளாசிரியர் நினைவு வந்தது. இவர் இலக்கியம், இலக்கணம், தத்துவம் போன்ற துறைகளில் வல்லவர். நமது ஆதீனப் புலவராகவும் ஆவார். ஸ்ரீ சந்நிதானங்களின் திருவருள் ஆணையினை ஏற்று உரை எழுதத் தொடங்கினார் திரு. அடிகளாசிரியர் அவர்கள்.

Koviloor Digital Library

வயது முதிர்ந்த திரு. அடிகளாசிரியருக்கு உதவியாக கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச் மரபில் வந்த திரு. வித்துவான் உ.கருணைச் சிவப்பிரகாசம் அவர்கள் சுவாமிகளின் திருவுள்ளப்படி உதவியாளராக அமைந்தார். இவரும் நமது ஆதீனப் புலவர். இம்முறையில் பிரபுலிங்க லீலை உரை விளக்கம் உருவாயிற்று.

எனவே வயது முதிர்ந்த காலத்தில் உரை வரைந்த பெருந்தகையாளர் திரு. அடிகளாசிரியர் அவர்கள் நமது பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர் ஆகின்றார். உதவிபுரிந்த திரு. வித்துவான் உ.கருணைச்சிவப்பிரகாசம் அவர்கள் நமது அன்பிற்குரியவர் ஆகின்றார்.

பிரபுலிங்க லீலை காப்பிய நோக்கில் அமைந்து உயர்ந்த தத்துவங்களைக் கூறுவது. இதில் வீரசைவ நெறிகள் இலைமறை காயாக அமைந்துள்ளன. தமிழ் உலகமும் சமய உலகமும் இதனை கற்று பயனடைவார்கள் ஆகுக.

இந்நூல் அச்சாகும்பொழுது உடனிருந்து உதவிய அன்பர்கள் அனைவரும் நமது பாராட்டுக்குரியவர்கள். இவ்வரிய இலக்கி யத்தை சீரிய முறையில் அச்சிட்ட மாருதி அச்சக உரிமையாளர் திருமதி கலைவாணி ஸ்ரீதரன் அவர்கள் எல்லா நலன்களையும் பெற திருவருளும் குருவருளும் துணைபுரிவதாகுக.

மயிலம் பொம்மபுர ஆதீனம் ஒல்லும் வகையில் எல்லாம் சமயப் பணி, சமுதாயப்பணி முதலியனவற்றை செவ்வனே செய்து வருவதை அனைவரும் அறிவர். இம்முறையில் மயிலம் ஸ்ரீ வள்ளி தெய்வானை உடனுறை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருச்சந்நிதி குடமுழுக்கு விழா மலராக பிரபுலிங்க லீலை உரையுடன் வெளிவருகின்றது. இந்நூலால் மக்களின் மெய்ஞானம் பரிணமிக்கப் பெற்று ஆன்ம ஈடேற்றம் உற்று பல்வளங்கள் பெற மயிலந்தண் மாமலை ஸ்ரீ முருகன் திருவருளையும் நமது ஆதீன ஆதி குரு ஸ்ரீ பாலசித்தர், ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் குருவருளையும் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

- ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

20ஆம் பட்டம்

Koviloor Digital Library

உரை ஆசிரியரின் முன்னுரை

தோற்றுவாய்

வீரசைவ சமயத்தவர் சிவ பரம்பொருளை இலிங்கம் என்றும் உயிர்களை அங்கம் என்றும் வழங்குவர். இலிங்கத்தின் செயல்களை இலிங்கலீலை என்றும்; அங்கத்தின் செயல்களை அங்கலீலை என்றும் வழங்குவர். பிரபு என்னும் அல்லமாப்பிரபு தேவரின் விளை யாட்டினைக் கூறுவதால் இவ்விலக்கியம் பிரபுலிங்கலீலை என்றாயிற்று. அல்லம தேவரை சிவபரம் பொருளாகவே, வீரசைவ சமயத்தவர் கருதி வந்தனர். அவரை உயிர்வர்க்கமாகக் கருதவில்லை. எனவே பிரபுவாகிய இலிங்கத்தின் விளையாட்டினைக்கூறும் நூல் 'பிரபுலிங்க லீலை'யாகும்.

உலகத்தைத் தோற்றுவித்து ஒடுக்கும் இறைவனை இலிங்க மென்பர். லி-ஒடுக்கம்; கம்-தோற்றம். இலிங்கம் என்ற ஒரு சொல்லை முதலாக வைத்துக் கொண்டே, மெய்கண்ட தேவர் சிவஞான போதத்தை எழுதினார் என்க. அவர் 'இலையித்த தன்னில் இலையித்ததாம்' என்று கூறுவதை உணர்க. உலகப் பொருள்கள் எல்லாம் தன்னுடையதாய் விளங்கத் தான் அவற்றின் மேலாய் விளங்கும் ஆற்றலை 'பிரபுத்துவ ஆற்றல்' என்பர். அவ்வாற்றலோடு கூடிய இறைவனை 'பிரபுலிங்கம்' என்பர். அத்தகைய பிரபுலிங்கத்தின் அவதாரம் என்று கூறப்படும் அல்லமாப்பிரபு தேவரின் திருவிளையாட்டை இந்நூலால் அறிந்து கொள்ளலாம்.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடையில் சைவமும் வீரசைவமும் இந்திய நாட்டில் வளரத் தொடங்கின. தமிழ்நாட்டிலே, பெரிய புராணம் எழுதப்பட்டு அதனால் எழுந்த பக்தி வெள்ளம், கன்னட நாட்டிலும் சென்று பாய்ந்தது. இவ்விரண்டு காரணங்களால் கன்னட நாட்டில் சைவமும், வீரசைவமும் வளரத் தொடங்கின.

மேலே சொன்ன இரண்டு காரணங்களன்றி அந்நாட்டிலும், வசவர், சித்தராமர் அல்லமாப்பிரபுதேவர் முதலானவர் தோன்றி மங்கிக் கிடந்த வீரசைவ சமயத்தை நன்றாக வளர்த்தனர். அக்கன்னட நாட்டில் வீரசைவருக்கு மிக உயர்ந்த இடங்கள் மூன்றாம். அந்நாட்டின் வடக்கில் கல்யாணபுரியும், நடுவில் சொன்னலாபுரமும், தெற்கில் பள்ளிக் காவை என்னும் வள்ளிகாவையும் அம்மூன்றிடங்களாகும். கல்யாணபுரியில் நந்திகேஸ்வரர், பசவேசர் என்னும் பெயருடனும் தோன்றி பக்தியோகம்

Koviloor Digital Library

என்னும் உண்மை நிலையை உடையவராகி விளங்கினார். சொன்னலா புரத்தில் மிருடமூர்த்தி என்று சொல்லப்பட்ட சித்தராமதேவர் தோன்றி கர்மயோகம் என்னும் உண்மை நிலையை உடையவராய் விளங்கினார் வள்ளிகாவையில் பரசிவமூர்த்தி என்று சொல்லப்பட்ட அல்லமாப்பிரபு தேவர் தோன்றி, ஞானயோகம் என்னும் உண்மை நிலையை உடைய வராய் விளங்கினார்.

இவற்றை கர்மம்-பக்தி-ஞானம் என்று முறையாக வைத்து எண்ணலாம். இம்முறையாக எண்ணும் பொழுது பக்தி நடுநாயகமாக உள்ளது. இந்நடு நாயகமாக உள்ள பக்தி; கர்மத்துக்கும் ஞானத்துக்கும் உரியதாகவுள்ளது. 'நடுவணது எய்தில் இருதலையும் எய்தும்' என்னும் நாலடியார் பாட்டை நினைவூட்டுகின்றது. பொருளுடையார்க்கு அறமும் இன்பமும் கிடைப்பதைப் போல; நடுவணதாகிய பக்தி உடையார்க்கு கர்மமும், ஞானமும் கிடைக்கும் என்ப. இதற்கேற்ப பக்தியோகமுடையராய வசவதேவர் வாழ்ந்த கல்யாணபுரியில், ஞானயோகத்தையுடைய அல்லமாப்பிரபு தேவரும், கர்மயோகத்தை யுடைய சித்தராம தேவரும் வந்து கூடி வாழ்ந்தனர் என்னும் செய்தி நினைவு கூறத்தக்கது. இம்மூவர் முதலானவர் களின் செய்திகளும் பிரபுலிங்க லீலையில் சொல்லப்பட்டுள்ளன.

பிரபுலிங்கலீலை

இப்பிரபுலிங்க லீலை என்னும் இலக்கியம், கன்னடம்-தமிழ்-தெலுங்கு- சமஸ்கிருதம்-மகராஷ்டிரம் என்னும் மொழிகளில் இயற்றப்பட்டுள்ளது. இவற்றுள் கன்னட மொழியுள் முதன்முதல் செய்தவர் "சாமரசன்" என்னும் சிறந்த கவிஞராவர். இவருடைய காலம் கி.பி.1430 திலிருந்து 1460 வரையிலிருக்கும் என்று அறிஞர் கருது கின்றனர். தெலுங்கு மொழியில் இரண்டு பிரபுலிங்க லீலைகள் உள்ளன. ஒன்று பிடுபர்த்தி சோமநாதன் என்பவரால் இரண்டு அடிகள் உள்ள செய்யுளால் செய்யப்பட்டுள்ளது. மற்றொன்று பிடுபர்த்தி பசவகவியால் சம்பு காவியமாக (உரைநடையாக) செய்யப்பட்டுள்ளது. சமஸ்கிருத பிரபுலிங்க லீலை பவிஷ்ய புராணத்திலிருந்து செய்யப்பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இப்பிரபுலிங்க லீலையின் காலம் பதினாறாம் நூற்றாண்டாகும். இதனை இயற்றியவர் விரூபாட்ச பண்டிதர் ஆவர். இவர் சென்னபசவ புராணத்தையும் இயற்றியுள்ளார். ஆனால் சில ஆராய்ச்சியாளர், பிடுபர்த்தி சோமநாதனுடைய தெலுங்கு பிரபுலிங்க லீலைக்கும், இதற்கும் ஒற்றுமை இருப்பதால் இச்சோமநாதனே

Koviloor Digital Library

சமஸ்கிருத பிரபுலிங்க லீலையையும் இயற்றி இருக்கலாம் எனக் கருதுகின்றனர். பிரம்மதாசன் என்னும் கவிஞர் மகராஷ்டிர மொழியில் 'லீலாவிஸ்வம்பர'' என்னும் பெயரால் பிரபுலிங்க லீலை கதையைக் கூறியுள்ளார். இவருடைய காலம் தெளிவாகத் தெரியவில்லை.

தமிழ்ப் பிரபுலிங்க லீலை

கன்னடப் பிரபுலிங்க லீலையை விஜயநகர அரசனாகிய 'இம்மடி பிரபுடதேவ மகாராஜன்' என்பான் தமிழிலும், தெலுங்கிலும் மொழி பெயர்க்கச் செய்தான் என்று கன்னட மொழியின் ஆராய்ச்சி எழுதிய 'ரைஸ்' என்பவர் குறிப்பிடுகின்றார். இவ்வரசரின் காலம் கி.பி. 1419 திலிருந்து 1447 ஆகும். இவ்வரசன் இயற்றுவித்த தமிழ்ப் பிரபுலிங்க லீலை என்ன ஆயிற்று என்பது இதுவரை தெரியவில்லை. இவை அல்லாமல் வேறு தெலுங்கு பிரபுலிங்க லீலை உள்ளன. அவற்றின் காலம் ஏறக்குறைய கி.பி.1520 என்று அறிஞர் கருதுகின்றனர். பிரபுடதேவ மகாராஜன் இயற்றுவித்த தமிழ்ப் பிரபுலிங்க லீலையைத் தவிர-தவத்திரு துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளியற்றிய தமிழ்ப் பிரபுலிங்கலீலை மிகச் சிறப்பாக விளங்கி வருகின்றது. தமிழில் இது இரண்டாவது பிரபுலிங்க லீலை ஆகும். சிவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஆதலால் இதற்கு முன் 15ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பிரபுலிங்கலீலையே முதலாவதாகக் கருதப்படுகின்றது. சிவத்திரு- சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய பிரபுலிங்கலீலை 25 கதிகளை உடையது. 1159 பாடல்களை உடையதாகும்.

அடி

'அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே' என்பது தொல்காப்பியம். இந்நூற்பா உரையுள் பேராசிரியர் - ''மாத்திரை முதலிய உறுப்புகளால் இத்துணை மாத்திரை கொண்டது செய்யுள் என்றானும், இத்துணை அசையும் சீரும் தொடையும் கொண்டது செய்யுள் என்றானும், அளவியல் கூறி அவ் உறுப்புக்களால் வரையறுக்கப்படா. அடிஅளவே கூறு செய்யுள் புலப்பாடாம்' என்று கூறுவதை நோக்கினால் அடியின் சிறப்பினாலே பாட்டுகள் வரையறுக்கப்படும் என்னுஞ் செய்தி புலனாகின்றது. வட மொழியாளரும் செய்யுளை பத்தியம் என்றே கூறுகின்றனர். பாத சம்பந்தமுடையது பத்தியம் என்க. சாமரசன் இயற்றிய கன்னடப் பிரபுலிங்கலீலை ஆறு அடியால் அமைந்த சுலோகங்களையுடையது. தெலுங்கு பிரபுலிங்கலீலை இரண்டு அடி சுலோகத்தாலே அமைந்தது. தமிழில் சிவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்

Koviloor Digital Library

இயற்றிய பிரபுலிங்கலீலை நான்கு அடிகளாலே அமைந்தது. சிவப் பிரகாச சுவாமிகளும்,

நன்றிகொள் அடிகள் நான்குற நடந்துபோய்
என்றனின் நாவினின் றெழுமிச் செய்யுளான்
வென்றி கொள் அல்லமன் சீர்த்தி மென்பயன்
கன்றலிலன் பராங் கன்றை யூட்டுமால்

(பிரபுலிங்க விடயம். 17 பாட்டு)

என்று கூறும் பாட்டினைக் கருதுக.

சித்தராமய்யர்கதியிலுள்ள பாடல்கள் முறையாக குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்னும் ஐவகை அடிகளும் அமைந் திருக்கும் அழகை அறிஞர் கருதிப்பார்க்க.

பிரபுலிங்க லீலை என்ற பெயரை இந்நூற்கு எல்லோரும் வழங்கி வந்தாலும், இந்நூற்கு ''அருள் அல்லமன் அமலலீலை'' (துதிகதி 14) 'அல்லமன் திருவிளையாடற்காதை'' (மான்மியகதி 23 பாட்டு) 'அல்லமன் சரிதம் ஓதின் அறம்பொருளின்பம் வீடாம்' (மான்மியகதி 21) என்ற பெயர்களும் இதற்கு வழங்கி வருகின்றன.

துதிகதியுள் 'என் தனி நாவினின்று எழும் இச்செய்யுளான்' என்று கூறுவதைக் கருதிப் பார்த்தால் இப்பிரபுலிங்கலீலையை தன்னுடைய ஒரே நாவினாலேயே பாடியுள்ளார். பிறர் நாவினாலே பாடிய பாடல்கள் இதில் இடம் பெறவில்லை என்னும் வரலாற்றுச் செய்தி விளங்குகின்றது. சீகாளத்தி புராணம் மூவர் நாவினாலே பாடப்பட்டது என்ற செய்தியினை ஓர்க. இந்நூலின் பாடல் தொகை 1157-1158-1159 என வேறுபட்டுள்ளன.

பிரபுலிங்க லீலை உரை

திருத்தணிகை உயர்திரு.விசாகப் பெருமாளய்யரவர்கள், சரவணப் பெருமாளய்யரவர்கள் ஆகிய இருவரும் எழுதிய உரை துதிகதியி லிருந்து நான்கு கதிகளுக்கே உள்ளன. இவ்வுரை அரிய உரையாகும். ஈசூர் கணக்கு-உயர்திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் பிரபுலிங்க லீலைக்கு முற்றிலும் உரை எழுதியுள்ளார்கள். அவர் வேதாந்த நூற் பயிற்சியுடையவர். வீர சைவ நூற்பயிற்சி இல்லாதவர். அதனால் வீர சைவ கருத்துகள் உள்ள இடங்களை நன்கு விளக்கவில்லை. அதுவுமின்றி சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் இவ்வுரை சிறந்ததன்று என்று கூறிக் கொண்டிருந்ததாக முசிறி வீ. குமாரவீரய்ய

Koviloor Digital Library

ரவர்கள் கூற யான் கேட்டிருக்கின்றேன். திருப்பரங்குன்றம் திரு. நாராயணசரணர் என்பவர் பதிப்பித்த பிரபுலிங்கலீலை மூலப்பதிப்பு மிகச் சிறந்தது. அவர் பல பாடல்களுக்கு நுதலியது உரைத்தல் என்னும் அவதாரிகையை நன்றாக எழுதியுள்ளார். காஞ்சிபுரம் தவத்திரு இராமாநந்தயோகிகள் என்பவர் பிரபுலிங்க லீலைப் பாடல்களைத் தழுவி வசனநடை ஒன்றை எழுதியுள்ளார். சென்னை-உயர்திரு நாகி செட்டியாரவர்கள் பிரபுலிங்க லீலைக்கு சிறந்த குறிப்புரை ஒன்று எழுதி இருப்பதாக' வசவபுராண உரைச் சிறப்புப் பாயிரத்துள் சதுர்வேதி சிவத்தியானானந்த மகரிஷி அவர்கள் கூறியுள்ளார்கள். அது நமக்குக் கிடைத்திருந்தால் பயனுடை யதாயிருக்கும். அது கிடைக்கவில்லை. மயிலம் சிவஞான பாலய சுவாமிகள், தமிழ்க் கல்லூரி முதல்வராய் இருந்த வித்துவான் சி.துரைசாமி ஐயரவர்கள் முதல் ஐந்து கதிகளுக்கு மட்டும் உரை எழுதியுள்ளார்கள்.

என் எண்ணம்

'பிரபுலிங்க லீலை' முழுவதற்கும் நல்லஉரை ஒன்று எழுத வேண்டும் என்று நான் கருதினேன். முதலில் உரை எழுதுவதற்கு வேண்டிய கருவிகளை எல்லாம் தேடிச் சேர்க்க முற்பட்டேன். இதுவரை அச்சாகியுள்ள அச்சுப்பிரதிகள் எல்லாம் திரட்டினேன். தலைவாசல் நாட்டார் வீட்டு ஓலைப்பிரதியும், மேலூர் வீ.குமாரசாமி ஐயர் அவர்களளித்த ஓலைப்பிரதியும் முதலில் கிடைத்தது. திருப்பாதிரிப் புலியூர் தவத்திரு ஞானயாரடிகள் திருமடத்திலிருந்து இரண்டு ஓலைச் சுவடிகள் கிடைத்தன. மாங்குடி உயர்திரு பெரியசாமி ஐயரவர்கள் இல்லத்திலிருந்து ஓர் ஓலைச்சுவடிக் கிடைத்தது. மேட்டுப்பாளையம் வீ. கந்தசாமி ஐயரவர்கள் ஓர் ஓலைப்பிரதியையும், சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் எழுதிய முழு உரையுள்ள அச்சுப் பிரதியையும் என் வீடு தேடிக் கொண்டு வந்து கொடுத்து உதவினார்கள். பெங்களூரிலிருந்து உயர்திரு. உருத்திராபதியார் என்னும் தமிழ்ப் பேராசிரியர் கன்னடப் பிரபுலிங்க லீலை ஒன்றினை அனுப்பி உதவி செய்தார்கள். அச்சுப் பிரதிகளையும், ஓலைப் பிரதிகளையும் படித்துப் பார்த்து முன்னே பாட பேதங்களைக் குறித்துக் கொண்டேன். பின்னர் எனக்கு ஓய்வு கிடைத்த பொழுது எல்லாம் பிரபுலிங்கலீலை உரையினை எழுதத்தொடங்கினேன். விமலை கதி முக்காற் பகுதிவரை எழுத முடிந்தது. அதன்பின் உரை எழுத முடியாமல் அப்பணி நின்றுவிட்டது.

Koviloor Digital Library

தமிழ்ப்பல்கலைக்கழகத்திற்குச் சென்று தொல்காப்பிய ஆராய்ச்சிப் பணியினை மேற்கொண்டதாலும், அங்கிருந்து வந்தபின் உடல்நலம் குறைந்து விட்டதாலும், கைநடுக்கம் ஏற்பட்டு எழுத முடியாத நிலை ஏற்பட்டதாலும், அப்பணியைத் தொடர்ந்து செய்ய முடியாதுபோயிற்று. உடல்நலம் குறைந்து விட்டாலும், உள்ளம் பிரபுலிங்க லீலை உரை எழுதவேண்டுமென்று அடிக்கடிக் கூறிக் கொண்டே இருந்தது. நான் உரையைச் சொல்ல எழுதுவதற்குத் தக்கவர் யாராவது இருந்தால் இவ்வுரையினை எழுதி முடிக்கலாமே என்று கருதினேன். அதற்குரியவர் யார் என்று கருதிப் பார்த்தேன். அப்பொழுது என் அன்பு மாணவர் திரு.வித்துவான் உ. கருணைச்சிவப்பிரகாசம் அவர்கள் நினைவு உண்டாயிற்று. அவர் தமிழாசிரியராயிருந்து ஓய்வுப் பெற்றவர். வீரசைவ சமயத்தைச் சார்ந்தவர். தவத்திரு துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் மரபில் பிறந்தவர். தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளை நாள்தோறும் பூசித்து வருபவர். இவையேயன்றி நல்ல ஆர்வம் உடையவர் என்னும் இக்காரணங்களால் அவரைக் கொண்டு இவ்வுரை யினை எ்ழுதுவோம் என்ற முடிபுக்கு வந்தேன். உடனே இக்கருத்தை மயிலம் திருமடம் தவத்திரு. திருக்கயிலாய பரம்பரை சிவகஞ்சி மயூராசல நிவாச யதீஸ்வர கர்த்தரான மயிலம் பொம்மபுர ஆதீனம் 19ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் திருமுன்புக்கு யான் எண்ணிய கருத்தை விண்ணப்பித்துக் கொண்டேன். சந்நிதானம் அவர்கள் தலையிட்டு திரு. வித்துவான் கருணைச்சிவப்பிரகாசம் அவர்களை இயக்கிவிடவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். என் கருத்தினை திரு. கருணைச்சிவப்பிரகாசம் அவர்களுக்கும் தெரிவித் தேன். ஸ்ரீ சந்நிதானம் அவர்கள் இயக்கிவிட, திரு. உ.கருணைச் சிவப்பிரகாசம் அவர்களும் என் வீட்டிற்கு வந்து உரை எழுதும் பணியினை 2.9.93 முதல் மேற்கொண்டார். இறைவன் திருவருளால் எவ்விதமான தடையுமின்றி 9.7.94 முடிய ஏறக்குறைய (பதினோரு திங்கள்) 11 மாதங்களில் இவ்வுரை எழுதி நிறைவுப்பெற்றது என்பதை அறிஞர் பெருமக்களுக்கு யான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரபுலிங்க லீலையில் தமிழ் இலக்கண இலக்கிய கருத்துகளும் தருக்கம், சோதிடம், மருத்துவம், வேதாந்தம், சித்தாந்தம் முதலான சாத்திரக் கருத்துகளும் அங்கங்கே அமைந்துள்ளன. இவை எல்லாம் தனித்தனித் தலைப்பில் ஆராயத்தக்கன.

Koviloor Digital Library

கன்னடப் பிரபுலிங்க லீலையில் உள்ள கதிகள் 15

கதி:

1. பார்வதீய பிரதிக்ஞா
2. மாயா தேவிய பால்ய
3. அல்லமதல்லி மாயை கிய மோஹா
4. அல்லமந விருத்தாந்தா
5. மாயையே திரஸ்கார
6. பசவாதிகள அவதார
7. மகாதேவி அக்கண விரக்தி
8. கொக்கையனுக்கே உபதேச
9. முத்தாய அக்கனுக்கே உபதேச
10. சித்தராமனுக்கே உபதேச
11. பசவராஜனிகே இஷ்டலிங்க உபதேச
12. பிராண லிங்க உபதேச
13. கோரட் சாதிகளிகே உபதேச
14. சூன்ய சிம்மாசனா ஆரோகணா
15. பார்வதீய பிரசன்னதே

பிரபுலிங்க லீலையில் உள்ள 23ஆம் கதிக்கு ஆரோகணகதி எனப் பெயர் கூறுகின்றார்கள். அக்கதியில் கதிநுதலியது கூறும்பாட்டில் அப்பெயர் காணப்படவில்லை.

ஒருவருண்ண ஒருவர் பசிகெடார்
தரையி லென்னும் தகுமொழி பொய்த்திட
அருளின் அல்லமன் ஆரும் பசிகெட
விரவி யுண்ட மிகுதி விளம்புவாம்

இக்கதிபாடலை நோக்குமிடத்து ‘அரும்பசி கெட உண்டகதி’ என்றாவது ‘ஆரும் உண்ண உண்ணும் கதி’ என்றாவது இருத்தல் வேண்டும். சூன்ய சிங்காதனத்தில் இருந்த கதியே ஆரோகணகதியாக வேண்டும். இது ஆரோகணகதி ஆகாது என்க.

பிரபுலிங்க லீலையின் பொருளை நோக்கினால் முன்னே அல்லமதேவர் மாயையை வென்றது முதலாவது நிகழ்ச்சி ஆகும். அதை கீழ்வரும் பாடலால் உணர்க.

மாயை தனை வாதித்துத் தள்ளுபு
தன்னிலை நின்று மாயாவாதி

Koviloor Digital Library

ஆயினன் நல்வீரசைவ சித்தாந்த
குலதீப மாயினோ னென்று
ஓயுமன நிறுவி இறப்பெதிர்வு
நிகழ்வெனுங் காலமுண ருமாற்றற்
றூய முனிவரரெல்லாம் அல்லமனைத்
தொழுது தவந்தொடங்கி வாழ்ந்தார்

(மாயை கோலாகல கதி, பாடல் 80.)

இரண்டாவது நந்திகேஸ்வரரும், சிவகணங்களும் உமாதேவியின் சத்துவகுணமடந்தையும், உலகில் வந்து தோன்றி ஆங்காங்கே இருந்த செயலாகும்.

மூன்றாவது அக்கமாதேவி துறவு கூறப்படுகின்றது. பின்னர் நான்காவது கொக்கிதேவர், முத்தாயி அம்மை, சித்தராமதேவர், வசவதேவர், மருளசங்கரதேவர், கோரக்க முனிவர்கள் ஆகிய இவர்களுக்கெல்லாம் அல்லமதேவர் உபதேசம் செய்த செய்தியினை காணலாம்.

ஈற்றில் சிவபெருமானும் உமாதேவியாரும் அல்லம தேவருடைய செயல்களை எடுத்துக் கூறி புகழ்ந்த செய்தியைக் காணலாம். இதனோடு இவ்விலக்கியம் முடிகின்றது. அல்லமதேவர் உலகில் தோன்றி ஏனைய மக்களைப் போல இறந்து விட்டார் என்ற செய்தி இவ்விலக்கியத்தில் கூறப்பெறவில்லை. இவ்விடத்தில் ஒன்று கருதத்தக்கது. கோரக்கரின் சீடரான ஸ்ரீ சுவாத்துமராம யோகீந்திரர் என்பவர் எழுதிய அஷ்டாங்க யோகம் என்னும் (ஹடயோகப் பிரதீபிகை என்னும்) நூலில் ஆதிநாதர் முதலான மகாசித்தர்களின் பெயரையெல்லாம் வரிசையாக எடுத்துக் கூறியுள்ளார். முதல் உபதேசத்தில் 5,6,7,8,9 ஆம் சுலோகங்களில் தொகுத்தும் கூறியுள்ளார். தொகுத்துக் கூறிவிட்டு இவர்களெல்லாம் மகாசித்தர்களாவர். ஹடயோகத்தின் பிரபாவத்தால் கால தண்டத்தைக் கண்டத்து மிருத்துவை ஜெயித்து, பிரம்மாண்டமத்தியில் தடையின்றி சஞ்சரிக்கின்றார்கள் என்று கூறுகின்றது. அவருள் ஒருவர் அல்லமாப் பிரபு தேவர் என்க. அதனாலே (இச்சித்தர்கள் எல்லாம் இறவாமல் இன்றும் வானமண்டலத்தில் உள்ளனர்) என்று குறிப்பிடுகின்றார். சித்தராமர் கதி 3 பாட்டில் 'சிறப்பு பெற்ற நல்யோகி' அவர்களின் பெயர்களாவன. 1) பரமேஸ்வரர் (ஆதிநாதர்); 2) அவர் சீடராம் மச்சேந் திரர்; 3) சாபரர்; 4) ஆனந்த பைரவர்; 5) சௌரங்கி; 6) மீனநாதர்;

Koviloor Digital Library

7) கோரக்கநாதர்; 8) விருபாட்சர்; 9) விலேசயர்; 10) மந்தானர் 11) பைரவர்; 12) சித்தி; 13) புத்தர்; 14)கதண்டி; 15) கோரண்டகர்; 16) கராநந்தர்; 17) சித்தபாதர்; 18)சர்ப்படி; 19) கானேரி ; 20) பூஜ்ஜியநாதர்; 21)நித்தியநாதர்; 22)நிரஞ்சனர்; 23)கபாலி; 24) விந்துநாதர்; 25) காகா; 26) சண்டீஸ்வரர்; 27)அல்லமாப்பிரபுதேவர்; 28) கோடா; 29)சோலி; 30) டிண்டிணி பானு; 31) நாரதேவர்; 32) கண்டர்; 33) காபாலிகர் என்பவராவார்.

இவ்விலக்கியத்துக்கு உரிமையாளர் (பாத்திரங்கள்) அல்லம தேவர்; முதல் உரிமையாளராவார். அடுத்து வரும் உரிமையாளர்கள் மேல் உலக உரிமையாளர் என்றும்; நில உலக உரிமையாளர் என்றும் இருவகையாகப் பிரித்துக் கொள்ளலாம். சிவபெருமானும் உமாதேவியும் அவளுடைய சத்துவகுண, ராஜோகுண, தமோகுண மடந்தையரும், நந்திதேவ சிவகணங்களும் மேலுலக உரிமையாளர் ஆவர்.

மமகாரரும், அவர் மனைவி மோகினியும், இவர்களின் புதல்வியாகிய மாயையும், இவர்கட்கு குருவாகிய அகங்காரனும், மாயையின் தோழிகளான கலாவிலாசி, சகளை என்பாரும், முனிவர்களும் அல்லம தேவரது தந்தை தாயாராகிய நிராங்காரன், சுஞ்ஞானியும், நிருமலனும், சுமதியும், அவர்களின் புதல்வியான மாதேவியும், மாதேவியைக் காதலித்த கௌசிகமன்னனும், மாதேவி பால் தூது சென்ற மடந்தையரும், மாதரசன் என்னும் அந்தணர் மனைவியாகிய மாதாம்பிகையும் அவர்தம் மகனான வசவதேவரும்; தங்கை நாகாம்பிகையும், அவள் மகனாகிய சென்ன வசதேவரும், விச்சல மன்னவனும், வச வண்ணரது பணியாளரான அப்பண்ணனும்; மருள சங்கர தேவரும், மடிவால மாச்சையரும், கின்னரப்பிரமரும்; கொக்கிதேவரும், முத்தாயி அம்மையும், சித்தராமரும், கோரக்கர் முதலானோரும் ஆகிய இவர்கள் எல்லாம் நில உலக உரிமையாளர் களாவார்.

பிரபுலிங்க லீலை ஒரு சிறந்த வீரசைவ நூல். இதை இயற்றியவரும் சிறந்த வீரசைவராகிய தவத்திரு. சிவப்பிரகாச சுவாமிகள் ஆவர். இருப்பினும் சைவசமயத்தையும் ஒரு கண்ணாகப் போற்றுகின்றார். துதிகதியில் ஞானசம்பந்தர் முதலான சமயகுரவர் நால்வரையும் போற்றியுள்ளார். பரவை கேள்வன் திருத்தொண்டத்தொகை அடியார் என்ற பாடலால் திருத்தொண்டர் புராணத்திலுள்ள எல்லா சிவனடியார்

Koviloor Digital Library

களையும் வணங்குகின்றார். கயிலாயகதியில் உமாதேவியாரின் கொங்கையைப் புகழும்பொழுது

அரவுலாம் சடை அண்ணலை பிள்ளைதான்
பருவ மூன்றினில் பாட இன்பால்தரும்
பொருவில் கொங்கை புகழெனப் பொங்கொளி
மருவுமாரமணி வடந்தாழ்ந்துற (கைலாயகதி - 22)

என்று கூறும் பாடலில், திருஞான சம்பந்தருக்கு அம்மை பால்கரந்து ஊட்டிய செய்தியைப் புலப்படுத்துகின்றார்

சூனிய சிங்காதன கதியில், திருஞானசம்பந்தர் சமணரோடு வாது புரியுங்கால் மதுரை வைகையாற்று நீரிலிட்ட ஏடுஎதிர் ஏறும்படி செய்த நிகழ்ச்சியினை

ஏட்டினைப் புது நீராற்றில் எதிர்கிழித்தேற விட்டோன்
பாட்டுடைத் தலைவனன்பர் பலரு நம்வசவன் தன்னை
நாட்டமுற்றடையுமா சானமக்குமாமென்றிருந்தார்
வீட்டினுக் கேற்றுஞ்சோதி விருந்திற்கு முதவுறாதோ

(சூன்யசிங்காதன கதி 15)

இப்பாடலில் புலப்படுத்தி உள்ளார்.

வசவதேவர்., அல்லம தேவருக்கு உணவு படைத்தபோது மூவர் தமிழைப்போல முக்கனியைப் படைத்தார் என்றும்; ஏனையோரின் பாடல்களைப் போல் மற்ற பழங்களையும் படைத்தார் எனக் கூறுகின்றார். இங்கு சைவத்திரு முறையினைக் குறிப்பிட்டுள்ளார்.

உளங்கனி மூவர் செய்யுள் ஒத்த முக்கனி யுமேனோர்
வளங்கெழு தொடர்பு போலு மற்றைய பழமும் தூர்த்தார்

(ஆரோகணகதி 36)

அல்லம தேவருக்கு பல பொருள்களை உணவாகக் கொடுத்தாலும் அமையான். உன்னுடைய உயிராகிய ஆன்மாவை அவனுக்கு நிவேதனம் செய்தால் அமைவான் என்று சென்னவசவதேவன் கூறும்போது கண்ணப்பன் வரலாறு குறிப்பிடப்படுகின்றது.

கண்ணப் பன்அன்பி னானே
கறியென அமைத்த வூனை
உண்ணப்பன் ஊனின் வேறாம்
உயிருணின் அமைவன் என்று

Koviloor Digital Library

வண்ணப் பொன்னனைய சென்ன
வசவ தேசிகன் வணங்கி
விண்ணப் பஞ்செய்தான் துங்க
விடை முகங்கரந்தா னோடு (ஆரோகணகதி - 50)

இப்பாடலால் அறிக.

மேலும் கோரக்கர் கதியில் (ஸ்ரீசயிலம்) திருப்பருப்பதத்தைச் சிறப்பித்துக் கூறும் போது; ஒரு தெய்வீகச் சுனையில் ஒரு கிழவன் மூழ்க இளமைவடிவம் பெற்று எழுகின்ற காட்சியினை, திருநீலகண்ட நாயனாா் குளத்துள் மூழ்கி இளமைப் பெற்று எழுந்த வரலாற்றை இங்கு நினைவு கூர்கின்றாா். அப்பாடல்-

நகைமதிப் பிள்ளைபோல நரைத்த
கூன் கிழவன் சென்றோா்
முகைமலர்ச் சுனையின் மூழ்கி
முருகு கொப்பளிக்கும் தோட்டுப்
பகை மலர்க்குழன் மடந்தை
பகர்ந்த வோராணை காத்து
மகிழ் மனத்தன்பனே போல்
வந்து மேலெழுவனன்றே (கோரக்கர் கதி. 14)

ஸ்ரீசைல மலையிலுள்ள சுனை தன்னில் மூழ்கிய முதியவரை இளமைப்பருவம் உடையவராக்கும் சிறப்பினையுடையதும் ஆகிய தெய்வச்சுனையைப் புனைந்துரைத்தது இப்பாடல்.

அநுபந்த சதுட்டயம்: சதுட்டயம் நான்கு

சதுட்டயமாவன:- விடயம்-சம்பந்தம்-பயன்-அதிகாரிகள் என நான்காகும். என வேதாந்த சூடாமணி கூறுவதால் இங்கே (பிரபுலிங்க லீலையில் உள்ள துதி கதியில் உள்ள நான்கு பாடல்களையும்) அம்முறை அமைத்துக் கொள்ளுதல் நல்லது. (சம்பந்தம் - அதிகாரிகள் - பிரயோசனம் - விடயம் என உள்ளது) விடயம் என்பது அல்லமதேவனுடைய புகழைக்கூறுவது.

சம்பந்தம் என்பது அல்லமதேவன் கூறப்படுதலும், அல்லமதேவனைக் கூறுதலும்; பயன் என்பது மயக்கமாகிய சேற்றுக்கு ஊன்றுகோலாய் இருத்தலும், அன்பினை எழுதுவதற்கு எழுதுகோலாய் இருத்தலும், அங்கத்தலம், இலிங்கத்தலம் என்னும் இரண்டையும்

Koviloor Digital Library

அளக்கும் அளவு கோலாய் இருத்தலும், அறிவாகிய விளக்கு நன்கு எரியும்படி அதைத் தூண்டுகின்ற தூண்டுகோலாய் இருத்தலும் இந்நூற்பயனாகும்.

அதிகாரம் என்பது பிறவிப்பயனை அடைய விரும்புபவரே இந்நூலைப் படிப்பதற்கு அதிகாரியாவார்.

பிரபுலிங்க லீலை கதை நிகழ்ச்சி நிகழ்ந்த இடங்கள்

திருக்கயிலாயமலையில் சிவபெருமானும் உமாதேவியாரும் எழுந்தருளியிருந்த அரசிருக்கை மண்டபம்.

விளவலதேயம்; வனவசைமாநகரம்; மதுகை நாதன் திருக்கோவில் மதுகை நாதன் திருக்கோவிலில் நடம்நவில் அரங்கு; மமகார ராசனது அரண்மனை; அதனுள் மாயைக்குக் கன்னிமாமம் கன்னிமாடத்தில் வெண்ணிலாமுற்றம்; கன்னிமாடத்தில் மலர் பெய்த மெல்லணை; வள்ளிக்காவை என்னும் பதி. அப்பதியுள் சுஞ்ஞானி. நிராங்காரன் என்பாரது திருமனை; அல்லமதேவன் ஓடிச் சென்ற காடு; அக்கமாதேவி பிறந்த ஊர் உடுதடை; சிவகணங்கள் பிறந்த பல ஊர்கள். கன்டை நாட்டில் இங்குளாபுரி; கல்யாணப்பட்டினம் (அ) புரி. கல்யாணபுரத்தில் வசவேசரது திருமாளிகை; கௌசிக மன்னன் உலாவந்த நகரத்தெரு; மாதேவி அல்லமனைத்தேடிய காடுகள்; மலைகள்; நகரங்கள்; கொக்கி தேவன் நந்தவனம்; அநிமிடன் சமாதியிலிருந்த இடம்-முத்தாயியம்மை மனை; சொன்னலாபுரம் (சித்தராமையர் ஊர்); கூடியூரில் வாவியும் ஆலயமும் அமைக்கும் இடங்கள். சித்தராமரது திருமடம்; வசவதேவரது மாளிகையில் பாணபரியின் வீதி; சகலிவனம் பருப்பதமலை; அங்கு கோரக்கநாதரின் ஆஸ்ரமம்; ஸ்ரீசைலமலைக்கு வடக்கேயுள்ள அருந்தவர் வாழும் வனம். சூனியசிங்காதன மண்டபமும் அதனுள் அமைந்துள்ள சூனிய சிங்காதனமும் வசவதேவருடைய திருமாளிகையில் அல்லம தேவருக்கு விருந்திட்ட உள்மனை.

இந்நூல் வீரசைவ சமயச்சார்புடையதாயினும் இலக்கியநலன்கள் யாவும் தன்னகத்தே கொண்டிலங்குகின்றது. இலக்கிய ஆர்வலர்கட்கு நல்விருந்தாகும் என்பது திண்ணம். என் சோர்வினால் எழுதப்பட்டுள்ள இவ்வுரையின்கண் குறைபாடுகள் இருக்கக்கூடும். கண்ணுற்ற அறிஞர்கள் தெரிவிப்பின் திருத்தம் செய்துகொள்ள இயலும். நிறைவுகள் அனைத்தும் என்னுள் இருந்து எளியேனை ஆட்கொண்டருளும் மயிலம் - பொம்மபுரம் ஆதீனம் குருமகாசந்நிதானங்கள் திருவடித் தாமரைக்கே சாரும்.

இங்ஙன்

திரு. அடிகளாசிரியன்

Koviloor Digital Library

பொருளடக்கம்

		ப.எண்
	கணபதி காப்பு	21
1.	துதிகதி	22
2.	கைலாய கதி	48
3.	மாயையின் உற்பத்தி கதி	92
4.	மாயை பூசை கதி	138
5.	பிரபுதேவர் வந்த கதி	174
6.	விமலை கதி	241
7.	மாயை கோலாகல கதி	271
8.	வசவண்ணர் முதலியோர் வந்த கதி	329
9.	மாதேவி அவதார கதி	358
10.	மாதேவி அம்மை துறவு கதி	400
11.	கொக்கி தேவர் கதி	441
12.	முத்தாயி அம்மை கதி	464
13.	சித்தராமருக்கு உபதேசித்த கதி	482
14.	வசவண்ணரைச் சார்ந்த கதி	530
15.	மருள சங்கர தேவர் கதி	564
16.	இட்டலிங்க கதி	581
17.	கதலி வன கதி	617
18.	சாதகாங்க கதி	633
19.	கோரக்கர் கதி	649
20.	முனிவரர் கதி	699
21.	சூனிய சிங்கானத்தை இயற்றிய கதி	715
22.	சூனிய சிங்காதன ஆரோகண கதி	727
23.	அல்லமன் ஆரும்பசிகெட உண்ட கதி	771
24.	மனோலய கதி	817
25.	மான்மிய கதி	836
	செய்யுள் முதற்குறிப்பு அகராதி	855

Koviloor Digital Library

Koviloor Digital Library

முதலாவது
கணபதி காப்பு

1. [1]சுரகு லாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரணம் நாளும் தலைக்கணி யாக்குவாம்

பாடபேதம்: [1]சுரர் குலாதிபன்

இதன் பொருள்: சுர குல அதிபன்-தேவரது சாதிக்குத் தலைவனாகிய இந்திரனது; தூய் மலர் நந்தனம்-நல்ல பூக்களையுடைய பூங்காவானது; பெருக-ஓங்குவதற்காக; வார்கடல் பெய்த வயிற்றினோன்- நெடிய கடலினை இட்ட (குடித்திட்ட) வயிற்றினையுடைய அகத்திய முனிவனது; கரகநீரை-கமண்டல நீரை; கவிழ்த்த-சாய்த்தருளிய; மதகரி-மதத்தினைப் பொழியும் யானைமுகப் பெருமானுடைய; சரணம்-புகலாய் அடையத்தக்க திருவடிகளை; நாளும்-நாள்தோறும்; தலைக்கு-தலையினுக்கு; அணி ஆக்குவாம்-(அடியவராகிய யாம்) அணிகலனாகச் செய்து கொள்ளுவாம் (என்றவாறு).

முடிபு: அதிபன் நந்தனம் பெருக, வயிற்றினேன் கரகநீரைக் கவிழ்த்த கரி சரணத்தை (யாம்) நாளும் தலைக்கு அணி ஆக்குவாம். எடுத்துக் கொண்ட நூல் இனிது முடிதற் பொருட்டு யாம் நாள்தோறும் எம்முடிக்கு முடி என்னும் அணிகலனாகச் செய்து கொள்ளுவாம்.

(சிறப்புரை) பெருக என்னும் வினையெச்சம் கவிழ்த்த என்னும் பெயரெச்சவினைக் கொண்டது. தலைக்கு அணியாக்கலாவது தலைக்குரிய முடிபோலத் தலையின் கண்ணே விநாயகப் பெருமான் திருவடிகள் இருப்பதாக எண்ணுதல். இங்ஙனமன்றித் தலைக்கு என்பதற்குக் காரியத் தொடக்கத்திற்கு என்று பொருள்கூறினும் அமையும். இப்பாட்டுள் அகத்தியர் இந்திரன் பொருட்டு கடல் குடித்த வரலாறும் அவரது கமண்டல நீரை அவன் நந்தவனத்தின் பொருட்டு விநாயகர் கவிழ்த்த வரலாறும் குறிக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

முதலாவது
துதி கதி

துதி கதி முதல் இருபத்தைந்து கதிகளாலே இந்நூல் சொல்லப் பட்டுள்ளது. அவற்றுள் முதலிலே துதிகதி தொடங்கப்படுகிறது. துதித்தல்-கடவுளைப் புகழ்ந்து வணங்குதல். கதி-பிரிவு; கடவுளைப் பரவும் பிரிவு என்று பொருள் கொள்க. இத்துதி கதியுள் 'பூவாய்' என்பது முதல் பரவை கேள்வன் என்பது ஈறாகிய பத்துப் பாட்டுகளாலே கடவுள் முதலியோரைத் துதி செய்து அதன் மேல் அவையடக்கம் முதலிய பிறவும் சொல்லப்படினும் தலைமை பற்றித் துதிகதி எனப்பட்டது.

இட்ட லிங்கமாகிய சிவபெருமான் துதி

2. பூவாய் நெடுங்கோட் டுறுபசுந்தேன்
[1]கைகான் முடங்கு பொறியிலிதன்
நாவாய் யொழுகிற் றெனவுலக
மளந்த [2]மாலு நான்முகனுங்
காவா யென நின் றேத்தெடுப்பத்
[3]தானே யுவந்தெங்கரதலத்தின்
மேவா வமர்ந்த மாமணியைத்
தொழுது வினைக்கு விடைகொடுப்பாம் 1

(பா.ம்) [1] கைதான்; [2]மாலினான்முகனும்; [3]தானே வந்தெங்; தாெனெ வந்தென்

(இ.ள்) பூவாய் நெடும் கோட்டு உறுபசும் தேன்-மலர்கள் மிகுதியும் வாய்க்கப்பெற்ற நீண்ட மரக்கொம்பின் கண் பொருந்தியுள்ள நல்ல தேனானது, கைகால் முடங்கு பொறியிலிதன்-கைகளும் கால்களும் முடம்பட்ட அறிவில்லாதவனது. நா ஆய் ஒழுகிற்றென- (சுவையறிந்து நுகர்தற்குரிய) நாவுக்குள் அடங்கிய தாய் ஒழுகியது என்று சொல்லும் படி, உலகம் அளந்தமாலும்-அளக்கலாகா அளவுவாய்ந்த உலகத்தினை அளந்து தனதாக்கின நெடுமாலும்; நான்முகனும்-நான்கு முகங்களை யுடைய பிரமதேவனும்; காவாய் என நின்று-(அடியேங்களைக்) காத்தருளாய் என்று (முன்னே) நின்று; ஏத்து எடுப்ப-உனது புகழினை உயர்த்துக்கூறவும். (அவர்களுக்கு அருள்செய்யாது) தானே உவந்து எம்கரதலத்தில் மேவா அமர்ந்த மாமணியை-(அவர்களிடத்தே அமர்ந்து அருள்செய்யாமல்) தானே மகிழ்ந்து எமது கையாகிய

Koviloor Digital Library

ஆலயத்திலே விரும்பி பண்டே எழுந்தருளியுள்ள சிறந்த நீலமணி போன்ற இட்டலிங்கப் பெருமானை; தொழுது வினைக்கு விடை கொடுப்பாம்-வணங்கி (எம்மைப் பிறவியில் அழுத்தும்) இருவினை களுக்கு (எம்மினின்று நீங்க) ஆணையினை அவ்வினைகளுக்குக் கொடுப்பாம் (எ.று).

முடிபு - நெடுங்கோட்டுத்தேன் பொறியிலிதன் நாவாய் ஒழுகிற்று என மாலும் நான்முகனும் காவாய் என நின்று ஏத்து எடுப்பவும், தானே உவந்து மேவா அமர்ந்த மணியை (யாம்) தொழுது வினைக்கு விடை கொடுப்பாம். மாலும் நான்முகனும் காவாய் என நின்று ஏத்து எடுப்பவும் (அவர்களிடத்தே அமர்ந்து அருள்செய்யாமல்) கோட்டுத்தேன் பொறியிலி நா ஆய் ஒழுகிற்று'' எனத்தானே உவந்து எம்கர தலத்தில் அமர்ந்த மணியை (யாம்) தொழுது வினைக்கு விடை கொடுப்பாம்.

(சிறப்புரை) சிவபெருமான் வெள்ளிமலையில் உருவத்திருமேனி கொண்டு வீற்றிருந்து அடியவர்க்கு அருள் செய்வான் என்பது தோன்ற (நெடுங்கோட்டு உறுபசுந்தேன்) என்று கூறினார். 'நெடுங்கோட்டு உறு பசுந்தேன்' என்பதற்கு 'நெடிய மரக்கொம்பினது நுனியின் கண்ணே தங்கிய பசுந்தேன்' என்று பொருளுரைத்து (முடவனுக்குக் கொம்புத்தேன் கிடைத்தாற் போல) என்னும் பழமொழியைப் பற்றி வந்தது என்றும் பொருள் காண்பர். இட்டலிங்கத்தின் வடிவு கருதி (மாமணி) என்பதற்கு 'நீலமணி' என்று பொருள் கூறப்பட்டது. தேனின் இனிமையும் அருமையும் தோன்ற பூவாய் என்றும், நெடுங்கோட்டுறு என்றும் கூறினார். கைகால் முடங்கு என்றதனால் - ஏறமாட்டாமையும், பொறியிலி என்றதனால், பிறரால் கொணர்விக்க மாட்டாமையும் பெறப் பட்டன. மாலும் நான்முகனும் என்றவற்றிலுள்ள உம்மைகள் எண்ணின்கண் நின்று உயர்வு சிறப்பு. பொறியிலி என்னும் சொல் (அறிவிலி) என்று பொருள்படுதலை 'பொறியிலியேன் செய்தீமை' (வச-வந்தகதி 34) என்னும் அடிகளால் காண்க. அநிட்டத்தை எல்லாம் நீக்கி இட்டதைத் தருதலின், அடியார் கையின்கண் வைத்து வழிபடும் சிவலிங்கத்திற்கு இட்டலிங்கம் என்று பெயர் வழங்கப்படுகின்றது; அதற்கேற்ப 'மாமணி' என்பதற்கு 'விரும்பின எல்லாம் தரும் சிந்தா மணியாகிய தெய்வமணி போன்ற இட்டலிங்கப் பெருமான்' என்று பொருள் கூறினும் அமையும். நல்வினையும் பிறவிக்குக் காரணம் ஆகலின் வினை எனப் பொதுப்படக்கூறினார். மலைத்தேன் தானே வந்து

Koviloor Digital Library

முடவன் நாவில் ஒழுகுதல் உலகத்தில் இல்லாத நிகழ்ச்சியாகும். இல்லாத நிகழ்ச்சியை உவமை ஆக்கலில் இது இல் பொருளுவமையணியாகும்.

ஒப்புமை

வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
(திருவாசகம். குழை.6)

... ஆதன்
கையகப்பட்ட தெய்வக் கதிர்விடு மணியின் னாயேற்கு
கையன்வந்தகப்பட்டான் (சீகாளத்தி.கண்ண.57)

மேற்கோள்: இப்பாட்டு முத்து வீரியம் என்னும் ஐந்திலக்கணம் நூலுள் அறுசீர்க்கழிநெடிலடிக்கு எடுத்துக் காட்டாய் உள்ளது. அதனுள் (என் கரதலத்தின் என்று பாடம் உள்ளது) ஏத்தெடுப்பவும் என்று உம்மை விவரிக்க.

உமாதேவி துதி

3. ஆதி பகவன் றனதூட
றணிப்பான் பணிய வவ்விறைவன்
பாத மிறைஞ்சு மதற்கு நெற்றிப்
பகையு மல்குற் பகையுமாஞ்
சீத மதியு மரவும்
விழுஞ்செயற்கு முவகை செயாமலலை
மாது பணியுமதற்கு மன
மகிழுமுமையை வணங்குவாம் 2

(இ.ள்) ஆதிபகவன் தனது ஊடல் தணிப்பான் பணிய- முதல்வனாகிய சிவபெருமான் தன்னுடைய (தேவியினுடைய) காமப் பிணக்கைத் தணிப்பதன் பொருட்டு (தேவியின் கால்களில்) வணங்க; அ இறைவன் பாதம் இறைஞ்சும் அதற்கும்- அப்பேர்ப்பட்ட தலைவனை தன் கால்களை வணங்கும் அச்செயலுக்கும்; நெற்றிப்பகையும் அல்குல்பகையும் ஆம் சீதமதியும் அரவும் விழும் செயற்கும்-(தனது) நெற்றிக்குப் பகையும் அல்குலுக்குப் பகையும் ஆகும். குளிர்ந்த பிறையும் பாம்பும் (ஒருங்கே) தன் காலில் விழும் செயலுக்கும்; உவகை செயாமல் (சிறிதும்) மகிழ்ச்சி அடையாமல்; அலைமாது பணியும் அதற்கு=கங்காதேவி (தன் காலில் பட) வணங்கும் அச் செயலுக்காக

Koviloor Digital Library

மட்டும்; மனம் மகிழும் உமையை வணங்குவாம்=உள்ளம் மகிழ்ந்து (ஊடல் நீங்கும்) உமா தேவியாரை (யாம்) பணிவாம் (எ-று)

முடிபு - பகவன் ஊடல் தணிப்பான் பணிய, அவன் இறைஞ்சும் அதற்கும், மதியும் அரவும் (தன் கால்களில்) விழும் செயற்கும் உவகை செயாமல் (உவக்காமல்) அலை மாது பணியும் அதற்கு மனம் மகிழும் உமை. அவ்வுமையை (யாம்) வணங்குவாம்.

சிறப்புரை - 'பகவானே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்' என்ற நிகண்டின்படி பகவன் என்னும் சொல் பலர்க்கு உரித்தாயினும் சிவன் பிறவா யாக்கைப் பெரியோனாய் முதன்மை பூண்டு நிற்றலின் ஆதிபகவன் என்றார். தன் மாற்றாளாகிய கங்கை சிறிதும் பணிவில்லா மல் இறைவன் தலைமேல் வீற்றிருத்தலின் ஊடல் நிகழ்ந்தது. அவ்வூடல் கங்கை தன் காலிலே பணியும்படி இறைவன் வணங்கியதால் நீங்கியது.

மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங்காலைப் புலவியுள் உரிய
-(தொல்-பொருள்31)

என்ற உலக நடைக்கேற்பவும், உலகத் தோற்றத்திலே இறைவன் சத்திவயப்பட்டு நிற்பன் என்னும் உண்மைக்கு ஏற்பவும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

நெற்றிப்பகை - நெற்றியினால் பகைக்கப்பட்ட பொருள்.

அல்குல்பகை - அல்குலாலே பகைக்கப்பட்ட பொருள் என்று பொருள் கொண்டு இவற்றை அன்மொழித்தொகை என்பர் சரவணப்பெருமாளையர். பிறை முதலியவை தாமாக வணங்கில ஆயினும், இறைவன் வணங்கும் பொழுது அவன் முடியிலிருந்து தேவியின் கால்களில் படுதல் பற்றி அவையும் வணங்கினவாகச் சொல்லப்பட்டன.

ஒப்புமை-

வல்லங்க மானமுலை மாதுமையான ளென்றனிணை
இல்லங்க மான நுத லின் பகையென் றவன்முனியச்
சொல்லங்க மீதிற் சுமைப்பதென்கொல் நீயிந்த
வில்லங்க மாம்பிறையை வெங்கை புரத்தவனே
(வெங்கைக் கலம்பகம்-51)

Koviloor Digital Library

பரமசிவன் பிரளய கோப சாந்திக்காகத் தனது
சிரசிலிருக்கும் கங்காசலம் பாத்திய மாகும்படி
தனது சிரசில் உமது பாதத்தைத் தரிக்கிறார்

(சௌந்தர்யலகரி-84)

கணபதி துதி

4. மார னெடுத்து வளைக்குமொரு
கரும்பை யொடித்து மலர்சிதறி
நாரி யடுத்த அளிமாலை
குலையத் துரந்து நயந்தோடி
வீர மனத்து வினைப்பாகர்
குறிப்பினொழுகி விளையாடும்
ஈர மதிச்செஞ் சடைக்களிநல்
யானை யிணைத் தாளேத்துவாம் 3

(இ.ள்) மாரன் எடுத்து வளைக்கும் ஒருகரும்பை ஒடித்து-மன்மதன் எடுத்து வளைக்கின்ற வில்லாகிய ஒப்பற்ற கரும்பினை ஒடித்து; மலர்சிதறி-அவ்வில்லின் எய்யப்படும் அம்பாகிய மலர்களை இறைத்து; நாரி அடுத்த அளிமாலை குலையதுரந்து- அவ்வில்லுக்கு நாணியாகப் பொருந்திய வண்டின் வரிசைகள் கலைந்து ஓட ஓட்டி; நயந்து ஓடி- விரும்பி விரைந்து சென்று; வீரமனத்து- சிவஞானத் தில் திளைக்கும் மனத்தினையுடைய வினைப்பாகர்-இருவினைப் பக்குவப்பட்ட தொண்டராகிய பாகரின்; குறிப்பின் ஒழுகி- நினைவின்படி நடந்து; விளையாடும்-திருவிளையாட் டினைச் செய்கின்ற; ஈரமதி செம் சடைகளி நல்யானை-குளிர்ந்த திங்களைத் தரித்த சிவந்த சடையினையும், மதக் களிப்பினையும் உடைய நல்ல யானை முகக் கடவுளுடைய; இணைத்தாள்-ஞானசக்தி, கிரியாசக்தி வடிவாகிய இரண்டு திருவடிகளை; ஏத்துவாம்-புகழ்ந்து வணங்கு வாம் (எ.று)

முடிபு - கரும்பை ஒடித்து, மலரைச் சிதறி, அளிமாலை குலையத்துரந்து, நயந்து, ஓடி, பாகர் குறிப்பின் ஒழுகி விளையாடும் யானை; (அவ்வியானைத்) தாளை (யாம்) ஏத்துவாம்.

(சிறப்புரை) தின்னுதற்காகக் கரும்பை ஒடித்தலும், மரங்கள் முதலானவற்றிலுள்ள மலர்களைக் காணின் அவற்றைச் சிதறலும், மதநீருண்ணவரும் வண்டின் கூட்டங்களைத் துரத்தலும், பாகர்குறிப்பின்

Koviloor Digital Library

வழி நடத்தலும் யானைச் சாதிக் கியல்பாதலால், அவ்வியல்பு யானை முகக்கடவுட்கும் உரியதாகக் கூறப்பட்டுள்ளது.

சுப்பிரமணியர் துதி

5. பாகமொரு பெண் குடியிருக்கும்
பரமனணியில் பரித்த மணி
நாகம் நுழைவுற்றுடல் சுருண்டு
கிடந்து நகுவெண்டலைப் புழையில்
போக மெல்லத்தலை நீட்டிப்
பார்த்து வாங்கப் போகுமொரு
தோகை மயில் வாகனப் பெருமாள்
துணைத்தாள் கமலம் தொழுதிடுவோம் 4

(இ.ள்) பாகம் ஒரு பெண் குடியிருக்கும் பரமன்-இடப்பாகத்திலே ஒப்பற்ற பெண்ணாகிய உமா தேவியார் வாழ்ந்திருக்கும் மேலாகிய கடவுளால்; அணியில் பரித்த மணி நாகம்- ஆபரணம் போல் தாங்கப் பெற்ற மாணிக்கத்தையுடைய பாம்பானது; (அணியில் பரித்த) நகுவெண்தலைப்புழையில்-ஆபரணம் போல் தாங்கப் பெற்ற சிரிக்கின்ற வெண்டலையினது துளையில்; நுழைவுற்று உடல் சுருண்டு கிடந்து = நுழைந்து உடம்பு சுருளக் கிடந்து; போக-வெளியே போதற்பொருட்டு; மெல்லத் தலை நீட்டிப் பார்த்து வாங்க-மெதுவாக தலையினை வெளியே நீட்டிப் பார்த்து உள் வாங்கும்படி; போகும் தோகை மயில் வாகனப் பெருமாள்- அப்பரமனிடத்துச் செல்லும் கலாபத்தினையுடைய மயிலை வாகனமாகக் கொண்ட பெருமாளாகிய முருகப் பெருமானது; துணைத்தாள் கமலம்-இரண்டு கால்களாகிய தாமரைகளை; தொழுதிடுவாம்-கைகூப்பி வணங்குவாம் (எ.று)

முடிவு - பரமன் அணியில் பரித்த நாகமானது அப்பரமன் அணியில் பரித்த நகுவெண்டலைப் புழையில் நுழைவுற்று, உடல்சுருண்டு கிடந்து பின் போக வேண்டி தலைநீட்டிப் பார்த்து உள்வாங்கப் போகும் தோகைமயில், அத்தோகை மயிலை வாகனமாகக் கொண்ட பெருமான். தாள் கமலத்தைத் தொழுதிடுவாம் என்று கூட்டுக. முருகப் பெருமான் தன் தந்தையாகிய பரமனிடத்துத் தன் வாகனமாகிய மயிலுடன் சென்ற காலத்து, அப்பரமன் தன் மேனியில் ஒரு பெண்வாழ ஈருருவும், ஓருருவாய் இயைந்து விளங்கினாற் போல் 'நாகமாகிய அணி

Koviloor Digital Library

நகுவெண்டலையாகிய அணியுட்புகுந்து இரண்டும் ஓரணியாய் விளங்கின என்க. எல்லா வல்லமைகளையும் உடைய பரமேசுவரன் பாம்பை அணியாகத்தன் திருமேனியிலே அணிந்து கொண்டான்.

அல்லம தேவன் துதி

6. கலையை மதிக்கும் புலவர்தமைச்
சித்தர்குழாத்தைக் கடவுளரை
நிலையை மதிக்கும் முனிவரரைத்
திசை மாமுகனை நிரைவளையாச்
சிலையை மிதிக்கும் நெடியோனை
விழுங்கி உமிழாத்திறன் மாயை
தலையை மிதிக்கும் அல்லமன்
செங்கமல மல்ர்த்தாள் தலைக்கணிவாம் 5

(இ.ள்) கலையை மதிக்கும் புலவர்தமை-கல்வியை ஆராய்கின்ற புலவரையும்; சித்தர் குழாத்தை -எண்வகை சித்திகளை உணர்ந்த சித்தர் கூட்டத்தையும்; கடவுளரை-தேவரையும்; நிலையை மதிக்கும் முனிவரரை-பொருள்களின் இயல்பினை ஆராய்கின்ற முனி சிரேட்டரையும்; திசைமாமுகனை-நான்முகனையும்; நிரைவளை ஆ சிலையை மிதிக்கும் நெடியோனை-வரிசையாக அணிந்துள்ள வளையல்களையுடைய பெண்ஆகும்படி கல்லினை மிதித்த திருமாலினையும்; விழுங்கி உமிழாத்திறல்மாயை- உட்கொண்டு பின் வெளியே துப்பாத ஆற்றல்வாய்ந்த மாயையினது; தலையை மிதிக்கும் அல்லமன்-தலையினை மிதித்து நிற்கும் அல்லம தேவனது; செங்கமல மலர்த்தாள் தலைக்கு அணிவாம்-செந் தாமரை மலர்போன்ற திருவடிகளை (எம்மை வருத்தும் மாயையின் ஆற்றல் கெடும்படி); எமது தலையினுக்கு உரியதாகச் சூடுவாம்.

முடிபு - புலவர்தமை, சித்தர்குழாத்தை கடவுளரை, முனிவரரை திசைமாமுகனை, நெடியோனை, விழுங்கி உமிழாத மாயை (அம்மாயையின்) தலையை மிதிக்கும் அல்லமன்தாளை(யாம்) தலைக்கு அணிவாம்.

வசவேசர் துதி

7. வெள்ள வேணிப் பெருந்தகைக்கு
யாஞ்செய்யடிமை மெய்யாகக்

Koviloor Digital Library

கள்ளவேடம் புனைந்திருந்த
கள்வரெல்லாங் களங்கமறும்
உள்ளமோடு மெய்யடியாராக
உள்ளத்து உள்ளும் அருள்
வள்ளலாகும் வசவேசன் மலர்த்
தாள்தலை யால் வணங்குவாம் 6

(இ.ள்) வெள்ளம்வேணி பெருந்தகைக்கு-கங்கையாகிய நீர்ப் பெருக; கினைத்தாங்கியுள்ள சடையை யுடைய பெருமையாகிய தகுதி வாய்ந்த இறைவனுக்கு; யாம் செய்அடிமை-யாங்கள் செய்கின்ற பொய்த்தொண்டு; மெய்யாக-உண்மைத் தொண்டாகும் வண்ணம்; கள்ளவேடம் புனைந்து இருந்த கள்வர் எல்லாம்- பொய்க்கோலத்தினால் தம்மை அடியார் போல் அலங்கரித்துக் கொண்டு (மடத்தினுள் அடியர் நடுவண்) வந்திருந்த பொய்யடியார் அனைவரையும்; களங்கம் அறும் உள்ளமோடு மெய் அடியார் ஆக- மாசு நீங்கும் மனத்தோடு உண்மைத் தொண்டர் ஆகும்படி; உள்ளத்து உள்ளும் - தன்மனத்திலே நினைத்தலும்; அருள்வள்ளலாகும் வசவேசன்- பேரிரக்கம் வாய்ந்த கொடையாளி யாகிய வசவேசனது; மலர்த்தாள் தலையால் வணங்குவாம் - செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை எம்தலையால் வணங்குவாம். (எ.று)

முடிபு - பெருந்தகைக்கு யாம் செய் அடிமை மெய்யாக (வேண்டி) வசவேசன் தாளைத் தலையால் வணங்குவாம் என்று கூட்டுக. மெய்யடிமைக்கு வேண்டும் குணங்களாவன:- வாய்மை, ஒழுக்கம், தவம், சீலம், வணக்கம், பொறுமை, அறிவு, அடக்கம், தூய்மை முதலிய னவாம். (வாய்மை, ஒழுக்கம், தவம், சீலம், வணக்கம், பொறுமை, அறிவு அடக்கம், தூய்மை தவறா மெய்யடியார்) என்று கூறுவதைக் காண்க. (பதி. அந்தாதி 16) ஒரு நாள் வசவேசுரர் வாழ்ந்த திரு மடத்திலுள்ள பொருள்களைக் கவர்ந்து செல்லக் கள்வர் சிலர் எண்ணினர். அங்கே புகுதற்கு அரிதாயிருந்தபடியால், அடியார் வேடத்தை அணிந்து சென்றால் தவறாமல் மடத்தினுள் புகலாம் என்று அறிந்த அவர்கள், வழுதுணங்காயைத் துணியுள் வைத்து முடிந்து சிவலிங்கத்தைப் போல் கழுத்திலே கட்டிக் கொண்டு மடத்தினுள் புகுந்தனர். அக்காலம் அடியாரெல்லாம் உணவுண்ணத் தொடங்கும் காலமாயிருந்தது. இவர்களைக் கண்டவசவேசுரர் அடியார் அல்லாதவர் இம்மடத்தினுள்

Koviloor Digital Library

நுழையார் என்று கருதி மகிழ்ந்து சரணார்த்தி என்று கைகுவித்து வணங்கி (இவரைக் கொண்டு போய்ப்) பந்தியிலிருத்திப் பூசை பண்ணுங்கள் என்று தன்னுடன் இருந்தவரிடம் கூறினார். இதைக் கண்ட கள்வர் மிகவும் துயரங்கொண்டு உடம்பு வியர்க்க உள்ளம் நடுங்கி வாடி, அமைச்சராகிய வசவேசுரர் மடத்தில் தாமாகவே வந்து அகப்பட்டுக் கொண்டோமே நமது உண்மை தெரிந்தால் மரண தண்டனையன்றோ கிடைக்கும் என்று கருதி ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். அப்பொழுது அங்கே இருந்த தேசிகர் ஒருவர் அவர்களின் கள்ளத்தை அறிந்து மிகவும் சினம் கொண்டவராகிப் பந்தியை விட்டு எழுந்தார். எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவராகிய வசுவேசுரர் இந்நிகழ்ச்சியை அறிந்து நித்தர் வேடத்தை யுடையவர் நித்தரே என்று கருதினர். உடனே அக்கள்ளர் தரித்திருந்த வழுதுணங்காய் இலிங்கமாயிருந்தது. கள்வர் எல்லாம் களங்கமறும் உள்ளமோடு சிவபத்தியுடையவராய் விளங்கினர். இவ்வாறு தன்னுடைய பாவனையினாலும், நோக்கினாலும், பொய்யடியாரை மெய்யடியராக்கிய வசவேசுரர் எமது பொய்த் தொண்டையும், மெய்த் தொண்டாக்குவார் என்று வசவேசுரர் துதி நூலுள் சொல்லப்பட்டுள்ளது.

சென்ன வசவர் துதி

8. பங்க வளற்று வழிமாற்றி
யொருநல் வழியைப் பகர்வார்போல்
தங்கண் மதியிற் பலபிதற்றுஞ்
சமய ருரைக டமை நீக்கி
அங்க நிலையிற் றிலிங்கநிலை
யிற்றென் றருளும் வீரசைவ
சிங்க நிலைத்த வருட்சென்ன
வசவன் றிருத்தாள் சிரத்தணிவாம் 7

(இ.ள்) பங்கம் அளற்று வழி மாற்றி ஒரு நல்வழியை பகர்வார் போல்- (வழி செல்வார்க்குக்) கேட்டினை விளைவிக்கும் சேற்று வழியினை ஒழித்து ஒப்பற்ற நன்மையைத் தரும் வழியினைக் கூறுகின்ற அருளுடைய பெரியார் போல்; தங்கள் மதியில் பல பிதற்றும் சமயர் உரைகள் தமைநீக்கி - தங்களது மாறுபட்ட அறிவால் (உயிர்களைப் பற்றியும் கடவுளைப் பற்றியும்) பலவகைப்பட முன்னுக்குப் பின் முரண்படக் குளறும் புறச்சமயவாதிகளின் கொள்கைகளை வாதித்து

Koviloor Digital Library

ஒழித்து; அங்கநிலை இற்று இலிங்க நிலை இற்று என்று அருளும் வீரசைவ சிங்கம்- அங்கமாகிய உயிர்களின் நிலை இத்தகையது இலிங்கமாகிய கடவுளின் நிலை இத்தகையது என்று எங்களுக்கு உரைத்தருளிய வீரசைவ சமய கோளரியாகிய; நிலைத்த அருள் சென்ன வசவன் திருத்தாள்-நிலைபெற்ற பேரிரக்கத்தினையுடைய சென்ன வசவேசனுடைய அழகிய திருவடிகளை; சிரத்து அணிவாம்- எம்முடைய தலையின் கண் புனைந்து கொள்வாம் (எ.று)

முடிபு - அளவற்று வழியை மாற்றி நல்வழியைப் பகர்வார் போல சமயர் உரைகள் தமை நீக்கி அங்கநிலை இற்று இலிங்கநிலைஇற்று என்று அருளும் சென்ன வசவன், அவன் தாளைச் சிரத்தின் கண் அணிவாம்.

சிறப்புரை - தீவழியை மாற்றியதற்குப் புறச் சமயர் உரைகளை நீக்கியதும் ஒரு நல்வழியைப் பகர்தற்கு அங்கநிலை யிற்று இலிங்கநிலை இற்று என்று அருளியதும் உவமேயமாதல் காண்க. இங்ஙனம் ஒப்புமைப்படுத்தி உரைகூறாமல் ஒவ்வொரு சமய வாதிகளும் தீய வழியை மாற்றி நல்லவழியைப் பகர்வார் போலவே தங்கள் மதியில் பலபிதற்றுகின்றார் என்றும், உரையை நீக்கி அங்கநிலை இலிங்கநிலை இத்தன்மையன என்று அருளும் சென்ன வசவன் என்னும் உரை கூறுவாரும் உண்டு. இவ்உரைக் கருத்துக்கியைய ''வேறு தேறி, நிலந்திகழ் சமயர்தந்தம் நிலைநலம் எனத் தாபிப்பார்'' என்று வசவ புராணம் (திரு அவதாரம் -92) கூறும். இறைவனுடைய அட்ட மூர்த்தங்களில் உயிரும் ஒன்றாதலின் ஈண்டு அங்கம் என்றது உயிரை; இலிங்கம் என்றது சிவத்தை. ''அங்கமுயிர்தானாக ஆனசிவலிங்க மதாயிங்கிசைந்தது'' என்றும் அத்துவித வெண்பாவினை நோக்குக. ''இலிங்கமே சிவம், அங்கமே சிவசமமான ஆத்மா. அகரத்திற்கு முதற்காரணமான நாதம் பிரமம் யாதொன்றிலே அடங்கிற்று. யாதொன்றிலே தோன்றிற்று அதுவே அங்கமென்று பெயரமையப் பெற்றது'' என்று வீர சைவப் பிரமாணம் என்னும் நூல் கூறும். வேத முடிவிலே, தத்துவமசி மகாவாக்கியத்தாலே ஆசாரியர் சிவசீவ ஐக்கியம் செய்தார். அதுவே பிரத்யட்சமாய் தத்பதமான இலிங்கமென்னுஞ் சிவனையும், துவம்பதமான அங்கமென்னும் சீவனையும், அசிபத மாகிய ஐக்கியம் என்னும் கூட்டுறவினாலே ஆன இலிங்காங்க சையோகமே சிவசீவ ஐக்கியம் என்று திருவுளம் பற்றினார்'' என்றும் வீரசைவப் பிரமாணம் கூறும். இவற்றினால் அங்கத்தினை உயிர் என்றும் இலிங்கத்தினை சிவன் என்றும் அறிக. இங்ஙனம் உரை கூற அறியாதார்,

Koviloor Digital Library

அங்கத்தை உட்ல் என்றும், இலிங்கத்தை உயிர் என்றும் கூறி இடர்ப்படுவர். சண்முகப் பெருமான் நந்திதேவர்க்கு தர்மஸ்தாபனத்தில் எக்காலத்திலும் சகாயமாயுள்ளாரென்று ஸ்கந்தபுராணத்திலுள்ள கேதாரகண்டம் முதலாவது பிரகரணம் கூறும். அதேபோன்று நந்திதேவரின் அமிசமாகிய வசவண்ணருக்கும் சண்முகப் பெருமானின் அமிசமாகிய சென்னவசவ தேவர் வீர சைவ தர்மஸ்தாபனத்தின் பொருட்டு சகாய மாயிருந்தார் என்று சான்றோர் கூறுகின்றனர். அதனால் சென்னவசவர் என்பதற்கு வசவேசரது அவதார காரியத்தில் சகாயமாயிருப்பவர் என்று பொருள் காண வேண்டும்.

சென்னன்-சகாயன்

சென்னவசவர் முருகப்பெருமானின் அம்சம் என்பதைக் கீழ்வரும் செய்யுளால் அறிக.

மைந்தனை ஈன்று வந்து வசவநாமம் புனைந்தாள்
நிந்தையில் கற்புநங்கை நிகழ்திருமுகங்களாறும்
அந்தமில்தலங்கள் ஆறாய் அறிவித்தற்கு லகில்வந்த
கந்த னென்றுன்ன வந்நாகம்பை தன் மகன் வளர்ந்தான்

(அக்தேவி. உற்பத்திகதி- 42 பாடல்)

மடிவால மாச்சையர் துதி

9. வார்க்குங் குமமென் முலைபாக
 னடியா ரறுவை மாசடித்துத்
தீர்க்குஞ் செயல்போல் விச்சலமன்
 னவன் றன் சேனை செய்பிழையைத்
தாக்குங் கரவாள் கொடுசின்ன
 பின்ன மாகத் தடிந்திட்டுப்
போக்குங்கருணை மடிவால
 மாச்சன் பொன்னங்கழல் போற்றி 8

(இ.ள்) வார் குங்குமம் மென்முலைபாகன் அடியார் அறுவை மாசு- கச்சியினையும் குங்குமக்குழம்பையும் (செஞ்சாந்தினையும்) அணிந்துள்ள மெல்லிய நகலினையுடைய, உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய, சிவபெருமானுக்குத் தொண்டராயுள்ளவரது, ஆடையிலுள்ள அழுக்கினை; அடித்து நீக்கும் செயல்போல்-

Koviloor Digital Library

(அவ்வாடையைக் கல்லின் மேல்) அடித்துப் போக்கும் செயலைப் போலவே. விச்சலமன்னவன்தன் சேனை செய் பிழையை - விச்சலவேந்தனது படைகள் செய்த குற்றத்தை; தாக்கும் கரவாள் கொடு-(பகைவரை அஞ்சாமல்) எதிர்ப்பதற்குரிய கைவாளைக் கொண்டே; சின்னபின்ன ஆக தடிந்திட்டு - மிகச்சிறிய துண்டங்கள் ஆகும்படி அப்படைகளை வெட்டியிட்டு; போக்கும்- போக்கியவரும்; கருணை மடிவால் மாச்சன்- (பின்னர் அப்படைகளை எழுப்பித்தந்த); அருளை உடையவருமாகிய மடிவால மாச்சையனது; பொன் அம்கழல் போற்றி- பொன்போல் அழகிய திருவடிகளைப் பாதுகாத்து வணங்குவாம்.

முடிபு - முலைப் பாகனுக்கு அடியாரது அறுவைமாசினை அடித்துத் தீர்க்கும் செயலினைப் போலவே, விச்சலமன்னவன் சேனை செய் பிழையை வாள் கொடு தடிந்திட்டுப் போக்கும் மடிவால மாச்சன், கருணை மடிவால மாச்சன் (அத்தகையோனின்) கழல் போற்றி, என்று கூட்டுக.

(சிறப்புரை) வார்குங்கும முலை:- அன்மொழித் தொகை. இப்பாட்டில் குறிப்பிட்ட மடிவால மாச்சையர் வரலாறு - மடிவால மாச்சையர் என்பவர் இப்பரிகபுரி என்னும் ஊரினர். வண்ணார் குலத்தில் பிறந்தவர். சிறந்த சிவபக்தியுடையவர். சிவனடியார் யாரேனும் வந்து ஆடைவேண்டும் என்று கேட்டால், தாம் வெளுப்பதற்கு வாங்கி வைத் திருக்கும் ஆடையைக் கொடுத்து விடுவார். பின்னர் ஆடைக்குரியவர் அதனைத் திரும்பக் கேட்டபொழுது அதே ஆடையை வரவழைத்துக் கொடுக்கும் தெய்வீக ஆற்றல் வாய்ந்தவர். இவர் வசவேசரின் பத்திப் பெருமையைக் கேள்விப்பட்டு அவரிடம் சென்றார். வசவேசர் இவரின் பெருமையை அறிந்து போற்றித் தம்திருமடத்திலேயே இருக்கும்படி வேண்டிக் கொண்டார். மாச்சையர் வசவேசர் மடத்தில் அடியார் களோடு கூடிவாழப் பெற்றதற்கு மிக மகிழ்ந்து நாள் தோறும் அடியார் கள் ஆடைகளை வாங்கிச் சென்று துவைத்துக் கொண்டு வந்து கொடுக்கும் தொண்டினைப் புரிந்து வந்தார். ஆடைகளைத் தூய்மை யாக்கிக் கொண்டு வரும் பொழுது தூய்மையில்லாதவர் யாரேனும் தீண்டித் தூய்மை இழக்கச் செய்து விடுவர் என்று எண்ணி, அவர் வரும் பொழுது சேகண்டியை அடித்துக் கொண்டு வருவார். அவ்வொலியைக் கேட்டவர் ஒதுங்கிச் செல்வர். ஒருநாள் அவர் அவ்வாறு வரும்பொழுது ஒருவன் வந்து தீண்டி அடியார் ஆடையைத் தூய்மை இழக்கச் செய்தான்.

Koviloor Digital Library

அவர் உடனே தான் கையில் வைத்திருந்த வாளால் அவன் தலையை வெட்டி ஆகாயத்தில் எறிந்துவிட்டுச் சென்றார். அத்தலை கீழே விழாமல் மறைந்து விட்டது. இதனைக் கண்ட சிலர் அஞ்சி விச்சல மன்னவனிடம் சென்று ''மாச்சையன் என்னும் வண்ணான் சிவனடியாருடைய ஆடையைத் தான் எடுத்துக் கொண்டு வரும் பொழுது யாரும் தீண்டாமல் ஒதுங்கிச் செல்ல வேண்டும் என்று நாள்தோறும் பொதுமக்களுக்கு இடையூறு செய்து வருவதோடல்லாமல், இன்று தீண்டிய ஒருவனை வாளால் வெட்டித் தலையையும் அவன் விழுங்கிவிட்டான் போலும். வெட்டுண்டவன் உடலை அன்றித் தலையை யாங்கள் கண்டிலம்'' என்று கூறினர். இதனைக் கேட்ட அரசன் வெகுண்டு எதிர் நின்றோரைப் பார்த்து ''அத்தீய வண்ணானைச் சாகும்படி வெட்டி வாருங்கள்'' என்றான். இதனை அண்மையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த அமைச்சராகிய வசவேசர், மாச்சையரின் பெருமையை அரசனுக்குக் கூறி, ''வேந்தனே! நீ மாச்சையர் மேல் படை எடுத்துச் சென்றாலும் அவரை வெல்லுதல் அரிது'' என்றனர். அமைச்சர் உரையைப் பொருட்பண்ணாமல் மேலும் அரசன் ஏவியபடியால் படைவீரர் கொல்லும் யானைக் கூட்டங்களுடன் சென்றனர். யானைக் கூட்டங்களைக் கண்ட மாச்சையர் சேகண்டியை முழக்கினர். யானைகள் வெருண்டு திசைதோறும் ஓடின. யானை வீரர் ஓடும் யானைகளைத் திருப்பி மாச்சையர் மேல் விட்டனர். இதனைக் கண்ட மாச்சையர் அடியார் ஆடைப் பொதியை விண்ணிலே எறிந்துவிட்டுத் தம்கைவாளால் யானைகளையும், படைவீரர்களையும் சின்ன பின்னமாக வெட்டி அழித்து விட்டு இவ்வநீதிக்குக். காரணமான மன்னனையும் தண்டிக்கின்றேன் என்று ஆர்ப்பரித்தனர். இந்நிகழ்ச்சியினை சிலர் மன்னனிடம் சென்று கூறினர். அரசன் அஞ்சி வசவேசர் முகத்தைப் பார்த்தான். அரசன் குறிப்பறிந்த வசவேசர், ''அரசனே! நீ மாச்சையரிடம் சரண்புகுந்தால் அவர் உன்னை வாழ்விப்பார், என்றனர். அரசனும் தன்பரிவாரங்களுடன் சென்று பணிந்தான். மாச்சையர் சினம் தணிந்தவராய் இறந்த படைகளையும் தன்னால் வெட்டப்பட்டவனையும் உயிர்பெற்றெழச் செய்தார்.

நால்வர் வணக்கம்

10. பெண்ணிற் கரசு தானாக
வெண்பு பெருநீற் றறைபிரச

Koviloor Digital Library

வண்ணக்கமல மலர்ப் பொய்கை
யாகச் செங்கல் மாழையாய்
நண்ணச் சிறிய நரிகண்
முடங்குளைய பரியாய் நகர்புகுதப்
பண்ணற்குரிய வமுதுறழ் முத்தமிழ்
நால்வரையும் பணிகுவாம் 9

(இ.ள்) என்பு பெண்ணிற்கு அரசு ஆக-எலும்பானது பெண்களுக்கு அரசியாகவும்; பெருநீற்றறை பிரச வண்ணக்கமல மலர்ப்பொய்கை ஆக- பெரிய சுண்ணம் சுடும் அறையானது தேனையும் நிறத்தையுமுடைய தாமரைப் பூம் பொய்கையாகவும்; செங்கல்மழை ஆய் நண்ண- சிவந்த சுடுமண்கல்லானது பொன்னாய் பொருந்தவும்; சிறிய நரிகள் முடங்கு உளைய பரியாய் நகர் புகுத- குள்ள நரிகள் மடங்கிய புறமயிரையுடைய குதிரைகளாய் மதுரை மாநகரத்தில் செல்லவும். பண்ணற்குரிய- செய்தற்குரிய; அமுது உறழ் முத்தமிழ் நால்வரையாம் பணிகுவாம்- அமுதத்தை ஒரு கால் ஒத்தும், ஒரு கால் ஒவ்வாமலும் இருக்கும் முத்தமிழை அருளிச் செய்த, ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரையும் யாம் வணங்குவாம்.

முடிபு - என்பு பெண்ணிற்கு அரசு ஆகவும், நீற்றறை பொய்கை யாகவும், செங்கல் மாழையாய் நண்ணவும், நரிகள் பரியாய் நகர் புகுதவும் பண்ணற்குரிய முத்தமிழ் நால்வர் (அந்நால்வரையும் யாம்) பணிகுவாம். மூவர் தமிழின் பெருமையை ''வன் பெருக்கிற் கல் மிதக்கும் வாய்முதலை பிள்ளைதரும், என் புருக் கொள் பெண்ணா யிருக்குமே அன்பருக்கு, நாட்டுகுரு சோணகிரி நாதனடியார் மூவர் பாட்டினிசை கேட்ட பரம்'' (அருணகிரி அந்-16) என்றார் குகை நமசிவாயரும்.

அடியார் (சரணர்) துதி

11. பரவை கேள்வன் றிருத்தொண்டத்
தொகையுளடியர் பத்தி எலாம்
உருவ மாகு நஞ்சோம
நாதன் றுதியு ளுறுசரணர்

Koviloor Digital Library

அரவ வணியா னடியார்கண்
மற்றை யவர்களனைவருந்தாம்
விரவி நாளு மிருப்ப விடங்
கொடுக்கு முள்ளம் விரிந்தன்றே 10

(இ.ள்) பரவை கேள்வன் திருத்தொண்டத் தொகையுள் அடியார்- பரவை நாச்சியாருக்குக் கணவனாகிய நம்பியாரூரரது திருத் தொண்டத்தொகை என்னும் பதிகத்துள் கூறப்பெற்ற சைவத் திருத்தொண்டரும்; பத்தி எலாம் உருவம் ஆகும் நம் சோம நாதன் துதியுள் உறு சரணர் - பத்திகளெல்லாம் (திரண்டு) ஓர் வடிவம் ஆகும் நமது சோமநாத ஆராத்திரியரது துதிப்பாடலுள் பொருந்திய வீரசைவத் திருத்தொண்டரும்; அரவ அணியான் அடியார்கள் மற்றையவர்கள் அனைவரும்- பாம்பினை அணிகலமாக உடைய சிவபெருமானுக்குத் தொண்டராயுள்ள (அவ்விரண்டினும் அடங்காத). ஏனையரும், (ஆகிய) மூவகையினரும்; விரவி நாளும் இருப்ப- வேற்றுமையின்றிக் கலந்து எப்பொழுதும் இருத்தற்கு; உள்ளம் விரிந்து இடம் கொடுக்கும்- எம்மனமானது அகன்று இடத்தைக் கொடுக்கும். (எ.று)

முடிபு - திருத்தொண்டத் தொகையுள் அடியாரும், துதியுள்உறு சரணரும், மற்றயவர்களும் (ஆகிய) அனைவரும் விரவி இருப்ப (எம்) உள்ளம் விரிந்து இடங்கொடுக்கும்.

சிறப்புரை - அனைவருந்தாம் என்பதில் ''தாம்'' அசை. சைவநூலாட்சிக் கேற்ப அடியாரென்றும். வீரசைவ நூலாட்சிக் கேற்ப சரணரென்றும் கூறினார். பத்தியெலாம் உருவமாகும் என்னும் அடையை சரணருக்குக் கூட்டினும் அமையும். பாலக்குருகி அல்லது பால்குரி சோமநாத ஆராத்திரியர் என்பார் வீரசைவ அடியாரை எல்லாம் தொகுத்துத் தெலுங்கு மொழியில் நூல் செய்தனர். ''குலவுபாலக் குருக்கிச் சோமீசுரன் உலகின் முன்னம் உரைத்த தெலுங்கினை'' என்று வசவ புராணம் கூறுவது காண்க. சுந்தரமூர்த்தி சுவாமிகள் செய்த திருத்தொண்டத்தொகை, தில்லைவாழ் அந்தணரை முதலாகக் கூறுகின்றது. சோமநாத ஆராத்திரியர் செய்த நூல் பசவேசுரர் முதலான சரணரைக் கூறுகின்றது. ''தண்டநாதர் முதலாஞ் சரணர்தம் புண்டரீக மலர் பாதம் போற்றுவாம்'' என்பது வசவபுராணம். சரணன் என்பான் அங்கத்திலே இலிங்கத்தைத் தரித்த தன்னை மனைவியாகவும், தான் தரித்துள்ள தூய இலிங்கத்தைக் கணவனாகவும் கருதி, மனைவி

Koviloor Digital Library

கணவனைப் பிரியாதிருந்து வழிபாடு செய்து அவற்றால் மகிழ்வதைப் போல, தான் இலிங்கத்தை என்றும் பிரியாதிருந்து வழிபாடு செய்து அவற்றால் மகிழ்வான். இதனை ''அங்கலிங்கி அரிய சதியெனத் துங்கலிங்கம் பதியெனச் சொல்வரிச்சங்கம் எய்தும் தனிச்சுக மெய்தினேன்,கிங்குவந்துனுமின்'' சரணப்பெயர் (36-2) என்னும் சித்தாந்த சிகாமணியால் அறிக. பத்தி மூட பத்தி என்றும் ப்ரௌடபத்தி என்றும் இரண்டு வகைப்படும். இவற்றுள் அறிஞரால் கொள்ளத் தக்கது ப்ரௌடபத்தியே. அப்பத்தி குருபத்தி இலிங்கபத்தி சங்கம பத்தி என்று மூவகைப்படும். அவற்றுள் இலிங்க பத்தியானது சத்பத்தி நயிட்டாபத்தி, அவதான பத்தி, அனுபவ பத்தி, ஆனந்த பத்தி, சமரச பத்தி என்று அறுவகைப்படும். இப்பதிகளெல்லாம் சோமநாதனுக்கு வடிவம் என்பார். ''பத்தியெலாம் என்னும் சீவன் முத்தித் தன்மையைப் பெற்றவருக்குப் பத்தியானது விளங்கி அவர்கள் ஆண்ட போதத்தினை விழுங்கித் தன்னுள் அடக்கிக் கொண்டு நிற்கும். ஆதலின் ''பத்தியெலாம் உருவமாகும் நஞ்சோமநாதன்'' என்றும் கூறினார்.

ஆன்ம போதத்தைப் பத்தி விழுங்கி நிற்கும் என்பதை

சீவன் முத்தித் தன்மை செறிந்தவர்க்குப் பத்தியது
தாவிலுணர்வாயுயிரைத் தான் விழுங்கி-ஆவிக்கண்
றாணவந்தா னான்மாவுக் கானவஞ்ஞானங்காட்டி
யாணி வறிவகற்றல்போல்

என்னும் அத்துவிதவெண்பாவால் அறிக.

சரணன் என்பான் அங்கத்திலே இலிங்கத்தைத் தரித்த தன்னை மனைவியாகவும்; தான் தரித்துள்ள தூய இலிங்கத்தைக் கணவனாகவும் கருதி (மனைவி கணவனைப் பிரியாதிருந்து வழிபாடு செய்து மகிழ்வதைப் போல) தான் இலிங்கத்தை என்றும் பிரியாதிருந்து வழிபாடு செய்து அவ்வழிபாட்டால் மகிழ்வான்.

அவையடக்கம்

12. அடலுறு மல்லம னரிய சீரொடு
படுதலி னயந்துபா ராட்டும் பன்முறை
மடனிகு முலகமென் மொழியை வந்துவர்க்
[1]கடலிலு மூழ்குவர் கால மொன்றினே 11

Koviloor Digital Library

(பா.ம்) [1]கடலினும்

(இ.ள்) அடல் உறும் அல்லமன் அரிய சீரொடுபடுதலின்- (எனது செய்யுள்) வலிமைமிகும் அல்லமதேவனுடைய சொல்லுதற்கரிய புகழோடு கூடியிருத்தலால். மடன் இகும் உலகம் என் (உவர்) மொழியை (யும்) பல்முறை; நயந்து பாராட்டும் - அறியாமையை நீக்கும் அறிஞர் உலகமானது எனது உவர்க்கத் தக்க செய்யுளையும் பலகாலும் விரும்பிப் பாராட்டா நிற்கும். (பொருள் நலம் கருதி); காலம் ஒன்றின் வந்து உவர்க் கடலிலும் மூழ்குவர்-புண்ணிய காலம் வந்து கூடினால் (அப்பொழுது உலகமக்கள் எல்லாம்) கூட்டம் கூட்டமாய்ச் சென்று இழிந்த உப்புக் கடலிலும் குளிப்பார்(எ.று)

முடிபு - உலகமானது என்மொழி அல்லமன் சீரொடுபடுதலின் பன்முறை நயந்து பாராட்டும். காலம் ஒன்றிவிட்டால் உவர்க்கடலிலும் மூழ்குவர்.

சிறப்புரை - உவமையிலுள்ள உவர்ப்பும் இழிவு சிறப்பும்மையும் பொருளிலும் கூட்டப்பட்டன. மொழி-கருவியாகுபெயர்

இது-எடுத்துக்காட்டுவமையணி.

இந்நூலில் உள்ள கதித்தொகை

13. நாற்கதி தருமிடர் கடந்து நச்சுநர்
[1]பார்க்கதி முதலிரு பத்தைந் தாங்கதி
மேற்கதி பெறவருள் விளங்கு மல்லமன்
[2]சீக்கதி யிருபதோ டைந்துஞ் செப்புவாம் 12

(பா.ம்) [1]பாற்கதி; [2]சீற்கதி

(இ.ள்) நச்சுநர் நால்கதி தரும் இடர் கடந்து - (அல்லமதேவனாகிய தன்னை) விரும்பியோா் நான்காகிய தேவகதி, மனிதகதி, விலங்குகதி, நரக கதிகள் தரும் துன்பங்களைக் கடந்து; பார்கதி முதல் இருபத்தைந்தாம் கதி மேல் கதிபெற-நில தத்துவம் முதலாகச் சொல்லும் இருபத்தைந்தாகும் தத்துவங்களுக்கு மேலேயுள்ள சிவகதியைப் பெறவேண்டி; அருள் விளங்கும் அல்லமன்- தனது திருவருளை விளங்கச் செய்யும் அல்லம தேவனுடைய; சீர்கதி இருபதோடு ஐந்தும் செப்புவாம்-புகழையுடைய கதிகள் இருபத்தைந்தையும் (யாம்) கூறுவாம் (எ.று)

Koviloor Digital Library

முடிபு - நச்சுநர் இடரைக் கடந்து மேற்கதியைப் பெற அருளை விளங்கச் செய்யும் அல்லமன்; அவ்வல்லமன் சீர் அமைந்த கதி இருபத்தைந்தையும் (யாம் செப்புவாம்)

சிறப்புரை - நச்சுநர் என்பதற்கு முத்தி விரும்பினர் என்று பொருள்கூறி அவர் மேற்கதியைப் பெற இருபத்தைந்து கதியையும் செப்புவாம் என்று பொருளுரைப் பினும் அமையும்.

இருபத்தைந்து தத்துவங்களைத் தன் மாத்திரை ஐந்து-பூதங்கள் ஐந்து; ஞானேந்திரியம் ஐந்து; கன்மேந்திரியம் ஐந்து; மான், அகங்காரம், மனம், பிரகிருதி, புருடன், என்னும் ஐந்து; ஆகிய இவைகளே என்பர். இவ்வாறு கூறுவன சாங்கிய மதத்தத்துவமாம். நூலாசிரியர் தாமே, ''பகுதி , விகுதி, பகுத்தறியின் முத்தி தகுதி என்னும் சாங்கியனைச் சாரேல்'' (சிவஞானபால, தூது 214) என்று கூறுவதால் இவ்வாறு உரை கூறுவது பொருந்தாது. திருமூலரும் ''இருபத்தைஞ்சாக்கு கின்றான் (திருமந் 451) என்று கூறியுள்ளதாலும்; ''அப்பூதம் பஞ்சீகரித்திருபத்தைந்தாகி மைப்பூணு மான் மாவை மன்னியிடுமென்றானோ'' (சிவஞா. தாலாட்டு.54) என்று இந்நூலாசிரியரே கூறுவதாலும் பஞ்சபூத பரிணாமமாகிய ஆன்மத்தத்துவமே கொள்ளப்படும். அந்தக் கரணம் நான்குடன் ஆகாயத்தின் கூறாகிய உள்ளம் ஒன்றினை சுட்டி, தன் மாத்திரை 5, பூதம்5, ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, அந்தக் கரணம் 5 என்று எண்ண ஆன்ம தத்துவம் இருபத்தைந்தாதலை உணர்க.

இவ்விருபத்தைந்து தத்துவங்களும் ஆன்மாவைக் கூடி பதியை உணராதவாறு செய்வதால், ''பரத்தை மறைத்து பார் முதல் பூதம் (திருமந்திரம்) என்றார் திருமூலர். (மேற்கதி) என்றது சிவகதியை. இச்சிவகதி இத்தகைய தென்பதை ''தரைமுதல் பூதங்கள் புத்தி குண தத்துவம்; தகுதி பெறு பகுதிபுருடதத்துவம் வித்தை முதலன எனும் இவற்றிலறு சமயரென எமை விடாமல், அருளில் நினை அடைதலுறும் அரியபதம் அருளுமவன்'' (அபிடேகமாலை -10) என்று இந்நூலா சிரியர் கூறுவதால் உணர்க.

எனவே ஆன்மதத்துவத்திற்கும் அவற்றிற்குக் கருவியாய் உள்ள வித்தியாதத்துவ சிவதத்துவங்களுக்கு அப்பாற் பட்ட சிவத்தை அடைதலையே நூலாசிரியர் (மேற்கதி) என்று கூறினார் என்றுணர்க.

Koviloor Digital Library

சம்பந்தம்

14. கன்றிய [1]வைரிகள் காதுங் காதையும்
[2]வன்றுயர் மதனநோய் வளர்க்கு மாற்றமும்
புன்றொழி லிணர்[3]வறும் பொழுது போக்கலும்
அன்றரு ளல்லம னமல லீலையே 13

(பா.ம்) [1]வயிரிகள்; [2]வன்றிறல்; [3]வரும்

(இ.ள்) கன்றிய வைரிகள் காதும் காதையும் (அன்று)-(இந்நூல்) இந்நூலானது சினந்த பகைவர் (தம் எதிரிகளைக்) கொல்லும் கதையினைக்கூறுவதும் அன்று; வல்துயர்மதன நோய் வளர்க்கும் மாற்றமும் (அன்று)- கொடிய துன்பத்தைத் தரும் (உண்டாக்கும்) காம நோயினைப் பெருக்கும் வரலாற்றைக் கூறுவதும் அன்று. புல்தொழிலினர் வறும்பொழுது போக்கலும் (அன்று)-உலக போகத்தையே விரும்பிச் செய்யும் சிறுமை பயக்கும் தொழிலினைப் புரிவோர் பயனின்றிக் காலம் போக்குதற்குரிய கதையினைக் கூறுவதும் அன்று. (பின் எதனைக் கூறுவதெனின்?) அல்லமன் அமல அருள் லீலையே-அல்லமதேவனுடைய மலகாரணமில்லாத, அருள் காரணமான திருவிளையாட்டு ஒன்றினையே (கூறுவதாம்) (எ.று)

முடிபு - (இந்நூல்) காதையைக் (கூறுவதும்) அன்று; மாற்றத்தைக் (கூறுவதும்) அன்று. பொழுதுபோக்கலைக் (கூறுவதும்) அன்று; அல்லமாப்பிரபு தேவரின் அமல லீலையினையே (கூறும்)

சிறப்புரை - இப்பாட்டிற்கு அமலலீலையினை எழுவாயாக்கி ''அமலலீலை காதையும் அன்று; மாற்றமும் அன்று; வெறும் பொழுது போக்கலும் அன்று'' என்றும் பொருள்கூறலாம். உலக மக்கள் செய்யும் செயலுக்கு மலம் காரணமாகும். ஆகையால் அவர்கள் லீலை மலலீலையாகும். அல்லமதேவன் செய்கின்ற செயலுக்கு மலம் காரணமாகாமல் அருள் காரணமாயிருத்தலினால் ''அருள் அல்லமன் அமலலீலை'' என்று கூறினார். மாற்றமும் போக்கலும் ஆகுபெயர்.

அறையப்பாடல் அறையுந்தன்மை அடைதலுறு சம்பந்தம்
(வேதாந்த சூடாமணி-6)

என்று இந்நூலாசிரியர் கூறியுள்ளதாலும், நூலுக்கும், நூல் நுதலிய பொருளுக்கும் சம்பந்தம் கூறுவதே சம்பந்தமாம் என்று நன்னூல் விருத்தியுள் சிவஞானமுனிவர் கூறியுள்ளதாலும், இந்நூல்

Koviloor Digital Library

அமலலீலையாகிய பொருளைக் கூறுகின்றது என்றும்; அமலலீலை யாகிய பொருள் இந்நூலால் கூறப்படுகின்ற தென்றும் சம்பந்தம் உணர்க.

அதிகாரிகள்

15. புறங்கறை யொழுகுசெம் புண்ணி லீயென
வறுங்கதை புல்லியர் கொள்வர் மாமலர்
உறுங்களி வண்டினல் லமணொண் காதையைப்
பிறந்துள பயன்பெறு பெரியர் கொள்வரே 14

(இ.ள்) புறம் கறை ஒழுகு செம் புண்ணில் ஈஎன-பக்கத்தே உதிரம் சொரிகின்ற சிவந்த புண்ணின்கண் (மொய்க்கும்) ஈயினைப் போல; புல்லியர் வறும் கதை கொள்வர்-(பிறந்துளபயன் பெறாதவறாகிய) சிறியராயினோர், பயனற்றக் கதையினை விரும்பிக்கற்று, கேட்டு மனத்துள் கொள்வர்; மாமலர் உறும் களிவண்டின்- இலக்குமி வீற்றிருக்கும் செந்தாமரை மலரினை அடையும் களிப்பையுடைய வண்டினைப் போல; பிறந்துளபயன் பெறு பெரியர் அல்லமன் ஒண்காதையைக் கொள்வர் - மக்களாய்ப் பிறந்து உளவாய் இருத்தலுக்குரிய பயனைப் பெறும் பெரியோர், அல்லம தேவனுடைய நன்மைதரும் வரலாற்றினை, விரும்பிக்கற்றுக் கேட்டு மனத்துள் கொள்வர். (எ.று)

முடிபு - புல்லியர் ஈயென வறுங்கதை கொள்வர். பெரியர் வண்டின் அல்லமன் காதையைக் கொள்வர்.

16. மயலளற் றூன்றுகோன் மல்கு மன்பெனும்
இயலெழுத் தெழுதுகோ லங்க லிங்கமாம்
வியனிலத் தளவுகோன் மதிவி ளக்கினை
அயர்வறத் தூண்டுகோ லமல லீலையே 15

(இ.ள்) அமலன்லீலை-நின்மலனாகிய அல்லம தேவனது திருவிளையாட்டைக் கூறும் இந்நூலானது; மயல் அளற்று- அஞ்ஞானமாகிய சேற்றின் கண்; ஊன்றுகோல் போல்- (பயன்தரும்) ஊன்றுகோல் போல; மல்கும் அன்பு எனும் இயல் எழுத்து எழுதுகோல்- மிகும் பத்தியாகிய இலக்கணமுடைய எழுத்தினை (மனமாகிய ஏட்டில்) எழுதுகின்ற எழுதுகோலாகப் பயன்படும். அங்கம்லிங்கம்ஆம் வியல்நிலத்து அளவுகோல்- உயிர்-கடவுள் ஆகிய அகன்ற இடத்தை (அளப்பதற்கு) அளவுகோலாகப் பயன்படும். மதிவிளக்கினை அயர்வு

Koviloor Digital Library

அறத்தூண்டுகோல்- அறிவாகிய விளக்கை சோர்வு நீங்கத் (தூண்டுகின்ற) தூண்டு கோலாகப் பயன்படும். (எ.று)

முடிபு - அமலலீலை ஊன்றுகோல், எழுதுகோல், அளவுகோல் தூண்டுகோல் (ஆகப் பயன்படும்)

சிறப்புரை - (அமலலீலை) என்னும் பெயரால் இப்பாட்டிலும், கன்றிய வைரிகள் என்னும் பாட்டிலும் இந்நூலைக் குறித்தலால் இந்நூலுக்கு அமலலீலை என்பதே இந்நூலாசிரியர் வைத்த பெயர் போலும். மராட்டிய மொழியில் எழுதப்பட்ட இந்நூலுக்கு ''லீலா விஸ்வம்பர'' என்று வேறு பெயர் குறித்தலையும் உணர்க. அங்கத்தையும், லிங்கத்தையும் (ஸ்தலம்) என்று வழங்குவதற்கு ஏற்ப ''அங்கலிங்கமாகிய வியன் நிலம்'' என்று கூறினார். அமலன் லீலை என்னும் தொடர். சில விகாரமுமாம் உயர்திணை (நன்.எழு.உயிர்9) என்னும் விதியால் இறுதி, ஒற்று அழிந்து அமலலீலை என்றாயிற்று.

விடயம்

17. நன்றிகொ ளடிகணான் குறந டந்துபோய்
என்றனி நாவினின் றெழுமிச் செய்யுளான்
வென்றிகொ னல்லமன் சீத்தி மென்பயன்
கன்றலி லன்பராங் கன்றை யூட்டுமால் 16

(இ.ள்) என் தனி நாவின் நின்று எழும் இச்செய்யுள் ஆன்- எனது ஒரே நாவினின்றும் பிறக்கும் (இந்நூலிலுள்ள) இச்செய்யுளாகிய பசுக்களெல்லாம்; நன்றி கொள் அடிகள் நான்கு உற நடந்து போய்- யாப்பின் நன்மையைத் தன்னிடத்தே கொண்ட பாதங்கள் நான்கும் (செவியாகிய தொழுவத்திலே) பொருந்த நடந்து சென்று; வென்றி கொள் அல்லமன் - (தம்மிடத்திலேயுள்ள) வெற்றியைக் கொள்ளும் அல்லமதேவனது; சீர்த்திமென்பயன்- மிகுபுகழாகிய மெல்லிய பாலை (உண்ணும்படி); கன்றல்இல் அன்பர்ஆம் கன்றை ஊட்டும்- சினமில்லாத சிவபத்தராகிய கன்றினை உண்பிக்கும் (எ.று); ஆல்- அசை

முடிபு - செய்யுளாகிய ஆன்உற நடந்து போய் சீர்த்தியாகிய பயனை உண்ணும்படி அன்பராகிய கன்றை ஊட்டும்.

சிறப்புரை - இந்நூலிலுள்ள பாட்டுகள் எல்லாம் தானே இயற்றிய தென்பார் (என் தனி) நாவினின்றெழும் என்று கூறினார். பயன் என்னும் செயப்படுபொருளுக்கு 'உண்ண' என்னும் வினை வருவிக்கப்பட்டது.

Koviloor Digital Library

அல்லமன் சீர்த்தியே இந்நூலுக்கு விடயமாயிற்று. பெரியகாப்பியங் களைப் பலர் அல்லது சிலர் சேர்ந்து இயற்றுவதும் உண்டு. சீகாளத்திப் புராணம் மூவரால் இயற்றப்பட்டது. காஞ்சிப்புராணம் இருவரால் இயற்றப்பட்டது என்னும் செய்தியை உணர்க. கன்னட மொழியிலுள்ள பிரபுலிங்கலீலை ஆறு அடிகள் அமைந்த (ஷட்பதி-வண்டு) பாட்டால் இயற்றப்பட்டது. இந்நூல் நான்கு அடிகள் அமைந்த பாட்டால் இயற்றப்பட்டுள்ளது. 'நயப்புடைய நாவீன் தொடைக்கிளவி' (பெரிய திரு.1) ஏன்று நம்மாழ்வார் கூறினது போல இவரும் ''என் தனி நாவினின்று எழுமிச் செய்யுளான்'' என்று கூறினார்.

உலகத்தோற்றம்

18. **[1]பரசிவம் பிரம மென்னப் பட்டொரு திரிவு மின்றி**
உரைமன மிறந்து நின்ற வொருசிவ லிங்கந் தன்னில்
வருமுயர் சதாசி வன்றான் மற்றவன் றனைப் பொருந்தும்
[2]அருமைகொண் ஞான சத்தி யவர்களாற் சிவனு திப்பன்
17

(பா.ம்) [1]பரசிவ பிரமம்; [2]இருமைகொண்

(இ.ள்) பரசிவம் பிரமம் என்னப்பட்டு-பரசிவம், பிரமம் என்று பெயர் கூறப்பட்டு; ஒரு திரிபும் இன்றி - யாதொரு விகாரமும் இல்லாததாகி; உரைமனம் இறந்துநின்ற ஒரு சிவலிங்கம் தன்னில் - பாசஞானமாகிய வாக்கையும், பசுஞானமாகிய மன அறிவையும் கடந்து அனுபவ ஞான மாத்திரைக்கே விளங்கி நின்ற; ஒன்றாகிய சிவலிங்கத்தி னின்றும்; உயர்சதாசிவன் தான் வரும் - உயர்வாகிய சகள நிட்கள வடிவையுள்ளும் சதாசிவன் தோன்றும்; மற்று அவன்தனை-பின் அச்சதாசிவமூர்த்தியை; அருமைகொள்ஞான சத்தி பொருந்தும்- அரியதன்மையைக் கொண்டிருக்கும் ஞானசக்தி (அறிவாற்றல்) கூடும்; அவர்களால் சிவன் உதிப்பன்- அவ்விருவரால் சகளவடிவையுடைய மகேசுவரன் தோன்றுவன் (எ.று)

முடிபு - என்னப்பட்டு இன்றி இறந்து நின்ற சிவலிங்கத்தில் சதாசிவன் வரும்; அவனை ஞான சத்தி பொருந்தும்; அவர்களால் சிவன் உதிப்பன்

சிறப்புரை - சிவலிங்கமானது பரசிவம் பிரமம் என்று கூறப்படும் என்பதை,

Koviloor Digital Library

பரம சிவமெனவும் பண்டைமறை போற்றும்
பிரமமெனவும் பேர் பெறுமிலிங்க மென்றானோ
(சிவ.தாலாட்டு 77)

என்னும் செய்யுளால் அறிக.

விகாரமில்லாத சிவலிங்கத்தினிடமிருந்து சதாசிவன் முதலானவர் தோன்றுவர் என்பது எவ்வாறு பொருந்துமெனின்?; முயுற்சி இல்லாத சூரியகாந்தக் கல்லில் இருந்து இச்சையின்றி எழுந்த சூரியனால் தீப்பொறி வருவது போன்று சுத்தமாயை முதலான மாயைகளின் இடமாக சதாசிவனாதியர் தோன்றுவர் என்க.

தூய பரப்பிரமமாம் விகாரமிலா விறையாற்
றருதலெங்ஙன் காரியங்கள் சடப்பழுதி யென்னிற்
றானிலாக் கதிர்ச்சிலை யிலிச்சை யிலா தெழுந்த
பருதியினாலழல் வரல்போல் பரசிவனான்மூலப்
பகுதியிடை மகதாதி காரியங்கள் வரற்குக் கருதின்
முரணிலையாகு மெனப் புகல வரறிஞர்
(வேதாந்.78)

என்னும் செய்யுளை நோக்குக.

லிங்கம் என்ற சொற்கு உலகத்தைத் தோற்றி ஒடுக்குவது என்று அறிஞர் பொருள் காண்பர். (லி) தோற்றத்தையும்; (க) ஒடுக்கத்தையும் குறிக்கும் என்பர். 'இகரமுறு லகரம் உலகுற்பத்தி ககரம் இலயம தாம் இவை புரிவதிலிங்கமாகும்''. (வீரசிங். வீர. 158)

(ஒப்புமை)

பரம சிவமெனவும் பண்டை மறை போற்றும்
பிரம மெனவும் பேர் பெறுமிலிங்க மென்றானே?
(சிவஞான.தாலாட்டு 77)

சரமுட னசர மென்னச் சாற்றிய வுலகு திக்குங்
கருமமோ டிலய மெய்துங் காரண மதனா லென்றும்
உரைமன மிறந்து ஞான வொளியுருவாகி நின்ற
மிரமம திலிங்க நாமம் பெறுமென விசைப்பர் தக்கோர்
சாற்றரும் பரம தாய சச்சிதா நந்த லிங்கம்
ஆற்றவும் பெரிதாம் தன்மை அடைதலினானு மன்றித்

Koviloor Digital Library

தோற்றுறு முலகி னுக்குக் கருப்பமாந் தொடர்பி னாலும்
போற்றுறும் பிரமநாமம பொருந்து மென்றறிந்து
கொண்மோ
(சித்தாந்த சிகாமணி, 18)

19. [1]சாற்றுமச் சிவனுக் கிச்சா சத்தி[2]யவ் விருவரானுந்
தோற்றுவ னுருத்தி ரன்றான் சொல்லிய விவற்குச் சத்தி
மாற்றருங் கிரியை யென்பர் மற்றிவ ரிருவர் பாலும்
போற்றுறு மரியு திப்பன் பொறியவன் சத்தி யாமால் 18

(பா.ம்) [1]சாற்றுமிச்; [2]யிவ்வருவரானுந்

(இ.ள்) சாற்றும் அ சிவனுக்கு இச்சா சத்தி- மேலே சொல்லப் பெற்ற அம் மகேசுரனுக்கு இச்சை என்பது சத்தியாகும். அ இருவரானும் உருத்திரன் தோற்றுவன்-அவ்விருவராலும் சகள வடிவத்தை யுடைய உருத்திரமூர்த்தி தோன்றுவன்; சொல்லிய இவற்கு சத்தி மாற்றரும் கிரியை என்பர்-மேற்சொல்லப் பெற்ற இவ்வுருத்தி ரனுக்குரிய சத்தியை நீக்குதல் இல்லையான கிரியை என்று பெயர் கூறுவர். மற்று இவர் இருவர் பாலும் போற்று உறும் அரி உதிப்பன்- பின் இவ்விருவரிடத்தும் சகலவத்தைகள், காத்தலைப் பொருந்தும் திருமால் தோன்றுவன். பொறி அவன் சத்தி ஆம்- இலக்குமி அத்திருமாலின் சத்தி ஆகும். (எ.று) தான், ஆல்-அசைகள்

முடிபு - அச்சிவனுக்கு இச்சாசத்தி (ஆகும்); இவ்விருவரானும் உருத்திரன் தோற்றுவன். இவற்குச் சத்தி கிரியை என்பர். இவர் பாலும் அரி உதிப்பன்; அவன் சத்தி பொறி ஆகும்.

20. அத்திரு மாலு மாவு மளிப்பவந் துதிப்பன் வண்டு
மொய்த்திசை முரலுஞ் செங்கேழ் முளரி வானவன் வற்குச்
சத்திவெண் கமலை யன்னோர் தரவரு [1]முலகத் தோற்றம்
நித்தனங் குருகு கேச னினைவு மாத் திரையினாமால் 19

(பா.ம்) [1]உலகிற் றேற்றம்

(இ.ள்) அ திருமாலும் மாவும் அளிப்ப- அந்த அழகிய மாயோனும் இலக்குமியும் தோற்றுவிக்க; வண்டு மொய்த்து இசைமுரலும் செம்கேழ்முளரி வானவன் வந்து உதிப்பன்- தேன் வண்டுகள் சூழ்ந்து பண்பாடும் செந்நிறமாகிய தாமரைமலருள் எழுந்தருளியிருக்கும் பிரமதேவன் வந்து தோன்றுவன்; அவற்கு சத்தி

Koviloor Digital Library

வெண்கமலை - அப்பிரமனுக்குச் சத்தி வெண்டாமரை மலருள் எழுந்தருளியிருக்கும் கலைமகள் (ஆவாள்); அன்னோர் தர உலகத் தோற்றம் வரும்- அவ்விருவரும் தோற்றுவிக்க (தனு கரண புவன போகமாகிய) உலக உற்பத்தி உண்டாகும். நித்தன் நம் குருகுகேசன் நினைவு மாத்திரையின் ஆம்- (இத்தோற்றங்களெல்லாம்) அழிவற்றவனும் நமது ஆசிரியனுமாகிய அன்னமயம் முதலிய ஐங்கோசக்குகையுள் எழுந்தருளியிருக்கும் அல்லமனாகிய இறைவனது எண்ணம் ஒன்றினாலேயே உண்டாகும். (எ.று) ஆல் - ஈற்றசை

முடிபு - திருமாலும் மாவும் அளிப்ப முளரிவானவன் வந்துதிப்பன்; அவற்குச் சத்திவெண் கமலை; அன்னோர்தர உலகத்தோற்றம்வரும். இத்தோற்றம் எல்லாம் குகேசனது நினைவு மாத்திரையில் ஆகும்.

சிறப்புரை - ''கிரு'' என்னும் வேரின் அடியாய்க்குரு என்னும் சொல் பிறந்ததென்பர். (கிரு- என்பதற்குச்சப்தி, பேசு, என்று பொருள்). மாணவர்க்கு நூல்களைச் சொல்லுபவன் என்பதே குரு என்னும் சொல்லுக்குப் பொருளாம். இவ்வாறு கூறாமல் 'கு' அறியாமை - ரு, நீக்குதல்; அறியாமையை நீக்குபவன் குரு என்றும், 'கு' குணாதீதம், 'ரு'- போத்தம்; குணாதீத போதீதமான கடவுளே குருவென்றும் கூறுவதுண்டு. குகேசன் என்பது அல்லமதேவனுக்கு ஒரு பெயராகும். குகை-மனம்; ஈசன்-அம்மனத்தில் வீற்றிருக்கும் கடவுள்; அக்கடவுள் அல்லமதேவனாகும். இக்கருத்தை ''குகையிதயம் அதன்கண் அமர் இறை ஈசன் என்று பொருள் குறித்துக் கொண்மோ, நிகழனைய குகேச மொழியுடையன் யான்றான் எனவே நிமலன் கூற'' (கோரக் . 59) என்று இந்நூலாசிரியர் கூறுவதால் உணர்க.

இஃது இவ்வாறாக வென எண்ணுதலாகிய சங்கற்ப மாத்திரையாற் செய்வதும்; காணத்தாற் செய்வது மென வினை முதல் இருவகைப் படும். அல்லமதேவன் சங்கற்ப வினை முதல்வன் ஆதலின்.

உலகத் தோற்றம் நித்தன் நம் குருகேசன்
நினைவு மாத்திரையின் ஆமால்

என்று கூறப்பட்டது. வினை முதல் இருவகை என்பதை,

கருத்தயிருவர் சங்கற்ப கருத்தா
கரண கருத்தா குவன்றுரைத்தார

Koviloor Digital Library

வரும் சாதனங்கொண்டு ஏற்றிற்
 கரண கருத்தாவாம்
வருத்தா நினைவு மாத்திரையால்
 வருவிக்கின்றோனனைத் தினையும்
செருத்தா னகன்ற சங்கற்
 பகருத்தாருவன்பர் திருக்கற்றோர்

(சிவப்பிரகாச விசாகம்-18)

21. ஆக்குறுஞ் செயல தொன்றே யயன்றனக் காக்க லோடு
காக்குறுஞ் செயலிரண்டுங் கண்ணனுக் காக்கல் காத்தல்
போக்குத லென்றிம் மூன்றும் புராந்த கற் [1]களித்த வர்க்கு
நீக்கரு மிறைமை நல்கி நிறுவினன் குருகுகேசன் 20

(பா.ம்) [1]அளித்தவர்க்கு

(இ.ள்) குருகுகேசன்- ஆசிரியனாகிய அல்லமனென்னுங்குகேசன் அயன்தனக்கு- பிரமனுக்கு; ஆக்குறும்செயல் அது ஒன்று ஏ(அளித்து) - (தனு, கரண, போகங்களைப்) படைத்தலுறும் செயலாகிய அது ஒன்றை மட்டும் கொடுத்து; கண்ணனுக்கு - மாயோனுக்கு; ஆக்கலோடு காக்குறும் செயல் இரண்டும் (அளித்து)- உலகைஉண்டாக்குதலுடன் காக்கும் தொழிலாகிய இரண்டையும் கொடுத்து. புராந்தகற்கு- திரிபுரத்தை அழித்த உருத்திரனுக்கு; ஆக்கல், காத்தல், போக்குதல் என்று இம்மூன்றும் (ஏ) அளித்து-உலகை உண்டாக்கலும், காத்தலும் அழித்தலும் ஆகிய இம்மூன்று தொழில்களை மட்டுமே கொடுத்து; அவர்க்கு- அம்மூவர்க்கும்; நீக்குஅரும் இறைமை நல்கி-பிறரால் மாற்றுதற்கரிய தொழில் தலைமையைக் கொடுத்து; நிறுவினன்- (அவர்களை) அப்பதவிகளில் நிலைபெறச் செய்தான் (எ.று)

முடிபு - குகேசன் அயன்தனக்கு ஒன்றே அளித்து, கண்ணனுக்கு இரண்டே அளித்து, புராந்தகற்கு மூன்றே அளித்து அவர்க்கு இறைமை நல்கி நிறுவினன். படைத்தல் முதலிய ஐந்து தொழில்களிலிருந்து பிரித்தலால் ஒன்றே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலையாம். அவ்வேகாரம் மற்ற இடங்களிலும் கூட்டடப்பட்டது. அளித்து என்பது அங்ஙனம் கூட்டப்பட்டது.

முதலாவது துதி கதி முற்றிற்று

Koviloor Digital Library

இரண்டாவது
கைலாய கதி
(கைலாச கதி என்றும் வழங்கும்)

22. வெள்ளி**மால்** வரையி னுச்சி
வீற்றிருந் தருளு முக்கண்
வள்ளலா ரொடுசூ ளுற்று
மதரரி நெடுங்கட் செவ்வாய்
[1]பிள்ளைவாண் [2]மதிநு தற்றம்
பிராட்டியல் லமனைக் காண்பான்
கள்ளமா யையை ஞாலத்து
விடுத்தவக் கதியுரைப்பாம் 1

(பா.ம்) [1]பிள்ளை வான்; [2]மதி நுதற்றெம்

(இ.ள்) மதர் அரி நெடுங்கண் செவ்வாய் பிள்ளை வாள்மதி நுதல்தம் பிராட்டி-செழித்து செவ்வரியினையுடைய நீண்ட கண் களையும் சிவப்பாகிய வாயினையும் இளமையும், ஒளியும் ஆகிய பிறை போன்ற நெற்றியையும் (உடைய) தம் பிராட்டியாகிய உமா தேவியானவள்; வெள்ளிமால் வரையின் உச்சி வீற்றிருந்தருளும் முக்கண் வள்ளலாரொடு- வெள்ளியாகிய பெரிய மலையினது சிகரத்தின் கண் எழுந்தருளியிருந்து (உயிர்களைத் துன்பக்கடலினின்று) எடுத்தருளும் மூன்று கண்களையுடைய வள்ளலாகிய சிவபெரு மானுடன்; சூள்உற்று-(அல்லமனைக் காண்பதாக) சபதங்கூறி; அல்லமனைக் காண்பான்- அல்லம தேவனுடைய உண்மை நிலையைக் காண வேண்டி; கள்ளமாயையை-வஞ்சகத்தன்மை வாய்ந்த மாயை என்பவளை; ஞாலத்து-நிலஉலகத்தின்கண்; விடுத்த-போகச்செய்தி; அக்கதி உரைப்பாம்-அந்த நிகழ்ச்சியைக் கூறும் கதியை(யாம்) கூறுவாம். (எ.று)

முடிபு - பிராட்டி வள்ளலாரொடு சூளுற்று அல்லமனைக் காண்பான் மாயையை ஞாலத்து விடுத்த அக்கதியினை (யாம்) உரைப்பாம்.

Koviloor Digital Library

சிறப்புரை - ''மதி நுதற்றம்'' என்பதில் தம் அசை. தம்பிராட்டி என்றுகூட்டி உரை கூறுவாறும் உண்டு. உயிர்களுக்குப் போகமும், வீடும் கொடுத்தலின் இறைவனை வள்ளல் என்று கூறினார்.

23. இயங்குவ நிற்ப வான யாவையும் கலைமா தோடு
முயங்குபு முன்ன மீன்ற முளரிவா னவன் [1]வகுத்து
வியன்புவி யண்டந் தன்னுள் விதித்தனன் றகுமி டங்கள்
வயங்கெழு மசுரர் நாகர் வானவர் [2]முதலி யோர்க்கும் 2

(பா.ம்) [1]வகுத்த: [2]முதலியோர்க்கு

(இ.ள்) முன்னம்- (உலகைத் தோற்றுவிக்கக்கருதிய) ஆதிகாலத்திலே; கலைமாதோடு முயங்குபு -கலைமகளோடு கூடி; இயங்குவ நிற்ப வான யாவையும்- அசைவன, அசையாதன ஆகிய எல்லா உயிர்களையும்; ஈன்ற முளரிவானவன்-உண்டாக்கிய தாமரை மலரிலுள்ள தேவனாகிய பிரமதேவன்; வயம்கெழும் அசுரர் நாகர் வானவர் முதலியோர்க்கும்- மனிதர்க்கேயன்றி வலிமை பொருந்திய அவுணர், நாகர், தேவர் முதலியோர்க்கும் ; வியன்புவி அண்டம் தன்னுள் - பெரிய (பிருதிவி) நில தத்துவத்துள் உள்ள பிரம்மாண்டத்துள்; தகும் இடங்கள்- உரிய இடங்களை; வகுத்து விதித்தனன் - வாழ்வதற்குத் தகும் இடங்களைப் பிரித்து (அவ்விடங்களில் வாழும்படி) ஆணையிட்டருளினன். (எ.று)

முடிபு - முன்னம் முயங்குபு யாவையும் ஈன்ற வானவன் (மனிதற்கேயன்றி) வியன் புவியண்டத்துள், அசுரர் நாகர் வானவர் முதலியோர்க்கும் தகுமிடங்களை வகுத்து விதித்தனன்.

வியன் புவி அண்டம் என்றது நிவிர்த்திகலையிலுள்ள பிருதிவி தத்துவத் தாலான பிரம்மாண்டத்தை. 'இப்பார்த்திவ மண்டலம் ஐவகை வடிவின் நாற்கோணவடிவம், ஐவகைக்குறியின் வச்சிரக்குறியும், ஐவகை நிறத்தில் பொன்னிறமும், இருவகைப் பத்துப் பீசத்தின் அகரம் லகரம் என்னும் இரண்டு பீசங்களும், பத்துவகை நாடியின் இடை பிங்கலை என்னும் இரண்டு நாடியும், தசவாயுக்களில் பிராணன் அபானன் என்றும் இரண்டு வாயுவும், இருவகைப் பத்திந்திரியங்களின் ஆக்கிராணம், உபத்தம் என்னும் இரண்டு இந்திரியங்களும், ஐவகை விடயத்திற் கந்தமும், கந்த முதற் சத்தமீறாகிய ஐந்து குணமும், ஐவகை அவத்தையிற் சாக்கிரமும் உடைத்தாய், விலங்கு, பறவை, பசு, பாம்பு, தாவரம், மானிடம், பைசாசம், இராக்கதம், இயக்கம், காந்தருவம்,

Koviloor Digital Library

ஐந்திரம், சௌமியம், பிரசாபத்தியம், பிரமம் என்னும் பதினான்குவகை யோனிகட்கும் இடனாய் நிற்றலின் (சிவ-பாடி-சூ-2-அதி-3) ''அசுரர், நாகர் வானவர் முதலியோர்க்கும் தகுமிடங்கள் விதித்தனன்' என்றார். இப்பிருதிவி தத்துவத்தாலான இவ் அண்டத்திற்கு அதிதெய்வம் பிரமன்; ஆதலின் இது பிரம்மாண்டமென்று பெயர் கூறப்படும். அடுத்த பாட்டில் 'நான்முக அண்டம்' என்று ஆசிரியர் கூறுவதையும் நோக்குக.

24. நான்முக வண்டந் தன்னுள் நனிசிறந் தொப்பி கந்த
தூன்முக விழிக ளாற்கண் டும்பர்க ளுவகை பூப்பத்
தான்மிகு மருளான் மேனி [1]சாத்திய பேரா னந்தக்
கூன்முக மதிய ணிந்த கொற்றவன் [2]கைலைக் குன்றம் 3

(பா.ம்) [1]சாற்றிய; [2]கயிலைக்

(இ.ள்) தான் மிகும் அருளால் மேனி சாத்திய -தானே (தன்னிடத்தில்) மிகுந்து தோன்றுகின்ற திருவருள் காரணமாக உடம்பு தாங்கிய; பேர் ஆனந்த - பெரிய இன்பத்தையுடைய; கூன்முகம் மதி அணிந்த கொற்றவன் -வளைந்த வடிவத்தையுடைய பிறையைச் சூடிய, வலிமையையுடைய இறைவனது கைலைக்குன்றம் - திருக்கயிலை மலையானது; உம்பர்கள்- தேவர்கள்; ஊன்முக விழிகளால் கண்டு- குறைபாடுள்ள முகக் கண்களால் (மட்டும்) பார்த்து; உவகைபூப்ப- மகிழ்ச்சி கூரத்தக்கதாய்; நான்முக அண்டம் தன்னுள்- பிரமனுடைய அண்டத்தின் கண்; நனி சிறந்து ஒப்பு இகழ்ந்தது -மிகவும் சிறப்புற்று உவமை இல்லாததாய் உள்ளது. (எ.று)

முடிபு - அருளான் மேனி சாத்திய, பேரானந்த மதியணிந்த கொற்றவனது கயிலைக் குன்றமானது உம்பர்கண்டு, உவகை பூப்ப, நான்முக அண்டத்துள் சிறந்து ஒப்பிகந்தது.

சிறப்புரை - சாத்திய, அணிந்த என்பன பெயரெச்ச அடுக்கு; இவ்வெச்சங்கள் கொற்றவன் என்னும் பெயருடன் முடிந்தன. ஊனம் என்பதுஊன் என குறைந்து நின்றது.ஊனையுடைய கண் என்று உரை கூறுவாருமுளர். அங்ஙனம் உரை கூறுவதைக் காட்டிலும் ஊனால் அமைந்த கண், ஊனின் கண் அமைந்த கண் என்று கூறுவதும் நன்றா யிருக்கும். முப்பத்தாறு தத்துவங்களுள் நிலம்-நீர்-தீ என்னும் மூன்று தத்துவங்களை மட்டும் பார்த்தலாலும் அவற்றைப் பார்க்கும் பொழுது முடிவுபோகப் பார்க்க முடியாமையாலும், 'ஊன்முக விழி' என்று கூறினார். பத்துக்கும் பதினொன்றுக்கும் உள்ள ஒப்பிகத்தலைப்

Koviloor Digital Library

போலாது, பத்துக்கும் கோடிக்கும் உள்ள ஒப்பிகத்தலைப் போன்ற தென்பார் 'நனி சிறநது ஒப்பிகந்தது' என்றார். நிவிர்த்தி கலை வடிவாயுள்ள பிருதிவி தத்துவப் பகுதியே பிரமனுடைய அண்டமாம்; இதற்கு அதிதேவதை பிரமா; அதனால் நான்முக அண்டம்' என்று கூறினார். பிரம்மாண்டத்தின் நடுவண் உள்ள மேருமலையின் உச்சியில் 'சோதிட்கம்' என்ற பெயருள்ள குன்றிலும், ஏமகூட வரைக்கும் தெற்கு இமயமலைக்கும் வடக்கு இவற்றின் இடையேயுள்ள கயிலை என்னும் மலையிலும், பிரம்மாண்டத்தின் உச்சியிலுள்ள சிவலோகத்திலும் இறைவன் அருளே திருமேனியாக் கொண்டு எழுந்தருளி இருப்பன் என்ப. (கந்த-அண்ட-30-41-65) 'ஏமகூடத்தடவரைத் தென்பால் இமயவடபால் தன்னில், ஏற்றமிகுங்கயிலை நிற்கும் அதற்கு மீதே இமையாழுக்கட்பகவன் உமையாளோடும், வீற்றிருப்பன் ஊழிதனில் அண்டங்காறும் மேலொடு கீழ் சென்றிடு மவ்வெற்புத்தானே' (கந்த-அண்-41)

25. கொள்ளைவண் டிழிந்து [1]தாது
குடைந்துமூக் குழவு டைந்து
[2]கள்ளிழிந் தொழுகு செம்பொற்
கடுக்கை வேய்ந்திலகு வேணி
வள்ளல்[3]வெண் புகழ்தி ரண்ட
வளங்கெழு [4]கைலைக் குன்றில்
வெள்ளிவந் தத்தி யாச
மாகவே விளைந்த தம்மா 4

(பா.ம்) [1]தாதுக்குடைந்து; [2]கள்ளழிந்; [3]வண்புகழ்; [4]கயிலைக்

(இ.ள்) கொள்ளைவண்டு-மிகுதியானவண்டுகள்; இழிந்து-நாளரும் பில் இறங்கி; தாதுகுடைந்து-மகரந்தப் பொடியைத்துளைத்து; மூக்குஉழ- மூக்கால் கிண்டுதலைச் செய்ய (அதனால்); கள் உடைந்து இழிந்து ஒழுகு- தேன்(மலருள் தேன் பொருந்திய இடம்) உடைந்து கசிந்து ஒழுகப்பெறும்; செம்பொன் கடுக்கை- சிவந்த பொன்னிற மாகிய கொன்றை மலர்கள்; வேய்ந்து இலகுவேணி வள்ளல்- சூடப் பெற்று விளங்கும் சடையையுடைய வள்ளலாகிய சிவபெருமானது; வெண் புகழ்த் திரண்ட வளம் கெழு கைலைகுன்றில் - வெண்ணிறமாகிய புகழ்குவிந்துள்ள வளப்பம் பொருந்திய திருக்கைலைமலையில்; வெள்ளி அத்தியாசம் ஆகவே விளைந்தது அம்மா- வெள்ளியின்

Koviloor Digital Library

தோற்றம் (அப்புகழாலான மலையில்) கற்பனையாகவே வந்து தோன்றிற்று இஃதோர் வியப்பு (எ.று)

முடிபு - வண்டு இழிந்து குடைந்து உழ, கள் உடைந்து இழிந்து ஒழுகு கடுக்கை (அக்கடுக்கை) வேய்ந்து இலகு வேணிவள்ளல்; அவ் வள்ளலது வெண்புகழ்த் திரண்ட குன்றில் வெள்ளி அத்தியாசமாகவே விளைந்தது.

சிறப்புரை - வந்து என்பதை அடையாகக் கொள்க. கடுக்கை ஆகுபெயர். கள் உடைந்து என்பதைத் தண்ணீர் உடைந்து வருகின்றது என்றது போற் கொள்க. கள்ளழிந்து என்ற பாடத்தைக் காட்டிலும் கள்ளிழிந்து என்ற பாடம் சிறக்கும். ஒரு உண்மைப் பொருளின் கண், மற்றொரு உண்மைப் பொருள் போலியாய்த் தோன்றுவதே அத்தியாசமாம். ஆரோபம், அத்தியாசம், கற்பனை என்பன ஒரு பொருள் சொற்களாம். எடுத்துக்காட்டு 'ஆரோபம். அத்தியாசம் கற்பனை யாவவெல்லாம் ஓரோர் வத்துவினில் வேறே யோரோர் வத்துவினை யோர்தல், நாரூடு பணியாய்த் தோன்றல் நரனாகித்தறியிற்றோன்றல், நீரூடு கானற் றோன்றல் நிறந்தலம் வெளியிற் றோன்றல்' (கைவல்ய நவ-தத்20) புகழிலே வெள்ளி கற்பனையாய்த் தோன்றியுள்ளது என்று கூறியிருந்தாலும் (இறைவனது புகழ் திரண்டாற் போல வெள்ளிமலை விளங்குகின்ற தென்பது கருத்தாகக் கொள்க). (இறைவனது வெண்புகழ் திரண்டமலை; வெள்ளியால் ஆன மலையைப் போலத் தோன்றுவது ஆரோபத்தால் என்று புனைந்துரை வகையாற்கூறினும்.

ஒப்புமை

இந்நூலாசிரியர் கருத்துக்கு ஒப்ப,

எண்ணில் மாதவஞ் செய்ய வந்தெய்திய
புண்ணியந் திரண்டுள்ளது போல்வது

(பெரியபுராணம் -2)

என்று சேக்கிழார் பெருமான் கூறுவதை ஓர்க.

கிளர்ந்தபே ரறிவின் மிக்க
கேண்மையோ ரறிவே யென்னத்
தளர்ந்திடா தோங்கி நின்ற
தருமத்தின் மகிழ்ச்சி யென்ன

Koviloor Digital Library

அளந்தறிற் திடுதற் கெட்டா
வண்ணன் மெய்ப் புகழே யென்ன
வளர்ந்திடுங் கயிலை வெற்பின்
வளஞ்சில விளம்பல் செய்வாம்
(திருமழுவாடிப்புராணம். மழு-23)

26. கண்பிசைந் தொருசே யின்னுங்
கலுழினுந் தனைக் கொடுப்பன்
மண்பிசைந் துண்ட மாயன்
[1]மறித்திட வலிய னல்லன்
நண்பிசைந் திறை வனுக்கே
[2]நாமிட னாவ மென்று
பண்பிசைந் தலைதி ரண்ட
பரிசினின் றிடுமக் குன்றம் 5

(பா.ம்) [1]மறுத்திட ; [2]நாமிடமாவ

(இ.ள்) ஒரு சேய் கண் பிசைந்து இன்னும் கலுழினும் - (குழவி பால் குடிப்பது கடல்குடிப்பது போன்று ஆற்றலையுடைய பூதகணங்களின்) ஓர் குழந்தையானது, கண்களைக் கசக்கிக் கொண்டு இனியும் அழுதாலும்; தனைக் கொடுப்பன்- (சிவபெருமாள்) திருப்பாற்கடலாகிய) தன்னைக் அக்குழந்தைக்கு உண்ணக் கொடுத்து விடுவான்; மண் பிசைந்து உண்ட மாயன்-மண்ணைப் பிசைந்து உண்ட திருமால் (அச்சிவ பெருமானை); மறுத்திடவலியன் அல்லன் - தடுத்திட ஆற்றலுடையவன் அல்லன் (ஆகையால்); நாம்நண்பு இசைந்து இறைவனுக்கு இடன் ஆவம் என்று- நட்பாகப் பொருந்தி (ஒருப்பட்டு) அவ்சிவபெருமானுக்கே நாம் வீற்றிருக்கும் உரிய இடமாக ஆய்விடுவோம் என்று கருதி. பண்பு இசைந்து - (இறைவன் வீற்றிருக்கும் மலையின்) தன்மையைப் பெறுவதற்கு ஒருப்பட்டு; அலைதிரண்டபரிசில்- அத்திருப் பாற்கடல் திரண்டு நின்ற தன்மையைப் போல; அக்குன்றம் நின்றிடும் - அவ்வெள்ளிமலை நின்று விளங்கும். (எ.று)

முடிபு - ஒரு சேய் பிசைந்து கலுழினும் தன்னைக் கொடுப்பன் மாயன் மறித்திட வலியன் அல்லன். (ஆகையால்) இறைவனுக்கு இசைந்து நாம் இடனாவமென்று; அலை (மலைப்) பண்பாதலுக்கு இசைந்து திரண்ட பரிசில் (ஒப்ப) குன்றம் நின்றிடும்.

Koviloor Digital Library

பற்ப னாடுயில் கொளப்புரி யுதவிபா ரான்மால்
வெற்பினாற் பலரொடுங் கலக்கினனிவன் விரும்பி
யெற்பணிந்திட வாவனென்றிரும்பயப் புணரி
பொற்புறத்திரண்டு யர்ந்து நிற்பது பொரூஉ மதுவே
(சூ.ஞா.10)

என்னும் செய்யுளை ஒப்பு நோக்குக.

செங்கண் மாலினை விடுத்தொரு சிறுவனுண்டிடமுன்
அங்களித்தல் போற்றனையின்னு மளித்திடா தெவர்க்குந்
துங்கவெற்பு விற் பரன்றனைச் சுமந்து கொண்டினது
பொங்கு பாற்கடலிருப்பது போலு மச்சயிலம்

(மருதவனப் புராணம் அலை மலையான் பரிசின் அக்குன்றம் நின்றரும் ; உப.2)

27. ஒழுகுறு மருவி யீட்ட மொலியினா னகுவெண் டிங்கள்
பழகுறு முயற்க ணங்காற் பாகசா தனன்கூர்ங் கோட்டு
மழகளி றுமிழ்ம தத்தான் மலர்மிசைக் கடவு ளூர்தி
யழகுறு நடையா லன்றி யறிதரப் [1]படாவக் குன்றில் 6

(பா.ம்) [1]படாதக்குன்றில்

(இ.ள்) அகுன்றில் - அவ்வெள்ளி மலையில்; ஒழுகுறும் அருவிஈட்டம் -நீர் ஓடப்பெற்ற சுனைகளின் கூட்டமானது; ஒலியினால் - அதனிடத்து இருந்து உண்டாகும் சலசல வென்னும் ஓசையாலும்; நகுவெண்திங்கள்- ஒளியும் வெண்மையும் ஆகிய மதியமானது; உடல்பழகு உறும் களங்கால் -தனது வடிவத்தில் என்றும் வழங்குதலை உறும் மாசினாலும்; பாகசாதனன் கூர்கோட்டுமழகளிறு- பாகன் என்னும் அரக்கனை அழித்த இந்திரனது கூர்மையாகிய தந்தங்களையுடைய, இளமையாகிய வெள்ளையானையானது; உமிழ்மதத்தால் - தான் வெளிப்படுத்தும் மத நீராலும்; மலர்மிசைக்கடவுள் ஊர்தி- செந்தாமரை மலர் மேலுள்ள நான்முகன் வாகனமாகிய வெண்ணிற அன்னமானது; அழகு உறுநடையால்- தனது எழில் பொருந்திய நடையினாலும் அன்றி- அறியப் பெறுமே யல்லாமல்; அறிதரப்படா- வேறொரு ஏதுவால் அறிந்து கொள்ளப்பெறா. (எ.று)

Koviloor Digital Library

முடிபு - அக்குன்றில் அருவிஈட்டம் ஒலியினாலும், திங்கள் உடற் களங்காலும், பாக சாதனன் களிறு (தனது) மதத்தாலும், கடவுள் ஊர்தி நடையாலும் (அறிதரப்படுமே) அன்றி (வேறொன்றால்) அறிதரப்படா.

நீர் வெண்மை என்பதை பொன்பார்புனல் வெண்மை, என்னும் (உண்மை விளக்கம்-5) செய்யுளான் அறிக. வெள்ளிமலையில் நீரொழுகும் அருவி, வெண்டிங்கள், வெள்ளையானை, வெள்ளை அன்னம் இவற்றை அறிதற்குசிறந்த ஏது முறையே, ஒலியும் உடற்களங்கமும், மதமும், நடையுமே யன்றி வேறொரு ஏதுவுமில்லை என்றபடி.

இப்பாட்டின் கருத்துடன்;

நாயகன் கழல் சேவிக்க நான்முகன்
மேயகாலம லாமையின் மீண்டவன்
தூயமால் வரைச் சோதியின் மூழ்கியொன்
றாயவன்ன முங்காணா தயர்க்குமால்

(பெரியபுராணம்.திருமலை.7)

என்று சேக்கிழார் பெருமான் கூறியுள்ளதையும் ஒப்புநோக்கு.

இப்பாட்டு 'பொதுக்குணத்து ஒப்புமையுடைய இரண்டு பொருள் களுக்கு ஒரு காரணத்தால் வேற்றுமை தோன்றல் மறையாமையணிக்கு ' எடுத்துக்காட்டாயுள்ளது. (முத்துவீரியம்- 58)

28. **விளங்கொளி துளும்பு மந்த**
வெள்ளியங் கிரியி னுச்சித்
துளங்கொளி விரிக்குஞ் செம்பொற்
சுடர்மணிச் செய்குன் றொன்று
களங்கறு பராரைத் துய்ய
[1]கருப்புரக் குவாலின் மீது
வளங்கெழு சுடரொன் றுற்று
வயங்குதல் போலு மன்றே 7

(பா.ம்) [1]கர்ப்புரக்

(இ.ள்) விளங்கு ஒளி துளும்பும் அந்த வெள்ளியம் கிரியின் உச்சி- (எல்லாப் பொருளும்) தெரிவதற்கு ஏதுவான ஒளியானது தளும்புகின்ற அந்த வெள்ளிமலைச் சிகரத்திலே; துளங்குஒளி விரிக்கும்- பார்ப்பவர்

Koviloor Digital Library

கண் கூசுதலால் அசைவதற்கேதுவான வெயிலை விரிக்கும் (வண்ணம்); செம்பொன் சுடர்மணி செய்குன்று ஒன்று (வயங்குதல்) - சிவப்பாகிய பொன்னாலும், ஒளிபெற்ற செம்மாணிக்கத்தாலும் இயற்றப்பெற்ற மலையொன்று விளங்குதலானது; களங்கு அறு பராரை துய்ய கருப்புரம் குவாலின் மீது - மாசற்றதும் பருத்த அடிப்பக்கத்தை யுடையதும் வெண்மையானதும் ஆகிய கருப்பூரக் குவியலின் மேல்; வளங்கெழு சுடர் ஒன்று உற்று- (தன்னை வழிபட்டவர்க்கு) எல்லாச் செல்வங் களையும் பொருந்தச் செய்யும் சூரியனாகிய ஒளி ஒன்று பொருந்தி; வயங்குதல் போலும் - விளங்குதல் போலும் (எ.று)

முடிபு - வெள்ளியங்கிரியின் உச்சி செய்குன்றொன்று (வயங்கு தல்) கருப்புரக்குவாலின் மீது சுடரொன்றுற்று வயங்குதல் போலும். திங்கள் வெண்ணிறம் உடையது. நெருப்பினை வெண்மை என்றே நியாய நூலார் கூறுவர். அதனால் இங்கே சுடர் என்றது செஞ்ஞாயிற்றை.

29. இனையதிக் கைலை வெற்பி
லிறையர சிருக்கை யொன்றுண்
டனையதை யணிய மாட்டா
தப்புறம் போயி னானென்
றெனையிகழ் பவர்க ளில்லை
யிலங்குமம் மண்ட பத்தின்
றனிவள மனந்த னாலுஞ்
சாற்றிடற் கரிது மாதோ 8

(இ.ள்) இனையது இ கைலை வெற்பில்- இத்தகையதாகிய இந்தக் கைலை மலையில், இறைஅரசு இருக்கை ஒன்று உண்டு. சிவ பெருமான் அரசு வீற்றிருக்கும் மண்டபம் ஒன்று உள்ளது. இலங்கும் அம்மண்டபத் தின் தனிவளம்- விளங்கும் அந்த மண்டபத்தின் ஒப்பற்ற மாண்பு; அனந்தனாலும் சாற்றிடற்கு அரிது- சிறந்த புலமைவாய்ந்த ஆதிசேட னாலும் சொல்லப்படுவதற்கு அரியது. அனையதை- அத்தகைய பெருமை வாய்ந்த மண்டபத்தை; அணிய மாட்டாது-புனைந்து பாட முடியாமல்; அப்புறம் போயினான் என்று -அதற்கடுத்த பொருளைப் பாடச் சென்றான் என்று எனை இகழ்பவர்கள் இல்லை. புலமையில் சிறிய என்னை பழித்து உரைப்பவர் (இவ்வுலகில் ஒருவரும்) இல்லை (எ.று)

Koviloor Digital Library

முடிபு - வெற்பில் அரசிருக்கை ஒன்றுண்டு. அம்மண்டபத்தின் வளம் அனந்தனாலும் சாற்றிடற்கு அரிது. அனையதை அணிய மாட்டாது போயினான் என்று என்னை இகழ்பவர் இல்லை.

30. **அன்ன மண்டபத் தங்கண னோர்பகன்**
மின்னு செம்மணி வேதிகை [1]ஒன்றன்மேன்
மன்னு செங்கதிர் மண்டலத் துற்றன
னென்ன வந்தங் கிருந்தன னென்பவே 9

(பா.ம்) [1]ஒன்றின்மேன்

(இ.ள்) அங்கணன்-அழகிய கண்ணையுடைய சிவபெருமான்; அன்ன மண்டபத்து ஓர் பகல் வந்து - அத்தகைய சிறப்பு வாய்ந்த மண்டபத்தின் கண் ஓர்நாள் வந்து; மின்னுசெம்மணி வேதிகை ஒன்றன் மேல்- ஒளிவிடுகின்ற சிவப்பாகிய மாணிக்கத் தாற்செய்த திண்ணை ஒன்றன் மேல்; மன்னு செங்கதிர் மண்டலத்தை உற்றனன் என்ன- நிலையான சிவந்த கிரணங்களையுடைய சூரிய மண்டலத்தில் வீற்றிருந்தான் என்று கண்டோர் கூறும்படி; இருந்தனன்-எழுந்தருளி இருந்தான் (எ.று); என்ப-எ-அசைகள்.

முடிபு - அங்கணன் மண்டபத்து ஓர் பகல் வந்து வேதிகை மேல் (செங்கதிர் மண்டலத்து உற்றனன்) என்ன இருந்தனன்.

இறைவன் எங்கும் வியாபித்திருந்தாலும் ஞானிகளுடைய நெஞ்சத் தாமரையிலும் துவாத சாந்தவெளியிலும் ஆதித்த மண்டலத்தின் நடுவிலும் வேத முடிவிலும் சோம லோகத்திலும் சிற்றம்பலத்திலும் சிறப்பாக எழுந்தருளியிருப்பன் என்பதை,

உணர்ந்து ளோருளத் தகர
புண்டரீகமுந்து வாதசாந்தமும்
உம்பர் வணங்கு மாதித்த மண்டல
நடுவுநான் மறைகளின் முடிவுஞ்சீர்
இணங்கு சோமலோக முந்திருவம்
பலத்திட முந்தென் குளத்தூர் வாழ்
குணங் கடந்தவர் சிறப்பிட
மாமெனக் கூறிடுமறை நூலே

என்னும் சிவஞான முனிவர் திருவாக்கால் அறிக.

Koviloor Digital Library

செங்கதிர் மண்டலத்துற்றனன் என்ன, என்பதற்குச் சூரியன் தனது சமசதுர மண்டலத்தில் பொருந்தியிருந்தான் என்று சொல்லும்படி என்றும் உரை கூறலாகும். சூனிய சிங்காதனத்திலிருந்த கதி.55ஆம்·செய்யுளை நோக்குக.

மிக்கதோ ருதய வெற்பின் விளங்கிய கதிரோனென்னத்
தக்க மாமணிப் பொற்சிங்காதனத்திருந்த ருளும் பொற்பும்

என்பது மழுவாடிப்புராணம்.

31. **குழவி [1]யாயுடற் கூனிந ரைத்ததோர்**
[2]விழவு வாண்மதி வேணியின் மேவுறக்
கிழவி யாகிக் கிரிக்கோன் மகப்பெறு
மழகு நீர்மக ளாயிடை வாழ்வுற

(பா.ம்) [1]யாகியுட்; [2]விழைவு

(இ.ள்) குழவிஆய்-இளம்பருவம் உடையதாய்; உடல்கூனி-வடிவம் வளைந்து; நரைத்தது ஓர் விழவு வாள்மதி - வெளுத்ததாகிய ஒன்றாகிய; மகிழ்ச்சி தங்கிய ஒளி பெற்றுள்ள பிறையானது; வேணியில் மேவுற -சடையிலே பொருந்தி யிருக்கவும்; கிழவிஆய்-இறைவனுக்கு மனைக் கிழத்தியாகி; கிரிகோன் மகபெறும்-மலைக்கு உரிய குழந்தையாகிய முருகனை ஈன்ற; அழகு நீர்மகள் -எழில்தங்கிய கங்கை யாகிய பெண்; ஆயிடை வாழ்வு உற-அச்சடைக்கண் வாழ்தலைப் பெற்றிருக்கவும் (எ.று)

முடிபு - ஆய், கூனி, நரைத்த மதிவேணியில் மேவுற; ஆகி; பெறும் நீர்மகள் ஆயிடை வாழ்வுற. மதி குழந்தைப் பருவம் உடையதாயிருந்தும் அப்பருவத்திற்கு ஒத்த உடலமைப்பினைப் பெறாது கூனி நரைத்துள்ளது என்றும், கிழப்பருவமுடைய வளாயிருந்தும் கிரிக்கோனாகிய மகவைப் பெற்று அழகுடையவளாயிருந்தாள் என்றும், ஒவ்வாமை தோன்றக் கூறிய முரண் அணியை இச்செய்யுளுள் காண்க. முருகன் கங்கையின் மகன் என்பதைக் காங்கேயன் என்னும் பெயரைக் கொண்டு அறிக.

திங்கள் குழவியாயும் கிழவனாயும் விளங்குகின்றான் என்பதை,

விருத்தனாய்ப் பாலனாகி விரிநிலா வெறிக்கும் சென்னி

(திருமுறை4-பதி22-செய்9)

என்னும் தேவாரத்தால் அறிக.

Koviloor Digital Library

முதுகிரிநாதர்க்கின்றிப் பிறைக்கு வளையுமுடல்
வந்தவாறென் கொல் பேசுகவே ...

என்பது பழமலை அந்தாதி.20

சோலை மணங்கமழ் சோற்றுத்
துறையுறைவார் சடைமேல்
மாலை மதியமன் றோவெம்
பிநானுக் கழகியதே
தூய வெண்ணீற் றினன்
சோற்றுத் துறையுறை வார்சடைமேல்
பாயும் வெண்ணீ திரட்
கங்கை யெம்மானுக் கழகியதே

(திருநாவுக்கரசு தேவாரம்)

32. **அங்கி [1]யென்றற் கடுப்பமே னோக்கிய**
செங்க ணொன்று திருநுதல் சேர்தரத்
திங்க ளென்றுந் தினகர னென்றும்வாழ்
அங்கண் மல்கு மருண்மடை போன்றுற 11

(பா.ம்) [1]யென்னற

(இ.ள்) அங்கி என்றற்கு அடுப்ப-அக்நி என்று சொல்லுவதற்குப் பொருந்த; மேல்நோக்கிய செம்கண் ஒன்று - மேல் நோக்கிய முகமாயிருப்பதும் சிவந்த நிறமாயிருப்பதும் ஆகிய விழி ஒன்றானது; திருநுதல் சேர்தர-அழகிய நெற்றியிடத்தே பொருந்தியிருக்கவும்; திங்கள் என்றும் தினகரன் என்றும் வாழ் அம்கண் - சோமன் என்றும் சூரியன் என்றும் (பெயர் கூறப்பெற்று முகத்திலே) பொருந்தியிருக்கும் அழகிய விழிகளானவை; மல்கும் அருள்மடை போன்று உற-மேலும் மேலும் மிகுகின்ற அருளாகிய வெள்ளம் வரும் மதகுகள் போல காணப் பெறவும். (எ.று)

முடிபு - அங்கி என்றற்கு அடுப்ப மேல் நோக்கிய செங்கணொன்று நுதலில் சேர்தர, திங்கள் என்றும், தினகரன் என்றும் வாழ்கண்மடை போன்று உற; அங்கி என்றது அக்நியை, அக்நி என்னும் சொல்லிற்கு அக்நே நயதி (மேலே கொண்டு போகின்றவன்) என்று பொருள் கூறுவர் வடமொழிவல்லார். அவர் கூறும் பொருட்குப் பொருந்தவும் அக்நிமேல்

Koviloor Digital Library

நோக்கி எரியும் சிவப்பு நிறப்பொருளாதலின் அதற்குப் பொருந்தவும். **(அங்கி யென்றற்கடுப்ப மேனோக்கிய செங்கண்)** என்று கூறினார்.

33. **எண்ணு மன்ப ரிதயமென் புட்படு**
கண்ணி போன்றுவார் காதிடைத் தோடுற
நண்ணு மாதுமை நன்னுதற் பொட்டென
வண்ண நீல மணிமிடற் றொன்றுற 12

(இ.ள்) எண்ணும் அன்பர்-வடிவத்தைத் தியானிக்கத் தொடங்கும் தொண்டர்களது; இதயம் என்புள்- அடங்காமல் திரியும் மனம் என்கின்ற பறவைகளை; படும் கண்ணி போன்று- அகப்படச் செய்யும் வலைகள் போல்; வார்காது இடை தோடு உற- தொங்கும் துணைக்காதினுள் தோடு என்னும் அணி பொருந்தி நிற்கவும்; நண்ணும் மாது உமை நல் நுதல் பொட்டு என -இடப்பாகத்திலே பொருந்தியிருக்கும் பெண்ணாகிய உமாதேவியாரின் நல்ல நெற்றியிற் றீட்டிய கருத்த பொட்டைப் போல வண்ண நீலம் -அழகிய நீலநிறம் வாய்ந்த நஞ்சக்கறையானது; அணிமிடற்று ஒன்று உற-அழகாய் கண்டத்திலே பொருந்தியிருக்கவும். (எ.று)

முடிபு - தோடு கண்ணிபோன்று காதிடைஉற, நீலம் பொட்டென மிடற்று ஒன்றுற. அணிமிடறு என்று கொள்ளாமல் மணிமிடறு என்றும் கொள்ளலாம் 'தோடுடையசெவியன்' என்னும் திருஞான சம்பந்தர் திருப்பதிகத்தை உட்கொண்டு' தோடு அன்பர் இதயம் படும் கண்ணி போன்று காதிடை உற என்று கூறினார்.

நீலம் - நஞ்சக்கறை; நீலநிறம் மிடற்றிற்கு அழகு செய்தது என்பதை 'கறைமிடறு அணியலும் அணிந்தன்று' என்னும் புறநானூற்றுச் செய்யுளால் அறிக. உமாதேவி கரியநிறம் பெற்றவள். அவள் நெற்றியில் வைக்கும் கருத்த பொட்டு அவள் உடல் நிறத்தைக் காட்டிலும் மிகக் கருப்பாயிருக்க வேண்டும். அப்பொட்டின் கருப்பைப் போல நஞ்சக்கறை இருந்தது என்று கருப்பின் மிகுதிக்கும் பொட்டு நுதற்கு அழகு செய்தாற் போல நஞ்சக் கறைமிடற்றிற்கு அழகு செய்தது என்பதற்கும் இவ்வுவமை கூறினார்.

இரண்டு சிறகுகளைக் கொண்டு உலகில் திரிந்துழலும் பறவை போல் மனம் சங்கற்பம் விகற்பம் என்னும் இரண்டினைக் கொண்டு உலகில் திரிவதால் அதனைப் புள் என்று கூறினார்.

Koviloor Digital Library

34. நகந்த ருங்கொடி கண்களை நாணியே
முகந்தி ரும்பு முறையிற் றிரும்புமான்
மகிழ்ந்தி டங்கதிர் வீர மழுவலந்
தகுந்த குந்தகு [1]மென்று தயங்குற 13

(பா.ம்) 1 என்னத்

(இ.ள்) நகம் தரும் கொடி - இமயமலை யால் தரப்பெற்ற பூங்கொடி போன்ற அம்மையாரது; கண்களை நாணி-விழிகளைப் பார்த்து வெட்கி; முகம் திரும்பும் முறையில் -முகம் திரும்பிய விதத்தைப் போல; திரும்பும்மான் -முகந்திரும்பியுள்ளமானானது; மகிழ்ந்து இடம் (தயங்குற) -களிப்படைந்து இடக்கையில் விளங்கி நிற்கவும். கதிர்வீரம் மழு - ஒளியும் வீரமும் உடைய தீவடிவமான மழு உருண்டையானது; வலம்-வலக்கையிலே; தகும் தகும் தகும் என்று தயங்குற -தகும் தகும் தகும் என்று எழும்பும் ஒலியுடன் எரிந்து விளங்கி நிற்கவும். (எ.று)

முடிபு - நாணி திரும்பும் முறையில் திரும்பும் மான் இடத்திலே மகிழ்ந்து தயங்குற, மழுவலத்திலே தகுந்தகுந் தகும் என்று தயங்குற; தீவடிவமாகிய மழு உருண்டை. தகதகதக என்று எரிந்து கொண்டிருப் பதைச் சிறிது திரித்து தகுந் தகுந் தகும் என்று தயங்குற என்று கூறினார். தன் கண்ணிற்கு நாணி மான் திரும்பியது தகும் தகும் தகும் என்று தேவியார் கருதிக் கொள்ளும்படியும்; தேவியாரின் கண்ணிற்குத் தன்கண் தகும் தகும் தகும் என்று கருதிக் கொண்டு இடக்கரத்தில் மான் மகிழ்ந்து தங்கும் படியும் இருவருக்கும் ஏற்ப ஒலி எழுப்பி அம்மழு விளங்கிற்று என்று கூறினார்.

35. சொற்றெ ரிந்த சுடர்மணி கங்கண
முற்றி லங்க வொருகருங் கேழலின்
பற்றி ருந்த மதாணியிற் பட்டெனப்
புற்ற ருங்கலை யுற்றரை பொற்புற 14

(இ.ள்) சொல் தெரிந்த சுடர்மணி கங்கணம் -சொல்வடிவமாகிய இலக்கிய இலக்கணங்களை எல்லாம் அறிந்துள்ள ஒளியாகிய மாணிக்கத்தையுடைய (ஆதிசேடனாகிய) கங்கணமானது; உற்று இலங்க- (கையில்) பொருந்தி விளங்கவும்; ஒரு கருங்கேழலின் பல் - ஒப்பற்ற வலிய (திருமாலாகிய) பன்றியின் கோடானது; மதாணியில் திருந்த - (மார்பில்) பதக்கம் போல் விளங்கித்தான் அழகு பெறவும்;

Koviloor Digital Library

புல்தரும் கலை - புலியால் தரப் பெற்ற (தோலாகிய) உடை; அரைபட்டு என உற்று -இடையில் பட்டாடையைப் போல் பொருந்தி; பொற்பு உற - தான் அழகினை அடைந்து நிற்கவும் (எ.று)

முடிபு - தெரிந்த மணிகங்கணம் (கையில்) உற்று இலங்க; கேழலின் பல் மதாணியில் திருந்த, புல்தரும் கலை பட்டென அரை உற்று பொற்பை உற; கருங்கேழல் -வலியபன்றி அல்லது கருமையை முன்னைய நிறமாகக் கொள்ளினும் பொருந்தும். 'புரி' என்பது புல் என்று விகாரப் பட்டது. இங்கே திருந்தியது புல்லும் பொற்புற்றது கலையுமாகக் கொள்க.

36. **புரத்தை வென்ற நகைக்குமென் போதினோன்**
சிரத்தை வென்றசெங் கைக்குஞ் சிலைமதன்
னெரித்த கண்ணிற்கு மின்றெனக் கூற்றடூஉத்
தரித்த வீரக் கழலொடு தாளுற 15

(இ.ள்) புரத்தைவென்ற நகைக்கும்- திரிபுரங்களை வென்ற சிரிப்புக்கும்; மென்போதினோன் சிரத்தை வென்ற செம்கைக்கும் - மென்மையாகிய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனது தலையைக் கிள்ளி வென்ற சிவந்த கைக்கும்; சிலைமதன் எரித்த கண்ணிற்கும்- வில்லையுடைய காமனை எரித்து வென்ற நெற்றி விழிக்கும்; இன்று என - யாதொரு வெற்றி அணிகளும் இல்லை என்று சொல்லப்பட; கூற்று அடூஉ தரித்த வீரக்கழலொடு தாள் உற -காலனைக் கொன்று அணியப் பெற்ற வீரக்கழல் என்றும் அணியோடு திருவடி பொருந்தியிருக்கவும். (எ.று)

முடிபு - வென்ற நகைக்கும் வென்ற கைக்கும் எரித்த கண்ணிற்கும் இன்று என, அடூஉ தரித்த கழலொடு தாள் உற.

37. **இருந்த வாதி யிடத்தி லிருந்தனள்**
பரந்த வானும் படியு முயிர்களு
மொருங்கு தோன்ற வுதவிக் கருவுறீஇ
வருந்தி லாத மணிவயிற் றன்னையே 16

(இ.ள்) இருந்த ஆதி இடத்தில் - (மதி வேணியின் மேவுற, நீர்மகள் ஆயிடை வாழ்வுற, செங்கண் திருநுதல் சேர்தர அங்கண் அருண்மடை போன்றுற, தோடு காதிடை உற, நீலம் அணியாய் மிடற்று ஒன்றுற, மான் இடம் தயங்குற, மழு வலம் தயங்குற, கங்கணம் உற்றிலங்க, கேழலின் பல்திருந்த, புல்தருங்கலை அரை உற்று பொற்புற, தாள் வீரக் கழலொடு

Koviloor Digital Library

உற) எழுந்தருளி யிருந்த முதல்வனாகிய சிவ பெருமானது இடப்பாகத்திலே; பரந்த வானும் படியும் உயிர்களும் ஒருங்கு தோன்ற உதவி - அகன்ற விண்ணுலகும் மண்ணுலகும் சீவர்களும் ஒரே காலத்தில் வெளித்தோன்றும்படி ஈன்றிருந்தும்; கருவு உறீஇ வருந்து இலாத மணிவயிற்று அன்னை - மேற்சொன்னவைகளைக் கருப்பையில் தாங்கி (அதனால்) துன்புறுதல் இல்லாத அழகிய வயிற்றினை உடைய தாயாகிய உமாதேவியார்; இருந்தனள்-வீற்றிருந்தாள் (எ.று)

முடிபு - உதவி(யும்) உறீஇ வருந்து இலாத வயிற்று அன்னை இருந்த ஆதியிடத்தில் இருந்தனள். உதவியும் என்னும் உயர்வு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்காது. அன்னைவாதி (வாதிடும் சிவபெருமான்) யிடத்திலிருந்தனள் என்று சொன்னயமுங் காண்க.

38. **இறைவ ணங்க ணெனுமுச் சுடர்களு**
முறவு கொண்ட விருளெனு மோதிமே
லறவ னென்ற[1]வவ் வண்ணல் புனைந்தரு
ணறவு மிழ்ந்த நறுமலர் தாழ்ந்திட 17

(பா.ம்) [1] நம்மண்ணல்

(இ.ள்) இறைவன் அம்கண் எனும் முச்சுடர்களும் - சிவபெருமானுடைய அழகிய விழிகள் என்று சொல்லப் பெறும் சூரியன், சந்திரன் அக்நி என்ற மூன்று ஒளிகளும்; உறவு கொண்ட இருள் எனும் ஓதிமேல் -பகைத்துப் போக்க முடியாமல் நட்பினைக் கொண்ட இருள் ஒன்றிருக்கு மேல் அவ்விருள் என்று சொல்லப்பெறும் அளகத்தின் மேல்; அறவன் என்ற அ அண்ணல் - (ஓர் காலத்தில் ஆலின் கீழ் இருந்து முனிவர்களுக்கு) - அறம் சொன்னவன் என்று சொல்லப் பெற்ற அத்தகைய தலைவன்; புனைந்தருள் - (காதலித்துச்) சூட்டியருளிய; நறவு உமிழ்ந்த நறாமலர்- தேனை வெளிப்படுத்திய மணமாகிய மலர்கள்; தாழ்ந்திட- தங்கிடவும் (எ.று)

முடிபு - அண்ணல் ஓதிமேல் புனைந்தருள் மலர் தாழ்ந்திட, தேவியின் அளகத்தின் மேல் சூட்டப் பெற்ற மலர், நன்கு மலர்ந்த மணமலர் என்பார் நறவுமிழ்ந்த நறுமலர் என்றார். நன்கு மலர்ந்த மலருக்கு மணம் மிகுதியும் உண்டென்பதை 'அரும்பிற்கும் உண்டோ அலரது நாற்றம்' என்னும் புறப்பொருள் வெண்பா மாலையால் அறிக.

Koviloor Digital Library

இறைவன் உமாதேவியின் கூந்தலை மிக விரும்பி நோக்கி மகிழ்வார் ஆதலால்,

'அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான்' காணேடி
(திருவாசகம். திருச்சாழல் - 16)

39. ஏற்று வார்கொடி யெந்தை சடைப்பிறை
யாற்றுள் வீழ்வுற் றிறப்பதற் கெண்ணுறத்
தோற்ற மேவு சுடர்திரு நெற்றியின்
ஞாற்று மோர்மணிச் சுட்டி நலந்தர 18

(இ.ள்) ஏற்றுவார்கொடி - இடபம் எழுதிய நீண்ட கொடியை யுடைய; எந்தை - எம் தந்தையாகிய சிவபெருமானது; சடைபிறை- சடையின் கண் உள்ள திங்களாகிய பிறையானது; யாற்றுள் வீழ்வு உற்று - (அங்குள்ள) கங்கையாகிய; ஆற்றினுள் வீழ்தலைப் பெற்று; இறப்பதற்கு எண்உற - சாதற்கு நினையும்படி; தோற்றம் மேவும் சுடர்திரு நெற்றியில் - வடிவம் பொருந்தும் ஒளியையுடைய அழகிய நெற்றியின் கண்; ஞாற்றும் ஓர் மணிச்சுட்டி - தொங்கவிடப் பெற்ற ஒப்பற்ற முத்துச் சுட்டியானது; நலம்தர - (பிறை இறந்தே விடும்படி) மேலும் அழகினைச் செய்யவும் (எ.று)

முடிபு - பிறை எண்ணுறத் தோற்ற மேவும் நெற்றி; அந்நெற்றியில் ஞாற்றும் சுட்டி நலம் தர. 'இறப்பதற்கு' என்பதை உருபேற்ற பெயராகவோ 'செயற்கு' என்னும் வினையெச்சமாகவோ கொள்க. பிறை யாற்றுள் வீழ் வுற்றிறப்பதற்கெண்ணும்படி தோற்றமும் சுடரும் திருவும் பெற்ற நெற்றியில் தொங்கவிடப்பெற்ற முத்துச் சுட்டியானது அப்பிறை இறந்தே விடும்படி மேலும் நலத்தைத் தந்தது என்க. சுட்டிநுதலில் அணியப் பெறுவதால் நுதற்சுடிகை என்னும் பெயர். 'சுட்டி நுதற் சுடிகை' திவாகரம். மணி-முத்து; மணிப்பிரவாளம் என்பதை நோக்குக. மாணிக்கமும் ஆம்.

40. ஈச னார்முக மென்னு [1]முளரியி
லாசை கூரு மளிவிழிக் காரருள்
வாச மாமலர் [2]வாய்க்கிள வெண்நகை
தேசு லாமணி யாகச் சிறந்துற 19

(பா.ம்) [1]முளரியின்; [2]வாக்கிள

Koviloor Digital Library

(இ.ள்) ஈசனார் முகம் என்னும் முளரியில்- சிவபெருமானது முகமாகிய தாமரை மலரிடத்தே; ஆசை கூரும் அளிவிழிக்கு - விருப்பம் மிகும் வண்டு என்று கூறப்படும் கண்களுக்கு; ஆர்அருள் - நிறைந்த கருணையும்; வாசம் ஆம் மலர் வாய்க்கு - மணம் தோன்றும் மலர் போன்ற வாய்க்கு; இளவெண்நகை- வெண்மையான புன்சிரிப்பும்; தேசு உலாம் அணி ஆக - ஒளி தவழும் நகைகளாக; சிறந்து உற- சிறப்புற்று பொருந்தியிருக்கவும் (எ.று)

முடிபு - விழிக்கு ஆரருளும்; வாய்க்கு இளவெண்ணகையும் அணியாகச் சிறந்துற. தேவியின் கண் நாயகனிடத்திலே காமத்தையும், அடியாரிடத்திலே கருணையையும் காட்டுகிற இருசுவை நோக்காய் உள்ளதென்றும் ஆனால் வாய்மட்டும் காமம் கருணை நிகழும் பொழுதெல்லாம் இளவெண்ணகை ஒன்றனை மட்டும் தோற்றிக் கொண்டுள்ளது என்றும் கூறியவாறாம், தேவி சிவனையே காமிக்கின்ற படியால் சிவகாமி என்றும், அக்காமத்தையுடைய கண்ணாகையாலே காமாட்சி என்றும் பெயர் பெற்றுள்ளார் என்க. மற்றைய உறுப்புக் களுக்குப் போல் கண்களுக்கும் வாய்க்கும் அணியில்லாமையின் முறையே அருளும் புன்னகையும் அணியாக உரைக்கப்பட்டன.

41. **மாணப் பூண்புனை மற்றை யுறுப்பெனப்**
பூணுட் பட்டிடா தோலையின் பூணென
யாணர்ச் செம்பொ னிலங்கொளி யோலைமேற்
காணக் காதெனும் வள்ளை [1]கவின்செய

(பா.ம்) [1]கவின்பெற

(இ.ள்) யாணர் செம்பொன் இலங்கு ஒளி ஓலை மேல்- கவின் பெற்றதாயும், செம்பொன்னால் செய்து ஒளி விளங்குவதாயும் உள்ள தோட்டின் மேலே; காண் அ காது எனும் வள்ளை - காணப்படுகின்ற அப்பேர்ப் பட்ட காதாகிய வள்ளை யானது; மாண- தாம் அழகு பெற வேண்டி; பூண் புனை - அணிகளை மேற்கொள்ளும்; மற்றை உறுப்பு என - (கை, கால், முதலிய) ஏனைய அவயவங்களைப் போல; பூண் உள்பட்டிடாது - தோடாகிய அணிக்குள்ளே தான் பொருந்தியிராமல்; ஓலையின் பூண் என -தோட்டிற்குத்தான் அணி என்னும் படி (தோட்டின் மேல் விளங்கி); கவின் செய - தோட்டிற்குத் தான் அழகினைச் செய்து நிற்கவும்.

Koviloor Digital Library

முடிபு - ஓலை மேல் காண் அக்காதெனும் வள்ளையானது, பூணைப் புனையும் மற்றை யுறுப்பென பூணுள் பட்டிடாது ஓலையின் பூணென கவின் செயவும். (வேறு முடிபு) காதெனும் வள்ளையானது மற்றை யுறுப்பெனப் பூணுட்பட்டிடாது ஓலையின் பூண் என்னும் படி ஓலை மேல் (நின்று) கவின் செயவும். அக்காது என்பதில் அகரச் சுட்டு சிறப்புப் பொருளது.

42. **ஓங்குஉ வாவுடை யும்ப னயனரி**
தாங்கு மாவி தணந்தொழி நாளினும்
வாங்கு றாவெழின் மங்கல நாணொளி
தேங்கு பூணர சென்னச் சிறந்திட 21

(இ.ள்) ஓங்கு உவா உடை உம்பன் அயன் அரி -உயர்ந்த வெள்ளை யானையினையுடைய தேவேந்திரன், பிரமன், திருமால் என்று பெயர் பெறும் தேவ உடம்புகள்; தாங்கும் ஆவி - தாங்கப் பெறும் உயிர்கள்; தணந்து - அவ்வுடம்புகளை விட்டுப் பிரியப் பெற்று; ஒழி- அவ்வுடம்புகள் அழியும்; நாளினும்- சங்கார காலத்தினும்; வாங்குஉறா - களையப் பெறாத; எழில் மங்கலம் நாண்- அழகுடைய மங்கல நாணானது; ஒளி தேங்கு பூண் - ஒளி நிறைந்த அணிகளுக்கு; அரசு என்ன - வேந்து என்று சொல்லும்படி; சிறந்திட - சிறந்து விளங்கவும் (எ.று)

முடிபு - உம்பன், அயன், அரி (என்னும் உடம்புகள்) தாங்கும் உயிர் தணந்து (தணக்கப்பெற்று) அவ்வுடம்புகள் ஒழி நாளினும், வாங்குரு மங்கல நாண், அம்மங்கல நாணானது பூண்களுக்கு அரசு என்னச் சிறந்திடவும். உம்பன்-அயன்-அரி. ஆகுபெயர்களாய் அவர்களின் உடம்பை உணர்த்தின. தணந்து செயப் பாட்டு வினை; ஒழிதல் - உடம்பின் தொழில்.

43. **அரவு லாஞ்சடை யண்ணலைப் பிள்ளைதான்**
பருவ மூன்றினிற் பாடவின் பால்தரும்
பொருவில் கொங்கைப் புகழெனப் பொங்கொளி
மருவு மார மணிவடந் தாழ்ந்துற 22

(இ.ள்) அரவு உலாம் சடை அண்ணலை - பாம்புகள் ஊர்கின்ற சடையையுடைய பெருமைதாங்கிய சிவபெருமானை; பிள்ளைதான்- குழந்தையொன்று; பருவம் மூன்றினில் - வயது மூன்றிலே; பாட - (அஞ்சாமல் கிட்டிப் பெருமையறிந்து) பாடும் படிக்கு; இன்பால் தரும் - இனிப்பாகிய பாலைக் கொடுக்கும்; பொருஇல் கொங்கை புகழ் என-

Koviloor Digital Library

ஒப்பில்லாத முலைகளின் புகழ் என்று கண்டார் கூறும்படிக்கு; பொங்கு ஒளி மருவும் ஆரம்மணி வடம் - மிக்க ஒளி பொருந்தும் முத்தாகிய மணியாற் செய்த கோவை யானது; தாழ்ந்து உற - கொங்கையின் மேல் தங்கியிருக்கவும் (எ.று)

முடிபு - அண்ணலைப் பிள்ளைதான் பாட பால் தரும் கொங்கைப் புகழ் என ஆரமணி வடம் (கொங்கைகளின் மேல்) தாழ்ந்துற. பிள்ளை-திருஞான சம்பந்தப் பிள்ளையார். தாழ்த்தல் - தங்குதல்; அச்சமும், அறியாமையும் சிறுபிள்ளைகளுக்கு இயல்பாகலின், அரவணிந்த சடையைக் கண்டு அஞ்சாமையும், அண்ணல் தன்மையை அறிதலும் ஆகிய இரண்டும் வாய்க்கும்படி திருஞான சம்பந்தருக்கு இனிய பாலைக் கொடுத்த கொங்கையாதலின் 'பொருவில் கொங்கை' என்றார். புகழுக்கு வெண்ணிறங் கூறுதல் கவிசமயமாதலின் கொங்கையின் மேலுள்ள முத்து வடத்தைக் கொங்கையின் புகழாகக் கூறப்பட்டுள்ளது. கீழ்வரும் சௌந்தர்யலகரி-74-75 சுலோகக்கருத்துக்களை நோக்குக. 'ஜகன் மாதாவே! உமது ஸ்தனப் பிரசேத்திலுள்ள, கஜாசுரனுடைய கும்பஸ்தலத்திலுண்டான முத்துக்களால் கோக்கப்பட்டதாயும், அதர காந்தியினால் சிவந்த நிறமுள்ளதாகச் செய்யப் பெற்றதாயும் உள்ள நிர்மல மானமுத்தாரமானது புராரியின் வீரம் போலவும், புகழ் போலவும் விளங்குகின்ற தென்றும்' 'பார்வதியே! உமது ஸ்தனப் பாலானது இருதயத்திலிருந்து, அமீர்தப் பிரவாகமாகவும் ஸரசமான ஸரஸ்வதியின் வாக்ராசியின் பிரவாகம் போலவும், பெருகுகின்றதென்றும நினைக்கிறேன். ஏனெனில்? தயை யுள்ளவளான உம்மால் கொடுக்கப்பட்ட ஸ்தனப் பாலைக் குடித்த திராவிடப் பிள்ளை (திருஞானச் சம்பந்தர்) சிறந்த கவிகளுக்குள் முதன்மையாகி, எல்லாக் கவிகளின் மனத்தைக் கரைக்கும் படியான கவியாகி விட்டார்' என்றும் கூறுதலைக் காண்க.

44. பறந்தி டாமணி வண்டு படுமலர்
சிறந்த நீல மலரொடு சீர்பெற
மறந்தி டாது மறைமுடி யின்பொருள்
அறைந்து பைங்கிளி முன்கை யமர்ந்திட 23

(இ.ள்) பறந்திடா மணி வண்டு -பறக்காத அழகிய வண்டு என்று சொல்லப்பெறும் வளையல்கள்; படுமலர் - பொருந்தியிருக்கும் வலக்கையாகிய தாமரை மலரானது; சிறந்த நீல மலரொடு - சிறப்புள்ள

Koviloor Digital Library

நீ லோத்பவ மலரோடு கூடி; சீர்பெற - அழகைப் பெற்று விளங்கவும்; பைங்கிளி - பச்சைக் கிளியானது; மறைமுடியின் பொருள் - வேத முடிவான சிறந்தபொருள்களை; மறந்திடாது அறைந்து - தான் மறக்காமல் கூறிக் கொண்டு; முன்கை அடர்ந்திட - முன் கையில் தங்கி இருக்கவும். (எ.று)

முடிபு - வண்டு படு மலர் நீல மலரொடு சீர்பெற; பைங்கிளி மறந்திடாது அறைந்து முன்கை அமர்ந்திடவும். வண்டு என்னும் சொல், வண்டு, வளையல் முதலானவற்றையுணர்த்தும் பல பொருள் ஒரு சொல்லாதலின் 'பறந்திடா வண்டு' என்று வளையலைக் குறிப்பிட்டார்.

45. தோலு டைப்பரன் றொன்மனை யாட்டிதன்
பால டுத்த தெவ் வாறெனும் பட்டரை
மேலு டுத்து விளங்கவொண் மேகலை
நூலி டைக்குறு நோய்புரி யாதுற 24

(இ.ல்) தோல் உடைபரன் - புலித்தோலை உடையாகக் கட்டியுள்ள பரமேசுரனுக்குரிய; தொல் மனையாட்டி தன் பால்- பழைய மனை யாளிடத்தே; அடுத்தது எ ஆறு எனும்பட்டு -உடையாகப் பொருந்தியது எவ்விதம் என்று (கண்டோர் வியப்புறும் சிறந்த) பட்டானது; அரைமேல் உடுத்து விளங்க - இடையின்மேல் உடுத்தப்பட்டு விளங்கவும். ஒண் மேகலை - ஒளியாகிய மேகலை என்னும் அணியானது; நூல் இடைக்கு - நூல் போல் மெலிந்த கிடைக்கு; உறு நோய்- மிகுதியாகிய துன்பத்தை; புரியாது உற - தான் செய்யாமல் பொருந்தியிருக்கவும் (எ.று)

முடிபு - பட்டு அரைமேல் உடுத்து விளங்கவும்; மேகலை நூல் இடைக்கு உறுநோய் புரியாது உறவும்; 'மேகலை, காஞ்சி, கலாபம், பருமம், விரிசிகையேழுமோரெட்டு மீரெட்டும். மூவாறு நாலெட்டு முறைக் கோவை மணியே' என்னும் திவாகரச் சூத்திரப்படி மேகலை எழு கோவை, காஞ்சி எண்கோவை, கலாபம் பதினாறு கோவை பருமம் பதினெண் கோவை, விரிசிகை முப்பத்திரண்டுகோவை யாதலின் இவற்றிற் சிறியது எழு கோவையுடைய மேகலையாதலின் காஞ்சி முதலான வற்றைப் போல மிகுதியான நோயைச் செய்யாமலுள்ளது என்பார். 'மேகலை நூலிடைக்குறு நோய் புரியா துற' என்றார். மேகலை இடையின் மேல் அணியப் பெற்று அதன்மேல் ஆடை உடுத்தப் பெறும் என்பதை 'அடுத்தப்பூம்பட்டு அரை மிசை உடீஇ' (சிலப். 14 -86) என்பதற்கு 'செம்பட்டைமேகலை மீதேயுடுத்து' என்று அடியார்க்கு நல்லார் கூறும் உரையால் உணர்க.

Koviloor Digital Library

46. புத்த னிச்சம் படினும் பொறாமையை
யெய்த்து மற்றை யிருமணத் [1]தம்மியி
லத்தன் வைத்த வடிக்கம லங்களின்
முத்த ரிச்செஞ் சிலம்பு [2]முயங்குற 25

(பா.ம்) [1]தம்மியின்; [2]முழங்குற

(இ.ள்) புது அனிச்சம் படினும் - புதிய அனிச்ச மலர் பட்டாலும்; பொறாமையை எய்த்தும்- தாங்க மாட்டாமையைப் அறிந்திருந்தும்; அற்றை இருமணத்து -அன்று நடந்த பெரிய திருமணத்தில்; அம்மியில் - அம்மியாகிய கல்லின் மேல்; அத்தன் வைத்த- சிவபெருமானால் தூக்கி வைக்கப்பெற்ற; அடி கமலங்களில் - திருவடியாகிய தாமரைகளில்; முத்து அரிசெம் சிலம்பு - முத்தினை உள்ளிடு பரலாகப் பெற்ற செம் பொற் சிலம்புகள்; முயங்குற- தழுவிக் கிடக்கவும் (எ.று)

முடிப்பு - அடிக்கமலங்களில் செஞ்சிலம்பு முயங்குறவும்; அனிச்சம் படினும் பொறாமையை எய்த்தும் அம்மியில் வைத்த அடிக்கமலம்.

47. இருந்த வாரரு ளெம்பெரு மாட்டிபாற்
குரும்பை நாணுமென் கொங்கைப் பொறையினால்
வருந்து நூற்பக வன்ன மருங்குலா
ரரம்பை மாத ரளப்பில ரெய்தினார் 26

(இ.ள்) இருந்த - நறுமலர் தாழ்ந்திடவும், மணிச்சுட்டி நலந்தரவும், அருளும் நகையும் சிறந்துறவும்; வள்ளைகவின் செயவும், மங்கல நாண் சிறந்திடவும், மணிவடம் தாழ்ந்துறவும், கைம்மலர் நீலமலரொடு சீர்பெறவும், கிளி முன்கையமர்ந்திடவும், பட்டு அரை மேலுடுத்தி விளங்கவும், மேகலை நோய் புரியாதுறவும்; அடிக்கமலங்களில் சிலம்பு முயங்குறவும், இறைவனிடத்தே இருந்த; ஆர் அருள் எம்பெருமாட்டி பால் - நிறைந்த கருணையையுடைய உமாதேவியாரிடத்தே; குரும்பை நாணும் என்- தென்னங் குரும்பைகள் ஒப்பாகாமையால் வெட்கும் என்று சொல்லத்தக்க; கொங்கை பொறையினால் - முலைகளைச் சுமக்கும் பாரத்தினால்; வருந்தும் நூல் பகவு அன்ன மருங்குலார் அரம்பை மாதர் -வருந்துகின்ற நூலின் பிளவை ஒத்த இடையையுடைய யாராகிய தெய்வமகளிர்; அளப்பு இலர் எய்தினார்- அளவில்லாதவர் அடைந்தனர் (எ.று)

முடிப்பு - இருந்த எம்பெருமாட்டி பால் மருங்குலாராகிய அரம்பை மாதர் அளப்பிலர் எய்தினார்.

Koviloor Digital Library

48. முல்லை யந்தொடை யருந்ததி முதலெழு முனிவ
ரில்ல றம்புரி துணைவிய ராமெழு வரும்போய்
[1]வல்ல ரும்பென குவிமுலைப் பனிமலை மகளைச்
சொல்ல ருந்துதி செய்துவாழ்த் தெடுத்தனர் தொழுது 27

(பா.ம்) [1] வல்லரும் பெறுங்

(இ.ள்) முல்லை அம்தொடை அருந்ததி முதல் - முல்லை மலராலான அழகிய மாலையைச் சூடியுள்ள அருந்ததி முதலான; எழுமுனிவர் இல்லறம் புரி துணைவியர் ஆம் எழுவரும் - வசிட்டர் முதலான ஏழு முனிவர்களும், இல்லறத்தைச் செய்வதற்கு துணைவிய ராகும் ஏழு கற்புடைப் பெண்களும்; போய்- சென்று; வல் அரும்பு எனகுவிமுலை பனிமலை மகளை - சூதாடு கருவி எனவும், தாமரை அரும்பு எனவும் குவிந்துள்ள கொங்கையை யுடைய இமயமலையரசன் மகளாகிய உமாதேவியை; தொழுது - கைகுவித்து வணங்கி; சொல் அரும் துதி செய்து - கூறுதற் கரிய புகழ்களைக் கூறி; வாழ்த்து எடுத்தனர்- வாழ்த்தினை உயர்த்துக் கூறினார்கள். (எ.று)

முடிபு - அருந்ததி முதல் எழுவரும் போய், பனிமலை மகளைத் தொழுது துதிசெய்து வாழ்த்தெடுத்தனர். எழு முனிவர் இன்னார் என்பதை 'அகத்தியன், புலத்தியன், அங்கிரா, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டேயனென் றிசைத்த விவர்தாமேழிருடிகளே' என்னும் பிங்கல நிகண்டாலறிக.

49. அன்ன மொன்றறி யாமுடிக் கங்கையை யறிந்து
துன்ன வந்தல மருமெகி னங்களின் றொகுதி
யென்ன வம்புயத் தொருசத கோடியிந் திரைகண்
முன்ன டைந்துவெண் கவரிக ளிரட்டினர் முறையால் 28

(இ.ள்) அம்புயத்த ஒரு சதகோடி இந்திரைகள் முன் அடைந்து - செந்தாமரை மலரிலிருக்கின்ற ஒரு நூறு கோடி இலக்குமிகள் தேவியின் முன் வந்து; அன்னம் ஒன்று அறியா முடி கங்கையை - பிரமனாகிய அன்னப் பறவை யொன்று தேடியறியாத (இறைவனது) தலையிலுள்ள கங்கையாற்றை; அறிந்து துன்ன - தெரிந்து அடைய வேண்டி; வந்து அலமரும் எகினங்களின் தொகுதி என்ன - வந்து சுழன்று திரியும் அன்னப் பறவைகளின் கூட்டம் என்று சொல்லும்படி ; முறையால் - முறைப்படி; வெண் கவரிகள் இரட்டினர் - வெண் சாமரைகளை இரு புறமும் வீசினார் (எ.று)

Koviloor Digital Library

முடிபு - இந்திரைகள் முன்னடைந்து அன்னங்களின் தொகுதி யென்ன கவரிகள் இரட்டினா். 'சதகோடி' என்னும் தொகைச் சொல் எண்ணினைக் காட்டாமல் பன்மையைக் காட்டி நின்றது. பின்வரும் தொகைச் சொற்களுக்கும் இங்ஙனமே பொருள் கொள்க.

50. அரவு கௌவிய கதிரெனப் பட்டசாந் தாற்றி
பரவை யல்குல்வெண் முத்தவா ணகைக்கொலை
பயில்விற்
புருவ மென்மலர்க் குழற்சசி கோடிகள் புகன்று
மருவி யம்பிகை மருங்குநின் றசைத்தனா் மன்னோ 29

(இ.ள்) பரவை அல்குல்- அகன்ற அல்குலையும்; வெண் முத்தவாள் நகை - வெண்மை நிறமாகிய முத்து போன்ற ஒளி பெற்ற பல்லினையும்; கொலை பயில் வில் புருவம்- கொல்லும் தொழிலில் பழகிய வில் போன்ற புருவத்தினையும்; மெல் மலர் குழல் - மென்மை யாகிய, பூக்களைச் சூடிய கூந்தலையும் உடைய; சசிகோடிகள்- கோடிக் கணக்கான இந்திராணிகள், புகன்று மருவி- விரும்பிச் சென்று; அம்பிகை மருங்குநின்று - உமாதேவியின் பக்கத்தில் நின்று; அரவு கௌவிய கதிர் எனப்பட்ட சாந்தாற்றி- பாம்பு சிறிதளவு பற்றிய கதிரவன் என்று சொல்லப்பட்ட சிற்றால வட்டங்களை; அசைத்தனா் - வீசினாா்கள். (எ.று)

முடிபு - சசிகோடிகள் புகன்று, மருவி, அம்பிகை, மருங்கு நின்று, சாந்தாற்றி அசைத்தனா். பாம்பு கைக்கும், கதிர் சாந்தாற்றிக்கும் உவமை. ஆல வட்டத்திற்குச் சூரியனை உவமையாகச் சொல்லும் வழக்கத்தினை 'முழு முதற் பால் சால வட்டமானமதி தண் குடையாய் மேவினன்யா, மால வட்டமாய்ப் போயமா் வோமென் - றேரிரவி பாங்கினுறல் போலச் செம்பட்டால வட்டமெடுத் தோங்கி தவத்தோ ருவந்தசைப்ப' என்னும் துறையூா் சிவப்பிரகாசா் நெஞ்சுவிடு தூதால் அறிக.

51. எடுத்து வீணைக ளுள்நரம் பிதுமிட றிதுவென்
றடுத்த கேள்வராம் பிரமரு மறிவரி தாகப்
படத்த பாம்பணி பரன்புடை மாதுசீா் பாட்டிற்
றொடுத்து வாலிய கலைமடந் தையா்பலா் துதித்தாா் 30

(இ.ள்) வாலிய கலைமடந்தையா் பலா் - வெண்மையாகிய சரஸ்வதி தேவியா் பலா்; வீணைகள் எடுத்து - வீணையினை எடுக்கும் முறையில் எடுத்து; உள் நரம்பு இது - தெறிக்கப்பட்ட நரம்போசையிது;

Koviloor Digital Library

மிடறு இது என்று - கண்டத்தின் ஓசையிது என்று; அடுத்த கேள்வாரம் பிரமரும் அறிவு அரிது ஆக - தம்முடன் கூடியுள்ள கணவர் ஆகும் பிரமதேவரும் அறிதல் இல்லையாக; படத்த பாம்பு அணிபரன் புடை மாதுசீர் - படத்தையுடைய நாகத்தினை அணிந்த சிவபெருமானிடத்தே உள்ள உமா தேவியாரின் புகழினை; பாட்டில் தொடுத்து - செய்யுளில் அமைத்து துதித்தார் - தோத்திரம் செய்தனர். (எ.று)

முடிபு - வாலிய கலைமடந்தையர் பலர் வீணைகள் எடுத்து பிரமரும் அறிவரிதாக மாது சீரினைப் பாட்டில் தொடுத்துத் துதித்தார்.

52. **செப்ப மைந்ததண் ணுமையிசை தாளமென் சிறுதாட்**
டுப்ப மைந்தவொள் சதிதழீஇச் [1]சுவைய பல்காய
முப்ப மைந்தவின் கறியென நடித்தன ருழையோ
டொப்ப மைந்த[2]கண் ணுருத்திர கணிகைய ருவந்து 31

(பா.ம்) [1]சுவைபலகாயம்; [2]கணுருத்திர

(இ.ள்) உழையோடு ஒப்பு அமைந்த கண் உருத்திர கணிகையர்- மான் கண்களுடன் உவமை பொருந்திய கண்களையுடைய உருத்திர கணிகையன்னவர்; சுவையபல்காயம் - ருசியையுடைய பல்வேறு சம்பாரப் பொருள்களோடு; உப்பு அமைந்த இன்கறியென - உப்பும் அளவொத்தமைந்த இனிய பதார்த்தத்தைப்போல; செப்பு அமைந்த தன்னுமை இசைதாளம் - சொல்லமைந்த, மத்தள ஒலி இராகவோசை, தாளவொலி என்னும் இவற்றோடு; மென்சிறுதாள் துப்பு அமைந்த ஒண்சதிதழீஇ - மெல்லிய சிற்றடியால் (இடப்பெறும்) ஆற்றல் பொருந்திய தாளவொற்றும் (அளவொக்கும்)படித் தழுவி; உவந்து நடித்தனர் - (இறைவனுடைய வடிவழகைக் கண்டு) உவப்புச் சுவை தோன்ற ஆடினர். (எ.று)

முடிபு - உருத்திர கணிகையர் கறியெனத் தழீஇ உவந்து நடித்தனர். சதி என்பது காலால் இடப்பெறும் தாளவொற்று; ''சதியும் சீரும் தாள வொற்றின் பெயர்'' என்பது திவாகரம், பல்காயம் - மிளகு முதலிய பல பொருள்கள் சேர்த்துச் செய்யப் பெற்ற சம்பாரம். உப்பமைந்தற்றால் (1302) என்னும் திருக்குறளுரையுள் 'உப்புமிக்க வழித்துய்ப்பது சுவையின்றானாற் போல என்று பரிமேலழகர் கூறுவது காண்க. தண்ணுமைதாளம் உழை ஆகுபெயர். நிருத்த கீத வாத்தியங்களைச் சரியாய் முடிப்பதற்கு வடமொழியில் சமந்விதலயம் என்று பெயர்.

Koviloor Digital Library

53. எந்தை பாலுமை முக்குணங் களுமுரு வெடுத்து
வந்த மாதர்க ளருகுநின் றணா[1]பணி மகிழூஉ
அந்த மாதருட் [2]டமோகுண மாதுமை யருளாற்
சந்த மாயையென் பெயர்கொடு தருக்கி [3]நின்றனளே 32

(பா.ம்) [1]பணிமகிழ; [2]டமகுண; [3]நின்றனளால்

(இ.ள்) எந்தை பால் உமை முக்குணங்களும் - எம் தந்தையாகிய சிவபெருமானிடத்தேயுள்ள உமாதேவியினது, சத்துவம், இராசதம், தாமதம் என்னும் மூன்று குணங்களும்; உருஎடுத்து வந்த மாதர்கள் - வடிவங் கொண்டு வந்த மூன்று பெண்களும்; பணி மகிழூஉ அருகு நின்றனா - தேவிக்குரிய தொண்டினைச் செய்வதில் மகிழ்ச்சியடைந்து அருகு நின்றனா். அந்த மாதருள் தமோகுண மாது சந்தமாயை என்பெயர் கொடு - அப்பெண்களுள் தமோகுணப் பெண்ணானவள் அழகிய மாயை என்கின்ற பெயரைக் கொண்டு; உமை அருளால் - உமாதேவியின் திருவருளைத்தான் மிகுதியாகப் பெற்றதால் தருக்கி நின்றனள் - செருக்கடைந்து நின்றாள். (எ.று) ஏ - அசை

(முடிபு) மாதர்கள் அருகு நின்றனா். அந்த மாதருள் தமோகுண மாது மாயை யென் பெயர் கொடு உமையருளால் தருக்கி நின்றனள்.

54. தெள்ளு வார்திரைக் கங்கையுங் கங்கையுஞ் சிறிய
பிள்ளை யாகிய மதியமு மதியமும் பெரிது
துள்ளு மோரிள நவ்வியு [1]நவ்வியுந் தொடர்பு
கொள்ளு மாறவ ணெருங்கின வுருத்திர குழாங்கள் 33

(பா.ம்) [1]நௌவியு - நௌவியுந்

(இ.ள்) உருத்திர குழாங்கள் - உருத்திரருடைய கூட்டங்கள்; தெள்ளுவார் திரை கங்கையும் கங்கையும் - தெளிந்த நீண்ட அலைகளையுடைய கங்கா நதியும் கங்கா நதியும் சிறிய பிள்ளை ஆகிய மதியமும் மதியமும் - சின்ன இளம்பிறையும், இளம்பிறையும்; பெரிது துள்ளும் ஓர் இள நவ்வியும் நவ்வியும் - மிகவும் துள்ளுகின்ற ஒப்பற்ற இளையமானும் இளையமானும்; தொடர்பு கொள்ளும் ஆறு - ஒன்றற்கொன்று உறவு கொள்ளும்படி; அவண் நெருங்கின - அச்சபையிலே நெருங்கி நின்றன. (எ.று)

முடிபு - கங்கையும் கங்கையும், மதியமும் மதியமும், நவ்வியும் நவ்வியும், தொடர்பு கொள்ளுமாறு, உருத்திரகுழாங்கள் அவண் நெருங்கின.

Koviloor Digital Library

55. சங்க மொன்றுட னொன்றுதாக் குறவொளி தழைக்குஞ்
துங்க நேமியு [1]மன்னவா யுறவலை சுருட்டும்
பொங்கு வேலைவந் தெனவரிக் கணங்களற் புதத்த
வெங்க ணாயகன் பேரவை யிடத்துவந் திருத்த 34

(பா.ம்) [1]அன்னவாறுற

(இ.ள்) அரிக்கணங்கள் - திருமாலினுடைய கூட்டங்களானவை; சங்கம் ஒன்றுடன் ஒன்று தாக்குற - கையிலேந்தியுள்ள சங்கு ஒன்றுடனே சக்கரமாகிய ஒன்று மோதுற; துங்கநேமியும் அன்னவாய் உற - உயர்ந்த சக்கரம் ஒன்றும் அப்படியே சங்கு ஒன்றுடன் மோதுற; அலைசுருட்டும் பொங்கு வேலை வந்தென - திரைகளை சுருளச் செய்கின்ற பொங்கும் கடல் திரண்டு வந்தாற்போல; அற்புதத்த எங்கள் நாயகன் பேரவை யிடத்து - கண்டோர் வியத்தலை யுடைய, எங்கள் நாயகனது பெரிய சபையின் கண்ணே வந்திருத்த-வந்து தங்கின

முடிபு - அரிக் கணங்கள், தாக்குற, அன்னவாயுற, வேலை வந்தென, அவையிடத்து வந்திறுத்த.

56. முகங்க [1]ணான்கிலு நான்மறை விதிமுறை முழங்க
வுகந்து கையிரு நான்கு நான்குச்சியிற் குவியச்
சகந்த ருஞ்செயற் பிரமர்க ளளப்பிலர் தையல்
பகுந்த மேனிய னவையிடைப் புகுந்தனர் பரவி 35

(பா.ம்) [1]ணான்கினு

(இ.ள்) அளப்பு இலர் சகம் தரும் செயல் பிரமர்கள் - எண்ணிலராகிய, உலகத்தைப் படைக்குந் தொழிலையுடைய பிரம தேவரானவர்; முகங்கள் நான்கிலும் - தம் நான்கு முகங்களிலும், நான்மறை விதிமுறை முழங்க - நான்கு வேதங்கள் ஓதுதற்கு விதிக்கப் பெற்ற முறைப்படி ஒலிக்கவும்; கையிரு நான்கும் உகந்து - நான்கு கைகளும் உயர்ந்து நான்கு உச்சியில் குவிய - நான்கு தலை மேலும் கூப்பி நிற்கவும்; தையல் பகுந்த மேனியன் அவையிடை - உமா தேவியால் பங்கிட்டுக் கொள்ளப்பட்ட உடலினரான சிவபெருமானது சடையின் கண்ணே, பரவி புகுந்தனர் - இறைவனைத் துதித்துக் கொண்டு புகுந்தார்கள் - (எ.று)

முடிபு - அளப்பிலராகிய பிரமர்கள் நான்மறை முழங்க, கை உச்சி யிற்குவிய, அவையிடைப் பரவிப், புகுந்தனர்.

Koviloor Digital Library

57. அயனு மாயனு [1]மெனினுயர்ந் தவரென்ப தன்றிக்
கயிலை நாயக னமர்திரு வோலக்கங் காண்பா
னயன மாயிர மிலாமையி [2]னதிகநா மென்று
வயிர [3]வான்படை யிந்திர ரெண்ணிலர் வந்தார் 36

(பா.ம்) [1]மெனிலுயர்ந்; [2]னதிகர்; [3]வாட்படை

(இ.ள்) எண் இலர் வயிரம் வான்படை இந்திரர் - கணக்கற்றவராகிய வச்சிரம் என்னும் உயர்ந்த படையையுடைய இந்திரரானவர்கள்; அயனும் மாயனும் - பிரமனும், திருமாலும்; எனின் உயர்ந்தவர் என்பது அன்றி - என்னைக் காட்டிலும் உயர்ந்தவர் என்று சொல்வதல்லாமல்; கயிலை நாயகன் அமர்திரு ஓலக்கம் காண்பான் - கயிலை மலைக்குத் தலைவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் அழகிய அரசிருப்பைக் காண வேண்டி; நயனம் ஆயிரம் இலாமையின் - ஆயிரம் கண்கள் இல்லாதபடியால்; அதிகம் நாம் என்று - (அவரைக் காட்டிலும்) உயர்ந்தோம் நாமென்று ஒவ்வொருவரும் நினைத்துக் கொண்டு வந்தார் - அங்கு வந்தனர். (எ.று)

முடிபு - எண்ணிலராகிய இந்திரர், அன்றி, காண்பான், இலாமையின், அதிகன் என்று வந்தார்.

(ஒப்பு) கல்வளைக் கற்பகநின், கண்டல மூன்று மெனையாள் பொற்பாதமுங் காணவிண்ணா, கண்டலன்போற் கண்படைத்திலன் வாசக்கமலத்தனே (கல்வனை-2).

58. உரகர் சித்தர்கள் வித்தியா தரர்சுர ருயர்கிம்
புருடர் மெய்க்கதிர் முதலிய கோடிசை புரப்போர்
நிருதர் [1]மற்றுளார் [2]விழிபிதுங் கி[3]டவுட னெருங்க
வரத னத்திரு வோலக்கங் காணிய வந்தார் 37

(பா.ம்) [1]மற்றுளர்; [2]விழி பிதிர்ந்திட; [3]உடனெருங்கி

(இ.ள்) உரகர் - நாகர்களும்; சித்தர்கள் - பல்வேறு அருளுடையவர்களும்; வித்தியாதரர் - வித்தியாதரர்களும்; சுரர் - தேவர்களும்; கிம்புருடர் - உயர்வுமிக்க கிம்புருடர்களும்; மெய்க்கதிர் முதலிய கோள் - தன்னகத்தே ஒளிக்கதிர்களையுடைய சூரியன் முதலான கிரகங்களும்; திசை புரப்போர் - எண்திசைகளைக் காக்கின்ற திக்குபாலகர்களும்; நிருதர் - அரக்கர் களும்; மற்றுளார் - மற்றுமுள்ளவர்களும் (இயக்கர் முதலியோர்); வரதன் - மேன்மைகளை அளிக்கும் கயிலை நாயக

Koviloor Digital Library

னாகிய சிவ பெருமான்; அத்திருவோலக்கம் காணிய - (சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும்) அந்த அழகிய காட்சியினைக் காண்பதற்காக; விழிபிதுங்கிட - (ஆச்சரியமிக்க காட்சியினைக் கண்டு வியந்ததனால்) கண்கள் இமைகளை உயர்த்தச்செய்திட; உடல் நெருங்க - (அங்கு கூடியுள்ளோர் கூட்டமிகுதியால்) உடல் குறுக்கமுற்று விளங்க; வந்தார் - (மேற்கூறிய அனைவரும்) வந்துற்றனர். (எ.று)

59. **அழிவு மாக்கு[1]மு முரையினாற் செயும்வலி யடைந்தார்**
[2]மொழியும் யாக்கையு மன முநல் லறங்களின் முயன்று
கழியு மாறுமுக் காலமு முளர்தளை கழன்றார்
பழியி லா[3]வதிட் டாதிமா முனிவரர் பரந்தார் 38

(பா.ம்) [1]முறையினால்; [2]மொழியு மாக்கையு; [3]வசிட்டாதி

(இ.ள்) அழிவும் ஆக்கமும் உரையினால் செயும் வலி அடைந்தார் - கேடும், செல்வமும் தங்கள் சொல்லினாலேயே (பிறர்க்கு வருவித்தலைக்) செய்யும் ஆற்றல் பெற்றவர்களும்; மொழியும் யாக்கையும் மனமும் நல் அறங்களில் முயன்று கழியுமாறு முக்காலமும் உளர் - சொல் உடம்பு மனம் என்னும் முக்கரணங்களும் நல்ல புண்ணியங்களைச் செய்தலிலேயே முயன்று கழியும்படி மூன்று காலத்திலும் உள்ளவர்களும், தளை கழன்றார் - தம்மைக் கட்டிய பாசத்திலிருந்து நீங்கப் பெற்றவர்களும் ஆகிய; பழிஇலா வதிட்டாதி மாமுனிவரர் - பழிப்பில்லாத வதிட்டர் முதலான பெரிய முனிசிரேட்டர் களெல்லாம்; பரந்தார் - (அச்சபையிலே வந்து) பரவி நின்றனர் (எ.று)

முடிபு - வலியடைந்தார் முக்காலமுமுளர், தளை கழன்றார் (ஆகிய) முனிவரர் பரந்தார்.

60. **குழவி பால்குடிப் பதுகடல் குடிப்பது குழவி**
பழகு மாறுணன் மண்ணெடுத் துண்பது படைப்பு
முழுது மோர்தளர் நடைமகச் செயலலெனு முரண்கொள்
வழுவி லாவருட் கணங்களெண் ணிகந்தன வந்த 39

(இ.ள்) குழவி பால் குடிப்பது கடல் குடிப்பது (எனும்) - தங்கள் இளங்குழந்தைகள் பாலைக் குடிப்பது, அகத்தியர் கடலைக் குடிப்பது போன்றதென்றும்; குழவி பழகுமாறு உணல் மண் எடுத்து உண்பது (எனும்) - தங்கள் குழந்தைகள் பழகும்படி உணவை உண்டல் (திருமால் இந்நில வுலகத்தை எடுத்து உண்பது போன்றதென்றும்; ஓர் தளர் நடை மகச் செயல் படைப்பு முழுதும் எனும் - தத்தி நடக்கும் நடையையுடைய

Koviloor Digital Library

தங்கள் ஓர் குழந்தையின் தொழில் பிரம்மாவின் ஆக்குஞ் தொழிலனைத் தையும் போன்றதென்றும் சொல்லத்தக்க; முரண்கொள் வழுவுஇலா அருள் கணங்கள் - வலிமையைக் கொண்ட குற்றம் இல்லாத கருணை யையுடைய பூதகணங்கள்; எண் இகந்தன வந்த - கணக்கற்றனவாய் அவையின் கண் வந்தன (எ.று)

முடிபு - தங்கள் குழவி பால் குடிப்பது கடல் குடிப்பது எனும், பழகுமாறு உணல் மண் எடுத்து உண்பது எனும், மகச் செயல் படைப்பு முழுதும் எனும் அருட் கணங்கள் எண்ணிகந்தன வந்த. பூதகணங்களின் செயலை ''அகில லோகமுங் கணத்திடை யழித்துடனாக்கு, மிகலுடைக் குறட் பூதங்களிலங்கு பல் கோடி'' (மருதவன - உபதேச 3)

61. செருக்கொ டுஞ்சிவ நிந்தைசெய் [1]வார்க்கிலை தீர்வு
[2]விரிக்கி னென்றுமுன் சிறுவிதி தலையற வெட்டி
யெரிக்கு நல்கிநிந் தனைசெயா மறிமுக மியைத்துத்
தருக்கி நின்றவவ் வீரன்வந் தொருபுடை சார்ந்தான்

(பா.ம்) [1]வாய்க்கிலை; [2]விரிக்கிலென்று

(இ.ள்) செருக்கொடும் சிவ நிந்தை செய்வார்க்கு - மயக்கத்தோடு கூடி நின்று சிவபெருமானை இகழ்தல் செய்பவர்க்கு; விரிக்கின் தீர்வு இலை என்று - ஆராயின் கழுவாய் இல்லை என்று கருதி; முன் சிறு விதி தலை அறவெட்டி - முன்னே சிறிய பிரமன் என்னும் தக்கனது தலை உடம்பிலிருந்து நீங்கும்படி வெட்டி; எரிக்கு நல்கி - அத்தலையை நெருப்பிற்குக் கொடுத்து; நிந்தனை செயா மறிமுகம் இயைத்து - இறைவனை இகழ்தல் செய்யாத ஆட்டு முகத்தை அவ்வுடலில் பொருத்தி; தருக்கி நின்ற அவ்வீரன் - எழுச்சியுடன் நின்ற அவ்வீர பத்திரன்; ஒருபுடைசார்ந்தான் - அச்சபையின் ஒரு பக்கத்திலே வந்து சேர்ந்தான் (எ.று)

முடிபு - விரிக்கின் சிவ நிந்தை செய்வார்க்கு தீர்வு இலை என்று (கருதி) சிறு விதி தலையை வெட்டி நல்கி இயைத்து தருக்கி நின்ற வீரன் வந்து சார்ந்தான். செருக்கு - மயக்க வுணர்வு. தக்கன் பிரமதேவனுடைய மகனாதலின் சிறுவிதி எனப்பட்டான். விதி - பிரமன் பாதி யறும்படி வெட்டுவது இடையர் ஆட்டிற்கு மரங்களை வெட்டுகின்ற வெட்டாகும். அங்ஙனமின்றி தக்கன் உடலில் ஆட்டுத் தலையை வைக்க முற்றிலும் வெட்டிய வெட்டாதலின் ''தலையற வெட்டி'' என்று கூறினார்.

Koviloor Digital Library

62. காதி யாயிர மால்களைப் பிழிந்து மாங்கனி போற்
கோது வீசினுங் கடல்கவிழ்த் தனைய செங்குருதி
பாதி யாயினு நிரம்புறாக் கபாலபா ணியனாய்
மாது பாதிய னவையிடைப் புகுந்தனன் வடுகன் 41

(இ.ள்) ஆயிரம் மால்களைக் காதி- ஆயிரம் நெடுமால்களைக் கொன்று; மா கனி போல் பிழிந்து - மாவினது பழத்தில் சாறு பிழிவது போல் (அவர்கள் உடலிலிருந்து) இரத்தத்தை மட்டும் பிழிந்தெடுத்துக் கொண்டு; கோதுவீசினும் - சக்கைகளை எறிந்தாலும்; கடல் கவிழ்த்து அனைய செம்குருதி - அப்படிப் பிழிந்ததால் உண்டான கடல்நீரைக் கவிழ்த்து விட்டாற்போன்ற சிவந்த இரத்தத்தின்ாலே; பாதி ஆயினும் நிரம்பு உரு கபாலம் பாணியன் ஆய்- பாதியளவாயினும் நிறைதலைப் பெறாத (அவ்வளவு பெரிய) கபாலத்தினைக் கையிலே உடையவனாகி; வடுகன் மாது பாதியன் அவை யிடைபுகுந்தனன்- பைரவன் சிவபெருமானுடைய சபையின் கண் நுழைந்தான் (எ.று)

முடிபு - மால்களைக் காதி பிழிந்து வீசினும் குருதியால் பாதியாயினும் நிரம்புதல் உறாத கபால பாணியனாய் வடுகன் அவையிடைப் புகுந்தான். ''ஓத நெடுங்கடல்கள், எத்தனையும் உய்த்தட்ட; ஏதும் நிறைந்தில்லை என்பராற்- பேதையர்கள்; எண்ணா திடும்பலியால் என்னோ நிறைந்தவா கண்ணார் கபாலக்கலம்'' என்னும் அற்புதத் திருவந்தாதியால் கபாலத்தின் பெருமையை உணர்க.

63. வீர மாதருக் கில்லை யென் றுரைப்பதென் விளங்க
வீர மாதென [1]வறிகிலி ரோவென விளம்பி
வீர யோகினி வெள்ளமோ டமர்பொர விரும்பும்
வீர காளியும் புகுந்தன ளவையிடை விரைந்து 42

(பா.ம்) [1]வறிகிலரோ

(இ.ள்) அமர் பொர விரும்பும் வீரகாளியும் - அமர்க்களத்திலே போர் செய்ய விழைகின்ற வீரத்தினையுடைய காளி தேவியும்; மாதருக்கு வீரம் இல்லை என்று உரைப்பது என் - பெண்களுக்கு வீரமில்லை என்று சொல்வது என்ன காரணம்?; வீரம்மாது என விளங்க அறிகிலிரோ என விளம்பி - என்னை வீரப்பெண் என நீவிர் நன்றாய் அறிந்து கொண்டிலிரோ என்று சொல்லிக் கொண்டு; வீரம் யோகினி வெள்ளமோடு -வீரத்தையுடைய யோகினி என்னும் ஏவல்மகளிர்

Koviloor Digital Library

கூட்டமோடு; அவையிடை விரைந்து புகுந்தனள் - சபையின் கண் வேகமாய்ப் புகுந்தனள். (எ.று)

முடிபு - வீர காளியும் விளம்பி யோகினி வெள்ளமோடு அவையிடை விரைந்து புகுந்தனள்; ''மகா சதுஷ்ஷஷ்டி கோடி யோகினீ கணஸே விதா'' (லலிதா சகஸ்ரநாமம். 237) என்பதனால் காளிதேவியைச் சூழ்ந்துள்ள யோகினி கணத்தார் அறுபத்தி நான்கு கோடியர் என்று தெரிகின்றது. தேவியின் கோயிலில் அகம்படித் தொழின்மை பூண்டு யோக நிட்டை செய்து கொண்டிருக்கும் பெண்கள் யோகினிகளாம். (தக்கயாகப்பரணி 95 தாழிசையினைக் காண்க)

64. ஊன்று ஞானமோ டுயர்வயி ராக நல் லொழுக்க
மூன்று காலெனக் கொண்டரன் முகத்திள முறுவ
றோன்று மாறுநின் றாடினன் [1]சுடரவ னிருளைப்
போன்று மாயையைத் தொலைத்திடு பிருங்கியென்
புனிதன் 43

(பா.ம்) [1]கதிரிரு டொலைத்தல்

(இ.ள்) சுடரவன் இருளைப் போன்று - சூரியன் இருட்டினைப் போக்குதல் போல; மாயையை தொலைத்திடு பிருங்கி என்புனிதன் - நாம ரூப வடிவமாகிய மாயா சம்பந்தத்தை விட்டொழித்த பிருங்கி என்னும் பெயருடைய தூயவன்; ஊன்று ஞானமோடு உயிர் வயிராகம் நல்லொழுக்கம் மூன்று கால் என கொண்டு - நிலைபெற்ற சிவஞானத் தையும், உயர்ந்த வயிராக்கியத்தையும் நல்லொழுக்கத்தையும், மூன்று கால்களாகக் கொண்டு; அரண்முகத்து இளமுறுவல் தோன்றும் ஆறு - சிவபெருமானது முகத்தில் மட்டும் புன்சிரிப்பு உண்டாகும்படி நின்று ஆடினன்- நிலைபெற்று கூத்தாடினன் (எ.று)

முடிபு - பிருங்கி என் புனிதன் ஞான வயிராக ஒழுக்கங்களைக் காலெனக் கொண்டு முறுவல் தோன்றுமாறு நின்று ஆடினன். நல்லொழுக்கத்தை உபரதி என்பர். மாயா பந்தத்தைக் கடக்க வேண்டுபவன் ஞானம், வைராக்கியம், நல்லொழுக்கம் என்னும் மூன்றினையும் பயிலவேண்டுதலின் அம்மூன்றினையும் காலாகக் கூறினார். ஒருவனுக்கு வைராக்கியம், உபரதி இரண்டும் கூடி, ஞானங் கூடாதாயின் அவனுக்கு வீடுபேறு கிடைப்ப தில்லையாதலின் அதனை 'ஊன்று ஞானம்' என்று சிறப்பித்தார். விராகம் என்னும் வடசொல்

Koviloor Digital Library

வயிராகம் என்று ஆயிற்று. உலகப் பொருள்களில் ஆசை நீங்குதல் என்பது இதன் பொருளாகும். வி - நீக்கம், ராகம்- ஆசை.

65. படிகொண் மாமுடிக் கங்கணத் திறைபதம் படுமொண்
[1]முடிகள் யாவையும் படுகழ னந்தியெம் முதல்வ
னடிக ளேந்துகை யுறவடித் தொதுக்கியவ் வவையைக்
கடிகொண் மாலையம் பிரம்பொடு திரிந்தனன் களித்து 44

(பா.ம்) [1]முடிகளியாவையும்

(இ.ள்) படிகொள் மாமுடி கங்கணத்து இறைபதம்- பூமியைத் தாங்கும் ஆற்றல் பெற்ற பெரிய தலையையுடைய ஆதிசேடனாகிய கங்கணத்தைத் தரித்துள்ள சிவபெருமானது திருவடி; படும் ஒண் முடிகள் யாவையும் - படப்பெறுகின்ற (தேவர்களுடைய) ஒளிபெற்ற கிரீடங்கள் எல்லாம்; படுகழல் நந்திஎம்முதல்வன் - படப்பெறுகின்ற திருவடி களையுடைய நந்திகேசுரராகிய எமது தலைவன்; ஏந்து கை அடிகள் உற அடித்து -உடம்பில் அடிபடாமல் தாங்குகின்ற தேவருடைய கைகளிலே அடிபொருந்தும் படி அடித்து; அ அவையை ஒதுக்கி - அச்சபையி லுள்ளாரை இருமருங்கிலும் விலக்கி; கடிகொள் மாலையம் பிரம்பொடு - மணங்கொண்ட மாலையினையுடைய பிரம்பாகிய கோலுடன்; களித்து திரிந்தனன்- மகிழ்ந்து அச்சபையில் உலாவினன் (எ.று)

முடிபு - நந்தியாகிய எம்முதல்வன் உற அடித்து அவையை ஒதுக்கிக் களித்து பிரம்பொடு திரிந்தனன். கடி-நறுமணம். நறுமணத்தை மாலைக்கு ஏற்றாமல் பிரம்புக்கு ஏற்றியும் கூறலாம். ‘பங்கயம் துளவம் நாறும் வேத்திரப் படைபொறுத்த செங்கையம் பெருமான் நந்தி’ என்று காஞ்சிப் புராணம் கூறுவது காண்க. கடில்- ஆகுபெயர்.

66. பெய்யுமாமழை முகிலெனப் பெரியவாய் முழவந்
துய்ய மாமதி யனைய வெண் சுரிமுக சங்க
மைய வாணனும் பானுகம் பப்பெய ரவனுங்
கையும் வாயுமொத் ததிர்த்தனர் செவிகரங் கவிழ்ப்ப 45

(இ.ள்) ஐயவாணனும் - அழகிய வாணன் என்னும் அசுரனும்; பானு கம்பப் பெயரவனும் - பானுகம்பன் என்னும் பெயரையுடைய கணநாதனும்; பெரியவாய் முழவம்- பெரிய கண்களையுடைய குடமுழா வென்னும் வாத்தியங்களையும்; துய்ய மாமதியனைய வெண் சுரிமுக சங்கம்- தூய (களங்கமற்ற) பெரிய திங்களை ஒத்த சுழிந்த

Koviloor Digital Library

முகத்தையுடைய சங்குகளையும்; செவிகரம் கவிழ்ப்ப - யாவரும் கைகளாலே காதுகளை மூடிக் கொள்ளா நிற்க; கையும் வாயும் ஒத்து - வாணனுக்குக் கைகளும் பானுகம்பனுக்கு வாய்களும் ஆயிரம் என்னும் எண்ணால் ஒத்து நிற்க.; பெய்யும் மாமழை முகில் என அதிர்த்தனர் - மழை பெய்யும் பெரிய மேகம் பேரோசையை எழுப்புவதைப் போல முழங்கினார்கள் (எ.று)

முடிபு - வாணனும் பானுகம்பனும் முழவத்தையும் சங்கத்தையும் பிறர் செவிக் கரங்கவிப்ப தங்கள் கையும் வாயும் ஒத்து முகிலென அதிர்த்தனர். முகில் ஆகுபெயர். ஒத்து அதிர்த்தனர், சினைவினை முதல் வினையுடன் முடிந்தது. அன்றியே ஒவ்வ என்று திரித்துக் கொள்ளினும் அமையும்.

67. **துதிப்ப ரோர்சிலர் பாடுவ ரோர்சிலர் துள்ளிக்**
குதிப்ப ரோர்சிலர் கைகளாற் [1]றோளிணை கொட்டி
யதிப்ப ரோர் சிலர் நெக்குநெக் குருகி நெஞ் சகமெய்
விதிர்ப்ப ரோர்சில ராயின ரவையிடை மிடைந்தோர் 46

(பா.ம்) [1]றோளினைக்

(இ.ள்) அவையிடை மிடைந்தோர் - அவையினடத்தே கூடியவர்கள்; துதிப்ப ரோர்சிலர் - துதிப்பவர்கள் ஒருசிலர்; பாடுவ ரோர்சிலர் - பாடுபவர்கள் ஒருசிலர்; துள்ளிக் குதிப்ப ரோர்சிலர் - ஆனந்தத்தில் துள்ளி குதிப்பவர்கள் ஒருசிலர்; கைகளாற் றோளிணை கொட்டி யதிப்ப ரோர் சிலர் - தத்தம் கைகளினால் தடடிக்கொள்பவர்கள் ஒருசிலர்; நெக்குநெக் குருகி நெஞ் சகமெய் விதிர்ப்ப ரோர்சில ராயினர் - நெஞ்சம் மிகவும் உருகி தம்உடல் மயிர் விதிர்ப்ப நின்றனர் ஒருசிலர். (எ.று)

முடிபு - அவையிடை மிடைந்தோருள் ஓர் சிலர் துதிப்பர். ஓர் சிலர் பாடுவர்; ஓர் சிலர் துள்ளிக் குதிப்பர்; ஓர் சிலர் கைகளால் தோளிணைக் கொட்டி அதிர்ப்பர்; ஓர் சிலர் நெஞ்சகம் நெக்கு நெக்குறுகி மெய் விதிர்ப்பர் ஆயினர். துதித்தல் இறைவன் புகழை உரையாற் கூறுதல் பாடுதல். இறைவன் புகழைப்பாட்டிற் றொடுத்துப் பாடுதல் இவை இரண்டும் கீர்த்தன பத்தியாகும்.

68. **படைக்க லங்களி னொளியிமை யவரொளி பரித்த**
தொடைக்க லங்களி னொளியரம் பையர்பணைத் தோளி

Koviloor Digital Library

னிடைக்க லங்களி னொளியெலா மிருளிறை மிடற்றி
னடைக்க லம்புக நிறைந்தன பரந்தபே ரவையில் 47

(இ.ள்) பரந்த பேர் அவையில் - அகன்ற பெரிய சபையின் கண்ணே; படைக்கலங்களின் ஒளி- ஆயுதங்களின் ஒளியும்; இமையவர் ஒளி - தேவர்களின் உடல் ஒளியும்; பரித்த தொடைக்கலங்களின் ஒளி - அவர்தாங்கிய மாலையாகிய அணிகளின் ஒளியும்; அரம்பையர் பணை தோளினிடை கலங்களின் ஒளி- தேவப்பெண்களது மூங்கில் போன்ற தோளினிடத்தேயுள்ள அணிகளின் ஒளியும்; எலாம் - ஆகிய இவை களெல்லாம்; இருள் இறைமிடற்றில் அடைக்கலம் புக - இருட்டானது சிவபெருமானது கண்டத்திலே அடைக்கலமாய்ப் புகுந்து நிற்கும்படி நிறைந்தன. (எ.று)

முடிபு - ஒளி எலாம் அவையில் இருள்மிடற்றில் அடைக்கலம் புக நிறைந்தன. இறைவனது கறுத்த கண்டம் இருள் போல விளங்கலின் இருளிறை மிடற்றிலடைக்கலம்புக' என்று கூறினார். 'இருளின் உருவென்கோ மாக மென்கோ மருளின் மணிநீல மென்கோ. அருளெ மக்கு நன்றுடையாய் செஞ்சடை மேல் நக்கிலங்கு வெண் மதியம் ஒன்றுடையாய் கண்டத் தொளி' என்னும் அற்புதத்திருவந்தா தியை நோக்குக.

69. **இன்னண மவையிடை யிருந்த வெம்பிரான்**
றன்னொடு வினவுமோர் தகைமை யுன்னுபு
கன்னலு [1]மமுதமுங் கைப்ப வெம்முடை
யன்னைதன் வாய்திறந் தறைதல் மேயினாள் 48

(பா.ம்) [1]மமிர்தமுங்

(இ.ள்) இன்னணம் - இவ்வண்ணம்; அவையிடை இருந்த எம்பிரான் தன்னொடு - சபையின் நடுவே சபேசனாயிருந்த எமது தலைவனாகிய இறைவனுடன்; எம்முடை அன்னை -எம்மை உடைமைப் பொருளாகப் பெற்றிருக்கும் தாயாகிய உமாதேவியார்; வினவும் ஓர் தகைமை உன்னுபு - கேட்கப்படும் ஒப்பற்ற தகுதியான செயலை எண்ணி; கன்னலும் அமுதமும் கைப்ப - (சொல்லின் இனிமை யால்) கருப்பஞ் சாறும், தேவாமிர்தமும் கசக்கும்படி; தன் வாய்திறந்து அறைதல் மேயினாள் -தனது வாயினைத் திறந்து சொல்லுதலைப் பொருந்தினாள் (எ.று)

Koviloor Digital Library

முடிபு - அன்னை இருந்த எம்பிரானொரு வினவுந்தகைமை உன்னுபு, கைப்ப, திறந்து, அறைதல் மேயினாள்.

70. **தலைவநின் னவையிடைச் சார்ந்த விப்பெரு**
நலனுடை யவரெலா நணுகி வெம்பவத்
தலைகில ராகியின் படைவ ரோவலா
னிலையில ரோவிது நிகழ்த்து வாயென்றாள் 49

(இ.ள்) தலைவ - முதல்வனே; நின் அவையிடை சார்ந்த இ பெரு நலன் உடையவர் எலாம் - உனது சபையின் கண்ணே வந்து பொருந்தியுள்ள இப்பேர்ப்பட்ட பெரிய புண்ணியத்தையுடைய இத்தேவரெல்லாம்; வெம்பவத்து நணுகி அலைகிலர் ஆகி - கொடியபிறப்பினை அடைந்து அலையாத வராகி; இன்பு அடைவரோ - பேரின்பமாகிய வீட்டினைப் பெறுவார்களோ?; அலால் நிலை இலரோ - அங்ஙனம் அடையாமல் இத்தேவ பதவியும் நிலை இல்லாதவராய் இறத்தல் பிறத்தலுக்கு உரியராவரோ; இது நிகழ்த்துவாய் என்றாள் - இதனைச் சொல்லுவாய் என்று கூறினாள் (எ.று)

முடிபு - தலைவ நலனுடையவரெலாம் நணுகி அலைகிலராகி இன்படைவரோ? அலால் நிலை இலரோ நிகழ்த்துவாய் என்றாள்.

71. **விளங்கிழை நன்று நின் வினாவென் றெந்தைமண்**
ணளந்தவ னயன்முத லாயி னோருமின்
புளங்கொளு நாமரூ பத்தோ டொன்றுறத்
தளைந்துள கிரியையாற் சார்கிலா ரென்றான் 50

(இ.ள்) எந்தை - எம் தந்தையாகிய இறைவன்; விளங்கிழை - விளங்கும் அணிகளையுடைய பார்வதியே; நின் வினாநன்று என்று - உனது கேள்வி சிறந்ததாயுள்ளதென்று கூறி; மண் அளந்தவன் அயன் முதலாயினோரும் - உலகத்தை அளந்த திருமால், பிரமன் முதலான பெரியதேவரும்; உளங்கொளும் - மாயையின் கூறாகக் கருதப்படும்; நாமம் ரூபத்தோடு ஒன்றுற தளைந்துள கிரியையால்- பெயரும் வடிவமும் ஆகிய இவற்றோடு பொருந்த பந்தித்துள்ள தொழிலால் (நாமரூபக் கிரியையால்); இன்பு சார்கிலார் என்றான் - பேரின்பமாகிய வீட்டை அடைகிலார் என்றான். (எ.று)

முடிபு - எந்தை விளங்கிழையே! நன்று என்று; மண்ணளந்தவன் அயன் முதலாயினோரும் நாம ரூபத் தொடு ஒன்றுறத் தளைந்துள

Koviloor Digital Library

கிரியையால் இன்பு சார்கிலார் என்றான். இருத்தல் (சத்து) விளங்கல் (சித்து) பிரியம் (ஆனந்தம்) ரூபம் நாமம் என்னும் ஐவகைக் கூறுகளையுடையது இவ்வுலகம். இவற்றுள் முதல் மூன்றும் பிரமத்தின் கூறுகள். ரூப நாமகிரியை மாயையின் கூறுகள். ரூபம்-வடிவம்; வடிவங்கள் கரசரணாதி அவயவங்கட்கு இருப்பிடமாதலின் அவயவமுள்ளதற்குப் பெயர் உண்டு. வடிவங்கள் சாதி குணங்கட்டு இருப்பிடமாய் அவயமுள்ளதாதலின் கிரியை (தொழில்)களோடு கூடியிருக்கும் என்றுணர்க. 'இவ்வெல்லாவுலகும் நாம ரூபக்கிரியா சொரூபமாம். அவற்றுள் விசுவம் லோகம் திருசியம் பிரபஞ்சம் முதலிய சப்தங்கள் நாமமாம். ஆகாசாதி பூதங்களும் அவற்றின் காரியமான சரீராதிகளும் ரூபமாம். சகத்தின் உற்பத்தி சம்ஹாரம் முதலியன கிரியையாம்' என்பர் (ஆத்மபுராணம் பக். 322) இந்நூலாசிரியரே 'மாயையாலுளவாகிய வடிவ நாமமழித்துள தாயவோர் பிரமந்தனை யறியுமாறறி வித்தல் போல்' (விமலை 40) என்று கூறுதல் காண்க.

72. **அனைய தேனாமரூ பக்கிரி**
யைகள னைத்தும் வெல்ல
நினைவுறு [1]சூழ்ச்சி யொன்று
நீயெனக் குரைத்தி [2]யென்னாப்
பனிமலை தவஞ்செய் தீன்ற
பவளவாய் மடந்தை கூற
நனையவிழ் கொன்றை வேணி
நம்பன்மற் றிதனைச் [3]சொல்வான் 51

(பா.ம்) [1]சூட்சி; [2]யென்னப்; [3]சொன்னான்

(இ.ள்) நாமரூப கிரியைகள் அனைய தேல் - நாமரூப கிரியைகள் பேரின்பத்தை அடையத்தடை யாயிருக்குமேயானால்; அனைத்தும் வெல்ல - அவை எல்லாவற்றையும் வெல்வதற்கு; நினைவுறு சூழ்ச்சி ஒன்று - கருத்திற்குப் பொருந்தும் சாதனமாகிய உபாயமொன்று; நீ எனக்கு உரைத்தி என்னா - நீ எனக்குச் சொல்வாய் என்று; பனிமலைத் தவம் செய்து ஈன்ற பவளவாய் மடந்தை கூற - இமயமலை அரசன் தவம் செய்து பெற்ற பவளம் போன்ற வாயினைப் பெற்றிருக்கும் உமாதேவியார் சொல்ல; நனை அவிழ் கொன்றை வேணி நம்பன் -அரும்பு அவிழ்ந்த கொன்றை மலரைத் தரித்த சடையை யுடைய

Koviloor Digital Library

சிவபெருமான்; மற்று இதனை சொல்வான் - மேலும் இதனைச் சொல்லத் தொடங்கினான் (எ.று)

முடிபு - மடந்தை அனையதேல், வெல்ல, உரைத்தி, என்னா, கூற நம்பன் சொல்வான்.

73. போகபூ மியினிற் போக தனுவினாற் பொருந்த லாகா
தேகமா மின்ப சித்தி யியம்புறிற் கரும பூமி
யாகமா னதுகொண் டன்றி யாதலான் ஞாலத் தெய்தி
யோகமா நெறியி னின்றோ ருண்மை சாதித்துக் கொள்வர் 52

(இ.ள்) ஏகம் ஆம் இன்ப சித்தி இயம்புறில் - ஒன்றாகிய பேரின்ப பேற்றை அடையும் வழியைச் சொல்லத் தொடங்கினால்; கருமபூமி-நல்வினை தீவினையாகிய கன்மங்களைத் தேடுதற்குரிய நிலவுலகின் கண்; ஆகமானது கொண்டன்றி - (மேற்படி வினைகளை இயற்றுதற் குரிய) கன்ம சரீரத்தை எடுத்துக் கொண்டாலல்லாமல்; போகபூமியினில் - இருவினைப் பயனை நுகரும் துறக்கம் நரகமாகிய உலகிலே; போகதனுவினால் - இருவினைப் பயனை நுகர்தற்குரிய தேவர் நரகராகிய உடம்பை எடுத்துக் கொண்டதனாலே; பொருந்தல் ஆகாது - அப்பேரின்பத்தை அடைதல் கூடாது; ஆதலால்- ஆகையாலே; ஞாலத்து எய்தி - நிலவுலகத்திலே பிறந்து; யோகம் ஆம் நெறியில் நின்றோர் - பரசிவத்துடன் கூடுதலாகியவழியில் நின்றவர்கள்; உண்மை சாதித்துக் கொள்வர் - மெய்ப்பொருளை அடையப் பெறுவர் (எ.று)

முடிபு - இன்ப சித்தியை இயம்புறில் கருமபூமி (கர்ம) ஆகமானது கொண்டன்றி, போக பூமியினில் போகதனுவினால் பொருந்தல் ஆகாது. ஆதலால் எய்தி, நின்றோர் சாதித்துக் கொள்வர்.

74. என்றிது கொழுநன் கூற விளங்கொடி யனைய தாயி
னொன்றொரு மக்கண் ஞாலத் துவமையின் ஞான சித்தி
நன்றுற வுணர்த்த வல்ல குரவன்யார் நவிறி யென்னக்
குன்றணி மதிய மொப்பக் குனித்தவன் கூற லுற்றான் 53

(இ.ள்) என்று இது கொழுநன்கூற - என்று இம்மொழியைக் கணவராகிய சிவபெருமான் சொல்ல; இளம்கொடி - இளைய பூங்கொடி போன்ற உமாதேவி; அனையது ஆயின - அப்படியானால்; ஞாலத்து - நிலவுலகத்தின்கண்ணே; ஒன்று ஒரு மக்கள் - பேரின்ப நெறியிலே மனம் பொருந்துகின்ற ஒப்பற்ற மக்களுக்கு; உவமை இல் ஞானசித்தி -

Koviloor Digital Library

ஒப்பில்லாத ஞானமாகிய பேற்றை; நன்றுகூற உணர்த்த வல்லகுரவன் யார் - நன்கு பொருந்த அறிவிக்க வல்ல ஆசிரியன் யார்; நவிறி என்ன - சொல்லுவாயாக என்று கேட்க; குன்று அணி மதியம் ஒப்பகுனித்தவன் - மேருமலையைத்தான் சூடியுள்ள பிறையாகிய சந்திரனுக்கு ஒப்பாகும் படி வளைத்த இறைவன்; கூறல் உற்றான் - சொல்லத் தொடங்கினான்

முடிபு - என்று கொழுநன் கூற, இளங்கொடி அனைய தாயின் மக்களுக்கு சித்தியை உணர்த்தவல்ல குரவன் யார்? நவிறி என்ன? குனித்தவன் கூறலுற்றான்.

75. **தொல்லையி லுயர் சுஞ்ஞானி**
[1]தூய்நிராங் கார னென்போ
ரெல்லையி றவங்கள் செய்ய
வெமது மெய் [2]வடிவத்தானே
யல்லம நாம மைந்த
[3]னாயின மனையான் றன்னை
வில்லுறழ் நுதலாய் காண்டன
மிகவுனக் கரிய தென்றான் 54

(பா.ம்) [1]தூநிராங்; [2]வடிவந்தானே; [3]னாயினைனையான்

(இ.ள்) வில்உறழ் நுதலாய் - வில்லை ஒத்தும் ஒவ்வாதும் உள்ள நெற்றியை உடையவளே; தொல்லையில் - பண்டொருகாலத்தில்; உயர்சுஞ்ஞானி தூய் நிராங்காரன் என் போர் - சிறந்த சுஞ்ஞானி பரிசுத்தனாகிய நிராங்காரன் என்னும் தாய் தந்தையர்கள்; எல்லை இல் தவங்கள் செய்ய - அளவற்ற தவத்தினைச் செய்ய; எமது மெய் வடிவத்தானே - எம்முடைய சத்து சித்து ஆனந்தம் என்னும் உண்மைச் சொரூபத்தினாலே; அல்லமன் நாம மைந்தன் ஆயினம் - அவர்களுக்கு அல்லமன் என்கின்ற பெயரமைந்த ஆண்மகனாகத் தோன்றினோம். அனையான் தன்னை - அங்ஙனம் சிறந்த அல்லமனை; காண்டல் மிக உனக்கு அரியது என்றான் - அறிதல் உனக்கு மிகவும் அருமையாகும் என்றான் (எ.று)

முடிபு - நுதலாய், சுஞ்ஞானியும், நிராங்காரனும் தவங்கள் செய்ய மைந்தன் ஆயினம் அனையான் தன்னை காண்டல் அரியது என்றான்; சுஞ்ஞானி; பொருளைப் பொருளாகக் கொள்ளும் ஞானமுடையவன். நிராங்காரன் அல்லதை யானெனக் கோடல் தவிர்வோன் என்பது ச.பெ.

Koviloor Digital Library

ஐயர்உரை. உடம்பு நாயகியாய் உயிராகிய தான் பதியாயிருந்து விடயங்களை உண்டுழலாது. நாயகிதானாய் நாயக சிவனாய்க் கொண்டு அச்சிவனை அனுபவிப்பதே சுஞ்ஞானம் என்றும் விடயங்களிலே; புலன்களை நன்னச் செய்து; அதனால் யான் என தென்னும் செருக்கை அடையாமல், எல்லாப் புலன்களையும் சீவனுக்கே யாக்கி யான், எனது என்னும் செருக்கற்றிருப்பதே நிரங்கார மென்றும் அறிக. 'உடம்பு சதி பதிதானாய் விடயங்களுண்டுழலா, தடங்கு சதியொரு தானாகி, நீபதியாகவுனைத் தொடர்ந்து நுகருநன் ஞானக்கரம் என்னும் 'விடயங்களினண்ணியானெனதென்று மிகையொருவி, படையும் புலனினக் காக்குந் தவிரகங்காரப் பெயர் என்றும் கூறும் நிரஞ்சனமாலை (25, 23) யால் அறிக.

76. **என்றலு மிமைய வல்லி யெனக் கரிதென்ப தென்கொ**
லுன்றனி யல்ல மன்ற னுண்மையை யறிய வேண்டி
னின்றவர் தமக்கெலாமு [1]மெளிதெனா நெகிழ்ந்துரைப்ப
வன்றினர் புரமெரித்த [2]வணி நகை யாளன் சொல்வான் 55

(பா.ம்) [1]மெளிதென; [2]வறிநகை

(இ.ள்) என்றலும் -என்று சொல்லிய வளவிலே; இமைய வல்லி - உமாதேவியானவள்; எனக்கு அரிது என்பது என் - உலக காரணியாகிய எனக்கு அல்லமனை அறிதல் அரியது என்று சொல்வது என்னை; உன்தனி அல்லமன் றன் உண்மையை உணர வேண்டின் - உனது கூறாகிய ஒப்பற்ற அல்லமனது மெய்த்தன்மையை அறிய வேண்டினால்; நின்றவர்தமக்கெலாமும் எளிது எனா - எனக்கேயன்றி இச்சபையிடை நின்றோர்க்கெல்லாம் எளிதாயிற்றே என்று; நெகிழ்ந்து உரைப்ப -கலங்கிச் சொல்ல; அன்றினர்புரம் எரித்த அணிநகையாளன் சொல்வான்- பகைவரது மதிலைக் கொளுத்திய அழகிய சிரிப்பையுடைய கடவுள் சொல்லத் தொடங்குவான் (எ.று); கொல்- அசை

முடிபு - (இறைவன்) என்றலும்; வல்லி என்கொல் எளிதெனா நெகிழ்ந்து உரைப்ப; நகையாளன் சொல்வான்.

77. **[1]முனிவுறேல் வறிய வுன்றன் மொழியள வல்லன் மாதே**
வினைதபு மன்ப ரன்பால் வேண்டிய வடிவ னாகி
யனையவர் விழியிற் றோன்றி யருளுவ [2]னலம தேவன்
றனதியல் பியாவ ரானுஞ் சாற்றிடற் கரிய தென்றான் 56

Koviloor Digital Library

(பா.ம்) [1]முனிவுலேறிய; [2]னமலதேவன்

(இ.ள்) மாதே முனிவு உறேல் - பெண்ணே சினம் கொள்ளாதே; அல்லமதேவன் வறிய உன்றன் மொழியளவு அல்லன் - அல்லமதேவன் (உண்மைப் பொருளைக் கூற முடியாமையால்) பயனற்ற உனது சொல்லாகிய அளவையால் அளந்துணரப் படுபவனல்லன்; (ஆகமப் பிரமாணத்தால் அறிய முடியாதவன் என்று கருத்து); வினைதபும் அன்பர் - சுவர்க்க, நரகிற்கேதுவாகிய நல்வினை தீவினைகளைக் கெடுத்த அன்பினையுடைய தொண்டர்கள்; அன்பால் வேண்டிய வடிவன் ஆகி - அயரா அன்பினால் விரும்பிய உருவத்தை உடையவனாகி; அனையவர் விழியில் தோன்றி - அத்தகைய தொண்டரின் கண்ணிற்கு முன் தானே வந்து புலப்பட்டு; அருளுவன் - கருணையைச் செய்வான்; தனது இயல்பு யாவரானும் சாற்றிடற்கு அரியது என்றான் - அவ்வல்லமனது உண்மைத் தன்மை எவர்களாலும் சொல்லுவதற்கு அருமையுடையது என்று கூறினான்: (எ.று)

முடிபு - மாதே - முனிவுறேல். அல்லமன் உன் மொழியளவல்லன் அன்பர் வேண்டிய வடிவனாகி தோன்றி அருளுவன், தனது இயல்பு சாற்றிடற்கரியது என்றான்.

78. மெய்ம்மை யிம்மாற்ற மாகும்
 வேறு ளார்க்கியான் செய்மாயை
பொய்ம்மலி செயலிற் றப்பிப்
 போமெனிற் காண்பலென்னா
வம்மலை மகடருக் கியறை
 தலு நின்ற னாற்றன்
மைம்மலி குழலாய் காண்கு
 மென்றிது வள்ளல் கூறும் 57

(இ.ள்) அம்மலைமகள் - அந்த பார்வதியானவள்; இம்மாற்றம் மெய்ம்மை ஆகும் - யான் கூறுகின்ற இச்சொல் உண்மையாகும். வேறு உளார்க்கு - உயிர்களுக்கு (பதியாகிய உன்னையன்றி); யான் செய்மாயை - நாம, ரூப, கிரியைகளால் நான் செய்கின்ற மயக்கமானது; பொய்மலிசெயலில் - பொய் நிறைந்த காரியம் தப்பிப் போவதைப் போல; தப்பிப்போம் எனில் - அல்லமனிடம் தப்பிப்போகுமேயானால்; காண்பல் என்னா - யான் பார்ப்பேன் என்று; தருக்கி அறைதலும் - செருக்குற்றுக் கூறலும்; வள்ளல் - சிவபெருமான்; மைமலிகுழலாய் -

Koviloor Digital Library

கருமை மிகுந்த கூந்தலையுடையவளே! நின்றன் ஆற்றல்காண்கும் - உன்னுடைய வலிமையைப் பார்ப்போம்; என்று இதுகூறும் - என்று கூறி இதனைச் சொல்லத் தொடங்கும்; (எ.று)

முடிபு - அம்மலைமகள் இம்மாற்றம் மெய்ம்மையாகும்; வேறு ளார்க்கு யான்செய் மாயை அல்லமனிடம் தப்பிப் போமெனில் காண்பல் என்னா தருக்கி அறைதலும், வள்ளல் குழலாய்; காண்குதும் என்று இது கூறும். கைலாச கதியை, கன்னட பிரபுலிங்கலீலை ''பார்வதி பிரதிக்ஞை'' என்று பெயர் கூறும். அப்பிரதிக்ஞையை இப்பாடலில் உணரலாம். தருக்கி அறைதல் - நெடுமொழி என்க (அ) பிரதிக்ஞை.

79. இன்னனஞ் சூளி யம்பி
யினிவறி திருத்தி யாயிற்
பொன்னவிர் சுணங்கு பூத்த
புணர்முலை மடவாய் தோல்வி
நின்னிடை வருமென் றண்ண
னிகழ்த்தலு மிமையவல்லி
என்னுரை தவறா [1]தென்ன
நெடுமொழி யிசைத்துப் பின்னர் 58

(பா.ம்) [1]தென்னா

(இ.ள்) பொன் அவிர் சுணங்கு பூத்த புணர்முலை மடவாய் - பொன் போல விளங்குகின்ற தேமல் படரப் பெற்ற நெருங்கிய நகில்களை யுடைய பெண்ணே! இன்னணம் சூள் இயம்பி - இவ்வண்ணம் உறுதிமொழி உரைத்து; இனிவறிது இருத்தியாயின் - இனிமேல் சும்மாயிருந்தாயானால்; தோல்வி நின்னிடை வரும் என்று - தோல்வி உன்னிடத்து உண்டாகும் என்று; அண்ணல் நிகழ்த்தலும் - சிவபெருமான் கூறுதலும்; இமையவல்லி - இமையமலையிலே தோன்றிய கொடி போன்ற பார்வதி; என் உரை தவறாது என்ன - எனது சொல் ஒரு காலத்தும் தவறாது என்று; நெடுமொழி இசைத்து - தன் மேம் பாட்டுரையைக் கூறி; பின்னர் - பின்பு (எ.று)

முடிபு - அண்ணல் மடவாய்! இயம்பி வறிதிருத்தியாயின் தோல்வி வரும் என்று நிகழ்த்தலும்; வல்லி தவறாதென்ன இசைத்து பின்னர்; நெடுமொழி - தன் மேம்பாட்டைத் தானே சொல்லுதல் ''நெடுமொழி தன் மேம்பாடுதானிகழ்த்தல்'' என்பது திவாகரம்.

Koviloor Digital Library

80. ஆயிடை யருகு நின்ற [1]தமோகுண வடிவ மாகு
மாயையை விளித்து நீபோய் மண்ணிடை யல்ல மப்பேர்
நாயகன் றனை யறிந்து நணுகுதி யென்று கூறி
யேயின ளவள்வ ணங்கி யினைய தொன் றியம்பலுற்றாள்
59

(பா.ம்) [1]தமகுண

(இ.ள்) ஆயிடை அருகுநின்ற தமோகுண வடிவம் ஆகும் மாயையை - அச்சபையிடத்தே தன் பக்கத்து நின்ற தனது தமோகுண சொரூபமாகும் மாயா தேவியை; விளித்து - தன் முன் அழைத்து; நீ போய் - நீ சென்று; மண்ணிடை அல்லமன் பேர் நாயகன் றனை அறிந்து - நில உலகத்திலே அல்லமன் என்று பெயர் பூண்ட பதியின் உண்மை இயல்புகளை உணர்ந்து கொண்டு; நணுகுதி - இங்கு அடைவாயாக; என்று கூறிஏயினள் - என்று சொல்லி மாயையை ஏவினாள்; அவள் வணங்கி - அம்மாயை பார்வதியை இறைஞ்சி; இனையது ஒன்று இயம்பல் உற்றாள் - இப்படிப்பட்ட சொல் ஒன்றைச் சொல்லத் தொடங்கினாள் (எ.று)

முடிபு - (பார்வதி) நின்ற மாயையை விளித்து போய் அறிந்து நணுகுதி என்று கூறி ஏயினள்; அவள் வணங்கி இயம்பலுற்றாள்.

81. அல்லம [1]னியல்ப றிந்தங் கணைகுவ னழுவு மாயின்
வல்லிதின் வலிந்து பற்றி யீர்த்திவண் வருவ லென்று
சொல்லின ளொருசூள் வேலை சுவறவுண் டிடுவ லென்று
புல்லிய வெறும்பொன் றாற்றல் புகல்வது போல் வன்றே
60

(பா.ம்) [1]னியல் பறிந்திங்

(இ.ள்) புல்லிய எறும்பு ஒன்று - சிற்றெறும்பு அது தானும் ஒன்று; வேலை சுவற உண்டிடுவல் என்று - கடல் நீரினை வற்றும்படிக் குடித்து விடுவேனென்று; ஆற்றல் புகல்வதுபோல - தன் வல்லமையைக் கூறுவதுபோல; அல்லமன் இயல்பு அறிந்து - அல்லமதேவனின் உண்மைத் தன்மையை உணர்ந்து; அங்கு அணைகுவன் - (அவனை மயக்கி வசம் செய்து) அந்நிலவுலகத்திலேயே கூடுவன்; நழுவும் ஆயின் - (அவன் எனக்கு அகப்படாமல்) வழுவிச் செல்லின்; வல்லிதின் வலிந்து பற்றி - விரைவில் வலிமை செய்து பிடித்து கொண்டு; ஈர்த்து இவண்

Koviloor Digital Library

வருவல் - இங்கே இழுத்துக் கொண்டு வருவேன்; என்று ஒருசூள் சொல்லினள் - என்று ஒரு உறுதிமொழி உரைத்தாள் (எ.று)

முடிபு - எறும்பொன்று வேலையைச் சுவற உண்டிடுவலென்று ஆற்றல் புகல்வதுபோல (மாயை) அறிந்து அணைகுவன் நழுவுமாயின் வலிந்து பற்றி ஈர்த்து இவண் வருவல் என்று ஒருசூள் சொல்லினள்.

82. **தன்னள வறியாண மாழ்கித் தண்மதி தவழும் வேணி**
முன்னவ னவையு ணின்று மொழிந்தவச் சூண்மு டிப்பான்
பன்னக முடிப ரித்த பார்மிசைச் [1]செலவை நெஞ்சத்
துன்னின ளெய்தி னாளவ் வொளியிழைமாயை மாதோ 61

(பா.ம்) [1]செல்ல

(இ.ள்) அ ஒளி இழை மாயை - ஒளியாகிய அணியையுடைய அந்த மாயையானவள்; தன் அளவு அறியாள் - தனது வல்லமையின் எல்லையை உணராதவளாய்; மாழ்கி - தானேமயங்கி; தண்மதிதவழும் வேணி முன்னவன் - குளிர்ந்த பிறை, ஊர்கின்ற சடையையுடைய பரமேசுரனது; அவையுள் நின்று மொழிந்த அ சூள் - சபையின் கண்ணின்று சாற்றிய அவ்வுறுதி மொழியை; முடிப்பான் - முடிக்க வேண்டி; பன்னக முடி பரித்த பார்மிசை - ஆதிசேடனாகிய பாம்பின் முடியினால் தாங்கப்பெற்ற நிலவுலகத்தின் கண்; செலவை நெஞ்சத்து உன்னினள் - போதலை மனத்திலே எண்ணினாள்; எய்தினாள் - அதனை அடைந்தாள் (எ.று) மாது - ஓ - அசைகள்

முடிபு - மாயை அறியாள் மாழ்கி அவையுள் நின்று மொழிந்த சூள் முடிப்பான் செலவை உன்னினள் எய்தினள்.

இரண்டாவது
கைலாய கதி முற்றும்

Koviloor Digital Library

மூன்றாவது
மாயையினுற்பத்தி கதி
கதி கருதிய பொருள்

83. [1]பூத லத்தைப் பொருந்துபு மாயையென்
றோத லுற்ற வொருபிடி நுண்ணிடை
மாத வத்தர் மனங்கள் கலங்குறச்
சாத முற்று வளர்ந்தமை சாற்றுவாம் 1

(பா.ம்) [1]பூதலத்திற்

(இ.ள்) மாயை என்று ஓதல் உற்ற ஒருபிடி நுண்இடை - மாயை என்று பெயர் கூறப்பட்ட ஒரு கைப்பிடிக்குள் அடங்கும் சிற்றிடை யானவள்; பூதலத்தை பொருந்துபு - பூமியாகிய இடத்தை அடைந்து; மா தவத்தர் மனங்கள் கலங்குற - பெரியதபசிகளின் நெஞ்சங்களும் கலக்கத்தை அடைய; சாதம் உற்று - பிறத்தலை அடைந்து; வளர்ந்தமை சாற்றுவாம் - வளர்ந்த கதியை யாம் சொல்லுவாம் (எ.று)

முடிபு- நுண்ணிடை பொருந்தும்படி கலங்குற உற்று வளர்த்தமை சாற்றுவாம்; வளர்ந்தமை - ஆகுபெயர்.

நாட்டுச்சிறப்பு

84. களங்க வெண்மதி நெஞ்சங் கவற்றுமோர்
துளங்கு சங்குடைத் தோன்றன் மணத்தணி
வளங்கொண் மண்மகண் மார்பின் மதாணிபோல்
விளங்கு மென்ப விளவல தேயமே 2

(இ.ள்) களங்க வெண்மதி நெஞ்சம் கவற்றும் - மறுவினையுடைய வெண்மையாகிய திங்களினது மனத்தை கவலையடையச் செய்கின்ற; துளங்கு சங்கு உடை - ஒளி அசைகின்ற சங்கினைப் பெற்றுள்ள; தோன்றல் - திருமாலானவர்; மணத்து - (தனக்கும் நிலமகளுக்கும் நடந்த) திருமணக் காலத்திலே; வளங்கொள்மண்மகள் மார்பின் அணி மதாணிபோல் - பல செல்வங்களையும் பெற்றுள்ள நிலமகளது மார்பிலே தரித்த பேரணி கலமாகிய பதக்கத்தைப்போல; விளவலதேயம் விளங்கும் என்ப - இப்பூமியின்கண் விளவலம் என்னும் நாடு காணப்படும் என்பர் (எ.று); ஏ - அசை.

Koviloor Digital Library

முடிபு- விளவலதேயமானது தோன்றல் மணத்திலே மண்மகள் மார்பில் அணிந்த மதாணியைப் போல விளங்கும் என்ப; மதாணி - மார்பில் அணிந்து கொள்கின்ற பெரிய அணிவகை "பெரும்பூண் மதாணி பேரணி கலமே" என்பது திவாகரம்; விளவல தேயத்தைக் கன்னட நாட்டார் பெறுவலநாடென்பர். மதாணியைப் பேரணிகலப் பதக்கம் என்பர் (தக்க-பரணி 105) உரையாசிரியர்; மதிவெண்மையா யிருந்தும் களங்கத்தைப் பெற்றுள்ளது; சங்கு களங்கத்தைப் பெறாமல் மிக்க வெண்மையையே பெற்றிருத்தலால் அது மதியின் மனத்தைக் கவற்றுகின்றது. (கவலயடையச் செய்கிறது).

85. **வாவி யாவு மதன்பெருந் தூணிசெய்**
யாவு மார னெடுக்குஞ் சிலையிடங்
காவ லாமவன் காகளச் சாலைகள்
பூவை மார்மனை போர்க்கள மென்பவே 3

(இ.ள்) வாவியாவும் - அந்நாட்டில் குளங்களெல்லாம்; மதன்பெருந்துணி - காமனது பெரிய அம்பறாத்தூணியாகும்; செய் யாவும் - வயல்களெல்லாம்; மாரன் எடுக்கும் சிலை இடம் - காமன் எடுக்கின்ற வில்கள் வைக்கப் பெற்ற கொட்டில்களாகும்; கா எலாம் - சோலைகளெல்லாம்; அவன்காகளம் சாலைகள் - அவனது திருச்சின்னங்கள் வைக்கப் பெற்ற கொட்டில்களாகும்; பூவை மார்மனை (எலாம்) மங்கையர்கள் வாழும் மனை எல்லாம்; போர்க்களம் என்ப - காமப் போர் செய்யும் இடம் என்பர் (எ.று)

முடிபு- அந்நாட்டில் வாவியாவும் மதன்தூணி; செய்யாவும் மாரன் சிலையிடம்; காவெலாம் அவன் காகளச் சாலைகள்; பூவைமார் மனை போர்க்களம் என்ப; மன்மதனது ஐந்தம்புகளில் முதலும் கடைசியும் ஈன, தாமரையும் நீலமும் எல்லாக் குளங்களிலும் இருத்தலின் அவற்றை மதன் தூணியாகவும், எல்லா வயல்களிலும் அவனுக்கு வில்லாகும் கரும்புகளிருத்தலின் அவற்றை அவனது விற்கொட்டில்களாகவும்; எல்லாச் சேலைகளிலும் அவனுக்குக் காகளமாகிய குயில்கள் நிறைந்திருத்தலின் அவற்றைக் காகள சாலைகளாகவும்; எல்லா வீடுகளிலும் அவனுக்குச் சேனையாகிய மங்கையர்களிருத்தலின் அவ்விடங்களை அவனது போர்க்களமாகவும் கூறினார் என்க:

"குளங்களெல்லாம் தாமரை நீலங்களுக்கும் வயல்களெல்லாம் கரும்புகளுக்கும், சோலைகளெல்லாம் குயில்களுக்கும், மங்கையர்

Koviloor Digital Library

வீடுகளெல்லாம் காமவிளையாட்டிற்கும் இடங்களாயிருக்கின்றன என்பனவற்றை வேறுவிதங்களாலே கூறலால் பிறிதினவிற்சியணி. 'பிறிதினவிற்சியே பெறப்படும் பொருளைப் பிறிதொரு நடைகொளப் பேசுதலாகும்' என்பது சரவணப் பெருமாளையர் உரை''

(ஒப்பு)

காலுற நிமிர்ந்திடு காமர் சோலையும்
நீலமும் கமலமும் நிறைந்த பொய்கையும்
மாலையங் கழனியு மனங்கற் காயுத
சாலைகளிவையெனச் சாற்ற நின்றவே (கந்த.)

86. பொறைக்க யிற்றிற் புகழையின் சொல்லெனும்
விறற்க யிற்றின் விருந்தைக் குரவர்சொன்
மறைக்க யிற்றின் மனத்தைத் திருவைநல்
லறக்க யிற்றி னசைப்பவ ரெங்குமே 4

(இ.ள்) பொறைகயிற்றில் புகழை - பொறுமையாகிய கயிற்றினாலே புகழையும்; இன்சொல் எனும் விறல் கயிற்றில் விருந்தை - இனிமையாகிய சொற்கள் என்னும் வலிய கயிற்றினாலே விருந்தினரையும்; குரவர் சொல் மறைகயிற்றில் மனத்தை - ஆசிரியர் கூறும் மந்திரமாகிய கயிற்றால் மனத்தையும்; நல் அறம்கயிற்றில் திருவை - நல்லதருமமாகிய கயிற்றினாலே செல்வத்தையும்; அசைப்பவர் எங்கும் - கட்டுப்வர் அந்நாடெங்கும் (உள்ளணர்) (எ.று) ஏ-அசை.

முடிபு- பொறை முதலான கயிற்றால் புகழ் முதலானவற்றை அசைப்பவர் எங்கும் (உளர்);''உளர் என்பது அவாய் நிலையால் வந்தது; பொறை முதலியவற்றில் கயிறு முதலியவற்றின் தன்மைகளை ஆரோபித்தலால் உருவக அணி என்பது ச.பெ.ஐயர் உரை; அசைப்பவர் - வினையாலணையும் பெயர்; மறை - மந்திரமொழி. ''மறைமொழி தானே மந்திரம் என்ப'' என்பது தொல்காப்பியம்.

87. வறிய னாவன் வடதிசை மன்னவன்
அறிவி லாள னனந்தனு மாவனோ்
சிறிய னாவன் சிலைமதன் பூம்பொழில்
வெறியு லாவும் விளவலத் தெய்தினே 5

Koviloor Digital Library

(இ.ள்) பூம்பொழில் வெறி உலாவும் - அழகிய சோலையின் மணம் வீசப்பெற்ற; விளவலத்து வடதிசை மன்னவன் எய்தின் வறியன் ஆவன் - விளவல நாட்டினைச் செல்வத்திற் சிறந்த குபேரன் அடைந்தால் வறுமையுடையவன் என்று சொல்லப் பெறுவான்; அனந்தனும் அறிவிலாளன் ஆவன் - கல்வி அறிவிலே சிறந்த ஆதிசேடனும் அறிவில்லாதவன் என்று சொல்லப்பெறுவான்; சிலை மதன் ஏர் சிறியன் ஆவன் - அழகிற் சிறந்தவனாகிய வில்லை ஏந்திய மன்மதன் அழகிலே சிறியவன் என்று சொல்லப் பெறுவான். (எ.று) ஏ - அசை.

முடிபு - விளவலத்து மன்னவன் எய்தின் வறியனாவன்; விளவலத்து அனந்தன் எய்தின் அறிவிலாளன் ஆவன்; விளவலத்து மதன் எய்தின் ஏர் சிறியனாவன்; ''இவ்வாறு கூறவே அந்நாட்டோர் செல்வம் முதலியவற்றால் குபேரன் முதலியோரினும் மிக்கவர்'' என்றதாயிற்று. குபேரன் வறியவனாகுகை முதலியவற்றை நாட்டுதற் பொருட்டு ''விளவலத்தெய்தின்'' எனலால் உய்த்துணர்வைப் பணி'' என்பது (சர-பெரு.ஐயர் உரை).

நகரச்சிறப்பு

88. இணையி லாத வினைய வளம்பல
நணுகி வாழும் விளவல [1]நாட்டிலவ்
வணியி னாப்ப ணழுத்தும் விலையில்
மணியின் மேவும் வனவசை மாநகர் 6

(பா.ம்) [1]நாட்டிடை

(இ.ள்) இணைஇலாத - ஒப்பில்லாத; இனைய வளம்பல - இத்தகைய செல்வங்கள் பலவும்; நணுகி வாழும் விளவல நாட்டில் - அடைந்து விளங்குகின்ற விளவல நாட்டின் நடுவே; அஅணியின் நாப்பண் அழுத்தும் விலை இலா மணியின் - அந்த மதாணி என்னும் அணியின் நடுவே பதிக்கப் பெறும் விலை மதிக்கப் பெறாத நாயக மாணிக்கத்தைப் போல; வனவசை மாநகர் மேவும் - வனவசை என்னும் பெரிய நகரம் பொருந்தியிருக்கும் (எ.று)

முடிபு - விளவல நாட்டில் வனவசை மாநகர் அவ்வணியின் நாப்பண் அழுத்தும் மணியில் மேவும்; ''பலவும் என்னும் முற்றும்மை விகாரத்தால் தொக்கது. பூமிக்கு விளவல நாட்டைப்போல விளவல நாட்டிற்கு இந்த நகரம் அழகு செய்கின்றதென்றதாயிற்று. வனவசை நகரத்தை நாயகமணியாகக் கூறவே மற்றை நகரங்களெல்லாம்

Koviloor Digital Library

சுற்றிலுள்ள மணிகள் போலும் என்பது பெறப்பட்டது. வனவசை மாநகரத்தை அந்நாயக மணியாகக் குறித்தலால் ''தற்குறிப்பணி'' என்பது (சர-பெரு-ஐயருரை).

89. படிக்கு ளீரப் பலாப்பழுத் தொண்புவி
வெடித்த வாயி னனந்தன் மணிவெயி
லடுத்து வானத் [1]தமர்மதி யைத்தொடாக்
கடுத்த வேள்குடைக் காம்பெனத் தோன்றுமால் 7

(பா.ம்) [1]அவிர்மதி

(இ.ள்) ஈரப்பலா படிக்குள் பழுத்து - வேர்ப் பலாக்காய் பூமிக்குள் பழுக்க; ஒள்புவி வெடித்த வாயில் - சிறந்த பூமி பிளத்தலால் தோன்றிய வழியிலிருந்து; அனந்தன்மணி வெயில் தோன்றிய - ஆதிசேடனது சிர மாணிக்கத்தின் ஒளியானது; வானத்து அமர்மதியை அடுத்து தொடா - ஆகாயத்தின் நடுவே பொருந்தியுள்ள நிறைந்த திங்களைச் சேர்ந்து தீண்டி; கடுத்தவேள் குடைக்காம்பு என - (காமநோயினனாக) சினந்த மன்மதனது (காம்பிலாத) குடைக்குக் காம்பு போல; தோன்றும் - விளங்கும் (எ.று). ஆல் - அசை

முடிபு - பலா படிக்குள் பழுத்து புவி வெடித்த வெயில் அடுத்து மதியினைத் தொடா வேள் குடைக் காம்பெனத் தோன்றும்; மன்மதனுக்கு மதியைக் குடையாகச் சொல்லுதல் மரபு. பழுத்து என்னும் எச்சத்தைப் பழுத்த என்று திரிக்க. ''மணிக்கதிரைக் குடைக் காம்பாகக் குறித்தலால் தற்குறிப்பணி'' என்பது சர-பெரு-ஐயர் உரை.

90. நறவ விழ்ந்த நறுமலர் தோறும்வண்
டுறவ ருந்த யிறாலுற் றொடுங்குமா
லறவர் தங்க ளகந்தொறு மையமுண்
டுறவர் தங்குகை துன்னுதல் போலவே 8

(இ.ள்) அறவர்தங்கள் அகம்தொறும் - இல்லறம் நடத்துநர் வீடு தொறும் சென்று; ஐயம் உண்துறவர் - பிச்சையைக் கையிலேற்று உண்ணுகின்ற துறவிகள்; தம் குகை துன்னுதல் போல - உண்டபின் தாம் நிட்டையிலிருக்கும் குகையை அடைதல்போல; வண்டு அவிழ்ந்த நறுமலர்தோறும் நறவுஉற அருந்தி - வண்டுகளானவை மலர்ந்த மணமுள்ள மலர்தோறும் (சென்று) தேனைத் தம்பசிக்குப் பொருந்த உண்டு; இறா உற்று ஒடுங்கும் - தம் கூடுகளைச் சார்ந்து அடங்கியருக்கும் (எ.று); ஆல் - அசை

Koviloor Digital Library

முடிபு- ஐயம் உண்குறவர் குகை துன்னுதல் போல, வண்டு மலர் தோறும் நறவு அருந்தி உற்று ஒடுங்கும்; துறவிகள் உச்சிக் காலத்தில் மிக வரும் பசிக்காக ஊருட்புகுந்து வலமாய்ச் சென்று இல்லந்தோறும் சென்று சோறு ஒன்றினை மட்டும் கையிலே ஏற்று விருப்பு வெறுப்பற்று அருந்தியபின் தங்கள் தனியிடத்தை அடைந்து நிட்டையிலிருத்தல் வேண்டும் என்பதை;

உச்சியங் காலங்காலம் மீதுறு
பசிக்கு ஊர்வலமாயிலந்தோறும்
பிச்சை கையிடையிற்காடி
கூழேனும் பெற்றதைப் பற்றி
யுள்வெறுப்போ டிச்சையற்ற
ருத்தி பொருந்த ஏகாந்தத்து...

என்னும் வைராக்கியதீபத்தாலறிக.

ஒருவரிடம் ஒன்றை இரப்போர் வண்டினைப்போல இரக்க வேண்டுமென்றும் புழுவைப் போல் இரக்கக் கூடாதென்றும் பெரியோர் கூறுவர். இதனை,

ஆயுமலர்த்தேன் வண்டருந்துவது போலிரப்போர்
ஈயுமவர் வருந்தா தேற்றலறும் - தூயவிளம்
பச்சிலையைக் கீடமறப் பற்றியரிப்பது போல்
அச்சமுறவாங்கலகம் (நீதிவெண்பா 60)

என்னும் செய்யுளான் அறிக.

வண்டு பூக்கள் தோறும் சென்று சிறிது தேனை மட்டும் எடுத்துச் செல்வதைப்போல துறவிகள் இல்லறத்தார் மனை தொறும் சென்று மனைக்கு மனை சிறிது சோற்றை மட்டும் பெற்றுச் செல்வராதலின் இவர் எடுக்கும் பிச்சைக்கு மாதூகரம் என்று பெயர் (ம்துகரம்-வண்டு); இராமானுஜர் மாதூகரம் பண்ணி அமுது செய்து கொண்டு நம்பிகளுடைய நியமனத்துக்கு எதிர்பார்த்துக் கொண்டு என்று கூறும் குருபரம்பரை வசனத்தால் இதனை அறிக.

91. **வாவிச் செங்கம லங்களில் வல்லிருண்**
மேவித் துஞ்சி விடிதரு காலையிற்
காவிற் சென்று களிவண் டினம்குயில்
கூவத் தண்மதுக் கொள்ளை கொண்டுண்ணுமால் 9

Koviloor Digital Library

(இ.ள்) களிவண்டினம் - கள்ளுண்ட வண்டின் கூட்டங்களானவை; வல்இருள் - வலிய இருள் நிறைந்த இராக் காலத்திலே; வாவி செங்கமலங்களில் மேவி துஞ்சி - தடாகங்களிலுள்ள செந்தாமரையின் குவி மலர்களிலே விரும்பி உறங்கி; விடிதரு காலையில் - விடியற் காலத்திலே; காவில் சென்று - சோலையில் சென்று; குயில் கூவ - குயில்கள் கூக்குரலிட; தண்மது கொள்ளை கொண்டு உண்ணும் - குளிர்ந்த தேனை மிகுதியாக எடுத்து அருந்தும் (எ.று); ஆல் - அசை

முடிபு- வண்டினம் மேவி துஞ்சி சென்று குயில் கூவ கொள்ளை கொண்டு உண்ணும்; காமபானம் ஆகிய கள்ளினைக் குடித்தவர் இராக்காலத்திலே, தம் காதலியைக் கூடி விடியற்காலத்திலே மீண்டும் கட்கடைக்குச் சென்று அங்குள்ளார் கூக்குரலிட கள்ளினையுண்ணும் களியர்கள் போன்றன களிவண்டினங்கள்.

92. **பெடையொ டுற்றுப் பிரிவில்பைங் கிள்ளைகள்**
குடியி ருக்குங் குளிர்பொழில் வாய்மலர்ப்
பொடியு திர்க்கில வேலளி போய்வயன்
மடையு டைக்கு மதுப்பெரு வெள்ளமே 10

(இ.ள்) பெடையொடு உற்று - தம் காதற் பேட்டோடு கூடி; பிரிவு இல் பைங்கிள்ளைகள் - பிரிதல் என்னும் பாலை ஒழுக்கமே இல்லாமலிருக்கும் பச்சைக்கிளிகள்; குடியிருக்கும் - வாழ்ந்திருக்கும்; குளிர் பொழில்வாய் - (பாலைக்குரிய வெப்பமேயின்றி குறிஞ்சி ஒழுக்கத்திற்குப் பொருந்த) குளிர்ந்தேயிருக்கும் சோலையிடத்தே; அளிபோய் - வண்டுகள் சென்று; மலர் பொடி உதிர்க்கிலவேல் - பூக்களிலுள்ள மகரந்தப் பொடிகளைச் சிந்தாதிருக்குமாயின்; மதுபெருவெள்ளம் (போய்) வயல்மடை உடைக்கும் - தேனின் பெருவெள்ளம் சென்று கழனிகளின் மடைகளை உடைத்துவிடும் (எ.று)

முடிபு- உற்று பிரிவுஇல் கிள்ளைகள் குடியிருக்கும் பொழில்; அப்பொழில் வாய் அளிபோய் உதிர்க்கிலவேல் மதுவெள்ளம் உடைக்கும்.

93. **சேலு லாவித் திரியு நதிப்புனன்**
மாலி யானை மறையக் கதிர்த்தலைச்
சாலி நீடித் தழைத்து விளைவயற்
காலி னோடிக் கடிது விழுமரோ 11

Koviloor Digital Library

(இ.ள்) சேல் உலாவி திரியும் நதிபுனல் - கெண்டை மீன்கள் அச்சமின்றி விளையாடித் திரிதற்கிடமான ஆற்று நீர் எல்லாம்;மால்யானை மறைய - பெரிய யானை மறையும் வண்ணம்; கதிர் தலை சாலி நீடிதழைத்து விளைவயல் - கதிர்களை தலையிலே உடைய செந்நெற் பயிர்களானவை ஓங்கிச் செழித்து விளைகின்ற வயலின் கண்; காலின் ஓடி- வாய்க்காலின் வழியே ஓடி; கடிது விழும் - விரைவிலே பாயும் (எ.று) அரோ- அசை

முடிபு - சேல் உலாவி திரியும் நதி; அந்நதிப்புனல் காலில் ஓடி வயலில் விழும்; மிகுதியான நீர் எப்பொழுதும் அறாத ஆறு என்பார். சேலுலாவித்திரியும் நதி என்றார். நதிப்புனல் வீணே கடலில் விழாமல் வயலிலேயே விழுகின்றது என்றபடி. ஓடினவர் கால் தடுக்கி விழுதல் உலக இயல்பு. கடிது விழுதல்- தடைப்படாமல் விரைந்து பாய்தல். ஆறில்லாவூருக்கு அழகு பாழாதலின், வனவசை நகரின் புறத்தே நின்று அதனை அழகு படுத்தும் என்பார்; ''சேலுலாவித்திரியும் நதி'' என்றார். அந்நதி நீரும் வீணே கடலில் விழாமல்; வயலிலேயே பாய்ந்து பயன் செய்யும் என்பார். 'விளைவயலில் காலினோடிக்கடிது விழும்' என்றார்.

94. **வரிக்க யற்செங் கமலம் வரிவளை**
யிருக்கை யான்மல ரம்பினை யேந்தலால்
விரிக்கு மஞ்சிறை மென்னடைப் புள்வயல்
செருக்கு வின்மதன் செங்கை நிகர்க்குமால் 12

(இ.ள்) விரிக்கும் அம்சிறை மெல்நடை புள்வயல் - விரிக்கின்ற அழகிய சிறகுகளையுடையதும், மெல்லிய நடையினையுடையதும் ஆகிய பறவைகளை உடையகழனியானது; வரிக்கயல் செங்கமலம் வரிவளை இருக்கையால் மலர் அம்பினை ஏந்தலால்- (இவை வயலுக்கும் மன்மதனுக்கும் சிலேடை என்க) வயலைக் கருதின், வரிகளையுடைய கயல் மீனும், சிவந்த தாமரை மலர்களும், வரிகளையுடைய சங்குகளும் ஆகிய இவை இருத்தலால், பலவகைமலரையும், தண்ணீரையும் தாங்கி நிற்றலால் என்று வயலுக்குப் பொருள் கொள்க; மச்ச ரேகையும், பதும ரேகையும், சங்கரேகையும் இருத்தலால் மலர்களால் ஆகிய கணைகளை ஏந்தி நிற்றலால் என்று மன்மதனது கையை நோக்கிப் பொருள் கொள்க; செருக்கு வில்மதன் செங்கை நிகர்க்குமால்-கரும்புவில்லையுடைய மன்மதனது சிவந்த கைகளை வயல் சிலேடை வகையால் ஒவ்வும் என்க. (எ.று)

Koviloor Digital Library

முடிபு - வயல், கயலும் கமலமும் வளையும் இருத்தலாலும், மலரம்பினை ஏந்தலாலும் மதன்கையை நிகர்க்கும். (ஆல்-அசை);

95. [1]நளிர்க டற்றுயி னாரணன் றன்னுருக்
[2]கொளவ ளிப்பவர் கையிற் கொடுத்திடும்
வளைபி றக்கு மிடமென வண்புனற்
குளம னைத்துங் குடவளை மொய்க்குமால் 13

(பா.ம்) [1]நளி; [2]கொளவளித்தவர்

(இ.ள்) நளிர் கடல் துயில் நாரணன் - குளிர்ந்த கடலின் மேல் உறங்கும் திருமாலானவர்; தன் உருகொள அளிப்பவர் - தன் வடிவத்தை (சாரூப்ய பதவியை)க் கொள்ளும்படி அருள் செய்யும் தொண்டர்களது; கையில் கொடுத்திடும் வளை - கையின் கண் கொடுக்கப் பெறும் பாஞ்ச சன்ய மென்னும் சங்கு; பிறக்கும் இடம் என- தோன்றும் இடம் இது என்று சொல்லும்படி; வண் புனல் குளம் அனைத்தும் -பிறர்க்கு உபகாரப்படும் நன்னீர் நிறைந்த குளங்கள் எல்லாவற்றிலும்; குடம் வளை மொய்க்கும்- குடம் போன்ற சங்குகள் நிறைந்திருக்கும் (எ.று)

முடிபு - நாரணன் அளிப்பவர் கையில் கொடுத்திடும் வளை பிறக்கும் இடம் என குடவளை குளமனைத்தும் மொய்க்கும்; நாரணன் தன் அடியார்களுக்குச் சாரூப்ய பதவியைக் கொடுத்தருளுவன் என்பதை 'மயாழி வண்ணனுகந்தானாத தண்வடிவாக்கு மென்றே துணியா ழிய மலர சொல்லும்' என்னும் திருவேங்கடத்தந்தாதி (48) யால் அறிக.

96. தாழ்ந்தோ ருயர்வ ரென்றுமிக
வுயர்ந்தோர் தாழ்வரென் றுமறஞ்
சூழ்ந்தோ ருரைக்கு முரைகண்டா
மதில்சூழ் கிடந்த தொல்லகழி
தாழ்ந்தோ ரனந்தன் மணிமுடிமே
னின்றன் றுயர்ந்து தடவரையை
சூழ்ந்தோர் வரையி னுதிப்பவன்றாட்
கீழ் நின்றதுபோய்ச் சூழெயிலே 14

(இ.ள்) தாழ்ந்தோர் உயர்வர் என்றும்- தாழ்ந்து நடப்போர் உயர்வுடையவராவர் என்றும்; மிக உயர்ந்தோர் தாழ்வர் என்றும்- மிகவும் உயர்ந்து நடப்போர் தாழ்வுடையவராவரென்றும்; அறம் சூழ்ந்தோர் உரைக்கும் உரை - அற நூல்களை ஆராய்ந்தோர் கூறும்

Koviloor Digital Library

உரையளவையை (ஆகம பிராமணத்தை); கண்டாம் - (பிரத்யட்ச பிரமாணத்தால்) அறிந்து கொண்டோம். (எங்ஙனமெனில்); மதில் சூழ் கிடந்த தொல் அகழி தாழ்ந்து - வனவசை நகரின் மதிலைச் சுற்றிக் கிடந்த பழைய கிடங்கானது; தாழ்ந்து (ஆழமாக)ச் சென்றதால்; ஓர் அனந்தன் மணிமுடிமேல் நின்றன்று - ஒப்பற்ற ஆதிசேடனுடைய மாணிக்கத்தை யுடைய தலையின் மேல் நின்றது; சூழ்எயில்- நகரைச் சுற்றியுள்ள மதிலானது; போய் உயர்ந்தது- சூரிய மண்டலம் வரைச் சென்று உயர்ந்த படியால்; தடவரையை சூழ்ந்து ஓர் வரையில் உதிப்பவன்- பெரிய மேருமலையைச் சுற்றி உதய வரையில் உதிக்கும் சூரியனது; தாள் கீழ் நின்றது- காலின் கீழே தங்கியது (எ.று); ஏ-அசை

முடிபு - அகழி தாழ்ந்து முடிமேல் நின்றன்று; எயில் போய் உயர்ந்து உதிப்பவன் தாள்கீழ் நின்றது. இவற்றிலிருந்து அறம் சூழ்ந்தோர் என்று உரைக்கும் உரை கண்டாம்

97. சொற்போர் புரிவர் நான்மறையா
 றங்க முணர்ந்த தொழுகுலத்தோர்;
விற்போர் புரிவர் நெடியசிலை
 யிராம னனைய விறல் வேந்தர்
பொற்போர் புரிவர் பிறர் பொருளுந்
 தம்போற் பேணிப் புரிவணிகர்
நெற்போர் புரிவர் அந்நகரில்
 வேளாண் [1]குலத்து நெறியினரே

(பா.ம்) [1]குலத்திநெறியினரே;

(இ.ள்) அ நகரின் நால் மறை ஆறங்கம் உணர்ந்த தொழுகுலத்தோர்- அந்த நகரத்தில் நான்கு வேதங்களையும் ஆறு வேதாங்கங் களையும் அறிந்த அந்தணர்; சொல் போர் புரிவர்- சொல்லினால் செய்யப்படும் போராகிய பலவாதங்களைச் செய்வர்; நெடிய சில இராமன் அனைய விறல்வேந்தர் - நீண்ட வில்லையுடைய இராம பிரானை ஒத்த வெற்றியை யுடைய அரசர்கள்; வில்போர் புரிவர்- வில்லால் செய்யப் பெறும் அமரினைச் செய்வர்; பிறர் பொருளும் தம்போல் பேணிபுரி வணிகர் - பிறருடைய செல்வங்களையும் தம் செல்வம் போலப் பாது காத்து (வாணிகம்) செய்யும் வணிகர்; பொன்போர் புரிவர் - பொன் குவியல்களைச் செய்வர்; வேளாண்

Koviloor Digital Library

குலத்து நெறியினர் - வேளாண்குலத்து மரபினர்; நெல்போர் புரிவர் - நெற்குவியல்களைச் செய்வர் (எ.று); ஏ- அசை

முடிபு - அந்நகரில் தொழுகுலத்தோர் சொற்போர் புரிவர்; வேந்தர் விற்போர் புரிவர்; வணிகர் பொற்போர் புரிவர்; வேளாண் குலத்து நெறியினர் நெற்போர் புரிவர்; வில்லாளிகளில் இராமன் சிறந்ததால், ‘நெடிய சிலை இராமனைய’ என்று கூறினார். ‘தரித்தவரி வில்லிகளில் தாழ்தடக்கை இராமனு நான் (விபூ-3) என்பது கூர்ம புராணம்

98. உடுப்போர்க் குடுக்குந் துகில்களா
லுண்போர்க் குண்ணும் பொருள்களாற்
தொடுப்போர்க் கெடுக்கு மலர்களா
லணிவோர்க் கணியுஞ் சுடரிழையா
லடுப்போர்க் கடுக்கு மனைகளாற்
குறைபா டுடைய தன்றது தான்
கொடுப்போர்க் [1]கிரப்பா ரில்லாத
குறையொன் றுளது கூறுங்கால் 16

(பா.ம்) [1]கிரப் போரில்லாத

(இ.ள்) அதுதான் - அந்த நகரந்தான்; உடுப்போர்க்கு உடுக்கும் துகில்களால் - கட்டிக்கொள்வோர்க்கு கட்டிக் கொள்வதற்குரிய ஆடைகளாலும்; உண்போர்க்கு உண்ணும் பொருள்களால்- உண் பவர்க்கு உண்ணுதற்குரிய உணவுப்பண்டங்களாலும்; தொடுப்போர்க்கு எடுக்கும் மலர்களால் - (மாலை முதலானவற்றை) கட்டுபவர்க்கு எடுக்கப்பெறும் மலர்களாலும்; அணிவோர்க்கு அணியும் சுடர் இழையால் - அழகு செய்வோர்க்கு அணிந்து கொள்ளுதற்குரிய ஒளி களையுடைய அணிகளாலும்; அடுப்போர்க்கு அடுக்கும் மனைகளால் - அந்நகரை நோக்கி வருபவருக்கு பொருந்தும் வீடுகளாலும்; குறைபாடு உடையதன்று - எவ்வித குறைபாடும் உடையது அன்று; கூறுங்கால் - ஆராய்ந்து சொன்னால்; கொடுப்போர்க்கு இரப்பார் இல்லாத குறைபாடு ஒன்று உளது - தானம் செய்வோர்க்கு அதை வாங்குவோர் இல்லாத குறைபாடுதான் ஒன்றுள்ளது (எ.று)

முடிபு - அதுதான் துகில்களாலும், பொருள்களாலும் மலர் களாலும், இழையாலும், மனைகளாலும், குறைபாடுடையதன்று; கூறுங்கால் இரப்பார் இல்லாத குறை ஒன்றுள்ளது.

Koviloor Digital Library

99. ஈச னளித்த வொரு கோட்டி
யானைக் கியாங்களிணை யாயின்
வாச வனைத்தாங் கீரிருகோட்
டியானை யெம்மை மானுயின்மெனும்
பாச வுரற்கால் யானையொரு
பாண்டி லிழுக்கும் பகடுயரிற்
றேசி னிரதப் பரிசிறந்த
வென்னும் பரிக டெருவகலா 17

(இ.ள்) ஈசன் அளித்த ஒரு கோட்டு யானைக்கு - சிவபெருமான் தோற்றுவித்த ஒற்றைக் கொம்பையுடைய (தனக்குவமையற்ற) யானைமுகக் கடவுளுக்கு; யாங்கள் இணை ஆயின் - (இரண்டு கொம்புகளையுடைய) யாங்கள் உவமை ஆனால் தான்; வாசவனைதாங்கும் ஈர்இருகோட்டுயானை எம்மை மானும் - இந்திரனைச் சுமக்கின்ற நான்கு கொம்புகளையுடைய ஐராவதம் என்னும் யானை; எம்மை ஒத்திருக்கும்; எனும் பாச உரல் கால்யானை யொடு- என்று சொல்லுகின்ற கயிற்றால் கட்டப்பெறும் உரல்போன்ற கால்களையுடைய யானைகளுடன்; பாண்டில் இழுக்கும் பகடு உயரில் - இரண்டு சக்கரத்தையுடைய வண்டியை இழுக்கும் கடாக்கள் எங்களைக்காட்டிலும் உயர்வாயின; தேசின் இரதப் பரிசிறந்த - சூரியனுடைய ஒற்றைச் சக்கரத்தேர்க் குதிரைகள் (ஒன்றையும் இழுக்காத எம் மினினும்) சிறந்தவாகும்; என்னும் பரிகள் தெருவு அகலா - என்று சொல்கின்ற குதிரைகள் வீதிகளில் நீங்காவாம் (எ.று)

முடிபு - ஒரு கோட்டு யானைக்கு யாங்கள் இணையாயின ஈரிரு கோட்டு யானை; எம்மை மானும் எனும் யானையொடு, பாண்டி லிழுக்கும் பகடு எங்களைக் காட்டிலும் உயரில் தேசின் இரதம் (இழுக்கும்) பரி எங்களினும் சிறந்த என்னும் பரிகள் தெருவகலா; ஏகதந்தனுக்கு, துவிதந்தன் உவமையாகாதவாறு போல துவிதந்தனுக்குச் சதுர்த்தந்தன் உவமையாகான் என்று கருத்து; ஐராவதத்தைக் காட்டிலும் சிறந்த யானைகளும் சூரியன் தேர்க்குதிரைகளைக் காட்டிலும் சிறந்த குதிரைகளும் வனவசை நகர வீதியில் உள்ளன என்பது கருத்தாகும்;

100. மறையுங் கலைகள் பற்பலவு
முழங்கு மொலியுமங்கலஞ் செய்

Koviloor Digital Library

பறையுங் குழலும், யாழுமியம்
பொலியுங் கரியும் பரிமாவும் செய்
நிறையுந் [1]தெருவி லோடு
மணித் தேரினொலியு நிறைகடலி
னறையுந் திரையிற் சென்று விசும்
பமரர் செவியினடைந் திடுமால் 18

(பா.ம்) [1]தெருவினொடு

(இ.ள்) மறையும் கலைகள் பல் பலவும் முழங்கும் ஒலியும் - வேதங்களும், அறுபத்து நான்கு கலைகளும் கற்கும் ஓசையும்; பறையும் குழலும் யாழும் இயம்பு மங்கலம் செய் ஒலியும்- பறையும் புல்லாங்குழலும் வீணையும் ஒலிக்கும் மங்கல ஓசையும்; கரியும் பரிமாவும் நிறையும் தெருவில் - யானையும் குதிரையும் நிறைந்த தெருவிலே; ஓடும் மணித்தேரின் ஒலியும் - ஓடுகின்ற மணிகள் கட்டிய தேரோசையும்; நிறை கடலின் அறையும் திரையில் சென்று - நீர் நிறைந்த கடலிலே ஒன்றை ஒன்று தாக்கி எழும் அலைகள் போல் சென்று; விசும்பு அமரர் செவியில் அடைந்திடும் - வானத்திலுள்ள தேவர்களது காதுகளிலும் அடையும் (எ.று); ஆல் - அசை

முடிபு- மறைமுதலானவற்றின் ஒலியும், பறை முதலான இயம்பு மொலியும், தேரின் ஒலியும், திரையிற் சென்று அமரர் செவியிலும் அடைந்திடும்

101. வேயை நகுமென் சுடர்த்தொடிய
தோண் மாதுமையை விடைகொண்டு
பேயு மகன்று வரற்கரிய
கைலை மலையைப் பிரிந்தெய்தித்
தூய மனமுங் கலங்கவருந்
தவர்வேள் குவவுத் தோள்வீங்க
மாயை பிறந்த வனவசை
மாநகரின் வளத்தை யார் சொல்வார் 19

(இ.ள்) வேயை நகும் என் சுடர் தொடிய தோள் மாது உமையை - பச்சை மூங்கிலைப் பழிக்கும் என்றும் ஒளி பொருந்திய வளையலை யுடைய தோளைப் பெற்றிருக்கும் மாதாவாகிய உமாதேவியிடம்; விடைகொண்டு - ஆணை பெற்றுக்கொண்டு; பேயும் அகன்று வரற்கு

Koviloor Digital Library

அரிய கைலைமலையைப் பிரிந்து - பேய் தானும் பிரிந்து வருதற்கு எண்ணாத கயிலாய வரையை நீங்கி; எய்தி - இப்பூமியை அடைந்து; அருந்தவர் தூய மனமும் கலங்க - சிறந்த தவசிகளது புனிதமான நெஞ்சமும் கலங்க; வேள் குலவு தோள் வீங்க - மன்மதனது குவிந்ததோள் பூரிக்க; மாயை பிறந்த வனவசை மாநகரின் வளத்தை - மாயாதேவி தோன்றிய வனவசை என்னும் பெரிய நகரத்தின் செல்வத்தை யார் சொல்வார் - எவர் கூறுவர் (எ.று)

முடிபு- உமையை விடைகொண்டு மலையைப் பிரிந்து எய்தி அருந்தவர் மனமும் கலங்க, வேள்தோள் வீங்க, மாயை பிறந்த நகரின் வளத்தையார் சொல்வார்?; உமையை என்றது உருபு மயக்கம்.

102. இம்மாநகரிற் கரசாகி யிருந்து வாழ்வோ
னம்மால் புணருஞ் செயன் மாதரையாகம் வைத்தல்
சும்மா புகழன்றென விந்தையைத் தோளில் வைத்தோன்
கைம்மாறு வேண்டா மழைபோன் மமகார னென்பான் 20

(இ.ள்) இ மா நகரிற்கு - இந்த பெரிய நகரத்திற்கு; அரசு ஆகி இருந்து வாழ்வோன் - வேந்தனாயிருந்து வாழ்பவன் (எத்தகையோ னெனில்); அ மால் புணரும் செயல் மாதரை ஆகம் வைத்தல் சும்மா புகழ் அன்று என - அத்திரு மாலானவர் தாம் கூடுதற்குரிய வீர இலக்குமி முதலான பல இலக்குமிகளைத் (தரம் அறியாமல் மார்பின் கண்ணே வைத்திருத்தல் வீணாகும் புகழ்ச்சியுமன்று என்று சொல்லும் படி); விந்தையைத் தோளில் வைத்தோன்- வீர இலக்குமியை (மட்டும் எடுத்துப் பயனும் புகழும் உண்டாகத்) தோளிடத்தே வைத்துள்ளோன்; கைம்மாறு வேண்டா மழைபோல் - பதில் உபகாரத்தை விரும்பாத மேகத்தைப் போல் கொடுக்கும்; மமகாரன் என்பான் - மமகாரன் என்னும் பெயருடையான் (எ.று)

முடிபு - நகரிற்கு அரசு ஆகி இருந்து வாழ்வோன் என தோளில் விந்தையை வைத்தோன்; மழைபோன் மமகாரனென்பான்; மாதரோடு விந்தையை ஆகம் வைத்தல் புகழன்று எனக்கருதி, அவளைத்தோளில் வைத்தோன் ; மாதரை- உருபு மயக்கமாகவும் கொள்க.

103. திறைதா னளக்குந் திறல் வேந்தர்க்கரிய சீரான்
குறைதா னிரக்கு மவர்க்கோடிக் குறுக நிற்பா
னிறைதான வெற்பு மணிநாகமு நின்று தாங்கும்
பொறைதா னெடுக்கு மிகுமாற்றல் பொருந்து தோளான் 21

Koviloor Digital Library

(இ.ள்) திறை அளக்கும் திறல் வேந்தர்க்கு - தனக்குக் கப்பங்களை (அளவு குறையாமல்) தரும் ஆற்றல் பொருந்திய அரசர்க்கு; அரிய சீரான் - சிறந்த சிறப்பைச் செய்பவன்; குறை இரக்கும் அவர்க்கு - தங்கட்டு வேண்டிய குறையைச் சொல்லி யாசிக்கு மவர்க்கு; ஓடி குறுக நிற்பான் - (அவர்கள் குறையைக் கேட்டு முடித்தற் பொருட்டு) விரைந்து சென்று அணுக நிற்பான்; நிறை தான வெற்பும் - நிறைந்த மதத்தைப் பொழியும் மலை போன்ற எட்டு யானைகளும்; மணி நாகமும் - மாணிக்கத்தை யுடைய பாம்புகளும்; நின்று தாங்கும் பொறை - நின்று சுமக்கும் அவ்வளவு பாரமாகிய பூமியை; தான் எடுக்கும் - தான் ஒருவனே எடுத்துச் சுமக்கும் படியான; மிகும் ஆற்றல் பொருந்து தோளான் - மிகுந்த வலிமை பொருந்துகின்ற தோளினையுடையவன் (எ.று)

முடிபு- (அவ்வரசன்) சீரான், நிற்பான், தோளான்

104. **இரப்பார் [1]வரினோ ரடிஞால மெளிய தன்றிக்**
கரப்பார் கரக்கும் பொருளன் றென றெனஈகை கற்றே
யுரைப்பா ருரைக்கு முரையாவும் புகழில் [2]வைத்தோன்
றரைப்பா லுவமை யிலையாகத் தருக்கி வாழ்வோன் 22

(பா.ம்) [1]வரிலோரடி; [2]வைத்தான்

(இ.ள்) இரப்பார்வரின் - (தான் ஆள்கின்ற உலகத்தையே) யாசிக்கின்றவர் யாரேனும் வந்தால்; ஓர் அடிஞாலம் எளியது அன்றி - இது திருமாலுக்கு ஓரடியுள் அடங்கிய உலகமாதலால்; எளியதாகு மேயன்றி; கரப்பார்கரக்கும் பொருள் அன்று என - (அரியதாக பொருள்களை தங்களுக்கு வேண்டுமென்று கருதி); மறைத்து வைத்துக் கொள்பவரால் மறைத்து வைக்கப்படும் அரிய பொருளுமன்று இம்பூமி என்று சொல்லும்படி; ஈகைகற்று - எது வேண்டினும் ஈதவக்கற்று உதவும் எளியார்க்கு உதவுதலைப் பயின்று; உரைப்பார் உரைக்கும் உரையாவும் - தன்னைக் குறித்துச் சொல்லுவார் சொல்லும் சொற்களை எல்லாம்; புகழில் வைத்தோன் - (பழிப்பொடு படாமல்) புகழிலேயே அவற்றை வைத்தோன்; தலைப்பால் உவமை இலையாக தருக்கி வாழ்வோன் - இந்நிலவுலகத்தில் தனக்கு ஒப்பில்லையாகச் செருக்குற்று வாழ்வோன் (எ.று)

முடிபு - (அவ்வரசன்) ஞாலம் எளியதன்றி, பொருளன்றென கற்று, வைத்தோன் இலையாகத் தருக்கி வாழ்வோன்.

Koviloor Digital Library

105. அன்னான் மனைவி வணர்வார் குழலைய [1]வேற்கண்
மின்னார் மருங்கு றளர்ந்தொல்கி மெலிய விம்மிப்
பொன்னார் சுணங்கு விரிபூண் முலைப்பூங் கொம்பன்னா
ளின்னா [2]ரமுத மொழிமோ கினியென்னும் பேராள் 23

(பா.ம்) 1அயில் வேற்கண்; 2ரமிர்த

(இ.ள்) அன்னான் மனைவி - அத்தைய மமகார அரசனுடைய ; மனைவி; வணர்வார் குழல் - வணங்கிய நீண்ட கூந்தலையும்; ஐய வேல்கண் - அழகிய வேற்படை போன்ற கண்களையும்; மின் ஆர் மருங்குல் - மின்னற் கொடி போன்ற இடையையும்; தளர்ந்து ஒல்கி மெலிய விம்மிப் பொன் ஆர் சுணங்குவிரி பூண்; முலை- (அவிடை) தளர்ந்து அசைந்து வாடும்படி பூரித்து; பொன்நிறம் போன்ற தேமல் படரப் பெற்ற அணிகளை அணிந்த முலைகளை யுமுடைய; பூ கொம்பு அன்னாள் - மலர்களையுடைய சிறுகிளை போன்றவள்; இன் ஆர் அமுதமொழி - இனிமை பொருந்திய அமிழ்தம் போன்ற மொழிகளைக் கூறும்; மோகினி என்னும் பேராள் - மோகினி என்னும் பெயரினையுடையவள் (எ.று)

முடிபு - அன்னான்மனைவி குழலும், கண்ணும், மருங்குலும் முலையும் உடைய பூங்கொம்பன்னாள். அமுதமொழி (கூறும்) மோகினி என்றும் பேராள்.

106. ஒன்றான நம்பன் மருங்கா யிழை[1]யுய்த்த மாயை
குன்றாத வாற்றன் முனிவோ ருளங்குன்று மாறு
பொன்றாத பொற்பிங் கிவள்[2]பூங்கருப் [3]போந்து பெற்றா
ளென்றா லிவளுக் கிணையா வினியாரைச் சொல்வாம் 24

(பா.ம்) [1]யுற்ற; [2]பூங்களும்; [3]பொன்னு

(இ.ள்) ஒன்று ஆன நம்பன் மருங்கி ஆயிழை - ஒரே பொருளாயுள்ள சிவபெருமானது இடப்பக்கத்தே வீற்றிருக்கும் தேவியார்; உய்த்த மாயை - செலுத்திய மாயா தேவியானவள்; குன்றாத ஆற்றல் முனிவோர் உளம் குன்றுமாறு- குறையாத தவ வலிமையை யுடைய முனிவரின் மனம் ஆற்றல் குறையும்படி; பொன்றாத பொற்பு - கெடாத அழகை; இவள் பூ கரு போந்து பெற்றாள் என்றால் - இம் மோகினியினது அழகிய கருப்பப்பையிலே வந்து அடைந்தாள் என்றால்; இவளுக்கு இணையா இனியாரை சொல்வாம் - இவளுக்கு அழகிலே ஒப்பாக இனிமேல் யாரைக் கூறுவாம் (எ.று)

Koviloor Digital Library

முடிபு- ஆயிழை உய்த்த மாயை முனிவோர் உளம் குன்றுமாறு பொற்பை இவள் கருவிலே போந்து பெற்றாளென்றால் இவளுக்கு இணையா இனியாரைச் சொல்வாம்.

107. **இம்மம காரனு மோகினி யென்னும்**
மைம்மலி மென்குழல் வாள்விழி மாதும்
அம்மக வின்மையின் ஆரஞு ரெய்தி
மெய்ம்மெலி நோன்பு விளைத்தன ரன்றே 25

(இ.ள்) இம்மமகாரனும் - (மேற்கூறிய சிறப்புகளையேல்லாம் கொண்ட) மமகாரனும்; மோகினி யென்னும் மைம்மலி மென்குழல், வாள்விழி மாதும் - மோகினி எனும் பெயரினையுடைய கரிய நிறமுடைய மென்மையான கூந்தலையும் வாள் போன்ற கூர்மையான விழியினையும் உடைய மாதும்; ஆரஞர் எய்தி - மிக்க துன்பத்தை உற்றவர்களாய்; மெய்ம்மெலி நோன்பு - உடல் வாடுதற்குரித்தான உண்ணா நிலையினை; விளைத்தனர் - மேற்கொண்டனர். (எ.று) அன்றே; ஏ - அசைகள்

முடிபு - மமகாரனும் மோகினியும் மகவின்மையின் ஆரஞுரெய்தி மெய்ம்மெலி நோன்பு விளைத்தனரன்றே.

108. **முன்னிய நோன்புசெய் மோகினி மாதின்**
தன்னுத ரத்துமை தண்ணரு ளாலே
மன்னியல் மாரன் வலப்புய மாடக்
கன்னிகை மாயை கருப்ப மடைந்தாள் 26

(இ.ள்) உமை தண்ணருளாலே - உமாதேவியின் தண்ணிய அருளினாலே; முன்னிய நோன்புசெய் மோகினி மாதின் தன்னுதரத்து - (மகப்பேற்றிளை அடையவேண்டி) எண்ணிக்கொண்ட மெய்ம்மெலி நோன்பினை மேற்கொண்டொழுகும் மோகினியாகிய மாதின் வயிற்றினில்; மன்னியல் மாரன் - (உலகின்கண் உள்ள உயிர்களிடத்து காமத்தை உண்டாக்குகின்ற) நிலைத்த இயல்பினைத் தன்னிடத்தே கொண்டுள்ள மன்மதனை; வலப்புயமாட - வலத்தோல் துடிக்க; கன்னிகை மாயை - கன்னிகையாகிய மாயையானவள்; கருப்ப மடைந்தாள் - கர்ப்பத்தைச்சேர்ந்தாள். (எ.று)

ஆண்களுக்கு வலப்புயமும் பெண்களுக்கு இடப்புயமும் துடிப்பது பின்வரும் மகிழ்ச்சிக்கு முன் அறிகுறியாகும். ஆதலின் மாரனுக்கு வலப்புயம் ஆடிற்று என்றார்.

Koviloor Digital Library

109. முத்தணி கொங்கை முகங்கள் கறுத்தாள்
மெத்திரு மேனி விளர்த்து நரம்பு
பைத்தன மீது பரப்ப விருந்தாள்
பொய்த்துயில் கொண்டு புளிக்கு முவந்தாள் 27

(இ.ள்) முத்து அணிகொங்கை முகங்கள் கறுத்தாள் - முத்துமாலையைப் புனைந்து (வெண்மையாய் விளங்கிய) முலை முகங்கள் கறுநிறம் அடையப் பெற்றாள்; மெய்திருமேனி விளர்த்து - உடம்பிலேயுள்ள அழகிய நிறம் வெளுத்து; நரம்புபைத்தன - நரம்பு பச்சை நிறம் பெற்றனவாய்; மீது பரப்ப இருந்தாள் - அந்நிறத்தை உடம்பின் மேலே பரவச் செய்ய விருந்தாள்; பொய்துயில் கொண்டு- பொய் உறக்கத்தைக் கொண்டு; புளிக்கும் உவந்தாள் - புளிப்புச்சுவையுடையவற்றை உண்ண விரும்பினாள் (எ.று)

முடிபு - (மோகினி) கொங்கை முகங்கள் கறுத்தாள்; மெய் மேனி (நிறம்) விளர்த்து நரம்பு பைத்தனவாய் பரப்ப இருந்தாள். துயில் கொண்டு புளிக்குமுவந்தாள்; பைத்தன - முற்றெச்சம்.

110. இன்னண மையிரு திங்க ளிருந்து
பின்னரு மோகினி பெண்மக வீன்றா
டன்னிகர் கின்ற சலஞ்சல மொன்றிங்
கின்னொளி முத்தினை யீன்றதை யொத்தே 28

(இ.ள்) அரு மோகினி இன்னணம் ஐயிரு திங்கள் இருந்து - சிறந்த மோகினியானவள் இவ்வண்ணம் பத்து மாதமிருந்து; தன் நிகர்கின்ற சலஞ்சலம் ஒன்று - தனக்குத்தானே உவமையான சலஞ்சலமென்னுஞ் சங்கொன்று; இன் ஒளி முத்தினை ஈன்றதை ஒத்தே - நல்ல விளக்கத்தை யுடைய ஒரு முத்தைப் பெற்றதை யொத்து; பின் பெண்மகவு ஈன்றாள் - பின்னர் பெண் குழந்தையைப் பெற்றாள் (எ.று)

முடிபு- மோகினி ஐ இரு திங்கள் இருந்து, சலஞ்சலம் முத்தினை ஈன்றதை ஒத்து பெண்மகவு ஈன்றாள்.

111. [1]சங்கொடு தண்ணுமை சச்சரி தாளம்
வங்கியம் வெந்துடி வார்முர சங்கண்
மங்கல மங்கை மகப்பெறு நாளில்
[2]அங்கசன் வெம்முர சென்ன வதிர்ந்த 29

Koviloor Digital Library

(பா.ம்) [1]சங்குகள்; [2]னங்கச வேண்

(இ.ள்) சங்கு தண்ணுமை சச்சரி தாளம் ; வங்கியம், வெம்துடி வார் முரசங்கள்- சங்கும், மத்தளமும், பிரமதாளமும்; தாளமும், ஊதுகொம்பும், விருப்பம் செய்கின்ற உடுக்கையும் வாராலிறுக்கப்பட்ட முரசங்களும் ஆகிய வாத்தியங்கள்; மங்கல மங்கைமக பெறுநாளில்- நன்மையையுடைய மோகினி குழந்தையை ஈன்ற காலத்திலே; அங்கசன் வெம் முரசு என்ன அதிர்ந்தன - மன்மதனது விரும்பத்தக்க முரசாகிய கடல் என்று சொல்லும் படி ஒலித்தன (எ.று); ஒடு- இசைநிறை

முடிபு - மங்கை மகப்பேறு பெறுநாளில் சங்கு முதலியன அங்கசன்முர சென்ன அதிர்ந்த; ங ஙப ர என்னும் வடமொழிச் சொல் சச்சரி என்று திரிந்தது. இது கனக தட்டை அல்லது கனகப்பட்டை என்று பெயர் பெறும். தோற்கருவியாகும். அங்கசங் வெம்முரசு குறிப்புச் சொல்.

112. **தூண்டொளி போன்மக டோன்ற வுவப்புற்**
றாண்டகை மன்னவ னந்தணர் கொள்ளப்
பூண்டுகின் மாமணி பொன்னில மற்றும்
[1]வேண்டின யாவும் வெறுப்ப வளித்தான் 30

(பா.ம்) [1]வேண்டுன

(இ.ள்) ஆண்தகை மன்னவன் - ஆண்மையும் தகுதியும் உடைய மமகார வேந்தன்; தூண்டு ஒளிபோல் மகள் தோன்ற - தூண்டப் பெற்ற; விளக்கின் பொலிவு போல் பெண் குழந்தை உதிக்க; உவப்பு உற்று - இன்பமடைந்து; அந்தணர் கொள்ள - அந்தணர் வாங்கிக் கொள்ளும் படி; பூண் துகில் மாமணி பொன் நிலம் மற்றும் வேண்டின யாவும்- அணியும் ஆடையும் பெரிய இரத்தினமும் பொன்னும் பூமியும் மற்றும் விரும்பிய பொருளெல்லாம்; வெறுப்ப அளித்தான் - போதுமென்று சொல்லும்படி கொடுத்தான் (எ.று)

முடிபு - மன்னவன் மகள் தோன்ற உவப்புற்று அந்தணர் கொள்ள பூண் முதலியன யாவும் வெறுப்ப அளித்தான்.

113. **இங்கொரு மாயை யென்வ**
மெழின்முளை தோன்ற லோடும்
பொங்குறு முவகை நெஞ்சம்
[1]பொறுக்கல னாகி யெய்யும்

Koviloor Digital Library

வெங்கணை மழையுந் தூவு
மென்மலர் மழையுமொன்றா
வெங்கணு மதன வேணின்
றிடையறச் சொரிந்தா னம்மா 31

(பா.ம்) [1]பொறுக்கில

(இ.ள்) இங்கு ஒரு மாயை என்னும் எழில் முளை தோன்றலோடும் - வனவசை நகரத்திலே ஒரே ஒரு மாயை என்னும் பெயர் அமைந்த அழகின் முளை பிறந்தவுடனே; மதனவேள் பொங்குறும் உவகை நெஞ்சம் பொறுக்கலன் ஆகி- மன்மதனானவன்தான் நெஞ்சத்தில் பொங்கும் மகிழ்ச்சியைத் தாங்க மாட்டாதவனாகி; எங்கணும் நின்று - எல்லா யிடங்களிலும் நின்று; எய்யும் வெம்கணை மழையும் தூவும் மெல்மலர் மழையும் ஒன்று ஆ- செலுத்தப்படும் கொடிய அம்பு மழையும் (இறைக்கப் பெறுதன்னால் இறைக்கப்பெறும்) தாமரை முதலிய மெல்லிய பூக்களின் மழையும் (துன்பத்தை விளைத்தலின்) ஒன்றாய்க் கருதும் படி; இடைஅற சொரிந்தான் - இடைவிடாமல் சொரிந்தான்; அம்மா - ஆச்சரியம் (எ.று)

முடிபு - இங்கு மாயை என்னும் எழில் முளை தோன்றலோடும், வேள் உவகை பொறுக்கலனாகி எங்கணும் நின்று கணைமழையும், மலர் மழையும் ஒன்றா இடையறச் சொரிந்தான்.

114. கண்ணக ணிலத்த கங்கைக் கரையிலு முழை யிடத்தும்
புண்ணிய வனத்து மெய்திப் புற்றுமாய் மரமா யுற்றுந்
தண்ணிய புனலிற் றீயிற் சார்ந்து மூண்டுயிறுறந்து
பண்ணிய தவத்தோர் நெஞ்சம் பதைத்தன மயலின் மூழ்கி
32

(இ.ள்) கண் அகல் நிலத்த கங்கை கரையிலும் முழை இடத்தும் புண்ணிய வனத்தும் எய்தி - இடம் பரந்த நிலவுலகத்தி லுள்ளனவாகிய கங்கையாற்றின் கரையிலும் மலைக்குகையின் கண்ணும் (நைமிசம் முதலான) அறத்தையுடைய காடுகளிலும் சென்று; புற்றும் ஆய் மரம் ஆய் உற்றும் - தம்மைச்சார்ந்து புற்று தோன்றவும், மரம் வளரவும் சமாதியிலிருந்தும் ; தண்ணிய புனலில் தீயில் சார்ந்தும்- குளிர் காலத்திலே குளிர்ந்த நீரிலும் வெய்யிற் காலத்திலே நெருப்பினுள்ளும் பொருந்தியும்; ஊண் துயில் துறந்தும் - உணவையும் உறக்கத்தையும் ஒழித்தும்; தவம் பண்ணியோர் நெஞ்சம் - தவம் செய்த முனிவரின்

Koviloor Digital Library

மனங்கள்; மயலின் மூழ்கிப் பதைத்தன - மயக்க வுணர்ச்சியில் ஆழ்ந்து துன்புற்றன (எ.று)

முடிபு - கரையிலும் இடத்தும் வனத்தும் எய்தி, உற்றும் சார்ந்தும், துறந்தும் தவம் பண்ணியோர் நெஞ்சம் மயலில் மூழ்கிப் பதைத்தன; ஆய் இரண்டும் வினை எச்சத்திரிபு, பண்ணிய தவத்தோர் என்பது விகுதி பிரித்துக் கூட்டப்பட்டது

115. ஐம்பெரும் பூத மெல்லா மடுக்கழிந் தொழியும் போதும்
கம்பமி னமது நெஞ்சங் கலங்கிய [1]தென்னை கொல்லோ
வம்புறு [2]செயலீதிங்கு வந்தவா றெவ்வா [3]றென்னாச்
செம்பொரு ளுணர்ந்த சீர்சால் செய்தவ ரிருந்த காலை 33

(பா.ம்) [1]தென்ன கொல்லோ ; [2]செயலிஃதிங்கு; [3]றென்றுச்

(இ.ள்) ஐபெரும்பூதம் எல்லாம் - நிலம் முதலாகிய ஐந்து பெரிய பூதங்களெல்லாம்; அடுக்கு அழிந்து ஒழியும் போதும் - நிற்கு முறை அழியப்பெற்று ஒழிந்து போகும் பிரளய காலத்திலும்; கம்பம் இல் நமது நெஞ்சம் - அசைதலில்லாத நம்முடைய மனம்; கலங்கியது என்னை கொல் - இப்பொழுது கலக்க மடைந்ததிற்குக் காரணமென்னையோ; வம்புறு செயல் ஈது - புதுமை பொருந்திய காரியமாகிய இது; இங்கு வந்த ஆறு எவ்வாறு என்னா - இங்கு வந்த வழி எவ்வகையில் என்று; செம்பொருள் உணர்ந்த சீர்சால் செய்தவர் இருந்த காலை - உண்மைப் பொருளை அறிந்த சிறப்புப் பொருந்திய முனிவர்கள் எண்ணிக் கொண்டிருந்த பொழுதிலே (எ.று); ஓ- அசை

முடிபு - எல்லாம் ஒழியும் போதும் கம்பமில்லாத நெஞ்சம் கலங்கியது என்னை கொல்? செயலாகிய ஈதுவந்த வாறு எவ்வாறு? என்னா செய்தவரிருந்த காலை.

116. தளர்ந்துழி யுதவுங் கல்வி தானெனத் துருவாசப்பேர்
கொளுந்தனி முனிவர் கோமான் குறுகலு முனிவரெல்லா
முளங்[1]கனி வரநின் றேத்தி யுயர்தவி சிடையி ருத்தி
வளங்கெழு மலர்கடூவி வந்தனை செய்து சொல்வார் 34

(பா.ம்) [1]கனிவாய்

(இ.ள்) துருவாசப் பேர் கொளும் தனிமுனிவர் கோமான் - துர்வாசன் என்னும் பெயரைக் கொள்ளும் ஒப்பற்ற முனிவர்தலைவன்; தளர்ந்துழி உதவும் கல்வி என - ஒருவர் சோர்ந்த காலத்திலே அவர்க்கு

Koviloor Digital Library

உதவும் கல்வியைப் போல; குறுகலும் - அம்முனிவரைக் கிட்டின வளவிலே; முனிவர் எல்லாம் உளம் கனிவர நின்று ஏத்தி - முனிவர் களெல்லாம் துர்வாசரின் மனம் இளகும்படி முன்னே நின்று புகழ்ந்து; உயர் தவிசிடை இருத்தி - உயர்வாகிய பீடத்தின் மேலிருக்கச் செய்து; வளம் கெழுமலர்கள் தூவி - சிறப்பு பொருந்திய பூக்களைச் சொரிந்து; வந்தனை செய்து சொல்வார் - தொழுது இம் மொழிகளைக் கூறுவாரா யினர் (எ.று) தான்-அசை

முடிபு - முனிவர் கோமான் தளர்ந்துழி யுதவும் கல்வி தானென குறுகலும் முனிவரெல்லாம் நின்று ஏத்தி இருத்தி தூவி செய்து சொல்வார்.

117. **என்று மெம் முள்ள மெல்லா மெழுதிய விளக்குப் போல**
நின்றிடு மின்றென் கொல்லோ நிலைதடுமாறா நின்ற
தென்றன்மு னிருந்த செய்ய சிறுசுடர் போல வைய
நன்றிதை யுணரு மாறு நவின்றருள் செய்தி என்றார் 35

(இ.ள்) ஐய - ஐயனே!; என்றும் எம் உள்ளம் எல்லாம் எழுதிய விளக்கு போல நின்றிடும் - எப்பொழுதும் எங்கள் மனங்களெல்லாம் படத்தில் எழுதப்பெற்ற விளக்கினைப் போல அசையாமலிருக்கும்; இன்று என் கொல்கோ- இப்பொழுது என்ன காரணத்தினாலோ?; தென்றல் முன் இருந்த செய்ய சிறு சுடர் போல - தென்றற் காற்றின் முன்னே யிருந்த சிவந்த சிறு விளக்குப் போல; நிலைதடுமாறா நின்ற- தவநிலையிலிருந்து பிறழ்கின்றன; இதை நன்று உணருமாறு - இதற்குரிய காரணத்தை யாங்கள் நன்றாய் அறிந்து கொள்ளும்படி; நவின்று அருள் செய்தி என்றார் - சொல்ல அருள்செய் வாயாக என்றார் (எ.று)

முடிபு - என்றும் உள்ளமெல்லாம் எழுதிய விளக்குப் போல நின்றிடும்; இன்று என் கொல்லோ, தென்றன் முன் இருந்த சுடர்போல நிலை தடுமாறா நின்ற. ஐய, இதை நன்று உணருமாறு நவின்று அருள் செய்தி என்றார்.

118. சங்கரி யொருகூ ளாற்றன்
 ற[1]மோகுண வடிவ மாயை
மங்கையை விடுப்ப வண்ணான்
 வனவசை நகரிற் பிள்ளைத்
திங்கணி னுதித்தா ளின்று
 செய்தவக் கிழமை பூண்டீ

Koviloor Digital Library

ருங்கணெஞ் சதனா லாற்ற
லுடைந்ததென் றவனுரைத்தான் 36

(பா.ம்) [1]தமகுண வடிவமாகு

(இ.ள்) செய்தவக் கிழமை பூண்டீர் - தவம் செய் தலையே உரிமையாய் மேற்கொண்ட முனிவர்களே; சங்கரி ஒரு சூளால் - உமாதேவியார் செய்து கொண்ட ஒரு சபதத்தினாலே; தன் தமோகுண சொரூப மாகிய மாயை என்னும் பெண்ணை அனுப்ப; அன்றாள் வனவசை நகரில் பிள்ளை திங்களின் இன்று உதித்தாள்- அவள் வனவசை என்னும் நகரததில் இளமதி போல் இன்று தோன்றினாள்; உங்கள் நெஞ்சு அதனால் ஆற்றல் உடைந்தது - உங்கள் மனம் அக்காரணத்தினால் வலிமை அழிந்தது; என்று அவன் உரைத்தான் - என்று அத்தூர் வாசமுனிவன் கூறினான் (எ.று)

முடிபு- தவக்கிழமை பூண்டீர். சங்கரி ஒரு சூளால், மங்கையை விடுப்ப; அன்னாள் இன்று உதித்தாள்; அதனால் உங்கள் நெஞ்சு ஆற்றலுடைந்தது என்று அவன் உரைத்தான்.

119. அருந்தவ முனிநீ கூறிற் றுண்மையே யன்றி எங்கள்
பெருந்தவ முயலு நெஞ்சம் பிறழ்தரற் கேது வில்லை
இருந்துளம் வருந்தி யாய்ந்த வெம்மிடையைய மெல்லாம்
பரிந்தன வருளா னீயெம் பால்வரு கையினா லென்று 37

(இ.ள்) அரும்தவமுனி - சிறந்த தவத்தைச் செய்யும் முனிவரே; நீ கூறிற்று உண்மையே - நீ மொழிந்தமை உண்மையே; அன்றி - நீ கூறிய காரணமல்லாமல்; பெரும்தவம் முயலும் நெஞ்சம் பிறழ்தரற்கு ஏது இல்லை- பெரிதாகிய தவத்தையே முயலுகின்ற எங்கள் மனம் தடுமாறுதற்குக் காரணம் வேறொன்றும் இல்லை; அருளால் நீ எம்பால் வருகையினால் - கருணையினால் நீ எம்மிடத்து வருதலினால்; இருந்து உளம் வருந்தி ஆய்ந்த எம்மிடை ஐயமெல்லாம் பரிந்தன என்று - இங்கேயிருந்து மனம் துன்புற்று ஆராய்ந்து இருந்த எம்மிடத்துள்ள சந்தேகங்களெல்லாம் நீங்கப் பெற்றன. என்று கூறி (எ.று)

(முடிபு) முனி! நீ கூறிற்று உண்மையே; அன்றி நெஞ்சம் பிறழ்தரற்கு ஏது (வேறு) இல்லை; நீ வருகையினால் ஐயமெல்லாம் பரிந்தன என்று; வருகையினால் என்னும் மூன்றாம் வேற்றுமைக்கு முடிக்கும் சொல் பரிந்தன என்னும் வினை முற்றாகையால் இவ்வினை முற்று செயப்பாட்டு வினைப் பொருளில் வந்ததென்பர். (சர.பெ.உரை)

Koviloor Digital Library

120. முனிவரா், துருவா, சப்பேர்,
முனிவர்கோன், றனைவ ழுத்திட
பனிமலை வல்லி யேவப்
பட்டெழின் மாயை யென்னும்
வனிதையிவ் வுலகில் வந்த
வாறு நீ விரித்தி யாங்கள்
இனிதுணா் வுறுமா றோது
கென்றலு மவனு ரைப்பான் 38

(இ.ள்) முனிவரா் - முனி சிரேட்டர்கள்; துருவாசப் பேர்முனிவர் கோன்றனை வழுத்தி- துருவாசன் என்னும் பெயரையுடைய முனிவர் தலைவனை வாழ்த்தி; பனிமலை வல்லி ஏவப்பட்டு எழின் மாயை என்னும் வனிதை இவ்வுலகில் வந்த ஆறு - இமயமலைக் கொடியை என்னும் பாா்வதியில் செலுத்தப் பெற்று அழகிய மாயை என்னும் பெண் இந்த உலகத்திலே வந்த வரலாற்றை; யாங்கள் இனிது உணா்வு உறுமாறு - யாங்கள் நன்றாய் அறிந்து கொள்ளும்படி; நீவிரித்து ஓதுக என்றலும் - நீ விரிவாய்க்கூறுக என்று கேட்டலும்; அவன் உரைப்பான் - அத் துா் வாசன் கூறுவான் (எ.று)

(முடிபு) முனிவரா் முனிவர் கோன்றனை வழுத்தி, மாயை வந்த ஆற்றை விரித்து, கூறுமாறு, ஓதுக என்றலும் அவன் உரைப்பான்.

121. கயிலையோ லக்கத் துற்ற கண்ணுத லல்ல மன்ற
னியல்பினை யறித றேற்றா யென்றுமையுடனு ரைப்ப
மயிலியலறிவலென்று [1]மாயையை விளக்கைக் காண்பான்
பயிலிரு ளினை விடுத்த பரிசென விடுத்தா ளன்றே 39

(பா.ம்) [1]மாயையை விளக்காக்

(இ.ள்) கயிலை ஓலக்கத்து உற்ற கண்ணுதல் - கயிலை மலையிலே அரசவையுள் பொருந்தியிருந்த சிவபெருமான்; அல்லமன்றன் இயல்பினை அறிதல் தேற்றாய் என்ற உமையுடன் உரைப்ப - அல்லமனுடைய உண்மைத் தன்மையை அறிந்து, தெளியாய் என்று உமாதேவியுடன் கூற; மயில் இயல் அறிவல் என்று- மயில் போன்ற சாயலையுடைய உமா தேவியாா் அறிவேன் என்றுகூறி; விளக்கை காண்பான் பயில் இருளின் விடுத்த பரிசு என- விளக்கைக் காணவேண்டி (விளக்கில்லாத விடத்தே) வழங்கும் இருட்டினை வரவிட்ட தன்மை

Koviloor Digital Library

போல; மாயையை விடுத்தாள் - மாயா தேவியை அனுப்பினாள் (எ.று) அன்று; ஏ; அசைகள்

(முடிபு) கண்ணுதல் அறிதல் தேற்றாய் என்று உரைப்ப, மயிலியல் அறிவல் என்று, விளக்கைக் காண்பான் இருளினை விடுத்த பரிசென மாயையை விடுத்தாள்; கண்ணுதல், மயிலியல் அன்மொழித் தொகைச் சொற்கள்; அறிதல் தேற்றாய் என்னும் சொற்றொடர் அறிந்து தெளியாய் என்று பொருள்படும்; 'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய' (தொல்- சொல். எச்.61) என்னும் விதியால் அறிந்து என்னும் வினை எச்சம் அறிதல் என்ற தொழிற்பெயர் வடிவில் நின்றது.

122. காரண மிதுவே யெங்கோன்
கைலையை விடுத்து மாயை
தாரணி தனில்வ ரற்குத்
தக்கவம் மாயை யென்னு
மாரண விடங்க லந்த
மயக்கம மல்லம னென் றிட்ட
பேரணி கலுழன் றன்னை
[1]நினைந்திடிற் பெயருமன்றே 40

– (பா.ம்) [1]நினைந்திடப்

(இ.ள்) மாயை எம்கோன் கைலையை விடுத்து தாரணி தனில்வரற்கு காரணம் இதுவே - மாயாதேவி எம் இறைவன் வாழும் கைலைமலையை நீங்கி இப்பூமியில் வருதலுக்குக் காரணம் இதேயாகும்; தக்க அமாயை என்னும் மாரணவிடம் கலந்த மயக்கம் - தகுதி வாய்ந்த அப்பேர்ப்பட்ட மாயையாகிய மரணத்தைச் செய்யும் நஞ்சு கலந்ததால் (உங்கள் மனத்தில் தோன்றிய) மயக்கமானது; அல்லமன் என்றிட்டபேர் அணி கலுழன்தன்னை - அல்லமன் என்று வழங்கப்பெற்ற பெயரை அணிந்த கருடனை; நினைந்திடில் பெயரும் - தியானித்தால் நீங்கும் (எ.று) ; அன்று, ஏ - அசைகள்

முடிபு - மாயை விடுத்து வரற்குக் காரணம் இதுவே மாயை என்னும் விடங்கலந்த மயக்கம் அல்லமன் என்ற கலுழனை நினைந்திடில் பெயரும்.

123. [1]பிணிதப வேண்டில் வாழ்நாள்
பெரிதுற வேண்டிற் செல்வ

Koviloor Digital Library

மணிதர வேண்டிற் கல்வி
யறிதர வேண்டில் வானம்
பணிதர வேண்டின் முத்திப்
பயன் பெற வேண்டி லென்று
மிணையறு மல்லமப்பே
ரெந்தையை நினைப்ப [2]ரென்று 41

(பா.ம்) [1]பிணிதவ; [2]ரென்னும்

(இ.ள்) பிணிதப வேண்டில் - நோய் கெட வேண்டினாலும்; வாழ்நாள் பெரிது உற வேண்டில் - வாழுங்காலம் மிகுதியாயிருக்க விரும்பினாலும்; செல்வம் அணிதர வேண்டில் - பொருளைப் பெறவிரும்பினாலும்; கல்வி அறிதர வேண்டில் - கல்வியை (ஐயம் திரிபின்றி) அறிந்து கொள்ள விரும்பினாலும்; வானம் பணிதர வேண்டில் - விண்ணுலகத்திலுள்ள தேவர்கள் வணங்க விரும்பினாலும்; முத்திப்பயன் பெற வேண்டில்- வீடாகிய சிறந்த பயனை அடைய விரும்பினாலும்; என்றும் - எப்பொழுதும்; இணை அறும் அல்லமப் பேர் எந்தையை நினைப்பர் என்று- ஒப்பறும் அல்லமன் என்னும் பெயரையுடைய எம் தலைவனை (அறிவுடையோர்) தியானம் செய்வர் (ஆதலால்) நீங்களும் தியானம் செய்யுங்கள் என்று கூறி (எ.று)

முடிபு- (அறிஞர்) வேண்டில் என்றும், அல்லமப் பேர் எந்தையை நினைப்பர் என்று; நினைப்பர் என்னும் பயனிலைக்கு அறிஞர் என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது. ஆதலால் நீங்களும் தியானம் செய்யுங்கள் என்பது இசை எச்சம். வானம் இடவாகுபெயர்.

124. புகன்றவ ருளத்திற் றுன்பம் போக்குபு துருவாசன்றா
னகன்றுதன் னிடத்த டைந்தா னன்று தொட்டருந்த வத்தோர்
மகிழ்ந்தரு ளல்ல மன்றன் மலரடி மனத்திற் றாங்கி
யுகந்தவன் [1]புகழாய் வந்த வாறெலா முரைக்க லுற்றார் 42

(பா.ம்) [1]புகழ்வாய்

(இ.ள்) துருவாசன் தான் புகன்று அவர் உளத்தில் துன்பம் போக்குபு; அகன்று தன்இடத்து அடைந்தான் - துருவாச முனிவன் தான் இங்ஙனம் சொல்லி அம்முனிவரது மனத்தின் துன்பத்தை நீக்கி அவரை விட்டு நீங்கித் தான் தவஞ்செய்யுமிடத்தைச் சார்ந்தான்; அரும் தவத்தோர் அன்று தொட்டு - அரிய தவத்தைச் செய்யும் முனிவர்

Koviloor Digital Library

அந்நாள் தொடங்கி; மகிழ்ந்து - உவப்படைந்து; அருள் அல்லமன் றன் மலர் அடி மனத்தில் தாங்கி - கருணையையுடைய அல்லமதேவனது மலர் போன்ற பாதங்களை உள்ளத்தில் கொண்டு; உகந்தவன் புகழாய் வந்த ஆறெல்லாம் உரைக்கல் உற்றார் - உயர்ந்தவனது புகழாய்ச் சொல்லப்பட்டு வந்தவகைகளை எல்லாம் சொல்லத் தொடங்கினார். (எ.று)

முடிபு- துருவாசன் தான் புகன்று போக்குபு அகன்று அடைந்தான் அருந்தவத்தோர் அன்று தொட்டு மகிழ்ந்து தாங்கி உரைக்கலுற்றார்.

உகந்தவன் - உயர்ந்தவன்; உகப்பென்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்தது. ''உகப்பேயுயர்தல்'' என்பது தொல்காப்பியம். உகந்து அவன் என்றும் பிரிக்கலாம்.

125. **நெஞ்செனு மகலி லன்பா நெய்நிறைத் துள்ள மென்னும்**
பஞ்சுறு திரியி னுச்சி பற்றிட வல்ல மப்பேர்
அஞ்சுட ரிலக வேற்றி யருந்தவர்மாயை என்னும்
துஞ்சிரு ளகன்றி ருந்தார் தொல்லைமா தவங்கள் செய்து
43

(இ.ள்) அரும்தவர் - அரிய தவத்தைச் செய்யும் முனிவர்கள்; நெஞ்சு எனும் அகலில் அன்பு ஆம் நெய் நிறைத்து - மனம் என்னும் தகளியிலே அன்பாகிய நெய்யை நிரப்பி;. உள்ளம் என்னும் பஞ்சு உறுதிரியின் உச்சி பற்றிட - தியானித்தல் என்னும், பஞ்சாற் செய்த திரியினது நுனியில் பிடிக்கும்படி ; அல்லமப் பேர் அம்சுடர் இலக ஏற்றி - அல்லமன் என்னும் பெயரையுடைய அழகிய விளக்கை விளங்கும்படி பொருத்தி; மாயை என்னும் துஞ்சு இருள் அகன்று - மாயையாகிய உறக்கம் செய்யும் இருட்டு நீங்கப் பெற்று; தொல்லை மாதவங்கள் செய்து இருந்தார் - பழைய பெரிய, தவங்களைச் செய்து அந்நிலையில் தவறாமலிருந்தார். (எ.று)

முடிபு- அரும் தவர் நெஞ்சாகிய அகலிலே அன்பாம் நெய்யை நிறைத்து உள்ளமாகிய திரியிலே அல்லமச்சுடரை ஏற்றி மாயையாகிய இருளகன்று தவம் செய்திருந்தார்; இப்பாட்டு-உருவக அணி.

126. **மந்தர கிரிப்பேர் பெற்ற**
மத்தெறி கடல் போலையர்
சிந்தனை கலங்கி மெல்லத்
தெளிந்தமை தெரிந்து ரைத்தாம்

Koviloor Digital Library

வந்துமண் பிறந்த வன்றே
மாதவர் மனங்க லக்கும்
வெந்திறன் மமகா ரன்றன்
மகடிறம் விளம்ப லுற்றாம் 44

(இ.ள்) ஐயர் சிந்தனை - முனிவருடைய மனங்களெல்லாம்; மந்தரகிரிப்பேர் பெற்ற மத்து எறி கடல்போல் கலங்கி - மந்தரமலை என்னும் பெயருடைய மத்தினால் கலக்கப்பட்ட திருப்பாற்கடல்போல் (விரைவில்) கலக்கமடைந்து; மெல்ல தெளிந்தமை - பையத் தெளிந்தவற்றை; தெரிந்து உரைத்தாம் - ஆராய்ந்து கூறினோம்; மண்வந்து பிறந்த அன்றே - நிலவுலகில் வந்து தோன்றிய அப்பொழுதே; மாதவர் மனம் கலக்கும் - பெரிய தவசிகளின் மனங்களை எல்லாம் கலங்கச் செய்த; வெம்திறல் மமகாரன்தன் மகள்திறம் - கொடிய வல்லமையைப் பெற்றிருக்கும் மமகாரனுக்கு மகளாயுள்ளவளின் செய்தியை; விளம்பல் உற்றாம் - சொல்லத் தொடங்கினோம். (எ.று)

முடிபு - ஐயர் சிந்தனை மத்தெறி கடல்போல் கலங்கி தெளிந்தமை தெரிந்து உரைத்தாம். (இனி) வந்து பிறந்த அன்றே கலக்கும் மகள் திறம் விளம்பல் உற்றாம். வெந்திறலை மகளுக்குக் கூட்டுக. மத்தெறி கடல்போல் சிந்தனை கலங்கி என்பது தொழிலுவமையணி.

127. காந்தம் வலியு மிரும்புபோற்
கண்க டன்னோடுறப் பிணித்து
நேர்ந்த மனமோ [1]ரணுவென்ன
னியாய மன்றென்றம் மனத்திற்
போந்த வரசைப் பெருங்கடலைப்
புகட்டு மகளைக் கண்டு வந்து
வேந்தன் மாயை, யெனுநாமம்
விளம்பிச் சிறப்புப்பல செய்தான் 45

(பா.ம்) [1]ரணுவென்னு

(இ.ள்) காந்தம் வலியும் இரும்புபோல் - காந்தக்கல்லினால் பிணிக்கப் பெறும் இரும்பைப்போல; தன்னோடு கண்கள் உறபிணித்து - தன் மேனியழகோடு (பார்க்கின்றவர்) கண்களெல்லாம் பொருந்தக்கட்டி; நேர்ந்த மனம் ஓர் அணு என்னல் நியாயம் அன்று என்று - நுண்மை யாகிய மனத்தை அணு என்று சொல்லுதல் தர்க்க நெறி அன்று என்று

Koviloor Digital Library

கூறும்படி; அமனத்தில் போந்த ஆசை பெரும் கடலை புகட்டும் மகளை - (பார்க்கின்றவரின்) அந்த மனத்திலே தன்னைப் பற்றித் தோன்றிய ஆசையாகிய பெரிய சமுத்திரத்தைப் புகவிடும் மகளை; வேந்தன் கண்டு உவந்து - அரசன் பார்த்து மகிழ்ந்து; மாயை எனும் நாமம் விளம்பி - மாயை என்னும் பெயரைத் தன் மகளுக்குப் பெயராகக் கூறி; பல சிறப்பு செய்தான் - பல விழாக்களைச் செய்தான். (எ.று)

முடிபு - பிணித்து புகட்டும் மகளை வேந்தன் கண்டு உவந்து விளம்பி செய்தான்; என்று என்பதை என வென்று திரிக்க. நேர்ந்த - நுண்ணிய (நுட்பம்... நேரென்கிளவி) என்பது திவாகரம்; நியாய நூலார் மனத்தை அணுவென்பா. ''மருத்துவ சாமாநியமுடையது மனம்; அது அணுபரிமாணம்; ஆத்மசையோகி; அக இந்திரியம்'' என்பது தர்க்கபரிபாஷை.

128. மாயைப் பெயர்கொள் மகளைநறு
மஞ்ச டிமிர்ந்து கணைக்காலி
னேயக் கிடத்தி நீராட்டி
யிணைக்க ணுந்தி நீரூதி
நேயத் துகிலின் மெய்துடைத்து
நெகிழ்மென் முலையோ டுறத்தழுவி
வாயிற் றிவலை கொடுதேய்த்து
மண்பொட் டணிந்து நீறிட்டு 46

(இ.ள்) மாயை பெயர் கொள்மகளை - (மோகினியாகியதாய்) மாயை என்னும் பெயரைக் கொண்ட மகளை; நறு மஞ்சள் திமிர்ந்து - மணங்கலந்த மஞ்சளைப் பூசி; கணைக்காலில் ஏய இடத்தி - திரண்ட காலின் மேல் பொருந்தக் கிடக்கச் செய்து; நீர் ஆட்டி - நல்ல நீரால் முழுக்காட்டி; இணைக்கண் உந்தி நீர் ஊதி - இரண்டு கண்களிலும் கொப்பூழிலும் நீரில்லாமல் வாயால் ஊதி; நேயம் துகிலில் மெய் துடைத்து - மென்மையான ஆடையால் உடம்பைத் துடைத்து; நெகிழ்மெல் முலையோடு உறதழுவி - (குழந்தையின் மேல் உண்டான விருப்பத்தால்) குழையும் மெல்லிய நகிலோடு பொருந்தத் தழுவிக் கொண்டு; வாயில் திவலை கொடு தேய்த்து - வாயிற்படியிலே முலைப்பாற்றுனியைக் கொண்டு தேய்த்து; மண் பொட்டு அணிந்து - நிலப்பொட்டிட்டு; நீறு இட்டு - திருநீற்றை அணிந்து; (எ.று)

Koviloor Digital Library

முடிபு- (மோகினியாகியதாய்) மகளை கிடத்தி, நீராட்டி ஊதி, துடைத்துத் தழுவி, தேய்த்து, பொட்டணிந்து நீறிட்டு; திருநீற்றை அணிந்து பொட்டிட்டு என்று மாற்றுக. முலைப்பாற்றுளியைக் கொண்டு நிலப் பொட்டிடும் வழக்கத்தை இந்நூலாசிரியர்

மணியினை மண்ணு றுத்தாங்கு
வாச வான்புன லாட்டிப்
பணைகொண்டு விமுலைபிலிற்
றும்பாற் பெய்துநிலந் தேய்த்த,
வணிதிலகஞ் சிறு நுதலி
லணிந்து முலைப் பாலூட்டி,
இணையிலக்ரி மருப்பினிய
லெழிற் றொட்டி லேற்றினார்

என்று (சீகாளத்தி கண்ணப்பர் 23) கூறுமாற்றால் அறிக.

129. கண்ணிற் கமைய மையெழுதிக்
காற்குச் சதங்கை பொற்றண்டை
நண்ணப் புனைந்து பொன்னரைஞா
ணடுவிற் பூட்டிப் புலியுகிர்சேர்
வண்ணப் பசும்பொ னணிமார்பில்
வனைந்து சிறுமென்றொடி [1]சேர்த்திட்டு
பெண்ணிற் கரசி திருநுதற்போற்
பிறைமேற் சுட்டி யொன்றணிந்து 47

(பா.ம்) [1]சாத்தி

(இ.ள்) கண்ணிற்கு அமைய மை எழுதி - கண்களுக்குப் பொருந்த அஞ்சனம் தீட்டி; காற்கு சதங்கை பொற்றண்டை நண்ணப் புனைந்து - கால்களுக்குக் கிண்கிணியும் பொன்னாற் செய்த தண்டையும் பொருந்த அணிந்து; பொன் அரைஞாண் நடுவில் பூட்டி - பொன்னாற் செய்த அரைஞாணை இடையிலே பூட்டி; புலி உகிர்சேர்வண்ணம் பசும்பொன் அணிமார்பில் வனைந்து - புலி நகத்தைச் சேர்த்துச் செய்யப் பெற்ற அழகிய நல்ல பொன் ஆபரணத்தை மார்பிலே அணிந்து; சிறு மென்தொடி சேர்த்தி - சிறிய மெல்லி வளையல்களை யணிந்து; பெண்ணிற்கு அரசி திருநுதல் பொன்பிறைமேல் சுட்டி ஒன்று அணிந்து - பெண்மைக்குத் தலைமை பூண்டவளாகிய மாயையின்தூ நெற்றியாகிய

Koviloor Digital Library

பொன்னிறமுடைய பிறையின் மேலே நுதற்சுடிகை ஒன்றினைப் புனைந்து. (எ.று)

முடிபு- (மோகினியாகியதாய்) எழுதி புனைந்து பூட்டி வனைந்து சேர்த்தி அணிந்து.

130. போக்கும் பொருளாற் கண்மிச்சிற்
போக்கி யன்பான் முலையூட்டித்
தூக்கும் பவளக் காற்பசும்பொற்
றொட்டின் [1]மலியக் கிடத்தியே
பார்க்குஞ் சுவைவா னமுதமே
பார்வேந் தணியே யென்றுயரந்
தீர்க்குங் கரும்பே கண்மணியே
திருவே யென்று சீராட்டி 48

(பா.ம்) [1]மரிய வளர்த்தியே

(இ.ள்) கண்மிச்சில் - பிறர் பார்வையால் வந்த குற்றத்தை; போக்கும் பொருளால் போக்கி - நீக்கும் பொருள்களைக் கொண்டு நீக்கி; அன்பால் முலை ஊட்டி- ஆர்வத்தோடு முலைப்பாலை உண்பித்து; தூக்கும் பவளக்கால் பசும்பொன் தொட்டில் மலிய கிடத்தி- தொங்க வைத்தவும், பவளத்தால் செய்த கால்களையவும் நல்ல பொன்னாற் செய்தவும் ஆகிய தொட்டில் நிறையும்படி படுக்கவைத்து; பார்க்கும் சுவைவான் அமுதமே-கண்ணாற்கண்டு நுகரப் பெறும் சுவையுடைய சிறந்த அமிழ்தமே; பார்வேந்து அணிய - உலகத்தை ஆளுகின்ற அரசனுக்குப் பொலிவு செய்பவளே; என் துயரம் தீர்க்கும் கரும்பே - (மகவு இல்லை என்று வருந்திய) என் துன்பத்தை நீக்கும் கரும்பு போன்றவளே; கண்மணியே- கண்ணுள் நிற்கும் கருமணி போன்றவளே; திருவே- இலக்குமிபோன்றவளே; என்று சீராட்டி - என்று புகழ் மொழிகளைத் தாலாட்டாகக் கூறி (எ.று)

முடிபு- மோகினி- போக்கி. ஊட்டி கிடத்தி என்று சீராட்டி

131. மிடிய னொருசெய் யாளனச்
செய்விளையக் காக்குஞ்செயல் போலம்
படியில் கல்வி விரும்பினோன்
பாடம் போற்று மதுபோல

Koviloor Digital Library

வொடிவில் செங்கோன் மறுவேந்த
னுலகம் புரக்கு முறை போலக்
கொடிய நோன்பு செய்தீன்ற
கொடியை வளர்த்தாள் மோகினியே 49

(இ.ள்) மிடியன் ஒரு செய்யாளன் - வறியனாகிய ஒரு வயலையுடையவன்; அ செய்விளைய காக்கும் செயல்போல - அவ்வொருவயல் பயன் தரும்படி பல்வகையாலும் போற்றும் தொழில் போலவும்; படிஇல்கல்வி விரும்பினோன் - நிகரற்ற கல்வியைப் பெற விழைந்தோன்; பாடம் போற்றும் அதுபோல - தான் கற்கும் பாடங்களை மறவாமல் காக்கும் அச்செயல் போலவும்; ஒடிவு இல் செம்கோல் மனுவேந்தன் - கோடுதலின்றிச் செங்கோலைச் செலுத்தும் மனு நெறியையுடைய அரசன்; உலகம் புரக்கும் முறைபோல- தன் குடிகளைக் காப்பாற்றும் நெறி போல்வும்; மோகினி கொடிய நோன்பு செய்து ஈன்ற கொடியை வளர்த்தாள் - மோகினியாகியதாய் கடுமையான விரதங்களைச் செய்து பெற்ற மின்னற்கொடி போன்ற தன்குழந்தையை வளர்த்தாள் (எ.று)

முடிபு - மோகினி மிடியன் செய்விளையக் காக்கும் செயல் போலவும், கல்வி விரும்பினோன் பாடம் போற்றுவது போலவும், வேந்தன் உலகம் காக்கும் முறைபோலவும் கொடியை வளர்த்தாள்.

132. கள்ள மாயை தன்னெழில்
போற்கண் டதில்லை யென்னமிக
வுள்ளம் வியந்து [1]தலையசைப்ப
தொப்ப வசையுஞ் சுடர் பார்த்து
மெள்ள [2]விரலொன் றனைச் சுவைத்து
மிளிர்பூஞ் சதங்கைத் [3]தாளுதைத்து
விள்ளு மலர்வாய் குவித்தழுது
மீள நகைத்துங் கிடக்குமால் 50

(பா.ம்) [1]தலையசைத்த; [2]விரலொன்றினை; [3]தாளுதைந்து

(இ.ள்) கள்ளமாயை தன் எழில் போல்-வஞ்சகமாயையின் வனப்பைப் போல; கண்டது இல்லை என்னமிக உள்ளம் வியந்து தலை அசைப்பது ஒப்ப; அசையும் சுடர் - இதுவரை பார்த்ததுஇல்லை என்று மிகவும் மனம் மருட்கையுற்றுத் தலையை ஆட்டினால் எப்படியோ

Koviloor Digital Library

அதனை ஒவ்வும்படி ஆடும் விளக்கினைப் பார்த்தும் - (மாயையாகிய குழந்தை) கண்டும்; மெள்ள விரல் ஒன்றனை சுவைத்தும் - மெதுவாகப் பெருவிரலொன்றினைச் சூப்பியும்; மிளிர் பூ சதங்கைதாள் உதைத்தும் - விளங்கும் பொலிவு பெற்ற கிண்கிணியணிந்த கால்களை யுதைத்துக் கொண்டும்; விள்ளும் மலர் வாய்குவித்து அழுதும் - விரியும் மலர் போன்ற வாயினைக் குவித்து அழுதும்; மீள நகைத்தும் கிடக்கும் - திரும்பச் சிரித்துக் கொண்டும் அக்குழந்தை படுத்திருக்கும். (எ.று)

முடிபு - (அக்குழந்தை) பார்த்தும், சுவைத்தும், உதைத்தும், குவித்து அழுதும் நகைத்தும் கிடக்கும்; தலையை இடம் வலமாக அசைத்தலைக் கம்பிதசிரமென்பர்; பிறரின் சிறந்த தொழில் அழகு முதலானவற்றைக் காணுங்கால் இது நிகழுமென்பர். (பரதசாத்திரம் 71)

133. மாயை கவிழ முகங் கவிழ்ந்த
மதனனி ருந்தானவனி ருப்பப்
போய சிலையொன் றெடுத்தெழுந்தான்
பொன்னா லியன்ற பாவையெழ
மேய வனங்க வேண்டந்தான்
வேந்தன் பயந்த மகணடப்பத்
தூய தவஞ்செய் தைந்தவித்த
துறவி னோர் பாலோ டினான். 51

(இ.ள்) மாயை கவிழ - இங்ஙனம் கிடந்த மாயை முகங்கவிழும் பருவமடைய; முகம் கவிழ்ந்தமதனன் இருந்தான் - (அதற்கு முன்னே தனக் வலியின்மையால்) முகங்கவிழ்ந்திருந்த மன்மதன் நேராய் உட்கார்ந்தான்; அவள் இருப்ப - அம்மாயை உட்காரும் பருவம் அடைய; போயசிலை ஒன்று எடுத்து எழுந்தான் - தன் கைவிட்டுப் போன வில்லொன்றினைத் தூக்கிக் கொண்டு எழுந்து நின்றான்; பொன்னால் இயன்ற பாவை எழ - பொன்னாற் செய்த பிரதிமை போன்ற மாயை எழுந்து நிற்கும் பருவமடைய; மேய அனங்க வேள் நடந்தான் - (காமத்தை விளைவிக்க) விரும்பிய மன்மதன் நடக்கத் தொடங்கினான்; வேந்தன் யந்த மகள் நடப்ப - மமகாரவேந்தன் பெற்ற மகள் நடக்கும் பருவமடைய; தூய தவம் செய்து ஐந்து அவித்த துறவினோர் பால் ஓடினான் - நல்ல தவத்தைச் செய்து ஐம்புல ஆசைகளை ஒழித்த துறவியரிடத்தே (அம்மன்மதன் போர் குறித்து) ஓடினான். (எ.று)

Koviloor Digital Library

(முடிபு) மாயை கவிழ மதனனிருந்தான், அவள் இருப்ப அவன் எடுத்து எழுந்தான்; பாவை எழ வேள் நடந்தான். மகள் நடப்ப அவன் ஓடினான்; முன்பின்னாகச் சொல்லப்பட்ட மன்மதனது இருத்தல் முதலியவற்றுக்கு முன்முன்னாகச் சொல்லப்பட்ட மாயையினது கவிழ்தல் முதலியவற்றைக் காரணங்களாகச் சொல்லாமல் இச்செய்யுள் காரணமாலையணியின் பாற்படுமென்பர். (சரவண. பெரு. ஐயர்.)

134. குழலும் யாழு மினியவெனக்
கூறா வண்ணமென்கனி வாய்
மழலை மொழிந்து முடற்கின்ப
மருவ வோடி மேல் விழுந்தும்
விழையு [1]மமிழ்தின் மிகவினிமை
விளைய நுகருஞ் சுவையடிசில்
செழிய சிறுகை யாலளைந்துஞ்
செய்தாண் மோக மீன்றோரை 52

(பா.ம்) [1]மமுதின்

(இ.ள்) குழலும் யாழும் இனிய என கூறாவண்ணம் - புல்லாங்குழலோசையும், யாழின் ஓசையும், இனிமை பயக்குமென்று கூறாதபடி; மென்கனிவாய் மழலை மொழிந்தும் - மென்மையான கொவ்வைக் கனி போன்ற வாயினால் குதலை மொழியை மொழிந்தும்; உடற்கு இன்பம் மருவ ஓடி மேல் விழுந்தும் - உடம்பிற்கு இன்பம் உண்டாக ஓடி உடம்பின் மேல் விழுந்தும்; விழையும் அமிழ்தின் மிக இனிமை விளைய - விரும்பப்படும் அமிழ்தத்தைக் காட்டிலும் மிகுதியும் இனிமை தோன்ற; நுகரும் சுவை அடிசில் செழிய சிறுகையால் அளைந்தும் - உண்ணப் பெறும் அறுசுவை உணவை செழுமையான சிறிய கையால் அலசியும்; ஈன்றோரை மோகம் செய்தாள் - பெற்றோருக்கு ஆசையை ஊட்டினாள். (எ.று)

முடிபு - (மாயை) மொழிந்தும், விழுந்தும், அளைந்தும் மோகம் செய்தாள்.

135. பரவு பெருஞ்சீ ரல்லமனைப்
பற்ற வந்த மதியாற்றன்
னுருவ நிழலைப் பற்றநினைந்
[1]தோடியோடக் கலுழ்ந்திடுவாள்

Koviloor Digital Library

பொருவின் மதிய மேன்முனிந்து
பொங்கு மழலை வீசாமன்
மருவி யுறவு கொள்வாள்போல்
வாவா வென்ன வழைத்திடுவாள் 53

(பா.ம்) [1]தோடியோடிக்

(இ.ள்) பரவு பெரும் சீர் அல்லமனை - உலகெங்கும் வியாபகமும், பெரும்புகழும் உடைய அல்லமதேவனை; பற்ற வந்த மதியால் - இருந்தவிடத்திலேயே பற்ற முயலாமல் இந்நிலவுலகத்திலே பற்ற வேண்டுமென்றெண்ணிவந்த பேதைமை அறிவாலே; தன் உருவ நிழலை பற்ற நினைந்து ஓடி - தன் வடிவத்தின் நிழலைப் பிடிக்க எண்ணி ஓடி; ஓட கலுழ்ந்திடுவாள் - அந்நிழலும் தனக்கு அகப்படாமல் ஓடுதலினால் அழுவாள்; மேல் பொருவுஇல் மதியம் முனிந்து பொங்கும் அழலை வீசாமல் மருவி உறவுகொள்வாள் போல் - வருங்காலத்திலே, ஒப்பற்ற திங்கள் சினந்து மிக்க வெப்பத்தை வீசாமலிருக்கும்படி பொருந்தி, நட்புக் கொள்கின்றவளைப் போல; வா வா என்ன அழைத்திடுவாள் - அத்திங்களை வா வா என்று கூப்பிடுவாள். (எ.று)

முடிபு- அம்மாயை பற்ற வந்த மதியினாலே பற்ற நினைந்து ஓடி (அந்நிழல்) ஓடக் கலுழ்ந்திடுவாள். மதியம் முனிந்து வீசாமல் மருவி கொள்வாள் போல் வா வா என்ன அழைத்திடுவாள்;

136. மாதிப் பரிசு தந்தைதாய்
மகிழ வளர்வுற் றரசிருந்த
நீதிக் கிழவ னிறப்பவவ
னெறிசே ரிளஞ்சே யவன்றவிசின்
மீதுற் றதுபோன் முன் முளைத்த
வெண்பல் விழவே றெயிறுதிப்பப்
பேதைப் பருவங் [1]கடந்து மேற்
பெதும்பைப் பருவ நண்ணினாள் 54

(பா.ம்) [1]கடந்து மெல்ல

(இ.ள்) மாதுஇப் பரிசு தந்தைதாய் மகிழ வளர்வுற்று - மாயையாகிய பெண் இவ்வியல்புடையவளாய் தந்தையும் தாயும் களிப்படையும்படி வளர்தலையடைந்து; அரசு இருந்த நிதிக் கிழவன் இறப்ப அவன் நெறி சேர் இளம் சேய் அவன் தவிசின் மீது உற்றதுபோல்

Koviloor Digital Library

- உலகத்தை அரசாட்சி செய்திருந்த முறைமையையுடைய அரசன் சாவ, அவன் மரபில் தோன்றிய இளங்குழந்தையானது அவ்வரசனது சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தாற்போல; முன் முளைத்த வெண்பல் விழ வேறு எயிறு உதிப்ப - முன்னே தோன்றியிருந்த வெண்மையான பல் விழுந்துவிட (அவ்விடத்தில்) வேறு பல் தோன்ற; பேதை ப்பருவம் கடந்து - ஏழாண்டளவிற்றாகிய பேதைப் பருவத்தைத் தாண்டி; பெதும்பைப் பருவம் நண்ணினாள் - பெதும்பைப் பருவத்தை அடைந்தாள். (எ.று)

முடிபு- மாது மகிழ வளர்வுற்று கிழவன் இறப்ப சேய் உற்றது போல்; முளைத்த பல்விழ வேறு எயிறு உதிப்ப, கடந்து நண்ணினாள்

137. **செய்ய வல்ல கம்மியன் செய்**
சிங்கஞ் சுமந்த [1]மணியணைமேல்
பைய வந்து மணி[2]மௌலிப்
பார்வேந் திருக்கும் பரிசு போல்
வெய்ய குதம்பை வளர்த்தலே
விழுநீர் வள்ளைக் காதினிடைத்
துய்ய பசும்பொன் மணிகுயின்ற
துணைத்தோ டமையத் தோன்றினாள் 55

(பா.ம்) [1]மணியணையிற்; [2]மவுலிப்

(இ.ள்) செய்யவல்ல கம்மியன் செய் சிங்கம் சுமந்த மணி அணை மேல் - சிற்பத் தொழில் இயற்றவல்ல சிற்பாசாரியாலே இயற்றப் பெற்றதும் சிங்க வடிவத்தால் தாங்கப் பெற்றதும் மாணிக்கங்கள் பதிக்கப் பெற்றதும் ஆகிய பீடத்தின் மேல்; மணிமௌலி பார்வேந்து பையவந்து இருக்கும் பரிசுபோல் - மணிகள் பதித்த முடியையுடைய பார்த்திபன் மெல்ல வந்து வீற்றிருக்கும் இயல்பைப்போல; வெக்ஷய குதம்பை வளர்த்து அகல - துன்புறுத்திய தக்கை வளர்த்து நீங்க; விழுநீர் வள்ளைக் காதிடை - நல்லியல்புடைய வள்ளையிலை போன்ற செவியின் கண்; துய்ய பசும்பொன் மணிகுயின்ற துணைதோடு அமைய தோன்றினாள் - நல்ல பசும்பொன்னாலும், மாணிக்கத்தாலும் செய்யப் பெற்ற ஒன்றுக்கொன்று ஒத்ததோடுகள் பொருந்த விளங்கினாள். (எ.று)

முடிபு - ''கம்மியன் செய் அணைமேல் வேந்திருக்கும் பரிசு போல்'' குதம்பை வளர்த்து அகலக் காதினிடைத்தோடு அமையத் தோன்றினாள்.

Koviloor Digital Library

138. மட்டுக் கணைவே ளரணாக
வளர்த்த குழற்கா பலர்விரவிக்
கட்டுற் றதுநம் [1]பரன்க ளத்திற்
கடுவும் விழிகள் சிறிதுற்ற
முட்டித் துறவாம் பறவைமயன்
முடியிற் படுதன் மெல்ல மறைந்
தெட்டிப் [2]பார்ப்ப வெனமுகங்கொண்
டெழுந்த மார்பினிள முலைகள் 56

(பா.ம்) [1]பரன் களத்து; [2]பார்ப்பதென

(இ.ள்) மட்டுகணைபோல் அரண் ஆக வளர்த்த குழல் காடு - தேன் அம்பை (மலரை) ஏந்திய மன்மதனுக்குப் பாதுகாவலை யுண்டாக்கும் காட்டரணாக வளர்க்கப்பெற்ற மாயையின் கூந்தலாகிய காடானது; அலர் விரவிகட்டுற்றது - (தான் வளர்ந்து பூத்து) அப்பூக்கள் அக்காடெங்கும் பொருந்தப் பெற்று காவலையுற்றது. (கூந்தல் வளர்ந்து மலரணியப் பெற்று சடை முதலானவைகளாய்க் கட்டுதலைப் பெற்றது); விழிகள் நம்பரன் களத்தில் கடுவும் சிறிது உற்ற - மாயையின் கண்கள்; நமது பரமேசுரனுடைய கழுத்திலுள்ள நஞ்சின் குணத்தையும் கொஞ்சம் பொருந்தின; துறவு ஆம்பறவை மயல் முடிவில் முட்டி படுதல் மெல்ல மறைந்து எட்டிப் பார்ப்பன - துறவியராகிய பறவைகள் காம மயக்கமாகிய கண்ணியிலே நுழைந்து அகப்படுதலைப் பைய மறைந்திருந்து தலைதூக்கிப் பார்ப்பனபோல; இள முலைகள் மார்பில் எழுந்த - இளைய நகில்கள் மார்பிலே சிறிது தோன்றின; (எ.று)

முடிபு - (மாயையின்) குழற்காடு விரவி கட்டுற்றது; விழிகள் கடுவும் சிறிதுற்ற; ''பறவை முடியில் முட்டிப்படுதலை மறைந்து எட்டிப் பார்ப்பதுபோல்'' முலைகள் மார்பில் எழுந்த.

139. அன்ன நடையு மன்ன மிலா
வையர் நடையும் தளர் வெய்தக்
கன்னி நடக்கு நடைகற்றாள்
கரும்பு கசக்கு மொழி பெற்றாள்
மன்னு மலர்வீழ் சுரும்பனைய
மைந்தர் பார்வைக் [1]குறிப்புணர்ந்தாள்

Koviloor Digital Library

தன்னை யரிய ளென வறிந்து
தானே மனத்திற் றருக்குற்றாள் 57

(பா.ம்) [1]குறிப்பறிந்தாள்

(இ.ள்) அன்னம் நடையும் - அன்னப் பறவை தன் காலால் நடக்கின்ற நடையும்; அன்னம் இலா ஐயர் நடையும் - உணவில்லாமல் நோன்பிருக்கும் முனிவர்களுடைய ஒழுக்கமும்; தளர்வு எய்த - சோர்வடையும்படி; கன்னி நடக்கும் நடை கற்றாள் - கன்னிகையாகிய மாயை காலால் நடக்கும் நடையையும்; ஒழுகும் ஒழுக்கத்தையும் கற்றுக் கொண்டாள்; கரும்பு கசக்கும் மொழி பெற்றாள் - கருப்பஞ்சாற்றைக் கசக்கும்படிச் செய்யும் இனிய சொற்களை உடையவளானாள்; மன்னும் மலர் வீழ் சுரும்பு அனைய - நிலை பெற்ற பூவினை நோக்கிச் செல்லும் வண்டினை ஒத்த; மைந்தர் பார்வை குறிப்பு உணர்ந்தாள் - இளைஞரது நோக்கத்திற் கேதுவாகிய மனக்கருத்தை அறிந்தாள்; தன்னை அரியள் என தானே அறிந்து மனத்தில் தருக்கு உற்றாள் - (அதனால்) தன்னைச் சிறந்தவள் எனத் தானே உணர்ந்து கொண்டு மனத்திலே செருக்கை அடைந்தாள். (எ.று)

முடிபு- கன்னி அன்னநடையும் ஐயர் நடையும் தளர்வெய்த நடக்கும் நடை கற்றாள்; கரும்பு கசக்கும் மொழி பெற்றாள், பார்வைக் குறிப்புணர்ந்தாள்; அரியள் என தன்னை அறிந்து தருக்குற்றாள்.

140. இந்தக் கன்னி மதிமுழுநோக்
கெய்திச் செவ்வாய் வலியடைந்து
சந்தச் சிங்கந் தனையடுத்த
தக்க வரவின்வலி சார்ந்து
முந்தைக் கொடிமீ னத்தலைவன்
முனிவ ராகும் பகை வெல்லக்
கந்தப் பகழி பலவேழக் கரும்புச்
சிலையிற் றொடுத்த னனால் 58

(இ.ள்) இந்தக்கன்னி மதிமுழுநோக்கி எய்தி - இத்தகைய மாயையாகிய கன்னிகையினது முகமாகிய திங்களில் உள்ள விழியின் பார்வையைப் பெற்று; செவ்வாய் வலி அடைந்து - சிவந்த வாய் வலிமைப் பெற்று; சந்தச் சிங்கம் தனை அடுத்த தக்க அரவின் வலி சார்ந்து - அழகிய சிங்க இடை போன்ற இடையைச் சேர்ந்த தகுதியான பாம்பு போன்ற அல்குலின் வலிமையும் சேர்ந்து நிற்க; முந்தை கொடி மீனத்

Koviloor Digital Library

தலைவன் முனிவர் ஆகும் பகைவெல்ல - முதன்மை பெற்ற கொடியாகிய மீனையுடைய அரசன் முனிவர் ஆகும் பகைவரை வெற்றி கொள்ள; கந்தம் பகழி பல - மணத்தையுடைய அம்புகள் பலவற்றை; வேழக் கரும்புச் சிலையில் தொடுத்தனன் - யானைக் கரும்பால் செய்த வில்லினால் செலுத்தினான். (எ.று)

முடிபு - மீனத்தலைவன் கன்னி மதியின் நோக்கை எய்தி செவ்வாய் வலியடைந்து சிங்கத்தை அடுத்த அரவின் வலி சார்ந்து (நிற்கும் காலத்திலே) பகை வெல்ல பகழி பல தொடுத்தனன்.

141. பாக மாகப் பொங்கியெழும்
 பதமே போலப் பொங்குமெழின்
மோக மாயை தன்பருவ
 முன்னி முடிவேந் தயனுமால்
ஆகு மாட மொன்றுபுரிந்
 ததன்கட் கல்வி பற்பலவும்
போகு மாதர் பலர்சூழப்
 போற்றி யிருப்பச் செய்தனனால் 59

(இ.ள்) பாகம் ஆக பொங்கி எழும் பதமே போல - பக்குவமாகப் பொங்கி எழும் சோற்றினைப்போல; பொங்கும் எழில் மோகம் மாயை தன் பருவம் முன்னி - பக்குவமாகப் பொங்கிய அழகினையுடைய ஆசையைச் செய்யும் மாயை தன் பூப்பெய்திய பருவத்தை எண்ணி; முடிவேந்து அயனும் மாலாகும் மாடம் ஒன்று புரிந்து - முடிமன்னனாகிய மமகாரன், பிரமதேவனும் விரும்பத்தக்க கன்னியாமாடம் ஒன்றினைச் செய்து; அதன்கண் - அம்மாடத்திடத்தே; கல்வி பல்பலவும் போகுமாந்தர் பலர் சூழ போற்றி இருப்ப செய்தனன் - கல்வி பற் பலவற்றையும் (கற்று அத்துறையின் கண்) சென்று மகளிர் பலர் சுற்றியிருக்கவும் அவர்கள் பாதுகாத்திருக்கவும் செய்தான். (எ.று) ஆல்-அசை.

முடிபு - வேந்து முன்னி புரிந்து மாதர் சூழ போற்றியிருப்ப செய்தனன்.

142. வாய்த்துள வம்மணி மாட நண்ணுபு
பாத்தொடை பற்பல பயின்றுந் தந்திரி
நாத்தனி யாழைமா ணாக்க [1]னென்றுதன்
[2]பேர்த்துள் விரல்களாற் பேசு வித்துமே 60

Koviloor Digital Library

(பா.ம்) [1]னென்றுதான்; [2]பேர்த்துள

(இ.ள்) வாய்த்துளஅ மணிமாடம் நண்ணுபு - (மாயையானவள் தனக்குப்) பொருத்தமாயுள்ள அப்பேர்ப்பட்ட அழகிய மாளிகையை அடைந்து; பாதொடை பல்பல பயின்றும் - பரந்த ஓசையையுடைய செய்யுட்கள் பற்பலவற்றைக் கற்றும்; தந்திரி நாத்தனி யாழை - நரம்பாகிய நாவினைப் பெற்றிருக்கும் ஒப்பற்ற யாழை; மாணாக்கன் என்று தன்பேர்த்து உளர்விரல்களால் பேசுவித்தும் - தன்னிடம் பயில்பவன் என்று சொல்லும்படி அசைத்துத் தடவுகின்ற விரல்களால் ஏழிசையை இயம்ப வைத்தும் (எ.று) ஏ-அசை.

முடிபு - (மாயை) நண்ணுபு பயின்று என்று பேசுவித்தும்; பா-பந்த ஓசை.

143. **அங்கொரு மடவர லதிர்ப்பத் தண்ணுமை**
மங்கையர் சிலரிசை மரபிற் பாடுறக்
கொங்கவிழ் மலரளி குமுறத் தென்றலாற்
பைங்கொடி யசைதல்போல் பாடி யாடியும் 61

(இ.ள்) அங்கு ஒரு மடவரல் தண்ணுமை அதிர்ப்ப - அவ்விடத்தே மடப்பமுடைய மங்கை ஒருத்தி மத்தளத்தை முழக்க; மங்கையர் சிலர் இசை மரபில் பாடுற - பெண்களிற் சிலர் இராகத்தைப் பாடும் முறையால் பாட; கொங்கு அவிழ்மலர் அளிகுமுற தென்றலால் பைங்கொடி அசைதல் போல் - மணம் விரிந்த பூவின்கண் வண்டின் கூட்டம் பல்வகை ஓசையை உண்டாக்க தென்றல் காற்றாலே இளங்கொடி அசைவதைப் போல; பாடி ஆடியும் - மாயை பாடிக் கொண்டு ஆடும் (எ.று)

முடிபு - மடவரல் அதிர்ப்ப, சிலர் பாடுற, ''அளிகுமுற கொடி அசைதல் போல்'' மாயை பாடி ஆடியும்; குமுறல் - ஒன்றலாப் பேரொலி என்று திவாகரங் கூறுவதால், மடவரல் தண்ணுமை அதிர்ப்ப; மங்கையர் இசை மரபில் பாடுற, மாயை பாடிக் கொண்டாடியது, அணிகுமுறத் தென்றலால் கொடியசைதல் போன்றிருந்தது. இச்செய்யுள். வினை யுவமையணி ஆகும்.

144. **வருமுலை யிறைக்கிணை யாக [1]வந்துறக்**
கரமெனு மேவலன் புடைக்குங் காட்சிபோல்
விரைமல ரோதிமேன் [2]மிஞிறி ரைந்தெழப்
பருமணி குயின்ற மென், பந்த படித்துமே 62

Koviloor Digital Library

(பா.ம்) [1]வந்திட ; [2]மிஞிறிரைந்திடப்

(இ.ள்) வருமுலை இறைக்கு இணையாக வந்துற - வளர்ந்து எழும் நகிலாகிய மன்னர்களுக்குச் சமமாக வந்து பொருந்த அதனால்; கரம் எனும் ஏவலன் புடைக்கும் காட்சிபோல் - கை என்னும் வேலையாள் அடித்தோட்டும் தோற்றத்தைப் போன்று; விரைமலர் ஓதிமேல் மிஞிறு இரைந்துஎழ - மணம் பொருந்திய, பூவணிந்த கூந்தல்மேல் வண்டுகள் ஒலித்தெழும்படி; மணிகுயின்ற பருமென் பந்து அடித்தும் - முத்து மாணிக்கம் முதலானவையால் செய்யப் பெற்ற பெரிய இலேசான பந்தினைக் கையால் அடித்தும். (எ.று) ஏ-அசை.

முடிபு - (மாயை தன் கையால்) காட்சி போல் மிஞிறு இரைந்து எழகுயின்ற பந்து அடித்தும்.

145. பூந்தொடை வார்குழல் புனைந்து நல்விரைச்
சாந்தமு நானமுந் தயங்கப் பூசியு
மேந்திழை பலவுறுப் பிசையத் தாங்கியு
மாந்துறு சுவைபல [1]வகைய மாந்தியும் 63

(பா.ம்) [1]வகையு

(இ.ள்) பூந் தொடை வார்குழல் புனைந்தும் - மலர் மாலையை நீண்ட கூந்தலிலே அணிந்தும்; நல்விரை சாந்தமும் நானமும் தயங்க பூசியும் - நறுமணமுள்ள சந்தனக் குழம்பையும்; கத்தூரிக் குழம்பையும் விளங்கப் பூசியும்; ஏந்து இழை பல உறுப்பு இசைய தாங்கியும் - உயர்ந்த அணிகளை பல அங்கங்களிலும் பொருந்த அணிந்து சுமந்தும்; மாந்துறு சுவை பல் வகைய மாந்தியும் - அருந்துதற்குரிய பல்சுவைக் கூறுபாட்டினையுடைய பானங்களை அருந்தியும்; (எ.று)

முடிபு - (மாயை) புனைந்தும், பூசியும் இசையத் தாங்கியும் மாந்தியும்.

146. தீங்கனி பாலொடு செம்பொற் பஞ்சரந்
தாங்குறு பைங்கிளி யூட்டித் தன்மொழி
யாங்கது பயில்வுற வளித்துங் கற்பகப்
பூங்கொடி யனையவள் பொழுது போக்குநாள் 64

(இ.ள்) கற்பகப் பூ கொடி அனையவள் - கற்பக மரத்தைச் சாரும் அழகிய கொடியை ஒத்தவளாகிய மாயை; செம்பொன் பஞ்சரம் தாங்குறு பைங்கிளி - சிவந்த பொன்னால் செய்த கூட்டினால் தாங்கப் பெறும்

Koviloor Digital Library

பச்சைக் கிளிக்கு; தீம்கனி பாலொடு ஊட்டி - இனிய பழங்களைப் பாலுடன் உண்பித்து; தன் மொழி அது பயில்வுற அளித்தும் - தன் இனிய சொற்களை அது பழகிக் கூறும்படிக் கற்றுக் கொடுத்தும்; பொழுது போக்கும்நாள் - காலங்கழித்து வரு நாளில்; (எ.று) ஆங்கு அசை.

முடிபு- கொடியனையவள் கிளிக்கு கனி பாலொடு ஊட்டித் தன் மொழியை அளித்தும் பொழுதுபோக்கும் நாள்.

147. **தென்னவன் செம்பியன் சேரன் கொங்கண**
மன்னவன் மாளுவன் மகத நாட்டிறை
யென்னுமிங் கிவர்தமுள் யாவர் கண்ணதோ
கன்னிதன் மணவினைக் கடனென் றுன்னியே 65

(இ.ள்) கன்னிதன் மணவினை கடன் - நம்புதல்வியின் திருமணச் செயலாகிய கடமை; தென்னவன், செம்பியன், சேரன், கொங்கண மன்னவன் மாளுவன், மகதநாட்டு இறை என்றும் இங்கு இவர் தம்முள் - பாண்டியனும், சோழனும், சேரனும், கொங்கண நாட்டரசனும்; மாளுவ தேசத்தரசனும்; மகத நாட்டு வேந்தனும் என்று சொல்லப்படுகின்ற இவ்வுலகத்திலுள்ள இவ்வரசர்களிலே; யாவர் கண்ணதோ என்று உன்னி - எவரிடத்திலே நிகழுமோ என்று எண்ணி. (எ.று) ஏ அசை.

முடிபு- மமகாரமன்னன் மணவினைக் கடன் இவர்தமுன் யாவர் கண்ணதோ என்று உன்னி (அடுத்த செய்யுள்) ஆய்ந்திருந்தனன்.

148. **ஆய்ந்திருந் தனன்மம கார னாயிடைப்**
போந்தன னவன்குரு வாகப் [1]போற்றுறுஞ்
சாந்தவாங் காரனாம் தகுதிப் பேரினோன்
[2]வேந்தனு மெதிர்கொளீஇ விதியிற் றாழ்ந்தனன் 66

(பா.ம்) [1]போற்றுறச்; [2] வேந்தனங்

(இ.ள்) மமகாரன் ஆய்ந்திருந்தனன் - மமகார மன்னன் திருமண வினையை இங்ஙனம் ஆராய்ந்து கொண்டிருந்தான்; ஆயிடை - அப்பொழுது; அவன் குருவாகப் போற்றுறும் சாந்த ஆங்காரனாம் தகுதிப் பேரினோன் போந்தனன் - அவ்வரசன் ஆசிரியனாகக் கொண்டு வணங்கப் பெறும் சாந்த குணத்தையுடைய அகங்காரனாகுந் தக்க பெயரினையுடையோன் வந்தான்; வேந்தனும் எதிர் கொளீஇ விதியில் தாழ்ந்தனன் - அரசனும் எதிர் கொண்டழைத்து முறைப்படி வணங்கி னான். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - ஆயிடை குருவாகிய ஆங்காரப் பேரினோன் போந்தனன்; வேந்தனும் எதிர் கொளீஇ தாழ்ந்தனன்.

149. **மன்னவன் வந்தன மரபிற் கொண்டவன்**
கன்னித னெழினலங் காணப் போயினா
னன்னவ ளெதிர்நடந் தாரி யன்றனைச்
சென்னியின் வணங்குபு சிறப்புச் செய்தனன் 67

(இ.ள்) அவன் மன்னவன் வந்தனம் மரபில் கொண்டு - அந்த ஆசிரியன் அரசனது வழிபாட்டை முறைப்படி ஏற்றுக் கொண்டு; கன்னிதன் எழில் நலம் காண போயினான் - மாயாதேவியின் அழகிய நற்பண்புகளைப் பார்ப்பதற்குச் சென்றான்; அன்னவள் எதிர் நடந்து ஆரியன் றனை சென்னியில் வணங்குபு சிறப்பு செய்தனன் - அந்நங்கை முன்னே வந்து ஆசிரியனைத் தலையால் வணங்கிச் சிறந்த வழிபாட்டினைச் செய்தாள். (எ.று)

முடிபு - அவன் கொண்டு, காணப் போயினான், அன்னவள், எதிர் நடந்து வணங்குபு, சிறப்புச் செய்தனள்.

150. **மாந்தளி ராலிலை வயங்கு கோங்கரும்**
பேந்தெழின் மரைமல ரெய்தி யற்புதப்
பூந்துணர் வல்லிநேர் பொன்னைக் கண்டவ
னோர்ந்தனன் காரண மாதென் றுன்னியே 68

(இ.ள்) மாதளிர் ஆல் இலை வயங்கு கோங்கு அரும்பு ஏந்து எழில் மரைமலர் எய்தி - (மேனியாகிய) மாவின் தளிரும் (வயிராகிய) ஆலமரத்தின் இலையும்; (நகிலாகிய) விளங்கும் கோங்கின் முகிழும், (கைகளாகிய) உயர்ந்த அழகு தங்கிய தாமரை மலரும், பொருந்தப் பெற்று; அற்புதப் புந்துணர்வல்லி நேர் பொன்னை கண்டு - கண்டோர்க்கு வியப்பை விளைவிக்கும் மலர்க்கொத்தையுடைய கொடியொன் றிருக்குமேயானால் அதனை ஒவ்வும் அழகுடையாளைக் கண்டு; அவன் காரணமாது என்று உன்னி ஓர்ந்தனன் - அவ்வாசிரியன் ''இவள் ஏதோ ஒரு ஏதுவை முன்னிட்டுப் பிறந்துள்ள பெண்'' என்று எண்ணி ஆராய்ந்தான். (எ.று)

முடிபு- பொன்னைக் கண்டு என்று உன்னி ஓர்ந்தனன்; உலகத் திலுள்ள வல்லி அதற்குரிய தளிரையும், இலையையும், அரும்பையும், மலரையும் பெற்றிருக்கும். இவ்வல்லி அங்ஙனமின்றி, மாவின்

Koviloor Digital Library

தளிரையும், ஆலின் இலையையும், கோங்கின் அரும்பையும், தாமரை மலரையும் பெற்றிருத்தலின் இதனை அற்புதவல்லி என்றனர்.

151. மாதுரு வுறுகுறி மதித்த றிந்தவ
னாதர வொடுமுடி யரசை நோக்கிநின்
கோதையை யார்கொலோ தோளிற் கொள்பவர்
ஓதுக வென்றலு முரைத்தன் மேயினான் 69

(இ.ள்) மாதுஉரு உறு குறி மதித்து அவன் அறிந்து - இந்நங்கையின் வடிவத்தில் காணப்பெறும் சிறந்த இலக்கணங்களை எல்லாம் ஆராய்ந்து அவ்வாசிரியன் உணர்ந்து கொண்டு; முடி அரசை ஆதரவொடு நோக்கி - முடி சூடிய மன்னனை விருப்பத்துடன் பார்த்து; நின்கோதையை தோளில் கொள்பவர் யார் ஓதுக என்றலும் - உன் மகளை தோளால் மணந்து கொள்பவர் யாவர் அதனைச் சொல்லுக என்று கூறலும்; உரைத்தல் மேயினான் - அவ்வரசன் சொல்லத் தொடங்கினான். (எ.று) கொல்-ஓ-அசைகள்.

முடிபு- அவன் மதித்து அறிந்து நோக்கி, கொள்பவர் யார்? ஓதுக என்றதும் (அரசன்) உரைத்தன் மேயினான்.

152. உணர்ந்தில னடியனே றொருநங் கோதைதன்
மணந்தனக் குரியவர் மனிதர் வானவர்
கணங்களு ளொருவரைக் கருத்திற் றேர்ந்துநீ
யிணங்குற வெனக்கிவ ணியம்பு கென்றனன் 70

(இ.ள்) அடியனேன் ஒரு நம் கோதை தன் மணந் தனக்கு உரியவர் உணர்ந்திலன் - அடியேன் ஒப்பற்ற நம் பெண்ணின் திருமணத்திற்கு உரியவர்களை அறிந்திலன்; மனிதர் வானவர் கணங்களுள் ஒருவரை கருத்தில் தேர்ந்து - மக்கள் கூட்டத்துள்ளும் தேவர் கூட்டத்துள்ளும் சிறந்த ஒருவரை உன் மனத்தால் ஆராய்ந்து; இவண் எனக்கு இணங்குற நீ இயம்புக என்றனன் - இப்பொழுது எனக்குப் பொருந்தும்படிச் சொல்லுக என்றான். (எ.று)

முடிபு- அடியனேன் உரியவரை உணர்ந்திலன்; நீ தேர்ந்து இணங்குற இயம்புக என்றனன்.

153. கொங்கவிழ் தொடையினாய் கூன்கொக் கன்றுவான்
கங்கையை யடைவது கடவு ளன்னமே

Koviloor Digital Library

மங்கையை யணைபவர் மனித ரல்லர்நஞ்
சங்கர னேயிவ டலைவ னென்றனன் 71

(இ.ள்) கொங்கு அவிழ் தொடையினாய் - மணம் விரியும் மாலையாய்!; வான் கங்கையை அடைவது கூன் கொக்கன்று கடவுள் அன்னமே - ஆகாய கங்கையைப் பெறுவது இம்மண்ணுலகத்திலுள்ள வளைந்த கொக்கன்று தேவ உலகத்திலுள்ள அன்னமே அதனைப் பெறும்; அதுபோல்; மங்கையை அணைபவர் மனிதர் அல்லர்; நம் சங்கரனே இவள் தலைவன் என்றனன் - இந்நங்கையைக் கூடவல்லவன் மக்கட் குழுவின்ரல்லர்; நமது சிவபெருமானே இவளுக்குக் கணவனாவான் என்று கூறினான். (எ.று)

முடிபு- தொடையினாய்! வான் கங்கையை அடைவது கொக்கன்று. கடவுள் அன்னமே (அதுபோல்) மங்கையை அணைபவர் மனிதரல்லர். சங்கரனே தலைவன் என்றனன்.

154. மாலுநான் முகனுநா டரிய வள்ளலிவ்
வேலவார் குழலினாட் கெளிய னோவென
வாலமார் மிடற்றினோ னன்பர் வேண்டிய
கோலமாய் நணுகுமீ துண்மைக் கூற்றென்றான் 72

(இ.ள்) மாலும் நான்முகனும் நாடு அரிய வள்ளல் - நெடுமாலும், பிரமனும் காணுதற்கரிய வள்ளலாகிய சிவபெருமான்; இஏலம்வார் குழலி னாட்டு எளியனோ என - இந்த மயிர்ச் சாந்தணிந்த நீண்ட கூந்தலையுடையாளுக்குச் சுலபமாய்க் கிடைப்பானோ என்று அரசன் கேட்ப; ஆலம் ஆர் மிடற்றினோன் அன்பர் வேண்டிய கோலம் ஆய் நணுகும் - நஞ்சு பொருந்திய கண்டத்தையுடைய இறைவன் தன்னிடம் அன்பைச் செலுத்தும் தொண்டர் விரும்பிய வடிவத்தை உடையனாய் வந்து பொருந்துவன்; ஈது உண்மைக் கூற்று என்றான் - இது மெய்ம்மையான மொழி என்று ஆசிரியன் உரைத்தான். (எ.று)

முடிபு- (அரசன்) நாடறிய வள்ளல் இக்குழலினாட்கு எளியனோ என; மிடற்றினோன் வேண்டிய கோலமாய் நணுகும் ஈது உண்மைக் கூற்று என்றான். (ஆசிரியன்)

155. இன்னண மரசனோ டியம்பி மாயை யாங்
கன்னியை விளித்தவள் கருத்தி ணங்குறச்
செந்நிலை தனையுய தேசித் தேகினான்
றன்னிகர் குருபரன் றனதி டத்தரோ 73

Koviloor Digital Library

(இ.ள்) தன்நிகர் குருபரன் - தனக்குத்தானே ஒப்பான ஆசிரியனாகிய மேலோன்; அரசனோடு இன்னணம் இயம்பி - வேந்தனுடன் இவ்வாறு கூறி; மாயை ஆம் கன்னியை விளித்து - மாயையாகிய மங்கையை அழைத்து; அவள் கருத்து இணங்குற - அவள் எண்ணித்திற்குப் பொருந்த; செந்நிலைதனை உபதேசித்து - உண்மையான நிலையை அருளிச் செய்து; தனது இடத்து ஏகினான் - தான் வாழுமிடத்திற்குச் சென்றான். (எ.று) அரோ - அசை.

முடிபு - குருபரன் இயம்பி விளித்து உபதேசித்து ஏகினான்.

156. குருவருண் மொழிநெறி கொண்டு மாயைதான்
வரவன வசைநகர் மதுகை நாதனைப்
பரவின ளருச்சனை பயின்று பூசனைக்
கருவிகண் முழுவதுங் கடைப்பி டித்தரோ 74

(இ.ள்) மாயைதான் குரு அருள் மொழிநெறி கொண்டு - மாயா தேவியானவர் ஆசிரியர் அருளிச் செய்த சொல்லின் வழியை மனத்துட் கொண்டு; பூசனை கருவிகள் முழுவதும் கடைப்பிடித்து - வழி பாட்டுக்குரிய பொருள்கள் முற்றிலும் குறைவறக் கொண்டு வர வனவசைநகர் மதுகை நாதனை அருச்சனை பயின்று பரவினள் - சிறந்த வனவசை நகரத்திலுள்ள மதுகேஸ்வரனை பூசனை செய்து வழிபட்டாள் (எ.று)

முடிபு - மாயை கொண்டு கடைப்பிடித்து பயின்று பரவினள் மூன்றாவது மாயை உற்பத்தி கதி முற்றிற்று

மூன்றாவது
மாயையினுற்பத்தி கதி முற்றும்

Koviloor Digital Library

நான்காவது

மாயை பூசை கதி

கதி கருதிய பொருள்

157. பதியை மேவுறுங் காதனெஞ் சகத்தினுட் பதித்து
மதுகை நாதனை வரன்முறை வரிவிழி மாயை
யுதய காலையிற் பூசைசெய் நாள்களு ளொநாள்
விதியை யோதுவன் குவிமனத் தவர் கொள விரித்து 1

(இ.ள்) வரி விழிமாயை - சிவந்த இரேகைகளையுடைய கண்ணினைப் பெற்றிருக்கும் மாயா தேவியானவள்; பதியை மேவுறும் காதல் நெஞ்சத்தினுள் பதித்து - தலைவனைப் பெறும் ஆசையை மனத்திடத்தே நிலையாய் வைத்துக் கொண்டு; மதுகை நாதனை வரன்முறை உதய காலையில் பூசை செய் நாள்களுள் - மதுகேசுவரனை தொன்று தொட்டுவரும் முறைப்படி சூரியன் உதிக்கும் காலத்திலே வழிபாடு செய்யும் நாள்களுள்; ஒரு நாள் விதியை குவிமனத்தவர் கொள விரித்து ஓதுவன் - ஒருநாள் அவள் பூசித்த முறையை (உலகப் பொருள்களில் செல்லாமல்) சுருங்கிய மனத்தையுடைய நல்லோர் அறிந்து கொள்ளும்படி விளங்கக் கூறுவன். (எ.று)

முடிபு - மாயை காதல் நெஞ்சகத்தினுட் பதித்து மதுகை நாதனை உதய காலையில் பூசை செய் நாள்களுள் ஒருநாள் விதியை குவிமனத் தவர் கொள விரித்து ஓதுவன்.

158. விதுயைச் சேய்மையிற் கண்டலர் குவளை கண் மெலிய
முதிர்விற் பூணிள முலையெழின் மாயைதன் முகமா
மதியைச் [1]சேர்தரு வரிக்கருங் குவளைகள் மலரக்
குதிரைத் தேரவ னெழுந்தனர் குணதிசைக் குன்றில் 2

(பா.ம்) [1]சார்தரு

(இ.ள்) விதுவை சேய் மையில் கண்டு அலர் குவளைகள் மெலிய - திங்களைத் தூரத்தே பார்த்து மலர்கின்ற குவளை மலர்களெல்லாம் கூம்பி வாட-வும்); முதிர்வில் பூண் இளமுலை எழில் மாயைதன் - மிகுந்த ஒளியாகிய அணியையுடைய இளைய நகிலைப் பெற்றிருக்கும் மாயையினது, முகமாம் மதியை சேர்தருவரிகரும் குவளைகள் மலர -

Koviloor Digital Library

முகமாகிய திங்களைச் சார்ந்துள்ள சிவந்த கோடுகளையுடைய (கண்களாகிய) குவளை மலர்கள் மட்டும் மலர்ச்சியடைய (விழிக்க), குதிரைத் தேரவன் குணதிசைக் குன்றில் எழுந்தனன் - பச்சைப் புரவியை யுடைய தேரோனாகிய சூரியன் கீழ்த்திசையிலுள்ள உதயமலையில் தோன்றினான். (எ.று)

முடிவு - குவளைகள் மெலிய மாயை முகமதியைச் சேர்தரு குவளைகள் மலர குதிரைத் தேரவன் குன்றில் எழுந்தனன். விது- சந்திரன்

159. **அனைய காலையி லன்னமென் தூவிபெய் யணை மேற்**
றனியண் மாமயில் போற்றுயின் றவடுயி தணந்து
வினையி னான்மணி மஞ்சனச் சாலையுண் மேவி
யினிய வாசநீ நாடினள் சேடிய ரேந்த 3

(இ.ள்) அனைய காலையில் - சூரியன் உதித்த அத்தகைய காலத்திலே, அன்னம் மென் தூவி பெய் அணைமேல் மாமயில் போல் தனியள் துயின்றவள் - அன்னப்பறவையின் மெல்லிய சிறகையிட்டுச் செய்யப்பெற்ற படுக்கையின்மேல் நீல மயில்போல் தனியாளாய் உறங்கியமாயை, துயில் தணந்து - உறக்கத்தினின்றும் நீங்கி, வினையினால் மலி மஞ்சன சாலையுள்மேவி - வேலைப்பாடுகளால் மிகுந்த நீராடும் மண்டபத்தை அடைந்து, சேடியர் ஏந்த இனிய வாச நீர் ஆடினள் - (நீராடுதற்குரிய பல பொருள்களைத்) தோழியர் ஏந்தி நிற்க, நறுமணம் பொருந்திய நீரிலே குளித்தாள். (எ.று)

முடிபு - அனைய காலையில் அணைமேல் துயின்றவள் துயில் தணந்து சாலையுள் மேவி சேடியர் ஏந்த நீர் ஆடினள்.

160. **விலைவ ரம்பறி யாமணிக் கோவை சூழ் விளிம்புக்**
கலைய ணிந்தொரு தலைமுலை மேலலங் கரித்தான்
முலையொ டுந்துகில் கண்ட நாள் முதற்தொடர்ந் தன்றோ
விலகு றுங்கலை வல்லவர் கடபடா மென்றல் 4

(இ.ள்) விலை வரம்பு அறியா மணி கோவை சூழ்விளிம்புகலை - விலையின் அளவு தெரியப் பெறாததும் மாணிக்கக் கோர்வை சூழ்ந்த கரையுடையதும் ஆகிய ஆடையை; அணிந்து ஒருதலை முலைமேல் அலங்கரித்தாள் - உடுத்திக்கொண்டு ஒப்பற்ற முன் தானையை நகிலின் மேல் அழகாய்ப் புனைந்து கொண்டாள் மாயை, இலகு உறும் கலை வல்லவர் முலையொடும் துகில் கண்டநாள் முதல் தொடர்ந்து அன்றோ கடம்படாம் என்றல் - விளங்குறும் தர்க்க நூல்வல்ல புலவர் இம்மாயை

Koviloor Digital Library

யினுடைய சிறந்த நகிலோடு இவள் அவற்றின் மேல் புனைந்த ஆடையைப் பார்த்த காலம் தொடங்கியல்லவா அந்நோந்ய அ பாவத் திற்குக் கடபடாம் என்று கூறத் தொடங்கியது. (எ.று)

முடிவு - (மாயை) கலை அணிந்து ஒருதலை முலைமேல் அலங்கரித்தாள், கலை வல்லவர் முலையொடும் துகில் கண்ட நாள் முதல் தொடர்ந்தன்றோ கடபடாம் என்றல். விலையின் அளவு அறிய முடியா ததும் மாணிக்கக் கோர்வை சூழ்ந்த கரையுடையதும் ஆகிய ஆடையை மாயை உடுத்திக்கொண்டு, அதன் சிறந்த முன்றானையை நகிலின் மேல் தரித்து அலங்கரித்தாள், அலங்கரித்து மென்? அவளுடைய சிறந்த நகிலுக்கும் அம்முன்றானைக்கும் அழகு முதலான ஏதாவதொரு வகையில் ஒற்றுமை இன்மையைக் கண்டறிந்த புலவர் அக்காலத்தி லிருந்து முலை போன்ற கடத்தையும், முன்றானையாகிய படத்தையும், அந்யோந்ய அபாவத்திற்கு உதாரணமாய் எடுத்தாளத் தொடங்கினர். அந்யோந்ய பாவம் இன்னதென்பதை ''அந்யோந்யாபாவம் தாதாத் மியத்தைப் பிரதியோகி (எதிர்மறை) யாகவுடைய அபாவம் எங்ஙனம்? கடம் படமன்று என்னும் தர்க்க பரிபாஷையால் அறிக. முன்றானையைக் காட்டிலும் முலை மிகச் சிறந்ததாதலின் அம்முலைக்கு உயர்பின் வழித்தாகிய ஒருவினை ஒடுச் சொல்லைக் (தொல்-சொல்-91) கொடுத்தார்.

161. **மணிய மைந்தபொற் பாதுகை யொருத்திமுன் வைப்பப்**
பிணிய விடிந்த செந் தாமரைப் பரங்கொடு பெயர்ந்தே
யணிய ணிந்திடு மண்டபத் தணைமிசை யமர்ந்தாள்
[1]பணிய ணிந்திடு மங்கையை ரடைந்தனர் பலரே 5

(பா.ம்) [1]பணிபுரிந்திடு

(இ.ள்) ஒருத்தி மணி அமைந்த பொன்பாதுகை முன்வைப்ப - ஒரு தோழி மாணிக்கம் பதித்த பொன்னாற் செய்த செருப்பினை முன்னே வைப்ப, பிணி அவிழ்ந்த செந்தாமரை பாதம் கொடு பெயர்ந்து - (மாயையானவள் அப்பொழுது) முறுக்கவிழ்ந்த செந்தாமரை மலர் போலுள்ள கால்களிலே (அவற்றைத்) தொடுத்துக் கொண்டு நடந்து சென்று, அணி அணிந்திடும் மண்டபத்து அணைமிசை அமர்ந்தாள் - ஆபரணங்களைப்புனைந்து கொள்ளும் அலங்கார மண்டபத்தேயுள்ள இருக்கையின் மேல் வீற்றிருந்தாள், பணி அணிந்திடும் மங்கையர் பலர்

Koviloor Digital Library

அமைந்தனர் - அணிகளால் அழகு செய்திடும் தோழியர் பலர் அவ் விடத்தைச் சார்ந்தனர். (எ.று) ஏ. அசை.

முடிவு - ஒருத்தி பாதுகை வைப்ப (மாயை) பதம் கொடு பெயர்ந்து மண்டபத்து அணைமிசை அமர்ந்தாள். மங்கையர் பலர் அடைந்தனர். பாதுகைக்கு மணி பதிக்கும் வழக்கம் உண்டென்பதை

மைதீர் பசும்பொன் மேன் யிண்ட மணிய முத்திச்
செய்த தெனினும் செருப்புத்தான் காற்கேயாம்
ஏந்திய செல்வத்த ராயினும் கீழ்களைச்
செய் தொழிலாற் காணப்படும் (நாலடி - 347)

என்னும் செய்யுளால் அறிக.

162. **மாரவேள் சிலை வளைந்திடப் பூட்டிய வண்டு**
நாரி யோர்தலை நெகிழ்த்துவிட் டெனவொரு நாரி
கார வாமலர்க் குழற்சடை கைபுனைந் தியற்றி
வீர வேனெடுங் கண்ணிதன் முதுகுற விடுத்தாள் 6

(இ.ள்) மாரவேள்சிலை வளைந்திட பூட்டிய வண்டு நாரி - மன்மதனாகிய வேள் தன் வில் வளையும்படி (இரண்டு பக்கங்களிலும்) கட்டிய வண்டாகிய கயிற்றை, ஓர் தலை நெகிழ்த்து விட்டென - வில்லின் கீழ்த்தலைப்பினின்றும் அவிழ்த்து விட்டாற்போல, ஒரு நாரி - ஒரு தோழியானவள், கார் அவாம் மலர்க் குழல் சடை கைபுனைந்து இயற்றி - கருமேகம் விரும்பும் மலரணிந்த கூந்தலைப் பின்னலாகக் கையால் அழகுபடுத்திச் செய்து, வீரவேல் நெடும் கண்ணிதன் முதுகுஉற விடுத்தாள் - பெருமிதமுடைய வேற்படை போன்ற நீண்ட கண்ணை யுடைய மாயையின் முதுகிலே பொருந்தத் தொங்கவிட்டாள்.

முடிவு - ஒருநாரி குழலைச் சடையாகப் புனைந்து, இயற்றி, கண்ணிதன் முதுகு உற ''வேள்சிலை நாரியை ஓர் தலை நெகிழ்த்து விட்டென'' விடுத்தாள்.

163. **பின்னும் வேணி வார்குழ**
லெனுங் கரியபே ரரவ
முன்ன மார்தரு சுடர்களை
யுமிழ்ந்திடு முறைபோற்

Koviloor Digital Library

கன்னி வாணுதன் மிசைக்
கதிர் பிறையொடு கவினப்
பொன்ன வாஞ்சுணங் கவிர்முலை
யொருத்திகை புனைந்தாள் 7

(இ.ள்) பொன் அவாம் சுணங்கு அவிர்முலை ஒருத்தி - பொன்னும் விரும்புகின்ற நிறம் படைத்த தேமலால் விளங்கும் நகிலையுடைய ஒரு தோழியானவள், பின்னும் வேணிவார் குழல் எனும் கரியபேர் அரவம் - பின்னப் பெற்ற சடை வடிவாகிய நீண்ட கூந்தல் என்னும் கரும் பெரும் பாம்பு, முன்னம் ஆர்தரு சுடர்களை உமிழ்ந்திடு முறைபோல் - முன்னே (சூரிய கிரகண காலத்தில்) உண்டசூரிய சந்திரராகிய கதிர்களை உமிழ்ந்து வைத்த வகையை ஒவ்வும்படி, கன்னிவாள் நுதல் மிசை - மாயையின் ஒளி பெற்ற நெற்றியின் மேல், கதிர் பிறையொடு கவின கைபுனைந்தாள் - சூரிய பிரபை என்னும் அணி, சந்திர பிரயை என்னும் அணியொடு விளங்கி அழகு செய்யும் படி அலங்கரித்தாள். (எ.று)

முடிபு - ஒருத்தி ''குழலெனும் அரவம் சுடர்களை உமிழ்ந்திடு முறை போல்'' கன்னி நுதன்மிசைக் கதிரானது பிறையொடு கவினப் புனைந்தாள். ஞாயிறும் திங்களும் சேர்ந்த அமாவாசையன்று சூரிய கிரகணம் வருதலின் பாம்பு இரண்டையும் ஆர்தலினாலே சுடர்களை என்று பன்மையாகக் கூறினார்.

164. ஓதி யாகிய வறன்மிசைச் சுவடுற வூர்ந்து
தீதி லாதவொண் சந்தனத் திலகவெண் மதிக்குப்
போது மோர்சிறு பாம்பென மயிர்வகிர்ப் பொருந்தச்
சோதி மாமணிச் சுட்டியொன் றொருத்தி தூக் கினளால்

(இ.ள்) தீது இலாத ஒள் சந்தனத் திலகவெண்மதிக்கு - களங்கமாகிய குற்றம் இல்லாத ஒளிபடைத்த சந்தனப் பொட்டாகிய வெண் திங்கள் விழுங்கற்கு, ஓதி ஆகிய அறல்மிசை சுவடு உற ஊர்ந்து போதும் ஓர் சிறு பாம்பு என - கூந்தலாகிய கரு மணலின் மேல் வடுப் பொருந்த நகர்ந்து செல்லும் ஒன்றாகிய சிறிய பாம்பு என்று சொல்லும்படி, ஒருத்தி - ஒரு தோழியானவள், சோதிமா மணிச் சுட்டியொன்று மயிர் வகிர்ப் பொருந்த தூக்கினாள் - ஒளிபெற்ற பெரிய மாணிக்கச் சுட்டியொன்றனை மயிரின் வாக்கிலே பொருந்தும்படித் தொங்கவிட்டாள் (எ.று)

Koviloor Digital Library

முடிவு - ஒருத்தி ''சிறு பாம்பென'' மயிர்வகிர்ப் பொருந்த சுட்டியொன்று தூக்கினள். மகரவாய் என்னும் அணியை நுதலில் பொட்டிற்கு மேல் அணிவதுண்டு. அம்மகரவாயை, அரவாகவும், நுதலிலணிந்த செம்பொட்டைச் சூரியனாகவும் கற்பித்துக் கொண்டு, ''எரிகதிர் மகரவாய் பொறித்த, திலகமேலிடத்துக் செங்கதிர் தொடர்ந்த சேயொளி யரவென நாற்றிய'' (ஆனைக்காப் - அகிலாண்ட நாயகி - 29) என்று பாடினாரும் உண்டு. சந்தனத் திலகத்தை அணிந்த நுதலாகிய வெண்மதிக்கு என்று கூறினும் பொருந்தும்,

சிறு கோட்டுக் குழவித் திங்கட்
கோணேர்ந் தாங்குச் சுறவிவர யமைத்த
சுரும்புகழ் சுடர் நுதல் (பெரும்பா - 383, 4-5)

165. வேன லம்பதி கொலைவிட மூட்டிய வெவ்வேன்
மான வஞ்சன எழுதிய விழிபொர வரலாற்
றான தன் பகைதனைத்துணை கொண்டுறுந் தகைபோற்
பான லஞ்செவி மிசையணிந் தனளொரு பாவை 9

(இ.ள்) வேனல் அம்பதி கொலைவிடம் ஊட்டிய வெவ் வேல்மான, வேனிற்காலத்தின் அழகிய தலைவனாகிய மன்மதனது கொல்லும் நஞ்சு தோய்க்கப் பெற்ற கொடிய வேற்படை போல; அஞ்சனம் எழுதிய விழி பொரவரலால் - மை பூசப்பட்ட கண்கள் (காதாகிய தன்னைத்) தாக்க வருதலால், அதன் பகைதனைத்தான் துணை கொண்டுறும் தகைபோல் - அக்கண்ணின் பகையைத்தான் துணைப் படையாக ஆக்கிக் கொண்டிருக்கும் தக்க செயல் போல் தோன்றும்படி, ஒரு பாவை பானல் அம் செவி மிசை அணிந்தனள் - ஒரு பிரதிமை போன்ற தோழியானவள் கருங்குவளை மலரை, காதின் மேல் அழகு பெறச் சூட்டினாள். (எ.று)

முடிபு - ''விழிவேல் மான பொர வரலால் (காதாகிய) தான் அதன் பகையைத் துணைகொண்டுறும் தகைபோல'' ஒரு பாவை பானலை (மாயையின்) செவிமிசை அணிந்தனள். இப்பானலை கன்னப்பூ வென்னுங் காதணி என்பர் சாமிநாதன் . (செந்தமிழ். பக்.300)

166. அடுத்து மாதவ மழிமினென் றனங்கவே டமக்கு
விடுத்த வேலையைக் கண்கடம் மேற்பழி விளம்பிற்

Koviloor Digital Library

[1]கொடுத்த வேண்மிசை நிநிந்தை கூறுதற்குவைத் திருத்தல்
கருத்து வாழ்தர வொருத்திபொன் னோலைகா தணிந்தாள் 10

(பா.ம்) [1]கொடுத்து

(இ.ள்) கண்கள் - விழிகளானவை, அடுத்த மாதவம் அழிமின் என்று அணங்கவேள் தமக்கு விடுத்த ஓலையை - முனிவர்களை அடைந்த பெரிய தவத்தை அழியுங்கள் என்று உருவில்லாத மன்மதன் தங்களுக்கு வரவிட்ட ஆணை எழுதிய ஓலையை, தம் மேல்பழி விளம்பின் - (கண்களாகிய தம்மேல்) யாராவது பழிச் சொல்லைக் கூறுவார் களேயானால், கொடுத்த வேள் மிசை நிந்தை கூறுதற்கு வைத்திருத்தல் கருத்து வாழ்தர - ஓலை வரவிட்ட, மன்மதன் மேல்பழி கூறச் செய்ததற்கு சான்றாக அவ்வோலையை வைத்திருத்தலை ஒத்துவிளங்க, ஒருத்தி பொன் ஓலை காது அணிந்தாள் - ஒரு தோழி பொன்னாற் செய்த ஓலைச் சுருள் போன்ற காதணியைக் செவியினிடத்தே அழகு பெறத் தரித்தாள். (எ.று)

முடிவு - கண்கள் ''அடுத்து அழிமின் என்று வேள் விடுத்த ஓலையை, பழிவிளம்பில் கொடுத்த வேள்மிசை நிந்தை கூறுதற்கு வைத்திருத்தல் கருத்து வாழ்தர, ஒருத்தி பொன் ஓலையைக் காதில் அணிந்தாள்.

167. **தன்னை நிந்தைசெய் வெண்ணகை மேற்பழி சார**
மன்னி யங்கது நிகரற வாழ்மனை வாய்தன்
முன்னி றந்திடு வேனென ஞான்றுகொண் முறைமை
என்ன வெண்மணி மூக்கணி ஒருத்திநின் றிட்டாள் 11

(இ.ள்) தன்னை நிந்தை செய் வெள் நகைமேல் பழிசார - (முத்தாகிய) தன்னைப் பழித்தலைச் செய்யும் வெண்மையான பற்களின் மேல் உலகத்தார் கூறும் பழிச்சொல் சேரும்படி, அங்கு அது மன்னி நிகர் அற வாழ் மனைவாய் தன்முன்- அங்கே அப்பல் நிலைப்பெற்று ஒப்பின்றி வாழ்ந்திருக்கும் வீடாகிய வாயின் முன், இறந்திடுவேன் என ஞான்று கொள் முறைமை என்ன - சாவேன் என்று கயிற்றினைக் கழுத்தில் கட்டிக்கொண்டு தொங்குதலைக் கொண்ட வகைமை போலும் என்று சொல்லும்படி, வெண்மணி மூக்கு அணி ஒருத்தி நின்றிட்டாள் -

Koviloor Digital Library

வெண்மையாகிய முத்துத் தொங்கும் மூக்கணியை ஒரு தோழி நின்று அணிவித்தாள். (எ.று)

முடிபு - "நிந்தைசெய் நகைமேல் பழிசார அது மன்னி வாழ் மனையாகிய வாய்முன் இறந்திடுவேன் என ஞான்று கொள் முறைமை என்ன" ஒருத்தி மூக்கணியை நின்று இட்டாள்.

168. **கற்றை யங்குழ னறுமலர்த் தொடையொடு கனமா**
யுற்ற ணங்குமென் நிலகுபூண் பிடித்ததை ஒப்ப
விற்ற யங்குவா ணுதலெழின் மாயைதன் மிடற்றிற்
பெற்ற டந்தகட் டணியொடு மடவரல் புனைந்தாள் 12

(இ.ள்) கற்றை அம் குழல் நறுமலர் தொடையொடு கனமாய் உற்று அணங்கும் என்று - திரட்சியான அழகிய கூந்தலானது மணமுள்ள மலர்மாலையோடு (கூடியுள்ளதால்) பாரமாய் உறுதலாலே (சுமக்கும் கழுத்து) வருந்துமென்று அதற்கு விளங்கும் பொற்பூண் பிடித்ததை ஒவ்வும்படி; ஒருமட வரல் - ஒரு இளமை வரப்பெற்ற தோழியானவள்; வில் தயங்குவாள் நுதல் எழில் மாயை தன்மிடற்றில் பொன் தடம் தகட்டு அணி புனைந்தாள் - வில்லைப் போல் தோன்றுகின்ற ஒளிபெற்ற நெற்றியையும், அழகையும் உடைய மாயை தன் கழுத்திலே பொன்னால் செய்யப்பட்ட அகன்ற தகட்டு வடிவான அணியை அணிந்தாள். (எ.று)

முடிபு - குழல் தொடையொடு (கூடி) கனமாய் உற்று (உற அணங்கும் என்று (கழுத்திற்குப்) பூண் பிடித்ததை ஒப்ப ஒருமடவரல் மாயை மிடற்றில் தகட்டணி புனைந்தாள். உற்று என்னும் வினை எச்சத்தை உறவென்று திரிக்க, அல்லது அணங்கும் என்பதை குழல் மிடற்றை அணங்கும் என்று குழலின் வினையாகக் கொண்டு குழல் உற்று அணங்கும் என்று முடித்துக் கொள்ளலாம். பொற்றடந் தகட்டணியைப் பட்டைக்காறை என்பர்.

169. **கன்னி யத்தம்வந் தினமணிக் கற்கட கத்தின்**
மன்னி யுற்றதற் புதமென வளைபல காக்க
வின்னு தற் கருங் கண்மட மாதுகை விளங்கப்
பொன்னி னற்கட கம்புனைக் தனளொரு பூவை 13

(இ.ள்) கன்னி அத்தம் வந்து - மாயையாகிய கன்னிகையின் கைகள் வந்து; கன்னி இராசியிலுள்ள அத்தமாகிய நட்சத்திரம் தன்

Koviloor Digital Library

இராசியை விட்டு வெளிவந்து; இனம் மணி கல் கடகத்தில் மன்னி உற்றது அற்புதம் என - சாதியான மாணிக்கக் கற்கள் பதித்த கங்கணத்தினுள் பொருந்தி இருப்பது வியக்கத்தக்க அழகாயுள்ளது என்று சொல்லும்படி கூட்டமான மாணிக்கக் கற்கள் போன்ற புனர்பூசம், பூசம் ஆயில்யம் என்னும் நட்சத்திரங்களைப் பெற்றிருக்கும் கடகராசியிலே வந்து நிலைபெற்றிருப்பது மிக - வியப்பு என்று சொல்லும்படி; வளைபல காக்க - (மாயையின் கையிலணிந்துள்ள) பல வளையல்கள் நழுவாமல் காக்க வேண்டி; ஒரு பூவை - ஒரு நாகணவாய்ப் பறவை போன்ற மொழிகளைக் கூறும் தோழியானவள்; வில் நுதல் கரும் கண் மடம் மாதுகை விளங்க பொன்னின் நல் கடகம் புனைந்தனள் - வில் போன்ற நெற்றியையும், கரிய விழியையும், இளமையையும் உடைய மாயையின் கைவிளங்கும்படிபொன்னாற் செய்த நல்ல கங்கணத்தை அணிந்தாள் (எ.று)

முடிபு - ''கன்னி அத்தம் வந்து கடகத்தில் மன்னி உற்றது அற்புதம் என'' வளைபல காக்க மாதுகை விளங்க ஒரு பூவை கடகம் புனைந்தனள். ''கன்னியத்தமென்பது முதல் உற்றது என்பது வரையில் சிலேடை என்பது கந்தசாமி ஐயர் உரை.

170. **ஆயு மின்சுவை தரச்செலுங் கையுட னடுத்து**
வாயி ணொண்கவின் காணிய மருவுறு மா போன்
மாயை தன்கையிற் பொற்கட கத்தின்முன் வனைந்தாள்
தூய செம்பவ ளங்களைக் கோத்தொரு தோகை 14

(இ.ள்) ஆயும் இன்சுவைதரச் செலும் கையுடன் அடுத்து - தெரிந்து கொள்ளப்பெறும் இனிய சுவையுடைய பொருள்களைக் கொடுத்தற்குச் செல்லுகின்ற கையோடு (பவளமாகிய தானும்) சென்று; வாயின் ஒண் கவின் காணிய மருவுறுமா போல் - இதழின் ஒளிபெற்ற அழகைக் காண்பதற்காகக் கையோடு கூடியிருத்தல் போல; ஒரு தோகை - ஒரு மயில் போன்ற தோழியானவள்; தூய செம் பவளங்களைக் கோத்து மாயை தன் கையில் பொன் கடகத்தின்முன் வனைந்தாள். நல்ல சிவந்த பவளங்களைக் கோர்த்து மாயையின் கையிலே பொன்னாற் செய்தணிந் துள்ள கங்கணத்தின் முன் அணிந்தாள். (எ.று)

முடிபு - ''ஆ யும் சுவை தரச் செல்லும் கையுடன் அடுத்து வாயின் கவினைக் காணிய மருவுறுமாபோல்'' ஒரு தோகை பவளங்களைக் கோத்து மாயை கையில் வனைந்தாள்.

Koviloor Digital Library

171. மங்கலத் தொழி லாடவர் மன [1]நடக்கிற்காக்
குங்கு மப்பெ பருஞ் சேற்றினைக் குறித்திடு கற்போன்
மங்கை யர்க் கொரு திலகமா கியவெழின் மாயை
கொங்கை யிற்புனைந் தனளொரு பெண்மணிக் கோவை 15

(பா.ம்) [1]நடத்திற்குக்

(இ.ள்) குங்குமம் பெரும் சேற்றினைக் குறித்து - (மாயையின் நகிலின் மேல் அணிந்துள்ள) குங்குமக் குழம்பாகிய மிக்க சேற்றினைக் கருதி; மங்கலத் தொழில் ஆடவர் மனம் நடக்கிற்கு ஆ இடுகல் போல் - திருமணத் தொழிலுக்குரிய இளைஞரது உள்ளம் அச்சேற்றில் காலூன்றி நடப்பதற்காகப் பதித்த வரிசையான கற்களைப் போல் விளங்கும்படி; ஒரு பெண் - ஒரு தோழியானவள்; மங்கையர்க்கு ஒரு திலகம் ஆகிய எழில் மாயை கொங்யையில் மணிக்கோவை புனைந்தனள் - பெண்களுக்கு ஒப்பற்ற திலகமாகிய அழகிய மாயாதேவியின் நகிலின் மேல் ஒன்பது மணிகளால் ஆகிய வடத்தினை அணிந்தாள். (எ.று)

முடிபு - ஆடவர் மனம் நடக்கிற்காக சேற்றினைக் குறித்து இடுகற்போல் (விளங்கும்படி) ஒரு பெண் மாயை கொங்கையில் மணிக் கோவை புனைந்தனள்.

172. பாயும் வெண்டிரைக் கருங்கட னிலச்சும பாம்பின்
ஆயி ரம்படங் களுந்திறை யிட்டன வனைய
மீயி லங்கொளி விரிமணி மேகலை வேய்ந்தாள்
மாயை மங்கைத னல்குலி னொருதிரு மடந்தை 16

(இ.ள்) பாயும் வெண்திரை கருங்கடல் நிலம் சுமை பாம்பின் ஆயிரம் படங்களும் திறை இட்டன அனைய - பரவும் வெண்மையான அலைகளையுடைய கருநிறமுள்ள கடலால் சூழப் பெற்ற உலகத்தைத் தாங்கும் ஆதிசேடனது ஆயிரம் படங்களும் (மாயை தன் அல்குலுக்குத் தோற்று) திறைப் பொருள் கொடுத்தாற் போல்; ஒரு திருமடந்தை - இலக்குமியைப் போன்ற ஒரு தோழியானவள்; மாயை மங்கை தன் அல்குலில் மீஇலங்கு ஒளிவிரி மணிமேகலை வேய்ந்தாள் - மாயை என்னும் பெயருடைய மங்கைப் பருவம் உடையாளின் அல்குலின் மேல் மேன் மேலும் விளங்கும் ஒளி விரியும் மாணிக்கத்தாலே ஆகிய மேகலையைத் தரித்தாள். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - ஒரு திருமடந்தை மாயை அல்குலில் ''பாம்பின் ஆயிரம் படங்களும் திறையிட்டன அனைய'' மணிகளாற் செய்த மேகலையை வேய்ந்தாள்.

173. **கறைய டிக்களி யானையின் வரவினைக் கண்டு**
மறுகி னுற்றவ ரிரிதர மணிமருங் கிடல்போல்
உறு[1]த வத்தின ரறிந்தன ரோடவொண் ணுதற்கு
நறும லர்ப் பதத் தணிந்தனள் சிலம்பொரு நங்கை 17

(பா.ம்) [1]த்வத்தவ

(இ.ள்) கறை அடிகளி யானையின் வரவினைக் கண்டு - உரல் போன்ற பாதங்களையும், மதக் களிப்பையுமுடைய யானையின் வருகையை அறிந்து; மறுகில் மற்றவர் திரிதர மணிமருங்கு இடல்போல் - தெருவிலே உள்ளவர் ஓடும்படி இரண்டு மணிகளை இரண்டு பக்கங்களிலும் அணிதல் போல; ஒரு நங்கை - ஒரு தோழியானவள்; ஒள் நுதற்கு நறுமலர்ப் பதத்து - ஒளிபெற்ற நெற்றியையுடையாளது மண முள்ள தாமரை மலர் போன்ற அடியில்; உறுதவத்தினர் அறிந்தனர் ஓடசிலம்பு அணிந்தனள் - மிக்க தவத்தையுடைய துறவிகள் (மாயை யின் வருகையை ஓசையால்) அறிந்து கொண்டு ஓட வேண்டிச் சிலம் பினைத் தரித்தாள். (எ.று)

முடிபு - ''யானையின் வரவினைக் கண்டு உற்றவர் இரிதரமணி மருங்கிலே இடல் போல'' தவத்தினர் அறிந்து ஓட ஒண்ணுதல் பதத்து ஒரு நங்கை சிலம் பணிந்தனள். ஒண்ணுதற்கு என்பதிலுள்ள நான்காம் வேற்றுமையை ஆறாம் வேற்றுமையாகத் திரித்துக் கொள்க.

174. **கூடை மென்மலர் மணத்தினா லறிந்ததைக் குறுகப்**
பாடும் வண்டினஞ் சூழ்தல்போ விளைஞர்கள் பரப்பத்
தேட ரும்பாரு ளனையவட் குறுநறுந் தேய்வைப்
பீடு றுங்குவி முலைக்கணிந் தனளொரு பேதை 18

(இ.ள்) கூடைமென் மலர் மணத்தினால் அறிந்து அதை குறுக பாடும் வண்டு இனம் சூழ்தல் போல் - மலர்க்கூடையினுள்ளே உள்ள மெல்லிய பூவினை வாசனையினால் தெரிந்து கொண்டு அதை அணுக வேண்டி இசைபாடும் வண்டின் கூட்டம் சுற்றித் திரிதலைப் போல; இளைஞர் கண் பரப்ப - (ஆடை யினுள்ளேயுள்ள நகிலை வாசனையால் அறிந்து அதை அணுக வேண்டி) மைந்தர் விழி சுற்றித் திரிய; ஒரு பேதை

Koviloor Digital Library

- ஒரு தோழியானவள்; தேடு அரும்பொருள் அனைய வட்கு பீடு உறும் குவிமுலைக்கு - தேடற்கரிய சிறந்த பொருள் போன்ற மாயையினது பெருமை பெறும் குவிந்த நகிலுக்கு; உறுநறும் தேய்வை அணிந்தனள் - மிக்க நறுமணமுள்ள சந்தனக் குழம்பைப் பூசினாள். (எ.று)

முடிபு - கூடை மலரை மணத்தினால் அறிந்து குறுக வண்டினம் சூழ்தல்போல், இளைஞர் கண்பரப்ப, பொருளனையவளது முலைக்கு ஒருபேதை தேய்வை அணிந்தனள். பொருளனையவட்கு என்பதிலுள்ள நான்காம் வேற்றுமையை ஆறாம் வேற்றுமையாகத் திரித்துக் கொள்க. வண்டுகள் மலரினை மணத்தால் அறிந்து செல்லுமென்பதை ''நாற்ற நாட்டத்து அறுகாற் பறவை'' (70) என்னும் புறநானூற்றாலறிக.

ஒப்பு -

செம்பொன் மலர்ந் திளையார்
கண்ணென்னுஞ் சீர்மணி வண்குழல் (சிந்தா-646)

175. நின்றன் விம்பமே ம ரனக்கெதி நின்றிவே றில்லை
யென்று கண்கொளத் தெளிந்தபே ராடியொன்றெடுத்தாள்
குன்றெ னுங்குவி முலையவ ளெதிர் கொடுங் குழைமேற்
சென்று சென்றுபா யரிமதர் மழைக்கணோர் தெரிவை 19

(இ.ள்) கொடும்குழை மேல் சென்று சென்று பாய் அரிமதர் மழைக்கண் ஓர் தெரிவை - வளைந்த குழையென்னும் காதணி மேல் அடிக்கடி போய் மோதுகின்ற செவ்வரி படர்ந்த செழித்த குளிர்ச்சியையுடைய விழிகளைப் பெற்றிருக்கும் தெரிவைப் பருவத்தளாய ஒரு தோழியானவள்; குன்று எனும் குவிமுலையவள் எதிர் - குவடு என்று சொல்லும் படித்திரண்ட நகிலினையுடைய மாயையின் முன்பு; நின்றன் விம்பமே நினக்குகெதிர் அன்றிவேறு இல்லை என்று கண்கொள - கண்ணாடியில் தோன்றும் உன்னுடைய எதிர் வடிவமே உனக்கு உவமையாகுமே யல்லாமல் உலகத்துள் வேறு எந்தப் பொருள்களும் உவமையாவதில்லை, என்று தன் கண்களா லேயே பார்த்துணரும்படி; தெளிந்த பேர் ஆடி ஒன்று எடுத்தாள் - தெளிவான பெரிய கண்ணாடி ஒன்றினை எடுத்து நிறுத்தினாள். (எ.று)

முடிபு - ஓர் தெரிவை குவிமுலையளெதிர், நின் விம்பமே நினக்கு எதிர் அன்றி வேறு இல்லை என்று கண் கொள ஆடி ஒன்று எடுத்தாள். மாயாதேவிக்கு எல்லா அலங்காரங்களும் செய்து முடித்து சிறந்த

Koviloor Digital Library

உவமையலங்காரம் செய்யக்கருதி ஒப்புமைப் பொருள் தேடிக் காணாமையால் அவளுடைய பிரதி பிம்பத்தையே உவமையாக்கினள்.

176. **வீர வேள்வளை யாதசெங் கரும்பவன் வில்லி**
னாரி மேலிடா மலர்மறு விலாநகை மதியங்
காரு றாதமின் கடற்பிற வாதவின் னமுதம்
வேரி லாதபூங் கொடியென விளங்கினண் மாயை 20

(இ.ள்) மாயை - இங்ஙனம் அலங்காரம் செய்வித்துக் கொண்ட மாயா தேவியானவள்; வீரவேள் வளையாத செங்கரும்பு - பெருமிதமுடைய மன்மதன் (உலகத்தை மயக்கி வெல்ல) இன்னும் வில்லாக வளைக்கப்பெறாத சிவந்த கரும்பு போலவும்; அவன் வில்லின் நாரிமேல் இடாமலர் - அவன் தனது வில்லின் நாணியின்மேல் வைத்துச் செலுத்தப் பெறாத பூக்களைப் போலவும்; அன்றியே மன்மதனது வில் நாரியாகிய வண்டுமேல் பொருந்தாத புதுமலர் போலவும் சண்பக மலர் போலவும், மறு இலா நகை மதியம் - களங்கமில்லாமல் ஒளியே பெற்றுள்ள திங்கள் போலவும்; கார் உறாதமின் - கரிய மேகத்தில் தோன்றாத மின்னல் போலவும், கடல் பிறவாத இன் அமுதம் - திருப்பாற்கடலில் தோன்றாத இனிய அமிழ்தம் போலவும்; வேர் இலாத பூகொடி என - வேர் இல்லாத மலர்க்கொடி போலவும்; விளங்கினள் - பொலிவுப் பெற்றுத் தோன்றினாள். (எ.று)

முடிபு - மாயை செங்கரும்பு என, மலர் என, மதியென, மின் என, அமுதம் என, பூங்கொடி யென விளங்கினள்.

177. **மாத ரிவ்வகை யணியலு மதுகைநா ய கன்றன்**
பாத தாமரை யருச்சனைப் பொருள்கள்பற் பலவும்
நீதி யாலமைந் தனவினி நிகரிலெம் பிராட்டி
போது வா, யென வொருமட மாதெதிர் புகன்றாள் 21

(இ.ள்) மாதர் இ வகை அணியலும் - தோழிர் இவ்வகை அழகு செய்தவுடனே; ஒரு மடமாது - ஒரு இளமை வாய்ந்த தோழி முன்வந்து; நிகர்இல் எம்பிராட்டி - இணையற்ற எமது தலைவியே! மதுகை நாயகன் தன் பாத தாமரை அருச்சனை பொருள்கள் பல்பலவும் நீதியால் அமைந்தன - மதுகேசுவரனது திருவடித் தாமரையின் வழிபாட்டுக்குரிய பொருள்கள் எல்லாம் முறைமையால் தயாரிக்கப்பட்டன; இனி போதுவாய் என எதிர்புகன்றாள் - இனிமேல் வழிபாட்டுக்குப் புறப்படுவாயாக என எதிரே கூறினாள். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - மாதர் அணியலும், ஒரு மடமாது பிராட்டியின் எதிரே (சென்று) நாயகன்றன் அருச்சனைப் பொருள்கள் பலவும் அமைந்தன, இனிப் போதுவாய் எனப் புகன்றாள்.

178. **மயிலெ முந்தென வெழுந்தனள் கோமகள் வாழ்த்திக்**
குயிலெ ழுந்தென வெழுந்தன மடந்தையர் குழாங்கள்
துயிலெ ழுந்தென வெழுந்தன நூபுரத் துழனி
வெயிலெ ழுந்தென வெழுந்தன மணியணி விளக்கம் 22

(இ.ள்) கோமகள் மயில் எழுந்தென எழுந்தனள் - அரசன் மகளாகிய மாயை மயில் புறப்பட்டாற் போலப் புறப்பட்டாள்; மடந்தையர் குழாங்கள் குயில் எழுந்தென வாழ்த்தி எழுந்தன - தோழியர் கூட்டங்கள் குயிலோசை எழுந்தாற்போல் வாழ்த்திக் கொண்டு புறப்பட்டனர்; மணிஅணி விளக்கம் வெயில் எழுந்தென எழுந்தன - மணிகள் பதித்துச் செய்யப் பெற்ற நகைகளின் ஒளிகள், ஞாயிற்றின் ஒளி எழுந்தாற்போல எழுந்தன; நூபுரம் துழனி துயில் எழுந்தென எழுந்தன - அப்பெண்களின் சிலம்போசைகள் (வெயிலெழுந்தவுடன்) உறக்கத்தி னின்று எழுந்தாற்போல எழுந்து ஒலித்தன (எ.று)

முடிபு - கோமகள் மயிலெழுந்தென எழுந்தனள்; குழாங்கள் குயிலெழுந்தென வாழ்த்தி எழுந்தன, அணி விளக்கம் வெயிலெழுந் தென எழுந்தன, துழனி துயிலெழுந்தென எழுந்தன. குயில் - ஆகு பெயர்.

179. **பொன்னி லங்கிய சிவிகை முன்கொணர்ந் தனர்பொறுப்**
போர்
மன்னி யங்கதை யேறினள் மதர்விழி மாயை
சின்னம் வெண்பணி லம்பணை தண்ணுமை திமிலை
முன்னி ரைந்தன மதியெழக் கடன் முழங்குதல் போல் 23

(இ.ள்) பொறுப்போர் பொன் இலங்கிய சிவிகை முன்கொணர்ந் தனர் - சிவிகையைத் தாங்கிச் செல்வோர் பொன்னால் செய்யப் பெற்ற விளங்கிய கடகத் தண்டென்னும் பல்லக்கினைமாயையின் முன் கொண்டு வந்து வைத்தனர்; மதர்விழி மாயை அங்கு அதை மன்னி ஏறினள் - மகிழ்ச்சி பொருந்திய கண்களைப் பெற்றிருக்கும் மாயை, அப்பொழுது அச்சிவிகையில் மனம் பொருந்தி ஏறி வீற்றிருந்தாள். மதிஎழகடல் முழங்குதல்போல் - முழுத் திங்கள் உதிக்க கடல் ஒலித்தலைப் போல, சின்னம் வெண் பணிலம் பணை தண்ணுமை

Koviloor Digital Library

திமிலை முன் இரைந்தன - திருச்சின்னமும் வெண்மையானச் சங்கும் முரசும் மத்தளமும் பம்பையும் அவள் முன்னே ஒலித்தன. (எ.நு)

முடிபு - பொறுப்போர் சிவிகை கொணர்ந்தனர், மாயை மன்னி ஏறினள், ''மதிளழ கடல் முழங்குதல் போல், சின்னம் - பணிலம், பணை, தண்ணுமை, திமிலை இரைந்தன.

180. **ஆன்றி ரட்டுறுங் கண்ணன்வாய்க் குழலிஃ தணிபூண்**
மான்றி ரட்டுறு மெனக்குழ லூதினர் மலர்விற்
கோன்றி ரட்டிய வமுதனை யாண்முனங் குறுகி
மூன்றி ரட்டிய முகமுடை முருகனு முருக 24

(இ.ள்) கண்ணன் வாய் குழல் ஆன்திரட்டுறும் - கிருஷ்ணனது வாயினால் ஊதப் பெற்ற புல்லாங்குழலானது ஆக்களை ஒன்று சேர்ப்பதாகும்; இஃது அணிபூண்மான் திரட்டுறும் என - இப்புல்லாங்குழலோ நகைகளைப் பூண்ட மான்விழி போன்ற விழி படைத்த பெண்களை எல்லாம் ஒன்ற சேர்க்கும் என்று கண்டார் கூறும்படி; மலர்வில் கோன் திரட்டிய அமுதனையாள்முனம் குறுகி - பூவை வில்லாகவுடைய மன்மதனாலே திரட்டி எடுக்கப்பட்ட அமிழ்தத்தை ஒத்த மாயா தேவியின் முன்னர் சிலர் அணுகி நின்று, மூன்று இரட்டிய முகம் உடைய முருகனும் உருக குழல் ஊதினர் - மூன்றை இரட்டித்தலால் ஆகிய ஆறுமுகத்தையுடைய, முருகப் பெருமானும் (பன்னிரண்டு செவியாற் கேட்டு) உருகும்படி புல்லாங்குழலை ஊதினர் (எ.று)

முடிபு - ''கண்ணன் வாய்க்குழல் ஆன்றிரட்டுறும், இஃது மான்திரட் டுறும் என'' (சிலர்) அமுதனையாள் முனம் குறுகி முருகனும் உருக குழல் ஊதினர். மன்மதன் தன் அம்புகளைத் தேவர் மேற் செலுத்த மலர் வில்லும், மக்கள் மேற் செலுத்தக் கரும்பு வில்லும், இராக்கதர் மேற் செலுத்த இரும்பு வில்லும் பெற்றுள்ளான் என்றும், மலர் வில்லிற்குக் காம கண்டம் என்று பெயருண்டென்றும், ''கதியுடைத் தேவர் மேற்பூவில் மானுடரின் மேற் கருப்புவில் இராக்கதரின் மேற் காமுறு கருப்புவில்'' என்று ஆசிரிய நிகண்டும், ''கயக்க நின்ற பூவின் மிக்க நாமகண்டங் கன்னல் வில் இயக்கமான பார வில்லெடுத்து மொய்ம்பிலேந்தியே'' (காமதக என்று கந்தபுராணமும் கூறுவதையறிக. மன்மதனுக்குப் புஷ்ப தன்வா'' என்று வடமொழியில் ஒரு பெயருண்டு. சங்கரர் சௌந்தர் யலகரி ஆறாம் சுலோகத்தில் கூறியுள்ளார்.

Koviloor Digital Library

181. வயங்கு மாயையங் கரும்பினி ற்றாழ்ந்தவர் மாவி
னுயர்ந்த மாதரா ரூற்றிருந் தொழுகுகண் மலரை
நயந்து சூழ்தரு மளியினண் ணினர்பிறர் காலா
வியங்கு மாதிரு புடையினு மிடையற வீண்டி 25

(இ.ள்) வயங்கு மாயை அம் கரும்பினில் தாழ்ந்தவர் மாவின் உயர்ந்த மாதரார் - விளங்குகின்ற மாயை என்னும் அழகிய கரும்பினின்றும் அழகு முதலானவற்றில் தாழ்ந்தவரும் திருமகளைக் காட்டிலும் உயர்ந்தவருமாகிய மகளிர், ஊற்று இருந்து ஒழுகுகண் மலரை நயந்து சூழ்தரும் அளியில் - கசிந்திருந்து ஒழுகும் தேனையுடைய பூக்களை விரும்பிச் சுற்றும் வண்டுகள் போல, பிறர்காலால் இயங்கு மாது இருபுடையினும் இடையற ஈண்டி நண்ணினர் - சிவிகையைச் சுமப்போராகிய பிறருடைய காலால் நடக்கும் மாயையினுடைய இருபுறத்தும் இடைவெளியில்லாமல் நெருங்கிச் சூழ்ந்தனர். (எ.று)

முடிபு - மாயையிற் தாழ்ந்தவரும் மாவின் உயர்ந்தவருமாகிய மாதரார் ''மலரைச் சூழ்தரும் அளியில்'' மாது இருபுடையினும் ஈண்டி நண்ணினார்.

182. வேள ளித்தனன் றன்குடை யெனக்குடை விதிர்க்கும்
வாளெ னப்பிறழ் மதர் நெடுங் கண்ணிபான் மருவக்
காளமொத்தகண் மடந்தையர் பலரிளங் கமுகின்
பாளை யொத்தவெண் கவரிவீ சினரிரு பாலும் 26

(இ.ள்) விதிர்க்கும் வாள் என பிறழ் மதர் நெடும் கண்ணிபால் -அசைக்கப்பெறும் வாட்படை போல இடம் வலமாய்ப் பிறழ்கின்ற மகிழ்ச்சியைப் பெற்றிருக்கும் நீண்ட விழியையுடைய மாயையினிடத்தே, வேள் தன் குடை அளித்தனன் என குடை மருவ - மன்மதன் தன் திங்களாகிய தனது குடையினை இவளுக்குக் கொடுத்தான் என்று சொல்லும்படி வெண்குடை, பொருந்தி விளங்க, காளம் ஒத்தகண் மடந்தையர் பலர் இருபாலும் இளம்கமுகின் பாளை ஒத்த வெண்கவரி வீசினர் = நஞ்சு போன்ற விழியைப் பெற்றிருக்கும் தோழியர் பலர் மாயையின் இரு பக்கத்திலும் இளைய கமுகம் பாளையை ஒத்த வெண் சாமரையை வீசினார். (எ.று)

முடிபு - கண்ணிபால் குடை மருவ, மடந்தையர் பலர் இருபாலும் கவரி வீசினர்.

Koviloor Digital Library

183. காம வெந்தழன் மூட்டல்போற் கடிமலர்ச் சிவிறி
தாம சைந்தன பொய்கணை சொரிந்துவிற் றடக்கைக்
[1]கோம கன்றிருந் திழையுள மறிதல்போற் குறுகிப்
பூம டந்தையை வென்றவர் பூமழை பொழிந்தார் 27

(பா.ம்) [1]கோமதன்

(இ.ள்) காமம் வெய்தழல் மூட்டல் போல் கடிமலர் சிவிறிதாம் அசைந்தன - காமமாகிய கொடிய தீயினை வளர்த்தலைப் போல மணமுள்ள பூக்களால் செய்த விசிறிகள் பல வீசப் பெற்றன, வில்தடம் கை கோமான் பொய்க்கணை சொரிந்து திருந்திழை உளம் அறிதல் போல் - கரும்பு வில்லினை அகன்றகையிலேந்திய அரசனாகிய மன்மதன் பொய்யாக மலரம்புகளைச் சொரிந்து மாயையின் மனக் கருத்தைத் தெரிந்து கொள்ளுதல் போல, பூமடந்தையை வென்றவர் குறுகி பூமழை பொழிந்தார்- மலரில் வாழும் திருமகளை அழகால் வென்ற தோழியர் மாயையைக் கிட்டி மலர்களை மழைபோலச் சொரிந்தார்கள். (எ.று)

முடிபு - காமத்தழலை மூட்டல்போல் சிவிறிகள் அசைந்தன, ''கோமகன் பொய்யாகக் கணை சொரிந்து திருந்திழை உளம் அறிதல்போல்'' வென்றவர் குறுகி பூமழை பொழிந்தார்.

184. பாகு வெள்ளிலை சந்தனங் குங்குமம் பளித
மோகை மான்மதம் வண்டிமிர் நறுமல ரொலியல்
பேர்கெ ழும்பணிப் பெட்டிமென் றுகிலுடைப் பேழை
தோகை மார்பலர் [1]மருங்கினிற் சுமந்துபோ யினரால் 28

(பா.ம்) [1]மருங்கிறச்

(இ.ள்) தோகைமார்பலர் - மயில் போன்ற தோழியர் பலர், பாகு வெள்ளிலை சந்தனம் குங்குமம் பளிதம் ஓகை மான் மதம் வண்டுஇமிர் நறுமலர் ஒலியல் பேர் கெழும் பணிப்பெட்டிமென்துகில் உடை பேழை - பாக்கும் வெற்றிலையும், சந்தனக் குழம்பும், குங்குமக் குழம்பும், பச்சைக் கற்பூரக் கலவையும், உவகையைத்தரும் கந்தூரிக் குழம்பையும், வண்டுகள் மொய்க்கும் மணமுள்ள மலர்மாலையும் பெருமை பொருந்திய நகைகளை வைக்கும் பெட்டியும், மென்மையான ஆடைகளைப் பெற்றிருக்கும் பெட்டியும் ஆகிய இவற்றினை, மருங்கினில் சுமந்து போயினர் - இடையிலே தாங்கிக் கொண்டு சென்றார்கள். (எ.று) ஆல் - அசை.

Koviloor Digital Library

முடிபு - தோகை மார் பலர் பாகு வெற்றிலை முதலானவற்றை மருங்கினில் சுமந்து போயினர்.

185. கொங்கை யங்குவி முகிழ்விழிக் கயலிதழ்க் குமுத
மங்கை யம்புய முந்தியஞ் சுழியிவை யடுத்துப்
[1]பொங்கு றுங்கவி னீர்பெரு காற்றினைப் புரையு
மங்க லந்திகழ் வுறுமணி மாளிகை மறுகு 29

(பா.ம்) [1]பொங்கு றுங்கவி னீர்பெரு காற்றினை

(இ.ள்) மங்கலம் திகழ்வுறு மணி மாளிகை மறுகு = நன்மையான செயல்களே விளங்குகின்ற மணிகள் பதித்த மன்னர் வீடுகளையுடைய (மாயை செல்லும்) வீதி, கொங்கை அம் குவிமுகிழ் - நகிலாகிய அழகிய குவிந்த தாமரை அரும்பும், விழிகயல் - கண்களாகிய கயல் மீன்களும், இதழ் குமுதம் - வாயாகிய ஆம்பல் மலரும், அம்கை அம்புயம் - அழகிய கைகளாகிய தாமரை மலர்களும், உந்தியம்சுழி இவை அடுத்து - கொப்பூழாகிய அழகிய நீர்ச்சுழியும் ஆகிய இவைகளெல்லாம் பொருந்தி, பொங்குறும் கவின் நீர்பெருகு ஆற்றினை புரையும் - மேலும், மேலும் மிடுகின்ற அழகாகிய தண்ணீர் பெருக்கெடுத்தோடும் ஆற்றினை ஒத்து விளங்கும். (எ.று)

முடிபு - மறுகு கொங்கை முகிழும் விழிக்கயலும் இதழ்க் குமுதமும் கையம்புயமும் உந்தியும் சுழியும் ஆகிய இவையடுத்து கவினாகிய நீர் பெருகும் ஆற்றினைப் புரையும். மாளிகை - அரசர் வீடு, "சாலை மாளிகை பவநம் கோயிற், குலமும் மன்னவரில்லாக் கூறுவர்" என்பது திவாகரம் மாயை, பெண்களுடன் செல்லும் வீதி தோற்றத்தால் ஆற்றினை ஒத்தது என்றார். அடுத்த செய்யுளில் ஒலியால் கடலினை ஒக்கும் என்பர்.

186. திங்கள் வாணுதன் மடந்தையர் செஞ்சிலம் பொலியுஞ்
சங்கி னோடணி கலன்களின் சிற்றொலி தாழுங்
கொங்கு லாமலர்த் தொடையளி யிசைகளுங் குழுமிப்
பொங்கு மாழியிற் பஃறுளி பெருகுதல் போன்று 30

(இ.ள்) திங்கள் வாள் நுதல் மடந்தையர் செம் சிலம்பு ஒலியும் - மதிபோன்ற ஒளிபடைத்த நெற்றியைப் பெற்றிருக்கும் பெண்கள் (நடந்து செல்வதால் உண்டாகிய) செம் பொற் சிலம்போசையும், சங்கினோடு அணிகலன்களின் சிறு ஒலிதாழும் - வளையல்களுடன் ஏனைய

Koviloor Digital Library

நகைகளின் சிற்றோசைகளும், கொங்கு உலாம் மலர்தொடை அளிஇசைகளும் குழுமி - மணம் வீசுகின்ற பூக்களால் ஆகிய மாலைகளில் மொய்க்கும் வண்டின் ஓசைகளும் ஒன்றாகச் சேர்ந்து, பல்துளி பெருகுதல் போன்று - பலநீர்த் துளிகள் ஒன்று சேர்ந்து (பெருவெள்ளமாய்ப்) பெருகுதல்போல் பெருகி, ஆழியில் பொங்கும் - கடல் ஓசையைப் போல மிகுந்து ஒலிக்கும். (எ.று)

முடிபு - சிலம்பொலியும், கலன்களின் சிற்றொலியும், அளியிசைகளும், குழுமி பல்துளி பெருகுதல் போன்று ஆழியில் பொங்கும்.

187. **துன்று பெண்படை சூழ்வர மாயையந் தோகை**
வென்றி யங்கனன் மழுவினோன் விழியினால் வேளைக்
கொன்ற தென்னெனக் கேட்பமென் றுளவலி கொண்டு
சென்று றுஞ்செய லென்னவத் தெருவிடைச் சென்றாள் 31

(இ.ள்) மாயை அம்தோகை - அழகிய மயிலை ஒத்த மாயாதேவி, துன்றுபெண்படை சூழ்வர - நெருங்கிய பெண்களாகிய படை வீரர் தன்னைச் சுற்றிவர, வென்றி அம்கனல் மழுவினேன்- வெற்றியையுடைய அழகிய நெருப்பு வடிவாகிய மழுவை யேந்திய சிவபெருமானைக் (கிட்டி); விழியினால் வேளை கொன்றது என் என கேட்பம் என்று உளவலி கொண்டு சென்றும் செயல் என்ன - நெற்றிக் கண்ணினால் மன்மதனைக் கொன்றதற்குக் காரணம் என்னை என்று கேட்போம் என்று எண்ணி மனத்தில் வலிமை கொண்டு போகும் செயலினைப் போல, அத்தெருவிடை சென்றாள் - அத்தெருவின் கண்ணே போயினாள். (எ.று)

முடிபு - தோகை படை சூழ்வர ''மழுவினோன் வேளைக் கொன்றதென் என கேட்பம்'' என்று வலிகொண்டு சென்றுறுஞ் செயலென்வனத் தெருவிடை சென்றாள்.

188. **அரிமதர் மழைக்கணல் லரிவை தன்புடை**
வருமட வரலியர் வனப்புக் காண்டலும்
எரிபுரை விழியரி யேறு போல்பவர்
கரிநுகர் வெள்ளிலங் கனியை ஒத்தனர் 32

(இ.ள்) அரிமதர் மழைக்கண் நல் அரிவை தன் புடை - சிவந்த கோடுகளையும், மகிழ்ச்சியையும், குளிர்ச்சியையும் பெற்றுள்ள

Koviloor Digital Library

விழிகளைப் பெற்றிருக்கும் நல்ல மாயையின் இரு பக்கங்களிலும் வரும், மட வரலியர் வனப்பு - சூழ்ந்து வரும் பெண்களுடைய அழகினை, எரிபுரைவிழி அரி ஏறு போல்பவர் காண்டலும் - நெருப்பினை ஒத்த கண்களைப் பெற்றிருக்கும் ஆண்சிங்கம் போன்ற இளைஞர்களெல்லாம், கரி நுகர் வெள்ளிலம் கனியை ஒத்தனர் - யானைத்தீயென்னும் நோயினால் பற்றப்பட்ட விளாம்பழத்தை ஒத்து உள்ளீடு அற்றனர். (எ.று)

முடிபு - அரிவை தன்புடை வரும் மடவரலியர் வனப்பை ஏறு போல் பவர் காண்டலும் கரிநுகர் வெள்ளிற்கனியை ஒத்தனர். வெள்ளியம் என்பதில் அம் சாரியை.

189. இடையொரு சுற்றுவா னுதல்சற் றேழையர்
படைவிழி சற்றுவாய்ப் பவளஞ் சற்றிணைக்
குடமொரு சற்றிவண் கொள்ளை கொள்ளநம்
புடைபெய ரறிவெலாம் போயிற்றே என்பார் 33

(இ.ள்) ஏழையர் இடை ஒரு சுற்று வாள் நுதல் சற்று படை விழிசற்று வாய் பவளம் சற்று இணைகுடம் ஒரு சற்று இவண் கொள்ளை கொள்ள - இப்பெண்களுடைய நுசுப்பு ஒரு சிறிதும் ஒளிபெற்ற நெற்றி ஒரு சிறிதும் வாட்படை போன்ற கண்கள் ஒரு சிறிதும் வாயாகிய பவளம் ஒரு சிறிதும், இரண்டாகிய குடம் போன்ற நகில் ஒரு சிறிதும், இப்பொழுது கொள்ளையடித்துக் கொண்டபடியால், நம்புடை பெயர் அறிவு எலாம் போயிற்றே என்பார் - நம்மிடத்தே பொறிகளின் வழியாய் இயங்குகின்ற எல்லா அறிவுகளும் போய்விட்டன. (என்று வருந்துவர் இளைஞர்), (எ.று)

முடிபு - (இளைஞர்) நம் அறிவெலாம் ஏழையருடைய இடை ஒரு சற்றும், நுதல் சற்றும், விழிசற்றும், வாய் சற்றும் குடம் சற்றும், கொள்ளை கொள்ள போயிற்றே என்பார்.

190. இனத்தியல் பாமறி வென்ப துண்மையே
மனத்துயர் செயுமயன் மாற்று நீறு தா
னனிச்சமெல் லடியினார் நுதல டுத்தலும்
பனித்துடல் வெதும்புமால் படுத்த லாலென்பார் 34

(இ.ள்) மனத்துயர் செயும் மயல் மாற்றும் நீறுதான் - நெஞ்சிற்குத் துன்பத்தை உண்டாக்கும் காம மயக்கத்தை ஒழிக்கின்ற விபூதியாகிய

Koviloor Digital Library

ஒன்று, அனிச்சம் மெல் அடியினார் நுதல் அடுத்தலும் - நற வம்பூப் போன்ற மெல்லிய பாதங்களையுடைய பெண்களது நெற்றியைப் பொருந்திய அளவிலே, உடல் பனித்து வெதும்பும் மால் படுத்தலால் - உடல் நடுங்கி வெப்பம் அடைவதற்கு ஏதுவான காம மயக்கத்தை உண்டாக்கிய காரணத்தால், இனத்து இயல்பாய் அறிவு என்பது உண்மையே - திருவள்ளுவர் ''அவரவர் சேர்ந்திருக்கும் கூட்டத்தினது இயல்பினை உடையதாம் அம்மக்களது அறிவு'' என்று கூறுவது வாய்மையே, என்பார் - என்று இளைஞர் கூறுவாராயினர். (எ.று)

முடிபு - மயல் மாற்றும் நீறு அடியினார் நுதலடுத்தலும் மால் படுத்தலால் (திருவள்ளுவர்) அறிவு இனத்தியல் பாம் என்பது உண்மையே என்பார். (ஆடவர்); அனிச்சம்-ஆகுபெயர். அனிச்சத்திற்கு நறவம் என்ற ஒரு பெயர் உண்டு. ''நறவஞ் சுள்ளி யருப்பல் மனிச்சம்'' என்பது திவாகரம். இங்ஙனமே ''செவ்வி நுதலில் திருநீற்றுப் புண்டரம் வவ்வி மகளிர் மனங்கவற்ற'' (குலோ-உலா) என்றனர் ஒட்டக்கூத்தர்.

191. **தொல்லைநஞ் சடர்துயர் சொல்லக் காத்தவன்**
வல்லிபங் குடையருண் மதுகை நாயகன்
செல்லுமங் கையர்விழி நஞ்சு செய்வதுஞ்
சொல்லுது மவனொடு தொழுதுநா மென்பார் 35

(இ.ள்) தொல்லை நஞ்சு அடர் துயர் - பழைய காலத்திலே பாற்கடலிலே தோன்றிய விஷமானது வருத்திய துன்பத்தினை, சொல்லக் காத்தவன் வல்லி பங்கு உடை அருள் மதுகை நாயகன் - முறையிட்டுக் கொள்ளக் காப்பாற்றியவன் கொடி போன்ற உமையை இடப்பாகத்திலே உடைய கருணை நிரம்பிய மதுகேஸ்வரன் அல்லவா? (ஆகையால்); செல்லும் மங்கையர் விழி நஞ்சு செய்வதும் - மாயையோடு போகும் பெண்களுடைய கண்களாகிய விஷம் செய்கின்ற துன்பத்தையும், நாம் தொழுது அவனொடு சொல்லுதும் என்பார் - இளைஞராகிய நாம் வணங்கி அவ்விறைவனுடன் சொல்லுவோம் என்பாராயினர். (எ.று)

முடிபு - தொல்லை நஞ்சு அடர்துயரை சொல்லக் காத்தவன் மதுகை நாயகன் (அல்லவா?) மங்கையர்விழி நஞ்சு செய்வதும், நாம் தொழுது அவனொடு சொல்லுதும் என்பார்.

192. **இக்குழு மகளிருள் யார்வ னப்பினான்**
[1]மிக்கவ ளெனத்தமை வினாவி னாரெதிர்

Koviloor Digital Library

முக்கனி களுட்சுவை முதிர்ச்சி பெற்றுள
தெக்கனி யதனைநீ ரியம்புவீ ரென்பார் 36

(பா.ம்) [1]மிக்கவரெனத்

(இ.ள்) இக்குழு மகளிருள் வனப்பினால் மிக்கவள் யார் என வினவினார் எதிர் - இந்தக் கூட்டமாகிய பெண்களுள் அழகினால் மிகுந்தவள் யார் என்று வினாவினருக்கு, எதிர் வினாவிலே விடையாக, முக்கனிகளுள் சுவை முதிர்ச்சி பெற்றுள்ளது எக்கனி - வாழை, பலா, மா என்னும் மூன்று வகைப் பழங்களுள் இனிமையில் முதிர்ந்துள்ளது எப்பழம்?, அதனை நீர் இயம்புவீர் என்பார் - அதை நீவிர் சொல்லுவீராக என்று வினாவுவார். (எ.று)

முடிபு - மகளிருள் வனப்பினால் மிக்கவள் யார் என வினாவினார் எதிர் (சிலர்) முக்கனிகளுள் சுவை முதிர்ச்சி பெற்றுள்ளது எக்கனி இயம்புவீர் என்பார். இளம்பூணர் - வினா எதிர் வினாதலையும் ஒருவிடையாகக் கொள்வராதலின் (எதிர்) என்பதற்கு எதிர் வினாவலே விடையாக என்றுரைக்கப்பட்டது.

193. கரும்பினா மினியசொற் கயற்க ணாரிளங்
குரும்பையும் பயன்படாக் கோவை தன்னையும்
விரும்பின முலகர்முன் வீணி னெஞ்சகம்
வருந்துத னகைதரு மடமையே என்பார் 37

(இ.ள்) கரும்பினும் இனிய சொல் கயல்கணார் - கருப்பஞ் சாற்றைக் காட்டிலும் இனிய மொழிகளைப் பேசும் கயல்மீன் போன்ற விழிகளையுடைய பெண்களது, இளம் குரும்பையும் பயன்படாக் கோவை தன்னையும்விரும்பினம் - நகிலாகிய சிறிய தென்னங் காயையும், உண்பதற்குப் பயன்படாத இதழாகிய கோவைப் பழத்தையும் ஆசைப்பட்டோமாய், உலகர்முன் வீணில் நெஞ்சகம் வருந்துதல் - சிறந்த பயனையடைய விரும்பும் உயர்தோர் முன்பாக வீணிலே மனம் வருந்துதலானது, நகைதரும் மடமையே என்பார் - எல்லார்க்கும் சிரிப்பை , உண்டாக்கும் நம்முடைய அறியாமையே யாகும் என்பார் சிலர். (எ.று)

முடிபு - கண்ணாருடைய குரும்பையும் கோவையும்விரும்பின (மாய்) உலகர் முன் நெஞ்சகம் வருந்துதல் மடமையே என்பார். உலகர் என்பது ஈண்டு சிறந்த பயனை அடைய விரும்பும் உயர்ந்தோரைக் குறித்தது. ''உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே'' என்பது திவாகரம்.

Koviloor Digital Library

மடமை நகைப்பை உண்டாக்கும், என்பதை ''எள்ளலிளமை பேதைமை மடனென்றுள்ளப்பட்ட நகை நான்கென்ப'' என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறிக. பயன்படா என்பதைக் குரும்பைக்கும் கூட்டுக.

194. விடங்குலா மதர்விழி விரைத்தண் பூங்குழ
னுடங்குநூ லிடைப்பிறை நுதற்பொற் கொம் பனார்
குடங்கணா ணுறுமிளங் குவவுக் கொங்கைபோ
லுடம்பெலா மூடினா லுய்யலா மென்பார் 38

(இ.ள்) விடம்குலாம் மதர்விழி விரை தண் பூ குழல் நுடங்குநூல் இடைபிறை நுதல் பொன் கொம்பனார் - நஞ்சுத்தன்மை, விளங்குகின்ற மகிழ்ச்சியையுடைய கண்களும், மணம்பொருந்திய குளிர்ந்த மலரை அணிந்த கூந்தலும் நூல் போன்ற துவளும் இடையும், பிறைத்திங்கள் போன்ற நெற்றியும், ஆகிய இவற்றை உடைய பொன்னாற் செய்த பூங்கொடி போன்ற இந்நங்கையர், குடங்கள் நாண்உறும் இளம் குவவுகொங்கை போல் - பலவகைப் பொற்குடங்களெல்லாம் வெட்கத் தையடையும்படி இளமையும், திரட்சியும் பெற்றிருக்கின்ற நகிலை ஆடையால் மூடிக்கொண்டிருத்தல் போல, உடம்பு எலாம் மூடினால் உய்யலாம் என்பார் - தங்கள் உடலை எல்லாம் ஆடையால் மூடிக் கொண்டிருந்தால் நாம் பிழைக்கலாம் என்று சிலர் சொல்வார். (எ.று)

முடிபு - பொற்கொம்பனார் கொங்கைபோல் உடம்பெலாம் மூடினால் உய்யலாம் என்பார்.

195. இவ்வணங் கருத்தழிந் திளைஞர் மாழ்குறக்
கொவ்வையங் கனியிதழ்க் கோதை மாரெலாம்
மெளவலங் குழலெழின் மாயை என்பவள்
அவ்வரன் கோயிலி னருகு போயினாள் 39

(இ.ள்) இவணம் கருத்து அழிந்து இளைஞர் மாழ்குற - இவ்வகையாக மனம் வருந்தி மைந்தர் மயங்க, மெளவல் அம்குழல் எழில் மாயை என்பவள் - முல்லை சூடிய அழகிய கூந்தலைப் பெற்றிருக்கும் அழகிய மாயை என்பவள், கொவ்வை அம் கனி இதழ் கோதை மாரோடு - கோவையின் அழகிய பழத்தை ஒத்த உதட்டினைப் பெற்றிருக்கும் பெண்களோடு அ அரன் கோயிலின் அருகுபோயினாள் - அந்த மதுகேசுரனுடைய ஆலயத்தின் பக்கத்தே சென்றாள். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - மாயை கோதைமாரொடு இளைஞர் மாழ்குற கோயிலின் அருகு போயினாள்.

196. **சிவிகையி னிழிந்துதன் சென்னி தாங்கிய**
குவிகையி னொடுபுகாக் கோபு ரத்துள்வெண்
கவிகைய னெனுமம காரன் கன்னிகட்
செவிகையி னணிபர னெதிர்சென் றாளரோ 40

(இ.ள்) வெண் கவிகையன் எனும் மமகாரன் கன்னி = (உயிர்களைக் காத்ததற்கு அடையாளமான) வெண்கொற்றக் குடையை உடையவ னென்னும் மமகாரனது மகளாகிய மாயை, சிவிகையினிழிந்து - பல்லக்கினின்றும் இறங்கி, தன்சென்னி தாங்கிய குவிகையினொடு கோபுரத்துள்புகா - தன் தலை மேற்றாங்கிய கூப்பிய கரத்தொடு கோபுரவாயிலினுள் புகுந்து, கண்செவி கையில் அணிபரன் எதிர் சென்றாள் - கண்களையே காதாகவுடைய பாம்பினைக் கையிலே கங்கணமாகப் பூண்டுள்ள பரமேஸ்வரனது திருமுன்பு சென்றாள். (எ.று) அரோ - அசை.

முடிபு - கன்னி இழிந்து புகா எதிர் சென்றாள்.

197. **வேண்டிய வனைத்தையு மேவன் மெல்லிய**
ராண்டரு குறவமைத் தளிப்ப மாயைதான்
காண்டகு நுதல்விழிக் கடவுட் கன்புளம்
பூண்டன எருச்சனை புரிதன் மேயினாள் 41

(இ.ள்) ஏவல் மெல்லியர் வேண்டிய அனைத்தையும் ஆண்டு அருகுற அமைத்து அளிப்ப - ஏவிய காரியத்தைச் செய்யும் மென்மைக் குணம் படைத்த தோழியர் வழிபாட்டிற்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் அவ்விடத்தே அண்மையில் வைத்துக் கொண்டு கொடுப்ப, மாயை காண்தகு நுதல்விழிக் கடவுட்கு அன்புளம் பூண்டனள் அருச்சனை புரிதல் மேயினாள் - மாயா தேவியானவள் அறிவால் அறியத்தக்க நெற்றியின் கண்ணுடைய சிவபெருமானுக்குப் பத்தியை மனத்தின்கண் வைத்து வழிபாட்டைச் செய்யத் தொடங்கினாள். (எ.று) தான் - அசை.

முடிபு - மெல்லியல் அனைத்தையும் அருகுற அமைத்து அளிப்ப, மாயை கடவுட்கு அன்புஉளம் பூண்டனள் அருச்சனை புரிதல் மேயினாள். பூண்டனள் - முற்றெச்சம்.

Koviloor Digital Library

198. ஆதிய வரன்முறை செய்த ருக்கிய
மாதிய கொடுபர னணிந்தி ருந்தபூ
வாதிய களைந்துமந் திர மறைந்துநம்
ஆதியை மஞ்சன மாட்டன் மேயினாள் 42

(இ.ள்) ஆதிய வரன்முறை செய்து - வழிபாட்டிற்கு முதலிலே செய்ய வேண்டிய செயல்களை எல்லாம் வரலாற்று முறைப்படி செய்து, அருக்கிய மாதிய கொடு - அருக்கிய முதலானவற்றைச் செய்து கொண்டு, பரன் அணிந்திருந்த பூ ஆதியகளைந்து - மதுகேசுரன் முதல்நாள் தரித்திருந்த மலர் முதலானவற்றை நீக்கி, மந்திரம் அறைந்து - வழிபாட்டுக்குரிய மந்திரங்களை ஓதிக் கொண்டு, நம் ஆதியை மஞ்சனம் ஆட்டல் மேயினாள் - நம்முதல்வனை நீரால் திருமுழுக்காட்டத் தொடங்கினாள். (எ.று)

முடிபு - ஆதிய செய்து, அருக்கிய மாதிய கொடு, பூவாதிய களைந்து, மந்திரம் அறைந்து ஆதியை மஞ்சனம் ஆட்டல் மேயினாள்.

199. தயிலமுட னானிடத்தைந் தையமுத
நறுநெய் பால்தயிர் செழுந்தேன்
வயலினெழு கரும்புடைத்துக்
கொள்சாறு பழம்பிழிந்த மதுரச்சாறு
புயலளவு தாழையிள நீர்நறுஞ்சந்
தனக்குழம்பு போற்று நூலி
னியலினமை தபனமிவை யொன்றன்பி
னொன்று முறைஇறைவற் காட்டி 43

(இ.ள்) தயிலமுடன் ஆனிடத்து ஐந்து - எள் நெய்யுடன் பசுவிடத்துத் தோன்றிய ஐந்தாகிய பஞ்ச கவ்யமும், ஐ அமுதம் - பஞ்சாமிர்தமும், நறுநெய் பால் தயிர் செழுந்தேன் - பசுவின் மணமுள்ள நெய்யும், பாலும் தயிரும் செழுமையாகிய தேனும், வயலின் எழுகரும்பு உடைத்துக்கொள் சாறு - வயலிலே தோன்றிய கரும்பினை நசுக்கிப் பிழிந்து கொண்ட சாறும், பழம் பிழிந்த மதுரச்சாறு - பல்வகைக் கனிகளைப் பிழிந்த இனிய சாறும், புயல் அளவு தாழை இளநீர் - மேகத்தைத் தீண்டும் தென்னையின் இளநீரும், நறும் சந்தனக் குழம்பு - மணமுள்ள சந்தனக்குழம்பும், போற்று நூலின் இயலின் அமைதபனம் - பாதுகாக்கப்பெறும் சாத்திர விதிப்படி அமைக்கப்பட்ட தபனகலச நீரும், இவை ஒன்றன்பின் ஒன்றுமுறை இறைவற்கு ஆட்டி - ஆகிய இப்பொருள்

Koviloor Digital Library

களை ஒன்றுக்குப்பின் ஒன்றாக முறைப்படி கடவுளுக்குத் திருமுழுக் காட்டி.. (எ.று)

முடிபு - (மாயை) தயிலமுடன் ஆனிடத்தைந்து முதலானவற்றை ஒன்றன்பின் ஒன்றாக முறையே ஆட்டி.

200. சங்குலவு மென்கை நெடுஞ்
சுடரிலைவேல் விழிமாயை [1]சாம்பற் பூத்து
மங்கலமா கியமேனி முழுவதுஞ்
சந்தனத்திரளை மலியச் சாத்தித்
திங்களெனு மொருசிறுகூன் முகுதுகிப்பி
[2]யீன்றதெனச் சினவெள் ளேற்றான்
கங்கைமுடி மீதினில் வெண்ணில
வெறிக்கு நித்திலவக் கதையுமிட்டாள் 44

(பா.ம்) [1]சாம்பர் ; [2]யீன்றவென

(இ.ள்) சங்கு உலவு மென்கை நெடும் சுடர் இலைவேல் விழிமாயை - வளையல்கள் உலவுகின்ற மென்மையான கைகளையும் நீண்ட ஒளிபெற்றுள்ள அரசிலை வடிவான வேற்படை போன்ற கண்களைப் பெற்றிருக்கும் மாயாதேவியானவள், சாம்பல் பூத்து மங்கலம் ஆகிய மேனி முழுவதும் சந்தனத் திரளை மலிய சாத்தி - நீறு பூத்துப் பொலிவாகிய உடலம் முற்றிலும் சந்தனச் சாந்தை நிறைய அணிந்து, திங்கள் எனும் ஒருசிறு கூன்முதுகு இப்பி ஈன்றது என - ஒன்றாகிய சிறிய வளைந்த முதுகையுடைய பிறைச் சந்திரன் என்னும் சிப்பியானது தோற்றுவித்தது என்று சொல்லும்படி, சினவெள் ஏற்றான் கங்கைமுடி மீதினில் - வெகுளும் வெண்மையான காளை வாகனப் பெருமானது கங்கை நீர் தங்கிய முடி மேல், வெண்ணில வெறிக்கும்= வெண்ணில வினைப்போன்று ஒளி வீசும்; நித்தில அக்கதையும் இட்டாள் = முத்தாற் செய்த அட்சதையையும் அணிந்தாள். (எ.று)

முடிபு - மாயை (இறைவன்) மேனி முழுவதும் சந்தனத் திரளைச் சாத்தி, முடி மீதினில் திங்களெனும் இப்பி ஈன்றதென நித்தில அட்சதையும் இட்டாள்.

201. பிறைதவழு நெடுஞ்சடையெம் பெருமானைச்
சார்ந்து சர்ப்பப் பிராந்தி மேவ

Koviloor Digital Library

[1]நறுமலர்மென் றொடைமாலை பலவனைந்து
கூர்ங்கோட்டு நால்வாய்ச் சீற்றக்
கறையடியீ ருரிசுமந்த திருமேனி
அழகுற நுண்கலை புனைந்திட்டு
இறைவனெலும் பணிநாண வவிர்மணிப்பூண்
பற்பலவு மெடுத்த ணிந்தாள் 45

(பா.ம்) [1]நறைமலர்

(இ.ள்) பிறை தவழும் நெடும்சடை எம்பெருமானை சார்ந்து சர்ப்பப் பிராந்திமேவ - இளந்திங்கள் தவழ்கின்ற நீண்ட வேணியை யுடைய எமது சிவபெருமானை அடுத்ததால் பாம்பென்கின்ற கற்பனை உண்டாகும் வண்ணம், நறுமலர்மென் தொடை மாலை பல வனைந்து - மணமுள்ள பூக்களால் தொடுக்கப்பட்ட மெல்லிய மாலைகள் பலவற்றைச் சூட்டி, கூர்ங் கோட்டு நால்வாய்ச் சீற்ற கறையடி ஈர் உரிசுமந்த திருமேனி அழகுற நுண்கலை புனைந்திட்டு - கூர்மையான தந்தத்தையும், தொங்கும் வாயையும், சினத்தையும் உரல் போன்ற அடியையுமுடைய யானையினது பிளக்கப்பட்ட தோலைச் சுமந்த அழகிய உடல் அழகைப் பொருந்தும்படி மெல்லிய ஆடையை அணிந்திட்டு, இறைவன் எலும்பு அணி நாண அவிர் மணி பூண் பல் பலவும் எடுத்து அணிந்தாள் - சிவபெருமான் அணிந்து கொண்டுள்ள எலும்பாகிய ஆபரணங்களெல்லாம் வெட்கி வெறுக்கும்படி, விளங்குகின்ற மணிகளாலாகிய அணிகலன்கள் பற்பலவற்றையும் எடுத்துத் தரித்தாள். (எ.று)

முடிபு - மாயை சடைப் பெருமானைச் சார்ந்து சர்ப்பப் பிராந்தி மேவ, மாலை பல வணிந்து, கறையடி உரி சுமந்ததிருமேனி அழகுறகலை புனைந்திட்டு, எலும்பணி நாண பூண் பற்பலவும் எடுத்து அணிந்தாள்.

202. நற்றூமங் கமழ்நித்திய கல்யாணி
[1]மணாளற்கு நானஞ் சாத்திப்
பெற்றூனங் கடிதலிலாக் கறிமருவு
போனகங்கள் பிச்சை யல்லான்
மற்றூனொன் றில்லாத பெருந்தகைக்கு
நிவேதித்து வண்டு கிண்டி
யுற்றூதுங் கடிமலர்மென் குழன்
மடவாள் வெள்ளிலையு முவந்தளித்தாள் 46

Koviloor Digital Library

(பா.ம்) [1]மணாளர்க்கு

(இ.ள்) வண்டு கிண்டி உற்று ஊதும் கடிமலர்மென் குழல் மடவாள் = வண்டுகள் மூக்காற்குடைந்து நிலையாயிருந்து இசை பாடுதற்குரிய மணம் பொருந்திய பூக்களைச் சூடிய கூந்தலைப் பெற்றிருக்கும் இளமைவாய்ந்த மாயை, நல்தாமம் கமழ் நித்திய கல்யாணி மணாளற்கு நானம் சாத்தி = நற்புகை கமழ்கின்ற, எப்பொழுதும் மங்கலமாயிருக்கும் பார்வதியாரின் கணவனாகிய சிவபெருமானுக்குக் கத்தூரிக் குழம்பை அணிந்து, பிச்சை அல்லால் மற்றுஊண் ஒன்று இல்லாத பெருந்தகைக்கு ஊனம் பெற்று கடிதல் இலா கறி மருவு போனகங்கள் நிவேதித்து, இரந்து பெறும் உணவல்லால் வேறு உணவொன்றும் இல்லாத மகாதேவனுக்கு குற்றம் உடையதாகி நீக்குதல் இல்லாத பதார்த்தங்கள் பொருந்தும் உணவு வகைகளைப் படைத்து, வெள்ளிலையும் உவந்து அளித்தாள் - வெற்றிலையையும் விரும்பிக் கொடுத்தாள். (எ.று)

முடிபு - மடவாள் மணாளற்கு நானம் சாத்தி, பெருந்தகைக்கு கறிமருவு போனகங்கள் நிவேதித்து, வெள்ளிலையும் உவந்து அளித்தாள்.

203. நறியபுகை செழுஞ்சுடர்மென்
சிவிறியொடு வெண்கவரி நாடுமாடி,
நெறிமுறையி னெடுங்கடல்போ
லியமுழங்க நின்றுதவி நிமலன் தன்னைப்
பிறைநுதலிவ் வகைபூசை புரிந்துதுதி
பலசெய்து பெருகு மன்பான்
மறைபுகலு மஞ்செழுத்து மறைந்துவலம்
வந்துமுனம் வணங்கிப் பின்னர் 47

(இ.ள்) பிறைநுதல் - இளைய மதியைப் போன்றிருக்கும் நெற்றியை யுடைய மாயை, நெடுங்கடல்போல் இயம் முழங்க - நீண்ட கடலோசையைப் போல வாத்தியங்கள் ஒலிக்க, நறிய புகை செழும் சுடர் மென் சிவிறியொடு வெண்கவரி நாடும் ஆடி நெறிமுறையில் நின்று உதவி - மணமுள்ள தூபத்தையும், விளக்கமுள்ள தீபத்தையும், மென்மையான விசிறியுடன் வெண்சாமரையையும், பார்க்கும் கண்ணாடியையும் வரன்முறைப்படி முன்னே நின்று கொடுத்து, இவ்வகை பூசை புரிந்து - இவ்வாறு வழிபாட்டினைச் செய்து, துதி பல செய்து - பலவாறு போற்றலைச் செய்து, பெருகும் அன்பால் மறை

Koviloor Digital Library

புகலும் அஞ்சு எழுத்தும் அறைந்து = மிகுந்த பத்தியால் வேதம் கூறுகின்ற திருவைந்தெழுத்தையும் கூறி, வலம் வந்து முனம் வணங்கி பின்னா் - வலமாகச் சுற்றி எதிரிலே வணங்கிப் பின்பு, (எ.று)

முடிபு - பிறை நுதல் இயம் முழங்க புகைசுடர் சிவிறியொடு கவரி ஆடி (ஆகிய இவற்றை) நின்றுதவி இவ் வகை பூசை புரிந்து துதி செய்து அஞ்செழுத்தும் அறைந்து வலம் வந்து வணங்கிப் பின்னா்.

204. அன்பினுள் முருகிவிழி சொரிநீரா
லெழுதியமை யழிந்திருப்ப
பொன்புரையும் வடிவமயிர் பொடிப்ப
வெயிர் வாணுதலின் பொட்டழிந்து
மின்புரை நெடுஞ்சடிலப் பொன்மலையி
னானந்த வெள்ள மூழ்கி
இன்பினடிப் பவளென்னவ ந்துநட
நவிலரங்கி லெய்தி னாளால் 48

(இ.ள்) அன்பின் உளம் உருகி - அன்பினால் மனம் உருக, விழிசொரி நீரால் எழுதிய மை அழிந்திருப்ப - கண்கள் சொரியும் நீரினாலே, எழுதப்பெற்ற அஞ்சனம் அழிந்திருப்பவும், பொன்புரையும் வடிவம் மயிர் பொடிப்ப - பொன் போன்ற உடம்பிலுள்ள மயிரானது சிலிப்ப, வெயிர் வாணுதலின் பொட்டு அழிந்து - வியர்வையால் ஒளிபெற்ற நெற்றியிலே பொட்டு அழிய, மின்புரையும் நெடும் சடில பொன்மலையின் ஆனந்த வெள்ளம் மூழ்கி - மின்னலைப் போன்ற நீண்ட வேணியையுடைய பொன் மலை போன்ற கடவுள் காரணமாய்த் தோன்றிய உவகை வெள்ளத்திலே அழுந்தி, இன்பில் நடிப்பவள் என்ன - அதனால் தோன்றிய இன்பத்தால் ஆனந்தக் கூத்தாடுபவள் ஆயினாள் என்று சொல்ல, வந்து நடம் நவில் அரங்கில் எய்தினாள் - புறப்பட்டு நாட்டியம் செய்யும் அரங்கினை அடைந்தாள். (எ.று)

முடிபு - மாயை உளம் உருகி விழிமை அழிந்திருப்ப மயிர் பொடிப்ப, பொட்டழிந்து மலையின் ஆனந்த வெள்ளம் மூழ்க இன்பில் நடிப்பவளென்ன வந்து அரங்கில் எய்தினாள். உருகி அழிந்து என்னும் எச்சங்களை உருக, அழிய என்று திரித்துக் கொள்க. அரங்கில் என்பதிலுள்ள ஏழாம் வேற்றுமையை இரண்டாவதாகத் திரிக்க.

205. அரங்கி னிடை நட நவிலுஞ் செயற்கேற்ப
வுடைய ணிந்திட் டரும்பை வென்ற

Koviloor Digital Library

குரும்பைமுலை யினைவம்பு கொண்ட ணிந்து
தவங்களெல்லாங் கொள்ளை கொள்ளுங்
கருந்தடங்கண் மலர்க்கோதை சிற்றடியிற்
கைபுனையக் கற்ற மாதர்
சுரும்புமுரன் மல்லிகைமென் போதனைய
சிறுசதங்கை துளங்க வார்த்தார் 49

(இ.ள்) கைபுனைய கற்ற மாதர் - கைகளால் அலங்கரிக்கக் கற்ற தோழியர், அரங்கினிடை நடம்நவிலும் செயற்கு ஏற்ப உடை அணிந்திட்டு - நாட்டிய மண்டபத்தின் நடுவே நடித்தலைச் செய்யும் தொழிலுக்குத் தகுந்தாற்போல் ஆடையை அழகுபெற உடுத்தி, அரும்பை வென்ற குரும்பை முலையினை வம்புகொண்டு அணிந்து - தாமரை கோங்குகளின் அரும்புகளை வென்றனவும், தென்னங் குரும்பையை ஒத்தனவுமாகிய நகில்களை கச்சினைக் கொண்டு அழகுபெறக் கட்டி, தவங்கள் எல்லாம் கொள்ளை கொள்ளும் கரும்தடம் கண் மலர்க் கோதை சிற்றடியில் - தங்களை எல்லாம் கொள்ளையடித்துக் கொள்கின்ற கரிய பெரிய விழிகளையும் மலராகிய மாலையையும் உடையானது சிறிய பாதத்திலே, சுரும்பு முரல் மல்லிகை மென்போது அனைய சிறுசதங்கை துளங்க ஆர்த்தார் - வண்டுகள் ஒலிக்கும் மல்லிகையின் மெல்லிய மொட்டினை ஒத்த சிறிய சதங்கையை ஒலிக்கும்படிக் கட்டினார். (எ.று)

முடிபு - கைபுனையக் கற்ற மாதர் உடையணிந்திட்டு, வம்பு, கொண்டணிந்து, சிற்றடியில் சிறுசதங்கை துளங்க ஆர்த்தார். நாட்டியப்பெண் ஆடை முதலியன தரிக்கும் விதத்தை ''பன்னிறத்த மணிப்பணிகள் பரித்துப் பொற் சரிகையுடை பளபளென்னத் துன்னுகொடி மருங்கசைத்துக் கச்சிறுக்கியுத் தரியந்தோளிலேற்றிப் பொன்னினியப் பாவையெனப் புனுகு பனிநீர் களபம் பூசித்தாளில், அன்னவொலிச் சதங்கையசைத் தாடரங்கி லாடுவதற்காருமன்றே'' என்னும் பரதசாத்திரச் செய்யுளால் அறிக.

206. மாயைமுலைக் கிணையெனவென்
முன்றானும் வந்ததென வலக்கைத் தாளம்
போயிடக்கைத் தாளமதைப் பொறாமையினால்
தாக்குதல்போற் புடைத்தொலிப்ப

Koviloor Digital Library

வாயுரைக்கு மொழிபோலத் தண்ணுமைசெங்
கைகளால் வார்த்தை சொல்ல
மேயகலைப் பெண் விளர்ப்ப வெழின்
மாதர் இசைபாட வீணைகொண்டு 50

(இ.ள்) மாயை முலைக்கு இணையென என்முன் தானும் வந்தது என - மாயாதேவியின் நகிலுக்கு ஒப்பென (ஒப்பாய் வந்த) எனக்குமுன் (போட்டியாகத்) தானும் வந்ததென்று, வலக்கைத் தாளம் போய் இடக்கைத் தாளமதை பொறாமையினால் தாக்குதல்போல் புடைத்து ஒலிப்ப - (தாளம் அடிப்பவரின்) வலக்கையாற் பிடித்த தாளத்தை அழுக்காற்றால் அடித்தல்போல, அடித்து ஓசையை உண்டாக்க, வாய் உரைக்கும் உரைபோல் தண்ணுமை செம் கைகளால் வார்த்தை சொல்ல-வாய் சொல்லுகின்ற சொற்போல் மத்தளமானது சிவந்த கைகளால் தத்தத் தீந்தோம் முதலான மொழிகளைக் கூற, மேய கலைப்பெண் விளர்ப்ப எழின் மாதர் வீணை கொண்டு இசைபாட - விரும்பப்படும் கலைமகள் நாணத்தால் வெறுக்கும்படி அழகிய பெண்கள் வீணையினைக் கொண்டு இராகம் பாட, (எ.று)

முடிபு - வலக்கைத்தாளம் என போய், இடக்கைத் தாளத்தைப் பொறாமையினால் தாக்குதல்போல் புடைத்தொலிப்ப, தன்னுமை, போல வார்த்தை சொல்ல, கலைப்பெண் விளர்ப்ப மாதர் வீணை கொண்டு இசைபாட.

207. என்னொடுகை யொருமற் போர்
புரிகவென நிற்பவன் போலிடையி னோர்கை
மன்னியுற வைத் தொருகை நீட்டியர
னெதிர்நின்று மாயை வல்லி
கன்னன் மதன் றனைவருக வெனவிளித்தல்
போற்ற ழங்கக்காற் சதங்கை
பொன்னினிய லொருபாவை நடிக்கின்ற
தென்னநடம் புரியலுற்றான் 51

(இ.ள்) மாயை வல்லி என் ஒருகை யொடு மல்போர் புரிக என நிற்பவள் போல் இடையில் ஓர் கை மன்னியுற வைத்து ஒரு கை நீட்டி அரன் எதிர் நின்று - கொடி போன்ற மாயையானவள் எனது ஒரு கையுடன் (உடம்பின் வலியால் செய்யும்) மற்போரை செய்க என்று நிற்பவளைப் போல இடுப்பில் ஒரு கையை நிலைபெற வைத்து,

Koviloor Digital Library

மற்றொரு கையை நீட்டி மதுகேசுரனது திருமுன்பில் நின்று கொண்டு, கன்னல் மதன்தனை வருக என விளித்தல் போல் கால் சதங்கை தழங்க - கரும்புவில்லை யுடைய மன்மதனை அஞ்சாமல் வருக என்று அழைத்தலைப்போல காலிற் கட்டிய சதங்கை ஒலி செய்யா நிற்க, பொன்னின் இயல் ஒரு பாவை நடிக்கின்றது என்ன நடம்புரியல் உற்றாள் - பொன்னாற் செய்த ஒப்பற்ற பிரதிமையானது ஆடுகின்றது என்று சொல்லும்படி நாட்டியம் செய்யத் தொடங்கினாள். (எ.நு)

முடிபு - மாயை, ஒரு கையொடு போர் புரிகவென நிற்பவள்போல் இடையில் ஓர் கை வைத்து ஒரு கை நீட்டி, அரன் எதிர் நின்று, மதனை வருக என விளித்தல் போல் சதங்கை தழங்க பாவை நடிக்கின்றதென்ன நடம்புரியலுற்றாள்.

208. **தண்ணுமை விளங்கலுறு தாளமிசை எல்லாம்**
வண்ணமலர் மெல்லடி வழிச்சதியி னிற்பக்
கண்ணிணைகொள் பல்வளைய கைவழி நடப்பப்
பெண்ணமுத மன்னவள் பெயர்ந்தன னடித்தாள் 52

(இ.ள்) தண்ணுமை விளங்கல் உறு தாளம் இசை எல்லாம் - மத்தள ஓசையும் விளங்குதல் பொருந்திய தாளத்தின் ஓசையும் இராகத்தின் ஓசையும் சுருதி குழல் முதலான எல்லாவற்றின் ஓசையும், வண்ணமலர் மெல் அடி வழி சதியில் நிற்ப - செந்நிறம் பொருந்திய தாமரை மலர் போன்ற மெல்லிய பாதத்தின் வழித்தாகிய அடைவுக்கு ஒத்து நிற்க, கொள்கண் இணை பல் வளைய கைவழி நடப்ப = காந்தை முதலான இலக்கணங்களைக் கொள்கின்ற இரண்டு கண்களும் பல வளையல்களை அணிந்த கைகளின் வழியே நடப்ப, பெண் அமுதம் அன்னவள் பெயர்ந்தனள் நடித்தாள் - பெண்களுக்குள் அமிழ்தத்தை ஒத்த மாயா தேவி அசைந்து நடனம் செய்தாள். (எ.று)

முடிபு - தண்ணுமை தாளம் இசை எல்லாம் சதியில் நிற்ப கண்ணிணை கைவழி நடப்ப அமுதம் அன்னவள் பெயர்ந்தனள் நடித்தாள்.

தண்ணுமை தாளம் ஆகு பெயர். பெயர்ந்தனள்-முற்றெச்சம். கண்ணிணைகொள் என்பதை கொள் கண்ணிணை என்று மாற்றுக. காந்தைக்கண், பயா நகக்கண், கருணைக்கண், மூடாம் பரக்கண், அற்புதக் கண், வீரக்கண், நகைக்கண் என்று எழு வகைக்கண் கூறுவர் பரத நூலார். இவற்றின் இலக்ணங்களை அங்கே காண்க. நாட்டியத்திற்குச் சுருதியைத்

Koviloor Digital Library

தாயாகவும், இசையைத் தந்தையாகவும், தண்ணுமை முதலான வாத்தியங்களை நட்பினனாகவும், தாளத்தை உடன் பிறந்தவனாகவும் ஒன்பது சுவைகளை மனைவியாகவும் கூறுவர் பரதநூலார்.

209. வாயுரை செய் சொற்பொருள் மலர்க்கர முரைப்ப
மீயுயர் வீசும்பினெழு மென்புளொலி யெல்லாம்
பாயொளிய பஞ்சுறு பதத்துற மிதித்துப்
பேயொடு நடித்தவிறை பித்துற நடித்தாள் 53

(இ.ள்) வாய் உரைசெய் சொல் பொருள் மலர்க்கரம் உரைப்ப - வாயாற் சொல்லப்பெறும் பாட்டுக்குரிய பொருளினை மலர் போலுள்ள கைகள் கூற, உயர் விசும்பின் எழுமென் புள்ஒலி எல்லாம் பாய் ஒளிய பஞ்சுஉறு பதத்துற மிதித்து - மேலாகி உயர்ந்த வானத்தில் எழும் மென்மையான் அன்னம் முதலான பறவைகளின் ஓசையெல்லாம் பரவிய ஒளியையுடைய செம்பஞ்சுக் குழம்பு பூசப்பெற்ற அடிகளிலே தோன்றும்படி அடைவு வைத்து, பேயொடு நடித்த இறை பித்துற நடித்தாள் - அஞ்சத்தக்க காளியுடன் நடித்த கடவுட்கு பித்தாகிய நிலை தோன்றும்படி மாயை நடனம் செய்தாள். (எ.நு)

முடிபு - (மாயை) கரம் உரைப்ப ஒலியெல்லாம் பதத்துற மிதித்து இறை பித்துற நடித்தாள். ''பே'' என்னும் உரிச்சொல் அச்சத்தை உணர்த்தும். அதனடியாகப் பிறந்த பேய் என்றும் சொல் ஈண்டு அஞ்சத்தக்க காளியை'' உணர்த்திற்று. ஒப்பு, ''கவினுறு பாடற் பண்பு காந்தளொண் கரத்திற் காட்டி, சுவையுற வதனப்போதிற் றுணைவிழிக் கயலுலாவ, தவறில் சீர்கசதியினேரத் தளிரடி பெயர்த்து வைத்து, தவிமுலை மலர்ப் பூங்கோதை கொம்பனார் நடனஞ் செய்ய.'' (மருதவன உரோமச. 76)

210. அந்தண னிருங்கலை யணங்கினை யுமிழ்ந்தான்
செந்திருவை நேமியிறை சீயென வெறுத்தான்
இந்திரன் அருஞ்சசியை எண்ணிலன் மறந்தான்
பைந்தொடி நடிப்பநரர் பட்டதெ னுரைப்பாம் 54

(இ.ள்) பைந்தொடி நடிப்ப - மெல்லிய வளையலை அணிந்த மாயை, இவ்வாறு நடனம் செய்ய, அந்தணன் இரும்கலை அணங்கினை உமிழ்ந்தான் - பிரமன் பெரிய கலைமகளை நாவிலிருந்து வெளியில் துப்பிவிட்டான், நேமி இறை செந்திருவை சீ என வெறுத்தான் -

Koviloor Digital Library

சக்கரத்தையேந்திய திருமால் இலக்குமியை சீ என்று சொல்லும்படி முனிந்தான், இந்திரன் அரும் சசியை எண்ணிலன் மறந்தான் - தேவேந்திரன் சிறந்த இந்திராணியை நினையாமல் மறந்தனன் நரர்பட்டது என் உரைப்பாம் - (தேவர்களே இப்படியானால்) மனிதர் பட்ட துன்பத்தை என்ன சொல்லுவோம். (எ.று)

முடிபு - பைந்தொடி நடிப்ப அந்தணன், கலையணங்கை உமிழ்ந்தான், நேமியிறை திருவை சீ என வெறுத்தான் இந்திரன் சசியை எண்ணிலன் மறந்தான். நரர்பட்டது என் உரைப்பாம். எண்ணிலன் - முற்றெச்சம்.

211. **பொன்னெயிலி னொன்றிய புழைக்குண் முகம் வைத்துந்**
துன்னிமுனா் நின்றவர் தோளிடை யிவர்ந்து
மின்னென நடம்புரியு மெல்லியன் மருங்கு
லென்னும்வெளி காணிய விடர்ப்படுவர் மைந்தர் 55

(இ.ள்) மைந்தர் - இளைஞர். பொன் எயிலின் ஒன்றிய புழைக்குள் முகம் வைத்தும் = பொன்னாற் செய்த மதிலின் கண் பொருந்திய துளைக்குள்ளே முகத்தை வைத்துக் கொண்டும், துன்னிமுனா் நின்ற அவர் தோளிடை இவர்ந்தும் - நெருங்கி முன்னே நின்றவரது தோளின் மேலேறிக் கொண்டும், மின் என நடம்புரியும் மெல்லியர் மருங்குல் என்னும் வெளி காணிய இடப்படுவர் - மின்னற்கொடி என்று சொல்லும்படி ஆகும் மெல்லியலாளின் இடை என்னும் ஆகாயத்தைக் காண்பதற்கு இங்ஙனம் முயன்று வருந்துவராயினார். (எ.று)

முடிபு - மைந்தர் எயிற் புழைக்குள் முகம் வைத்தும், முன் நின்றவர் தோளிடை இவர்ந்தும், மெல்லியல் மருங்குலென்னும் வெளி காணிப இடப்படுவர்.

212. **பற்றுமன மோடியிரு பார்வையினு மெய்தி**
மற்றைய புலன்களை மறந்துநட மாடும்
பொற்றொடியை நண்ணவுயர் பொன்மதி லுறுப்பி
னுற்றபொறி போலசை வொழிந்திளைஞர் நின்றார் 56

(இ.ள்) பற்று மனம் ஓடி - (ஐம்புலன் வழியே சென்று உலகம் பொருள்களை மாறி மாறி) பற்றிக் கொண்டிருக்கும் இளைஞர் மனமெல்லாம், இரு பார்வையினும் எய்தி - (இப்பொழுது) விரைந்து இரண்டு விழிகளிலும் சென்று, மற்றைய புலன்களை மறந்து - மெய்வாய் மூக்குச் செவி என்னும் நான்கு புலன்களில் செல்லாமல் அவற்றை

Koviloor Digital Library

மறந்தே விட்டு, நடம் ஆடும் பொற்றொடியை நண்ண - நடிக்கும் மாயா தேவியை அடைந்தபடியால், இளைஞர் உயர் பொன் மதில் உறுப்பில் உற்ற பொறிபோல் அசைவு ஒழிந்து நின்றார் - நடனத்தைக் கண்ட இளைஞரெல்லாம் உயர்ந்த பொன்னாற் செய்த மதிலுறுப்பின் மேல் பொருந்திய பாவை போல் இயக்கமற்று நின்றனர். (எ.று)

முடிபு - மனம் ஓடி எய்தி மறந்து நண்ண (அதனால்) இளைஞர் பொறிபோல் அசை ஒழிந்து நின்றார்.

213. இளங்கொடி மருங்குலவ ளின்னனை நடிப்பக்
களங்கனியை வென்றமணி கண்டனை யருச்சித்
துளங்குளி ரருந்தவ னுவந்திறை யணிந்த
வளங் கெழுமு சந்தமலர் மாலையொ டளித்தான் 57

(இ.ள்) இளம் கொடி மருங்குலவள் - இளைய கொடி போன்ற இடையையுடைய மாயை, இன்னணம் நடிப்ப - இவ்வண்ணம் நாட்டியமியற்ற, களங்கனியை வென்ற மணிகண்டனை அருச்சித்து உளம் குளிர் அருந்தவன் - களாப் பழத்தைக் கருநிறத்தால் வென்று அழகிய கண்டத்தையுடைய சிவபெருமானைப் பூசித்து மனம் குளிரும் அரியதவத் தோனாகிய அருச்சகன், உவந்து - மாயை செய்த பூசை முதலானவற்றிற்கு மகிழ்ந்து, இறை அணிந்த வளம் கெழுமு சந்தம் மலர் மாலையொடு அளித்தான் - சிவபெருமான் தரித்த வளப்பம் பொருந்திய சந்தனச் சாந்தினை மலராற் செய்த மாலையுடன் (பிரசாதமாகக்) கொடுத்தான். (எ.று)

முடிபு - மருங்குலவள் இன்னணம் நடிப்ப, மணிகண்டனை அருச்சித்து உளங்குளிர் அருந்தவன் உவந்து இறையணிந்த சந்த (த்தை) மாலையொடளித்தான்.

214. வணங்கிமது கேசனிரு மாலியம தேற்றங்
கணங்குமட வாருட னரங்கிடை யிருந்தாள்
நுணங்கிழை மருங்குன்மிக நோமென விரைந்து
பிணங்குறு சதங்கையமு பிள்ளையி னடங்க 58

(இ.ள்) அணங்கு வணங்கி மதுகேசன் நிருமாலியமது ஏற்று - மாயையானவள் அருச்சகனை வணங்கி மதுகேசனது நிருமாலியமாகிய சந்தனம் மாலைகளைப் பெற்றுக் கொண்டு, நுணங்கு இழைமருங்குல் மிக நோம் என இரைந்து பிணங்குறு சதங்கை - நுண்ணிய நூல் போன்ற

Koviloor Digital Library

இடையானது மிகவும் வருந்தும் என்று ஓசைபடக் கூறி மாறுபடுகின்ற காற்சதங்கையானவை, அழுபிள்ளையின் அடங்க - அழுத குழந்தை அடங்கினாற்போல அடங்கும்படி, அங்கு மடவாருடன் அரங்கிடை, இருந்தாள் - அக்கோவிலில் பெண்களுடனே நடன மண்டபத்திலே இளைப்பாறியிருந்தாள். (எ.று)

முடிபு - அணங்கு வணங்கி ஏற்று மருங்குல் நோம் என இரைந்து பிணங்குறு சதங்கை அழுபிள்ளையின் அடங்க அங்கு மடவாருடன் அரங்கிடை இருந்தாள். நிருமாலியம் - இறைவனுக்கு நிவேதித்தவை. இதனை ''பரமனுண்டு பவித்திரமாயது நிருமலம் பெறலாளிரு மாலியம்'' என்னும் சித்தாந்த சிகாமணியாலறிக.

215. மைத்தட நெடுங்கணிள வல்லிநிகர் மாயை
பத்தியொ டருச்சனை பயின்றதை யறிந்தா
னித்தனுல கெங்கணு நிறைந்தவ னனாதி
முத்தனரு ளல்லம முதற்பெயரி னானே 59

(இ.ள்) நித்தன் - அழிவற்றவனும், உலகு எங்கணும் நிறைந்தவன் - உலகங்களிலே எல்லாவிடத்திலும் வியாபித்திருப்பவனும், அனாதிமுத்தன் - அனாதியான காலத்திலிருந்தே பாசங்களில் விடுபட்டவனும் ஆகிய, அருள் அல்லம முதல் பெயரினான் - பேரிரக்கத்தையுடைய அல்லமன் என்னும் முதற் பெயரினை உடையவன், மைதட நெடும் கண் இளவல்லி நிகர் மாயை பத்தியொடு அருச்சனை பயின்றதை அறிந்தான் - அஞ்சனம் தடவிய அகன்ற நீண்ட விழிகளையுடைய இளங் கொடியை ஒக்கும் மாயாதேவி அன்புடன் வழிபாடு செய்து வருவதை உணர்ந்தான். (எ.று) ஏ-அசை.

முடிபு - நித்தனும் நிறைந்தவனும், முத்தனும் ஆகிய அல்லம முதற்பெயரினான் மாயை அருச்சனை பயின்றதை அறிந்தான். அநாதி - முதன்மை சொல்ல முடியாதது. அது ஈண்டு காலத்தை உணர்த்திற்று. இறைவன் இயல்பாகவே பந்தங்களில் விடுபட்டவனாதலின் அனாதிமுத்தன் என்றான்.

நான்காவது

மாயை பூசை கதி முற்றிற்று

Koviloor Digital Library

ஐந்தாவது
பிரபுதேவர் வந்த கதி

216. நிரந்தர [1]மடியாா் வேண்டு நினைவெலா நிரப்பா நின்ற
பெருந்தகை யல்ல மையன் பெயர்ந்தொரு மனித னாகி
வருந்துறு மயன்ம னத்தால் வந்தனை புரிந்தா டன்பாற்
பொருந்துறு பவன்போற் செய்த புணர்ப்பினைப் புகன்று
ரைப்பாம் 1

(பா.ம்) [1]மடியர்

(இ.ள்) நிரந்தரம் அடியார் வேண்டு நினைவு எலாம் நிரப்பா நின்ற பெருந்தகை அல்லமையன் - எப்பொழுதும் தொண்டர் விரும்புகின்ற (போகம் வீட்டைப் பற்றிய) எண்ணங்களை எல்லாம் நிறைவேற்றுகின்ற பெரிய தகுதிவாய்ந்த அல்லமதேவன்; ஒரு மனிதனாகிப் பெயர்ந்து - ஒப்பற்ற மனிதனாகி வந்து; வருந்துறு மயல் மனத்தால் வந்தனை புரிந்தாள் தன்பால் - துன்புறுத்துகின்ற காம மயக்கத்தோடு கூடிய நெஞ்சினாலே சிவவழிபாட்டைச் செய்தவளாகிய மாயையினிடத்தே; பொருந்துறுபவன் போல் செய்த புணர்ப்பினைப் புகன்று உரைப்பாம் - கூடுபவன் போல் செய்த செயலைக் கருதிச் சொல்லுவாம். (எ.று)

(முடிபு) அல்லமையன் மனிதனாகிப் பெயர்த்து வந்தனை புரிந்தான் தன்பால் செய்த புணர்பினைப் புகன்று உரைப்பாம்; புகன்று என்பது இங்கே கருதல் என்னும் பொருளில் வந்துள்ளது. ''கண்ணல் நுதலல் புகறல் கருதல்'' என்பது திவாகரம்.

217. தாமுறு நுகர்வும் வீடுந் தந்திட வல்லன் றானே
யாமென [1]வியம்ப லாலே யல்லம தேவ நுண்மை
நாமமு மறைய வேறோர் நாமமுற் றம்மா யைக்குக்
காமிய வினைப்ப யன்றான் கடைப்பிடித் தருள வெண்ணி
2

(பா.ம்) [1]வியம்பலா லெம்மல்லம

(இ.ள்) தாம்உறு நுகர்வும் வீடும் - உயிர்கள்தாம் (காமிய வினையினாலும் நிட்காமிய வினையினாலும்) அடைகின்ற உலகபோகங்களையும் முத்தியையும்; தந்திட வல்லன்தானே ஆம் என

Koviloor Digital Library

இயம்பலால் - கொடுத்திடும் ஆற்றலுடையவன் இவன் ஒருவன் தானே ஆகும் என்று (அறிஞராலும் நூல்களாலும்) சொல்லப்படுதலால்; அல்லமதேவன் அம்மாயைக்கு காமிய வினைப் பயன் தான் கடைப்பிடித்து அருள எண்ணி - அல்லமதேவன் அந்த மாயா தேவிக்கு காமிய பூசையின் பலனை உறுதியாகக் கொடுக்க நினைத்து; உண்மை நாமமும் மறைய வேறு ஓர் நாமம் உற்று - (தேவனாகிய அல்லமன் என்னும்) உண்மைப் பெயரும் மறைந்து போக (மக்களில் மத்தளிகனாகிய அல்லமன் என்னும்) வேறு ஓர் பெயரைப் பெற்று (எ.று) ஏ-அசை.

முடிபு - அல்லமதேவன் இயம்பலாலே மாயைக்குக் காமிய வினைப் பயனை அருள எண்ணி உண்மை நாமமும் மறைய வேறோர் நாமமுற்று; இயம்பலால் என்பது செயப்பாட்டு வினைப்பொருளில் வந்துள்ளது; நாமமும் மறைய - வடிவேயன்றி நாமமும் மறைய என்னும் பொருளில் வந்துள்ளதால் எச்ச உம்மை, நாமமுற்று என்னும் வினை எச்சம் நான்காம் பாட்டிலுள்ள உருவொன்றுற்றான் என்பதனுடன் முடியும்.

218. கதந்தரு திருநு தற்றீக்
கண்ணினா னீறு பட்ட
மதன்செயல் செய்ய வன்னோன்
வடிவுதான் கொண்ட தென்ன
முதிர்ந்தழ கொழுகு மாறு
முகங்களுட் சிறந்த வொன்றோ
டெதிர்ந்துள முருக னென்ன
விளமையோ டழகு வாய்ப்ப 3

(இ.ள்) கதம் தருதிருநுதல் தீ கண்ணினால் நீறுபட்ட மதன் செயல் செய்ய - அழகிய நெற்றியின் கண் உள்ள வெப்பத்தைத் தரும் நெருப்புக்கண்ணினால் எரிந்து நீறான மன்மதன் உலகத்தில் செய்ய வேண்டிய தொழிலைச் செய்வதற்காக; தான் அன்னோன் வடிவு கொண்டது என்ன - அல்லமதேவனாகிய தான் அவனது வடிவத்தைக் கொண்டதுபோலும் என்னவும்; அழகு முதிர்ந்து ஒழுகும் ஆறுமுகங்களுள் சிறந்த ஒன்றோடு எதிர்ந்துள முருகன் என்ன - அழகு மிகுந்து பெருகா நின்ற ஆறுமுகங்களிலே சிறந்த ஒருமுகத்துடன் தோன்றிய

Koviloor Digital Library

முருகன் என்னவும்; அழகு இளமையோடு வாய்ப்ப - மன்மதனுக்குள்ள வனப்பானது முருகனுக்குள்ள இளமைப் பருவத்தோடு தான்கொண்ட உருவத்திற்குப் பொருந்தும்படி. (எ.று)

முடிபு - நுதற் கண்ணினால் நீறுபட்ட மதன்செயல் செய்ய அன்னோன் வடிவு கொண்டதென்ன, ஆறுமுகங்களுள் சிறந்த ஒன்றோடு எதிர்ந்துள முருகன் என்ன அழகு இளமையோடு வாய்ப்ப, என்ன என்ன வாய்ப்ப என்று முடிக்க. வாய்ப்ப என்பது நான்காம் பாட்டிலுள்ள உருவொன்றுற்றொனென்பதனுடன் முடியும். (ஒப்பு) ''கந்தனோர் வதனமாகி அவதரித்தன்ன கன்னன்'' (வில்லி - 17ஆம் போர் செய் 34)

219. அவிர்சடை முனிவர் மாத ரழுங்குறக் கொண்ட கோல
கவினுமிவ் வடிவங் கொள்ளக் கற்றுமுன் விட்ட தென்ன
குவிமுலை மகளிராவி கூட்டுணுங் கோல மென்னப்
புவியுறு மிரவி யென்னப் பொங்கொளி வுருவொன்
றுற்றான் 4

(இ.ள்) அவர்சடை முனிவர் மாதர் அழுங்குற கொண்டகோலம் - விளங்கும் சடையையுடைய தாருகாவனத்து முனிவருடைய பெண்கள் காமத்தால் வருந்துற எடுத்துக் கொண்ட அழகிய பிட்சாடன வடிவமானது; கவினும் இ வடிவம் கொள்ள முன் கற்றுவிட்டது என்ன - அழகிய இந்த உருவத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்னே பழகிவிட்டது என்று சொல்லும்படி; குவிமுலை மகளிர் ஆவி கூட்டுணும் கோலம் என்ன - குவிந்த நகிலையுடைய பெண்களின் உயிரைக் கொள்ளைக் கொள்ளும் வடிவம் என்று சொல்லவும்; புவி உறும் இரவி என்ன - நிலத்திற் பொருந்திய சூரியன் என்று சொல்லும்படி; பொங்கு ஒளி உரு ஒன்று உற்றான் - மிகும் ஒளியையுடைய வடிவம் ஒன்றினைத் தான் அடைந்தான். (எ.று)

முடிபு- முனிவர் மாதர் அழுங்குறு கொண்ட கோலம் இவ்வடிவம் கொள்ள முன் கற்றுவிட்டதென்ன; உருவொன்றுற்றான்; மகளிர் ஆவி கூட்டுணுங் கோலமென்ன உருவொன்றுற்றான் புவியுறும் இரவி என்ன ஒளி பொங்கு உருவொன்றுற்றான் என்று தனித்தனி கூட்டுக; குவிமுலை மகளிராவி கூட்டுணுங்கோலம் என்பதற்கு ஒப்புமை.

ஞானமணியார மார்பன்றிரு நுதன் மகளிர் நெஞ்சத்துண்ணிறை
பருகும் வண்டாரு ருவமை திருவின் மிக்கான்

(சிந்தாமணி - 695).

Koviloor Digital Library

220. விளிம்புற நடுக்க ளங்கம்
வீழ்ந்துசூழ் மதியொன் றுண்டேல்
வளங்கெழு [1]மயிரொ ழுங்கு
வள்ளல்வாண் முகநி கர்க்குந்
துளங்குறு முந்தி மேற்போய்
மார்பிடைத் தோன்று ரோம
மிளங்கரு நளின முண்டே
லேய்க்குமென் [2]றியம்ப நின்றான்

(பா.ம்) [1]மயிரொழுங்கும்; [2]றியம்பாநின்றாள்

(இ.ள்) நடு களங்கம் விளிம்பு உற வீழ்ந்து சூழ் மதி ஒன்று உண்டேல் - நடுவிடத்திலே உள்ள களங்கமானது ஓர் ஓரத்திலே பொருந்தச் சென்று சுற்றியிருக்கும் திங்கள் ஒன்றுளதேல்; வள்ளல் வளம் கெழுமயிர் ஒழுங்கு வாள்முகம் நிகர்க்கும் - அல்லமனது செழுமை பொருந்திய மயிரின் வரிசையை ஓரத்தில் பெற்றிருக்கும் ஒளி பொருந்திய முகம் அத்திங்களை ஒத்திருக்கும்; இளம் கருநளினம் உண்டேல் - இளமையான கரிய தண்டிலே பூத்த கருந்தாமரை மலருளதேல்; துளங்குறும் உந்திமேல் போய் மார்பிடை தோன்று ரோமம் ஏய்க்கும் என்று இயம்ப நின்றாள் - அசையும் கொப்பூழிலிருந்து கொடி போல் தொடங்கி மேற்சென்று மார்பினிடத்தே காணப்பெறும் மயிர்ச் செறிவானது (அத்தாமரை மலரை) ஒக்கும் என்று சொல்லும்படி உருக்கொண்டு நின்றான் (எ.று)

முடிபு - களங்கம் விளம்புற வீழ்ந்து சூழ்மதி உண்டேல் முகம் (அம் மதியை) நிகர்க்கும் என்றியம்ப நின்றான்; உந்திமேற்போய் மார்பிடைத் தோன்று ரோமம் கருநளினம் உண்டேல் ஏய்க்கும் என்றியம்ப நின்றான்; "முகத்துக்கும் மார்பு ரோமத்துக்கும் உவமை கூறப் புகுந்த, இங்ஙன மாய மதியும் நளினமும் எங்கணுமின்மையின் இப்பொருளுவமை யணி" என்பது (கா.சா.ஐயர் உரை); "செய்யுறு மண்டிலம்" என்னும் (கலி. 7 அடி 7) பகுதிக்கு மறுவறச் செய்தலுறுகின்ற மதியிடத்தே" என்று உரை கூறி "செய்யுறு மண்டிலம் இல்பொருளுவமை" என்பர் நச்சினார்க் கினியர்.

221. விலைவரம் பறியா வாடை விரித்துடுத் தரையி லங்க
மலைவரும் புதிய சந்த மான்மதங் காத நாறக்

Koviloor Digital Library

கலைவரம் பறிந்து ளோர்தங் கருத்தினுக் கரிதா யென்புன்
றலைவருங் கமலம் [1]பொற்றா டம்பிரான் மலியச் சாத்தி 6

(பா.ம்) [1]பொற்றாட்டம்பிரான்

(இ.ள்) கலைவரம்பு அறிந்துளோர் தம் கருத்தனுக்கு அரிதாய் என்புன் தலைவரும் கமலம் பொன்தாள் தம்பிரான் - கல்வியின் எல்லையை உணர்ந்துள்ளோர் தமது உணர்வினுக்கு உணர்தற்கரிதாகி எளியேனது புன்மையாகிய தலைக்குத்தானே வரும் தாமரை மலர் போன்ற அழகிய பாதத்தைப் பெற்றிருக்கும் அல்லமதேவன்; விலைவரம்பு அறியா ஆடை அரை இலங்க விரித்து உடுத்து - விலையின் அளவு அறியாத உடையினை இடையிலே விளங்க விரித்தணிந்து; மலைவரும் புதிய சந்தம் மான்மதம் காதம் நாற மலியசாத்தி - மலையினின்றும் வருகின்ற புதிய சந்தனத்தின் குழம்பையும் கத்தூரிக் குழம்பையும் காததூரம் மணம் வீசும்படி மிகுதியாக அணிந்து. (எ.று)

முடிபு- தம்பிரான் ஆடை இலங்க விரித்து உடுத்து, சந்தம்மான் மதம் நாற மலிய சாத்தி; இச்செய்யுள் முதல் ஆறு செய்யுள் வரைக்கும் ஒரு தொடர்பு.

222. தளிர்த்ததண் பொழிலிற் றேமாந்
 தடஞ்சினைக் குயின் முகம் போற்
றுளித்தலை முகில்க வற்றுஞ்
 சுரிகுழற் சிகழி யார்த் திட்(டு)
அளித்தொடர் மாலை வேய்ந்தவ்
 வலங்கனோக் குறுவோர்க் கெல்லாம்
வெளிற்றுரைப் பொருள் போற்
 றோன்ற மென்றலைச் சாத்தணிந்து 7

(இ.ள்) தளிர்த்த தண் பொழிலில் தேமா தடம் சினை குயில் முகம்போல் - துளிர்களையுடைய குளிர்ந்த சோலையிலே இனிய மாமரத்தினது பெரிய கிளையிலே வாழும் குயிலின் தலையைப் போல; துளிதலை முகில் கவற்றும் சுரிகுழல் சிகழி ஆர்த்திட்டு - மழைத் துளியைப் பெய்யத் தொடங்கிய மேகத்தை வருந்தச் செய்யும் சுருண்ட மயிரைக் குடுமியாகக் கட்டிக் கொண்டு; அளி தொடர் மாலை வேய்ந்து - வண்டுகள் தொடரும் மாலையை அணிந்து; நோக்குறுவோர்க்கு எல்லாம் அஅலங்கல் வென்று உரை பொருள் போல் தோன்ற -

Koviloor Digital Library

காண்பவர்க்கெல்லாம் தலையிலணிந்த அந்த மாலை வெளிப்படைச் சொல்லிலுள்ள பொருள் நன்றாய்த் தெரிவது போல் தெரியும்படி; மென் தலைச் சாத்து அணிந்து - மெல்லிய துணியாற் செய்த தலைப் பாகையைச் சூடி. (எ.று)

முடிபு- குயின் முகம் போல சிகழி ஆர்த்திட்டு மாலை வேய்ந்து நோக்குறுவோர்க்கு அவ்வலங்கல் வெளிற்றுரைப் பொருள் போற் றோன்ற தலைச்சாத்து அணிந்து.

223. **களத்திடை யிருப்பி னுண்மை காண்குவ ரென்ன வாலங்**
குளத்திடை வாங்கி வைத்த கொள்கைபோற் றிலதந் தீட்டி
யொளித்தனி மதிதன் பாங்க ருரோணியோ டொருபெண் கூட்டி
அளித்துற வைத்த தென்ன வணிமணி செவிக்க ணிந்து 8

(இ.ள்) களத்திடை இருப்பின் உண்மை காண்குவர் என்ன - (நஞ்சு) கண்டத்திலே இருக்குமானால் சிவபெருமான் என்கின்ற உண்மையை உலகத்தவர் அறிந்து கொள்வர் என்று; ஆலம் குளத்திடை வாங்கி வைத்த கொள்கைபோல் திலதம் தீட்டி - மிடற்று நஞ்சினை நெற்றியின் நடுவே எடுத்து வைத்த செயலைப் போலக் கருப்புப் பொட்டிட்டு; ஒளிதனி மதிதன் பாங்கர் உரோணியோடு ஒரு பெண் கூட்டி அளித்து உற வைத்ததென்ன - நிலவையுடைய ஒப்பற்ற திங்கள் தனது இருபக்கத்திலே உரோகணியுடன் கிருத்திகை என்னும் ஒரு பெண்ணையும் சேர்த்து அருள் செய்து பொருந்த வைத்தாற்போல; அணிமணி செவிக்கு அணிந்து - அழகிய மாணிக்கத்தாற் செய்த குண்டலத்தை முகமதியின் இரண்டு பக்கங்களிலுமுள்ள இரண்டு செவிகளிலும் தரித்து. (எ.று)

முடிபு - ஆலம் களத்திடை இருப்பின் உண்மை காண்குவர் என்ன வாங்கி குளத்திடை வைத்த கொள்கைபோல் திலதம் தீட்டி மதி உரோகணியோடு ஒரு பெண் கூட்டி வைத்ததென்ன அணிமணி செவிக்கு அணிந்து; செவிக்கு என்பதிலுள்ள நான்காம் வேற்றுமையை ஏழாவதாகத் திரித்துக் கொள்க. சந்திரனை வழிபடும் பொழுது கிருத்திகையை வலப்பக்கத்திலும், உரோகணியை இடப்பக்கத்திலும் வைத்து வழிபட வேண்டுமென்பர் அகோர சிவாச்சாரியார். சைவ சோடசம் (பக். 36). முகமதியை அடுத்து குழைவிளங்குவதை ''நகை தாழ்பு துயல்வரூ உம் வகையமை பொலங்குழை, சேண்விளங்கியற்கை வாண்மதி கவைஇ அகலாமீனின் அவிர்வன இமைப்ப'' (திருமுருகு-2)

Koviloor Digital Library

என்று நக்கீரனாரும் கூறியுள்ளார். அதன் உரையுள் மீன் உரோகணி முதலியன'' என்றார் நச்சினார்க்கினியர்.

224. விலையில்வெண் டரளக் கோவை வீரசங் கிலிகே யூர
மிலகுசெம் மணிப்பொன் னாழி யிவைமுத லாய வெல்லாம்
கலனுமொண் கவினெ னுஞ்செங் கனலிற் பெய் நறுநெ
யென்ன
மலைவினங் குருகு கேசன் வயங்குறுப் பெலாம ணிந்து 9

(இ.ள்) மலைவு இல் நம் குரு குகேசன் - மாறுபாடில்லாத நமது ஆசிரியனாகிய அல்லமதேவன்; ஒண்கவின் எனும் செம்கனலில் பெய் நறு நெய் என்ன - ஒளி பெற்ற அழகு என்னும் சிவந்த நெருப்பிலே ஊற்றிய மணமுள்ள நெய்யினைப் போல; விலைஇல் வெண் தரள கோவை வீரசங்கிலி கேயூரம் இலகு செம்மணிப்பொன் ஆழி இவை முதலாய எல்லாக் கலனும் வயங்கு உறுப்பு எலாம் அணிந்து - விலை மதிப்பில்லாத வெண்மையான முத்துமாலையும், வீரத்திற்கு அறிகுறியான சங்கிலியும்; தோள் வளையும் விளங்கும் செம்மாணிக்கக் கல்லால் செய்த மோதிரமும் இவை முதலான எல்லா அணிகலன் களையும் விளங்கும் அவயவங்கள் எல்லாவற்றிலும் தரித்து. (எ.று)

முடிபு- குகேசன் கவினாகிய கனலிற்பெய் நெய்யென்ன கோவை சங்கிலி கேயூரம், ஆழி முதலாய கலனெல்லாம் உறுப்பெலாம் அணிந்து.

225. இந்திர திருவிற் கேற்ற விலக்கண முழுதும் வாய்த்த
சுந்தர குமரற் காவா விதனைத்தான் சுமப்ப தாக
வந்துள தெதுகொ லோவென் றெண்ணிமா னிடர்ம யங்க
நிந்தையின் முதுகின் பாற்றண் ணுமையொன்று நிகழத்
தாங்கி 10

(இ.ள்) இந்திர திருவிற்கு ஏற்ற இலக்கணம் முழுதும் வாய்த்த சுந்தர குமரற்கு - இந்திரச் செல்வத்திற்குத் தகுதியான வடிவ இலக்கணம் முற்றிலும் பொருந்தியுள்ள அழகிய மகனுக்கு; ஆஆஇதனைத்தான் சுமப்பது ஆக வந்துள்ளது எது கொல் என்று எண்ணிமானிடர் மயங்க - அந்தோ இம்மத்தளத்தை மட்டும் தாங்குவதற்கேதுவாக நிகழ்ந்துள்ள தீவினை யாதாயிருக்குமோ என்று கருதி மக்கள் திகைக்க; நிந்தையில் முதுகின் பால் தண்ணுமை ஒன்று நிகழத் தாங்கி - பழிப்பில்லாத முதுகினிடத்தே மத்தளம் ஒன்று விளங்கச் சுமந்து; (எ.று) ஓ-அசை.

Koviloor Digital Library

முடிபு- மானிடர் ''சுந்தரகுமரற்கு இதனைச் சுமப்பதாக வந்துளது எதுகொல் என்று எண்ணி'' மயங்க முதுகின்பால் தண்ணுமை ஒன்று நிகழத்தாங்கி.

226. சென்றருண் மதுகை நாதன் றிரு
முன்வான் சுடர்வ லஞ்சூழ்
குன்றுறழ் கொடிநெ டும்பொற்
கோபுரத் தெதிர்போய் நின்று
மன்றிடை நவில்கூத் தாடி
மத்தளத் தொழில்கைக் கொண்டா
னென்றுள மருள வெங்கோ
னெறிந்துதண் ணுமைய திர்த்தான் 11

(இ.ள்) எங்கோன் சென்று அருள் மதுகை நாதன் திருமுன் வான் சுடர் வலம் சூழ்குன்று உறழ் கொடி நெடும் பொன் கோபுரத்து எதிர் போய் நின்று - அல்லமதேவன் சென்று பேரிரக்கத்தையுடைய மதுகேசுரனின் சந்நிதி முன்பு ஆகாயத்திலுள்ள ஞாயிறு முதலான ஒளிகள் வலமாகச் சுற்றி வரும் மேரு மலையை ஒத்ததும் கொடி கட்டப் பெற்றதும் நீண்டதும் பொன்னாற் செய்ததுமாகிய கோபுரத்திற்கு நேரே போய் நின்று கொண்டு; மன்றிடை நவில் கூத்தாடி மத்தளத் தொழில் கைக் கொண்டான் என்று உளம்மருள - அரங்கத்தில் நடிப்பவன் என்று சொல்லப்பெறும் கூத்தாடியாகிய இறைவன் (இப்பொழுது) மத்தளம் அடிக்கும் தொழிலை மேற்கொண்டான் என்று கண்டோரெல்லாம் மனம் வியக்க; தண்ணுமை எறிந்து அதிர்த்தான் - மத்தளத்தை அடித்து முழக்கினான். (எ.று)

முடிபு - எங்கோன் சென்று, போய், நின்று, ''கூத்தாடி மத்தளத் தொழில் கைக்கொண்டான் என்று'' மருள, எறிந்து, அதிர்த்தான்.

விலை வரம்பறியா என்னும் பாட்டிலிருந்து இப்பாட்டு வரை ஒரு தொடர்பு. ஆகையால் ஆடை உடுத்து, சந்தம் மான் மதம் சாத்தி குழலைச் சிகழியாக ஆர்த்திட்டு மாலை வேய்ந்து தலைச்சாத்தணிந்து திலகம் தீட்டி அணி மணி செவிக் கணிந்து கலன் உறுப்பெலாமணிந்து தண்ணுமை யொன்று தாங்கிச் சென்று கோபுரத்தெதிர் போய் நின்று தண்ணுமையை எறிந்து அதிர்த்தான் என்று கூட்டி முடித்துக் கொள்க.

227. உரலசைந் திடாதடுக்கி யுறியினெய் யெடுத்த யின்றோன்
குரலசைந் தூது மோர்வேயங் குழன்மொழி மாதர் மாழ்கச்

Koviloor Digital Library

சிரலசைந் தாடா நின்ற சிறகர்போன் மத்த ளத்தை
விரலசைந் தறைத லன்றி மெய்யசை யாம னின்றான் 12

(இ.ள்) உரல் அசைந்திடாது அடுக்கி உறியில் நெய் எடுத்து அயின்றோன் - உரல்களை அசையாமல் ஒன்றின் மேல் ஒன்றாய் அடுக்கி உறியின் கண்ணிருந்த நெய்யினை எடுத்து உண்டோனாகிய கண்ணனது; குரல் அசைந்து ஊதும் ஓர் வேய்ங்குழல் மொழி மாதர் மாழ்க - குரலை எழுப்பும் வாயானது அசைந்து ஊதுகின்ற ஒப்பற்ற மூங்கிலாற் செய்த புல்லாங்குழலோசை போன்ற சொற்களையுடைய பெண்கள் மயங்க; சிரல் அசைந்து ஆடாநின்ற சிறகர்போல் - மீன் குத்திப் பறவையினிடத்தே அசைந்தாடுகின்ற சிறகைப்போல; விரல் அசைந்து மத்தளத்தை அறைதலன்றி மெய் அசையாமல் நின்றான் - கைவிரலானது அசைந்து அடித்தலல்லாமல் உடம்பு அசையாமல் நின்றான். (எ.று)

முடிபு - அயின்றோனது குரல் அசைந்து ஊதும் குழல் மொழி மாதர் மாழ்க. சிறகர்போல் விரல் அசைந்து மத்தளத்தை அறைதலன்றி மெய் அசையாமல் நின்றான்.

228. சுத்தமெய்ஞ் ஞானோ னந்தச் சூரியன் கரத்தா லார்க்கு
மத்தள முகின்மு ழக்க [1]நடித்துறு மயில்கேட் டம்மா
வித்தரை மனிதர் கையா லெஞ்செவிப் படாதி ருந்த
புத்தொலி யிதுவென் றுள்ளம் வியந்திது புகலு மன்றே 13

(பா.ம்) [1] நடித்திடு

(இ.ள்) சுத்தமெய் ஞான ஆனந்த சூரியன் கரத்தால் ஆர்க்கும் மத்தள முகில் முழக்கம் - அநாதியே பாசங்களோடு கூடாமல் தூய்மை யாயிருப்பவனும், அழியாமலிருப்பவனும், அறிவுடையவனும், இன்ப மயமாயிருப்பவனும் ஆகிய அல்லமனென்னும் ஞாயிற்றின் கையால் முழக்கப்படுகின்ற மத்தளமாகிய மேகத்தின் ஆரவாரத்தை; நடித்துறுமயில் கேட்டு - நடித்துத் தங்கியிருக்கும் மாயையாகிய மயில் காதற்கேட்டு; அம்மா இத்தரை மனிதர் கையால் எம்செவிப்படாது இருந்த புது ஒலி இது என்று - ஆச்சரியமாயுள்ளது; இந்த நிலவுல கத்திலுள்ள மக்களின் கைகளால் (முழக்கப்பட்டு இதுவரை) எமது காதுகளில் படாமலிருந்த புதிய ஓசை இதுவென்று கூறி; உள்ளம் வியந்து இதுபுகலும் - மனத்திலே வியப்புக் கொண்டு இம்மொழியைக் கூறத்தொடங்கும். (எ.று) அன்று-ஏ-அசைகள்.

Koviloor Digital Library

முடிபு - (அல்லமனாகிய) சூரியன் கரத்தால் ஆர்க்கும் மத்தள மாகிய முகில் முழக்கத்தை (மாயையாகிய) மயில் கேட்டு மனிதர் கையால் செவிப்படாதிருந்த புத்தொலி இது என்று வியந்து புகலும்; மெய்ஞ்ஞானானந்தம் - சச்சிதானந்தம், அல்லமனை சூரியனாகவும், கைகளை கிரணமாகவும், மத்தள முழக்கத்தை முகின் முழக்கமாகவும், மாயையை மயிலாகவும் உருவகித்தால் இது உருவக அணியின் பாற்படும்.

229. மோட்டிள முலையீ ரின்ன தண்ணுமை முழக்கங் காதாற்
கேட்டில மிவ்வா றுண்டென் றுரைப்பவுங் கேட்டி லேமால்
வேட்டுல கனைத்து நின்று வியக்குமிவ் விஞ்சை கற்றுக்
காட்டிய வவன்யார் கொல்லோ காண்கவென் றணங்கு
ரைத்தாள் 14

(இ.ள்) மோடுஇள முலையீர் - உயர்ந்த இளைய நகிலையுடைய தோழியர்களே; இன்னதண்ணுமை முழக்கம் காதால் கேட்டிலம் - இத்தகைய மத்தள வோசையை இதுவரைச் செவியால் கேட்டிலோம்; இவ்வாறு உண்டு என்று உரைப்பவும் கேட்டலேம் - இப்படி முழக்கப்படும் மத்தளவோசை உண்டென்று உலகத்தோர் சொல்லவும் கேட்டிலோம்; உலகு அனைத்தும் வேட்டு நின்று வியக்கும் இவ்விஞ்சை கற்று காட்டிய அவன் யார் கொல் - உலகமெல்லாம் விரும்பி நின்று ஆச்சரியப்படத்தக்க இப்பேர்ப்பட்ட வித்தையைப் பயின்று காண்பித்த அவன் யாரோ? காண்க என்று அணங்கு உரைத்தாள் - பார்ப்பீராக வென்று மாயை கூறினாள். (எ.று) ஆல்-ஓ-அசைகள்.

முடிபு- முலையீர்! இன்ன முழக்கம் கேட்டிலம் இவ்வாறு உண்டென்று உரைப்பவும் கேட்டிலேம். இவ்விஞ்சையைக் கற்றுக் காட்டிய அவன் யார் கொல். காண்க என்று அணங்கு உரைத்தாள்.

230. மாதர்வல் விரைந்து சென்று
மத்தள [1]முழக்கி நின்ற
சோதியை விழியாற் றாஞ்செய்
தொல்லைமா தவத்தாற் கண்டு
காதொடு பொருது மீளுங்
கயனெடுங் கருங்கட் செவ்வாய்க்
கோதைதன் மருங்கின் மீண்டு
வந்திது கூற லுற்றார் 15

Koviloor Digital Library

(பா.ம்) [1]முழக்கா நின்ற

(இ.ள்) மாதர்வல் விரைந்து சென்று - தோழியர் மிகவும் விரைந்து போய், மத்தளம் முழக்கி நின்ற சோதியை தாம் செய் தொல்லை மாதவத்தால் விழியால் கண்டு - மத்தளத்தை அடித்துக் கொண்டு நின்ற அல்லமதேவனைத் தாம் செய்த பழைய பெரிய தவம் காரணமாகக் கண்களால் பார்த்து; காதொடு பொருது மீளும் கயல் நெடும் கண் செவ்வாய்க் கோதை தன் மருங்கில் மீண்டு வந்து - செவிகளோடு அமர்செய்து, திரும்பும் கயல்மீன் போன்ற நீண்ட கருநிறமுள்ள கண்களையும் சிவந்த வாயையும் உடைய மாயா தேவியின் பக்கத்தே திரும்பி வந்து; இது கூறல் உற்றார் - இம்மொழிகளைச் சொல்லத் தொடங்கினார். (எ.று)

முடிபு- மாதர் விரைந்து சென்று கண்டு மீண்டுவந்து கூறல் உற்றார்.

231. **கற்றதன் விஞ்சை போலக்**
கவினுநாங் கண்ட தில்லை
விற்றொழி லனங்க வேளே
மேனிகொண் டடைந்தா னென்ன
வுற்றன னொருவ னென்ன
வொண்டொடி விளிமி னென்றாள்
மற்றவர் விளித்து வந்து
மாயைமா தெதிர்வி டுத்தார் 16

(இ.ள்) கற்றதன் விஞ்சை போல கவினும் நாம் கண்டது இல்லை - பயின்ற தனது மத்தளக் கல்வி கேட்கப்படாததுபோல அவனுடைய அழகையும் நாங்கள் பார்த்ததில்லை; வில் தொழில் அநங்கவேளே மேனி கொண்டு அடைந்தான் என்ன - வில்லினாற் செய்யும் போர்த் தொழிலையுடைய உருவில்லாத மன்மதனே உருவங் கொண்டு வந்தான் என்று சொல்லும்படி; ஒருவன் உற்றனன் என்ன - ஒரு அழகிய இளைஞன் வந்துள்ளான் என்று தோழியர் கூற; ஒண்டொடி விளிமின் என்றாள் - ஒளி பெற்ற வளையலை அணிந்த மாயை அவரை அழைமின் என்றாள்; மற்று அவர் விளித்து வந்து மாயை மாது எதிர் விடுத்தார் - பின்னர் அத்தோழியர் அழைத்து வந்து மாயாதேவியின் முன் அல்லமதேவனை விடுத்தனர். (எ.று)

முடிபு- கற்ற விஞ்சைபோல் கவினும் கண்டதில்லை. வேளே மேனி

Koviloor Digital Library

கொண்டு அடைந்தான் என்ன ஒருவன் உற்றனன் என்ன, ஒண்டொடி விளிமின் என்றார். மற்று அவர் விளித்து வந்து மாயை எதிர் விடுத்தார்.

232. அந்நிலை யலம னாமத் தண்ணலைக் கண்ட போதே
செந்நில முகுநீர் போலச் செல்விமான் மயமே யாகிப்
பொன்னவி ரொருபூம் பாவை போன்றசை வறவி ருந்தாள்
கன்னல்வின் மதவே ளெய்து கையிளைத் தருகு நின்றான் 17

(இ.ள்) அந்நிலை அலமன் நாமத்து அண்ணலைக் கண்டபோதே - மாயையை மயக்கும் அத்தகைய நிலையையுடைய அல்லமப் பேர் படைத்த பெரியோனைப் பார்த்தபொழுதே; செம்நிலம் உகும் நீர் போல செல்வி மால் மயமே ஆகி - செம்மண் நிலத்திலே விழுந்த நீர் சிவந்த நிறம் படைத்தல்போல மாயாதேவியானவள் காமத்தின் மயமே ஆகி; பொன் அவிர் ஒரு பூம்பாவை போன்று அசைவு அற இருந்தாள் - பொன்னாற் செய்யப்பட்டு ஒளி விளங்கும் அழகிய பாவை ஒன்றினைப் போன்று உடலசைவின்றி வீற்றிருந்தாள்; கன்னல் வில் மதவேள் எய்து கை இளைத்து அருகு நின்றான் - கரும்பு வில்லினையுடைய மன்மதன் அம்புகளை அவள் மேற்செலுத்தி கைசலித்து அண்மையிலே நின்றிருந்தான். (எ.று)

முடிபு- செல்வி அண்ணலைக் கண்ட போதே "செந்நிலம் உகுநீர் போல, மால்மயமேயாகி பாவை போன்று அசைவற இருந்தாள்; வேள் எய்து கையிளைத்து நின்றான்.

233. மயக்குமென் பதுபோய் மாயை மயங்குமென் றிடவி ருப்ப
வியக்குநின் றேயம் யாது வீரவே ளனையா யின்பம்
பயக்குநின் பெயர்யா தெங்குப் பயின்றுறை குவைசொல் லென்னா
நயக்குமென் மொழியார் கேட்ப ஞானவா ரிதியு ரைக்கும் 18

(இ.ள்) மாயை மயக்கும் என்பது போய் மயங்கும் என்றிட இருப்ப - மாயை எல்லாரையும் மயங்கச் செய்யும் என்று சொல்லப்படுவது போய், தான் மயங்கும் என்று சொல்லும்படி மயங்கி நிற்ப; நயக்கும் மென்மொழியார் - விரும்பப்படும் மெல்லிய சொற்களையுடைய தோழிமார்; வீரவேள் அனையாய் வியக்கும் நின்தேயம்யாது இன்பம் பயக்கும் நின் பெயர் யாது எங்கு பயின்று உறைகுவை சொல்

Koviloor Digital Library

என்னாகேட்ப - வீரத்தையுடைய மன்மதனை ஒத்தவனே! கண்டார் மருளும் உனது நாடு எது? கேட்டார்க்கு இன்பத்தைச் செய்யும் உனது பெயர் எது? எவரிடத்தில் பழகித் தங்கியிருப்பாய் சொல்வாயாக என்று கேட்ப; ஞானவாரிதி உரைக்கும் - அறிவுக் கடலாகிய அல்லமதேவன் கூறும். (எ.று)

முடிபு- மாயை மடக்குமென்பது போய் மயங்குமென்றிட இருப்ப மொழியார் வேள் அனையாய் நின் தேயம்யாது நின்பெயர் யாது? எங்கு பயின்று உறைகுவை; சொல்லென்னா கேட்ப, வாரிதி உரைக்கும். ''மாயை மயக்கமும் செய்யுமன்றே'' (சித்தியார்)

234. செல்லுறழ் குழலீ தேய மோபர தேயஞ் சூளால்
வல்லவ ரென்ன வந்தோர் வலிநிலை யல்ல வென்னு
மல்லம னென்பே ரென்று மன்புசெய் பவரி டத்திற்
புல்லுவன் றொடர்பி லாம லென்றனன் பொய்ம்மை
யில்லான் 19

(இ.ள்) செல் உறழ் குழலீ - மேகம் போலுள்ள கூந்தலையுடையீர்; தேயமோ பரதேயம் - யான் வாழும் நாடோ அயல்நாடு; மேலான நாடு; சூளால் வல்லவர் என்ன வந்தோர் வலி நிலையல்ல என்னும் அல்லமன் என்பேர் - வஞ்சினம் கூறுவதில் வல்லமையுடையோர் என்று வந்தவரின் ஆற்றல் நிலையல்ல என்னும் அல்லமன் என் பெயர்; என்றும் அன்பு செய்பவரிடத்தில் தொடர்பு இல்லாமல் புல்லுவன் - எப்பொழுதும் அன்பு செய்பவரிடத்தில் வேறொருவரிடமும் நட்பில்லாமல் பொருந்தியிருப்பேன்; எப்பொழுதும் பத்தி செய்பவரிடத்தில் பற்றில்லாமல் பொருந்தியிருப்பேன்; என்றனன் பொய்ம்மை இல்லான் - என்று கூறினான் பொய்யொழுக்கமில்லாத வனாகிய அல்லதேவன். (எ.று)

முடிபு- பொய்மையில்லான் குழலீ! தேயம் பரதேயம்: அல்லமன் என்பேர்; அன்பு செய்பவரிடத்தில் தொடர்பிலாமல் புல்லுவன் என்றனன்.

235. உலகுள விஞ்சை யெல்லா முணர்ந்தவெம் பிராட்டி
தன்பால்
மலைவற விஞ்சை கற்றோர் தம்மொடு மருவி யப்பாற்
செலவினை யொழுந்தி ருத்தி செல்வமோ டைய வென்னா
விலவித ழமுத மன்னா ரியம்பின ரிணங்கும் வண்ணம் 20

Koviloor Digital Library

(இ.ள்) இலவு இதழ் அமுதம் அன்னார் - இலவம் பூப்போன்ற உதட்டினையுடைய அமுதத்தை ஒத்த தோழியர்; ஐய - ஐயனே; உலகு உள விஞ்சை எல்லாம் உணர்ந்த எம்பிராட்டி தன்பால் மலைவு அறவிஞ்சை கற்றோர் தம்மொடு மருவி - இவ்வுலகத்திலேவுள்ள வித்தைகள் எல்லாவற்றையும் அறிந்துள்ள எமது தலைவியிடத்தே ஐயமும் விபரீதமும் நீங்கக் கல்வி கற்றோர் தம்முடன் கூடி; அப்பால் செலவினை ஒழிந்து செல்வமோடு இருத்தி என்னா இணங்கும் வண்ணம் இயம்பினர் - வேறு எவ்விடத்தும் போதலை நீக்கிச் செல்வம் நிரம்பிய வாழ்க்கையோடு தங்கியிருப்பாயாக என்று அல்லமன் மனம் இசையும்படிச் சொல்லினர். (எ.று)

முடிபு- அமுதமன்னார் ஐய! எம்பிராட்டி தன்பால் விஞ்சை கற்றோர் தம்மொடு மருவி செலவினை ஒழித்தி செல்வமோடு இருத்தி என்னா இயம்பினர்; இலவம்பூ சிவப்பாயிருக்கும் என்பதை சேயிதழ் கொம்பர் நல்லிலவங்கள் விந்தன (சிலப்பதி-12) என்னும் அடிகளாலும், அது பெண்களின் இதழுக்கு உவமையாதலைத் ''தேந்துளியிலவின் போது சேயிதழ்க்காட்டுமெங்கும்'' (நக-37) என்னும் மருதவனப் புராணத்தாலும் அறிக.

236. **தன்கனி வாய்தி றந்து சாற்றவேண் டியசொல் லெல்லா**
மின்குழு வனைய மாதர் விளம்பலு மகிழ்வுற் றீது
புன்சடை மதுகை நாதன் பூசனைப் பயனென் றெண்ணி
யின்குழன் மொழிம டந்தை யிருந்தன ளுரையா டாமல் 21

(இ.ள்) இன்குழல் மொழி மடந்தை - இனிய புல்லாங்குழல் ஓசை போன்ற சொற்களையுடைய மாயாதேவி; தன் கனிவாய் திறந்து சாற்ற வேண்டிய சொல் எல்லாம் - கொவ்வைப் பழம் போன்ற தனது வாயினைத் திறந்து அல்லம தேவனுக்குச் சொல்ல வேண்டிய மொழிகளை எல்லாம்; மின்குழு அனைய மாதர் விளம்பலும் மகிழ்வுற்று - மின்னல் திரளினை ஒத்த தோழியர் சொல்லலும் அதற்குக் களிப்படைந்து; ஈது புன்சடை மதுகை நாதன் பூசனை பயன் என்று எண்ணி உரையாடாமல் இருந்தனள் - தோழியர் இவ்வாறு கூறியது மென்மையான சடையையுடைய மதுகேசுவரனது வழிபாட்டுப் பயன் என்று நினைந்துச் சொல்லாடாமலிருந்தாள். (எ.று)

முடிபு- மடந்தை தன் வாய்திறந்து சாற்ற வேண்டிய சொல் லெல்லாம் மாதர் விளம்பலும் மகிழ்வுற்று ஈது மதுகைநாதன் பூசனைப் பயன் என்று எண்ணி உரையாடாமல் இருந்தனள்.

Koviloor Digital Library

237. மோகினி தவஞ்செய் தீன்ற முகிழ்முலை மாயை தன்கைப்
பாகுவெள் ளிலைய ளித்துப் பரிந்தரு குறும டைப்பைப்
போகியென் பவள்சி றந்த போகிபோ னடித்து நின்ற
யோகிதன் கரத்த ளிப்பித் துரியன பலவும் செய்தாள் 22

(இ.ள்) அருகு உறும் அடைபை போகி என்பவள் - பக்கத்திலே நிற்கும் வெற்றிலைப் பையேந்திய போகி என்னும் தோழியானவள்; மோகினி தவம் செய்து ஈன்ற முகிழ்முலை மாயை தன்கைபாகு வெள்ளிலை அளித்து - மோகினி யென்னும் அரசி தவம் செய்து (அருமையாய்ப்) பெற்ற கோங்கரும்பு போன்ற நகிலையுடைய மாயாதேவியின் கையில் பாக்குடன்கூடிய வெற்றிலையைத் தந்து; சிறந்த போகி போல் நடித்து நின்ற யோகி தன் கரத்து பரிந்து அளிப்பித்து - சிறந்த உலக வின்பத்தை நுகர்பவன் போல் ஆடல் நிகழ்த்திக் கொண்டு நின்ற யோகியாகிய அல்லமதேவன் கைகளிலே அன்புடன் கொடுக்கச் செய்து; உரியன பலவும் செய்தாள் - செய்யத்தகுந்த சிறப்புகள் பலவற்றையும் இயற்றினாள். (எ.று)

முடிபு - போகி என்பவள் மாயை கைபாகு வெள்ளிலை அளித்து யோகி தன் கரத்துப் பரிந்து அளிப்பித்து உரியன பலவும் செய்தாள். போகி - உலக வின்பத்தை நுகர்பவன். அல்லமாப்பிரபு தேவர் சிறந்த யோகி என்பதைக் கோரக்கருடைய சீடரான சுவாத்மராமராற் செய்யப்பெற்ற ஹடயோகப் பிரதீபிகை முதல் உபதேசத்தில் யோக சித்தி அடைந்தவர்களைத் திரட்டிச் சொல்லும் சுலோகத்தில்,

அல்லமா: பிரபுதேவர்ச கோடாசோலீச டிண்டிணி
பாநுகீநாரதே வர்ச கண்ட காபாலிக ஸ்ததா (சுலோ. 8)

என்று கூறுவதால் அறிக. அடை-இலை-ஈண்டு வெற்றிலையை உணர்த்திற்று.

238. அடிக்கம லங்கள் போற்று மடியவர் வேண்டிற் றெல்லாங்
கொடுத்தருள் கருணை வள்ளல் கொண்டகோ லத்திற் கேற்ப
நடிப்பவ னாத லாலே நாமவேற் றடங்கண் மாயை
எடுத்துத வுறுவ தங்கை யேற்றன [1]னிழிந்து ளோன்போல் 23

(பா.ம்) [1]னிழிந்தோர்போல

Koviloor Digital Library

(இ.ள்) அடிக்கமலங்கள் போற்றும் அடியவர் வேண்டிற்று எல்லாம் - பாதமாகிய தாமரை மலர்களை வழிபடும் தொண்டர் விரும்பிய எல்லாப் பொருள்களையும்; கொடுத்தருள் கருணை வள்ளல் கொண்ட கோலத்திற்கு ஏற்ப நடிப்பவன் ஆதலாலே - அவர்க்குக் கொடுக்கின்ற பேரிரக்கத்தையுடைய கொடையாளியாகிய அல்லமதேவன் தான் மேற்கொண்ட வடிவத்திற்குத் தக்கபடி ஆடுபவன் ஆகையாலே; நாமவேல்தடம் கண்மாயை எடுத்து உதவு உறுவது - அச்சத்தைத் தரும் வேற்படை போன்ற அகன்ற விழிகளையுடைய மாயாதேவி எடுத்துக் கொடுப்பதை; இழிந்துளோன் போல் அங்கை ஏற்றனன் - தாழ்ந்தவன் போல உள்ளங்கையில் பெற்றுக் கொண்டான். (எ.று)

முடிபு- வள்ளல் கொண்ட கோலத்திற்கு ஏற்ப நடிப்பவன் ஆதலாலே மாயை எடுத்து உதவுறுவதை இழிந்துளோன் போல் அங்கை ஏற்றனன்.

239. விடைக்கொடி யமலன் றன்னை
விடைகொடு புறம்போந் தங்கண்
மடக்கொடி மதவேள் வாளி
மருமம் பாய்ந் துருவ நைந்து
நடக்கரி தாகி யம்பொ
னகைமணிச் சிவிகையூர்ந்து
தொடிக்கைநுண் ணிழைம ருங்குற்
றோழியர் சூழச் சென்றாள் 24

(இ.ள்) மடக்கொடி - இளமைவாய்ந்த கொடி போன்ற மாயாதேவி; விடை கொடி அமலன் தன்னை விடை கொடு - இடபக் கொடியை உடைய குற்றமில்லாத சிவபெருமானை (வணங்கி) விடைப் பெற்றுக் கொண்டு; புறம்போந்து - கோவிலுக்கு வெளியே வந்து; அங்கண் மதவேள் வாளி மருமம் பாய்ந்து உருவ நைந்து நடக்க அரிதாகி - அப்பொழுது மன்மதன் அம்பு நெஞ்சிலே பாய்ந்து கடந்து செல்வதால் வருந்தி பல்லக்கினளவும் நன்கு நடக்க முடியாதவளாகி; அம்பொன் நகைமணி சிவிகை ஊர்ந்து - அழகிய பொன்னாலும் ஒளிவிடும் மணியாலும் செய்த பல்லக்கின்மேல் ஏறிக் கொண்டு; தொடிக்கை நுண்இழை மருங்குல் தோழியர் சூழ சென்றாள்; வளையலணிந்த கைகளையும் நுண்ணிய நூல் போன்ற இடையினையும் உடைய தோழியரெல்லாம் தன்னைச் சுற்றிவரச் சென்றாள். (எ.று)

Koviloor Digital Library

முடிபு -மடக்கொடி அமலனை (வணங்கி) விடைகொடு புறம்போந்து வேள்வாளி பாய்ந்து உருவநைந்து நடக்க அரிதாகி சிவிகையூர்ந்து தோழியர் சூழச் சென்றாள். அமலன்றன்னை என்னும் இரண்டாம் வேற்றுமைக்கு வணங்கி என்னும் முடிக்குஞ் சொல் வருவிக்கப்பட்டது. அங்ஙனமின்றி இரண்டாம் வேற்றுமையை ஏழாவதாகத் திரித்தலும் ஒன்று.

240. **நண்ணிவெண் குடைவேந் தன்பா னடம்புரி தொழிற்கி
சைந்த
தண்ணுமை யல்ல மன்றன் [1]சதுருரைத் துடனி ருப்பக்
கண்ணகல் ஞாலங் காக்குங் காவல னிசைவு கொண்டு
பெண்ணமு தனைய மாயை பிறங்குதன் மாடம் புக்காள்**
25

(பா.ம்) [1]சதிருரைச்

(இ.ள்) பெண் அமுது அனைய மாயை - பெண்களுக்குள்ளே அமிழ்தத்தை ஒத்த மாயா தேவி; வெண்குடை வேந்தன் பால் நண்ணி - (உயிர்களைக் காத்தற்கு அடையாளமாய்க் கொண்ட) வெண்மையான குடையையுடைய மமகார மன்னனிடம் சென்று; நடம்புரி தொழிற்கு இசைந்த தண்ணுமை அல்லமன் தன் சதுர் உரைத்து - நடனத்தைச் செய்யும் தனது தொழிற்கேற்ற மத்தளத் தொழில் வல்ல அல்லமனது வல்லமையைச் சொல்லி உடன் இருப்ப; கண் அகல் ஞாலம் காக்கும் காவலன் இசைவு கொண்டு - அவன் தன்னுடனிருப்பதற்கு இடமகன்ற உலகத்தைக் காக்கும் அரசனுடைய ஆணையைப் பெற்றுக் கொண்டு, பிறங்குதன் மாடம் புக்காள் - விளங்குகின்ற தனது மாளிகைக்குச் சென்றாள். (எ.று)

முடிபு- மாயை வேந்தன் பால் நண்ணி அல்லமன்றன் சதுர் உரைத்து உடனிருப்பக் காவலன் இசைவு கொண்டு தன் மாடம் புக்காள்.

241. **வலம்புரி வளைய னந்த மருங்குசூழ்ந் துறச்சி றந்த
சலஞ்சல மிருப்ப தென்னத் தமனிய மணிமா டத்திற்
பொலங்குழை மகளிர் சூழப் பூந்தவி சிருந்து விஞ்சை
நலந்தெரி பவள்போ லெங்க ணம்பனோ டுரைவி
ழைந்தாள்** 26

(இ.ள்) வலம்புரி வளை அனந்தம் மருங்கு சூழ்ந்துற சிறந்த சலஞ்சலம் இருப்பது என்ன - வலம்புரிச் சங்குகள் அளவற்றன சுற்றிலும்

Koviloor Digital Library

சூழ்ந்திருக்க, அவற்றிற் சிறந்த சலஞ்சல மென்னும் சங்கு அவற்றிடை விளங்குவது போல்; தமனிய மணிமாடத்தில் பொலன்குழை மகளிர் சூழ பூதவிசு இருந்து - பொன்னாலும் மணியாலும் செய்த மாளிகையில் பொன்னாற் செய்த காதணியையுடைய பெண்கள் தன்னைச் சுற்றிலும் இருக்க (மாயாதேவி) மலரணைமேல் வீற்றிருந்து; விஞ்சை நலம் தெரிபவள் போல் எங்கண் நம்பனோடு உரை விழைந்தாள் - அல்லமனது கல்வி நலத்தை ஆராய்பவள் போல எமது அல்லம தேவனுடன் பேசுதலை விரும்பினாள். (எ.று)

முடிபு- வலம்புரி அநந்தம் மருங்குசூழ்ந்துற சலஞ்சலமிருப்பது என்ன மாடத்தில் மகளிர் சூழ (மாயை) தவிசிருந்து விஞ்சை நலம் தெரிபவள் போல் நம்பனோடு உரைவிழைந்தாள்.

242. நினைவவன் புணர்ச்சி மேற்று
நெடுங்கணோக் கனங்க னன்னா
னனிமிகு மழகின் மேற்று
நாவெறுங் கூற்றின் மேற்று
புனைமலர் வணர்வார் கூந்தற்
பொற்றொடிக் கிதனா லன்றோ
மனமொழி மெய்யொ ருங்கு
மங்கைய ரரிய ரென்பார் 27

(இ.ள்) புனைமலர் வணர்வார் கூந்தல் பொற்றொடிக்கு - சூடப்பட்ட மலர்களையுடைய சுருண்ட நீண்ட மயிரினையுடைய பொற்றொடியாகிய மாயையினது; நினைவு அவன் புணர்ச்சி மேற்று - மனம் அல்லமனுடைய கலவியின் மேலதாயிற்று; நெடும் கண் நோக்கு அனங்கன் அன்னான் நனிமிகும் அழகின் மேற்று - நீண்ட விழிகளின் பார்வை மன்மதனை ஒத்த அல்ல மனது மிக்க பேரழகின் மேலதாயிற்று; நாவெறும் கூற்றின் மேற்று - (மேற்குறித்த இரண்டிற்கும் நடுவணதாகிய) நாவோ (கலவியையும் அழகையும் கூறாமல் கல்வி நலம் தெரிதலாகிய) பயனில்லாத சொல்லின் மேலதாயிற்று; இதனால் அன்றோ மனம் மொழிமெய் ஒருங்கு மங்கையர் அரியர் என்பார் - இக்காரணத்தினால் அல்லவா மனமும் சொல்லும் உடம்பும் ஒருமைப்பட்ட பெண்கள் கிடைத்ததற்கு அரியராய்ச் (சிலரேயிருப்பர்) என்று அறிவுடையோர் கூறுவர். (எ.று)

Koviloor Digital Library

முடிபு- பொற்றொடிக்கு நினைவு அவன் புணர்ச்சி மேற்று; நோக்கு அனங்கனன்னான் அழகின் மேற்று; நாவெறுங்கூற்றின் மேற்று; இதனாலன்றோ மனம் மொழி மெய் ஒருங்கு மங்கையர் அரியர் என்பார்; பொற்றொடி அன்மொழித் தொகை; பொற்றொடிக்கு என்னும் நான்காம் வேற்றுமையை ஆறாம் வேற்றுமையாகத் திரித்துக்கொள்க; மனமொழி மெய்யொருங்கு மங்கையரரியரென்பார் என்னும் வேற்றுப் பொருளால் எடுத்துக் கொண்ட பொருள் நிலைநாட்டப்படுதலால் இச்செய்யுள் வேற்றுப் பொருள் வைப்பணி.

ஓதலுமொன்றாவுள மொன்றாச் செய்கையொன்றாப்
பேதை நிலைமை பிடித்துப் பெரும் பவஞ்செய்மாதர்

(கந்-மார்.26)

என்னும் பகுதியை இச்செய்யுட்கருத்துடன் ஒப்பிடுக.

243. **தீதறு கழைக்க ரும்பிற்**
றீஞ்சுவை யிரத நீத்துக்
கோதினை விரும்பிக் கொள்ளுங்
கொள்கைபோ னாவி யின்கட்
போதறு மதம்விடுத் துப்புன்
மலங்கொள் ளுமா போற்
பேதையெம் பிரானான் முத்தி
பெறாதுபுன் போகம் வேட்டாள் 28

(இ.ள்) தீது அறுகழை கரும்பில் தீம்சுவை இரதம் நீத்து கோதினை விரும்பி கொள்ளும் கொள்கைபோல் - குற்றமற்ற மூங்கில் போல் வளர்ந்த கரும்பிலே இனிய சுவையையுடைய சாற்றினை விட்டுச் சக்கையை விரும்பிப் பெறும் செயல் போலவும்; நாவியின்கண் போதுறுமதம் விடுத்து புன்மலம் கொள்ளுமா போல்- புனுகுபூனையின் கண்வாரா நின்ற புணுகாகிய மதத்தை நீக்கிவிட்டு இழிந்த மலத்தினைக் கொள்ளுமாறு போலவும்; பேதை எம்பிரானால் முத்தி பெறாது புன்போகம் வேட்டாள் - அறிவற்ற மாயை எமது தலைவனாகிய அல்லமனால் வீட்டின்பத்தைப் பெற விரும்பாமல் இழிந்த உலக இன்பத்தைப் பெற விரும்பினாள். (எ.று)

முடிபு- கரும்பில் இரதம் நீத்த கோதினை விம்பிக் கொள்ளுங் கொள்கைபோய் நாவியின் கண்மதம் விடுத்து மலங்கொள்ளுமா போல் பேதை முத்தி பெறாது போகம் வேட்டாள்.

Koviloor Digital Library

244. ஒன்றிரண் டொழிய வாளி யுளவெலா மாரன் தூர்த்தான்
குன்றிரண் டனைய கொங்கைக் கோமக ளாற்றா ளாகி
மின்றிரண் டனைய மேனி விமலன்மேற் சாய்ந்து வீழ்வாள்
பொன்றிரண் டனைய மாதர் பொருந்தலா னாணி நின்றாள்
29

(இ.ள்) மாரன் ஒன்று இரண்டு ஒழிய வாளி உளவெலாம் தூர்த்தான்- மன்மதன் பொருந்திய (கிடைக்காட்டும் முல்லை கொல்லும் நீலம் என்னும்) இரண்டு அம்புகள் தவிர ஏனைய அம்புகளை எல்லாம் மாயையின்மேல் சொரிந்து மூடினான்;இரண்டு குன்று அனைய கொங்கை கோமகள் ஆற்றாள் ஆகி - இரண்டு சிறுமலையை ஒத்த நகிலைப் பெற்றிருக்கும் அரச குமாரியாகிய மாயை அவ்வம்புகளைத் தாங்க முடியாதவளாகி; மின் திரண்டனைய மேனி விமலன் மேல் சாய்ந்து வீழ்வாள் - மின்னல் ஒளி ஒன்று கூடினாற்போன்ற உடம்பினைப் பெற்றிருக்கும் அல்லமன் மேல் சாய்ந்து விழக் கருதியவள்; பொன் திரண்டனைய மாதர் பொருந்தலால் நாணி நின்றாள் - பல திருமகள் கூடி நிற்பதும் போற்றோன்றுகின்ற பெண்கள் தன்னைச் சூழ்ந்து நிற்றலால் நாணங்கொண்டு நின்றாள். (எ.று)

முடிபு- மாரன் இரண்டொழிய வாளியுளவெலாம் தூர்த்தான்; கோமகள் ஆற்றாளாகி விமலன் மேற்சாய்ந்து வீழ்வாள் மாதர் பொருந்தலால் நாணி நின்றாள்.

245. தளிரியல் காமத் தீயிற் சருகுபட் டாற்றா ளாகி
யுளநிகர் மகளிர் சில்லோ ருடன்வர வெழுந்துட் போகி
அளிமல ரளகஞ் சோர வணிமுலைத் துகில்வி லங்க
வளமலி யணையின் மீது வாயுயிர்ப் பெறிந்து வீழ்ந்தாள்
30

(இ.ள்) தளிர் இயல் காமத்தீயில் சருகுபட்டு ஆற்றாளாகி - மாந்தளிர் போன்ற நிறமுடைய மாயாதேவி காமமாகிய நெருப்பிலே சருகு அகப்பட்டாற்போல அகப்பட்டு தாங்க முடியாதவளாகி; உளம் நிகர் மகளிர் சில்லோர் உடன் வர எழுந்து உள்போகி - தன் மனத்தை ஒக்கும் பெண்கள் சிலர் தன்னோடு வர எழுந்து உட்சென்று; அளிமலர் அளகம்சோர அணிமுலைத் துகில் விலங்க - வண்டுகள் மொய்க்கும் பூக்களை அணிந்த கூந்தல் அவிழ்ந்து விழ அழகிய நகிலின் மேலுள்ள ஆடைவிலக; வளம் மலிஅணையின் மீது வாய் உயிர்ப்பு எறிந்து

Koviloor Digital Library

வீழ்ந்தாள் - வளப்பம் நிறைந்த படுக்கையின் மேல் வாயால் மூச்சு விட்டுக் கொண்டு விழுந்தாள். (எ.று)

முடிபு- தளிரியல் சருகுபட்டு ஆற்றாளாகி சில்லோர் உடன் வர எழுந்து உட்போகி அளகஞ்சோர துகில் விலங்க உயிர்ப்பு எறிந்து வீழ்ந்தாள்; தளிரியல் உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை தீய்க்கு சருகு அகப்பட்டால் அது மூளுமன்றே; அதுபோல காமத்திற்கு மாயை வாய்த்தது அக்காமம் மேலும் மேலும் வளர்வதற்கேது வாயிற்று.

246. அள்ளிக் கொளும்பே ரழகனரு
ணாமம் புகலு மவாவாலு
முள்ளக் கருத்தை உயிர்போலு
மகளிர்க் குணர்த்து முளத்தாலு
மெள்ளப் பவள வாய்திறந்து
வீடே தலமன் மேவுதற்குப்
பிள்ளைப் பிறைவா ணுதன்
மடவீ ரென்றாள் பிறரை வென்றாளே 31

(இ.ள்) பிறரை வென்றாள் - அல்லமனல்லாத பிறரை வென்ற மாயா தேவி; அள்ளிக் கொளும் பேர் அழகன் அருள் நாமம் புகலும் அவாவாலும்- கண்டார் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மனம் விரும்புவதற்கு ஏதுவான பெரிய அழகையுடைய அல்லமனது கருணையுடைய பெயரைச் சொல்ல வேண்டும் என்ற ஆசையாலும்; உள்ளம் கருத்தை உயிர்போலும் மகளிர்க்கு உணர்த்தும் உளத்தாலும்- தன்மனத்தின் நினைவை உயிர் போன்ற தோழியர்க்கு உணர்த்த வேண்டும் என்ற நினைவாலும்; மெள்ள பவள வாய்திறந்து பிள்ளைப் பிறைவாள் நுதல் மடவீர் அலமன் மேவுதற்கு வீடு ஏது என்றாள் - மெதுவாய்ப் பவளம் போன்ற வாயைத் திறந்து இளைய பிறையாகிய திங்கள் போன்ற ஒளி பெற்ற நெற்றியைப் பெற்றிருக்கும் இளமைவாய்ந்த தோழியரே அல்லமன் தங்கியிருத்தற்கு வீடு எது என்று கேட்டாள். (எ.று) ஏ-அசை.

முடிபு - பிறரை வென்றாள், அழகன் நாமம் புகலும் அவாவாலும் கருத்தை மகளிர்க்குணர்த்தும் உளத்தாலும், மெள்ள வாய் திறந்து மடவீர், அலமன் மேவுதற்கு வீடு ஏது என்றாள்.

Koviloor Digital Library

247. இறங்கு துறையி னீத்தாயிற்
றென்ன மாயை யிடத்துமயல்
பிறந்த பொழுதே யுயிரளவாய்
நின்ற தென்னும் பெற்றிமையை
யறிந்து மகளிர் நின்கருத்தை
யறிய வுணர்த்தி லல்லமற்குச்
சிறந்த மனையொன் றளிக்குதுமென்
றுரைத்துப் பின்னுஞ் செப்புவார் 32

(இ.ள்) இறங்கு துறையில் நீத்து ஆயிற்று என்ன - இறங்கும் நீர்த்துறையிலே (நிலைக்காமல் வெள்ளப் பெருக்கால்) நீந்தும் நிலை உண்டானாற்போல; மாயை இடத்து மயல் பிறந்த பொழுதே உயிர் அளவாய் நின்றது என்னும் பெற்றிமையை மகளிர் அறிந்து - மாயா தேவியினிடத்துக் காமம் தோன்றிய காலத்திலேயே உயிரைப் போக்கும் அளவாய் நின்றது என்னும் இயல்பைத் தோழியர் உணர்ந்து கொண்டு; நின் கருத்தை அறிய உணர்த்தில் அல்லமற்குச் சிறந்த மனை ஒன்று அளிக்குதும் என்று உரைத்து - உனது எண்ணத்தை யாங்கள் தெரிந்து கொள்ளக் கூறின் அல்லமனுக்குச் சிறந்த வீடொன்று யாங்கள் கொடுக்கின்றோம் என்று சொல்லி; பின்னும் செப்புவார் - மேலும் சொல்லுவார். (எ.று)

முடிபு- ''இறங்கு துறையில் நீத்தாயிற்று என்ன மாயையிடத்து மயல் பிறந்த பொழுதே உயிரளவாய் நின்றதென்னும் பெற்றிமையை'' மகளிர் அறிந்து நின்கருத்தை உணர்த்தில் அல்லமற்கு மனை அளிக்குதும் என்று உரைத்துப் பின்னும் செப்புவார்.

248. காமமுளை தோன்றிற் றுனக்கென்
றெங்கள் கருத்திற் றோன்றிற்று
வாம மணிமே கலைமருங்குல்
வடிவேன் மருட்டு மதர்விழியா
யாமு நினது நெஞ்சகமும்
வேறலே நின்னித யத்திற்
சேம மதனை நாணாமற்
செப்பு கென்றார் திருந்திழையார் 33

Koviloor Digital Library

(இ.ள்) வாமம் மணிமேகலை மருங்குல் வடிவேல் மருட்டும் மதர் விழியாய் - அழகிய மணிகளாலாகிய மேகலையைத் தரித்த இடையையும், கூறிய வேலை ஒவ்வும் களிப்பையுடைய கண்களையுடையவளே!; உனக்கு காமமுளை தோன்றிற்று என்று எங்கள் கருத்தில் தோன்றிற்று யாமும் நினது நெஞ்சகமும் வேறு அலேம் - தோழியராகிய யாங்களும் உன்னுடைய மனமும் வேறுபாட்டினை உடையோமல்லோம்; நின் இதயத்தில் சேமம் அதனை நாணாமல் செப்புக என்றார் திருந்திழையார் - நின் மனத்தில் வைத்துள்ளதாகிய கருத்தை வெட்கமுராமல் சொல்லுக என்று கூறினர் திருந்திய அணிகளையுடைய தோழியர். (எ.று)

முடிபு - திருந்திழையார், மதர்விழியாய்; காமமுளை தோன்றிற்று உனக்கென்று எங்கள் கருத்தில் தோன்றிற்று, யாமும் நினது நெஞ்சகமும் வேறு அலேம், நின் இதயச் சேமமதனைச் செப்புக என்றார்.

249. கன்னித் தன்மை யழியுமெனு
நாணு முலகங் காக்குமொரு
மன்னற் குரிய மகளென்னும்
பெருமை தானு மத்தளிகன்
றன்னைப் புணர்ந்தா ளென்று
வருந்தகாத மொழியுந்தன் னுளத்தி
லுன்னிக் கருங்கண் மடமாயை
யொன்று முரையா திருந்தனளால் 34

(இ.ள்) கன்னித்தன்மை அழியும் எனும் நாணும் - கன்னிகையாயிருக்கும் இயல்பு கெடும் என்னும் நாணத்தையும்; உலகம் காக்கும் ஒரு மன்னற்கு உரிய மகள் என்னும் பெருமை தானும் - உலகத்தைப் புரக்கும் ஒப்பற்ற வேந்தற்குரிய மகள் என்னும் பெருமையையும்; மத்தளிகன் தன்னை புணர்ந்தாள் என்று வரும் தகாத மொழியும் - (அவ்வளவு பெருமையுடையவளாய் இருந்தும்) மத்தளமடிப்பவனை கூடினாள் என்று உலகத்தாரால் சொல்லப்பட்டு வரும்பழிச் சொல்லையும்; தன் உள்ளத்தில் உன்னி - தனது மனத்திலே நினைந்து; கரும் கண்மட மாயை ஒன்றும் உரையாது இருந்தனள் - கரிய விழியையும், இளமையையும் உடைய மாயாதேவி ஒரு சொல்லும் சொல்லாமல் இருந்தாள். (எ.று) ஆல்-அசை.

Koviloor Digital Library

முடிபு- மாயை நாணும் பெருமையும், தகாத மொழியும் உன்னி ஒன்றும் உரையாதிருந்தனள்; காமவேட்கை தோன்றினாலும், அச்சத்தானாதல் நாணத்தானாதல் மடத்தானாதல் புணர்ச்சிக்கு இசையாது நிற்றல் நல்லியல்புடைய நங்கையர் குணம் என்பதைத் (தொல்-பொரு.கள.சூத்.8) இளம்பூரணர் உரையால் அறிக.

250. இறைவி யொன்று முரையாமல்
வாளா விருப்ப ஏவல்புரிந்
துறவி னின்ற சகளையெனு
மாதுபிராட் டியுரை யொடுதான்
[1]பிறவு மின்று வேறுபட்டா
ளென்னே பெண்ணே யறியேனென்
றறிவு கலங்கி [2]யொரு கலா
விலாசி யணங்கை வினாவினாள் 35

(பா.ம்) [1]பிறவுமின்றி; [2]யொருவுகலாவிலாசி

(இ.ள்) இறைவி ஒன்றும் உரையாமல் வாளா இருப்ப - தலைவி ஒன்றும் கூறாமல் சும்மாயிருந்துவிட; ஏவல் புரிந்து உறவில் நின்ற சகளை எனும் மாது - ஏவிய வேலையைச் செய்து கொண்டு நட்பாய் நின்ற சகளை என்னும் தோழியானவள்; பெண்ணே! பிராட்டி இன்று உரையொடு பிறவும் வேறுபட்டாள் என்னே அறியேன் என்று - பெண்ணே! நமது தலைவி இப்பொழுது சொல்லுடன் மனமும் செயலும் வேறுபாடடைந்தாள் இதற்குக் காரணம் என்ன யான் உணர்ந்திலே னென்று; ஒரு கலா விலாசி அணங்கை அறிவு கலங்கி வினாவினாள் - கலாவிலாசி என்னும் ஒரு தோழியை தன் உணர்வு கலங்கக் கேட்டாள். (எ.று)

முடிபு - இறைவி, உரையாமல் வாளா இருப்ப, சகளை எனும் மாது பெண்ணே! பிராட்டி இன்று உரையொடு பிறவும் வேறுபட்டாள். என்னே அறியே னென்று கலங்கி கலாவிலாசியை வினாவினாள்.

251. இனியான் மறைப்ப தென்கொனுமக்
கின்று வந்த வல்லமனாம்
தனிநா யகன்பே ரழகென்னும்
நறவை யுண்டு தரியாமற்

Koviloor Digital Library

கனிவாய் மடந்தை யுளமழிந்தா
ளென்று விலாசி கட்டுரைக்க
முனியா ளியைந்து புன்னகைகொண்
டிருந்தாண் மாயை முகங்கவிழ்ந்து 36

(இ.ள்) விலாசி நுமக்கு இனியான்மறைப்பது என் - கலா விலாசியானவள் உங்கட்கு இனிமேல் யான் மறைப்பது யாது?; இன்று வந்த அல்லமனாம் தனி நாயகன் பேர் அழகு என்னும் நறவை உண்டு தரியாமல் கனிவாய் மடந்தை உளம் அழிந்தாள் என்று கட்டுரைக்க - இன்று காலை வந்து அல்லமனாகும் ஒப்பற்ற தலைவனது மிக்க அழகென்னும் கள்ளைப் பருகி மயக்கம் தாங்க முடியாமல் கொவ்வைப்பழம் போன்ற வாயைப் பெற்றிருக்கும் நம் தலைவி மனம் அழியப் பெற்றாள் என்று உருவக அணியாற்புனைந்து கூற; மாயை இயைந்து முனியாள் முகம் கவிழ்ந்து புன்னகை கொண்டிருந்தாள் - மாயாதேவி அவள் கூறியதற்கு ஒருப்பட்டுச் சினவாமல் தலைகுனிந்து குறுநகை கொண்டிருந்தாள். (எ.று); கொல் - அசை.

முடிபு- விலாசி நுமக்கு மறைப்பது என்கொல்? இன்று வந்த அல்லம நாயகன் அழகு என்னும் நறவை உண்டு தரியாமல் மடந்தை உளம் அழிந்தாள் என்று கட்டுரைக்க. மாயை இயைந்து முனியாள். கவிழ்ந்து நகை கொண்டிருந்தாள்;

252. மாயை, யிடையை, யுளண் முலையான்,
மற்றை மாதர் போலென்று
தூய மதிஞ [1]ரனுமிதித்துச்
சொல்லு மருங்குற் றோகைதான்
வாயி னிளவெண் ணகைதோன்ற
வாளா விருப்பக் கண்டுமய
லாயி னுடைய ளெனமாத
ரறிந்தா [2]ரருத்தா பத்தியினால் 37

(பா.ம்) [1]ரனுமதித்து; [2]ரருத்தா பத்தியால்

(இ.ள்) தூயமதிஞர் - ஐயமும் திரிபுமின்றிக் கல்வி பயின்ற அறிஞர்; மாயை இடையை உளள் - மாயை என்னும் பெண் இடையைப் பெற்றிருக்கிறாள் என்றும் பிரதிக்ஞா வாக்கியத்தானும்; முலையால் - மேலே நகில் காணப்படுவதால் என்னும் ஏது வாக்கியத்தாலும்; மற்றை

Koviloor Digital Library

மாதர்போல் என்று - இடையையும் அதனால் சுமக்கப்படுகின்ற நகிலையும் பெற்றிருக்கின்ற ஏனைய பெண்களைப் போல் என்று கூறும் திருஷ்டாந்த வாக்கியத்தாலும்; அனுமிதித்து சொல்லும் மருங்குல் தோகைதான் - அனுமானப் பிரமாணத்தால் கருதி; உளதென்று கூறும் இடையையுடைய மயில் போன்ற மாயை; வாயில் இளவெள் நகை தோன்றவாளா இருப்பக் கண்டு - வாயிலே புன்சிரிப்புத் தோன்ற ஒன்றும் உரையாமல் சும்மாயிருத்தலைப் பார்த்து; ஆயின்மயல் உடையள் என அருத்தா பத்தியினால் மாதர் அறிந்தார்- ஆராயின் காம மயக்கத்தை உடையவள் என அருத்தாபத்திப் பிரமாணத்தால் தோழியர் உணர்ந்தனர். (எ.று) தான்-அசை.

முடிபு - தோகை நகை தோன்ற வாளா இருப்பக் கண்டு, ஆயின் மயல் உடையள் என மாதர் அருத்தாபத்தியினால் அறிந்தார்; மாயையின் இடை அனுமானப் பிரமாணத்தால் அறியத்தக்கது. அவள் உள்ளக் கருத்து அருத்தாபத்திப் பிரமாணத்தால் அறியத்தக்கது என்றவாறும்.

253. வல்லி யுள்ள மறிந்தனமிம்
 [1]மாயை தனையு மயக்கவல்ல
வல்ல மன்றன் கருத்தையினி
 யறிய வேண்டு மென்றவர்தாஞ்
சொல்ல வொல்லை மதமானி
 யென்பாள் யானத் தோன்றறனை
மெல்ல வுள்ள மறிவலெனச்
 சென்றாள் வினோத விமலன்பால் 38

(பா.ம்) [1]மாயைதன்னை

(இ.ள்) வல்லி உள்ளம் அறித்தனம் - (யாம்) கொடி போன்ற மாயா தேவியின் மனக்கருத்தை உணர்ந்து கொண்டோம்; இமாயைதனையு மயக்கவல்ல அல்லமன் தன் கருத்தை இனி அறியவேண்டும் என்று அவர்தாம் சொல்ல - இங்ஙனம் சிறந்த மாயா தேவியையும் மயங்கச் செய்வதில் வல்ல அல்லமனது எண்ணத்தை இனிமேல் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று அத்தோழியர் தாம் கூற; மதமானி என்பாள் யான் அ தோன்றல்தனை மெல்ல உண்மை அறிவல் எனவினோத விமலன் பால் ஒல்லை சென்றாள் - மதமானி என்னும் பெயருடைய தோழி, யான் அப்பெரியோனைக் கிட்டி, மெதுவாய் அவன் கருத்தை

Koviloor Digital Library

உணர்வேன் என்று திருவிளையாட்டை யுடைய அல்லமனிடத்தே விரைந்து சென்றாள். (எ.று)

முடிபு-அவர்தாம் வல்லி உள்ளம் அறிந்தனம் இனி அல்லமன் கருத்தை அறிய வேண்டும் என்று சொல்ல, மதமானி என்பாள், அத்தோன்றல்தனை மெல்ல உள்ளம் அறிவல் என விமலன் பால் சென்றாள்; மாயை தனையும் என்றதில் உம்மை - சிறப்பு.

254. மங்கை வருமவ் வரவையறிந்
தவளோர் [1]மாற்றம் வகுத்திடுமுன்
றங்கு மனையிற் சென்றிருப்ப
னுங்க டலைவியெனைத் தேடிற்
றிங்க ணுதல்வெண் ணகைக்கருங்கட்
செவ்வாய்த் திருவே செப்புகவென்
றெங்க டலைவ னியம்பமத
மானி யியம்பன் மேயினாள் 39

(பா.ம்) [1]மாற்றம் உரைத்திடுமுன்

(இ.ள்) எங்கள் தலைவன் மங்கை வரும் அவ்வரவை அறிந்து - எங்கள் முதல்வனாகிய அல்லமன் மதமானி வரும் அவ்வருகையின் காரணத்தை உணர்ந்து கொண்டு; அவள் ஓர் மாற்றம் வகுத்திடும்முன் - அவள் ஓர் சொல்லைக் கூறுமுன்; திங்கள் நுதல் வெள் நகைக்கரும் கண் செம்வாய் திருவே - பிறை போன்ற நெற்றியையும் வெண்மையான பல்லையும் கரிய விழிகளையும் சிவந்த வாயையும் பெற்றிருக்கும் இலக்குமி போன்றவளே!; தங்கு மனையில் சென்றிருப்பன் உங்கள் தலைவி எனைத்தேடில் செப்புக என்று இயம்ப - யான் உறையும் வீட்டில் சென்று தங்கியிருப்பேன் உங்களது முதல்வியார் என்னைத் தேடினால் சொல்வாயாக என்று கூற; மதமானி இயம்பல் மேயினாள் - மதமானி சொல்லத் தொடங்கினாள். (எ.று)

முடிபு - எங்கள் தலைவன் மங்கை வரவை யறிந்து, அவள் மாற்றம் வகுத்திடுமுன்; திருவே! தங்குமனையில் சென்றிருப்பன்: உங்கள் தலைவி தேடில், செப்புக என்று இயம்ப: மதமானி இயம்பல் மேயினாள்.

255. வீடு புறநீ வேண்டற்க வைய வெமது விளங்குமணி
மாட நினதே யிவணுறைக வரசர் கோமான் மகளிதய

Koviloor Digital Library

பீட மதனி லுனைவிடா திருத்தி யிருந்தாள் பிரிவற நீ
கூட வுறையும் விருப்புடைய ளென்றாள் குறிப்பு
வெளிப்படவே 40

(இ.ள்) குறிப்பு வெளிப்பட - (மதமானியானவள்) தன் கருத்து வெளியாகத் தோன்றும்படி; ஐய வீடு புறம் நீ வேண்டற்க - ஐயனே! நீ தங்கியிருக்கும் மனையை புறத்தே நீ விரும்பற்க; எமது விளங்கும் மணிமாடம் நினதே இவண் உறைக - எம்முடைய தோன்றும் மணிகள் பதித்த மாளிகை உன்னுடையதே யாதலின் இங்கேயே தங்குக; அரசர் கோமான் மகள் இதயபீடமதனில் உனைவிடாது இருத்தி இருந்தாள் - வேந்தர் வேந்தன் மகளாகிய மாயாதேவி தன் மனமாகிய அணையிலே உன்னை இடைவிடாமல் வைத்து கருதிக் கொண்டிருக்கிறாள்; பிரிவு அற நீ கூட உறையும் விருப்புடையள் என்றாள் - பிரிவில்லாமல் நீ தன்னுடனே தங்க வேண்டும் என்கின்ற ஆசையை உடையவள் என்று கூறினாள். (எ.று) ஏ-அசை.

முடிபு - (மதமானி) குறிப்பு வெளிப்பட, ஐய! புறம் வீடு வேண்டற்க, எமது மாடம் நினதே, (ஆதலால்) இவண் உறைக; கோமான் மகள் இதய பீடத்தில் விடாது இருத்தியிருந்தாள், பிரிவற நீ கூட வுறையும் விருப்புடையள் என்றாள்.

256. ஒன்று மில்லே னானீவிர் மிகவு முடையீ ரும்மிறைவி
வென்றி யரசர் குலமடந்தை சாதி யறியா விகிர்தன்யான்
அன்றி மகளிர் நீயிர் நான் மைந்த னென்றா லடாதம்மா
வென்று முங்க ளுடனுறைவென் றெந்தை நகைகொண்
டியம்பினான் 41

(இ.ள்) நான் ஒன்றும் இல்லேன் - நான் ஒரு பொருளும் இல்லாதவன்; நீவிர் மிகவும் உடையீர் - நீங்களோ மிகுதியான பொருளை உடையீர்; உம் இறைவி வென்றி அரசர் குல மடந்தை - உங்கள் தலைவி வெற்றியையுடைய வேந்தர் குலத்திலே பிறந்த பெண்ணாவள்; யான் சாதி அறியா விகிர்தன் - யான் இன்ன சாதி என்று உணர்ந்து கொள்ள முடியாமல் வேறுபட்டவனாயுள்ளேன்; அன்றி நீயிர் மகளிர் - அதுவல்லாமல் நீங்களோ பெண்களாய்யுள்ளீர்; நான்மைந்தன் - யான் ஆண்மகனாயுள்ளேன்; என்றால் - இங்ஙனம் கூறப்படும் காரணத்தால்; அம்மா என்றும் உங்களுடன் உறைவு அடாது என்று எந்தை நகை கொண்டு இயம்பினான் - கேட்பாயாக எப்பொழுதும்

Koviloor Digital Library

உங்களோடு சேர்ந்து வாழ்தல் தகாது என்று எம் தந்தையாகிய அல்லம தேவன் சிரித்துக் கொண்டு கூறினான். (எ.று)

முடிபு- நான் ஒன்றும் இல்லேன், நீவிர் மிகவும் உடையீர், உம் இறைவி அரசர் குலமடந்தை, யான் விகிர்தன், அன்றி நீயிர் மகளிர், நான் மைந்தன்; என்னால் என்றும் உங்களுடன் உறவு அடாது என்று எந்தை இயம்பினான்; அம்ம என்னும் இடைச்சொல் அம்மா என்று திரிந்தது. கேட்பாயாக என்னும் பொருளில் வந்துள்ளது.

257. நள்ளா தொழியி னன்றியவ
ணட்டா ளாயிற் பினைப்பேதங்
கொள்ளா ளொருவர் மாட்டுமெனி
லுயிர்போற் சிறப்பிற் கொண்டவுனை
யெள்ளா ளென்ன வேண்டுமோ
வென்சொ லெல்லா மிருந்தறிதி
வள்ளா லெனவின் மொழி புகன்றாண்
மாற்ற மறிந்த மதமானி 42

(இ.ள்) மாற்றம் அறிந்த மதமானி - கூற வேண்டிய சொற்களை உணர்ந்த மதமானி என்பாள்; வள்ளால் - வள்ளலே!; அவள் நள்ளாது ஒழியினன்றி நட்டாளாயின் பினைப் பேதம் கொள்ளாள் ஒருவர் மாட்டும் எனில் - எங்கள் தலைவி நட்புச் செய்யாது விடினன்றி நட்புச் செய்வாளேயானால் பின்பு ஒருவர் மாட்டும் வேறுபாடு கொள்ள மாட்டாள் என்றாள்; உயிர்போல் சிறப்பில் கொண்ட உனை எள்ளாள் என்ன வேண்டுமோ- தனது உயிரைப்போல் சிறப்புடைப் பொருளாகக் கருத்துட் கொண்ட உன்றனை (ஒன்றுமில்லாமை கருதியோ சாதி கருதியோ) இகழ்ச்சி செய்யாள் என்று கூறல் வேண்டுமோ; என் சொல் எல்லாம் இருந்து அறிதி என இன்மொழி புகன்றாள் - எனது மொழிகளை எல்லாம் சில காலம் பொறுத்து அறிவாயாக என இனிய சொற்களைக் கூறினாள். (எ.று)

முடிபு- மதமானி வள்ளல் அவள் நள்ளா தொழியினன்றி நட்டாளாயின் ஒருவர் மட்டும் பேதங் கொள்ளாள் எனில் சிறப்பிற் கொண்டவுனை என்றாள் என்ன வேண்டுமோ என இன்மொழி புகன்றாள்; மாற்றம் அறிந்த மதமானி அல்லமன் கூறிய இரண்டு பொருளையுடைய மாற்றத்தில் ஒரு பொருள் மாற்றத்தையே அறிந்த மதமானி.

Koviloor Digital Library

258. காரிற் சிறந்த மலர்க்குழலாய்
நின்சொ லெல்லாங் கவர்பொருளைப்
பாரித் திருந்த தேறுகிலேன்
[1]பணியொன் றொருவர் பாற்புரிவோர்
தூரத் திருந்து வருங்காலந்
துணிந்து வருத றுணிவென்றா
னாரிக் [2]கிணங்கு மவன்போல
நடித்து விடுத்து தழுவுவோன் 43

(பா.ம்) [1]பணியென்; [2]இணங்குபவன்

(இ.ள்) நாரிக்கு இணங்கும் அவன் போல நடித்து விடுத்து நழுவுவோன் - மாயா தேவியை அடைவதற்கு உடன்படும் அத்தகையோன் போல ஆடல்புரிந்துப் பின்னர் அவளை விட்டு மெல்ல விலகிச் செல்வோனாகிய அல்லமதேவன்; காரில் சிறந்த மலர்க்குழலாய் நின் சொல் எல்லாம் கவர் பொருளைப் பாரித்து இருந்த - கருமேகத்தைக் காட்டிலும் சிறந்ததும் மலரை அணிந்ததுமான கூந்தலையுடையவளே உனது மொழிகள் யாவும் இரண்டு பொருளைப் பெற்றிருந்தன; தேறுகிலேன் - உண்மைப் பொருளைத் தெளிகிலேன்; ஒருவர் பால் பணியொன்று புரிவோர் - ஒருவரிடத்திலே செயலொன்றினைச் செய்வோர்; தூரத்து இருந்து வரும் காலம் துணிந்து வருதல் துணிவு என்றான் - தூரமானயிடத்திலே தங்கியிருந்து தாம் தொழில் செய்ய வரும் காலத்தினை நிச்சயித்துக் கொண்டு அக்காலத்தில் வருதலே (நல்லதென்று பெரியோர்களால்) நிச்சயிக்கப்பெற்றது என்று கூறினான் (எ.று)

முடிபு- நழுவுவோன் குழலாய்! நின் சொலெல்லாம் கவர்பொருளைப் பாரித்திருந்த, தேறுகிலேன் ஒருவர் பால் பணியொன்று புரிவோர் இருந்து துணிந்து வருதல் துணிபு என்றான்.

259. மன்னர் மன்னன் மகடிருவோ லக்கங் காணு மைந்தரோ
[1]டுன்னை யுன்னு மவளல்ல [2]டலைவ னாக வுன்னினளா
லென்ன வன்ன மனையாய்நுந் தலைவிக் கியற்கை
யுயர்த்திடுதல்
முன்ன மென்ன வடங்கியொழு குறுத லெனக்கு முறை
யென்றான் 44

Koviloor Digital Library

(பா.ம்) [1]உன்னை உன்னுபவனல்லள்; [2]தலைவனென்றே

(இ.ள்) மன்னர் மன்னன் மகள் திருஓலக்கம்காணும் மைந்தரோடு உன்னை உன்னுமவள் அல்லள் - வேந்தர் வேந்தனாகிய மமகாரன் மகள்தான் அரசிருக்கும் நிலையைக் காண வரும் இளைஞரோ டொன்றாக உன்னை நினைத்தவளல்லள்; தலைவனாக உன்னினள் என்ன - தனக்கு முதல்வனாக எண்ணினள் என்று மதமானி கூற; அன்னம் அனையாய் - அன்னப் பறவை போன்ற நடையையுடையவளே!; நும் தலைவிக்கு இயற்கை உயர்த்திடுதல் - உங்கள் முதல்விக்குத் தன் இயல்பை உயரச் செய்தலும்; எனக்கு முன்னம் என்ன அடங்கி ஒழுகுறுதல் - எனக்கு முன் போலவே அடங்கி நடத்தலும்; முறை என்றான் - முறைமையாகும் என்று அல்லமன் கூறினான். (எ.று) ஆல் - அசை.

முடிபு - (மதமானி) மகள் திருவோலக்கங்காணும் மைந்தரோடு உன்னை உன்னுமவளல்லள் தலைவனாக உன்னினள் என்ன, அன்னம் அனையாய் நும் தலைவிக்கு இயற்கை உயர்த்திடுதலும் எனக்கு அடங்கி ஒழுகுதலும் முறை என்றான். (அல்லமன்).

260. சொற்போர் செய்து மறைப்பதினி
[1]யென்னாம் யாங்க டொழுமிறையா
நிற்போய் நின்னை எதிர்ந்தளவே
கரியுண் விளவி னிறையழிந்தாள்
கற்போ னின்ற வருந்தவரும்
காணு முன்ன முனைக்கண்ட
தற்போ னின்று தடுமாற
நினைப்போ லிருந்த தலைவியே 45

(பா.ம்) [1]யென்னா மியாங்க

(இ.ள்) யாங்கள் தொழும் இறையாய் நிற்போய் - நாங்கள் கைகுவித்து வணங்கும் தலைவனாய் நிற்பவனே; சொல்போர் செய்து மறைப்பது இனி என்ஆம் - ஒருவருக்கொருவர் மொழிகளால் வாத மிட்டு மறைப்பதால் இனிமேல் என்ன பயன் உண்டாகும்? ; கல் போல் நின்ற அருந்தவரும் காணும் முன்னம் உனைக் கண்டதன் போல் நின்று தடுமாற - அசலமாகிய மலைபோல் மனம் அசையாது நின்ற அரிய தவசிகளும் (மாயையை) செவ்வையாய்க் காண்பதற்கு முன்பே உன்னைக் கண்ட தன்னைப் போல நின்று மனம் தடுமாற; நினைப் போல்

Koviloor Digital Library

இருந்த தலைவி - உன்னைப்போல் கலங்காமல் நின்ற எங்கள் தலைவி; நின்னை எதிர்ந்த அளவே கரி உண் விளவில் நிறை அழிந்தாள் - உன்னை எதிர்ப்பட்ட மாத்திரத்தே யானைத் தீ என்னும் நோய் கொண்ட விளாம்பழத்தைப் போல் உள்ளீடாகிய நிறை என்னும் குணம் அழியப் பெற்றாள். (எ.று)

முடிபு- நிற்போய்! சொற்போர் செய்து மறைப்பது என், என்னாம்; தலைவி நின்னை எதிர்ந்தனவே, கரியுள் விளவின் நிறையழிந்தாள்; என்னாம், என்னும் சொல்லை என்-நாம் என்று பிரித்துக் கொள்வார் கந்தசாமி ஐயர்.

261. என்று மங்கை கூறுதலுந் தலைவி யிதய நீயறிவை
யன்றி யின்று [1]புதியன்யா னறிவ னோவிங் காப்தமாய்
நின்ற வுன்றன் மொழிகேட்கு மதுவே யெனக்கு நெறியென்றான்
குன்றை வென்ற குவிமுலையாள் களிப்ப வெமையாட் கொள்ளுவோன் 46

(பா.ம்) [1]புதிய நா னறிவனோவிங் கர்த்தமாய்; காப்தமா

(இ.ள்) என்று மங்கை கூறுதலும் - என்று மதமானி சொல்லுதலும்; எமை ஆள்கொள்ளுவோன் - எம்மைத் தொண்டனாகக் கொள்ளுந் தலைவனாகிய அல்லமதேவன்; குன்றை வென்ற குவிமுலையாள் களிப்ப - திரட்சியால் மலையினை வெற்றி கொண்ட குவிந்த நகிலை யுடைய மதமானி மகிழும்படி; தலைவி இதயம் நீ அறிவை - முதல்வியின் மனக் கருத்தை நீ நன்றாய் உணர்ந்திருப்பாய்; அன்றி இன்று புதியன்யான் அறிவனோ- அல்லாமல் இன்றைக்கு வந்த புதியோனாகிய யான் உணர்ந்து கொள்வேனோ; இங்கு ஆப்தமாய் நின்ற உன்றன் மொழி கேட்கும் அதுவே எனக்கு நெறி என்றான் - இவ்விடத்து உள்ள பொருளை உள்ளபடி கூறுபவளாய் நின்ற உனது மொழியாகிய ஆகம அளவையைக் கேட்டுணர்ந்து நடப்பதுவே எனக்குரிய வழியென்று கூறினான் (எ.று)

முடிபு- என்று மங்கை கூறுதலும், ஆட் கொள்ளுவோன் முலையாள் களிப்ப தலைவி இதயம் நீ அறிவை, அன்றி இன்று புதியன் யான் அறிவனோ, ஆப்தமாய் நின்ற உன்றன் மொழி கேட்கும் அதுவே எனக்கு நெறி என்றான்; குவிமுலையாளை மாயை யென்று கூறும். க.சா.

Koviloor Digital Library

ஐயர் உரை (ஆப்தன் உள்ள பொருளை உபதேசிப்பவன், தர்க்க பரி - பகுதி 50.

262. நல்ல சகுன மென்னவெதிர்
கண்டு வந்தாய் நம்பிநீ
[1]வல்ல வசுரர் சுரர் முனிவ
ரெல்லா மயங்கு மாயையையோர்
புல்லி னெளிய ளெனப்புல்ல
நின்றா யெனப்புன் முறுவலொடு
சொல்லி மகிழ்வு கொண்டிறைவி
பான்மீண் டனளச் சுடர்த்தொடியே 47

(பா.ம்) [1]வல்ல வரசுர்

(இ.ள்) அ; சுடர் தொடி - அந்த ஒளிபெற்ற வளையலையணிந்த மதமானி; நம்பி- ஆண்களிற் சிறந்தவனே!; நீ நல்ல சகுனம் என்ன எதிர் கண்டு வந்தாய் - (இங்கு வரும் பொழுது) நீ நல்ல சகுனங்களுள் எந்த சகுனத்தை எதிரே பார்த்து வந்தாய்?; வல்ல அசுரர் சுரர் முனிவர் எல்லாம் மயங்கும் மாயையை, ஓர் புல்லின் எளியள் என புல்ல நின்றாய் என- வல்லமைப் படைத்த அரக்கரும், தேவரும் முனிவரும் மற்றெல்லாரும் மயங்குவதற் கேதுவான சிறந்த மாயாதேவியை ஓர் புல்லைக் காட்டிலும் சுலபமானவள் என்று சொல்லும்படி அவளே உன்னைத் தழுவும்படி நின்றாய் என்று; புன்முறுவலொடு சொல்லி மகிழ்வு கொண்டு இறைவி பால் மீண்டனள் - குறுநகைப்புடன் கூறி களிப்புக் கொண்டு மாயாதேவியினிடத்துத் திரும்பினாள் (எ.று)

முடிபு- அச்சுடர்த்தொடி நம்பி! சகுனம் என்ன எதிர் கண்டு வந்தாய்? அசுரர் முதலான வரெல்லாம் மயங்கு மாயையை புல்லின் எளியள் என, புல்ல நின்றாய் என முறுவலொடு சொல்லி, மகிழ்வு கொண்டு மீண்டனள்.

263. அங்கு மாயை மதமானி சென்ற தற்பி னகந்தளர்ந்து
மங்கை வாய்மை கூறியுடம் படுக்கு மோமன் மகடனக்குப்
பங்க மாமென் றென்னுயிரைச் சீறி யகலப் பண்ணுமோ
விங்கு நானென் [1]செய்வளென வறியே னென்ன விருந்த
யர்வாள் 48

(பா.ம்) [1]செயவலென

Koviloor Digital Library

(இ.ள்) மாயை அங்கு மதமானி சென்றதற்பின் - மாயாதேவி யானவள், அல்லமனிடத்தே மதமானி போன பிறகு; அகம் தளர்ந்து - தன் மனம் சோர்வடையப்பெற்று; மங்கை வாய்மை கூறி உடம்படுக்குமோ - மதமானி உண்மையைச் சொல்லி சம்மதிக்கச் செய்வளோ; மன்மகள் தனக்குப் பங்கம் ஆம் என்று என் உயிரை சீறி அகலப் பண்ணுமோ - அல்லாமல் இச்செயலால் அரசன் மகளுக்குக் குற்றம் உண்டாகும் என்று கருதி எனது உயிர் போன்ற அல்லமனைச் சினந்து நீங்கச் செய்வாளோ; இங்கு நான் என் செய்வள் என அறியேன் என்ன இருந்து அயர்வாள்- இங்கிருக்கும் நான் அவள் என் செய்வாளென உணரேன் என வருந்தியிருந்து சோர்வாளாயினாள். (எ.று)

முடிபு- மாயை மதமானி சென்றதற் பின்தளர்ந்து மங்கை கூறி உடம்படுக்குமோ பங்கமாமென்று சீறி அகலப் பண்ணுமோ என் செய்வள் என அறியேன் என்ன இருந்து அயர்வாள்.

264. என்னோ வறிந்து போயினாள்
சந்து பொருந்தா தெய்துமோ
வன்னோவரசன் மகளென்ன
வஞ்சி யழக னகலுமோ
வின்னோ ரன்ன நினைவின்றி
யெனையே நினைந்திட் டிருக்குமோ
[1]பொன்னோ டுறழும் வாண்முகங்கண்
டலது துயரம் போகாதே 49

(பா.ம்) [1]பொன்னோடுறழ்வாண் மலர்முகங்கண்

(இ.ள்) என் நோவு அறிந்து போயினாள் சந்து பொருந்தாது எய்துமோ- எனது காம நோயை தெரிந்து சென்று மதமானி தூது சொல்ல வாய்க்காமல் திரும்பி வந்து விடுவாளோ; அன்றோ அரசன் மகள் என்ன அஞ்சி அழகன் அகலுமோ - அந்தோ வேந்தன் மகளாயிற்றே என்று பயந்து அல்லமன் நீங்கிவிடுவானோ; இன்னோரன்ன நினைவு இன்றி எனையே நினைந்திட்டு இருக்குமோ- இதைப் போன்ற எண்ணமின்றி என்னையே எண்ணியிருப்பானோ; பொன்னோடு உறழும் வாள்முகம் கண்டு அலது துயரம் போகாது - பொன்னுடன் உவமிக்கப்படும் ஒளி பொருந்திய (அவனது) முகத்தைக் கண்டாலல்லது எனது துன்பம் நீங்காது (எ.று) ஏ-அசை.

Koviloor Digital Library

முடிபு- மாயை போயினாள் சந்து பொருந்தாது எய்துமோ, அழகன் அரசன் மகளென்ன அஞ்சி அகலுமோ, இன்னோரன்ன நினைவின்றி எனையே நினைந்திட்டிருக்குமோ, முகம் கண்டலது துயரம் போகாதே, என்னைப் பலவும் நினைந்து இருப்ப.

265. என்னப் பலவு நினைந்துமட மாயை யிருப்ப விகுளைமாா்
மின்னற் கருங்க ணிடனாடக் குறிக ணல்ல விளங்குதலாற்
கன்னிக் குவகை கைகூடு மென்ன விருக்குங் [1]காலைதனி
லன்னப் பெடைபோ னடந்துமத மானி களிப்புற் றடைந்
தனளால்

(பா.ம்) [1]காலையினி

(இ.ள்) மடமாயை என்ன பலவும் நினைந்து இருப்ப - இளைய மாயை இங்ஙனம் பலவற்றையும் எண்ணி வருந்தியிருப்ப; இகுளைமாா் கன்னிக்கு மின்னல் கரும் கண் இடன் ஆட குறிகள் நல்ல விளங்குதலால் - தோழியரானவா் மாயைக்கு ஒளி வாய்ந்த கரிய விழி இடப்பக்கம் துடிக்க நிமித்தம் நல்லவாய் விளங்குதலாகிய காரணத்தினால்; உவகை கைகூடும் என்ன இருக்கும் காலைதனில்- மகிழ்ச்சிக்கேதுவான அல்லமன் புணா்ச்சி வாய்க்கும் என்று எண்ணிக் கொண்டிருக்குங் காலத்திலே; மதமானி அன்னப் பெடைபோல் நடந்து களிப்புற்று அடைந்தனள்- மதமானியானவள் பெண்ணன்னம் போல் நடந்து மகிழ்வுற்று அவ்விடத்தைச் சாா்ந்தாள் (எ.று) ஆல்-அசை.

முடிபு- கன்னிக்குக் கண் இடனாடகுறிகள் நல்ல விளங்குதலால் இகுளைமாா் உவகை கைகூடும் என்ன விருக்குங்காலைதனில், மதமானி நடந்து களிப்புற்று அடைந்தனள்; என்னப்பலவு, இருப்ப, என்னும் பகுதி மேற்பாட்டிலே கூட்டி முடிபு எழுதப்பட்டது. உவகை என்பது அதற்கேதுவான புணா்ச்சியைக் குறித்தது. உவகைக்குப் புணா்ச்சி ஏதுவாதலை செல்வம் புலனே புணா்வு விளையாட் டென்றல்லல் நீத்த உவகை நான்கே (மெய்.) என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறிக.

266. வண்டா மரைபோன் முகமலா்ந்து
வந்தாள் சென்ற மதமானி
கண்டாா் மகளி ரவனுள்ளங்
காயோ பழமோ கழறென்றாா்
தண்டாா் வனைமென் குழன்மடவீா்

Koviloor Digital Library

பழமே யென்று சாற்றினாள்
கொண்டா ருவகை யவர்மாயை
யுவகை யாரே கூறுவார் 51

(இ.ள்) சென்ற மதமானி வண்தாமரை போல் முகம் மலர்ந்து வந்தாள்-அல்லமனிடம் சென்ற மதமானியானவள் (தான் போன காரியம் முகக் குறியாலேயே விளங்கும்படி) செழுமையான தாமரை மலர் போல் முகம் மலர்ந்து வந்தனள்; மகளிர் கண்டார் அவன் உள்ளம் காயோ பழமோ கழறு என்றார் - தோழியர் பார்த்து அல்லமனுடைய மனம் காய் போல் வன்மையாய் உள்ளதோ கனிபோல் நெகிழ்ந்து பயன் படுவதாய் உள்ளதோ சொல்லுவாயாக என்றனர்; தண்தார்வனை மென்குழல் மடவீர் பழமே என்று சாற்றினாள்- குளிர்ந்த மாலையைச் சூடிக் கொண்டுள்ள மெல்லிய கூந்தலையுடைய பெண்களே! கனியேதான் என்று சொன்னாள். அவர் உவகை கொண்டார் - தோழியர் மகிழ்ச்சியடைந்தனர்; மாயை உவகையை யாரே கூறுவர்- மாயையின் மகிழ்ச்சியை யார் சொல்லுவர் (எ.று)

முடிபு- சென்ற மதமானி முகமலர்ந்து வந்தாள், மகளிர் கண்டார் அவன் உள்ளம் காயோ பழமோ கழறு என்றார் மடவீர் பழமே என்று சாற்றினாள். அவர் உவகை கொண்டார். மாயை உவகையாரே கூறுவர். கண்டார் முற்றெச்சம். முகக்குறியாலேயே பழம் என்று அறியலாயிருக்க "காயோ பழமோ" என்று ஏனைய தோழியர் கேட்டதனால் அவரை மடவீர் என்று விளித்தாள்.

267. மன்ன னறியி என்னாமோ
வறியோ மிதனை மறைமினெனப்
பன்னி மகளி ருளத்தடக்கிக்
கங்குல் வரவு பார்த்திருந்தார்
அன்ன மனையா ளல்லமன்ற
னுடம்பா டுரைத்த வம்மொழியே
கன்னல் மதவே ளெய்தபசும்
புண்ணின் மருந்தாக் களிப்புற்றாள் 52

(இ.ள்) மகளிர் இதனை மன்னன் அறியின் என்னாமோ அறியோம்- தோழியர் இச்செய்தியை வேந்தன் உணர்ந்தால் என்னதண்டனை உண்டாகுமோ உணர்ந்திலோம்; மறைமின் என பன்னி- இச்செய்தியை மறைத்து வையுங்கள் எனச் சொல்லி; உளத்து அடக்கி

Koviloor Digital Library

கங்குல்வரவு பார்த்து இருந்தார் - மனத்திலேயே அடக்கி வைத்து இரவின் வருகையை நோக்கிக் கொண்டு இருந்தனர்; அன்னம் அனையாா் அல்லமன்றன் உடம்பாடு உரைத்த அமொழியே கன்னல் மதவேள் எய்த பசும் புண்ணின் மருந்தா களிப்பு உற்றாள்- அன்னப் பறவை போன்ற நடையையுடைய மாயாதேவி அல்லமனது சம்மதத்தைச் சொன்ன அச்சொல்லே கரும்பு வில்லையுடைய மன்மதன் அம்பு செலுத்தியதால் தோன்றிய புதுப்புண்ணிற்கிட்ட மருந்தாகக் கொண்டு மகிழ்வுற்றனள். (எ.று)

முடிபு- மகளிர் இதனை மன்னன் அறியின் என்னாமோ அறியோம் மறைமின் எனப்பன்னி உளத்து அடக்கிக் கங்குல் வரவு பார்த்திருந்தார். அன்னம் அனையாள் அல்லமன்றன் உடம்பாடு உரைத்த அம்மொழியே வேள் எய்த புண்ணின் மருந்தாகக் களிப்புற்றாள்.

268. புனலின் விளையா டிருமைந்தர்
தம்மு ளெழுந்து போயோடிப்
புனலின் விழுவான் போல்விழுந்த
[1]தொளிஞா யிறுபோய்ப் புணரியிடைப்
புனலின் விழுந்து மூழ்குபுவந்
தெழுவான் போலக் குணாதுகடற்
புனலின் மிசைவந் தெழுந்ததிருள்
பருகிப் புதுவெண் டிங்களே. 53

(பா.ம்) [1]தொளிர்

(இ.ள்) புனலின் விளையாடு இருமைந்தர் தம்முள் - நீரிலே விளையாடும் இரண்டு இளைஞர்களுக்குள்; எழுந்து போய் ஓடி புனலின் விழுவான் போல் - நீரிலிருந்து எழுந்து சென்று ஒடி நீரிலே விழுந்து முழுகும் ஒருவனைப் போல; ஒளி ஞாயிறு போய் புணரியிடை விழுந்தது - வெயிலையுடைய சூரியன் சென்று மேலைக் கடலில் விழுந்தது; புளலின் விழுந்து மூழ்குபு வந்து எழுவான் போல- நீரிலே விழுந்து மூழ்கி மற்றோரிடத்திலே வந்து எழுகின்ற மற்றொருவனைப் போல; புதுவெண்திங்கள் இருள் பருகி குணாதுகடல் புனலின் மிசை வந்து எழுந்தது - புதிய வெண்மையாகிய மதி இருளினைப் போக்கி கீழைக் கடனீரின் மேல்வந்து தோன்றிற்று (எ.று) ஏ- அசை

முடிபு - புனலின் விளையாடு இருமைந்தர் தம்முள், எழுந்து போய் ஓடி புனலின் விழுவானைப் போல ஞாயிறு போய் விழுந்தது; புனலின்

Koviloor Digital Library

விழுந்து மூழ்குபு வந்து எழுவானைப் போல திங்கள் இருள் பருகி வந்து எழுந்தது.

269. தொக்க கமலம் வாய்மூடக்
கள்ளுண் டிடறுஞ் சுரும்பினங்கண்
[1]மொய்க்கு நறுமென் குவளைவாய்
திறந்த முகில்துஞ் சிளம்பொழிலிற்
புக்க மணிநீர்க் கயத்திரைதேர்
குருகு விண்மீன் பூத்தனவாற்
செக்க ரெனுஞ்செந் தீயினிடைப்
பொரிந்து தெறித்த பொரிபோல 54

(பா.ம்) [1]மொய்க்கு

(இ.ள்) தொக்க கமலம் வாய் மூட - கூட்டமாகிய தாமரையினது மலர்களாகிய வாய் மூடிக்கொள்ள; கள்உண்டு இடரும் சுரும் பினங்கள் மொய்க்கு குவளைவாய் திறந்த - தேனை உண்டு மயங்கும் வண்டின் கூட்டங்கள் சூழும்படி குவளையினது மலர்களாகிய வாய்திறந்தன; மணிநீர் கயத்து இரைதேர் குருகு முகில் துஞ்சு இளம் பொழிலில் புக்க- அழகிய புனலையுடைய தடாகங்களிலே உணவை ஆராயும் நீர்வாழ் பறவைகள் மேகம் தங்கும் இளைய சோலையின் கண்ணே புகுந்தன; செக்கர் எனும் செம் தீயினிடை பொரிந்து தெறித்த பொரி போல விண்மீன் பூத்தன - செவ்வானம் என்னும் சிவந்த நெருப்பினிடத்தே பொரிந்து; சிந்திய நெற்பொரிபோல் வானத்திலே விண்மீன்கள் பூத்தன (எ.று)

முடிபு- கமலம் வாய் மூட சுரும்பினங்கள் மொய்க்க, குவளை வாய் திறந்த; குருகு பொழிலில் புக்க; பொரிபோல் விண்மீன் பூத்தன.

270. தூய சோதிப் பகலவன்
போய்மேலைப் புணரி தோய்ந்திடலு
மாயை நாமங் கொண்டிருந்த
மணிமென் கலாப மயிலைவா
னாய கோம்பி கண்டுசினந் துடலஞ்
சிவப்புற் றடங்கல் போன்
மேய மாலைப் பொழுதிலிருஞ்
செக்கர் தோன்றி வீழ்ந்ததால் 55

Koviloor Digital Library

(இ.ள்) தூய சோதி பகலவன் போய் மேலை புணரி தோய்ந்திடலும் - நல்ல ஒளியையுடைய ஞாயிறு சென்று மேற்குக் கடலைப் படிந்திடலும்; வான் ஆய கோம்பி மாயை நாமம் கொண்டு இருந்த மணிமென் கலாப மயிலைக் கண்டு சினந்து - ஆகாயம் என்னும் பச்சோந்தியானது மாயை என்னும் பெயர் கொண்டிருந்த நீலமணி போன்ற மெல்லிய தோகையையுடைய மயிலைப் பார்த்து வெகுண்டு; (இரத்தினங்களாற் செய்த கலாபம் என்னும் அணியை அணிந்துள்ள மயில் போன்றவளை); உடலம் சிவப்பு உற்று அடங்கல் போல் - தன்மேனி சிவக்கப் பெற்று அந்நிறம் அடங்குதலைப் போல; மேயமாலைப் பொழுதில் இரும் செக்கர் தோன்றி வீழ்ந்தது - பொருந்திய மாலைக்காலத்திலே பரந்த செவ்வானம் தோன்றி அடங்கியது (எ.று) ஆல்.அசை

முடிபு- பகலவன் புணரி தோய்ந்திடலும் வானாய கோம்பி மாயை யாகிய மயிலைக் கண்டு சினந்து சிவப்புற்று அடங்கல் போல் செக்கர் தோன்றி வீந்தது; மாயையை மயிலாகவும் வானத்தை கோம்பியாகவும் உருவகித்தலால் இது உருவக அணி.

271. காலைய ரும்பிப் பகலெல்லாம்
போதா யிருந்த காமமலர்
மாலை மலர்ந்து பொறாம லொரு
மாயை நாம மணிவல்லி
மூலை யிருந்து புறம்போந்து
விரிவெண் ணிலாமென் முற்றத்திற்
பீலி மஞ்ஞை யென வீழ்ந்து
மதநோய் மிகவாய்ப் பிதற்றுமால் 56

(இ.ள்) காலை அரும்பி பகல் எல்லாம் போது ஆய் இருந்த காமமலர்- (மதுகேசுரனது கோயிலில்) இன்றைய காலை நேரத்தில் தோன்றி பகற்காலம் முழுவதும் வளரும் பருவமாயிருந்த காமமாகிய மலர்; மாலைமலர்ந்து- மாலைக் காலத்திலே அலர்ந்ததால்; பொறாமல் ஒருமாயை நாமமணிவல்லி மூலையிருந்து புறம் போந்து - அதனைத் தாங்க மாட்டாமல் ஒப்பற்ற மாயை என்னும் பெயர் கொண்டிருந்த அழகிய கொடியானது உள்ளேயிருந்து வெளியே வந்து; விரிவெண்நிலா மென்முற்றத்தில் பீலிமஞ்ஞை என வீழ்ந்து மதநோய் மிக வாய் பிதற்றும் - வெண்ணிலா விரியும் மெல்லிய முன்றிலில்

Koviloor Digital Library

கலாபத்தையுடைய மயிலைப போல் விழுந்து காம நோய் மிகுதியான படியால் வாயினால் பிதற்றத் தொடங்கிற்று (எ.று)

முடிபு- அரும்பி இருந்த காமமலர் மலர்ந்து மணிவல்லி பொறாமல் புறம்போந்து என வீழ்ந்து பிதற்றும்; உலகத்துக் கொடி களெல்லாம் ஒருநாள் அரும்பு வைத்து மற்றொருநாள் போதாகி வேறொருநாள் மலருமன்றே; இம்மாயைக் கொடியில் காமம் காலையில் அரும்பி பகலில் பேரரும்பாகி மாலையிலே மலர்ந்தது. காமத்தை மலராகவும், மாயையை வல்லியாகவும் உருவகித்தலால் இது உருவக அணி;

ஒப்பு-

காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரு மிந்நோய் (திருக்குறள்)

272. தாய்வா யடைந்து மிகுந்தலையை
மோதி மோதிச் சலித்தலறக்
காய்வாய் நிலவே யுடன்பிறந்தா
ளிருந்து வாழுங் கடிமனையை
நீவா னெழுந்து வந்தழிப்பா
யென்றா லந்தோ நிலையின்றித்
தேய்வாய் நின்னோ டியைபில்லா
வென்னை யென்ன செய்யாயே 57

(இ.ள்) நிலவே தாய்வாய் அடைந்து மிகும் தலையை (மிகுந்து அலையை); மோதி மோதி சலித்து அலற காய்வாய்- திங்களே நீதாயைக் கிட்டி மிகவும் தலையிலே அடித்துக் கொண்டு அசைந்து அழும்படி அவளைச்சினந்து கொள்வாயே; (கடலாகிய தாயினிடத்தே தோன்றி பெருகி அலையை வீசி வீசி அசைந்து பேரொலி செய்யும்படி நிலவெறிப்பாய் என்பது கருத்து) உடன் பிறந்தாள் இருந்து வாழும் கடிமனையை நீவான் எழுந்து வந்து அழிப்பாய்- உன்னுடன் தோன்றியவளாகிய இலக்குமி தங்கியிருந்து வாழும் மணமுள்ள வீடாகிய தாமரை மலரை நீ ஆகாயத்திலே பறந்து வந்து அழித்து விடுவாய்; என்றால்- தாய்க்கும் உடன் பிறந்தாளுக்கும் இங்ஙனம் தீமை செய்வாயென்றால்; நின்னோடு இயைபு இல்லா என்னை என்ன செய்யாய்- உன்னோடு உறவில்லாத என்னை என்ன துன்பந்தான் செய்ய மாட்டாய்?; அந்தோ நிலை இன்றி தேய்வாய் - (இங்ஙனம் தீங்கு

Koviloor Digital Library

செய்வதால்) ஐயோ ஒரு நிலையாயிருத்தலின்றி உடம்பு தேயப் பெறுவாய் (எ.று)

முடிபு - நிலவே தாய்வாய் அடைந்து மோதி மோதி சலித்து அலற காய்வாய், உடன் பிறந்தாள் மனையை எழுந்து வந்து அழிப்பாய், எனவே நின்னோடு இயைபில்லா என்னை என்ன செய்யாய்? அந்தோ நிலையின்றித் தேய்வாய்.

273. **தக்கன் மகத்தி லொருஞான்று தாளிற் படுநீ தலையேறி**
மிக்க முனிவர் மந்திரநீ ரிரைப்ப வின்னு மீண்டிலாய்
நக்கன் பவள வாய்ப்பட்டுக் களத்தே யிறங்கு நஞ்சு நினை
யொக்கு மென்ப தறியாமை யன்றோ வொளிர்வெண்
மதியமே 58

(இ.ள்)ஒளிர்வெண் மதியமே - விளங்கும் வெண்டிங்களே; ஒரு ஞான்று தக்கன் மகத்தில் நக்கன் தாளில் படும் நீ - ஒருகாலத்திலே தக்கன் செய்த வேள்வியில் சிவபெருமானது காலைத் தீண்டும் நீ; தலை ஏறி மிக்க முனிவர் மந்திர நீர் இறைப்ப இன்னும் மீண்டிலாய் - அதற்கு முன்பாகவே அவரது தலையில் ஏறிக்கொண்டு சிறந்த முனிவரெல்லாம் மந்திரத்தோடு கூடிய தண்ணீரைச் சிந்தவும் இன்னும் இறங்கினாயல்லை; நக்கன் பவளவாய் பட்டு களத்தே இறங்கும் நஞ்சு நினை ஒக்கும் என்பது அறியாமை அன்றோ - அச்சிவபெருமானது பவளம் போன்ற வாயிலே முதற்கண் பட்டுப்பின் கண்டத்தே இறங்கியவிடம் உன்னை ஒக்கும் என்று சொல்வது அறிவற்ற தன்மை ஆகும் அல்லவோ (எ.று)

முடிபு- மதியமே! தக்கன் தாளிற் படும் நீ தலையேறி நீர் இறைப்ப இன்னும் மீண்டிலாய்; நக்கன் வாய்ப்பட்டு இறங்கும் நஞ்சு நினை ஒக்கும் என்பது அறியாமையன்றோ; திங்களாகிய நஞ்சு எதிர்காலத்திலே தாளில்படக்கூடியதாய் இருந்தும் அதற்கு முன்பே தலையில் ஏறி மந்திரம் வல்ல சிறந்த முனிவர் எல்லாம் மந்திர நீரிறைப்பவும் இறங்கிற்றில்லை, நஞ்சோ பவள வாயிலே பட்டு எவரும் மந்திரிக் காமலேயே இறங்கக்கூடிய தாயிற்று. அதனால் நஞ்சு திங்களை ஒவ்வாது என்று இரண்டிற்கும் வேற்றுமை கூறப்பட்டதால் இது வேற்றுமையணியாகும்.

274. **அங்க மதினஞ் சிருத்தினோ**
னங்க மல்லாவவிர் சடைமேற்

Koviloor Digital Library

றங்க நினைவைத் திட்டதுநின்
கொடுமை கருதித் தானன்றோ
பொங்கு மமுத கலையென்ன
நின்னைப் புகறல் வெண்டிங்கா
ளிங்கு மனிதர் காராட்டை
வெள்ளா டென்ப [1]தொக்குமால் 59

(பா.ம்) [1]தேய்க்குமால்

(இ.ள்) வெண்திங்கள் - வெண்மையான மதியே; அங்கமதில் நஞ்சு இருத்தினோன் - வாய் கண்டம் என்று சொல்லப்படும் சிறந்த உறுப்பில் விடத்தை வைத்த சிவபெருமான்; அங்கம் அல்லா அவிர்சடைமேல் தங்க நினை வைத்திட்டது - சிறந்த உறுப்பல்லாத ஒளிவிளங்கும் சடையின் மேலே தங்கும் படி உன்னை வைத்திருப்பது; நின் கொடுமை கருதித்தான் அன்றோ- உனது கொடுஞ்செயலைக் கருதிய அவ்வளவேயன்றோ; நின்னை பொங்கும் அமுத கலை என்ன புகறல்- உன்னை உலகத்தோர் அமுதம் பொங்கும் கலைமதி என்று சொல்லுதலானது; இங்கு மனிதர் காராட்டை வெள்ளாடு என்பது ஒக்கும்- இவ் உலகத்திலே மக்கள் கருப்பு நிறமுள்ள ஆட்டினை வெள்ளாடு என்று சொல்லும் மங்கல வழக்கையே ஒவ்வும் (எ.று) (ஆல்-அசை)

முடிபு- திங்காள்! அங்கமதில் நஞ்சிருத்தினோன் நினை சடைமேல் தங்க வைத்திட்டது நின் கொடுமை கருதித்தானன்றோ; நின்னை அமுத கலையென்னப் புகறல் மனிதர் காராட்டை வெள்ளாடு என்பது ஒக்கும்.

275. உருப்ப மிகுவன் றழல்சிவப்புற்
றுலகர் காண [1]வொளிதரவு
நெருப்பு வெண்மை யென்பது
[2]நன்னியாயர் நின்னைக் குறித்தன்றோ
பொருப்பு நறுஞ்சந் தனச்சேறு
புலர்ந்து பொரியப் பூவணையும்
விருப்ப மலருங் கொளுந்தவழல்
வீசி எழுந்த வெண்டிங்காள் 60

(பா.ம்) [1]வொளிதாவு; [2]நன்னியாயம்

Koviloor Digital Library

(இ.ள்) பொருப்பு நறும் சந்தனச் சேறு புலர்ந்த பொரிய பூ அணையும் விருப்ப மலரும் கொளுந்த அழல்வீசி எழுந்த வெண் திங்கள்- மலையில் தோன்றிய மணமுள்ள சந்தனக் குழம்பு காய்ந்து பொரியவும், மலர்ப்படுக்கையும் விரும்பப்படும் சூடிய மலரும் எரியும் படி நெருப்பை வீசிக் கொண்டு தோன்றியுள்ள சந்திரனே; உருப்பம் மிகுவன் தழல் சிவப்ப உற்று உலகர் காண ஒளிதரவும் வெப்பம் மிகுந்த வலிய நெருப்பானது சிவந்த நிறத்தை அடைந்து உலகத்தோர் அறிய செவ்வொளியைத் தரவும்; நல்நியாயர் நெருப்பு வெண்மை என்பது நின்னைக் குறித்து அன்றோ- நல்ல தருக்க நூலுணர்ந்தோர் நெருப்பு வெண்மையான நிறமுடையது என்று கூறுவது உன்னைக் கருதியல்லவா (எ.று)

முடிபு- சந்தனச்சேறு புலர்ந்து பொரிய, பூவணையும் மலரும் கொளுந்த அழல்வீசி எழுந்த திங்காள்! உலகர்காண, அழல் சிவப்புற்று ஒளிதரவும் நியாயர் நெருப்பு வெண்மை என்பது நின்னைக் குறித்தன்றோ.

276. இன்றோ ருலகி லெனக்கொன்று பிறர்க்கொன் றாகி
யிருக்கின்றாய்
நன்றோ வுனக்கு மதியமே ஞாயி றேபோல் வாழாமன்
முன்றோ கையர்கள் யாவரையு மொப்பக் காணா
முயற்சியா
லன்றோ தேய்ந்து போகின்றா யந்தோ வதனை யறியாயோ
61

(இ.ள்) மதியமே ஞாயிறே போல் வாழாமல் இன்று ஓர் உலகில் எனக்கு ஒன்றும் பிறர்க்கு ஒன்று ஆகி இருக்கின்றாய் - திங்களே! சூரியனைப் போல ஓரியல்பாயில்லாமல் இன்றைய நாள் ஒரே உலகத்தில் எனக்குத் துன்பம் புரிந்தும் மற்றையோர்க்குத் துன்பம் புரியாமலும் இருக்கின்றாய்; உனக்கு நன்றோ- இப்படி இருத்தல் உனக்கு நன்மை தருமோ? ; முன் தோகையர்கள் யாவரையும் ஒப்பக் காணா முயற்சியால் அன்றோ ஞாயிறே போல் வாழாமல் தேய்ந்து போகின்றாய்- முன் ஒரு காலத்திலே உன் மனைவியரெல்லாரையும் சமமாய் நோக்காத செயலாலல்லவா சூரியனைப் போல் ஒருதன்மையாய் வாழாமல் தேய்ந்து போகின்றாய்; அந்தோ அதனை அறியாயோ - ஐயோ இன்னும் அதனை உணர்ந்திலையோ (எ.று)

Koviloor Digital Library

முடிபு- மதியமே ஞாயிறே போல் வாழாமல் எனக்கொன்றும் பிறர்க்கொன்றாகியிருக்கின்றாய்; உனக்கு நன்றோ? முன் தோகையர் யாவரையும் ஒப்பக் காணா முயற்சியால் அன்றோ ஞாயிறே போல் வாழாமல் தேய்ந்து போகின்றாய்! அந்தோ அதனை அறியாயோ; ஞாயிறே போல் வாழாமல் என்பதை இரண்டிடத்துங்கூட்டுக.

277. கொல்லா நோன்பு முனிமலையிற்
றோன்றி யென்னைக் கொல்கின்றாய்
பொல்லா மந்த மாருதமே
யென்னோ கருணை பூண்டிலாய்
சொல்லாய் திருப்பாற் கடலினிடைத்
தோன்றுங் கடுவிற் றன்குணமே
யல்லா லமுத குணமுண்டோ
நின்னை வெறுப்ப தறிவன்றே 62

(இ.ள்) பொல்லா மந்த மாருதமே - கொடிய மந்தகுணம் படைந்த தென்றல் காற்றே; கொல்லா நோன்பு முனிமலையில் தோன்றி என்னைக் கொல்கின்றாய் - ஓர் உயிரை வருத்த எண்ணாத விரதத்தினையுடைய அகத்திய முனிவர் வாழும் பொதிய மலையிற் பிறந்திருந்தும் என்னை வருத்துகின்றாயே; என்னோ கருணைபூண்டிலாய் - என்ன காரணம் நீ அருட்குணத்தை மேற்கொள்ளாமலிருக்கின்றாய்?; திருப்பாற் கடலினிடைத் தோன்றும் கடுவில் தன்குணமே அல்லால் அமுதகுணம் உண்டோ சொல்லாய் - சிறந்த பாற்கடல் கண் பிறக்கும் நஞ்சில் தனது குணமே அல்லாமல் அமிழ்தத்தின் பண்பு இருக்குமோ கூறுவாயாக; நின்னை வெறுப்பது அறிவு அன்று - மந்த குணம் படைத்து அருளைக் கல்லாத உன்னை வெறுத்துக் கொள்வது அறிவு அல்லவே (எ.று) ஏ-அசை

முடிபு- மாருதமே! கொல்லா நோன்பு முனிமலையில் தோன்றி என்னைக் கொல்கின்றாய்; என்னோ கருணை பூண்டிலாய் திருப்பாற் கடலில் தோன்றும் கடுவில் தன்குணமேயல்லால் அமுதகுணம் உண்டோ சொல்லாய்; நின்னை வெறுப்பது அறிவு அன்று; கொல்லுதல் ஈண்டு வருத்துதல் என்னும் பொருட்டு.

278. உயிர்த்த பொழுதே நின்குரல்கே
ளாமுன் னோடிற் றீன்றதாய்

Koviloor Digital Library

நயத்தின் வளர்த்த தாய்குரல்
கேட்டலுமே [1]நடுங்கத் துரந்ததாற்
பயந்த மலர்ப் [2]பூக் காவகத்தி
லிருந்து பல்காற் கூவினாற்
செயிர்த்து நின்னைக் குயிலேநான்
வெறுத்தல் செப்ப வேண்டுமோ 63

(பா.ம்) [1]நடுங்கி; [2]பூங்கா

(இ.ள்) குயிலே ஈன்ற தாய் உயிர்த்த பொழுதே நின்குரல் கேளாமுன் ஓடிற்று - குயிலே உன்னைப் பெற்றதாய் உன்னை முட்டையாய்ப் பெற்ற காலத்திலே உன் குரலோசையைக் கேளாமுன்னரேயே உன்னைப் பிரிந்து ஓடிவிட்டது; நயத்தில் வளர்த்த தாய் குரல் கேட்டலுமே நடுங்க துரந்தது - இனிமையாய் உன்னை வளர்த்த காகமாகிய செவிலித்தாயோ, உனது குரலோசையைக் கேட்டவுடனேயே அஞ்சத் துரத்தி விட்டது; பயந்த மலர் பூ கா அகத்தில் இருந்து பல்கால் கூவினால் - பயனைச் செய்யும் பூக்களையுடைய அழகிய சோலையின் இடத்தே தங்கியிருந்து பலமுறை கூவினால்; செயிர்த்து நின்னை நான் வெறுத்தல் செப்ப வேண்டுமோ - சினந்து உன்னை நான் வெறுத்துச் சொல்லுதலைச் சொல்ல வேண்டுமோ (எ.று) ஆல்-அசை

முடிபு- குயிலே ஈன்றதாய் நின்குரல் கேளாமுன் ஓடிற்று, வளர்த்ததாய் குரல் கேட்டலுமே நடுங்கத் துரந்தது; காவகத்திலிருந்து பல்காற் கூவினால் நான் நின்னைச் செயிர்த்து வெறுத்தலைச் செப்பவும் வேண்டுமோ.

279. கன்னற் சிலையா யென்மனத்தைக்
கலக்குங் காளைக் கவின்கண்டு
முன்னிற் பதற்கு நாணியோ
விங்கே நின்று முனிகின்றாய்
தன்னிற் பெரிய ரில்லையெனு
மவனைச் சமரிற்றாக் காமல்
[1]அந்நர் தளிரின் மெலியாரை
யடர்த்தா யாண்மை நன்றரோ 64

(பா.ம்) [1]னன்னர்த்தளிரின்

Koviloor Digital Library

(இ.ள்) கன்னல் சிலையாய் - கரும்பு வில்லையுடைய மன்மதனே; என் மனத்தை கலக்கும் காளை கவின் கண்டு முன் நிற்பதற்கு நாணியோ இங்கே நின்று முனிகின்றாய் - என் உள்ளத்தை கலங்கச் செய்யும் காளை போன்று அல்லமனது அழகினைப் பார்த்து முன்னே நிற்பதற்கும் வெட்கியோ என்முன் நின்று என்னைச் சினக்கின்றாய்; தன்னில் பெரியர் இல்லை எனும் அவனை சமரில் தாக்காமல் - தன்னைப் போல் பெரியோர் இல்லை என்று எண்ணியிருக்கும் அத்தகையோனைப் போரில் எதிர்க்காமல்; அ நல் தளிரின் மெலியாரை அடர்த்தாய் ஆண்மை நன்று- சிறந்த நல்லதளிரைக் காட்டிலும் மெலிய பெண்களைப் (போரால்) வருத்தினாய் உனது பெருமை நன்றாயிருந்தது. (எ.று) அரோ-அசை

முடிபு- சிலையாய்! காளை கவின் கண்டு முன் நிற்பதற்கும் நாணியோ இங்கே நின்று முனிகின்றாய்; தன்னில் பெரியர் இல்லை எனும் அவனைத் தாக்காமல் தளிரின் மெலியாரை அடர்த்தாய் ஆண்மை நன்று.

280. என்று புலம்பி மயன்முதிர்ந்து
மாயை யிரங்கி யிருந்தயர
மன்றன் மலர்பெய் மெல்லணைப்பூம்
பள்ளி யறையின் மதமானி
சென்று நம்பி யல்லமனை
முன்றந் திருத்தித் தேரையூண்
வென்றி மடங்கற் கிடுதல்
போலவளை விடுத்தாளவ் வறையுள் 65

(இ.ள்) மாயை என்று புலம்பி முதிர்ந்து இருந்து அயர- மாயா தேவியானவள் இவ்வாறு பிதற்றி காம மயக்கம் மிகுந்து ஆற்றாமலிருந்து மனம் சோர; மதமானி சென்று மன்றல் மலர் பெய்மெல் அணைபூ பள்ளி அறையில் நம்பி அல்லமனை முன் தந்து இருத்தி- மதமானி என்னும் தோழி போய் மணமுள்ள பூக்களையிட்ட மெல்லிய படுக்கையையுடைய அழகிய பள்ளி யறையின் கண் ஆண்களிற் சிறந்தவனாகிய அல்லமனை முன்னே அழைத்து வந்து இருக்கச் செய்து; தேரை ஊண் வென்றி மடங்கற்கு இடுதல் போல் அவளை அ அறையுள் விடுத்தாள் - தவளையாகிய உணவினை வெற்றியையுடைய சிங்கத்

Koviloor Digital Library

திற்குக் கொடுத்தல் போல் அவளை அப்பள்ளியறையுள் அனுப்பினாள். (எ.று)

முடிபு- மாயை என்று புலம்பி முதிர்ந்து இரங்கி இருந்து அயர மதமானி சென்று அல்லமனைப் பள்ளியறையில் தந்து இருத்தி (தேரையூண் மடங்கற்கு இடுதல் போல்) அவளை அவ்வறையுள் விடுத்தாள்.

281. [1]வேனினண் பகலின் வெய்ய
பாலையுணீ்ர் வேட்டவ னந்நிலத்துறுநீர்
தானெதிர் கண்டு பருகவோ
டுதல்போற் றண்மலரணை மிசையமர்ந்த
ஞானநல் விளக்கை விழியுறக் கண்டு
நகையொடு திருமுக மலர்ந்து
பானலங் கண்ணி புணர்முலை [2]விம்ம
பரிந்துமேல் விழுந்து புல்லினளால் 66

(பா.ம்) [1]வேனினன் பகலின்; [2]விம்பி

(இ.ள்) பானல்அம் கண்ணி - நீலோத்பலம் போன்ற அழகிய விழியையுடைய மாயை; வேனில் நண்பகலின் வெய்ய பாலையுள் - வெய்யிற்காலத்து நடுப்பகலிலே வெப்பம் மிகுந்த பாலை நிலத்தின் நடுவே; நீர்வேட்டவன் அநிலத்து உறுநீர் எதிர்கண்டு பருக ஓடுதல்போல் - அப்பாலை நிலத்துள் பொருந்திய புனலை எதிரே பார்த்து அதனை உண்ண ஓடுதலைப்போல;தண்மலர் அணைமிசை அமர்ந்த ஞான நல்விளக்கை விழி உற கண்டு- (விரைந்து ஓடி) குளிர்ந்த மலர்ப் படுக்கையின் மேல் எழுந்தருளிய அறிவு மயமாகிய நல்ல விளக்கினைக் கண்களில் பொருந்தப் பார்த்து; நகையொடு திருமுகம் மலர்ந்து புணர்முலை விம்மபரிந்து மேல் விழுந்து புல்லினள் - சிரிப்புடன் அழகிய முகம் மலரவும் நெருங்கிய நகில்கள் பூரிக்கவும் விருப்பங் கொண்டு அல்லமன்மேல் விழுந்து தழுவினள். (எ.று) தான், ஆல் - அசைகள்.

முடிபு- நீர்வேட்டவன் வேனில் நண்பகலிலே பாலையுள் உறுநீர் கண்டு பருக ஓடுதல் போல் பானலங்கண்ணி (ஓடி) அணைமிசை அமர்ந்த விளக்கை கண்டு நகையொடு திருமுகம் மலர்ந்து (மலர) முலை விம்மபரிந்து விழுந்து புல்லினள்; மலர்ந்து என்னும் எச்சத்தை மலர என்று

Koviloor Digital Library

திரித்துக் கொள்க. அந்நிலத்து உறுநீர் என்பதற்கு அப்பாலை நிலத்திலுள்ள நீராகிய கானலை என்பர் கந்தசாமி ஐயர்.

282. நாடிய வாடி நிழலென வணைமே
னண்ணுறத் தோன்றிய இறையை
ஓடினள் விழுந்து தழுவுறத் தழுவ
வுறாமையா லணைமிசை விழுந்தே
ஆடியி னிழலைப் பற்றநீட் டியகை
யாடியிற் றாக்கநின் றழுது
வாடுறு மழலைப் பேதையே போல
வருந்தினள் மதர்விழி மாயை

67

(இ.ள்) மதர் விழி மாயை - மகிழ்ச்சியை யுடைய கண்களைப் பெற்றிருக்கும் மாயாதேவி; நாடிய ஆடி நிழல் என அணைமேல் நண்ணுற தோன்றிய இறையை- பார்த்த கண்ணாடியில் தோன்றும் எதிர்வடிவத்தைப் போல படுக்கையின் மேல் பொருந்துறக் காணப்பட்ட முதல்வனை; ஓடினள் விழுந்து தழுவுற - மிக விரைந்து சென்று மேல் விழுந்து தழுவிக் கொள்ளவும்; தழுவ உறாமையால் அணைமிசை விழுந்து - தழுவிக்கொள்ள கைக்குக் கிடைக்காமையால் (அல்லமன் மேல் விழ எண்ணியவள்) படுக்கையின் மேல் விழுந்து; ஆடியின் நிழலை பற்ற நீட்டிய கை ஆடியில் தாக்க நின்று அழுது வாடுறும் மழலைப் பேதையே போல - கண்ணாடியில் தோன்றும் வடிவத்தைப் பிடிக்க நீட்டிய கையானது கண்ணாடியில் மோத நின்று அழுது துன்புறும் அறியாக் குழந்தையைப் போல; வருந்தினள் - துன்பமுற்றனள் (எ.று)

முடிபு- மாயை ஆடி நிழலென அணைமேல் தோன்றிய இறையை ஓடி விழுந்து தழுவுற தழுவவுறாமையால் அணைமிசை விழுந்து மழலைப் பேதையை போல வருந்தினள்; ஓடினள் முற்றெச்சம். ஆடியைப் போல அணையும், ஆடி நிழல் போல அல்லமனும், ஆடி நிழலைப் பற்ற நீட்டியகை ஆடியிற்றாக நின்றழுது வாடுறும் மழலைப் பேதை போல மாயையும் உள்ளனள் என்பதால் இச்செய்யுள் உவமையணியின் பாற்படும்.

283. சொல்லரு மழகன் றிருவுரு விழியிற்
றோன்றலான் மீளவு எழுந்து

Koviloor Digital Library

புல்லினள் மலர்மென் கைகளால் வெளியைப்
புல்லல்போற் சுவைத்தனள் வெறுவாய்
வல்லியிவ் வாறு வெளிமயக் குற்று
வள்ளல்தன் கைப்படா மையினா
லல்லம னலனீ துருவெளி யென்ன
வயிர்த்தன [1]ளுண்மையை யன்றே 68

(பா.ம்) [1]ளுணமையே யன்றே

(இ.ள்) சொல் அரும் அழகன் திருஉரு விழியில் தோன்றலால் - கூற முடியாத அழகையுடைய அல்லமனது மேலான வடிவம் கண்களில் தோன்றுவதால்; மீளவும் எழுந்து மலர் மென்கைகளால் வெளியை புல்லல்போல் புல்லினள் - மீண்டும் எழுந்து தாமரை மலர் போன்ற மென்மையான கைகளாலே ஆகாயத்தைத் தழுவிக் கொள்ளுதல் போலத் தழுவினள்; வெறுவாய் சுவைத்தனள் - ஒன்றுமில்லாத வாயினை (மென்று) தானே சுவைத்துக் கொண்டாள்; வல்லி இவ்வாறு வெளி மயக்கு உற்று - கொடி போன்று மாயை இவ்விதம் வெளியாய்த் தோன்றும் வடிவத்திடம் மயக்கங் கொண்டு; வள்ளல் தன் கை படாமையினால் - அல்லமன் தனது கைகளுக்கு அகப்படாமையினால்; உண்மையை அல்லமன் அலன் ஈது உருவெளி என்ன அயிர்த்தனள்- அல்லமனது உண்மையான வடிவத்தை "அல்லமன் அல்லன் இது உருவெளி என்று ஐயமுற்றனள். (எ.று) அன்றே-அசை.

முடிபு- வல்லி அழகன் உருதோன்றலால் மீளவும் எழுந்து, கைகளால் வெளியைப் புல்லல் போல் புல்லினள், வெறுவாய் சுவைத்தனள்; இவ்வாறு வெளி மயக்குற்று வள்ளல் கைப்படாமை யினால் உண்மையை அல்லமன் அலன் ஈது உருவெளி" என்ன அயிர்த்தனள்; அண்மைக் கிளவி உருவெளியின் மேல் கிளக்கப்படாமல் அலன் என்று அல்லமன் மேற் கிளக்கப்பட்டது. (தொல்-சொல்-25. சேனா.உரையினைப் பார்க்க)

284. அருந்தவ நெடுநாண் முயன்றுதான்
பெற்ற வமுதைவாய் வைத்திடுமளவிற்
கரந்தவ றுதல்போ லல்லம தேவன்
கட்புலத் துற்றுமென் றோளிற்
பொருந்துற வெளிபோல் வராமையாற்
றீயிற் புழுவெனப்ப தைபதைத்தரிவை

Koviloor Digital Library

வருந்தினள் காம மல்லம னன்றி
வடிவுளார் யார்கடந் திடுவார் 69

(இ.ள்) அரும்தவம் நெடுநாள் முயன்று தான் பெற்ற அமுதை வாய் வைத்திடும் அளவில் - செய்தற்கரிய தவத்தை நீண்ட காலம் வருந்திச் செய்து தான் அடைந்த அமிழ்தத்தை உண்பதற்கு வாயில் வைத்திடும் பொழுது; கரம் தவறுதல் போல் - கையிலிருந்து தவறியதைப் போல; அல்லம தேவன் கண்புலத்து உற்றும் பொருந்துற வெளிபோல் வராமையால்- அல்லம தேவன் விழியாகிய புலனுக்குப் புலப்பட்டும் தழுவிக் கொள்ள ஆகாயத்தைப் போல அகப்படாமையால்; அரிவை தீயில் புழு என பதைபதைத்து வருந்தினள் - மாயாதேவி நெருப்பில் விழுந்த புழுப்போலத் துடிதுடித்து துன்புன்றாள்; காமம் அல்லமன் அன்றி வடிவு உளார் யார் கடந்திடுவார் - காமத்தை அல்லம தேவனன்றி மாயா சம்பந்தமான உருவத்தை உடையவரில் எவர் தாண்டுவர். (எ.று)

முடிபு- தவத்தால் பெற்ற அமுதை வாய் வைத்திடுமளவிற் கரம் தவறுதல்போல், அல்லமன் கண்ணில் உற்றும் வெளி போல் பொருந்துற வராமையால், தீயில் புழுவென பதைபதைத்து அரிவை வருந்தினள்; காமம் அல்லமனன்றி வடிவுளார் யார் கடந்திடுவார்.; கரந்தவறுதல் போல் பொருந்துற வராமையால் என்பது உவமையணி. ''காமம் அல்லமனன்றி வடிவுளார் யார் கடந்திடுவார்'' என்பது வேற்றுப் பொருள் வைப்பணி.

285. கன்னிகை யென்று மிறைமக
ளென்றுங் கருதிடா தவாவிளைத் திட்டு
மென்னிணை முலைகண் மார்புறத்
தழுவி யிதழ்சுவைத் தணைமிசைப் புணர்வுற்
றின்னலி லின்பக் கடலிடை மூழ்க
விவன்றனாற் பெற்றிலே னென்று
தன்னக நைந்து வெய்துயிர்ப் பெறிந்தா
டவத்தரை யலைத்தவம் மடந்தை 70

(இ.ள்) தவத்தரை அலைத்த அமடந்தை - முனிவர்களைத் துன்புறுத்திய அந்த மாயாதேவி; கன்னிகை என்றும் இறைமகள் என்றும் கருதிடாது அவாவிளைத்திட்டும் - மணம் செய்து கொள்ளாத பெண்ணென்றும் வேந்தனுடைய மகளென்றும் எண்ணிடாமல் ஆசையைத் தோற்றுவித்தும்; என் இணை முலைகள் மார்பு உறதழுவி

Koviloor Digital Library

இதழ் சுவைத்து அணைமிசை புணர்வு உற்று - எனது இண்டாகிய நகில்கள் அல்லமனது மார்பிலே பொருந்தும்படி தழுவி, உதட்டினைச் சுவைத்து படுக்கையின் மேல் கூடுதலுற்று; இன்னல்இல் இன்பக் கடலிடை மூழ்க இவன் தனால் பெற்றிலேன் என்று தன் அகம் நைந்து வெய்து உயர்ப்பு எறிந்தாள் - துன்பம் இல்லாத இன்பமாகிய பரவையிலே அழுந்த இவ்வல்லமன் தன்னால் யான் அடைந்திலேன் என்றெண்ணி தன் மனம் வருந்தி வெப்பமுடைய மூச்சினைவிட்டாள். (எ.று)

முடிபு- அம்மடந்தை என்றும், என்றும் கருதிடாது, வினைத்திட்டு உறத்தழுவி, சுவைத்து, புணர்வுற்று, மூழ்கப் பெற்றிலேன் என்று நைந்து வெய்துயிர்ப் பெறிந்தாள்.

286. பொழிந்திழி மழையால் வளிநனைந்
திடுமேற் புகைந்தெழு மெரியில்வான் மேமேன்
முழங்குவெண் டிரைப்பே ராழியக்
கலய முனிவனை யழுத்துமே னஞ்ச
மெழுந்தரன் றன்னை வருத்துமேன்
மயக்க மெய்துவ னல்ல மதேவ
னொழிந்தவர் தம்மை யொழிவற மயக்கு
மொருத்தியு மவன்றனை மயக்கும் 71

(இ.ள்) பொழிந்து இழி மழையால் வளி நனைந்திடுமேல் - மேகத்தாற் பெய்யப்பட்டு விழும் மழைத்துளிகளால் காற்று நனையுமேயானால்; புகைந்து எழும் எரியில் வான்வே மேல் - புகைந்து மேலெழும் நெருப்பில் ஆகாயம் வேகுமேயானால்; முழங்கு வெண்திரை பேர் ஆழி அ கலயமுனிவனை அழுத்துமேல்- ஒலிக்கும் வெண்மையான அலைகளையுடைய பெருங்கடலானது கும்பத்திற் பிறந்த அந்த அகத்தியமுனிவனை தனக்குள் அழுத்தி விடுமேயானால்; நஞ்சம் எழுந்து அரன் தன்னை வருத்து மேல் - விஷமானது எழுந்து சிவபெருமானைத் துன்புறுத்துமேயானால்; அல்லமதேவன் மயக்கம் எய்துவான் - அல்லமதேவன் மாயையால் மயங்குதலை அடைவான்; ஒழிந்தவர் தம்மை ஒழிவற மயக்கும் ஒருத்தியும் அவன்தனை மயக்கும் - மற்றையோரை முற்றிலும் மயக்குகின்ற மாயையும் அல்லமனை மயங்கச் செய்யும். (எ.று)

Koviloor Digital Library

முடிபு- மழையால் வளி நனைந்திடுமேல், எரியில் வான்வே மேல், ஆழி கலயமுனிவனை அழுத்துமேல் நஞ்சம் அரனை எழுந்து வருத்துமேல் அல்லமன் மயக்கம் எய்துவன் ஒத்தியும் அவனை மயக்கும்.

285. விண்ணினைக் குத்திக் கையிளைப் பவர்போல்
வேனெடுங் கண்ணியங் கிருந்த
வண்ணலைத் தழுவித் தழுவிமெய்
வருந்தி யவசமுற் றணைமிசை யுறங்கி
யெண்ணுறு நினைவா லவன்புணர்ந் ததுபோ
லின்கன வொன்றுகண் டெழுந்தாள்
கண்ணக னிலத்தி னிருள்குடிப் பவனுங்
கருங்கடன் முகட்டினி லெழுந்தான் 72

(இ.ள்) வேல் நெடுங்கண்ணி விண்ணினை குத்தி கைஇளைப் பவர்போல் அங்கு இருந்த அண்ணலை தழுவி தழுவி மெய்வருந்தி- வேல்போற் பாயும் நீண்ட விழியையுடைய மாயா தேவி ஆகாயத்தைக் குத்தி கைவருந்துபவர்போல அவ்விடத்திருந்த அல்லமனை புல்லிப் புல்லி உடலம்வருந்தி; அவசம் உற்று அணைமிசை உறங்கி - தன் வசமிழத்தலைப் பெற்றுப் படுக்கையின்மேல் துயின்று; எண் உறு நினை வால் அவன் புணர்ந்ததுபோல் இன்கனவு ஒன்று கண்டு எழுந்தாள் - (அல்லமன் புணர்ச்சியைக்) கருதுதல் உற்ற எண்ணத்தினாலே அல்லமன் தன்னுடன் கூடியதுபோல இன்பம் பயக்கும் கனவொன்றினைக் கண்டு உறக்கத்தினின்றெழுந்தாள்; கண்அகல் நிலத்தில் இருள்குடிப்பவனும் கரும் கடல் முகட்டினில் எழுந்தான் - இடம்பரந்த மண்ணுலகத்திலே இருளைப் போக்குபவனாகிய கதிரவனும் கரிய பரவையின்மேல் தோன்றினான் (எ.று)

முடிபு- கண்ணி, ''விண்ணைக் குத்திக் கையிளைப்பவர் போல, இருந்த அண்ணலைத் தழுவித்தழுவி வருந்தி அவசமுற்று உறங்கி நினைவால் அவன் புணர்ந்ததுபோல் கனவு கண்டு எழுந்தாள்; இருள் குடிப்பவன் கடல் முகட்டினில் எழுந்தான்.

(ஒப்புமை) ''அல்லமனை மாயை கனவிலணைந்ததனாற், சொல்லரிய இன்பமுற்றாள் சோமேசா -நல்ல, நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுதான், கண்டபொழு தேயினிது'' (சேமேசர் - 122)

Koviloor Digital Library

288. காலையின் மாலை வார்குழன்
மாதர் கண்டுரை செய்வ ளல்லமன்றன்
கோலமென் சொல்வேன் விழியெதிர்
தோன்றிக் குறுகிலென் கைப்படா னதனாற்
சாலவு நைந்து துயின்றனன்
கனவிற் றடமுலை குழைந்திடப் புல்லி
[1]மேலுநல் லருள்செய் துன்னைநா
னென்றும் விடுகிலே னென்றனன் னென்றாள் 73

(பா.ம்) [1]யேலுநல்

(இ.ள்) காலையில் மாலைவார்குழல் மாதர் கண்டு உரை செய்வள் - (மாயாதேவி) விடியற்காலையில் மாலை சூடிய நீண்ட கூந்தலைப் பெற்றிருக்கும் தோழியரைப் பார்த்துச் சொல்லுவாள்; அல்லமன் தன் கோலம் என் சொல்வேன்- அல்லமனது அழகிய வடிவத்தை என்னென்று கூறுவேன்; விழிஎதிர்தோன்றி குறுகில் என் கைபடான் - கண்களுக்கு முன்னே காணப்பட்டுக் கிட்டினால் எனது கைகளுக்கு அகப்படாதவனாயிருந்தான்; அதனால் சாலவும் நைந்து துயின்றனன் - அக்காரணத்தினால் மிகவும் வருந்தி உறங்கினேன்; கனவில் தடம்முலை குழைந்திட புல்லிமேலும் நல்அருள் செய்து உன்னைநான் என்றும் விடுகிலேன் என்றனன்; என்றாள் - கனவிலே அகன்ற நகில் இளகும்படி தழுவி அதற்கு மேலும் நல்ல கருணையைச் செய்து உன்னை நான் எப்பொழுதும் விடமாட்டேன் என்று அல்லமன் கூறினன். என்றனள் (எ.று)

முடிபு- மாயாதேவி காலையில் மாதரைக் கண்டு, உரை செய்வள் அல்லமன் கோலம் என் சொல்வேன் தோன்றிக் குறுகில் என் கைப்படான் அதனால் நைந்து துயின்றனன், குழைந்திட புல்லி அருள் செய்து என்றும் விடுகிலேன் என்றனன் என்றாள்.

289. அருந்தவ மழிக்கு மழகுடை யணங்கிற்கு
அகப்படா விறலினன் யாரோ
புரந்தர னயன்மால் சுரர்முனி வரர்கிம்
புருடர் வித்தியா தர்ரென்னப்
பரந்தவர் தம்மு ளலனிவ
னொருவன் பார்த்திடிற் பராபர னென்று

Koviloor Digital Library

திருந்திழை மகளிர் மனத்துளே
வியந்து தெரிவையோ டுரைத்தன் மேயினரால் 74

(இ.ள்) அருந்தவம் அழிக்கும் அழகு உடை அணங்கிற்கு அகப்படா விறலினன் யாரோ - முனிவர் செய்யும் அரிய தவத்தினைக் கெடுக்கும் வனப்பினையுடைய மாயைக்கு உட்படாத வீரமுடையவன் யாராயிருக்கலாம்; இவன் ஒருவன் புரந்தரன் அயன்மால் சுரர் முனிவரா கிம்புருடர் வித்தியாதரர் என்னப் பரந்தவர் தம்முள் அலன் - இவ்வொரு வன் இந்திரன் பிரமன் திருமால் தேவர் முனிவர் கிம்புருடர் வித்தியாதரன் என்று சொல்லப்பட்டு விரிந்தவர் தம்முள்ளே ஒரு வனல்லன்; பார்த்திடில் பராபரன் என்று திருந்திழை மகளிர் மனத்துளே வியந்து - ஆராய்ந் துணரில் மேலான பரமேசுரன் போலும் என்று திருந்திய அணிகளைத் தரித்த தோழியர் தம் உள்ளத்திலே ஆச்சரியப்பட்டு; தெரிவையோடு உரைத்தல் மேயினர்- மாயாதேவியுடன் சொல்லத் தொடங்கினாள் (எ.று)

முடிபு- அணங்கிற்கு அகப்படா விறலினன் யாரோ இவன் ஒருவன் புரந்தரன் முதலியவர் தம்முள் அலன்; பார்த்திடில் பராபரன் என்று மகளிர் வியந்து உரைத்தல் மேயினர்; விறல்- வீரம் ''விறலே கொற்றம் வீரமாகும்'' என்பது திவாகரம்.

290. ஆசைநின் னுளத்தின் மிகவளர்ப் பதற்காய்
யல்லம னிவ்வகை நடித்தான்
பேசுறு கனவின் பயனுனக் குரைப்பிற்
பின்புனை மெய்யுற வணைவன்
வாசமென் குழலாய் என்றவள் மனத்தின்
வருத்தமற் றிடவறிந் துரைத்தார்
காசணி மருங்குன் மடந்தையர் மாயை
கவலை தீர்ந்துள்ளுளே களித்தாள் 75

(இ.ள்) வாசம் மென்குழலாய் - மனம் பொருந்திய மென்மையான கூந்தலையுடையவளே; அல்லமன் ஆசை நின் உளத்தில் மிக வளர்ப்பதற் காய் இவ்வகை நடித்தான் - அல்லமதேவன் விருப்பத்தை உன் மனதில் மிகுதியும் வளரச் செய்வதற்காக இவ்வாறு திருவிளையாடல் புரிந்தான்; பேசு உறு கனவின் பயன் உனக்கு உரைப்பின் பின்பு உனை மெய் உற அணைவன்- உன்னால் சொல்லப்பட்ட கனாவின் பயனை உனக்குச் சொன்னால் அல்லமன் பிற்காலத்தில் உன்னை உன் உடம்போடு பொருந்தக் கூடுவன்; என்று காசு அணிமருங்குல் மடந்தையர் அவள்

Koviloor Digital Library

மனத்தில் வருத்தம் அற்றிட அறிந்து உரைத்தார் - என்று மேகலை அணிந்த இடையையுடைய பெண்கள் மாயா தேவியின் உள்ளத்திலுள்ள துன்பம் நீங்கும்படி உணர்ந்து கூறினர்; மாயை கவலை தீர்ந்து உள்ளுளே களித்தாள் - மாயாதேவி கவற்சி நீங்கி மனத்தில் மகிழ்ச்சி கொண்டாள் (எ.று)

முடிபு- மடந்தையர் குழலாய்! அல்லமன் ஆசை வளர்ப்பதற்காக இவ்வகை நடித்தான்; கனவின் பயன் உரைப்பின் பின்பு உனை அணைவன் என்று வருத்தம் அற்றிட அழிந்து உரைத்தார். மாயை தீர்ந்து களித்தாள்.

291. இன்னணம் மாயை மாதிடை நிகழ்ந்த
வியல்பினை மோகினி சிலர்போய்
பன்னுற வறிந்து மானமீக்
கூரப் பருவரற் கடலிடைப்படி வந்து
தன்னொரு மகள்வாழ் மாளிகை
யெய்தித் தனையையைப் பாங்கிமாரொடுகூ
யென்னிது செய்தா யையகோ பேதா
யென்றுநைந் தின்னன புகன்றாள் 76

(இ.ள்) மோகினி இன்னணம் மாயை மாதிடை நிகழ்ந்த இயல் பினை சிலர் போய் பன்னுற அறிந்து - மோகினி என்னும் தாய் இவ் வண்ணம் மாயாதேவியிடம் நடந்த செய்தியைச் சில தோழியர் வந்து சொல்ல உணர்ந்து கொண்டு; மானம் மீகூரபருவரல் கடலிடைப் படிந்து - பெருமை உணர்ச்சி மேலும் மேலும் வளரத்துன்பமாகிய கடலிலே மூழ்கி; தன் ஒருமகள் வாழ் மாளிகை எய்தி - தனது ஒன்றாகிய மகள் உறையும் அரண்மனையை அடைந்து; தனயை பாங்கிமாரொடு கூய் - மகளைத் தோழியருடன் அழைத்து; பேதாய் என்இது செய்தாய் ஐயகோ என்று நைந்து இன்னன புகன்றாள்- அறிவில்லாதவளே! என்ன காரணம் இத்தகைய செயலைச் செய்தாய் அந்தோ என்று வருந்தி இன்னோரன்ன சொற்களைப் புகன்றாள் (எ.று)

முடிபு- மோகினி இன்னணம் நிகழ்ந்த இயல்பினை சிலர் போய்ப் பன்னுற அறிந்து மீக்கூர படிந்து மாளிகை எய்தி தனயை பாங்கிமாரொடு கூய் பேதாய் என் இது செய்தாய் என்று நைந்து இன்னன புகன்றாள்.

Koviloor Digital Library

292. மானமு முயிரு மொருங்குநில் லாத
வழியுயிர் தன்னையே விடுத்துத்
தானுறு பொருளாய் மானமே கொளுமுன்
றந்தைதன் செவிப்படி லென்னாம்
பானுவு மதியு மியங்குறு மளவும்
பழியிது வழிவழி வராதோ
யானுனை வருந்தி யீன்றது மிதற்கோ
வென்செய்தாய் பாவியென் றிசைப்பாள் 77

(இ.ள்)மானமும் உயிரும் ஒருங்கு நில்லாத வழி - (மானம் இருந்தால் உயிரில்லை உயிர் இருந்தால் மானமில்லை என்று ஏற்பட்ட விடத்து) மானமும் உயிரும் ஒரு சேர தன்னிடத்தில் நில்லாத காலத்திலே; உயிர் தன்னையே விடுத்து தான் உறுபொருளாய் மானமே கொளும் உன் தந்தை தன் செவிபடில் என்ஆம் - சிறந்த உயிரை விட்டுத் தான் அடையக்கூடிய பொருளாய் மானத்தையே கொள்கின்ற உன் தந்தையின் காதில் இச்செய்தி கேட்கப்படில் என்ன உண்டாகுமோ; பானுவும் மதியும் இயங்குறும் அளவும் பழிஇது வழிவழி வராதோ- ஞாயிறும் திங்களும் நடக்குவரை இப்பழிச் செயல் நம்குடி தோறும் சொல்லப்பட்டு வழங்காதோ; யான் உனை வருந்தி ஈன்றதும் இதற்கோ- யான் பல நோன்பு நோற்று வருந்தி உன்னைப் பெற்றதும் இப்பழி விளைத்தற்காகத்தானோ; பாவி என் செய்தாய் என்று இசைப்பாள் - பாவச் செயலுடையவளே என்ன காரியம் செய்து விட்டாய் என்று மேலும் கூறுவாள் (எ.று)

முடிபு- பாவி! உன் தந்தை தன் செவிப்படில் என் ஆம், பழிஇது வழிவழி வராதோ, யான் வருந்தி ஈன்றதும் இதற்கோ என் செய்தாய் என்று (மோகினி) இசைப்பாள்; மானம் - பெருந்தன்மை; ''மானம் பெருந்தன்மை குற்றப்பாடும் வரையார்'' என்பது திவாகரம்.

293. குரவர்தா மியைந்து கொடுத்தில
ராயிற் குமரவே [1]ளனையவ ரேனு
மருவரா நிற்பர் தந்தைதாய்
தங்க ளாணையி னொழுகு கன்னியர்தாம்
உருவிலா ரெனினுங் குரவருண்
மகிழ்வுற் றுதவுறி னனையவர் தம்மைப்

எண். 82: பி. லீ. 16

Koviloor Digital Library

பரவுவான் கடவு ளாகவே நினைந்து
பண்பொடும் பயிலு வரன்றே 78

(பா.ம்) [1]ஏனையவரெனுனு

(இ.ள்) தந்தைதாய் தங்கள் ஆணையின் ஒழுகு கன்னியர்தாம் - பெற்றோர் தம் கட்டளைப்படி நடக்கும் மனமில்லாத மகளிர்தாம்; குரவர் தாம் இயைந்து கொடுத்திலராயின் குமரவேள் அனையவரேனும் அருவரா நிற்பர் - பெற்றோர் தாம் மனம் பொருந்தி மணஞ்செய்து தராவிடின் முருகனை ஒத்தவர் காதலித்தாலும் வெறுத்து விடுவர்; உருஇலர் எனினும் குரவர் உண் மகிழ்வு உற்று உதவுறின் - அழகிய வடிவம் இல்லாதவராயினும் பெற்றோர் மனம் மகிழ்வுற்றுத் திருமணம் செய்து கொடுப்பராயின்; அனையவர் தம்மை பரவுவான் கடவுள் ஆகவே நினைந்து பண்பொடும் பயிலுவர் - அத்தகைய கணவர் தம்மை வணங்கத் தக்க உயர்ந்த தெய்வமாகவே எண்ணி நல்ல குணத்தொடும் அவரொடும் பழகி வாழ்வர்; (எ.று) அன்று, ஏ-அசைகள்.

முடிபு- தந்தைதாய் ஆணையின் ஒழுகு கன்னியர் குரவர் இயைந்து கொடுத்திலராயில் குமரவேள் அனையவரேனும் அருவரா நிற்பர். உருவிலாரெனினும் குரவர் மகிழ்வுற்று உதவுநின் அனையவரை கடவுளாகவே நினைந்து பயிலுவர்.

292. மணம்புரி வதன்முன் குரவரா ணையினும்
மணவினை முற்றிய பின்னா
இணங்குற வருள்செய் கொழுநனா
ணையினு மிருப்பர்தம் வயமில ரென்று
அணங்கனை யவர்தா மென்பதை யறிந்து
அடாதவிச் செயலினைச் செய்தாய்
பிணங்குவா ரிலையென் றிருந்தனை போலும்
பேதைநீ யென்றுதாய் முனிந்தாள் 79

(இ.ள்) பேதை - அறிவற்றவளே; அணங்கு அனையவர் தாம் மணம் புரிவதன் முன் குரவர் ஆணையினும் மணவினை முற்றிய பின்னா இணங்கு உறஅருள்செய் கொழுநன் ஆணையினும் இருப்பர் - தெய்வமகளிரை ஒத்தபெண்கள் தாம் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு பெற்றோர் கட்டளையிலும் திருமணம் முடிந்த பிறகுதன் மனம் பொருந்தும்படி கருணை செய்யும் கணவனது கட்டளையிலும்

Koviloor Digital Library

அடங்கியிருப்பர் ; என்னும் தம் வயம் இலர் என்பதை அறிந்தும் அடாத இசெயலினை செய்தாய்- எப்பொழுதும் தம் வசமாய் நடத்தலிலர் என்னும் நூல் நெறியை உணர்ந்திருந்தும் முறையற்ற இக்காரியத்தைச் செய்தனை; நீ பிணங்குவார் இலை என்று இருந்தனை போலும் என்று தாய் முனிந்தாள் - நீ (நாம் செய்யும் செயலுடன்) மாறுபடுபவர் ஒருவரும் இல்லை என்று கருதிக் கொண்டிருந்தனைபோலும் என்று தாய் சினந்து கொண்டாள் (எ.று)

முடிபு- பேதை! அணங்கனையவர் மணம் புரிவதன்முன் குரவ ராணையினும் மணம் முற்றிய பின்னர் அருள்செய் கொழுநனாணை யினும் இருப்பர். என்றும் தம் வயமிலர் என்பதை யறிந்தும் அடாத விச் செயலினைச் செய்தாய் ; பிணங்கு வாரிலையென்றிருந்தனை போலும் என்று தாய் முனிந்தாள்.

295. **தான்செயுந் தவறுந் தாய்செயு முனிவுந்தன்**
மனந்தனை நனி வருத்த
நான் செய்வ தென்னென் றிருநில நோக்கி
நாணிநீர் விழியுக விருந்தா
டேன்செய் மென்மொழியான் மோகினி
கண்டு சினந்த விர்ந்தகங் கரைந்துன்மேன்
மான்செயும் விழியாய் பிழையிலை
யென்றாண் [1]மனங்கரை வன்னைபோ லுண்டோ

(பா.ம்) [1]மனங் கரையன்னை

(இ.ள்) தான் செயும் தவறும் தாய் செயும் முனிவும் தன் மனம்தனை நனி வருத்த - தான் செய்த குற்றமும் அதற்காகத் தாய் விளைத்த வெகுளியும் தனது உள்ளத்தை மிகவும் வருத்தியபடியால்; நான் செய்வது என் என்று இரு நிலம் நோக்கி நாணி நீர்விழி உக இருந்தாள் - (மாயாதேவி) இனி நான் செய்யத் தக்கது என்ன என்று கருதி பெரிய பூமியைப் பார்த்துக் கொண்டு (தலைகுனிந்து) வெட்கி கண்களிலிருந்து நீர்சிந்த இருந்தனள்; தேன் செய்மென் மொழியாள் மோகினி கண்டு சினம் தவிர்ந்து அகம் கரைந்து - தேன் போல் இனிமையைச் செய்யும் சொற்களையுடைய மோகினி (மகள் வருந்தியிருக்கும் நிலையைப்) பார்த்து வெகுளி நீங்கி மனம் கரைந்து; மான் செயும் விழியாய் உன்மேல் பிழைஇலை என்றாள் - மான் கண்ணினைப் போல் இயன்ற கண்களையுடைவளே! உன் மேலே

Koviloor Digital Library

குற்றமில்லை என்று கூறினாள்; மனம் கரைவு அன்னைபோல் உண்டோ - உள்ளம் நெகிழ்வதில் தாய்போலொருவருண்டோ (எ.று)

முடிபு- தவறும் முனிவும் வருத்த செய்வதென்னென்று (மாயை) நோக்கி உக இருந்தாள். தேன் செய் மென் மொழியாளாகிய மோகினி கண்டு தவிர்ந்து கரைந்து விழியாய் உன் மேல் பிழையிலை என்றாள். மனங்கரைவு அல்லன போலுண்டோ.

296. மங்கைமீர் நீயிர் சூழ்ந்தன ரிருந்தும்
வளைதரு வேலியில் பயிர்போல்
எங்கடம் மடந்தை நிறையழிந் தொழிய
வென்செய்தீர் பாவிகாளென்றா
ளங்குறு மடவார் சொல்வரெம் பிராட்டி
யருளொடு கேண்மதி மதனா
லுங்குல மடந்தை யுயிர்விடா திருந்த
துன்றவ மென்றுநைந் துரைத்தார் 81

(இ.ள்)மங்கைமீர் நீவிர் சூழ்ந்தனர் இருந்தும் - தோழியர்களே! நீங்கள் இவளைச் சுற்றயிருந்தும்; வளைதரு வேலி இல் பயிர் போல் - புறத்தே சூழ்ந்த வேலியில்லாத பயிரினைப்போல; எங்கள் தம் மடந்தை நிறை அழிந்து ஒழிய பாவிகள் என் செய்தீர் என்றாள் - எங்களுடைய பெண் கற்பு கெட்டு நீங்குமாறு பாவிகளே எச்செயலைச் செய்தீர் என்று கூறினாள்; அங்கு உறுமடவார் சொல்வர் எம்பிராட்டி அருளொடு கேண்மதி- அவ்விடத்திருந்த தோழியர் சொல்வர் எமது தலைவியே எங்கள் மேல் பேரிரக்கத்தோடு கேட்பாயாக; மதனால் உம் குல மடந்தை உயிர் விடாதிருந்தது உன்தவம் என்று நைந்து உரைத்தார் - மன்மதனால் உங்கள் குலப் பெண்ணாகிய மாயாதேவி உயிர் நீங்காமலிருந்தது உனது தவப்பயனேயாகும் என்று வருந்திக் கூறினார். (எ.று)

முடிபு- மங்கைமீர்! சூழ்ந்தனரிருந்தும் வேலியில் பயிர்போல் மடந்தை நிறை அழிந்தொழிய என் செய்தீர் என்றாள். மடவார் சொல்வர் எம்பிராட்டி! கேண்மதி மதனால் மடந்தை உயிர்விடாதிருந்தது உன் தவம் என்று நைந்து உரைத்தார்.

297. பாங்கியர் பகரச் சினஞ்சிறி தவிந்து
பாங்கியர் குழுவினுட் சிறப்புற்

Koviloor Digital Library

றோங்கிய சகளை தன்முக
நோக்கி யுரைப்பள் மோகினியெனு மரசி
பூங்கணை மதவே ளனைய
வல்லமனைப் புறத்துநின் றகற்றிடா தெங்க
ளீங்கதிர் முகமெல் லியன்முனம்
விடுத்தா யென்கொலே வெனவவ னுரைப்பாள் 82

(இ.ள்) பாங்கியர் பகர மோகினி எனும் அரசி சினம் சிறிது அவிந்து - இங்ஙனம் தோழியர் கூற மோகினி என்னும் கோப்பெருந்தேவி யானவள் கோபம் சிறிது அடங்கி; பாங்கியர் குழுவினுள் சிறப்புற்று ஓங்கிய சகளை தன் முகம் நோக்கி உரைப்பள் - தோழியர் கூட்டத்திலே மதிக்கப் பெற்று உயர்ந்த சகளை என்பவளின் முகத்தைப் பார்த்துக் கூறுவாள்; பூகணை மதவேள் அனைய அல்ல மனை புறத்து நின்று அகற்றிடாது, எங்கள் ஈர்கதிர் முகமெல்லியல் முனம் விடுத்தாய் என் என- மலராகிய கணையையுடைய மன்மதனைப் போன்ற அல்லமனை வெளியிலேயே காவலாய் நின்று நீக்கிவிடாமல் குளிர்ச்சியாகிய நிலவை யுடைய திங்கள் போன்ற முகத்தைப் பெற்றிருக்கும் எங்கள் மெல்லியலாளரின் முன் வரவிட்டாயே அதற்குக் காணரம் என்னை என்று கேட்க; அவள் உரைப்பாள்- அச்சகளை சொல்லத் தொடங்கினாள் (எ.று) கொல், ஓ - அசைகள்.

முடிபு- பாங்கியர் பகர அரசி சினம் சிறிது அவிந்து சகளை முகம் நோக்கி உரைப்பாள். அல்லமனை புறத்து நின்று அகற்றிடாது எங்கள் மெல்லியர் முனம் விடுத்தாய் என் என அவள் உரைப்பாள்.

298. மானிடப் பிறவி யரிததி லரசர்
மக்களா குதலரி ததனி
லூனுறுப் பமைத லரிததி லரிதா
லுணர்வொடு போகங்க ணுகர்த
றானெனப் பெரியர் கூறலா லன்னாய்
தவம்பல முயன்றுநீ பெற்ற
மீனெனப் பிறழுங் கண்ணியை
வெகுண்டு வெறுப்பது தகாதெனவுரைத்தாள் 83

(இ.ள்) அன்னாய் மானிடப் பிறவி அரிது - தாயே! மக்களாய்ப் பிறக்கும் பிறவி கிடைத்தற்கரிது; அதில் அரசர் மக்கள் ஆகுதல் அரிது -

Koviloor Digital Library

அப்பிறவியைக் காட்டிலும் வேந்தரது பிள்ளைகளாய்ப் பிறத்தல் மிக அரிதாம்; அதனில் ஊன் உறுப்பு அமைதல் அரிது - அவ்வேந்தர் பிறவியிலும் நல்ல உடம்பும் நல்ல உறுப்பும் அமைதல் மிக அரியதாம்; அதில் உணர்வொடு போகங்கள் நுகர்தல் அரிது - அதைக்காட்டிலும் நல்ல அறிவோடிருந்து இன்பங்களை அனுபவித்தல் கிடைத்தற் கரிதாம்; என பெரியர் கூறலால் - என்று சான்றோர் உரைத்தலாலே; தவம் பல முயன்று நீ பெற்ற மீன் எனப் பிறழும் கண்ணியை வெகுண்டு வெறுப்பது தகாது என உரைத்தாள் - தவங்கள் பலவற்றைச் செய்து வருந்தி நீயீன்ற கயல்மீன் போறப்பிறழும் கண்ணையுடைய மாயையைச் சினந்து வெறுத்துக் கொள்வது தக்கதல்ல என்று கூறினாள் (எ.று) ஆல், தான்- அசைகள்.

முடிபு- அன்னாய்! மானிடப் பிறவி அரிது, அதில் அரசர் மக்களாகுதல் அரிது; அதனில் ஊன் உறுப்பமைதல் அரிது; அதில் உணர்வோடு போகங்கள் நுகர்தல் அரிது; என பெரியர் கூறலால் நீ பெற்ற கண்ணியை வெகுண்டு வெறுப்பது தகாது என உரைத்தாள்;

299. மோகினி சகளை புகன் மொழி
கேட்டு முகமலர்ந் தென்றவப் பயனாம்
பாகெனு மொழி யாடவறிலள் யாழோர்
பயின் மணமரசர் மேற்றென்ப
ராகலி லிவளுக் கல்லமன்றானே
யருமணத் தலைவன கவன்பாற்
போகம் வேண்டியவா கொள்கெனப்
புகன்று புகன்றனள் பின்னுமோர் மாற்றம் 84

(இ.ள்) மோகினி சகளை புகல் மொழிகேட்டு - மோகினியானவள் சகளை கூறிய சொல்லினைக் கேட்டு; முகம் மலர்ந்து பாகு எனும் மொழியாள் தவறு இலன் - சர்க்கரைப் பாகினை ஒத்த சொற்களையுடைய என் மகள் குற்றம் செய்திலள்; யாழோர் பயில் மணம் அரசர் மேற்று என்பர் - காந்தர்வ மணம் வேந்தர்க்குரியது என்று அறிஞர் கூறுவர்; ஆகலில் இவளுக்கு அல்லமன் தானே அருமணத்தலைவன் - ஆகையினாலே மாயைக்கு அல்லமனே சிறந்த மணவாளனாவன்; அவன் பால் போகம் வேண்டியவா கொள்க என புகன்று பின்னும் ஓர் மாற்றம் புகன்றனள் - அவ்வல்லமனிடத்தே இன்பத்தை விரும்பியவாறு பெற்றுக் கொள்க என்று கூறி மேலும் ஓர் சொல்லைக் கூறினள் (எ.று)

Koviloor Digital Library

முடிபு-மோகினி கேட்டு முகம் மலர்ந்து மொழியாள் தவறிலள், யாழோர் மணம் அரசர் மேற்றென்பர் ஆகலில் இவளுக்கு அல்லமனே மணத்தலைவன் அவன்பால் போகம் கொள்க எனப்புகன்று பின்னும் ஓர் மாற்றம் புகன்றனள்.

300. உலகெலா மறிய வதுவை
செய்காறு முலகமன்னவ னறியாமற்
றிலகவா ணுதலா ளொழுக்கநீர்
மறைமின் றேமொழி யீரிவடீமை
நலமெலா நுமதே யாதலா னுமக்குநான்
சொல்வ தென்னெனா மகளுக்
கலகிலா வுவகை செய்துபோயினடன்
னகத்தினுண் முனிவுற வந்தாள் 85

(இ.ள்) தேன் மொழியீர் - தேன் போன்ற இனிய சொற்களை யுடையரே; உலகு எலாம் அறிய வதுவைசெய் காறும் உலகம் மன்னவன் அறியாமல் திலகவாள் நுதலாள் ஒழுக்கம் நீர்மறைமின்- உலக முழுதும் உணர்ந்து கொள்ளும்படி திருமணம் செய்யுமளவும் உலக மக்களும் நம் அரசனும் உணர்ந்து கொள்ளாமல் பொட்டணிந்த ஒளிபெற்ற நெற்றியினை யுடையாளது காம ஒழுக்கத்தினை நீவிர் மறைத்து வைம்மின்; இவள் தீமை நலமெலாம் நுமதே. ஆதலால் நுமக்கு நான் சொல்வது என் எனா - இவளுக்கு வந்த தீமை நன்மை முழுவதும் உங்களுடையதே ஆகையால் உங்களுக்கு நான் கூறுவது என்ன என்று கூறி; அகத்தினுள் முனிவு உற வந்தாள் மகளுக்கு அலகு இலா உவகை செய்து போயினள் - மனத்திலே சினந் தோன்ற வந்த மோகினியானவள் தன் மகளுக்கு அளவற்ற மகிழ்ச்சியை விளைவித்துச் சென்றனள் (எ.று)

முடிபு- முனிவுற வந்தாள்; தேமொழியீர்! வதுவை செய்காறும் உலகமும் மன்னவனும் அறியாமல் நுதலாள் ஒழுக்கத்தை மறைமின்; இவள் தீமை நலமெலாம் நுமதே ஆதலால் நுமக்கு நான் சொல்வது என் எனா உவகை செய்து போயினள்.

301. எனபிழை பொறாம லன்னையோ
டென்பா லிருந்தவ ரேசொலி னதனா
லன்புடை யன்னை முனியுமோ
வென்ன வறைந்தனண் மாயைகேட் டறைவாள்

Koviloor Digital Library

பொன்புரை சகளை நங்குரு
வுனக்குப் புராரியே தலைவனென் றிருப்பப்
பின்பிது நீசெய் தனையெனி னின்னைப்
பிழைசொல் வார்மேற்பிழை உண்டோ 86

(இ.ள்) மாயை என் பிழை பொறாமல் அன்னையோடு என்பால் இருந்தவரேசொலின் அதனால் அன்பு உடை அன்னை முனியுமோ என்ன அறைந்தனள் - மாயாதேவி எனது குற்றத்தினைத் தாங்காமல் தாயுடன் என்னுடன் தங்கியிருந்தவரே சென்று கூறினால் அக்காரணத்தினாலே என் மேல் அன்புடையதாய் சினக்குமோ என்று (தோழியரைக்) கடிந்துரைத்தாள்; பொன்புரை சகளை கேட்டு அறைவாள் - திருமகளை ஒத்த சகளை கேட்டுக் கூறுவாள்; நம்குரு உனக்கு புராரியே தலைவன் என்று இருப்ப பின்பு இது நீ செய்தனை எனில் - நமது ஆசிரியன் உனக்குச் சிவபெருமானே கணவன் என்று கூறியிருக்கவும் பின்பு இச்செயலை நீ செய்தனை என்றால்; நின்னை பிழை சொல்வார்மேல் பிழை உண்டோ - உன்னைக் குறித்தும் குற்றங் கூறவார்மேல் குற்றமுண்டோ (எ.று)

முடிபு- மாயை பொறாமல் இருந்தவரே சொலின் அதனால் அன்னை முனியுமோ என்ன அறைந்தனள்; சகளை கேட்டு அறைவாள் நம்குரு உனக்குப் புராரியே தலைவனென்று இருப்ப இது நீ செய்தனை எனில் நின்னை பிழை சொல்வார் மேல் பிழை உண்டோ.

302. மானனை யாய்நந் தாயறிந்தமையான்
மறைந்தது நொய்து பட்டன்றிக்
கோனிதை யறிவனெனினெளி தாமோ
கோமள வல்லிநீ கேண்மோ
போனதுபோக வினியவன் றன்னைப்
புறத்தினில் விடுவதே யறிவு
தானென வுரைத்தாண் மாயை
கேட்டயர்ந்து தாங்கருந்துயர மோடிருந்தாள் 87

(இ.ள்) மான் அனையாய் நம் தாய் அறிந்தமையால் நொய்து பட்டு மறைந்தது - மான் விழி போன்ற விழியையுடையவளே நமது அன்னை உணர்ந்தமையால் இது அற்பமானதாய் கருதப்பட்டு அடங்கியுள்ளது; கோன் இதை அறிவன் எனில் எளிது ஆமோ - அரசன் இதனை அறிவானேயானால் சுலபமாகுமோ; கோமள வல்லி நீ கேண்மோ - அழகிய கொடிபோன்றவளே! நீ இதனைக் கேட்பாயாக;

Koviloor Digital Library

போனது போக இனி அவன் தன்னை புறத்தினில் விடுவதே அறிவு என உரைத்தாள் - நடந்ததெல்லாம் நிற்க இனிமேல் அவ்வல்லமனை நம் மாளிகையின் வெளியே செல்லவிடுவதே அறிவுச் செயலாகும் என்று கூறினாள்; மாயை கேட்டு அயர்ந்து தாங்க அரும் துயரமோடு இருந்தாள்- மாயாதேவி கேட்டு மனம் சோர்ந்து பொறுத்தற்கரிய துன்பத்துடனிருந்தாள் (எ.று)

முடிபு- மானனையாய்! தாமறிந்தமையால் நொய்துபட்டு மறைந்தது; கோன் அறிவனெனில் எளிதாமோ? கோமளவல்லி! கேண்மோ, போனது போக இனி அவனை புறத்தினில் விடுவதே அறிவென உரைத்தாள்; மாயை கேட்டு அயர்ந்து துயரமோடிருந்தாள்.

303. **அல்லம ணறிந்து நுந்திரு**
மடந்தைக் கடுத்ததென் புகலெனச் சகளை
வல்லிநின் மாயை வலையிடைப் பட்ட
மறையெலா மிறை மனை நிறைந்த
தொல்லை நல் வினையா லறிந்திலன் வேந்த
னொருவனும் யாமுய்ய வேண்டிச்
சொல்லுவ தொன்றுண் டைய நீ
புறத்தோர் சூழலிலிருத்தனன் றென்றாள் 88

(இ.ள்) அல்லமன் அறிந்து - இந்நிகழ்ச்சிகளை அல்லமதேவன் உணர்ந்து கொண்டு; நும்திருமடந்தைக்கு அடுத்து என்புகல் என- உங்கள் திருமகளாகிய மாயைக்கு நேரிட்ட துன்பம் என்ன கூறுவீராக என்று கூற; சகளைவல்லி நின் மாயை வலையிடைப் பட்ட மறை எலாம் இறைமனை நிறைந்த - சகளையானவள் கொடி போன்ற மாயாதேவி உனது மாய மாகிய வலையின் கண் அகப்பட்டு நிகழ்ந்த களவொழுக்கமெல்லாம் அரசனுடைய அரண்மனை முற்றிலும் பரவின ; தொல்லை நல் வினையால் வேந்தன் ஒருவனும்அறிந்திலன் - பழைய நல்லறத்தால் அரசன் ஒருவன் மட்டும் உணர்ந்திலன்; ஐயயாம் உய்ய வேண்டிச் சொல்லுவது ஒன்று உண்டு - ஐயனே யாங்களெல்லாம் பிழைக்க வேண்டி கூறத்தக்க செய்தி யொன்று உளது; நீ புறத்து ஓர் சூழலில் இருத்தல் நன்று என்றாள் - நீ மாளிகைக்கு வெளியே ஓர் மனையில் தங்கியிருத்தல் நல்லது என்று கூறினாள். (எ.று)

முடிபு- அல்லமன் அறிந்து மடந்தைக்கு அடுத்ததென் புகலென, சகளை ஐய! வல்லி நின் வலையிடைப் பட்டமறை யெலாம் இறைமனை

Koviloor Digital Library

நிறைந்தது; வேந்தன் ஒருவனும் அறிந்திலன்; யாம் உய்ய வேண்டிச் சொல்லுவது ஒன்றுண்டு; நீ புறத்து ஓர் சூழலில் இருத்தல் நன்று என்றாள்.

304. மாயையை யகன்றா னடக்கக்கா
லெழுமோ வாயிடை மாற்றமொன் றுண்டோ
போயொரு விடய முணமனம்
வருமோ பொருந்துறும் பகலிர வுளவோ
காயமு முயிருங் கலந்துவாழ்
வுறுமோ கண்டன மெனவெனை ஒருவர்
நீயறி வுறவிங் குரைப்பவ ருளரோ
நேரிழா யென்றன ணண்ணல் 89

(இ.ள்) அண்ணல் - அல்லம தேவன்; நேரிழாய் - நல்ல அணிகளைத் தரித்த சகளையே; மாயையை அகன்றால் நடக்க கால் எழுமோ - மாயையைப் பிரிந்தால் நடப்பதற்குக் கால் வருமோ; வாயிடை மாற்றம் ஒன்று உண்டோ - வாயின்கண் சொல் ஒன்று தோன்றுமோ; போய் ஒரு விடயம்உணமனம் வருமோ - சென்று ஒரு பொருளை நுகர்வதற்கு மனஞ் செல்லுமோ; பொருந்துறும் பகல் இரவு உளவோ - பொருந்திய பகலும் இரவும் (மனதிற்குத்) தோன்றுமோ; காயமும் உயிரும் கலந்து வாழ்வுறுமோ - உடம்பும் உயிரும் ஒன்றி வாழுமோ; எனை கண்டனம் என நீ அறிவுற இங்கு உரைப்பவர் ஒருவர் உளரோ என்றனன் - என்னைக் கண்டோம் என்று நீ அறியும்படி இங்கே சொல்லுகின்றவர் யாரேனும் ஒருவர் இருப்பரோ என்று கூறினான் (எ.று)

முடிபு- அண்ணல், நேரிழாய்! மாயையை அகன்றால் நடக்ககால் எழுமோ, மாற்றம் ஒன்று உண்டோ, விடயம் உணமனம் வருமோ பகலிரவு உளவோ காயமும் உயிரும் கலந்து வாழ்வுறுமோ எனை கண்டனம் என நீயறிவுற உரைப்பவர் ஒருவர் உளரோ என்றனன்; அல்லமன் கருதிய உள்ளுறை, தனு கரண புவன போகங்களுக்கு ஏதுவான மாயா மலம் அகலப் பெற்றால் உயிர் இயங்குவதற்கு ஏதுவான நல்வினை தீவினையாகிய கால்கள் இயங்கப் பெறாதென்றும், சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் நான்கு வாக்கிற்கும் சுத்தமாயை காரண மாதலின்மாயை யாகிய காரணமில்லாவிட்டால் வாயிடை மாற்றம் ஒன்று நிகழாதென்றும்; மாயை என்றொருத்தி தன்பால் மனமெனும் மைந்தன் தோன்றியதாதலால் மாயையை அகன்ற பொழுதே மனமும் நசித்து விடுதலின் "போயொருவிடயம் உணமனம்

Koviloor Digital Library

வருமோ'' என்றும், ஆன்மா மாயாகாரியமாகிய தனுகரணபுவன போகங்களுடன் கூடி அறிவது சகலாவத்தையாகிய பகலென்றும், அவற்றோடு கூடாமல் அறியாமையில் மூழ்கி மாயைக்குளிருப்பது கேவலாவஸ்த் தையாகிய இரவென்றும் கூறப்படுதலின் மாயையை அகன்றால் பகலிரவு உளதோ என்றும்; ''அறிவரியான் (சித்தியார் - 12 சூ) தனையறிய ஆக்கையாக்கி'' என்பதால் இறைவன் மாயாகாரி யமாகிய உடம்பு முதலானவற்றுடன் கூடிய பொழுதே அறியப்படுவான், ஆகையால் 'கண்டனமெனவெனை யொருவர் நீ யறிவுற விங் குரைப்பவ ருளரோ' என்றார்.

305. கருத்தினை யறியா தவன்மொழி
தனக்குக் காட்டிய பொருளையே கொண்டு
விரைத்துணர் மலர்மென் குழலினாள்
புணரும் விதியுள தென்னிலெங் கொடியைத்
தரித்தெவ ணொருநீ யிருப்பினு
முனக்குத் தருமிதி லையம்வேண் டாவென்
றுரைத்தனள் கருணை யென்றுசெய்
குவனென் றுழன்றவ ளண்ணலை நோக்கி 90

(இ.ள்) கருத்தினை அறியாது அவன் மொழி தனக்குக் காட்டிய பொருளையே கொண்டு - அல்லமன் சொன்ன உள்ளுறைப் பொருளை உணர்ந்து கொள்ளாமல், அவன் சொல் தனக்கு உணர்த்திய வெளிப்படைப் பொருளையே மனத்துட்கொண்டு; கருணை என்று செய்குவன் என்று உழன்றவள் அண்ணலைநோக்கி - அருள் எப்பொழுது செய்வானோ என்று வருந்திய சகளை அல்லமதேவனைப் பார்த்து; விரைத் துணர்மலர் மென்குழலினாள் புணரும் விதி உளது என்னில் எம் கொடியை தரித்து எவண் நீ இருப்பினும் உனக்குத் தரும் இதில் ஐயம் வேண்டா என்று உரைத்தனள் - மணம் பொருந்திய பூங்கொத்தை யுடைய மென்மையாகிய கூந்தலையுடைய மாயாதேவியை கூடும் நல்வினை இருக்குமேயானால் எமது கொடி போன்ற தேவியை மனதுட்கொண்டு நீ எங்கு இருப்பினும் அவ்வினை உனக்குத் தரும் இதில் சந்தேகம் வேண்டா என்று கூறினாள். (எ.று)

முடிபு- உழன்றவள் கருத்தினை அறியாது காட்டிய பொருளையே கொண்டு, அண்ணலை நோக்கி குழலினாள்புணரும் விதியுளது என்னில்

Koviloor Digital Library

எங்கொடியைத் தரித்து எவண் நீ இருப்பினும் உனக்குத் தரும் ஐயம் வேண்டாவென்று உரைத்தனள்.

306. சகளையிவ் வாறு மொழிதர நங்காய்
சாலவு நன்று நன்றென்று
நகைமதி தவழுஞ் செஞ்சடை
மதுகை நாயகன் றிருமுனஞ்சென்று
முகிழ்முலை நடிக்கும் பொழுதுதன்
செயல்செய் முயற்சியினின்றனன் றனக்குத்
தகுமென வளர்பே ரறிவினாற்
றன்னைத் தானலா தறிதரப்படாதான் 91

(இ.ள்) சகளை இவ்வாறு மொழிதர - சகளை என்னும் தோழி இவ்வகை கூறிட; தனக்குத்தகும் என வளர்பேர் அறிவினால் தன்னைத்தான் அலாது அறிதரப்படாதான் - (அரசுக்குரித்து அருங்கலம் என்றாற் போல) தனது பெருமைக்குத்தகும் என்று சொல்லும்படி வளரும் பெரிய அறிவினாலே தன்னைத்தான் அறிந்தாலல்லாமல் வேறொரு வரால் அறிந்திடப் படாதவனாகிய அல்லமதேவன்; நங்காய் சாலவும் நன்று நன்று என்று - பெண்ணே! நீ கூறியது மிகவும் நல்லது நல்லது என்று கூறி (புறத்தே சென்று வசித்து); முகிழ்முலை நடிக்கும் பொழுது தன் செயல் செய்முயற்சியில் நின்றனன் - அரும்பு போன்ற நகிலினை யுடையாள் ஆடும் பொழுது (மத்தளம் அடித்தலாகிய) தன் தொழிலைச் செய்யும் செய்கையிலிருந்தனன் (எ.று)

முடிபு- சகளை இவ்வாறு மொழிதர அறிதரப்படாதான் நங்காய்! சாலவும் நன்று நன்று நாயகன் திருமுனம் சென்று முகிழ்முலை நடிக்கும் பொழுது தன் செயல் செய் முயற்சியில் நின்றனன். தன்னைத் தானலாதறிதரப்படாதான் என்பதற்கு ஒப்பு''. பிறர் அறியலாகாப் பெருமையருந்தாமே' (அற்புதத்திருவந் 30) என்பது.

ஐந்தாவது
பிரபுதேவர் வந்த கதி முற்றிற்று

Koviloor Digital Library

ஆறாவது
விமலை கதி

307. அமலை யேவ வகனிலத் தெய்துபு
[1]சமல மாயை தனக்கருண் மூர்த்தியா
நிமல னல்லம னீதியை யன்பினால்
விமலை கூறிய வண்ணம் விளம்புவாம் 1

(பா.ம்) [1]கமல மாயை ; சமலை மாயை

(இ.ள்) அமலை ஏவ - குற்றமற்றவளாகிய உமாதேவியார் செலுத்த; அகல்நிலத்து எய்துபு - பரந்த நில உலகத்தை அடைந்து; சமலம் மாயை தனக்கு - மலத்தோடு கூடிய மாயை என்பவளுக்கு; அருள் மூர்த்தி ஆம் நிமலன் அல்லமன் நீதியை - அருள் வடிவினன் ஆகும் மலமில்லாதவன் ஆகிய அல்லமதேவனது ஒழுக்கத்தை; விமலை அன்பினால் கூறிய வண்ணம் விளம்புவாம் - மல மற்றவளாகிய விமலை என்பாள் அன்போடு சொல்லிய வகையை (யாம்) கூறுவாம். (எ.று)

(முடிபு) அமலை ஏவ, விமலை எய்துபு, மாயை தனக்கு அல்லமன் நீதியை அன்பினால் கூறிய வண்ணம் விளம்புவாம்.

308. மதுகை நாதனை நாடொறு மாயைதா
னதிக வந்தனை [1]யாற்றிநம் மல்லம
னுதவு மான்மனத் தோங்க விருந்தன
டிதிக ளெண்ணில செல்ல நிலத்தினே 2

(பா.ம்) [1]யாற்ற நமல்லம

(இ.ள்) மாயைதான் - மாயை என்பவள்; மதுகை நாதனை நாள்தோறும் அதிகம் வந்தனை ஆற்றி - மதுகேசுவரனை ஒவ்வொரு நாளும் மிகுதியாகிய வழிபாட்டைச் செய்து; நம் அல்லமன் உதவமால் மனத்து ஓங்க - நம்முடைய அல்லமதேவன் (அவளுக்குக்) கொடுத்த காம மயக்கம் மனத்தில் வளரும்படி; திதிகள் எண்ணில செல்ல நிலத்தினே இருந்தனன் - நாள்கள் அளவில்லாதன செல்ல நிலவுலகத் திலே தங்கி இருந்தாள் (எ.று)

முடிபு - மாயைதான் ஆற்றி ஓங்க இருந்தனள்.

Koviloor Digital Library

309. ஆய காலையி லம்பிகை ஞாலமேன்
மாயை போய்நெடு நாளினும் வந்திலள்
போயி ராதவட் கொண்டிவண் போதென
வேயி னாணல் விமலையை யென்பவே 3

(இ.ள்) ஆயகாலையில் - இது நிகழ்ந்த காலத்திலேயே; அம்பிகை - உமாதேவியானவள்; ஞாலம் மேல் மாயை போய் நெடுநாள் - நிலவுலகத்தினிடத்தே மாயை சென்று மிகுதியான நாள் (ஆயிற்று); இனும் வந்திலள் - அவள் இன்னமும் வந்திலள்; போய் இராது அவள் கொண்டு இவண் போது என - (நீயும் அவளைப் போல் அங்கு) சென்று இருந்து கொள்ளாமல் அம்மாயையை அழைத்துக் கொண்டு இங்கே வருக என்று; நல்விமலையை ஏயினாள் - நல்ல விமலை என்பவளை (மாயையினிடத்தே) செலுத்தினாள். (எ.று)

முடிபு - அம்பிகை என, விமலையை ஏவினாள், இனுமெனல், இடைக்குறை, போதுக வென்றற்பாலது, போதென்றாயது கடைக்குறை, ஏவினாயெனல்; ஏயினாளென்றாயது எதுகைத் திரிபு. என்ப, ஏ அசைகள், என்பன பழைய உரை.

310. கறையில் சோதிக் கயிலையி னின்றுநம்
மிறைவி யேவ விறைஞ்சி வருமுலைப்
பொறையி னால்விழுந் தாளெனப் பூமிசை
மறுவி லாமதி போல்பவள் வந்தனள் 4

(இ.ள்) நம் இறைவி ஏவ - நமது உமா தேவியார் செலுத்த; மறுஇலாமதி போல்வள் - களங்கமில்லாத திங்கள் போன்றவளாகிய விமலை; கறைஇல் சோதிகயிலையில் நின்று - கறுப்பில்லாமல் ஒளிமயமாய் விளங்கும் கயிலை மலையிலிருந்து; இறைஞ்சி - உமா தேவியை வணங்கிக் கொண்டு வருமுலை பொறையினால் விழுந்தாள் என - வளரும் நகில் பாரத்தால் (வானுலகத்திலிருந்து நிலவுலகத்தில் விழுந்தாள்) என்று சொல்லும் வண்ணம்; பூமிசை வந்தனள் - நில உலகத்திடத்தே வந்தாள் (எ.று)

முடிபு - இறைவி ஏவ, மதி போல்பவள் இறைஞ்சி, கயிலை யினின்று, (முலைப் பொறையினால் விழுந்தாள் என பூமிசை வந்தனள்.

311. வந்து பொன்னெயில் வட்ட வனவசை
நந்து பொன்மணி மாட நணுகியே

Koviloor Digital Library

சந்த மாயை தனதெதிர் நின்றனள்
கந்த மென்மலர்க் கற்பக வல்லிபோல் 5

(இ.ள்) வந்து - (விமலை நிலவுலகத்தினிடத்தே) வந்து; பொன் எயில் வட்டம் வனவசை நந்து பொன்மணி மாடம் நணுகியே- பொன்னால் செய்த மதில் வட்டத்தையுடைய வனவசை என்னும் நகரத்திடத்தே (உள்ள) வளரும், பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்ட மாளிகையை அடைந்து; கந்தம் மெல் மலர் கற்பகம் வல்லிபோல் சந்தம் மாயை தனது எதிர் நின்றனள் - மணமுள்ள மென்மையான பூக்களையுடைய கற்பகக் கொடிபோல (நல்ல) நிறத்தையுடைய மாயையின் முன்பு நின்றாள் (எ.று)

முடிபு - (விமலை) வந்து, நணுகி கற்பகவல்லி போல் மாயை தனதெதிர் நின்றனள்.

312. நின்ற போதெதிர் கண்டு நிலவுல
கன்று போலுமிவ் வாயிழை வாழிட
மென்று மாயை யெழுந்து தொழுதணை
யொன்று மேவி யிருப்ப வுதவினாள் 6

(இ.ள்) நின்றபோது - (விமலை) நின்ற காலத்திலே; மாயை எதிர் கண்டு - மாயையானவள் (திடீரென்று) தன் எதிரே பார்த்து; இஆயிழை வாழ் இடம் நிலம் உலகு அன்று போலும் என்று -இந்த ஆயிழையார் உறையுமிடம் நிலவுலகம் அன்றுபோலும் என்று கருதிக் கொண்டு; எழுந்து தொழுது - (இருக்கையை விட்டு) எழுந்து கை கூப்பி; அணை ஒன்று மேவி இருப்ப உதவினாள் - தவிசொன்று (வந்த விமலை) தங்கியிருப்பக் கொடுத்தாள். (எ.று)

முடிபு - (விமலை) நின்றபோது, மாயை எதிர் கண்டு, இவ்வாயிழை வாழ் இடம் நிலவுலகு அன்று போலும் என்று, எழுந்து, தொழுது (விமலை) மேவியிருப்ப, (மாயை) உதவினாள்.

313. அருகி ருந்த வனைய ரிருவரு
மிருக ரங்களு மேந்து மணியென
வுருவ மைந்திவ ணொத்தன ரென்றுசூழ
புரம டந்தையர் புந்தி வியந்தனர் 7

(இ.ள்) சூழ்புரம்மடந்தையர் - சூழ்ந்துள்ள அந்தப்புர மகளிர் எல்லாம்; அருகு இருந்த அனையர் இருவரும் - அருகே ஆசனத்தில்

Koviloor Digital Library

சேர்ந்திருந்த (விமலை மாயை என்ற) அப்பெண்களிருவரும்; இருகரங்களும் ஏந்தும் மணி என - இரண்டு கைகளிலும் ஏந்தப்பட்ட மணிகள் என்று சொல்லும்படி; உரு அமைந்து இவண் ஒத்தனர் என்று புந்தி வியந்தனர் - வடிவம் பொருந்தி இங்கே ஒத்துள்ளனர் என்று கருதி தங்கள் புத்தியிலே வியப்படைந்தனர். (எ.று)

முடிபு - புரமடந்தையர் "இருந்த இருவரும் மணியென அமைந்து ஒத்தனர்" என்று வியந்தனர்.

314. மாயை வந்த மடந்தையை நோக்கியே
நீயி ருந்ததெங் குன்பெயர் யாதுநீ
மேய தன்மையென் னென்று [1]வினாவலுந்
தேயு நுண்ணிடை செப்புதன் மேயினாள் 8

(பா.ம்) [1]வினவலுந்

(இ.ள்) மாயை வந்த மடந்தையை நோக்கியே - மாயையானவள் வந்த மடந்தையாகிய விமலையைப் பார்த்து; நீ இருந்தது எங்கு - நீ வாழ்ந்திருந்தது எவ்விடம்?; உன் பெயர் யாது - உன் பெயர் எது?; நீ மேய தன்மை என் - நீ வந்த செயல் என்ன?; என்று வினாவலும் - என்று கேட்டலும்; தேயும் நுண்இடை செப்புதல் மேயினாள் - தேய்கின்ற சிறிய இடையையுடைய விமலை சொல்லுதலைத் தொடங்கினாள். (எ.று)

முடிபு - மாயை, வந்த மடந்தையை நோக்கி, இருந்தது எங்கு? பெயர் யாது? மேய தன்மை என்? என்று வினவலும் நுண்ணிடை செப்புதல் மேயினாள்.

315. கயிலை யென்னிடங் கற்பக வல்லியென்
பெயரி யம்பின் விமலை பெருங்குலச்
சயில மங்கைநின் றன்புடை யேவினாள்
வியனி லந்தனில் வந்துனை மேவினேன் 9

(இ.ள்) கற்பகவல்லி - கற்பகக் கொடி போன்ற மாயையே; என் இடம் கயிலை - யான் வாழுமிடம் கயிலையாகும்; என் பெயர் இயம்பின் விமலை - எனக்கு (வழங்கும்) பெயரைக் கூறினால் விமலை என்பதாகும்; பெருகுலம் சயிலம் மங்கை நின்றன் புடை ஏவினாள் - பெரிய சிறந்த இமயமலையரசன் மகளாகிய பார்வதி நின்னிடத்தே வரவிட்டாள்; வியல் நிலம்தனில் வந்து உனை மேவினேன் - அகன்ற நிலவுலகத்திலே வந்து உன்னை அடைந்தேன். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - கற்பகவல்லி! என்னிடம் கயிலை, பெயர் விமலை, கயில மங்கை நின்றன்புடை. ஏவினாள்; (யான்) வந்து மேவினேன்.

316. என்ன மன்மக ளெம்பெரு மாட்டிதான்
மன்னும் வெந்துயர் மக்கட் பிறப்பினேன்
தன்னை யுன்னிநின் றன்னை விடுத்ததென்
பன்னு கென்னப் பகர்தரன் மேயினாள் 10

(இ.ள்) என்ன - (விமலை) என்று சொல்ல அதனைக் கேட்ட; மன்மகள் - அரசன் மகளாகிய மாயை; எம்பெருமாட்டிதான் மன்னும் வெம்துயர் மக்கள் பிறப்பினேன் தன்னை உன்னி நின்தன்னை விடுத்தது என் - எமது தலைவியாகிய உமாதேவிதான் நிலைபெற்ற கொடிய துன்பத்தையுடைய மக்கள் பிறப்பினேனாகிய எளியேனைக் கருதி உன்னை விடுத்தது என்ன காரணம்?; பன்னுக என்ன பகர்தரல் மேயினாள் - சொல்லுவாயாக என்று சொல்ல (விமலை) சொல்லத் தொடங்கினாள். (எ.று)

முடிபு - (விமலை) என்ன, மன்மகள், எம்பெருமாட்டி மக்கள் பிறப்பினேன் தன்னை உன்னி, நின்றன்னை விடுத்தது என் பன்னுக என்ன, (விமலை) பகர்தரன் மேயினாள்.

317. அல்லமன் வலிநிலை யறிந்து வாவென
நல்லுமை நினைவிட நன்றென் றெங்கைநீ
வல்லமை பேசியிம் மண்ணில் வந்தபின்
சொல்லிய நின்பெருஞ் சூண்ம றந்தனை 11

(இ.ள்) நல்உமை - நல்ல உமாதேவியார்; அல்லமன் வலி நிலை அறிந்து வா என நினைவிட - அல்லமதேவனுடைய ஆற்றலின் நிலைமையைத் தெரிந்து வா என்று சொல்லி மாயையாகிய உன்னைவரவிட; எங்கைநீ நன்று என்று வல்லமை பேசி - எங்கள் தங்கையாகிய நீ நல்லது என்று (உடன்பட்டுக் கூறி) உனது ஆற்றலைச் சொல்லி; இம்மண்ணில் வந்தபின் - இந்த நிலவுலகத்திலே (நீ) வந்தபிறகு; சொல்லிய நின் பெருசூள் மறந்தனை - (இறைவி முன்) கூறிய உனது பெரிய வஞ்சின மொழியை நீ மறந்தாய். (எ.று)

முடிபு - உமை அறிந்து வா என, நினைவிட, எங்கையாகிய நீ நன்றென்று வல்லமை பேசி, வந்தபின் (நீ) சொல்லிய சூள் மறந்தனை.

Koviloor Digital Library

318. நின்னையு மறிந்திலை நீயென் றாலிவ
ணுன்னுறு மனமொழி யுறாத வல்லமன்
றன்னைநீ யறிவுறுந் தன்மை யுண்டுகொல்
கன்னிமா துமைதம கலையை யல்லையோ 12

(இ.ள்) கன்னிமாது - கன்னியாகிய பெண்ணே! இவண் நீ நின்னையும் அறிந்திலை என்றால் - இப்பொழுது நீ உன்னையும் அறிந்து கொள்ளவில்லை என்றால்; உன்னுறும் மனம் மொழி உறாத அல்லமன் தன்னை - நினைத்தலைப் பொருந்தும் மனம் மொழிகள் சென்றுறாத அல்லமனை; நீ அறிவுறும் தன்மை உண்டுகொல் - நீ அறிதலைப் பொருந்தும் இயல்பு உண்டோ; உமை தம கலையை அல்லையோ - (நீ) உமாதேவியின் தமோகுணக் கூறு அல்லவா? (எ.று)

முடிபு - கன்னிமாது, நீ நின்னையும் அறிந்திலை இவண் என்றால், அல்லமன் தன்னை நீஅறிவுறும் தன்மை உண்டுகொல்? (நீ) உமை தம கலையை அல்லயோ.

319. ஓடுற மருந்தயின் றுறங்கல் போலுரை
யாடிய சூண்மறந் தயர்ந்தி ருத்தலா
னாடிநின் றனைத்தரற் கென்னை நல்லுமை
யேடவிழ் [1]மலர்க்குழா லேவினா ளென்றாள் 13

(பா.ம்) [1]மலர்க்குழ

(இ.ள்) ஏடுஅவிழ் மலர்குழால் - இதழ் மலர்ந்த பூவையணிந்த கூந்தலையுடைய மாயையே; ஓடுற மருந்து அயின்று உறங்கல் போல - ஓடுதலைச் செய்வதற்காக மருந்தினை உண்டு (ஓடாமல்) உறங்குதல் போல; உரையாடிய சூள் மறந்து அயர்ந்து இருத்தலால் - (நீ) கூறிய வஞ்சினத்தை மறந்து சோர்ந்திருத்தலினாலே; நாடிநின்றனை தரற்கு - தேடி உன்னைக் கொண்டு வருதற்கு; என்னை நல் உமை ஏவினாள் என்றாள் - என்னை நல்ல உமாதேவி வரவிட்டாள் என்று கூறினாள். (எ.று)

முடிபு - மலர்க்குழால்! ஓடுற அயின்று உறங்கல்போல், (நீ) மறந்து அயர்ந்திருத்தலால் உமை நின்றனை நாடித்தரற்கு என்னை ஏவினாள் என்றாள்.

320. கதிரெழு பகலெனக் கண்டி டாதுதண்
மதியெழு மிரவென மனந்தெ ளிந்துதன்

Koviloor Digital Library

திதியொடு நினைவுமோர் சிறித றிந்தனள்
விதியுண ரிறைமகள் விமலை சொல்லினால் 14

(இ.ள்) விதி உணர் இறை மகள் - மக்களுக்குச் செய்யும் முறைகளை, நூல்களை உணரும் அரசனுடைய மகளாகிய மாயை; கதிர் எழுபகல் என கண்டிடாது - ஞாயிறு தோன்றும் பகற்பொழுதிலே (பொருள்களைக் காணுதல்) போல உணர்ந்து கொள்ளாமல்; தண்மதி எழும் இரவு என மனம் தெளிந்து - குளிர்ந்த திங்கள் தோன்றும் இராக்காலத்திலே (பொருள்களை அறிதல் போல) மனத்திலே உணர்ந்து; விமலை சொல்லினால் தன் திதியொடு நினைவும் ஓர் சிறிது அறிந்தனள் - விமலை கூறிய சொற்களாகிய கருவியினால் தன் முன் நிலையோடு (தான் செய்வதாகக் கருதி வந்த) எண்ணத்தையும் ஓர் சிறிது அறிந்து கொண்டனள். (எ.று)

முடிபு - இறைமகள் விமலை சொல்லினால் பகலென கண்டிடாது இரவென தெளிந்து (கண்டு) தன் திதியொடு நினைவும் சிறிது அறிந்தனள்.

321. மூலகா ரணனெனச் சிலர்மொ ழிந்திடு
மாலுமோர் மானிடப் பிறப்பில் வந்துதன்
சீலமோர்ந் திலனெனிற் சிறிய பேதைநான்
ஞாலமேன் மயங்குத னவிறல் வேண்டுமோ 15

(இ.ள்) மூலம் காரணன் என சிலர் மொழிந்திடும் மாலும் - உலகத்திற்கு முதற்காரணன் என்று சில மக்களால் பேசப்படும் திருமாலும்; ஓர் மானிடன் பிறப்பில் வந்து - (இராமனாகிய) ஒரு மனிதப் பிறப்பில் தோன்றி; தன் சீலம் ஓர்ந்திலன் எனில் - (தன் முற்பிறவியின்) ஒழுக்கத்தை உணர்ந்திலன் என்றால்; சிறிய பேதை நான் ஞாலம் மேல் மயங்குதல் நவிறல் வேண்டுமோ - சிறிய பெண்ணாகிய யான் உலகத்தினிடத்தே (வந்து) மயக்கம் அடைதலைச் சொல்லவும் வேண்டுமோ. (எ.று)

முடிபு - மாலும் வந்து ஓர்ந்திலன் எனில், பேதையாகிய நான் மயங்குதல் நவிறல் வேண்டுமோ. மாலும் ஞாலமேல் மானிடப் பிறப்பில் வந்து என்று கூட்டியும் பொருள் கூறலாம்.

322. அல்லம னியல்பெலா மறியப் பூந்துணர்
வல்லிநின் குமுதவாய் மலர்ந்து கூறெனச்
சொல்லிநின் றிணையடி தொழுத மாதொடு
வில்லுறழ் நறுநுதல் விமலை கூறுவாள் 16

Koviloor Digital Library

(இ.ள்) பூதுணர் வல்லி - மலர்க் கொத்தினையுடைய கொடி போன்ற விமலையே; அல்லமன் இயல்பு எலாம் அறிய - அல்லமதேவனின் தன்மைகள் எல்லாவற்றையும் உணர்ந்து கொள்ள; நின் குமுதம் வாய் மலர்ந்து கூறு என - உனது குமுத மலர் போன்ற வாயைத் திறந்து மொழிவாயாக என்று; சொல்லி நின்று இணையடி தொழுத மாதொடு - சொல்லி (அதனைக் கேட்பதில் மனம் ஒருமைப் பட்டு) நின்று இரண்டாகிய கால்களை வணங்கிய மாயைக்கு; வில் உறழ் நறுநுதல் விமலை கூறுவாள் - வில்லை ஒத்து மணம் வீசும் நெற்றியை யுடைய விமலை கூறுவாள். (எ.று)

முடிபு - வல்லி! அறிய மலர்ந்து கூற எனச் சொல்லி நின்று தொழுத மாதொடு விமலை கூறுவாள். மாதொடு உருபு மயக்கம்.

323. கயிலையி னுமையொடு கண்ணு தற்பிரான்
[1]செயலுறு மல்லமன் செய்தி கூறலு
மயலுற விருந்துநா னறிந்து ளேனதை
மயிலியல் கேளென வகுத்தன் மேயினாள் 17

(பா.ம்) [1]செயலறு

(இ.ள்) கயிலையின் - கயிலை மலையிடத்தே; உமையொடுகண் நுதல் பிரான் செயல் உறும் அல்லமன் செய்தி கூறலும் - உமாதேவிக்குக் கண்ணை நெற்றியிலேயுடைய சிவபெருமான் எல்லாச் செயலை யுமுடைய அல்லமதேவனது வரலாற்றினைக் கூறுதலும்; அயல் உற இருந்து நான் அறிந்துளேன் - பக்கத்திலே பொருந்த இருந்து யான் உணர்ந்துள்ளேன்; அதை மயில் இயல் கேள் என வகுத்தல் மேயினாள் - அவ்வரலாற்றை மயில் போன்ற சாயலின் இயல்பையுடைய மாயையே கேட்பாயாக என்று கூறுபடுத்திச் சொல்லத் தொடங்கினாள். (எ.று)

முடிபு - கயிலையின் பிரான் உமையொடு அல்லமன் செய்தி கூறலும்; நான் அயலுற இருந்து அறிந்துளேன்; அதை கேள் என (விமலை) வகுத்தல் மேயினாள். உமையொடு - உருபுமயக்கம்.

324. படியில் வள்ளி காவையெனும்
பதியிற் றனக்கு நிகரில்லா
னொடிவில் கருணை நிராங்கார
னென்னு முண்மைப் பெயரினான்

Koviloor Digital Library

மடிவில் கற்பி னவன்றேவி
மாசு தீர்ந்த சுஞ்ஞானி
கடிவின் மறையா கமவிதிகள்
கண்ணுற் றறிய வொழுகுவார் 18

(இ.ள்) படியில் வள்ளிக்காவை எனும் பதியில் - நிலவுலகத்தில் வள்ளிக்காவை என்னும் ஊரில்; தனக்கு நிகர் இல்லான் ஒடிவுஇல் கருணை நிராங்காரன் என்னும் உண்மைப் பெயரினான் - தனக்கு உவமை இல்லாதவன் (அவன்) இடையறா அருளையுடைய நிராங்கரன் என்னும் உண்மைப் பெயரினையுடையான்; மடிவுஇல் கற்பின் அவன் தேவி மாசு தீர்ந்த சுஞ்ஞானி - கெடுதலில்லாத கற்பினையுடைய, அவன் மனைவி குற்றம் நீங்கிய சுஞ்ஞானி (என்னும் பெயரினையுடையாள்); கடிவுஇல் மறை ஆகமம் விதிகள் கண்ணுற்று அறிய ஒழுகுவார் - (இவ்விருவரும்) நீங்குதல் இல்லாத வேதம் ஆகமம் ஆகிய இவற்றில் விதித்த விதிகளை (உலகத்தவரெல்லாரும் தங்களைப்) பார்த்து அறிந்து கொள்ளும்படிவேதாகம விதிகளில் தவறாமல்) நடப்பார்கள். (எ.று)

முடிபு - படியில் வள்ளிகாவை எனும் பதியில் தனக்கு நிகரில்லான் (அவன்) நிராங்காரன் என்னும் பெயரினான்; அவன்தேவி சுஞ்ஞானி (என்னும் பெயரினாள்; இவ்விருவரும்) விதிகள் கண்ணுற்றறிய ஒழுகுவார்.

325. மெய்ம்மை சிவமே [1]யல்லாது
விரியு முலகம் பொய்யென்பா
ரிம்மை மறுமை நிலையல்ல
வென்ன நிகழ்ந்த [2]கருத்தினோர்
செம்மை நெறியிற் புறமொடகந்
திரியுங் கரணங் காமாதி
பொய்ம்மை [3]வினை லவர்குருநூற்
பொருளாய்த் துணிந்து வீடுவப்பார் 19

(பா.ம்) [1]அல்லாத; அல்லாமல் [2]கருத்தினார், கருத்தினால்; [3]வினையில்லவர்.

நிராங்கரன் சுஞ்ஞானிகளின் சாதனம்

(இ.ள்) மெய்ம்மை சிவமே அல்லாது விரியும் உலகம் பொய் என்பார் - உண்மைப்பொருள் சிவமே. அச்சிவம் அல்லாது

Koviloor Digital Library

(மாயையினின்றும்) தோன்றும் உலகங்களெல்லாம் (காரியப் பொருள்கள் ஆகையினாலே) பொய்ப்பொருள்களாம் என்று கருதுவர்; (இது நித்தியா நித்திய வஸ்து விவேகம் என்னும் சாதனம்); இம்மை மறுமை நிலை அல்ல என்ன நிகழ்ந்த கருத்தினோர் - இவ்வுலக இன்பமும் துறக்கம் முதலான மறுஉலக இன்பமும் நிலை அல்ல என்று (அவற்றின் மேல் ஆசையறுதல்) நிகழ்ந்த மனத்தையுடையோர்; (இது இக பரபோக விராகம் என்னும் சாதனம்); செம்மை நெறி இல் புறமொடு அகம் திரியும் கரணம் இல்லவர் - நல்வழியைச் சேர்தல் இல்லாத, புறத்திலும் அகத்திலும் திரியும் ஞானேந்திரியம் முதலான புறக்கருவிகளும்; மனம் முதலான அகக்கருவிகளும் இல்லாதவர்; (இவை முறையே தமை சமை என்று கூறப்படும்); காமாதி இல்லாதவர் - காமம் முதலான குற்றங் களில்லாதவர்; (இது திதீக்கை என்று சொல்லப்படும்); பொய்ம்மை வினை இல்லவர் - பொய்யாகிய (அசத்) காரியங்களைச் செய்தல் இல்லாதவர்; (இது உபரதி என்று சொல்லப்படும்); குரு நூல் பொருளாய் - குருவால் உரைக்கப்படும் நூல்களை உண்மையாய் நம்பி; (இது சிரத்தை என்று சொல்லப்படும்); துணிந்து - அந்நூலில் தெளிவடைந்து; (இது சமாதி என்று சொல்லப்படும்); வீடு உவப்பார் - முத்தி விருப்பினையுடையார்; (இது முமூக்ஷுத்துவம்). (எ.று.)

முடிபு - (அவ்விருவரும்) அல்லாது விரியும் உலகம் பொய் என்பார், நிலையல்ல என்ன நிகழ்ந்த கருத்தினோர், கரணமும் காமமும் பொய்மை வினையும் இல்லவர்; துணிந்து உவப்பார்.

326. **இனைய ராகி யிருக்குநா ளில்வாழ்க் கையினின் றிடுதலாற்**
றனைய ரின்மை யானெஞ்சந் தளர்வான் போன்று நிராங்கார
னினையுந் தியான மில்லாத நெஞ்சும் ஞான மில்லாத
வினையும் போலு மக்களிலா மிக்க வாழ்வென் றியம்பியே 20

(இ.ள்) இனையர் ஆகி இருக்கும் நாள் - (நிராங்காரன் சுஞ்ஞானி இருவரும்) இத்தகைய சாதனங்களை உடையராகி இருக்கும் காலத்தில்; இல்வாழ்க்கையில் நின்றிடுதலால் - இல்லற வாழ்வில் நின்ற காரணத் தினால்; நிராங்காரன் தனையர் இன்மையால் நெஞ்சம் தளர்வான் போன்று - நிராங்காரன் என்னும் தலைவன் தங்களுக்கு மக்கள் இல்லாத காரணத்தால் மனம்தளர்பவனைப் போல; மக்கள் இலா மிக்க வாழ்வு -

Koviloor Digital Library

மகப்பேறில்லாத செல்வம் மிக்க வாழ்க்கையானது; நினையும் தியானம் இல்லாத நெஞ்சும் ஞானம் இல்லாத வினையும் போலும் என்று இயம்பி - கருதப்படும் கடவுள் தியானம் இல்லாத மனமும், ஞானம் விளையாத நல்வினையாகிய கர்மத்தையும் ஒக்கும் என்று கூறி (எ.று)

327. இந்த வுலகிற் குதவியா யியன்ற தொழில்கள் பலசெய்யு
மைந்தன் வேண்டு மெனநிற்போன் மக்கட் பதடி யாகுவா
னந்த [1]வுலகிற் காநினைப்போ னறங்கூர் மகனா மத்துவிதா
னந்த முதவு மகவிருப்போன் ஞானி யாகு மென் றெண்ணி
21

(பா.ம்) [1]உலகிற்காய்

(இ.ள்) இந்த உலகிற்கு உதவியாய் - இம்மையாகிய இவ்வுலக வாழ்க்கைக்கு உதவியாய்; இயன்ற தொழில்கள் பல செய்யும் மைந்தன் வேண்டும் என நிற்போன் - (தன்னால்) செய்யப்பட்ட தொழில்கள் பலவற்றைச் செய்யும் புதல்வன் வேண்டும் என விரும்பி நிற்போன்; மக்கள் பதடி ஆகுவான் - மக்களுள் பதர் ஆவான்; அந்த உலகிற்கா நினைப்போன் - (மறுமையாகிய) அவ்வுலக (சுவர்க்க) வாழ்விற்காக புதல்வன் வேண்டும் என நினைப்போன்; அறம் கூர் மகனாம் - அறத்தினை மிகுதியாகக் கருதிய மகனாம்; அத்துவிதானந்தம் உதவுமக விருப்போன் - சிவமும் தானும் வேறல்ல என்னும் விவேகத்தில் தோன்றுகின்ற அத்து விதானந்தத்தைத் தருதற்குரிய மகப்பேற்றை விரும்புவோன்; ஞானி ஆகும் என்று எண்ணி - மோட்ச விருப்பத்தையுடைய அறிஞன் ஆகும் என்று கருதி (எ.று)

முடிபு - இந்த உலகத்திற்கு மைந்தன் வேண்டும் என நிற்போன் பதடி ஆகுவான்; அந்த உலகிற்கா நினைப்போன் அறங்கூர் மகனும்; அத்துவிதானந்தம் உதவு(வதற்கு) மகவிருப்போன் ஞானியாகும் என்றெண்ணி. (விரியும் உலகனைத்தும் பொய் மெய்ம்மைதான் என்னும் விவேகத்தில் தோன்றுவதே அத்துவிதானந்தம் என்பர் (வேதா-சூடாமணி 32) வேதாந்திகள்.

328. உடம்பைப் பொறியைக் கரணத்தை
யுயிரைத் தானென் றுழலாம
லடங்கத் துறந்து [1]தனையறிந்து
பேதா பேத மென்னுமயல்

Koviloor Digital Library

கடந்திட் டிருக்கும் பரமுத்தி
காட்டும் புதல்வன் வேண்டுமென
விடும்பைப் பிறவி நோய் [2]தணிப்ப
வெண்ணு மனத்தா னெண்ணினான் 22

(பா.ம்) [1]தன்னையறிந்தபேத பேத, பேதமபேதம்; [2]தவிழ்ப்ப

(இ.ள்) இடும்பை பிறவிநோய் தணிப்ப எண்ணும் மனத்தான் - துன்பத்தையே தரும் பிறப்பென்னும் நோயைக் குறைத்துக் கொள்ளக் கருதும் உள்ளத்தையுடைய நிராங்காரன்; உடம்பைப் பொறியைக் கரணத்தை உயிரைத் தான் என்று உழலாமல் அடங்கத் துறந்து - உடம்பையும், ஐம்பொறிகளையும் அந்தக் காரணங்களையும் உயிர்க்கும் பிராண வாயுவையும், சீவனாகிய தான் என்று கருதித் திரியாமல் அவற்றை முற்றிலும் (தானல்ல என்று) நீக்கி; தனை அறிந்து - இவற்றின் வேறாகத் தன்னையும் தனக்காதாரத் தலைவனையும் உணர்ந்து; பேதம் அபேதம் என்னும் மயல் கடந்திட்டு இருக்கும் பர முத்தி - சிவனும் சீவனும் வேறு என்றும் வேறல்லவென்றும் கூறப்படும் மயக்க நெறியைக் கடந்திருக்கும் மேலான வீட்டினை; காட்டும் புதல்வன் வேண்டும் என எண்ணினான் - உணர்த்தும் மகன் வேண்டும் என்று கருதினான். (எ.று)

முடிபு - மனத்தான் என்று, உழலாமல், துறந்து, அறிந்து, கடந்திட்டிருக்கும் முத்தியைக் காட்கும் புதல்வன் வேண்டும் என எண்ணினான்.

தனை அறிந்து என்பதற்குச் சீவனாகிய தன்னையும் தனக்காதாரமாகிய சிவத்தையும் அறிந்து என்று பொருளுரைத்துக் கொள்க. இப்பாட்டின் கருத்தை ''நரம்புதிரம் என்புதோல்மூளை தசை பல கூடி நரியும் மடி செவிய சுருள் வால் நாயும் நெட்டலகுவிரிசிறகர் வன்கழுகும் இது நமதென்ன வந்தவுடலும், நிரம்புதுயர் செய்தடங்காது முன் றொழியாத நிரயத் தழுத்து புலனும், நெறிமருண் டலமந்து திரிகின்ற புன்மனமும் நில்லா தியங்கு முயிரும் பரம்பு பற்பல வாய குணமுமலன் என்று போய்ப் பாசநிலை குலைய நின்ற படியிலெனை யறிதலே நினையறிதலாகவிரு பதமுமென் முடியில் வைத்துத் திரும்புதலிலாத வொருபதம் உதவுகொடையாளி'' சிவஞான-பிள்-சிறுபறை-5) என்னும் பாட்டாலறிக.

Koviloor Digital Library

329. இரண்டோ டிரண்டு மூவிரண்டை
யிரண்டா றிரண்டு மீமிசை யெண்
ணிரண்டோ டிரண்டு கொண்டி ருந்த
விதழ்ப்பங் கயங்கள் கடந்துபோ
யிருந்த குளத்தின் மேலோராயிரந்தோட்
டமல கமல மிசை
யிருந்த சோதி தனைக்கண்
டெம்மெண்ண முடிப்பே மெனவெழுந்து 23

(இ.ள்) இரண்டோடு இரண்டு மூவிரண்டு ஐயிரண்டு ஆறிரண்டு மீமிசை எண்ணிரண்டோடு இரண்டு கொண்டிருந்த இதழ் பங்கயங்கள் கடந்து போய் - நான்கு, ஆறு, பத்து, பன்னிரண்டு இவற்றின் மேல் பதினாறு, இரண்டு என்னும் எண்களைக் கொண்டிருந்த இதழ்களை யுடைய தாமரைகள் என்னும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களைக் கடந்து சென்று; இருந்த குளத்தின் மேல் ஓர் ஆயிரம் தோட்டு அமலம் கமலம் மிசை இருந்த சோதிதனைக் கண்டு - அங்கேயிருந்த, நெற்றியின் மேலதாகிய ஓராயிரம் இதழ்களையுடைய குற்றமற்ற தாமரை மலர்மேல் எழுந்தருளியிருந்த ஒளிமயமான கடவுளைக் கண்டு; எம்எண்ணம் முடிப்பேம் என எழுந்து - (அத்துவிதானந்தம் உதவு மகவு வேண்டும் என்று கருதும்) எம் எண்ணத்தை முடித்துக் கொள்வேம் என்று கருதி எழுந்து (எ.று)

முடிபு - பங்கயங்களைக் கடந்து போய், கமலமிசை இருந்த சோதிதனைக் கண்டு, எம் எண்ணம் முடிப்பேம் என எழுந்து.

330. [1]வேறா மொருவ [2]னுடனிருப்பும்
வேண்டா தவத்திற் கென்பதொடு
மாறாய் மனையுங் கொழுநனும்
போய்வனத்திற் கமலா சனத் திருந்து
தேறார் புனல்போற் [3]றெளிந்த
மனந்திறந்துந் திறவா விழியொடுதம்
பேறா மிட்ட லிங்கத்திற்
பிறழா தமையும்படி வைத்து 24

(பா.ம்) [1]வேறாமொருவர் ; [2]னுடனிருப்பு வேண்டா, [3]தெளிந்து

Koviloor Digital Library

(இ.ள்) தவத்திற்கு வேறு ஆம் ஒருவன் உடன் இருப்பும் வேண்டா என்பதொடுமாறாய் - தவம் செய்தற்குத் தனக்கு வேறாகிய ஒருவன் தன்னுடன் இருத்தலும் வேண்டாவாம் என்று சொல்லுதலொடு முரணாய்; மனையும் கொழுநனும் போய் வனத்தில் கமலாசனத்து இருந்து - மனைவியும் கணவனும் காட்டில்போய் (அங்கேதக்க இடத்தில்) பதுமாசனத்தில் இருந்து; தேறு ஆர் புனல் போல் தெளிந்த மனம் - தேற்றாங்கொட்டை பொருந்திய கலங்கல் நீர் (தெளிந்தாற்) போலத் தெளிவடைந்த மனத்தை; திறந்தும் திறவா விழியொடு - மிகத்திறந்து நனவு நிலைக்குச் செல்லாமல் சிறிது திறந்தும்; மிகமூடிக்கனவு நிலைக்குச் செல்லாமல் சிறிது மூடித்திறவாதும் உள்ள விழியோடு; தம் பேறு ஆம் இட்ட லிங்கத்தில் பிறழாது அமையும்படி வைத்து - தம்முடைய பெறு பொருளாகும் இட்டலிங்கத்திலே (மனத்தை விழியொடு) தப்பாமல் அமையும்படி வைத்து. (எ.று)

முடிபு - தவத்திற்கு ஒருவன் உடனிருப்பும் வேண்டா என்பதொடு மாறாய் மனையும் கொழுநனும் போய் இருந்து மனத்தை விழியொடு இட்டலிங்கத்தில் பிறழாது அமையும்படி வைத்து.

331. தறிபோ லுடல நேரிருந்து தயங்கு மருங்கி னிருநாடி
நெறிபோய் மீளும் வளியதனை நிறுவி நடுநாடியிற்
செலுத்தி
யறிவோர் சிறிதுஞ் சலியாம லன்னப் பெயர்மந் திரமாறிக்
குறிபோ யிருந்த வொரு குறியைக் குறித்துக் கொண்டங்
கிருந்தனரால் 25

(இ.ள்) உடலம் தறி போல் நேர் இருந்து - உடம்பு குற்றிபோலும்படி நேராயிருந்து (உடல் தலை கழுத்து மூன்றையும் சமானமாகவும் அசலமாகவும் நிறுத்தி); தயங்கும் மருங்கின் இருநாடி நெறிபோய் மீளும் வளியதனை - விளங்குகின்ற (வலம் இடம் என்னும்) பக்கங்களில் உள்ள பிங்கலை, இடை என்னும் இரண்டு நாடிகளின் வழியே சென்று திரும்பும் உயிர்க்காற்றை; நிறுவி நடுநாடியில் செலுத்தி - கும்பகம் செய்து சுழிமுனை நாடியிற் செலுத்தி; அன்னம் பெயர் மந்திரம் மாறி - ஹம்சம் என்னும் அன்னத்தின் பெயரையுடைய மந்திரத்தை மாறிக்கொண்டு; அறிவு ஓர் சிறிதும் சலியாமல் - ஞானநிலையிலிருந்து ஓர் சிறிதும் சஞ்சலப்படாமல்; குறிபோ இருந்த ஒரு குறியை - அடையாளம் ஏதுமற்ற இறையை; குறித்துக்கொண்டிருந்தார் - (தங்கள்) நினைவில் கொண்டிருந்தனர். (எ,று) ஆல் - அசைச்சொல்.

Koviloor Digital Library

332. வாயு நிற்ப மனநின்று மனந்தா னிற்பப் பொறிநின்று
[1]பாய பொறிக ணிற்பவிடர் படுபுன் புலன்க ணின்றனவா
லாய புலன்க ணின்றமையா லகிலந் தோன்றா துள்ளத்தே
தூய பரமா னந்தபரஞ் சோதி தோன்றக் கண்டிருந்தார் 26

(பா.ம்) [1]பாயும்பொறி

(இ.ள்) வாயுநிற்ப - (இவ்வாறு பயின்ற பயிற்சியால்) பிராணவாயு நிற்ப; மனம் நின்று - (பிராண வாயுவின் உதவியால் இயங்கும்) மனம் நின்று; மனம்தான் நிற்ப பொறி நின்று - மனம் நிற்ப (அதன் உதவியாய் இயங்கும்) ஐம்பொறிகளும் நின்று; பாய பொறிகள் நிற்ப இடர்படுபுன்புலன்கள் நின்றன - பொருள்களில் பரவிய ஐம்பொறி களும் நிற்ப (அவற்றிற்குப் புலனாகும்) துன்பத்தை உண்டாக்கும் புல்லிய புலன்கள் என்னும் ஓசை முதலான பொருள்களும் தோன்றாமல் நின்றன; ஆயபுலன்கள் நின்றமையால் அகிலம் தோன்றாது - உண்டாகிய ஓசை முதலான ஐம்புலன்களும் (தோன்றாது) நின்றமையால் (அப்புலன் வடிவமான) உலகம் தோன்றாமல்; உள்ளத்தே தூய பரமானந்த பரம்சோதி தோன்றக் கண்டிருந்தார் - மனத்தே தூய்மையாகிய மேலான ஆனந்தத்தையுடைய மேலான ஒளிமயமான கடவுள் தோன்ற. (அதனையே) பார்த்துக் கொண்டிருந்தார். (எ.று)

முடிபு - வாயு நிற்ப மனம் நின்று, மனம் நிற்ப பொறி நின்று, பொறிகள் நிற்ப புலன்கள் நின்றன; புலன்கள் நின்றமையால் அகிலம் தோன்றாது சோதி தோன்றக் கண்டிருந்தார்.

333. ஒருங்கு மனமோ டினையசிவ யோக சமாதி நவதிங்க
ணிரம்ப விருந்த காலத்து நெற்றி மிசையிற் பரஞ்சோதி
திரண்டு குழவி யுருவாகிச் சென்று புறமுற் றிட வதனை
விரும்பு மிருவர் தாமுமுடன் விழிக டிறந்து கண்டனரால்
27

(இ.ள்) ஒருங்கு மனமோடு இனைய சிவம்யோக சமாதி நவம் திங்கள் நிரம்ப இருந்த காலத்து - ஒன்றிய மனத்தோடு இத்தகைய சிவயோக சமாதி ஒன்பது மாதம் முடிய இருந்தபொழுது; நெற்றி மிசையில் பரம் சோதி திரண்டு குழவி உரு சென்று புற உற்றிட - நெற்றியின் மேலே விளங்கும் மேலான தெய்வ ஒளி திரண்டு குழந்தை வடிவம் ஆகிச் சென்று புறத்தே பொருந்த; அதனை விரும்பும் இருவர் தாமும் உடன் விழிகள் திறந்து கண்டனர் - அக்குழந்தையை, விரும்பும்

Koviloor Digital Library

நிராங்கார சுஞ்ஞானி என்னும் இருவர் தாமும் அப்பொழுதே கண்களைத் திறந்து கண்டார். (எ.று)

முடிபு - ஒருங்கு மனமோடு சமாதி நவதிங்கள் நிரம்ப இருந்த காலத்து, பரஞ்சோதி திரண்டு ஆகிச் சென்று உற்றிட, அதனை இருவர் தாமும் விழிகள் திறந்து கண்டனர்.

334. **வெம்மை யொழிந்து நிலத்திழிந்து விளங்கு கதிரோ பனிநீங்கி**
யெம்மை யாள வருமதியோ விடுமிந்தனங்க ணுகராத
செம்மை யொளிவான் பேரழலோ தெரியா தென்ன வொளிர்ந்ததவர்
தம்மை யறியா யுவகையுளந் தழைப்பச் சோதி மதலையே 28

(இ.ள்) அவர் தம்மை அறியா உவகை உளம் தழைப்ப சோதி மதலை- நிராங்கார சுஞ்ஞானிகளாகிய அவர் தம்மை அறிந்து கொள்ளாதபடி மகிழ்ச்சி மனத்திலே ஓங்கச் சோதிமதலையானது; வெம்மை ஒழிந்து நிலத்து இழிந்து விளங்கும் கதிரோ - வெப்பம் நீங்கி நிலத்தில் வந்து விளங்குகின்ற ஞாயிரோ; பனி நீங்கி எம்மை ஆளவரும் மதியோ - பனி நீங்கப் பெற்று எம்மை ஆட்கொள்வதற்கு எழுந்தருளிய திங்களோ; இடும் இந்தனங்கள் நுகராத செம்மை ஒளி வான்பேர் அழலோ - பெய்யப்படும் விறகுகளை உண்ணாத சிவந்த ஒளியை யுடைய உயர்ந்த பெரிய நெருப்போ; தெரியாது என்ன ஒளிர்ந்தது - (இம்மூன்றில் ஒன்றாய்) அறியப்படாது என்ன விளங்கிற்று. (எ.று)

முடிபு - சோதிமதலை அவர் உவகை உளம் தழைப்ப, கதிரோ! மதியோ! அழலோ! தெரியாது என்ன ஒளிர்ந்தது.

335. **அலைந்து பிறப்பி லாங்கார வஞ்ஞா னிகளா மானிடரும்**
மலிந்த சுரரும் முனிவரரு மற்றை யோரும் பெறுவரோ
தொலைந்த மாயை நிராங்கார சுஞ்ஞா னிகள்போன் மலவிருளை
நலிந்து வள்சச் சிதாநந்த நந்தா விளக்கா மதலையையே 29

(இ.ள்) தொலைந்த மாயை நிராங்கார சுஞ்ஞானிகள் போல் - கழிந்த மாயையையுடைய (மாயை கழிந்த) நிராங்கார சுஞ்ஞானிகள் பெற்றாற்போல; மலம் இருளை நலிந்து வள் சச்சிதானந்தம் நந்தா

Koviloor Digital Library

விளக்கு ஆம் மதலையை - ஆணவ மலமாகிய இருட்டினை வருத்தி வளரும் சத்து சித்து ஆனந்தம் என்னும் மூன்றன் மயமாய்க் கெடாத விளக்காகும் குழந்தையை; பிறப்பில் அலைந்து ஆங்கார அஞ்ஞானிகள் ஆம் மானிடரும் மலிந்த சுரரும் முனிவரரும் மற்றையோரும் பெறுவரோ - பிறவியிலே அலைந்து அகங்கார அஞ்ஞானிகள் ஆகும் மனிதரும் அத்தன்மையில் மிகுந்த தேவரும் முனிவரும் ஏனையோரும் அடைவரோ. (எ.று)

முடிபு - நிராங்கார சுஞ்ஞானிகளைப் போல மதலையை ஆங்கார அஞ்ஞானிகளாம் மானிடரும், சுரரும், முனிவரரும், மற்றையோரும் பெறுவரோ. மலத்தை இருளாக உருவகித்தற்கு ஏற்ப மதலையை விளக்காக உருவகித்தார்.

336. பேரா னந்தம் பிள்ளையாய் பெற்ற வவர்க்கு விடயத்துள்
ஓரானந்தம் பெற்றுடனே யொழியு முலகர் [1]தம்மை நாம்
நேரா வியம்ப லாகுமோ நிகர்தாந் தம்மிற் றாமென்று
வாரா ரிளமென் முகிழ்முலைநன் மடவா யுரைப்ப தன்றியே
30

(பா.ம்) [1]தம்மை நான்

(இ.ள்) வார் ஆர் இள மெல் முகிழ் முலை நல் மடவாய் - கச்சுப் பொருந்திய இளைய மெல்லிய அரும்பு போன்ற நகிலையுடைய (மாயையாகிய) பெண்ணே. பேர் ஆனந்தம் பிள்ளை ஆ பெற்ற அவர்க்கு - பெரிய ஆனந்தப் பொருளை குழந்தையாகப் பெற்ற அவ்விருவருக்கு; நிகர்தாம் தம்மில் தாம் என்று உரைப்பதன்றி - உவமை தாம் தமக்குள் தாமே என்று கூறுவதன்றி; விடயத்துள் ஓர் ஆனந்தம் பெற்று - ஐவகை உலகவிடய ஆனந்தப் பொருள்களுள் ஒரு ஆனந்தம், பொருளைப் பெற்று (நுகர்ந்து); உடனே ஒழியும் உலகர் தம்மை நாம் நேர் ஆ இயம்பல் ஆகுமோ - உடனே அதனை வெறுத்தொழியும் உலக மக்களை உவமை ஆகச் சொல்லுதல் கூடுமோ. (எ.று)

முடிபு - மடவாய் பேரானந்தம் பிள்ளை யாம் பெற்ற அவர்க்கு நிகர் தம்மில் தாம் என்ற உரைப்பதன்றி விடயத்துள் ஓரானந்தம் பெற்று உடனே ஒழியும் உலகர் தம்மை நாம் நேரா இயம்பலாகுமோ. ஐவகை உலக விடயானந்தங்களைக் ''கண்டு கேட்டு மற்றுண்டுயிர்த் துற்றிடு காலைக் கொண்ட யின்பங்கள்'' சித்தாந்த சிகாமணி காயர்ப்பிதம்) என்னும் செய்யுளால் அறிக.

Koviloor Digital Library

337. பண்டு பாசந் தபுசிலரும் பரஞ்சோ தியைத்தாந் தம்முள்ளே
கண்டு வாழ்வு பெறுநரலாற் கண்ணிற் காட்டு மவரில்லை
தொண்டு படுமிந் நிராங்கார சுஞ்ஞானி னிகடம்
முட்கண்டு
கொண்ட வொளியை யுலகுய்யக் குழவி யாக்கிக்
காட்டினரால் 31

(இ.ள்) பண்டு பாசம் தபு சிலரும் - பழைய காலத்திலே தளை நீங்கப் பெற்ற சிவ ஞானிகளும்; பரஞ்சோதியை தம் உள்ளே கண்டு வாழ்வு பெறு நரலால் கண்ணில் காட்டும் அவர் இல்லை - மேலான ஒளிமயமான கடவுளைத் தமக்குள்ளே (தம்மை இயக்குபவனாக) உளக்கண்ணால் கண்டு வாழ்வு பெறுநர் அல்லாமல் (அச்சோதியை) முகக்கண்ணில் காட்டுகின்ற அத்தகையோராய் இல்லை; தொண்டுபடும் இ நிராங்கார சுஞ்ஞானிகள் தம் உள்கண்டு கொண்ட ஒளியை - அடிமைப்படும் இந்த நிராங்கார சுஞ்ஞானிகள் தமக்குள்ளே கண்டு அறிந்து கொண்ட பரஞ்சோதியை; உலகு உய்ய குழவி ஆக்கி காட்டினர் - உலகத்தவர் பிழைக்கக் குழந்தையாக்கி வெளியே காட்டினர். (எ.று) தாம்-ஆல்-அசைகள்.

முடிபு - சிலரும் கண்டு வாழ்வு பெறுநரலால் காட்டுமவர் இல்லை; இந்நிராங்கார சுஞ்ஞானிகள் கண்டு கொண்ட ஒளியைக் குழவி ஆக்கிக் காட்டினர்.

338. சங்குந் தேவ துந்துமியுந் தழங்க மலர்மா மழை பொழிந்த
எங்குந் திசைகள் விளங்கின கன்றீன்ற மலடு தறி தளர்த்த
பங்கங் கலந்த புனறெளிந்த பதகர் மனமுந்தெளிந்தவருள்
பொங்குந் துறவர் மனமகிழ்ந்த புனிதன் மகவாய்த்
தோன்றுநாள் 32

(இ.ள்) புனிதன் மகவு ஆய் தோன்றும் நாள் - தூயவன் குழந்தையாகித் தோன்றும் அக்காலத்திலே; சங்கும் தேவதுந்துபியும் தழங்க மலர் மாமழை பொழிந்த - வானுலகத்திலே சங்கும் தேவதுந்துமி என்னும் வாத்தியமும் முழங்க பெரிய பூமழை பொழிந்தன; திசைகள் எங்கும் விளங்கின - திக்குகள் எங்கும் விளக்கமுற்று இருந்தன; மலடு கன்று ஈன்ற - மலட்டுப் பசுக்கள் கன்றினைப் பெற்றன; தறிதளிர்த்த - பட்டுப்போன கட்டைகளெல்லாம் தளிர்த்தன; பங்கம் கலந்த புனல் தெளிந்த - சேறுகலந்த நீரெல்லாம் தெளிந்தன; பதகர் மனமும் தெளிந்த

Koviloor Digital Library

- பாதகருடைய மனமும் தெளிவடைந்தன; அருள் பொங்கும் துறவர் மனம் மகிழ்ந்த - அருட்குணம் மிகும் துறவிகளுடைய மனமெல்லாம் மகிழ்ந்தன. (எ.று)

முடிபு - புனிதன் மகவாய்த் தோன்றும் நாள் சங்கும் துந்துமியும் முழங்க மலர்மழை பொழிந்த, திசைகள் விளங்கின; மலடு கன்றீன்ற, தறி தளிர்ந்த, புனல் தெளிந்த, பதகர் மனமும் தெளிந்த, துறவர் மனம் மகிழ்ந்த.

339. நையா மனத்து நிராங்காரன்
ஞானத் திரளாம் பிள்ளைதனை
மெய்யா முளக்க ணன்றியுமிவ்
விழியுங் காணப் பெற்றனமென்
றெய்யா வுவகைக் கடன்மூழ்கி
யேறான் மார்போ டுறத்தழுவிக்
கையா லெடுப்ப வெங்குநிறை
[1]கனவான் கனவா னொய்தாகி 33

(பா.ம்) [1]கனவாள்

(இ.ள்) நையா மனத்து நிராங்காரன் - வருந்தாத மனத்தையுடைய நிராங்காரன்; ஞானத்திரள் ஆம்பிள்ளைதனை - அறிவு வடிவாகிய (நெற்றியிற் பரஞ்சோதி) திரண்டு ஆகும் குழந்தையை; மெய் ஆம் உளம் கண் அன்றியும் - உண்மையாகிய அகக்கண்ணினாலே காண்பதன்றியும்; இவிழியும் காணப் பெற்றனம் என்று - இந்த முகக்கண்ணினாலும் பார்க்கப் பெற்றோம் என்றெண்ணி; எய்யா உவகை கடல் மூழ்கி ஏறான் - தன்னை அறியாத உவகை என்னும் கடலில் அமிழ்ந்து கரை ஏறானாய்; மார்போடு உறதழுவி கையால் எடுப்ப - மார்புடனே பொருந்த தழுவிக் கைகளால் எடுப்ப; எங்கும் நிறை கனவான் கனவான் நொய்துஆகி - எங்கும் நிறைந்துள்ள மேன்மையானவன் (ஆதலினாலே) தான் கனத்திராமல் இலேசாகி (எ.று)

முடிபு - நிராங்காரன் பிள்ளைதனை உளக் கணன்றியும் இவ்விழியுங், காணப்பெற்றனம் என்று உவகைக் கடலின் மூழ்கி ஏறானாய்த் தழுவிக் கையால் எடுப்ப, கனவான் கனவான் (கனவாமல்) நொய்து ஆகி.

340. செவ்வாய் ஞான மயில் கொழுநன் செந்தா மரைத்தாள்
வணங்குபு

Koviloor Digital Library

மிவ்வாய் மகன தியல்புநீ யியம்பா யென்ன வவன்றெரிந்து
நசைவாகம முமாரணமுஞ் சாற்றற்கரிய நம்மகவை
யெவ்வா றுரைப்பன் யான்மடவா யென்று வியந்து
கூறுவான் 34

(இ.ள்) செவ்வாய் ஞானம் மயில் கொழுநன் செந்தாமரைதாள் வணங்குபு - சிவந்த வாயையுடைய சுஞ்ஞானியாகிய மயில் கணவனது செந்தாமரை போன்ற அடிகளை வணங்கி; நம் இவாய் மகனது இயல்பு நீ இயம்பாய் என்ன - நம்முடைய இப்பொழுது வாய்த்த குழந்தையினது தன்மையை நீ சொல்லுவாயாக என்று கூற; அவன் தெரிந்து - நிராங்காரன் (அக்குழந்தையின் இயல்பை எல்லாம்) அறிந்து; மடவாய் சைவம் ஆகமமும் ஆரணமும் சாற்றற்கு அரிய நம் மகவை எவ்வாறு உரைப்பன் யான் என்று வியந்து கூறுவான் - பெண்ணே! சைவத்தை உணர்ந்தும் ஆகமமும் வேதமும் சொல்லுதற்கரிய நமது குழந்தையை (ஒருவனாகிய) யான் எவ்வாறு கூறுவேன் என்று கூறிவியப்புற்றுச் சொல்லுவான் (எ.று)

முடிபு - ஞானமயில் கொழுநன் தாள்வணங்குபு, மகனது இயல்பு நீ இயம்பாய் என்ன, அவன் தெரிந்து ஆகமமும் ஆரணமும் சாற்றற்கரிய நம்மகவை மடவாய்! யான் எவ்வாறு உரைப்பன் என்று வியந்து கூறுவான்.

341. [1]நாம்பாற் குழவி யாகாம
னம்பாற் குழவி யாயினான்
றீம்பாற் கடலிற் துயில்வோனுஞ்
செந்தா மரைமே லுறைவோனுந்
தாம்பார்க் கரிய வடிமுடியோன்
றானே யைய மிதற்கில்லைக்
காம்பாற் புரிந்த தனையதோட்
கனிவாய்த் தடங்க ணாயென்றான் 35

(பா.ம்) [1]நாம்பார்க்குழவி

(இ.ள்) காம்பால் புரிந்தது அனைய தோள் கனிவாய் தடங்கண்ணாய்- மூங்கிலினாற் செய்ததை ஒத்த தோளையும், கனியை ஒத்த வாயையும் அகன்ற விழிகளையும் உடைய சுஞ்ஞானியே! தீம்பால் கடலில் துயில்வோனும் செந்தாமரை மேல் உறைவோனும்

Koviloor Digital Library

பார்க்க அரிய அடிமுடியோன் தானே - இனிய பாற்கடலில் உறங்குவோனாகிய திருமாலும் சிவந்த தாமரை மலர் மேல் தங்குவோனாகிய நான்முகனும் காண்பதற்கரிய திருவடியையும் திருமுடியையும் உடைய சிவபெருமான் தானே; நாம் பால்குழவி ஆகாமல் நம்பால்குழவி ஆயினான் இதற்கு ஐயம் இல்லை என்றான் - நாம் பாலுண்ணும் குழந்தையாகப் பிறக்காமலிருக்க நம்மிடத்தே குழந்தையாகப் பிறந்துள்ளான் இதற்குச் (சிறிதும்) சந்தேகம் இல்லை என்று கூறினான். (எ.று)

முடிபு - தடங்கண்ணாய்! பால்கடலில் துயில்வோனும் செந்தாமரை மேல் உறைவோனும் பார்க்கரிய அடிமுடியோன்றானே நாம்பால் குழவியாகாமல் நம்பால் குழவி ஆயினான். இதற்கு ஐயம் இல்லை என்றான்.நாம்பால் குழவியாகாமல் என்பது நாம் பிறவி நெறிக்குப் போகாதபடி என்பது கருத்து.

342. ஆன்ற மயல்செய் சையோகத்
தன்றித் தவயோ கத்தினால்
ஈன்ற பொழுதிற் றன்மகனை
யிருந்து சான்றோனெனக்கேட்டுத்
தோன்று முவகைக் கடற்படிந்தாள்
சுஞ்ஞா னித்தாய் பசும்பொன்மலை
போன்று வளர்ந்து மருங்குன்மிடி
போக்க வறியா [1]விளமுலையாய் 36

(பா.ம்) [1]இளமுலையாள்

(இ.ள்) பசுபொன் மலை போன்று வளர்ந்தும் மருங்குல் மிடிபோக்க அறியா இளமுலையாய் - பசிய பொன்மலை போல உயர்ந்திருந்தும் இடையின் வறுமையை நீக்க அறியாமல் (அதனை வளர்க்கும்) இளைய நகிலையுடையவளே! சுஞ்ஞானித் தாய் ஆன்ற மயல் செய் சையோகத்தன்றி தவயோகத்தினால் ஈன்ற பொழுதில் - சுஞ்ஞானியாகிய தாய் மிகுந்த காம மயக்கத்தைச் செய்யும் புணர்ச்சியினால் அல்லாமல் தவமாகிய யோகத்தினால் (பரஞ்சோதி யாகிய குழந்தையைப்) பெற்ற காலத்தைக் காட்டிலும்; தன் மகனை இருந்துசான்றோன் என கேட்டு - தனது குழந்தையை (நிராங்காரன் தன் முன்) இருந்து நற்குணங்கள் அமையப் பெற்றோன் என்று

Koviloor Digital Library

சொல்லக்கேட்டு; தோன்றும் உவகைக்கடல் படிந்தாள் - (அதனால்) உண்டாகும் மகிழ்ச்சியாகிய கடலில் மூழ்கினாள். (எ.று)

முடிபு - இளமுலையாய் சுஞ்ஞானித்தாய் சையோகத்தன்றித் தவயோகத்தினால் ஈன்ற பொழுதில் தன் மகனை (நிராங்காரன்) சான்றோன் எனக் கேட்டு (அதனால்) தோன்றும் உவகைக் கடலில் படிந்தாள்.

343. மத்த நெஞ்சக மோடுதம் மதியி னென்றை [1]அறிந்திது
மெய்த்து றும் பொருளெ ன்றதை வேத மாகம மோதுமென்
றுத்தி கொண்டுரை செய்தெதி ரொன்றை நிந்தைசெய் சமயர்தம்
பித்தை யல்லெனு மல்லமாப் பிரபுவெ னும்பெய ரிட்டனர் 37

(பா.ம்) [1]அறைந்திது

(இ.ள்) மத்தம் நெஞ்சகமோடு - மயக்கவுணர்வு பொருந்திய மனத்துடன்; தம்மதியின் ஒன்றை அறிந்து - தம் கருத்தினாலே ஒன்றை உணர்ந்து கொண்டு; இது மெய்த்துறும் பொருள் என்று - இதுவே உண்மை பொருந்திய பொருள் என்று கூறி; அதை வேதம் ஆகமம் ஓதும் என்று உத்தி கொண்டு உரை செய்து - அப்பொருளை இதுவே வேதம் இதுவே ஆகமம் என்று தம் யுக்தியினால் கூறி; எதிர் ஒன்றை - தமக்கு முன் எதிர்ப்பட்ட உண்மைப் பொருளை; நிந்தை செய் சமயர்தம்பித்தை - பழித்தலைச் செய்யும் சமயவாதிகளின் பித்தினை; அல் எனும் அல்லமாப் பிரபு எனும் பெயர் இட்டனர் - அல்ல என்று கூறும் காரணத்தினால் அல்லமாப் பிரபு என்னும் பெயரை வைத்தழைத்தனர் (எ.று)

முடிபு - மத்த நெஞ்சகமோடு ஒன்றை அறிந்து இது பொருள் என்று, அதை ஓதும் என்று உத்தி கொண்டு உரை செய்து ஒன்றை நிந்தை செய் சமயர்; அச்சமயர் தம் பித்தை அல்லெனும் அல்லமாப் பிரபு எனும் பெயர் இட்டனர்.

344. வினையி லொரு வன்றரு மேனி யாளன லாதொரு
மனித னாகி நடித்திடும் வடிவ னாதலி னல்லமன்
நினையு மாறு தவழ்ந்துபின் னின்று மெல்ல நடந்துபோய்
வனையு மாமணி மாளிகை மறுகி னாடல் பயின்றனன் 38

Koviloor Digital Library

(இ.ள்) அல்லமன் வினையினால் ஒருவன் தரும் மேனியாளன் அலாது ஒரு மனிதன் ஆகி நடித்திடும் வடிவன் ஆதலின் - அல்லம தேவன் இருவினை காரணத்தால் நான்முகனாகிய ஒருவனால் தரப்படும் உடம்புடையோன் அல்லாமல் (தன் அருளால்) ஒரு மனித வடிவம் உடையனாகி நடித்திடும் (அருள்) வடிவன் ஆதலினாலே; நினையுமாறு தவழ்ந்து (கொண்ட கோலத்திற்கேற்ப) விரும்பும்படி தவழ்ந்து; பின் நின்று - பின் எழுந்து நின்று; மெல்ல நடந்து போய் - தளர் நடையிட்டுச் சென்று; வனையும் மாமணி மாளிகை மறுகில் ஆடல் பயின்றனன் - செய்யப்பட்ட பெரிய மணிகள் பதித்த மாளிகைகளை யுடைய தெருவில் விளையாட்டினைப் பழகினான். (எ.று)

முடிபு - அல்லமன் வினையினால் ஒருவன் தரும் மேனியாளன் அலாது (அருளால்) ஒரு மனிதன் ஆகி நடித்திடும் வடிவன் ஆதலின் தவழ்ந்து, நின்று, நடந்து, போய் பயின்றனன் (அல்லமன் வடிவன் ஆதலின் என்று கூட்டுக).

345. **வருக வெங்கட மாவியே வருக கண்ணுக ரமுதமே**
வருக வெங்குல தீபமே வருக கேடறு செல்வமே
வருக பாச வினாசனே வருக ஞான வினோதனே
வருக [1]வென்றனை மகிழ்த்தர வந்து மேல்விழு மல்லமன்
39

(பா.ம்) [1]வென்றுள மகிழ்தர

(இ.ள்) வருக; எங்கள் தம் ஆவியே - எங்களது இனிய உயிராய் விளங்குபவரே; வருக; கண்ணுகர் அமிர்தமே - புறக்கண்ணாலன்றி அகக்கண்ணாலும் உண்ணுதற்குரிய அமிர்தத்திற்கு ஒப்பானவரே; வருக; எங்குல தீபமே - எங்கள் குல விளக்காய்த்திகழ்பவரே; வருக ; பாச வினாசனே - எங்களின் பாசத்தளையினை அழிப்பவரே; வருக; ஞான வினோதனே - ஞானத்திரு விளையாட்டினைப் புரிபவரே; வருக என்று; (தன்பால்) வரவேண்டும் என்று; அனை - (சுஞ்ஞானியாகிய) தாயின்; உளம் மகிழ்திட - உள்ளமானது மகிழ்வடைய; வந்து மேல் விழும் அல்லமன் - மேலே வந்து விழுகின்ற அல்லமன். (எ.று)

முடிபு - அனை (அன்னை) எங்கள் தம் ஆவியே வருக; கண்நுகர் அமுதமே வருக; எங்குல தீபமே வருக; கேடறு செல்வமே வருக; பாச விநாசனே வருக; ஞான விநோதனே வருக என்று (கூற) அல்லமன் அனை மகிழ்தர வந்து மேல் விழும்.

Koviloor Digital Library

346. மாயை யாலுள வாகிய வடிவு நாம மழித்துள
[1]தாய வோர்பிர மந்தனை யறியு மாறறி வித்தல்போன்
மேய பேதையர் மணலமை வீடு தாள் கொடழித்தனள்
போயு லாவுவன் [2]மானிடன் போல வேவிளை
யாடுவோன் 40

(பா.ம்) [1]ஆயவோர் ; [2]மானுடன்

(இ.ள்) மானிடன் போலவே விளையாடுவோன் - மனிதனைப் போலத் திருவிளையாட்டினைச் செய்யும் அல்லமதேவன்; மாயையால் உள ஆகிய வடிவு நாமம் அழித்து - மாயை என்னும் முதற்காரணத்தால் தோன்றிய உருவம் பெயர் இவற்றொடு கூடிய காரியப் பொருள்களை அழித்து; உளது ஆய் ஓர் பிரமம் தனை அறியும் ஆறு அறிவித்தல் போல் - நிலை பேறாகிய ஒப்பற்ற (சத்து சித்து ஆனந்த வடிவாகிய) பிரம்மத்தை அறியும்படி அறிவித்தல் போல; மேய பேதையர் மணல் அமைவீடுதான் கொடு அழித்தனன் - பொருந்திய பேதைப் பெண்கள் மணலால் அமைத்த சிற்றிலை (அதனுடைய பெயரும் வடிவமும் கெடும்படி) காலால் அழித்தான், போய் உலாவுவான். (எ.று)

முடிபு - விளையாடுவோன் மாயையால் ஆகிய வடிவு நாமம் அழித்து பிரமந்தனை அறிவித்தல் போல் பேதையர் மணல் அமைவீடு தாள் கொடு அழித்தனன் போய் உலாவுவன்.

347. நானி யக்கி னியங்குறு ஞால மென்றறி வித்தல்போற்
றானு ருட்டுதல் வீதியிற் றமனி யச்சிறு தேரினை
[1]யான டக்கரு நெஞ்சக மிதனை யொக்குறு மென்பது
போன மக்குயி ராயினோன் புதிய பம்பர மாடுமால் 41

(பா.ம்) [1]யானடக்குறு ; யானடுக்கரு

(இ.ள்) ஞாலம் நான் இயக்கின் இயங்குறும் என்று அறிவித்தல் போல்- உலகங்களெல்லாம் நான் நடத்தினால் நடக்கும் என்று அறிவித்தலைப் போல; நல்வீதியில் தமனியம் சிறு தேரினை தான் உருட்டும் - நல்ல தெருவில் பொன்னால் ஆகிய சிறு தேரினைத்தான் உருட்டி விளையாடும்; யான் நடக்க அருநெஞ்சகம் இதனை ஒக்குறும் என்பது போல் - (பரஞ்சோதியாகிய) யான் செல்லுதற்கரிய மனம் இப்பம்பரத்தை ஒக்கும் என்பது போல; நமக்கு உயிர் ஆயினோன் புதிய பம்பரம் ஆடும் - நமக்கு உயிரை ஒத்த அல்லமன் புதிய பம்பரத்தை ஆடும். (எ.று) ஆல் - அசை.

Koviloor Digital Library

முடிபு - ஞாலம் நான் இயக்கின் இயங்குறும் என்று அறிவித்தல் போல தேரினை உருட்டும். யான் நடக்க அரு நெஞ்சகம் இதனை ஒக்குறும் என்பதுபோல் உயிராயினோன் பம்பரம் ஆகும். (வி.ரை) நான், யான் என்பன அல்லமனைக் குறிக்கும். கடவுள் உணர்ச்சியில்லாத மனம் உலகப் பொருள்களில் சென்று பம்பரம் போல சுழலும் ஆதலின் (யான் நடக்கரு நெஞ்சகம் இதனை ஒக்குறும்) என்றார்.

348. ஆடி யொன்றெதிர் கொண்டுதம் மான னந்தெரிவார்கள் போற்
கூடி [1]யொண்குரு வெதிர்கொடு கொண்டு தன்பெரு விஞ்சைகள்
நாடி யொண்கலை கற்றல்போ னாட கம்பல செய்தனன்
பீடு றும்பழ மறைகளும் பேச ரும்புக ழாளனே 42

(பா.ம்) [1]ஒண்குரு வேதியா

(இ.ள்) பீடுஉறும் பழ மறைகளும் பேச அரும்புகழாளன் - பெருமை பொருந்திய பழைய வேதங்களும் சொல்லுதற்கரிய புகழையுடைய அல்லமதேவன்; ஆடி ஒன்று எதிர்கொண்டு தம் ஆனனம் தெரிவார்கள் போல் - கண்ணாடியொன்றினை எதிரே வைத்துக் கொண்டு தம் முகத்தினைக் காண்பவர்போல; ஒண்குரு கூடி எதிர்கொடு - சிறந்த ஆசிரியனைச் சார்ந்து முன்னிலையாக்கி; கொண்டு - அவ்வாசிரியனைக் கொண்டு; தன்பெரு விஞ்சைகள் நாடி - தன்னுடைய பெரிய வித்தைகளை எல்லாம் ஆராய்ந்து; ஒண்கலை கற்றல் போல் நாடகம் பல செய்தனன் - அறிவுக் கலைகளைக் கற்றல் போல பல நடிப்பைச் செய்தான். (எ.று)

முடிபு - புகழாளன் 'ஆடி ஒன்றினை எதிர்கொண்டு தம் ஆனனத்தைத் தெரிவார்கள் போல, குருவைக் கூடி எதிர் கொடு, (அவரைக் கொண்டு தன் விஞ்சைகள் நாடிக் கலை கற்றல் போல பல நாடகம் செய்தனன்.

349. தந்தை தாயுள மின்புறத் தனது பேரரு ளாலிள
வமந்த னாகி யிருந்தொரு வால லீலை நடித்தருள்
எந்தை தானுல கெங்கணு [1]மெய்தி மக்கடம் வல்வினை
சிந்து மாறு நினைந்திது செப்பன் மேயின னென்பவே 43

(பா.ம்) [1]எய்து

Koviloor Digital Library

(இ.ள்) தந்தை தாய் உளம் இன்பு உற - தகப்பன் தாய் ஆகிய இருவர் மனமும் இன்பத்தை அடைய; தனது பேர் அருளால் - தனது பெரிதாகிய திருவருளாலே; மைந்தன் ஆகி இருந்து - மைந்தன் வடிவத்தை உடையவனாகி இருந்து; ஒருவால லீலை நடித்தருள் எந்தைதான் - ஒப்பற்ற இளமைப் பருவ விளையாட்டை நடித்தருளும் எம் தந்தையாகிய அல்லமன்றான்; உலகு எங்கணும் எய்தி - உலகம் எல்லாவற்றினும் சென்று; மக்கள் தம் வல்வினை சிந்தும் ஆறு நினைந்து - மக்களுடைய வலிய கன்மமாகிய பாசத்தை சிதறச் செய்யும் வழியை உணர்த்தக் கருதி; இது செப்பல் மேயினன் என்ப - பெற்றோருடன் இச்சொல்லைச் சொல்லுதலை விரும்பினன் என்பர். (எ.று)

முடிபு - தனது பேருளால் இளமைந்தனாகி இருந்து, தந்தைதாய் உளம் இன்புற பாலலீலை நடித்தருள் எந்தைதான், உலகு எங்கணும் எய்தி, மக்கள் தம் வல்வினை சிந்துமாறு நினைந்து இது செப்பல் மேயினன் என்ப.

350. **உங்கள் பாவனை யொருமையா லுருவ மாமக னாகிநான்**
இங்கு மேவ யிருந்தன னினிந டந்துல கெங்கணுந்
தங்கு மாதவர் முதலியோர் தங்க ளெண்ண முடிப்பனென்
றெங்க ணாத னியம்பவவ் விருவ ரும்புகல் கின்றனர் 44

(இ.ள்) நான் உங்கள் பாவனை ஒருமையால் உருவமாமகன் ஆகி இங்கு மேவி இருந்தனன் - அல்லமனாகிய நான், உங்களுடைய சிவபாவனை ஒருமையினாலே; உருவமில்லாத யான் உருவத்தை தயுடைய பெரிய மகனாகி, இவ்விடத்தில் பொருந்தி இருந்தேன்; இனி உலகு எங்கணும் நடந்து - இனிமேல் உலகின் எவ்விடத்தும் நடந்து; தங்கும் மாதவர் முதலியோர் தங்கள் எண்ணம் முடிப்பன் - அங்கங்கு வாழ்ந்திருக்கும் பெரிய தவம் செய்வோர் முதலானவர்களின் கருதும் பொருள்களை முற்றுறச் செய்வேன்; என்று எங்கள் நாதன் இயம்ப - இவ்வாறு எங்கள் தலைவனாகிய அல்லம தேவன் கூற; இருவரும் புகல்கின்றனர் - பெற்றோராகிய சுஞ்ஞானியும் நிராங்காரனும் கூறத் தொடங்கினர். (எ.று)

முடிபு - நான் உங்கள் பாவனை உரிமையினால் மகனாகி மேவி இருந்தனன். இனி உலகு எங்கணும் நடந்து மாதவர் முதலியோர் எண்ணம் முடிப்பன் என்று நாதன் இயம்ப அவ்விருவரும் புகல்கின்றனர்.

Koviloor Digital Library

351. பிறப்பெ னுங்கட லிற்படும் பீழை யேமுறு புணையனாய்
துறப்பின் வீடெனு மொண்கரை துன்னு றாதமிழ்வேமெனா
மறப்பி லாவிரு குரவரு மனமு ளைந்துரை செய்திடச்
சிறப்ப ஞான சிகாமணி தெளியு மாறுரை யாடினான் 45

(இ.ள்) பிறப்பு எனும் கடலில் படும் பீழையேம் உறுபுணை அனாய் - பிறப்பு என்னும் கடலின்கண் மூழ்கும் குற்றம் உடையேம் ஆகிய எங்களுக்குக் கிடைத்த தெப்பம் போன்றவனே; துறப்பின் வீடு என்னும் ஒண் கரை துன் உறாது அமிழ்வேம் எனா மறப்பு இலா இரு குரவரும் மனம் உளைந்து உரை செய்திட - நீ எங்களைத் துறப்பாயானால் நாங்கள் மோட்சம் என்கின்ற நல்லகரையினை அடையப் பெறாமல் அமிழ்ந்து விடுவேம் என்று, மறத்தலில்லாத அந்த இரண்டு பெற்றோர்களும் மனம் வருந்திக் கூறிட; ஞான சிகாமணி சிறப்ப தெளியுமாறு உரையாடினான் - அறிவின் முடி மணி போன்ற அல்லம தேவன் நன்கு தெளிவு உண்டாகும்படி அவர்களோடு கூறத் தொடங்கினான். (எ.று)

முடிபு - புணைஅனாய் (நீ) துறப்பின் (நாங்கள்) வீடு எனும்கரை துன்னுறாது அமிழ்வேம். எனா இருகுரவரும் உளைந்து உரை செய்திட, ஞான சிகாமணி தெளியுமாறு உரையாடினான்.

352. சற்றும் நும்மையகன்றிடேன் றளரன் மின்மன
மென்னும்நான்
சொற்ற தைய முமக்கெனிற் றுணியு மாகம வேதநூல்
கற்று ளோரை வினாய் நிராங்கார ஞானிக டமையிவண்
உற்ற வல்லம னகல்வனே லுரைமி னென்றுணர் மின்களே
46

(இ.ள்) சற்றும் நும்மை அகன்றிடேன் - சிறிது பொழுதும் உங்களைவிட்டு நீங்க மாட்டேன்; தளரன்மின் மனம் என்னும் - எப்பொழுதும் மனம் தளர வேண்டாம்; நான் சொற்றது ஐயம் உமக்கு எனில் - நான் கூறியவற்றில் உமக்கு ஐயம் ஏற்பட்டால்; துணியும் ஆகம வேத நூல் கற்றுளோரைவினாய் - நிச்சயிக்கப்படும் சிவாகமங்களையும் வேதநூல்களையும் கற்றவர்களைக் கேட்டு; நிராங்கார ஞானிகள் தமை - நிராங்கார சுஞ்ஞானிகளை; இவண் உற்ற அல்லமன் - உங்களுக்கு முன்னே நிற்கின்ற இவ் அல்லமன்; அகல்வனேல் உரைமின் - பிரிவானேயாகில் அதைக் கூறுமின் என்று உணர்மின்கள் - என்று அவர்களிடம் வினாவி உண்மையை அறிந்து கொள்ளுங்கள். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - அகல்வனேல் உரைமின் என்றது அகலமாட்டான் என்பது கருத்து. அகங்காரம் அற்றவனாகிய நிராங்காரனையும் மெய்ப்பொருள் உணர்ந்த சுஞ்ஞானியையும் அல்லமதேவனாகிய சிவன் என்றும் நீங்கான் என்பது கருத்து.

353. என்று பொன்னுமிவ் வுடன்முத லியாவும் வேறென நீக்குபு
நின்றதம்மில்வே றலனெனு நிலையைநின்று தாதான்மியம்
ஒன்று றும்பரி சுரைசெயூ வுணரும் வண்ணம் உணர்த்தி
னான்
பின்ற லின்றிய வல்லமாப் பிரபுவெ னுங்குரு ராயனே 47

(இ.ள்) பின்றல் இன்றிய அல்லமாப்பிரபு எனும் குருராயன் என்று - பின்னிடுதல் இல்லாத அல்லமாப்பிரபு என்னும் பெயருடைய குரவர் தலைவன் என்று கூறி; பொன்னும் இ உடல் முதல் யாவும் வேறு என நீக்குபு நின்ற தம்மில் வேறு அலன் எனும் நிலையை - அழியும் இயல்பையுடைய இவ்வுடல் முதலான எல்லாவற்றையும் வேறு என்று நீக்கிவிட்டு; நீக்க முடியாமல் நின்ற தாம் என்னும் ஆன்மாவில், அல்லமதேவனாகிய தான் வேறாக அல்லன் என்னும் நிலையை; நின்று தாதான்மியம் ஒன்றுறும் பரிசு உரை செயூ உணரும்வண்ணம் உணர்த்தினான் - அல்லம தேவன் தன் பெற்றோர்கள் முன் நின்று ஆன்மாவும் பதியும் வெவ்வேறாக விளங்குபவர் அல்லர் ஒற்றுமைப்பட்டே விளங்குவர் என்றும் தாதான்மியம் ஒன்றுறும் பரிசை கூறுதல் செய்து அவர்களுக்கு உண்மைப் பொருளை உணர்த்தினான். (எ.று) தாதான்மியம் - பிரிக்க முடியாத ஒற்றுமை (ஐக்கியம்)

354. தந்தை தாயில னாகிய தாணு வாகிய சங்கரன்
மைந்த னாய்மக வில்லெனு மனவ ருத்த மகற்றவும்
முந்து தேசிக னாகிநன் முத்தி நல்கவு மெய்தினோர்
இந்த மாதவ ரலதிலை யென்னு மக்க டுதித்தனர் 48

(இ.ள்) தந்தை தாய் இலன் ஆகிய தாணு ஆகிய சங்கரன் மைந்தன் ஆய் மகவுஇல் எனும் மன வருத்தம் அகற்றவும் - தந்தையும் தாயும் இல்லாதவனாகிய அசையா நிலை பெற்ற சங்கரன், (பிள்ளையாகி) புதல்வனாகி வந்து மக்கள் இல்லை என்று எண்ணும் மனத்துன்பத்தை நீக்கவும்; முந்து தேசிகன் ஆகி நன் முத்தி நல்கவும் - மேலும் முற்பட்ட ஞானாசிரியனாய் வந்து நல்ல முத்தியைக் கொடுக்கவும்; எய்தினோர் இந்த மாதவர் அலது இலை என்று மக்கள் துதித்தனர் - இத்தகைய

Koviloor Digital Library

பேற்றைப் பெற்றோர் நிராங்கார சுஞ்ஞானிகள் என்னும் இந்த மாதவர் அல்லது வேறொருவரும் இப்பேற்றைப் பெற்றிலர் என்று கூறி மக்கள் துதித்தனர். (எ.று)

முடிபு - இலை என்பது ஐம்பால் மூவிடத்து பொதுச் சொல் என்க. இறைவன் மகவாக வந்து உதவிய பேறும் ஞானாசிரியனாக உபதேசித்த பேறும் இவர்களுக்கே கிடைத்தன. நிராங்காரன் சுஞ்ஞானிகளுக்கு, வேறு எவருக்கும் கிடைக்கவில்லை என்பது கருத்தாகும்.

355. **ஆத லாலெழி லல்லம னருளி னாலுறு கின்றது**
வாத மாறுநன் முத்திதான் மலைத ருங்கொடி யறிதியென்
றோதி னானர னதுபொழு துடனி ருந்தன னென்றவள்
மேதை மாயை யறிந்திட விமலை கூறின ளென்பவே 49

(இ.ள்) ஆதலால் - ஆகையினாலே; எழில் அல்லமன் அருளினால் உறுகின்றது வாதம் மாறுநன் முத்தி தான் மலைதரும் கொடி அறிதி என்று அரன் ஓதினான் - அழகிய அல்லமதேவனுடைய அருளினாலே அடைவது வாதித்தல் அற்ற நல்ல முத்தியே; உமாதேவியே நீ நன்றாக அறிதி என்று சிவபெருமான் உமாதேவிக்குக் கூறினான். அதுபொழுது உடன் இருந்தனன் - அப்பொழுது நான் உடனிருந்து கேட்டேன். என்று மேதை மாயை அறிந்திட விமலை கூறினள் என்பவே - இவ்வாறு அப்பொழுது உலக அறிவை உடைய மாயை அறிந்திட விமலை சொன்னாள் என்பர் அறிஞர். (எ.று)

முடிபு - அல்லமனால் அடையப் பெறுவது முத்தியே என்றதனால் உலகபோகங்களை அவனால் அடைய முடியாது என்பது கருத்து.

அல்லமாப்பிரபு பெருமை கூறியது

356. **எள்ளி லெண்ணெ யெனப்பட ரிந்தனத் தெரியென்னவாய்**
விள்ளு மென்மலர் மணமென விரவி யெங்கணு நிற்பினும்
வள்ள லல்லம னன்பர்தம் மனம டைந்து விளங்குவன்
தெள்ளு மின்சுவை விம்முபா றிரண்மு லைக்கணி
னொழுகல்போல் 50

(இ.ள்) வள்ளல் அல்லமன் எள்ளில் எண்ணெய் என படர் இந்தனத்து எரி என்ன வாய் விள்ளும் மெல் மலர் மணம் என எங்கணும் விரவி நிற்பினும் - கொடைத்தன்மை பெற்ற அல்லம தேவன் எள்ளிலே எண்ணெய் போலவும்; விரிந்த விறகில் நெருப்பைப் போலவும்,

Koviloor Digital Library

இதழ்விரியும் மெல்லிய மலரிலே மணத்தைப் போலவும் எல்லாப் பொருளிலும் கலந்து நிற்பினும்; தெள்ளும் இன்சுவை விம்முபால் திரண் முலைக்கண் ஒழுகல் போல், அன்பர்தம் மனம் அடைந்து விளங்குவன் - தெளிந்த இனிய சுவை மிகும் பாலானது திரண்ட முலைக் காம்பிலிருந்து ஒழுகுதல்போல அன்பர்தம் மனத்தை அடைந்து அங்கிருந்து விளங்குவன். (எ.று)

ஆறாவது
விமலை கதி முற்றும்

Koviloor Digital Library

ஏழாவது
மாயை கோலாகல கதி
மாயையின் ஆரவாரச்செயல் கூறும் பகுதி

357. நல்லெழில் விமலையின் இன்னணம் நவின்றிட
முல் லைவெண் ணகைவரு முயற்சி எண்ணியே
புல்லுவன் அவனையென்று எழுந்த போதினில்
அல்லமன் அகன்றமை அறியக் கூறுவாம் 1

(இ.ள்) நல் எழில் விமலை இன்னணம் நவின்றிட - சிறந்த அழகையுடைய விமலை இவ்வாறாகக் கூறிட (சொல்லிட); முல்லை வெண்ணகை வரு முயற்சி எண்ணியே - முல்லை அரும்பை ஒத்த வெள்ளிய பற்களையுடைய மாயையானவள், தான் கயிலாயத்திலிருந்து வந்த செயலைக் கருதி; அவனைப் புல்லுவன் என்று எழுந்த போதினில் - அல்லமனை அவன் இயல்பு அறிந்து அணைவேன் என்று எழுந்த காலத்திலே; அல்லமன் அகன்றமை அறியக் கூறுவாம் - அல்லமன் அகப்படாது நீங்கிய செயலை யாவரும் அறியச் சொல்லுவாம். (எ.று)

முடிபு - விமலை நவின்றிட முல்லை வெண்ணகை எண்ணி அவனைப் புல்லுவன் என்று எழுந்தபோதினில், அல்லமன் அகன்றமையை அறியக் கூறுவாம். முல்லை வெண்ணகை என்பது அன்மொழித் தொகை; கூறுவாம் - தன்மைப் பன்மை வினைமுற்று; இவ்வண்ணம் என்ற சொல் இன்னணம் என்று ஆயிற்று.

358. முகிழ்மதி அணிபவன் முதல்விக் கோதிய
வகைபெற விமலைதான் வகுப்ப மாயை கேட்(டு)
[1]அகமகிழ் வுற்று நாம்அல்ல மப்பெருந்
தகைதனை அடைவதெவ் வாறு சாற்றென்றாள் 2

(பா.ம்) [1]அகநெகிழ் வுற்று

(இ.ள்) விமலைதான் முகிழ்மதி அணிபவன் முதல்விக்கு ஓதிய வகைபெற வகுப்ப - விமலைதான் வளரும் பிறையை அணிந்த சிவபெருமான் உமாதேவிக்குச் சொல்லியவற்றைக் கூறுபாடு தோன்ற வகுத்துச் சொல்ல; மாயை கேட்டு அகமகிழ்வுற்று - மாயையானவள் கேட்டு மனமகிழ்ச்சி அடைந்து; நாம் அல்லம பெருந்தகைதனை அடைவது எவ்வாறு சாற்று என்றாள்- நாம் அல்லமன் என்னும்

Koviloor Digital Library

பெருந்தகையை அடைவது எவ்வகையினால் என்பதை நீ சொல்லுவாயாக என்றாள். (எ.று) ஓதிய என்பது வினைப்பெயர். சிவபெருமான் ஓதியவற்றைக் குறிப்பதால் வினைப்பெயராயிற்று. (எ.று)

முடிபு - விமலை மதியணிபவன் முதல்விக்கு ஓதியவற்றை வகைபெற வகுப்ப, அதை மாயை கேட்டு மகிழ்வுற்று, நாம் பெருந்தகைதனை அடைவது எவ்வாறு சாற்று என்றாள். அகம் நெகிழ்வுற்று என்ற பாடத்திற்கு மனம் இளகி என்று பொருள் கொள்க.

359. **மழுவலம் உயரிய வள்ளல் வந்தனை**
அழகுற இயற்றினை ஆயின் அல்லமன்
விழிஎதிர் தோன்றிநீ மனத்து வேண்டிய(து)
ஒழிவற நல்குவன் உனக்கென் றோதினாள் 3

(இ.ள்) மழுவலம் உயரிய வள்ளல் வந்தனை அழகு உற இயற்றினை ஆயின் - (மாயையே நீ) மழுப்படையை வலப்பக்கத்தில் அணிந்துள்ள சிவபெருமானைக் குறித்த பூசையினை நீஅழகு பெறச் செய்தாயே ஆனால்; அல்லமன் விழி எதிர் தோன்றி நீ மனத்து வேண்டியது ஒழிவற உனக்கு நல்குவன் என்று ஓதினாள் - அல்லம தேவன் உன்கண்முன் தோன்றி நீ மனத்தின் கண் விரும்பியவற்றை எல்லாம் குறையாமல் உனக்குக் கொடுப்பான் என்று விமலை கூறினாள். (எ.று)

முடிபு - வள்ளல் வந்தனை இயற்றினை ஆயின், அல்லமன் தோன்றி வேண்டியது ஒழிவற உனக்கு நல்குவன் என்று (விமலை) ஓதினாள். வந்தனை என்பது ஒன்பது பக்தியுள் ஒன்றாகும். அது ஈண்டு பூசித்தலைக் குறித்தது.

விமலைக்கு மாயை கூறியது

360. **முதல்விநீ உரைசெயும் முன்ன மேயருள்**
மதுகைநா யகன்றனை வழிபட் டேத்தினேன்
அதுதரும் பயனிலை அறிந்து ளேனெனப்
புதுமயல் மூழ்கினாள் [1]புலந்து கூறினாள் 4

(பா.ம்) [1]புலர்ந்து

(இ.ள்) புதுமயல் மூழ்கினாள் - புதுமையாகக் காம மயக்கத்திலே மூழ்கியவளாகிய மாயை; முதல்விநீ உரை செயும் முன்னமே அருள் மதுகை நாயகன் தனைவழிபட்டு ஏத்தினேன் - எனக்கு முதல்வியாயிருக்

Koviloor Digital Library

கின்ற விமலையே! நீ வள்ளல் வந்தனை செய் என்று நீ உரைப்பதற்கு முன்னரே அருள் தங்கிய மதுகேஸ்வரனாகிய சிவபெருமானை, வழிபட்டு ஏத்தினேன் (பூஜித்துத் துதித்தேன்); அது தரும் பயன் இலை - அப்பூசனை தரும் பயன் ஒன்றுமில்லை; அறிந்து ளேன் என - இதை நான் நன்றாக அறிந்துள்ளேன் என்று; புலந்து கூறினாள் - மனம் வெறுத்துக் கூறினாள். (எ.று)

முடிபு - புது மயல் மூழ்கினாள், முன்னமே மதுகை நாயகனை வழிபட்டு ஏற்றினேன், அதுதரும் பயன் இல்லை; அறிந்துளேன் என புலந்து கூறினாள். புலர்ந்து என்ற பாடத்திற்கு மனம் வாடிக் கூறினாள் என்று பொருள் கொள்க. (புலர்தல் - வாடுதல்) புலந்து-வெறுத்து.

மாயையின் மொழியைக் கேட்ட விமலையின் நிலை

361. வெருவற இவளக விழியி லாமையால்
பரசிவ பூசனை பயனில் என்றனள்
அரகர என்றுகா தங்கை வைத்திஃ(து)
உரைசெயும் விமலைதன் உளங்க லங்கியே 5

(இ.ள்) இவள் அகவிழி இலாமையால் வெருவு அற பரசிவ பூசனை பயனில் என்றனள் - மாயையாகிய இவள், உள்உணர்வு இல்லாமையினால் அச்சமில்லாமல், பரமசிவனைப் பூசிக்கும் பூசையினால் ஒரு பயனுமில்லை என்று கூறினாள்; அரகர என்று காது அங்கை வைத்து - கேட்கத்தகாத இவற்றைக் கேட்டேனே என்று அரனே! அரனே! என்று கூறி தனது இரண்டு காதின்கண் இரு கரங்களையும் வைத்து அடைத்துக் கொண்டு; விமலை தன் உளங்கலங்கியே இஃது உரை செயும் - விமலையானவள் தன்னுடைய மனம் கலங்கி கீழ்வரும் இச்சொற்களைச் சொல்லத் தொடங்கினாள். (எ.று)

முடிபு - மாயையின் சொல்லைக் கேட்ட விமலை, தன் உளம் கலங்கி சிவபூசனை பயனில் என்றனள், அரஹர என்று கூறி காதின் கண் அங்கை வைத்து உரைசெயும்.

வெருவு+அற=அச்சமில்லாமல்; விழி இலாமையால் என்பதற்கு - உள்ளுணர்வாகிய விழி இலாமை. அர அர என்பது உளம் கலங்கிய நிலையில் இறைவனை விளித்துக் கூறியது. அரனே அரனே (சிவனே சிவனே) என்றாற் போல்.

Koviloor Digital Library

விமலை மாயைக்குக் கூறுவது

362. பயனிலை அருச்சனை பயின்றும் என்றனை
அயனரி முதலிய அமரர்க் காயினும்
நயமொடு சதாசிவ நாதன் பூசனை
முயலுதல் அன்றிஓர் எண்ணம் முற்றுமோ 6

(இ.ள்) அருச்சனை பயின்றும் பயனிலை என்றனை - மாயையே! நீ சிவபூஜை செய்தும் அதனால் ஒரு பயனும் இல்லை என்று கூறினாய்; அயன் அரி முதலிய அமரர்க்கு ஆயினும் - பிரமன், திருமால் முதலான பெரிய தேவர்களுக்கு ஆயினும்; நயமொடு சதாசிவ நாதன் பூசனை முயலுதல் அன்றி ஓர் எண்ணம் முற்றுமோ - அன்போடு, சகள - நிட்கள வடிவாகிய சதாசிவப் பெருமானை, பூசித்தலைச் செய்தாலன்றி அவர்கள் விரும்பிய ஓர் எண்ணமும் முடியுமோ. (முடியாது என்றபடி) நிறைவேறுமோ நிறைவேறாது என்பது கருத்து. ஓகாரம் - எதிர்மறை (எ.று)

முடிபு - அருச்சனைப் பயின்றும் பயனிலை என்றனை, அமரர்க் காயினும் சதாசிவநாதன் பூசை முயலுதல் அன்றி முற்றுமோ என்று முடித்துக் கொள்க. முயலுதல் - செய்தல்.

இதுவுமது

363. வாசவன் அரிஅயன் வான நாட்டுளோர்
பாசமின் முனிவரர் பலரும் மண்ணிடைப்
பூசனை விதிமுறை புரிந்த ஆலயம்
காசணி அல்குலாய் காண்கி லாய்கொலோ 7

(இ.ள்) காசுஅணி அல்குலாய் - மணிவடம் அணிந்த அல்குலை யுடைய மாயையே; வாசவன் அரி, அயன் வான நாட்டுளோர், பாசமில் முனிவரர் பலரும்- இந்திரனும், திருமாலும், பிரமனும், தெய்வ வுலகத்திலுள்ள ஏனைய தேவர்களும், மண்ணுலகத்திலுள்ள முனிவர் களும்; மண்ணிடை பூசனை விதிமுறை புரிந்த ஆலயம் - மண்ணுலகத் திலே சிவபூசையை ஆகமம் விதித்த முறையிலே செய்த திருக்கோயில் களை நீ பார்த்ததில்லையோ? புரிந்த ஆலயம் என்பதில் - புரிந்த என்னும் பெயரெச்சம் இடப்பெயர் கொண்டது. (ஆலயம் என்னும் இடப்பெயர்) (எ.று)

முடிபு - பலரும் பூசனை புரிந்த ஆலயங்களைக் காசணி அல்குலாய் காண்கிலாய் கொலோ. இப்பாட்டு தேவர், மக்களுள் சிறந்த ஆண்மக்கள்

Koviloor Digital Library

செய்த சிவ பூஜையைக் கூறியது. அடுத்த பாடலில், பெண் மக்கள் செய்த சிவபூஜையைக் கூறுகின்றார்.

364. மலைமகள் சூரர மகளிர் பாற்கடல்
அலைமகள் முனிவரில் லறக்கி ழத்தியர்
கலைமகள் விழிநுதல் கடவுள் பூசையால்
நிலைமைகள் அடைந்தமை நினைந்தி லாய் கொலோ 8

(இ.ள்) மலைமகள் - பார்வதி தேவியாரும்; சூர்அர மகளிர் - அச்சத்தைச் செய்யும் தெய்வப் பெண்களும்; பாற்கடல் அலைமகள் - திருப்பாற்கடலலையில் தோன்றிய திருமகளும்; முனிவர் இல்லக் கிழத்தியர் - வசிஷ்டர் முதலான முனிவர்களின் மனைவிமார்களும்; கலைமகள் - சரஸ்வதி தேவியும்; விழிநுதல் கடவுள் பூசையில் நிலைமைகள் அடைந்தமை - மேலே கூறிய இப்பெண்களெல்லாம் நெற்றியிலே விழியைப் பெற்றிருக்கும் சிவபெருமானுடைய பூசை யினாலே தங்கள் பதங்களை அடைந்தமையை; நீ நினைந்திலாய் கொலோ - நீ எண்ணிப் பார்க்கவில்லையோ?. கொல்-அசை; ஓகாரம்-வினா. (எ.று)

முடிபு - மலைமகளும், அரமகளிரும், அலைமகளும், முனிவர் இல்லறக்கிழத்தியரும் கலைமகளும் (ஆகிய இவர்கள் எல்லோரும்) கடவுள் பூசையால் நிலைமைகள் அடைந்தமையை நினைந்திலாய் கொலோ.

365. சித்தியும் ஆயுளும் சிறப்பும் காமியப்
புத்தியர் அடைவரப் புத்தி [1]போக்கினோர்
முத்தியை அடைவரெம் முதல்வன் பூசையால்
சத்தியம் சத்தியம் தளர்ம ருங்குலாய் 9

(பா.ம்) [1]நீக்கினோர்

(இ.ள்) எம் முதல்வன் பூசையால் - எம்முடைய முதல்வனாகிய சிவபெருமானைக் குறித்துச் செய்யும் பூசையினாலே; காமியப் புத்தியர் சித்தியும் ஆயுளும் சிறப்பும் அடைவர் - தமக்கு என்று பற்றுடையோர் அட்டமாசித்திகளையும், வாழ்நாளையும் ஏனைய சிறப்புக்களையும் பெறுவர்; அப்புத்தி போக்கினோர் முத்தியை அடைவர் - பற்றற்றோர் மோட்சத்தை அடைவர்; தளர்மருங்குலாய் சத்தியம் சத்தியம் - தளரும் இடையையுடைய மாயையே! நான் கூறிய இம்மொழி உண்மை

Koviloor Digital Library

உண்மை என்று உணர்க. காமியப்புத்தியர் - இம்மை இன்பம், மறுமை இன்பங்களில் பற்றுடையோர். (எ.று)

முடிபு - தளர் மருங்குலாய்! முதல்வன் பூசையால் காமியப் புத்தியர் சித்தியும் ஆயுளும் சிறப்பும் அடைகுவர். அப்புத்தி நீங்கியோர் முத்தியை அடைவர். எனவே சிவபூசைப் பற்றுடையவர்க்கும், பற்றில்லாதவர்க்கும் உறுதியாகப் பயன்பெறுவது என்க; நீக்கினோர் என்று ஒருபாடம் உண்டு. அது மோனைக்குப் பொருத்தமில்லை, புத்தியர் போக்கினோர் என்பதுதான் பொருந்தும். நீக்கினோர் என்று ஒரு பாடம் உண்டு. அது போக்கினோர் என்ற சொல்லின் பொருளையே தரும். போக்கினோர் என்பது மோனைக்குப் பொருத்தம்.

366. பீடுறு மானிடப் பிறப்பு வாய்த்துநல்
ஏடவிழ் மலரினால் இறையை [1]பூசியார்
பாடமை நாளெலாம் பாழ்க்கி றைப்பவர்
மூடரை எண்ணுங்கால் முந்தி நிற்பரே 10

(பா.ம்) [1]பூசியா

(இ.ள்) பீடுஉறு மானிடப் பிறப்பு வாய்த்து - பெருமை பொருந்திய மக்களாகப் பிறக்கும் பிறப்பு வாய்க்கப் பெற்று; நல்ஏடு அவிழ் மலரினால் இறையைப் பூசியார் - சிறந்த இதழ் விரியும் பூக்களால் சிவபெருமானைப் பூசியாத மக்கள்; பாடு அமைநாளெலாம் பாழ்க்கு இறைப்பவர் - பெருமை பொருந்திய தங்கள் வாழ்நாள் எல்லாவற்றையும் பாழ்நிலத்திற்கு நீர் இறைப்பார்போல, பயனில்லாமல் செய்பவர் ஆவர்; மூடரை எண்ணுங்கால் முந்தி நிற்பர் - இவர் அறிவில்லாதவர்களை எண்ணும்போது முதல் மூடராய் நிற்பர். (எ.று)

முடிபு - மானிடப் பிறப்பு வாய்த்து இறையைப் பூசியார், பாழ்க்கு இறைப்பவர் ஆவார், மூடரில் முந்தி நிற்பர் (ஆவர்); பூசியார் என்பது வினையாலணையும் பெயர். பூசியா என்னும் வினை எச்ச பாடமும் உண்டு. அதற்கு இயையப் பொருள் கொள்க.

367. காம்படு தோளிமுக் கண்ணன் தாள்மலர்
தேம்படு மலர்கொடு பூசை செய்பவர்
பாம்பொடு பழகிலாப் பரமன் என்றவர்
பூம்பதம் மனமகிழ்ந் துலகம் போற்றுமே 11

(இ.ள்) காம்பு அடு தோளி - மூங்கிலின் அழகை வெல்லும் தோளையுடைய மாயையே! முக்கண்ணன் தாள்மலர் தேம்படுமலர்

Koviloor Digital Library

கொடு பூசை செய்பவர் - மூன்று கண்களையுடைய பரமசிவனது திருவடித் தாமரைகளைத் தேன் தங்கிய பூக்களைக் கொண்டு பூசிப் பவரை; உலகம் பாம்பொடு பழகிலாப் பரமன் என்று அவர் பூம்பதம் மனம் மகிழ்ந்து போற்றும் - உலகிலுள்ள உயர்ந்த மக்கள் பாம்பை அணியாகக் கொள்ளாத பரமேஸ்வரன் என்றே கருதி அவர்தம் பொலி வாகிய திருவடியை மனம் உவந்து போற்றும் (எ.று)

முடிபு - காம்படுதோளியே! முக்கண்ணன் தாள் மலர்பூசை செய்பவரை, உலகம் பரமன் என்று அவர் பதத்தை மகிழ்ந்து போற்றும். காம்படுதோளி - அன்மொழித்தொகை; ஈண்டு மாயையைக் குறித்து விளிப்பொருளில் வந்தது. ''உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே'' என்பது திவாகர நூற்பா. அதன்படி உலகிலுள்ள உயர்ந்த மக்களைக் குறிக்கும். பாம்பொடு பழகிய சிவனை பூசிக்கும் அடியார் பாம்பொடு பழகாத சிவமே என்பது கருத்து.

368. நோய்ப்பிறப் பிலாதகண் ணுதலைப் பூசியா
வாய்ப்புறத் தலைக்கொரு மதிபெ றாநரன்
ஆய்ப்பிறப் புற்றதின் அறிஞர் எள்ளுறா
நாய்ப்பிறப் பாற்றவும் நன்று நன்றரோ 12

(இ.ள்) நோய், பிறப்பு இலாத கண்ணுதலைப் பூசியா - நோய்களும் பிறவிகளும் இல்லாத நெற்றிக்கண் பெருமானைப் பூசித்து; வாய்ப்புஉறதலைக்கு ஒரு மதி பெறாநரனாய் - பொருந்த தன் தலைக்கு சிவபெருமானைப் போல ஒரு பிறை மதியைப் பெற்றுக் கொள்ளாத மனிதனாய்; பிறப்பு உற்ற அதின் அறிஞர் எள்ளுறா நாய்ப் பிறப்பு ஆற்ற வும் நன்று நன்று அரோ - பிறப்பு அடைந்த அப்பிறவியைக் காட்டிலும், அறிவுடையோர் இகழாத நாய்ப்பிறப்பைப் பெறுவது மிகவும் நன்று. (எ.று)

முடிபு - கண்ணுதலைபூசியா! தலைக்கு ஒரு மதிபெறாநரனாய், பிறப்பு உற்றஅதின், அறிஞர் எள்ளுறாநாய்ப் பிறப்பு நன்று நன்றரோ. தலைக்கு ஒரு மதி பெறுதலாவது - சிவசாரூப்பியம் பெறுதலாம். அதின் என்பதில் அது என்பது சுட்டு. இன் என்பது ஐந்தாம் வேற்றுமை உறட்சிப் பொருளில் வந்துள்ளது. (அரோ-அசை) நன்று நன்று என்னும் அடுக்கு மிகவும் நன்று என்ற பொருளில் வந்துள்ளது. கண்ணுதல் - அன்மொழித்தொகை. பூசியா என்பது செய்யா என்னும் வாய்பாட்டு வினை எச்சம். பெறா என்பது பூசித்துப்பெறா (பூசித்துப் பெறுதல்) என்பது எதிர்மறை வினையின் பகுதியோடு முடிந்தது.

Koviloor Digital Library

369. பொருவிலி ஆகமம் புகன்ற மந்திரக்
கிரியைகள் வழுவறக் கிளக்கும் நல்லருள்
குருபரன் அருளினால் கொண்டு செய்குநர்
பரசிவ பூசனைப்.பயனை நண்ணுவார் 13

(இ.ள்) பொருஇலி ஆகமம் புகன்ற மந்திரம் கிரியைகள் - சிவாகமம் கூறிய மந்திரங்களையும், கிரியைகளையும்; வழுவறக் கிளக்கும் நல்லருள் குருபரன் அருளினால் கொண்டு - குற்றமறக் கூறும் ஆற்றலையுடைய நல்ல அருளைப் பெற்றிருக்கும் மேலான குருவின் அருளினாலே அறிந்து கொண்டு; செய்குநர் - பூசை செய்பவரே; பரசிவ பூசனைப் பயனை நண்ணுவார் - மேலான சிவபூசனைப் பயனை அவர்கள் அடைவார்கள்.

முடிபு - ஆகமம் புகன்ற, மந்திரக் கிரியைகளை குருபரன் அருளினால் கொண்டு செய்குநர் பூசனைப் பயனை நண்ணுவார். செய்குநர் - வினையாலணையும் பெயர்; நண்ணுவார் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது. பொருஇலி என்றது தனக்குவமை இல்லாத சிவனைக் குறித்தது; எனவே பொருவிலி ஆகமம் என்பது சிவாகமம். பொருவிலி, சிவபெருமானைக் குறிக்கும் என்க; கொண்டு - அறிந்து கொண்டு.

370. அண்ணலைம் முகங்களும் அருளும் ஆகமம்
நண்ணிய விதிமுறை நன்கு செய்யினும்
எண்ணரும் அன்புளத்து இல்லை யேயெனில்
பண்ணிய பூசனை பயன்ற ராதரோ 14

(இ.ள்) அண்ணல் ஐம் முகங்களும் அருளும் ஆகமம் நண்ணிய விதிமுறை (பூசனை) நன்கு செய்யினும் - சிவபெருமானுடைய ஐந்து முகங்களும் அருளிச் செய்த ஆகமத்தில் பொருந்திய; விதியின் முறைப்படி சிவபூசையினை ஒருவர் நன்கு செய்தாலும் எண் அரும் அன்பு உளத்து இல்லையே எனில் - கணக்கற்ற (அளவற்ற) அன்பு மனத்தில் இல்லையே என்றால்; பண்ணிய பூசனை பயன் தராது - செய்த சிவபூசைப் பயனைத் தறாது (அரோ-அசை)

முடிபு - ஆகம விதிமுறை செய்யினும் அன்பு உளத்து இல்லையே எனில் பூசனைப் பயன் தராது. எண் என்பது அளவைக் குறித்தது. செய்யினும் இல்லையே எனில் என்று கூட்டி உரை கொள்க.

Koviloor Digital Library

371. பூசைசெய் தன்னையும் பூசிக் கப்படும்
ஈசன தியல்பையும் இறைவன் பூசைசெய்
ஆசறு பொருளையும் அறிவ றிந்துயர்
தேசிகன் அருளினால் தெளிய வேண்டுமால் 15

(இ.ள்) பூசை செய்தன்னையும் - பூசை என்னும் தொழிலைச் செய்கின்ற அடியவனாகிய தன்னுடைய இயல்பையும்; பூசிக்கப்படும் ஈசனது இயல்பையும் - தன்னால் பூசிக்கப்பெறும் முதல்வனாகிய ஈசனது இயல்பையும்; இறைவன் பூசை செய் ஆசறு பொருளையும் - சிவபூசைக்கு வேண்டிய குற்றமற்ற பொருளையும்; உயர் தேசிகன் அருளினால் அறிவறிந்து தெறிய வேண்டும் - உயர்ந்த குருவின் அருளினாலே அறிய வேண்டியவற்றை நன்றாகத் தெரிந்து கொண்டு பூசிக்க வேண்டும். (எ.று)

முடிபு - தன்னையும், ஈசனது இயல்பையும் பூசை செய்பொருளையும் தேசிகன் அருளினால் அறிவறிந்து தெளிய வேண்டும். ஈசனது இயல்பையும், தன்னியல்பையும் அறிதலாவது ஈசன் முதல்வன் இயக்குவோன், அருளுபவன் என்றும் தான் அடியான் இயக்கப் படுவோன், அருளைப் பெறுவோன். மேலும் இறைவன் பதி என்றும் தான் பசு என்றும் உணர வேண்டுமென்க; ஈசனை வழிபடுகின்றவன் எவனும், பூசிக்கப்படும் இறைவன், பூசிக்கும் தான் என்கின்ற துவிதபாவனையோடு பூசிக்க வேண்டும் என்னும் கருத்தைக் கீழ்வரும் சித்தாந்த சிகாமணிப் பாடலால் உணர்க. துவிதமாகப் பூசை செய்யும் இதனை பூஜ்ய பூஜகபாவம் என்பர்.

பூசனை செய்வோன் கொள்வோன் பேத மென்றுறலாற் போற்றும்
பூசனையாதி கன்மம் பொன்றலா லிலிங்க நிட்டை
நாசம துறலா லெங்கும் பெறஞான மிலாமை தன்னால்
ஈசனை வந்திக் கின்றோ னெங்கு மத்துவிதஞ் செய்யான்
(அத்துவித நிரச நத்தலம்)

பூசைக்கு வேண்டிய பொருள்கள், அபிடேகப் பொருள்கள், அணியும் பொருள்கள், நிவேதனப் பொருள்கள் முதலிய பலவற்றை சிவபூசைக்குரிய பொருளாக ஆகமத்தால் அறிக.

372. மந்திர தந்திர வழுக்கள் வந்தவோ
சிந்தனை [1]பிறவிட யத்திற் சென்றதோ

Koviloor Digital Library

பைந்தொடி பூசனை பயனில் என்றுநீ
நிந்தனை செய்ததென் நிகழ்த்து வாயென்றாள் 16

(பா.ம்) [1]புறவிடயம்

(இ.ள்) பைந்தொடி - பசுமையான வளையல்களை அணிந்த மாயையே! மந்திர தந்திர வழுக்கள் வந்தவோ - சிவபூஜைக்கு வேண்டிய மந்திரங்கள், செயல்முறைகள் இவற்றின் பிழைகள் வந்தனவோ; சிந்தனை பிறவிடயத்தில் சென்றதோ - மனமானது இறைவனை விட்டு வேறு பொருள்களில் சென்றதோ; பூசனை பயனில் என்று நீ நிந்தனை செய்தது என் - சிவபூசை தரும் பயனிலை அறிந்துளேன் எனக் கூறி சிவபூசையைப் பழித்ததற்குக் காரணம் என்ன; நிகழ்த்துவாய் என்றாள் - விடை கூறுவாயாக என்று விமலை கூறினாள். (எ.று)

முடிபு - பைந்தொடி! வழுக்கள் வந்தவோ; சிந்தனை பிறவிட யத்தில் சென்றதோ; பூசனை பயனிலை என்று நிந்தனை செய்தது என் நிகழ்த்துவாய் என்றாள். பைந்தொடி - அன்மொழித் தொகைப் பெயர். இது மாயையை உணர்த்திற்று; மந்திர தந்திரங்களைப் பிழையாகச் செய்வதன்றி குறைவாகச் செய்வதும் உண்டு. அதனை மந்திரலோபம் கிரியாலோபம் என்பர். (சிவபூசை) இதற்குக் கருதிய பொருளுக்குப் புறம்பான பொருள் கொள்க.

373. **என்றுநல் விமலை மாதுஇயம்ப பூசையால்**
வென்றிகொள் அல்லமன் விழியில் தோன்றிய
நன்றியை அறிந்திலன் நழுவி நிற்றலால்
வன்றுயர் மனம்உற மாயை கூறுவாள் 17

(இ.ள்) நல்விமலை மாது என்று இயம்ப - நல்ல விமலாதேவி மேற்கூறியவாறு, மாயையிடம் கூற; பூசையால் வென்றி கொள் அல்லமன் விழியில் தோன்றிய நன்றியை நழுவி நிற்றலால் அறிந்திலள் - தான் செய்த சிவபூசையால் வெற்றி கொள்ளும் அல்லமதேவன், தன் கண் முன் தோன்றிய நன்மையை அவன் நழுவி நிற்றலால் அறிந்திலளாய்; மாயை மனம் வன்துயர் உற கூறுவாள் - மாயாதேவி தன் மனம் துயரம் அடைய விமலையிடம் கூறத் தொடங்கினாள்.(எ.று)

முடிபு - என்று விமலை இயம்பக் (கேட்ட) மாயை அல்லமன் விழியில் தோன்றிய நன்றியை (அவள்) நழுவி நிற்றலால் அறிந்திலளாய் மனம் துயர் கூறக் கூறுவாள்.

Koviloor Digital Library

வேறு - மாயைகூற்று

374. ஒன்றையும் உணர்கி லேன்நான் எங்குரு உரைத்த ஆற்றால்
இன்றளவு இலிங்க பூசை இயற்றியும் பயன்ஒன் றில்லை
என்றனள் பருவம் உற்றோர்க்கு இருமறை உபதே சிப்பது
அன்றிவன் மனிதர்க் கோதின் அதுபயன் படுவ துண்டோ
18

(இ.ள்) நான் ஒன்றையும் உணர்கிலேன் - மாயையாகிய நான்; நீ மேலே கூறிய செய்திகளுள் ஒன்றையும் உணர்ந்திலேன்; எம் குரு உரைத்த ஆற்றால் இன்று அளவு இலிங்க பூசை இயற்றியும் பயன் ஒன்றில்லை - சாந்தாங்காரன் என்கின்ற எம்குரு உரைத்த உரையினாலே இன்றுவரை, இலிங்கபூசை செய்தும் ஒரு பயனும் இல்லை என்றனள்; பருவம் உற்றோர்க்கு இருமறை உபதேசிப்பது அன்றி அல்மனிதற்கு ஓதின் அதுபயன் படுவதுண்டோ - பக்குவம் பெற்றோர்க்கு பெரிய மறைப் பொருளை உபதேசித்தாலன்றி பக்குவம் பெறாதவர்க்கு அதனை ஓதின் அது அவர்க்குப் பயன்படுவது உண்டோ? பயன்படாது என்பது கருத்து. (எ.று)

முடிபு - நான் ஒன்றையும் உணர்கிலேன் எம்குரு உரைத்த ஆற்றால் இலிங்கபூசை இயற்றியும், பயன் ஒன்றும் இல்லை என்றனள். பருவம் உற்றோர்க்கு உபதேசிப்பது அன்றி அல்லாத மனிதர்க்கு ஓதின் அது பயன்படுவது உண்டோ? அல் மனிதன் - பருவம் உறாத மனிதன் (பக்குவம் அல்லாதவன்) வன் மனிதன் என்றால் தீய மனிதன் எனப் பொருள் கொள்க. மறை - மறைத்து வழங்கக் கூடிய பயனுடைய சொல்.

375. நெறிபல முறையு ரைத்தும் நினைந்திலன் அதனை
அந்தோ
மறுகுறு மனத்தள் ஆகி மாயைமால் கொண்டி ருந்தாள்
[1]அறிவிலர்க் கறிவிப் பார்தாம் அறிவிலர் ஆவர் என்று
வெறிமலர் வணர்வார் கூந்தல் விமலைதன் மனந்த ளர்ந்து
19

(பா.ம்) [1]அறிவிலார்க் கறிவிப்பார்தாம் அறிகிலா

(இ.ள்) நெறிபல முறை உரைத்தும் அதனை நினைந்திலள் - உலக நெறி சாத்திர நெறி என்ற இரண்டு நெறிகளைப் பல வகைகளில் உரைத்தும் மாயை அதனை நினைந்திலள்; அந்தோ - இரங்குதற்குறித்து; மாயை மறுகுறும் மனத்தள் ஆகி - மாயையானவள் கலங்கிய மனத்தை

Koviloor Digital Library

யுடைய வளாய்; மயங்கிய உணர்வையே கொண்டிருந்தாள் இது எதனால் தெரிவது எனில்? மதுகை நாதனை வழிபட்டேத்தினேன். அது தரும் பயனிலை எனக் கூறிவிட்டாள். விமலை அதனை மறுத்து பல நெறி முறைகளைக் கூறினாள். அதனை மாயை கேட்டும் இன்றளவு இலிங்க பூசை இயற்றியும் பயனில்லை அவளுடைய நிலையை உணர்ந்த வாசனை. அறிவிலர்க்கு அறிவிப்பார்தாம் அறிவிலர் ஆவர் என்று வெறி மலர் வணர்வார் கூந்தல் - விமலை தன் மனம் தளர்ந்து அறிவில்லாதவர்க்கு அறிவு கொளுத்தத் தொடங்குபவரே அறிவில்லா தவர் ஆவர் என்று கருதிக் கொண்டு மனம் தளர்ந்தாள். கில் - ஆற்றல் உணர்த்தும் இடைநிலை ஆதலின் அறிகிலர் என்பதற்கு அறியும் ஆற்றல் இல்லாதவர்க்கு என்ற பொருள் கொள்ளலாம்.

முடிபு - மாயை நெறியை உணர்த்தும் அதனை நினைந்திலள். மறுகுறும் மனத்தளாகி மால் கொண்டிருந்தாள். அப்பொழுது விமலை அறிவிலர்க்கறிவிப்பார்தாம் அறிகிலர் என்று கூறி மனந்தளர்ந்து.

376. இவள்மனம் கவன்றி ருந்த திதனைநான் அறிவல் என்று
குவிமுலை விமலை சொல்வாள் கோற்றொடி மடந்தாய் நின்மேல்
அவிழ்மலர் அம்பு பட்ட தாயிருந்த தன்றெ னக்கு
நவிலுதி மறையேல் அன்னை நகமகள் ஆணை என்றாள்
20

(இ.ள்) குவிமுலை விமலை இவள் மனம்கவன்று இருந்தது இதனை நான் அறிவல் என்று சொல்வாள் - (அப்பொழுது) குவிந்த நகிலையுடைய விமலாதேவி இம்மாயையின் மனம் கவலை கொண்டிருந்தது; இதற்குக் காரணத்தை நான் அறியத் தொடங்குவேன் என்று கூறிக்கொண்டு சொல்லத் தொடங்கினாள். கோல் தொடி மடந்தாய் - திரண்ட வளையலை அணிந்த மாயையே; நின்மேல் அவிழ் மலர் அம்பு பட்ட தாய் இருந்தன்று - உன்மேலே மன்மதனுடைய இதழ் விரியும் மலரம்புகள் பட்டதாயிருந்தது; எனக்கு நவிலுதி - எனக்குஅது பற்றிய செய்தியைக் கூறுவாயாக; (நவிலுதி - சொல்வாயாக; முன்னிலை ஒருமை) அன்னை நகமகள் ஆணை என்றாள் - நம் தாயாகியமலை மகள் மேல் ஆணையாக இச்செய்தியை மறைக்காதே என விமலை கூறினாள்.

முடிபு - விமலை இவள் மனம் கவன்றிருந்தது. இதனை நான் அறிவல் என்று கருதிக் கொண்டு மடந்தாய்! நின்மேல் மலரம்பு

Koviloor Digital Library

பட்டதாயிருந்தன்று அன்னை நகமகள் ஆணையாக நவிலுதி, மறையேல் என்றாள்.

377. ஆணையை வெருவி மாயை அம்பலத் தாடா நின்ற
தாணுவும் உளம் விரும்பும் தண்ணுமைத் தொழிலான் கண்கட்(கு)
ஊணெனும் அழகின் [1]மிக்கோன் ஒருவன்வந் தனனன் அன்னானைக்
காணலும் எனைநான் காணேன் என்றனன் கற்றார் போல 21

(பா.ம்) [1]மிக்கான்

(இ.ள்) மாயை ஆணையை வெருவி - மாயை விமலை கூறிய நகமகள் ஆணை என்ற சொல்லுக்கஞ்சி; அம்பலத்தாடா நின்ற தாணுவும் உளம் விரும்பும் தண்ணுமைத் தொழிலான் கண்கட்கு ஊண் எனும் அழகின் மிக்கோன் ஒருவன் வந்தனன் - சிற்றம்பலத்தில் நடிக்கா நின்ற இறைவனும் தன் நடித்தற் தொழிலுக்கு வேண்டுமென்று உள்ளம் விரும்புகின்ற மத்தளம் அடிக்கும் தொழில் உடையவன், விழிக்கு விருந்து என்று கூறும் அழகின் மிக்கவர் அத்தகைய ஒருவன் என்முன் வந்தனன்; அன்னானைக் காணலும் - அத்தகையோனையான் கண்டவுடனே கற்றோர்போல; எனை நான் காணேன் என்றாள் - ஞான நூல்களைக் கற்ற ஞானிகளைப் போல எனை நான் காணேன் என்றனள்; ஞானிகள் இறைவனாகிய ஞேயப் பொருளைக் கண்டதும், தம் வசம் இழந்து விடுவர். அதைப்போல மாயையும் அல்லமனைக் கண்டதும் எனை நான் காணேன் என்றாள்.

முடிபு - மாயை வெருவி தன்னுமைத் தொழிலான், அழகின் மிக்கான் ஒருவன் வந்தனன். கற்றார்போல அன்னானைக் காணலும் என்னை நான் காணேன் என்றாள்.

378. அல்லமன் அனையன் நாமம் அவன்றனக் கலதென் நெஞ்சக்
கல்லுரு குறாது முக்கட் கடவுளுக் கன்றி மேரு
வில்லுரு ஆவ துண்டோ விளங்கிழாய் நின்னைக் காணும்
நல்வினை ஒன்றி ருப்ப நானுயிர் தரித்தேன் என்றாள் 22

(இ.ள்) விளங்கிழாய் - விளங்குகின்ற அணிகளை அணிந்த விமலையே!; அனையன் நாமம் அல்லமன் - அத்தகையோனுடைய

Koviloor Digital Library

பெயர் அல்லமன் என்பதாகும்; அவன் தனக்கு அலது என் நெஞ்சக்கல் உருகுறாது - அவனுக்கு அல்லாமல், வேறு எவர்க்கும் என் மனமாகிய கல் நெகிழாது; முக்கண் கடவுளுக்கன்றி மேருவில் உரு ஆவதுண்டோ - மூன்று கண்களையுடைய சிவபெருமானுக்கு அல்லாமல் வேறு எவர்க்கும் மேருமலை வில்லாக வளைவதுண்டோ?; நின்னைக் காணும் நல்வினை ஒன்று இருப்ப - உன்னைக்காண வேண்டிய நல்ல ஊழ்வினை ஒன்று இருப்ப அதனால்; நான் உயிர் தரித்தேன் என்றாள் - நான் உயிரைத் தாங்கியுள்ளேன் என்றாள். (நல்வினை இல்லாதிருப்பின் நான் இறந்திப்பேன் என்பது கருத்து). (எ.று)

முக்கண் கடவுளுக்கன்றி மேருவில் உருவாவதுண்டோ என்பது வேற்றுப் பொருள் வைப்பணி.

முடிபு - விளங்கிழாய் அனையன் நாமம் அல்லமன், அவனுக்கலது என் நெஞ்சகக்கல் உருகுறாது. நின்னைக்காணும் நல்வினை ஒன்றிருப்ப நான் உயிர் தரித்தேன். விளங்கிழை - அன்மொழித் தொகைப் பெயர்விளி ஏற்றது.

விமலைக்கூற்று

379. **நீநவில் அல்ல மன்வேல் நெடுங்கண் வாள்நுதன்மடந்தாய்**
நான்நவில் அல்ல மன்றான் நச்சும் உன் தனக்குத் தக்க
[1]மானிட வடிவங் கொண்டு வந்தனன் போலும் அன்னான்
ஞானநல் விழியின் அன்றி நயந்துதன் உண்மை காட்டான் 23

(பா.ம்) [1]மானுட

(இ.ள்) வேல் நெடுங்கண் வாள் நுதல் மடந்தாய் - வேல் போன்ற நெடிய கண்ணையும், ஒளிப்பெற்ற நுதலையும் உடைய மடந்தையாகிய மாயையே!; நீ நவில் அல்லமன், நான் நவில் அல்லமன்தான் - நீ கூறிய அல்லமன் என்பான் நான் கூறிய அல்லமனே தான்; (தேற்றப் பொருளில் வந்தது) நச்சும் உன் தனக்கு தக்க மானிட வடிவம் கொண்டு வந்தனன் போலும்- காமிய எண்ணத்தோடு விரும்புகின்ற உனக்கு, அதற்குத் தக்க மனித வடிவத்தை எடுத்துக் கொண்டு உன்முன் தோன்றினான் போலும்; அன்னான் ஞானநல் விழியின் அன்றி நயந்து தன் உண்மை காட்டான்- நான் கூறிய அத்தகைய அல்லமன் ஞானமாகிய நல்ல கண்ணினாலே உணர்ந்தாலன்றி ஊனக் கண்ணிற்குத் தன் உண்மையை விரும்பிக் காட்ட மாட்டான் (எ.று)

Koviloor Digital Library

முடிபு - மடந்தாய்! நீ நவில் அல்லமன் நான் நவில் அல்லமன்தான். உனக்கு மானிட வடிவங் கொண்டு வந்தனன் போலும்.அன்னான் ஞான விழியிலன்றி தன் உண்மை காட்டான்.

விமலை சொல் கேட்ட மாயை கூறுவது

380. என்னநல் விமலை கூற இலங்கிலை நெடுவேல் கண்ணி
தன்னிகர் அல்லமன் சச்சி தாநந்த சம்பு என்றாய்
அன்னவன் அலனி வன்றான் மத்தள அல்ல மன்காண்
முன்னொடு பின்மயங்க மொழிந்தனை அணங்கே
என்றாள் 24

(இ.ள்) என்ன நல் விமலை கூற - என்று நல்ல விமலை சொல்ல (அதனைக் கேட்ட); இலங்கிலை நெடுவேல்கண்ணி- விளங்குகின்ற இலைவடிவாகிய நீண்ட வேல் போன்ற கண்ணையுடைய மாயை யானவள் (தெய்வ அணங்கு போன்ற); அணங்கே - விமலையே; தன்னிகர் அலமன், சச்சிதானந்த சம்பு என்றாய் - தனக்குத்தானே ஒப்பாகிய அல்லமனை சத்து சித்து ஆனந்த வடிவாகிய சிவபெருமான் என்று கூறினாய்; இவன்தான் அன்னவன் அலன் - யான் கூறிய இவன் நீ கூறிய அல்லமன் அல்லன்; மத்தள அல்லமன் காண்- இவன் மத்தளம் கொட்டும் அல்லமன் என்று அறிவாயாக; முன்னொடுபின் மயங்க மொழிந்தனை என்றாள்- முன்கூறிய பொருளோடு பின் கூறிய பொருள் வேறுபடும்படி நீ நவில் அல்லமனை நான் நவில் அல்லமன் என்று கூறுகின்றாய் (எ.று)

முடிபு - என்ன விமலை கூற வேற்கண்ணி (கேட்டு) அணங்கே! அல்லமனைச் சம்பு என்றாய். இவன் மத்தள அல்லமன் காண். முன்பின் மயங்க நீ மொழிந்தனை என்றாள்.

மாயை கேட்ட விமலை கூறுவது

381. [1]வேண்டிய வடிவங் கொண்டு வேண்டிய வாறு செய்யும்
ஆண்டருள் அல்ல மற்கீ தாமென்றும் ஆகா தென்றும்
கோண்டரு நினது நெஞ்சால் குறித்திடப் படுவ துண்டோ
பூண் திகழ் இளமென் கொங்கைப் பொற்றொடி என்று
சொன்னாள் 25

(பா.ம்) [1](வேண்டிருக் கொண்டு; வேண்டி; வேண்டிய)வாறு செய்யும்.

Koviloor Digital Library

(இ.ள்) பூண் திகழ் இளமென் கொங்கைப் பொற்றொடி- அணிகள் விளங்கும் இளைய, மெல்லிய நகலைப் பெற்றிருக்கும் பொன்னால் ஆகிய வளையலை அணிந்த மாயையே; வேண்டிய வடிவம் கொண்டு வேண்டிய ஆறு செய்யும் ஆண்டருள் அல்லமற்கு- தான் விரும்பிய வடிவத்தை எடுத்துக் கொண்டு, தான் விரும்பிய செயல்களைச் செய்பவனும், அடியார்களை ஆட்கொள்ளும் இயல்பையுடையவனும் ஆகிய அல்லம தேவருக்கு; ஈது ஆம் என்னும் ஆகாதென்றும், கோண் தரு நினது நெஞ்சால் குறித்திடப் படுவது உண்டோ என்று சொன்னாள்- இவ்வடிவமும் இச் செயலும் ஆகுமென்றும், இவ்வடிவமும் இச் செயலும் ஆகாதென்றும் அறியாமை நிறைந்த உன் மனத்தால் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமோ என்று கூறினாள்.

முடிபு - பொற் கொடியே! அல்லமனுக்கு இது ஆம் என்றும் ஆகாது என்றும் நினது நெஞ்சால் குறித்திடப்படுவதுண்டோ? என்று சொன்னாள்.

கேட்ட மாயை கூற்று

382. **தருக்கநின் உடனு ரைத்தல் [1]தகாதினி அரங்கில் என்றன்**
கருத்துறும் அனையன் தன்னைக் காட்டுவல் கண்டு நீபின்(பு)
உரைத்தருள் இனையன் என்ன உணர்ந்தறி வரியன் என்று
தெரித்தவன் ஆயின் அன்னான் திறலினைக் காண்பல் என்றாள் 26

(பா.ம்) [1]தகாதினியாகில்

(இ.ள்) இனி தருக்கம் நின் உடன் உரைத்தல் தகாது- விமலையே! இனி மேல் வினாவிடை வடிவமான தருக்க மொழிகளை உன்னுடன் கூறுதல் தகுதி இல்லையாம்; அரங்கில் என்றன் கருத்துறும் அனையன் தன்னைக் காட்டுவல் - யான் நடிக்கும் நிருத்த மண்டபத்தில் என் மனத்தில் பொருந்திய அல்லமதேவனை யான் காட்டுவேன்; நீ கண்டு பின்பு இனையன் என்ன உரைத்தருள் - நீ அறிந்து பின்பு இத்தகையோன் என்பதை என்னிடம் சொல்வாயாக; உணர்ந்து அறிவரியன் என்று தெரித்தவன் ஆயின் - மனத்தினாலே உணர்ந்து அறிதற்கு அரியன் என்று நீ அறிந்து கூறிய அல்லமதேவனாக அவன் இருப்பானேயானால் (சச்சிதானந்த) அன்னான் திறலினைக் காண்பல் என்றாள். அத்தகை

Koviloor Digital Library

யோனது ஆற்றலை வெல்வதற்குரிய வழிகளை அறிந்து செய்வேன் என்றாள். (எ.று)

முடிபு - இனி நின்னுடன் தருக்கம் உரைத்தல் தகாது. அரங்கில் அனையான் தன்னைக் காட்டுவல். நீ கண்டு இனையன் என்ன உரைத்தருள். தெரித்தவன் ஆயின் அன்னான் திறலினை (நான்) காண்பல் என்றாள். தெரித்தவன் (விமலையால்) உன்னால் தெரிந்து கூறப்பட்ட அல்லமன்.

மாயையின் செயல்

383. [1]கண்டுகொள் மணியின் தன்மை
காட்டுதற் கறிந்து ளோரைக்
கொண்டுசெல் பவர்போல் வந்த
கோதையை உடன்கொண் டேகிப்
பண்டுதன் பூசைக் கெய்தும்
பரிசுபோல் மகளிர் சூழத்
தொண்டையங் கனிவாய்மாயை
சுடர்மணிக் கோயிப் புக்காள் 27

(பா.ம்) [1]கண்டுதொன்

(இ.ள்) தொண்டையங் கனிவாய் மாயை - தொண்டையின் அழகிய கனி போன்ற வாயைப் பெற்றிருக்கும் மாயையானவள்; கண்டுகொள் மணியின் தன்மை காட்டுதற்கு அறிந்துளோரைக் கொண்டு செல்பவர் போல் தெரிந்து கொள்ள வேண்டிய மாணிக்கத்தின் இலக்கணத்தை அறிந்து காட்டுதற்கு உரியவரை உடன் அழைத்துச் செல்பவரைப்போல; வந்த கோதையை உடன் கொண்டு ஏகி - கையிலையிலிருந்து வந்த விமலையை, தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்று; பண்டு தன் பூசைக்கு எய்தும் பரிசு போல் மகளிர் சூழ சுடர்மணிக் கோயில் புக்காள் - முன்னேதான் செய்யும் பூசைக்குப் போகும் தன்மைபோல தோழிமார்கள் எல்லாம் சூழ்ந்துவர மதுகேஸ்வரருடைய திருக்கோவிலின் கண்புகுந்தாள். (எ.று)

முடிபு - மாயை, மணியின் தன்மை காட்டுதற்கு அறிந்துளோரை கொண்டு செல்பவர்போல் வந்த கோதையை உடன் கொண்டு ஏகி பூசைக்கு எய்தும் பரிசுபோல, மகளிர் சூழ கோயில் புக்காள்.

Koviloor Digital Library

384. அருச்சனை முன்பு போல்னன் றாற்றுபு மதுகை நாதன்
திருச்சர ணங்கள் போற்றி சேயரி நெடுங்கண் செவ்வாய்
விரைத்துணர் மலர்மென் கூந்தல் விமலைமா தோடும் வந்து
நிருத்தமண் டபம்பு குந்தாள் நிரைவளைத் தளிர்க்கை மாயை 28

(இ.ள்) நிரை வளை தளிர்க்கை மாயை - வரிசையான வளையலை அணிந்த தளிர் போன்ற கைகளையுடைய மாயையானவள்; முன்பு போல் அருச்சனை நன்று ஆற்றுபு - சிவபூஜையை முன்பு செய்தாற்போல இன்றும் நன்றாகச் செய்து; மதுகை நாதன் திருச்சரணங்கள் போற்றி - (பின்பு) மதுகேஸ்வரரது திருவடிகளை வணங்கி விடைப் பெற்றுக் கொண்டு; சேயரி நெடுங்கண் செவ்வாய் விரைத்துணர் மலர்மென் கூந்தல் விமலை மாதோடும் வந்து நிருத்த மண்டபம் புகுந்தாள் - சிவந்த கோடுகளையுடைய நெடிய கண்ணையும், சிவந்த வாயையும், மணம் பொருந்திய, கொத்தாகிய மலரை அணிந்த மென் கூந்தலையும்; பெற்ற விமலையாகிய மாதோடும் கூடி வந்து நாட்டிய மண்டபத்தின் கண்புகுந்தாள். கண்ணையும், வாயையும் கூந்தலையும், பெற்ற விமலை மாதோடும் வந்து நிருத்த மண்டபம் புகுந்தாள். (எ.று)

முடிபு - (நிரை வளைத்தளிர்க்கை) மாயை முன்பு போல் அருச்சனை ஆற்றுபு மதுகை நாதன் சரணங்களைப் போற்றி, விமலை மாதோடும் வந்து நிருத்த மண்டபம் புகுந்தாள்.

385. [1]அல்லமர் இவர்தாம் தாம்என்று அறிதர வறிதி ராமல்
சொல்லுக எனஅ டிக்கும் தோற்றம்போல் மத்த ளத்தை
வல்லவன் அறைத லோடும் மாயைநெஞ் சூச லாடச்
சில்லரி மணிச்சி லம்பு சிலம்புற ஆடு கின்றாள் 29

(பா.ம்) [1]அல்லமன் இவன் தான்

(இ.ள்) அல்லமர் இவர்தாம் தாம் என்று அறிதர - அல்லமதேவர் இவர் தாம் இவர்தாம் என்று அறிந்து கொள்ள; வறிது இராமல் சொல்லுக என அடிக்கும் தோற்றம்போல் - சும்மாயிராமல் சொல்லுக என்று அடித்து ஓசை எழும்பச் செய்யும் தோற்றத்தைப்போல; வல்லவன் அறைத லோடும் - வல்லவனாகிய அல்லமதேவன் தாம்தாம் என்று ஓசை எழும்ப அடிக்கும் தொழிலோடு பொருந்தியிருக்க மாயை நெஞ்சு ஊசலாட சில்லரி மணிச்சிலம்பு சிலம்புற ஆடுகின்றாள் - மாயையானவள், தன்

Koviloor Digital Library

மனம் ஊசலாட சிலவாகிய மாணிக்க அரிகளையுடைய சிலம்பு ஒலிக்கும்படி ஆடுகின்றாள். (எ.று)

முடிபு - வல்லவன், மத்தளத்தை அறைதலோடு மாயை சிலம்பு சிலம்புற ஆடுகின்றாள். (வல்லவன் மத்தளத்தை எப்படி அறைந்தான் எனில் அல்லமர் இவர்தாம் இவர்தாம் என்று வறிதிராமல் சும்மா சொல்லிக் கொண்டே இரு என அடிக்கும் தோற்றத்தைப் போல மத்தளத்தை அடித்தார்) என்க. அல்லமர் இவர்தாம் தாம் என்ற பாடமே சிறந்தது என்க.

மாயையின் நடிப்பு

386. முன்னுற நின்ற ஞான மூர்த்திமேல் விழியும், ஆர்த்துப்
பின்னுற நின்ற மூர்த்தி மால்மிசைப் பெயரும் நெஞ்சு
மன்னுற இருத்தி நின்று மாயைதான் நடித்தாள் கண்டோர்
தன்னய னமுமால் நெஞ்சும் தன்மிசை வந்து வீழ 30

(இ.ள்) முன்உற நின்ற ஞான மூர்த்தி மேல் விழியும் - தனக்குமுன் பொருந்தநின்ற ஞானமூர்த்தியாகிய மதுகேசன் மேல் விழியையும்; ஆர்த்துப் பின்னுற நின்ற மூர்த்தி மால்மிசைப் பெயரும் நெஞ்சும் - மத்தளத்தை முழக்கிக் கொண்டு பின்னாலே பொருந்த நின்ற மூர்த்தியாகிய அல்லமதேவனைப் பற்றி எழும் காம மயக்கத்தின் கண்ணே செல்லுகின்ற நெஞ்சையும்; மன்னுற இருத்தி - நிலைபெற இருக்கச் செய்து (விழியை மதுகேசனிடத்தும் பெயரும் நெஞ்சை அல்லம தேவனுடைய மால்மிசையும்); மாயை தான் நடித்தாள் - (எவ்வாறு நடித்தாள் எனில்) கண்டோர்தன் நயனமும், மால் நெஞ்சும் தன் மிசை வந்து விழ நடித்தாள் - தன் நடிப்பைப் பார்த்தோருடைய கண்களும், மனமும், தன்மிசை வந்துவிழ நடித்தாள். எனவே, ம்ாயையோ விழி ஒரு பொருள் இடத்தும் அவள் மனம் மற்றொரு பொருளிடத்தும் இருக்கும்படி நடிக்கின்றாள். ஆனால் நடிப்பைப் பார்த்தவர்களுடைய விழியும், உள்ளமும் மாயையின் மேலேயே உள்ளன. (எ.று)

முடிபு - மாயை தான் முன்னுற நின்ற ஞானமூர்த்தி மேல் விழியும் பின்னுற நின்ற மூர்த்தி மால்மிசை பெயறும் நெஞ்சும் மன்னுற நிறுத்தி நின்று நடித்தாள். கண்டோர்தன் நயனமும் நெஞ்சும் தன்மிசை வந்து விழ நடித்தாள்.

Koviloor Digital Library

அல்லமன் நிலை

387. அரத்தம துறுப ளிங்காய் அரிமதர் மழைக்கண் மாயை
கருத்துறு காமம் தன்பால் காணுறத் [1]தோன்ற நின்றான்
வருத்துறு செயல்கொள் மாயை மருவிய குணம டுத்துப்
பரத்தினில் தோன்றும் என்று பகர்வதும் உண்மை அன்றே 31

(பா.ம்) [1]தோன்றி

(இ.ள்) அரத்தம் அது உறு பளிங்காய் - (அப்பொழுது அல்லம தேவன்) செந்நிறம் சேர்ந்த பளிங்குக் கல்லிற்கு ஒப்பாய்; அரிமதர் மழைக்கண் மாயை கருத்து உறுகாமம் தன்பால்காணுற தோன்ற நின்றான் - சிவந்த இரேகைகளையுடைய மதர்த்த குளிர்ந்த கண்களையுடைய மாயையினது மனத்தில் பொருந்திய காம எண்ணம் தன்னிடத்தில் வெளிப்படையாகத் தோன்றும்படி காமக் குறியோடு நின்றான்; வருத்துறு செயல் கொள் மாயை மருவிய குணம் - உயிர்களை வருந்தச் செய்கின்ற தொழிலை மேற்கொண்டு விளங்குகின்ற மாயையினுடைய பொருந்திய சத்துவம் முதலிய மூன்று குணங்களும்; பரத்தினில் தோன்றும் என்று பகர்வதும் உண்மை அன்றே - பரம்பொருளாகிய பிரமத்தினிடத்தும், அடுத்துத் தோன்றும் என்று நூல்கள் கூறுவதும் இப்பொழுது உண்மையாயிற்று. (எ.று)

இப்பாட்டு வேற்றுப் பொருள் வைப்பணி.

முடிபு - (அல்லமன்) அரத்தம் உறும் பளிங்காய், மாயை கருத்தில் உறுகாமம், தன்பால் காணுறத் தோன்ற நின்றான் (இதனால்) மாயை மருவிய குணம் பரத்தினில் அடுத்துத் தோன்றும் என்று (நூல்கள்) பகர்வதும் உண்மை. தோன்றி என்ற பாடத்திற்கு மாயை காமம் தன்பால் காணுறத் தோன்றி என முடித்துக் கொள்க.

(சிறப்புரை) முன் உரைக்கு காணுறத் தோன்ற என்பதற்கு வெளிப் படையாகத் தோன்ற என்ற பொருள் கொள்க. மாயையின் சத்துவம் முதலிய மூன்று குணங்களும், பரத்தை அடுத்தால், பிரமனாகவும், திருமாலாகவும், உருத்திரனாகவும் தோன்றி செயல் செய்தலின் இவ்வாறு கூறினார். பளிங்கு அடுத்தது காட்டுமாறு போன்று பரமும் மாயைக்கு காமியத்திற்கு இயைந்தவாறு, காமிய அல்லமனாகக் காணப்பட்டது என்க. (என்பது-சச்சிதானந்தம் பிள்ளை உரை).

Koviloor Digital Library

மாயையின் நிலை

388. கூத்துக்குப் [1]புகுந்த நம்பி கொட்டுக்கு நாணு றாமல்
சீர்த்தப்பு நடம்நவின்று சிந்தை வேறுஆகி நின்றாள்
[2]வார்த்தைக்குள் படாத ஞான வாரியை வாயால் சொல்ல
மூத்துக்கு மதியை வென்ற முகத்தியர் குழாத்துள் நாணி
32

(பா.ம்) [1]புகுந்து; [2]வார்த்தைக்குப்

(இ.ள்) கூத்துக்குப் புகுந்த நம்பி, கொட்டுக்கு நாண் உறாமல், சீர்தப்பு நடம் நவின்று சிந்தை வேறு ஆகி நின்றாள் - (மாயை) நடிக்கின்ற கூத்தைக் கருதி புகுந்த அல்லமதேவர், தவறுநிகழாமல் கொட்டுகின்ற கொட்டுக்கு, கால்சதி தப்பிய நடனத்தை வெட்கமில்லாமல் செய்து மனம் வேறுபட்டு நின்றவளாகிய மாயை; மூத்துக்கு மதியை வென்ற முகத்தியர் குழாத்துள் - வளர்ந்து, குறைந்து வருகின்ற இயல்பையுடைய திங்களை (அவ்வியல்பு இல்லாமையினால்) வெற்றி கொண்ட முகத்தைப் பெற்று நிற்கும் தன் தோழிமார் கூட்டத்துள்; வார்த்தைக்குள் படாத ஞானவாரியை வாயால் சொல்லி நாணி - ஆகம அளவைக்குள் அகப்படாத அறிவுக்கடலாகிய அல்லமதேவனை வாயினாலே சொல்லுவதற்கு வெட்கமடைந்து (கையாலே காட்டினாள்) என அடுத்த பாட்டில் முடியும். (எ.று)

புகுந்து என்பது வினை எச்சம். புகுந்த எனப் பெயரெச்சமாகக் கொள்க.

முடிபு - சிந்தை வேறாகி நின்றவள் முகத்தியர் குழாத்துள் வாயால் சொல்ல நாணி; காட்ட என்று அடுத்த பாட்டோடு முடியும்.

(சிறப்புரை) அல்லமன் இலக்கணம் தவறாமல் மத்தளத்தைக் கொட்டினான். மாயை இலக்கணம் தவற நடித்தாள். அல்லமன் வார்த்தைக்கு உட்படாதவன் ஆகையினால், மாயையும் வாயினால் சொல்லுதற்கு நாணிக்குறிப்பால் காட்டினாள். 'திரு.' சச்சிதானந்த சுவாமிகள் இப்பாட்டைக் குளகமாகக் கருதாமல் தனிப்பாடலாகக் கருதி மாயை நாணி நின்றாள் என முடித்துள்ளார். குளகமாக இப்பாட்டைக் கருதினால், இப்பாட்டில் உள்ள நாணி என்ற சொல் அடுத்த பாட்டிலுள்ள கையால் காட்ட என்ற சொல்லோடு முடியும்.

Koviloor Digital Library

மாயை அல்லமனைக் காட்ட கண்ட விமலையின் செயல்

389. கையொடு செல்லா நின்ற கடைக்கணால் மாயை காட்டு
ஐயனை விமலை கண்ணுற் றதிசயம் உடையள் ஆகி
வையகம் அதனில் மிக்க மனிதருள் இனையன் போல
மெய்யழ குடையான் தன்னை வேறுகண் டில[1]னென்
றுள்ளி 33

(பா.ம்) [1]என்றுன்னி

(இ.ள்) மாயை கையொடு செல்லாநின்ற கடைக்கணால் காட்ட - (தோழியர்குழாத்துள் அல்லமனை வாயினால் சொல்லுவதற்கு நாணிய) மாயை. அபிநயம் செய்யும் தன்கைகளோடு செல்கின்ற கடைக்கண்ணாலே அல்லமனை காட்ட; விமலை ஐயனை கண்ணுற்று - விமலையானவள் அல்லமனைப் பார்த்து அதிசயம் உடையள் ஆகி - வியப்புடையவளாகி; வையகம் அதனில் மிக்க மனிதருள் - இவ்வுலகத்திலே அழகு மிகுந்த மக்களுள்; இனையன் போல மெய்யழகுடையான் தன்னை வேறு கண்டிலன் என் உள்ளி - இத்தகையோன்போல, உடலழகு படைத்த மற்றும் ஒருவரை யான் கண்டிலேன் என்று கருதிக் கொண்டு; (எ.று)

முடிபு - மாயை, கடைக்கண்ணால் காட்ட, விமலை கண்ணுற்று அதிசயமுடையளாகி, மிக்க மனிதருள் இனையன் போல அழகுடையான்றன்னைக் கண்டிலேன் என்று கருதி. உள்ளி என்கின்ற எச்சம் அடுத்த பாட்டில் முடியும். ஒடு என்கின்ற மூன்றாம் வேற்றுமை உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்துள்ளது.

390. [1]மாறறும் அலம னேயிவ் வடிவுகொண் டிவள்செய் பூசை
பேறரு ளுதற்குற் றானோ பெருந்தவத் தாற்பி றந்த
வேறொரு மகனோ என்று விமலைஐ யத்த ளாகித்
தேறிலள் நிற்ப மாயம் செய்துநின் றனனெம் கோமான் 34

(பா.ம்) [1]மாறரு

(இ.ள்) விமலை, மாறு அறும் அலமனேவ் வடிவு கொண்டு இவள் செய் பூசை பேறு, அருளுதற்கு உற்றானோ - (மெய்யழகுடையான் தன்னை வேறு கண்டிலென் என்றுள்ளிய) விமலை மாறுபாடு இல்லாத அல்லமனே இந்த அழகிய வடிவத்தைக் கொண்டு இவள் செய்கின்ற

Koviloor Digital Library

காமியப் பூசைப் பயனை கொடுப்பதற்கு வந்தானோ?; பெருந்தவத்தாற் பிறந்த வேறொரு மகனோ - பெற்றோர்கள் செய்த பெரிய தவத்தால் பிறந்த மற்றொரு மகனோ?; என்று ஐயத்தளாகி தேறிலள் நிற்ப - என்று இருபால்பட்ட உள்ளத்தளாகி தெளிவில்லாதவளாய் நிற்கும்படி; என்கோமான் மாயம் செய்து நின்றனன் - எம் தலைவனாகிய அல்லமதேவன் விமலைக்கு இம்மயக்க உணர்வைச் செய்து நின்றனன். (எ.று)

முடிபு - விமலை, அல்லமனே இவ்வடிவு கொண்டு உற்றானோ? (அன்றி) இப்பெருந்தவத்தால் பிறந்த வேறொரு மகனோ? என்று ஐயத்தளாகி, தேறிலர் நிற்ப, எம்கோமான் மாயம் செய்து நின்றனன். மாறரும் அல்லமன் என்ற பாடத்திற்கு - மாறுபாடு இல்லாத அல்லமன் என்றும் உரை கொள்ளலாம். மால்தரும் எனப்பிரித்துக் கொண்டு விருப்பத்தைத் தருகின்ற அல்லமன் என்றும் உரை கொள்ளலாம்.

விமலை அல்லமனை அறியாது மயங்கி நிற்றல்

391. தமமில்வே லையினிற் சேய்மைத் தடத்தொருவனைக்கண்
டன்னான்
அமைவுற வருதல் போதல் ஐயமுற்று அறியார் போல
நிமலனை விகாரி என்றும் நிகழ்நிரு விகாரி என்றும்
விமலையே மயங்கும் என்னில் மாயையை வெறுப்பது
என்னே 35

(இ.ள்) தமம்இல் வேலையினில் சேய்மைத் தடத்து ஒருவனைக் கண்டு அன்னான், அமைவு உற வருதல் போதல் ஐயம் உற்று அறியார் போல- இருள் இல்லாத பொழுதில், தூரமான வழியிலே ஒருவரைப் பார்த்து, அவன் பொருந்த, நம்மை நோக்கி வருகிறான் என்பதையும், பிறரை நோக்கிப் போகிறான் என்பதையும், ஐயப்பட்டு அறியாதவர் களைப் போல; நிமலனை விகாரி என்றும், நிகழ் நிருவிகாரி என்றும், விமலையே மயங்கும் என்னில் - தூயவனாகிய அல்லமதேவனை, மாயையுள் பட்ட விகாரம் அடைந்தவன் என்றும், மாயையுள் படாத விகாரமில்லாதவன் என்றும், அறிந்து கொள்ள முடியாமல் விமலையே மயங்குவாளே ஆனால்; மாயையை வெறுப்பதென்னே - அல்லமனை மாயை அறிந்து கொள்ளாது இருத்தலைக் கூறி, அவளை வெறுப்பதால் பயன் என்ன? பயனில்லை என்பது கருத்து. (எ.று)

Koviloor Digital Library

முடிபு - ஒருவனை தமம்இல் வேலையினில் சேய்மைத் தடத்திலே கண்டு, அன்னான், வருதல் போதலை ஐயமுற்று அறியார்போல விமலை, விமலனை விகாரி என்றும் நிருவிகாரி என்றும் (அறியாமல்) மயங்குமென்னில் மாயையை வெறுப்பது என்.

(சிறப்புரை) விமலை, கருவயப்படாதவளாதலின், அவளை விமலையே எனப் பிரித்துக் கூறினார். மாயை கருவுற்றுப் பிறந்தவள். மமகாரனுக்கு மோகினி வயிற்றில் கருவுற்றுப் பிறந்தவள் மாயை, விமலை அவ்வாறு பிறக்கவில்லை.

மயங்கிய விமலையின் செயல்

392. **நீர்நிலை கோலால் காணும் நீர்மைபோல் இங்கு நின்றோன்**
சீர்நிலை மாயை தன்னால் தெளிவுற அறிவல் என்னா
ஏர்நிலை வடிவ மாயைக்(கு) இனையனே அலமன் என்று
வார்நிலை முலைம டந்தை வடிக்கணால் காட்டி னாளால் 36

(இ.ள்) வார்நிலை முலை மடந்தை - கச்சு நிலை பெற்ற நகிலையுடைய விமலையானவள்; நீர்நிலை கோலால் காணும் நீர்மைபோல் - தண்ணீரின் ஆழத்தை கைக்கோலால் அறிந்து கொள்ளும் தன்மைபோல; இங்கு நின்றோன் சீர் நிலை - இங்கு மத்தளம் முழக்கிக் கொண்டு நின்றவனுடைய பண்பை; (விகாரி, நிர்விகாரி;) மாயை தன்னால் தெளிவு அறிவல் என்னா-இந்த மாயையினால் தெளிவாக அறிந்து கொள்ளுவேன் என்று கருதிக் கொண்டு; ஏர் நிலை வடிவமாயைக்கு இனையனே அலமன் என்று வடிக்கணால் காட்டினாள்- அழகு நிலைபெற்ற வடிவத்தையுடைய மாயைக்கு இவ்னே அல்லமதேவன் என்று, கூர்மையான கண்ணால் அறிவித்தாள். (எ.று)

முடிபு - மடந்தை, நீர்நிலை கோலால்காணும் நீர்மைபோல இங்கு நின்றோனுடைய நிலையை, மாயையாலே அறிவல் என்னா? மாயைக்கு இனையனே அலமன் என்று கண்ணால் காட்டினாள். என்னா காட்டினாள் என்று முடித்துக் கொள்க.

விமலை கண்ணால் கூற மாயை அல்லமன் என்று அறிந்தது

393. **கண்ணினால் கேட்கும் சீசால்**
கங்கணத் திறைவன் முன்ண்
கண்ணினால் குமரா் நெஞ்சக்
கட்டவிழ்த்(து) ஆடு வாட்குக்

Koviloor Digital Library

கண்ணினால் கூற வந்த
[1]கைலைமாது அறிந்தாள் அன்னாள்
கண்ணினால் கண்டு ஞானக்
கண்ணினால் காண்பான் தன்னை 37

(பா.ம்) [1]கைலைமான் அறிந்தாள்

(இ.ள்) வந்த கைலைமாது - கைலையிலிருந்து வந்த விமலையானவள்; கண்ணினால் கேட்கும் சீர்சால் கங்கணத்து இறைவன் முன்னர்- கண்ணையே செவியாகக் கொண்டு அதனாலே ஒலிகளைக் கேட்டு அறியும் சிறப்பமைந்த பாம்பை கங்கணமாக அணிந்துள்ள மதுகை நாதன் முன்னர்; குமரர் நெஞ்சங்கட்டு, கண்ணினால் அவிழ்த்து ஆடுவாட்கு - இளைஞருடைய மனத்தின் நிறையை, தன் கண்ணினாலே அழியச் செய்து ஆடுகின்ற மாயைக்கு; கண்ணினால் கூற- விழியால் அறிவிக்க; அன்னாள் ஞானக் கண்ணினால் காண்பான் தன்னை - அந்த மாயை அகவிழியால் காணக்கூடிய அல்லமதேவனை; கண்ணினால் கண்டு அறிந்தாள் - தன் முகவிழியால் கண்டு உணர்ந்தாள்.

முடிபு - வந்த கைலைமாது இறைவன் முன்னர் ஆடுவாளுக்கு, கண்ணினால் கூற, அன்னாள் ஞானக் கண்ணினால் காண்பான் தன்னை கண்ணினால் கண்டு அறிந்தாள்.

(சிறப்புரை) ஞானக்கண்- அகவிழியாகிய உள்உணர்வு. இப்பாட்டின் முதலடிகளில் வந்த சொல்லே திரும்பி வருவதால் மடக்கு என்னும் சொல்லணி என்க. அறிதல்- அல்லமன் என்று அறிதல்.

அல்லமனை உணர்ந்து கொண்ட மாயையின் செயல்

394. வல்லிதன் [1]மனத்தில் காமம் மாய்ந்துவண் கைலைக்
குன்றில்
சொல்லிய சூள்நெஞ் சத்தில் தோன்றலும் சுழன்றா
டிப்போய்
அல்லமன், மீது வீழ்வாள் ஆகமேல் வீழ்ந்து பற்றிப்
புல்லிய நினைந்து சென்றாள் புல்லிய நெறியில் நின்றாள்
38

(பா.ம்) [1]மனத்துக்காமம்

(இ.ள்) வல்லிதன் மனத்தில் காமம் மாய்ந்து - அல்லமனை உணர்ந்து கொண்ட, கொடி போன்ற மாயையின் மனத்திலே, காம

Koviloor Digital Library

உணர்ச்சி அழிந்து; வண்கலைக்குன்றில் சொல்லிய சூள் நெஞ்சத்தில் தோன்றலும்- வளப்பத்தைப் பெற்ற கயிலை மலையில் தான் முன் சொல்லிய சபதமொழி அம்மனத்தில் தோன்றலும்; புல்லிய நெறியில் நின்றாள்- காமமாகிய சிறு வழியில் நின்றவளாகிய மாயை; சுழன்று ஆடிப்போய் அல்லமன் மீது வீழ்வாளாக- சுழன்று ஆடும் பவுரிக் கூத்தினை ஆடிக்கொண்டு அல்லமதேவன் மீது வீழ்பவளைப் போல்; மேல் வீழ்ந்து பற்றி புல்லிய நினைந்து சென்றாள்- அல்லமதேவன் மேல் வீழ்ந்து பற்றித் தழுவிக் கொள்ளுவதற்கு எண்ணிச் சென்றாள் புல்லிய நெறியில் நின்றாள் என்பது சுட்டுப் பொருள் (எ.று)

முடிபு- வல்லிதன் மனத்திலே குன்றில் சொல்லிய சூள் நெஞ்சத்தில் தோன்றலும், அல்லமன் மீது சுழன்று ஆடிப்போய் வீழ்வாளாக. வீழ்ந்து பற்றிப் புல்லிய நினைந்து சென்றாள். மனத்து-அத்துச் சாரியை.

மாயையின் கருத்தை உணர்ந்து கொண்ட அல்லமன் செயல்

395. **கண்டனன் அவள்கருத்தைக் காரிகை [1]மனத்துள் காமம்**
மண்டலம் உணரக் காட்டி வழிக்கொள்வல் என்று உளத்தில்
கொண்டுகை தவறி வீழ்ந்த குடமென மத்த ளந்தான்
விண்டுக எறிந்து போகட்டு ஓடினன் விரைந்து வீரன் 39

(பா.ம்) [1]மனத்தில்

(இ.ள்) வீரன் அவள் கருத்தைக் கண்டனன் - அல்லமதேவன், மாயையினுடைய எண்ணத்தை உணர்ந்து கொண்டனன்; காரிகை மனத்துள் காமம் மண்டலம் உணரக் காட்டி வழிக்கொள்வல் என்று உளத்தில் கொண்டு- அழகுடைய மாயையின் மனத்தின் உள்ளேயுள்ள விரும்பிய எண்ணத்தை உலகத்திற்கு உணரக் காட்டிவிட்டு, யான் என் வழியில் செல்வேன் என்று உள்ளத்தில் கருதிக் கொண்டு; கைதவறி வீழ்ந்த குடம் என - கையிலிருந்து தவறி விழுந்த குடத்தைப் போல; மத்தளம் தான் விண்டு உக எறிந்து போகட்டு விரைந்து ஓடினன் - மத்தளம் தான் பிளந்து சிந்தும்படி அதை எறிந்து விட்டு வேகமாக அவ்விடத்தை விட்டு ஓடினான்.

Koviloor Digital Library

முடிபு- வீரன் அவள் கருத்தைக் கண்டனன். காரிகை மனத்துள் காமத்தை மண்டலம் உணரக்காட்டி வழிக்கொள்வல் என் உளத்தில் கொண்டு, வீழ்ந்த குடம் என, மத்தளம் தான் விண்டுக எறிந்து போகட்டு விரைந்து ஓடினன்.

(சிறப்புரை) போகட்டு என்ற சொல் இப்போது போட்டு என்று வழங்குகின்றது.

அல்லமன் செயலைக் கண்ட மாதர்கள் நிலை

396. இத்தனை ஆட்டம் எல்லாம் இவட்கித னாலென் றெண்ணி
மத்தளம் அதனை வீசிப் போகல்போல் வள்ளல் போகப்
பித்தடைந் தனன்கொல் என்று பித்துறீஇ மாதர் எல்லாம்
கைத்தளிர் விரன்முடக்கி கவுளடி வைத்து நின்றார் 40

(இ.ள்) வள்ளல், இவளுக்கு இத்தனை ஆட்டம் எல்லாம் இதனால் என்று எண்ணி - அல்லமதேவன் மாயையாகிய இவளுக்கு இவ்வளவு நடிப்பு எல்லாம் இந்த மத்தளத்தினால் நிகழ்ந்தது என்று கருதிக் கொண்டு; மத்தளம் அதனை - மத்தளமாகிய அதை; வீசிப் போகல் போல்- எறிந்து விட்டுப் போகல் போல போக- அல்லமதேவன் அவ்விடத்தை விட்டு விரைந்து ஓடிப்போக; மாதர் எல்லாம், பித்தடைந்தனன் கொல் என்று பித்துறீஇ- மாயைச் சூழ்ந்து நின்ற பெண்கள் எல்லாம், மத்தளம் கொட்டுபவன் பித்தடைந்தானோ என்று தம்முள் கூறிக் கொண்டு, தாம் பித்தடைந்து கைத்தளிர் விரல் முடக்கி கவுளடி வைத்து நின்றார் - தளிர் போன்ற கையின் கண் உள்ள விரல்களை மடக்கி, அவற்றைக் கன்னத்தின் கீழ் வைத்துக் கொண்டு நின்றார்கள். (எ.று)

முடிபு- வள்ளல் இவளுக்கு இத்தனை ஆட்டம் எல்லாம் இதனால் என்று எண்ணி, மத்தளத்தை வீசிப் போகல் போல, (வீசி எறிந்து விட்டு) போக மாதர் எல்லாம் (இவன் பித்தடைந்தனன் கொல் என்று கூறி) பித்துற்று விரலை முடக்கி கவுளடி வைத்து நின்றார்.

சிறப்புரை- இது தற்குறிப்பேற்றம் என்ற அணியின் பாற்படும். இவளுக்கு இத்தனை ஆட்டமெல்லாம் இதனால் என்று எண்ணி மத்தளம் அதனை வீசிப்போகல் போல, வள்ளல் போனார் என்பது தற்குறிப் பேற்றமாகும். உலகில் நிகழாதது ஒன்று நிகழுமாயின் பெண்கள் கன்னத்தின் அடியில் விரலை மடக்கி வைத்துக் கொண்டு நிற்பார்கள் என்னும் செய்தி உலகியல் நவிற்சி அணியாகும்.

Koviloor Digital Library

இகுளையர் மனம் உளைந்தது

397. பறையடித் தின்று காறும், மறைத்தவிப் பாவை செய்கை
[1]பறையுடைத் தொழிந்து காளை பாரெலாம் அறியச்
செய்தான்
கறையடிக் களிநல் யானைக் கருங்கழல் சீற்றத் துப்பின்
இறைமகட்கு உயிர்நி லாதென்று இகுளையர் மனமு
ளைந்தார் 41

(பா.ம்) [1]பறையுடைத்தொழித்து

(இ.ள்) இன்று காறும் பறையடித்து, மறைத்த இப்பாவை செய்கை- இன்றுவரை, மத்தளத்தை அடித்துக் கொண்டு மறைத்து வைத்திருந்த இந்த மாயையின் நடத்தையை; காளைபறையுடைத் தொழிந்து பாரெலாம் அறியச் செய்தான்; காளை போன்ற அல்லமதேவன் மத்தளத்தை உடைத்துவிட்டு அவளைப் பிரிந்து உலகெல்லாம் அறியச் செய்தான். கறையடிக் களி நல்யானைக் கருங்கழல் சீற்றத்துப்பின் இறைமகட்கு - உரல் போன்ற அடியையுடைய மதத்தைப் பெற்றிருக்கும் யானையையும் வலிய வீரக்கழலையும் சினத்தோடு கூடிய வலிமை யையும் பெற்றிருக்கும் இறைவனாகிய மமகாரன் மகளாகிய மாயைக்கு (இனிமேல்); உயிர் நிலாதென்று இகுளையர் மனமுளைந்தார் - உடம்பின் கண் உயிர் நிலைத்திராது என்று கூறிக்கொண்டு தோழிகள் எல்லாம் மனம் வருந்தினர். (எ.று)

முடிபு- காளை இன்று காறும், பறையை அடித்து மறைத்த இப்பாவையது செய்கையை (இப்பொழுது) பறையை உடைத்து, ஒழிந்து பாரெலாம் அறியச் செய்தான் (அதனாலே) இறைமகட்டு உயிர் நில்லாது என்று கூறி இகுளையர் மனம் உளைந்தார்.

சிறப்புரை- ஒழித்து என்று பாடம் கொண்டால் பறையை உடைத்து விட்டு என்று பொருள் கொள்க. ஒழிந்து என்பதற்குப் பிரிந்து எனப் பொருள் கொள்க.

398. சிலைமத னின்று செய்யுள் செருவினுக் கன்றி வெள்ளி
மலைதனில் இயம்பும் மாற்றம் வழுவிற் றென் றுளம,
தழிந்தாள்
கலவிசெய் தலைவன் நீங்கக் கைப்பொருட் கழுதி, ரங்கும்
முலைவிலை மகளிர் போல முத்தவா ணகைப்பொற்
கொம்பு 42

Koviloor Digital Library

(இ.ள்) முத்தவாள் நகை பொன் கொம்பு - முத்து போன்ற ஒளிபெற்ற பல்வரிசையுடையவளும், பொலிவைப் பெற்றிருக்கும் பூங்கொம்பு போன்றவளுமாகிய மாயை; சிலைமதன் இன்று செய்யும் செருவினுக்கு அன்றி- கரும்பு வில்லையுடைய மன்மதன், இப்பொழுது செய்யும் காமப் போருக்கன்றி; வெள்ளிமலைதனில் இயம்பும் மாற்றம் வழுவிற்று என்று உளம் அழிந்தாள்- வெள்ளிமலையிலே அன்று இயம்பிய சூளுரை தவறிப் போயிற்றே என்று கருதி மனம் வருந்தினாள்; அது எதைப் போல் இருந்தது எனில்; கலவி செய்தலைவன் நீங்க கைப்பொருட்டு அழுது இரங்கும் முலைவிலை மகளிர் போல- தன்னோடு இப்பொழுது புணர்ந்து கொண்டிருந்த தலைவன் நீங்கிவிட புணரும் இன்பம் நீங்கியதற்கு வருந்தாமல் முன்னே அவன் கொடுப்பதாகக் கூறிய கைப்பொருள் கிடைக்காமல் போனதற்கு வருந்துகின்ற பரத்தையரின் செய்கை போல் இருந்தது. (எ.று)

முடிபு- முத்தவாணகைப்பொற்கொம்பு, மதன் இன்று செய்யும் செருவினுக்கன்றி (அன்று) வெள்ளிமலைதனில் இயம்பும் மாற்றம் வழுவிற்று என்று உளம் அழிந்தாள். இது எதுபோல் இருந்தது எனில், கலவி செய் தலைவன் நீங்க கைப்பொருட்கு அழுது இரங்கும் முலைவிலை மகளிர் செய்கை போல் இருந்தது.

விமலை மாயைக்குக் கூறியது

399. மாலைவாய் மரையே போலும் மாயைவாண் முகத்தைக் கண்டு
வேலுலாம் கருங்கண் செவ்வாய் விமலைமாது அவள் உளத்தில்
சாலுமா ரஞர றிந்து தடங்கணாய் தளரேல் நீநின்
சீலநா யகன்போற் [1]தேத்துந்தேடிநாம் காண்போம் என்றாள் 43

(பா.ம்) [1]தேத்துத் - தேயம்

(இ.ள்) வேய் உலாம் கருங்கண் செவ்வாய் விமலைமாது- வேல் படையைப் போல இயங்கும் கரியகண்களையும் சிவந்த வாயையும் உடைய விமலையானவள்; மாலைவாய் மரையே போலும் மாயை வாண் முகத்தைக் கண்டு - மாலைக் காலத்து தாமரை மலரை ஒத்து மலர்ச்சி குன்றிய மாயையின் ஒளி பெற்ற முகத்தைப் பார்த்து; அவள் உளத்தில் சாலும் ஆரஞர் அறிந்து - அம்மாயையின் மனத்தில்

Koviloor Digital Library

பொருந்திய நிறைந்த துன்பத்தை அறிந்து கொண்டு; தடங்கணாய் நீ தளரேல் - அகன்ற கண்களையுடைய மாயையே நீ மனம் தளராதே (கலங்காதே); நின் சீல நாயகன் போந்தேத்தும் தேடி நாம் காண்போம் என்றாள்- உன்னுடைய ஒழுக்கமுடைய தலைவன் சென்ற தேயத்தின் கண்ணும் நாம் அவனைத் தேடிக் காண்போம் என்று சொன்னாள் (எ.று)

முடிபு- விமலைமாது மாயைவாண் முகத்தைக் கண்டு, அவள் உளத்து ஆர் அஞர் அறிந்து, தடங்கணாய் நீ தளரேல் நின் நாயகன் போம்தேத்து நாம் தேடிக் காண்போம் என்றாள். தாமரை என்பது மரை என முதற்குறைந்தது. தேத்தும் என்பது தேம்+அத்து+உம் என்று பிரித்துக் காண்க; ஏழாம் வேற்றுமை விரித்துக் கொள்க (தேயத்தின் கண்ணும் என)

மாயையும் தோழியரும் அல்லமனைத் தேடிச் சென்றது

400. சிலைநுதல் விமலை சொல்லால்
தெளிந்துளம் இறையை நோக்கிக்
கலைதொடர் உழைபோல் மாயை
காட்டினில் தொடர்ந்து போனாள்
மலர்தொடர் அளிகள் போல
மாயையைத் தொடர்ந்து சென்றார்
கொலைபடும் அயில் அமர்த்துக்
குழைபொரு தடங்கண் நல்லார் 44

(இ.ள்) மாயை சிலை நுதல் விமலை சொல்லால் உளம் தெளிந்து - மாயையானவள், வில்லை போன்ற நெற்றியைப் பெற்றிருக்கும் விமலை கூறிய சொல்லால் மனம் தெளிவடைந்து; கலைதொடர் உழைபோல் இறையை நோக்கி காட்டினில் தொடர்ந்து போனாள்- ஆண்மானைத் தொடர்ந்து செல்லும் பெண்மான் போல அல்லமதேவன் சென்ற இடத்தை நோக்கி காட்டின் கண் தொடர்ந்து போனாள்; கொலை படும் அயில் அமர்த்து குழை பொருதடங்கண்நல்லார்- கொலைத் தொழிலில் பொருந்தும் வேலோடு மாறுபட்டு காதின்கண் உள்ள குழையைத்தாக்குகின்ற விசாலமான கண்களையுடைய பெண்கள் (தோழியர் கூட்டம்); மலர் தொடர் அளிகள் போல மாயையைத் தொடர்ந்து சென்றார்- மலரைப் பின்பற்றிச் செல்லும் வண்டுக்கூட்டங் களைப் போல, மாயையைப் பின்பற்றிச் சென்றார். (எ.று)

முடிபு- மாயை விமலை சொல்லால் உளம் தெளிந்து, கலைதொடர் உழைபோல் காட்டினில் இறையை நோக்கித் தொடர்ந்து போனாள்

Koviloor Digital Library

தடங்கண் நல்லார் மலர்தொடர் அளிகள் போல மாயைத் தொடர்ந்து சென்றார். கலைதொடர் உழைபோல் மலர் தொடர் அளிபோல் என்பவை இரண்டும் வினை உவமை.

கண்டோர் கூற்று

401. மெய்த்தவம் பயின்று பெற்று வேந்தர்க்கும் கொடாமல் முக்கண்
அத்தனுக் கென்று வாளா அரசன்வைத் திருந்த பாவை
மத்தளி கன்பின் போனாள் மகள்தனை அந்தோ ஆண்டுப்
பத்தின்மேல் வைத்தி ருத்தல் பாவமென்று [1]இகழ்ந்தார்
கண்டோர் 45

(பா.ம்) [1]இகழ்ந்தார்

(இ.ள்) கண்டோர் என்று இகழ்ந்தார் - இந்நிகழ்ச்சியினைக் கண்டோரெல்லாம் என்று கூறி மனம் அழிந்தார்கள்; அவர்கள் என்று கூறிய செய்தி என்ன? எனில்; மெய்தவம் பயின்று பெற்று- உண்மை யான தவத்தைப் பலகாலம் செய்து அத்தவப் பயனால் மகவாகப் பெற்று; வேந்தர்க்கும் கொடாமல்- தன்னை ஒத்த அரசர்க்கும் மணம் செய்து கொடுக்காமல்; முக்கண் அத்தனுக்கு என்றுவாளா அரசன் வைத்திருந்த பாவை- மூன்று கண்களையுடைய சிவபெருமானுக்கு என்றே கருதிக் கொண்டு திருமணம் செய்யாமல் மமகார மன்னன் வைத்திருந்த இப்பெண்; மத்தளிகன்பின் போனாள் - (இப்பொழுது) மத்தளம் அடிப்பவன் பின்னாலே சென்று விட்டாள்; அந்தோ! மகள்தனை ஆண்டு பத்தின் மேல் வைத்திருத்தல் பாவம் என்று அழிந்தார் - ஐயோ நாம் பெற்ற பெண்ணை பத்தாண்டுகளுக்கு மேல் திருமணம் புரியாமல் இல்லத்தில் வைத்திருத்தல் பாவச் செயலாகும் என்று கூறி பழித்துப் பேசினர். (எ.று)

முடிபு- கண்டோர் அரசன், தவம் பயின்று பெற்று வேந்தர்க்கும் கொடாமல் அத்தனுக்கென்றே வாளா வைத்திருந்த பாவை (இன்று) மத்தளிகன்பின் போனாள் (அதனால்) மகள்தனைப் பத்தாண்டின் மேல் வைத்திருத்தல் பாவம் என்று பழித்துப் பேசினர்.

இதுவும் அது

402. பாவமும் பழியும் நல்கும் [1]பல்வகைப் புகழ் அறங்கள்
யாவையும் அழிக்கும் எய்தும் இன்பமும் அதனால் எய்தும்

Koviloor Digital Library

நோவுநன் மரபும் செய்யும் நோன்பும்நல் ஒழுக்கும் மேன்மை
சாவுமெண் ணுறாமல் நிற்கும் தயங்குபுன் காமம் என்பர் 46

(பா.ம்) [1]பலவகை

(இ.ள்) கண்டோர் இவ்வாறு காமத்தால் உண்டாகும் நிலையைக் கூறுவராயினர். தயங்குபுன்காமம் - விளக்குகின்ற நற்காமம் அல்லாத புன்மையாகிய காம உணர்வு; பாவமும் பழியும் நல்கும்- பாவ உணர்வையும் பழிச்சொல்லையும் கொடுக்கும்; பல்வகைப் புகழ் அறங்கள் யாவையும் அழிக்கும் - பலவகையான புகழ்ச்சொற்களையும், அறஉணர்வையும் ஆகிய எல்லாவற்றையும் அழித்து விடும்; எய்தும் இன்பமும் அதனால் எய்தும் நோவும் எண்ணுறாமல் நிற்கும் - அக்காமத்தினாலே வரக்கூடிய இன்பத்தின் அளவையும் துன்பத்தின் அளவையும் கருதி உணராதபடி நிற்கும்; நன்மரபும் செய்யும் நோன்பும் நல் ஒழுக்கமும், மேன்மையும் சாவும் எண்ணுறாமல் நிற்கும் - நல்ல குலத்தையும், தான் செய்கின்ற தவம் முதலான நோன்புகளையும், தான் பின்பற்றுகின்ற நல்லொழுக்கங்களையும் தன்னுடைய மேன்மையையும் காமம் காரணமாக (வருகின்ற) இறப்பையும் (ஆகிய இவற்றைக்) கருதி உணராதபடி நிற்கும் (எ.று)

முடிபு- கண்டோர், புன்காமம் நல்கும், அழிக்கும் எண்ணுறாமல் நிற்கும் என்பார்; உம்மைகள் யாவையும் எண்ணும்மை; மேன்மை என்பதற்கு உம்மை வருவிக்கப்பட்டது; சாவும் என்பதற்குப் பதிலாக யாவும் என்று பாடம் இருப்பின் நன்று.

வேறு

403. பஞ்சின் மேல்மிதிப் பினும்பதை பதைக்குமென் பதங்கள்
அஞ்சு றாள்பரல் மிதிப்பதை நீருண அவாவாள்
விஞ்சு ஞாயிறு முதிர்கதிர் வெதுப்பினை வெருவாள்
நெஞ்சி யோகிமேல் இருத்தியந் நிரைவளை சென்றாள் 47

(இ.ள்) அந்நிரைவளை பஞ்சின் மேல் மிதிப்பினும், பதை பதைக்கும் மென்பதங்கள் பரல் மிதிப்பதை அஞ்சுறாள் - அந்த வரிசையான வளையலை அணிந்த மாயையானவள் பஞ்சின் மேலிடத்தை மிதித்தாலும் வருந்துகின்ற தன்னுடைய மென்மையான கால்களை இப்பொழுது பரலை மிதித்தலைச் செய்வதைக் கண்டு

Koviloor Digital Library

அஞ்சுறாளாய்; நீர் உண அவாவாள் - தண்ணீரையும் அருந்துவதற்கு விரும்பாதவளாய்; விஞ்சு ஞாயிறு முதிர்கதிர் வெதுப்பினை வெருவாள் - மிக்க கதிரோனுடைய முதிர்ந்த வெயில் தரும் வெப்பத்தைக் கண்டு அஞ்சாதவளாய்; யோகிமேல் நெஞ்சு இருத்தி சென்றாள் - அல்லம தேவனாகிய யோகியின் மேல் (போகியாகிய) தான் மனத்தைக் காட்டின்கண் தேடிச் சென்றாள் (எ.று)

முடிபு - அந்நிரைவளை அஞ்சுறாள் அவாவாள் வெருவாள் சென்றாள்.; (இலக்கணக் குறிப்பு) அஞ்சுறாள், அவாவாள், வெருவாள் என்கின்ற எதிர்மறை வினைமுற்றுக்கள், எதிர்மறை வினை எச்சமாகத் திரிந்து சென்றாள் என்கின்ற வினைமுற்றுடன் முடியும்.

(சிறப்புரை) கோரக்கரின் சீடரான ஸ்ரீசுவாத்மராம யோகீந்திரர் இயற்றிய ஹடயோகப் பிரதீபிகை என்னும் நூலில் ஆதிநாதர் முதலான மகாசித்தர்களை முதல் உபதேசத்தில் 5-6-7-8-9ஆம் சுலோகங்களில் தொகுத்துக் கூறியுள்ளார். இவ்வாறு தொகுத்துக் கூறிவிட்டு இவர்களெல்லாம் மகாசித்தர்களாவர். ஹடயோகத்தின் பிரபாவத்தால், காலதண்டத்தைக் கண்டித்து, மிருத்துவை ஜெயித்து, பிரம்மாண்ட மத்தியில் தடையின்றி சஞ்சரிக்கின்றார்கள் என்று கூறுகின்றது. அவருள் ஒருவர் அல்லமாப்பிரபுதேவர் என்க. அதனாலே மேற்கண்ட பாடலில், யோகி என்று குறிப்பிடுகின்றார். அவர்களின் பெயர்களாவன: ஆதி நாதர் (பரமேஸ்வரர்). அவர் சீடர்களாகிய, மச்சேந்திரர்- சாபரர்- ஆனந்தபைரவர்-சௌரங்கி மீனநாதர், கோரக்கநாதர்- விருபாட்சர்- விலேசயர்- மந்தானர்- பைரவர்-சித்தி-புத்தர்- கதண்டி-கோரண்டகர்- காரநந்தர்-சித்தபாதர் சர்ப்படி-கானேரி-பூஜ்ஜியபாதர்- நித்தியநாதர்- நிரஞ்சனர்-கபாலி- விந்துநாதர்-காகா- சண்டீஸ்வரர்-அல்லமாப் பிரபுதேவர் - கோடா- சோலி-டிண்டிணி- பானுகி-நாரதேவர்- கண்டர்- காபாலிகர் என்பவராவார்.

மாயை சென்ற பாலை நிலத்தின் வெப்பக் கொடுமை

404. காம வெந்தழ லாலுடல் வெந்துளம் கரிந்த
கோம டந்தைய லால்அலை மேல்வரு குளிர்தண்
பூம டந்தையப் பாலையில் போமெனில் புனலில்
தாமி ளங்கயல் சுடுமணல் வீழ்ந்தெனத் தளரும் 48

(இ.ள்) காம வெம் தழலால் உடல் வெந்து உளம்கரிந்த கோமடந்தை அலால் - காமமாகிய கொடிய நெருப்பால் உடம்பு வெந்து

Koviloor Digital Library

உள்ளமும் கருகிய, ம்மகாரமன்னன் மகளாகிய மாயையல்லாமல்; அலைமேல் வரு குளிர் தண்பூமடந்தை அப்பாலையில் போம் எனில்- பாற்கடலில் தோன்றிய மிக்க தண்மையைப் பெற்றிருக்கும் பூவிலே வாழும் திருமகள், மாயை சென்ற அப்பாலை நிலத்தில் போவாளே யானால்; புனலில் தாம் இளங்கயல் சுடுமணல் வீழ்ந்தெனத் தளரும் - தண்ணீரிடத்திலேயே வாழ்கின்ற இளையகயல் மீன்கள் சுடும் மணலில் வீழ்ந்தாற்போல தளர்ச்சியடையும். (எ.று)

முடிபு - காமத்தழலால் உடல் வெந்து உளமும் கரிந்த கோமடந்தை அல்லாமல், பூமடந்தை அப்பாலையில் போம் எனில், கயல் சுடுமணல் வீழ்ந்தெனத் தளரும். பூமடந்தை தளரும். தாம் என்பது தண்ணீரிலேயே அன்றி வேறு எங்கும் வாழாத கயல் என்ற பொருளில் வந்துள்ளது.

இதுவும் அது

405. பான லங்கருங் கண்ணிபோ கியகொடும் பாலை
யானை தன்புழைக் கைநிகர் துளியிடை விடாமல்
வானம் நின்றுபெய் யினும்தழல் பட்டவல் இரும்பின்
மேன கந்தெறி திவலைபோற் [1]சுவறுறும் விரைந்து 49

(பா.ம்) [1]சுவரிடும்

(இ.ள்) பானல் அம் கரும் கண்ணி போகிய கொடும்பாலை - குவளை மலரை ஒத்த கருத்த கண்ணையுடைய மாயை சென்ற கொடிய பாலை நிலமானது; வானம், யானை தன் புழைக்கை நிகர் துளி இடைவிடாமல் நின்று பெய்யினும் - மேகங்கள், யானையினுடைய தும்பிக்கையை ஒத்த மழைத்துளிகளைக் கொண்டு இடைவிடாமல் நின்று பொழிந்தாலும்; தழல்பட்ட வல் இரும்பின் மேல் நகம் தெறி திவலை போல் விரைந்து சுவறுறும்- நெருப்பிலே காய்ச்சப்பட்ட இரும்பின்மேல், நகத்திலிருந்து சிந்தும் நீர்த்திவலை போல வேகமாகச் சுவறிவிடும். அத்தகைய பாலை நிலம் என்க. (எ.று)

முடிபு - கண்ணி போகிய பாலைவனம், யானை கை நிகர்துளியை, நின்று இடைவிடாமல் பெய்யினும் (அத்துளிகள்) தழல்பட்ட இரும்பின்மேல் நகம்தெறிதிவலைப்பட்டாற்போல விரைந்து சுவறும்.

406. மால ருந்திய போதுதன் வயிற்றிடை இராதிப்
பாலை யென்றுடன் உமிழ்ந்திலன் ஆகில் மெய்பதைத்து

Koviloor Digital Library

வேலை யின்றலை [1]விழுந்தத னாலு முண் வெண்ணெய்
யாலும் வெந்தழல் தணிந்துயிர் உய்குவன் அலனே 50

(பா.ம்) [1]வீழ்ந்ததனாலும்

(இ.ள்) மால் அருந்தியபோது - திருமால் இம்மண்ணுலகத்தை உண்டகாலத்தில்; இப்பாலை வயிற்றிடை இராது என்று உடன் உமிழ்ந்திலன் ஆகில் - மாயை சென்ற இப்பாலை நிலம், நம் வயிற்றிடை, இருக்க முடியாது என்று கருதி உடனே அதைத் துப்பியிராவிட்டால்; மெய்பதைத்து வேலையின் தலை விழுந்ததனாலும் - உடம்பு வெப்பத்தால் வருந்தி அது தீரும்படி கடலினிடத்தே விழுந்ததனாலும்; உண்வெண்ணெயாலும் - உள்வெப்பம் தீரும்படி உண்ட வெண்ணெயாலும்; வெந்தழல் தணிந்து உயிர் உய்குவன் அலன் - கொடிய வெப்பம் குறைந்து, உயிர் பிழைத்திருக்க மாட்டான். எனவே, உடனே துப்பியதால் உயிர் பிழைத்தான் என்க. (எ.று) மேல்சீரை நோக்கி விழுந்ததனாலும் என்பதே பொருந்தும். மால் அருந்திய பொழுது என்றுரைக்கினும் அமையும்.

முடிபு - மால் அருந்தியபோது இப்பாலை வயிற்றிடை இராது என்று உடன் உமிழ்ந்திலன் ஆகில், வேலையின்தலை விழுந்ததனாலும் உண்வெண்ணெயாலும் தழல் தணிந்து உய்குவன் அலன்.

(சிறப்புரை) வெளிவெப்பம் தீர்வதற்குக் கடலில் வீழ்தல். உள் வெப்பம் தீர்வதற்கு வெண்ணெய் உண்டல் என்க.

மாயைத் தொடர்ந்து செல்லும் மகளிர் நிலை

407. நாயின் நாவிஙீர் சிறுமுயல் குருளைகள் நக்கும்
தீய பாலையில் தனைமறந் தவசத்தில் சென்ற
மாயை மாதுபின் தொடர்ந்துசெல் மலர்முக மாதர்
வாயில் [1]நீரற கண்கள்நீர் சுரந்தன வந்து 51

(பா.ம்) [1]வாயினீரறீஇ

(இ.ள்) நாயின் நாவின்நீர் சிறுமுயல் குருளைகள் நக்கும் தீயபாலையில் - நாயினது நாவிலே ஒழுகும் எச்சிலாகிய நீரை சின்ன முயல் குட்டிகள் நீர் வேட்கையால் நக்குகின்ற கொடிய பாலை நிலத்தின்கண்; தனைமறந்து அவசத்தில் சென்ற மாயை மாது - தன்னையே மறந்து வசமிழந்து செல்கின்ற மாயையாகிய ஒரு பெண்; பின் தொடர்ந்து செல் மலர் முக மாதர் - அவளைப் பின் தொடர்ந்து

Koviloor Digital Library

செல்கின்ற மலர் போன்ற முகத்தையுடைய பெண்களினது; வாயில் நீர் அற - வாயினிடத்தே சுரக்கின்ற நீர் அற்றுப்போக. (அதற்கு மாறாக) கண்கள் நீர் வந்து சுரந்தன - கண்களிடத்தே கண்ணீர் பெருகின. (எ.று)

முடிபு - தீய பாலையில் மறந்து சென்ற மாயை மாது (அவளைப்) பின் தொடர்ந்து செல்லும் மாதர் வாயில் நீர் அற, கண்களில் நீர் வந்து சுரந்தன. வாய் வறண்டு போயிற்று. கண்களில் நீர் பெருக்கிற்று என்பது கருத்து. ''நாயின் நாவினீர் தன்னை நீரெனா நவ்வி, நாவினால் நக்கி விக்குமே'' (கலிங்கத்துப் பரணி, காடு பாடியது, 9வது கண்ணி) என்ற கலிங்கத்துப் பரணியின் கருத்து நோக்குக.

408. கானல் நீரெனச் சிறிதிடம் கடிதுசென்று இளைப்பார்
மான னார்சிலர் வாய்க்கடை நாவினால் வருடித்
தானை [1]ஓர்தலை முகத்தெதிர் அசைத்துமெய் தளர்வார்
[2]வேனில் ஆகொடிது என்றுதம் விதியினை வெறுப்பார்
52

(பா.ம்) [1]ஓர்கரம்; [2]வேனில் ஓகொடிது

(இ.ள்) மான் அனார்சிலர் - மானை ஒத்த பெண்களிலே சிலபேர்; கானல்நீர் எனச் சிறிது இடம் கடிது சென்று இளைப்பார் - கானலை தண்ணீர் என்று கருதி சிறிது தூரம் விரைந்து சென்று (நீர் அல்லாமை யினாலே) இளைத்து வருந்துவார்; வாய்க்கடை நாவினால் வருடி தானை ஓர்தலை முகத்து எதிர் அசைத்து மெய்தளர்வார் - (சில பெண்கள்) வாயின் ஓரத்தை நாக்கினால் தடவிக் கொண்டு, ஆடையின் ஓர்தலைப்பை (முன்தானையை) தன் முகத்தின் எதிரே காற்று வரும்படி வீசி உடல் தளர்வார்கள்; வேனில் ஆ! கொடிது என்று தம் விதியினை வெறுப்பார் - இவ்வெயிற்காலம் மிகக் கொடிது என்று கூறிக் கொண்டு இக்காலத்தில் நடக்க வேண்டிய விதி தங்களுக்கு இருப்பதை அறிந்து அதனை வெறுப்பார். (எ.று)

முடிபு - மானனார் சிலர், கானலை நீர் எனச் சென்று இளைப்பார். வாய்க்கடையை நாவினால் வருடி தானையின் ஓர்தலை முகத்தினில் அசைத்துத் தளர்வார். வேனில் ஆ! கொடிது என்று தம் விதியினை வெறுப்பார்.

(சிறப்புரை) வேனில் கொடிது - வேனிற்காலம் கொடியது என்றும், வேனிற்காலம் கொடிய பொருள்களில் எல்லாவற்றுள்ளும்

Koviloor Digital Library

கொடிது என்றும் இருபொருள் கொள்ளலாம். (வேனில் ஓகொடிது எனவும் பாடம்)

மாதர் பின்தொடர செல்லும் மாயைமுன் மான் ஓடும் காட்சி

409. மாதர் இவ்வணம் தொடர்ந்துபின் வரஎழில் மாயை
பாத தாமரை வருந்தின பலையுள் நடந்தவ்
ஆதி நாயகன்றனை மறித்து உதவிசெய்து அறல்மெல்
ஓதி ஓடுற ஆவமென்று உழைகள்முன் ஓடும் 53

(இ.ள்) மாதர் இவ்வணம் தொடர்ந்து பின் வர உழைகள் முன் ஓடும் - தோழியர் கூட்டம் இவ்வாறு பின் தொர்டர்ந்துவர, அவளுக்கு முன் மான்கள் ஓடுகின்றன; (அந்நிகழ்ச்சி எவ்வாறு இருந்தது எனில்;) பாலையுள் நடந்து எழில் மாயை பாத தாமரை வருந்தின - இப்பாலை நிலத்திலே நடந்து அழகிய மாயையின் அடித்தாமரை எல்லாம் வருந்தின; அவ்வாதி நாயகன் தனை மறித்து உதவி - அந்த ஆதி நாயகனாகிய அல்லமதேவனைத் தடுத்து நிறுத்தி இவ்வாறு மாயைக்கு உதவி செய்து; அறல்மெல் ஓதியோடு உறவு ஆவம் என்று - கருமணல் போன்ற நிறத்தையுடைய மெல்லிய கூந்தலைப் பெற்றிருக்கும் மாயையினுடனே பகை தீர்ந்து உறவு ஆவோம் என்று கருதிக் கொண்டு ஓடுதல் போல் உள்ளது. (எ.று) மான்கள் இவர்களைக் கண்டு வெகுண்டு முன் ஓடுங்காட்சி; அல்லமனை தடுத்து நிறுத்தி, மாயைக்கு உறவு ஆவோம் என்று ஓடுதல்போல் உள்ளது. உறவாதல் - மாயையின் கண்ணுக்கு ஒவ்வாமையால் ஏற்பட்ட பகை தீர்ந்து உறவாதலைக் குறிக்கும்.

முடிபு - மாதர் இவ்வணம் தொடர்ந்து பின் வர, உழைகள் முன் ஓடும். அங்ஙனம் ஓடுவது மாயை பாலையுள் நடந்து பாத தாமரை வருந்தின நாயகன் தனை மறித்து உதவி செய்து, ஓதி ஓடு உறவாவம் என்று ஓடுதல் போன்றது. அறல்மெல் ஓதி என்பது அன்மொழித் தொகை. இங்கே மாயையைக் குறித்தது. இது தற்குறிப்பேற்றம் என்ற அணியின் பாற்படும் செய்யுள் என்க.

மாயை பாலைவனத்தை விட்டுப் பெருவனத்துள் வந்தது

410. கூந்தல் மேல்விரி முகில்தரக் கோபம்வாய் காட்ட
வேந்து கொங்கையின் வடம்மலை அருவியை [1]ஏய்ப்பக்

Koviloor Digital Library

காந்தள் அங்கைகள் தரவரும் காரெனக் கலாபம்
வாய்ந்த மஞ்ஞைகள் மகிழவந் தனள்பெரு வனத்தில் 54

(பா.ம்) [1]இசைப்ப, இயைப்ப என்று பாடம் (ஏய்ப்ப என்பதற்குப் பதில்)

(இ.ள்) கூந்தல் மேல்விரி முகில் தர - கூந்தலானது மேலேவிரியும் மேகத்தைப் போன்று தோன்ற; வாய் கோபம் காட்ட- சிவந்த இதழ்கள், இந்திர கோபத்தைப் போன்று தோன்ற; ஏந்து கொங்கையின் வடம் மலை அருவியை ஏய்ப்ப - நிமிர்ந்த நகிலின் மேல் அணிந்துள்ள முத்து மாலைகள் மலையினின்றும் ஒழுகும் அருவியை ஒப்ப; காந்தள் அங்கைகள் தர- அழகிய கைகள் காந்தள் மலரைத் தோற்றுவிக்க; வரும் கார் எனக் கலாபம் வாய்ந்த மஞ்ஞைகள் மகிழ - தோகையையுடைய மயில்களெல்லாம் வரக்கூடிய கார்காலம் என்று மகிழ்ச்சி அடைய; பெருவனத்தில் வந்தனள்- பெரிய முல்லைவனக்காட்டில் மாயை வந்தாள். (எ.று)

முடிபு- கூந்தல் முகில்தர வாய் கோபம் காட்ட, கொங்கையின் வடம் அருவியை ஏய்ப்ப, கைகள் காந்தளைத்தர வரும் கார் எனக்கருதி, மஞ்ஞை மகிழ (மாயை) பெருவனத்தில் வந்தாள். இதில் உருவக அணி அமைந்துள்ளது.

வந்த மாயையைக் கண்டு முனிவர்கள் இரிந்து ஓடுதல்

411. சிங்க முங்கரி யும்பணி செயத்தவம் [1]செய்யும்
அங்கு றுந்தவர் மாயைதன் முலையிடை ஆம்மா
தங்க முஞ்சிறு சிங்கமும் கண்டுளம் தளர்ந்து
பொங்கு றுந்துய ரோடெழுந் திரிந்துபோ யினரால் 55

(பா.ம்) [1]செய்யூ

(இ.ள்) சிங்கமும் கரியும் பணிசெயத் தவம் செய்யும் அங்கு உறும்தவர்- சிங்கங்களும், யானைகளும் தங்களுக்குத் தொண்டு செய, தவத்தைச் செய்கின்ற அங்குற்ற முனிவர்கள்; மாயை தன் முலை இடை ஆம் மாதங்கமும் சிறுசிங்கமும் கண்டு- மாயையினுடைய நகிலும், இடையுமாகிய யானையையும் சிறுசிங்கத்தையும் பார்த்து; உளம் தளர்ந்து பொங்குறும் துயரோடு எழுந்து இரிந்து போயினர்- முனிவர்கள் மனம் கலங்கி, பொங்குகின்ற துன்பத்தோடு தவம் செய்யும் இடத்திலிருந்து எழுந்து பின்வாங்கிச் சென்றனர். (ஆல்- அசை) (எ.று)

Koviloor Digital Library

முடிபு- தவர் - எழுவாய் (வினைமுதற்பெயர்); மாயைதன் முலையாகிய மாதங்கத்தையும் இடையாகிய சிங்கத்தையும் கண்டு, தளர்ந்து, துயரோடு எழுந்து இரிந்து போயினர். எத்தகையதவர் எனின்? சிங்கமும் கரிகளும் பணிசெய்யத்தவம் செய்யும் தவர்; செய்யும் என்னும் பெயரெச்சம் வினைமுதற் பெயரைக் கொண்டது.

அல்லமன் அருள் செயக் கருதியது

412. கொடிய வாள்வரி வேங்கையைக் கண்டமான்குழாம்போல்
நொடிய வார்சடை முனிவரர் கலங்குறு நிலையும்
தொடியு லாவுமென் தோள்மட வார்வரு துயரும்
முடியு மாறருள் செயநினைந் தனன்அருள் மூர்த்தி 56

(இ.ள்) கொடிய வாள்வரி வேங்கையைக் கண்டமான் குழாம் போல் - கொடிதாகிய வாள் போன்ற கோடுகளைப் பெற்றிருக்கும் வேங்கைப் புலியைப் பார்த்த மான் கூட்டங்களைப் போல; நெடிய வார்சடை முனிவரர் கலங்குறு நிலையும்- மிக நீண்ட சடையை யுடைய முனிவர்கள், மாயையைக் கண்டு கலக்கமுற்ற நிலைமையையும்; தொடியுலாவும் மென்தோள் மடவார் வரு துயரும்- வளையல் இயங்குகின்ற மென்மையான தோள்களையுடைய மடப்பம் வாய்ந்த பெண்கள் நடந்து வருகின்ற துன்பம் முடியுமாறு - நீங்கும்படி; அருள் மூர்த்தி அருள் செய நினைந்தனன்- அருள்வடிவினனாகிய அல்லமதேவன், அருள் செய்வதற்கு எண்ணினான். (எ.று)

முடிபு- அருள்மூர்த்தி, முனிவரர் கலங்குறு நிலையும் மடவார் வருதுயரும் முடியுமாறு அருள் செய நினைந்தனன். இப்பாட்டில் உவமையணி வந்துள்ளது. மாயைக்கண்டு முனிவர்கள் கலங்கியதற்கு வேங்கையைக் கண்டு மான்குழாம் அஞ்சிய நிகழ்ச்சி உவமையாயிற்று.

அல்லம தேவன் தோன்றியது

413. மாயை போகவோர் கணத்தினில் துரப்பன்நீர் மனத்தில்
நோயு றீரென ஒருமுனி போல்நின்று நுவன்று
தூய மாதவர்க் கருள்செய்து தொல்லை நல் உருவாய்த்
தேயும் நுண்மருங் கணங்கெதிர் தோன்றினன் சிரித்து 57

(இ.ள்) ஒரு முனி போல் நின்று - (அல்லமதேவன் ஒரு முனிவன் போல வடிவு எடுத்து) முனிவர்களுக்கு முன் நின்று; மாயை போக ஒரு கணத்தினில் துரப்பன் நீர் மனத்தில் நோய் உறீர் என நுவன்று- மாயையானவள் தன்னிடத்திற்குப் போய் விட ஓர் கண நேரத்தில்

Koviloor Digital Library

ஓட்டுவேன் நீவிர் உங்கள் மனத்தில் வருத்தம் உறுதல் வேண்டாம் என்று கூறி; தூய மாதவர்க்கு அருள் செய்து - (இவ்வாறு) தூய்மையான முனிவர்களுக்கு அருள்செய்து; தொல்லை நல் உருவாய் - பழைய வடிவத்தையுடைய அல்லமனாய்; தேயும் நுண்மருங்கு அணங்கு எதிர் சிரித்துத் தோன்றினன் - இளைக்கும் நுண்ணிய இடையையுடைய மாயை முன் நகைத்துக் கொண்டே தோன்றினன்.

முடிபு - அல்லமன் ஒரு முனிபோல் நின்று மாயை போகத்துரப்பன் நீர் மனத்தில் நோய் உறீர் என நுவன்று (பின்) தொல்லை உருவாய் அணங்கு எதிர் சிரித்துத் தோன்றினன்.

தோன்றிய அல்லமன் திருவடியை பூவையர் அடைந்தது

414. பொங்கும் ஆரழல் வெஞ்சுரம் புக்கபூ வையர்க்குக்
கங்கை யாறெதிந் தாலெனக் கண்ணெதிர் தோன்றும்
எங்கள் நாயகன் திருவடித் தாமரை யிணையைத்
தங்கள் ஆகுலம் தீர்ந்துமெய் குளிர்தரச் சார்ந்தார் 58

(இ.ள்) பொங்கும் ஆர் அழல் வெம்சுரம் புக்க பூவையர்க்கு கங்கையாறு எதிர்ந்தால் என - வளரும் அரிய நெருப்பையுடைய பாலை நிலத்தை அடைந்த பெண்களுக்கு கங்கையாகிய ஆறே எதிர்வந்தால் போல; கண் எதிர் தோன்றும் எங்கள் நாயகன் திருவடித் தாமரை இணையை - தங்கள் கண்முன் தோன்றுகின்ற எங்கள் தலைவனாகிய அல்லம தேவனுடைய திருவடியாகிய இரண்டு தாமரை மலர்களை; தங்கள் ஆகுலம் தீர்ந்துமெய் குளிர்தரச் சார்ந்தார் - (பூவையர்) தங்கள் அந்த வரியை அப்படியே இங்கும் மனவருத்தம் தீர்ந்து உடல் குளிரும்படி அடைந்தார்கள். (எ.று)

முடிபு- சுரம்புக்க பூவையர்க்கு கங்கையாறு எதிர்ந்தால் என தோன்றுகின்ற எங்கள் நாயகன் அவன் அடித்தாமரையை (பூவையர்) ஆகுலந்தீர்ந்து மெய் குளிர்தர சார்ந்தார். திருவடித்தாமரை - உருவகம்; வெஞ்சுரம்புக்க பூவையர்க்கு கங்கையாறு எறிந்தால் என என்பது பூவைமார் அல்லமன் அடியினை சார்ந்ததற்கு சுரத்துள் கங்கையாறு எதிர்ப்பட்டமை உவமையாயிற்று; இது வினை உவமை (எதிர்ப்பட்ட மைக்குச் சார்தல் பற்றி)

பூவை மார் அல்லமனை வினாவுதல்

415. பெருக ளற்றினில் அழுந்தியங் கெழுபவன் பிடித்த
கரம்நெ கிழ்த்துவிட் டகல்பவன் போலிளங் காளாய்

Koviloor Digital Library

விரைம லர்க்கணை பட்டுளம் நையுமெல் லியலை
அருளறத்துறந் தனையென்கொல் என்றனர் அவர்தாம் 59

(இ.ள்) பெருகு அளற்றினில் அழுந்தி அங்கு எழுபவன் பிடித்த கரம் நெகிழ்த்துவிட்டு அகல்பவன் போல் - பெருஞ்சேற்றில் அகப்பட்டு அழுந்தி அப்பொழுது எழுபவன் பற்றுக்கோடாகப் பிடித்தகையை மெல்ல நீக்கிவிட்டு நீங்குகின்ற ஒருவனைப் போல; இளங்காளாய் - இளைய காளை போன்றவனே; விரைமலர்க்கணைபட்டு உளம் நையும் மெல்லியலை அருள் அறத்துறந்தனை - மன்மதனுடைய மணம் உடைய மலராகிய அம்புபட்டு மனம் வருந்துகின்ற எங்கள் மெல்லியலாகிய மாயையை சிறிதும் இரக்கமில்லாமல் விட்டுப்பிரிந்தனை; என்கொல் என்றனர் அவர்தாம் - இதற்குக் காரணம் என்ன? என்று அப்பெண்கள் கேட்டார்கள்? (எ.று)

முடிபு- அவர்தாம் அளற்றினில் அழுந்தி எழுபவன் பிடித்தகரம் நெகிழ்த்துவிட்டு அகல்பவன் போல் இளங்காளாய்! கணைபட்டு உளம் நையும் மெல்லியலை துறந்தாய் (இதற்கு) காரணம் என் கொல்? என்றனர். ''ஆமுனியாஏறு'' (முல்லைக்கலி .8) என்பதைக்கருதி இளங் காளாய் என்று விளித்தாள்.

அல்லமன் பூவையர்க்குக் கூறியது

416. பற்றி ஆயிடை விடுத்ததும் நீயிரே பற்றி
இற்றை நாளுமை விடுத்திலேன் இதனையிவ் உலகம்
முற்றும் ஓதுறும் தம்பிழை மொழிகுநர் உளரோ
குற்றம் நாடியே [1]திலரிடை கூறுநர் அல்லால் 60

(பா.ம்) [1]சிலரிடை

(இ.ள்) ஆயிடை பற்றி விடுத்ததும் நீயிரே - முன்னே என்னை பற்றி வெளியே விட்டதும் நீங்களே. பிரபு தேவன், ''ஐயா நீபுறத்து ஓர் சூழலில் இருத்தல் நன்று' என்று சகளை கூறிய மொழியை உட்கொண்டு கூறியது இச்செய்தி. (பிரபுதேவர் வந்தகதி. 88 பாடல்); பற்றி இற்றை நாள் உமை விடுத்திலேன் - நான் உங்களைப் பற்றி இன்றைய பொழுது நான் உங்களை விடவில்லை. இதனை இவ்வுலகம் முற்றும் ஓதுறும் - இச்செய்தியை இவ்வுலகம் முழுதும் சொல்லும்; குற்றம் நாடி, ஏதிலரிடை கூறுநர்அல்லால் தம்பிழை மொழிகுநர் உளரோ - பிறருடைய குற்றத்தை ஆராய்ந்து அயலாரிடத்திலே கூறுபவர் அல்லாமல் தம்முடைய குற்றத்தை ஆராய்ந்து கூறுபவர் இவ்வுலகத்தில் உளரோ (எ.று); நாடி,

Koviloor Digital Library

ஏதிலரிடை என்கின்ற சொல்லைத் தம்பிழை; என்பதனோடு கூட்டிப் பொருள் கொள்க.

முடிபு - பற்றி விடுத்ததும் நீயிரே (நான்) பற்றி விடுத்திலேன் இதனை இவ்வுலகம் முற்றும் ஓதுறும். குற்றம் நாடி ஏதிலரிடைக் கூறுநர் அல்லால் தம் பிழை மொழிகுநர் உளரோ. இப்பாடல் வேற்றுப் பொருள் வைப்பணி; என்னை நீயிரே பற்றி, நீயிரே விட்டீர். நான் பற்றி நான் விடுத்திலேன். ஆதலின் என்மீது தவறில்லை. பிழை உங்களிடமே யுள்ளது என்பது கருத்து.

417. என்ன ஓதலும் அல்லமன் ஏந்திழை மடவார்
மன்னன் மாமகள் மனத்தெழு காமநோய் வளரும்
முன்னம் நீமுனி யாதிருந் தின்றுதான் முனிந்தாய்
என்னை யேறவிட் டேணியை வாங்கினை என்றார் 61

(இ.ள்) அல்லமன் என்ன ஓதலும் - அல்லமதேவன் மேற்கூறிய வாறு சொல்லிய அளவில்; ஏந்திழை மடவார் - (அம்மொழியைக் கேட்ட) உயர்ந்த அணிகளை அணிந்த மடப்பம் வாய்ந்த பெண்கள்; மன்னன் மாமகள் மனத்து எழு காமநோய் வளரும் முன்னம் நீ முனியாதிருந்து இன்று தான் முனிந்தாய் - அரசனின் சிறந்த மகளாகிய, மாயையின் மனத்திலே தோன்றிய காமநோயை வளர்வதற்கு முன்னர், நீ வெறுக்காமல் இருந்து விட்டு, வளர்ந்த இன்றுதான் அவளை நீ வெறுக்கின்றாய்; என்னை - இதற்கு என்ன காரணம்?; ஏறவிட்டு ஏணியை வாங்கினை என்றார் - மேலே ஏறும்படி விட்டு விட்டுப்பின்னர் ஏணியை எடுத்து விட்டாய்- என்று சொன்னார். (எ.று)

முடிபு- அல்லமன் என்ன ஓதலும், மடவார் மகள் மனத்தெழு காமநோய் வளருமுன்னம் நீ முனியாதிருந்து (வளர்ந்த) இன்று தான் முனிந்தாய் என்னை? (நீ) ஏறவிட்டு ஏணியை வாங்கினை என்று கூறினார்.

சிறப்புரை- மகள் மனத்தில் காமநோய் வளரும் முன்னம் முனியா திருந்து வளர்ந்த பின் முனிந்த செய்தி, ஏறவிட்டு ஏணியை வாங்குதல் போலிருந்தது. முனிதல் - வெறுத்தல்.

அப்போது மாயை கூறியது

418. தொல்லை நின்திரு மேனிபோல் உள்ளமும் தூய்தாய்
நல்லை என்றுனை நம்பினேன் வஞ்சக நடிப்பு

Koviloor Digital Library

வல்லை என்பதை அறிந்திலேன் நான்என வன்சொல்
சொல்லி நின்றனள் மாயையெம் பிரானிது சொல்லும் 62

(இ.ள்) மாயை - அப்பொழுது மாயையானவள்; நின் திருமேனி போல் உள்ளமும் தூய்தாய் நல்லை என்று உனை தொல்லை நம்பினேன்- உன்னுடைய அழகிய உடம்பைப் போல உன் உள்ளமும் தூய்மையாகி நீயும் நல்லோனாயிருப்பாய் என்று உன்னை முன்னே நம்பியிருந்தேன். வஞ்சக நடிப்பு வல்லை என்பதை அறிந்திலேன் நான் - உள்ளமும் செயலும் வேறுபட்ட வஞ்சகச் செயலில் வல்லவன் என்பதை நான் அறிந்திலேன்; என வன்சொல் சொல்லி நின்றனள் - என்று கொடுஞ் சொல்லைச் சொல்லி நின்றாள்; எம்பிரான் இது சொல்லும் - இதைக் கேட்ட அல்லமதேவன் கீழ்வரும் சொற்களைச் சொல்லச் சொல்லித் தொடங்கினார் (எ.று)

முடிபு- மாயை மேனிபோல் உள்ளமும் தூய்தாய் நல்லை என்று உனை தொல்லை நம்பினேன். நான் வஞ்சக நடிப்பு வல்லை என்பதை அறிந்திலேன் என வன்சொற் சொல்லி நின்றனள் (கேட்ட) எம்பிரான் இது சொல்லும். நல்ல- வல்லை என்பன முன்னிலை ஒருமை வினைமுற்றுச்சொல்; வன்சொல் - கொடுமொழி; காமநிகழ்ச்சியில் கூறத்தகாத சொல்.

நிம்பிரி, கொடுமை, வியப்பொடு, புறமொழி,
வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை,
இன்புறல், ஏழைமை, மறப்பொடு, ஒப்புமை
என்றுஇவை இன்னம் என்மனாா் புலவர்

(**தொல்.** மெய்ப். 26ம் நூற்பா)

என்ற நூற்பாவின்படி நற்காமத்திற்கு ஒவ்வாத வன்சொல்லை மாயை கூறினாள். எனவே இது புல்லிய காமம்.

அல்லமன் கூற்று

419. **வஞ்ச நாடகம் நடிப்பது மாயைதன் செயலோ**
தஞ்ச அல்லமன் தன்செயலோவெனத் தடங்கண்
பஞ்சின் மெல்லடி யாய் கடவுளரையும் படிறில்
நெஞ்ச மாதவர் தமையுங் கேட்டறிதிநீ என்றான் 63

(இ.ள்) தடங்கண் பஞ்சின் மெல்லடியாய் - பரந்த கண்களையும் பஞ்சு போன்ற மென்மையான கால்களையும் உடைய மாயையே; வஞ்ச

Koviloor Digital Library

நாடகம் நடிப்பது மாயைதன் செயலோ? தஞ்ச அல்லமன் தன் செயலோ என - கற்பனையான நாடகங்களை நடிப்பது மாயையினது செயலோ (அல்லது) பற்றுக் கோடாகிய அல்லமனது செயலோ என்று; கடவுள ரையும் படிறு இல் நெஞ்ச மாதவர்தமையும் நீ கேட்டு அறிதி என்றான் - தேவர்களையும் குற்றமில்லாத நெஞ்சத்தையுடைய முனிவர்களையும் நீ கேட்டு அறிந்து கொள்வாயாக என்று கூறினான். (எ.று)

முடிபு- மெல்லடியாய்! வஞ்ச நாடகம் நடிப்பது மாயை செயலோ அல்லமன் செயலோ? என கடவுளரையும் மாதவர் தம்மையும் நீ கேட்டு அறிதி என்றான். இவ்வியக்கத்திற்கு மாயையே காரணமாதலின் வஞ்ச நாடகம் நடிப்பது மாயைக்கே உரியது என்பது கருத்து. மாயையி லிருந்து முக்குணங்களும் தோன்றி ஈஸ்வரனும் உயிர்களும் தனு- கரண- புவன- போகங்களும் கற்பனையாக உண்டாகி அவை இயங்கிக் கொண்டிருத்தலின் அவ்வியக்கத்திற்கு மாயையே காரணமாதலின் வஞ்ச நாடகம் நடிப்பது மாயைக்கே உரிய செயல் என்பது கருத்து. அல்லமனுக்கு வஞ்ச நாடகம் நடிப்பது இல்லை. யாரைக் கேட்டு தெரிந்து கொள்ளலாம் என்றால் தேவரையும் முனிவரையும் என்றார்.

மாயையின் மறுமொழி

420. **கள்ளன் மங்கையைக் களவுசெய் பொருளினைக் கண்டு**
கொள்ளும் நன்குறி புகல்விப்பது ஒக்குமென் [1]கூத்தை
தள்ள ருஞ்சுரர் முனிவரால் சொல்விக்கும் தகைமை
வள்ளல் என்றுபுன் நகைகொளீஇ உரைக்குமம் மாயை 64

(பா.ம்) [1]கூற்றை

(இ.ள்) வள்ளல் என்று - வள்ளலே என்று; என் கூத்தை - என் நடிப்பை; தள்ளரும்சுரர் முனிவரால் சொல்விக்கும் தகைமை - நீக்க முடியாத தேவராலும், முனிவராலும் கூறுவிக்கும் தக்க செயல் (எத்தகையதெனில்); கள்ளன் மங்கையை -திருடனுடைய மனைவியை; களவு செய் பொருளினைக் கண்டு கொள்ளும் நன்குறிபுகல்விப்பது ஒக்கும் - திருடிய பொருளினைக் கண்டு கொள்வதற்குரிய நல்ல அடை யாளங்களைக் கேட்டு, அவளால் சொல்விப்பதை ஒக்கும்; புன் நகை கொளீஇ- சிறுசிரிப்பு சிரித்துவிட்டு; அம்மாயை உரைக்கும் - அம்மாயை மேலும் சொல்லத் தொடங்கினாள். (எ.று)

முடிபு- வள்ளலே! என் கூத்தை, சுரர் முனிவரால் சொல்விக்கும் தகைமை (எத்தகையது எனில்) கள்ளன் மங்கையைக் களவு செய்

Koviloor Digital Library

பொருளினை கண்டுகொள்ளும் நற்குறி புகல்விப்பது ஒக்கும் என்று புன்னகை கொளீஇ. அம்மாயை உரைக்கும். என் கூத்தைக் கடவுளரும், முனிவரரும், சொல்லுவதற்குத் தகுதி அற்றவர் என்பதாயிற்று. கண்டு கொள்ளும் நற்குறி: திருட்டுப் பொருளை அறிந்து கொள்ளுதற்குரிய நல்ல அடையாளங்கள்.

தேவர்களும் என்னைப் பற்றிக்கூற இயலாதவர்கள் என்றல்

421. நெஞ்சம் யாதினால் எனையகன் றிடஅரி நினைக்கும்
கஞ்சன் மாயையை இலன் எனக் கழறவாய் உண்டோ
விஞ்சும் வான்இறை என்னையெம் மெய்யினால் விடுவான்
தஞ்ச மாயைமென்று இகழ்தரத் தக்கசொல் கற்றோய் 65

(இ.ள்) தஞ்சமாயை என்று இகழ்தரத்தக்க சொல் கற்றோய் - எளியமாயை என்று கூறி, இகழத்தக்க சொல்லினை சொல்லக் கற்றுக் கொண்டவனே; அரி, நெஞ்சம் யாதினால் எனை அகன்றிட நினைக்கும் - திருமால் எந்த மனத்தால் என்னை நீக்குதற்கு நினைப்பான்? (நினைக்கும் மனத்திலேயே மாயையின் கூறாகிய திருமகளிருக் கின்றாள் என்றபடி); கஞ்சன் மாயையை இலன் எனக் கழற வாய் உண்டோ - நான்முகன் மாயையைப் பெறாதவன் என்று கூற மாயை இல்லாத வாய் அவனிடம் உள்ளதோ? (பிரமன் வாயில் கலைமகளாகிய மாயை இருக்கின்றாள் என்பது கருத்து); விஞ்சும் வான் இறை என்னை எம் மெய்யினால் விடுவான் - மிக்க தேவர்க்கு இறைவனாகிய இந்திரன், மாயையாகிய என்னை எந்த உடம்பால் விடுவான்? (அகலிகையை விரும்பியதன் காரணமாக சாபம் பெற்ற உடம்பை உடையவனாதலின் இவ்வாறு கூறினார்) (எ.று)

முடிபு- எனவே தேவர்கள் தம் மனத்தாலும், சொல்லாலும், மெய்யாலும் என்னை விடாதவர்களாய் உள்ளனர். அவர்களைக் கேட்பதனால் பயனில்லை என்பது கருத்து.

முனிவர்களும் என்னைப் பற்றி கூறமுடியாதென்றல்

422. என்னை அஞ்சிமா வழங்கு காட்டிருக்குமா தவரென்
தன்னை வென்றிட வல்லரோ அல்லரென் றன்னைப்
பின்னை வென்றிட வல்லர் யார் பேசுதி என்று
மின்னை வென்றநுண் ணிடைசொல வல்லமன் விளம்பும் 66

Koviloor Digital Library

(இ.ள்) என்னை அஞ்சி- எனக்குப் பயந்து கொண்டு; மாவழங்கு காட்டிருக்கும் மாதவர் - விலங்குகள் திரியும் காட்டிலே வாழ்ந்திருக்கும் முனிவர்கள்; என் தன்னை வென்றிட வல்லரோ அல்லர் - என்னை வெல்லுவதற்கு வல்லமையுடையவராவரோ? வல்லமை யற்றவர்; என்றன்னைப் பின்னை வென்றிடவல்லர்யார் பேசுதி- என்னை தேவரும் முனிவரும் தவிர பிறகு வெற்றி கொள்ள வல்லவர் யார்? சொல்லுவாயாக; என்று மின்னை வென்ற நுண்ணிடை சொல - இவ்வாறு மின்னலை வென்ற நுண்ணிடையை யுடையவளாகிய மாயை சொல்ல ; அல்லமன் கூறும் - அதைக்கேட்ட அல்லம தேவர் கூறத் தொடங்கும்

முடிபு- என்னை அஞ்சி காட்டிருக்கும் மாதவர் என்றன்னை வென்றிட வல்லரோ அல்லர்? என்னை வென்றிட வல்லர் யார்? பேசுதி - என்று நுண்ணிடை சொல, அல்லமன் விளம்பும்.

மாயையின் கூற்றை அல்லமன் மறுத்துக் கூறியது

423. **என்றன் ஆணையைக் [1]கடப்பவர் இலைஇலை என்று**
வென்றி கூறினை யேலவர் நிற்கவேல் விழியாய்
நின்ற [2]ஆருயிர் முயற்சியால் நிகழ்த்திய மாற்றம்
அன்றி வாழ்மறை ஆகமத்து அறிதி என்று அறைந்தான் 67

(பா.ம்) [1]கடந்தவர்; [2]அவர் முயற்சியால்

(இ.ள்) வேல் விழியாய் - வேல் போன்ற விழியையுடைய மாயையே; என்தன் ஆணையைக் கடப்பவர், இலை இலை என்று வென்றி கூறினையேல் - (மாயையாகிய) என்னுடைய கட்டளையைக் கடப்பவர், தேவருள்ளும் இல்லை. முனிவருள்ளும் இல்லை என்று உன்னுடைய வெற்றியைக் கூறுவாயே ஆனால்; அவர் நிற்க - தேவரும், முனிவரும் இருக்கட்டும் (தவிர); நின்ற ஆருயிர் முயற்சியால் நிகழ்த்திய மாற்றம் அன்றி - உடம்பிலே நின்ற அரிய உயிரின் முயற்சியினாலே நிகழ்த்தப்படும் சொற்களே அன்றி; வாழ்மறை ஆகமத்து அறிதி என்று அறைந்தான் - நிலை பேறாக விளங்கும் இறைவனால் சொல்லப்பட்ட நூலாகிய வேதங்களிலும் சிவாகமங்களிலும், உன் வஞ்ச நாடகம் நடிக்கும் தன்மையை அறிந்துகொள் என்று அல்லம தேவன் கூறினான் (எ.று)

முடிபு- வேல் விழியாய்! என் ஆணையைக் கடப்பவர் இலை இலை என்று (உன்) வென்றி கூறினையேல், அவர் நிற்க. மாற்றம் அன்றி மறை ஆகமத்து அறிதி என்று அல்லமன் அறைந்தான்.

Koviloor Digital Library

சிறப்புரை - உயிர் முயற்சியால் நிகழ்த்திய மாற்றத்தை பசுநூல் என்றும் மறை ஆகமங்களைப் பதிநூல் என்றும் அறிக. பசுநூலாலே அன்றி, பதிநூலாகிய வேதங்களிலும் சிவாகமங்களிலும் மாயையின் வஞ்ச நாடக நடிப்பை அங்கு தெரிந்து கொள்ளலாம்.

424. நாலு வாக்கு நீ பார்ப்பினும் நான்அவற் றினுக்கு
மூல காரணம் ஆகுவன் மொழிந்தஇம் மாற்றம்
நூலெ லாமுரைத் திடுமெனச் செருக்கொடு நுவன்றாள்
மாலெ லாம்பிறப் பதற்கிட மாகிய மாயை 68

(இ.ள்) மால் எலாம் பிறப்பதற்கு இடம் ஆகிய மாயை - மயக்க உணர்வு எல்லாம் தோன்றுவதற்கு இடமாயிருக்கும் இம்மாயையானவள் (அல்லமதேவரை நோக்கி); நீ நாலுவாக்கு பார்ப்பினும் - மறைகள் ஆகமங்களே அன்றி அவற்றிற்கு முதலாகிய, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற நான்கு வாக்குகளை நீ ஆராய்ந்து பார்த்தாலும், நான் அவற்றினுக்கு மூல காரணம் ஆகுவன் - மாயையாகிய நான் அந்நான்கிற்கும் முதற்காரணமாவேன்; மொழிந்த இம்மாற்றம் நூலெலாம் உரைத்திடும் என செருக்கொடு நுவன்றாள் - யான் சொன்ன சொற்பொருளை நீ கூறியமறை ஆகமங்கள் எல்லாம் தெளிவாகக் கூறும் என்று செருக்கோடு கூறினாள். (எ.று); நூல் என்பது மறை ஆகமங்களை என்க.

முடிபு- மாயை நீ நாலு வாக்கைப் பார்க்கினும் நான் அவற்றினுக்கு மூலகாரணம் ஆகுவன். இம்மாற்றத்தை நூலெலாம் உரைத்திடும் என்று செருக்கொடு நுவன்றாள்.

சிறப்புரை- இறைவனுக்கு பின்னாசக்தியாயிருப்பது சுத்தமாயை அச்சுத்த மாயையில் தோன்றியது விந்து. விந்துவிலிருந்து நான்கு வாக்குகளும் தோன்றின. இந்த நான்கு வாக்குகளிலிருந்து பசு நூல், பதி நூல் முதலிய எல்லாம் தோன்றின. ஆதலின் எல்லாவற்றிற்கும் மூலகாரணம் மாயையே ஆகும் என்றாள்.

அல்லமன் மாயையை மறுத்துக் கூறுவது

425. [1]ஆட்டு விப்பனிங் அகிலமும் என்றனை நின்னை
[2]ஆட்டு விப்பவர் ஆரென அறிந்திலை பேதாய்
கேட்டு நின்னையோர் பொருளென மூடரே கிளப்பார்
[3]நாட்டும் என்னைநன் கறிந்துயர் ஞானிகள் நவில்வார் 69

Koviloor Digital Library

(பா.ம்) [1]ஆட்டுகிற்பனிவ்வகிலமும்; [2]ஆட்டுகிற்பவராரென; [3]நாடு நன்னகர் அறிந்துயர்.

(இ.ள்) பேதாய் - அறிவில்லாத மாயையே; இவ் அகிலமும் ஆட்டுவிப்பன் என்றனை - இந்த உலகங்களை எல்லாம் மாயையாகிய நான் இயங்குவேன் என்று நீ கூறினாய்; நின்னை ஆட்டுவிப்பவர் ஆர் என அறிந்திலை - மாயையாகிய நின்னை இயக்குவோர் யார் என்பதை நீ அறிந்திலை; மூடரே கேட்டு நின்னையோர் பொருளெனக்கிளப்பர் - அறிவில்லாதவர்களே ஆராய்ந்து நின்னை ஒரு முதற்பொருள் எனச் சொல்லுவார்கள்; நன்கு அறிந்துயர் ஞானிகள், நாட்டும் என்னை நவில்வார் -நல்வற்றை அறிந்து உயர்ந்த ஞானிகள், மாயையை இயக்குபவனாகிய என்னை முதற்பொருளாகக் கூறுவார்கள். (நிமித்த காரணப் பொருளாக அல்லது பதிப்பொருளாக) 62ம் பாடல் முதல் 69ம் பாடல் வரை மாயையும் அல்லமனும் செய்து கொண்ட வாதுரைகளாகும் (எ.று)

முடிபு- பேதாய்! இவ்வகிலமும் ஆட்டுவிப்பன் என்றனை; நின்னை ஆட்டுவிப்பவர் யார் என அறிந்திலை? மூடரே நின்னையோர் பொருளெனக் கிளப்பர். ஞானிகள், காட்டும் என்னை ஓர் பொருள் என நவில்வர். ஓர் பொருள் என்பதை, ''நாட்டும் என்னை'' என்பதோடும் கூட்டிக் கொள்க; எனவே அல்லம தேவனே எல்லாவற்றையும் ஆட்டுவிக்கும் - முதற்பொருளாவன் என்பது நிலை நிறுத்தப்பட்டது.

முடிவில் மாயை கூறியது

426. **ஆரை யாரிருந் தாட்டுவ ரோவதை [1]அறியேம்**
மார வேள்செயும் நோய்மறித்து அதன்பின்என் வாதம்
பாரெ னாவியம் பினள்பசிக் கனமிடில் பசிநோய்
தீரும் மாமருந்து உதவுவன் என்பவர் சீபோல் 70

(பா.ம்) [1]அறியோம்

(இ.ள்) பசிக்கு அனம் இடில் பசிநோய் தீரும் மாமருந்து உதவுவன் என்பவர் சீர் போல்- இப்பொழுது என் பசிநோய் தீர்வதற்குச் சோறிட்டால் சோறிட்டவர்க்கு, பசிநோய் நீங்கும் பெரிய மருந்தை, கொடுத்து உதவுவேன் என்று கூறுபவரின் தன்மை போல; ஆரை யார் இருந்து ஆட்டுவரோ அதை அறியேம் - எவரை எவர் முதல்வராய் இருந்து இயக்குவாரோ, அச்செய்தியையாம் அறியேம் (இவ்வாதத்தில்

Koviloor Digital Library

மாயையின் தோல்வி புலப்படுகின்றது); மாரவேள் செயும் நோய் மறித்து அதன் பின் என் வாதம் பார் எனா இயம்பினள் - மதவேள் எனக்கு செய்யும் காமநோயை நீ போக்கிவிட்டு, அதன்பிறகு என்னுடைய வாதத்தைப் பேசிப்பார் என்று மாயை கூறினாள்.; சிவனாகிய நீ முதல்வனா, மாயையாகிய நான் முதல்வனா என்பதை அதன்பிறகு பேசுவோம் என்றாள் என்க. (எ.று)

முடிபு- பசிக்கு அனம் இடில், பசி நோய் தீரும் மருந்து, உதவுபவன் என்பவர் சீர்போல, ஆரையார் இருந்து ஆட்டுவரோ அதை அறியேம். வேள் செயும் நோயை மறித்து அதன் பின் என் வாதம் பார் எனா - என இயம்பினள்; என்பவர் சீர் மாயைக் கூற்றுக்கு உவமையாயிற்று இது உவமை அணியின் பாற்படும்.

அல்லமன் மறுமொழி

427. [1]காமி ஆகிநீ அருச்சனை கடைப்பிடித் தமையால்
நாம வேல்நெடும் கண்ணினாய் காமிபோல் நடித்தேன்
தீமை நெஞ்சினால் சூள்[2]நினைந் தனை நினைத் தீண்டேன்
போமி னாருடன் என்றனன் வன்சொலால் புனிதன் 71

(பா.ம்) [1]காமியாகிய நீ ; [2]நினைத்தனை

(இ.ள்) நாம வேல் நெடும் கண்ணினாய் - அச்சத்தைத் தரும் வேல் போன்ற நீண்ட கண்ணையுடைய மாயையே; நீ காமி ஆகி, அருச்சனைக் கடைப்பிடித்தமையால் - நீ பற்றுடையவளாய், சிவபூசையை உறுதியாகச் செய்தமையால், காமி போல் நடித்தேன் - நானும் உன்முன் பற்றுடையவன் போல் இயங்கினேன்; தீமை நெஞ்சினால் சூள் நினைந்தனை - இப்பொழுது உன்னுடைய தீய மனத்தால் கைலையில் செய்த சபதமொழியை முடிக்கக் கருதினாய்; நினைத்தீண்டேன் - ஆதலால் யான் உன்னைத் தொடேன்; மினாருடன் போ என்றனன் வன்சொலால் புனிதன் - மின்னலை ஒத்த பெண்களுடன் திரும்பிப்போ என்று அல்லமதேவன் கொடுஞ்சொல்லால் கூறினான். (எ.று)

முடிபு- புனிதன் கண்ணினாய்! நீ காமியாகி கடைப்பிடித்தமை யால், காமிபோல் நடித்தேன். சூள் நினைந்தனை, நினைத்தீண்டேன், மினாருடன் போ என்றனன் வன்சொலால். காமியத்தவத்திற்கு காமியப் பொருளும்; நிட்காமிய தவத்திற்கு நிட்காமியப் பொருளும் பயன் ஆதலை அல்லமன் குறிப்பிட்டுள்ளார்.

Koviloor Digital Library

மாயை மனம் வருந்தியது

வேறு

428. மண்ணுலகில் இழிகுலமத் தளத்தொழிலோன்
தனைவிரும்பி, வறிது மீண்டாள்
அண்ணல்மகள் எனும்பழியை மாளாமல்
நிறுவிப்போய் அங்கை கொட்டி
[1]விண்ணுலகம் நகைசெய்ய சூள்முடியாது
எவ்வாறு விமலன் பங்கில்
பெண்ணரசி தன்முகத்தில் விழிப்பல்என
மாயையுளம் பீழை உற்றாள் 72

(பா.ம்) [1]விண்ணுலகர்

(இ.ள்) மாயை உளம் பீழை உற்றாள் - அல்லமன் சொன்ன மொழியைக் கேட்டு மாயை மனம் வருத்தமுற்றாள் ; எவ்வாறு வருத்த முற்றாள் எனில்?; அண்ணல் மகள் இழிகுலமத்தளத் தொழிலோன் தனை விரும்பி, வறிது மீண்டாள் என்னும் பழியை மண்ணுலகில் மாளாமல் நிறுவி- அரசனுடைய மகளாய் இருந்தும் தனக்குத் தகுதியற்ற இழிந்தசாதியையுடைய, மத்தளம் அடிக்கும் தொழிலினை உடைய ஒருவனை விரும்பி, அவனையும் அடையாமல் வறிது (வெறுமனே) மீண்டாள் என்னும் பழி மொழியை, மண்ணுலகத்தில் கெடாமல்; நிறுத்திவிட்டு; சூள் முடியாது போய் விண்ணுலகம் நகை செய்ய விமலன் பங்கின் பெண்ணரசிதன் முகத்தில் எவ்வாறு விழிப்பல் எனப்பீழை உற்றாள்- யான் கைலையில் கூறிய சபத மொழியை நிறைவேற்றாமல் சென்று அதனால் விண்ணுலகத்தோர் எல்லாம் நகைக்க, இறைவனது இடப்பாகத்தில் வீற்றிருக்கும் பெண்களுக்கெல்லாம் தலைவியாகிய உமா தேவியார் முகத்தில் எவ்வாறு விழிப்பேன் என்று பீழையுற்றாள் (எ.று)

முடிபு- மாயை, அண்ணல்மகள், மத்தளத் தொழிலோனை விரும்பி வறிது மீண்டாள் என்னும் பழியை மண்ணுலகில் நிறுவி விண்ணுலகம் நகை செய்ய சூள் முடியாது போய் பெண்ணரசி தன் முகத்தில் எவ்வாறு விழிப்பல் எனப் பீழை உற்றாள். (சிறப்புச் செய்தி) மாயையின் செயல் மண்ணுலகத்தில் பழியை நிறுத்தியது. விண்ணுலகத்தில் இகழ்ச்சி நகைப்பை உண்டாக்கியது.

Koviloor Digital Library

429. அன்பினால் அன்பர் பெறற் (கு) எளியனாம்,
எனைச்சூளொன்(று) அறைந்து வந்து
வன்பினால் பெறவேண்டி நின்றழிந்தாய்
இதுதகுமோ மாயை மாதே
முன்பினாக் கடுவிதைத்துக் கரும்பாக
வேண்டிமிக முயன்று நெஞ்சில்
துன்பராய்த் திரியுமவர் போலென்றான்
மாயைதனைத் துரக்க வல்லான் 73

(இ.ள்) மாயைதனைத் துறக்கவல்லான் - மாயையைத் தள்ளும் வல்லமை படைத்த அல்லமதேவன்; மாயைமாதே - மாயையாகிய பெண்ணே! என விளித்துக் கொண்டு; அன்பினால் அன்பர்பெறற்கு எளியனாம் எனை - அன்பர்கள் தம் அன்புச் செயலால் அடைதற்கு எளியனாய் இருக்கின்ற என்னை; சூள் ஒன்று அறைந்து வந்து வன்பினால் பெற வேண்டி நின்று அழிந்தாய் - வஞ்சினம் ஒன்று கூறிவந்து உன்னுடைய வலிமையினால் எனைப் பெறவேண்டி (அது முடியாமையால்) நின்று மனம் வருந்தினாய்; இது தகுமோ - (கைலைமலையில் இறைபால் தொண்டு செய்யும் உனக்கு) இச்செயல் தகுதி உடைத்தாமோ?; முன்பு இனா கடு விதைத்து கரும்பு ஆக வேண்டி மிகமுயன்று நெஞ்சில் துன்பராய்த்திரியும் அவர் போல் என்றான் - முன்னே இன்னாமையைச் செய்யும் கசப்புப் பொருளை நிலத்தில் விதைத்துவிட்டு பின் அது இனிமையைத் தரும் கரும்பு ஆக வேண்டி, அதற்காக மிகவும் முயற்சி செய்து அதனால் கரும்பாகாமையால் மனத்தில் துன்பம் உடையவராய்த் திரிகின்ற, அவர் செயல் போல் இருந்தது உன் செயல் என்று கூறினான். (எ.று)

முடிபு- மாயைதனைத் துறக்கவல்லான், மாயைமாதே அன்பர் அன்பினால் பெறற்கு எளியனாம் என்னை சூள் அறைந்து வந்து வன்பினால் பெறவேண்டி, நின்று அழிந்தாய்? இதுதகுமோ முன்பு கடு விதைத்து கரும்பாக வேண்டி முயன்று துன்பராய்த் திரியும் அவர் போல் என்றார். வன்பினால்- அன்பு இல்லாச் செயலால்.

கலங்கிய மாயை நிலையைக் கண்டு விமலை அல்லமனுக்குக் கூறியது

428. கரைகுறுக வந்தகலம் கவிழ்ந்த [1]நாய்கன்
போல கலங்கி நின்ற

Koviloor Digital Library

வரைபுரைமென் முலைமாயை தனைக்கண்டு
விமலையுள மறுகி மாழ்கி
இரதமுறு களிம்புமலி செம்பினியல்
நோக்குறா இயல்பு போல
அருள்புரிதி ஐயஇவள் குணநோக்கா
தென்றுதொழு தஞ்சிச் சொன்னாள் 74

(பா.ம்) [1]நாயகன்

(இ.ள்) விமலை - விமலையானவள்; கரைகுறுக வந்த கலம் கவிழ்ந்த நாய்கன் போல் - கடற்பரப்பை எல்லாம் கடந்து விட்டு கரையை அணுக வந்த கப்பல் கவிழ்ந்து போன நிலையைக் கண்டு கலங்கிய வணிகனைப் போல்; கலங்கி நின்ற வரைபுரை மென்முலை மாயை தனைக் கண்டு - கலக்கமுற்று நின்ற மலையை ஒவ்வும் நகிலை யுடைய மாயைப் பார்த்து; உளம் மறுகி மாழ்கி- மனம் சுழன்று மயங்கி; ஐய - ஐயனே; இரதம் உறுகளிம்புமலி செம்பினியல் நோக்குறா இயல்புபோல - இரசமணி மிக்க களிம்பு மலிந்த செம்பினுடைய இயல்பைக் கருதாமல், அதைப் பொன்னாக்குவது போல; இவள் குணம் நோக்காது அருள்புரிதி - இவளது தீய குணத்தைக் கருதாமல் அருள் செய்வாயாக என்று தொழுது அஞ்சிச் சொன்னாள் - என்று கூறி வணங்கி பயந்து அல்லம தேவரிடம் சொன்னாள். (எ.று)

முடிபு- விமலை, கலம் கவிழ்ந்த நாய்கன் போல, கலங்கி நின்ற மாயையைக் கண்டு உளம் மறுகி, மாழ்கி, ஐய இரதம் செம்பின் இயல் நோக்குறா இயல்பு போல, இவள்குணம் நோக்காது அருள்புரிதி என்று தொழுது, அஞ்சிச் சொன்னாள். இது உவமையணி.

அல்லமன் விமலைக்குக் கூறியதைக் கேட்ட மாயை அல்லமனை நோக்கிக் கூறத் தொடங்கியது.

431. இலங்கிலைவேல் மருட்டுமதர் விழிவிமலாய்
[1]வறியவோ டிரதந் தன்னால்
நலங்கிளர் [2]பொன் உருவாகில் என்னாலிம்
மாயைஇன்பம் நாணுகும் என்று
புலங்களறி வரியபர மானந்த
சிவயோகி புகல மாயை

Koviloor Digital Library

கலங்கியளி பசும்புண்ணில் செவ்வேல்
பட்டென வழுக்கி கழறுகின்றாள் 75

(பா.ம்) [1]வெறியவோ ; [2]பொன்னுருவாயில்

(இ.ள்) புலன்கள் அறிவு அரிய பரம ஆனந்த சிவயோகி - ஐம்புல உணர்வால் அறிதற்கரிய மேலான இன்பத்தையுடைய சிவயோகியாகிய அல்லமதேவரானவர்; இலங்கிலை வேல் மருட்டுமதர் விழி விமலாய் - விளங்குகின்ற இலை வடிவமான வேலை மருட்டும், மதர்த்த விழியையுடைய விமலையே! வறியஓடு- உலோகவகையல்லாத வெறுமையான மண்ணோடு; இரதந்தன்னால் நலம் கிளர்பொன் உருவாகில் - இரசக் குளிகையால் நன்மை மிகுந்த அப்பொன்னாக ஆகுமேயானால்; இம்மாயை என்னால் இன்பம் நணுகும் - என்னாலே இம்மாயை இன்பம் அடைவாள்; என்று புகல - என்று அல்லமதேவர் சொல்ல; மாயை கலங்கி அளி பசும்புண்ணில் செவ்வேல் பட்டென அழுங்கி கழறுகின்றாள் - அல்லமன் விமலைக்குக் கூறியதைக் கேட்ட மாயை மனங்கலங்கி, அரிந்த பச்சைப் புண்ணில் காய்ச்சிய வேல் பட்டால் போல, வருந்தி அல்லமனை நோக்கிக் கூறத் தொடங்கினாள். (எ.று)

முடிபு- சிவயோகி விமலாய்! ஓடு இரதந்தன்னால் பொன்னுருவாகில், இம்மாயை என்னால் இன்பம் நணுகும் என்று புகல, மாயை கலங்கி அழுங்கி கழறுகின்றாள். அல்லமன் தான் கூறிய உவமையினால் மாயை தன்னால் இன்பமடைய மாட்டாள் என்பதை விளக்குகின்றான். இது உவமையணியின் பாற்படும். செவ்வேல் - நெருப்பில் காய்ச்சப் பெற்றதால் சிவந்தவேல்.

மாயை கூற்றும் அதற்கு அல்லமன் மறுமொழியும்

432. நனவொருபுன் கனவாக மயங்கவெனைப்
புணர்தலினால் நாளும் வென்றி
[1]எனதெனதென் றுளஞ்செருக்கி மடமாயை
கூறுதலும் எங்கள் கோமான்
கனவில் நுகர் உறுமுணவு குறையுமோ
பசி அதனால் களைவ துண்டோ
நினைவில் வரு கனவொன்று கண்டிறு
மாந்தனை பேதாய் நீதான் என்றான் 76

Koviloor Digital Library

(பா.ம்) [1]எனதென நின்

(இ.ள்) ஒரு புன்கனவு நனவு ஆக, மயங்க எனைப் புணர்தலினால் நாளும் வென்றி எனது எனது என்று உளம் செருக்கி மடமாயை கூறுதலும் - ஒன்றாகிய புன்மையான கனவே நனவைப் போலாகும் படி யான் மயங்க, என்னை நீ புணர்தலினால் எப்பொழுதும், வெற்றி என்னு டையதே என்னுடையதே என்று உள்ளம் செருக்கடைந்து மடப்பம் வாய்ந்த மாயை கூறுதலும்; எங்கள் கோமான் - கேட்ட எங்கள் தலைவனாகிய அல்லமதேவன்; கனவில் நுகர்வுறும் உணவு குறை யுமோ? பசி அதனால் களைவது உண்டோ? - கனவில் உண்ட பொருள் குறையுமோ? அதனாலே பசி நீங்குமோ; நினைவில் வரு கனவு ஒன்று கண்டு இறுமாந்தனை பேதாய் நீதான் என்றான் - நினைவு காரணமாக, வருகின்ற கனவு ஒன்றினைக் கண்டு அறிவில்லாதவளே நீ தான் இறுமாந்தனை என்றான். (எ.று)

முடிபு- மாயை உளம் செருக்கி, கனவே நனவாக மயங்க (நீ) எனைப் புணர்தலினால் வென்றி எனது எனது என்று கூறுதலும், எங்கள் கோமான் கனவில் நுகரும் உணவு குறையுமோ? அதனால் பசி களைவதுண்டோ நினைவால் வருகின்ற கனவு ஒன்றைக் கண்டு, பேதாய் நீ இறுமாந்தனை என்றான். முன்னே பிரபு தேவர் கதியில் 72ம் பாடலில் மலரணைமிசை அமர்ந்த அல்லமனை, மாயைத் தழுவித் தழுவிப் பார்த்தும், அவன் தன் கைக்கு எட்டாமையால், அவள் வருந்தி உறங்கி னாள் என்றும், பின்னர் எண்ணுறு நினைவால் அவன் புணர்ந்தது போல் இன் கனவு ஒன்று கண்டு எழுந்தாள் (11) என்றும் கூறப்பட்டுள்ள செய்தியை இவ்விடத்துக் கருதுக.

அல்லமன் கூறியதைக் கேட்டு மாயை கூறுவது

433. எவ்வண்ணம் உரைவன்மை கொண்டுநீ
தள்ளினும் நான்இன்று போகேன்
கைவண்ண மலர்ப்பகழி மதன்
அனையாய் நினைத்தழுவிக் கட்டிக் கொண்டு
செவ்வண்ணன் அமர்[1]கைலைக் (கு) ஏகி[2]யென்
சூள்முடிப்பலெனச் செருக்கிச் சொன்னாள்
மைவண்ண மலர்க்குழலாள் வான்திரட்டி
விழுங்குவலென் மாற்றம் போல 77

Koviloor Digital Library

(பா.ம்) [1]கயிலை; [2]எஞ்சூழ்

(இ.ள்) மைவண்ண மலர்க் குழலாள் - கருநிறமுடைய மலரணிந்த கூந்தலையுடைய மாயையானவள்; வான் திரட்டி விழுங்குவல் என்மாற்றம்போல - வானத்தைத் திரளாகத் திரட்டி விழுங்கி விடுவேன்; கைவண்ண மலர்ப்பகழி மதன் அனையாய் - கையிலே நிறம் அமைந்த மலரம்புகளைப் பெற்றிருக்கும் மன்மதனை ஒத்த அழகுடையவனே; எவ்வண்ணம் உரைவன்மை கொண்டு நீ தள்ளினும் நான் இன்று போகேன் - உன் சொல்லாற்றலைக் கொண்டு எவ்வாறு நீ என்னை வாதிட்டு விலக்கினாலும், நான் உன்னைவிட்டு விட்டுப் போகேன்; நினைத்தழுவிக் கட்டிக் கொண்டு, செவ்வண்ணன் அமர்கைலைக்கு ஏகி என் சூல் முடிப்பல் என செருக்கிச் சொன்னாள் - உன்னைத் தழுவிக் கட்டிப்பிடித்துக் கொண்டு உன்னோடு சிவபெருமான் அமர்ந்திருக்கும் கைலைமலைக்கு ஏகி, யான் கூறிய சபதத்தை முடிப்பல் என்று; செருக்கோடு கூறினாள். (எ.று)

முடிபு - குழலாள், வான் திரட்டி விழுங்குவல் என் மாற்றம் போல மதன் அனையாய், உரைவன்மை கொண்டு நீ எவ்வண்ணம் தன்னிலும் நான் இன்று போகேன், நினைத்தழுவிக் கட்டிக் கொண்டு கைலைக் கு ஏகி சூல் முடிப்பல் என செருக்கிச் சொன்னாள்; வான் திரட்டி விழுங்குவல் என் மாற்றம் போல என்றது மாயை செய்ய முடியாததைச் செய்வல் என்று கூறியதற்கு உவமையாயிற்று.

அல்லமன் கூறி மறைதலும், மாயை முதலியோர் கலக்கமும்

434. முடிக்குமலர்க் குழல்மடவாள் சூள்முடிப்பல்
எனுமொழிக்கு முறுவல் செய்து
பிடிக்கவலை யாயிலெனைப் பிடிநடையாய்
பிடிஎன்று பிரான் மறைந்தான்
[1]மடக்கொடி தன் விழியினால் காண்பதும்
போய் மதிமயங்கி வறிது நின்றாள்
சுடர்த்தொடிமென் தோள்மடவார் இன்றிழந்தோம்
இவளையென துயரு ழந்தார் 78

(பா.ம்) [1]வடக்கொடி

(இ.ள்) பிரான் - (மாயை கூறியதைக் கேட்ட) தம்பிரானாகிய அல்லமதேவன்; முடிக்கும் மலர் குழல் மடவார் சூள் முடிப்பல் எனும்

Koviloor Digital Library

மொழிக்குமுறுவல் செய்து- அணிந்து கொள்ளும் மலரையுடைய கூந்தலைப் பெற்றிருக்கும் மாயை, யான் எப்படியும் என் சபதத்தை முடித்து விடுவேன் என்று சொன்ன மொழியினைக் கேட்டு புன்சிரிப்பு சிரித்து; பிடிநடையாய் பிடிக்க வல்லையாயில் எனைப்பிடி என்று மறைந்தான் - பெண் யானையைப் போன்ற நடையையுடைய மாயையே! என்னை நீ பிடிக்கவல்லையாயில் என்னைப் பிடிப்பாயாக என்று கூறி மறைந்து விட்டான்; மடக்கொடி தன் விழியினால் காண்பதும் போய் மதிமயங்கி வறிது நின்றாள் - மடப்பம் வாய்ந்த கொடி போன்ற மாயையும் தன்கண் அல்லமனைக் காண்பதும் போய் அறிவு மயங்கி, சும்மா நின்று விட்டாள். (செயலற்று நின்று விட்டாள்); சுடர்த்தொடி மென்தோள் மடவார் இவளை, இன்று இழந்தோம் என துயர் உழந்தார் - ஒளிபெற்ற வளையலை அணிந்த மென்மையான தோள்களையுடைய மடப்பம் வாய்ந்த மகளிர் எல்லாம் இவளை இன்று இழந்தோம் என்று கருதிக் கொண்டு துன்பத்தில் உழன்றார்.(எ.று)

முடிபு- பிரான், மடவாள், முடிப்பல் எனும் மொழிக்கு முறுவல் செய்து பிடிநடையாய், பிடிக்கவல்லையாயின் எனைப்பிடி என்று கூறி மறைந்தான். மடக்கொடி காண்பதும் போய் மதி மயங்கி நின்றாள் மடவார், இவளை இன்றிழந்தோம் எனத் துயருழந்தார். மடக்கொடி- அன்மொழித்தொகை.

கவிக்கூற்று

435. வெண்திங்கள் நிலவுவா யிடைப்புகினும்
சகோரமெனும் மென்புள் அன்றி
உண்டுஇங்கு வாழுமுயிர் உளதோநம்
அல்லமனாம் ஒருவன் தானும்
பண்தங்கு மொழிமாயை கைப்படினும்
அவள்[1]பிடிக்கப் படுவ னோதான்
தொண்டன்பின் வழிநின்று மனமாசு
தீர்ந்தபெரும் [2]தூயோர்க் கல்லால் 79

(பா.ம்) [1]பிடிப்ப; [2]தூயற்கல்லால்

(இ.ள்) வெண் திங்கள் நிலவு வாயிடைப் புகினும்- வெண்மை யான திங்களின் நிலாக்கதிர் வாயினுள் புகுந்தாலும்; சகோரம் எனும் மென்புள் அன்றி உண்டு இங்கு வாழும் உயிர் உளதோ - நிலாமுகியாகிய

Koviloor Digital Library

சகோரம் என்னும் மெல்லிய பறவை அன்றி நிலாக்கதிரை உணவாக உண்டு இங்கு வாழ்ந்திருக்கும் ஏனைய உயிர்கள் உலகத்தில் உள்ளதோ (அதுபோல); அல்லமனாம் ஒருவன்தானும், தொண்டு அன்பின் வழி நின்று மனமாசு தீர்ந்த பெரும் தூயோர்க்கு அல்லால் பண்தங்கு மொழிமாயை கைப்படினும் அவன் பிடிக்கப் படுவனோதான் - அல்லமனாகிய ஒப்பற்றவன் தானும், தொண்டு செய்யும் பக்திவழி நின்று, மன அழுக்குத் தீர்ந்த பெரிய தூயவர்க்கு அன்றி, பண்ணைப் போன்ற இனிய மொழியைப் பேசும் மாயையினுடைய கையின் கண் அகப்பட்டாலும், அவளால் பிடிக்கப்படுவனோ (தாம் - அசை); மாயையின் கைக்கு அகப்படாதவன் அல்லமன் என்க. (எ.று)

முடிபு- நிலவு வாயிடைப்புகினும், சகோரப்புள் அன்றி உண்டு உயிர் வாழும் உயிர் உளதோ (அதுபோல்) அல்லமன்தானும், தூயோர்க்கல்லால் மாயை கைப்படினும், அவளால் பிடிக்கப்படுவனோ. வெண்டிங்கள் நிலவை சகோரம் உண்பது போல, அல்லமனை தூயோரே பக்தி செய்து பற்றுவர் என்க. சகோரம், பேராந்தை, நிலா முகியாகும் என்பது பிங்கல நிகண்டு.

முனிவர்கள் தவம் தொடர்தல்

436. மாயைதனை வாதித்து தள்ளுபுதன்
நிலைநின்று மாயா வாதி
ஆயினனல் வீரசைவ சித்தாந்த
குலதீபம் ஆயினான் என்று
ஓயுமனம் நிறுவியிறப் பெதிர்வுநிகழ்வு
எனும்காலம் உணரும் ஆற்றல்
தூயமுனி வரா்எல்லாம் அல்லமனைத்
தொழுது தவந்தொடங்கி வாழ்ந்தார் 80

(இ.ள்) ஓயும் மனம் நிறுவி இறப்பு எதிர்வு நிகழ்வு எனும் காலம் உணரும் ஆற்றல் தூய முனிவரா் எல்லாம் - ஓயும்படி மனத்தை நிறுத்தி, இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னும் முக்கால நிகழ்ச்சியையும் அறிகின்ற ஆற்றலையுடைய தூய முனிவர்கள் எல்லோரும்; வீரசைவ சித்தாந்த குல தீபம் ஆயினான் - வீரசைவ சித்தாந்தத்தை உணா்ந்த குலத்தினா்க் கெல்லாம், ஒளி விளக்காய் விளங்குகின்ற இவன்; மாயைதனை வாதித்து தள்ளுபு, தன் நிலை நின்று மாயாவாதி ஆயினன் என்று - மேற்கூறிய வாறு மாயையுடன் வாது செய்து, நீக்கி மாயைக்கு உட்படாத தன்னி

Koviloor Digital Library

லையிலேயே நின்று அக்காரணத்தால் மாயாவதி என்ற பெயரைப் பெற்றான் என்று புகழ்ந்து கூறி; அல்லமனைத் தொழுது தவந்தொடங்கி வாழ்ந்தார் - அல்லமனை மனம் மொழி மெய்களால் தொழுது - மாயை யினால் இடையூறு பட்ட - தவத்தை மீண்டும் தொடங்கி வாழ்ந்தார்கள். 55ம் பாடலில் மாயையைக் கண்டு எழுந்து இரிந்து போன முனிவர்கள் இவர் என்க. (எ.று)

முடிபு - தூய முனிவரர் எல்லாம், வீரசைவ சித்தாந்த குல தெய்வமாயினோன், மாயைதனை வாதித்துத் தள்ளுபு, தன்னிலை நின்று மாயாவாதி ஆயினன் என்று கூறி அல்லமனைத் தொழுது தவந் தொடங்கி வாழ்ந்தார்.

ஏழாவது
மாயை கோலாகல கதி முற்றும்

Koviloor Digital Library

எட்டாவது
வசவண்ணர் முதலியோர் வந்த கதி

கதிகருதிய பொருள்

437. அசைவில் அல்லமற் காயுமை நற்கலை
வசவ தேவன் வலிய கணங்கள்தாம்
கசியும் அன்பில் [1]கயிலையில் நின்றுதென்
திசையில் வந்த திறம்உரை செய்குவாம் 1

(பா.ம்) [1]கயிலைபால்

(இ.ள்) அசைவுஇல் அல்லமற்கு ஆய் - மாயைக்கு அசையாத அல்லமதேவனைக் கண்டு அருள் பெறுவதற்காக, உமை நல்கலை = உமா தேவியாரின் சத்துவகுண கலையும், (மாதேவியும்) வசவதேவன் - வசவண்ணரும், வலிய கணங்கள்தாம் - வல்லமை யுடைய சிவகணங் களும், கசியும் அன்பில் - ஊருகின்ற அன்பினால்; கயிலையில் நின்று - திருக்கைலாய மலையிலிருந்து நீங்கி, தென்திசையில் வந்த திறம் - தெற்குத் திசையிலுள்ள, கர்நாடகம் முதலிய நாட்டின்கண் வந்து அவதரித்த செய்தியை, உரை செய்குவாம் - யாம் கூறுகின்றோம். (எ.று)

முடிபு - உமை நற்கலையும், வசவதேவனும், கணங்கள் தாமும் அல்லமற்காய், கைலையினின்று, தென்திசையில் வந்த திறத்தை உரை செய்குவோம். கைலையினின்று என்பதிலுள்ள நின்று என்பது ஐந்தாம் வேறுற்றுமை சொல்லுருபு. நீங்கற் பொருளில் வந்துள்ளது. வலிய கணங்களாவார். எழுநூற்று எழுபது சிவகணங்கள் என்பர். வசவண்ணர்கதியில் (44ம் பாடல்) ''எண்ணுறின் எழுநூற்றின் மேல் எழுபது என்றுரைக்கும் எண்ணார்'' என்பதனால் அறியலாம்.

அல்லமன் நீங்க மாயை வருந்தி இரந்த நிலை

438. தீங்கு காணும் சிறுவிலை நாட்கடன்
வாங்கும் ஓர்பொருள் போக்கும் வறியர்போல்
நீங்க ஞான நெடுந்தகை மாயை நின்று
ஏங்கும் ஆவி இயக்கமும் இன்றியே 2

(இ.ள்) தீங்கு காணும் சிறுவிலை நாள் - உயிர்கள், பசியால் தீமையை அடையுமாறு நுகர்பொருள்களெல்லாம் சிறிதளவே

Koviloor Digital Library

விலைக்குக் கிடைக்கும் பஞ்சகாலத்திலே (வற்கடம்). கடன் வாங்கும் ஓர் பொருள் - கடன் வாங்கிய ஒப்பற்ற பொருளை, போக்கும் வறியர்போல் - இழந்துவிட்ட வறியரைப் போல், ஞான நெடுந்தகை நீங்க - ஞானத்தையுடைய பெரியோனாகிய அல்லமதேவன், தன்முன்னே நின்று மறைந்து போய்விட; ஆவி இயக்கமும் இன்றியே மாயை நின்று ஏங்கும் - மூச்சுக் காற்றின் அசைவு மின்றியே வருந்தி நிற்பாளாயினள். (எ.று)

முடிபு - மாயை, ஞான நெடுந்தகை நீங்க, பொருளைப் போக்கிய வறியர்போல் நின்று, ஆவி இயக்கமும் இன்றியே ஏங்கும். இப்பாட்டு, உவமையணி. ஞான நெடுந்தகை, மாயையின் முன்நின்று நீங்கியதற்கு பஞ்சகாலத்து வறியர் பொருளை இழந்த செயல் உவமையாயிற்று. வினையுவமை.

பெற்றவர் பின் தொடர்ந்தது பெற்றோராகிய மோகினியும் மமகாரனும் மாயைப் பின் தொடர்ந்தது

439. **மத்த ளங்கொடு வந்தவன் தன்னொடு**
பொய்த்த நுண்ணிடை போயினள் என்னவே
சித்தம் நாணும் துயரமும் தின்றிடப்
பித்தர் போற்பின் தொடர்ந்தனர் பெற்றவர் 3

(இ.ள்) பொய்த்த நுண்இடை - பொய் என்று கூறப்படும் சிறிய இடையையுடைய மாயையானவள், மத்தளம் கொடு வந்தவன் தன்னொடு போயினள் என்னவே = மத்தளத்தையே தனக்கு உடைமைப் பொருளாக வந்த ஒருவனொடு உடன் போய்விட்டாள் என்று கண்டோர் எல்லாம் சொல்ல, பெற்றவர் சித்தம் நாணும் துயரமும் தின்றிடப் பித்தர் போல் பின் தொடர்ந்தனர் = (இதைக் கேட்ட) பெற்றோர்கள் தங்களுடைய உள்ளத்தை நாணமும் துன்பமும் விழுங்கிவிட, அதனால் உணர்வு இழந்தவராய் பித்தரைப் போல மாயையைப் பின் தொடர்ந்து வந்தார்கள். என்னவே என்பதற்கு, பிறர் என்னும் எழுவாயை வருவித்துக் கொள்க. என்னவே என்பதற்கு என்று கூற. (எ.று)

முடிபு - (பிறர்) நுண்ணிடை மத்தளம் கொடு வந்தவன்தன்னொடு போயினள் என்னவே. (அதைக்கேட்ட) பெற்றவர் சித்தத்தை நாணும், துயரமும் தின்ன, பித்தர் போல் பின் தொடர்ந்தனர். பொய்த்த நுண்ணிடை என்பது அன்மொழித்தொகையாய் மாயையை உணர்த்திற்று. சித்தத்தை நாணும் துயரமும் தின்றிட என்பது,

Koviloor Digital Library

உண்டற்குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே

என்னும் (தொல்காப்பியம் பொருளியல் நூற்பா 18) விதியால் அமைந்தது.

தந்தையாகிய மமகாரன் செயல்

440. [1]தக்க தந்தைதாய் சாயப் பழிசெயும்
மக்கள் இன்றி மலடர்தாம் ஆதலும்
மிக்க வன்பிணி மேவலும் நல்லஎன்று
உக்க நெஞ்சுடன் ஓடினன் மன்னவன் 4

(பா.ம்) [1]தக்க தாய்தந்தை

(இ.ள்) மன்னவன் - தந்தையாகிய மமகார மன்னவன்; தக்க தந்தை தாய் சாய பழி செயும் மக்கள் இன்றி மலடர் தாம் ஆகலும், மிக்கவன் பிணி மேவலும், நல்ல என்று = மதிப்பு வாய்ந்த தந்தையும் தாயும் தாழ்ச்சியடைய, பழியான செயலைச் செய்கின்ற மக்களைப் பெறாமலிருந்து, தாம் மலடராக இருப்பதும் அல்லாமல், கொடிய நோயை மேற் கொண்டிருப்பதும் நல்லவாயிருக்கும் என்று கூறிக்கொண்டு; உக்க நெஞ்சுடன் ஓடினன் = அழிந்த மனத்துடன் ஓடினான். (எ.று)

முடிபு - மன்னவன் நல்லவென்று உக்க நெஞ்சுடன் ஓடினன். பழி செய்யும் மக்களின்றி, தாம் மலடர் ஆதலும், தாம் வன்பிணி மேவலும் நல்ல என்று கூட்டிக் கொள்க.

மோகினியாகிய தாய் துயரடைந்து சென்றது

441. காய்ப சிக்குக் கவன்று தசைதின
வாய்ப தைக்கும் மறவர் வலையிடைப்
போய்வி ழக்குழக் கன்று புகுந்தவண்
தாய்ப தைப்பது தன்எதிர் காணுமோ 5

(இ.ள்) காய் பசிக்குக் கவன்று தசைதின வாய் பதைக்கும் மறவர் = வயிற்றைத் தீக்கும் பசிக்கு கவலையடைந்து, தசையை உணவாகத் தின்பதற்கு வாய் பதைக்கின்ற மறவர் ; வலையிடை குழக்கன்றுபோய் விழ - (அத்தகைய) மறவர் வைத்த வலையின்கண் இளமையான தன் கன்று போய் அகப்பட்டுக் கொள்ள, தாய் அவண் புகுந்து பதைப்பது = தாய்மான் அங்கு புகுந்து கன்றின் நிலையை அறிந்து உள்ளம்

Koviloor Digital Library

பதைக்கின்ற செயலை. தன் எதிர் காணுமோ காட்டிடைச் சென்ற மகள், இக்காட்சியை, தன் எதிரில் காண்பாளோ? இக்காட்சியால், தன்-தாயும் தன்னைப் பிரிந்து படும் துயரத்தை மகளாகிய மாயை அறிவாளோ, என்பது கருத்து.

முடிபு - மறவர் வலையிடைக் கன்று போய்விழ, தாய் அவண் புகுந்து பதைப்பதை தன்னெதிர் காணுமோ என முடித்துக் கொள்க. எத்தகைய மறவர் எனில், பசிக்கு கவன்று தசைதின வாய் பதைக்கும் மறவர், இக்காட்சியைக் காண்பாளாகில் என்னை நினைந்து திரும்புவாள் என்பது கருத்து. (சச்சிதானந்தம் பிள்ளை உரை)

442. கண்டு வார்சிலைக் கானவர் பார்ப்பினைக்
கொண்டு போகக் குடம்பைகண் டேங்கியே
துண்டம் ஆர்இரை சோரப் பறவைகள்
மண்டு நோயின் மருகுதல் காணுமோ 6

(இ.ள்) வார்சிலைக்கானவர் கண்டு பார்ப்பினைக் கொண்டு போக = கட்டமைந்த வில்லை ஏந்திய வேடர்கள், ஆராய்ந்து தம் குஞ்சுகளைப் பிடித்துக் கொண்டு போய்விட; பறவைகள் குடம்பை கண்டு ஏங்கியே - தாய்ப் பறவைகள் தம் குஞ்சுகளில்லாத கூட்டைப் பார்த்து ஏக்கமடைந்து; துண்டம் ஆர் இரை சோரமண்டு நோயின் மருகுதல் காணுமோ- மூக்கில் பொருந்திய இரை சோர்ந்து கீழே விழ மிக்க துன்பத்தில் சுழன்றிருக்கும் நிலையை என் மகள் காண்பாளோ? கண்டால் என்னை நோக்கித் திரும்புவாள் என்றபடி. (எ.று)

முடிபு -கானவர் கண்டு பார்ப்பினைக் கொண்டு போக, தாய் பறவைகள் குடம்பையைக் கண்டு ஏங்கி இரைசோர நோயில் மருகுதலை (என் மகள்) காணுமோ.

443. அரில்மி தித்திட் டதர்படப் பூம்பணை
மரமு றித்து மழைமதக் கைம்முக
உரல டிப்பிறை ஒண்மருப் பஞ்செவிக்
கரிந டப்பக் கலங்கி யிரியுமோ 7

(இ.ள்) மழைமதக் கைமுக உரலடிப் பிறை ஒண்மருப்பு அஞ்செவிக்கரி - மழைபோல் பொழியும் மதத்தையும் துதிக்கையை யுடைய முகத்தையும்; உரலை ஒத்தகால்களையும், பிறையை ஒத்த ஒள்ளிய தந்தங்களையும், அழகிய காதுகளையும் உடைய யானைகள்; அதர்பட அரில் மிதித்திட்டு - வழியுண்டாகுமாறு தூரு (புதர்) களை

Koviloor Digital Library

மிதித்திட்டு; பூம்பணை மரமுறித்து - அழகிய கிளைகளையுடைய மரக்கிளைகளை முறித்துக் கொண்டு நடப்பக் கலங்கி இரியுமோ - இவ்வாறு நடப்ப, மனம் கலங்கி என்மகள் பின் நோக்குவாளோ. (எ.று)

முடிபு - கரி மிதித்திட்டு மரம் முறித்து நடப்பக் கலங்கி இரியுமோ? எத்தகைய கரி எனின், மழை போன்ற மதத்தையும், கை முகத்தை யும், உரல்போன்ற அடியையும், பிறை போன்ற மருப்பையும், அழகிய செவியையும் உடைய கரி. அக்கரி எவ்வாறு நடக்கும் எனில் அதர்பட அரலை மிதித்துக் கொண்டு மரக்கிளையை முறித்துக்கொண்டு நடக்கின்றது.

444. பறற்கண் மென்பதம் வைத்துப் பதைக்குமோ
சுரத்து மேனி துவண்டு வெதும்பிநீர்
இரக்கு மோமகள் என்செயு மோவெனத்
தரிக்க ருந்துயர் தாயடைந் தேகினாள் 8

(இ.ள்) மகள் - என் மகளாகிய மாயை; பரல் கண் மென்பதம் வைத்துப் பதைக்குமோ - என் மகள் பருக்கைக் கற்களின் மேல் தன் மெல்லிய காலை வைத்து அது குத்துவதால், துடிப்பாளோ? சுரத்து மேனி துவண்டு வெதும்பி நீர் இரக்குமோ - பாலை நிலத்தில் நடப்பதால் உடம்பு துவளப் பெற்று வெப்பமடைந்து நீர் வேண்டுமென்று இரப்பாளோ? (யாசிப்பாளோ), என்செயுமோ என - வேறு எப்படி எப்படி வருந்துதல் செய்வாளோ என்று கூறிக் கொண்டு, தாய் தரிக்கருந்துயர் அடைந்து ஏகினாள் = தாய் தாங்க முடியாத துன்பத்தை மேற்கொண்டு மகளைத் தேடிச் சென்றாள்.

முடிபு - தாய் என தரிக்கருந்துயர் அடைந்து ஏகினாள், என என்பதற்கு - வைத்துப் பதைக்குமோ, துவண்டு வெதும்பி நீர் இரக்குமோ, மகள் என் செய்யுமோ என என்று முடித்துக் கொள்க.

அவ்வனவசை நகர மக்களும் அரசனைப் பின் தொடர்ந்து சென்றது

445. பொன்னை அன்ன புதல்வி பொருட்டிவண்
மன்னா் மன்னன் மனத்தில் வளா்ந்தெழும்
இன்னல் காணவும் ஊழொன்று றிருந்ததென்
உன்னி மாழ்கியவ் வூரா்பின் போயினாா் 9

(இ.ள்) அவ்வூரா் - வனவசைமா நகரமாகிய அவ்வூரிலிருக்கும் மக்கள்; பொன்னை அன்ன புதல்வி பொருட்டு - திருமகளை ஒத்த

Koviloor Digital Library

மகளாகிய மாயையின் பொருட்டு; இவண் மன்னர் மன்னன் மனத்தில் வளர்ந்து எழும் இன்னல் காணவும் - இப்பொழுது அரசருக்கு அரசனாகிய மமகார மன்னனுடைய மனத்தின்கண் மிகுந்து எழும் துன்பத்தைப் பார்க்கவும்; ஊழ் ஒன்று இருந்தது என்று உன்னி - தீய ஊழ்வினை ஒன்று நமக்கு இருந்ததே என்று கருதிக் கொண்டு) மாழ்கிப் பின் போயினார் - மயங்கி அரசன் பின் சென்றார்கள். (எ.று)

முடிபு - அவ்வூரர் ஊழ் ஒன்று இருந்தது என்று உன்னி, மாழ்கிப் பின் போயினர். புதல்வி பொருட்டு, மன்னன் மனத்தில் எழும் இன்னல் காணவும் ஊழ் ஒன்று இருந்தது என்று உன்னி மாழ்கிப்பின் போயினர்.

மகளாகிய மாயையைக் கண்டு தந்தை மமகாரன் கூறியது

446. அயர்ந்து நிற்கும் அரிவையைக் [1]கண்டு நான்
முயன்று மெய்த்தவம் முற்றும் பயின்றுனைப்
பயந்த தற்குப் பயன்நன்று உதவினை
நயந்தெ மக்கெனத் தந்தை நவின்றனர் 10

(பா.ம்) [1]கண்டுதான்

(இ.ள்) தந்தை அயர்ந்து நிற்கும் அரிவையைக் கண்டு = மமகார மன்னானாகிய தந்தை காட்டில் சோர்ந்து நிற்கின்ற அரிவையாகிய மாயையைப் பார்த்து; நான் முயன்று மெய்த்தவம் முற்றும் பயின்று உனைப் பயந்ததற்கு - தந்தையாகிய நான் உண்மையாகிய தவங்கள் முழுவதையும் முயன்று பயின்று உன்னைப் பெற்றதற்கு; எமக்கு நயந்து பயன் நன்று உதவினை = எங்களுக்கு நீ விரும்பி பயனை நன்றாகச் செய்துவிட்டாய்; என நவின்றனன் - என்று கூறினான். பயன் நன்று உதவினை என்பது ஒழியிசைப் பொருட்டு.

முடிபு - தந்தை, அரிவையைக் கண்ட நான் தவம் பயின்று உனைப் பயந்ததற்கு நன்றுபயனுதவினை என நவின்றனன்.

அன்னை அழுதது

447. என்னை நீங்கி இழிதொழில் செய்பவன்
தன்னை நாடித் தலைமை இழந்[1]தெனோ
கன்னி நீகொடும் காட்டில்வந் தாயென
அன்னை ஓவென் றரற்றி அழுதனள் 11

(பா.ம்) [1]என்னோ

Koviloor Digital Library

(இ.ள்) அன்னை - தாயாகிய மோகினி; கன்னி! - கன்னிகையாகிய மாயையே! என்னை நீங்கி இழிதொழில் செய்பவன் தன்னைநாடி - தாயாகிய என்னைப் பிரிந்து, இழிந்த தொழில் செய்கின்ற ஒருவனைக் கருதி; தலைமை இழந்து எனோ - மன்னனுடைய மகள் என்ற தலைமையை இழந்து என்ன காரணத்தால்; நீ கொடுங் காட்டில் வந்தாய் என - நீ கொடிய காட்டினிடத்தே வந்தனை என்று சொல்லி; ஓஎன்று அரற்றி அழுதனள் - ஓவென்று ஓலமிட்டுப் புலம்பி அழுதாள்; ஓ என்பது இரக்கத்தைக் குறித்தது. (எ.று)

முடிபு - அன்னை, கன்னியே! என்னை நீங்கி இழிதொழில் செய்பவன் தன்னை நாடி, தலைமையை இழந்து, என்னோ நீ கொடுங் காட்டில் வந்தாய், என அரற்றி அழுதனள்.

விமலை கூற்று

448. மகனும் அல்லன்அவ் [1]அல்லமன் மாயையும்
மகளும் அல்லள் வரைபுரை தோளினாய்
இகலும் வாட்கண் அரசியும் நீயும்இங்கு
அகலும் என்று விமலை அறைகுவாள் 12

(பா.ம்) [1]வல்லவன்

(இ.ள்) வரைபுரை தோளினாய் - மலையையொத்த தோள்களை யுடைய அரசனே; அவ் அல்லமன்மகனும் அல்லன் - அவ்வல்லம தேவன் மனிதனும் அல்லன்; மாயையும் மகளும் அல்லள் - இம்மாயை உங்களுடைய மகளும் அல்லள்; (ஆதலால்) இகலும் வாள்கண் அரசியும், நீயும் இங்கு அகலும் என்று விமலை அறைகுவாள் - போரிடும் வாளை ஒத்த கண்ணைப் பெற்றிருக்கும் அரசியும், நீயும் இவ்விடத்தினின்றும் நீங்குவீர்களாக, என்று கூறிக்கொண்டு விமலை மேலும் சொல்லத் தொடங்கினாள்.

முடிபு - தோளினாய்! அல்லமன் மகனும் அல்லன், மாயையும் மகளும் அல்லள், அரசியும் நீயும், இங்கு அகலும் என்று விமலை அறைகுவாள்.

449. வினைப்ப யன்கொள வேண்டுநர் ஓரிடந்
தனைப்பொ ருந்துறச் சம்பந்த மாத்திரத் (து)
எனக்கி னாரிவர் என்றபி மானமொன் (று)
தனைப்பொ ருந்தி அழிவர் அறிவிலார் 13

Koviloor Digital Library

(இ.ள்) வினை பயன் கொள = தாம் முன் செய்த இருவினைப் பயனை அனுபவிக்க; வேண்டுநர் - விரும்பினவர்; ஓரிடந்தனைப் பொருந்துற - (தமக்கு விதிக்கப்பட்ட) ஓரிடத்திலே வந்து பிறக்க; சம்பந்த மாத்திரத்து - அப்பிறப்பின் தொடர்ச்சி அளவினாலே; எனக்கு இன்னார் இவர் என்று அபிமானம் ஒன்றனைப் பொருந்தி - என்றனக்கு, இன்னவர், இன்ன முறையினர் என்கின்ற பற்றுதலைப் பொருந்தி; அறிவிலார் அழிவர் - அறிவில்லாதவர்கள் விருப்பும் வெறுப்புங் கொண்டு அழிவார்கள். (எ.று)

முடிபு -வேண்டுநர், வினைப் பயன் கொள, ஓரிடந்தனைப் பொருந்துற, சம்பந்த மாத்திரத்தால் எனக்கு இன்னார் இவர் என்ற அபிமானம் ஒன்றனைப் பொருந்தி அறிவிலார் அழிகுவர்.

450. தனையர் ஆகியும் தந்தைதாய் ஆகியும்
உனையு றாத உயிரிலை ஆதலால்
இனையர் கேளிர் இனையர் அயலென
நினைவு றேல்மிளர் நெட்டிலை வேலினாய் 14

(இ.ள்) மிளர் நெட்டிலை வேலினாய் = விளங்கும் நெடிய இலை போன்ற வேல் படையையுடைய அரசனே!; தனையர் ஆகியும், தந்தை தாய் ஆகியும்; உனையுறாத உயிர்இல் = உனக்குப் புதல்வராகியும், தகப்பனும், தாயும் ஆகியும் உன்னைச் சேராத உயிர்கள் உலகில் இல்லை; ஆதலால் - ஆகையினாலே; இனையர் கேளிர், இனையர் அயல்என நினைவுறேல் - இத்தகையோர் எனக்குச் சுற்றத்தினர், இத்தகையோர் எனக்கு அயலோர் என்று கருதாதே. அயலார் என்பது அயல் எனக் குறைந்து நின்றது.

முடிபு - வேலினாய்! தனையர் ஆகியும், தந்தைதாய் ஆகியும் உனை உறாத உயிர் இல்லை, ஆதலால், இனையர்கேளிர் இனையர் அயலார் என நினைவுறேல்.

மாயை கூற்று

451. வேனெ டுங்கண் விமலை இவைசொலப்
பானல் அங்கண் பனிமதி வாண்முகப்
பூந றுங்குழல் பொற்றொடி மாயைமுன்
தான டைந்தமை தந்தைக் குணர்த்தியே 15

Koviloor Digital Library

(இ.ள்) வேல் நெடுங்கண் விமலை இவை சொல - வேல் போன்ற நீண்ட கண்களையுடைய விமலையானவள், மேலே கூறிய சொற்களைச் சொல்லி முடிக்க, (அப்பொழுது); பானல் அங்கண் பனிமதி வாள்முகப் பூநறுங்குழல் பொற்றொடி மாயை = நீலமலரை ஒத்த அழகிய கண்களையும், குளிர்ந்த திங்களை ஒத்த ஒளிபொருந்திய முகத்தினையும், மலர்களோடு கூடிய மணம் பொருந்திய கூந்தலையும், பொன்னாலாகிய வளையலையும் பெற்ற மாயையானவள்; தந்தைக்கு முன் தான் அடைந்தமை உணர்த்தி =மமகாரனாகிய தன் தந்தைக்கு, முற்காலத்தில் தான் மகவாகத் தோன்றி அடைந்த நிலையை உணரும்படி கூறியே, ஏகாரம் ஈற்றசை. உணர்த்தியே என்ற எச்சம் மேல்வரும் பாடல்களில் முடியும். இது குளகம். (எ.று)

முடிபு - விமலை இவை சொல, மாயை முன்தானடைந்தமையைத் தந்தைக்கு உணர்த்தி, பூந என்பது இன எதுகை.

452. **காவி யங்கட் கனியிதழ் மாதுமை**
ஏவவந்தவென் னெண்ணம் [1]முடித்திலேன்
போவன் அங்கிப் புரிகுழ லோடுநான்
நீவிர் நோவன்மின் என்னை நினைந்தெனா 16

(பா.ம்) [1]முடித்திலன்

(இ.ள்) காவி அம்கண் கனி இதழ் மாது உமை ஏவ = கருங்குவளை மலரை ஒத்த அழகிய கண்களையும், கொவ்வைக்கனி போன்ற இதழ்களையும், உடைய மாதாகிய உமாதேவியார் என்னை ஏவிவிட; வந்த என்எண்ணம் முடித்திலேன் - அல்லம தேவரை வசப்படுத்திப் பிடித்துச் செல்வதற்காக வந்த என் எண்ணத்தை முடித்திலேன். (அதனால்); அங்கு இப்புரிகுழலோடு நான் போவன் = நான் கைலாயத்திற்கு இந்த விமலையோடு போவேன்; என்னை நினைந்து நீவிர் நோவன்மின் = என்னைக் கருதி நீங்கள் எல்லாம் துன்பமடையா தீர்கள்; எனா - என்று கூறிவிட்டு, (எ.று), அங்கு என்பது கைலாயத்தைச் சுட்டு கின்றது, புரிகுழல் என்பது விமலையைக் குறிக்கும். இது அன்மொழித் தொகை.

முடிபு - மாது உமைஏவ வந்த என் எண்ணம் முடித்திலேன். இப்புரி குழலோடு நான் அங்கு போவன். நீவிர் என்னை நினைந்து நோவன்மின். எனா என்னும் எச்சம் அடுத்த பாட்டில் முடியும்.

Koviloor Digital Library

453. விரைந்தெ ழுந்து விமலை அணங்கொடு
வருந்து நெஞ்சக மாயையக் காட்டுளோர்
பிரிந்த ழுங்குரல் பின்றொடர்ந் [1]தேகவே
பொருந்த ருங்கயி லைத்தடம் போயினாள் 17

(பா.ம்) [1]எய்தவே

(இ.ள்) வருந்து நெஞ்சகமாயை = (தன்சூள் முடியாமையினால்) வருந்துகின்ற மனத்தையுடைய மாயையானவள்; விரைந்து எழுந்து = விரைவாகப் புறப்பட்டு; அக்காட்டுளோர் பிரிந்து அழுங்குரல் பின்தொடர்ந்து ஏக = அக்காட்டிலுள்ளவர்கள் தன்னைப் பிரிந்ததால் அவர்கள் அழுகின்ற குரல் பின் தொடர்ந்து செல்ல; விமலை அணங்கொடு பொருந்தருங் கயிலைத்தடம் போயினாள் - விமலையாகிய பெண்ணுடன் யாரும் செல்லுதற்கரிய திருக்கயிலைக்குச் செல்லும் வழியே சென்றாள். (எ.று)

முடிபு - மாயை விரைந்து எழுந்து காட்டுளோர்கள் பிரிந்து அழுங்குரல் பின் தொடர்ந்து ஏக விமலை அணங்கொடும் கைலைத் தடம் போயினாள்.

மாயை சென்ற பின் தந்தை நிலை

454. அழுது வாய்விட் டரற்றிலன் தன்னுடல்
புழுதி யாடப் புரண்டிலன் மன்னவன்
பழுதி லாததன் பாவைகா ணாமையால்
எழுதும் ஓவியம் என்னநின் றானரோ 18

(இ.ள்) மன்னவன் = (அப்பொழுது) மமகார மன்னன்; பழுதிலாத தன் பாவைகா ணாமையால் = குற்றமில்லாத பொற்பாவை போன்ற தன் மகள் காணப்படாமையால்; அழுது வாய்விட்டு அரற்றிலன் = வாய்விட்டு அழுது புலம்பிலன்; தன்னுடல் புழுதி யாடப் புரண்டிலன் = தன்னுடைய உடலில் புழுதி படியும்படி, நிலத்தில் விழுந்து புரண்டிலன்; எழுதும் ஓவியம் என்ன நின்றான் = சுவரில் எழுதப் பெற்ற சித்திரம் போல் அசையாமல் நின்றான். (எ.று) அரோ - அசை.

முடிபு - மன்னவன் தன்பாவை காணாமையால் அழுது அரற்றிலன், புரண்டிலன், ஓவியம் என்ன நின்றான்.

455. விழுவள் மீளஎழுவள் மெலிந்து நைந் (து)
அழுவள் மேனி அசைந்து நிலங்கையால்

Koviloor Digital Library

உழுவள் வாய்கொண்டு உயிர்ப்பள் இறப்பலென்று
எழுவள் கைநெரித்து ஏங்குவள் அன்னையே 19

(இ.ள்) அன்னையே - மோகினித் தாயானானவள்; (அப் பொழுது) விழுவள் - நிலத்திலே விழுவாள்; மீள எழுவள் - மீண்டும் எழுவாள்; மெலிந்து நைந்து அழுவள் = மனம் மெலிவடைந்து இளகி அழுவாள்; மேனி அசைந்து நிலம் கையால் உழுவள் = உடல் வேறுபட்டு நிலத்தைக் கையால் உழுவாள்; வாய்கொண்டு உயிர்ப்பள் = வாயினாலே மூச்சு விடுவாள்; இறப்பல் என்று எழுவள் = நான் இறந்து விடுவேன் என்று எழுவாள்; கைநெரித்து ஏங்குவள் = கையைப் பிசைந்து கொண்டு இரங்குவாள். (எ.று)

முடிபு - அன்னை - விழுவள், எழுவள், அழுவள், உழுவள், எழுவள், ஏங்குவள்.

456. பாடு மாதரும் பந்தும் கழங்குநின்(று)
ஆடு மாதரும் ஆகும் அரிவையர்
ஓடு மேவி ஒருமகள் வாழ்ந்தஅம்
மாடம் நானினிக் கண்டுயிர் வாழ்வனோ 20

(இ.ள்) ஒரு மகள் = என்னுடைய ஒரே மகளாகிய மாயை யானவள்; பாடும் மாதரும், பந்தும் கழங்கும் நின்று ஆடு மாதரும் ஆகும் அரிவைய ரோடுமேவி = பாடுகின்ற மகளிரும், பந்து கழற்சிக்காய் இவைகளைக் கொண்ட விளையாடும் மகளிரும், ஆகிய இப்பெண் களோடும் கூடி; வாழ்ந்த அம்மாடம் நான் இனிக்கண்டு உயிர் வாழ்வனோ = வாழ்ந்திருந்த அக்கன்னி மாடத்தை நான் இனி என் கண்ணால் பார்த்து உயிர் வாழ்வேனோ. (எ.று)

முடிபு - ஒரு மகள், அரிவையரோடு மேவி வாழ்ந்த அம்மாடத்தை நான்இனிக் கண்டு உயிர் வாழ்வனோ.

457. துளிக்கும் வார்மதுச் சோலையும் வாவியும்
பளிக்கு மாடமும் பாழ்பட என்மகள்
களிக்கு மானிருங் காட்டினு ளெம்மைவிட் (டு)
ஒளிக்கு மாறொரு சற்று முணர்ந்திலேன் 21

(இ.ள்) துளிக்கும் வார் மதுச் சோலையும் = மிகுந்த தேன் சிந்துகின்ற மகள் விளையாடிய சோலையையும்; வாவியும் அவள் நீராடிய தடாகங்களும்; பளிக்கு மாடமும் - அவள் வாழ்ந்திருந்த

Koviloor Digital Library

பளிங்குக் கல்லினாலே செய்திருந்த அரண்மனையும்; பாழ்பட - (இவை அனைத்தும்) வெறுவிதாய் கிடப்ப; என் மகள் - என்னுடைய மகளானவள்; களிக்குமான் இருங்காட்டினுள் எம்மைவிட்டு ஒளிக்கு மாறு = விலங்குகள் களித்து வாழும் பெரிய காட்டினுள் எம்மைப் பிரிந்து ஒளிப்பதற்குக் காரணமான விதியை; ஒரு சற்றும் உணர்ந்திலேன் = நான் ஒரு சிறிதும் உணர்ந்திலேன் இல்லையே (எ.று) இங்கு ஆறு என்றது, போகூழாகிய தீவினையினை,

முடிபு - என் மகள் சோலையும், வாவியும், மாடமும் பாழ்பட காட்டினுள் எம்மைவிட்டு ஒளிக்கும் ஆறை சற்றும் உணர்ந்திலேன்.

458. என்னை நீவிட் டிருப்பினும் பொற்றொடி
உன்னை நான்விட் டுயிர்பிழை யேனென
அன்னை வாய்விட் டரற்றினள் ஆயிடை
மின்ன னாரும் கதறினர் வேலைபோல் 22

(இ.ள்) அன்னை - தாயானவள்; பொற்றொடி - பொன்னாலாகிய வளையலை அணிந்த மகளே; நீ என்னை விட்டு இருப்பினும் = நீ என்னை விட்டு இருந்தாலும்; நான் உன்னைவிட்டு உயிர் பிழையேன் = நான் உன்னைப் பிரிந்து உயிர் வாழ்ந்திலேன்; என - என்று கூறிக் கொண்டு; வாய்விட்டு அரற்றினள் = வாய் திறந்து புலம்பினாள்; ஆயிடை மின்னனாரும் வேலைபோல் கதறினர் = அவ்விடத்திலே அப்பொழுது மின்னலைப் போன்ற தோழியர் கூட்டமும் கடல் ஓசையைப் போல் கதறி அழுதார்கள். (எ.று)

முடிபு - அன்னை பொற்றொடியே நீ என்னை விட்டு இருப்பினும், நான் உன்னை விட்டு உயிர் பிழையேன் என வாய்விட்டு அரற்றினள். ஆயிடை மின்னனாரும் வேலைபோல் கதறினர்.

அப்பொழுது சாந்தாங்காரனாகிய குரு அங்கு வந்து தேற்றுதல்

459. வந்து வேந்தன் வழிமர பாரியன்
நுந்தம் மாமகள் நோன்மை நுமக்குநான்
முந்து கூறில னோதுயர் மூழ்கிநீர்
சிந்தை நோதல் தகாதெனச் செப்புவான் 23

(இ.ள்) வேந்தன் வழிமரபு ஆரியன் வந்து = (அப்பொழுது) அரசனுடைய வழிவழியாக வருகின்ற குடிக்கு குருவாயிருக்கும்

Koviloor Digital Library

(சாந்தாங்காரன்) அங்கே வந்து; நும்தம் மாமகள் நோன்மை நுமக்கு நான்முந்து கூறிலனோ - உங்களுடைய இலக்குமியை ஒத்த மகளின் பெருமையை, நான் முன்னரே சொல்லவில்லையா? (சொல்லியிருந்தும்) நீர் துயர் மூழ்கி = நீங்கள் துன்பத்துள் அழுந்தி; சிந்தை நோதல் தகாதெனச் செப்புவான் = மனம் வருந்துதல் தகாது எனக் கூறிவிட்டு மேலும் சொல்லத் தொடங்கினான்.

முடிபு - வழி மரபு ஆரியன் வந்து மகள் நோன்மை நுமக்கு முந்து கூறிலனோ? துயர் மூழ்கி நீர் சிந்தை நோதல் தகாது எனச் செப்புவான்.

460. அருந்த வம்பல ஆற்றும் அறிஞரும்
பொருந்த ருங்கயி லைக்குமின் போனமை
தெரிந்து நெஞ்சம் தெளிய அறிந்து நீர்
வருந்துந் தன்மை மடமை மடமையே 24

(இ.ள்) அரும் தவம்பல ஆற்றும் அறிஞரும் = செய்தற்கரிய தவங்கள் பலவற்றை செய்கின்ற அறிஞரும்; பொருந்தருங் கயிலைக்கு மின் போனமை தெரிந்து நெஞ்சம் தெளிய அறிந்து = அடைதற்கு அரிய கயிலையங் கிரிக்கு; மின்னல் கொடி போன்ற நும்மகள் அடைந்தமையை, மனத்தால் தெரிந்து தெளிய அறிந்தும்; நீர் வருந்தும் தன்மை மடமை மடமையே = நீர் அதற்காக வருந்தும் இயல்பு மிகவும் மடமை. (எ.று) (மடமை மடமை என்ற அடுக்கு. உணர்வு உறுத்துமாறு வந்தது என்பர் சச்சிதானந்தம் பிள்ளை)

முடிபு - அறிஞரும், பொருந்தரும் கயிலைக்கு மின் போனமை நெஞ்சம் தெரிந்து தெளிய அறிந்தும் நீர் வருந்தும் தன்மை, மடமை மடமையே. (ஏகாரம் - தேற்றம்)

461. சிலைநு தற்பசுந் தேமொழி மாதுமை
கலைநு மக்குக் கவின்மக ளாகநீர்
தலைமை பெற்றது சாலும் உமையினி
உலகி னிற்பிறர் ஒப்பவர் இல்லையே 25

(இ.ள்) சிலை நுதல் பசும் தேமொழி மாது உமைகலை -வில்போன்ற நெற்றியையும், நல்ல தேன் போன்ற மொழியையும், உடைய மாதாகிய உமாதேவியாரின் தமோ குணக்கலை; நுமக்குக் கவின் மகள் ஆக = உங்களுக்கு அழகிய மகளாகப் பிறக்கும்படி; நீர் தலைமை பெற்றது சாலும் = நீங்கள் உயர்வு பெற்றதே உங்களுக்கு அமையும்; உமை இனி உலகினில் பிறர் ஒப்பவர் இல்லை = உங்களை இனி ஒப்பவர்,

Koviloor Digital Library

உலகினில் பிறருள் ஒருவரும் இல்லை. (எ.று) ஏகாரம் - தேற்றம்.

முடிப்பு - உமைகலை நுமக்கு மகளாக நீர்தலைமை பெற்றதே சாலும். உமை இனி ஒப்பவர் உலகினில் பிறர் இல்லையே.

ஆசிரியர் கூற்று

462. என்று கூறக் குரவன் இறைமகன்
மன்றல் வாழ்க்கை மனையொடு துன்பொரீஇச்
சென்று மாடத், திருநக ரிற்புகாக்
குன்ற மாமதில் கோயிலில் நண்ணினான் 26

(இ.ள்) குரவன் என்று கூற = சாந்த ஆங்காரனாகிய குரு மேலே கூறியபடி அரசனிடம் கூற; இறைமகன் மன்றல் வாழ்க்கை மனையொடு துன்பு ஒரீஇ = (அதைக்கேட்ட) மன்னவன், மங்கலம் பொருந்திய வாழ்க்கைக்குரிய மனையாளோடு துன்பம் நீங்கி சென்று மாடத்திரு நகரில் புகா= (காட்டிலிருந்து) சென்று மாடத்தையுடைய அழகிய தன் நகராகிய வனவசையுள் புகுந்து; குன்ற மாமதில் கோயிலில் நண்ணினான் = சக்கரவாள மலையை ஒத்த பெரிய மதிலைப் பெற்றிருக்கும் தன் அரண்மனையில் புகுந்தான். (எ.று)

முடிப்பு - குரவன் என்று கூற, இறைமகன் மனையொடு துன்பு ஒரீஇ மாடத்திரு நகரில் சென்று புகா, நகரில் உள்ள தன் கோயிலின் நண்ணினான்.

வேறு

மாயை கயிலையில் இறைவன் அவை முன் சென்றது

463. கயிலையில் விமலை யோடும் கவிரிதழ் மாயை சென்று
வியனில மதனில் தன்னை விடுத்தஞான் றென்னவானோர்
பயிலவை தன்னில் புக்குப் பரனையும் இமயம் ஈன்ற
மயிலியல் தனையும் வாழ்த்தி வணங்கியங் கருகு நின்றாள்
27

(இ.ள்) கவிர் இதழ் மாயை விமலையோடும் கயிலையில் சென்று = முருக்க மலரை ஒத்த இதழையுடைய மாயையானவள் விமலையோடும் கயிலைக் கண் சென்று, (போய்); வியல் நிலம் அதனில் தன்னை விடுத்த ஞான்று என்னவானோர் பயில் அவை தன்னில் புக்கு = அகன்ற நிலவுலகில் தன்னை போகவிட்ட நாளில் இருந்ததுபோல, தேவர்கள் நிறைந்து இருக்கின்ற அவைக்கண் புகுந்து; பரனையும்

Koviloor Digital Library

இமயம் ஈன்ற மயில் இயல் தனையும் வாழ்த்தி வணங்கி= மேலான இறைவனையும், இமயமலை அரசன் பெற்ற மயில் போன்ற சாயலை யுடைய உமாதேவியையும், வாழ்த்திக் கூறி வணங்கி; அங்கு அருகு நின்றாள் = அவ்விடத்து உமாதேவியின் பக்கத்தே நின்றாள். வாழ்த்துதல் - வாயின் தொழில், வணங்குதல் உடம்பின் தொழில். (எ.று)

முடிபு - மாயை விமலையோடும், கயிலையில் சென்று, நிலமதனில் தன்னை விடுத்த ஞான்ற என்ன வானோர் பயிலும் அவை தன்னில் புக்கு, பரமனையும், மயிலியல் தனையும் வாழ்த்தி வணங்கி அருகு நின்றாள். மயிலியல் - அன் மொழித்தொகை.

இறைவி வினாவும் மாயை விடையும்

464. பொலிவழி வதனம் கண்ட போதேயம் மாயை நெஞ்சின்
மெலிவினை அறிந்தும் அன்னை வினவலும் சூள்கொண்
டேகி
மலர்தலை உலகில் தான்முன் மயங்கிய வாற னைத்தும்
நலியுநாண் அடவ ருந்தி நவின்றனள் குறிப்பிற் றோன்ற
28

(இ.ள்) அன்னை பொலிவு அழிவதனம் கண்டபோதே அம்மாயை நெஞ்சின் மெலிவினை அறிந்தும் = அம்மையானவள், விளக்கம் குன்றிய முகத்தைப் பார்த்த பொழுதே அம்மாயையினுடைய மனத்தில் செயல் முடியாமையால் ஏற்பட்ட தளர்ச்சியை அறிந்து கொண்டும்; வினவலும் = நீ போன செயல் என்னவாயிற்று என்று கேட்டலும்; சூள்கொண்டு, மலர்தலை உலகில் ஏகி = மாயை (அல்லமன் இயல் பறிந்து அங்கு அணைகுவன் நழுவுமாயின் வல்லிதின் வலிந்து பற்றி ஈர்த்திவன் வருவல் என்று சொல்லிய) சூளை மேற்கொண்டு இடமகன்ற நிலவுலகின் கண் சென்று; தான் முன் மயங்கியவாறு அனைத்தும் = தான், அல்லமனை மயக்காமல் அவன்முன் தான் மயங்கி இருந்த வகைகள் அத்தனையும்; நலியும் நாண் அட வருந்தி குறிப்பில் தோன்ற நவின்றனள் = தன்னை வருத்துகின்ற நாணம் அழிக்க அதனாலே துன்புற்று செய்திகளை வெளிப்படைச் சொல்லால் கூறாமல் குறிப்புச் சொல்லாலேயே விளங்கக் கூறினள். நாணம் தன்னை வருத்துவதால் இவள் குறிப்புச் சொல்லால் கூறினாள். (எ.று)

முடிபு - அன்னை, அம்மாயையின் பொலிவழி வதனம் கண்டபோதே (அவள்) நெஞ்சின் மெலிவினை அறிந்தும், வினவலும்

Koviloor Digital Library

சூளைக் கொண்டு மலர்தலை உலகில் ஏகி தான் முன் மயங்கிவாறு அனைத்தும் நாண் அட வருந்தி குறிப்பில் தோன்ற நவின்றனள்.

அம்மையின் நாணமும் இறைவன் புன்னகையும்

465. நன்னக மகள்கேட் டுள்ளம் நாணுபு முகங்க விழ்ந்தாள்
பன்னக சயனனாதி பண்ணவர் நெருங்க வைக்கண்
முன்னகை செய்து தீய முப்புரம் மாளச் செய்தான்
புன்னகை புரிந்தான் பங்கில் புரிகுழல் செருக்கு மாள 29

(இ.ள்) நல் நகமகள் கேட்டு உள்ளம் நாணுபு முகம் கவிழ்ந்தாள் = நல்ல பார்வதி அம்மையார், மாயையின் சொல்லைக் கேட்டு மனம் வெட்கி முகம் கவிழ்ந்தாள்; முன்நகை செய்து தீய முப்புரம் மாளச் செய்தான் = முற்காலத்தில் நகைத்து தீய (கெட்ட) முப்புரத்தை அழியச் செய்த இறைவன்; பன்னக சயனன் ஆதி பண்ணவர் நெருங்கும் அவைக்கண் - திருமால் முதலான தேவர்கள் நெருங்கி இருக்கும் அச்சபையின் கண்; பங்கில் புரி குழல் செருக்குமாள புன்னகைப் புரிந்தான் = நம் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் உமாதேவியாரின் செருக்கினால் கூறிய மொழி அழியும்படி (இன்று) புன்னகைச் செய்தான். புரிகுழல் - அன்மொழித் தொகை. முன்னே கயிலாய கதியில் (பொய் மலி செயலில் தப்பிப்போம் எனில் காண்பல் என்னா அம்மலைமகள் தருக்கி அறைதலும்) (கயிலாயகதி 57) என்ற பகுதியால் அச்செருக்கு மொழி அறிக. செருக்கினால் கூறிய மொழி - ஆகு பெயர். (எ.று)

முடிபு - நகமகள் கேட்ட உள்ளம் நாணுபு முகங் கவிழ்ந்தாள் (அப்பொழுது) முப்புரம் மாளச் செய்தான் அவைக்கண் புரிகுழல் செருக்கு மாளப் புன்னகை புரிந்தான்.

466. அளியனென் றுனக்கு நான்சொல்
அல்லமன் அரிய னோமற்(று)
எளியனோ உரைத்தி நீயென்
றிலங்கயில் எறித லேபோல்
வெளியபுன் முறுவல் செய்ய
விமலன்வெண் மதியம் கண்ட
நளினமென் மலர்போல் என்தாய்
நகைமுகம் ஒடுங்கி னாளால் 30

(இ.ள்) விமலன் = குற்றமற்றவனாகிய இறைவன்; அளியன் என்று உனக்கு நான் சொல் அல்லமன் = (வினைகெடாதவர்க்கு அரியன்,

Koviloor Digital Library

வினைதபும் அன்பர்க்கு அருள் செய்யும்) அருளுடையோன் என்று உனக்கு நான் கூறிய அல்லம தேவன்; நீ மற்று அரியனோ எளியனோ உரைத்தி = மாயையைக் கொண்டு ஆராய்ந்த நீ இப்பொழுது அவ்வல்லம தேவன் அரியனோ? எளியனோ? என்பதை சொல்வாயாக; என்று இலங்கு அயில் எறிதலே போல் வெளியபுன் முறுவல் செய்ய = என்று கூறி விளங்கின்ற (ஒளி பொருந்திய வேலை எறிந்தாற்போல மற்றொரு வெள்ளிய புன்முறுவலைச் செய்ய; என் தாய் = அதைக் கேட்ட எனது தாயாகிய உமாதேவி; வெள்மதியம் கண்ட நளின மென்மலர் போல் நகைமுகம் ஒடுங்கினாள் = வெண்மையான திங்களைக் கண்ட தாமரை மலரைப் போல மலர்ந்த முகம் கூம்பப் பெற்றாள். (எ.று) ஆல் - அசை

முடிபு - அளியன் என்று உனக்கு நான் சொல் அல்லமன் அரியனோ, எளியனோ நீ மற்று உரைத்தி என்று விமலன் புன்முறுவல் செய்ய என்தாய் மதியங்கண்ட, நளினமலர்போல் முகம் ஒடுங்கினாள். அயில் எறிதலே போன்றது. இறைவன் செய்த புன்முறுவல். அப்புன் முறுவல் ஒளி மதியின் ஒளிபோல் விளங்கிற்று. அதைக் கண்ட உமாதேவியின் மலர் முகம் ஒடுங்கிற்று. எயில் எறிதலே போல், நளினமென் மலர்போல் என்ற உவமைகளின் கருத்தை உணர்க.

முகங் கூம்பிய உமையின் கூற்று

467. போக்கரும் வலிபு கன்று போய்வரு மாயை சொன்ன
வாக்கினில் வருந்து வேனை வள்ளல்நீ நகைசெய் தெள்ளல்
மூக்கிலி முகத்தின் முன்னர் [1]முகுரங்காட் டுதல்போ னென்ன
மீக்கிளர் இமயம் ஈன்ற மெல்லியல் மெலிந்து சொன்னாள் 31

(பா.ம்) [1]முகரங்காட்டுதலாமென்ன.

(இ.ள்) மீ கிளர் இமயம் ஈன்ற மெல்லியல் =மேல் நோக்கி வளர்ந்து எழும் இமயமலையரசன் பெற்ற உமாதேவியார்; (இறைவனை நோக்கி), வள்ளல் = வள்ளலே, போக்கு அரும்வலி புகன்று போய், வரும் மாயை சொன்ன வாக்கினில் வருந்துவேனை = நீக்குதற்குஅரிய வலிமையான சூளுரையைக் கூறி, அதை முடிப்பதற்காகப் போய், முடியாமல் வரும் மாயை கூறிய சொற்களாலே வருந்தி யிருக்கின்ற என்னை; நீ நகை

செய்து எள்ளல் = நீ புன்னகை செய்து இகழ்வது, மூக்கு இலி முகத்தின் முன்னர் முகுரம் காட்டுதல் போன்ம் = மூக்கு அறுபட்டு இல்லாமல் போனவனுடைய முகத்தின் முன்னால், கண்ணாடியைக் காட்டுதலை ஒக்கும்; என்ன மெலிந்து சொன்னாள் = என்று உள்ளம் வருந்திக் கூறினாள். (எ.று)

முடிபு - மெல்லியல் வள்ளலே! மாயைசொல் வாக்கினில் வருந்து வேனை நகை செய்து எள்ளல், மூக்கிலி முகத்தின் முன்னர் முகரம் காட்டுதல் போலும் என்ன மெலிந்து சொன்னாள். போலும் என்னும் செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்றி போன்ம் எனக் குறைந்தது, முற்றேல் உயிரும், உயிர் மெய்யும் ஏகலும் உளவே என்ற விதிப்படி இறுதி கெட்டது. போன்ம் என்பது மகரக்குறுக்கம். நகைசெய்து எள்ளுதல் மூக்கிலி முகத்தின் முன்னர் முகரம் காட்டுதலைப் போலும் என்பது வினைவுவமை வினை உவமையணி. (வினை பயன் மெய் உரு தொல்)

அப்பொழுது உமாதேவியின்பால் அருள் கூர்ந்து இறைவன் கூறியது

468. நடம்பியல் எந்தை மங்கை
நாணினால் வருந்தி னாளென் (று)
அடைந்தருள் சொல்வன் ஞாலம்
அலைக்கும் அம்மாயை சூளால்
நெடுந்தகை முன்னம் சென்ற
நிலையே [1]நன்றாடு கொல்வோன்
மடங்கல் முன்வெல்வேன் என்று
வருதலே ஆற்றல் அன்றோ 32

(பா.ம்) [1]நின்றாடு கொல்வோன்.

(இ.ள்) நடம்பியில் எந்தை, மங்கை நாணினால் வருந்தினாள் என்று அருள் அடைந்து சொல்வன் = நடித்தலில்வல்ல எம்தந்தையாகிய இறைவன், உமாதேவி நாணத்தினாலே வருந்தினாள் என்று கருதி அருள்கூர்ந்து சொல்லத் தொடங்கினான்; ஞாலம் அலைக்கும் அம்மாயை சூளால் நெடுந்தகை முன்னம் சென்ற நிலையே நன்று = உலக மக்களை மயக்குகின்ற அம்மாயை சூள்மொழியால் , மேலான தகுதி வாய்ந்த அல்லமன்முன் சென்ற செயலே, பெரிதாகும்; ஆடுகொல் வோன் மடங்கல் முன் வெல்வேன் என்று வருதலே ஆற்றல் அன்றோ =

Koviloor Digital Library

ஆட்டினையே கொன்று கொண்டிருப்போன், சிங்கத்தின்முன் வெல்வேன் என்று அஞ்சாமல் வருதலே அவனது ஆற்றலைக் காட்டும் அன்றோ? (எ.று) நடம்பயில் எந்தை என்றது - இவ்வாறு இறைவன் செய்கின்ற பல திருவிளையாடல்களைக் குறிக்கும். நெடுந்தகை - அன்மொழித் தொகை. பரம் என்கின்ற பொருளில் வந்தது. (மேலான) மாயையாகிய பிரகிருதிக்கு மேலானவன்.

முடிபு - எந்தை மங்கைநாணினால் வருந்தினாள் என்று அருளடைந்து சொல்வான். ஞாலம் அலைக்கும் அம்மாயை நெடுந்தகை முன்னம் சென்ற நிலையே நன்று. ஆடு கொல்வோன் மடங்கல் முன்வெல்வேன் என்று வருதலே ஆற்றலன்றோ. நன்று என்ற உரிச்சொல்லுக்கு பெரிது என்பது பொருள். நன்று பெரிதாகும் (தொல் - உரி-45).

இறைவன் கூற்றும் இறைவி மறுமொழி கூறத் தொடங்கலும்

469. அல்லமன் பெருமை எல்லாம் அனைவரும் அறிந்து கொள்ள
நல்லெழில் மலைம டந்தாய்! நன்குணர்த் தினைநீ என்று
சொல்லுந ரன்றி நின்னை நிந்தனை சொல்ல வல்லார்
இல்லையென் றியம்ப யாவும் ஈன்றவர் இயம்பு கின்றாள் 33

(இ.ள்) நல்எழில் மலைமடந்தாய் = சிறந்த அழகிய மலை மகளே! அல்லமன் பெருமை எல்லாம் = (மாயைக்கு மயங்காத) அல்லமதேவன் பெருமைகள் எல்லாவற்றினையும், அனைவரும் அறிந்துகொள்ள நன்குணர்த்தினை நீ என்று சொல்லுநர் அன்றி = எல்லோரும் அறிந்து கொள்ளுமாறு நீ நன்றாக உணர்த்தினாய் என்று சொல்பவர் அல்லாமல்; நின்னை நிந்தனை சொல்ல வல்லார் இல்லை என்று இயம்ப = உன்னை பழித்துச் சொல்ல வல்லவர் ஒருவரும் உலகத்தில் இல்லை என்று (நடம்பயில் எந்தை கூற); யாவும் ஈன்றவள் இயம்புகின்றாள் = இயங்குதிணை நிலைத்திணை ஆகிய எல்லாப் பொருள்களையும் வெளிப்படுத்திய உமாதேவியார் கீழ்வரும் சொற்களைச் சொல்லத் தொடங்கினாள். (எ.று)

முடிபு - மடந்தாய்! அல்லமன் பெருமை எல்லாம் அனைவரும் அறிந்து கொள்ள நீ உணர்த்தினை என்று சொல்லுனர் அன்றி, நின்னை

Koviloor Digital Library

நிந்தனை சொல்வார் இல்லை என்று இயம்ப யாவும் ஈன்றவள் இயம்புகின்றாள்.

[1]உமா தேவியார் கூற்றும் இறைவன் பதில் கூறத் தொடங்குதலும்

470. [1]பொறியிலி யேன்செய் தீமை பொறுத்தருள் புரிந்து மெய்மை
அறிவருள் குரவன் ஆகும் அல்லமன் தன்னைக் காணும்
நெறியருள் புரிதி என்ன நிரைவளை வணங்கிக்கூற
மறிமழு அமர்ந்தி ருக்கும் மலர்க்கைவா னவனு ரைப்பான் 34

(பா.ம்) [1]பொறியிலியான்

(இ.ள்) பொறியிலியேன் செய் தீமை பொறுத்து அருள்புரிந்து = அறிவில்லாதவளாகிய அடியேன், செய்த கொடுஞ்செயல்களைப் பொறுத்துக் கொண்டு அருள்கூர்ந்து; மெய்மை அறிவு அருள் குரவன் ஆகும் அல்லமன் தன்னைக் காணும் நெறி = உண்மையான அறிவினை (மெய்ஞ்ஞானத்தை) அருளிச் செய்யும் ஆசிரியருக்குரிய அல்லம தேவனைக் கண்டு அறியத்தக்க வழியை; அருள்புரிதி என்ன நிரைவளை வணங்கிக் கூற = அருள் புரிவாயாக என்று உமாதேவியார் வணங்கிச் சொல்ல; மறிமழு அமர்ந்திருக்கும் மலர்க் கைவானவன் உரைப்பான்= (அதைக்கேட்டு) மான்மறியும் மழுவாயுதமும் பொருந்தி இருக்கும் மலர் போன்ற கையினையுடைய சிவபெருமான் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிபு - நிறைவளை பொறியிலியேன் செய் தீமையைப் பொறுத்து அருள் புரிந்து குரவனாகும் அல்லமன் தன்னை, காணும் நெறியை அருள்புரிதி என்ன, அதைக்கேட்ட மலர்க்கை வானவன் உரைப்பான். பொறி - அறிவு. மறி என்பது மானின் இளமைப் பெயர்.

இறைவன் கூற்று

471. மத்தம துறுகு ணத்து மாயையை விடுத்த வாற்றால்
நித்திய குரவன் தன்னை நீயறிந் திலைய ணங்கே
சத்துவ கலைம டந்தை தனையினி விடுத்தி யாயின்
கைத்தல நெல்லி போலக் காண்குவை அவனை என்றான் 35

Koviloor Digital Library

(இ.ள்) அணங்கே = அணங்கு போன்ற தேவியே!; மத்தம் அது உறு குணத்து மாயையை விடுத்த ஆற்றால் = மயக்கமாகிய அதனை மிக்க குணமாகப் பற்ற மாயையை அல்லமனைக் காணும்படி நீ அனுப்பியபடியால்; நித்திய குரவன் தன்னை நீ அறிந்திலை = அழியாத ஆசிரியனாகிய அல்லமதேவரை நீ தெரிந்து கொள்ளவில்லை; இனி சத்துவ கலைமடந்தைதனை விடுத்தியாயின் = இனிமேல் சாத்விக குணத்தின் கூறாகிய பெண்ணினை (அல்லமனை அறிந்த கொள்ளும் படி) அனுப்புவாயே ஆனால்; கைத்தல நெல்லிபோல அவனைக் காண்குவை என்றான் = உள்ளங் கையினிடத்திலேயுள்ள நெல்லிக்கனி நன்றாக அறியப்படுதல் போல, அல்லமதேவரை அறிந்து கொள்ளுவாய் என்று இறைவன் கூறினார். (எ.று)

முடிபு - அணங்கே! மாயை விடுத்தவாற்றால் குரவன் தன்னை நீ அறிந்திலை. இனி சத்துவகலை மடந்தையை விடுத்தியாயின் அவனைக் கைத்தல நெல்லிபோலக் காண்குவை என்றான். உள்ளங்கை நெல்லிக்கனி போல என்பது பழமொழி.

உமா தேவி சத்துவ குணமடந்தையை அனுப்பியது

472. மிடியட இறப்பல் என்று
மேவுமோர் இடத்தில் செம்பொன்
குடமொடு கண்ட வன்போல்
கொலைசெய்நாண் துறந்து வந்து
துடியிடை யுமையெம் மானைத்
தொழுதுசத் துவவ ணங்கைப்
படிமிசை யலமற் காண்பான்
செல்கெனப் பணித்தா ளன்றே 36

(இ.ள்) மிடி அட இறப்பல் என்று மேவுமோர் இடத்தில் = வறுமை வறுத்துகையால் யான் இறந்து விடுவேன் என்று செல்லுகின்ற ஓரிடத்திலே; செம்பொன் குடமொடு கண்டவன் போல் = பொற்காசினை குடத்தளவு கண்டு எடுத்துக் கொண்டவனைப் போல; துடியிடை உமை = உடுக்கைபோலும் இடையையுடைய உமாதேவி; கொலை செய் நாண் துறந்து வந்து = தன்னை வருத்திய நாணத்தை விட்டுவந்து; எம்மானைத் தொழுது = எம்முடைய இறைவனாகிய பரமேசுவரனை வணங்கி; அல்லமன் காண்பான் = அல்லமனைக் கண்டு அருள் பெறும் பொருட்டு, சத்துவ அணங்கைப் படிமிசை செல்கெனப் பணித்தாள் = சத்துவ

Koviloor Digital Library

கலையாகிய பெண்ணை நிலவுலகின்கண் செல்வாயாக எனக் கட்டளை இட்டாள். (எ.று)

முடிபு - மிடியட இறப்பலென்று மேவுமோர் இடத்தில் செம் பொன்னை குடமொடு எடுத்துக் கொண்டவனைப்போல (மகிழ்ந்து) உமை, நாணத்தைத் துறந்து வந்து எம்மானைத் தொழுது அல்லமனைக் காண்பான் சத்துவ அணங்கை படிமிசை செல்கெனப் பணித்தாள். இப்பாட்டு உவமையணி. துடிஇடை என்பது உருஉவமை. ஒருவன் வறுமை வறுத்த இறக்கச் சென்ற இடத்திலே பசும்பொன் குடத்தைக் கண்டு எடுத்துக் கொண்டு மகிழ்ந்த செயல், மாயையின் செயலால் வருந்தி இருந்த உமாதேவிக்கு அல்லமனை அறிந்து கொள்ளும் ஓர் உபாயச் செயல் கிடைத்ததற்கு உவமையாயிற்று.

அப்பொழுது அருள்நந்தி அம்மைக்குக் கூறியது

473. **அப்பொழு தருகு நின்ற அருணந்தி தேவன் அன்னே!**
ஒப்பரும் பத்தி என்னும் அஞ்சனம் ஒன்றுண் டாயின்
செப்பரும் ஞானா னந்த அல்லம தேவன் என்னும்
வைப்பினை எளிது காண லாமென மகிழ்ந்து சொன்னான்
37

(இ.ள்) அப்பொழுது அருகு நின்ற அருள் நந்தி தேவன் மகிழ்ந்து = பணித்த அப்பொழுது, பக்கத்தில் நின்ற அருளையுடைய நந்திதேவன் உவகையடைந்து; அன்னே - தாயே; ஒப்பு அரும் பத்தி என்னும் அஞ்சனம் ஒன்று உண்டாயின் = உவமை இல்லாத பத்தி என்று கூறப்படும் கண்மை ஒன்றுமே ஒருவரிடத்தே தோன்றுமானால்; செப்பு அரும் ஞான ஆனந்த அல்லமதேவன் என்னும் வைப்பினை = சொல்லுதற்கறிய அறிவும் இன்பமும் உடைய அல்லம தேவன் என்கின்ற புதையலை; எளிது காணலாம் எனச் சொன்னான் = சுலபமாகக் கண்டு அறியக் கூடும் என்று சொன்னான். நிலத்தில் வைத்த புதையலை அஞ்சனமையைக் கண்ணுக் கிட்டுக் கொண்டு கண்டறிதல் மந்திரம் வல்லார் செயல், அஞ்சனமிட்டுப் பார்த்தல் என்று கூறுவர். பத்தியை அஞ்சனமாகவும், அல்லமதேவனை வைப்பாகவும் உருவகித்தலால் இது உருவக அணி. (எ.று)

முடிபு - அப்பொழுது அருகு நின்ற அருள் நந்திதேவர் அன்னே! பத்தி என்னும் அஞ்சனம் உண்டாயில், அல்லமதேவன் என்னும் வைப்பினைக் காணலாம் என மகிழ்ந்து சொன்னான், பத்தியின்

சிறப்பைக் கருதி நந்திதேவருக்கு உவகை ஏற்பட்டதால் மகிழ்ந்து சொன்னான் எனக் கூறினார்.

நந்தியின் உரையைக் கேட்ட இறைவன் கூறியன

474. அழிவரு நிதிய வைப்பை அஞ்சனம் கொண்டு காணும்
விழியுடை யவன்போன் ஞான மெய்க்குர வனைத்தான்
கண்டு
கழிமயல் அன்பர் காணக் காட்டுவோன்இவளென்றெம்மை
வழிவழி அடிமை கொள்ளும் வள்ளல்நந் தியைப்பு கழ்ந்து
38

(இ.ள்) எம்மை வழிவழி அடிமை கொள்ளும் வள்ளல் = எங்களை எல்லாம், பரம்பரையாக அடிமை கொண்டு ஆளும் உரிமையுடைய பரமேஸ்வரன்; அழிவு அருநிதிய வைப்பை அஞ்சனம் கொண்டு காணும் விழியுடையவன் போல் = அழிவில்லாத பொருள் புதையலை, மையைப் பூசிக்கொண்டு கண்டு அறியும் கண்ணையுடையவன் போல்; ஞான மெய்க் குரவனைத்தான் கண்டு = அறிவினையுடைய உண்மையாகிய அல்லமதேவனாகிய குருவை தான் முதலிலே பார்த்து; கழி மயல் அன்பர் காணக்காட்டுவோன் இவன் என்று = மயக்கம் நீங்கிய அன்புடைய தொண்டர்களுக்கு அவர்கள் காணும்படிக் காட்டுவோன் இந் நந்தியே என்று கூறி; நந்தியைப் புகழ்ந்து = நந்திதேவரைப் புகழ்ந்து. (எ.று)

முடிபு - புகழ்ந்து என்னும் எச்சம் அடுத்த பாட்டிலுள்ள புகழ்ந்து சொல்வான் என்பதோடு முடியும். வள்ளல் வைப்பை அஞ்சனம் கொண்டு காணும் விழியுடையவள் போல், குரவனைத் தான்கண்டு, அன்பர் காணக் காட்டுவோன் இவன் என்று நந்தியைப் புகழ்ந்து, நிதிய வைப்பை அஞ்சனங் கொண்டு காணும் விழியுடையவன்போல் என்னும் உவமை. நந்தி மெய்க்குரவனைத் தான்கண்டு காட்டலுக்கு உவமை யாயிற்று. ''இது உவமப் பொருளின் உற்றது உணரும் தெறி மருங்கு உளவே திறத்து இயலான'' (தொல். உவம. இயல் -20) என்ற நூற்பாவாலமைந்த உவமை.

475. சத்தியால் யான்பி ணித்த தளைதனைத் தனது தூய
பத்தியால் அவிழ்க்க வல்லோன் பார்க்கின் இந்நந்தி
யேதான்

Koviloor Digital Library

இத்தினால் விலங்கு பூட்டும் இறைவனோ விடுவிப்
பானோ
மெய்த்தஆ ரருளி னோன்யார் விளம்புக என்று சொல்வான்
39

(இ.ள்) யான் சத்தியால் பிணித்த தளைதனை = பதியாகிய யான் என்னுடைய நியமசத்தியால், கட்டிய பாசத்தை; தனது தூய பத்தியால் அவிழ்க்க வல்லோன் = தன்னுடைய குற்றமில்லாத பத்தியால் அவிழ்த்துவிட வல்லமை படைத்தவன்; பார்க்கின் இந்நந்தியேதான் = ஆராய்ந்து பார்க்கின் இந்நந்தி ஒருவனே யாவன்; இத்தினால் = இக்காரணத்தால்; விலங்கு பூட்டும் இறைவனோ விடுவிப்பானோ, மெய்த்த ஆர் அருளினோன் யார் விளம்புக என்று சொல்வான் = விலங்கிடுகின்ற தலைவனோ? விலங்கை விடுவிக்கும் தொண்டனோ? (இவ்விருவருள்) உண்மையான அருள் உடையவன் யார் என்பதை நீங்களே கூறுங்கள் என்று கூறிவிட்டு, மேலும் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிபு - பார்க்கில், யான் சத்தியால் பிணித்த தளைதனை தனது பத்தியால் அவிழ்க்க வல்லோன் இந்நந்தியேதான். இத்தினால் விலங்கு பூட்டும் இறைவனோ? விடுவிப்பானோ? அருளோன் யார் ? விளம்புக என்று சொல்வான். இதினால் என்ற சொல் இத்தினால் என வந்தது. எதுகை நோக்கித் திரிந்தது. இது செய்யுள் விகாரம். இறைவனிடத்திலே சக்தி தோன்றி உயிர்களைப் பாசத்தில் பிணிக்கும், உயிர்களிடத்து தோன்றிய பக்தி அப்பாசத்தின் கட்டை அவிழ்க்கும். இதன் விளக்கத்தை, சித் சக்தியோடு கூடிய நிட்கள லிங்கம், இலிங்கம் எங்கும் அங்கம் என்றும் இரு பிரிவாயிற்று. நிட்கள லிங்கத்திடத்துள்ள அச் சித்சத்தி, இலிங்கத் தினிடத்து சத்தி என்றும், அங்கத்தினிடத்து பத்தி என்றும் பிரிந்து விளங்குவ தாயிற்று. இலிங்கமாகியபதி தன் சிற்சத்தி வடிவான சத்தியால், அங்கமாகிய உயிர்களை பாசத்திற் கட்டுகிறது. அவ் அங்கம் தன்னிடத்திலுள்ள சித்சத்தியின் கூறாகிய பத்தியால் அதை அவிழ்த்து விடுகின்றது. இவ்விரண்டில் சத்தி உலகத்தைத் தோற்று விக்கும். பத்தி ஒடுக்குவிக்கும். சத்தி மாயையோடு கூடியது, பத்தி மாயையை விலக்குவது, சத்தி கீழ் நோக்கியது, பத்தி மேல் நோக்கியது. சத்தி பிரவிர்த்தி, பத்தி நிவர்த்தி என்று இவற்றின் தன்மைகளை உணர்ந்து கொள்க.

Koviloor Digital Library

476. **அல்லமன் என்னும் ஞான ஆனையை [1]அகப்ப டுத்த**
வல்லவொள் பார்வை நீயே ஆதலால் மண்ணில் போகி
எல்லையில் அன்பர், நெஞ்சத் தின்பருள் நந்தி! என்று
சொல்லினன் உயிரில் தோன்றாத் துணையென இருக்கும்
[2]பெம்மான் 40

(பா.ம்) [1]அகப்படுக்க, [2]எம்மான்.

(இ.ள்) உயிரில் தோன்றாத் துணை என இருக்கும் பெம்மான் = உயிர்கள் தோறும், வெளிப்படாத, துணையாக இருக்கின்ற இறைவனாகிய பெரியோன்; நந்தி - நந்தியே!; அல்லமன் என்னும் ஞான ஆனையை அகப்படுத்தவல்ல ஒள் பார்வை நீயே - அல்லமன் என்கின்ற ஞான வடிவாயிருக்கின்ற ஆனையை, அகப்படச் செய்யவல்ல அறிவையுடைய பார்வை விலங்கு நீயே; ஆதலால் - ஆகையினாலே; மண்ணில் போகி - நிலவுலகத்திற் சென்று; எல்லையில் அன்பர் நெஞ்சத்து இன்பருள் என்று சொல்லினன் = கணக்கற்ற அன்பர்களுடைய மனத்திற்கு நீ இன்பத்தைக் கொடுப்பாயாக என்று கூறினாள். (எ.று)

முடிபு - பெம்மான் நந்தியே! அல்லமனாகிய ஆனையை அகப் படுத்தவல்ல, பார்வை நீயே ஆதலால், மண்ணில் போகி, அன்பர் நெஞ்சத்து இன்பருள் என்று சொல்லினன் அத்து - சாரியை, நெஞ்சத்து என்பது நான்காம் வேற்றுமை. நெஞ்சத்து என்பதை நெஞ்சத்தின் கண் என ஏழாம் வேற்றுமை விரிப்பினும் அமையும்.

477. **அந்திவண் ணத்தெங் கோமான் அருளினால் இன்ன கூறச்**
சுந்தரி தனக்கும் எட்டாத் தூயவன் தன்னைக் காண
நந்திவல் லவனோ என்று நகைசெய்து கணங்கள் தம்முள்
வந்தொரு சிலரு ரைப்ப மங்கைபங் காளன் சொல்வான்
41

(இ.ள்) அந்திவண்ணத்து எம்கோமான் அருளினால் இன்னகூற = செக்கர் வான் போன்ற நிறம் படைத்த இறைவன் அருளினாலே, மேலே கூறிய சொற்களைச் சொல்ல; (அப்பொழுது) கணங்கள் தம்முள் ஒருசிலர் வந்து நகைசெய்து = சிவகணங்களுள் ஒரு சிலர் இறைவன் முன்வந்து, நகைத்து; சுந்தரி தனக்கும் எட்டாத் தூயவன் தன்னைக் காண நந்தி வல்லவனோ என்று உரைப்ப = (உமாதேவியின் கூறு ஆன மாயை என்னும் பெயருடைய) அழகுடையாளுக்கும் அறிய ஒண்ணாத தூயவன் தன்னை அறிய இந்நந்தி வல்லமைப் படைத்தவனோ என்று

Koviloor Digital Library

கூற; (அதைக் கேட்ட), மங்கை பங்காளன் சொல்வான் = உமாதேவியை ஒரு கூற்றிலேயுடைய சிவபெருமான் சொல்லத் தொடங்கினான்.

முடிபு - கோமான் அருளினால் இன்னகூற, கணங்கள் தம்முள் ஒருசிலர் வந்து, சுந்தரி தனக்கும் எட்டாத் தூயவன் தன்னைக் காண, நந்திவல்லவனோ என்று நகை செய்து உரைப்ப, (அதைக் கேட்ட) மங்கை பங்காளன் சொல்வான், சுந்தரி தனக்கும் எட்டா என்பதற்கு உமாதேவிக்கும் எட்டாத என்பது சச்சிதானந்தம்பிள்ளை உரை.

478. நந்தியென் றனையு ணா்ந்தான்
நான்அவன் தனையு ணா்ந்தேன்
சிந்தைசெய் தெம்மை நீவிர்
தெளிவுற அறிகி லீரென் (று)
எந்தையெம் பெருமான் கூற
இகழ்ந்துரை செய்தோ ரெல்லாம்
வெந்துயர் கொண்டு நின்றார்
மீளவும் விமலன் சொல்வான் 42

(இ.ள்) எந்தை எம்பெருமான் கூற = எங்களுக்குத் தந்தையாயும் எங்களுக்குப் பெரியோனாயும் இருக்கின்ற இறைவன்; நந்தி என் தனை உணா்ந்தான் = இந் நந்திதேவன் என்னை நன்றாக உணா்ந்துள்ளான்; நான் அவன்தனை யுணா்ந்தேன் = நான் அந் நந்தியை நன்கு உணா்ந்து கொண்டுள்ளேன்; நீவிர் எம்மை சிந்தை செய்து அறிகிலீா் என்று கூற = கணங்களாகிய நீங்கள் எங்களை சிந்தித்துத் தெளிவாக அறியும் ஆற்றல் இல்லீா் என்று சொல்ல; இகழ்ந்து உரைசெய்தோா் எல்லாம் - நந்தியை இகழ்ந்து உரைத்தோா் எல்லாம் (இறைவன் சொல்ல அதைக் கேட்டு); வெந்துயர் கொண்டு நின்றாா் - கொடிய துன்பத்தை அடைந்து நின்றாா்கள்; மீளவும் விமலன் சொல்வான் = திரும்பவும் குற்றமற்ற வனாகிய இறைவன் சொல்லத் தொடங்கினான். (எ.று) பசவ புராணத்தில், இறைவன் நந்தியினுடைய பெருமையை உமாதேவிக்குக் கூறியுள்ள பகுதியை நோக்குக. துடியிடை உமையே இந்த தொன்மை யாம் நந்தி நம்தம் படிவன், நம்முடனே ஒத்த பான்மையன் என்று கூறுவதையும், அதைக் கேட்ட உமாதேவி,

இச் சதா சார நீதி இந்த நன்முத்தி ஞானம்
இச் சதம் இல்லாச் சித்தம் இந் நிராங்கார புத்தி

Koviloor Digital Library

இச் சதுரான பத்தி இக்குணம் இந்த வாரம்
இச் சிவ நேயம் பெற்றால் எவர் இவர் போல

(பசுவபுரா. திருக்கயிலாயச் சருக்கம் 47-48 பாடல்)

என்று நந்தியினுடைய பெருமையைக் கூறுதல் காண்க.

முடிபு - எந்தையாகிய எம்பெருமான் நந்தி என்பதனை உணர்ந்தான். நான் அவன்தனை உணர்ந்தேன், நீவிர் எம்மை சிந்தை செய்து தெளிவுற அறிகிலீர் என்று கூற, இகழ்ந்துரை செய் தோரெல்லாம் துயர் கொண்டு நின்றார். மீளவும் இறைவன் சொல்வான்.

479. **மாசறு நந்தி பத்தி வார்த்தையால் அறியீர் நீவிர்**
காசினி யதனிற் சென்று கண்களால் அமையக் கண்டு
பேசுதிர் பின்னர் என்று பெருந்தகை நந்தி தன்னோடு
ஈசனென் கணங்கள் தம்மை ஏயினன் அருளினாலே 43

(இ.ள்) ஈசன் - அப்பொழுது பரமேஸ்வரன் (இகழ்ந்துரைத்த சிவ கணங்களை நோக்கி); நீவிர் மாசு அறு நந்தி பத்தி வார்த்தையால் அறியீர் = நீங்கள் குற்றமற்ற நந்தி தேவனது சிவபத்தியை, சொற்களாலே அறிய மாட்டீர்கள்; (அதனால்), காசினி அதனில் சென்று கண்களால் அமையக் கண்டு பின்னர் பேசுதிர் என்று = பூவுலகத்தில் சென்று உங்கள் கண்களாலே பொருந்தப் பார்த்து பின்னர் (நந்திதேவன் வல்லவனோ? வல்லமை இல்லாதவனோ) என்று கூறி; பெருந்தகை நந்தி தன்னோடு ஒண் கணங்கள் தம்மை அருளினாலே ஏயினன் = பெரிய தகுதி வாய்ந்த நந்தி தன்னோடு அறிவுடைய சிவகணங்களை எல்லாம், தனது அருளினாலே (நிலவுலகிற்குச் செல்லுமாறு) ஏயினன். ஏவினன் என்றும் பாடம் கொள்க. வார்த்தையால் அறியீர் என்பது ஆகம அளவையால் அறியீர் என்பது. கண்டு அறிவீர் என்பது - காட்சி அளவையால் அறிவீர் என்பது (பிரத்தியட்சப் பிரமாணம்)

முடிபு - ஈசன் (கணங்களை நோக்கி) நீவிர் நந்தி பத்தியை வார்த்தையால் அறியீர். (ஆகையினால்) காசினியில் சென்று கண்களால் அமையக் கண்டு பின்னர் பேசுதிர் என்று கூறி, நந்தி தன்னோடு கணங்களை அருளினாலே ஏயினன்.

சிவகணங்கள் இறைவன் ஆணைப்படி உலகில் தோன்றியது

480. **கண்ணுதல் அருளால் ஏவும் கணங்களுள் தலைமை**
பெற்றோர்

Koviloor Digital Library

மண்ணுல கதனில் வேண்டும் வளம்பதி தோறும் வந்து
நண்ணினர் உலகர் கண்ணில் நரர்வடி வாகத் தோன்ற
எண்ணுறின் எழுநூற் றின்மேல் எழுபதென் றுரைக்கும்
எண்ணார் 44

(இ.ள்) கண்ணுதல் அருளால் ஏவும் கணங்களுள் தலைமை பெற்றோர் = நெற்றிக்கண்ணையுடைய இறைவன் திருவருளால் ஏவப்பெற்ற சிவகணங்களுள் முதன்மை வாய்ந்தோர் எல்லாம்; மண்உலகு அதனில் வேண்டும் வளம்பதிதோறும் வந்து = நில உலகத்திலே, தாங்கள் விரும்பிய வளமையான நகரம் தோறும் வந்து; உலகர் கண்ணில் நரர் வடிவாகத் தோன்ற நண்ணினர் = உலக மக்களுடைய விழியிலே சிவகண வடிவமாகத் தோன்றாமல் மக்கள் வடிவம் தோன்றுமாறு அடைந்தார்கள். அவர் எத்தனைபேர் என்னில்? எண் உரின் எழுநூற்றின்மேல் எழுபது என்று உரைக்கும் எண்ணார் = அவர் எவ்வளவினர் என்று எண்ணத் தொடங்கின் எழுநூற்று எழுபது என்னும் எண்ணையுடையவராவர். (எ.று); எழுநூற்றின் மேல் எழுபது என்பது எழுநூறும் எழுபதும் என்னும் , எண்ணும்மைப் பொருளில் வந்துள்ளது. (கண்ணுதல் - அன்மொழித் தொகை) இரண்டாம் வேற்றுமைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை)

முடிபு - கணங்களுள் தலைமை பெற்றோர், மண்ணுலகில் வேண்டும் வளம்பதிகள் தோறும் வந்து, உலகர்முன், நரர் வடிவாகத் தோன்ற நண்ணினர். எண்ணுறின் (அவர்) எழுநூற்றின் மேல் எழுபது என்று உரைக்கும் எண்ணார்.

இமையவர் மனமகிழ்ச்சி

481. நந்தியென் கின்ற ஞான ஞாயிறு நிலத்து திப்பின்
முந்துறும் அமணர் என்னும் மூடுவல் இருள்கெட் டோடும்
சந்திர மௌலிச் சீர்வெண் தாமரை மலரும் என்னா
இந்திரன் முதலாய் உள்ள இமையவர் மனம கிழ்ந்தார் 45

(இ.ள்) இந்திரன் முதலாய் உள்ள இமையவர் = இந்திரனை முதலா உள்ள தேவர் எல்லோரும்; நந்தி என்கின்ற ஞான ஞாயிறு நிலத்து உதிப்பின் = நந்தி என்று பேர் கூறப்படும் ஞானசூரியன் , நிலவுலகத்தின் கண் தோன்றினால்; (அதனால்), முந்து உறும் அமணர் என்னும் மூடு வல்இருள் கெட்டு ஓடும் = முன்னே உள்ள சமணர் என்கின்ற மூடியவலிய இருளானது, அழிந்து ஓடும்; சந்திர மௌலி சீர் வெண்தாமரை மலரும்

Koviloor Digital Library

என்னா = பிறையை சடையின் கண் அமைந்த இறைவனுடைய புகழ் என்னும் வெண்டாமரை மலரெல்லாம் மலரும் என்று கருதி; மனம் மகிழ்ந்தார் = உள்ளம் உவப்படைந்தார். (எ.று)

நந்தியாகிய ஞாயிறு உலகிலே தோன்றினால், அதனால் சமணர் என்னும் இருள் கெட்டு ஓடும். அதுவேயன்றி சிவபெருமானுடைய புகழ் என்னும் வெண்டாமரையும் மலரும் என்று கூறியதனால் இது ஏதுவோடு கூடிய உருவக அணி.

முடிபு - இமையவர் நந்தி என்கின்ற ஞாயிறு நிலத்து உதிப்பின் அமணர் என்னும் இருள்கெட்டு ஓடும். சந்திர மௌலி சீர் என்னும் வெண்டாமரை மலரும் என்று மனம் மகிழ்ந்தார். சந்திரமௌலி என்பது அன்மொழித் தொகை. இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

எட்டாவது
வசவண்ணர் முதலியோர் வந்த கதி முற்றும்

Koviloor Digital Library

ஒன்பதாவது
மாதேவி முதலியோர் அவதார கதி

வேறு
கதிகருதிய பொருள்

482. புரஞ்சுடு சிறுநகைப் புனிதன் பாலமர்
கருந்தடங் கண்ணிதன் கலையும் நந்தியும்
அருங்கண நாதரும் அகல்நி லத்திடை
வருந்திறம் அறிந்தவா வகுத்துக் கூறுவாம் 1

(இ.ள்) புரம்சுடு சிறுநகைப் புனிதன் பாலமர் கருந்தடம் கண்ணி தன் கலையும் - திரிபுரத்தை எறித்த சிறிய நகைப்பை உடைய, தூயவனுடைய இடப்பாகத்தில், பொருந்தி விளங்கும், கரிய அகன்ற கண்ணையுடைய உமாதேவியாரின் சத்துவ குணக்கூறும்; நந்தியும் - பசவதேவனும்;அருங்கணநாதரும் - அரிய எழுநூற்றெழுபது சிவகணங்களும்,அகல் நிலத்திடை வரும் திறம் - பரந்த நிலவுலகத்தின்கண் அவதரித்த நிகழ்ச்சிக் கூற்றினை; அறிந்துவா வகுத்துக் கூறுவாம் - யாம் அறிந்து கொண்ட வண்ணம் கூறுபடுத்திச் சொல்லுவோம். வகுத்துக் கூறுவாம் என்றதனால் இக்கதி மூன்று பிரிவினை உடையது. (எ.று)

முடிபு - புனிதன் பாலமர் கருந்தடங் கண்ணிதன் கலையும், நந்தியும், கணநாதரும் நிலத்திடை வரும் திறத்தை அறிந்தவா (யாம்) வகுத்துக் கூறுவாம். கருந்தடங்கண்ணி என்பதை அன்மொழித் தொகை என்பது சச்சிதானந்தம் பிள்ளை உரை. இகர விகுதி வந்துள்ளமையால் இது அம்மொழித் தொகை அன்று, அடை அடுத்த பெண்பாற்சொல்.

மாதேவி அவதாரம்; மாதேவி நகரச் சிறப்பு

483. பெடையொடு சுரும்பினம் பெரிதி ரைந்திடக்
கடிதடம் அளவுவாய்க் காலின் ஓடியே
மடையுடை மதுமழை மலர்பெய் சோலைசூழ்
உடுதடை, யெனுநகர், ஒன்றுண் டாயிடை 2

(இ.ள்) பெடை ஒடு சுரும்பினம் பெரிது இரைந்திட - பெண்வண்டுகளோடு கூடிய ஆண் வண்டுக் கூட்டங்கள், மிகவும் ஒலிக்கும்படி; கடிதடம் அளவு வாய்க்காலின் ஓடியே மடையுடை மது - இடுப்பைத்

Koviloor Digital Library

தொடும்படி வாய்க்காலின் கண் ஓடிவயல் மடைகளை உடைக்கின்ற தேன்வெள்ளம்; மலர் மழைபெய் சோலை - அத்தகைய தேன் வெள்ளத்தை, மழைத் துளிகள் போல் பெய்கின்ற மலரையுடைய சோலைகள் சூழ் உடுதடை எனும் நகர் ஒன்று உண்டு - அத்தகைய சோலைகள். சூழ்ந்த உடுதடை என்னும் பெயருடைய நகர் ஒன்று உண்டு; ஆயிடை - அந் நகரின்கண். (எ.று)

நீர் வெள்ளத்தை உண்டாக்கும் மழையை மேகங்கள் பொழியும் இங்கு மது வெள்ளத்தை உண்டாக்கும். மழையை மலர்கள் பொழிகின்றது என்று கூறுகின்றது. மலர்கள் மேகம்போல் மதுத்துளியைச் சிந்துகின்றன. அதனால் மதுவெள்ளம் இடுப்பைத் தொடும்படி வாய்க்காலின் வழியே ஓடி வயல் மடைகளை உடைக்கின்றது. இவ்வாறு கூறுதலால் இது உயர்வு நவிர்ச்சி அணியாகும்.

முடிபு - சுரும்பினம் பெரிது இரைந்திட வாய்க்காலின் ஓடியே மடையை உடைக்கின்ற மது, அம்மதுவை, மலர்கள் மலர்போல் பெய்கின்ற சோலை, அத்தகைய சோலைகள் சூழ்ந்துள்ள உடுதடை என்னும் நகர் ஒன்றுண்டு; ஆயிடை என்பது அடுத்த பாடலோடு முடியும். மது என்பது மது வெள்ளத்தைக் குறிக்கும்.

மாதேவியின் தந்தையின் சிறப்பு

484. நன்மையென் பனவெலாம் உடையன் நான்மறைப்
புன்மையென் பனவெலாம் பொருந்து றானெனும்
தன்மைதன் பெயரினால் அறியத் தக்கவன்
நின்மலன் எனஒரு நிகரிலா னுளன் 3

(இ.ள்) மேற்பாட்டிலுள்ள ஆயிடை என்னும் சொல்லை இப் பாட்டில் வருவித்து உரை கொள்க; ஆயிடைநின் மலன் என ஒரு நிகரிலான் உளன் - அவ்வூரின்கண் நின்மலன் என்று பெயர் கூறப்படும் ஒப்பற்ற ஒருவன் உள்ளான்; அவன் எத்தகையவன் எனில்?; நான்மறை நன்மை என்பன எலாம் உடையன் - நான்மறை செய் என்று விதிக்கும் நற்செயல்களை எல்லாம் உடையன்; நான்மறை புன்மை என்பன எலாம் பொருந்துறான் - நான்கு வேதங்கள் செய்யற்க என்று விலக்கும் புன்மையான செயல்களை எல்லாம் பொருந்தாதவன்; எனும் தன்மை தன் பெயரினால் அறியத் தக்கவன் - எனக் கூறும் இரண்டு தன்மை களைத் தன் பெயரைக் கொண்டே அறியத்தக்கவனாயுள்ளான். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - ஆயிடை, நின்மலன் என ஓர் நிகரிலான் உளன், அவன், நான்மறை நன்மை என்பன எலாம் உளன், நான்மறை புன்மை என்பன எலாம் பொருந்துறான் எனுந் தன்மை தன் பெயரினாலே அறியத்தக்கவன்; மலம் இல்லாதவன் நின்மலன், மலம் - குற்றம்; நான்மறை என்னும் சொல் இடைநிலை விளக்காய் நான்மறை நன்மை என்பன எலாம் உடையன், நான்மறைபுன்மை என்பன எலாம் பொருந்துறான் என்று பொருள் கொள்ளும் ஆற்றை அறிக.

மாதேவியின் தாயின் சிறப்பு

485. அவன்எழில் மனையவள் ஆட கத்தினைச்
சுவணமென் குதலெனச் சுமதி என்பவள்
தவநிலை தன்னினும் தலைமைத் தென்னவே
உவமையில் இல்லறத் தொழுகும் நீர்மையாள் 4

(இ.ள்) அவன் எழில் மனையவள் - அத்தகையோனுடைய அழகிய மனைவியாய் உள்ளவள்; ஆடகத்தினை சுவணம் என்குதல் எனச் சுமதி என்பவள் - பொன்னினை நல்ல ஒளிபற்றி சுவர்ணம் என்று வழங்குவதைப் போல, நல்ல அறிவு பற்றி சுமதி என்று வழங்கப்பட்டாள்; தவம் நிலை தன்னினும் தலைமைத்து என்னவே உவமையில் இல்லறத்து ஒழுகும் நீர்மையாள் - (அவள் தான் கொண்ட நெறி) தவம் செய்யும் நிலைமையையுடைய துறவற நிலையைக் காட்டிலும் இது தலைமை யுடையது என்று அறிஞர் சிறப்பித்துக் கூறும்படி ஒப்பில்லாத இல்லற நெறியில் நடக்கும் தன்மையுடையவள்; ''சு'' என்னும் இடைச்சொல் நன்மை என்னும் பொருளில் வரும். சுவர்ணம் என்னும் வடசொல் சுவணம் எனத் திரிந்தது, சு-நன்மை என்று பொருள்படும் இடைச்சொல். வர்ணம் என்பது ஒளி என்று பொருள்படும்; பொன்னின் ஒளி நல்ல ஒளியாய் இருப்பது பற்றி அதனை சுவர்ணம் என்று வழங்குகின்றோம். இது காரணப் பெயர். அதுபோல சு என்றால் நல்ல, மதி என்றால் அறிவு, நல்ல அறிவு என்பது காரணப்பெயர். எனவே இவளது நல்ல அறிவின் காரணமாக சுமதி என்று பேர் வைத்தனர். இது அவளுக்கு இயற்பெயர் அன்று என்பது ஆசிரியர் கருத்து;

ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மையுடத்து (திருக்குறள் - 42)

ஆதலால் தவநிலை தன்னினும் தலைமைத்து என்னவே இவ்வாறு கூறினார். தலைமைத்து என்பது குறிப்பு வினைமுற்று.(எ.று)

Koviloor Digital Library

மாதேவியின் அவதாரம்

486. தூநிரு, மலனுக்கச் சுமதி தன்னிடைத்
தானொரு மகளெனச் சார்ந்து தோன்றினாள்
ஆனுயர் கொடியினோன் அங்கை தாங்குறா
[1]மானுயர் சத்துவ கலைம டைந்தையே 5

(பா.ம்) [1]மானுநள்

(இ.ள்) ஆன் உயர் கொடியினோன் - விடையை உயர்ந்த கொடியாகப் படைத்த இறைவன்; அம்கை தாங்குறாமான் - அழகிய கையிலே தாங்கப் பெறாத மான் போன்ற உமாதேவியினுடைய; உயர் சத்துவ கலைமடைந்தை - (தமோகுணம், இரசோ) குணங்களைக் காட்டிலும் உயர்ந்த சத்துவ குணப் பெண்ணானவள்; தூநிரு மலனுக்கு - தூய நிருமலனுக்கு, அச்சுமதி தன்னிடை - மனைவியாக வந்த அந்த சுமதி என்பாளிடத்தே; ஒரு மகள் எனச் சார்ந்து தோன்றினாள் - ஒப்பற்ற மகள் என்று கூறும் படி அடைந்து தோன்றினாள். (எ.று)

தான் என்பது அசை. இல்லையேல் கலைமடந்தையாகிய தான் எனக் கூட்டிக் கொள்க; ஒரு மானைக் கரத்தினில் வைத்து, (ஒரு மானைச் சிரத்தினில் வைத்து உலகம் ஈன்ற பெருமானை இடத்தினில் வைத்து) என்னும் அருணாசல புராணப் பாடலில் இரவியை மான் எனக் குறிப்பிட்டிருத்தல் காண்க; கையில் தாங்காத மான் என்பது உமாதேவியைக் குறிக்கும் குறிப்புச் சொல் தாங்குறாமான் என்பதாகும்.

முடிபு - சத்துவ கலை மடந்தை, நிருமலனுக்குச் சுமதி தன்னிடை மகள் எனச் சார்ந்து தோன்றினாள்.

பெற்றோர் பெற்ற மகிழ்ச்சி

487. மதிபெறு கடலென மகளை ஈன்றவர்
நதிபெறு சடைமுடி நம்பன் பாலுறு
கதிபெறு மதிநுதல் கரும்பைப் பெற்றுநல்
துதிபெறு மலைஎன மகிழ்ச்சி துன்னினார் 6

(இ.ள்) மதிபெறு கடல் என மகளை ஈன்றவர் - திங்களை மகவாகப் பெற்ற, திருப்பால்கடலைப் போல, சத்துவ குணமங்கையை மகளாகப் பெற்ற நிருமலனும் சுமதியும், நதிபெறு சடைமுடி நம்பன் பால் உறும் - கங்கையாகிய நதியை அணியாகப் பெறும், சடாமுடியையுடைய இறைவனது இடப் பாகத்தில் பொருந்தி இருக்கும்; கதிபெறு மதி நுதல்

Koviloor Digital Library

கரும்பை - மூன்று கலைப் பிரிவுகளை உடைய, பிறை போன்ற நெற்றியைப் பெற்றிருக்கும், கரும்பினைப் போன்ற உமாதேவியை; பெற்று நல் துதி பெறு மலை என மகிழ்ச்சி துன்னினார் - மகளாகப் பெற்று அதனாலே நல்ல புகழைப் பெறும், மலையரசி, மலையரையனைப் போல உவகை அடைந்தார்கள். (எ.று)

மலை என்பது இமயமலை அரசனையும், இமயமலை அரசியை யும் குறிக்கும்; கதி என்பது கலைப்பிரிவு.

முடிபு - மதிபெறு கடலென மக்களைப் பெற்றவர், நம்பன் பால் வருகரும்பைப் பெற்று, (அதனாலே) துதிபெறும் மலை என மகிழ்ச்சி துன்னினார்; மலை என்னும் சொல், அங்கு வாழ்ந்த அரசன், அரசியைக் குறித்தலால் - இடவாகு பெயர்.

நிருமலன் மகவுக்குச் செய் கடன்

488. நெறிமுறை நிருமலன் நீறு சாத்தியே
அறிவரும் அஞ்செழுத் தறைந்து மெய்யுணர்
குறியினைத் தரித்தனன் குழவி யாகிய
பொறிநிகர் உறுமொரு புதல்விக் கென்பவே 7

(இ.ள்) நிருமலன் குழவியாகிய பொறிநிகர் உறும் ஒரு புதல்விக்கு - நிருமலனாகிய தந்தை குழந்தையாகிய இலக்குமியைப் பொருந்துதல் உறும் ஒப்பற்ற தன் புதல்விக்கு; நெறிமுறை நீறு சாத்தியே - ஆகம முறைப்படி திருநீற்றினை அணிந்து; அறிவு அரும் அஞ்செழுத்து அறைந்து - பொருள் அறிதற்கு அருமையான, திருவைந்தெழுத்தை செவியில் கூறி, மெய்யுணர் குறியினைத் தரித்தனன் - மெய்ப்பொருளை உணர்த்தும், இட்டலிங்கத்தைக் கழுத்தில் அணிந்தனன். (எ.று)

முடிபு - நிருமலன், குழவியாகிய புதல்விக்கு நீறுசாத்தி ஐந்தெழுத்து அறைந்து, குறியினைத் தரித்தனன்; குறி என்பது சிவனைக் குறிக்கும் இஷ்டலிங்கம். மெய் என்பதை உடம்பு என்று பொருள் கொண்டு, மெய்க்கண் தரித்தனன் எனவும் பொருள் கொள்ளலாம்.

பெயர் வைத்தது

489. இந்துவார் சடையினோன் இடத்த ளேயெனும்
சிந்தையால் மகளைமா தேவி என்றொரு
சந்தநா மங்கொடு தான ழைத்தனன்
தந்தையா தற்குநற் றவம்பு ரிந்தவன் 8

Koviloor Digital Library

(இ.ள்) தந்தை ஆதற்கு நல்தவம் புரிந்தவன் - (அவளுக்கு) தகப்பன் ஆவதற்கு முற்பிறப்பில் நல்ல தவத்தைச் செய்த நிருமலன்; இந்துவார் சடையினோன் இடத்தளே எனும் சிந்தையால் - பிறையை சூடிய நீண்ட சடையைப் பெற்றிருக்கும் இறைவனுடைய இடப்பாகத்தில் வீற்றிருக்கும், உமாதேவியே இக்குழந்தை என்று கருதிய எண்ணத்தால்; மகளை மாதேவி என்று ஒரு சந்த நாமம் கொடுத்தான் அழைத்தனன் - பிறந்த மகளை மாதேவி என்ற ஒப்பற்ற இசையோடு கூடிய பெயரை வைத்து, அப்பெயரைக் கொண்டுதான் அழைக்கத் தொடங்கினான். என்று என்பதை என்ற எனத்திருத்திப் பொருள் கொள்க; உமாதேவிக்கு மகாதேவி என்றோர் பெயருண்டு. உமாதேவியின் அஷ்டோத்திரத்தைப் பார்த்து அறிந்துகொள்க. கொண்டு என்பது கொடு என தொகுத்தது. (எ.று)

முடிபு - தந்தை ஆதற்கு நல்தவம் புரிந்தவன், மகளை சடையினோன் இடத்தளே எனும் சிந்தையால் மாதேவி என்றொரு நாமங் கொண்டுதான் அழைத்தனன்.

மாதேவி வளர்ந்தது

490. அறிவருள் ஆதரவு அடக்கம் வாய்மைமெய்த்
துறவுநல் ஒழுக்கமே தூய்மை என்றிவை
உறவொடு குழவியாய் உடன்வ ளர்ந்திட
மறுவறு சுமதிதன் மகள்வ ளர்ந்தனள் 9

(இ.ள்) மறு அறுசுமதி தன் மகள் = குற்றமற்ற சுமதியின் மகளாகிய மாதேவியானவள்; அறிவு, அருள், ஆதரவு, அடக்கம், வாய்மை, மெய்த்துறவு, நல் ஒழுக்கமே தூய்மை என்று இவை - அறிவும், அருளும், அன்பும், அடக்கமும், உண்மையும், உண்மைத் துறவும், நல்லொழுக்கமும், தூய்மையும் என்ற இவைகளை எல்லாம்; உறவொடு குழவியாய் உடன் வளர்ந்திட வளர்ந்தனள் - விளையாடும் குழந்தைகளாகி உடன் வளர்ந்திட வளர்ந்தாள். அறிவு முதலானவை இவளோடு விளையாடும் குழந்தைகள் என்க. (எ.று)

முடிபு - சுமதி தன் மகள் அறிவு முதலான இவைகள். குழவியாய் உறவொடு உடன் வளர்ந்திட வளர்ந்தனள்.

அப்பொழுது மன்மதன் செயல்

491. வாடிய மருங்குலம் மாயை தோன்றுநாள்
கோடிய சிலைகொடு தவங்கு லைப்பவே

Koviloor Digital Library

ஓடிய மதனன்மா தேவி ஓங்குநாள்
வீடிய சிலையனாய் வீழ்ந்து மாழ்கினான் 10

(இ.ள்) வாடிய மருங்குல் அம்மாயை தோன்றும் நாள் கோடிய சிலை கொடு தவம் குலைப்பவே ஓடிய மதனன் - இளைத்த இடையை யுடைய அந்த மாயாதேவி பிறந்த காலத்திலே வளைத்தவில்லை எடுத்துக் கொண்டு, முனிவர்கள் செய்யும் தவங்களை அழிக்க வேண்டி விரைந்து சென்ற மன்மதன். (காமன்) மாதேவி ஓங்கும் நாள் - இம் மாதேவி அம்மையார், பிறந்து வளரும் காலத்திலே; வீடிய சிலையனாய் வீழ்ந்து மாழ்கினான் - கையிலிருந்து விட்ட வில்லையுடையவனாய் செயலிழந்து செய்வதறியாமல் மயங்கினான். (எ.று)

முடிபு - மாயை தோன்றும் நாள் கோடிய சிலை கொடு தவம் குலைப்ப ஓடிய மதனன், மாதேவி ஓங்கும் நாள், வீடிய சிலையனாய் வீழ்ந்து மாழ்கினான்.

மாதேவி பிறப்பு உலகில் நிகழ்ந்த நன் நிகழ்ச்சிகள்

492. விழுந்தன கொடியதீ வினைப்ப ரப்பெலாம்
எழுந்தன நல்லறம் யாவும் திங்களங்
கொழுந்தென நிருமலன் குமரி ஓங்குநாள்
முழங்கின சிவாகமம் முற்றும் எங்குமே 11

(இ.ள்) திங்களம் கொழுந்தென - திங்களின் வளர்பிறை போல; நிருமலன் குமரி ஓங்கு நாள் - நிருமலனுடைய மகளாகிய மாதேவி பிறந்து வளருங் காலத்திலே; கொடிய தீவினைப் பிறப்பெலாம் விழுந்தன - கொடிய கொடும் துன்பத்தைச் செய்யும் பாப வகைகளெல்லாம் அழிந்தன; நல்லறம் யாவும் எழுந்தன - நல்ல அறத்தின் வகைகளெல் லாம் ஓங்கி; சிவாகமம் முற்றும் எங்குமே முழங்கின - சிவாகம நூல்க ளெல்லாம் எல்லோராலும் ஓதப்பட்டு ஒலித்தன. (எ.று)

முடிபு - நிருமலன்குமரி திங்கள் கொழுந்தென ஓங்குநாள் தீவினைப் பிறப்பெலாம் வீழ்ந்தன, நல்லறம் யாவும் எழுந்தன. சிவாகமம் முற்றும் எங்குமே முழங்கின; எங்குமே என்பதை மற்றைய இரண்டிடத்தும் கூட்டுக.

சிவகணங்களின் அவதாரம்

வேறு

491. ஈங்குமா தேவி இன்னணம் இருப்ப

Koviloor Digital Library

எம்பிரான் ஏவிய கணங்கள்
தாங்கள்வேண் டியவொண் பதிதொறும்
முன்செய் தவத்தர்பால் நன்மகவாகித்
தீங்கிலாச் சித்த ராமையன் மாச்சி
தேவனென் றிடுபெயர் முதலா
ஓங்குநா மங்கள் வேறுவே றுறக்கொண்
டுற்றனர் நற்றவம் முயன்று 12

(இ.ள்) ஈங்கு - உடுதடை நகராகிய இவ்விடத்திலே, மாதேவி என்பவள் இவ்வாறு வளர்ந்து கொண்டிருப்பது; எம்பிரான் ஏவிய கணங்கள் - சிவபெருமான் அனுப்பிய சிவகணங்கள் எனலாம்; தாங்கள் வேண்டிய ஒள்பதிதொறும் - தாங்கள் பிறக்க விரும்பிய சிறந்த ஊர்கள் தொறும்; முன்செய் தவத்தர்பால் நன்மகவு ஆகி - இவர்களை மகவாகப் பெறுதற்கு முன்னே தவம் செய்துள்ளவர்களிடத்தே, நல்ல புதல்வராகி; தீங்கிலாச் சித்தராமையன், மாச்சிதேவன் என்று இடுபெயர் முதலா ஓங்குநாமங்கள் வேறுவேறுறக் கொண்டு - குற்றமில்லாத, சித்தரா மையன் என்றும் மடிவாலமாச்சி தேவன் என்றும் இடப்பட்ட பெயர் முதலான ஓங்கிய பலவகைப் பெயர்களைப் பெற்று; நல்தவம் முயன்று உற்றனர் - நல்ல தவங்களைச் செய்வதில் முயற்சியுடையராய் அதில் முயன்று அங்கங்கே தங்கியிருந்தனர். (எ.று)

முடிபு - மாதேவி இன்னணம் ஈங்கு இருப்ப, எம்பிரான் ஏவிய கணங்கள், பதிதொறும் முன் செய் தவத்தர்பால், மகவு ஆகி, சித்தர மையன், மடிவால மாச்சிதேவன் என்றிடு பெயர் முதலா, நாமங்கள் வேறுவேறுறக் கொண்டு, தவம் முயன்று உற்றனர்.

வசவதேவர் அவதாரம்

492. பயக்குறும் இனிய சங்கர பூசை
பல்வகை நெறிப்பட இயற்றிச்
செயற்கருஞ் செய்கை செய்தவர் இருந்தார்
தென்திசை கயிலை போற்சிறக்க
மயக்குறும் அமண வல்லிருள் மெலிய
வயிணவம் எனுமுடு மழுங்க
வியக்குறும் சைவம் மலரநன் நந்தி
வெய்யவன் உதித்தமை விரிப்பாம் 13

Koviloor Digital Library

(இ.ள்) செயற்கு அரும் செய்கை செய்தவர் - செய்வதற்கு அரிய செயல்களை எல்லாம் செய்யும் தவமுடையோராகிய சிவகணங்கள்; இனிய பயக்குறும் சங்கரபூசை பல்வகை நெறிப்பட இயற்றி - இனிமையை உண்டாக்கும் சிவபூசையை பல்வகை வழிகளாலே அவற்றைச் செய்து; தென்திசை கயிலைபோல் சிறக்க இருந்தார் - தாங்கள் வந்து பிறந்த தென்னாடானது திருக்கயிலாய மலை போல் சிறப்பு எய்துமாறு வாழ்ந்திருந்தனர்; மயக்குறும் அமண வல்லிருள் மெலிய - அறிவுக்கு மயக்கத்தைச் செய்கின்ற, சமண சமயமாகிய வலிய இருள் நீங்கவும், வயிணவம் எனும் உடுமழுங்க - வைணவ சமயம் என்னும் நட்சத்திரங்கள் ஒளி இழக்கவும்; சைவம் மலர - சைவசமய மாகிய தாமரை மலர்கள் மலர்ச்சி அடையவும்; நன் நந்திவெய்யவன் உதித்தமை விரிப்பாம் - நல்ல நந்தி தேவன் என்னும் சூரியன் உதயமான செய்தியை இனிக் கூறுவோம். (எ.று) இப்பாட்டு ஏதுவோடு கூடிய உருவகம்.

முடிபு - செய்தவர், தென்திசையானது கயிலை போல் சிறக்க, இனிய பயக்கும் சங்கர பூசையை, பல்வகை நெறிப்பட இயற்றி இருந்தார். (இனிமேல்); அமணமாகிய இருள்மெலிய, வைணவமாகிய உடு மழுங்க, சைவம் மலர, நந்தியாகிய வெய்யவன் உதித்தமை விரிப்பாம்; தென்திசை கயிலைபோல் சிறக்க என்றதை, நந்திவெய்யவன் உதித்தமை யோடும் கூட்டிப் பொருள் கொள்க.

பசவதேவர் பிறந்த நகரச் சிறப்பு

495. வாயில்மண் ணிட்டுக் கொண்டவன் றன்னை
மதித்துநன் நுதலில்மண் ணிடாமல்
பாயும்வெண் டிரையிற் றுயில்பவன்
தனக்குப் பரிதியொன் றளித்தருள் முக்கண்
நாயகன் தனையே கருதிவெண் ணீற்றால்
[1]நன்னுதல் வீதியை அணியும்
தூயநன் மறையோர் தமக்கிட மாகுந்
துரிசிலா இங்குளா புரியே 14

(பா.ம்) [1]நன்னுதல் பூதியை

(இ.ள்) வாயில் மண்இட்டுக் கொண்டவன் தன்னை மதித்து - தன் வாயிலே உண்பதற்காக மண்ணைப் போட்டுக் கொண்டவனாகிய திருமாலை, வழிபடு தெய்வமாகக் கருதி; நன்நுதலில் மண்ணிடாமல் -

Koviloor Digital Library

நல்ல நெற்றிலே மண்ணைக் கொண்டு குறியிட்டுக் கொள்ளாமல்; பாயும் வெண் திரையில் துயில்பவன் தனக்கு பரிதி ஒன்று அளித்து அருள் முக்கண் நாயகன் தனையே கருதி - பரவிச் செல்லும் வெண்நிறம் வாய்ந்த அலைகளைடைய திருப்பாற்கடலில் உறங்குபவனாகிய திருமாலுக்கு சக்கராயுதம் ஒன்றை அளித்தருளும் மூன்று கணணையுடைய சிவபெருமானையே வழிபடு தெய்வமாகக் கருதி; வெண்ணீற்றால் - திருவெண்ணீறாகிய விபூதியினால் ; நன்நுதல் வீதியை அணியும் தூய நன்மறையோர் - நல்ல நெற்றியாகிய முன்னிடத்தில் திரிபுண்டரமிட்டு அழகு செய்யும், தன்மை வாய்ந்த புனிதம் வாய்ந்த சைவ அந்தணர்கள், தமக்கிடமாகும் துரிசிலா விங்குளாபுரி - அவர்கள் வாழ்வதற்கு இடமாய் இருப்பது குற்றமில்லாத இங்குளாபுரியாகும். (எ.று)

முடிபு - வாயில் மண் இட்டுக் கொண்டவனை மதித்து, நுதலிலே மண் இடாமல், வெண்திரையில் துயில்பவனாகிய அவனுக்கு பரிதி ஒன்றை அளித்தருளும், முக்கண் நாயகரையே கருதி, வெண்ணீற்றால் நுதலாகிய வீதியை அணியும் மறையோர்க்கு இங்குளாபுரி இடமாகும்; இப்படிச் சொன்னதின் கருத்து, இங்குளாபுரி வைணவ அந்தணர்களுக்கு இடமாகாமல், சைவ அந்தணர்க்கே இடமாயிருக்கும் என்பதாய் வசவண்ணர் பீஜாபூரிலுள்ள, பாகவடியைச் சேர்ந்த இங்குளேஸ்வரக்கப் படி என்னும் அக்கிரஹாரத்தில் அவதரித்தார்; ஸ்ரீசைலமலைக்கு மேற்கேயுள்ள கருநட நாட்டில் உள்ள இங்குளாபுரியில் பிறந்தார் பசவர் எனத் (திருக்கயிலாயச் சருக்கம் வசவபுராணம் 56 பாடல் கூறும்); இங்குளாபுரி, கல்யாண பட்டணத்தில் உள்ளது. இவை குல்பர்கா ஜில்லாவிலுள்ளது என நாகி செட்டியாரவர்கள் கூறுகிறார். (வசவ புராணம் பக்கம் 44)

புறநகர் சிறப்பு

496. கதிர்விளை செந்நெல் காடுசூழ் கரும்பு,
கரும்புசூழ் கதலியங் கதுசூழ்
புதுநறும் பாளைக் கமுகது சூழ்முப்
புடைப்பசுங் காயதெங் கதுசூழ்
உதிர்கனித் தேமாந் தண்பொழில் பார்ப்பார்க்
[1]குயர்வுறு துயர்மிடி புகாமல்
அதிர்முர சியம்பும் வீதியந் நகரிற்
கணிகள்வைத் திடுபடை காட்டும் 15

Koviloor Digital Library

(பா.ம்) [1]உயர்வது

(இ.ள்) கதிர்விளை செந்நெல்காடு - நெல் கதிர்கள் விளைகின்ற செந்நெல் காடும்; சூழ்கரும்பு - அச்செந்நெற் காட்டைச் சூழ்ந்த கரும்புக் காடுகளும்; கரும்புசூழ்கதலி - கருப்பங்காட்டைச் சூழ்ந்துள்ள வாழைத் தோப்புகளும்; அங்கு அதுசூழ் புது நறுங்பாளைக் கமுகு - அங்கு அக்கமுகக் காட்டைச் சூழ்ந்த புதிய நறுமணமுள்ள பாளைகளையுடைய பாக்குத் தோப்புகளும்; அது சூழ் முப்புடைப் பசுங்காய்த்தெங்கு - அக் கமுகங்காட்டைச் சூழ்ந்துள்ள, மூன்று பக்கங்களையுடைய பசியகாயைப் பெற்றிருக்கும் தென்னந் தோப்புகளும்; அது சூழ் உதிர்கனித் தேமாந்தண் பொழில் - அத்தென்னந் தோப்பைச் சேர்ந்துள்ள கனிகள் உதிரும் தேமாந்தண்பொழிலும், ஆகிய இவைகள் எனலாம்; பார்ப்பார்க்கு - இத்தோற்றத்தைப் பார்க்கின்றவர்களுக்கு உயர் உறு துயர் மிடி புகாமல் அதிர்முரசு இயம்பும் வீதி அந்நகரிற்கு அணிகள் வைத்திடுபடை காட்டும் - மிக்க துன்பத்தைச் செய்கின்ற, வறுமைகள் எல்லாம் உள்ளே புகாமல் இருக்க அதிர்கின்ற முரசு ஒலிக்கும் வீதிகளையுடைய அந்நகரத்திற்கு, வரிசை வரிசையாக காவல் படைகள் வைத்திடுதலைக் காட்டும் (உணர்த்தும்). (எ.று)

முடிபு - செந்நெற்காடும், கரும்பும், கதலியும், கமுகும், தெங்கும், மாம்பொழிலும் ஆகிய இவைகள் முரசு இயம்பும் வீதிகளையுடைய அந்நகரிற்கு மிடி புகாமல் படையணிகளைத் வைத்திருதலைப் பார்ப்பார்க்குக் காட்டும்.

அகநகர் புறநகர் சிறப்பு

497. விருந்தினுக் கிடுவோர் அன்னமந் நகரின்
வேதியர் மடந்தைய ரெல்லாம்
பொருந்துமன் னத்திற் கிடுவன விருந்து
புனல்வயற் செங்கம லங்கள்
வருந்துநுண் ணிடைநன் மாதர்கைம் மலர்க்கு
வண்டினைக் கொடுப்பர் பேரின்பம்
தருந்தனி நகர்சூழ் தடங்கள் வண்டிற்குத்
தாண்மலர் கொடுத்திடு மன்றே 16

(இ.ள்) அந்நகரின் வேதியர் மடந்தையர் எல்லாம் - அந்நகரி னுள்ளே உள்ள அந்தணர் பெண்கள் எல்லோரும்; அன்னம் விருந்தி

Koviloor Digital Library

னுக்கு இடுவார் - அன்னமாகிய சோற்றை விருந்தினர்களுக்குக் கொடுப்பார்; புனல்வயல் செங்கமலங்கள் புறநகரிலேயுள்ள நீரோடு கூடியவயல்களில் உள்ள செந்தாமரைகள் எல்லாம்; பொருந்தும் அன்னத்திற்கு விருந்து இடுவன - வயலில் வந்து பொருந்துகின்ற அன்னப் பறவைகளுக்கு (தேனாகிய உணவை) விருந்துணவாகக் கொடுக்கும்; வருந்தும் நுன்இடை நன்மாதர் - மெலியும் நுண்ணிய இடையை யுடைய நல்ல பெண்கள்; கைமலர்க்கு வண்டினைக் கொடுப்பர் - தங்கள் கையாகிய மலர்க்கு வளையல்களைக் கொடுப்பர். (வண்டு என்று பெயர் கூறப்படும்); பேர்இன்பம் தரும் தனிநகர் சூழ் தடங்கள் - பெரிய இன்பத்தைத் தருகின்ற ஒப்பற்ற அந்நகரைச் சூழ்ந்துள்ள குளங்களெல் லாம், வண்டிற்குத் தாள்மலர் கொடுத்திடும் - வண்டினங்கள் தேனை உண்ணும்படி, தண்டோடு கூடிய தாமரை மலரைக் கொடுக்கும். அன்று - ஏ - அசைகள்; இப்பாட்டு அகநகர், புறநகர் இரண்டையும் புனைந்து கூறுகின்றது; நகரினுள் வேதியர் மடந்தையர், விருந்தினுக்கு அன்னம் இடுவார்; புறநகரில் செங்கமலங்கள் அன்னத்திற்கு விருந்துணவை இடுகின்றது; விருந்து என்பது விருந்துணவாகிய தேனுக்கு ஆகுபெயர். பெண்கள் கைமலர்க்கு வண்டினைக் கொடுப்பர், தடங்கள் வண்டிற்குத் தாள் மலரைக் கொடுக்கும். இவ்வாறு கூறுதலால் இப்பாட்டு முரண் அணியின் பாற்படும். (எ.று)

முடிபு - அந்நகரில் வேதியர் மடந்தையர் எல்லாம் விருந்தினுக்கு அன்னம் இடுவர். செங்கமலங்கள் அன்னத்திற்கு விருந்து இடுவன. நன் மாதர் கைமலர்க்கு வண்டினைக் கொடுப்பர், தடங்கள் வண்டிற்குதாள் மலர் கொடுத்திடும்.

நகரிலுள்ள மறைவர் சிறப்பு

498. இந்நகர் வாழும் மறையவர் செய்யும்
யாகதூ மம்படிந் தன்றோ
பொன்னகர் [1]வாணர் நிறைந்தவா யுளராய்ப்
பொருந்துதல் இந்நகர் மறையோர்
உன்னரும் மனுவால் நெருப்பினை வளர்த்திட்
டொழுகுநீர் காட்டுறின் அன்றிப்
பின்னொரு செயலால் கலியுகம் தன்னில்
[2]பெய்யுநீர், காணுறப் படுமோ 17

Koviloor Digital Library

(பா.ம்) [1]வாழ்நர்; [2]பெருகு

(இ.ள்) இ நகர் வாழும் மறையவர் செய்யும் யாக தூமம் படிந்து அன்றோ - இந்த நகரத்திலே வாழ்ந்திருக்கும் அந்தணர்கள் செய்யும் யாகத்திலிருந்து எழும்புகை, வானுலகத்தில் சென்று, படிந்த காரணத்தினால் அல்லவோ; பொன்னகர் வாணர் நிறைந்த ஆயுளராய் பொருந்துதல் - தேவ உலகமாகிய பொன்னுலகத்தில் வாழ்கின்ற தேவர்கள் நீண்ட ஆயுள் உடையவராய் அதைப் பொருந்தி வாழ்தல் ஆகும்; இ நகர் மறையோர் உன்ன அரும் மனுவால் - இந்த நகரத்தில் வாழும் அந்தணர்கள் நினைத்தற்கரிய மந்திரத்தால் நெருப்பினை வளர்த்திட்டு; ஒழுகுநீர் காட்டுறின் அன்றி - யாக நெருப்பினை வளர்த்திட்டு (அதனால்) வானத்தினின்று ஒழுகுகின்ற மழைநீரைப் பெய்யும்படி செய்தாலன்றி; பின் ஒரு செயலால் கலியுகம் தன்னில் பெய்யுநீர் காணுறப் படுமோ - வேறு ஒரு அறச் செயலால் இக்கலியுகத்தில் மேகம் பெய்யும் நீரை செய்து கொள்ள முடியுமோ (வேறு செயலால் செய்யப்படாது). (எ.று)

முடிபு - மறையவர் செய்யும் யாக தூமம் படிந்தன்றோ பொன்னர் வாணர் நிறைந்த ஆயுளராய்ப் பொருந்துவர். மறையோர் மனுவால் நெருப்பினை வளர்த்திட்டு ஒழுகு நீரைக் காட்டுதலன்றி கலியுகம் தன்னில் பின்னுறு செயலால் பெய்யு நீர்காணுறப்படுமோ; வேள்விப் புகை ஒருவர் மேல் படில் ஆயுள் வளரும், சுடுகாட்டுப் புகை ஒருவர்மேல் படில் ஆயுள் குறையும் என்க.

பசவ தேவரின் பெற்றோர்

499. இளையமா நகரில் அந்தணர்க் கெல்லாம்
இறைமைபூண்டு எனொரு மறையோன்
நினைவெலாம் அரன்றா ளினுமுரை எல்லாம்
நிருமலன் துதியினும் செய்யும்
வினையெலாம் அவன்பூ சனையினும் வைத்தோன்
வேதமும் ஒழுக்கமும் வல்லான்
மனையுளான் எனினும் துறந்தவர்க் கொப்பான்
மற்றவன் நாமம் மாதரசன் 18

(இ.ள்) இளைய மாநகரில் அந்தணர்க்கு எல்லாம் இறைமை பூண்டு உளன் ஒரு மறையோன் - இத்தகைய சிறப்பு வாய்ந்த அப்பெரிய

Koviloor Digital Library

நகரில், ஒரு மறையோன் அவ்வூரிலுள்ள மறையவர்கட்கெல்லாம் தலைமையை மேற்கொண்டுள்ளோன்; நினைவு எலாம் அரன்தாளினும் உரை எல்லாம் நிருமலன் துதியிலும், செய்யும் வினைஎலாம் அவன் பூசனையினும் வைத்தோன் - அத்தகையோன் தனது எண்ணங்கள் அனைத்தையும், இறைவனுடைய திருவடியிலும், தனது மொழிகளை எல்லாம் இறைவனுடைய புகழைக் கூறுவதிலும், தான் செய்யும் தொழில் எல்லாம் அவனைப் பூசிக்கும் தொழிலினிடத்தும், வைத்தோன்; வேதமும் ஒழுக்கமும் வல்லான் - வேதத்தை ஓதுதலிலும், வேதம் கூறிய முறைப்படி நடத்தலிலும் வல்லவன்; மனையுளான்; எனினும் துறந்தவர்க்கு ஒப்பான் - அவன் இல்லற நெறியில் நின்றானாயினும், துறந்தவரைப் போலப் பற்றின்றி ஒழுகுவான்; மற்று அவன் நாமம் மாதரசன் - அவனது பெயர் மாதரசன் என்பதாம். மற்று - அசை. (எ.று)

முடிபு - இனைய மாநகரில் ஒருமறையோன், அந்தணர்க்கெல் லாம்இறைமை பூண்டுள்ளோன். நினைவெலாம் அரன் தாளினும், உரை எலாம் நிருமலன் துதியினும், செய்யும் வினை எலாம் அவன் பூசையினும் வைத்தோன். வேதமும் ஒழுக்கமும் வல்லான், மனையு ளான் எனினும் துறந்தவர்க்கு ஒப்பான். அவன் நாமம் மாதரசன். பசவ புராணம், பெயரை மாதி ராசையன் என்று கூறும், அப்பாடல்;

அன்னநன் னகரில் வாழு மந்தணர்க் கதிக ரானோர்
துன்னரும் தருமசீலர் சோமசேகரன் பால் லன்பர்
அன்னவர்க் கன்னை யொப்பா ரறுதொழில் அகலா நீரார்
மன்னரும் புனித நெஞ்சார் மாதிரா சைய ரென்பார்

(திருவவதாரச் சருக்கம் 28)

500. திருந்திய அனையான் தேவிதன் நாமம்
செப்பின் மாதாம்பிகை என்பாள்
அருந்ததி முதலாங் கற்புடை யார்தம்
அருநிலை ஊறின்றி முற்ற
நிரந்தரம் அவளைக் கைகுவித் திறைஞ்சி
நினைந்துபின் பாயலில் படுப்பார்
கருந்தடம் கயற்கண் பூங்கொடி யனையாள்
கற்பினை யாவரே புகல்வார் 19

Koviloor Digital Library

(இ.ள்) திருந்திய அனையான் தேவி தன் நாமம் செப்பின் மாதாம்பிகை என்பாள் - மனம்-சொல் - உடம்பு என்கின்ற மூன்றையும் நன்னெறியில் செலுத்தும் அத்தகையோனுடைய மனையாளின் பெயரைக் கூறின் மாதாம்பிகை என்று வழங்கப்படுவாள்; அருந்ததி முதலாம் கற்புடையார்தம் அருநிலை ஊறுஇன்றி முற்ற - அருந்ததி முதலான கற்புடைய பெண்கள் எல்லாம் தங்களுடைய கற்பு என்னும் அரிய நிலை இடையூறு இன்றி முடிவதற்கு; நிரந்தரம் அவளைக் கைகுவித்து இறைஞ்சி நினைந்துபின் பாயலில் படுப்பார் - நாள்தோறும் மாதாம்பிகையை கை குவித்து வணங்கி, மனத்தால் நினைந்து, அதன் பின்பே உறங்கச் செல்வார்; கருந் தடம் கயல்கண் பூங்கொடி அனையாள் கற்பினை யாவரே புகல்வார் - (கற்புடைப் பெண்களே இவளை வணங்குவார் என்றால் இவளுடைய கற்பினை எவர் எவ்வாறு சிறப்பித்துச் சொல்வார், (ஒருவராலும் கூற முடியாத கற்புடையாள் என்பது கருத்து). (எ.று)

முடிபு - அனையான் தேவி நாமம் செப்பின் மாதாம்பிகை என்பாள், கற்புடையார் தம் அருநிலை ஊறுஇன்றி முற்ற, நிரந்தரம் அவளை இறஞ்சி நினைந்து, பாயலில் படுப்பார் (என்றால்) அனையாள் கற்பினை யாவரே புகல்வார்; படுக்கப் போகும்போதும், படுத்து எழும்போதும், தெய்வம் முதலானவற்றைத் தொழும் வழக்கம் உண்டு;

இத்தகை மாதி ராசுக் கினியராந்த தேவியார் பேர்
சுத்தமா தாம்பை யார் பொய்த் துகளிலார் குலத்தின் தூயார்
அத்தனார் பத்தி மிக்கா ராருயிர்க் கிரக்க முள்ளார்
நித்தமாங் கற்பி னிற்பார் நிகரில்லார் நீதி நீங்கார்

என்னும் பசவ புராணம் திருவவதார சருக்கம் 29ம் பாடலால் மாதாம்பிகையை "மாதாம்பையார்" எனச் சிறப்பித்துக் கூறுமாறு அறிக.

மாதாம்பிகையின் பெருமை புனைந்துரையன்று பட்டாங்கே என்தனை காரணங்களால் வலியுறுத்திக் கூறியது

501. **பூங்கொடி யனமா தாம்பிகை பெருமை**
புனைந்துரை யன்று பட்டாங்கே
ஓங்கிய அபர சிவனென வேதம் உரைத்திடும்
அருள் நந்தி வந்தான்

Koviloor Digital Library

தாங்குற அவள்தன் வயிற்றிடை அதனால்,
தக்கவர், தகவிலர், என்ப(து)
ஆங்கவர் பயந்த புதல்வனால் தெளிய
அறிமினென்று அறைகுவர் பெரியோர்

(இ.ள்) பூங்கொடி அன்ன மாதாம்பிகை பெருமை புனைந்துரை அன்று - பூங்கொடியை ஒத்த மாதாம்பிகையினுடைய பெருமை (கற்புடைப் பெண்களெல்லாம் இவளை வணங்குவர் என்று கூறிய பெருமை) கற்பனையாகச் சொல்லியது அன்று; ஓங்கிய அபரசிவன் என வேதம் உரைத்திடும் அருள் நந்தி அவள் தன் வயிற்றிடை தாங்குற வந்தான் அதனால் பட்டாங்கே - உயர்ந்த இரண்டாம் சம்பு என வேதத்தாலே சொல்லப்படும் அருள் நந்தி தேவன் அவளுடைய வயிற்றின்கண் சில காலம் இருக்க தங்கி இருக்கப் பிறந்தான். அக் காரணத்தினாலே அவளுடைய இப்பெருமை உண்மையே. தக்கவர் தகவிலர் என்பது ஆங்கு அவர் பயந்த புதல்வனால் தெளிய அறிமின் என்று பெரியோர் அறைகுவர் - (மேலே கூறிய கூற்றை வலியுறுத்த) திருவள்ளுவர் முதலிய பெரியோர் எல்லாம். இவர் தக்கவர் இவர் தகவிலர் என்பதை அவர் பெற்ற புதல்வனாலேயே தெளிய அறிந்து கொள்ளுங்கள் என்று கூறியுள்ளனர். அதனாலே அவள் பெருமை புனைந்துரையன்று பட்டாங்கே. (எ.று)

அம்மைமா தாம்பை செய்த வரிய புண்ணிய மென்
சொல்வாம்
எம்மையா ளிரண்டாஞ் சம்பு வென் னு நந்தீச னார்தன்
செம்மையா முதரந் தன்னிற் செறிந்து நற் புதல்வராக,
இம்மையிற் பெற்றபேறு யாவர்க்கு எய்தொ ணாதால்

(பசவபுரா. திருவவதா - சருக்க 37ம் பாட்டால்)

மாதாம்பிகையின் சிறப்பை அறிக.

(முடிபு) - மாதாம்பிகை பெருமை புனைந்துரையன்று, அபரசிவம் என்று வேதம் உரைத்திடும் அருள்நந்தி அவள்தன் வயிற்றிடை, சில காலம் தாங்குற வந்தான். அக்காரணத்தால் பட்டாங்கே. (புனைந்துரை யன்று) பெரியோர் தக்கவர் தகவிலர் என்று ஆங்கவர் பயந்த புதல் வனால் தெளிய அறிமின் என்று அறைகுவர்,

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்ததார் காணப் படும்

Koviloor Digital Library

என்னும் குறட்பாவினை சுவாமிகள் இப்பாடலில் மிக அழகாக எடுத்தாண்டுள்ளார்.

மாதரசன் - மாதரசி இருவரையும் சிறப்பித்தது

502. ஐந்தொழில் ஒருவன் திருவுளம் மகிழும்
அறுதொழி லாளன் மாதரசன்
பைந்தொடி கொழுநன் தொழுதெழு தொழிலாள்
பரிந்துதீ வளர்ப்பவன் மறையோன்
செந்திரு அனையாள் விருந்தினர் வயிற்றில்
தீயவிப் பவள்இவர் பெருமை
நந்தெழில் மலரோன் சொன்மகள் இருக்கும்
நாவினும் [1]நவின்றிடப் படாதே 21

(பா.ம்) [1]புகன்றிடை

(இ.ள்) மாதரசன் ஐந்தொழில் ஒருவன் திருவுளம் மகிழும் அறுதொழிலாளன் - மாதரசன் என்னும் மறையோன், படைப்பு முதலான ஐந்து தொழில்களைச் செய்யும் ஒருவனாகிய இறைவனுடைய திருவுளம் மகிழும்படி, வேட்டல் முதலான ஆறு தொழில்களைச் செய்பவனாவன்; பைந்தொடி கொழுநன் தொழுதெழுதொழிலாள் - (அவன் மனைவியாகிய) பசியவளையலையணிந்த மாதாம்பிகையான வள் தன் கணவனை நாட்காலத்தில் வணங்கிக் கொண்டு (தன் வீட்டுக்) இற்கடன்களைச் செய்யும் தொழிலுடையவள்; மறையோன் பரிந்து தீ வளர்ப்பவள் - அவ்வந்தணனாகிய மாதரசன் விரும்பி யாகத்தீயை வளர்ப்பவன்; செந்திருவனையாள் விருந்தினர் வயிற்றில் தீ அவிப்பவள் - இலக்குமியை ஒத்த மாதரசி தம் வீட்டிற்கு வரும் விருந்தினரின் வயிற்றின்கண் உள்ள பசியாகிய தீயை போக்குபவள்; இவர் பெருமை - இவ்விருவருடைய பெருமைகள், நந்தொழில் மலரோன் சொன்மகள் இருக்கும் நாவினும் நவின்றிடப் படாதே - ஆக்கம் பெறும் அழகை யுடைய தாமரை மலரின்கண் வீற்றிருக்கும், பிரமனுடைய, நாவினாலும் சொல்ல முடியாது, அது எத்தகைய நாவெனில், கலைமகள் இருக்கும் நா என்க. (எ.று)

(முடிபு) மாதரசன், அறுதொழிலாளன், பைந்தொடி கணவனை திருவனையாள், விருந்தினர் வயிற்றில் தீ வளர்ப்பவன், திருவினையாள், விருந்தினர் வயிற்றில் தீ அவிழ்ப்பவள், பெருமை, மலரோன்

Koviloor Digital Library

நாவினும்புகன்றிடப்படாது; எழுதொழிலாள் என்பது, எழுதல் என்னும் வினையை உணர்த்துவதே அன்றி, ஓசையால் ஏழு என்னும் எண்ணுப் பொருளையும் உணர்த்தும். எனவே, ஐந்தொழில், அறுதொழில், எழுதொழில் என வந்துள்ளவை எண்ணலங்காரமாம்; கணவன் அறு தொழிலாளன், மனைவி எழு தொழில் உடையவள், அவன் தீ வளர்ப்பான். இவள் தீ அவிப்பாள். என வந்துள்ளது முரண் அணியாகும்.

நந்தி வானவன் உதித்தது

503. இன்னமா தரசன் தேவிதன் வயிற்றில்
இவ்வுல கெலாஞ்செய் புண்ணியத்தான்,
[1]மன்னுமா ரளிகள் விருந்துணக் காமர்
வல்லியின் மலர்மலர் வதுபோல்
என்னையா ளுடைய நந்திவா னவனறா
னெய்திவந் துதித்தனன் அன்று
சென்னியால் அமரர் தொழுது பூமாரி
சிந்தினர் துந்துபி முழங்க 22

(பா.ம்) [1]மன்னுமா கிளிகள்

(இ.ள்) இன்ன மாதரசன் தேவி தன் வயிற்றில் - இத்தகைய மாதரசன் தேவியாகிய, மாதாம்பிகை தன் வயிற்றில்; இவ்வுலகு எலாம் செய் புண்ணியத்தால் - இந்த உலகனைத்தும் செய்த நல்வினையினாலே; மன்னும்ஆர் அளிகள் விருந்து உண காமர் வல்லியின் மலர் மலர்வதுபோல் - பொருந்திய நிறைந்த வண்டுகள் புதிய உணவை உண்ண, அழகிய கொடியின்கண், மலர் மலர்வதைப் போல; என்னை ஆளுடைய நந்தி வானவன்தான் எய்தி வந்து உதித்தனன் - என்னை அடிமையாக உடைய நந்திதேவன் கைலையினின்றும் நிலவுலகத்தை அடைந்து வந்து, திரு அவதாரம் செய்தார்; அன்று சென்னியால் அமரர் தொழுது பூமாரி, துந்துபி முழங்க சிந்தினர் - அப்பொழுது தேவர் எல்லாம் தலையால் வணங்கி, மலர் மாரியை துந்துபி என்னும் வாத்தியம் முழங்க பொழிந்தார்கள். (எ.று)

(முடிபு) மாதரசன் தேவி வயிற்றிலே, புண்ணியத்தால் அளிகள் விருந்துன வல்லியின் மலர் மலர்வது போல, நந்திவானவன் தான் எய்தி வந்து உதித்தனன். அன்று அமரர் சென்னியால் தொழுது பூமாரிடைய துந்துபி முழங்க சிந்தினர்; இங்கு வல்லி மலர் என்றது, நால் வகை மலருள், கொடிப் பூவைக் குறித்தது.

Koviloor Digital Library

நந்தி தேவர் தோன்றியபோது நிகழ்ந்த நிகழ்ச்சிகள்

504. எங்குரு நந்தி தோன்றுநாள் புதுமைஎன்
சொல்வாம் கண்டு முட்டென்னும்
[1]வெங்குண அமணர் உளத்[2]தெரி மழுவோன்
வேடங்கண் டஞ்சலி செய்ய
அங்கொரு நேயம் பிறந்தது திருமால்
அடியவர் உளத்தினில் எங்கள்
சங்கரன் இறைவன் எனவொரு ஞானம்
சார்ந்தது தமையறி யாமல் 23

(பா.ம்) [1]எங்குள அமணர்; [2]எறி மழுவோன்

(இ.ள்) எம் குரு நந்தி தோன்றும் நாள் புதுமை என் சொல்வாம் - எம்முடைய குருவாகிய நந்திதேவன் அவதரித்த காலத்திலே நிகழ்ந்த புதுமைச் செயலை எத்தகையது என்று சிறப்பித்துக் கூறுவாம்? (அவையாவை எனில்?); கண்டு முட்டு என்னும் வெம்குண சமணர் உளத்து - பிற சமயவாதிகளைப் பார்த்தாலேயே தீட்டு என்று கருதும் கொடிய குணமுடைய சமணசமயிகளுடைய மனத்திலே; எரிமழுவோன் வேடம் கண்டு அஞ்சலி செய்ய அங்கு ஒரு நேயம் பிறந்தது - எரிகின்ற மழுவை ஏந்திய சிவபெருமானுடைய திருநீறு உருத்திராக்கம் முதலிய வேடங்களைக் கண்டு; கைகூப்பி வணங்குமாறு அவர்களிடத்தே ஒப்பற்ற அன்பு பிறந்தது; திருமால் அடியவர் உளத்தினில் - திருமாலின் தொண்டராகிய வைணவருடைய மனத்திலே, எங்கள் சங்கரன் இறைவன் என ஒரு ஞானம் தமையறியாமல் சார்ந்தது - எம்முடைய சிவபெருமானே பதி எனக் கருதும் உண்மை அறிவு, தங்களை அறியாமலேயே தோன்றிற்று. தமையறியாமலே என்பதை நேயம் பிறந்தது என்பதனோடும் கூட்டிக் கொள்க; உயிர்களாகிய தங்களுக்குத் தெரியாமல், தெய்வத்தின் திருவருளால் தோன்றிற்று நேயமும், ஞானமும். (நேயம் அன்பு) (எ.று)

(முடிபு) நந்தி தோன்று நாள் புதுமை என் சொல்வாம், அமணர் உளத்து எரிமழுவோன் வேடங்கண்டு அஞ்சலி செய்ய தமை அறியாமை ஒரு நேயம் பிறந்தது. திருமால் அடியவர் உளத்தினில் சங்கரன் இறைவன் என ஒரு ஞானம் தமை அறியாமல் பிறந்தது.

Koviloor Digital Library

505. கொலைகள வழுக்கா றவொவொடு வெகுளி
கொடுஞ்சொல் பொய்பயனில கூறல்
நிலையழீஇ ஒருவன் செய்ந்நன்றி மறத்தல்
நிந்தனை வஞ்சனை பிறர்தம்
சிலைநுதல் மடவார்க் கருதலென் றினைய
தீமைக ளியாவும் போயினவால்,
நலமலி தரும [1]மூர்த்தி யாகிய
நன்நந்திவா னவன்புவி வருநாள் 24

(பா.ம்) [1]மூர்த்தியாகியவின்

(இ.ள்) நலம் மலிதரும மூர்த்தியாகிய நல் நந்திவானவன் புவி வரும் நாள் - நற்பண்புகள் மிகுந்த அறவடிவாகிய நல்ல நந்திதேவன் உலகத்தில் வந்து அவதரித்த காலத்திலே, கொலை, களவு, அழுக்காறு, அவாவொடு வெகுளி, கொடும் சொல், பொய், பயன்இல கூறல், நிலை அழீஇ ஒருவன் செய்நன்றி மறத்தல், நிந்தனை, வஞ்சனை, பிறர்தம் சிலைநுதல் மடவார் கருதல் என்று இனைய தீமைகள் யாவும் போயின; கொலையும், களவும், பொறாமையும் ஆசை சிதைவால் உண்டாகும் சினமும், வன்சொல்லும், பொய்ச் சொல்லும், பயனில்லாத சொற்களைக் கூறலும், அறநிலை பிறழ்ந்து, ஒருவன் செய்த நன்றியை மறத்தலும், பழித்துக் கூறலும், வஞ்சித்தல் (ஏமாற்றுதலும்) பிறருடைய வில்லை ஒத்த நெற்றியுடைய மனையாளை தழுவ நினைத்தலும், என்று கூறப்பட்ட இத்தகைய தீவினைகள் எல்லாம் போய்விட்டன. மனத்தாலும், சொல்லாலும், உடம்பாலும் செய்கின்ற தீவினைகள் எல்லாம் போய்விட்டன என்பது கருத்து. (எ.று)

முடிபு - நந்திவானவன் புவிவரு நாள், கொலை களவு முதலாகக் கூறப்பட்ட இனைய தீமைகள் யாவும் போயின. ஆல் - அசை.

கூடல சங்கமேசன் நந்தி தேவருக்கு லிங்கம் முதலானவற்றை அணிதல்

506. தாடலை தந்திங் கெம்மையாள் நந்தி
தாயகட் டினுநின்று தரைமேல்
ஏடவிழ் மலர்வாண் முகமது தோன்ற
எழுந்தரு ளுதன்முனங் குருவாய்க்

Koviloor Digital Library

கூடல சங்க மேசன்றாய்க் கொளித்துக்
குறுகினன் னுதலின் நீறணிந்து
வீடருள் பரம சிற்கன லிங்கம்
மெய்யுறத் தரித்தனன் அம்மா 25

(இ.ள்) தாள் தலை தந்து இங்கு எம்மைஆள் நந்தி - தன்னுடைய திருவடியை, எங்கள் தலைக்குத்தந்து இங்கு எங்களை குருவாக ஆட்கொள்ளும் நந்திதேவன்; தாய் அகட்டினும் நின்று தரைமேல் ஏடுஅவிழ் மலர்வாள். முகம் அது தோன்ற எழுந்தருளுதல் முனம் - தாயின் வயிற்றின் கண்ணும் வாழ்ந்து, நிலத்தின்மேல் இதழ்மலரும் தாமரை மலர் போலும் ஒளிபடைத்த முகமாகிய அது உதிக்க அவதரிக்கும் முன்னே; கூடல சங்கமேசன் குருவாய் தாய்க்கு ஒளித்துக் குறுகி - கூடல சங்கமத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே குருவாகி, மாதாம்பிகை யாகிய தாய்க்கு தன்னுருவைக் காட்டாமல் மறைத்துக் குறுகி; நல் நுதலில் நீறு அணிந்து - நல்ல நெற்றியிலே திருநீற்றைத் தரித்து; வீடுஅருள் பரம சித்கனலிங்கம் மெய்யுறத் தரித்தனன் அம்மா - முத்தியை அளிக்கும் மேலான -நுண்ணிய ஞானமே, தூலமாய்ப் பரிணமித்த இட்டலிங்கத்தை உடம்பிலே பொருந்த கழுத்திலே தரித்தான். இச்செயல் வியப்பு. அம்மா - வியப்பிடைச் சொல். (எ.று)

முடிபு- நந்தி தாய் அகட்டினும் நின்று தரைமேல் முகம் தோன்ற எழுந்தருளுதல் முன்னம், கூடலசங்கமேசன், குருவாய், தாய்க்கு ஒளித்துக் குறுகி (நந்தியாகிய குழந்தைக்கு) நீறு அணிந்து இலிங்கம் மெய்யுறத் தரித்தனன், அம்மா; எம்மை ஆளும் தகுதி படைத்த நந்தி தாயின் வயிற்றிலும் தங்கினார் என்று உம்மை கொடுத்துக் கூறினார். இது இழிவு சிறப்பும்மை; சித்தாந்த சிகாமணி இட்டலிங்கத்தை சித்கன பரிணாம லிங்கம் என்று கூறும், நுண்மையான சித்தே தூலமாய் பரிணமித்த இஷ்டலிங்கம் என்று சித்கன பரிணாமலிங்கத்திற்குப் பெயர். இதற்குப் பொருள் நுண்மையான சித்தே, தூலமாய் பரிணமித்த லிங்கம் எனப் பொருளாகும். (இலிங்க தாரணத்தலம் 22ம் பாட்டு; சித்தாந்தசிகாமணி)

507. தரித்தபின் தனது மேனிதோன் றாமல்
தாயெதிர் நின்றிட பப்பேர்

Koviloor Digital Library

திரித்துநல் வசவன் என்றுபே ரிட்டுச்
சென்றனன் சிவன்தனைக் குருவாய்
ஒருத்தர்தம் இடத்தில் பாவனை செய்கென்
றுரைப்பவர் உரைகெடத் தானே
அருட்குரு வடிவாய் வந்தருள் புரிந்த
ஆலமார் சூலபா ணியனே 26

(இ.ள்) சிவன் தனை குருவாய் ஒருத்தர்தம் இடத்தில் பாவனை செய்க என்று உரைப்பவர் உரைகெட = சிவனை குருவாய் ஒருவரிடத்திலே பாவனை செய்க என்று கூறுபவர்களின் சொல் கெடும்படி; தானே அருள் குருவடிவாய் வந்து அருள் புரிந்த ஆலமார் சூல பாணியனே - பாவனைப் பொருளாகிய தானே குருவடிவாக வந்து அருள்புரிந்து விஷத்தை உண்டு சூலத்தை ஏந்தும் இறைவன்; தரித்தபின் = இஷ்டலிங்கத்தை மேனியில் அணிந்தபின்; தனது மேனி தோன்றாமல் தாய் எதிர் நின்று = தன் வடிவம் தெரியாதபடி தாய்க்கு முன்னாலே நின்று; இடப்போ் திரித்து நல்வசவன் என்று பேரிட்டு சென்றனன். இடபம் என்ற பெயரை மாற்றி வசவ என்கின்ற பெயரை வைத்துச் சென்றனன். (எ.று); உபதேசிக்க வந்த குருவை சிவனாக பாவிக்க வேண்டுமென அறிஞர் கூறுவர். அவர் உரைகெட, அச்சிவனே குருவாக வந்து வசவேசருக்கு அருள்செய்தார் என்பது கருத்து.

முடிபு - ஆலமார் சூலபாணியன், தரித்தபின், தனது மேனி தோன்றாமல், தாய் எதிர் நின்று, இடபப் பேர் திரித்து வசவன் என்று பெயரிட்டுச் சென்றனன். (வசவபுராணம் திருவவதாரச் சருக்கம். 52-53ம் பாடல்களைக் காண்க)

சுற்றத்தார் இந்நிகழ்ச்சியை அறிந்து மகிழ்ந்தது

508. பிறந்தமெய்ஞ் ஞானப் பிள்ளைநன் நுதலில்
பெருகொளி நீறுமொண் களத்தில்
சிறந்துள அமல லிங்கமும் கண்டு
செறிந்தவர் அனைவரும் வியந்து
மறைந்தரன் குருவாய் வந்திவை புனைந்து
மகவினை வசவனென் றொருபேர்
அறைந்தனன் என்ன அறிந்தனர் அமலன்
[1]அறிவுள் நின்று அறிவிக்க அன்றே 27

Koviloor Digital Library

(பா.ம்) [1]அறிவில் நின்றறிவிக்க

(இ.ள்) செறிந்தவர் அனைவரும் - அங்கே சுற்றியிருந்த சுற்றத்தாரனை வரும்; பிறந்த மெய்ஞ் ஞானப் பிள்ளை நல்நுதலில் பெருகு ஒளி நீறும், ஒண்களத்தில் சிறந்துள அமல லிங்கமும் கண்டு வியந்து = பிறந்த உண்மையான அறிவினையுடைய மகவின் நல்ல நெற்றியிலே ஒளிபெருகும் திருநீறும், கழுத்தில் சிறப்பமைந்தஇட்ட இலிங்கமும் ஆகிய இவற்றைப் பார்த்து வியப்படைந்து; அரன் மறைந்து குருவாய் வந்து இவைபுனைந்து மகவினை வசவன் என்று ஒரு பேர் அறைந்தனன் என்ன அமலன் அறிவுள் நின்று அறிவிக்க அறிந்தனர் - சிவபெருமான் குருவடியாய் மறைந்து வந்து, திருநீற்றையும் இட்டலிங்கத்தையும் அணிந்து, குழந்தைக்கு வசவன் என்ற ஒப்பற்ற பெயரை வைத்தனன் என்று இறைவன் தங்கள் அறிவுள் நின்று அறிவிக்க அவர்கள் அறிந்தனர். (எ.று)

முடிபு- செறிந்தவர் அனைவரும், பிறந்த பிள்ளை நுதலில் நீறும் களத்தில் லிங்கமும் கண்டு வியந்து, அரன் குருவாய் மறைந்து வந்து இவை புனைந்து மகவினுக்கு வசவன் என்று ஒரு பேர் அறைந்தனன் என்ன. அமலன் அறிவுள் நின்று அறிவிக்க அறிந்தனர்; அன்று = ஏ - அசை. மகனை என்ற இரண்டாம் வேற்றுமையை நான்காம் வேற்றுமையாகத் திரித்துக் கொள்க;

இக்குழந்தையைக் கண்டோரெல்லாம் நந்தி தேவரே இக்குழந்தை என அறிந்தது

509. குறில்வழி லகரம், தனிநிலை யாயும்
கூடிய தகரமுன், னெழுத்தென்(று)
அறிகுறி வடிவம் திரிதல்போல், நந்தி
அடல்விடை மெய் திரிந்துறினும்
நறுமலர் விழியில் கண்டவர் எல்லாம்
நந்தியே என்றுளம் மகிழ்ந்தார்
பெறுதவம் முயன்ற அன்னையும் பிதாவும்
பெறுமுவகை யினையார் உரைப்பார் 28

(இ.ள்) குறில்வழி லகரம் தனிநிலை ஆயும் - நிலைமொழி ஈற்றில் வந்துள்ள தனிக் குற்றெழுத்தின் பின் வந்த லகரமெய், ஆயுத எழுத்தாகத் திரிந்திருந்தும்; கூடிய தகரம் - வருமொழி முதலில் வந்த தகர எழுத்து; முன் எழுத்து என்று அறிகுறி வடிவம் திரிதல்போல் = திரிந்த ஆயுத

Koviloor Digital Library

எழுத்தை, முன் எழுத்தாகிய லகரம் என்றே கருதிக் கொண்டு, அறிதற்கு அடையாளமாகிய தன் தகர வடிவம் றகரமாகத் திரிதல் போல; (லகரத்தின் முன் தகரம் றகரமாகத் திரியும் என்பது விதி) இதை உவமைப் பொருள் என்க; நந்தி அடல்விடை மெய்திரிந் துறினும் - இந்நந்தி தேவர் தன் வலிய இடப வடிவமெய், மாறி, மக்கள் வடிவத்தைப் பெற்றுப் பிறந்திருந்தாலும்; நறுமலர்விழியில் கண்டவர் எல்லாம் நந்தியே என்று உளம் மகிழ்ந்தார் - மலர் போன்ற விழியால், இக்குழந்தையைக் கண்டவர் அனைவரும் 'மானிடப் பிள்ளை அன்று, நந்தியே' என்று மாறிய உள்ளத்தோடு மகிழ்ச்சி அடைந்தார்கள்; பெறுதவம் முயன்ற அன்னையும் பிதாவும் பெறு உவகையினை யார் உரைப்பார் - இம்மகவைப் பெறுதற்குத் தவத்தைச் செய்த தாயும் தந்தையும் பெற்றிருக்கும் உவகையினை யார்தான் எடுத்துக் கூற வல்லவர்?. (எ.று)

குறில் லகரம், ஆயுதமாகத் திரிந்திருந்தும், அதன்முன் வருமொழி முதலில் வந்த தகரம், நிலைமொழி ஈற்றிலுள்ள திரிந்த ஆயுதத்தை அந்த லகரமாகவே கருதிக் கொண்டு தகரம் றகர மாகவே மாறுகிறது. இது ''திரிந்ததென் திரிபு அது'' என்னும் நயமாகும். இந்நயம் தோன்ற அமைந்த இலக்கண விதியை, சிவப்பிரகாச அடிகளார் உவமையாக எடுத்துக் கொண்டு உவமேயத்தைக் கூறுகின்றார். எவ்வாறெனில் நந்தி எம்பெருமான் அடியவர்க்கு அருள்புரிய (சரணர்களுக்கு அருள்புரிய) மண்ணுலகின் கண் உருமாற்றி, வசவண்ணராக வந்து அவதரித்தனர். அவ்வாறு வசவண்ணராகக் காட்சி அளிப்பினும், கண்டசரணர் அனைவரும் நந்தி எம்பெருமானாகவே கருதி மகிழ்ச்சி அடைந்தனர். அஃது எது போல எனின், குற்றெழுத்தின் பின் நின்ற லகரமெய் தகரமொழிமுதல்வர, ஆய்தமாகத் திரியும், அவ்வாறு ஆய்தமாகத் திரிந்தாலும், அதனை வருமொழித்தகரம் ஆயுதமாகக் கொள்ளாமல், லகர மெய்யாகவே கொண்டு மயக்க விதி இன்மையால் றகர மாகத் திரியும். அது திரிவதுபோல, இந்நிகழ்ச்சி எனக் கொள்க.

முடிபு - குறில்வழிலகரம் **தனிநிலை** ஆயும், கூடியதகரம் முன் எழுத்து என்று அறிகுறி வடிவம் திரிதல்போல், நந்திவிடைமெய் திரிந்துறினும், கண்டவர் எல்லாம் நந்தியே என்று மகிழ்ந்தனர். அன்னையும் பிதாவும் பெறும் உவகையினையார் உரைப்பார்; பெருந்தவம் முயன்ற அன்னை என்றது, இவருடைய தாய் தனக்கு மகவு இன்மையால், மகப்பேறு வேண்டி தன் ஊரில் உள்ள சிவன் கோவிலில்

Koviloor Digital Library

உள்ள நந்தியை, நந்தி நோன்பு நோற்றாலாகிய தவத்தைச் செய்தார். அத்தவத்தின் பயனாக அவர் வயிற்றில் எம்பெருமான் மகவாய்த் தோன்றினார். இச்செய்தியினை (பசவபுராணத்து திருவவதாரத்துப் படலத்துக காண்க); ''நந்திதேவர் தமது பழமையாகிய இடபவடிவம் திரிந்து வந்திருந்தவரெனினும், கண்டோர் யாவரும் இவர் கைலாசத் திலுள்ள நந்தி தேவரே என்றறிந்து மனமகிழ்ந்தார்கள்'' என்பது காஞ்சி புரம் இராமானந்தயோகி அவர்களின் உரைநடை (பிரபுலிங். வசனம் நூல் 106ம் பக்கத்தில் காண்க)

வசுவதேவர் கலைகளை ஓதாது உணர்ந்தது

510. ஈன்ற நாள் தொடங்கிச் செய்கடன் முற்றும்
இயற்றினன் மாதர சன்றான்
தோன்றுமோர் குழவிப் பதங்கடந் தெங்கோன்
சொல்குரு முன்னுறுங் காலை
ஆன்றமா மறைகள் [1]முதலவாத் தான்முன்
அறிந்துள கலையெலாம் அறிந்தான்
சான்றதாம் மதியம் [2]இரவுவ ந்திருப்ப
[3]தன்கதிர் தானடை முதல்போல் 29

(பா.ம்) [1]முதலவாய்; [2]இரவி வந்திருப்ப; [3]தண்கதிர்

(இ.ள்) மாதரசன்தான் - மாதரசன் என்னும் தந்தை; ஈன்ற நாள் தொடங்கி செய்கடன் முற்றும் இயற்றினன் - வசவதேவரை மகவாகப் பெற்ற காலந் தொடங்கி, செய்கடன் முற்றும். மறையவர் மரபினுக்கு மகப் பிறந்தால் செய்ய வேண்டிய கடனாகிய சடங்குகளை எல்லாம் (சடங்கு செய்வாரைக் கொண்டு) செய்வித்தான்; எம்கோன் தோன்றுமோர் குழவிப்பதங் கடந்து சொல்குரு முன்னுறும் காலை = எம் தலைவனாகிய வசவதேவன் தான் பிறந்த குழவிப் பருவத்திதைக் கடந்து, கற்கும் பருவமாகிய உபநயன காலம்வர அப்பொழுது உபநயனத்தைக் கற்றுக் கொடுக்கும் குரு முன்னாலே வந்து அமர்ந்தபொழுது; தான்முன் அறிந்துள்ள ஆன்ற மாமறைகள் முதலவா் கலை எலாம் அறிந்தான் = (அவனிடம் கற்றுக் கொள்ளாமல்) தாம் முற்பிறவியில் அறிந்து கொண்டிருந்த அகன்ற வேதம் முதலான எல்லாக் கலைகளையும் அறிந்து கொண்டான் எதுபோல் எனில் சான்ற தாம் மதியம் இரவு வந்திருப்ப தன் கதிர்தானடைகுதல் போல் - எல்லாக் கலைகளும் அமைந்த திங்கள், இரவுக்காலம் வந்து தங்க, அவ் இரவுக் காலத்தின்முன்

Koviloor Digital Library

தன்னுடைய கதிர்க்கலைகளை எல்லாம் தான் பெற்றுக் கொண்டு விளங்குதல்போல என்க. (எ.று)

இப்பாட்டைக் கற்பவர்கள் வசவேசருடைய வரலாற்றைக் கற்றுத் தெரிந்து கொண்டு, இப்பாட்டிற்கு பொருள் உணர்ந்து சொல்லுதல் வேண்டும். தந்தை வசவ தேவர்க்கு உபநயனம் செய்யும் பருவம் வர, நாள் குறித்து அச்சடங்கைச் செய்யத் தொடங்கினார். உபநயனச் சடங்கை செய்யும் புரோகிதரும், சுற்றத்தினரும். தந்தை முதலானவர் களும் கூடி இருந்து அச்சடங்கை செய்யத் தொடங்கினார்கள்; வசவதேவர் அவர்கள் முன் எனக்கு சிவபெருமானே குருவாக வந்து சிவலிங்க தாரணம் முதலானவற்றைச் செய்து விட்டபடியால், அவர்கள் பூநூல் அணியும் சடங்காகிய உபநயனதை ஏற்காது மறுத்து விடுகின்றார். எனவே, உபநயனம் பெற்று மறையவரிடத்து வேதம் முதலான கலைகளைக் கற்றுக் கொள்ளவில்லை. அவற்றை எல்லாம் இவர்தான் ஓதாது உணர்ந்தார் என்க; அந்த வரலாற்று நிகழ்ச்சிகளை எல்லாம் சுவாமிகள் வெளிப்படக் கூறாமல், உவமையினாலே பெற வைத்தார். இங்கு இருளைப் போல, உபநயனம் செய்ய வந்த கூட்டத்தினரும், இருளின் முன் ஒளிபடைத்த திங்கள் போல, தான் முன்னுணர்ந்த கலை எல்லாம் உணர்ந்து, அறிவுடையராய் விளங்கிய நிலையும் உவமேயப் பொருளாக அமைந்தன. 'இரவி வந்திருப்ப' என்ற பாடத்தைக் கொண்டு இப்பாட்டிற்கு உரை கூறினால், அவர் வரலாற்றுச் செய்திகள் எல்லாம் அமையா. குறிப்பு - எனக்கு பிரபுலிங்க லீலை ஆராய்ச்சிக்கு நான்கு ஓலைச் சுவடிகள் கிடைத்தன. அவற்றுள் ஒரு பிரதியிலும், இரவி வந்திருப்ப'' என்ற பாடமே இல்லை. எல்லாவற்றிலும் இரவு வந்திருப்ப'' என்ற பாடமே உள்ளது.

முடிபு - மாதரசன்தான், ஈன்ற நாள் தொடங்கி, செய்கடன் முற்றும் இயற்றினன். எங்கோன் குழவிப் பதங்கடந்து, சொல்குரு முன்னுறுங் காலை மறைகள் முதலவா முன் அறிந்துள கலையெலாம்தான் உணர்ந்தான். எதுபோல் எனில்? மதியம் இரவு வந்திருப்ப தன் கதிரைத்தானே அடைகுதல் போல்.

கல்யாணபுரத்தில் விச்சலன் விளங்கி இருந்தது

511. பரமனை இகழ்ந்து [1]நெறியலா நெறிபோம்
பரமத யானையை அடக்க

Koviloor Digital Library

வரமுறு கூர்மை அங்குசம் என்ன
அரனடி யாரெனும் ஆவிற்(கு)
ஒருமழ இளங்கன் றெனஅருள் வசவன்
ஒழுகுநாள் வளங்கொள் கல்யாண
புரமுற அமண குழாத்தொடும் மிக்க
புரவலன் விச்சலன் இருந்தான் 30

(பா.ம்) [1]நெறியிலா

(இ.ள்) அருள் வசவன் பரமனை இகழ்ந்து நெறியலா நெறிபோம், பரமத யானையை அடக்க, வரம் கூறு கூர்மை அங்குசம் என்ன = அருள் தங்கிய வசவதேவன், சிவபெருமானை இகழ்ந்து, முறையற்ற வழியில் போகும், வேற்றுச் சமயமாகிய யானையை அடக்குவதற்கு சிறப்புப் பொருந்திய கூர்மையையுடைய, அங்குசம் என்னும் படையைப் போலவும்; அரன் அடியார் எனும் ஆவிற்கு ஒருமழ இளங்கன்று என ஒழுகுநாள்-சிவனடியார் என்னும் பசுவிற்கு ஒப்பற்ற இளமை தங்கிய கன்றினைப் போலவும் இருந்த காலத்திலே; மிக்க புரவலன் விச்சலன் வளங்கொள் கல்யாணபுரம் உற அமண குழாத்தொடும் இருந்தான் - பேரரசனாகிய விச்சல மன்னன் வளப்பத்தையுடைய கல்யாண புரநகரில் பொருந்த சமணசமய கூட்டத்தினரோடு விளங்கி இருந்தான். (எ.று)

(முடிபு) அருள்வசவன் பரமத யானையை அடக்க, அங்குசம் என்ன, அரன் அடியார் எனும் ஆவிற்கு இளங் கன்றென ஒழுகும் நாளில் புரவலனாகிய விச்சலன் கல்யாணபுரம் உற அமணகுழாத் தொடும் இருந்தான்; பரமத யானையை அடக்க வசவதேவர் அங்குசமாகவும், அரனடியார் எனும் ஆ விற்கு கன்றைப் போலவும் விளங்கினார் என்ற இடத்து. உருவகமும், உவமையும் கலந்து வந்த அணி.

512. படியில்கல் யாண புரமெனுந் தூசு
[1]பரசிவ பத்தியால் விளர்ப்பக்
கொடியபுன் சமண மாசுவர் பிடித்தாங்
குவலயத் திருந்திடும் அந்நாள்
அடியவர் செல்வம் எனும்வச வேசன்
அங்குடன் வந்தநா காம்பை
உடன்வர வந்தவ் விச்சலன் நகரில்
உற்றனன் நற்றவர் நெருங்க 31

Koviloor Digital Library

(பா.ம்) [1] பரசிவ பத்தியாய்

(இ.ள்) படியில் கல்யாணபுரம் தூசு - ஒப்பற்ற கல்யாணபுரம் என்னும் ஆடை; பரசிவ பத்தியால் விளர்ப்ப - சிவபத்தியைப் பெறுவதால் வெண்மை நிறம் அடையுமாறு; கொடிய புன் சமண மாசு உவர் பிடித்தாங்கு - முன்னே கொடிய புன்மையான சமணம் என்னும் மாசு தங்கிய உழமண் பிடித்தால் போல; குவலயத்து இருந்திடும் அந்நாள் - சமண சமயக் கூட்டத்துடன் கூடி அக்கல்யாணபுரம் விளங்கி இருந்த காலத்தில்; அடியவர் செல்வம் எனும் வசவேசன் உடன் வந்த நாகாம்பை அங்கு உடன் வர - சிவனடியவர்களுக்குச் செல்வம் போன்ற வசவேசன் தன் உடன் பிறந்த நாகாம்பை அம்மை அங்கு தன் உடன்வர; வந்து அவ்விச்சலன் நகரில் நற்றவர் நெருங்க உற்றனன் - புறப்பட்டு வந்து அந்தவிச்சல மன்னவன் நகரில், நல்ல தவசிகள் தன்னுடன் நெருங்கி வர வந்தடைந்தான். (எ.று)

முடிபு - கல்யாணபுரம் என்னும் தூசு, பரசிவ பத்தியால் விளர்ப்ப சமணம் என்னும் உவர் பிடித்தாங்கு குவலயத்து உற்றிடும் அந்நாள். அடியவர் செல்வம் என்னும் பசவேசன் உடன் வந்த நாகாம்பை அங்கு உடன்வர தவர் நெருங்க உற்றனர்.

மன்னன் வசவ தேவரை வரவேற்றது

513. வந்தனன் வசவ தேவனென் றுரைப்ப
மன்னவன் விச்சலன் அறிந்து
மந்திரி என்று மறைந்தவுள் பகையை
மலிபொடி மூடிய தழலை
வெந்தழல் என்ன அறிந்திடா தெடுப்ப
மென்கை[1]தீண் டுதலென எதிர்போய்
உய்ந்திட அரிதாய்த் தன்மதம் அழிய
வுடன்கொடு கோயிலுள் புகுந்தான் 32

(பா.ம்) [1]நீட்டுதலென

(இ.ள்) வசவதேவன் வந்தனன் என்று உரைப்ப - செய்தி சொல்லுவார் வசவதேவன், கல்யாண நகரத்துள் வந்தனன் என்று கூற; விச்சல மன்னவன் அறிந்து - அதனை விச்சல மன்னவன் தெரிந்த கொண்டு; மலிபொடி மூடியதழலை வெந்தழல் என்ன அறிந்திடாது எடுப்பமென்கை தீண்டுதல் என - மிகவும், சாம்பல் பொடி மூடிய

Koviloor Digital Library

நெருப்பை (நீறு பூத்த நெருப்பை) வெம்மையைச் செய்கின்ற நெருப்பு என்று தெரிந்து கொள்ளாமல் எடுப்ப தன்னுடைய மெல்லிய கையினால் தொடுதலைப் போல; எதிர்போய் உய்ந்திட அரிதாய்த்தன் மதம் அழிய - தான் எதிர் சென்று, வாழ்ந்திருத்தலுக்கு அரிதாய் தன் சமண சமயம் அழிய; மந்திரி என்று மறைந்த உட்பகையை உடன்கொடு கோயிலுள் புகுந்தான் - அமைச்சன் என்கின்ற பெயரால் மறைந்திருக்கும் அகப் பகையை உடன் அழைத்துக் கொண்டு தன் அரண்மனையினுள் அடைந்தான். (எ.று)

முடிபு - வசவ தேவன் வந்தனன் என்று உரைப்ப, விச்சல மன்னவன், எதிர்போய், உய்ந்திட அரிதாய், தன்மதம் அழிய, மந்திரி என்று மறைந்த உட்பகையை, உடன் கொட கோயிலுட் புகுந்தான்; வசவ தேவன் சமண சமயத்தை அழித்து, சைவ சமயத்தை நிலைநாட்டுவதற்கே வந்து பிறந்தவர் ஆதலால், அவரை வரவேற்ற மகிழ்ச்சி நீறுபூத்த நெருப்பை எடுப்பதற்கு நீட்டுதலைப்போல் இருந்தது என்று உவமை கூறினார். இது வினை உவமை.

வசவதேவர் வந்திருந்தபோது அவையில் நிகழ்ந்த நிகழ்ச்சி

514. பொருந்துமத் தாணி யிடைத்தவி சொன்று
புறமத கோளரிக் குதவி
இருந்திறல் சிங்கம் சுமந்தபூ அணைமேல்
இருந்தனன் அரசனப் போதில்
அருந்திறல் தானை காவலர் வேந்தர்
அமைச்சர்வெண் கவரிகொள் மாதர்
நெருங்கிநிற் கரிய பேரவை யிடத்து
நிகழ்ந்தமை ஒன்றெடுத் துரைப்பாம் 33

(இ.ள்) அரசன், பொருந்தும் அத்தாணியிடைத்தவிசு ஒன்று, புறமத கோளரிக்கு உதவி - விச்சல மன்னன், அரண்மனையிலுள்ள அரசிருக்கை மண்டபத்தின்கண் இருக்கை ஒன்று, புறச்சமயங்களுக்கு சிங்கம் போன்ற வசவ தேவருக்குக் கொடுத்து; இருந்திரல் சிங்கம் சுமந்த பூ அணை மேல் இருந்தனன் - மிக்க ஆற்றல் வாய்ந்த சிம்மாசனத்தின் மேல் தான் அமர்ந்திருந்தனன்; அப்போதில் - அந்தக் காலத்தில்; அருந்திறல்தானை காவலர், வேந்தர், அமைச்சர், வெண்கவரிகொள் மாதர் நெருங்கி நிற்க அரிய பேரவை இடத்து, நிகழ்ந்தமை ஒன்று எடுத்து உரைப்பாம் - அரிய ஆற்றல் வாய்ந்த, சேனைத்தலைவரும், குறுநில மன்னரும், அமைச்சரும்,

Koviloor Digital Library

வெள்ளிய சாமரை வீசும் பண்களும், நெருங்கி நிற்க அரிய பெரிய சபைக்கண் நடந்த நிகழ்ச்சி ஒன்றினை எடுத்துச் சொல்லுவோம். (எ.று)

முடிபு - அரசன், புறமத கோளரிக்கு அத்தாணியிடை, தவிசு ஒன்று உதவி (தான்) சிங்கம் சுமந்த பூவணை மேலிருந்தனன். அப்போதில் தானை காவலரும், வேந்தரும், அமைச்சரும், மாதரும் நெருங்கி, நிற்கரிய பேரவையிடத்து நிகழ்ந்தமை ஒன்றை (யாம்) எடுத்துரைப்பாம்.

515. **இந்திரன் எதிர்நின் றாடும் ஏந்திழை காதில் செம்பொன்**
சுந்தர ஓலை, ஒன்று, சோர்ந்தெனத் சுருள்மு, டங்கல்,
அந்தர முகட்டில் நின்றும் அரசன்பே ரவையி டத்து
வந்தெதிர் விழுந்த தொன்று மானிடர் மருண்டு நோக்க 34

(இ.ள்) இந்திரன் எதிர் நின்று ஆடும் ஏந்திழை காதில் செம்பொன் சுந்தர ஓலை ஒன்று சோர்ந்தென - வானுலகத்தில் தேவேந்திரன் எதிர்நின்று ஆடுகின்ற, அரம்பையின் காதில் நின்று சிவந்த பொன்னால் செய்த ஓலை ஒன்று தவறிவிழுந்தாற் போல; சுருள் முடங்கல் ஒன்று, அந்தர முகட்டில் நின்றும் அரசன் பேரவை இடத்து வந்து எதிர் விழுந்தது - ஓலைச் சுருள் ஒன்று வானத்து உச்சியிலிருந்து அரசருடைய பெரிய சபைக்கண் வந்து மன்னன் முன் விழுந்தது; (எவ்வாறு விழுந்தது எனில்); மானிடர் மருண்டு நோக்க விழுந்தது) அங்கேயுள்ள மக்கள் எல்லாம், அதிசயத்துப் பார்க்குமாறு விழுந்தது. (எ.று)

முடிபு - இந்திரன் எதிர்நின்றாடும் ஏந்திழைகாதில், பொன்ஓலை ஒன்று சோர்ந்தென, முடங்கல் அந்தரமுகட்டில் நின்று பேரவை இடத்து வந்து மானிடர் மருண்டு நோக்க விழுந்தது.

516. **நின்றவர், எடுத்து, வந்து,**
[1]நெடுங்கையில், கொடுப்ப, வாங்கி,
வென்றிகொள் மடங்கல் அன்னான்
விரித்ததை எடுத்து நோக்கித்
தன்தலை எழுத்தே என்ன
தானுணர்ந் திலன்ம யங்கி
வன்றிறல் அமண காலன்
மலர்க்கையில் கொடுத்தான் அன்றே 35

(பா.ம்) [1]நெருந்தகை கைக்கொப்ப

(இ.ள்) நின்றவர் எடுத்து வந்து - அங்குள்ளவர்கள், அவ்ஓலையை

Koviloor Digital Library

எடுத்துக் கொண்டு வந்து; நெடுங்கையில் கொடுப்ப - மன்னனுடைய நீண்டகையிலே கொடுக்க; வென்றிகொள் மடங்கல் அன்னான் வாங்கி விரித்து அதை எடுத்து நோக்கி தன் தலை எழுத்தே என்ன தான் உணர்ந்திலன்- வெற்றி கொள்ளும் சிங்கத்தை ஒத்த விச்சல மன்னன், அவ்ஓலையை வாங்கி, சுருளைப் பிரித்து, அதிலுள்ள எழுத்தை நோக்கி தன் தலை எழுத்தைப் போல, ஒலையில் உள்ள எழுத்தை உணர்ந்திலன்; மயங்கி வன்திறல் அமணகாலன் மலர்க்கை யில் கொடுத்தான் - (அதனாலே) மயக்கம் அடைந்து அவ்ஓலையை வலிய ஆற்றல் வாய்ந்த சமண சமயத்துக்கு எமன் போன்ற வசவதேவனுடைய, மலர் போன்ற கையில் கொடுத்தான். அன்று - ஏ - அசை. (எ.று)

முடிபு - நின்றவர், எடுத்து வந்து கையில் கொடுப்ப, மடங்கல் அன்னான் வாங்கி, விரித்து நோக்கி, தலை எழுத்தே என்னதான் உணர்ந்திலன், மயங்கி, அமண காலன் கையில் கொடுத்தான்.

517. **வாங்கிய முடங்கல் நோக்கி வசவநா யகனிவ் வோலை**
தாங்குநின் தவிசின் கீழோர் தமனிய வைப்புண் டென்ற(து)
ஓங்கிய தூண்செய் தோளாய் உனக்குநான் காட்டு வேனென்(று)
ஆங்கதை அகழ்வித் தானவ் வரசர்கோன் அதிச யிப்ப 36

(இ.ள்) வசவ நாயகன் வாங்கிய முடங்கல் நோக்கி - வசவதேவன் மன்னன் கையிலிருந்து வாங்கிய ஓலைச் சுருளைப் பிரித்துப் பார்த்து; இவ்ஓலை தாங்கும்நின் தவிசின் கீழ் ஓர் தமனிய வைப்பு உண்டு என்றது - இவ்ஓலைச் சுருளானது, உன்னைத்தாங்கி நிற்கும் உன் சிங்காதனத்தின் கீழே, ஒரு பொற்புதையல் உண்டு என்று கூறுகின்றது; ஓங்கிய தூண்செய் தோளாய், நான் உனக்குக் காட்டுவேன் என்று - உயர்ந்த தூணைப் போன்ற தோளை யுடையவனே ; நான் அவ்வைப்பை உனக்குக் காட்டுவேன் என்று கூறி; அவ்வரசர் கோன் அதிசயிப்ப ஆங்கு அதை அகழ் வித்தான் -அம்மன்னன் வியப்படையும்படி அவ்விடத்து அப்புதையலைத் தோண்டு வித்தான். (எ.று)

முடிபு - வசவ நாயகன் வாங்கிய முடங்கலை நோக்கி, ஓலை நின்தவிசின் கீழ், ஓர்தமனியவைப்பு உண்டு என்றது.

தோளாய் நான் உனக்குக் காட்டுவேன் என்று அரசர்கோன் அதிசயிப்ப அதை அகழ்வித்தான்.

Koviloor Digital Library

518. அகழ்ந்திட நிதிய வைப்பொன்று ஆடக மலைபி லத்தில்
புகுந்திவண் வந்து மெல்லப் புறப்படல் போலத் தோன்ற
மகிழ்ந்தனன் அரசர் கோமான் வசவனைக் கண்ட போதே
நிகழ்ந்தஒண் பயனு ணர்ந்து நெஞ்சகம் நனிவி யந்தான்
37

(இ.ள்) அகழ்ந்திட - தோண்ட; நிதிய வைப்பு ஒன்று ஆடகமலை பிலத்தில் புகுந்து இவண் வந்து மெல்லப் புறப்படல் போலத் தோன்ற - பொருள் புதையல் ஒன்று, பொன்மலை பாதாளத்தில் புகுந்து இங்கே வந்து மெல்லப் புறப்படுதலைப்போலக் காணப்பட; அரசர் கோமான் மகிழ்ந்தனன் - அதனைக் கண்டு விச்சல மன்னன் மகிழ்ந்தான்; வசவனைக் கண்டபோதே நிகழ்ந்த ஒண்பயன் உணர்ந்து நெஞ்சகம் நனிவியந்தான் - ஆக, வசவதேவனைத்தான் கண்டபோதே, தனக்குக் கிடைத்த சிறந்த பயனைக் கருதி மிகவும் மகிழ்ந்தனன் வியப்படைந்தான் (ஆச்சரியம் அடைந்தான்) (எ.று)

முடிபு - அகழ்ந்திட, வைப்பொன்று, ஆடக மலை பிலத்தில் புகுந்து இவண் வந்து மெல்லப் புறப்படுவது போல் தோன்ற, (அதனைக் கண்டு) அரசர் கோமான் மகிழ்ந்தனன்; வசவனைக் கண்டபோதே, மிகுந்த பயன் உணர்ந்து நெஞ்சகம் நனிவியந்தான்.

விச்சலன் புதுக்கியதும் கண்டார் மகிழ்வும்

519. பயிலும்நல் வினையெ மக்குப்
பயந்தவிவ் வசவ தேவன்
கயிலைநன் மலைக்கு இரண்டாங்
கடவுளே என்று சொல்லி
[1]இயல்உரை மடந்தை பொய்யாள்
என்பதைப் புதுக்கி னான்அச்
செயலினை விழியில் கண்டோர்
தெளிந்து நெஞ்சக மகிழ்ந்தார் 38

(பா.ம்) [1]இயலுடை

(இ.ள்) மேற்பாட்டிலேயுள்ள அரசர் கோமான் என்பதையே இப்பாட்டிற்கு எழுவாயாகக் கொள்க; (அரசர் கோமான்) பயிலும்நல்வினை எமக்குப் பயந்த இவ்வசவ தேவன், கயிலை நல் மலைக்கு இரண்டாம் கடவுளே என்று சொல்லி - நான் செய்த நல்வினை

Koviloor Digital Library

எமக்கு பயனாகக் கொடுத்த இவ்வசவ தேவன், கயிலையாகிய நல்லமலைக்கு உரிமைபூண்ட இரண்டாம் (சம்புவே வாழிய) கடவுளே என்று அவருடய உண்மையை அறிந்து கூறி; இயல்உரை மடந்தை பொய்யாள் என்பதைப் புதுக்கினான் - நல் இயல்பு வாய்ந்த கலைமகள் ஒருவர் நாவில் நின்று பொய் கூறாள் என்கின்ற பழமொழியை இவன் இப்பொழுது புதுப்பித்தான்; அச்செயலினை விழியில் கண்டோர் தெளிந்து நெஞ்சகம் மகிழ்ந்தார் - மன்னவன் புதுக்கிய அச்செயலினை, கண்களால் கண்ட மக்கள், அப்பழமொழியின் பொருளைத் தெளிவாக அறிந்து நெஞ்சகம் மகிழ்ந்தார். (எ.று)

முடிபு- அசரர் கோமான் நல்வினை எமக்குப் பயந்த இவ்வசவ தேவன், கயிலை மலைக்கு உரிய இரண்டாம் கடவுளே என்று கூறி, இயல் உரை மடந்தை பொய்யாள் என்பதைப் புதுக்கினான். அச்செயலினை விழியால் கண்டோர் தெளிந்து நெஞ்சகம் மகிழ்ந்தார்; ''இயல்உரை மடந்தை பொய்யாள்'' என்பது ஒரு பழமொழி. அப்பழமொழியின் பொருள்: கலைமகள், ஒருவர் நாவினின்று பொய்யினைக் கூறமாட்டாள். மெய்யினையே கூறுவாள் என்பதாம்; வந்த வசவதேவனை இரண்டாம் சம்புவே என்ற உண்மையை அறிந்து கூறும்படி விச்சல மன்னவன் நாவின் நின்று கலைமகள் செய்து விட்டாள். அதனால் ''இயல் உரை மடந்தை பொய்யாள்'' என்ற பழமொழியின் பொருள் உண்மையா யிற்று. அதனால் இவ்வுண்மை அறிந்த மக்கள் எல்லோரும் மனம் மகிழ்ந்தார். கலைமகள் ஒருவர் நாவின் நின்று உண்மைப் பொருள் உணர்த்துவதை''வள்ளுவன் வாயதன் வாக்கு'' என்னும் திருவள்ளுவ மாலைச் செய்யுளான் அறிக.

விச்சலன் வசவருக்கு அமைச்சர் பதவிதந்தது

520. **மந்திரிக் கிழமை நல்கி மரபுளி உரிமை ஆற்றி**
மைந்தனைப் புரக்கும் தாய்போல் மற்றெனை புரத்தி என்று
சிந்தனைப் களிப்ப இன்சொல் செப்பியா யிடையி ருப்ப
நந்தியைத் தொடர்பு கொண்டான் நாந்தகத் தடக்கை
வேந்தன் 39

(இ.ள்) நாந்தகத் தடக்கை வேந்தன் - வாளை பெரிய கையிலே ஏந்திய மன்னன்; மந்திரிக்கிழமை நல்கி - தன் அரசுக்கு அமைச்சனா யிருக்கும் உரிமைய ஆணையால் கொடுத்து; மரபுளி உரிமை ஆற்றி - அமைச்சர் பதவிக்குள்ள மரபின்படி அவர்களுக்குரிய உரிமை எல்லாம்

Koviloor Digital Library

செய்து; மைந்தனைப் புரக்கும்தாய் போல் மற்று எனை புரத்தி என்று சிந்தனை களிப்ப இன்சொல் செப்பி - (மேலும்) மகவைப் புரக்கும் தாய் போல என்னை நீ புரந்து வருவாயாக என்று மனம் களிப்ப இன்சொல் கூறி; ஆயிடை இருப்ப நந்தியைத் தொடர்பு கொண்டான். அமைச்சன் என்ற சொல்லின் பொருளுக்கு இணங்க தனக்கு அண்மையிலே இருக்கும்படி நந்தியை நட்பாகக் கொண்டான். எனவே இவ்வசவ தேவர் முதலமைச்சர் ஆயினார் என்பது பெறப்பட்டது. (எ.று)

முடிபு - நாந்தகத்தடக்கை வேலான், மந்திரிக் கிழமையை நல்கி உரிமையை ஆற்றி, மைந்தனைப் புரக்கும் தாய்போல் எனைப் புரத்தி என்று இன்சொல் செப்பி, ஆயிடை இருப்ப நந்தியைத் தொடர்பு கொண்டான்.

வசவ தேவருக்கு திருமணம் செய்து வைத்தது

521. **பெருந்தகை வசவ தேவன் பெருமைக்குத் தக்க வாறே**
அருங்கடி மணஞ்செய் வித்தான் அலங்கல்வேல் முருகன் அன்னான்
திருந்திய அம்ம ணத்தின் சிறப்புநாம் விரிப்ப தென்கொல்
புரந்தனை யன்று தொட்டுப் புகன்றுகல் யாணம் என்றால்
40

(இ.ள்) அலங்கல்வேல் முருகன் அன்னான் - மாலையை அணிந்த வேலை ஏந்திய முருகப் பெருமானை ஒத்த விச்சல மன்னவன், பெருந்தகை வசவ தேவன் பெருமைக்குத் தக்கவாறே அருங்கடி மணம் செய்வித்தான் - பெரிய தகுதி வாய்ந்த வசவ தேவருடைய பெருமைக்குத் தக்கபடி, அரிய விளக்கமுடைய திருமணத்தைச் செய்வித்தான்; புரந்தனை அன்று தொட்டு புகன்று கல்யாணம் என்றால் - திருமணம் நிகழ்ந்த நகரத்தை அன்றைய நாள் தொடங்கி மக்கள் எல்லோரும், விரும்பி கல்யாணம் என்றே வழங்கத் தொடங்கினார்கள் ஆதலினாலே; திருந்திய அம்மணத்தின் சிறப்பு நாம் விரிப்பது என்சொல் - மிகத் திருத்தமாக நடந்த அந்தத் திருமணத்தின் சிறப்பை, நாம் பல் வகையால் விரித்துச் சிறப்பித்துக் கூறுவது எதற்கு (வேறு வகையால் சிறப்பித்துக் கூறுதல் எதற்காக) (எ.று)

முடிபு - முருகன் அன்னான், வசவ தேவன் பெருமைக்குத் தக்கவாறறே மணம் செய்வித்தான். அன்று தொட்டு கல்யாணம் நிகழ்ந்த

Koviloor Digital Library

புரம்தனை, கல்யாணம் என்றால் அம்மணத்தின் சிறப்பை நாம் விரிப்பது என் கொல்;

வசவதேவனுடைய அன்னையாகிய மாதாம்பிகையின் முன்னோர் விச்சல மன்னனிடத்திலே அமைச்ச ராய் இருந்தனர் என்றும், அவர்களுள் ஒருவர் செல்வம் மிக்க ஸ்ரீபலதேவர் என்னும் பெயருடையார் என்றும், அவருடைய மகள் கங்காம்பை என்பவரைத் திருமணம் செய்து கொண்டார் வசவ தேவர் என்பதும் வசவ புராணத்தில் அறியலாம்.

சென்ன வசவ தேவர் பிறப்பு

522. இவ்வகை கல்யாணத்தில் இருப்பநா காம்பை என்னும்
தவ்வைநம் வசவ தேவன் தன்பிர சாதம் தன்னால்
எவ்வமின் முத்தி மெய்யோ டிருக்கையில் அளிக்கும் வீர
சைவநன் னெறிவ ளர்க்கும் தனயனை ஈன்றாள் அம்மா 41

(இ.ள்) இவ்வகை கல்யாணத்தில் இருப்ப - இவ்வண்ணம் வசவ தேவர், மந்திரிக் கிழமை பூண்டும், திருமணம் செய்து கொண்டும் கல்யாண நலத்தில் வாழ்ந்திருப்ப; நாகாம்பை என்னும் தவ்வை - நாகாம்பை என்னும் தமக்கை, நம் வசவதேவன் தன் பிரசாதம் தன்னால் - நம் வசவ தேவன் கொடுத்த சிவ பூஜா பிரசாதத்தை உண்டு வந்த காரணத்தால்; தனயனை ஈன்றாள் - ஓர் ஆண் மகவைப் பெற்றாள்; எத்தகைய மகவு எனில்; எவ்வம்இல் முத்தி - குற்றமற்ற வீடுபேற்றை; மெய்யோடு இருக்கையில் அளிக்கும் - உடம்புடன் வாழ்ந்திருக்கும் போதே கொடுக்கின்ற; வீரசைவ நன்னெறி வளர்க்கும் தனையன் - வீரசைவ நல்லநெறியை வளர்க்கும் தனையன். (எ.று)

முடிபு - வசவதேவன் இவ்வகை கல்யாணத்தில் இருப்ப, நாகாம்பை என்னும் தவ்வை, வசவ தேவன் பிரசாதம் தன்னால், வீர சைவ நன்னெறி வளர்க்கும் தனையனை ஈன்றாள்; அம்மா - வியப்பிடைச் சொல்; முத்தியை மெய்யோடு இருக்கும் போது பெறுவதாவது, **ஜீவன் முத்தி** என்பது; மெய்யை விட்ட பிறகு பெறும் முத்திக்கு விதேகமுத்தி எனப் பெயர் பெறும்.

523. மைந்தனை ஈன்று வந்து வசவநா மம்பு னைந்தாள்
நிந்தையில் கற்பு நங்கை நிகழ்திரு முகங்கள் ஆறும்
அந்தமில் தலங்கள் ஆறாய் அறிவித்தற் குலகில் வந்த
கந்தனென் றுன்ன அந்நா காம்பைதன் மகன் வளர்ந்தான் 42

Koviloor Digital Library

(இ.ள்) நிந்தையில் கற்பு நங்கை - குற்றமில்லாத கற்பினையுடைய நாகாம்பை என்னும் நங்கை, மைந்தனை ஈன்று உவந்து, வசவ நாமம் புனைந்தாள் - மகவைப் பெற்று மகிழ்ந்து சொன்ன வசவன் என்கின்ற பெயரைச் சூட்டினாள்; அந்நாகம்பை தன் மகன் - அந்நாகம்பையின் புதல்வனாகிய சென்ன வசவன்; திருமுகங்கள் ஆறும் அந்த மில் தலங்கள் ஆறாய் அறிவித்தற்கு உலகில் வந்த கந்தன் என்று உன்ன வளர்ந்தான் - தன்னிடத்திலே விளங்குகின்ற ஆறு முகங்களும், முடிவற்ற பத்தத்தலம் முதலான ஆறு தலங்கள் என்று அறிவித்தற்கு, உலகில் வந்த கந்தன் என்றே கருதும்படி வளர்ந்தான். (எ.று)

முடிபு - நங்கை மைந்தனை ஈன்று உவந்து பசவ நாமம் புனைந்தாள். நாகாம்பை தன் மகன் முகங்கள் ஆறும் தலங்கள் ஆறாய் அறிவதற்கு உலகில் வந்த கந்தன் என்று உன்ன வளர்ந்தான்.

சென்ன வசவர் பத்தத்தலம் - மகேஸ்வரத்தலம். பிரசாதித்தலம் - பிராண லிங்கத்தலம், சரணத்தலம், ஐக்கியத்தலம் என்னும் ஆறு தலங்களின் தத்துவங்களையும் உலகில் விளக்கிக் கொண்டிருந்தார். ஆகையால் அவரை முகங்கள் ஆறும் தலங்கள் ஆறாய் அறிவித்ததற்கு உலகில் வந்த கந்தன் என்று உன்ன வளர்ந்தான் என்ற உவமை இட்டுக் கூறினார்.

சங்கமர் நேய மெல்லாந் தமக்குட லாகி யுள்ளார்
மங்கைநா காம்பை யார்தம் வயிற்றில்வந் துதய மானார்
பங்கபுண் ணியபா வத்தின் பரப்பெலாம் பறித் தநீரார்
எங்கணந் திகளை யொப்பா - மியல்புளார் மயலிலாதார்

மலமிலா திருப்போர் சென்ன வசவைய ரென்னும் பேரா
ருலகில் பேசா ராசா னுவப்புறு நேய முள்ளா
ரலைகொள்கா மாதி யில்லா ரனைத்து மெய் யிலிங்கங் கண்டார்
உலவுதத் துவஞா னத்தா லுயர்ந்துளா ருரையான் மிக்கார்

(பசவ புராணத்தில்; சென்னபசவ புராணம் 1-2ம் பாடல்)

சென்ன வசவதேசிகரின் இருப்பும் வசவேசரின் மகப்பேறும்

524. வீரமா கேசர் என்னும் மென்பயிர் வளர்க்க வந்த
மாரிபோல் நிகரில் சென்ன வசவதே சிகனி ருப்ப

Koviloor Digital Library

நேரிலா வசவ நாம நெடுந்தகை மகவொன் றீன்று
சீருலாஞ் சங்க மேச தேசிகன் பெயர்பு னைந்தான் 43

(இ.ள்) நிகரில் சென்ன வசவதேசிகன், வீரமா கேசர் என்னும் மென் பயிர் வளர்க்க வந்த மாரி போல் இருப்ப - ஒப்பற்ற சென்ன வசவ தேசிகன் வீரமாகேசர் என்கின்ற மெல்லிய பயிரை வளர்க்கத் தோன்றிய மழைபோல் இருப்ப; நேரிலாவசவ நாம நெடுந்தகை - ஒப்பற்ற வசவன் என்ற பெயரைத் தாங்கி மிக்க தகுதியுடையோன்; மகவு ஒன்று ஈன்று - ஒரு புதல்வனைப் பெற்று; சீர் உலாம் சங்கமேச தேசிகன் பெயர் புனைந்தான்-புகழ் விளங்கும் சங்கமேச தேசிகன் என்னும் பெயரை அவருக்குச் சூட்டினான்.

முடிபு - சென்ன வசவதேசிகன் மாகேசன் என்னும் பயிர் வளர்க்க வந்த மாரி போல் இருப்ப, வசவநாம நெடுந்தகை மகவு ஒன்று ஈன்று சங்கமேச தேசிகன் என்ற பெயர் புனைந்தான்; உருவகத்தோடு கூடிய உவமையணி வந்துள்ளது இப்பாடலில்.

வசவ தேவரின் செயல்

525. மொழியினால் நினைவால் நோக்கால் முக்கணான் அடியர் வேண்டிற்று
ஒழிவிலா துதவித் தாய்போல் ஓம்பினன் புறம தத்தோர்
வழியெலாம் வழக்கு மாற மலிபுகழ்ச் சைவம் என்னும்
பழியிலா வழிந டப்பப் பண்ணினன் வசவ தேவன் 44

(இ.ள்) வசவ தேவன் முக்கணான் அடியர் மொழியினால், நினைவால் நோக்கால் வேண்டிற்று ஒழிவிலாத உதவித்தாய் போல் ஓம்பினான் - வசவதேவர், சிவனடியார், சொல்லாலும், நினைவாலும், நோக்கினாலும், வேண்டிய பொருள்களை எல்லாம், தவறாமல் உதவி அவர்களைத் தாய்போல் பாதுகாத்தான்; புறமதத் தோர் வழியெலாம் வழக்கு மாற மலிபுகழ் சைவம் என்னும் பழியிலா வழி நடப்பப் பண்ணினான் - வேற்றுச் சமயத்தோர் பின்பற்றிய சமய நெறிகளெல் லாம், உலக வழக்கத்தில் மாறவும், அவ்வுலகம் மிக்க புகழையுடைய சைவம் என்னும் குற்றமில்லாத வழியைப் பின்பற்றி நடக்கவும் செய்தான். (எ.று)

முடிபு - வசவதேவன், அடியர் மொழியினால், நினைவால் நோக்கால் வேண்டிற்று உதவி தாய் போல் ஓம்பினன். (மேலும்)

Koviloor Digital Library

புறமதத்தோர் வழி எலாம் வழி மாறவும் சைவம் என்னும் பழியிலா வழி நடப்பவும் பண்ணினான்.

நாட்டில் பலவிடத்து வந்து பிறந்திருந்த சிவகணங்களெல்லாம் வசவதேவரை நோக்கி வருதல்

526. **அரனடி யவர்க்குத் தேனுவாகிய வசவன் சீர்த்தி**
விரிநிலம் முழுதும் போர்ப்ப வெள்ளிவெற் பினைய கன்று
தரைமிசை வந்தி ருந்த தவரெலாம் உணர்ந்து சென்றார்
பொருவில்கல் யாணத் திற்குப் போதல்போல் கல்யா
ணத்தில் 45

(இ.ள்) அரன் அடியவர்க்குத் தேனு ஆகி வசவன் சீர்த்தி - சிவனடியார்க்கு காமதேனுவாகிய வசவதேவனுடைய மிகுபுகழ், விரிநிலம் முழுதும் போர்ப்ப - அகன்ற நிலவுலகம் முற்றிலும் பரவி விளங்க; வெள்ளி வெற்பினை அகன்று தரைமிசை வந்து இருந்தவர் எலாம் - வெள்ளி மலையை விட்டு நீங்கி, நிலவுலகின்கண் வந்திருந்த, தவமுடைய சிவ கணங்களெல்லாம்; உணர்ந்து பொருஇல் கல்யாணத்திற்குப் போதல்போல் கல்யாணத்தில் சென்றார் - அறிந்து கொண்டு, ஒப்பற்ற கல்யாண நிகழ்ச்சிக்கு விரும்பிப் போவாரைப் போல கல்யாண நகரின் கண் சென்றார்கள். (எ.று)

முடிபு - அரன் அடியவர்க்குத் தேனுவாகிய வசவனுடைய சீர்த்தி நிலம் முழுதும் போர்ப்ப, வெள்ளி வெற்பினை அகன்று தரைமிசை வந்திருந்ததவர் எலாம் உணர்ந்து கல்யாணத்திற்குப் போதல்போல கல்யாணத்துக்குச் சென்றார்.

527. **பலரொடு வரினும் எள்ளும் படிதனி வரினும் மிக்க**
நலமொடு வரினும் மேனி நலம்அற வரினும் சீசால்
மலைமகள் கணவன் தொண்டர் வரவுகண்ணுறினெதிர்ந்து
நிலமிசை வணங்கி அஞ்சி நின்றுநன் றாற்றும் நந்தி 46

(இ.ள்) நந்தி - நந்தியாகிய வசவ தேவன்; சீர்சால் மலைமகள் கணவன் தொண்டர் வரவு கண்ணுறின் - சிறப்பு அமைந்த மலை மங்கை கணவனாகிய சிவபெருமானுடைய அடியார் வருதலைப் பார்த்தால்; பலரொடுவரினும், எள்ளும் படி தனிவரினும், மிக்கநலமொடு வரினும், மேனி நலம் அறவரினும் எதிர்ந்து - (அவர்) பலருடன் வந்தாலும், இகழும்படி தனியே வந்தாலும், மிகுந்த உடல் நலத்தோடு வந்தாலும், உடல் நலமின்றி வந்தாலும் அவர்களை எதிர் கொண்டு அழைத்து;

Koviloor Digital Library

நிலமிசை வணங்கி அஞ்சி நின்று நன்று ஆற்றும் - நிலத்தில் தன் உடல்படும்படி வணங்கி, அவர்கள் முன் அச்சத்தோடு நின்று (பயபத்தியுடன்) அவர்களுக்குச் செய்யும் தொண்டினை நன்றாகச் செய்யும். (எ.று)

முடிபு - நந்தி மலைமகள் கணவன் தொண்டர் வரவு கண்ணுரின் (அவர்) பலரொடுவரினும், தனிவரினும், மேனி நலமொடுவரினும், மேனி நலமறவரினும், எதிர்ந்து வணங்கி அஞ்சி நின்று நன்று ஆற்றும்.

அடியார்களை வேறுபாடு அற கருதுவர் என்பது

528. சாதியும் குறியும் நீத்துச் சரணரைச் சிவனே என்று
பாதபங் கயமி றைஞ்சிப் பத்திசெய் குவனந்நந்தி
தீதறு சுவைத்தீங் கண்டால் செய்தசெங் கரும்பும் வேம்பும்
பேதமொன் றுறாமல் சாதி பெயர்விடுத்து அறிதல்போல
47

(இ.ள்) தீது அறுசுவைதீம் கண்டால் செய்த செம் கரும்பும் வேம்பும் -தீமையே இல்லாத இனிப்புச் சுவையுடைய, வெல்லக் கட்டியால் செய்த நல்லகரும்பின் வடிவத்தையும், வேப்பங்காயின் வடிவத்தையும்; சாதி பெயர்விடுத்து பேதம் ஒன்று உறாமல் அறிதல் போல - கரும்பு, வேம்பு என்னும் இவற்றினுடைய சாதியினாலும், பெயரினாலும் வேறுபாடு சிறிதும் கருதாமல் வெல்லக் கட்டியாகவே அறிதல் போல; நந்தி சரணரை சாதியும், குறியும் நீத்துச் சிவனே என்று-வசவ தேவர் சிவனடியார்களை, அவர்களுக்குள்ள சாதி பெயர் முதலானவற்றை எல்லாம், கருதாமல் விட்டுவிட்டு, சிவபெருமான் என்றே கருதி; பாத பங்கயம் இறைஞ்சி பத்தி செய்குவன் - அவர்களுடைய திருவடித் தாமரைகளை வணங்கி அன்புப் பணி செய்வன். (எ.று)

கற்கண்டினால் செய்த கரும்பு வடிவிற்கும், வேம்பு வடிவிற்கும் தோற்றுதலால் சாதி பேதம் காணப்படுவதன்றி, சுவையால் ஒன்றாதல்போல; தோற்றத்தால் சாதியும் குறியும் அன்றி சிவ நேயத்தால் பேதம் ஏன்?; இன்று ஆதலின் சரணரை சிவனே என்று பத்தி செய்குவன் நந்தி எனப் பொருள் கொள்க என்பது சச்சிதானந்தம் பிள்ளை உரை; இப்பாட்டு உவமையணி. சரணர் சரணராவார். வீர சைவ அடியார் அறுவருள் ஒருவரென்க. அவ்வறுவராவார். பத்தன் - மகேசன் - பிரசாதி - பிராணலிங்கி சரணன், ஐக்கியன். இச்சரணரின் இயல்பை(மாயையால் வரும் ஒரு வாழ்வு பெற்றுள சேய நான்முகன் முதல் தெய்வம் விட்டு

Koviloor Digital Library

ஒரு தூயனாகிய பரசிவனை அடைக்கலமாக அடைந்தவரே சரணர் என்க என்பது சித்தாந்த சிகாமணி (சரண மாம்மியத்தலம் 2ம் பாடல்)

முடிபு - தீம்கண்டால் செய்த கரும்பையும் வேம்பையும் பேதம் ஒன்றுறாமல், சாதியையும், பெயரையும் விடுத்து அறிதல் போல, நந்தி சரணரை, சாதியும் குறியும் நீத்து சிவனே என்று பாதபங்கயம் இறைஞ்சி பத்தி செய்குவன்.

529. மாதர்கள் தமைய கன்ற மலிதுற வினரெண் ணில்லார்
கோதைய ருடனி ருந்தும் கொடுமயல் இலரெண் ணில்லார்
மேதைகொள் அருச்ச னைக்கு வேண்டுவ முழுதும் கொண்டு
போதுகள் வழாமல் ஈசன் பூசைசெய் பவரெண் ணில்லார் 48

530. விரதங்கள் வேறு, வேறு, மேவிநிற் பவரெண் ணில்லார்
பரதம் செய் மதர, ரிக்கண் பரத்தையர் மனைகள் தோறும்
சுரதம்செய், பவரெண் ணில்லார் தூயநன் நந்தி நாம
வரதன்றன் அன்பின் வாழும் வழுவின்மா கேசர் அம்மா 49

(இ.ள்) இரண்டு பாட்டும் ஒரு தொடர்; தூயநல் நந்தி நாம வரதன்தன் அன்பில் வாழும் வழுஇல் மாகேசர் - தூய்மையுடைய நல்ல வசவதேவன் என்னும் பெயரைத் தாங்கிய சிறந்தோனுடைய அன்பினுக்குரியவராகிய குற்றமில்லாத அடியார்களுள்; மாதர்கள் தமை அகன்ற மலி துறவினர் எண்ணில்லார் - மாதர் முதலான, ஏடணை களைவிட்ட, மிக்க துறவற நெறியினை மேற்கொண்டவர்கள் பலராக உள்ளனர்; கோதையர் உடன் இருந்தும் கொடுமயல் இலர் எண்ணில்லார் - பெண்களுடன் உடன் வாழ்ந்தும் கொடிய காம மயக்கம் இல்லா தவர்கள் பலராக உள்ளனர்; மேதைகொள் அருச்சனைக்கு வேண்டுவ முழுதும் கொண்டு போதுகள் வழாமல் ஈசன் பூசை செய்பவர் எண்ணில்லார் - அறிதலைக் கொண்ட சிவபூசைக்கு வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் கொண்டு காலந் தவறாமல் சிவபூசை செய்பவர் பலராக உள்ளனர்; விரதங்கள் வேறு வேறு மேவி நிற்பவர் எண்ணில்லார் - வெவ்வேறு சிவ விரதங்களை மேற்கொண்டு ஒழுகும் அடியார்கள் பலராக உள்ளனர்; பரதம் செய்மதர் அரிக்கண் பரத்தையர் மனைகள் தோறும் சுரதம் செய்பவர் எண்ணில்லார் - பரத நாட்டியம் செய்கின்ற, மதர்த்த செவ்வரி படர்ந்த கண்ணையுடைய பரத்தையர்கள்

Koviloor Digital Library

வீடுகள் தோறும் சென்று, காமவிளையாட்டையும் செய்கின்ற அடியார்கள் பலராக உள்ளனர். (எ.று)

முடிபு - நந்தி நாமவரதன் தன் அன்பில் வாழும் மாகேசருள், துறவினர் எண்ணில்லார், கோதையருடனிருந்தும், மயலில்லார் எண்ணில்லார். ஈசன் பூசனை செய்பவர் எண்ணில்லார், விரதங்கள் மேவிநிற்பவர் எண்ணில்லார்: பரத்தையர் மனைகள் தோறும் சுரதம் செய்பவரும் எண்ணில்லார்; மாதர்கள்தமை அகன்ற என்பதற்கு மாதர் - மண் - பொன் என்னும் ஏடணையும் துறந்த துறவிகள் எனப் பொருள் செய்து கொள்க; இம்மூன்றையும் ஏடணாத்திரையம் என்பர். (மூவேடனை என்று முடிந்திடுமோ என்பது கந்தர் அநுபூதி); பூசை செய்தன்னையும் பூசிக்கப்படும் ஈசனது இயல்பையும், பூசைக்கு வேண்டுவனவற்றையும், அறிந்து பூசிக்க வேண்டுதலின் மேதை கொள் அருச்சனை எனக் கூறினார்; சுரதம் செய்பவரும் என்று உம்மை விரித்துப் பொருள் கொள்க.

வசவதேவரின் இருவகைச் செயல்

531. தீதுசெய் சமணர் முன்னர்ச் செயற்கரும் செய்கை காட்டி
வாதுசெய் தவர்செ ருக்கு மாய்வுசெய் திமயம் ஈன்ற
சூதுசெய் முலைம டந்தை துணைவனார் தொண்டர்க்
கெல்லாம்
யாதுசெய் குவனென் றேவல் இயற்றுவன் வசவ தேவன்
50

(இ.ள்) வசவ தேவன் -வச வேசுவரர்; தீது செய்சமணர் முன்னர்ச் செயற்கு அரும் செய்கை காட்டி வாது செய்து அவர் செருக்கு மாய்வு செய்து - (சிவனடியார்களுக்குத்) தீமையான செயலையே செய்கின்ற சமண சமயத்தினர் முன்பு செய்தற்கு அரிய செயல்களாகிய அற்புதச் செயல்கள் பலவற்றைச் செய்து காட்டியும், அவர்களோடு வாதிட்டும் இவ்விரு செயல்களால் அவர்களது செருக்கை அழித்து; இமயம் ஈன்ற சூது செய் முலை மடந்தை துணைவனார் தொண்டர்க்கு எல்லாம் யாது செய்குவன் என்று ஏவல் இயற்றுவன் -இமயமலை அரசன் பெற்ற சூதாடு கருவியைப் போன்ற நகிலையுடைய உமாதேவிக்குத் துணைவனாகிய சிவபெருமானின் அடியவர்க்கு எல்லாம் நான் எத்தொண்டைச் செய்தல் வேண்டும் என்று கேட்டு, அவர்கள் பணித்தவாறு. அவர்களின் குற்றேவலை செய்து வருவாராயினர். (எ.று)

Koviloor Digital Library

(முடிபு) வசவதேவன் சமணர் முன்னர், செயற்கருங் செய்கை காட்டியும், வாது செய்தும், அவர் செருக்கை மாய்வு செய்து, துணைவனார் தொண்டர்க்கு எல்லாம் (யான்) யாது செய்குவன் என்று ஏவலை இயற்றுவன்; அவர் சமணர்கள் செய்த செயற்கரும் செயல்களையும், வாதுரைகளையும், வசவ புராணத்தால் அவர் தொண்டர்களாகிய சிவனடியார்கட்குச் செய்த தொண்டினையும் அறிக; திருஞான சம்பந்தர் முதலான பெரியோர் எல்லாம் செயற்கருஞ்செயல்களாலேயே தம் சைவ சமயத்தை நிலைநாட்டினர் என்க.

அல்லம தேவர் வருகை நோக்கி இருந்தது

532. உளந்தெளி சரணர் தம்மோ டிம்முறை [1]ஒழுகும் நாளில்
அளந்தறி வரிய சோதி அல்லமன் வரவு நோக்கி
வளங்கெழு திருக்கல் யாண வளநகர் தனில்வான்
நோக்கும்
இளம்பயிர் போலிருந் ருந்தான் எம்மையா ளுடைய நந்தி
51

(பா.ம்) [1]ஒழுகி நாளும்

(இ.ள்) எம்மை ஆள்உடைய நந்தி - எம்மை ஆட்கொள்ளும் வசவதேவர்; வளங்கெழு திருக்கல்யாண வளநகர்தனில் - பல வளங்களும் பொருந்திய அழகிய கல்யாண வளநகரின் கண்; உளம்தெளி சரணர் தம்மோடு இம்முறை ஒழுகும் நாளில் - மனம் தெளிந்த சிவனடியார்களோடு மேலே கூறியவாறு பணிசெய்து ஒழுகும் காலத்திலே; வான் நோக்கும் இளம் பயிர்போல் - மழையை நோக்கியிருக்கும் இளமையான பயிரைப் போல; அளந்து அறிவு அரிய சோதி அல்லமன் வரவு நோக்கி இருந்தான் - அளவைகளால் அளந்து அறிதற்கு இயலாத ஒளிமயமான அல்லம தேவன், தன்னிடம் வருதலையே கருதிக் கொண்டு வாழ்ந்திருந்தான். நோக்குதல் - நோக்கல் நோக்கம். (எ.று)

முடிபு - நந்தி கல்யாண வளநகர் தன்னில் சரணர் தம்மோடு இம்முறை ஒழுகும் நாளில் வான் நோக்கும் இளம் பயிர்போல அல்லமன் வரவு நோக்கி இருந்தான். இப்பாட்டு உவமையணி. (அல்லமன் வான் நோக்கும் பயிர்போல் இருத்தலின்)

ஒன்பதாவது
மாதேவி முதலியோர் அவதார கதி முற்றிற்று

Koviloor Digital Library

பத்தாவது
மாதேவி அம்மை துறவு கதி

இக்கதிக்கு (மகாதேவி அக்கணவிரக்தி) என்று
கன்னடப் பிரபுலிங்க லீலை பெயர் சூட்டியுள்ளது

கதிகருதிய பொருள்
வேறு

533. [1]தன்னைக் காண வேள்கணை பாயத் தடுமாறும்
மன்னைக் காலும் சோறென விட்டருள் மாதேவி
மின்னைப் போலும் அல்லம தேவன் விளையாடும்
கொன்னைக் கானில் தேடி அமைந்தமை கூறுற்றாம் 1

(பா.ம்) [1]தன்னைக் காணா எனவும், காணூ எனவும் இரு பாட பேதம்

(இ.ள்) அருள்மாதேவி - அருளையுடைய மாதேவி அம்மை, தன்னைக் காண வேள்கணை பாயத் தடுமாறும் மன்னைக்காலும் சோறு என விட்டு - தன்னைப் பார்த்தவுடனேயே மன்மதனுடைய; மலரம்புகள் பாய்தலால் மனம் தடுமாறிய கௌசிய மன்னனை (தன்னை அவன் விரும்பவும், அவனைத்தான் விரும்பாமல்) அவனைக் கக்கிய சோற்றைப் போலத் துறந்து, மின்னைப் போலும் அல்லமதேவன் விளையாடும் கொன்னைக் கானில் - மின்னலின் ஒளியைப்போல தோன்றியும், மறைந்தும், திருவிளையாடல்களைச் செய்யும் அல்லமதேவன் வாழ்கின்ற பெரிய காட்டின் கண், தேடி அடைந்தமை கூறுற்றாம் - அவனைத் தேடி அக்காட்டின் கண் அடைந்தமையை சொல்லத் தொடங்குவாம். (எ.று)

முடிபு - அருள் மாதேவி தன்னைக்காண கணைபாயத்தடுமாறும் மன்னனை காலும் சோறு எனவிட்டு, அல்லமதேவன் விளையாடும் கொன்னைக் கானில் (அவனைத்) தேடி அலைந்தமைகூறுற்றாம். கூறு - கூறுதல். தொழிற்பெயர். கூறுதலை உற்றாம் எனப் பொருள் கூறிக் கொள்க. துறவிகள் எல்லாவற்றைத் துறந்தாலும், அருளை மட்டும் துறக்கக்கூடாது என்னும் கருத்தால், தொல்காப்பியர். ''அருளொடு புணர்ந்த அகற்சி'' என்பர். (அகலுதல்-துறத்தல்) ஆதலின் அருள்மாதேவி என அடைகொடுத்து ஓதினார். (வானிடு வில்லின் வரவரியவாய்மையால் (நாலடியார்) என்று கூறியவாறு அடியார்

Koviloor Digital Library

முன்தான் விரும்பியவாறு தோன்றி அருள் செய்து மறைதலின் அல்லமதேவனை, மின்னைப் போலும் அல்லம தேவன் என்று கூறினார். தன்னைக் காண என்பதை இரட்டுற மொழிதலாக்கி, தன் உண்மை கண்டறிய வேண்டி மன்னனை, காலும் சோறு என விட்டு, அல்லம தேவனைத் தேடி அலைந்தாள் (தன்னைத்தேடி) என்று கூறலும் ஆம். இவ்வுரைக்குத் தன்னைக் காணூ என்ற பாடம் சிறந்ததாய் இருக்கும் (தன்னையே காண வேண்டி) எனப் பொருள்.

மாதேவி மங்கைப் பருவம் அடைந்தது

534. கொங்கைப் பொறையைக் கொண்டு மருங்குல் கொடிவாட
அங்கைக் [1]குடநெய், பெய்தழல் என்ன அழகெய்தி
நங்கைக் கிணைகண் டிலமுல கெங்கணும் நாமென்ன
மங்கைப் பருவம் நண்ணினள் முற்றுணர் மாதேவி 2

(பா.ம்) [1]கடநெய்

(இ.ள்) முற்றுணர் மாதேவி மங்கைப் பருவம் நண்ணினள் முற்றுமுணர்ந்த மாதேவி அம்மை இப்போது மங்கைப் பருவத்தை அடைந்தாள். அப்பருவ நிகழ்ச்சி எவ்வாறு இருந்தது எனில்? கொங்கைப் பொறையைக் கொண்டு மருங்குல் கொடிவாட - நகிலின் பாரத்தைத் தாங்கிக் கொண்டு, அதனாலே இடையாகிய கொடி தளர்ந்திருக்க; அம்கைக் குடம் நெய் பெய்தழல் என்ன அழகு எய்தி - அழகிய கையிடத்தே, குடம் நிறைய நெய்யைக் கொண்டு அதை ஊற்றி வளர்த்த நெருப்பைப் போல ஒளி மிகுந்த அழகினைப் பெற்று; நாம் நங்கைக்கு இணைகண்டிலம் என்ன - உலக மக்களாகிய நாமெல்லாம், நங்கையாகிய இவளுக்கு ஒப்புகண்டிலோம் என்று கூறுமாறு, மங்கைப் பருவம் நண்ணினள் - மங்கைப் பருவமடைந்தாள். (எ.று)

முடிபு - மாதேவி மருங்குல் கொடிவாட, தழல் என்ன அழகு எய்தி நாம் இணை கண்டிலம் என்ன மங்கைப் பருவம் நண்ணினள். பேதை, பெதும்பை என்னும் இரண்டு பருவங்களையும் தாண்டி மங்கைப் பருவமடைந்தாள் என்பது கருத்து. மருங்குல் கொடி என்பது உருவகம்.

மாதேவி மங்கைப் பருவமடைந்தும், காம உணர்வு இல்லாதிருந்தாள்

535. வாதித் தொன்றோ டொன்றெழல் போல்முலை வந்துற்றும்
பேதைப் பெண்போல் காமம் உளத்தில் பிறவாமல்

Koviloor Digital Library

பாதிப் பெண்மே னியனெனு மின்பப் பதிதன்னைச்
சாதித் தெய்துஞ் சாதன மோடு தலைப்பட்டாள் 3

(இ.ள்) ஒன்றோடு ஒன்று வாதித்து எழல் போல் முலைவந்துற்றும் - ஒரு நகிலோடு மற்றொரு நகில் நான் உயர்வேன். நான் உயர்வேன் என்று வாது பேசிக் கொண்டு, வளர்ந்ததைப் போல, இரண்டு நகில்களும் வளர்ந்து விளங்கியும். (மங்கைப் பருவம் வந்தது என்பது கருத்து) பேதைப் பெண் போல் காமம் உளத்தில் பிறவாமல் - பேதை என்னும் முதல் பருவத்து மகளைப் போல மனத்திலே சிறிதும் காம உணர்ச்சி தோன்றாதபடி இருந்து கொண்டு, பாதிப் பெண் மேனியான் எனும் இன்பப்பதி தன்னைச் சாதித்து எய்தும் சாதனமோடு - உமாதேவியை இடப் பாகத்தில் உடைய சிவபெருமானாகிய, இன்பம் தரும் தலைவனை, பயிற்சி செய்து அடையக் கூடிய, கருவியாகிய சாதனங்களுடன்; தலைப்பட்டாள் - கூடினாள். (எ.று)

முடிபு - (முற்றுணர் மாதேவி) முலை வந்துற்றும் காமம் உளத்தில் பிறவாமல், பதி தன்னை சாதித்து எய்தும் சாதனமோடு தலைப்பட்டாள். பதியை சாதித்து எய்தும் சாதனமாவன, நான்கு. 1. மெய்ப்பொருள் பொய்ப் பொருளறிவு. 2. இம்மை இன்பம், மறுமை இன்பம் இவற்றில் பற்றின்மை. 3. சமை முதலான நற் பண்புகளைப் பெற்றிருப்பது, 4. வீடு பேற்றில் விருப்பம். 1. நித்தியா, அநித்தியாவஸ்து விவேகம் என்பர், வட நூலாரும். 2. குக பர போக விராகம் என்பர் வடநூலார். 3. சமை முதலான 6 பண்புகளைப் பெற்றிருத்தல். சமம்-தமம்-விடல்-சகித்தல்-சமாதானம்-சிரத்தை ஆகும். **4**. மூட்சுத்துவம் என்பர். சாதனம் 4. இந்த நான்கு சாதனங்களோடு கூடி இருத்தலின் காம உணர்வு தோன்றவில்லை.

மாதேவியைப் பற்றி அறியாதார் கூறுவது

536. தன்னை அறிந்திடை ஈடற முக்கண் தலைவன்பால்
பின்னம் அறும்படி மேவு பெரும்பரு வப்பெண்ணைக்
கன்னல் நெடுஞ்சிலை மன்மதன் வேரிக் கணைபாயும்
மன்னும் இளம்பரு வத்தினள் என்பர் மறைப்புற்றார் 4

(இ.ள்) தன்னை அறிந்து - உயிராகி தன்னை முதலில் அறிந்து கொண்டு, இடையீடு அற - வேற்றுமை நீங்க, முக்கண் தலைவன்பால் பின்னம் அறும்படி மேவு பெரும் பருவப் பெண்ணை - மூன்று கண்ணையுடைய, பதியாகிய சிவபெருமானிடத்து இரண்டாய்க்

Koviloor Digital Library

கருதும் பாவனை நீங்க, பொருந்துதற்குரிய சத்தினி பாதம் என்னும் பெரும் பருவத்தை அடைந்துள்ள இப்பெண்ணை, மறைப்புற்றார் - அறியாத மக்கள், கன்னல் நெடுஞ்சிலை மன்மதன் வேரிக்கணை பாயும் மன்னும் இளம் பருவத்தினள் என்பர் - கரும்பாகிய நீண்ட வில்லை யுடைய மன்மதனது தேனையுடைய மலர்கணைகள் பாய்வதற்குரிய, நிலைபெற்ற இளமைப் பருவத்தையுடையவள் என்று கூறுவர். (எ.று)

முடிபு - தன்னை அறிந்து இடையீடுஅற தலைவன்பால் பின்னம் அரும் மேவு பெரும் பருவப் பெண்ணை மறைப்புற்றோர் மதன் வேரிக்கணை பாயும் இளம் பருவத்தினன் என்பர். முதலில் தன்னை அறிந்தே, இரண்டாவது தலைவனை அறிய வேண்டியிருத்தலின் முன்னே தன்னை அறிதலைக் கூறினார். ''அடுத்த விச்சீவன் தன்மை யோர்ந்தன்றி யறியொணாப் பரனை'' என்பது வைராக்கிய தீபம். ''தன்னையும் தனக்கு ஆதாரத் தலைவனையும் கண்டானேல் பின்னை அத்தலைவன் தானாய் பிரமமாய் பிறப்புத் தீர்வன்'' என்பது கைவல்ய நவநீதம்.

மாதேவி கவின் பொங்க இருந்தமை

537. வண்டு படாதலர் சண்பக மேயென மாறாகிப்
பண்டர னோடமர் செய்மதன் வண்டு படாமேனி
கண்டிடும் ஒண்சுட ரேயெனு மாறு கவின்பொங்க
ஒண்தவன் நின்மலன் மாதமர் நாள்களில் ஓர்நாளில்

(இ.ள்) வண்டு படாது அலர் சண்பகமே என - வண்டுக் கூட்டங்கள் மொய்க்கப் பெறாமால் மலர்கின்ற சண்பகமலரே போல, மாறு ஆகி பண்டு அரனோடு அமர்செய் மதன்வண்டு படாமேனி - மாறுபட்டு முற்காலத்திலே, சிவபெருமானோடு போர் செய்த மன்மதனுடைய வண்டு என்கின்ற மலரம்புகள் படாத திருமேனியானது; கண்டிடும் ஒண்சுடரே எனுமாறு கவின்பொங்க - கண்ணாலே காணப்பட்ட, உதய சூரியனது ஒளியைப் போல அழகு பொங்க, ஒண்தவன் நின்மலன் மாதுஅமர் நாள்களில் - ஒளி பெற்ற தவத்தை யுடைய நின்மலன் மகளாகிய மாதேவி வாழ்ந்திருக்கும் காலத்தில் ஓர் நாள் - ஒரு நாள் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறுகின்றேன். (எ.று)

முடிபு - ஒண்தவன் நின்மலன்மாது, சண்பகமே என (விளங்கும்) மேனி கண்டிடும் ஒண்சுடரே எனுமாறு கவின் பொங்க, அமர்நாளில் ஓர் நாள், மதன் வண்டு என்பதில் வண்டு என்பது, மன்மதனுடைய நாரிக்குப்

Koviloor Digital Library

பெயராய், அதிலிருந்து வரும் அம்புக்கு ஆகி வருவதால் இது ஆகு பெயராயிற்று. வண்டு படாத சண்பக மலரைப் போல் மன்மதன் வண்டு படாத திருமேனியை யுடையவள் மாதேவி என்க. அம்மேனி சுடரைப்போல் அழகு செய்ய விளங்கி இருந்தாள் என்பது கருத்து. உதயசூரியனிடத்து ஒளி பொங்குவது போன்று இவள் மேனியில் அழகு பொங்குகின்றது என்க.

கௌசிக மன்னன் உலா வந்தது

538. வீரம் குறைவில் மும்மத வேழம் மிசை கொண்டு
தாரும் தோளும் பொங்க மதிக்குடை தன் [1]மேலா
மாரன் கரிமேல் வந்தனன் என்ன மணிப்பொற்றேர்
ஊரும் தெருவில் கௌசிக மன்னன் உலா வந்தான் 6

(பா.ம்) [1]மேலாம்

(இ.ள்) வீரம் குறைவுஇல் மும்மத வேழம்மிசை கொண்ட - பெருமிதம் குறையாத மூன்று மதத்தையுடைய களிற்றின் மேலிடத்தை தான் எழுந்தருளியிருக்கும் இடமாகப் பெற்று, தாரும் தோளும் பொங்க - மலர் மாலைகளும், அவை அணிந்த தோள்களும் மிக்குத் தோன்ற, மதிக்குடை தன் மேலா மாரன் கரிமேல் வந்தனன் என்ன - சந்திரனுடைய குடை தனக்கு மேலே விளங்குமாறு மன்மதன் யானைமேல் வந்தான் என்று கூறும்படி, மணிப் பொன்தேர் ஊரும் தெருவில் - மணிகளை யுடைய பொன்னால் ஆன தேர்கள் செல்லுதற்குரிய வீதியில் (தேரோடும் வீதியில்) கௌசிக மன்னன் உலா வந்தான் - அவ்வூர் மன்னனாகிய கௌசிகன் ஊர்வலமாக வந்தான். (எ.று) மேற்பாட்டிலுள்ள ஓர் நாளில் கௌசிக மன்னன் இவ்வாறு உலா வந்தான் என முடித்துக் கொள்க.

முடிபு - ஓர் நாளில் கௌசிக மன்னன், வேழம்மிசை கொண்டு, தாரும் தோளும் பொங்க, மாரன் கரிமேல் வந்தனன் என்ன தெருவில் உலாவந்தான்.

இதுவு மது

539. இயங்கள் தரங்க நெடுங்கட லென்ன எழுந்தார்ப்ப
உயங்கு மருங்குல் மடந்தையர் பாடி யுடன் போத
வயங்கள் இவர்ந்திள மைந்தர் மருங்கில் அடுத்தேகப்
புயங்கள் அலங்கல் இலங்க விம்பிறை போல்வந்தான் 7

Koviloor Digital Library

(இ.ள்) இயங்கள் தரங்க நெடுங்கடல் என்ன எழுந்து ஆர்ப்ப - வாத்தியங்கள், அலையோடு கூடிய பெரிய கடலின் ஒலியைப் போல, ஒலிசெய்து ஆரவாரிக்கவும்; உயங்கு மருங்குல் மடந்தையர் பாடி உடன்போத - வருந்துகின்ற இடைகளைப் பெற்றிருக்கும் பெண்கள், இசை பாடிக் கொண்டு அரசனுடன் செல்லவும். வயங்கள் இவர்ந்து இள மைந்தர் மருங்கில் அடுத்து ஏக - இளமையான மைந்தர்கள், குதிரைகள் மீது ஏறி அரனது இரு பக்கங்களிலும் பொருந்தி வரவும்; புயங்கள் அலங்கல் இலங்க விம்பிறை போல் வந்தான் - (கௌசிக மன்னன்) தன்னுடைய தோளில் மாலைகள் விளங்க, இந்திரனைப் போல உலா வந்தான். (எ.று)

முடிபு - இயங்கள், கடல் என்ன எழுந்து ஆர்ப்பவும், மடந்தையர் பாடி உடன் போதவும், மைந்தர், வயங்கள் இவர்ந்து மருங்கி அடுத்து ஏகவும், (கௌசிக மன்னன்) புயங்களில் அலங்கல் இலங்க விசும்பு இறைபோல் வந்தான். இதில் வந்துள்ள உவமை அணிகளை உணர்க.

உலா கண்ட மடந்தையர் காம மயக்கத்தால் வருந்தியது

540. மாணு நெடுங்கரி மீது புரந்தனில் வந்தானைக்
காணும் மடந்தையர் ஏதும் உணர்ந்திலர் காமத்தால்
நாணும் இழந்தனர் தூசும் இழந்தனர் நன்றாகும்
பூணும் இழந்தனர் ஆவி இழந்திலர் போனார்கள் 8

(இ.ள்) மாணும் நெடும்கரி மீது புரந்தனில் வந்தானை - சிறந்த நீண்ட யானையின் மேல், அந்நகரத்தில் உலா வந்த அரசனை, காணும் மடந்தையர் - காண்கின்ற பெண்கள்; ஏதும் உணர்ந்திலர் - உலாக் காட்சியை யன்றி வேறு எதையும் உணராதவரானார், காமத்தால் - உலா வந்த அரசன் மீது கொண்ட விருப்பத்தால், நாணும் இழந்தனர், தூசும் இழந்தனர், நன்றாகும் பூணும் இழந்தனர் - வெட்கத்தையும் விட்டனர், தங்களுடைய இடையில் அணிந்திருந்த ஆடையையும் இழந்து விட்டனர், தங்களுக்கு அணியாயிருக்கின்ற வளையல் முதலான அணி கலன்களையும் இழந்தார்கள். (ஆனால்) ஆவி இழந்திலர் போனார்கள் - தங்களது உயிரை மட்டும் இழக்காதவர்களாய் உடன் போனார்கள். (எ.று)

முடிபு - புரந்தனில்கரி மீது வந்தானைக் காணும் மடந்தையர், ஏதும் உணர்ந்திலர். காமத்தாலே நாணும், தூசும், பூணும் இழந்தனர். ஆவி

Koviloor Digital Library

இழந்திலர் போனார்கள். இழந்தனர் என்ற சொல் அடுத்தடுத்து வந்தமையின் சொல் பின் வருநிலையணியின் பாற்படும். வந்தானை என்பதில் வந்தான் என்பது வினையாலணையும் பெயர்.

இதுவும் அது

541. நல்ல மதந்தான் ஒண்கவு ளின்பால் நன்றுண்ணச்
செல்லு சுரும்பே வெங்கரி யின்றாழ் செவியூடு
மெல்ல நடந்தே போவென மெல்ல விளம்பென்று
சொல்லி மறங்கூர் வேலன கண்ணார் துயர்கின்றார் 9

(இ.ள்) மறங்கூர் வேல் அன கண்ணார் - வீரம் மிகுந்த வேலை ஒத்த கண்களை உடைய பெண்கள், (உலாக் கண்ட பெண்கள்); நல்ல மதம்தான் ஒண் கவுளின் பால் நன்று உண்ணச் செல்லு சுரும்பே - நல்ல மதநீர் ஒன்றையே, ஒளிபெற்ற கன்னத்தின் பக்கத்திலிருந்து நன்றாக உண்ணும்படி, அங்கு செல்லும் வண்டுக் கூட்டங்களே; வெம்கரியின் தாழ் செவியூடு - கொடிய யானையினது தாழ்ந்த செவியின் உள்ளிடத்தே; மெல்ல நடந்தே போவென, மெல்ல விளம்பு என்று சொல்லி - மெதுவாக நடந்தே போவாயாக என்ற சொல்லை, பிறர் காதில் விழாவண்ணம் ஓசைபடாது சொல்லுக என்று கூறி, துயர்கின்றார் - என்று காமத்தால் துயர் உறுகின்றார்கள். (எ.று)

முடிபு - வேலன கண்ணார் மதம் உண்ண கவுளின்பால் செல்லும் சுரும்பே, கரியின் செவியூடு மெல்ல நடந்தேபோவென மெல்ல விளம்பு என்று சொல்லி துயர்கின்றார்.

மன்னன் மாதேவியைக் கண்டது

542. கோதையர் மாலால் இவ்வகை நோவக் கொடிமாட
வீதியின் ஊடு வருந்திறல் மன்னன் வினையில்லா
மாதவன் ஆகும் நின்மல னுக்கோர் மகளாகும்
காதொடு காதும் [1]கண்மட மாதைக் கண்டானே 10

(பா.ம்) [1]கண்ணுடைமாதை

(இ.ள்) கோதையர் மாலால் இவ்வகை நோவ - மன்னனுடைய உலாக் காட்சியைக் கண்ட பெண்கள், காம மயக்கத்தால் மேலே கூறியவாறு வருந்தி இருக்க; கொடிமாட வீதியின் ஊடு வரும்திறல் மன்னன் - கொடிகளோடு விளங்கும் மாடவீதியின் உள்ளிடத்தே உலாவந்து கொண்டிருக்கும் ஆற்றல் மிகுந்த மன்னவன், வினையில்லா

Koviloor Digital Library

மாதவன் ஆகும் நின்மலனுக்கு ஓர் மகளாகும். காதொடு காதும் கண்மட மாதைக் கண்டான் - இருவினைக் கட்டைக் கடந்த பெரிய தவத்தை யுடைய நின்மலன் என்பானுக்கு ஒரே மகளாகப் பிறந்த, காதொடு மோதுகின்ற விழியையுடைய மடப்பம் வாய்ந்த மாதேவியைப் பார்த்தான். (எ.று)

முடிபு - கோதையர் மாலால் இவ்வகை நோவ, வீதியினூடு வரும் மன்னன், நின்மலனுக்கோர் மகளாகும் மடமாதைக் கண்டான். மடம் என்பது அறிந்தும் அறியாமலிருப்பது போன்றதோர் குணம்.

மாதேவியைக் கண்ட மன்னன் நிலை

543. கண்டன னோவிலை யோவெனு முன்னம் கழைவாங்கி
கொண்டனன் வாளி சொரிந்தனன் ஓடிக் கொடுமாரன்
உண்டிலை யோவென ஆவி தளர்ந்தே உம்பல்மேல்
மண்டலம் ஆளும் மன்னன் இருந்தான் வசமற்றே 11

(இ.ள்) கண்டனனோ இலையோ எனும் முன்னம் - மன்னவன் மாதேவியைப் பார்த்தானோ இல்லையோ என்னும் நிகழ்ச்சி நன்கு நடைபெறுவதற்கு முன்னரே, கொடுமாறன் ஓடிக் கழைவாங்கிக் கொண்டனன் வாளி சொரிந்தனன் - கொடிய மன்மதனானவன் மன்னன் முன் விரைந்து சென்று, கரும்பு வில்லை வளைத்து மலர் அம்புகளை மழைபோல் பொழிந்தான், (அதனாலே) மண்டலம் ஆளும் மன்னன் - உலகத்தை ஆளுகின்ற கௌசிக மன்னவன், உண்டு இலையோ என ஆவி தளர்ந்தே - உடம்பின்கண் இருக்கின்றதோ இல்லையோ என்று கூறும்படி உயிர் தளர்ந்து, உம்பல்மேல் வசமற்று இருந்தான் - தான் உலாவந்த யானையின் மேல், தன்வசம் இழந்து வீற்றிருந்தான். (எ.று)

முடிபு - மன்னன் கண்டனனோ இலையோ எனும் முன்னம், மாரன் ஓடி கழைவாங்கிக் கொண்டனன் வாளி சொரிந்தனன். அதனால் ஆவி தளர்ந்து உம்பல் மேல் வசமற்று அவனிருந்தான். கண்டனனோ இலையோ, உண்டிலையோ என்ற இடங்களில் வந்துள்ள ஓகாரங்கள் ஐயப் பொருட்டு.

மன்னன் ஐயம்

544. கொங்கைப் பாரத் தான்மலர் வாசம் கூடாமல்
இங்கிப் பாரில் போதும் மலர்க்கண் எழில்மாவோ
மங்கைக் கோலம் கொண்டு நிலத்தில் வருமின்னோ
அங்கைக் காந்தள் பொற்றொடி யாரோ அறியேனே 12

Koviloor Digital Library

(இ.ள்) அம்கைக் காந்தள் பொற்றொடி - அழகிய கையாகிய காந்தள் மலரைப் பெற்றிருக்கும் பொன்வளையல் அணிந்த இம்மங்கை, கொங்கைப் பாரத்தால் மலர் வாசம் கூடாமல் இங்கு இப்பாரில் போதும் மலர்க் கண் எழில்மாவோ - நகிலாகிய பெரிய பாரத்தினாலே மென்மையான மலரில் வாழ முடியாமல் இங்கே இவ்வுலகத்தில் குடியேறிய மலர் போன்ற கண்ணையுடைய அழகிய திருமகளோ? மங்கைக் கோலம் கொண்டு நிலத்தில் வருமின்னோ - பெண்ணின் வடிவத்தைப் பெற்றுக் கொண்டு (விண்ணில் வாழும் வாழ்க்கையை விட்டு) நிலவுலகத்தில் குடியேறிய மின்னல் கொடியோ? யாரோ - என்னும் யாவரோ? அறியேன் - ஐயத்தின் நீங்கித் தெளிந்திலேன். (எ.று)

முடிபு - (யானையின் மேல் வசமற்று இருந்த மன்னவன்) (இப்) பொற்றொடி. மாவோ. மின்னோ - யாரோ அறியேனே என்றான். இதில் உள்ள ஓகாரங்கள் ஐயப் பொருட்டு. அங்கைத் காந்தள் பொற்றொடி என்பது அன்மொழித் தொகை. இது மாதேவியைக் குறித்தது.

மன்னன் கருதியது

545. வஞ்சி நடந்தே என்னெதிர் வந்தே மயல்செய்தாள்
நெஞ்சு தளர்ந்தேன் மாலில் [1]விழுந்தேன் நிலைகாணேன்
அஞ்சலை என்றே இன்றணை யாளேல் அனல்காணும்
பஞ்சு படும்பா டங்கசன் [2]அம்பால் படுவேனே 13

(பா.ம்) [1]விழுந்தே நிலைகாணேன்; [2]அம்பில்

(இ.ள்) வஞ்சி நடந்தே என் எதிர் வந்தே மயல் செய்தாள் - வஞ்சிக் கொடி போன்ற இப்பெண், நடந்து என்முன் தானாக வந்தே காம மயக்கத்தைச் செய்து விட்டாள். (அதனால்) நெஞ்சு தளர்ந்தேன் மாலில் விழுந்தேன் நிலை காணேன் - மனம் தளர்ந்தேன், காம மயக்கத்தில் விழுந்துவிட்டேன், இம்மயக்கம் நீங்கும் வழியைக் காணேன், இன்று அஞ்சலை என்றே அணையாளேல் - இப்பொழுது, நீ அஞ்சாதே என்று சொல்லி என்னைக் கூடாளே யானால், அங்கசன் அம்பால் அனல் காணும் பஞ்சு படும்பாடு படுவேன் - மன்மதன் ஏவும் மலரம்புகளால் நெருப்பைக் கண்ட பஞ்சு அடையும் நிலையை எல்லாம் நான் அடைந்து விடுவேன். (எ.று). அங்க+ஜன் என்பது அங்கஜன் என்றாயிற்று. அது தமிழில் அங்கசன் என்று திரிந்தது. உடம்பிலே பிறப்பவன் என்ற காரணத்தால் இப்பெயர் மன்மதனை உணர்த்திற்று. படுவேனே என்பதில் உள்ள ஏகாரம் ஈற்று அசை. வஞ்சி: உவமையாகு பெயர்.

Koviloor Digital Library

முடிபு - வஞ்சி நடந்து எதிர் வந்து மயல் செய்தாள் (அதனால்) தளர்ந்தேன், விழுந்தேன், நிலைகாணேன், இன்று அஞ்சலை என்று அணையாளேல் அனல் காணும் பஞ்சு படும்பாடு அங்கசன் அம்பால் யான் படுவேன்.

மன்னன் மேற்கொண்ட செயல்

546. என்ன நினைந்தே மன்னவன் வெந்தீ இழுதாகி
முன்னர் மருங்கே நின்ற ஒருத்தன் முகம் நோக்கிப்
பொன்னென வந்தவ் வாய்தலில் நின்று புறப்பட்ட
கன்னி அணங்கார் நீயறி கென்றான் காமுற்றே 14

(இ.ள்) மன்னவன் என்ன நினைந்தே - கௌசிக மன்னன் மேற்கூறியவாறு பலவற்றை எண்ணி, வெம்தீ இழுது ஆகி - வெப்பமான தீயில் பட்ட வெண்ணெய் போலாகி, முன்னர் மருங்கே நின்ற ஒருத்தன் முகம் நோக்கி - தனக்கு முன்னர் பக்கத்தே நின்ற ஒரு ஏவலாளன் முகத்தைப் பார்த்து, காமுற்றே - தன் காமக் குறிப்பு தோன்ற, பொன் என வந்து அவ்வாய்தலில் நின்று புறப்பட்ட கன்னி அணங்கு ஆர்நீ அறிக என்றான் - திருமகளைப் போல வந்து, அவ்வாயிற்படியில் சற்று நேரம் நின்றுவிட்டுப் பின், புறப்பட்டு உள்ளே போன கன்னிகையாகிய அணங்கு போன்ற பெண் யார் என்பதை நீ அறிவாயாக என்று சொன்னான்.

முடிபு - மன்னவன் என்ன நினைந்தே, இழுது ஆகி மருங்கே முன்னர் நின்ற ஒருத்தன் முகம் நோக்கி, பொன் என வந்து அவ்வாய்தலில் நின்று புறப்பட்ட அணங்கு ஆர் என்பதை நீ அறிக என்று காமுற்றுக் கூறினான். காமுற்றே என்பதில் காமம் என்பது காம் எனக் குறைந்து வந்தது.

இதுவும் அது

547. ஓடி அறிந்தே யன்னவன் [1]வந்தங் குரைசெய்ய
வாடு மருங்குல் மங்கையை யின்னான் மகளென்று
நீடிய வெந்துயர் மன்னன் அறிந்தென் னெறியாலும்
கூடுவன் இந்த அணங்கினை என்று குறித்தேகி 15

(பா.ம்) [1]வந்திங்குரை செய்ய

(இ.ள்) அன்னவன் அங்கு ஓடி அறிந்தே வந்து - அந்த ஏவலாளன் அவ்விடத்திற்கு விரைந்து சென்று, செய்திகளை அறிந்தே வந்து, வாடும்

Koviloor Digital Library

மருங்குல் மங்கையை இன்னான் மகள் என்று உரை செய்ய - தளர்ந்த இடையையுடைய மாதேவியாகிய பெண்ணை இன்னானுடைய மகளென்று அரசனிடத்தே கூற, நீடிய வெந்துயர் மன்னன் அறிந்து - பெரிய காமத் துன்பத்தைப் பெற்றிருக்கும் அம்மன்னவன் மாதேவி பெறுதற்கரியவள் என்பன அறிந்து கொண்டு இந்த அணங்கினை எந்நெறியானும் கூடுவன் என்று குறித்து ஏகி - பெறுதற்கரிய இப் பெண்ணை (நால் வகை உபாயங்களில்) எந்த உபாயத்தாலாவது பெற்று அவளைக் கூடுவேன் என்று கருதிக் கொண்டு சென்று, (எ.று)

முடிபு - அன்னவன், ஓடி அறிந்தே அங்கு வந்து மங்கையை இன்னான் மகள் என்று உரை செய்ய, அதைக் கேட்ட மன்னன் அறிந்து இந்த அணங்கினை எந்நெறியானுங் கூடுவன் என்று குறித்தேகி.

இதுவும் அது

548. கோயிலின் மேவி யிருந்துயர் ஞானக் குறிகூறும்
தூயவர் ஆகிய ஆரியர் தாமும் சுடர்செம்பொன்
சேயிழை யாரும் வலிந்துறில் இன்பு செயாரென்று
வாயிலி னாலணை வேனென மன்னன் மனத்தெண்ணி 16

(இ.ள்) கோயிலில் மேவி இருந்து உயர் ஞானக் குறி கூறும் தூயவர் ஆகிய ஆரியர் தாமும் - திருமடங்களில் எழுந்தருளி இருந்து ஞான இலக்குகளை உணர்த்துகின்ற புனிதராகிய ஆசிரியர்களும், சுடர் செம்பொன் சேயிழையாரும் - ஒளி பொருந்திய பொன்னால் செய்த அணிகளை அணிந்த மங்கையரும்; வலிந்து உறில் இன்பு செயார் என்று - (பெறுபவர்) தங்கள் வலிமை தோன்ற அவர்களை அடையக் கருதினால், அவ்விருவரும் பெறுபவர்க்குத் தங்களால் ஆன இன்பத்தை அவர்களுக்குச் செய்ய மாட்டார்கள் என்பதை கருதிக் கொண்டு; வாயிலினால் அணைவேன் என மன்னன் மனத்து எண்ணி - இம்மங்கையை, சிறந்த தூதுவல்லவரின் முயற்சியினால் அடைவேன் என்று மனத்தில் முடிவு செய்து கொண்டு. (எ.று)

முடிபு - ஆரியர் தாமும், சேயிழையாரும், வலிந்துறில் இன்பு செயார் (அதனால்) வாயிலினால் அணைவேன் என மன்னவன் மனத்து எண்ணி, ஆரியர்ரையும், சேயிழையாரையும் சேர்த்துக் கூறியது ஒப்புமைக் கூட்டணி. தீட்சாகுரு - சிட்சாகுரு-ஞானகுரு என்று குருமார் கள் மூவகையினர். அவருள் இங்கே குறிப்பிட்டவர், இருவரில் மேம் பட்ட ஞானகுருவாவார். அவரை அடையக் கருதியவர் வழிபட்டே

Koviloor Digital Library

அடைய வேண்டும் வலிந்துறில் அருள் செய்யார் என்க. இங்கு கோயில் என்றது ஞானாசிரியர் எழுந்தருளியுள்ள திருமடம் என்க. இறைவன் எழுந்தருளி இருக்கின்ற கோயிலும், ஞானாசிரியர் எழுந்தருளியுள்ள திருமடமு சிறந்ததாகலின், அத்திருமடத்தை கோயிலாகவே குறிப் பிட்டார்.

வேறு

அரசன் தூது அனுப்பியது

549. **தூது வல்லநன் முதுக்குறை மாதரைத் துணிந்து**
நீதி வல்லவன் நிருமலன் மகள்தனை நீவிர்
தீதில் [1]எம்மனைக் கிழத்தியாம் படியுரை செய்து
போது மின்களென் றேவினன் வியனிலம் புரப்பான் 17

(பா.ம்) [1]என்மனை

(இ.ள்) வியல் நிலம்புரப்பான் - அகன்ற நிலவுலகத்தைக் காப்பவனாகிய கௌசிக மன்னன்; தூது வல்ல நல் முதுக்குறை மாதரைத் துணிந்து - தூது போகும் செயலை முடித்துத் தரவல்ல நல்ல, அறிவுக்கு உறைவிடமான பெண்களை ஆராய்ந்து அழைத்து; நீவிர் - நீங்கள், நீதி வல்லவன் நிருமலன் மகள்தனை தீதுஇல் எம்மனைக் - கிழத்தியாம்படி உரை செய்து போது மின்கள் என்று ஏவினன் - நீதி நூல்களில் வல்லவனாகிய, நிருமலன் என்பானுடைய மகளை, தீமை இல்லாத எம்முடைய மனைவியாகுமாறு சொல்லிச் சம்மதிக்குமாறு செய்து வாருங்கள் என்று ஏவினான். (எ.று)

முடிபு -. வியநிலம் புரப்பான் தூது வல்ல மாதரைத் துணிந்து (அவர்களிடம்) நிருமலன் மகளை எம்மனைக் கிழத்தியாம்படி உரை செய்து, நீவிர் போதுமின்கள் என்று ஏவினான். அன்பும் திறமையும் நினைவாற்றலும், இடம் பொருள், அறியும் அறிவும், அச்சமின்மையும், பொருளாசையின்மையும், பலர் கூறும் மொழிப் பொருளை அறியும் அறிவும், ஆகிய இவற்றோடு உடல் வலிவும் பெற்றிருப்பவரே தூது செல்வதற்குத் தகுதியுடையோர் என்று மதுஸ்மிருதி கூறும் (மநுதர்மம்)

தூதுப் பெண்கள் கூறும் நிருமலன் பதிலும்

550. **ஐய அன்னதே [1]செய்குவம் எனப்புகன்று அகத்தில்**
பைய வந்துநன் னிருமலன் திருமுகம் பார்த்து

Koviloor Digital Library

வைய மன்னவன் கருத்தினை வகுத்தனா் மறுத்துத்
துய்ய மங்கைமீா் எமக்கடா திதுவெனச் சொன்னான் 18

(பா.ம்) [1]செய்குதும்

(இ.ள்) ஐய! அன்னதே செய்குவம் எனப்புகன்று - (தூது செல்லுதற்குரிய மாதர் அரசனை நோக்கி) ஐயனே! நீ கருதிய அக்காரியத்தையே நாங்கள் செய்வோம் என அரசனிடம் கூறிவிட்டு; அகத்தில் பைய வந்து - நிருமலனது வீட்டின் கண் மெல்ல வந்து; நன்னிருமலன் திருமுகம் பார்த்து - நல்ல நிருமலனுடைய அழகிய முகத்தினை நன்கு பார்த்துக் கொண்டு, வைய மன்னவன் கருத்தினை வகுத்தனா் - உலகத்தை ஆளும் அரசனுடைய மனக் கருத்தினை கூறுபாடு தோன்றக் கூறினாா்கள், மறுத்துத் தூய மங்கைமீா்! எமக்கு அடாது இது எனச் சொன்னான்- அவா்கள் கூற்றைக் கேட்ட நிருமலன், புனிதமான பெண்களே! நீங்கள் கூறிய இச்சொல் எங்களுக்குப் பொருந்தாது என மறுத்துக் கூறினான். (எ.று)

முடிபு - (முதுக்குறை மாதர்) ஐய! அன்னதே செய்குவம் எனப் புகன்று (நிருமலன்) அகத்தில் பைய வந்து, முகம் பார்த்து, மன்னவன் கருத்தினை வகுத்தனா். (கேட்ட நிருமலன்) மங்கையீர்! இது எமக்கு அடாது என மறுத்துச் சொன்னான்.

இதுவும் அது

551. வேந்தன் மாமனை நும்மகள் [1]ஆயினவ் வேந்தன்
சாா்ந்த வாழ்வெலாம் நுமவென அறிகிலீா் தானே
போந்த வோா்திரு மகள்வர வினைப்புறம் போக்கும்
மாந்தா் யாருளா் என்றுமங் கையா்சொல வகுப்பான் 19

(பா.ம்) [1]ஆயினால்

(இ.ள்) மங்கையா் - தூது சென்ற முதுக்குறை மகளிா்,

வேந்தன் மாமனை நும் மகள் ஆயின் - அரசனுடைய பெரிய பட்டத்து அரசியாக உங்களுடைய மகள் ஆகிவிட்டாா்களே ஆனால்; அவ்வேந்தன் சாா்ந்த வாழ்வெலாம் நுமவென அறிகிலீா் - அந்த அரசன் பெற்றிருக்கின்ற அரச வாழ்வெலாம் உங்களுடையன என்பதை அறியும் ஆற்றலில்லாதவா்களாக உள்ளீா், தானே போந்த ஓா் திருமகள் வரவினை - (முயற்சியின்றி) தானே வந்த ஒப்பற்ற திருமகளுடைய வருகையை, புறம்போக்கும் மாந்தா் யாருளா் என்று சொல - (வேண்டாம் என்று)

Koviloor Digital Library

புறத்தே ஒதுக்கித் தள்ளும் மக்கள் உலகில் எவர் இருக்கின்றனர் என்று கூற, வகுப்பான் - நிருமலன் வகைபெறக் கூறத் தொடங்கினான். (எ.று) யாருளர் என்பதனால் எவருமில்லை என்பதாயிற்று.

முடிபு - மங்கையர் நும்மகள் வேந்தன் மாமனையாயின், அவ் வேந்தன் வாழ்வெலாம் நும என அறிகிலீர், தானே போந்த திருமகள் வரவினை புறம்போக்கும் மாந்தர் யாருளர் என்று சொல்ல, (நிருமலன் வகுப்பான்) இப்பாட்டு வேற்றுப் பொருள் வைப்பணியின் பாற்படும்.

552. இம்மை சேர்பயன் கருதியே தகாதவ ரிடத்தில்
கொம்மை வார்முலை மகள்கொடை நேர்ந்த அக்கொடியார்
அம்மை ஆழ்[1]நிரை யத்திடை வீழ்ந்தனர் அழுந்தித்
தம்மை நோக்குநர் ஒருவரும் இன்றியே தளர்வார் 20

(பா.ம்) [1]நிரயத்திடை

(இ.ள்) இம்மை சேர் பயன் கருதியே - இந்த உலகத்தில் வந்து அடையும் பயன் ஒன்றையே எண்ணி, தகாதவர் இடத்தில் - தமக்கு ஒவ்வாதவரிடத்தில்; கொம்மை வார் முலை மகள் கொடை நேர்ந்த அக்கொடியார் - திரண்ட கச்சணிந்த நகிலையுடைய தம் மகளை, கொடுத்ததற்கு உடன்பட்ட அத்தீயவர்கள், அம்மை ஆழ் நிரையத்திடை வீழ்ந்தனர் அழுந்தி - மறுமையில், ஆழமான நரகத்தின் கண் வீழ்ந்து, அதிலேயே அழுந்தி இருந்து; நம்மை நோக்குநர் ஒருவரும் இன்றியே தளர்வார் - விழுந்த தம்மை, இரக்கங் கொண்டு பார்ப்பவர் ஒருவரும் இல்லாமலேயே தளர்ச்சி அடைவார்கள். (எ.று)

முடிபு - இம்மைப் பயன் கருதியே தகாதவரிடத்தில் மகட் கொடை நேர்ந்த அக் கொடியோர், அம்மைக்கண், நிரயத்திடை வீழ்ந்தனர் அழுந்தி, நோக்குநர் ஒருவரும் இன்றியே தளர்வார் வீழ்ந்தனர் என்னும் முற்று எச்சப் பொருட்டு.

நிருமலன் மறுப்பும் வந்த மங்கையர் அச்சுறுத்திக் கூறத் தொடங்கலும்

553. தமக்க டாதது செய்துயிர் வாழ்வது தன்னில்
சுமைக்க டாதமெய் விடுத்தலே நன்றெனச் சொல்வர்
எமக்க டாதது புகன்றனிர் மங்கைமீர் இச்சொல்
நுமக்க டாததென் றியம்பலும் மங்கையர் நுவல்வார் 21

Koviloor Digital Library

(இ.ள்) தமக்கு அடாதது செய்து உயிர் வாழ்வது தன்னில் - ஒருவர் தங்களுக்கு பொருந்தாத செயல்களைச் செய்து, அதனாலே உயிர் பிழைத்திருப்பதைக் காட்டிலும்; சுமைக்கு அடாத மெய்விடுத்தலே நன்று எனச் சொல்வர் - தாங்குதற்குத் தகுதி இல்லாத இவ்வுடம்பை விட்டு விடுதலே நன்றாய் இருக்கும் என்று அறிஞர் கூறுவர்; மங்கைமீர் எமக்கு அடாதது புகன்றனிர் - முதுக் குறைப் பெண்களே! எங்கள் குடும்பத் திற்குப் பொருந்தாத செயல்களை நீங்கள் கூறிவுள்ளீர்கள்; இச்சொல் உமக்கு அடாதது என்று இயம்பலும் - நீங்கள் கூறிய இச்சொல் முதுக்குறை மகளிராகிய நுங்கட்கு இது பொருந்தாது என்று நிருமலன் கூறுதலும்; மங்கையர் நுவல்வார் - தூது வந்த மங்கையர் அச்சுறுத்திக் கூறத் தொடங்கினார்கள். (எ.று)

முடிபு - அடாதது செய்து உயிர் வாழ்வது தன்னிலும், மெய் விடுத்தலே நன்று என்று (அறிஞர்) சொல்வர், மங்கைமீர்! எமக்கு அடாதது புகன்றனிர், இச்சொல் உமக்கு அடாதது என்று நிருமலன் இயம்பலும், மங்கையர் நுவல்வார்.

இதுவும் அது

554. **உறையில் வாளொடு மாவழங் குறுவனத்து ஓடி**
மறவன் ஓர்பொருள் தருகென இரத்தலை மானும்
இறைவன் வாழ்குடி தன்னிலொன் றொருபொருள் இரத்தல்
அறவன் ஆகிய நீயிதை அறிந்திலை அந்தோ 22

(இ.ள்) இறைவன் வாழ்குடி தன்னில் ஒன்று ஒரு பொருள் இரத்தல் - உலகத்தை ஆள்பவனாயிருக்கின்ற அரசன், தனக்குக் கீழே வாழ்கின்ற குடிமக்களிடத்திலே, அவர்களிடத்திலே பொருந்தியுள்ள பொருள் ஒன்றை தனக்கு வேண்டும் என்று இரந்து கேட்பது; மறவன் உறையில் வாளொடு:மா வழங்குறு வனத்து ஓடி ஓர் பொருள் தருகென இரத்தலை மானும் - கொலைத்தொழில் செய்யும் மறவன் ஒருவன், உறையில் இட்ட வாளுடன் விலங்குகள் திரியும் காட்டிடத்தே சென்று (அங்கு இயங்கும் மக்களைக் கண்டு அவர்களிடம்) பொருள் ஒன்றை இரந்து கேட்டலை ஒவ்வும்; அறவன் ஆகிய நீ இதை அறிந்திலை அந்தோ - அறநூலை நன்கு கற்று உணர்ந்த நீ (மகள் கொடை நேராவிட்டால் உமக்கு உண்டாகும் தீங்கினை) நீ அறிந்திலை-பின் விளைவு குறித்து நாங்கள் இரக்கப் படுகின்றோம். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - இறைவன் வாழ்குடி தன்னில் ஒன்று ஒரு பொருளை இரத்தலானது, மறவன் வனத்து ஓடி (அங்கு இயங்குவாரிடத்தில்) ஒருபொருள் தருக என இரத்தலை மானும். அறவனாகிய நீ இதை அறிந்திலை. அந்தோ, அரசர்க்கு ஈதல் தொழிலேயன்றி இரந்து ஒரு பொருளை ஏற்றுக் கொள்வது இல்லை. இவ்விதி செங்கோல் மன்னர்க்கு உரியது. கொடுங்கோல் மன்னராயின் மக்களிடம் இரந்தும் பொருள் பெறுவர். அக்கருத்தால், திருவள்ளுவர், கொடுங்கோன்மை என்னும் அதிகாரத்தே,

வேலொடு நின்னான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு

என்று கூறுவாராயினர். இப்பாடலில் இக் குறட் கருத்தை உணர்க.

அந்தோ என்பது இரக்கப் பொருளை உணர்த்தும் ஒரு சொல்லாகும். நிருமலன் மகட் கொடை நேராவிட்டால் அவனுக்கு அரசனால் உண்டாகும் தீமை கருதி, இவர்கள் (மங்கையர்) அந்தோ என்று கூறுகின்றார்கள்.

நிருமலன் கூறிய முடிவுரை

555. **என்று மாதரார் கூறலும் நிருமலன் எங்கள்**
மன்றல் வார்குழல் பேதையோ வல்லள்நும் [1]மனத்தைச்
சென்று கூறுமின் அவள்மனம் இசைந்துரை செய்யின்
நன்று போமி னென்று இயம்பினன் அவர்மனம் நயந்து 23

(பா.ம்) [1]மணத்தை

(இ.ள்) மாதரார் என்று கூறலும் - வாயிலாய் வந்த மாதர்கள் மேற்கூறியவாறு அச்சுறுத்திக் கூறலும்; நிருமலன் எங்கள் மன்றல் வார்குழல் பேதையோ வல்லள் - கேட்ட நிருமலன், எங்களுடைய மணம் பொருந்திய நீண்ட கூந்தலை உடைய மகளோ அறிவில் வல்லவள்; (ஆகையால்) நும் மனத்தைச் சென்று கூறுமின் - உங்கள் மனக் கருத்தை அவளிடம் சென்று கூறுவீராக; அவள் மனம் இசைந்து உரை செய்யின் நன்று போமின் என்று இயம்பினன் - மாதேவி மனம் விரும்பி ஏற்றுக் கொண்டு சொல்வாளே யாயின் எமக்கும் நன்று, அவளிடம் நீங்கள் செல்வீராக என்று கூறினான்; அவர் மனம் நயந்து - அவர்களும் அதைக் கேட்டு மனம் விரும்பி (எ.று)

Koviloor Digital Library

முடிபு - மாதரால் என்று கூறலும், நிருமலன் பேதையோ வல்லள். நும் மனத்தைச் சென்று கூறுமின், அவள் இசைந்து உரைசெயின் நன்று, போமின் என்றனன் அவர் மனம் விரும்பி,

மங்கைமார் மாதேவியிடம் சென்று கூறியது

556. மங்கை பாலடைந் தறைகுவர் மதன்வலி மாயக்
கொங்கை மாமுகிழ்ப் பூங்கொடி நீயருள் கூர்ந்தே
எங்கள் கோமகன் ஆருயிர் நிறுத்தினை என்னில்
அங்கண் மாநிலத் துயிர்க்கெலாம் அன்னையா குவையால் 24

(இ.ள்) அவர்மனம் நயந்து மங்கை பால் அடைந்து அறைகுவர் - அம்மாதரார், அச்செயல் செய்வதற்கு மனம் விரும்பி, மாதேவி பால் அடைந்து சொல்லத் தொடங்கினர்; கொங்கை மாமுகிழ்ப் பூங்கொடி - நகில் என்னும் பெரிய அரும்பினையுடைய பூங்கொடி போன்றவளே!; மதன்வலிமாய நீ அருள்கூர்ந்தே எங்கள் கோமகன் ஆருயிர் நிறுத்தினை என்னில் - மன்மதன் செய்யும் வலிய செயல் அழியுமாறு, நீ அருள் மிகுந்து செயலாற்றி, எங்களுடைய அரசனின் அரிய உயிரை செல்லாமல் நிறுத்தி விட்டாயேயானால்; அங்கண் மாநிலத்து உயிர்க் கெலாம் அன்னை ஆகுவை - அழகிய இடத்தையுடைய பெரிய இந்நில உலகத்து வாழும் உயிர்களுக்கு எல்லாம் நீ தாயாக விளங்குவாய். (எ.று)

ஆல் - அசை. அடுத்த பாட்டிலுள்ள என்னஓதம் என்ற சொல்லோடு முடியும்.

முடிபு - அவர் மனம் நயந்து மங்கைபாலடைந்து அறைகுவர். பூங்கொடியே! மதன் வலிமாய நீ அருள்கூர்ந்து, கோமகன் உயிர் நிறுத்தினை என்னில், உயிர்க்கெலாம் அன்னையாகுவை. கொங்கை மாமுகிழ்ப் பூங்கொடி என்பது - உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

மாதர் கூறியதற்கு மாதேவி கூறிய மறுமொழி

557. என்ன ஓதலும் நிருமலன் ஈன்றருள் [1]என்றாய்
மன்ன னால்மனை துறக்குமோர் [2]சூழ்ச்சியை மதித்துப்
பொன்ன னீரர செனக்கொரு சூளினைப் பொருந்தி
பன்னுமாயினீர் பணித்தது நன்றெனப் பகர்ந்தாள் 25

(பா.ம்) [1]எந்தாய்; [2]சூட்சி

Koviloor Digital Library

(இ.ள்) என்ன ஓதலும்- தூது வந்த மாதரார் இவ்வாறு கூறுதலும், நிருமலன் ஈன்று அருள் என் தாய் - (அதைக் கேட்ட) நிருமலன் பெற்ற என் தாயாகிய மாதேவியம்மை; மன்னனால் மனை துறக்குமோர் சூழ்ச்சியை மதித்து - அரசனைக் காரணமாக வைத்து, மனையிலிருந்து துறந்து செல்லும் ஓர் உட் கருத்தை மனதில் கருதிக் கொண்டு; பொன்னனீர் - திருமகளை ஒத்த பெண்களே! அரசு எனக்கு ஒரு சூளினைப் பொருந்தி பன்னுமாயின்- அரசன் எனக்கு ஒரு சூளுரையினை மனம் பொருந்தி கூறுமாயின், நீர் பணித்தது நன்று எனப் பகர்ந்தாள் - நீங்கள் கூறிய செயல் எனக்கு உடன்பாடே எனக் கூறினாள். (எ.று)

முடிபு - (மங்கைமார்) என்ன ஓதலும், என் தாய் மன்னனால் மனை துறக்கும் ஓர் சூழ்ச்சியை மதித்து, பொன்னனீர்! எனக்கு ஒரு சூளினை பன்னுமாயின் நீர் பணித்தது நன்று எனப் பகர்ந்தாள். சூழ்ச்சி - ஆராய்ந்து முடிவு கட்டிய செயல்.

மாதேவி கூறிய மறுமொழியால் மாதர்கள் மனம் திரிந்து உணர்ந்து கொண்டது

558. தூது சென்றவர் பொற்கொடி சொல்லிய சொல்லால்
காதல் கொண்டனள் என்றுளந் [1]திரிந்துதாம் கருதி
மாது! நின்பெரும் கருணைசெய் வதற்கெங்கண் மன்னன்
யாத றைந்தனை யதுசெயத் தக்கவன் என்று 26

(பா.ம்) [1]தெரிந்து

(இ.ள்) தூது சென்றவர் - தூதாக வந்த அம்மாதர்கள்; பொற்கொடி சொல்லிய சொல்லால் - பொன்னாலே ஆகிய கொடி போன்ற மாதேவி மொழிந்த மொழியால்; காதல் கொண்டனள் என்று உளம் திரிந்துதாம் கருதி - தங்கள் மனத்தில் ஏற்பட்ட திரிபுணர்ச்சியால் (மாதேவி) அரசன் பால் காதல் கொண்டாள் என்று அவர்கள் கருதிக்கொண்டு; மாது! நின்பெரும் கருணை செய்வதற்கு - மாதேவியாகிய பெண்ணே! உன் அருள் புரிவதற்கு; எங்கள் மன்னன் யாது அறைந்தனை அது செயத்தக்கவன் என்று - எங்கள் அரசன், நீ எந்த காரியத்தைக் கூறுவாயோ அச்செயலைச் செய்வதற்கு உரியவன் என்று கூறிவிட்டு. (எறு)

முடிபு - தூது சென்றவர் பொற்கொடி சொல்லிய சொல்லால், உளம் திரிந்து காதல் கொண்டனள் என்று கருதிக் கொண்டு, மாதே! நின் கருணை

Koviloor Digital Library

செய்வதற்கு எங்கள் மன்னன் யாது அறைந்தனையோ அது செய்யத் தக்கவன் என்று, பொற்கொடி - அன்மொழித் தொகை

மாதர் உரையைக் கேட்ட மன்னன் மாதேவிபால் சென்றது

559. **உள்ளம் ஆர்வமோ டேகியம் மடந்தையர் உரைப்ப**
வள்ளல் ஆகிய மன்னவன் மனம்நனி மகிழ்ந்து
தெள்ளும் ஆரமு தனையவள் இருந்துழிச் சென்றான்
எள்ளு காமநோய் கொண்டவன் என்செய இசையான் 27

(இ.ள்) அம்மடந்தையர் உள்ளம் ஆர்வமோடு ஏகி உரைப்ப - தூது சென்ற மாதர் மனக்களிப்போடு சென்று, இச்செய்தியை அரசனுக்குக் கூற; வள்ளல் ஆகிய மன்னவன் - கொடைக்குணம் கொண்ட அவ் அரசன்; மனம் நனிமகிழ்ந்து - மனம் மிகவும் களிப்புற்று; தெள்ளும் ஆர் அமுது அனையவள் இருந்துழி சென்றான் - தெளிவான அரிய அமிழ்தத்தை ஒத்த மாதேவி வாழ்ந்திருக்கும் இடத்திற்கே வந்து விட்டான்; எள்ளு காமநோய் கொண்டவன் என்செய இசையான் - இகழத்தக்க காமப் பிணி கொண்டவன், இழிவான செயல்களுள் எச்செயலைச் செய்வதற்குச் சம்மதிக்காமல் இருப்பான், (சம்மதிப்பான்) என்பது கருத்து எல்லா இழிவான காரியங்களையும் செய்வான் என்பது கருத்தாயிற்று. அரசனை நாடி எல்லோரும் வருவது வழக்கம். அரசா் பிறரை நாடிச் செல்வதில்லை. அவ்வரசியல் மரபுக்கு மாறுபட்டு, இவன் சென்றதால் என்செய இசையான் என்றார்.

முடிபு - மடந்தையர் ஆர்வமோடு ஏகி உரைப்ப, மன்னன் மகிழ்ந்து அனையவள் இருந்துழிச் சென்றான். காமநோய் கொண்டவன் என் செய இசையான்.

அரசன் அவளைக் கருதிய முறை

560. **வல்லி கொங்கையைப் பொன்மலை என்னவே மதியான்**
இல்லு றுங்குட மாகவே எண்ணினன் நுதலை
வில்லெ னும்படி நினைத்தனன் வெண்பிறை என்னான்
சொல்லு வன்றனக் ககப்படு மடந்தையாய்த் துணிந்து 28

(இ.ள்) வல்லி கொங்கையை பொன்மலை என்னவே மதியான் இல்லுறும் குடமாகவே எண்ணினன் - (கௌசிக மன்னன்) கொடி போன்ற மாதேவியின் நகிலை தன்னால் அடைதற்கரிய மேருமலை என்றே கருதான், தன் வீட்டில் தனக்குப் பயன்படுகின்ற எளிமையான

Koviloor Digital Library

குடமாகவே கருதினான்; நுதலை வெண்பிறை என்னான் வில்லெனும்படி நினைத்தனன் - அவளுடைய நெற்றியை, அடைதற்கரிய வெண்பிறை என்று கருதான், தனக்கு எளிய வில் என்றே கருதினான்; தனக்கு அகப்படும் மடந்தையாய்த் துணிந்து சொல்லுவன் - மாதேவி தனக்கு எளிமையாய்க் கிடைக்கக்கூடிய பெண்ணாகவே கருதி அவளோடு சொல்லாடத் தொடங்கினான். (எ.று)

முடிபு - மன்னன் அவள் கொங்கையை பொன்மலை என்னவே மதியான், குடமாகவே எண்ணினன், நுதலைப்பிறை என்னான் வில், எனும்படி நினைத்தனன், தனக்கு அகப்படும் மடந்தையாய் துணிந்து சொல்லாடத் தொடங்கினான். வல்லி - உவமையாகு பெயர்.

அரசன் உரைத்ததும் அதற்கு மாதேவி மறு மொழியும்

561. அருள்செய் தென்னைநீ அளித்திடும் அதற்குநான் செய்வது
உரைசெய் நானது செய்வனென் றரசர்கோ னுரைப்ப
வரைசெய் தோளினாய் என்னைநீ வலிந்துபுல் லாமைக்கு
ஒருசொல் உண்மைசொல் என்றனள் ஒருபுடை ஒதுங்கி 29

(இ.ள்) அரசர்கோன் - (அப்பொழுது) மன்னனானவன்; (மாதேவியை நோக்கி) அருள் செய்து என்னை நீ அளித்திடும் அதற்கு - என்னிடத்து இரக்கத்தைச் செய்த நீ என்னை இக்காம நோயிலிருந்து காப்பாற்றுவதற்கு; நான் செய்வது உரைசெய், நான் அது செய்வேன் என்று உரைப்ப - நான் உனக்குச் செய்ய வேண்டிய செயல்களை இன்னதென்று சொல்லுவாயாக, நான் அச்செயலைக் செய்வேன் என்று கூற; ஒருபுடை ஒதுங்கி - ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்று கொண்டு; வரைசெய் தோளினாய் - மலையால் செய்தாலொத்த தோளையுடைய மன்னனே!; நீ என்னை வலிந்து புல்லாமைக்கு - நீ என் கருத்து இசைவால் அன்றி, உன் வலிமையினால் என்னைப் புணராமைக்கு; ஒரு சொல் உண்மைசொல் என்றனள் - சூளுரவுச் சொல்லாகிய ஒரு சொல்லை, உண்மையாகச் சொல்வாயாக என்று கூறினாள். (எ.று)

முடிபு - அரசர்கோன் என்னை நீ அளித்திடும் அதற்கு நான் செய்வது உரைசெய். நான் அது செய்வன் என்று உரைப்ப, (மாதேவி) ஒருபுடை ஒதுங்கி தோளினாய்! நீ என்னை வலிந்து புல்லாமைக்கு ஒரு சொல் உண்மை சொல் என்றனள்.

Koviloor Digital Library

மன்னன் சூளுரைக்கத் தொடங்கியது

562. நின்க ருத்திசை வாலன்றி நின்னையான் வலியேன்
என்ப தற்கொரு சூளுரைக் குவன்முகில் எழுந்த
மின்கொ டிச்சிறு மருங்குலாய் கேளென [1]ஒள்வேல்
புன்பு கர்க்கருங் கடாக்களிற் றரசர்கோன் புகல்வான் 30

(பா.ம்) [1]வெள்வேல்.

(இ.ள்) ஒள்வேல் புன்புகர்க் கருங்கடாக் களிற்று அரசர் கோன் - ஒளி பெற்ற வேலாயுதத்தையும், சிறு புள்ளிகளைப் பெற்றிருக்கும் கரிய நிறத்தையுடைய மதம் ஒழுகும் யானையையும் உடைய அரசர்க் கரசனாகிய கௌசிக மன்னன்; முகில் எழுந்த மின்கொடிச் சிறு மருங்குலாய் - மேகத்திலிருந்து தோன்றிய மின்னல் கொடி போன்ற சிறிய இடையைப் பெற்றிருக்கும் மாதேவியே!; நின் கருத்து இசைவால் அன்றி - உன்னுடைய, உள்ளத்தின் சம்மதியால் அன்றி; நின்னை யான் வலியேன் என்பதற்கு - உன்னையான் வலிந்து புணரேன் என்பதற்கு, ஒரு சூள் உரைக்குவன் - ஒன்றாகிய சபதமொழியை உனக்குக் கூறுவேன்; கேள் எனப் புகல்வான் - அவற்றைக் கேட்பாயாக என்று சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிபு - அரசர்கோன், சிறுமருங்குலாய், நின் கருத்து இசைவால் அன்றியான் நின்னை வலியேன், என்பதற்கு ஒரு சூள் உரைக்குவன், கேள் எனப் புகல்வான்.

மன்னன் சூளுரைகள்

வேறு

563. [1]வந்தநல் விருந்தி ருப்ப மனையினுற் றருந்து வானும்
பந்தியின் உணவு வேறு பண்ணுபா தகனும் தாயும்
தந்தையும் உணவுண் ணாத சழக்கனும் உச்சிப் போதில்
நொந்தவர் தமைநோக் காமல் [2]நுகர்ந்திடு கொடியன்
தானும் 31

(பா.ம்) [1]வந்துநல்; [2]நுகர்ந்திடும்

(இ.ள்) வந்தநல் விருந்து இருப்ப மனையின் உற்று அருந்து வானும் - தன்னைத் தேடிவந்த நல்லவிருந்தினர் உண்ணாமல் வீட்டின் புறத்தே இருப்பத் தான் மட்டும் அகமனையினுட் புகுந்து உணவினை உண்பவனும்; பந்தியில் உணவு வேறு பண்ணு பாதகனும் - மக்கள்

Koviloor Digital Library

ஒருங்கு இருந்து உணவுண்ணும் பந்தியிலே, உணவுப் பொருட்களை வேறுபடப் பரிமாறுகின்ற பாவிகளும்; தாயும் தந்தையும் உணவுண்ணாத சழக்கனும் - தன்னுடைய தாயும் தந்தையும் முன்னே உணவுகொள்ள, தான் அதன் பின் உண்ணாத குற்றம் நிரம்பியவனும்; உச்சிப் போதில் நொந்தவர்தமை நோக்காமல் நுகர்ந்திடு கொடியன் தானும் - எல்லா உயிர்களும் பசியால் வருந்துகின்ற நடுப் பகல் காலத்திலே, பசியால் வருந்தியவர்களை, கருதாமல், தான் மட்டும் உணவுண்ணும் கொடியவனும், (எ.று)

முடிபு - விருந்திருப்ப மனையினுள் அருந்துவானும், பந்தியிலே உணவுவேறு பண்ணுகின்ற பாதகனும், தந்தையும் தாயும் உணவுண்ணாத சழக்கனும், உச்சிபோதில் நொந்தவரை நோக்காமல் நுகர்ந்திடும் கொடியவனும்.

564. நிந்தை செய் உணவி னானும் [1]நிருமலன் பூசையின்றி
வந்துணவு அருந்து வானும்[2]அறுத்தவூன் நுகர்விப் பானும்
தந்தம்நல் வினையால் செல்வம் சார்ந்தவர் தம்மைக் கண்டு
சிந்தனை பொறாது அழுங்கி தீர்வினுள் மகிழ்வான் தானும்
32

(பா.ம்) [1]நிருமல பூசை; [2]மறுத்தவூண்

(இ.ள்) நிந்தை செய் உணவினானும் - பழித்து நீக்கப்பட்ட உணவை உண்ணுபவனும்; நிருமலன் பூசைஇன்றி வந்து உணவு அருந்துவானும் - குற்றமில்லாத இறைவன் வழிபாடின்றி, உணவு ஆசையால் வந்து உணவை உண்பவனும்; அறுத்தவூன் நுகர்விப்பானும் - அறுத்த புலாலை, பிறரை உண்ணச் செய்பவனும்; தம்தம் நல்வினை யால் செல்வம் சார்ந்தவர் தம்மைக் கண்டு சிந்தனை பொறாது அழுங்கி தீர்வில் உள்மகிழ்வான் தானும் - அவரவர் செய்த நல்ல புண்ணியத்தால் செல்வம் அடைந்தவர்களைக் கண்டு, மனம் பொருந்தாமல் பொறாமைப்பட்டு, அச்செல்வம் அவர்களிடமிருந்து நீங்கிய பொழுது அது கண்டு உள்ளம் மகிழ்பவனும், (எ.று)

முடிபு - நிந்தைசெய் உணவினான், பூசையின்றி உணவு அருந்துவான் ஊனை நுகர்விப்பவன், செல்வம் சார்ந்தவர் தம்மைக் கண்டு, பொருமல் அழுங்கி, தீர்வில் உள்மகிழ்பவனும்.

565. கன்றுண விடாமல் ஆன்பால்
கறந்துகொள் பவனும் செய்த

Koviloor Digital Library

நன்றிகொல் பவனும் கோடி
நடுநிலை தவறு வானும்
கொன்றுயிர் பதைப்ப நோக்கும்
கொடியனும் போர்க்க ளத்தில்
தன்தலை வனை விடுத்துச்
சாய்ந்துபோம் மடமை யானும் 33

(இ.ள்) கன்று உணவிடாமல் ஆன்பால் கறந்து கொள்பவனும் - கன்றை ஊட்ட விடாமல், பசும் பால் முற்றும் கறந்து கொள்பவனும்; செய்த நன்றி கொல்பவனும் - ஒருவர் செய்த நன்மையான செயலை மறந்தோ, இடையூறு செய்தோ அழித்துவிடுபவனும்; கோடி நடுநிலை தவறுவானும் - ஒரு பால் சார்ந்து நடுநிலை தவறுகின்றவனும்; கொன்று உயிர் பதைப்ப நோக்கும் கொடியனும் - உயிர்களைக் கொன்று, அது துன்புறுவதைப் பார்த்து, மகிழ்ந்து நோக்கும் கொடியவனும்; போர்க்களத்தில் தன் தலைவனை விடுத்துச் சாய்ந்து போம் மடமையானும் - போர்க்களத்திலே, தன்னுடைய தலைவனை விட்டு விட்டு தான் புறங்கொடுத்துப் போகும் அறிவில்லாதவனும். (எ.று)

முடிபு - கன்றுணவிடாமல் பாலைக் கறந்து கொள்பவனும், செய்த நன்றியைக் கொல்பவனும், நடுநிலை தவறுவானும், உயிர்களைக் கொன்று, அவை பதைப்ப, அதை நோக்கும் கொடியனும், போர்க் களத்திலே தன் தலைவனை விடுத்து சாய்ந்துபோம் மடமையானும்.

566. அடைக்கலம் எனவந் தானை
அளித்திடாது அகற்று வானும்
கொடுக்குதும் எனவு ரைத்துக்
கொடானுமொண் கொடைவி லக்கி,
விடுக்குறும் அவனும் பாவ
வினையிடத்து உதவி யாகி
நடக்குறு மவனும் தேர்ந்து
நட்டபின் வஞ்சிப் பானும் 34

(இ.ள்) அடைக்கலம் என வந்தானை அளித்திடாது அகற்று வானும் - நீயே தஞ்சம் என வந்து அடுத்த ஒருவனைக் காப்பாற்றாமல், துரத்தி விடுபவனும்; கொடுக்குதும் என உரைத்துக் கொடானும் - இன்ன பொருளை இன்ன காலத்தில் கொடுப்போம் என்று உறுதிகூறி, பின்

Koviloor Digital Library

கொடாது ஒழிவானும்; ஒள் கொடை விலக்கி விடுக்குறும் அவனும் - ஒருவன் ஒருவனுக்குச் சிறந்த பொருளைக் கொடையாகக் கொடுக்க, அதை அழுக்காறு கொண்டு தடுத்திடுபவனும்; பாவ வினையிடத்து உதவியாகி நடக்குறும் அவனும் - ஒருவன் பாவத்தை யுண்டாக்கும் தீய வினைகளைச் செய்ய, அதை விலக்காமல், அதற்கு உதவி செய்பவனும்; தேர்ந்து நட்டபின் வஞ்சிப்பானும் - ஆராய்ந்து நட்புக் கொண்டபின், வஞ்சகம் செய்பவனும்,

567. **குரவர்தம் உரைக டக்கும் கொடியனும் துறந்துளார்தம்**
வரவெதிர் கண்டு எழாத மறவனும், அறிந்தான் போன்று
கரவினில் [1]அருநூல் கற்கும் கயவனும், புதியர் ஆகி
இரவினில் வந்த நல்லோர்க் கிடங்கொடா தகற்று வானும்

(பா.ம்) [1]அருள் நூல்

(இ.ள்) குரவர்தம் உரை கடக்கும் கொடியனும் - குருமார்களின் சொல்லை, கடந்து ஒழுகும் கொடியவனும்; (இக்குரவர், ஐவர் என்றும், மூவர் என்றும், எண்மர் என்றும் பல பிரிவினராகக் கூறுதலின், இங்கு பன்மையாகக் குரவர்தம் எனக் கூறியுள்ளார்) துறந்துளார் தம் வரவு எதிர் கண்டு எழாத மறவனும் - துறவினர் இல்லறம் புரிவோரை விட உயர்ந்தவர் ஆதலால், அவரைக்கண்டு எழுந்து வணக்கம் செய்யாத மறக் குணமுடையவனும்; அறிந்தான் போன்று கரவினில் அருநூல் கற்கும் கயவனும் - எல்லா நூல்களையும் கற்றவனைப் போல தன்னைக் கூறிக்கொண்டு, பின் ஒருவருக்கும் தெரியாமல், அரிய நூல்களைக் கற்றுக் கொண்டிருக்கும் கீழ்மையானவனும்; புதியர் ஆகி இரவினில் வந்த நல்லோர்க்கு இடம் கொடாது அகற்றுவானும் - அவ்வூர்க்குப் புதியராய், இரவுக் காலத்தில் வந்த, நல்லோர்க்கு தங்குமிடம் தராமல் அகற்றுபவனும், (எ.று)

568. **முன்புகழ்ந் துரைத்துப் பின்னா**
முறுவல்செய் திகழ்வான் றானும்
தன்பெருங் கிளைநல் கூர்ந்து
தளர்வுற வாழ்கின் றானும்
அன்புகொண் டொருவன் வைத்த
அரும்பொருள் கவர்கின் றானும்

Koviloor Digital Library

துன்புறுந் தொழில் செய் வித்துச்
சொல்பொருள் இலைஎன் பானும் 36

(இ.ள்) முன் புகழ்ந்து உரைத்துப் பின்னர் முறுவல் செய்து இகழ்வான் தானும் - ஒருவரை அவர் முன் புகழ்ந்து கூறி, அவர் சென்ற பின்னர், இகழ்ச்சிச் சிரிப்புச் செய்து இகழ்ந்து பேசுபவனும்; தன்பெரும் கிளை நல்கூர்ந்து தளர்வுற வாழ்கின்றானும் - தன்னுடைய, பெரிய கிளைஞரெல்லாம், வறுமை மிகுந்து தளர்ச்சியுற்றிருக்க தான் மட்டும் நன்றாக வாழ்பவனும்; அன்பு கொண்டு ஒருவன் வைத்த அரும் பொருள் கவர்கின்றானும் - தன் மேல் விருப்பம் கொண்டு ஒருவன் அடைக்கலமாக வைத்த அரிய பொருளைத் தான் கவர்ந்து கொள்கின்ற ஒருவனும்; (வஞ்சித்து எடுத்துக் கொள்பவனும்), துன்புறும் தொழில் செய்வித்துச் சொல் பொருள் இலை என்பானும் - ஒருவரைக் கொண்டு, வருத்தம் தரும் தொழிலைச் செய்வித்துக் கொண்டு அதற்குரிய கூலியை இல்லை என்று கூறுபவனும். (எ.று)

569. கற்பழி மனைவி யோடு
கலந்திருப் பவனும் மற்றோர்
பொற்புடை மனைவி தன்னைப்
புணர்வதற் கெண்ணு வானும்
சொற்பொருள் உணர்த்தி னானைத்
தொழவுளம் நாணு வானும்
[1]விற்பன அலாத விற்று
மெய்வளர்த் தழிகு வானும் 37

(பா.ம்) [1]விற்பன அலாது

(இ.ள்) கற்பு அழி மனைவியோடு கலந்து இருப்பவனும் - கற்பொழுக்கம் சிதைந்த தன் மனைவியுடன் கூடி வாழ்பவனும்; மற்றோர் பொற்பு உடை மனைவி தன்னைப் புணர்வதற்கு எண்ணுவானும் - அயலோருடைய, அழகிய மனைவியைக் கூடுவதற்குக் கருதுபவனும்; சொல் பொருள் உணர்த்தினானைத் தொழஉளம் நாணுவானும் - நூல்களின் சொல்லையும், பொருளையும் அறிவுறுத்திய ஆசிரியனை வணங்குவதற்கு உள்ளம் நாணுபவனும்; விற்பன அலாத விற்று மெய் வளர்த்து அழிகுவானும் - விற்பதற்குத் தகுதியற்ற பொருள்களை விற்று அதனால் பொருள் தேடி உடம்பை மட்டும் வளர்த்து அழிகின்றவனும், (எ.று)

Koviloor Digital Library

முடிபு - மெய், வாய், அறிவு, புலன்கள், மனம் ஆகியவற்றைக் தூய்மையாக்கிக் கொண்டு குருவின் முன், அவர் முகம் நோக்கி வணங்கிட வேண்டும் என்றும், நிலத்தைத் தோண்டத் தோண்ட நீர் ஊற்று எடுப்பதைப் போல குருவை வணங்க வணங்க, கல்வி பெருகுமென்றும், மனுஸ்மிருதி குருவணக்கத்தின் பெருமையைக் கூறும். விற்பன அலாத என்பது, தரங்குறைந்த பொருள்களும், கலப்படப் பொருள்களும், மக்களுக்குத் தீங்கு தரும் மது முதலான பொருள்களும் ஆகிய இவைபோல்வனவாம்; சொற்பொருள் உணர்த்தினான் என்பதற்கு மகாவாக்கியப் பொருளை உணர்த்திய ஞானாசிரியன் என்று உரை காண்பர் சச்சிதானந்தம் பிள்ளை.

570. **நலமலி வயலில் ஆற்றில் நந்தனத்து ஆல யத்தில்**
சலமலம் ஒழிப்போன் தானும் தனிவழி விலக்கு வானும்
விலைமொழி பொய்த்து விற்கும் வெய்யவா ணிகனும் தாழ்ந்த
குலமிலி தன்குற் றேவல் கூலிகொண் டியற்று வானும் 38

(இ.ள்) நலம்மலி வயலில் ஆற்றில் நந்தனத்து ஆலயத்தில் சலம்மலம் ஒழிப்போன் தானும் - மக்களுக்கு நன்மை தரும் பண்பு மிகுந்த வயலிலும், ஆற்றிலும், நந்தனவனத்தும், திருக்கோவில்களிலும், சிறுநீர் முதலான கழிவுப் பொருள்களைக் கழிக்கின்றவனும்; தனிவழி விலக்குவானும் - மக்களுக்குப் பயன்படும் ஒருவழிப் பாதையை மூடுபவனும்; விலைமொழி பொய்த்து விற்கும் வெய்ய வாணிகனும் - பண்டங்களின் உண்மை விலை பற்றிய சொல்லை மாற்றி பொய்விலை கூறி விற்கின்ற கொடிய வாணிகனும்; தாழ்ந்த குலமிலி தன் குற்றவேல் கூலி கொண்டு இயற்றுவானும் - இழிந்த நற்குலத்தில் பிறவாத ஒருவனுக்குரிய, அடிமை வேலையை கூலிப் பொருளைப் பெறுதற் பொருட்டு செய்பவனும், (எ.று)

முடிபு - நடைபாதை, மாட்டுத் தொழுவம், சாம்பல் மேடு, உழுநிலம், நீர்நிலை, யாகசாலை, மலை, கோயில்கள், நிலவெடிப்புகள், ஆற்றங்கரை புற்று இங்கெல்லாம் மலசலம் கழிக்க கூடாதென்பர் மநுநூலார்.

571. **உறவுசெய் தறிந்து சொல்லை உவர்த்துழிக் கூறு வானும்**
பிறர்பிழை தனையே நாடிப் பிறரொடு பேசு வானும்

Koviloor Digital Library

முறைவழு வுறுகொ டுஞ்சொல் முனிவிடை மொழிகு
வானும்
[1]அறிவழி மனைவி சொல்லின் வழிநிற்கும் அறிவி லானும்
39

(பா.ம்) [1]மறிவிழி

(இ.ள்) உறவு செய்து அறிந்த சொல்லை உவர்த்துழிக் கூறுவானும் - ஒருவரிடம் நட்புக் கொண்டு, அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட இரகசியச் சொற்களை, பின்னா் அவருக்கும் தனக்கும் பகை மூண்ட பொழுது அவ்விரகசியச் சொற்களை வெளியிடங்களில் சொல்லுவானும்; பிறா் பிழைதனையே நாடிப் பிறரொடு பேசுவானும் - பிறருடைய நன்மையை விடுத்து, குற்றத்தையே ஆராய்ந்து எடுத்துக்கொண்டு மற்றவா்களிடத்தில் அச்சொல்லையே கூறிக் கொண்டிருப்பவனும்; (மனத்தால் ஆராய்வதும் பிறா் பிழையே. வாயால் சொல்லுவதும் பிறா் பிழையே) முனிவிடை, முறை வழுவுறு கொடுஞ்சொல் மொழிகுவானும் - வெகுண்டகாலை, கூறத்தகாத, குற்றம் நிறைந்த கொடுஞ் சொற்களைச் சொல்லுபவனும்; அறிவுஅழி மனைவி சொல்லின் வழிநிற்கும் அறிவிலானும் - அறிவுஅற்ற மனைவியின் சொல்லின் வழியே நடக்கும் அறிவில்லாதவனும், (எனவே அறிவுள்ள மனைவியின் சொற்படி நடப்பது தீமையன்று, என்பதாயிற்று) (எ.று)

572. கலந்தவா் தமைப்பி ரித்துக் கலகங்கண் டிடவல் லானும்
புலந்தரு [1]நூலின் இல்லாப் பொருளினைக் கூறுவானும்
நலந்தனை [2]அழுக்கா றெய்திக் நகைத்திகழ் கிற்போன்
தானும்
மெலிந்தவ ரிடத்து மிக்க வெகுளியைப் பெருக்கு வானும்
40

(பா.ம்) [1]நூலில்லாத; [2]அழுக்காறெய்த

(இ.ள்) கலந்தவா்தமை, பிரித்துக் கலகம் கண்டிட வல்லானும் - ஒரு குடும்பத்தில் கூடிவாழ்பவரை பிரிவினை செய்து, அவா்களுக்குள், கலகத்தை உண்டாக்குவதில் வல்லவனும்; புலம்தரு நூலில் இல்லாப் பொருளினைக் கூறுவானும் - அறிவினை விளைவிக்கும் நூல்களில் கூறப்பெறாத பொருள்களை, அதில் உள்ளதுபோல பொய்யாகக் கூறுபவனும்; நலம்தனை அழுக்காறு எய்தி நகைத்து இகழ்கிற்

Koviloor Digital Library

போன்தானும் - ஒருவரிடத்திலுள்ள நன்மைகளைக் கண்டு, பொறாமை யுற்று எள்ளுதல் நகை புரிந்து இகழ்ந்து பேசுபவனும்; மெலிந்தவர் இடத்து மிக்க வெகுளியைப் பெருக்குவானும் - ஆற்றாத மெலியோ ரிடத்து, மிக்க சினத்தைப் பெருக்கித் தீமை செய்பவனும். (எ.று)

573. **புண்ணியம் பிறர்பொ ருட்குப் புரிபவன் றானும்இந்த**
மண்ணிடை இன்பத் திற்கா மறுமைசெய் தொழில் விடுக்கும்
தண்ணிடை அறிவி லானும் தவத்தரை இகழ்கிற் பானும்
பண்ணிய வினையில் என்றும் பாவமே பயில்கின்றானும்
41

(இ.ள்) பிறர் பொருட்டு புண்ணியம் புரிபவன்தானும் - (குவ்வுருபை ஆல் உருபாகத்திரித்துக் கொள்க) தன் பொருளால் புண்ணியம் செய்யாமல் பிறர் பொருளால் புண்ணியம் செய்பவனும்; இந்த மண்ணிடை இன்பத்திற்கா மறுமை செய்தொழில் விடுக்கும் தண்ணிய அறிவிலானும் - இந்த உலகத்தில் அனுபவகிக்கும் இன்பத் திற்காக, மறுமைப்பயனை உண்டாக்குகின்ற நல்ல அறச்செயல்களை செய்யாது விட்டுவிடும் நல்லறிவில்லாதவனும்; தவத்தரை இகழ்கிற் பானும் - (மேலும்) மறுமைப் பயன் கருதித் தவம் செய்பவர்களை இகழ்ந்து பேசுகின்றவனும், பண்ணிய வினையில் என்றும் பாவமே பயில்கின்றானும் - செய்யும் தொழில்கள் அனைத்திலும், எப்பொழுதும் பாவச் செயலையே செய்கின்றவனும், (எ.று)

முடிபு - பாவச் செயல்களை மனத்தால் எண்ணி, சொற்களால் கூறி, உடம்பால் செய்வதால் (மனம் முதலான மூன்றிடங்களிலும்) பாவச் செயலே பயில்வதாயிற்று ; விருந்திருப்ப அருந்துவானும், உணவு வேறு பண்ணு பாதகனும், உணவுண்ணாதசழக்கனும், நோக்காமல் நுகர்ந்திடு கொடியவனும், நிந்தை உணவினானும், பூசையின்றி உணவருந்து வானும், ஊன்நுகர்விப்பானும், செல்வம் சார்ந்தவரைக் கண்டு அழுங்கி தீர்வில் உள் மகிழ்பவனும், கன்றுணவிடாமல் பால் கறந்து கொள்பவனும், செய்நன்றி கொல்பவனும், நடுநிலை தவறு வானும், உயிர் பதைப்ப கொன்று நோக்குபவனும், த்லைவனை விடுத்துச் சாய்ந்து போம் மடமையாயினும், அடைக்கலமாய் வந்தவனை அகற்றுவானும், கொடுக்குதும் என உரைத்துக் கொடா தவனும், கொடையை விலக்கி விடுபவனும், பாவவினையிடத்து

Koviloor Digital Library

உதவியாகி நடக்குறுமவனும், நட்டபின் வஞ்சிப்பானும், குரவர் உரை கடக்கும் கொடியவனும், துறந்துளார் வரவு கண்டு எழாத மறவனும், அறிந்தான் போன்று நூல் கற்கும் கயவனும், நல்லோர்க்கு இடம் கொடாது அகற்றுவானும், முன்னே புகழ்ந்துரைத்துப் பின்னே இகழ்வானும், கிளை தளர்வுற வாழ்கின்றானும், வைத்த பொருளை கவர்கின்றானும், தொழில் செய்வித்து கூலிப்பொருள் இல்லை என்பானும், கற்பழி மனைவியோடு கலந்திருப்பவனும், மற்றொருவருடைய மனைவியைப் புணர்வதற்கு எண்ணுவானும், உணர்த்தினாளைத் தொழ உளம் நாணுவானும், விற்பன அலாதவிற்று மெய் வளர்த்து அழிகுவானும், வயல் முதலான நல்லிடங்களில் சலமலம் கழிப்பவனும், தனிவழி விலக்குவானும், பொய்து விற்கும் வெய்ய வாணிகனும், தாழ்ந்தோர் குற்றேவல் கூலி கொண்டு இயற்றுவானும், உறவு செய்து அறிந்த சொல்லை உவர்த்துழிக் கூறுவானும், பிழையே நாடிப் பேசுவானும், முனிவிடை கொடுஞ்சொல் மொழிகுவானும், அறிவற்ற மனைவி சொன்ன வழியின் நிற்பவனும், கலந்தவரைப் பிரித்து கலகம் கண்டிட வல்லானும், நூலில் இல்லாப் பொருளைக் கூறுவானும், நலத்தை இகழ்கிற்பானும், மெலிந்தாரிடத்தே வெகுளியைப் பெருக்குவானும், பிறர் பொருட்குப் புண்ணியம் புரிபவனும், மண் இன்பத்திற்காக, மறுமைத் தொழில் விடுக்கும் அறிவில்லாதவனும் தவத்தரை இகழ்கின்றவனும், பாவமே பயில்கின்றவனும், ஆகிய இவர்களாக தான் ஆவேன் என்று கௌசிக மன்னன் சூளுரைத்தான் என்று முடித்துக் கொள்க.

மன்னன் சூளுரை கேட்டு மாதேவி கூறியதும் மன்னன் கூறியதும்

574. ஆவனான் உண்மை நீயா தறைந்தனை அதுசெய் தன்றி
மேவுவேன் ஆயின் என்று வேள்விரும் பழகன் கூறக்
காவிநேர் விழிமா தேவி கருத்திசைந் தற்றே யாயிற்
போவம்வா என்று சொன்னாள் புரவலன் உவகை பூத்தான்
42

(இ.ள்) வேள் விரும்பழகன் - மன்மதனும் விரும்புகின்ற அழகை யுடைய மன்னவன்; நீயாது அறைந்தனை அது செய்து அன்றி மேவுவேன் ஆயின் - நீ எதைக் கூறினாயோ அதை செய்யாது விட்டு உன்னை வலிந்து புணர்வேனாயின்; நான் ஆவன் உண்மை - நான் மேலே சொன்ன தீயவர்களாக ஆகிவிடுவேன். இச்சூளுரைப்

Koviloor Digital Library

பொய்மையன்று உண்மையாகும் என்று அரசன் கூற; காவிநேர் விழி மாதேவி - நீலோத்பவ மலரை ஒத்த விழியையுடைய மாதேவியானவள்; கருத்து இசைந்து - மனம்சம்மதித்து, அற்றே யாயின் போவம் வா என்று சொன்னாள் - அப்படி ஆயின், உன் அரண்மனைக்குப் போவோம் வா என்று கூறினாள்; புரவலன் உவகை பூத்தான் - மன்னன் மகிழ்ச்சியால் பொலிவுற்றான்.

முடிபு - அழகன் நீ யாது அறைந்தனை, அது செய்தன்றி (நான் உன்னை) மேவுவேனாயின், நான் (மேலே கூறிய) தீயவர்களாக ஆவேன் உண்மை என்று கூற, மாதேவி கருத்திசைந்து ஆயின் போவம் வா என்று சொன்னாள். புரவலன் உவகை பூத்தான்.

575. **கோயிலின் முன்னர் சென்றான் கொற்றவன் சிவிகை ஏற்றி**
ஆயிழை மடந்தை நல்லார் அருகுசூழ் உற்றுச் செல்லப்
போயினள் அரசர் கோமான் புக்குழிப் புக்காள் [1]ஒள்வேல்
சேயரி நெடுங்கண் செவ்வாய் திலகவா ணுதன்மா தேவி
43

(பா.ம்) [1]வெல்வேல்

(இ.ள்) கொற்றவன் கோயிலின் முன்னர் சென்றான் - மன்னன் தன் அரண்மனைக்கண் முன்னே சென்றான்; ஒள்வேல் சேயரி நெடுங்கண் செவ்வாய் திலகவாள் நுதல் மாதேவி - ஒளி பெற்ற வேல் போன்ற சிவந்த கோடுகள் அமைந்த நெடிய கண்ணையும், சிவந்த வாயையும், பொட்டோடு கூடிய ஒளிபெற்ற நெற்றியையும் உடைய மாதேவியானவள்; ஆயிழை மடந்தை நல்லார் சிவிகை ஏற்றி அருகுசூழ் உற்றுச் செல்லப் போயினள் - ஆய்ந்து செய்த அணிகளை அணிந்த சேடிமார் தன்னைப் பல்லக்கிலே ஏற்றி பக்கத்தில் சூழ்ந்து வரப் புறப்பட்டுச் சென்றாள். (எ.று)

முடிபு - கொற்றவன் முன்னர் சென்றான். மாதேவி, மடந்தை நல்ல சிவிகை ஏற்றி சூளுற்றுச் சொல்ல, போயினன். அரசர் கோமான் புக்குழிப் புக்காள். போயினள் என்பது முற்றெச்சம்.

அரண்மனை வந்தடைந்த மாதேவியை மன்னவன் தனிக் கண்டு கூறியது

576. மடந்தையைத் தனிக்கண் டங்கி மருவிய அரக்கே போல
உடைந்துநெக் குருகி ஆற்றா உள்ளமோ டிளம்பூங்
கொம்பே

Koviloor Digital Library

கடந்திடற் கரிய காமக் கடல்கடந் தேறக் கொங்கைக்
குடந்தரத் திருவு ளத்திற் கோடியென் றரசி றைஞ்ச 44

(இ.ள்) அரசு மடந்தையைத் தனிக் கண்-மன்னன் தன் அரண்மனையில், வந்தடைந்த மாதேவியை, தனிஇடத்தே பார்த்து; அங்கி மருவிய அரக்கேபோல, உடைந்து நெக்கு உருகி ஆற்றா உள்ளமோடு - நெருப்பினைப் பொருந்திய அரக்கினை போல, சிதைந்து நெகிழ்ந்த உருகித் தாங்க முடியா விருப்பத்தையுடைய உள்ளமோடு; இளம் பூங்கொம்பே - இளைய பூங்கொம்பு போன்ற மாதேவியே; கடந்திடற்கு அரிய காமக்கடல் கடந்து ஏற - தாண்டிச் செல்வதற்கரிய, காமமாகிய கடலை நான் கடந்து ஏறும்படி; கொங்கை குடம் தரத் திருவுளத்தில் கோடி என்று இறைஞ்ச- நகிலாகிய குடத்தை எனக்கு உதவியாகத் தருதற்கு உன்னுடைய திருவுள்ளத்தில் எண்ணம் கொள்வாயாக என்று கூறி வணங்க, (எ.று)

முடிபு - அரசு மடந்தையைத் தனிக்கண்டு, அரக்கேபோல உருகி ஆற்றா உள்ளமோடு, கொம்பே! காமக்கடல் கடந்து ஏற கொங்கைக்குடம் தர திருவுள்ளத்துக் கோடி என்று இறைஞ்ச, நீர் நிலையினைத் தாண்டுபவர்கள் குடத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு கடப்பர். என்ற வழக்கு பற்றி இவ்வாறு கூறினார். காமக்கடல் என்பது உருவகம். பூங்கொடி - அன்மொழித் தொகை, கொங்கைக்குடம் - இதுவும் உருவகம்.

மாதேவி அரசனக்குத் தான் ஏவிய காரியத்தைச் செய்தபின் என்னோடு பேசுக என்று கூறியது.

577. காவலன் காமம் மிக்க கழிபடர் கிளவி கண்டு
பாவைபுன் முறுவல் செய்த பண்பெனும் தொடரால்
யாப்புண்டு
ஓவல்செய் யாது நிற்கும் ஒருகளி றனையாய் யான்சொல்
ஏவல்செய் திட்ட பின்னா் என்னொடு பேசு கென்றாள் 45

(இ.ள்) பாவை, காவலன் காமம் மிக்க கழிபடர் கிளவி கண்டு - பாவை போன்றவளாகிய மாதேவி. மன்னனுடைய, காமம் மிக்கக் கழிபடர் கிளவியைக் கேட்டு; புன்முறுவல் செய்து - இளநகை புரிந்து; பண்பு எனும் தொடரால் யாப்புண்டு ஓவல் செய்யாது நிற்கும் ஒரு களிறு அனையாய் - நற்பண்பு என்கின்ற சங்கிலியால் கட்டப்பட்டு நீக்கப்பட்ட செயல் எதையும் செய்ய முடியாமல் இருக்கும் களிற்று யானையை

Koviloor Digital Library

ஒத்தவனே!; யான் சொல் ஏவல் செய்திட்ட பின்னர் என்னொடு பேசுக என்றான் - யான் சொல்லுகின்ற ஏவிய செயலை செய்து முடித்தபின் என்னோடு பேசுவாயாக என்று சொன்னாள். (எ.று)

முடிபு - பாவை காவலன் கிளவியைக் கண்டு, புன்முறுவல் செய்து, களிறு அனையாய்! யான் சொல் ஏவலை செய்திட்ட பின்னர் என்னொடு பேசுக என்றாள். ஓவல் - ஓவிய செயல் (விடப்பட்ட செயல்). ஓவுதல் - நீக்கப்பட்ட செயல்.

அரசன் ஏதுநான் செய்வதென்ன மாதேவி இன்னது செய்க என்பது

578. ஏது நான் செய்வ தன்ன இயற்றுவன் அறைதி என்ன
ஓதினான் அரசன் ஓத ஒண்டொடி அயன்மால் தேடும்
சோதிமா சிவலிங் கத்தைத் தூயையாய்க் கரபீ டத்தில்
போதினால் அருச்சித் தென்னைப் பொருந்துதி பின்னர்
என்றாள் 46

(இ.ள்) அரசன் ஏது நான் செய்வது அன்னது இயற்றுவன் அறைதி என்ன ஓதினான் - மாதேவி மொழியினைக் கேட்ட மன்னன் எது நான் செய்வது? அதை நான் செய்வேன், கூறுவாயாக என்று சொன்னான்; ஓத - இவ்வாறு அரசன் கூறிய உடனே; ஒண்தொடி - ஒளிபெற்ற வளையலை அணிந்த மாதேவியானவள் (அரசனைப் பார்த்து); அயன்மால் தேடும் சோதிமா சிவலிங்கத்தை - பிரமனும் திருமாலும் தேடி அடையடைதற் குரிய, ஒளி பெற்ற சிவலிங்கத்தை; தூயையாய் - நீ புனிதனாய் இருந்து; கரபீடத்தில் போதினால் அருச்சித்து - உன்னுடைய இடக்கையாகிய பீடத்திலே எழுந்தருளச் செய்து மலர்களால் பூசித்து; பின்னர் என்னைப் பொருந்துதி என்றாள் - இப்பூசனை செய்த பின்னர் என்னைக் கூடுவா யாக என்று சொன்னாள். (எ.று)

முடிபு - அரசன், நான் செய்வது ஏது? அன்னது இயற்றுவன், அறைதி என்ன ஓதினான். ஓத ஒண்டொடி தூயையாய் சிவலிங்கத்தைத் கரபீடத்தில் போதினால் அருச்சித்துப் பின்னர் என்னைப் பொறுந்துதி என்றாள். ஒண்டொடி - அன்மொழித் தொகை. கரபீடம் - உருவகம்.

மாதேவி கூறிய சொல்லுக்கு உவமை

579. எல்லையில் காமம் பொங்க இளமுலை ஞெமுங்கத்
தோளால்
புல்லுவன் என்றெ ழுந்த புரவலன் தனைத்த டுத்துச்

Koviloor Digital Library

சொல்லிய தன்ன மன்னாள் [1]சுரத்துணீர் முகந்து வாயில்
செல்லுமொண் கரத்தை ஓடிச் சென்றுபற் றுதலை ஒக்கும் 47

(பா.ம்) [1]சுரத்தினீர்

(இ.ள்) அன்னம் அன்னாள் - அன்னப் பறவையை ஒத்த மாதேவி; எல்லையில் காமம் பொங்க இளமுலை ஞெமுங்கத் தோளால் புல்லுவன் என்று எழுந்த புரவலன் தனைத்தடுத்துச் சொல்லியது - வரம்பில்லாத விருப்பம் மிக இளைய நகில் அழுந்துமாறு தோளினாலே தழுவிக் கொள்வேன் என்று எழுந்த மன்னனை தடுத்துக் கூறிய இச்சொல்; சுரத்துள் நீர் முகந்து வாயில் செல்லும் ஒண்கரத்தை ஓடிச்சென்று பற்றுதலை ஒக்கும் - பாலை நிலத்துள் தண்ணீரை மொண்டு வாயிடத்தே செல்லுகின்ற நல்ல கையை, மற்றொருவன் ஓடிச்சென்று தடுத்துப் பிடித்தலை ஒக்கும். (எ.று)

முடிபு - அன்னம் அன்னாள், புல்லுவன் என்று எழுந்த புரவலன் தனைத் தடுத்துச் சொல்லியது, சுரத்துள் நீர்முகந்து வாயிடத்தே செல்லும் கரத்தை (மற்றொருவன்) ஓடிச்சென்று பற்றுதலை ஒக்கும். இப்பாட்டு வினை உவமையணியாகும்.

சமண மன்னனுக்கு சிவலிங்கத்தைப் பூசிக்கும் ஒழுக்கம் வாராதென்பது

580. முகையிடை முருகுண் டாயின் முளையிடை விளைவுண் டாயின்
மகவிடை மதன இன்பம் வருவதுண் டாயிற் சைவப்
பகையொடு மருவி நின்ற பார்த்திபன் தனது உளத்தில்
உகைவிடை யமலன் போற்றும் ஒழுக்கமும் வந்து நண்ணும் 48

(இ.ள்) முகையிடை - முற்றாத அரும்பிடத்தே; முருகு உண்டாயின் - மலர்ந்த மலருக்குள்ள மணம் ஏற்படுமாயின்; முளையிடை விளைவு உண்டாயின் - முளைக்கும் பயிர் முளையிடத்தே பயிர் முதிர்ந்த காலத்திலே தோன்றும் விளையும் விச்சல் உண்டாகுமேயானால்; மகவிடை மதன இன்பம் வருவது உண்டாயின் - மிகவும் இளைய பருவத்தனையமகவிடத்தே, (குழந்தையிடத்தே) காளைப் பருவ முடைய மைந்தர்களிடத்தே தோன்றும் காம உணர்வு தோன்றுமாயின்;

Koviloor Digital Library

சைவப் பகையொடு மருவி நின்ற பார்த்திபன் தனது உளத்தில் - சைவசமயக் கொள்கைக்கு மாறுபட்டு நின்ற சமண சமயத்தினாகிய இவ்வரசனது மனத்திலே; உகைவிடை அமலன் போற்றும் ஒழுக்கமும் வந்து நண்ணும் - ஊர்தியாகச் செலுத்தப்படும் இடபத்தை உடைய சிவபெருமானை பூசிக்கும் ஒழுக்கமும் வந்து சேரும் என்க, (எ.று) ஆதனால் முகையிடை முருகும், முளையிடை விளைவும், மகவிடை மதன இன்பமும், பருவ நிலையால் வாராததைப் போல, இச்சமண மதத்தை மேற்கொண்ட மன்னவனுக்கும் பருவத்தால் சிவபெருமானைப் பூசிக்கும் ஒழுக்கமும் வாராதென்பதைக் குறிப்பிட்டார் என்க.

முடிபு - முருகு முகையிடை உண்டாயின், விளைவு முளையிடை உண்டாயின், மதன இன்பம் மழவிடை உண்டாயின், அமலன் போற்றும் ஒழுக்கமும், சைவப் பகையொடு மருவி நிற்கும் பார்த்திபன் உளத்தில் வந்து நண்ணும். இதனால் இவனுக்கு வராது என்பது. சமய உணர்வுகள் எல்லாம் படிப்படியாக ஒருவருக்கு உண்டாகவேண்டுதலின், இவ்வரசனுக்கு இந்த பருவத்தில் சைவசமய உணர்ச்சி வாராது என்பதாயிற்று. ''புறச் சமய நெறியினின்றும்'' என்று தொடங்கும் சிவஞான சித்தியார் பாடலால் உணர்க.

மன்னவன் கூற்றும் மாதேவி கூற்றும்

581. செப்புறுஞ் சூள்நி னைந்து தீண்டிலன் அரசன் நின்று
முப்புரஞ் சீறும் உங்கள் முதல்வன் பூசனைதான் யாங்கள்
எப்பொழு துஞ்செய் தக்க தன்றென இணையி லாநின்
துப்புறு தோளும் யாங்கள் தொடுவதன் றெனப் [1]புகன்றாள்
49

(பா.ம்) [1]புகன்றான்

(இ.ள்) அரசன் செப்பு உறும் சூள் நினைந்து தீண்டிலன் நின்று - மன்னன் தான் சொல்லிய உறுதிச் சொல்லைக் கருதி மாதேவியை தொடாமல் நின்று கொண்டு; முப்புரம் சீறும் உங்கள் முதல்வன் பூசனைதான் - திரிபுரத்தைச் சினந்து அழித்த உங்களுக்கு முதன்மையான கடவுள் பூசையை; யாங்கள் எப்பொழுதும் செய்யதக்கது அன்றுஎன - நாங்கள் எந்த காலத்திலும் செய்யத்தக்கது அன்று என்று கூற; இணையிலாநின் துப்புறு தோளும் யாங்கள் தொடுவ தன்று எனப் புகன்றாள் - அதைக் கேட்ட மாதேவி நீ சிவபூசை செய்யாதவனாயின்,

Koviloor Digital Library

ஒப்பற்ற உனது வலிமை பொருந்திய தோளையும் (சிவபூசை செய்யும்) யாங்கள் தீண்டுவது அன்று என்று கூறினாள்.

முடிபு - அரசன் சூள் நினைந்து தீண்டிலனாய் நின்று, உங்கள் முதல்வன் பூசனைதான், யாங்கள் எப்போதும் செய்தக்கதன்று என (இதைக் கேட்ட மாதேவி அப்படியாயின்) நின்துப்புறு தோளும் யாங்கள் தொடுவதன்று எனப் புகன்றாள். புகன்றான் என்ற பாடத்திற்கேற்ப அரசன் கூற்றாகவும் பொருள் உரைத்துக் கொள்க. அடுத்த பாடல் மட்டவிழ் குழல் மடந்தை என்று தொடங்குவதால் இப்பாட்டில் புகன்றாள் என்ற ஈற்றிலுள்ள பாடமே சிறந்தது என்க.

மன்னன் நிலையும் மாதேவி எண்ணமும்

582. **மட்டவிழ் குழன்ம டந்தை வாயுரை கையும் வாயும்**
கட்டிய தெனவ டங்கிக் காமம்இந் தனமில் தீப்போல்
கெட்டிட வறிதி ருந்தான் கிளர்மணித் தூண்செய் தோளான்
நெட்டிலை அயில்வேல் கண்ணாள் நீத்தனள் போக
எண்ணி 50

(இ.ள்) கிளர்மணித் தூண் செய்தோளான் - விளங்காநின்ற மணிகள் பதித்த வச்சிரத் தூண் கொண்டு செய்தாற் போன்ற தோளையுடைய மன்னவன்; மட்டவிழ் குழல் மடந்தை வாயுரை - தேன் சிந்தும் கூந்தலையுடைய, மடந்தையாகிய மாதேவியின் வாய்ச் சொல்லால் கையும் வாயும் கட்டியதென அடங்கி - கையையும் வாயையும் கட்டினாற்போல், (கையினால் தழுவுதலும், வாயினால் பேசுதலும்) இல்லாமல் அடங்கி; காமம் இந்தனம் இல் தீப்போல் கெட்டிட வறிது இருந்தான் - தன்னுடைய காம உணர்வு விறகு இல்லாத நெருப்புப்போல கெட்டுப் போகுமாறு சும்மா இருந்து விட்டான்; நெட்டுஇலை அயில் வேல்கண் ணாள் நீத்தனள் போக எண்ணி - நீண்ட இலை வடிவமான வேல் போன்ற கண்ணையுடைய மாதேவி, துறவடைதலை மனத்துள் கருதிக் கொண்டு. (எ.று)

முடிபு - தோளான் மடந்தை வாயுறையால் கையும் வாயும் கட்டிய தென அடங்கி, காமம் இந்தனம் இல்தீப் போல் கெட்டிட வறிது இருந்தான். கண்ணாள் நீத்தனள் போக எண்ணி.

மாதேவி துறவு அடைந்தமை

583. **துறவெனும் அரசு நெஞ்சத் தொன்னகர் கொளஅ வாவாம்**
இறைவன தாணை எல்லாம் இரிதல்போல் பூண்கள் யாவும்

Koviloor Digital Library

அறுவையும் அகற்றி ஓதி அவிழ்த்துவார் மைக்கு ழம்பின்
மறைவுறு மணிப்பொன் பாவை போலுடன் மறைய
விட்டாள் 51

(இ.ள்) துறவு எனும் அரசு நெஞ்சத் தொல்நகர் கொள - துறவு என்கின்ற மன்னன், மனம் என்னும் பழைய நகரத்தைப் பிடித்துக் கொள்ள; அவாவாம் இறைவனது ஆணை எல்லாம் இரிதல் போல் - முன்னர் அந்நகரத்தை ஆண்டிருந்த, அவா என்கின்ற மன்னனுடைய கட்டளைகள் எல்லாம் அகன்று விடுதல் போல; பூண்கள் யாவும் அறுவையும் அகற்றி - அணிகலன்கள் எல்லாவற்றையும், அணிந்திருந்த ஆடையையும் நீக்கிவிட்டு; மைக்குழம்பின் மறைவுறு மணிப்பொன் பாவை போல் - கருநிறம் நிறைந்த கஸ்தூரிக் குழம்பில் மறைந்திருக்கும் அழகிய பொன்னாலாகிய பிரதிமை (பொம்மையை) ஒவ்வும்படி; வார் ஓதியை அவிழ்த்து உடல் மறைய விட்டாள் - நீண்ட கூந்தலை அவிழ்த்து உடல் முழுதும் மறையும்படி விட்டாள். (எ.று)

முடிபு - துறவு என்னும் அரசு நெஞ்சகம் என்னும் நகரைக் கொள (அதை முன் ஆண்டிருந்த) அவாவாம் இறைவனது ஆணை எல்லாம் இரிதல் போல, பூண்கள் யாவும் அறுவையும் அகற்றி, மைக்குழம்பில் மறைவுறு மணிப்பாவைப் போலும்படி, ஓதியை அவிழ்த்து உடல் மறைய விட்டாள். முன்னே உருவகத்தோடு கூடிய உவமையணியும், பின்னே உவமையணியும் வந்துள்ள இப்பாடலில் துறவுள்ளம்வரின் நெஞ்சத்து அவா நில்லாமையில் இங்ஙனம் உருவகித்தார் என்பது சச்சிதானந்தம் பிள்ளை உரை. ஆணை என்பதை சேனை எனப் பொருள் கொள்ளினும் அமையும்.

மாதேவி மன்னவனை நீங்கிச் சென்றது

584. மருளடைந்த தனள்கொல் என்று
மருண்டு மன்ன வனிருப்பத்
தெருளடைந் தங்கை கொண்ட
சிவலிங்கத் தொடுநி னைந்த
பொருளடைந் தெனம கிழ்ச்சி
பொங்கமன் னவனை நீங்கி
[1]அருளுடைந் தொழுகு கண்ணாள்
அணிமறு கூடு சென்றாள் 52

(பா.ம்) [1]அருளடைந்து

Koviloor Digital Library

(இ.ள்) மன்னவன் மருள் அடைந்தனள் கொல் என்று மருண்டு இருப்ப - மன்னவன், இம்மாதேவி பித்து அடைந்தனளோ என்று கருதும் மயக்க உணர்வோடு இருப்ப; அருள் உடைந்து ஒழுகு கண்ணாள் - உள்ளத்திலே உள்ள அருள், உடைந்து ஒழுகுதற்கு இடமான கண்ணையுடைய மாதேவி; தெருள் அடைந்து - துறவிற்கு வேண்டிய தெளிவு உணர்ச்சியைப் பெற்று; அம்கை கொண்ட சிவலிங்கத்தொடு - உள்ளங்கையில் தாங்கிய இட்ட லிங்கத்தோடு; நினைந்த பொருள் அடைந்தென மகிழ்ச்சி பொங்க - கருதிய பொருளைப் பெற்றார்போல்; உவகைமிக, மன்னவனை நீங்கி - அரசனைவிட்டு; அணிமருகூடு சென்றாள் - அழகிய தெருவின் வழியாகச் செல்வாளாயினள், (எ.று)

முடிபு - மன்னவன் மருண்டு இருப்ப, கண்ணாள் தெருள் அடைந்து அங்கை கொண்ட சிவலிங்கத்தொடும், மகிழ்ச்சி பொங்க, மன்னவனை நிங்கி மருகூடு சென்றாள்.

பெற்றோர் வந்தழுங்கலும் அவர்கட்கு மாதேவி கூறிய உரையும்

585. **அன்னையும் பிதாவும் கேளா அருமகட் கடுத்த தென்னென் (று)**
உன்னிவந் தழுங்க நீவிர் உம்மகள் என்று மாழ்கி
இன்னல்கொண் டிரங்கன் மின்போம் என்னைநான் அறியத் தேடித்
தன்னிருங் கருணை செய்யும் சற்குர வனைச்சார் கிற்பேன்
53

(இ.ள்) அன்னையும் பிதாவும் கேளா - தாயும் தந்தையும் மகளுக்குற்ற நிகழ்ச்சியைக் கேள்வியுற்று; அருமகளுக்கு அடுத்தது என் என்று உன்னி வந்து அழுங்க - அரிய, தம்முடைய மகளுக்கு நிகழ்ந்தது எதுவோ என்று கருதிக் கொண்டு, அவளிடம் வந்து இரங்கி நிற்க; நீவிர் உம் மகள் என்று மாழ்கி இன்னல் கொண்டு இரங்கல்மின்போம் - நீங்கள், என்னை உங்களுடைய மகள் என்று கருதிக் கொண்டு, அதனாலே மயங்கி துன்பங் கொண்டு, இரக்கப்படாதீர்கள் என்னைவிட்டுப் போமின்; என்னை நான் அறிய, தன்னிருங்கருணை செய்யும் சத்குரவனை தேடிச் சார்கிற்பேன் - என்னுடைய உண்மை நிலையை நான் அறிந்து கொள்வதற்குத் தன்னுடைய பெரிய அருளைச் செய்கின்ற, உண்மையாகிய குருநாதனைத் தேடி அடைவேன். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - அன்னையும், பிதாவும் கேளா, மகளுக்கு அடுத்தது என் என்று உன்னி வந்து அழுங்க (மாதேவி அவரை நோக்கி) நீவிர் உம் மகள் என்று மாழ்கி, இரங்கல்மின்! போம், என்னை நான் அறிய, கருணை செய்யும் சற்குரவனைத் தேடிச் சார்கிற்பேன்.

பெற்றோர் செயல்

586. என்றவள் அவரை நோக்கா தேதிலர் போல கன்று
சென்றனள் நிரும லப்பேர் செல்வனுஞ் சுமதி தானும்
நன்றிவள் நினைந்த தென்று நம்முடை மரபிற் கெல்லாம்
நின்றிடும் புகழென் றெண்ணி நிறுவினர் தங்கள் நாமம் 54

(இ.ள்) அவள் என்று அவரை நோக்காது ஏதிலர் போல் அகன்று சென்றனள் - அம்மாதேவி, மேலே கூறியவாறு கூறிவிட்டு, பெற்றோரைப் பார்க்காமல், அயலாரைப் போல பிரிந்து சென்றனள்; நிருமலப் பேர் செல்வனும் சுமதிதானும் - (பெற்றோராகிய) நிருமலன் என்னும் பெயரையுடைய செல்வனும், சுமதி என்பாளும்; இவள் நினைந்தது நன்று என்று - இம் மகள் கருதியது நன்மைத் தரக்கூடிய செயலே என்று கருதி; நம்முடை மரபுக்கு எல்லாம் புகழ் நின்றிடும் என்று எண்ணி (இவள் கருதிய செயலால்) நம்முடைய குலத்திற்கு எல்லாம் புகழ் உண்டாகி நிலைக்கும் என்று கருதிக் கொண்டு; தங்கள் நாமம் நிறுவினர் - நிருமலன், சுமதி என்ற தங்கள் பெயரை நிலை நாட்டினராகி (தங்கள் மனைக்கேகினர்). (எ.று) நிருமலன் - குற்றமற்றவன், சுமதி - நல்லறிவினள்.

முடிபு - அவள் என்று அவரை நோக்காது அகன்று சென்றனர். செல்வனும், சுமதி தானும் இவள் நினைந்தது நன்று என்று (கருதி இதனால்) நம் மரபுக்கெல்லாம் புகழ் நின்றிடும் என்று எண்ணித் தங்கள் நாமத்தை நிறுவினர். தந்தையோ குற்றமற்ற நிருமலன், தாயோ நல்லறிவு படைத்த சுமதி இவள் மகள் செய்த செயலோ, மிக உயர்ந்த ஞானச் செயல். அதனால் மகள் செயலை வெறுக்காமல் ஏற்றுக் கொண்டனர். இதனாலே தங்கள் நாமம் நிறுவினர் என நூலாசிரியர் கூறுகின்றார்.

கண்டோர் கூற்று

587. கண்டவர் எல்லாம் நெஞ்சம்
கரைந்துகக் கண்ணீர் மல்கத்

Koviloor Digital Library

திண்டிறல் அரசன் பின்னர்ச்
சிவிகையூர்ந் தலர்பூங் கோயில்
ஒண்டிரு மகள்போற் சென்ற
ஒண்டொடி இப்பேய்க் கோலம்
கொண்டிவன் போகா நின்ற
கொள்கையே தறியேம் என்பார் 55

(இ.ள்) கண்டவர் எல்லாம் - (மாதேவி செல்லும் நிலையைப்) பார்த்தோர் எல்லாம்; நெஞ்சம் கரைந்து உக, கண்ணீர் மல்க - மனம் கரைந்து உருகவும் விழியிலிருந்து துன்பக் கண்ணீர் பெருகவும். (நின்றுகொண்டு); திண்திறல் அரசன் பின்னர் சிவிகை ஊர்ந்து அலர்பூம் கோயில் ஒண்திருமகள் போல் சென்ற ஒண்தொடி - உறுதியான ஆற்றல் உடைய அரசன் பின்னே பல்லக்கின் மேல் ஏறி மலரை அழகிய கோயிலாகப் பெற்றிருக்கும் திருமகளைப் போல் சென்ற, ஒளி பெற்றவளையலை யணிந்த (இம் மாதேவி); இப் பேய்க் கோலம் கொண்டு இவண் போகாநின்ற கொள்கை ஏது அறியேம் என்பார் - இந்த அஞ்சத்தக்க துறவுக் கோலத்தைக் கொண்டு இவ்விடத்தே செல்லாநின்ற மனக்கொள்கையின் கருத்து எதுவாக இருக்கும், அதனை அறியோமே என்று கூறுவாறாயினர். (எ.று)

முடிபு - கண்டவர் எல்லாம், நெஞ்சம் கரைந்துக, கண்ணீர் மல்க, (நின்று) அரசன் பின்னர் சிவிகை ஊர்ந்து, திருமகள்போல் சென்ற ஒண்டொடி, இப் பேய்க் கோலம் கொண்டு போகா நின்ற கொள்கை ஏது அறியேம் என்பார். ஒண்டொடி - அன்மொழித் தொகை.

588. மங்கையை [1]இவணம் கண்டேம் வயிறெரி[2]தவழ நின்றேம்
இங்கிவள் தன்னை ஈன்றார் என்படு வாரோ என்பார்
மங்கல வடிவம் கண்டு மகிழ்ந்தகண் இதுவும் கண்டு
பொங்குறு துயரம் கூரப் புரிந்ததெப் பாவம் என்பார் 56

(பா.ம்) [1]இவண்நாம் கண்டோம்; [2]தவிழ

(இ.ள்) மங்கையை இவ்வண்ணம் கண்டோம் - இப்பெண்ணை இக்கோலமாகப் பார்த்தேம்; வயிறு எரி தவழ நின்றேம் - உள்ளிடத்தில் நெருப்புப் போன்ற துன்பம் பொருந்த கண்டு நின்றோம்; இங்கு இவள் தன்னை ஈன்றார் என்படுவாரோ என்பார் - இவ்விடத்தில் இவளைப் பெற்றோர்கள், என்ன துன்பத்தை அடைவார்களோ என்பார்கள்; மங்கல

Koviloor Digital Library

வடிவம் கண்டு மகிழ்ந்த கண் - அரண்மனைக்குச் செல்லும்போது இவளுடைய மணக் கோலத்தைக் கண்டு மகிழ்ந்த கண்கள்; இதுவும்கண்டு பொங்குறு துயரம் கூர - (அரண்மனையினின்றும் திரும்பும்போது) இத்துறவுக் கோலத்தைக் கண்டு துன்பம் மிகும்படி; எப்பாவம் புரிந்தது என்பார் - எந்த பாவச் செயலைச் செய்ததோ என்பார். (எ.று)

முடிபு - நாம், மங்கையை இவ்வண்ணம் கண்டோம், எரிதவழ நின்றோம் ஈன்றார் என்படுவாரோ என்பார். முன்மங்கல வடிவங் கண்டு மகிழ்ந்த கண்கள் (இப்பொழுது) இதுவும் கண்டு துயரங் கூற எப்பாவம் புரிந்தது என்பார்.

மாதேவி அல்லமனைத் தேடிச் சென்றது

589. இன்னணம் நகரம் எல்லாம் இரங்கமா தேவி யம்மை
கன்னலும் அமுதும் தேனும் கைப்பப்பே ரின்பம் நல்கும்
தன்னிகர் குருகு கேசன் றன்னையே தேடிச் சென்றாள்
மென்னிழல் விரும்பி மிக்க வெயில்சுடச் செல்வார் போல
57

(இ.ள்) நகரம் எல்லாம் இன்னணம் இரங்க - கண்ட நகர மக்கள் எல்லாம் இவ்வாறு மனம் வருந்திக் கூற; மாதேவியம்மை, மிக்க வெயில் சுட மென்னிழல் விரும்பிச் செல்வார் போல் - மாதேவி, சூரிய வெப்பம் சுடும்பொழுது, மெல்லிய நிழலை விரும்பிச் செல்பவரைப் போல; கன்னலும், அமுதும், தேனும் கைப்பப் பேரின்பம் நல்கும் தன்னிகர் குருகுகேசன் தன்னையே தேடிச் சென்றாள் - கருப்பஞ்சாறும், அமிழ்தமும், தேனும் கசக்கும் என்று சொல்லும்படி அவற்றை விட, பெரிய இன்பத்தைக் கொடுக்கும் தனக்குத் தானே ஒப்பாகிய குருவாகிய அல்லமதேவனையே, தேடிக் கொண்டு சென்றாள் (எ.று)

முடிபு - நகரம் எல்லாம் இன்னணம் இரங்க, மாதேவியம்மை, வெயில் சுட, நிழல் விரும்பிச் செல்வார்போல, பேரின்பம் நல்கும் குருகுகேசன் தன்னையே நாடிச் சென்றாள்.

590. அடவிக டொறும டைந்தும் அடுக்கல்க டொறுமி வர்ந்தும்
கடிநகர் தொறும் புகுந்தும் காமனை வென்ற வல்லி
மடிதரு மனத்தில் அன்பு வளர்தரக் கருணை யாலெங்
குடிமுழு தடிமை கொள்ளும் குரவனைத் தேடு கின்றாள்
58

Koviloor Digital Library

(இ.ள்) காமனை வென்ற வல்லி - மன்மதனை வென்ற கொடி போன்ற மாதேவி; அடவிகள் தொறும் அடைந்தும் - வனங்கள் தோறும் சென்று சேர்ந்தும்; அடுக்கல் தொறும் இவர்ந்தும் - மலைகள் தோறும் ஏறியும்; கடிநகர் தொறும் புகுந்தும் - காவலையுடைய நகரம் தோறும் புகுந்தும்; மடிவுஅரு மனத்தில் அன்பு வளர்தர - சோம்பல் அற்ற உள்ளத்தில் அன்புமிக; கருணையால், எம் குடி முழுதடிமை கொள்ளும் குரவனைத் தேடுகின்றாள் - அருளாலே எங்கள் குடி முழுதையும் ஆட்கொள்ளும் அல்லமதேவனைத் தேடத் தொடங்கினாள். (எ.று)

முடிபு - வல்லி அடவிகள் தொறும் அடைந்தும், அடுக்கல் தொறும் இவர்ந்தும், நகர்தொறும் புகுந்தும், மனத்தில் அன்பு வளர்தர குரவனைத் தேடுகின்றாள். வல்லி - உவமையாகு பெயர்.

பத்தாவது
மாதேவி அம்மை துறவு கதி முற்றுப்பெற்றது

Koviloor Digital Library

பதினொன்றாவது
கொக்கி தேவர் கதி

கொக்கையனுக்கே உபதேச கதி
கன்னட பிரபுலிங்க லீலை
வேறு

591. அருள்செயு மல்லமன் [1]அநிமிடப் பெயர்க்
குரவனை மெய்யொடு கலந்து கொண்டுதான்
பரவுறும் அடியர்தம் பவந்[2]து றந்துபோய்
திரிதரு நிலையினைத் தெரிந்து செப்புவாம் 1

(பா.ம்) [1]அனுமிடப் பெயர்; [2]துரந்து

(இ.ள்) அருள் செயும் அல்லமன் - உலக மக்களுக்கு அருள் செய்கின்ற அல்லமதேவன்; அநிமிடப் பெயர் குரவனை மெய்யொடு கலந்து கொண்டு - அநிமிடன் என்னும் பெயர் தாங்கி யோகத்திலிருந்த ஆசிரியனை தன்னுடைய உடம்போடு கலந்து கொண்டு; பரவுறும் அடியர்தம் பவம் துறந்து - தன்னை வணங்கிய அடியவர்கள்தம் பிறப்பை நீக்கி; போய் திரிதரு நிலையினைத் தெரிந்து செப்புவாம் - மற்றும் மேலும் சென்று அடியார்களுக்கு அருள் செய்வதற்காக உலாவுதல் செய்கின்ற நிலைமையை ஆராய்ந்து கூறுவாம். (எ.று)

முடிபு - அல்லமன் அ நிமிடப் பெயர் குரவனை மெய்யொடு கலந்து கொண்டு அடியவர் பவம் துறந்து போய், திரிதரு நிலையினைத் தெரிந்து செப்புவாய். தான் - அசை.

592. சீர்நிலை அல்லம தேவன் சூல்கொளும்
கார்நினை மயிலெனக் கருதித் தன்னையே
பார்நில மிசையமர் பத்தர் தம்மையாள்
ஓர்நினை வொடு நடந்து[1]லாவு நாள்களுள் 2

(பா.ம்) [1]உலவு நாளினே

(இ.ள்) சீர்நிலை அல்லமதேவன் - சிறப்பு நிலைபெற்ற அல்லம தேவன்; சூல்கொளும் கார் நினைமயில் என - நீரைக் கருக்கொண்ட மேகத்தை, நினைந்து கொண்டேயிருக்கும் மயில்களைப் போல; பார்நிலமிசை தன்னையே கருதி அமர் பத்தர் தம்மை -

Koviloor Digital Library

பெரியநிலவுலகத்தில் அல்லமதேவனாகிய தன்னையே கருதிக் கொண்டு, அங்கங்கே வாழ்ந்திருக்கும் அடியார்களை, ஆள் ஓர் நினைவொடு நடந்து உலாவு நாள்களுள் - அவரை ஆட் கொள்ளும் ஒரே நினைவோடு உலகத்தில் உலவிக் கொண்டிருக்கும் காலத்தில், (எ.று)

முடிபு - அல்லமதேவன் காரை நினைகின்ற மயிலென, தன்னையே கருதி, நிலமிசை அமர் பக்தர்தம்மை, ஆள் ஓர் நினைவொடு உலாவும் நாள்களுள்.

593. **ஒன்றொரு நாளொரு திசையின் ஓங்கருள்**
குன்றனை யானொரு கோலம் கொண்டுதான்
சென்றனன் அவனெதிர் சிறந்து தோன்றிற்று
மன்றன்மென் மலரிள வனமொன் றாயிடை 3

(இ.ள்) ஒன்று ஒரு நாள் ஒரு திசையில் - பொருந்திய ஒரு நாளிலே ஒரு திசையிலே; ஓங்கு அருள்குன்று அனையான் - உயர்ந்த அருள்மலை போன்ற அல்லமதேவன்; ஒருகோலம் கொண்டு - தனக்கு இயைந்த ஒரு வடிவத்தை எடுத்துக் கொண்டு; தான் சென்றனன் - தான் மட்டும் தனித்துச் சென்றான்; அவன் எதிர் ஆயிடை - சென்ற அவன் முன்னே, அவ்விடத்தே; மன்றல் மென்மலர் இளவனம் ஒன்று சிறந்து தோன்றிற்று. மணம் பொருந்திய மென்மையான பூக்களையுடைய, இளமையான வனம் ஒன்று சிறப்பாகத் தோன்றிற்று. (எ.று)

முடிபு - ஒரு நாள் ஒரு திசையில் அருள் குன்று அனையான் ஒரு கோலங்கொண்டு சென்றனன், ஆயிடை மலர்வனம் ஒன்று சிறந்து தோன்றிற்று. மலர்வனம் - நந்தனவனம்.

594. **சிறுபொழுது ஐந்தினும் திரிவி லாதபேர்**
அறுபொழுதினுமிதழ் அவிழ்ந்து தேன்சொரி
நறுமலர் நிறையுமந் நந்த னத்தினைப்
பெறின்[1]மக பதிவனம் பெறவு வந்திடார் 4

(பா.ம்) [1]மகபதி வளம்

(இ.ள்) சிறுபொழுது ஐந்தினும் - வைகறை முதலான சிறு பொழுது ஐந்தின் கண்ணும்; திரிவிலாத பேர் அறுபொழுதினும் - தம் இயல்பு மாறுபடாத பெரும்பொழுது ஆறின் கண்ணும்; இதழ் அவிழ்ந்து தேன்சொரி நறுமலர் நிறையும் அந் நந்தனத்தினை - இதழ்கள் விரிந்து

Koviloor Digital Library

தேனைச் சொரியும் நறுமணமுள்ள பூக்கள் நிறைந்த அந் நந்தன வனத்தினை; பெறின் - ஒருவர் அடைவாரேயானால்; மகபதி வனம் பெற உவந்திடார் - தேவேந்திரனுடைய நந்தனம் என்னும் பெயருடைய வனத்தை அடைவதற்கு விருப்பம் கொள்ளார். (எ.று)

முடிபு - ஐந்து சிறு பொழுதினும், ஆறு பெரும் பொழுதினும், மலர்நிறையும் அந் நந்தன வனத்தினைப் பெறின், மகபதி வனத்தைப் பெற ஒருவர் உவந்திடார். வைகறை, காலை. நண்பகல் -பிற்பாடு -நள்ளிரவு - சிறுபொழுது ஐந்து நாட்கூறு. பெரும் பொழுஆறு யாண்டின் கூறு. (கார் - கூதிர். முன்பனி, பின்பனி - இளவேனில் -முதுவேனில்) மண்ணுலகில் நந்தவனத்தினைப் பெற்றவர், விண்ணுலகில் இந்திரன் வனத்தினைப் பெற விரும்பார்.

595. **படிமிசைத் தவம்பல பயின்று நொந்தவர்**
வடதிசைக் கயிலையின் மருவ வேண்டலிக்
கடிமலர்ப் பொழின்மணம் கலந்த தென்றல் வந்(து)
உடல்மிசை [1]தவழ்தரல் ஒன்று, முன்னியே 5

(பா.ம்) [1]தவழ்தலாம்

(இ.ள்) படிமிசைத் தவம் பல பயின்று நொந்தவர் - (தென்திசை யிலேயுள்ள) நிலத்தின்கண் இருந்து பலதவச் செயல்களைப் பயின்று, அதனாலே வருந்தியவர்கள்; வடதிசைக் கயிலையில் மருவ வேண்டல் - வடதிசையின் கண்ணேயுள்ள கைலை மலையை அடைய விரும்புதல் எதனால் எனின்; கடிமலர்ப் பொழில் மணம் கலந்த தென்றல் வந்து - விளக்கம் உடைய மலரைப் பெற்றிருக்கும் நந்தனவனத்தின் நறு மணத்தில் கலந்த தென்றல் காற்று வந்து; உடல்மிசை தவழ்தரல் ஒன்று முன்னியே - (தவ வருத்தம் தீரும்படி) உடம்பின் மேல் தவழ்ந்து ஓடுதலாகிய ஒன்றினைக் கருதியேயாம். (எ.று)

(முடிபு) படிமிசை பலதவம் பயின்று நொந்தவர், வடதிசைக் கயிலையினை மருவ வேண்டல், இப்பொழில் மணம் கலந்த தென்றல் வந்து, உடல்மிசை தவழ்தரல் ஒன்று முன்னியே. இது தற் குறிப்பேற்ற அணி.

596. **[1]கண்ணிறை மலர்பல கண்டு கண்டு போய்**
உண்ணறு நறுமது கொளவு ழன்றிடும்
[2]எண்ணறும் அளியினம் இரையும் தன்மையால்
[3]தண்ணுறு நந்தனம் வண்டின் சந்தையே 6

Koviloor Digital Library

(பா.ம்) [1]கண்ணறு மலரினை; கண்ணுறு மலர்பல; [2]எண்ணுறு; [3]தண்ணறு நந்தனம்;

(இ.ள்) உண்ணுறும் நறுமது கொள உழன்றிடும் எண் அறும் அளிஇனம் - உண்ணுதற்குத் தக்க நறுமணமுள்ள தேனை எடுத்துக் கொள்ளுவதற்காக, அங்கும் இங்கும் திரிகின்ற கணக்கற்ற வண்டின் கூட்டங்கள்; கள் நிறை மலர் பல கண்டு கண்டு போய் இரையுந் தன்மையால் - தேன் நிறைந்த மலர்கள் பலவற்றைப் பார்த்துப் பார்த்துச் சென்று ஓசையிடும் தன்மையினாலே; தண்ணுறு நந்தனம் - (அந்த) குளிர்ச்சி பெற்ற நந்தன வனமானது; வண்டின் சந்தையே - வண்டுகளின் சந்தைக் கூட்ட நிகழ்ச்சி போல் காட்சி அளித்தது.

முடிபு - அளிஇனம் மலர்பல கண்டு கண்டு போய் இரையும் தன்மையால் அந் நந்தனம், வண்டின் சந்தையே. மக்கள் கூட்டம், தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வாங்கிக் கொள்ளுதற் குரிய வாணிக இடமாக இருப்பது சந்தை. அங்கு பண்டம் வாங்கும் மக்கள், அங்குள்ள பொருளைப் பார்த்துப் பார்த்துச் சென்று வாங்குதல், விற்றல், குறித்து ஒலி எழுப்புவர். அக்கூட்ட நிகழ்ச்சிபோல் நந்தவனம் உள்ளது. இப்பாட்டு உவமையணி யாகும்.

597. **நறுமலர் நிறையுமந் நந்த னத்தினைக்**
குறைவற அளிப்பவன் கொக்கி தேவனென்று
அறைதரு பெயரினான் அனையன் ஆயிடைத்
திறமுறு செயலினைச் செய்து நின்றனன் 7

(இ.ள்) நறுமலர் நிறையும் அந் நந்தனத்தினை - நறு மணமுள்ள பூக்கள் நிறைந்திருக்கும்; அந் நந்தன வனத்தினை; குறைவற அளிப்பவன் - எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமல் பாதுகாப்பவன்; கொக்கிதேவன் என்று அறைதரு பெயரினான் - கொக்கி தேவன் என்ற பெயரினையுடையவனாவன்; அனையன் ஆயிடைத் திறமுறு செயலினைச் செய்து நின்றனன் - அத்தகையோன், அவ்விடத்தே, அதற்கு வேண்டிய கூறுபாடான தொழில்கள் பலவற்றைச் செய்து கொண்டு அங்கே வாழ்ந்து இருந்தனன். (எ.று)

முடிபு - அந் நந்தனத்தினை, அளிப்பவன், கொக்கி தேவன் என்று அறைதரு பெயரினான், அனையன், ஆயிடை திறமுறு செயலினைச் செய்து நின்றனன். கன்னடப் பிரபுலிங்க லீலை இதனுடைய பெயரை கொக்கையன் என்று கூறும். திறமுறு செயலாவன, நந்தன வனத்திற்கு

Koviloor Digital Library

வேண்டிய, மரம், செடி, கொடி முதலானவற்றை நடுதலும், எரு விடுதலும், நீர்ப் பாய்ச்சுதலும், களை எடுத்தலும், காத்தலும் முதலியன.

598. **நின்றவன் தனையருள் நினைந்த நெஞ்சொடு**
[1]சென்றனன் அல்லம தேவன் கண்டிவன்
புன்தொழில் இடஅரும் பொருளு ணர்த்துவல்
என்றரு கடைந்தைய சரணம் என்றனன் 8

(பா.ம்) [1]சென்றனம்

(இ.ள்) நின்றவன் தனை - அங்ஙனம் வாழ்ந்து நின்ற கொக்கி தேவனை; அல்லமதேவன் அருள் நினைந்த நெஞ்சொடு சென்றனன் கண்டு - அல்லமாப் பிரபு தேவரானவர், அருளைக் கருதிய மனத்தொடு, போய் பார்த்து; இவன் புன் தொழில்விட - இக் கொக்கி தேவன் (இப்பொழுது செய்துவரும், சிறிய பயனைத் தருகின்ற) இத்தொழி லிருந்து நீங்கும்படி; அரும்பொருள் உணர்த்துவல் என்று - அடைதற் கரிய மெய்ஞ் ஞானப் பொருளை, நான் கூறுவேன் என்று கருதிக் கொண்டு; அருகு அடைந்து ஐய! சரணம் என்றனன் - கொக்கிதேவன் பக்கல் சென்று ஐயனே! உனக்கு வணக்கம் என்று கூறினான். (எ.று)

முடிபு - அல்லமதேவன், நின்றவன்தனை, அருள் நினைந்த நெஞ்சொடு சென்றனன் கண்டு, இவன் புன்தொழிலை விட அரும் பொருளை உணர்த்துவல் என்று அருகு அடைந்து ஐய! சரணம் என்றனன். இப்பிரபுலிங்க லீலையில் மாதேவி துறவு கதியிலிருந்து மெய்ப் பொருளைக் கூறத் தொடங்குகின்றார். மாதேவி, என்னை நான் அறிய, சற்குரவனைத் தேடிச் சார்கின்றேன் என்று புறப்பட்டாள். இங்க கொக்கிதேவன் கதியில் அல்லம தேவன் அரும்பொருள் உணர்த்துவன் என்று கொக்கிதேவரிடம் சென்றார். இங்கே இவர் உணர்த்துவன எல்லாம், வீரசைவ சமயத்திற் கூறப்படும் அரும் பொருள் என்க.

கொக்கி தேவன் வினா

599. **தானெதிர் நிமலனை சரணெ னத்தொழாத்**
தேனலர் வனத்தன்நின் செயலி யாது நின்
மேனியின் பெயரெது விளம்பு கென்றலும்
ஞானநல் [1]விளக்கனான் நவிறன் மேயினான் 9

(பா.ம்) [1]விளக்கினான்

(இ.ள்) தேன்அலர் வனத்தன் - தேனையுடைய மலர்களைப்

Koviloor Digital Library

பெற்றிருக்கும் வனத்தனாகிய கொக்கிதேவன்; தான் எதிர் நிமலனை சரண் எனத் தொழா - தான் எதிர்ப்பட்ட அல்லமதேவனை சரணம் என்று கூறித் தானும் தொழுது; நின் செயல் யாது? மேனியின் பெயர் எது விளம்புக என்றலும் - உனக்குரிய செய்யும் தொழில் யாது? உன் உடம்பின் பெயர் என்ன இவற்றைச் சொல்லுக என்றலும்; ஞான நல் விளக்கு அன்னான் நவில்தல் மேயினான் - அறிவு என்கின்ற நல்லவிளக்கை ஒத்தவனாகிய அல்லம தேவன் விடை சொல்லுதலைத் தொடங்கினான்.

முடிபு - அலர்வனத்தன் நிமலனைச் சரண் எனத்தெழா நின் செயல் யாது நின் மேனியின் பெயர் எது? விளம்புக என்றலும், ஞானநல் விளக்கானான் நவில்தல் மேயினான்.

அல்லமன் கூறிய விடை

600. பத்தர்தம் மனைதொறும் பத்திப் பிச்சை கொண்டு
எத்திற வினையுமின் றிருப்பன் அல்லமன்
உத்தம! என்பெயர் பெயர்வு னக்கென் என்(று)
அத்தனும் வினவத்தன் பெயர் அறைந்தவன்

(இ.ள்) உத்தம - உத்தமனே (நல்லோனே), சிறந்தோனே; பத்தர் தம் மனைதொறும் பத்திப் பிச்சைக் கொண்டு எத்திற வினையும் இன்றி இருப்பன் - அன்பர்களுடைய வீடுகள் தோறும், அவர்கள் இடும் அன்புப் பிட்சை உணவை உட்கொண்டு, வேறு எத்தகைய தொழில்களும் இல்லாமல் இருப்பேன்; என் பெயர் அல்லமன் - என் பெயர் அல்லமன் என்பதாகும்; உனக்குப் பெயர் என்ன என்று அத்தனும் வினவ - உனக்குப் பெயர் என்ன என்று அல்லமதேவனும் எதிர்வினாவினவ; அவன் தன் பெயர் அறைந்து - அவன் தன்னுடைய பெயரைக் கூறிவிட்டு, மேலும் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிபு - உத்தம! மனனைதொறும் பிச்சைகொண்டு எத்திறவினையும் இன்றி இருப்பன். என் பெயர் அல்லமன், உனக்கு பெயர் என்ன என்று அத்தனும் வினவ அவன்தன் பெயரை அறைந்து. ஞானிகள் தமக்கென உணவு சமைத்துக் கொள்ளும் தொழிலையும் செய்யாது, இல்லறத்தாரது மனைதொறும், பிச்சை ஏற்றுண்டு எல்லாத் தொழில் களையும் துறந்து, பிரம்மத் தியானத்தில் இருத்தல் வேண்டுதலின், எத்திறவினையும் இன்றி இருப்பன் என்று கூறினார். கர்ம சந்நியாசமே

Koviloor Digital Library

துறவு என்க. எத்திற வினையும் இன்றி இருப்பன் என்றது. துறவிகளுக்குக் தியாகம் வேண்டுதலின் அவ்வாறு கூறினார்.

601. அருங்குரு லிங்க சங் கமத்திற் காகமெய்
வருந்துறு தொழிலற வறிதி ருப்பவன்
அருந்துறு பிணமென அறையும் மாற்றம்நீ
தெரிந்திலை யோவெனச் செப்பன் மேயினான் 11

(இ.ள்) அரும் குரு இலிங்க சங்கமத்திற்கு ஆக - சிறந்த பொருள்களாகிய குரு, லிங்கம், சங்கமம் என்னும் மூன்று பொருளுக்காக; மெய்வருந்துறு தொழில்அற வறிது இருப்பவன் - உடல் வருந்துமாறு செய்கின்ற, பூசனை முதலான தொழில்களையும் விட்டு, சும்மா இருப்பவன்; அருந்துறு பிணம் என அறையும் மாற்றம் - உணவுண்ணும் பிணத்தை ஒப்பான் என, நூல்கள் கூறும் சொற்களை; நீ தெரிந்திலையோ எனச் செப்பன் மேயினான் - நீ இதனை உணர்ந்திலையோ என்று கூறிவிட்டு மேலும் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிபு - குரு லிங்க சங்கமத்திற்காக, வருந்துறு தொழிலும்அற வறிதிருப்பவன். அருந்துறு பிணம் என அறையும் மாற்றத்தை நீ தெரிந்திலையோ, எனக் கூறிவிட்டு, மேலும் செப்பல்மேயினான். குருவை வழிபடுதலும், இலிங்கத்தைப் பூசித்தலும் அடியார்களுக்கு உணவிடுதலும் ஆகிய இத்தொழில்களை, இல்லறம் பூண்ட ஒருவன் செய்து வர வேண்டும் என்று ஆகமங்கள் கூறும். அதைக் கருதி கொக்கிதேவன் இவ்வாறு கூறினான். அல்லமதேவன் உயர்ந்த துறவி, எல்லாக் கருமங்களையும் விட்டவன் என்பதை ஆராய்ந்துணராமல் இவ்வாறு அவன் கூறலானான் என்க. அருந்துறு பிணம் - நடைப்பிணம். இயங்கும் பிணம் இவை ஒரு பொருட் வேறு சொற்கள்.

வேறு

கொக்கி தேவன் அல்லமனைப் பழித்துக் கூறியது

602. எய்தற் கரிய யாக்கைதனக்
கெய்திற் றென்றால் அதுகொண்டு
செய்தற் கரிய அறங்கள்பல
செய்து துயர்கூர் பிறவியினின்(று)
உய்தற் கொருமை பெற [1]வெண்ணாது
உழல்வோன் உடம்பு பொற்கலத்தில்

Koviloor Digital Library

பெய்தற் குரிய பால்கமரில்
²பெய்த தொக்கும் என்பரால் 12

(பா.ம்) ¹வொண்ணாது; ²பெய்வதொக்கும்

(இ.ள்) தனக்கு எய்தற்கு அரிய யாக்கை எய்திற்று என்றால் - தனக்கு பெறுதற்கரிய உடம்பை தான் பெற்றானேயானால்; அது கொண்டு - அவ் உடம்பைக் கொண்டு; செய்தற்கு அரிய அறங்கள் பல செய்து - செய்வதற்கு அருமையான நல்வினைகளைச் செய்து; துயர்கூர் பிறவியில் நின்று உய்தற்கு ஒருமை பெற எண்ணாது உழல்வோன் உடம்பு - துன்பம் மிகும் பிறவிகளிலிருந்து, பிழைத்து மேல் ஏறுதற்கு, ஒன்றாம் தன்மைபெறக் கருதாமல் சும்மாயிருக்கும் தொழிலை உடையவனாய்த் திரிபவனுடைய உடம்பு; பொற்கலத்தில் பெய்தற்குரிய பால்; கமரில் பெய்தது ஒக்குமால் என்பரால் - நல்ல கலத்தில் பெய்து வைத்து, பயன் கொள்ளுதற்குரிய பாலை, நிலத்தின் வெடிப்பிடத்தே பெய்து பயனிழந்தால் போலும் என்று அறிஞர் கூறுவர். (எ.று)

முடிபு - தனக்கு அரிய யாக்கை எய்திற்று என்றால், அதுகொண்டு அரிய அறங்கள் பல செய்து, பிறவியினின்று, உய்தற்கு எண்ணாது, (எத்திறவினையும் இன்றி உழல்வோன் உடம்பு) பொற்கலத்தில் பெய்த பாலை, கமரில் பெய்தால் ஒக்கும் என்பார்.

கொக்கிதேவன் அல்லமனைப் பழித்துக் கூறியது

603. மின்போல் அழியும் உடல்கொடுநல்
வினைசெய் ¹தழியா வுடம்பெய்தி
இன்போ டமர்த லாயிருப்ப
யாக்கை வருந்து மென்றெண்ணி
அன்போ டறஞ்செய் திளையாமல்
அருந்தி வாளா இருக்குமவன்
தன்போல் மருளர் இலைஎன்றான்
தண்பூம் பொழில்வைத் தளிக்கின்றான் 13

(பா.ம்) ¹ஒழியா உடம்பெய்தி

(இ.ள்) தண்பூம் பொழில்வைத்து அளிக்கின்றான் - குளிர்ந்த மலர்வனத்தை உண்டாக்கி, அதனைப் பாதுகாத்து வரும் அத்தொழிலைச் செய்யும் அக்கொக்கி தேவன்; (எத்திறவினையும் இன்றி இருப்பன் என்று சொல்லிய அல்லமனைப் பார்த்து) மின்போல் அழியும் உடல் கொடு

Koviloor Digital Library

நல்வினை செய்து - மின்னலைப் போல, தோன்றி அழியும் உடம்பைக் கருவியாகக் கொண்டு புண்ணிய காரியங்களைச் செய்து; (அதனாலே) அழியா உடம்பு எய்தி இன்போடு அமர்தலாய் இருப்ப - அழிவில்லாத, தெய்வ உடம்பைப் பெற்றுக் கொண்டு, சுவர்க வுலகத்தில் இன்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பதை விட்டுவிட்டு; யாக்கை வருந்தும் என்று எண்ணி - தொழில் செய்தால், உடம்பு வருந்துமே என்று கருதிக் கொண்டு; அன்போடு அறம் செய்து இளையாமல் - அன்போடு கூடி, புண்ணிய காரியங்களைச் செய்து, அதனால் உடம்பு இளைத்துப் போகாமல்; அருந்தி வாளா இருக்கும் அவன்தன் போல் மருளர் இலை என்றான் - பிச்சை கொண்டு அருந்தி எத்திறவினையும் இன்றி இருக்கின்ற அவனைப் போல், அறியாமையுடையோர் வேறு எவரும் உலகில் இல்லை என்றான்.

முடிபு - அளிக்கின்றான், அழியும் உடல்கொடு, நல்வினை செய்து, அழியா உடம்பு எய்தி, இன்போடு (சுவர்க்கத்தில்) அமர்தலாய் இருப்ப, யாக்கை வருந்தும் என்று எண்ணி, அறம் செய்த இளையாமல், இருக்குமவன் தன்போல் மருளர் இலை என்றான். கர்மியாகிய கொக்கிதேவன், கர்மம் செய்யாது விட்ட ஞானியாகிய அல்லமனைப் பார்த்து, உன்னைப் போல், அஞ்ஞானி ஒருவரும் இல்லை என்று பழித்துக் கூறினான்.

கொக்கிதேவன் கூறிய மொழியைக் கேட்டு
அதற்கு அல்லமன் கூறிய மறுமொழி.

604. உரைத்த மொழியை அல்லமப்பேர்
உடையான் கேட்டு கைகுலைத்து
சிரித்து வினைநல் லனசெய்து
சிதையா இன்பம் பெறுவானேல்
வருத்தல் உறுமும் [1]மலங்களினோர்
மலமா கியஆ ணவத்தாலும்
பொருத்தம் உறுபேர் இன்பம்நாம்
புணர லாமென் றியம்பியே 14

(பா.ம்) [1]அம்மலங்களினோர்

(இ.ள்) உரைத்த மொழியை அல்லமப் பேர் உடையான் கேட்டு - கொக்கித்தேவன் கூறிய சொற்களை, அல்லமதேவர் கேட்டுணர்ந்து;

Koviloor Digital Library

கைகுலைத்துச் சிரித்து - (கொக்கி தேவனுடைய அறியா மொழிக்கு) இரங்கி கைகொட்டி நகைத்து; வினை நல்லன செய்து சிதையா இன்பம் பெறுவானேல் - நீக்கத்தக்க இருவினைகளுள் நல்வினை ஒன்றனைச் செய்து, அழியாத பேரின்பத்தை ஒருவன் அடைவானே ஆனால்; வருத்தலுறு மும்மலங்களில் - பிறவித் துன்பத்தை உண்டாக்குகின்ற (ஆணவம், மாயை, கன்மம்) என்ற மூன்று மலங்களுள்; ஓர் மலமாகிய ஆணவத்தாலும் பொருத்தம் உறுபேர் இன்பம் நாம் புணரலாம் என்று இயம்பியே - ஒரு மலமாகிய ஆணவ மலத்தாலும், பொருந்துதற்குரிய மோட்சமாகிய பேரின்பத்தை நாம் அடையலாமே என்று கூறிவிட்டு, (எ.று)

முடிபு - உரைத்த மொழியை, அல்லமப் பேருடையான் கேட்டு, கைகொட்டிச் சிரித்து, நல்லன செய்து, சிதையா இன்பத்தை ஒருவன் பெறுவானேல், மும்மலங்களின் ஓர்மலமாகிய ஆணவ மலத்தாலும் பேரின்பத்தை நாம் புணரலாம் என்று இயம்பி, மும்மலங்களுள், ஆணவ மலத்தால் பேரின்பத்தை அடைய முடியாது எனில், மும்மலங்களில் ஒருவகையாகிய நல்வினையாலும் பேரின்பத்தை அடைய முடியாது என்பது கருத்து. செய்தற்கரிய அறங்கள் பல செய்து, பிறவியினின்று உய்யலாம் என்று, கொக்கிதேவன் கூறிய உரையை இங்கே அல்லம தேவன் மறுத்துக் கூறினார்.

605. **தான்செய் வினையால் ஓருடம்பில்**
சாரும் இன்பம் என்றனைஅவ்
ஊன்செய் உடலம் ஒழியவுடன்
ஒழியும் அம்மெய், அழியாமல்
வான்செய் பதத்தில் இருக்குமெனின்
மாயை தந்த தன்றாகும்
கான்செய் மலர்நந் தனஞ்செய்து
கருவைத் துடைப்ப எண்ணுவோய் 15

(இ.ள்) கான்செய் மலர் நந்தனம் செய்து கருவைத் துடைப்ப எண்ணுவோய் - (புண்ணியச் செயலாகிய) மணத்தைச் செய்யும் பூக்களையுடைய நந்தவனத்தை இயற்றி (அதனாலே) உன்னுடைய பிறவியை நீக்கிக் கொள்வதற்கு கருதுகின்ற கொக்கிதேவனே; தான் செய்வினையால் ஓர் உடம்பில் இன்பம்சாரும் என்றனை - தான் இயற்றிய நல்வினையினாலே, கிடைத்த மற்றொரு உடம்பினாலே

Koviloor Digital Library

அழியா இன்பம் பெறலாம் என்றுநீ கூறினாய்; ஊன்செய் உடலம் ஒழிய உடன் ஒழியும் - நல்வினையால் கிடைத்த தெய்வ ஊன்உடம்பு அழிந்துவிட அதனாலே கிடைத்த இன்பமும் உடனே அழிந்துவிடும்; அம்மெய் அழியாமல் வான்செய் பதத்தில் இருக்கும் எனில் - தெய்வ ஊன் உடம்பு அழியாமல், வான் உலகமாகிய சுவர்க்க உலகத்திலேயே அவ்வுடம்பு எப்பொழுதும் நிலை பெற்றிருக்கும் என்று சொன்னால்; மாயை தந்தது அன்றாகும் - அந்த சுவர்க்க உலகமும் தெய்வ ஊன் உடம்பும், மாயை கொடுத்த பொருளல்லனவாயிருக்க வேண்டும்; (அவ்வாறு இல்லாமல்) சுவர்க்கவுலகமும், தெய்வ உடம்பும் மாயையிலிருந்து தோன்றிய பொருளாக இருத்தலினால், அவையும் அழியும் என்பது கருத்து. அதனால் தெய்வ உடலால் அழியா இன்பம் பெற முடியாதென்க.

முடிபு - எண்ணுவோய்! தான் செய்வினையால் (தெய்வ உடம்பாகிய) ஓர் உடம்பில் இன்பம் சாறும் என்றனை, அவ் (தெய்வ) ஊன் செய்வுடலம் ஒழிய அவ் (இன்பமும்) உடன் ஒழியும், அம்மெய் அழியாமல், வான் செய்பதமாகிய (சொர்க்கத்தில்) இருக்குமெனில், மாயை தந்தது அன்றாகும். மணிவாசகர், வானுலக இன்பத்தையும் அழிவுடையதாகக் கருதி ''வானேயும் பெயல் வேண்டடேன்'' என்று கூறினார். உலகத்தில் இரண்டு கதிகள் உள்ளன. அவை அவ்வியத்த கதியாகிய **மாயாகதி** என்றும், அதற்கு மேற்பட்ட, **பிரமகதி** என்றும் பெயர் கூறப்படும். அவ்வியக்க கதி எல்லாம் அழிவுடையன, பிரம்மகதியே அழிவில்லாதது. பிரம்மகதிக்கு சிவகதி என்றும் மற்றொரு பெயர் உண்டு.

606. **இன்பம் நனிசெய் நல்வினையின்**
இறப்பில் இறப்ப உடம்பினிடைத்
துன்பம் அதுசெய் தீயவினை
தோன்றும் [1]அத்தீ வினைமாய்வில்
முன்பு செயும்நல் வினைவருமிம்
முறையால் இரண்டும் மாறிவரும்
என்ப உலகில் ஒண்பகலும்
இரவும் மாறி வருதல்போல் 16

(பா.ம்) [1]அத்தீவினை மாய

(இ.ள்) உடம்பினிடை - உடம்பின்கண்; இன்பம் நனிசெய்

Koviloor Digital Library

நல்வினையின் இறப்பில் - இன்பத்தை மிகவும் உண்டாக்குகின்ற புண்ணியத்தின் முடிவிலே; உடம்பினிடை துன்பம் அதுசெய் தீயவினை இறப்பத் தோன்றும் - உடம்பின்கண் துன்பத்தைச் செய்கின்ற, பாவம் முடிய மிகுதியாகத் தோன்றும். அத்தீவினைமாய்வில் முன்பு செயும் நல்வினை வரும் - அந்தத் தீவினையின் முடிவிலே முன்புசெய்த நல்வினை வரும்; உலகில் ஒண்பகலும், இரவும் மாறிவருதல்போல் இம்முறையால் இரண்டும் மாறிவரும் என்ப - உலகத்தின்கண் ஒளிபெற்ற பகற் காலமும் ஒளி இழந்த இரவுக் காலமும், மாறி மாறி வருதல்போல, நல்வினையும் தீவினையும் மேலே கூறிய முறைபடி மாறி மாறி வரும் என்க. (எ.று)

முடிபு - உடம்பினிடை நல்வினையின் இறப்பில், துன்பமது செய்தீய வினை தோன்றும், அத்தீவினை மாய்வில் முன்புசெயும் நல் வினையும் வரும். உலகில், பகலும் இரவும் மாறி வருதல் போல் இம்முறையால் இரண்டும் மாறி வரும். இப்பாட்டால் நல்வினை செய்தால் அழியாவுடம்பைப் பெற்று வாழலாம், என்று கொக்கி தேவர் கூறிய கருத்தை மறுத்துக் கூறியுள்ளார்.

கொக்கிதேவன் தன் போல் மருளன் இலை என்று அல்லமனைக் கருதிக் கூறியதை இங்கு அல்லமதேவன் கொக்கி தேவனே மருளன் எனக் கூறியது

607. **புறத்துக் கருமம் பலசெய்து**
பொருப்பை அகழ்ந்திட் டெலிபிடித்தாங்கு
இறப்பச் சிறிய விண்ணின்பம்
எய்தும் அவனோ நோவாமல்
மறுத்துச் செயல்கள் அனைத்தினையும்
வாளா இருந்து பேரின்பம்
பெறத்தக் கவனோ மருளன்யார்
பேசு கென்றான் எம்பெருமான் 17

(இ.ள்) புறத்துக்கருமம் பல செய்து - வெளி உலகத்திலே புண்ணிய செயல்கள் பலவற்றை மிக வருந்திச் செய்து; பொருப்பை அகழ்ந்திட்டு எலி பிடித்தாங்கு - வெட்ட முடியாத பெரியமலையை வெட்டி முடித்து அதிலிருந்த மிகச் சிறிய எலியைப் பிடித்துக் கொண்டாற்போல்; இறப்பச் சிறிய விண்ணின்பம் எய்தும் அவனோ - மிகவும் சின்ன, வானுலக இன்பத்தை, பெறுபவனோ; நோவாமல்

Koviloor Digital Library

செயல்கள் அனைத்தினையும் மறுத்து வாளாஇருந்து பேரின்பம் பெறத் தக்கவனோ - வருத்தம் எய்தாமல் வினைசெய்தலை எல்லாம் விட்டு, சும்மா இருந்து, பேரின்பத்தை பெறுதற்கு உரியவனாகின்றவனோ?; இவ்விருவரில் மருளன் யார்? பேசுக - மருட்சியுடையவன் யார் என்பதை நீயே சொல்லுக, (மாட்சி - அஞ்ஞானம்). என்றான் எம்பெருமான் - என்று கூறினான் அல்லமதேவன் (எ.று)

முடிபு - பல கருமம் செய்து பொருப்பை அகழ்ந்து எலிபிடித் தாங்கு, சிறிய விண்ணின்பம் எய்தும் அவனோ? செயல்கள் அனைத்தி னையும் மறுத்து வாளாயிருந்து விண்ணின்பம் பெறத்தக்கவனோ? இவ்விருவருள் மருளன் யார் என்பதை பேசுக என்றான் எம் பெருமான். ''மலையைக் கெல்லி எலி பிடித்தால் போல்'' என்ற பழமொழி எடுத் தாளப் பெற்றுள்ளது.

608. **பொறியிற் புறத்து மனஞ்செல்லில் புலனே தோன்றி இடுமகத்தில்**
செறியக் கரணம் பராநந்த சிவமே தோன்றும் சிவம்தோன்ற
[1]அறிவில் பரந்த விடயமயம் ஆகும் உலகம் தோன்றாமல்
பிறவித் துயரக் கடல்கடந்து பேரின் பஞ்சார் குவரென்று 18

(பா.ம்) [1]அறியிற் பயந்த, அறிவிற் பரந்த

(இ.ள்) மனம் பொறியின்புறத்து செல்லில் புலனே தோன்றி இடும் - உள்ளமானது, ஐம்பொறி வழியாய் வெளியிடத்தில் செல்லில் கண்டு, கேட்டு, உண்டு - உயிர்த்து உறுதல் என்னும் ஐம்புலப் பொருளே தோன்று வதாகும்; கரணம் அகத்தில் செறிய பரஆநந்த சிவமே தோன்றும் - அந்தக் கரணங்கள் நான்கும் (மனம்-புத்தி-சித்தம்-அகங்காரம்) உள்ளிடத்தே பொருந்தி இருக்க, மேலான இன்ப வடிவான சிவமே தோன்றும். (புலனே தோன்றாது சிவம் தோன்றும் என்க); சிவம் தோன்ற - சிவம் தோன்றினால், அறிவில் பரந்த விடயமயம் ஆகும் உலகம் தோன்றாமல் - உணர்வினிடத்தே பரந்து கிடக்கும் ஐம்புல விடயமாகின்ற உலகம் தோன்றாமல் இருக்க; பிறவித் துயரக் கடல் கடந்து பேரின்பம் சார்குவர் என்று - பிறவித் துயரம் என்னும் கடலைக் கடந்து, பேரின்பத்தை அப்பெற்றியோர் அடைவர் என்று கூறிவிட்டு, (எ.று)

முடிபு - மனம் புறத்துச் செல்லில் புலனே தோன்றியிடும், கரணம் அகத்தில் செறிய பராநந்த சிவமே தோன்றும், சிவம் தோன்ற விடய

Koviloor Digital Library

மயமாகும் உலகம் தோன்றாமல், பிறவித்துயர்க்கடல் கடந்து பேரின்பம் சார்குவர் என்று.

609. கண்ணால் காணக் காட்டியிவன்
கருத்தைத் திருத்து வேமென்ன
எண்ணாக் கருணைக் கடலனையான்
இவண்நீ அகழ்தி என்றுரைப்ப
நண்ணாப் பெரும நன்றென்று
நவின்ற நிலத்தை அகழ்கின்றான்
பண்ணால் சிறந்த பொறிவண்டு
பாடும்மலர்ப்பூம் பொழிலு டையான் 19

(இ.ள்) கருணைக் கடல் அனையான் - அருள் கடலை ஒத்த அல்லமதேவன்; கண்ணால் காணக் காட்டிஇவன் கருத்தைத் திருத்து வேம் என்ன எண்ணா - எத்திறவினையும் இன்றி இருக்கும் சிவயோ கியரின் சமாதிநிலையை, இவனுக்குத் தன் கண்ணால் உணரும்படி காட்டி இவனது எண்ணத்தைத் திருத்துவேம் என எண்ணி; இவண்நீ அகழ்தி என்று உரைப்ப - (குறிப்பிபட்ட இடம் ஒன்றைக் காட்டி) இவ்விடத்தை நீ தோண்டுவாயாக என்று கூற; பண்ணால் சிறந்த பொறி வண்டுபாடும் மலர்பூம் பொழிலுடையான் - இசைபாடுவதால் சிறந்த புள்ளிகளையு டைய வண்டுகள் பாடிக் கொண்டே இருக்கும் மலர்களைப் பெற்றுள்ள, பொலிவான நந்தனவனத்தை உடைய கொக்கிதேவன்; பெரும! நன்று என்று நண்ணா - பெரியோனே! நீ சொன்னது நல்லது என்று கூறிக்கொண்டு அவர் குறிப்பிட்ட இடத்தை அடைந்து; நவின்ற நிலத்தை அகழ்கின்றான் - அல்லமதேவன் கூறிய அவ்விடத்தைத் தோண்டத் தொடங்கினான். (எ.று)

முடிபு - கருணைக் கடலனையான் கண்ணால் காணக்காட்டி, இவன் கருத்தைத் திருத்துவேம் என்னா. இவண் அகழ்தி என்று உரைப்ப பெருக பொழிலுடையான், நன்று என்று நண்ணா நவின்ற நிலத்தை அகழ் கின்றான். உரைப்ப நண்ணா அகழ்கின்றான்.

610. தொடலும் செம்பொன் சிகரமொன்று
தோன்றச் செய்யுள் பொருள் போலச்
கடிதின் அகழ்ந்து புகுந்தனுள்
[1]கண்டார் நிலத்தை அகழ்ந்திட்டு

Koviloor Digital Library

மிடியன் கண்ட பொருள்போல
விடயம் புறத்துக் காணாமல்
வடிவஞ் சிறிதும் அசையாமல்
வசமற்று இருக்கும் யோகியையே 20

(பா.ம்) [1]கண்டான்

(இ.ள்) தொடலும் - கொக்கிதேவன் தோண்டுதலும்; செய்யுள் பொருள்போல செம்பொன் சிகரம் ஒன்று தோன்ற - கற்கத் தொடங்கிய செய்யுளுள் பொருளுணர்ச்சி புலப்பட்டால் போல குகையின் அழகிய உச்சி ஒன்று புலப்பட; கடிதின் அகழ்ந்து புகுந்து மேலும் விரைந்து தோண்டி அவ்விடம் சென்று; நிலத்தை அகழ்ந்திட்டு - அந்நிலப் பகுதியைத் தோண்டி; அதனுள் - அக்குகையினுள்; மிடியன் கண்ட பொருள்போல - வறியோன் ஒருவன் தனக்கு வேண்டிய பொருளைக் கண்டாற்போல், விடையம் புறத்துக் காணாமல், வடிவம் சிறிதும் அசையாமல் வசமற்று இருக்கும் யோகியையே கண்டார் - புறத்திலே உள்ள பொருளை உணராமலும், உடல் வடிவம் சிறிதும் அசையாமலும், தன்வசமற்று பரவசமாய் இருக்கின்ற யோகியினை, இருவரும் கண்டார்கள். (எ.று)

முடிபு - தொடலும், செய்யுள் பொருள் போல சிகரம் ஒன்று தோன்ற, கடிதின் அகழ்ந்து புகுந்து அதனுள் நிலத்தை அகழ்ந்திட்டு மிடியன் கண்ட பொருள்போல், யோகியையே கண்டார்.

611. கையில் சிவலிங்கத் தின்மேல்
கண்கள் வைத்திட் [1]டெலும்பலால்
மெய்யில் தசையொன்றின்றியே
மேவும் புனிதன் தனைநோக்கிச்
செய்ய செயிலி லாதசெயல்
சிவயோ கியைக்கண்டனையோ வென்(று)
ஐயத் தடைந்த அவனறிய
அறிவித் துயரல் லமதேவன் 21

(பா.ம்) [1]எலும்பல்லால்

(இ.ள்) உயர் அல்லம தேவன் - உணர்த்துவதில் உயர்ந்த அல்லமதேவன்; ஐயத்து அடைந்த அவன் அறிய - (ஒருவர் எத்திறவினையும் இன்றி இருக்க முடியுமோ என்று) ஐயங்கொண்ட,

Koviloor Digital Library

அவன் அறியுமாறு; கையில் சிவலிங்கத்தின் மேல் கண்கள் வைத்து இட்டு - கையிலே உள்ள, இட்டலிங்கத்தின்மேல் விழிகளை வைத்து; எலும்பலால் மெய்யில் தசைஒன்று இன்றியே மேவும் புனிதன் தனைநோக்கி - உடம்பிலே தசை சிறிதுமின்றி வீற்றிருக்கும் தூய்மை யுடையவனாகிய அநிமிடனைத்தான் பார்த்து; செய்ய செயல் இலாத செயல் சிவயோகியைக் கண்டனையோ என்று அறிவித்து - செய்வதற்கு செயலில்லாத சும்மாயிருத்தலாகிய செயலையே மேற்கொண்ட சிவயோகியைப் பார்த்தாயோ என்று அறிவித்தனன்,

முடிபு - அல்லமதேவன் ஐயத் தடைந்த அவனறிய, சிவலிங்கத்தின் மேல் கண்கள் வைத்திட்டு, மெய்யில் தசை ஒன்று இன்றியே மேவும் புனிதன்தனை, நோக்கி, செய்யச் செயலிலாத சிவயோகியைக் கண்டனையோ என்று அறிவித்து. அறிவித்து என்ற வினை எச்சம். வினை முற்றும் பொருளில் அறிவித்தனன் என வந்துள்ளது. அல்லது அறிவித்தான் என்பது ஈறு குறைந்து, அறிவித்து என வந்தது எனக் கூறினும் அமையும்.

612. கடலில் விழுந்து [1]துயர்பவர்க்கு
கலமொன் றருகு வந்ததெனக்
கெடலில் பரம குருவெனக்கு
கிடைத்தது ஆ! ஆ! அற்புதம் என்று
உடலம் விதிர்ப்ப கண்கள்நீர்
ஒழுக உருகி தொழுதனனால்
விடலின் மரபில் குருசீட
விதியை விளக்க உளங்கொண்டு 22

(பா.ம்) [1]துயர்வதற்கு (துயர்பவனுக்கு ஒருமை)

(இ.ள்) விடல்இல் மரபின் குருசீட விதியை விளக்க உளம் கொண்டு - அல்லமதேவன் ஒருவருக்கொருவர் விடுதல் இல்லாத குருசீட மரபினைக் கருதி, கொக்கிதேவனுக்கு மேற்கூறியவாறு உண்மை நிலையினை விளக்கிக் கூற, கொக்கித்தேவன் அதனை ஏற்றுக்கொண்டு; கடலில் விழுந்து துயர்பவர்க்கு கலம் ஒன்று அருகு வந்தது என - கடலிலே தவறி விழுந்து, பற்றுக் கோடில்லாமல் வருந்துபவர்க்கு, ஓர் மரக்கலம் பக்கத்திலே அழையாமல் வந்தாற்போல; எடல்இல் பரமகுரு எனக்குக் கிடைத்தது - தீய பண்பு இல்லாத நல்லாசிரியன் எனக்குக் கிட்டியது; ஆ! ஆ! அற்புதம் என்று உடலம் விதிர்ப்ப கண்கள் நீர் ஒழுக

Koviloor Digital Library

உருகி தொழுதனன் - ஆ! ஆ! வியக்கத்தக்கதாகும் என்று கூறி உடல் நடுங்க கண்களிலிருந்து அன்புக் கண்ணீர் ஒழுக மனம் உருகிக் கொக்கித்தேவன் தொழுதனன்.

முடிபு - அல்லமதேவன், குருவுக்குள்ள மரபைக் கருதி, 14ம் பாட்டிலிருந்த 21ம் பாட்டுவரை கொக்கிதேவனுக்கு உண்மைநிலை உணர்த்தியும், எடுத்துக்காட்டுக் கூறியும், விளக்க, கொக்கிதேவன் சீடனுக்குள்ள மரபுப்படி, அவன் கூறிய உண்மை நிலையை உணர்ந்துகொண்டு, இவ்வாறு உணர்த்திய குருவை மகிழ்ந்து தொழுதது குரு வணக்கம் ஆகும் இப்பாடல்.

அப்பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சி

613. காந்தம் கண்ட இரும்புபோல்
கண்ட பொழுதே [1]அநிமிடன்தான்
ஏந்தும் செங்கை சிவலிங்கம்
எங்கள் பெருமான் அங்கைமலர்
போந்தங்கு இருந்த ததுபொழுதில்
புனிதன் சீவ கலைதானும்
சார்ந்தங் கிருந்த சிவலிங்கம்
தன்னோடு அவன்பால் சார்ந்ததால் 23

(பா.ம்) [1]அநிமிடன்தன்

(இ.ள்) காந்தம் கண்ட இரும்புபோல் - காந்தத்தை அணுகிய இரும்பு அதனொடு வந்து பொருந்துதல் போல்; கண்ட பொழுது - அநிமிடன்தான் ஏந்தும் செங்கை சிவலிங்கம் எங்கள் பெருமான். அங்கை மலர் போந்து அங்கு இருந்தது - அல்லமதேவரும், கொக்கி தேவரும், அநிமிடனைக் கண்ட பொழுதே அநிமிடன் என்பான், ஏந்தியிருந்த சிவந்த கையிலிருந்த இட்டலிங்கம் எங்கள் பெருமானாகிய அல்லமதேவனுடைய, அழகிய கைமலருக்கு வந்து அங்கு இருந்தது; அதுபொழுதில் - அந்நிகழ்ச்சி நிகழ்ந்த பொழுதில்; புனிதன் சீவகலைதானும் - அநிமிடனுடைய சீவகலையாகிய உயிர்தானும்; சார்ந்து அங்கு இருந்த சிவலிங்கம் தன்னோடு அவன்பால் சார்ந்தது- சார்ந்து அங்கு இருந்த அநிமிடனது சிவலிங்கம் தன்னோடே அல்லமனிடத்தில் சார்ந்தது. (எ.று)

முடிபு - (அல்லமதேவனும், கொக்கிதேவனும், அநிமிடனை கண்ட பொழுதே) காந்தம் கண்ட இரும்புபோல, அநிமிடன் செங்கைச்

Koviloor Digital Library

சிவலிங்கம், எங்கள் பெருமான் அங்கை மலர்போந்து அங்கு இருந்தது. அதுபொழுதில், புனிதன் சீவகலைதானும், அங்கிருந்த சிவலிங்கம் தன்னோட அவன்பால் சார்ந்தது. காந்தம்கண்ட இரும்புபோல் என்பது உவமையணி.

614. வந்து பரம சிவலிங்கம் மருவப் பெறுமல் லமன்தனையும்
அந்த [1]விமல லிங்கமுடன் அடைந்த ஞானக் குரவனையும்
கந்த மலர்நல் வனமுடையான் கண்டு மகிழ்வுற்று இவர்பெருமை
சந்த மறைதேர் நான்முகனும் சாற்றற்கு அரிது என்று அறைகுவான் 24

(பா.ம்) [1]அமலலிங்கமுடன்

(இ.ள்) பரமசிவலிங்கம் வந்து மருவப் பெறும் அல்லமன்தனையும் - அநிமிடன் கையிலிருந்த மேலான சிவலிங்கம், அங்கிருந்து வந்து அடையப்பெறும் அல்லமனையும்; அந்த விமல லிங்கமுடன் அடைந்த ஞானக் குரவனையும் - அந்த தூய இலிங்கத்துடன் அடைந்த அநிமிடனாகிய ஞானக் குரவனையும்; கந்தமலர் நல்வனமுடையான் கண்டு - மணமுடைய பூக்களைப் பெற்றிருக்கும் நல்ல நந்தவனத்தையுடைய கொக்கிதேவன் பார்த்து; மகிழ்வுற்று - உவகையடைந்து; இவர் பெருமை - இவ்விருவரின் பெருமை; சந்தமறைதேர் நான்முகனும் சாற்றற்கு அரிது என்று அறைகுவான் - இசை அமைப்புகளைப் பெற்ற வேதங்களை ஆராயும், பிரமனாலும் சொல்லுதற்கு அரிது என்று கருதிக் கொண்டு மேலும் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிபு - வனமுடையான், அல்லமன்தனையும், ஞானக்குரவனையும் கண்டு மகிழ்வுற்று, இவர் பெருமை நான் முகனும் சாற்றற்கரிது என்று அறைகுவான்.

615. நின்னால் கண்டேன் சிவலிங்க
நிஷ்டை ஞான யோகிதனை
முன்னாள் கருமம் அனைத்தும்இனி
முடித்தேன் ஞானநிலை நின்றேன்
உன்னால் செய்யப் படும்உதவிக்
குதவி வேறு நெடுந்தகாய்
என்னால் செய்வ தொன்றுளதோ
எழிலிக் குதவியார் செய்வார் 25

Koviloor Digital Library

(இ.ள்) சிவலிங்க நிஷ்டை ஞானயோகிதனை நின்னால் கண்டேன் - சிவலிங்க நிட்டையைப் பெற்றிருக்கும் இந்த ஞான யோகியை உன்னாலலே நான் கண்டு கொண்டேன்; (கண்டு கொண்டதன் பயனாய்) முன்னாள் கருமம் அனைத்தும் இனி முடித்தேன் ஞான நிலை நின்றேன் - யான்முன் நாள் செய்த சஞ்சித வினைகள் எல்லா வற்றையும் இப்பொழுது முடிவுறச் செய்தேன், அறிவுநிலையில் நின்றேன்; உன்னால் செய்யப்படும் உதவிக்கு, வேறு உதவி, நெடுந்தகாய் என்னால் செய்வது ஒன்று உளதோ - பெரிய தகுதி வாய்ந்த அல்லமதேவனே! உன்னால் எனக்குச் செய்யப்படும் உதவிக்கு, என்னால் வேறு உதவி செய்வது ஒன்று உளதோ; (இல்லை என்பது கருத்து) எழிலிக்கு உதவி யார் செய்வார் - கைமாறு கருதாமல் மழையைப் பெய்யும் மேகத்திற்கு உதவி செய்பவர் உலகத்தில் யார் உள்? (ஒருவருமில்லை என்பது கருத்து) (எ.று)

முடிபு - நெடுந்தகாய்! யோகித்னை நின்னால் கண்டேன். முன்னால் கருமம் அனைத்தும் இனி முடித்தேன், ஞானநிலையில் நின்றே உன்னால் செய்யப்படும் உதவிக்கு வேறு உதவி என்னால் செய்வது ஒன்று உளதோ? எழிலிக்கு உதவி யார் செய்வார். கருமம் முடித்தேன் ஞானநிலை நின்றேன் என்பதற்கு கர்மயோக நிலையை முடித்துக் கொண்ட, ஞான யோக நிலைக்கு வந்து விட்டேன் என்று பொருள் கூறினும் அமையும். நந்தவனம் வைத்தமை எல்லாம் கர்மயோக நிலை அதிலிருந்து மாறி அல்லமேன் உபதேசித்த ஞானயோக நிலைக்கு வந்துவிட்டேன் என்பதைக் கருத்தாகக் கொள்க. இரண்டாம் உரைமாகிய இதுவே தக்கதாகும்,

616. [1]ஐய நினையும் நின்கரத்தில்
அடைந்த சிவலிங் கத்தினையும்
பொய்யில் குரவன் தனையுமொரு
பொருளென் றறிந்தேன், இன்றுஎன்று
செய்ய கமலத் திருவடியில்
சென்று தொழுதல் லமநாம
மெய்யன் எதிர்நின் றன்பினால்
விளம்பும் வனங்கா வலனன்றே 26

Koviloor Digital Library

(பா.ம்) [1]அய்ய

(இ.ள்) வனங்காவலன் - நந்தவனத்தைப் பாதுகாக்கும் கொக்கி தேவனானவன்; ஐய! நினையும், நின்கரத்தில் அடைந்த சிவலிங் கத்தினையும், பொய்யில் குரவன் தனையும் - ஐயனே அல்லமனாகிய உன்னையும், உன் கையில் வந்தடைந்த அநிமிட வனுடைய சிவலிங்கத்தினையும், பொய்மை இல்லாத அநிமிடனாகிய குருவையும்; இன்று ஓர் பொருள் என்று அறிந்தேன் என்று - இப்பொழுது வெவ்வேறு பொருளாகக் கருதாமல், சிவமாகிய ஒரு பொருளாகவே கருதினேன் என்று கூறி; செய்ய கமலத் திருவடியில் சென்று தொழுது - சிவந்த தாமரை போன்ற, அல்லமனுடைய திருவடியின் கண்ணே வணக்கம் செய்து; அல்லம நாம மெய்யன்எதிர் நின்று விளம்பும் - அல்லமன் என்னும் பெயரையுடைய, மெய்ப்பொருளாய் நிற்பவன் எதிர் நின்று, தன் மனத்து எழுந்த அன்பினால் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிபு - வனங்காவலன், ஐய! நினையும், கரத்தினடைந்த சிவலிங்கத்தினையும், பொய்யில் குரவன்தனையும் ஒரு பொருள் என்று இன்று அறிந்தேன் என்று கூறிவிட்டு கமலத்திருவடியில் சென்று தொழுது, அல்லமநாம மெய்யன் எதிர்நின்று, அன்பினால் விளம்பும்.

கொக்கி தேவன் கூறுவது

617. என்னை அறிவித் ததுபோலிவ்
இஷ்டலிங்கம் அகம்புறமும்
மன்னி இருக்கும் நெறியினைநின்
மலர்த்தாள் பரவும் அடியார்க்குப்
பன்னி உணர்த்தி சரமாகி பாரில்
சரிப்பாய் எனத் தொழுதான்
தன்னில் நிலத்தில் நரரெல்லாம்
தகும்பே ரின்பம்பெற நினைத்தான் 27

(இ.ள்) தன்னில் நிலத்தில் நரர் எல்லாம் தகும் பேர் இன்பம் பெற நினைந்தான் - தன்னைப் போல நில உலகத்தின்கண், மக்களெல்லாம் தக்க பேரின்பத்தை பெற வேண்டும் என்று கருதியவனாகிய கொக்கிதேவன்; (அல்லமதேவனை நோக்கி) என்னை அறிவித்தது போல் - எனக்கு நீ உணர்த்தியதைப் போல; இவ் இட்டலிங்கம் அகம் புறமும் மன்னி இருக்கும் நெறியினை - வழிபடுகின்ற இவ்விட்ட லிங்கம், அகத்திலும், புறத்திலும் நிலைபெற்றிருக்கும் முறையினை;

Koviloor Digital Library

நின்மலர்த்தாள் பரவும் அடியார்க்குப் பன்னி உணர்த்தி - உன்னுடைய தாமரை மலர் போன்ற திருவடியை வணங்குகின்ற, அடியவர்க் கெல்லாம் விளங்கக்கூறி; சரமாகி - சரமூர்த்தியாகி; பாரில் சரிப்பாய் எனத் தொழுதான் - உலகில் சஞ்சரிப்பாயாக என்று வணங்கினான். (எ.று)

முடிபு - பேரின்பம் பெற நினைந்தான், (அல்லமனை நோக்கி) என்னை அறிவித்ததுபோல, இவ்விட்டலிங்கம், அகத்திலும், புறத்திலும் மன்னி இருக்கும் நெறியினைப் பரவும் அடியார்க்குணர்த்தி - சரமாகி பாரில் சரிப்பாய் எனத் தொழுதான். என்னை உணர்த்து என்பதற்கு - என்னை இன்னபொருள் என்று அறிதல் எனவும் பொருள் கொள்ளலாம். ''என்னையறிதல், தனையறிதல்'' வீரசைவ தத்துவ ஞானிகள் திரம்-சரம்-பரம் என மூவகையினர் ஆவர். இருந்த இடத்திலேயே இருந்து உபதேசிப்பவர் திரம் என்று கூறப்பெறுவர். அவ்வாறின்றி, உலகத்தில் இயங்கி அங்கே உள்ளவர்கட்கு உபதேசிப்பார் சரமூர்த்தி யாவர். இவ்விருவருக்கும் உயர்ந்த நிலையில் உள்ளார்பரம் என்று கூறப் பெறுவர். இவற்றை சித்தாந்த சிகாமணியில் சுயத்தலம். சரத்தலம், பரத்தலம் என்னும் தலங்களைப் படித்து அறிந்து கொள்க. நினைந்தான் என்பது வினையாலணையும் பெயர், என்னை என்பதில் ஐகாரத்தை நான்காம் வேற்றுமை உருபாகிய -குவாகத் திரித்துக்கொள்க. இட்டலிங்கம். அகத்திலும், புறத்திலும் விளங்கும் என்ற செய்தியை இந்நூலில் இட்டலிங்க கதியில் 16ம் பாடலாக அறிக.

618. கொக்கி தேவன் இரந்தமொழி
கொண்டு கிளரல் லமதேவன்
தக்க பெரியோர் தமக்கியல்பு
தாம்பெற் றுள்ள பேறெல்லாம்
மிக்க வுலகம் பெறுகவென வேண்டிக்
[1]கோடல் எனப் புகழ்ந்து
செக்கர் மலர்ப்பூங் கைகளால் தீண்டித்
தழுவி அருள் செய்தான் 28

(பா.ம்) [1]கொண்டல்

(இ.ள்) கிளர் அல்லம தேவன் கொக்கிதேவன் இரந்த மொழி கொண்டு - மிக்க அல்லமதேவன் என்பான், கொக்கிதேவன் தாழ்ந்து கேட்டுக் கொண்ட மொழியினை ஏற்றுக்கொண்டு; தக்க பெரியோர்

Koviloor Digital Library

தமக்கு இயல்பு தாம் பெற்றுள்ள பேறு எல்லாம் மிக்க உலகம் பெறுக - என வேண்டிகோடல் எனப் புகழ்ந்து - தகுதிவாய்ந்த பெரியோருடைய இயல்பாவது தாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்று வேண்டிக்கோடலாகும் என்று புகழ்ந்து கூறி பெரிய உலக மக்கள் பெறுவாராக என வேண்டிக் கொள்ளுதலாகும் என்று கொக்கி தேவரை புகழ்ந்து கூறி; செக்கர் மலர்ப் பூம்கைகளால் தீண்டித்தழுவி அருள் செய்தான் - அல்லமதேவன், செந்தாமரை போன்ற கைகளால் கொக்கி தேவரைத் தொட்டு தழுவி அருள்புரிந்தான்.

முடிபு - அல்லமதேவன் கொக்கி தேவர் இரந்தமொழி கொண்ட பெரியோர் தமக்கு இயல்பு, தாம் பெற்றுள்ள பெயரெல்லாம் உலகம் பெறுக. என வேண்டிக் கோடலாம் எனப் புகழ்ந்து கைகளால் தீண்டித்தழுவி அருள் செய்தான்.

கொக்கிதேவன் இலிங்க நிட்டையில் இருந்த நிலை

619. **அங்கைச் சிவலிங் கத்தினிடை**
அமைத்த நோக்கு நெஞ்சகமும்
தங்கச் சிவயோ கத்தினையே
சார்ந்தங் இருந்தான் ஓவியம்போல்
மங்கைக் கிடந்தந் தருளினோன்
மலர்த்தாட் கிடுபூ வனமாக்கிப்
பொங்கப் புரந்த தவத்தான்
மெய்ப் பொருளாசிரியன் கண்ணுற்றான் 29

(இ.ள்) மங்கைக்கு இடம் தந்து அருளினோன் மலர்தாட்கு இடு பூவனம் ஆக்கி - உமாதேவிக்கு இடப்பாகத்தைத் தந்து அருளிய சிவபெருமானுடைய, மலர் போன்ற திருவடிக்கு அணியும் பூக்களைத் தரும் நந்தவனத்தை உண்டாக்கி; பொங்கப்புரந்த தவத்தான் - பொலிவு அடையுமாறு பாதுகாத்து வந்த சிவபுண்ணியத்தால்; மெய்ப்பொருள் ஆசிரியன் கண்ணுற்றான் - உண்மைப் பொருளை அறிவுறுத்தும், அல்லம தேவனாகிய ஆசிரியனை கண்டு அருள்பெற்ற கொக்கிதேவன்; அங்கை சிவலிங்கத்தினிடை - உள்ளங்கையில் எழுந்தருளி இருக்கும் இட்டலிங்கத்தின்கண்; அமைத்த நோக்கும், நெஞ்சகமும் தங்க - பொருந்திய கண்ணும், மனமும் தங்க; சிவயோகத்தினையே சார்ந்து ஓவியம் போலிருந்தான் - சிவயோகத்தையே அடைந்து சித்திரம்போல் அசைவற்று இருந்தான். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - மெய்ப்பொருள் ஆசிரியனைக் கண்ணுற்றறானாகிய கொக்கி தேவன், சிவலிங்கத்தினிடை, நோக்கும் நெஞ்சகமும் தங்க, சிவ யோகத்தி னையே சார்ந்து ஓவியம் போலிருந்தான்.

620. **அடியர் வேண்டிற் றேபுரியும் அல்ல மப்பேர் எம்பெருமான்**
நெடிய விழிகள் அருள்சுரப்ப நிமல லிங்கம் கரத்தேந்திப்
படியில் அரிய தவம் செய்யும் பத்தர் உள்ளம் களிகூர
வடிய இளமாத் தழைப்பவரும் மந்தா நிலம்போல்
சரிக்கின்றான் 30

(இ.ள்) அடியர் வேண்டிற்றே புரியும் அல்லமப்பேர் எம் பெருமான் - தொண்டர்கள் விரும்பியதையே கொடுக்கின்ற அல்லமன் என்னும் பெயரையுடைய எம்முடைய பெருந்தகை; நெடிய விழிகள் அருள்சுரப்ப - அகன்ற கண்களிலே அருள் தோன்ற; நிமலலிங்கம் கரத்தேந்தி - குற்றமற்ற சிவலிங்கத்தை தன்னுடைய கையிலே ஏந்திக் கொண்டு, படியில் அரிய தவம் செய்யும் பத்தர் உள்ளம் களிகூர - நில உலகத்திலே, செய்தற்கரிய தவத்தைச் செய்யும், அன்பருடைய மனம் எல்லாம் களிப்படைய; வடிய இளமாத்தழைப்பவரும் மந்தாநிலம்போல் சரிக்கின்றான் - வடிவழகினையுடைய இளைய மாஞ்சோலைகள் தளிர் விட்டுத் தழைக்குமாறு வரும் தென்றல் காற்றைப்போல், சரமூர்த்திகள் என்னும் பெயருக்கிணங்க சஞ்சரிக்கின்றான். (எ.று)

முடிபு - அல்லமப் பேர் எம்பெருமான், விழிகள் அருள்சுரப்ப லிங்கம் கரத் தேந்தி, பத்தர் உள்ளம் களி கூர, மாதழைக்க வரும் மந்தா நிலம் போல் சரிக்கின்றான்.

பதினோராவது
கொக்கிதேவர் கதி முற்றிற்று

Koviloor Digital Library

பன்னிரண்டாவது
முத்தாயி அம்மை கதி

(கன்னட பிரபுலிங்க லீலை முத்தாயி அக்கினிகே உபதேச என்று கூறும்)

கதி நுதலியது

வேறு

621. கண்டிலேனச கண்ணனை என்றஞர்
கொண்டு வாடும் கொடியிடை யாள்துயர்
விண்டு போக விரைந்துவந் தல்லமன்
பண்டு கூறும் பரிசு விளம்புவாம் 1

(இ.ள்) அச கண்ணனைக் கண்டிலேன் - அசகண்ணன் என்ற பெயருடைய என் உடன்பிறந்தானை (அவன் இறந்து பட்டமையால்) யான் கண்டிலேன்; என்று அஞர் கொண்டு வாடும் கொடியிடையாள் துயர்விண்டு போக - என்று கூறி புலம்பி துன்பம் அடைந்து வாட்டமுற்று நிற்கும் கொடி போன்ற இடையையுடைய முத்தாயி அம்மையினுடைய துன்பம் நீங்கிப் போகுமாறு; அல்லமன் விரைந்து வந்து பண்டுகூறும் பரிசு விளம்புவாம் - அல்லமதேவன் தானே அவளிடம் வந்து (அவளுடைய துன்பம் நீங்கும்படி) பழமையான மெய்ப்பொருளை உபதேசித்த செய்தியை இக்கதியில் கூறுவாம். (எ.று)

முடிபு - அச கண்ணனை கண்டிலேன் என்று அஞர் கொண்டு வாடும் கொடியிடையாள் துயர் விண்டுபோக அல்லமன் விரைந்து வந்து, பண்டு கூறும் பரிசை யாம் விளம்புவாம். பண்டு என்பது பழமை என்று பொருள் பட்டு பழமையான மெய்ப் பொருளை உணர்த்திற்று.

622. பொடிய ணிந்தெழில் பொங்குறும் அல்லமன்
அடியர் தங்கள் அகத்தின் துயரினை
உடை இழந்த ஒருவன் கரமெனக்
கடித டைந்து களைந்தருள் செய்யுநாள் 2

(இ.ள்) பொடி அணிந்து எழில் பொங்குறும் அல்லமன் - திருநீற்றை முறைப்படி அணிந்து கொண்டு, அதனால் அழகு மிகுந்து விளங்கும் அல்லம தேவன்; அடியர் தங்கள் அகத்தின் துயரினை - தொண்டராகிய அவர்களுடைய மனத்தில் தோன்றிய துன்பத்தை; உடை இழந்த ஒருவன் கரம் என - உடுத்திய உடுக்கையை இழந்துவிட்ட ஒருவனது கைகள்,

Koviloor Digital Library

விரைந்து உதவுவது போல; கடிது அடைந்து களைந்து அருள் செய்யும் நாள் - விரைந்து அவரிடம் வந்து அவர் துன்பங்களை நீக்கி மேலும் அருள் உபதேசங்களைச் செய்து கொண்டிருக்கும் காலங்களுள் ஒரு நாள், (எ.று)

முடிபு - அல்லமன் அடியர் துயரினை உடையிழந்த ஒருவன் கரமென, கடிது அடைந்து, களைந்து அருள் செய்யும் நாளில்,

உடுக்கையிழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (குறள்-788)

அல்லமன் அடியர் துயரினை அறிந்து கடிது அடைந்து அருள் செய்தலுக்கு உடையிழந்த ஒருவன் கரம் உவமையாயிற்று, இது தொழில் உவமை. மேற்கூறிய உடுக்கை இழந்த ஒருவன் கை போல என்ற 788ஆம் குறளை உட்கொண்டு கூறியது.

அசகண்ணன் முத்தியடைந்ததை நோக்காது உடன் பிறந்தாள் வருந்துதல்

623. மறைத்தி இருந்த மலிசிவ பத்தியைப்
புறத்த றிந்த பொழுதே உடம்பினை
வெறுத்த கன்று வெளியு ருஆயினான்
அறுத்த பந்த அசகணன் என்பவே 3

(இ.ள்) அறுத்தபந்த அசகணன் - பாச கட்டுகளை எல்லாம் அறுத்து நீக்கிக் கொண்ட அசகணன் என்பவன்; மறைத்து இருந்த மலிசிவ பத்தியை புறத்து அறிந்த பொழுதே - இதுவரை மறைக்கப் பட்டிருந்த மிக்கசிவ பக்தியினை வெளிப்பட அறிந்து மேற்கொண்ட காலத்தி லேயே; உடம்பினை வெறுத்து அகன்று வெளிஉரு ஆயினான் - ஐங்கோச வடிவாகிய உடம்பினை வெறுப்புற்று நீங்கி, சிதாகாச வெளியோடு கலந்துவிட்டான்; என்பவே - என்று அறிஞர் கூறுவர். (எ.று)

முடிபு - அசகணன், சிவபத்தியை அறிந்தபொழுதே, உடம்பினை வெறுத்து அகன்று வெளியுருவாயினான். கன்னட பிரபுலிங்க லீலை இப்பத்தியை, ''குப்தபக்தி'' என்று கூறும். நாரத பக்தி சூத்திரம் 11 பக்தி களைக் குறிப்பிட்டுக் கூறுகின்றது. அவற்றுள் இது ''தன்மையதாசக்தி'' என்னும் பத்தி ஆகும். தன்மையதா சக்தி என்பது, ''தத் என்கின்ற பிரம்ம மயமாக ஆகி விடுதல்'' இதை கன்னடப் பிரபு லிங்க லீலை. இலிங்க ஐக்கியம் என்று கூறும். பரசிவம் - பிரமம் -இலிங்கம் என்பன ஒரு

Koviloor Digital Library

பொருள் சொற்கள் ஆதலின் லிங்க ஐக்கியம் என்றால் பிரமத்தோடு ஒன்றுபட்டான் என்பது பொருள். **இலிங்க ஐக்கியம் என்ற சொல்லை சிவப்பிரகாச சுவாமிகள் வெளியுரு ஆயினான் என்று மொழி பெயர்த்துள்ளார்கள்.** கன்னடப் பிரபு லிங்க லீலை கூறிய குப்த பக்தியை இவர் ''மறைத்திருந்த மலிசிவ பத்தி'' என்றும், இலிங்க ஐக்கிய மாயினான்'' என்பதை வெளியுரு வாயினான்'' என்று கூறுகின்றார்கள். எனவே இலிங்கம் என்பது பரசிவ வெளியாயிற்று.

இதுவுமது

624. **அறைந்த தூயவன் அங்க உபாதிபோய்**
நிறைந்த நீர்மை நினைந்திலள் போய்உயிர்
இறந்து போயினன் என்னத் தளர்ந்துடன்
பிறந்த மாது பெரிதுளம் மாழ்கியே 4

(இ.ள்) உடன்பிறந்த மாது - அச கண்ணனுடன் பிறந்த முத்தாயி அம்மை; அறைந்த தூயவன் அங்க உபாதிபோய் நிறைந்த நீர்மை நினைந்திலள் - மேலே கூறிய குற்றமற்றவனாகிய அசகண்ணன், உடம்பால் பற்றப் பட்டிருக்கும் நிலைமை நீங்கி சிதாகாச வெளியில் சென்று கலந்துள்ள தன்மையைக் கருதிலள்; உயிர் போய் இறந்து போயினன் என்ன உளம் தளர்ந்து பெரிது மாழ்கி - மூச்சுக்காற்று உடலைவிட்டு நீங்க, அதனால், ஏனைய மக்களைப்போல இவனும் இறந்து போயினன் என்று கருதி மனம் தளர்ந்து மிகவும் மயங்கி, (எ.று)

முடிபு - உடன் பிறந்த மாது, தூயவன், அங்கஉபாதிபோய் நிறைந்த நீர்மையை நினைந்திலள், உயிர்போய் இறந்து போயினன் என்ன, உள்ளம் தளர்ந்து பெரிதுமாழ்கி அங்க உபாதி - ஆன்மா உடம்பால் சூழப்பட்டிருக்கும் நிலை. ஆகாயத்தை குடம் சூழப்பட்டிருந்தால், அதைக் குடாகாயம் என்று கூறுதல் போல.

அல்லமனை முத்தாயியம்மை கண்டு அழுதல்

625. **புலம்பி நைந்திருக் கின்றவப் போதினில்**
இலிங்க முங்கர முந்திகழ் வெய்துற
நலங்கொள் அல்லமன் நண்ணினன் [1]நண்ணலும்
கலங்கி நின்றவக் காரிகை கண்டனள் 5

(பா.ம்) [1]நண்ணவும்

(இ.ள்) புலம்பி நைந்து இருக்கின்ற அப்போதினில் - (உடன்பிறந்த

Koviloor Digital Library

மாது) அழுது மனம் மெலிந்து இருக்கும் அக்காலத்திலே; நலம்கொள் அல்லமன் இலிங்கமும் கரமும் திகழ்வெய்துற நண்ணினன் - நன்மை ஒன்றையே கொள்ளும் அல்லமதேவன் இட்டலிங்கமும், அதைத் தாங்கு கின்ற கையும் விளங்கும்படி அவ்விடத்து அடைந்தான்; நண்ணலும், கலங்கி நின்ற அக்காரிகை கண்டனள் - அல்லமன் அடையவும் கலக்க முற்றிருந்த முத்தாயி, அல்லமனைக் கண்டனள். (எ.று)

முடிபு -உடன் பிறந்த மாது, உளம் தளர்ந்து மாழ்கி, புலம்பி நைந்து இருக்கின்ற அப்போதினில், அல்லமன், இலிங்கமும் கரமும் திகழ் வெய்துற நண்ணினன், நண்ணலும் அக்காரிகை கண்டனள்.

626. **கண்ட போதச கண்ணனைக் காண்கிலாள்**
கொண்ட பீழை குறைய அழுதடிப்
புண்ட ரீகப் புதுமலர் வீழ்ந்துகண்
மண்டு நீருக வாய்விட் டரற்றினாள் 6

(இ.ள்) கண்டபோது - அல்லமனைக் கண்டபோது; அசகண்ண னைக் காண்கிலாள் கொண்ட பீழை குறைய - அசகண்ணனைக் காணாதவளாகிய முத்தாயி, தான் அடைந்த துன்பம் குறையுமாறு; அழுது அடிப்புண்டரீகப் புதுமலர் வீழ்ந்து, கண்மண்டு நீர் உகவாய் விட்டு அரற்றினாள் - புலம்பி அல்லமதேவரது திருவடித் தாமரை என்றும் புதுமலரில் விழுந்து, விழியில் பெருகும் துன்பநீர் சித்த வாய்விட்டு பலவாறு புலம்பினாள். (எ.று)

முடிபு - (அல்லமனைக்) கண்டபோது, அசகண்ணனைக் காண்கி லாள், பீழைகுறைய அழுது, அடிமலர் வீழ்ந்து, கண்ணில் நீர்உக வாய்விட்டு அரற்றினாள். அடிப்புண்டரீகப் புதுமலர் என்பது உருவகம்.

627. **பாவியேன்முகம் பார்க்கவொண் ணாதென**
ஆவி யாமச கண்ணன் அகன்றுசெய்
நோவ லாமிவண் ணூக்க அருளினால்
மேவி னாயென மீண்டும் வணங்கினாள் 7

(இ.ள்) ஆவியாம் அசகண்ணன் - உயிர் போன்ற என் உடன் பிறந்தவனாகிய அசகண்ணன்; பாவியேன் முகம் பார்க்க ஒண்ணாது என அகன்று செய்நோவலாம் - பாவியாகிய என் முகத்தைப் பார்க்கக் கூடாது எனக் கருதி, என்னை விட்டு அகன்று செய்த பிரிவுத் துன்பம் எல்லாம்; இவண் நூக்க - இப்பொழுது போக்குவதற்காக; அருளினால் மேவினாய்

Koviloor Digital Library

என மீண்டும் வணங்கினாள் - உன் திருவருளினாலே, என்னிடம் பொருந்தினாய் என்று திரும்பவும் வணங்கினாள். (எ.று)

முடிபு - அசகண்ணன், பாவியேன் முகம் பார்க்க ஒண்ணாதென, அகன்று செய்நோவலாம், நூக்க அருளினால் இவண் மேவினாய் என மீண்டும் வணங்கினாள்.

முத்தாயிக்கு அல்லமன் உபதேசித்தது

628. வணங்கும் மாதின் மலர்முகம் நோக்கி யே
அணங்க னாய்நல் லசகணன் தன்மையை
உணர்ந்தி டாமல் உளைதல் உணர்வுளார்க்கு
இணங்கு றாததென் எந்தை இயம்புவான் 8

(இ.ள்) எந்தை வணங்கும் மாதின் மலர்முகம் நோக்கியே - எம் தந்தையாகிய அல்லமதேவன், தன்னை வணங்கும், முத்தாயி அம்மையின் மலர் போன்ற முகத்தைப் பார்த்து; அணங்கனாய்! நல் அசகணன் தன்மையை உணர்ந்திடாமல் உளைதல் - தெய்வப் பெண் போன்றவளே! நல்ல அச கண்ணனுடைய இயல்பை நீ தெரிந்து கொள்ளாமல் அவன் இறந்து போனான் என்று வருந்துதல்; உணர்வு உளார்க்கு இணங்குறாதது என்று இயம்புவான் - அறிவுள்ளவர்க்குப் பொருந்தாது என்று கூறி மேலும் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிபு - எந்தை, மாதின் முகம் நோக்கி, அணங்கனாய்! அசகணன் தன்மையை உணர்ந்திடாமல், உளைதலானது, உணர்வுளார்க்கு இணங்குறாதது என்று இயம்புவான்.

இதுவும் அது

629. அழிவி லானை அழிந்தனன் என்றுநீ
விழியி னால்மிகு வெள்ளம் பெருக்கினை
கழிவி லாதஆ காயம் கழிந்ததென் (று)
ஒழிவி லாமல் உளமெலி வார்கள்போல் 9

(இ.ள்) கழிவுஇலாத ஆகாயம் கழிந்தது என்று, ஒழிவு இலாமல் உளம் மெலிவார்கள் போல் - நீங்காத வானம் நீங்கிற்று என்று எண்ணிக்கொண்டு ஓயாமல் மனம் வருந்துபவர்களைப் போல; நீ அழிவிலானை அழிந்தனன் என்று விழியினால் மிகுவெள்ளம் பெருக்கினை - முத்தாயியே நீ! அழிவில்லாத அசகண்ணனை அழிந்து விட்டான் என்று கருதிக்கொண்டு உன்னுடைய கண்ணினால் துன்பக் கண்ணீராகிய வெள்ளத்தைப் பெருகச் செய்தாய். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - ஆகாயம் கழிந்தது என்று உளம் மெலிவார்கள் போல் நீ! அழிவிலானை அழிந்தான் என்று, விழியினால் மிகு வெள்ளம் பெருக்கினை. அசகண்ணனுடைய ஆன்மா! ஆகாயம் போன்றது, ஆகாயம் என்றும் அழியாததைப் போல், அசகண்ணனுடைய ஆன்மாவும் என்றும் அழியாதது என்பது கருத்து. எனவே அழியும் தன்மையுடைய அவரது உடம்பைக் கருதி நீவருந்துகின்றாய். அழியும் பொருள் இது. அழியாப் பொருள் இது என்று நீ உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதாயிற்று.

இதுவும் அது

630. **சச்சி தானந்த சங்கரன் ஆகவே**
அச்சம் நீங்குபு தன்னை அறிந்தவன்
துச்ச மாந்துயர் தோன்மலி யாக்கையை
இச்சி யானதை யானென எண்ணியே

(இ.ள்) தன்னை சச்சிதானந்த சங்கரன் ஆகவே அச்சம் நீங்குபு அறிந்தவன் - ஆன்மாவாகிய தன்னை, சத்து சித்து ஆனந்த வடிவாகிய, சிவமாகவே ஆராய்ச்சியால் அறிந்தவன். ஐயம் திரிபு என்னும், அச்சஉணர்ச்சி நீங்கும்படி அறிந்தவனாகிய ஒருவன்; துச்சமாம் துயர் தோல்மலி யாக்கையாகிய அதை - இழிவாகிய துன்பத்தைத் தரும் தோல் மிகுந்த உடம்பாகி அதனை; யான் என எண்ணி இச்சியான் - ஆன்மாவாகிய யான் என்று கருதி அதை விரும்பமாட்டான். (எ.று)

ஏ - ஈற்று அசை.

முடிபு - தன்னை சங்கரனாகவே அறிந்தவன், யாக்கையாகிய அதை, யான் என எண்ணி இச்சியான். அறிவில்லாத மக்கள் உடம்பினையே நான் என்று கருதுகின்றனர். அறிவில் சிறந்த மக்கள் ஆராய்ந்து அனித்தியமான உடம்பை நீக்கிவிட்டு நித்தியமாகிய ஆன்மாவையே நான் என்று கருதுகின்றனர். இக்கருத்தை,

நானென உடலைத்தானே நம்பினேன் அநேக சன்மம்
ஈனராய்ப் பெரியோராகி யிருந்தவை யெலாமிப் போது
கானலில் வெள்ளம் போலக் கண்டு சற்குருவினாலே
நானென என்னைத் தானே நம்பியீ டேறி னேனே

(கை வல்லிய நவநீதம் 174)

இக்கருத்தினையே மாணிக்க வாசகர் உயிருண்ணிப் பத்தில் ''எனை நானென்பதறியேன்'' என்று கூறுவதையும் இதனோடு ஒப்பு

Koviloor Digital Library

நோக்குக.சங்காரச்சாரியாரும், மனம்-புத்தி-சித்தம்-அகங்காரம் ஆகிய இவை நான் அல்லேன். மெய், வாய், கண், மூக்குச் செவி என்னும் ஐம்பொறிக்களும் நான் அல்லேன் ஆகாயம் முதலான ஐம்பூதங்களும் நான் அல்லேன். நான் யார் எனில், சித்து ஆனந்த வடிவாய் இருக்கின்ற சிவமே நானாக இருக்கிறேன். ஆகையினால் சிவோகம். சிவோகம் என்பர்.

மனோ புத்திய ஹங்கார சித்தானி நாஹம் (நானில்லை); நசக்ரோத் ரஜிஹ் வே நச கராண நேத்ரே!; நா + அகம் - நாஹம்.; ந ச வ்யோம பூமிர்ந தேஜோ நவாயு: சிதா னந்தரூப: சிவாஹேம் சிவாஹேம். மனம் - புத்தி அஹங்காரம் சித்தம் நான் அல்லன், கேட்பதும் சுவைப்பதும் மோப்பதும், பார்ப்பதும் எனக்கு இல்லை. ஆகாசம் - பூமி - அக்னி - வாயு நான் அல்லன். சிதானந்த ரூபமாகிய சிவம் நான், சிவம் நான். அழிவுடைப் பொருளில் அழிவில்லாத பொருள் குடி கொண்டிருக்கிறது. அழிவுடைப் பொருள், தோல்மலி யாக்கையாகிய மாயேயப் பொருள். அழிவில்லாத பொருள். ஆன்மாவும், பரமான் மாவும் ஆகிய இரண்டு பொருள்களும். ஆன்மா துச்சமாம் தோல் மலியாக்கையைக் கருதாமல், சச்சிதானந்த சிவமாகிய பரமான்மாவையே. நான் எனக் கருதி வாழவேண்டும். அச்சிவம் ஆகாயத்தைப்போல் அழிவற்றது.

இதுவும் அது

631. ஒண்த ரைக்கண் [1]ஒழிவில் அருள்உருக்
கொண்ட டுத்த குருவரு ளால்தனைக்
கண்ட மெய்த்தவன் காயம் தனைஅனம்
உண்ட நெட்டிலை ஒப்ப விடுப்பனால் 11

(பா.ம்) [1]ஒடிவில்

(இ.ள்) ஒண்தரைக் கண் - அறிவுடைய நிலவுலகத்தின் கண்; ஒழிவுஇல் அருள் உருக் கொண்டு அடுத்த குரு அருளால் - நீங்குதல் இல்லாத அருளே உடம்பாகக் கொண்ட உபதேசிக்க வந்த குருவின் திருவருளால்; தனைக் கண்ட மெய்த்தவன் - ஆன்மாவாகிய தன்னை இன்ன தலைமையன் என்று அறிந்து கொண்ட உண்மையான தவமுடை யோன்; காயம்தனை - இவ் உடம்பை; அன்னம் உண்ட நெட்டிலை ஒப்ப விருப்பனால் - சோற்றை படைத்து உண்ட நீண்ட இலையை, உண்டபின் நீக்கி விடுதல் போல, (பற்றற்று நீக்கி விடுவான்) (எ.று) உடம்பின் மேல் பற்று இல்லாமல் விட்டுவிடுவான் ஆல் - அசை

Koviloor Digital Library

முடிபு - தரைக்கண் குருவருளால், தனைக் கண்டதவன், காயம் தனை அன்னம் உண்ட நெட்டிலை ஒப்ப விடுப்பன். எனவே, உடம் பினாலே அடைய வேண்டிய பயனைப் பெற்றுக் கொண்டு அதன்பின் அதன்மேல் அன்பு செய்யார் அறிஞர் என்பது கருத்து.

632. படியில் வந்த பரம குரவனால்
தடைய றும்படி தன்னை அறிந்தவன்
உடல்வி டும்பொழுது ஒன்றொரு மண்மயக்
கடம் உடைந்தஆ காயம் நிகர்ப்பனால் 12

(இ.ள்) படியில் வந்த - இந்நிலவுலகத்தின்கண் உபதேசிக்க வந்த; பரமகுரவனால் - மேன்மையான ஞானாசிரியனால்; தடை அறும்படித் தன்னை அறிந்தவன் - ஐயம், திரிபு என்னும் தடைகள் நீங்க, உண்மை அறிவினாலே தன்னை அறிந்து கொண்டவன்; உடல்விடும் பொழுது - அவனது ஐங்கோச உடம்பு நீங்கும் பொழுது; மண்மயக் கடம் உடைந்த ஆகாயம் நிகர்ப்பனால் - முற்றிலும் மண்ணாலே ஆகிய குடம், முற்றிலும் உடைந்தபொழுது, குடத்தினால் சூழப்பட்ட ஆகாயம், உபாதி நீங்கி, பெரிய ஆகாயத்துடன் கூடினால் போல, இவன் சிவமாவான் என்க, (எ.று)

முடிபு - குரவனால் தன்னை அறிந்தவன், உடல் விடும்பொழுது, கடம் உடைந்த ஆகாயத்தை நிகர்ப்பன்.

இக்கருத்தை,

கடமெனு முபாதி போனாற் ககனமொன் றானாற் போல
உடலெனு முபாதி போன வுத்தரஞ் சீவன் முத்தர்
அடிமுடி நடுவு மின்றி யகம் புற மின்றி நின்ற
படிதிகழ் விதேகமுத்திப் பதமடைந் திருப்ப ரென்றும்
(106)

கைவல்ய நவநீதம் தத்துவ விளக்கப் பாடலால் உணர்க. ஆனால், சதமணி மாலைப் பாடல் இக்கருத்தை வேறு விதமாய்க் கூறும். கடம் உடைந்தவுடன், கடத்திலிருந்த விளக்கின் ஒளி, சுற்றிலும் விளங்குதல் போல, ஞானியின் உடல் அழிந்துவிட்டால், அவரது ஆன்ம ஒளி சுற்றிலும் விளங்கும் என்று கூறுகின்றது.

உடைந்திட உறுகடம் உள்ளி ருந்தொளி
விடுஞ்சுடர் எங்கணும் விளங்கு மாறுபோல்

Koviloor Digital Library

நெடுந்தகைப் பெறுமுடல் நீங்க எங்கும் எவ்
இடங்களும் ஒளிரும் ஆன்மாநின் றென்பவே

எனவே தன்னை அறிந்த ஞானிகள் உடல்விட்டபின் ஆகாயம் (சதமணி மாலை 97) போல் உலகெங்கும் அவர்கள் நிறைந்து, உலக மக்களுக்கு அருள் செய்வார் என்பது கருத்து.

633. **பந்த பாசம் முழுதும் [1]பரிந்திட**
நந்தும் ஓர்சிவ ஞானி நரர்வினை
சிந்து மாறு செறிந்த உடம்புதான்
வெந்த தூசின் விழிஎதிர் தோன்றுமே 13

(பா.ம்) [1]பறந்திட; பறிந்திட

(இ.ள்) பந்த பாசம் முழுதும் பரிந்திட நந்தும் ஓர் சிவ ஞானி - கட்டிய பாசங்கள் முழுதும் கட்டவிழ்ந்துவிட (அதனால்) ஆக்கமுற்று விளங்கும் ஒப்பற்ற சிவஞானியினுடைய; நரர்வினை சிந்துமாறு செறிந்த உடம்புதான் - உலக மக்கள் எல்லாம் தரிசித்து தங்கள் வினைகள் கெடுவதற்குக் காரணமாயிருக்கின்ற சிவன் முத்தி உடம்புதான்; வெந்த தூசின் விழி எதிர் தோன்றும் - நெருப்பிலே முற்றிலும் வெந்த ஆடை உருக்குலையாமல் காட்சிதருதல் போல்; அருள்செய்வதற்காக, மக்கள் விழிக்கு முன்னால் அவ்வுடல் தோன்றும் (எ.று)

முடிபு - பாசம் பரிந்திட, நந்தும் ஓர் சிவஞானியினுடைய உடம்பு நரர்வினை சிந்துமாறு செறிந்த உடம்புதான் வெந்த தூசினைப் போல் விழி எதிர் தோன்றும். (ஏகாரம் - ஈற்றசை) வெந்த தூசை, வடநூலார் தக்த படம் என்பர். (தகிக்கப்பட்ட ஆடை) மேல் பாட்டு, தன்னை அறிந்த ஞானிகள் உடல்வடினை (விதேக முக்தி அடையின்) அவர்களுடைய ஆன்மா கடம் உடைந்தவுடன் கடாகாயம், பெரிய ஆகாயத்தில் கூடி செயல்படுவது போல சிவத்தொடு கூடி விளங்கும் இப்பாட்டு. பந்தபாசம் முற்றும் கெட, ஜீவன் முத்தி பெற்ற ஞானிகளின் உடம்பு, வெந்ததூசைப் போல, உலக மக்களுக்கு முன்னாலே காட்சி தந்து, அவர்கள் தரிசித்து தங்களது தீவினைகள் போக்கிக் கொள்வதற்குக் காரணமாக விளங்கும். இதை சித்தாந்த சிகாமணி ''காயானுக்கிரகம்'' என்று கூறும்.

அண்ணலாகிய பரசிவன் வடிவு கொண்டடுத்திங்
கெண்ணி லாவுயிரியாவையு மளித்திடு மியல்போன்

Koviloor Digital Library

மண்ணில் யோகியும் வடிவொடு மருவியா வரையு
நண்ணியே அழித்திடுபவனாமென நவில்வார்
(காயாநுக்கிரகத்தலம் 2ம் பாட்டு)

634. யாவும் ஆகி இருக்கும் சிவத்தொடு
மேவும் ஞான விழியுடை யான்தனக் (கு)
ஓவும் ஆறில் உறவு பகைஎனும்
பாவ மோவிலை என்றறி பாவையே 14

(இ.ள்) பாவையே - பாவை போன்ற முத்தாயியே!; யாவும் ஆகி இருக்கும் சிவத்தொடு - எல்லாப் பொருளும் ஆகி வியாபித்திருக்கும் சிவம் என்னும் ஒரு பொருளோடு; மேவும் ஞான விழியுடையான் தனக்கு - இடையறாமல் பொருந்தி இருக்கும், ஞான நாட்டம் பெற்றவனுக்கு; ஓவும் ஆறுஇல் உறவு பகை எனும் பாவமோஇலை என்று அறி - நீங்கும் நெறிஇல்லாத, நட்பு பகை என்னும் இரட்டை எண்ணங்களே உண்டாகாது என்பதை நீ அறிவாயாக. (எ.று)

முடிபு - சிவத்தொடு மேவும் ஞான விழியுடையான் தனக்கு - உறவு பகை எனும் பாவமோஇலை என்று அறி. சீதம்-உஷ்ணம், இன்பம்-துன்பம், மானம்-அவமானம், உறவு-பகை, என்று இப்படி இரட்டையாய் தோன்றுபவைகட்கு, ''துவந்துவம்'' என்று பெயர். ஞானநாட்டத்தால் சிவம் என்னும் ஒரே பொருளையே நோக்கி இருப்பார்க்கு இரட்டை எண்ணங்களாகிய துவந்துவம் தோன்றாது, ''துவந்துவங்கள் தூய்மை செய்து'' என்னும் திருவாசக அடிகளால் அறிக. சிவனையே நோக்கி இருக்கும் ஞானவிழியுடையாருடைய இயல்பை,

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

என்று சேக்கிழார் பெருமான் கூறுதலைக் காண்க. மேற்கண்ட பாட்டில், கும்பிடலே என்று உடல்வினை கூறியதால், வாய், மனத்தின் வினைகளாகிய, உரைத்தலே அன்றி, நினைத்தலையே அன்றி எனவும் பொருள் கொள்க.

635. யாக்கை தாமென் றிருந்தழி கின்றவர்
[1]ஆக்கி லாஅறி வாகி உடம்பொடு

Koviloor Digital Library

தாக்கி லாதவர் தம்மையுந் தாமென
நோக்கு வாரவர் உண்மையை நோக்குறார் 15

(பா.ம்) [1]ஊக்கிலா அறிவாகி

(இ.ள்) யாக்கை தாம் என்று இருந்து அழிகின்றவர் - உடம்பே தாம் என்று கருதிக் கொண்டு, அவ்எண்ணத்திலேயே நிலைபெற்றிருந்து அழிந்து போகின்ற ஒருவர்; ஆக்கிலா அறிவு ஆகி உடம்பொடு, தாக்கு இலாதவர் தம்மையும் தாம் என நோக்குவார் - ஒருவரால் படைக்கப்படாத அறிவு என்னும் சிவமாகி, உடம்பினுடன் பற்று இல்லாமல் ஒழுகும் ஞானிகளையும், உடம்பிலே பற்றுடைய தம்மைப்போலவே கருதிக் கொள்வார்கள்; அவர் உண்மையை நோக்குறார் - அந்த ஞானிகளுடைய உண்மைத் தன்மையை (உடம்பிலே பற்றுடையவர்) கருதி உணர மாட்டார்கள். (எ.று)

முடிபு - யாக்கை தாம் என்று இருந்து அறிகின்றவர், அறிவாகி உடம்பொடு தாக்கிலாதவர் தம்மையும், தான் என நோக்குவார். அவர் உண்மையை நோக்கிகுறார். அவர் உண்மை என்பது - அறிவுப் பொருளாகிய சிவமாகி, உடம்பொடு தாக்கில்லாமல் ஒழுகும் ஒழுக்கம். ஆக்கிலா அழிவு என்பது அறிவுப் பொருளாகிய சிவத்தை உணர்த்துகின்றது. (உலோகாயதர்கள்) உடம்பையே தானாகக் கருதி ஒழுகும் உலோகாயதர் அவ்வாறு ஒழுகாத ஞானிகளையும், தம்மைப் போலக் கருதிக் கொள்வார்கள். உலோகாயதர் உடம்பையே கருதி சிவமாகிய செம்பொருளைக் கருதாதவர்கள். ஞானிகள் - சிவத்தையே கருதி உடம்பை உறுதிப் பொருளாகக் கருதாதவர்கள்.

636. கூத்தன் நாடக கோல நடிப்பினைப்
பார்த்து வாய்மையென்று எண்ணிலர் பாருளார்
ஏத்து ஞானிதன் யாக்கை நடிப்பினை
ஓர்த்து மாதவர் உண்மைஎன்று உன்னுறார் 16

(இ.ள்) பாருளார் - உலக மக்கள்; கூத்தன் நாடகக் கோல நடிப் பினைப் பார்த்து - கூத்தாடுபவர் புனைந்துரையாகிய நாடக வழக்கைக் கருதி, வேடம் கொண்டு நடிக்கும் நடிப்பைப் பார்த்து, வாய்மை என்று எண்ணிலர் - இந்நிகழ்ச்சி உண்மை வழக்காகிய நிகழ்ச்சி என்று கருத மாட்டார்கள்; அஃதே போல் மாதவர் - பெரிய அறிஞரும், ஏத்து ஞானி தன் யாக்கை நடிப்பினை ஓர்த்து உண்மை என்று உன்னுறார் - வணங்கப்படும் ஞானியினுடைய உடல் நடிப்பைக் கருதிப் பார்த்து இந்த

Koviloor Digital Library

நடிப்பு உண்மை என்று கருதமாட்டார்கள். (எ.று)

முடிபு - பாருளார் கூத்தன் நாடக நடிப்பினைப் பார்த்து வாய்மை என்று எண்ணிலர். அஃதே போல் மாதவர் ஞானிதன் யாக்கை நடிப்பினை ஓர்த்து உண்மை என்று உன்னுறார். இப்பாட்டு எடுத்துக்காட்டு உவமையணி. ஞானிகள், 'மாதவம் செயினும் செய்வார் வாணிகம் செயினும் செய்வார். பூதலம் புரப்பர் ஐயம் புகுந்துண்பர் சீவன் முத்தர்' என்ற கைவல்யப் பாட்டின்படி, பேத கன்மத்தால் வந்து பிராரத்த வசத்தால் பலவாறு நடித்து ஒழுகுவார்கள். இத்தகையவர்களை மாதவரே அறியத்தக்கவர்கள். (ஏனையோர் அறியார்)

637. **அறிந்தி டாமல் அசகணன் தன்மையை**
இறந்து ளானென் றிரங்கினை அன்னைநீ
மறந்தி டாயிம் மதியென் றணல்சொல
நிறைந்த ஞானமுத் தாயி நிகழ்த்துவாள் 17

(இ.ள்) அன்னை நீ அறிந்திடாமல் அசகணன் தன்மையை - அம்மையே! நீ ஞானியாகிய அசகணனது தன்மையை, அறிந்து, கொள்ளாமல்; இறந்துளான் என்று இரங்கினை - (பந்தப்பட்டு உழலும் உலக மக்களைப் போல) இவனும் இறந்துவிட்டான் என்று நீ இரக்கப்படுகின்றாய்; இம்மதி மறந்திடாய் என்று அணல்சொல - இவ்வாறு கருதிக் கொண்டிருக்கின்ற உன் அறிவை, மறந்துவிடுவாயாக, என்று அல்லம தேவர் கூற; நிறைந்த ஞான முத்தாயி நிகழ்த்துவாள் - ஞானம் நிறைந்த முத்தாயி அம்மை, அல்லமருக்கு பதில் சொல்லத் தொடங்கினாள். (எ.று)

முடிபு - அண்ணல், அன்னைநீ அசகணன் தன்னை அறிந்திடாமல் இரங்கினை. இம்மதி மறந்திடாய் என்று சொல்ல, முத்தாயி நிகழ்த்துவாள்.

638. **அரவின் காலர வன்றி அறிபவர்**
தரையின் இல்லை அசகணன் தன்னைநீ
தெரியின் அன்றி [1]சிறியள் அறிவலோ
பெரும! யான்செய் பிழைபொறுப் பாயென்று 18

(பா.ம்) [1]சிறியன் அறிவலோ

(இ.ள்) பெரும - பெருமானே!; அரவின் கால் அரவு அன்றி அறிபவர் தரையில் இல்லை - பாம்பின் காலைப் பாம்பு அறியுமே அன்றி அதனை அறிந்து கொள்ளுபவர், உலகத்தில் வேறு யாருமில்லை;

Koviloor Digital Library

(அதுபோல்) அசகணன் தன்னைநீ தெரியின் அன்றி சிறியன் அறிவலோ - ஞானியாகிய அசகணனுடைய இயல்பை நீ அறிந்து கொள்வதன்றி சிறியவளாகிய நான் அறிந்து கொள்வேனோ; யான் செய் பிழை பொறுப்பாய் என்று - அசகணன் தன்மையை அறியாது, யான் கருதிய பிழையை நீ பொறுத்துக் கொள்வாய் என்று கூறி. (எ.று)

முடிபு - பெரும! அரவின் கால் அரவன்றி அறிபவர் தரையில் இல்லை. (அதுபோல) அசகணன் தன்னை நீ தெரியின் அன்றி சிறியள் அறிவளோ (அறியாமல்) யான் செய் பிழையைப் பொறுப்பாய் என்று. இப்பாட்டும் எடுத்துக்காட்டுவமை அணியாகும். பாம்பின்கால் பாம்பு அறியும் என்னும் பழமொழி இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது. அசகண்ணன் என்பது அசகணன் என இடைக்குறையாயிற்று.

வேறு

639. பங்கன் இருந்த பதிக்கருள் செய்து
கங்கை அடைந்த கணக்கென என்பால்
இங்குற வந்தனை எம்குடி உள்ளார்
தங்கள் தவம்தரு தன்மையில் [1]என்று 19

(பா.ம்) [1]என்றும்

(இ.ள்) கங்கை, பங்கன் இருந்த பதிக்கு அருள் செய்து அடைந்த கணக்கு என - தெய்வத்தன்மை வாய்ந்த கங்கையாறு, முடவன் இருந்த ஊருக்கு அருள்கூர்ந்து வந்து சேர்ந்த முறையைப் போல்; எம்குடி உள்ளார் தங்கள் தவம்தரு தன்மையால் - எங்கள் குடியிலே தோன்றியவர்கள் செய்த தவப்பேற்றின் இயல்பால்; என்பால் இங்குற வந்தனை என்று - என்னிடத்திலே இங்குப் பொருந்த எழுந்தருளினாய் என்று கூறி. (எ.று)

முடிபு - கங்கை, பங்கன் இருந்த பதிக்கு, அருள் செய்து அடைந்த கணக்கு என, என்பால் இங்குற வந்தனை, (நீ வந்து) எங்குடியுள்ளார் தவம் தரு தன்மையில் என்று, பங்கன் - (பழுதுபட்டவன், ஆகவே கைகால் முதலிய உறுப்புகள் பழுதுபட்ட முடவனாயிற்று). முடவன் இருந்த ஊருக்குக் கங்கை வந்தாற்போல், முத்தாயி இருந்த இடத்திற்கு அல்லமதேவர் வந்தமை உவமையாயிற்று. இது தொழிலுவமை. முடவன் இருந்த ஊருக்கு கங்கை வந்தாற்போல என்பது பழமொழி.

640. வந்தனை செய்து வழுத்திமுன் நின்று
பந்தம் அகன்ற பதம்பெறும் வண்ணம்

Koviloor Digital Library

எந்தை இயம்பி எனக்கருள் செய்யென் (று)
அந்த மடந்தை அறைந்தனள் அன்றே 20

(இ.ள்) அந்த மடந்தை - அந்த முத்தாயி அம்மை; வந்தனை செய்த வழுத்தி முன்நின்று - வழிபாடு செய்து துதித்து அல்லமதேவரின் முன்னே பணிவோடு நின்று; எந்தை - ஞானத்தந்தையே!; பந்தம் அகன்ற பதம் பெறும் வண்ணம் இயம்பி - பாசக்கட்டு நீங்கிய, வீடு பேறாகிய பதத்தை, யான் பெறும்படி உபதேசித்து; எனக்கு அருள்செய் என்று அறைந்தனள் - அடியவளாகிய எனக்கு திருவருள் செயலைக் செய்வாயாக என்று கூறினாள். (எ.று)

முடிபு - அந்த மடந்தை, வந்தனை செய்து, வழுத்தி, நின்று, (எ.று) பதம்பெறும் வண்ணம் இயம்பி, எந்தையே! எனக்கு அருள்செய் என்று அறைந்தனள். பந்தம் அகன்ற பதம் என்றது சாயுக்கியமாகிய வீடு பேற்றை, சுவர்க்கம் முதலியன பந்தம் உடைய பதமாகும். பந்தம் அகன்ற என்பது இனச்சுட்டுள்ள அடை, அருள் செய் என்றது ஞான தீட்சையைக் குறித்தது, (எனக்கு ஞான தீட்சை செய்யுங்கள் என்று வேண்டுகின்றாள்) அன்று ஏ. இவ்விரண்டும் அசை.

641. **தேசிகன் அல்லம தேவன் மகிழ்ந்து**
பாசம் அகன்று பரம்பொருள் காணும்
நேசம் அடைந்தனை நின்னை நிகர்ப்பார்
காசினி யின்மிசை கண்டிலம் என்று 21

(இ.ள்) தேசிகன் அல்லம தேவன் மகிழ்ந்து - (எனக்கு அருள் செய் என்று முத்தாயி கூறிய சொல்லைக் கேட்ட) ஞானாசிரியனாகிய அல்லமதேவன் (இவள் தன்பால் கேட்ட செய்தி நல்லது என்று கருதி) உவந்து; பாசம் அகன்று பரம்பொருள் காணும் நேசம் அடைந்தனை - பந்தம் நீங்கப்பெற்று, மேலான பொருளாகிய சிவத்தை, உணர்ந்து கொள்ளும் அன்பாகிய பக்குவ நிலையைப் பெற்றிருக் கின்றாய்; நின்னை நிகர்ப்பார் காசினியின் மிசை கண்டிலம் என்று - பக்குவத்தால் உன்னை ஒத்தவர்களை இவ்வுலகத்தின் கண் யாம் வேறு யாரையும் கண்டிலோம் என்று கூறி. (எ.று)

முடிபு - அல்லமதேவன், மகிழ்ந்து. பரம்பொருள் காணும் நேசம் அடைந்தனை, நின்னை நிகர்ப்பார் காசினியின் மிசை கண்டிலம் எனக்கூறி, மக்கள், கீழதாகிய மாயைக்கு அடங்கிய பொருள் களையே, பெற விரும்புவர், அவை, தனு-கரண-புவன- போகங்களாம். இவள்

Koviloor Digital Library

அவ்வாறு விரும்பாமல், மாயைக்கு மேலுள்ள பரம்பொருளை அடையவிரும்பினாள் ஆதலால், 'நின்னை நிகர்ப்பார் யாரும் இலை' என்று கூறினார். பகவத் கீதை, ''அட்சரம்பிரமம்பரம்'' என்று கூறும். ''அழியாத பிரமமே எல்லாவற்றிற்கும் மேலாயிருப்பது'' என்பது பொருளாம். பரம்பொருள் என்பதற்கு இவ்விளக்கம் பகவத்கீதையில் கூறப்பட்டுள்ளளது.

642. பிறப்பொரு கோடி பிறந்து பிறந்து
புறக்கரு மங்கள் புரிந்திடி னும்[1]போய்
மறப்புறும் ஆணவ வல்லிருள் இன்றிச்
சிறப்புறு முத்தி செறிந்திடு வாரோ 22

(பா.ம்) [1]பொய்

(இ.ள்) பிறப்பு ஒரு கோடி பிறந்து பிறந்து புறக் கருமங்கள் புரிந்திடினும் - மக்கள், கோடிக்கணக்கான மக்கள் பிறவியிலே பிறந்து பிறந்து, வீட்டு நெறிக்கு புறமாகிய, சரியை கிரியை என்னும் புறத்தொழில்கள் பலவற்றைச் செய்து வந்தாலும்; மறப்புறும் ஆணவ வல்லிருள் இன்றிப்போய் சிறப்புறு முத்தி செறிந்திடுவாரோ - மறைத்தலைச் செய்யும் ஆணவமாகிய வலிய இருளைக் கடந்து போய், சிறந்த வீடு பேற்றை அடைவார்களோ? (அடையமாட்டார்கள்) (எ.று)

முடிபு - மக்கள் ஒரு கோடி பிறப்பிலே பிறந்து பிறந்து புறக்கருமங்களைப் புரிந்திடினும், ஆணவ இருள் இன்றி போய் முத்தி செறிந்திடுவாரோ? (செறிந்திடார்) கருமசந்நியாசமே வீடு பேற்றிற்கு ஏது என்பதாம் (சந்நியாசம் - துறவு) கர்மம் என்பது வாக்கு-பாதம்-பாணி - பாயுரு-உபத்தம் என்னும் கர்மேந்திரியங்களால் செய்யப்படும் செயலாகும். இவற்றால் கர்மங்களையே செய்து கொண்டிருந்தால் ஞானத்திற்கு இடமில்லை. ஞானம் தோன்றாதாயின், ஆணவ மறைப்பு நீங்கி, வீடு பெற இயலாததாகும். ஆதலின், புறக்கருமங்கள் பல செய்யினும் பயனில்லை என்பதாயிற்று.

643. மரிப்பொ டுதிப்பு மறிக்குது மென்று
கருத்தை வெளிக்கரு மத்தின் விடுத்து
விரிக்குதல் நெய்யை விடுத்தெரி கின்ற
நெருப்பை அவிப்ப நினைப்பதை ஒக்கும் 23

(இ.ள்) மரிப்பொடு உதிப்பு மறிக்குதும் என்று - இறத்தல், பிறத்தல் என்னும் சம்சார நெறியை, தடுப்போம் என்று கருதிக் கொண்டு; கருத்தை

Koviloor Digital Library

வெளிக் கருமத்தின் விடுத்து விரிக்குதல் - (மனத்தை அடக்குடம் ।பயிற்சி செய்யாமல்) புறத்தேயுள்ள, பல செயல்களில் விடுத்து எண்ணத்தை விரிவு செய்தல்; நெய்யை விடுத்து, எரிகின்ற நெருப்பை அவிப்ப நினைப்பதை ஒக்கும் - எரிகின்ற தீயை, நெய்யை ஊற்றி, அவிப்பக் கருதுவது போன்றதாகும். (எ.று)

முடிபு - மரிப்பொடு உதிப்பு மறிக்குதும் (என்று கருதிக்கொண்டு) கருத்தை கருமத்தின் விடுத்து விரிக்குதல், நெய்யை விடுத்து, எரிகின்ற நெருப்பை அவிப்ப நினைப்பதை ஒக்கும். எனவே, அந்தக்கரண விருத்தியே இறத்தல் பிறத்தலுக்கு ஏதுவாகும். அந்தக்கரண நிவர்த்தியே, பிறவா நெறிக்கு ஏதுவாகும் என்று அறிக. ''மரணம், பிறப்பென்று இவை இரண்டின் மயக்கறுத்த கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பி'' என்னும் திருவாசக அடியினை ஒப்பிட்டு அறிக.

644. மட்டற ஓடும் மனத்தை நிறுத்திக்
கட்டுதல் வீடு விடுத்திடல் [1]கட்டென் (று)
ஒட்டிய பண்பின் உரைத்தல மப்பேர்க்
சிட்டன் அவட்கருள் செய்தனன் நன்றே 24

(பா.ம்) [1]கட்டன்று

(இ.ள்) அலமப் பேர் சிட்டன் - அல்லமன் என்னும் பெயரை யுடைய சிறந்தோன்; மட்டு அற ஓடும் மனத்தை நிறுத்திக் கட்டுதல் வீடு - தடையின்றி புலன்களில் ஓடுகின்ற மனத்தினை அவ்வாறு ஓடாமல் நிறுத்தித் தடை செய்தலே, வீடுபேறு என்றும்; விடுத்திடல் கட்டென்று - மனத்தைப் புலன்களில் விடுத்திடுதலே பந்தம் என்றும்; ஒட்டிய பண்பின் உரைத்து - பொருந்திய அநுபவப் பண்பாலே கூறி; அவட்கு நன்றே அருள் செய்தனன் - அம்முத்தாயிக்கு நல்லபொருளை உபதேசித்தனன். (எ.று)

முடிபு - அல்லமப் பேர் சிட்டனும், ஓடும் மனத்தை நிறுத்திக் கட்டுதல் வீடு என்றும், விடுத்திடல் கட்டு என்றும் பண்பின் உரைத்து அவளுக்கு நன்றை அருள் செய்தனன். கட்டென்று என்ற சொல்லில் உள்ள என்று என்னும் சொல்லுடன் எண்ணும்மையைச் சேர்த்துக் கொண்டும் அதனை வீடு என்பதனோடும் கூட்டிப்பொருள் கொள்க. வீடு என்றும், பந்தம் என்றும் பொருள் விரித்துக் கொள்ளவும்.

645. தத்துவம் முற்றும் மயக்குவ தள்ளி
மெய்த்த தனைப்பெற வேறு கொடுத்தான்

 Koviloor Digital Library

பொய்த்துறு குப்பை கிளைத்தொளி பொங்கும்
முத்தை அளித்தென முத்தை தனக்கு 25

(இ.ள்) பொய்த்த உறு குப்பை இளைத்து - பொய்த் தன்மை பொருந்திய பொருள் குவியல்களைக் கிளறி எடுத்து; ஒளி பொங்கும் முத்தை அளித்துஎன - ஒளிமிகுந்த குற்றம் இல்லாத முத்தை, அக்குவியலிலிருந்து எடுத்துக் கொடுத்தாற் போல; மயக்குவ தத்துவம் முற்றிலும் தள்ளி - ஆன்மாவாகிய தான் என்று மயக்கத்தைச் செய்யும் தத்துவப் பொருள்களை எல்லாம் நீக்கிவிட்டு, மெய்த்த தனைப் பெற - மெய்ப்பொருளாகிய ஆன்மாவாகிய தன்னையே தான் அறிந்து கொள்ளும்படி; முத்தை தனக்கு - முத்தாயி அம்மைக்கு, வேறு கொடுத்தான் - வேறுபாடு தோன்ற உணர்த்திக் காட்டினான் (எ.று)

முடிபு - அல்லம தேவன், குப்பையைக் கிளைத்து (அதிலிருந்து) ஒளி பொங்கு முத்தை அளித்தென, மயக்குவ தத்துவ முற்றும் தள்ளி, மெய்த்த தன்னைப் பெற முத்தை தனக்கு வேறு கொடுத்தான். அன்னமய கோசமாகிய தூல உடம்பு, பிராணமயகோசமாகிய மூச்சுக் காற்றும், கர்மேந்திரியங்களும், மனோமயகோசமாகிய மனமும், ஞானேந்திரி யங்களும், விஞ்ஞானமய கோசமாகிய புத்தியும், ஆனந்த மயகோச மாகிய அவித்தையும் ஆகிய இவைகளெல்லாம் ஆன்மா அல்ல. இவைகளுக்கு வேறாய், ஆன்மா உண்டென்று அறிந்து, அந்த ஆன்மா வுக்கு மேலாய், பாராமான்மா ஒன்று உண்டென்று அறிதலே தன்னை அறியும் நெறி: இப்படி அறிதலை மெய் கண்டார், ''தம்மை உணர்ந்து தமை உடைய தன் உணர்வார்'' என்பர். (சிவஞான போதம்)

முத்தாயி அம்மை கூறுவது

646. **வீடு விரும்பி வெறுத்திலன் மெய்யைத்**
தாள்தரும் ஒண்குர வன்றனை எங்கும்
நாடி உழன்றிலன் நானுய என்னைத்
தேடி அடைந்தருள் செய்தனை என்று 26

(இ.ள்) வீடு விரும்பி மெய்யை வெறுத்திலன் - (அல்லமதேவர் அருள்பெற்ற முத்தாயி அல்லமனை நோக்கி) முத்தியை விரும்பி உடம்பு முதலான பொருள்களை நான் துறந்தேன் அல்லேன்; தாள்தரும் ஒண்குரவன்தனை எங்கும் நாடி உழன்றிலன் - தன் திருவடியைத் தரும் ஞானத்தையுடைய குருவை, எவ்விடத்தும் தேடி அலைந்தேன் அல்லேன்; (அதற்கு மாறாக) நான் உய என்னைத் தேடி அடைந்து அருள்

Koviloor Digital Library

செய்தனை என்று - நான் ஞானம் அடைந்து பிழைக்க வேண்டி என்னைத் தேடி அடைந்து நீ அருள் செய்தனை என்று கூறி (எ.று)

முடிபு - வீட்டை விரும்பி மெய்யை வெறுத்திலன், குரவன் தனை எங்கும் நாடி உழன்றிலன். (ஆனால்) நான் உய், (நீ) என்னைத் தேடி அடைந்து அருள் செய்தனை என்று.

647. அல்லமன் என்னும் அருட்குர வன்றாள்
புல்லி வணங்குபு பொற்கொடி அன்னாள்
செல்லல் அகன்று சிதம்பரம் எய்தி
எல்லையில் இன்பொடு இருந்தனன் அம்மா 27

(இ.ள்) பொற்கொடி அன்னாள் - பொன்னால் இயன்ற கொடி போன்ற முத்தாயி; அல்லமன் என்னும் அருள்குரவன்தாள் புல்லி வணங்குபு - அல்லமன் என்னும் பெயரையுடைய அருளாசிரியன் திருவடியைப் பொருந்தி வணங்கி; செல்லல் அகன்று - உடன் பிறந்தா னாகிய அசகண்ணன் இறந்தான் என்று கருதிக் கொண்டிருந்ததனால் ஏற்பட்ட துன்பத்திலிருந்து நீங்கி; சிதம்பரம் எய்தி - சித் அம்பரம் என்னும் இலிங்க ஐக்கிய நிலையை உணர்ந்து; எல்லையில் இன்பொடு இருந்தனள் அம்மா - வரம்பற்ற இன்பத்தொடு, வைகி இருந்தாள். இது வியப்புக்குரிய செயலாகும். (எ.று)

முடிபு - பொற்கொடி அன்னாள், குரவன்தான் புல்லி வணங்குபு செல்லல் அகன்று சிதம்பரத்தை எய்தி இன்பொடு இருந்தனள் அம்மா, கன்னடப் பிரபுலிங்க லீலை முத்தாயி அம்மை. ''நித்தியா நந்த நிர்மல தனுவே தானாகி இருந்தாள்'' என்று கூறும். (சிதம்பரம் எய்தி என்பதற்கு)

பன்னிரண்டாவது
முத்தாயி அம்மை கதி முற்றிற்று

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 16233

Koviloor Digital Library

பதின்மூன்றாவது
சித்தராம ஐயருக்கு உபதேசித்த கதி

வேறு

கன்னடப்பிரபுலிங்க லீலை.சித்தராம நிகே உபதேச என்று கூறும். அந்நூலில் இது பத்தாவது கதி.

648. காமரு சித்த
ராமனி டத்தில்
போமணல் சொற்ற
சீர்மையு ரைப்பாம் 1

(இ.ள்) காமரு சித்த ராமனிடத்தில் -கர்மங்களில் விருப்பம் பொருந்திய,சித்தராமனிடத்திலே; போம் அணல் - அதைப் போக்குவதற் காகச் சென்ற அல்லமதேவர்; சொற்ற சீர்மை உரைப்பாம்- உபதேசித்த செய்தியைக் கூறு வாம். (எ.று)

முடிபு - சித்தராமனிடத்தில் போம்அண்ணல் சொற்ற சீர்மையை நாம் உரைப்பாம், காமம் என்ற சொல் காம் எனக்குறைந்து வந்தது. அச்சொல், சித்தராமன் விரும்பிச் செய்கின்ற கர்மங்களை உணர்த்திற்று. எனவே அவனுக்கு ஞானத்தில் விருப்பம் இல்லாமையும்,அதைப் போக்கவே ,அல்லம தேவர் அங்கு சென்று உபதேசித்தார் என்ற செய்தியும் கருதி உணர்க அண்ணல் என்ற சொல் அணல் எனத் தொகுத்தது, சொற்ற என்பது சொல் என்னும் வினையடியாகப் பிறந்த பெயரெச்சம், சீர்மை என்னும் பெயரோடு முடிந்தது,

649. செல்லல் களைந்து
நல்லறி வின்பம்
சொல்லுவன் என்னும்
அல்லமன் என்பான் 2

(இ.ள்) அல்லமன் என்பான்-அல்லமன் என்று சிறப்பித்துக்கூறும் ஞானாசிரியன்; செல்லல் களைந்து-(கருமயோகத்தையே புரிந்து வரும் சித்தராமனுடைய) துன்பச்செயலை நீக்கி; நல்லறிவு இன்பம் சொல்லுவன் என்னும்-நல்ல ஞானமாகிய இன்பச் செய்தியை அவனுக்குச் சொல்லுவேன் என்று கருதிக் கொண்டு. (எ.று)

Koviloor Digital Library

முடிபு -அல்லமன் என்பான்,செல்லலைக்களைந்து, இன்பம் சொல்லுவன் என்னும்.

650. கரும யோகமும்
கிரியை யாவையும்
மருவி ராமன்வாழ்
புரியை மேவினான் 3

(இ.ள்) கரும யோகமும்-சரியை என்னும் செயல்களோடு கூடியிருக்கும் கர்மயோகமும்; கிரியை யாவையும் - கடவுளைப் பூசிக்கும் செயலதாகிய கிரியா யோகமும்; மருவி ராமன் வாழ் புரியை மேவினான் - இந்த இரண்டையுமே பொருந்தி,சித்தராமன் வாழ்கின்ற சொன்னலாபுரம் என்னும் புரியை அல்லம தேவன்சென்று அடைந்தான். (எ.று)

முடிபு - கரும யோகமும் கிரியை யாவையும் மருவி. இராமன் வாழ்புரியை அல்லமன் மேவினான்.

சரியை

651. வாவி ஆலயம்
காவி ராமனாா்
ஏவ லாளா்செய்து
ஓவி லாமையை 4

(இ.ள்) இராமனாா் ஏவலாளா் =சித்தராமனுடைய தொண்டர்கள்; வாவி - தடாகங்களையும்; ஆலயம்-திருக்கோவில்களையும்; கா-நந்தன வனங்களையும்; செய்து-சரியைத் தொழிலாகிய இவற்றைச்செய்து; ஓவிலாமையை-ஒழிவில்லாமல் இவற்றைச் செய்து கொண்டிருப்பதை. (எ.று)

முடிபு-இராமனார் ஏவலாளர் வாவி,ஆலயம்,கா செய்து ஓவிலாமையை. வாவி-ஆலயம்-கா.இவற்றைச் செய்தல் சரியைத் தொழில்கள்.

652. பாா்த்தருள் அண்ணல்
மூத்த இராமன்
வாா்த்தை அறிந்த
[1]கூத்தினா் என்றே 5

(பா-ம்) [1]கூத்தினன்

Koviloor Digital Library

(இ.ள்) பார்த்தருள் அண்ணல்-தொண்டர்கள் செய்து கொண்டிருக்கும் சரியைத் தொழில்களைப் பார்த்த அல்லமதேவன்; மூத்த இராமன்-இத் தொண்டர்களுக் கெல்லாம் தலைவனாகிய சித்த ராமனுடைய; வார்த்தை அறிந்த கூத்தினர் என்றே- சித்தராமனுடைய ஆணையாகிய வார்த்தையை, ஏற்றுக்கொண்ட தொண்டர்கள் செய்யும் கூத்தாட்டமே இச் செயல்களாகும் என்று கருதிக்கொண்டு. (எ.று)

முடிபு - பார்த்த அண்ணல்,இராமன் வார்த்தை அறிந்த கூத்தினர் (இவர்)என்று.

653. **பேரறிவு [1]இன்னான்**
சார இருந்த
ஊரினும் இல்என்று
ஆர இகழ்ந்தே 6

(பா-ம்) [1]அன்னான்

(இ.ள்) பேரறிவு-பெரிய ஞானமானது; இன்னான் சார இருந்த ஊரினும் இல்-சரியை, கிரியைத் தொழில்களையே செய்யும் இச்சித்தராமனிருந்த பதிக்குப் பக்கத்து ஊர்களிலும் இல்லை; என்று ஆர இகழ்ந்தே-என்று நினைத்து மிகவும் இகழ்வாக எண்ணி. (எ.று)

முடிபு-அறிவு இன்னான் சார இருந்த ஊரினும் இல்லை என்று இகழ்ந்து, இன்னான் என்கின்ற சொல்-சித்தராமனுடைய பதியை உணர்த்திற்று பேரறிவு-சித்தராமனிருந்த ஊரிலே அன்றி,பக்கத்து ஊர்களிலும் (ஞானம்) இல்லை என்பது கருத்து. பேரறிவு என்பது, அத்தியாத்ம ஞானமாகிய சிவஞானத்தை அது எல்லா அறிவிலும் சிறந்ததாயின் பெரிய என்று அடைகொடுத்தார்.

654. **இல்லம் அகன்றிவ்**
அல்லல் அடைந்தான்
நல்ல பசும்பொன்
வல்லி உவந்தான் 7

(இ.ள்) இல்லம் அகன்றும்-இல்லற நெறியிலிருந்து விலகி; எல்லாக் கருமங்களையும் விடும் துறவு நிலை அடைந்தும்; இவ் அல்லல் அடைந்தான் =சரியை கிரியை என்னும் தொழில்களைச் செய்யும், இந்த துன்பச்செயலை மேற்கொண்டான்; நல்ல பசும்பொன் வல்லி உவந்தான் = மேலும் இத்தொழில்களைச் செய்வதற்காக, பொருளையும் விரும்பினான். (எ.று)

Koviloor Digital Library

முடிபு -இல்லம் அகன்றும்,இவ்வல்லல் அடைந்தான்,மேலும் பசும் பொன் வல்லியையும் உவந்தான். பசும்பொன் என்பது பொருளை, அதைப் பெண்ணாக உருவகித்து பசும் பொன் வல்லி எனக் கூறுகிறார். (பசும் பொன்னாகிய வல்லி) எனவிரிக்க. பசும்பொன் என்பது வல்லி என்பதைத் திருமகள் எனக் கூறினும் அமையும். துறவிகளுக்கு மண், பெண், பொன் என்கின்ற மூன்று பொருளிடத்தும் பற்று நீங்க வேண்டும்.இங்கு. சரியைகிரியை செய்வதற்காக,பொருளை வேண்டு தலின் இல்லமகன்றும் பசும்பொன் வல்லி உவந்தான் என்று கூறினார்.

655. என்று நினைந்து
நன்றுற வாவி
ஒன்றகழ் வார்பால்
சென்றிது சொல்வான் 8

(இ.ள்) என்று நினைந்து-அல்லமதேவன்,சித்தராமனது செயல் களை மேற்கூறியவாறு பலவகையாகக் கருதி; நன்றுஉற- சித்தராமன் நன்மை அடையவேண்டி; வாவி ஒன்று அகழ்வார் பால் சென்று இதுசொல்வான் - தடாகம் ஒன்றை தோண்டிக் கொண்டிருக்கும் ஏவலர்களிடம் சென்று;கீழே வரும் சொற்களைச் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிபு - என்று நினைந்து நன்றுற அகழ்வார் பால்சென்று இது கூறும்.

வேறு

656. ஒட்ட ராமன் உளத்தினில்
இட்டம் யாதுகொல் இத்தொழில்
முட்டி லாமல் முயன்றனன்
[1]கொட்டி வீழுமி குத்தல்போல் 9

(பா-ம்) [1]கொட்டில்

(இ.ள்) ஒட்டராமன் உளத்தினில் இட்டம் யாதுகொல்- ஒட்டர் களுக்குரிய இத்தொழிலைச் செய்யும்,இச்சித்த ராமனுடைய மனத்தின் விருப்பம் எதுவாயிருக்கும்?; கொட்டி வீழ்உமி குத்தல் போல்- நெல்லிலிருந்து நீக்கப்பட்ட உமியை திரும்பவும் கொட்டிக் குத்துதல் போல; இத்தொழில் முட்டிலாமல் முயன்றனன்-பயனற்ற இத்தொழில் களுக்கு,தடை ஏற்படாதவாறு முயன்று செய்த கொண்டே உள்ளான். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - வீழ்உமி கொட்டிக்குத்துதல் போல இத்தொழிலை முட்டிலாமல் முயன்றனன். இராமன் உளத்தில் இட்டம் யாதுகொல்? இவ்வாறு ஏவலர்களிடத்து வினாவினார். உமிக்குத்திக் கைசலித்தற்று'' என்ற பழமொழியினை இப்பாட்டில் எடுத்தாண்டுள்ளார் நெல்லைக் குத்தினால் அரிசியாகிய பயன் கிடைக்கும். உமியைக்குத்தின் எவ்வித பயனுமில்லை என்பது கருத்து.அதுபோல சித்தராமன் பயனற்ற செயலைச் செய்கின்றான் என்பது கருத்தாகும்.

657. **விழற்கி றைப்ப விடுத்தல்போல்**
தொழிற்குள் எய்த்துறு தொழில்நுமை
இழைக்க விட்டதென் என்றிடர்
ஒழிக்கல் உற்றவன் ஓதினான் 10

(இ.ள்) இடர் ஒழிக்கல் உற்றவன் = துன்பங்களை ஒழிக்கக்கருதிய அல்லமதேவன்;(வாவி தோண்டுபவரைப்பார்த்து) விழற்கு இறைப்ப விடுத்தல்போல் =நெல்லைப்போல் சிறந்த பயனைத் தறாத விழல் என்னும் புல்வகைக்கு நீர் இறைக்கும்படித் தம் தொண்டர்களை ஏவினால் போல; தொழிற்குள் எய்த்துறு தொழில் நுமை இழைக்கவிட்டது என் என்று ஓதினான் =செய்யும் தொழில்களுக்குள்,துன்பம்தரும் தொழிலாகிய இத்தொழிலினுள்,உங்களைப் பணி செய்யுமாறு நியமித்தது எப்பயன் கருதி என்று வினாவினான். (எ-று)

முடிபு- இடர் ஒழிக்கல் உற்றவன்;விழற்கிறைப்ப விடுத்தல் போல்,நுமைஇழைக்க விட்டது என், என்று ஓதினான். எவன் என்னும் வினா என் என்றாயிற்று, ''விழலுக்கு நீர் இறைத்தல்போல்'' என்ற பழமொழி இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது.

658. **சாந்தன் ஓதிய தாழ்மொழி**
காய்ந்த வேலிரு காதினும்
போந்த போன்று புகுந்தன,
மாந்தர் ஆகுலம் மன்னினார் 11

(இ.ள்) சாந்தன் ஓதிய தாழ்மொழி = மனத்தின்கண் சாந்தகுணத்தை வைத்துள்ள இவ்வல்லமதேவன் சொன்ன பணிவான சொற்கள்; காய்ந்த வேல் இருகாதினும் போந்த போன்று புகுந்தன = பழுக்கக் காய்ச்சிய வேல் இரண்டு காதின்கண்ணும் நுழைந்தாற்போல, நுழைந்தன; மாந்தர் ஆகுலம் மன்னினார் = கேட்ட,தடம் அகழும் ஏவலாளர் வருந்தம் அடைந்தனர். (எ-று)

Koviloor Digital Library

முடிபு - சாந்தன் ஓதிய மொழி,காய்ந்த வேல் இருகாதினும் போந்த போன்று புகுந்தன. மாந்தர் ஆகுலத்தை மன்னினார். அல்லமன் மொழி ஏவலர் காதில் காய்ந்தலைப் போல் புகுந்தன.என்பது தொழில் உவமையாகும், சாந்தகுணமுடையோன் சொன்ன பணிமொழி, மனப் பண்பில்லாத ஏவலர்கட்கு,காய்ந்த வேல் காதிலே புகுந்தாற்போல் இருந்தது என்றார்.

659. **அறம ழித்தனை அன்றியும்**
நெறிய றக்குரு நிந்தனை
பெறவு ரைத்தனை பித்தஎன்று
உறவு றுத்தனர் ஒட்டலர் 12

(இ.ள்) ஒட்டலர் -தடம் அகழும் ஒட்டர்கள்;(அல்லமரை நோக்கி) அறம் அழித்தனை = தடம் அகழும் அறச்செயலை அழிவுபடக் கூறினை; அன்றியும் = அதுஅல்லாமலும்; நெறிஅறக்குரு நிந்தனை பெற உரைத்தனை = முறைமை நீங்க,எங்கள் குருவாகிய சித்தராமனையும் பழிப்பினைப் பெறும்படி பழிச் சொற்களைக்கூறினாய் ; பித்தன் என்று உறவுறுத்தனர் = இதனாலே,மயக்க உணர்வுடைய பித்தனே நீ என்று கூறி மிகவும் சினந்தனர். (எ.று)

முடிபு - ஒட்டலர் நீ அறம் அழித்தனை. அன்றியும் குருநிந்தனை உரைத்தனை பித்த என்று உற உறுத்தனர்.,

660. **ஒட்டன் என்றனை உம்பரும்**
[1]சிட்டன் என்றுகொள் சித்தனைத்
துட்ட என்று [2]சுளித்தனர்
வெட்டி ருந்தடம் மேவினோர் 13

(பா-ம்) [1]சிட்டரென்றுகொள்; [2]சுளிந்தனர்

(இ,ள்) வெட்டு இரும்தடம் மேவினோர் =வெட்டப் படும் பெரிய தடாகத்தினுள் இருந்த ஒட்டர் எல்லாம்; உம்பரும் சிட்டன் என்று கொள் சித்தனை ஒட்டன் என்றனை = தேவர் எல்லோரும் சிறந்தோன் என்று கருதும் சித்தராமனை; ஒட்டராமன் என்று கூறினை; துட்ட என்று சுளித்தனர் = (ஆகையால்) நீதுட்டனை ஆவாய் என்றுகூறி சினந்தனர். (எ.று)

முடிபு -தடம்மேவினோர்,துட்ட,சித்தராமனை ஒட்டராமன் என்றனை.என்று சுளித்தனர்.

Koviloor Digital Library

வேறு

661. மெய்த்தடம் அகழ்பவர் [1]வினையை அன்றியே
சித்தர்தம் செயலொரு சிறிதும் இன்மையால்
[2]மத்தர்நும் குரவனை மண்ணில் நும்மினும்
உத்தம ஒட்டனென் றுரைத்தும் என்றனன் 14

(பா.ம்) [1]வினைமை; [2]மத்தநும்

(இ.ள்.) மெய் தடம் அகழ்பவர் வினையை அன்றியேசித்தர் தம் செயலொடு சிறிதும் இன்மையால் = உண்மையாக,தடாகத்தை தோண்டுபவர்களுடைய தொழிலை அன்றி, சித்தருக்குள்ள செயல்களுள் ஒருசிறுதொழிலும் இல்லாமையினாலே; மத்தர் நும் குரவனை =மயக்க உணர்வுடையவராகிய உங்கள் குருவை; மண்ணில் நும்மினும் உத்தம ஒட்டன் என்று உரைத்தும் = இந்நிலவுலகத்தில், உங்களைக்காட்டிலும், நல்ல ஒட்டன் என்று கூறினோம் என்று கூறினான் அல்லமதேவன், (எ.று)

முடிபு-தடம் அகழ்பவர் வினையை அன்றி சித்தர் செயல் ஒரு சிறிதும் இன்மையால்,நும்குரவனை நும்மினும் உத்தம ஒட்டன் என்று உரைத்தும் என்றனன்.

662. நிகழ்ந்துல கிடைநிலை நிற்கும் நல்லறம்
உகந்துசெய் பவன்றனை உம்ப னேயெனப்
புகழ்ந்தவர் புண்ணியர் பொறாமை யானிழித்(து)
இகழ்ந்தவர் நரகரென் றிசைப்பர் நல்லவர் 15

(இ,ள்) நல்லவர் =உலகத்தில் நல்லோர் எல்லோரும்; நிகழ்ந்து உலகிடை நிலைநிற்கும் நல் அறம் = உலகத்தினிடத்திலே விளங்கி; நிலையாகநிற்கும் நல்ல அறச்செயல்களை; உகந்து செய்பவன் தனை உம்பனே எனப் புகழ்ந்தவர் புண்ணியர் = உயர்வாகக் கருதி செய்கின்றவனை தெய்வப்பிறப்புடையான் என்று புகழ்ந்து கூறியவர்கள், புண்ணியமுடையோர் என்றும்; (அவ்வாறின்றி) பொறாமையால் இழித்து இகழ்ந்தவர் நரகர் என்றும் இசைப்பர்=அழுக்காறு காரணமாக அவ்வறச்செயல்களை இகழ்ச்சிசெய்து பேசுபவரை கீழ்மையோர் என்றும் கூறுவர். (எ-று)

முடிபு - நல்லவர் நல்லறம் செய்பவன்தனை உம்பனே எனப் புகழ்ந்தவர் புண்ணியர்என்றும்,பொறாமையால் இழித்து இகழ்ந்தவர்

Koviloor Digital Library

நரகர் என்றும் இசைப்பர். என்று என்ற சொல்லைப் பிரித்துப்புண்ணியர் என்பதோடும் கூட்டிக் கொள்க.

663. மறவினை யுடையரை மாற்றித் தூயநல்
அறவினை யுடையரை அறிந்திட் டன்னரோ(டு)
உறவினை அடைந்திலை ஒப்பக் கண்டறத்
துறவினை உளையென ஒட்டர் சொல்லினார் 16

(இ,ள்) ஒட்டர் - மேலும் அவ்ஒட்டர்கள்; (அல்லமனை நோக்கி) மறவினை யுடையரை மாற்றி = பாபச் செயல் செய்வாரோடு செய்யும் நட்பினை மாற்றி; தூய நல்அறவினை யுடையரை அறிந்திட்டு, அன்னரோடு உறவினை அடைந்திலை= புனிதமான நல்ல அறச்செயல் செய்பவரை ஆராய்ந்து அறிந்து கொண்டு,அத்தகையாரோடு நீ நட்புக் கொண்டாயல்லை; ஒப்பக் கண்டு = நல்வினை தீவினை என்ற இரண்டையும் ஒன்றாகக் கண்டு துறப்பவனா யிருந்தும்; அறத்துறவினை உளை எனச் சொல்லினார் =நல்லறத்தை மட்டும் துறந்து பேசுபவனாக நீ இருக்கின்றாய் என்று கூறினார். (எ.று)

முடிபு - ஒட்டர், மறவினை யுடையரை மாற்றி,அறவினையுடையரை அறிந்திட்டு,அன்னரோடு உறவினை அடைந்திலை. ஒப்பக்கண்டு அறத்துறவினை உளை எனச் சொல்லினார். ஒப்பக்கண்டு என்பதற்கு. மறவினை செய்வாரையும், அறவினை செய்வாரையும் ஒப்பக்கண்டு அறத்தையே துறந்து பேசுபவனாய் உள்ளாய் என்று கூறினும் அமையும்.

664. ஓங்கிரு வினைகளும் ஒப்பக் கண்டவர்
தாங்களென் றனையொரு தமரில் பேணுவர்
ஆங்கவை இரண்டையும் அடைந்து போயுழல்
நீங்கள்என் றனையுணர் நெறியிலீர் என்றான் 17

(இ.ள்) ஓங்கு இரு வினைகளும் ஒப்ப கண்டவர்தாங்கள் = மிகுந்துவரும் இருவினைகளையும், சமமாகக் கண்ட அவர்கள்; என்தனை ஒருதமரில் பேணுவர் = அல்லமதேவனாகிய என்னை ஒப்பற்ற உறவினரைப்போல ஏற்றுக்கொள்வார்கள்; ஆங்கவை இரண்டையும் அடைந்து போய் உழல் நீங்கள் = நல்வினை தீவினையாகிய இரண்டையும் செய்பவர்களாய் அவற்றின்கண் சென்று திரிபவராய் உள்ள நீங்கள்;என்றனை உணர்நெறியிலீர் என்றான் = என்னை அறிந்து ஒழுகும் வழியைப் பெறாதவர்களாய் உள்ளீர் என்று அல்லமதேவன் கூறினார். (எ-று)

Koviloor Digital Library

முடிபு - இருவினைகளும் ஒப்பக்கண்டவர், என்தனை தமரில் பேணுவர்; அவை இரண்டையும் அடைந்து போய்,ஆங்கு உழல் நீங்கள். என்றனை உணர்நெறியிலீர் என்றான்.

665. **எனக்கற வினையுமில் என்று கூறினாய்**
உனக்கொரு கதியிலென் றுண்மை கூறியே
சினத்தனர் நிலனகழ் சிறியர் யாவரும்
தனக்கிணை தானெனும் தம்பி ரானையே 18

(இ-ள்) நிலன் அகழ் சிறியர் யாவரும் = தடாகம் செய்வதற்கு நிலத்தைத் தோண்டிக் கொண்டிருக்கும் அச்சிறுதொழில் உடையோர் எல்லோரும்; தனக்கு இணைதான் எனும் தம்பிரானையே = தனக்கு வமைதானே எனும் அல்லமதேவனை; (நோக்கி) எனக்கு அறவினையும் இல் என்று கூறினாய்;உனக்கு ஒரு கதியும்இல் என்று உண்மைகூறியே சினத்தனர் =எனக்கு பாபவினையே அன்றி புண்ணிய வினையும் இல்லை என்று நீ கூறினாய் (அப்படியானால்) உனக்கு கதியாகிய சுவர்க்கமும் இல்லை என்று உண்மையைக் கூறி வைது வெகுண்டார்கள். (எ.று)

முடிபு - சிறியர் யாவரும்,தம்பிரானையே,அறவினை இல் என்று கூறினாய்,உனக்கு ஒருகதியும் இல்லை என்று உண்மை கூறியே சினத்தனர். சினந்தனர் என்னும் சொல் சினத்தனர் என்று விகார மாயிற்று. உனக்குப்புண்ணியம் இல்லையானால்,சொர்க்கமும் கிடையாது என்று உண்மையே கூறிவைத்தான்.

666. **முற்றிய கல்வியில் முடர் நீவிர்நும்**
கற்றறி [1]மூடனுக் கறைமின் அன்னவன்
உற்றனன் எனில் அவனுணர்வும்,சொல்லினால்
இற்றென உணர்வமென் றெந்தை கூறினான் 19

(பா-ம்) [1]மூடனைக் கரைமன்

(இ.ள்) முற்றிய கல்வியில் மூடர் நீவிர் நும் கற்று அறிமூடனுக்கு அறைமின் = முழுமையான கல்வி இல்லாத மூடராகிய நீங்கள் உங்களுடைய கற்றறிமூடனாகிய சித்தராமனுக்கு இச்செய்தியை சென்று கூறுங்கள்; அன்னவன் உற்றனன் எனில்=அச்சித்தராமன் என்முன் அடைந்தானே ஆனால்; அவன் உணர்வும் = அன்னவன் அறிவையும்; சொல்லினால் இற்றென உணர்வம் என்று எந்தைகூறினான்=அவன் என்னிடம் பேசும் மொழியினாலே, அவன் அறிவு இன்னதன்மை

Koviloor Digital Library

யுடையது என்பதை நாம் உணர்ந்து கொள்வோம் என்று அல்லமதேவர் கூறினார் (எ.று)

முடிபு - கல்வி இல்லாத மூடராகிய நீவிர், நும்கற்றறி மூடனுக்கு அறைமின். அன்னவன் உற்றனன் எனில், அவன் உணர்வும். சொல்லி னால் உணர்வம் என்று எந்தை கூறினான். முற்றிய என்பதற்கு - முழுமை என்பது பொருள். படிக்காத மூடராகிய நீங்கள் படித்த மூடனாகிய உம் குரவனுக்குச் சொல்லுமின் என்பது கருத்து.

667. சேடனும் புகழ்வுறும் சித்த ராமனை
மூடனென் றுரைத்தஅம் மொழிக யந்[1]தொடாத்
தோள்தரும் கொட்டினோர் சீற்றத் துப்பெனும்
நீடுவெந் தழல்சொரி நெய்நி கர்த்ததால் 20

(பா.ம்) [1]தொடத்

(இ.ள்) சேடனும் புகழ்வுறும் சித்தராமனை மூடன் என்று உரைத்த அம்மொழி - கல்வி அறிவில் சிறந்த ஆதிசேடனும் புகழும் சித்தராமனை, கற்றறி மூடன் என்று சொன்ன அச் சொல்; கயம் தொடா தோள் தரும் கொட்டினோர் - தடாகத்தை தோண்டி, அதற்காகத் தோளிலே சுமக்கும் மண்வெட்டியையுடைய ஒட்டர்களுடைய; சீற்றத்துப்பெனும் நீடு வெந்தழல் - கோப வலிமை என்கின்ற மிக்க நெருப்பில்; சொரி நெய் நிகர்த்ததால் - ஊற்றிய நெய்யை ஒத்தது (எ.று) ஆல் - அசை

முடிபு - சித்தராமனை மூடன் என்று உரைத்த அம்மொழி கொட்டினோர் சீற்றமாகிய தழல் என்னும் உருவகத்தோடு கூடி மொழி நெய் நிகர்த்தது என்ற உவமை வந்துள்ளது.

சீற்றங்கொண்ட ஒட்டர்தம் செயல்

668. இறுக்கினர் அழுக்குடை எயிறு மென்றனர்
உறுக்கினர் அதிர்த்தனர் உயிர்த்து மீசையை
முறுக்கினர் நகைத்தனர் முருட்டுக் கைகளால்
[1]பொறுக்கினர் சிலைகளைப் பெருஞ் சினத்தராய் 21

(பா-ம்) [1]பெறுக்கினர்

(இ.ள்) அழுக்கு உடை இறுக்கினர் = அழுக்கு அடைந்த தம் ஆடையை இறுக்கிக் கட்டிக் கொண்டனர்;(வரிந்து கட்டிக் கொண்டனர்) எயிறு மென்றனர் = பல்லைக்கடித்தனர்; உறுக்கினர் அதிர்த்தனர் =மிகவும் கூச்சலிட்டனர்; உயிர்த்து=பெருமூச்சுவிட்டு; மீசையை முறுக்கினர் = தம்

Koviloor Digital Library

மீசையை முறுக்கிக்கொண்டனர்; நகைத்தனர் = இகழ்ந்து சிரித்தனர்; பெரும் சினத்தராய் முருட்டுக் கைகளால் சிலைகளைப் பொறுக்கினர் = பெரும் வெகுளியை உடைய வராய், தங்கள் வலிய கைகளால், கற்களைப் பொறுக்கிக் கொண்டனர் (எ.று)

முடிபு - தோள்தரு கொட்டினோர், சினத்தராய், இறுக்கினர், மென்றனர், அதிர்த்தனர், உயிர்த்து மீசையை முறுக்கினர்; நகைத்தனர்; கைகளால் சிலைகளைப் பொறுக்கினர். உறு என்னும் உரிச் சொல்லடியாகப் பிறந்த வினைமுற்று எச்சமாயிற்று; அதிர்த்தனர் என்ற சொல்லுக்கு அடையாக வந்துள்ளது,

இதுவுமது

669. நங்குர வனையிகழ் நயமி லான்றனை
இங்கொரு சிலையினால் எறிந்து கொல்லுதல்
பொங்குறும் அறமொடு புகழும் ஆகுமென்(று)
எங்குர வனையவர் எதிர்ந்து சூழ்ந்தனர் 22

(இ.ள்) நம் குரவனை இகழ் நயம் இலான்தனை =நம்முடைய குருவாகிய சித்தராமனை இகழ்ந்து பேசிய அன்பில்லாதவனை; இங்கு ஒரு சிலையினால் எறிந்து கொல்லுதல்=இப்பொழுது கற்கள் ஒன்றினாலேயே,அவற்றை வீசி அவனைக் கொன்று விடுதலானது; பொங்குரும் அறமொடு புகழும் ஆகும் என்று = பெரிய அறச்செயலோடு,பெரிய புகழ்ச் செயலும் ஆகும் என்று கூறிக்கொண்டு; அவர் எம்குரவனை எதிர்ந்து சூழ்ந்தனர்=அவ் ஒட்டலர் எம்முடைய குருவாகிய அல்லமதேவனை எதிர்ப்பட்டு சுற்றிக்கொண்டனர்; (எ,று)

முடிபு-நயமிலான் தனை,சிலையினால் எறிந்து கொல்லுதல் அறனொடு புகழும் ஆகும் என்று,எம்குரவனை எதிர்ந்து சூழ்ந்தனர். பொங்குறும் என்ற அடையினைப் புகழொடும் கூட்டுக; இக்கொல்லு கின்ற செயல் ஒன்றுமே,நமக்குஅறச் செயலும், புகழ்ச்செயலும் ஆகிய இரண்டு செயல்களாகும் என்று கருதினர் எதிர்ந்து என்பதற்கு பகைத்து என்றும் பொருள் கொள்ளலாம்.

670. கட்டுமின் [1]அடிமின்நும் கரத்தின் கொட்டினால்
வெட்டுமின் நிந்தைசொல் வாயின் வெண்பலைத்
தட்டுமின் எறிமின்வன் தலை[2]கு மைந்திடக்
குட்டுமின் எனஉளம் கொதித்துக் கூடினார் 23

Koviloor Digital Library

(பா-ம்) [1]பிடிமின்; [2]குழைந்திட

(இ-ள்)கட்டுமின் = (சூழ்ந்த அவ்வொட்டர்)நிந்தை கூறிய இவனைக் கட்டுங்கள்;அடிமின் =அடியுங்கள்; நும்கரத்தின் கொட்டினால் வெட்டுமின் = உங்கள் கையிலுள்ள மண்வெட்டியால் வெட்டுங்கள் ; நிந்தை சொல் வாயின் வெண்பலைத்தட்டுமின் = பழிப்புரை பகரும் வாயிலுள்ள வெண்மையான பல்லைத்தகர்த்து விடுங்கள்;எறிமின்= தட்டிய பல்லை வீசுங்கள்; வன்தலை குமைந்திடக் குட்டுமின் =அவனுடைய வலியதலையை உள் குழியும்படி குட்டுங்கள்; என உளம் கொதித்துக் கூறினார்; (எ-று)

முடிபு - சூழ்ந்த அவ்வொட்டர்கள், கட்டுமின், பிடிமின், வெட்டுமின், தட்டுமின், குட்டுமின் எனக் கொதித்துக் கூறினார், பல்லை என்பது பலை என்றாயிற்று, தனிக்குறில் முன் ஒற்று இரட்டாதாயிற்று; உள்ளம் என்பது உளம் எனத் தொகுத்தது,

671. என்மன விருளற எழுந்த அல்லமன்
மின்மலி வுறுதிரு மேனி மீதிடிச்
சொன்மலி ஒட்டலர் சூழ்ந்து கொண்டுவன்
கன்மழை சொரிந்தனர் கைச லிப்பவே 24

(இ-ள்) இடி சொல்மலி ஒட்டலர் சூழ்ந்துகொண்டு= இடிஓசை போன்ற மொழிகள் மிகுந்த ஒட்டலர் சுற்றிக்கொண்டு ; என்மன இருள் அற எழுந்த அல்லமன் மின்மலிவுறுதிருமேனி மீது= என்னுடைய மனத்திலுள்ள,அறியாமை நீங்க அதன்கண் எழுந்த அல்லமனுடைய மின்னல் ஒளிபோல் மிகுந்து விளங்கும் திருமேனியின் மேல்; கைசலிப்பக் கல்மழை சொரிந்தனர் = தங்கள் கைகள் எல்லாம் சோர்வு அடையும்படி கற்களை எடுத்து ஆலங்கட்டி மழைபோல் எறிந்தார்கள், (எ-று)

முடிபு - ஒட்டலர் சூழ்ந்து கொண்டு அல்லமன்திரு மேனி மீது கைசலிப்பக்கல் மழை சொரிந்தனர்.

672. சாக்கிய னார்எறி தனிக்கல் அன்றிமெய்
நோக்கிலர் தாமொரு நூறு கோடிக்கல்
மீக்கிளர் சோதிதன் மீது வீசினும்
தாக்குறு மோவவை தாக்கு றாவரோ

(இ-ள்) சாக்கியனார் தனிக்கல் அன்றி =சாக்கியநாயனார் முற்காலத்தில் வீசிய ஒருகல்லை அல்லாமல்; மெய் நோக்கு இலர்தம் =

Koviloor Digital Library

உண்மை அறிவு இல்லாதவர் எல்லாம் ஒரு நூறுகோடிக்கணக்கான கற்களை, மேலும், மேலும் மிக்கு எழும் ஒளிவடிவாகிய அல்லமதேவரது திருமேனியின் மீது எறிந்தாலும்; அவை தாக்குறுமோ தாக்குறா= அக்கற்கள் படுமோ படாது என்க (எ-று)

முடிபு - சாக்கியனார் எறிதனிக்கல் அன்றி; மெய் நோக்கினால் தாம் ஒரு நூறு கோாடி கல்லை, சோதிதன் மீது வீசினும் தாக்குறுமோ அவை தாக்குறா - (அரோ-அசை.)

சாக்கிய நாயனார் நாள்தோறும் ஓர் கல்லை வீசினார் என்பதை ''பாடோர் கல் கண்டதனைப் பதைப் போடும் எடுத்தெறிந்தார்'' என்னும் பெரிய புராணப் பாடலால் அறிக, அதனால் தனிக்கல் என்பதற்கு ஒருகல் எனப் பொருள் கூறப்பட்டது. சாக்கிய நாயனாரது உண்மை அறிவினை ''செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப் பானும் மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள்'' எனக் கொண்டே ''இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை'' என உய்வகையாற் ''பொருள் சிவன்'' என்று அருளாலே உணர்ந்தறிந்தார். (பெரியபு-சாக்-5ம்) ''எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும் மன்னிய சீர்ச் சங்கரன் தாள் மறவாமை பொருள்'' என்றே துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவந் தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார். (பெரிய புராணம் சாக்கிய நாயனார் 6ம் பாட்டு) என்னும் பெரியபுராணப் பாடலால் அறிக. தாக்குறுமோ என்பதிலுள்ள ஓகாரம் எதிர்மறை.

673. கொடியவர் எறிந்தகல் குவியக் குன்றென,
முடிமிசை நின்றனன் முத்தன் அல்லமன்
புடவியின் உடல்நிழல் [1]புதைப்ப அந்நிழல்
கடிதினின் மீமிசை காணும் தன்மைபோல் 26

(பா-ம்) [1]புதைய

(இ-ள்) புடவியில் உடல் நிழல் புதைப்ப அந்நிழல் கடிதினில் மீமிசை காணும் தன்மை போல் - நிலத்தினுள் உடம்பின் நிழலை வைத்து அதைமண் கொண்டுமூட அந்த நிழல் புதைக்கப்படாமல் விரைந்து மேல்எழும் தன்மைபொல்; கொடியவர் எறிந்த கல் குன்று எனக்குவிய - தீயவர் அல்லமன் மேல் வீசியகற்கள்,மலை போலக்குவிந்து விட; முத்தன் அல்லமன் முடிமிசை நின்றனன் -விடுபட்டவனாகிய

Koviloor Digital Library

அல்லமதேவன் அக்கல் குவியலுக்குள் அகப்பட்டு விடாமல் அதன் உச்சியிலே நின்றான். (எ-று)

முடிபு - உடல்நிழலை புடவியினுள் புதைப்ப;அந்நிழல் கடிதில் மீமிசை எழுதல் போல; கொடியவர் எறிந்தகல் குன்றெனக் குவிய, முத்தனாகிய அல்லமன் (அக்குன்றின்)முடிமிசை நின்றான். முத்தன் என்ற சொல்லுக்கு பந்தங்களிலிருந்து விடுபட்டவன் என்பது பொருள். அதேபோல இங்கு கற்குவியலிலிருந்து விடு பட்டமையால் முத்தன் அல்லமன் என்றார்.

674. ஒறுப்பவன்இழிந்தவன்ஒருவன்செய்தநோய்
பொறுப்பவன்நடுவுளன்பொறுக்கும்நெஞ்சமும்
மறப்பவன்உயர்ந்தவன்என்றுவாய்மையால்
சிறப்பவன்இம்முறைசெப்புவாரரோ 27

(இ.ள்) ஒருவன்செய்தநோய் ஒறுப்பவன் இழிந்தவன் என்று- ஒருவன் தனக்குச் செய்த துன்பத்தை மறவாமல் கருத்திற்கொண்டு பதிலுக்குப் பதிலாக தீங்கு செய்தவனை தண்டிப்பவன் இழிந்தவனாவான் என்றும்; பொறுப்பவன் நடுவுளன் என்று-அங்ஙனமின்றி அவன்செய்த தீங்கை பொறுத்துக் கொள்பவனை மத்திபமானவன் என்றும்; பொறுக்கும் நெஞ்சமும் மறப்பவன் உயர்ந்தவன் என்று- ஒருவன் செய்ததீங்கை பொறுக்கின்ற மனத்தோடு அதனை மறந்து விடுபவன் உயர்ந்தவன் என்று; வாய்மையால் சிறப்பவர் இம்முறை செப்புவார்-உண்மைப் பொருளை அறிந்து கூறுவதால் சிறப்பெய்திய திருவள்ளுவர் போன்ற பெரியோர் மக்களை மூன்று விதமாகப் பிரித்துக் கூறுவார். (எ.று) அரோ - அசை.

முடிபு - வாய்மையால் சிறப்பவர் ஒருவன் செய்த நோய்க்காக ஒறுப்பவன் இழிந்தவன் என்று, ஒருவன் செய்த நோயைப் பொறுப்பவன் நடுவுளன் என்று;ஒருவன் செய்த நோயை பொறுக்கும் நெஞ்சமும் மறப்பவன் உயர்ந்தவன் என்று செப்புவார். வாய்மையால் சிறப்பவர்'' என்றது இங்கே திருவள்ளுவரைக் குறிக்கும் அவர்.பொறையுடைமை என்னும் அதிகாரத்தே ஒறுத்தாரை ஒன்றாக வையாரே'' என்று இழிந்தவரையும்;(155குறள்)

அகழ்வாரைத்தாங்கும் நிலம் போலத்தம்மை
இகழ்வார் பொறுத்தல் தலை (151 குறள்)

என்று நடுவுளாரையும்

Koviloor Digital Library

பொறுத்தல் இறப்பினை யென்றுமதனை
மறத்தல் அதனினு நன்று (152 குறள்)

என்று இழிந்தவனையும் நடுவுளவரையும் உயர்ந்தவரையும் இப்பாட்டில் கூறுதல் காண்க.

அல்லமன் நிலை அறிந்து கண்டோர் வியப்படைந்தது.

675. தீங்கினை எதிர்நின்று [1]செய்யும் போதினே
தாங்கிலன் முனிவினை மறந்து தாமரைத்
தேங்கமழ் மலரென முகஞ்சி றப்புறீஇ
ஈங்குநின் றிடுமிவன் யாண்டுளான் கொலோ 28

(பா-ம்) [1]செய்த போதினே

(இ.ள்) எதிர்நின்று தீங்கினை செய்யும் போதினே- முன்னாலே இருந்து மிறையாகிய தீமையை செய்து கொண்டிருக்கும் போதே; முனிவினைதாங்கிலன் - அல்லமதேவன் சினத்தினைப் பெற்றானில்லை; மறந்து - அப்பொழுதே மறந்து; தாமரை தேங்கமழ் மலர் என முகம் சிறப்புறீஇ - தாமரையினுடைய தேங்கமழ்கின்ற அப்போது அலர்ந்தமலர் போல முகம் விளக்கமுற்று (பொலிவுபெற்று) ஈங்கு நின்றிடும் இவன் யாண்டுளான் கொலோ-இங்கு நின்று கொண்டிருக்கும் இவன் எந்த உலகத்தில் வாழ்பவனோ (எ.று)

முடிபு - எதிர் நின்று தீங்கினை செய்யும் போதினே. முனிவினைத் தாங்கிலன் மறந்து மலர் எனமுகம் சிறப்புறீஇ நின்றிடும் இவன் யாண்டுளான் கொலோ. ஒருவன் செய்த தீங்கிற்கு ஒறுப்பவனும் ஒறுக்காமல் பொறுப்பவனும் பொறுத்தலோடு மறப்பவனும் ஆகிய இம் மூவரும் முறையே தாழ்ந்தோன் ஒப்போன் உயர்ந்தோன் ஆவன் என்று வாய்மையாளர் கூறினர்.இவ்வல்லமன் அம் மூவரினும் சிறந்தவன் என்பதைஇப் பாடலால் குறிப் பிடுகிறார் ஆசிரியர்.

கண்டோர் கூற்று

676. மலர்மிசை வேதனோ மலர்க்கண் மாயனோ
பலர்புகழ் மழவிடைப் பாக னோவெனில்
அலனிவன் பிழைசெய்யும் அவரி டத்தினும்
நலனுளன் என்றுகண் டவர்ந விள்றனர் 29

(இ.ள்) மலர் மிசைவேதனோ -இவன் சத்திய லோகத்தில் மலர்மேல் வாழும் பிரமதேவனோ; மலர்க்கண் மாயனோ - வைகுண்ட

Koviloor Digital Library

லோகத்தில் வாழும் மலர்போன்ற கண்ணையுடைய திருமாலோ; பலர் புகழ் மழவிடைப்பாகனோ - சிவலோகத்தில் வாழும். பலரும் புகழ்ந்து பேசுகின்ற இளைய இடபத்தில் ஊரும் சிவபெருமானோ எனில் - இவர்களில் யார் என்று ஆராய்ந்தால்; இவன் அலன் - இவன் அவரில்அல்லன்; (எதனாலே எனில்) பிழைசெய்யும் அவரிடத்தினும் நலன் உளன் - தனக்குத் தீங்கு செய்கின்ற அவர்களிடதிலும் நன்மையே செய்யும் கருத்துடையவனாய் உள்ளான். (ஆகையினாலே) என்று கூறி என்று கண்டவர் நவின்றனர் -என்று பார்த்த பிறர்எல்லாம் இவ்வாறு கூறினார்.(எ-று)

முடிபு - கண்டவர் (இவன்)மலர் மிசை வேதனோ?மாயனோ? விடைபாகனோ? எனில் இவன்அலன்; பிழைசெய்யும் அவரிடத்திலும் நலனுளன்.என்று நவின்றனர்.

வேதன் முதலியோர் பிழைசெய்பவர்க்குப் பிழை செய்பவ ராயிருப்பர். இவன் பிழை செய்யுமவர்க்கும் நன்மையே செய்பவனாக உள்ளான் ஆதலின் இவன் அவரில் அல்லன் என்பது கருத்து.

வேதனோ முதலான வற்றில் வரும் ஓ காரம் ஐயப்பொருள்.திரி மூர்த்திகளும் பிழைசெய்யும் அவரிடத்தில் நலன் உளன் அல்லராதலின் அலன்இவன் எனறார்.என்று சச்சிதானந்தம் பிள்ளை உரை கண்டுள்ளார்.

677. கல்லெறி படாமையைக் கண்ட ஒட்டலர்
[1]சொல்லுறின் இவனொரு [2]சூழ்ச்சி மந்திரம்
வல்லவன் இவன்றனை வலிந்து பற்றியே
கொல்லுவம் எனஎதிர் குறுகி னாரரோ 30

(பா.ம்) [1]சொல்லுவர்; சொல்லுமின்; [2]சூட்சி

(இ.ள்) கல்எறி படாமையைக் கண்ட ஒட்டலர் - கல்லால் எறியப் படாமையைப் பார்த்த ஒட்டர்கள்; சொல்லுறின் - இச்செயலை ஆராய்ந்து கூறின்; இவன் ஒரு சூழ்ச்சி மந்திரம் வல்லவன் - கல்லெறி படாதவ இவன் ஒரு வஞ்சகமான மந்திரவித்தையில் வல்லவன் என்று தெரிகின்றது; இவன்தனை வலிந்து பற்றியே கொல்லுவம் என எதிர்குறுகினார் - இத்தகையோனை நம்வலிமையால் பிடித்து கொன்று விடுவோம் என்று கூறிக் கொண்டு அல்லமன்முன் நெருங்கிச் சென்றார்கள். (எ.று) அரோ - அசை.

முடிபு - கல் எறிபடாமையைக் கண்ட ஒட்டலர் சொல்லுறின்

Koviloor Digital Library

இவன். மந்திரம் வல்லவன்; இவன்தனைப் பற்றியே கொல்லுவம் என எதிர்குறுகினார்.

678. குறுகலும் அவன்பல கோலம் கொண்டனன்
நிறைபுனல் கடந்தொறும் நிலவு தோன்றல்போல்
மறுகினர் [1]நிலனகழ் மனிதர் பற்றுதற் (கு)
அறிகிலர் இனையனென் றனையன் தன்னையே 31

(பா-ம்) [1]நிலமகழ்

(இ.ள்) குறுகலும்-அவர் எதிரே நெருங்கலும்; நிறைபுனல் கடம் தொறும் நிலவு தோன்றல்போல் அவன்பல கோலம் கொண்டனன்- தண்ணீர் நிறைந்த பல குடங்கள் தோறும் ஒரு திங்கள் பிரதிபிம்பமாய் விளங்கினால் போல ; அல்லமதேவனாகிய ஒருவன் பல வடிவத்தை எடுத்துக் கொண்டு நின்றனன்; நிலன் அகழ் மனிதர் மறுகினர்- (அதைக்கண்டு) நிலத்தைத் தோண்டுகின்ற அவ் ஒட்டர்கள் மயங்கினர்; இனையன் என்று அனையன் தன்னையே பற்றுதற்கு அறிகிலர்- அங்ஙனம் நின்ற அல்லமதேவரை,இவன்தான் உண்மை அல்லமதேவன் என்று அறிந்து பிடித்தற்கு அறியாத வராயிருந்தனர். (எ.று)

முடிபு - குறுகலும் புனல்கடம் தொறும் நிலவு தோன்றல் போல், அவன் பலகோலம் கொண்டனன். நிலம் அகழ் மனிதர் மயங்கினர். அனையன் தன்னை, இனையன் என்று பற்றுதற்கு அறிகிலர்.

679. மருண்டனர் சித்தரா மப்பெ ருந்தகை
இருந்தருள் இடத்துமெய் இளைப்ப ஓடியே
திருந்திய அடிமிசை ச் சென்று வீழ்ந்து எழுந்(து)
அரந்தையோ டனையவர் அறைதன் மேயினார் 32

(இ.ள்) மருண்டனர் - ஒட்டர்கள் இச்செயலைப் பார்த்து மருட்சி அடைந்தனர்; சித்தராமப் பெருந்தகை இருந்தருள் இடத்து மெய் இளைப்ப ஓடியே - சித்தராமன் என்னும் பெரியோன் வாழ்ந்தருளும் இடத்திலே உடம்பு வருந்தும்படி ஓடி; திருந்திய அடிமிசைச் சென்று வீழ்ந்து எழுந்து - நல்ல திருவடிக்கு அணித்ததாகச் சென்று, கீழே விழுந்து எழுந்து வணங்கி; அனையவர் அரந்தையோடு அறைதல் மேயினார் - அந்த ஒட்டர்கள், துன்பத்தோடு சொல்லத் தொடங்கினார்கள். (எ.று)

முடிபு - அனையவர், மருண்டனர் பெருந்தகை இருந்தருள் இடத்து. மெய்இளைப்ப ஓடி, அடிமிசை சென்று வீழ்ந்து எழுந்து அரந்தையோடு அறைதன் மேயினான்.

Koviloor Digital Library

680. யாம்தொழில் செயுமிடத் தேது வின்றியே
போந்தனன் ஒருமகன் புதியன் நின்புகழ்
ஓர்ந்திலன் உரைக்கொணா [1]இழிபு ரைத்தனன்
மாய்ந்திலம் உடல்நசை மருவி யாங்களே 33

(பா-ம்) [1]மொழி உரைத்தனன்

(இ.ள்) யாம் தொழில்செயும் இடத்து-நாங்கள் எங்களுக்குரிய தொழிலைச் செய்து கொண்டு இருக்கும் இடத்திலே; ஒரு மகன் ஏது இன்றியே போந்தனன்-ஒருஆண் மகன், எந்தக் காரணமும் இன்றி அங்கு வந்தான்; புதியன் நின்புகழ் ஓர்ந்திலன் உரைக் கொணா இழிபு உரைத்தனன்-அவன் யாங்கள் இதுவரைக் கண்டறியாத புதியன்; உன்னுடைய புகழைக்கருதிலன்; வாயால் கூறமுடியாத பழிச் சொற்களைக் கூறினான்; யாங்கள் உடல் நசை மருவி மாய்ந்திலம்-(உரைக் கொணா இழிவைக் கேட்ட)யாங்கள் எங்கள் உடல் பற்றின் காரணமாக உடனே இறந்திலோம். (எ.று)

முடிபு - (அனையவர்) யாம் தொழில் செய்யுமிடத்து ஏதுவின்றே ஒருமகன் போந்தனன்; புதியன் நின்புகழை ஓர்ந்திலன் இழிபு உரைத்தனன்;யாங்கள் உடல் நசை மருவி மாய்ந்திலம் என்று அவர் அறைந்தலும் என்பதனோடு முடியும்.

681. என்றவர் அறைதலும் இராமன் சிந்தையின்
புன்றொழில் அகன்றுமெய் போதம் பெற்றிட
அன்றருள் அல்லமன் அடிகள் காட்டுறும்
ஒன்றொரு சீற்றம்வந் துதித்தெ ழுந்ததே 34

(இ.ள்) என்று அவர் அறைதலும்- இவ்வாறாக அவர் கூறுதலும்; இராமன் சிந்தையில் - அவர் மொழியைக் கேட்ட சித்தராமரது உள்ளத்திலே; சீற்றம் வந்து உதித்தெழுந்தது -சினமே வந்து தோன்றி எழுந்தது;அச்சினம் எதன்பொருட்டு தோன்றியது எனின்? புன்தொழில் அகன்று மெய் போதம் பெற்றிட- சரியை,கிரியை என்னும் புன் தொழில்களினின்றும் நீங்கி,உண்மையான ஞானத்தைப் பெறுவதற்கு; அன்று அருள் அல்லமன் அடிகள் காட்டுறும்-அன்றைய நாள் அருள் தாங்கிய அல்லம தேவனுடைய திருவடிகளை காட்டுதலை உண்டாக்கும்; ஒன்றொரு சீற்றம் வந்து உதித்து எழுந்தது -பொருத்தமான ஒப்பற்ற சீற்றம் வந்து தோன்றி எழுந்தது; (எ.று)

Koviloor Digital Library

முடிபு - அவர் என்று அறைதலும் இராமன் சிந்தையில் போதம் பெற்றிட அடிகள் காட்டுறும் ஒன்றொரு சீற்றம் வந்து உதித்து எழுந்தது. காட்டுறும் என்ற பெயரெச்சத்தை சீற்றம் என்னும் பெயருடன் கூட்டிக் கொள்க.எனவே காட்டுறும் என்பதும் ஒன்றொரு என்பதும் சீற்றத்திற்கு அடை. ஒன்றொரு என்பதற்கு -மிக உயர்ந்த என்று பொருள் கொள்ளினும் அமையும்;

682. **யாவானென் றன்னையின் றிகழ்ந்து ளானவன்**
னாவரிந் திடுவனான் எனஎ ழுந்தனன்
மேவுறுந் தவமத வெகுளி தானினி
ஓவுறுந் தரத்ததன் றொருவ ரானுமே 35

(இ.ள்) யாவன் என்தன்னை இன்று இகழ்ந்துளான் அவன் நா அரிந்திடுவன் நான் என எழுந்தனன் - (சித்தராமன்) எவன் என்னை இப்பொழுது இகழ்ந்து பேசியவன், அவன் நாவை நான் அறுத்து விடுவேன் என்று கூறிக் கொண்டு (அல்லம தேவரை நோக்கி) எழுந்து வந்தான்; மேவுறும் தவமத வெகுளிதான் - தவச்செருக்கினால் வரும் சினம்தான்; இனி ஒருவரானுமே ஓவுறும் தரத்தது அன்று - இப்பொழுது எவராலும் நீக்கப் படும் தன்மையுடையது அன்று; (வந்தே தீரும் என்பதாயிற்று)

முடிபு - இன்று என்றன்னை யாவன் இகழ்ந்துளான் அவன் நாவை நான் அரிந்திடுவேன், என எழுந்தனன் தவமதத்தால் மேவுறும் வெகுளிதான் இனி ஒருவரானும் ஓவரும் தரத்ததன்று. தொல்காப்பியர் உறுப்பறை முதலானவற்றால் வெகுளி தோன்றும் என்று கூறினார். அவற்றாலே தோன்றாமல் இங்கே சித்தராமனுக்குத் தவச் செருக்கால் வெகுளி தோன்றிற்று. அதனால் இவ்வாறு கூறினார்.

வேறு

683. **என்னை வைதவன் யாரவன் எனமுனிந் தெரிபோல்**
முன்னர் எய்தினன் சித்தரா மப்பெயர் முதல்வன்
அன்னை அன்னநம் அல்லமன் அவன்சினம் அறிந்து
சென்னி ஒண்கரம் அசைத்துவெண் ணகைசெய்து
செப்பும் 36

(இ.ள்) சித்தராமப் பெயர் முதல்வன்-சித்தராம ஐயர்; என்னை வைதவன் அவன் யார் என முனிந்து எரிபோல்முன்னர் எய்தினன்- என்னையும் இகழ்ந்து கூறியவனாகிய அப்பேர்ப் பட்டவன்யார் என்று

Koviloor Digital Library

கூறிக்கொண்டு, சினந்து நெருப்பைப் போல அல்லமதேவர் முன்னர் அடைந்தான்; அன்னை அன்ன நம் அல்லமன் -(குழந்தைகள் செய்யும் துன்பச்செயல்களை எல்லாம், பொறுத்துக் கொள்ளும்)தாய் போன்ற நம் அல்லமதேவன்; அவன் சினம் அறிந்து-அவன் மேற்கொண்ட கோபத்தைத் தெரிந்து கொண்டு (அதற்கு அஞ்சாமல்); சென்னி ஒண்கரம் அசைத்து எள் நகைசெய்து செப்பும்-தலையையும்,கைகளையும்,ஆட்டி இகழ்ச்சிச் சிரிப்பினைச் சிரித்துச் சொல்லத்தொடங்கினான்; (எ-று)

முடிபு - சித்தராமப் பெயர் முதல்வன்,என்னைவைதவனாகிய அவன் யார் என,முனிந்து எரிபோல் எய்தினன்.அல்லமன் அவன்சினம் அறிந்து,சென்னியையும்,கரத்தையும் அசைத்து நகைசெய்து சொல்லத் தொடங்கினான். எள்ளும் நகை என்று கொள்ளாமாமல் வெண்ணகை என்று கொண்டால் வெண்மையான பல் தோன்றச் சிரித்து எனப் பொருள் கொள்க.இது பெரும் சிரிப்பாகும்.

அல்லமதேவர், சித்தராமரை, புகழ்வது போல் பழித்தல்

684. அகழ்கின் றார்தமைத் தாங்குறும் அகநிலம் என்ன
இகழ்கின் றார்தமைப் பொறுக்குமித் தன்மையெய்தலினால்
நிகழ்கின் றாருண்மா தவமுடை யோகி நீ என்று
புகழ்கின் றானென இகழ்ந்தனன் பின்னரும் புகல்வான் 37

(இ.ள்) அகழ்கின்றார் தமைத் தாங் குறும் அகநிலம் என்ன - தன்னை மண் வெட்டிமுதலான கருவிகளால் வெட்டித் தோண்டுபவரை, வீழாமல் தாங்கும் அகன்ற நிலம் போல; இகழ்கின்றார் தமைப் பொறுக்கும் இத்தன்மை எய்தலினால் - இகழ்ந்து கூறுகின்றவர் களைக் கண்டு, வெகுளாமல் பொறுத்துக்கொள்ளும் இயல்பை நீபெற்றிருத்தலினால்; நிகழ்கின்றாருள் மாதவம் உடை யோகி நீ - இப்போது வாழ்ந்திருப்ப வருள் நீ பெரிய தவமுடைய யோகியாக விளங்குகின்றாய்; என்று புகழ்கின்றான் என இகழ்ந்தனன் -என்று புகழ்ந்து கூறுபவனைப் போல, இகழ்ந்து கூறினான்; பின்னரும் புகல்வான்-மேலும் கூறத் தொடங்கினான்.(எ.று)

முடிபு - அகழ்கின் றாரைத் தாங்கும் நிலம் என்ன இகழ்கின் றாரைப் பொறுக்கும் தன்மையை, எய்தலினால்,நீ மாதவம் உடையயோகி என்று.புகழ்கின்றான் என இகழ்ந்தனன். பின்னரும் புகல்வான்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தம்மை
இகழ்வார் பொறுத்தல் தலை (குறள் 151)

Koviloor Digital Library

என்ற திருக்குறள் இப்பாடலில் எடுத்தாளப்பட்டுள்ளது. புகழ்வது போலப் பழித்தல் என்னும் அணி இப்பாட்டில் வந்துளது.புகழ்வது போல பழித்துக் கூறியதால். உன்னிடம் பொறுமையே இல்லை.சினமே உள்ளது என்பதைக் குறிப்பால் உணர்த்தினார்.

685. சிறப்புப் பெற்றநல் யோகிதன் மனத்தெழு சினம்தன்
அறத்தைக் கொன்றிடும் முன்புபஞ் சியிற்புகு மழல் போல்
ஒறுக்கப் பட்டவன் பவம்பினை ஒழித்திடும் அதனால்
பொறுத்தற்கு ஒப்பிலை என்றுநன் றறிந்தனை போலும் 38

(இ.ள்) சிறப்பு பெற்ற நல் யோகி தன் மனத்து எழுசினம்-(உற்ற நோய் நோற்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை முதலான) சிறப்புகளைப் பெற்ற நல்லதவ யோகியின் மனத்திலே தோன்றுகின்ற வெகுளியானது; முன்புதன் அறத்தைக் கொன்றிடும்- முதல் வேலையாகத் தன்துறவற நெறியையே அழித்து விடும்; பினை பஞ்சியில் புகும் அழல் போல் ஒறுக்கப்பட்டவன் பவம் ஒழித்திடும்-பின்னர் பஞ்சுப் பொதியை நோக்கிச் சென்றதீப் பஞ்சை அழித்து விடுதலைப் போல; சினத்தால் தண்டிக்கப்பட்டவனுடைய பிறப்பாகிய வாழ்க்கையை ஒழித்துவிடும்; அதனால் -மேற்கூறிய இரண்டு காரணங்களால்; பொறுத்தற்கு ஒப்பிலை என்று நன்று அறிந்தனை போலும்- ஒருவர் செய்யும் தீமையைப் பொறுக்கும் செயலுக்கு ஒப்பான செயல் வேறு ஒன்றும் இல்லை என்று நன்றாக நீ உணர்ந்துள்ளாய் போலும் ,அதனால் நீபொறுமையே மேற்கொண்டுள்ளாய் என்று கூறினார் என்க. (எ.று)

முடிபு - யோகிதன் மனத் தெழு சினம் முன்பு தன் அறத்தைக் கொன்றிடும்; பின்னை,பஞ்சனிடத்து புக்க அழலைப் போல. ஒறுக்கப் பட்ட வன்பவத்தை ஒழித்திடும் அதனாலே; பொறுதற்கு ஒப்பிலை என்று நன்கு அறிந்தனை போலும். இதனால் நீ மிகவும் பொறுமை உடைய வனாய் உள்ளாய் என்று புகழ்வது போல் இகழ்ந்தார் என்க,

686. காலன் நின்முனம் பொறையுளன் ஆகுவன் கடல்சேர்
ஆலம் நல்லமு தாகுமென்று அவர்தவம் புகழ்வான்
போல வைதனன் கொடியவன் எனும்பொருள் தோன்றச்
சீலம் நல்குமோர் தொழில்செய்யும் அல்லம தேவன் 39

(இ.ள்) சீலம் நல்கும் ஓர் தொழில் செயும் அல்லமதேவன் - உலக மக்களுக்கு ஒழுக்கத்தையே கொடுக்கும் ஒப்பற்றதொழிலைச் செய்யும்

Koviloor Digital Library

அல்லமதேவன் என்பான்; (சித்தராமனைப் பார்த்து) காலன் நின் முனம் பொறை யுளன் ஆகுவன் - சினம் உடைய இயமனும் உனக்கு முன்னாலே வந்தால் பொறுமையுடையவன் ஆகிவிடுவான்; கடல்சேர் ஆலம்நல் அமுதாகும் - திருப்பாற்கடலில் தோன்றிய தீமைசெய்கின்ற ஆலகால விடமும் உனக்குமுன் வந்தால் அமுதாக மாறிவிடும்; என்று அவன்தவம் புகழ்வான் போல - என்று சித்தராமனது தவத்தைப் புகழ்ந்து கூறுவது போல; கொடியவன் எனும் பொருள் தோன்ற வைதனன் - சித்தராமன் அவ்விரண்டு பொருள்களைக் காட்டிலும் மிகக் கொடியவன் என்று குறிப்பால் பொருள் தோன்றும்படி இகழ்ந்து கூறினான். (எ.று)

முடிபு - அல்லமதேவன் (சித்தராமனை நோக்கி) காலன் நின்முனம் பொறையுளன் ஆகுவன்; ஆலம் நல்லமுதாகும், என்று அவன் தவம் புகழ்வான் போல கொடியன் எனும் பொருள் தோன்ற வைத்தனன்.

687. பொறையு றும்படி அல்லமன் சூழ்ச்சியில் புகலக்
குறையு றுஞ்சினம் [1]மிகுந்தன நெருப்பெனக் கொதித்தே
அறையு றுந்திரள் பந்தென சித்தரா மையன்
நிறையு றுந்திரு வருளுடை பிரானொடு நிகழ்த்தும் 40

(பா.ம்) [1]மிகுந்தன னெருப்பென

(இ.ள்) அல்லமன் பொறையு றும்படி சூழ்ச்சியில் புகல - அல்லம தேவன் சித்தராமன் பொறுமை அடையும்படி, புகழ்வது போல பழித்துக் கூறுவதாகிய சூழ்ச்சியினாலே சொல்ல; நெருப்பெனக் கொதித்தே குறையுறும் சினம் மிகுந்தன - நெருப்பைப் போல வெம்மையுற்று எஞ்சிய சினத்தின் கூறுகள் எல்லாம் மிக்குத் தோன்றின; (அதனாலே) சித்தராமையன், அறையுறுந்திரள் பந்து என - சித்தராமையன் வீசியபந்து எதிர்த்துத்தாக்குதலைப் போல; நிறையுறும் திருவருளுடை பிரானொடு நிகழ்த்தும் - நிறையும் திருவருளுடைய, அல்லம தேவரோடு சொற்களைச் சொல்லத் தொடங்கினான்; (எ.று)

முடிபு - அல்லமன் சூழ்ச்சியில் புகல, நெருப்பெனக் கொதித்து; குறையுறும் சினம் மிகுந்தன சித்தராமையன், அறையுறுந்திரள் பந்தென, பிரானொடு (எதிர் மொழி)நிகழ்த்தும். சினம்-பால்பகா அஃறிணைப் பெயர், மிகுந்தன என்ற பன்மை வினை கொண்டது. மிகுந்தன என்ற பன்மையால் சினத்தின் கூறுகள் என்று பன்மை எழுவாய் கொள்ளப் பட்டது.

Koviloor Digital Library

688. குறிப்பில் வைதனை [1]வெளிப்படை இகழ்வினும்
கொடிதாய்
வெறுப்பு முன்செயா என்னைநீ [2]ஈண்டிகழ்ந் தமையால்
பொறுப்பன் அல்லன்யான் நுதல்விழித் தீயிடை பொடிப்ப
வறுப்பன் என்றனன் இகழ்வினுக்கு ஆர்உளம் மறுகார் 41

(பா-ம்) [1]வெளிப்பட; [2]விண்டிகழ்ந்

(இ.ள்) வெளிப்படை இகழ்வினும் கொடிதாய் குறிப்பில் வைதனை - (சித்தராமன் அல்லமதேவரை நோக்கி) வெளிப்படையாக இகழ்ந்துபேசுவதைக் காட்டிலும் கொடூரமாக என்னைக் குறிப்பாக இகழ்ந்து பேசினாய்; முன் வெறுப்புசெயா என்னை - முதலில் உன்னைப் பற்றி வெறுப்புரை நிகழ்த்தாத என்னை; ஈண்டு இகழ்ந்தமையால் - இவ்விடத்து நீயே இகழ்ந்து கூறியபடியால்; யான் பொறுப்பன் அல்லன் - நீ செய்த இக்குற்றத்தை நான் பொறுப்பேன் அல்லேன்; (அக்குற்றத்திற்குத்தண்டனையாக) நுதல்விழித் தீயிடை பொடிப்ப வறுப்பன் என்றனன் - என்னுடைய நெற்றிக் கண்ணிலிருந்து உண்டாகும் தீயின் கண்ணே உன் உடம்பு நீராகும்படி சுட்டு விடுவேன் என்று கூறினான்; இகழ்வினுக்கு உளம் மறுகார் ஆர் - ஒருவர்கூறும் இகழ் உரைக்கு உள்ளம் வருந்ாதவர் யார். (ஒருவரும் இல்லை). அதனால் அல்லமன் குறிப்பில் இகழ்ந்ததற்கு சித்தராமன் உள்ளம் வருந்தினான் என்ற தாயிற்று. (எ.று)

முடிபு - வெளிப் படை இகழ்வினும் கொடிதாய் குறிப்பில் வைதனை; முன் வெறுப்புச் செய்யா என்னை இகழ்ந்தமையால், யான்பொறுப்பன் அல்லன்; தீயிடை பொடிப்ப வறுப்பன் என்றனன் இகழ்வினுக்கு உளம் மறுகார் யார். இகழ்வினுக்கு யார் உளம் மறுகார் என்பது வேற்றுப்பொருள் வைப்புஅணி. நுதல்விழித்தீ- நெற்றிக் கண்ணிலிருந்து உண்டாகும் நெருப்பு.

689. தன்னைக் கொல்லினும் தான்பிறி தொன்றினைக் கோறல்
பன்னிப் பாவமென் றறைகுவர் கற்றுணர் பழையோர்
நின்னைச் சொல்லிய அறத்தினை நிந்தையென்றெண்ணி
என்னைக் கொல்லுவன் என்றநீ அறவனே என்று 42

(இ.ள்) கற்றுணர் பழையோர் - கற்று உணர்ந்த சான்றோர்; தன்னைக் கொல்லினும், தான் பிறிதொன்றினைக் கோறல் பன்னிப் பாவம் என்று அறைகுவர் - ஓர்உயிர் தன்னைக் கொல்லவந்தாலும் தான்

Koviloor Digital Library

கொல்ல வந்த பிறிதொன்றின் உயிரை கொல்லுதலைச் செய்தல், அறநூல் விதிப்படி பாவமாகும் என்று சொல்வார்கள்; நின்னைச் சொல்லிய அறத்தினை நிந்தை என்று எண்ணி- துறவற நெறியில் நிற்கும் உன்னை கருதி துறவறநூல் கூறிய இவ்வறத்தினை; பழிக்கத்தக்கது என்று கருதிக் கொண்டு; என்னைக் கொல்லுவன் என்றநீ அறவனே என்று - என்னைக் நெற்றிக்கண் தீயினால் கொல்லுவன் என்று கூறிய நீ துறவற நெறியில் நிற்பவனோ? என்று வினாவி. (எ.று)

முடிபு - பழையோர் தன்னைக் கொல்லினும், தான் பிறிதொன்றி னைக் கோறல் பன்னிப் பாவம் என்று அறைகுவர் நின்னைச் சொல்லிய அறத்தினை, நிந்தை என்று எண்ணி என்னைக் கொல்லுவன் என்றநீ அறவனே என்று வினாவ. கற்றுணர் பழையோர் என்றது திருக்குறள் ஆசிரியரை. அவர் துறவறம் இயலில் கொல்லாமை என்னும் அதிகாரத்தில் தன்னுயிர் நீப்பினும் செய்யற்க. தான்பிறிது இன்னுயிர் நீக்கும் வினை'' என்பர். இதனை உட்கொண்டு இவ்வாறு கூறினார். (குறள் 327)

690. [1]சாத னங்களுள் நீறுமுந் திய[2]தென்பர் சாற்றும்
மாத வங்களுள் உயிர்செகா மையுமற்று மதிப்பிற்
பாத கங்களில் கொலைச்சிறந் தன்றெனப் பார்த்து
நீதெ ரிந்திலை அரக்கனே என்றனன் நிமலன் 43

(பா-ம்) [1]சாதனங்களில்; [2]எனச்

(இ.ள்) சாதனங்களுள் நீறுமுந்தியது என்பர் - சைவசமய சாதனங் களுள் திருநீறே முதன்மையானது என்று சொல்லுவர்; (அஃதே போல்) மற்று மதிப்பில் - மேலும் ஆராய்ந்தால்; மாதவங்களுள் உயிர் செகாமையும் சிறந்தன்று -பெரிய தவ ஒழுக்கம் பலவற்றுள் ஓர்உயிரைக் கொல்லாமலிருக்கும் அறமே சிறந்தது; பாதகங்களில் கொலை சிறந்தன்று - பாவங்கள் பலவற்றுள் கொலைப் பாவமே சிறந்தது; எனப்பார்த்து நீதெரிந்திலை - என்று துறவற நூல் கூறும் விதிகளைப் பார்த்து; நீ தெரிந்து கொள்ளவில்லை; (அதனாலே) அரக்கனே என்றனன் நிமலன் - நீஅறவன் அன்று நீ அரக்கனே என்று நிமலன் (அல்லமன்) கூறினான். (எ.று)

முடிபு - சாதனங்களுள் நீறு முந்தியது என்பர்; (அஃதே போல்) மற்று மதிப்பில் மாதவங்களுள் உயிர் செகாமையும், பாதகங்களில் கொலையும்; சிறந்தன்று எனப் பார்த்து நீ தெரிந்திலை. (அதனால்) நீ

Koviloor Digital Library

அறவனன்று, அரக்கனே என்றனன் நிமலன், சைவசமய சாதனங்கள் ஐந்து. அவை திருநீறு - கண்டிகை - பஞ்சாக்கரம் - சிவலிங்கம் - காஷாயம். இவற்றிற்கு பஞ்ச சாதனம் என்று பெயர். இவற்றுள் முந்தியது திருநீறு. யோகிகளுக்கு இயமம் முதலான எட்டு அங்கங்கள் வேண்டும் என்பர். அஷ்டாங்க யோகம் என்பதறிக; அவ் எட்டுள், முதலில் இருப்பது இயமம் அவ்வியமம் ஐந்து வகைப்படும். அவ்வைந்தாவன; அஹிம்சை - சத்தியம், களவின்மை, இந்திர நிக்கிரகம், பொருள் பற்றின்மை; இந்த ஐந்து அறத்துள் முதலில் நிற்பது அஹிம்சை. இங்கு உயிர் செகாமை என்றது அஹிம்சையை; அஹிம்ஸா. ஸத்யா. அஸ்தோயா பிரம்மசர்யா அபரிக்கிரஹா, எமாஹா. (பதஞ்சலி யோசூத்திரத்தில் சாதனபாதம் 30வது சூத்திரம்) "அறவினையாதெனில் கொல்லாமை கோறல்; பிறவினை எல்லாம் தரும்" (321) இக்குறள் துறவற இயலில் கொல்லாமை என்னும் அதிகாரத்துள் உள்ளது. இப்பாட்டில் பார்த்து" என்பதற்கு திருக்குறள் முதலாகிய அறநூலைப் பார்த்து.

691. **செருக்கொ ழிந்திலை என்னெதிர் செவிசுடு தீச்சொல்**
உரைத்து நின்றனை உனைவிடு கிலலென [1]உருத்து
நெருப்பெ னுந்திரு நுதல்விழி திறந்தனன் [2]நினைத்து
மரிப்பி னுந்தரு வேனுயிர் என்றிரா மன்றான் 44

(பா-ம்) [1]உறுத்து; [2]நினைந்து

(இ.ள்) இராமன்தான் - சித்தராமன்தான்; (அல்லமனை நோக்கி) நீ செருக்கு ஒழிந்திலை - நீ செருக்கினை விட்டாய் அல்லை; என் எதிர் செவிசுடு தீச்சொல் உரைத்து நின்றனை - பெரியோனாகிய எனக்கு முன்னாலேயே செவியை வருத்துகின்ற தீயசொற்களைச் சொல்லி அச்சமில்லாமல் நிற்கின்றாய்; உனைவிடுகிலன் - உன்னைத் தண்டிக் காமல் விடமாட்டேன்; என உருத்து - என்று கூறி அச்சந்தோன்றும்படி பார்த்து; மரிப்பினும் உயிர்தருவேன் என்று நினைத்து - இவன் இறந்து பட்டாலும் திரும்பவும் இவனது உயிரைப் படைத்துத்தருவேன் என்று மனத்தில் நினைத்துக் கொண்டு; நெருப்பெனும் திருநுதல்விழி திறந்தனன் - நெருப்பினை ஒத்த தன்னுடைய, அழகிய நெற்றிக் கண்ணைத் திறந்தான். (எ.று)

முடிபு - இராமன்தான்; செருக்கு ஒழிந்திலை தீச்சொல் உரைத்து நின்றனை உனைவிடுகிலன், என உருத்து உயிர் மரிப்பினும் தருவேன் என நினைத்து, நுதல் விழி திறந்தனன்.

Koviloor Digital Library

692. **நெற்றித் தீவிழிக் காமனை நீற்றுவ தன்றிப்
பற்றிக் காமமில் யோகியைப் படுத்திட வற்றோ
செற்றத் தானுதல் விழியழல் அல்லம தேவன்
வெற்றித் தாண்மலர்க் கீழ்ச்சென்று பணிந்தது விரைந்து** 45

(இ.ள்) நெற்றித் தீவிழி- சித்தராமனுடைய நெற்றி விழித்தீயானது; காமனை நீற்றுவதன்றி- பற்றுடையவனைச் சுடுவதன்றி,காமம்இல் யோகியைப் பற்றி படுத்திடவற்றோ - பற்றில்லாத இவ்வல்லம தேவனை தான் பற்றி சுடும் வல்லமை உள்ளதோ? (வல்லமை அற்றது) செற்றத்தான்நுதல் விழிஅழல் - சினத்தையுடைய சித்தராமனது நெற்றி விழித்தீ; அல்லமதேவன் வெற்றித் தாண் மலர்க் கீழ்ச்சென்று விரைந்து பணிந்தது - (வல்லமை இல்லாத அத்தீ) அல்லம தேவனுடைய வெற்றியோடு கூடிய திருவடியாகிய தாமரை மலரின் கீழ்விரைந்து சென்று பணிந்தது.

முடிபு - நெற்றித்தீவிழி காமனை நீற்றுவதன்றி; காமமில் யோகியை பற்றிப் படுத்திடவற்றோ செற்றத்தான் நுதல்விழிஅழல் தேவன் தாண்மலர்க்கீழ் விரைந்து சென்று பணிந்தது, வற்றோ-வல்லமை யுடையதோ என்று பொருள். (வல் பகுதி)

693. **பணிந்து மீளுமவ் வழலொரு வீரன்மேல் பாயத்
துணிந்து போயவன் ஆற்றல்கண் டுளவலி தொலைந்து
[1]தணிந்து பேடிமேற் செல்லுமாறு அலைவன சரன்போல்
அணைந்தி ராமன்வாழ் நகரினில் பற்றிய தன்றே** 46

(பா-ம்) [1]தணந்து

(இ.ள்) பணிந்து மீளும் அவ் வழல் - அல்லமதேவனைப் பணிந்து திரும்பிய சித்தராமனுடைய அவ்விழித்தீயானது; வீரன் மேல் பாயத் துணிந்து போய் அவன் ஆற்றல்கண்டு உள வலி தொலைந்து, தணிந்து, பேடிமேல் செல்லுமாறு - வீரமுடையான் மேல் பாய் வதற்குத் துணிந்து சென்று, அவனுடைய வீரத்தைக் கண்டு தன்மனோ வலிகட்டுத் தன் வேகம் குறைந்து வீரமில்லாதவன் மேல் பாயச் சென்றாற் போல; அலைவனச் சரன் போல் அணைந்து இராமன் வாழ் நகரினில் பற்றியது - பிறரை வருத்தும் பண்புவாய்ந்த வேடனைப் போல் பொருந்தி, சித்தராமன் வாழ்கின்ற நகராகிய சொன்னலாபுரியிற் சென்று அதைப் பற்றியது. (எ.று) அன்றே - அசை.

Koviloor Digital Library

முடிபு - பணிந்து மீளும் அவ்வழல்; வீரர்மேல் பாயத் துணிந்து போய், அவன் ஆற்றலைக் கண்டு உளவலி தொலைந்து தணிந்து பேடி மேல் செல்லுமாறு வனசரன் போல் அணிந்து இராமன் வாழ் நகரில் பற்றியது. பேடி என்பது வீரமில்லாதவனை உணர்த்திற்று. வனசரன்-காட்டிலேதிரிபவன்,எனவே காட்டில் வாழ்கின்ற வேடன். சித்தராமனது விழித் தீ அல்லமனைப் பற்றச் சென்று அவன் ஆற்றல் கண்டு சொன்னலாபுரத்தைப் பற்றியதற்கு; வீரன் மேல்பாயப் போய், உளவலி தொலைந்து பேடிமேல் பாயச்செல்லுதல் உவமையாயிற்று. இது தொழில் உவமை.

694. **கங்கை வார்சடைக் கறைமிடற் றிறைநகைக் கனல்போய்**
துங்க மாமதில் சூழ்தரு புரத்தினைச் சுடல் போல்
எங்கள் நாயகன் மேல்விடும் இராமனன் நுதற்கண்
[1]அங்கி போகியந் நகரினைச் சுட்டதை அன்றே 47

(பா-ம்) [1]அங்கி பொங்கி

(இ.ள்) கங்கை வார்சடைக் கறை மிடற்று இறை நகைக்கனல் - கங்கை யாற்றினை அணிந்த நீண்ட சடையினையும், கறுத்த கழுத்தினை யும், உடைய சிவபெருமானது சிரிப்பிலே தோன்றிய நெருப்பானது; போய் துங்க மாமதில் சூழ் தருபுரத்தினைச் சுடல்போல் - சென்று உயர்ந்த பெரிய மதில் சூழ்ந்த திரிபுரத்தைச் சுட்டாற் போல; எங்கள் நாயகன் மேல்விடும் இராமன் நன்நுதல் கண் அங்கி - எங்கள் தலைவனாகிய அல்லம தேவன் மேல்விட்ட சித்த இராமனுடைய நெற்றிக் கண் நெருப்பானது போகி அந்நகரினைச் சுட்டது - சென்று அச் சொன்னலா புரத்தை எரித்தது. (எ.று) ஐ, அன்று , ஏ இம் மூன்றும் அசை.

முடிபு - இறை நகைக் கனல் போய், புரத்தினைச் சுடல்போல் நாயகன் மேல் விடும் இராமன் நுதற்கண் அங்கி. போகி அந் நகரினைச் சுட்டது. இப்பாட்டு உவமையணி.

695. **அணியெ ரிந்தன மென்றுகில் எரிந்தன ஆரத்**
துணியெ ரிந்தன கலவைகள் எரிந்தன சுதையின்
பணியெ ரிந்தன மனைவளம் எரிந்தன பகரும்
மணியெ ரிந்தன எரிந்தன கண்டவர் வயிறு 48

(இ.ள்) அணிஎரிந்தன- அணி கலன்கள் எரிந்தன; மென்துகில் எரிந்தன - மென்மையான ஆடையும் எரிந்தன; ஆரத்துணி எரிந்தன - முத்து மாலையின் துண்டங்களும் எரிந்தன; கலவைகள் எரிந்தன -

Koviloor Digital Library

கலவைச் சாந்துகளும் எரிந்தன; சுதையின் பணி எரிந்தன - சுண்ணாம்புக் கலவையால் செய்யப்பட்ட சித்திரங்களும் எரிந்தன; மனைவளம் எரிந்தன - இல்லங்களிலுள்ள செல்வங்கள் எல்லாம் எரிந்தன; பகரும் மணிஎரிந்தன - விற்கப்படும் இரத்தினம் போன்ற உயர்ந்த பொருள் களும் எரிந்தன; கண்டவர் வயிறு எரிந்தன- இவற்றைப் பார்த்தவர்களின் வயிறும் பற்றி எரிந்தன. (எ.று)

முடிபு - அணி- துகில் - ஆரத்துணி- கலவைகள் - சுதையின்பனி மனை வளம் - மணி,எரிந்த. இவற்றைக் கண்டவரின் வயிறும் எரிந்தன.

696. **சேய எடுப்பவர் விருத்தரை ஈர்ப்பவர் சேமம்**
போய எடுப்பவர் புகஅரி தாகிமண் புரண்டு
வாய டிப்பவர் மனையெரி யவிப்பவர் மறுகிப்
பாய லைக்கடல் எனஅழு திரங்கினர் பதைத்து 49

(இ.ள்) சேய் எடுப்பவர் - முன்னே குழந்தைகளை எடுப்பவரும்; விருத்தரை ஈர்ப்பவர் - முதியவரை இழுப்பவரும்; சேமம் போய் எடுப்பவர் - வைப்புநிதியைச் சென்று எடுப்பவரும்; புகஅரிதாகி மண்புரண்டு வாய் அடிப்பவர் - உள்ளே புகுதற்கு முடியாதவறாகி, நிலத்திலே விழுந்து புரண்டு வாயிலே அடித்துக் கொள்ளுகின்றவர் களும்; மனைஎரி அவிப்பவர் - வீட்டின் கண் பற்றி எரியும் நெருப்பை அவிப்பவரும் ஆகிய இவர்கள் எல்லோரும் மருகி பதைத்து பாய் அலைக் கடல் என அழுது இரங்கினர் - மனம் சுழன்று (அலமந்து) துன்புற்று பாயும் அலையுடைய கடல் ஓசையைப் போல் அழுகை ஒலிசெய்து இரங்கினார்கள், (எ,று)

முடிபு - எடுப்பவரும், ஈர்ப்பவரும், சேமம் எடுப்பவரும், வாயடிப்பவரும், அவிப்பவரும் (ஆகிய இவர்கள் எல்லோரும்) மருகி பதைத்து அழுது இரங்கினர். எடுப்பவர் முதலான சொற்கள் எல்லாம் வினையாணையும் பெயர்கள். அவை எழுவாயாக நின்று இரங்கினர் என்ற வினையோடு முடியும்.

697. **உதித்த ஞாயிறு போன்றுசெம் மணியினம் ஒளிரப்**
பதித்த மாளிகை மீதுபற் றியவழல் கொழுந்தால்
கதிர்த்த ஆடகச் செங்கம லத்துவான் கங்கை
கொதித்த தாயிடைக் கொதிபொறா அன்னங்கள் குழைய
50

Koviloor Digital Library

(இ,ள்) செம்மணியினம் உதித்த ஞாயிறு போன்று ஒளிர - சிவந்த நிறத்தையுடைய மாணிக்க மணிகள் எல்லாம் தோன்றிய சூரியனைப் போல் விளங்கி நிற்க; பதித்த மாளிகை மீதுபற் றியவழல் கொழுந்தால் - அவை பதிக்கப் பெற்ற,மாளிகைகளின் மேலே பற்றி எரியும் நெருப்புச் சுவாலையால்; கதிர்த்த ஆடகச் செங்கமலத்து வான் கங்கை - ஒளி வீசும் பொன்னுலகத் திலேயுள்ள, செந்தாமரை மலரைப் பெற்றிருக்கும் ஆகாய கங்கையும்; ஆயிடை கொதி பொறாது அன்னங்கள் குழைய கொதித்தது - அங்கேயுள்ள அன்னப் பறவைகளும் கொதித்தலைத்தாங்க முடியா மல்,வருந்தி நிற்கும்படி சூடாயிற்று. (எ.று)

முடிபு - செம் மணியினம், உதித்த ஞாயிறு போன்று ஒளிற, அவை பதித்த மாளிகை மீது, பற்றிய அழல் கொழுந்தினால் வான் கங்கையும் கொதித்தது, எவ்வாறு கொதித்தது எனில்? ஆயிடை அன்னங்கள் குழையக் கொதித்தது. சோறு குழையும் படி கொதித்தது என்ற மற்றொரு பொருளும் தோன்றி நின்றது. இதை வடநூலார் தொனிப் பொருள் என்பர்.

698. **அன்ன காலையில் அருட்கடல் அல்லம தேவன்**
சொன்ன லாபுரத் தவர்துயர் அனைத்தையும் தொலைப்ப
உன்னி ஓர்விழி அழலினை இமைப்பினில் ஒழித்தான்
முன்னம் ஆலமுண் டமரரைக் காத்தருள் முறைபோல் 51

(இ.ள்) அன்னகாலையில் - சொன்னலாபுரம் தீப்பற்றி எரியும் அத்தகைய காலத்திலே; அருள்கடல் அல்லமதேவன் - அருளாகிய கடலைப் பெற்றிருக்கும் அல்லம தேவன் என்பான்; முன்னம் ஆலம் உண்டு அமரரை காத்தருள் முறைபோல்- முற்காலத்திலே ஆலகால விடத்தை உட்கொண்டு தேவர்களைக் காத்தருளிய முறையைப் போல; (இன்று) சொன்னலாபுரத்தவர் துயர் அனைத்தையும் தொலைப்ப உன்னி-சொன்னலாபுரத்து மக்களுக்கு உண்டாகிய எல்லாத்துன்பங் களையும் நீக்கிவிடக் கருதி; ஓர்விழி அழலினை இமைப்பினில் ஒழித்தான்-சித்தராமனுடைய,ஒன்றாகிய நெற்றிக்கண் நெருப்பை கண்ணிமைக்கும் நேரத்துக்குள் ஒழித்துவிட்டனர். (எ.று)

முடிபு - அன்னகாலையிலே , அல்லமதேவன், சொன்னலாபுரத்த வர் துயர் அனைத்தையும்; தொலைப்ப உன்னி முன்னம் ஆலம் உண்டு அமரரைக் காத்த முறைபோல்;விழி அழலினை இமைப்பினில் ஒழித்தான். அருளாகிய கடலினைப் பெற்றிருத்தலின். இமைப்பினில்

Koviloor Digital Library

நெருப்பை அவித்து விட்டான் என்க. அமரரைக் காத்த முறைபோல் என்றது உவமையணியின்பாற் படும் இப்பாட்டு.

699. **எந்தை அல்லமன் அருளினால் நுதல்விழி எரியால்**
வெந்த அந்நகர் பண்டையின் மும்மடி விளக்கம்
வந்த பல்வள மொடுசிறந் ததுநரர் மகிழ
உந்து வெவ்வழ லிடைவெந்த ஆடகம் ஒத்து 52

(இ.ள்) எந்தை அல்லமன் அருளினால் - எம் ஞானத் தந்தை யாகிய அல்லம தேவருடைய திருவருளாலே; நுதல்விழி எரியால் வெந்த அந்நகர் - சித்தராமரது நெற்றிக்கண் நெருப்பால் வெந்து போன அந்நகரம்; உந்து வெவ்வழல் இடை வெந்த ஆடகம் ஒத்து - மிகுந்து எரியும் வெப்பமுடைய நெருப்பின்கண் வெந்த பொன்னை ஒத்து; நரர்மகிழ - ஊர்மக்கள் எல்லாம் மகிழும்படி; பண்டையின் மும்மடி விளக்கம் வந்த பல்வள மொடுசிறந்தது - முன்னிருந்த நிலையைக் காட்டிலும், மூன்று மடங்கு விளக்கம் பெற்ற பலவகை வளங்களோடு சிறப்புற்று விளங்கிற்று. (எ.று)

முடிபு - எரியால் வெந்த அந்நகரம், அல்லமன் அருளினால் அழலிடை வெந்த ஆடகம் ஒத்து, நரர்மகிழ, பல்வளமொடு சிறந்தது. நகரம், சுடச் சுடரும் பொன்போல் விளங்கிற்று என்பது உவமையணி. அது விளங்குவதற்குக் காரணம். அல்லம தேவரின் திருவருளாகும். மூன்றாம் வேற்றுமை காரக வேது அணி.

700. **ஒருத்தன் வந்தவாறு ஆக்கிய பொற்பணி ஒன்றைத்**
திருத்த வல்லவன் அழித்ததை சிறந்திடச் செயல்போல்
புரத்தை நன்றுற அல்லமன் புரிதலும் புரத்தோர்
கருத்தில் வந்தெழுந் தோங்கிய ஆர்வமா கடலே 53

(இ.ள்) ஒருத்தன் வந்தவாறு ஆக்கிய பொற்பணி ஒன்றை - ஒரு பொற் கொல்லன் தன் கைவினைக்குத் தெரிந்தபடி செய்த பொன் நகை ஒன்றினை; திருத்த வல்லவன் - சிறிதும் குற்ற மில்லாமல் தொழில் செய்வதில் வல்ல மற்றொரு பொற் கொல்லன்; அதை அழித்துச் சிறந்திடச் செயல் போல் - அவன்செய்த பொற்பணியை அழித்துவிட்டு, அதையே சிறந்த அணிகலனாகச் செய்ததைப் போல; அல்லமன் புரத்தை நன்னுறப் புரிதலும் - அல்லமதேவன் சொன்னலாபுரத்தினை முன்பினும் மும்முடி விளக்கம் உடையதாக செய்தமைத்த உடனே; புரத்தோர் கருத்தில் - சொன்னலாபுரத்து மக்களின் உள்ளத்திலே; ஆர்வமா கடலே வந்து

Koviloor Digital Library

எழுந்து ஓங்கியது - அல்லமன்மேல் அன்பாகிய பெருங்கடல் வந்து மிகுந்தது. (எ.று)

முடிபு - ஒருத்தன் ஆக்கிய பொற்பணி ஒன்றை, திருத்தவல்லவன் அதை அழித்து, சிறந்திடச் செயல்போல்; அல்லமன் புரத்தை நன்றுறப் புரிதலும். புரத்தோர் கருத்தில் ஆர்வமாகடல் வந்து எழுந்து ஓங்கியது. இரண்டு உவமை அணிகள் இப்பாடலில் வந்துள்ளன.

701. **ஒருகண் ஆற்றல்போய் ஒழிந்திட வலியறும் இராமன்**
இருகண் ணாலும்கண்டு உளச்செருக் கென்பதொன்
றின்றிப்
பெருகு நாணெனும் புனல்கொளப் பேரழல் விழுந்து
கருகு நாண்மலர் எனமுகம் கரிந்திது கருதும் 54

(இ.ள்) ஒருகண் ஆற்றல் போய் ஒழிந்திட - தனக்குள்ள மூன்று கண்களில் நெற்றிக்கண்ணாகிய ஒருகண்ணினுடைய வலிமை முற்றும் தொலைந்து போக; (இப்பொழுது) வலியறும் இராமன் - தனக்குள்ள ஆற்றல் அற்றுப்போன சித்தராமன்; இருகண்ணாலும் உளச்செருக்கு என்பது ஒன்று இன்றி கண்டு - ஏனைய இரண்டு கண்களாலும், மனச்செருக்குச் சிறிதும் இல்லாமல் அல்லமதேவனைப் பார்த்து; பெருகு நாண் எனும்புனல் கொள-மேலும் மேலும் பெருகுகின்ற,நாணம் என்னும் வெள்ள நீர் தன்னைப் பற்றிக் கொண்டு இழுக்க; பேர் அழல்விழுந்து கருகு நாண்மலர் எனமுகம் கரிந்து-பெரிய நெருப்பின் கண்விழுந்து வெந்து போன அன்று அலர்ந்த மலர்போல முகம் கருகி; இது கருதும் - இவ்வாறு எண்ணத் தொடங்கினான். (எ.று)

முடிபு - ஒருகண் ஆற்றல் போய் ஒழித்திட, வலி அறும் இராமன். செறுக்கின்றி இருகணாலும் கண்டு நாண் எனும் புனல்கொள கருகும் மலர் என முகம் கரிந்து இதுகருதும்.

அல்லம தேவர் பெருமை அறிந்து
அவரைசரண் புகுதல்
வேறு

702. **என்னொரு நுதல்வி ழித்தீ இவன்றனை இறைஞ்ச லாலே**
தன்னருள் அதனால் என்னைத் தடுத்துவந் தாள வேண்டிப்
பொன்னவிர் சுணங்கு பூத்த புணர்முலை மடந்தை பாகன்
இந்நில வரைப்பில் கோலம் இதுகொடு வந்தான் என்று 55

Koviloor Digital Library

(இ.ள்) என்ஒரு நுதல் விழித்தீ இவன்தனை இறைஞ்சலாலே - என்னுடைய ஒப்பற்ற நெற்றிக் கண்ணிலே யிருந்து தோன்றிய நெருப்பானது இவனைச் சுட்டு வருத்தாமல் வணங்கிய காரணத்தினாலே; பொன்னவிர் சுணங்கு பூத்த புண்முலை மடந்தை பாகன் - பொன்னின் நிறம் போல ஒளிபெற்று விளங்கும்தேமல் பூத்த, நெருங்கிய நகிலையுடைய, உமாதேவியை இடப் பாகத்திலே யுடையசிவ பெயருமான் தானே; தன் அருள் அதனால் என்னைத் தடுத்துவந்து ஆள வேண்டி - தன்னுடைய திருவருளாலே வந்து என்னைத் தடுத்தாட் கொள்ள வேண்டி; இந்நிலவரைப்பில் - இந்நில வுலகத்தினிடத்தே; கோலம் இது கொடு வந்தான் என்று - என் எதிரில் தோன்றும் இவ்வடிவம் கொண்டு வந்தான் என்று எண்ணி; (எ.று)

முடிபு - என் நுதல் விழிக்கு இவனை இறைஞ்சலால், மடந்தை பாகன் தன் அருளதனால் என்னைத் தடுத்து வந்து ஆள வேண்டி; இந்நிலவரப்பில் இதுகோலம் கொண்டு வந்தான் எனறு கருதி. இவன்-இது ஆகிய இரண்டும் முன்னிலைச் சுட்டாகிய அண்மைச் சுட்டு ஆம். நுதல் விழிக்கு இறைஞ்சலால்; இங்கு வந்தவன் மடந்தை பாகனாக வேண்டும் என்று கருதினான். இது மூன்றும் வேற்றுமைக் காரக வேது அணியின் பாற்படும்.

இதுவுமது

703. **தீயனேன் அறிவி லாமல் செய்பிழை பொறுத்தாட் கோடி**
பேயனான் ஒருவன் செய்த பிழையினை அவனை ஈன்ற
தாயலால் பொறுப்பார் யாவர் தாணுவே என்றி ராமன்
போயெனா ரமுதின் செந்தாட் போதினைப் பற்றி
வீழ்ந்தான் 56

(இ.ள்) தாணுவே தீயனேன் அறிவுஇல்லாமல் செய் பிழை பொறுத்து ஆட்கோடி - எதற்கும் அசையாநிலை பெற்றவனே தீமை நிரம்பிய நான் நல்லறிவு இல்லாமல் செய்தகுற்றங்களை எல்லாம் பொறுத்து ஆட்கொள்வாயாக; பேய் அன்னன் ஒருவன் செய்த பிழையினை - பேயை ஒத்த ஒருவன் செய்த குற்றங்களை; அவனை ஈன்ற தாயலால் பொறுப்பார் யாவர் - உலகமக்களுள் அவனைப் பெற்ற தாயை அல்லாமல் பொறுத்துக்கொள் பவர் வேறு யாவர் உளர்; என்று இராமன் போய் என் ஆர் அமுதின் செந்தாள் போதினைப் பற்றி வீழ்ந்தான் - என்று கூறிக் கொண்டு சித்த இராமன் சென்றுஎன்னுடைய அரிய அமிர்தம்

Koviloor Digital Library

போன்ற அல்லம தேவருடைய சிவந்த தாள் மலரைப் பற்றிக் கொண்டு விழுந்தான். (எ.று)

முடிபு - தாணுவே தீயனேன் அறிவிலாமல் செய் பிழையை பொறுத்து ஆட்கோடி , பேய் அன்னன், ஒருவன் செய்த பிழையினை அவனே ஈன்ற தாயலால் பொறுப்பார் யாவர் ? என்று இராமன் போய் அமுதின் செந்தாட் போதினைப் பற்றி வீழ்ந்தான். பேய் அன்னான் என்றசொல் பேயனன் எனத் தொகுத்தது. பேய் அன்னான் செய்த பிழையை அவனை ஈன்ற தாயலால் பொறுப்பார் யாவர் ? ஆகையினாலே யான் செய்த பிழையை நீ பொறுத்தாட் கொள்வாயாக என்று கூறினான். இது வேற்றுப் பொருள் வைப்பணியின்பாற்படும். (தாணு)-ஸ்தாணு என்ற வடசோல் தாணு என்றாயிற்று அசையாப் பொருள்.

704. தன்னின மாமி ராமன்
சரண்புகில் அவன்செய் தீமை
உன்னுவன் அலனெங் கோமான்
உடன்றுவந் திலங்கை காக்கும்
மன்னவன் கவின்கூர் வெள்ளி
மலையெடுத் தலைத்து [1]வந்து
பின்னவன் வணங்கி நிற்பப்
பிழையுளம் கொண்ட துண்டோ 57

(பா-ம்) [1]வந்த

(இ.ள்) எம் கோமான் -எம் தலைவனாகிய அல்லமதேவன்; தன் இனமாம் இராமன் சரண்புகில் அவன் செய்தீமை உன்னுவன் அலன் - தனக்கு அயலான் ஆகாமல்,இனமாகவே பொருந்தி இருக்கும் சித்தராமன் சரணம் அடைந்தால், அவன்செய்த பிழைகளை நினைப்பான் அல்லன்; இலங்கை காக்கும் மன்னவன் - இலங்காபுரியைப் புரந்து வரும் புரவலனாகிய இராவணன் என்னும் அசுரன்; உடன்று வந்து கவின் கூர் வெள்ளிமலை எடுத்து அலைத்து - முன்னே சினந்துவந்து, அழகுமிக்க வெள்ளி மலையைத் தூக்கி வருத்தி; பின் அவன் வந்து வணங்கி நிற்ப-பின்னர் அவ்விராவணன் தன் பிழையை உணர்ந்து கொண்டு,வந்து வணங்கி நிற்க; பிழை உளம் கொண்டது உண்டோ - அவன் செய்த பிழையை மனத்தில் கருதிக்கொண்டு, அவனுக்கு அருள் செய்யாது இருந்தது உண்டோ? (எ.று)

Koviloor Digital Library

முடிபு - இலங்கை காக்கும் மன்னவன் உடன்று வந்து மலைஎடுத்து அலைத்து பின்.அவன் வந்து வணங்கி நிற்ப; (இறைவன்) பிழையை உளம்கொண்டது உண்டோ? உளம் கொண்டிலன் அது போல எங்கோமான் தன் இனமாம் இராமன் சரண் புகில்,அவன் செய்தீமை உன்னுவனலன், இப்பாட்டு வேற்றுப் பொருள் வைப்பணியின்பாற்படும். சித்தராமன் வீரசைவ நேறியில், கா்ம மாா்க்கத்தையே கொண்டு ஒழுகியவன். அதனால் தன்னினமாம் என்றாா். வேற்றுமை இனமாகிய இராவணன் முன்னே தீங்கு செய்து, பின்வந்து சரணடைந்த போழ்து. அவன் செய்த தீமையை உள்ங்கொள்ளாமல் அருள்செய்தான். இங்கு தன்னினமாகிய இராமன் தீங்குசெய்து சரணடைந்தால் தீங்கினை உளங்கொள்வானோ? கொள்ளான் என்பது.

705. **செய்யதாள் மலரின் வீழ்ந்த சித்தனை அருளால் நோக்கி**
ஐயநீ எழுக நெஞ்சில் அஞ்சலை என்று கூறிக்
கையினால் எடுத்த ணைத்துக் கல்வியும் தவமும் மாய்க்கும்
வெய்யதாம் வெகுளி தன்னை விட்டிடென் றெந்தை
சொல்வான் 58

(இ.ள்) எந்தை - எம் ஞானத் தந்தையாகிய அல்லமதேவன்; செய்யதாள் மலரின் வீழ்ந்த சித்தனை -(பிழை பொறுத்து ஆட்கொள்வாயாக என்று கூறி) சிவந்த திருவடியாகிய மலரின்கண் வீழ்ந்து வணங்கிய சித்தராமனை; அருளால் நோக்கி அருள் எண்ணங் கொண்டு பாா்த்து; ஐய நீ எழுக நெஞ்சில் அஞ்சலை என்றுகூறி - பெரியோனே நீ எழுவாக, மனத்தில் அச்சம் கொள்ளாதே என்று சொல்லி; கையினால் எடுத்து அணைத்து - தன் கைகளால் பற்றி எடுத்து அணைத்துக்கொண்டு; கல்வியும் தவமும் மாய்க்கும் வெய்யதாம் வெகுளிதன்னை விட்டிடு என்று சொல்வான் - துறவற நெறிக்குள்ள கல்வி அறிவையும்; தவத்தையும் அழிக்கின்ற கொடிதாகிய் சினத்தை விட்டு விடுவாயாக என்று முதல் உபதேசத்தைக் கூறி மேலும் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிபு - எந்தை, தாள் மலரில் வீழ்ந்த சித்தனை அருளால் நோக்கி; ஐய நீ எழுக; அஞ்சலை; என்று கூறி கையினால் எடுத்து அணைத்து கல்வியும் தவமும் மாய்க்கும் வெகுளி தன்னை விட்டிடு என்று சொல்வான். திருவள்ளுவர் துறவற இயலில் வெகுளாமையைக் கூறுகின்றாா், எனவே இல்லறத்தாரைக் காட்டிலும் துறந்தாா்க்கு

Koviloor Digital Library

வெகுளாமை வேண்டும் என்பதாயிற்று. அல்லம தேவர் சித்தராமனுக்கு அதனையே முதல் உபதேசமாகக் கூறுகின்றார்.

706. வலியவன் இடத்தும் ஒத்தான் மாட்டினும் வெகுளிகாத்தல்
பொலிவுசெய் அறமதென்ன பொருந்துறாது அனையர் தம்பால்
நலிவுறு வெகுளி செல்லாது ஆதலால் நலியல் ஆற்றா
மெலியவன் இடத்தில் காக்கும் வெகுளியே அறம தென்பர் 59

(இ.ள்)வலியவன் இடத்தும் ஒத்தான் மாட்டினும் - தன்னைக் காட்டிலும் வலிமை யுள்ளவனிடத்திலும், தன்னை ஒத்த வலிமை யுடையவனிடத்திலும்; வெகுளி காத்தல் பொலிவு செய் அறம்அது என்னப் பொருந்துறாது - சினவாமல் காத்துக் கொள்ளுத லாகிய அது சிறந்த அறம் என்று கூறுதற்குப் பொருந்துறாது; (ஒவ்வாது) ஏன் பொருந்துறாது எனில்; அனையர்தம் பால் நலிவுறு வெகுளி செல்லாது - மேலே கூறிய அவ் இருவர் பாலும் துன்பத்தை உண்டாக்கும் சினம் செல்லாது; ஆதலால் - ஆகையினாலே; நலியால் ஆற்றா மெலியவன் இடத்தில் காக்கும் வெகுளியே அறம் அது என்பர் - துன்பத்தை தாங்கமுடியாத வலிமை இல்லாத மெலியவனிடத்தில் காக்கப்படும் சினமே; பொலிவு செய் அறம் அது - என்று அறிஞர் கூறுவர்.(எ.று)

முடிபு - வலியன் இடத்தும், ஒத்தான்மாட்டினும் வெகுளியைக் காத்தல் அறம் என்னப் பொருந்துறாது. அனையர்தம்பால் வெகுளி செல்லாது; ஆதலால், மெலியவன் இடத்தில் காக்கும் வெகுளியே அறமதென்பர்.

செல்லிடத்துக்காப்பான் சினங்காப்பான் அல்லிடத்து
காக்கில் என்காவாக்கால் என் (301 குறள்)

என்னும்குறள் உரையில் பரிமேலழகர். செல்லிடம் அல்லிடம் என்றது தவத்தால் தன்னின் மெலியாரையும்.வலியாரையும். வலியார் மேல் காவாவழியும் அதனால் அவர்க்கு வருவதோர்தீங்கு இன்மை யால், காத்தவழியும் அறனில்லை என்பார் காக்கில் என் காவாக்கால் என் என்றார்.

707. வைதவன் தன்னை நன்று வாழ்த்தினன் எனவும் தீய
செய்தவன் தன்னை நல்ல செய்தவன் எனவும் கொள்வோன்

Koviloor Digital Library

கைதவம் அகன்ற முத்தி கண்டவன் அவ்வாறு உன்னான்
பொய்தவன் [1]என்ப தென்று புகன்றனர் புலவர் அன்றே 60

(பா-ம்) [1]என்பவென்று

(இ.ள்)வைதவன் தன்னை நன்று வாழ்த்தினன் எனவும் - தன்னைப் பழித்துப் பேசியவனை மிகவும் புகழ்ந்து பேசியவன் எனவும்; தீய செய்தவன் தன்னை நல்ல செய்தவன் எனவும் - தனக்கு கொடுஞ்செயல் செய்தவனை நற்செயல் செய்தவன் எனவும்; கொள்வோன் கைதவம் அகன்ற முத்தி கண்டவன் - இவ்வாறு கருதுகின்ற துறவியே, சிறுமை யான தவத்திலிருந்து நீங்கி மேலான முத்தி நிலைகண்டவன் ஆவன்; அவ்வாறு உன்னான் பொய்தவன் என்பது என்று புகன்றனர் புலவர் - அவ்வாறு கருதாதவன், பொய்தவன் என்பது ஆகுவன், என்று புலவர் புகன்றனர்.(எ.று) அன்று - ஏ - அசை.

முடிபு - வைதவனை வாழ்த்தினன் எனவும்,தீயசெய்தவனை நல்ல செய்தவன் எனவும், கொள்வோன் முத்திகண்டவன். அவ்வாறு உன்னான்; பொய்தவன் என்பது என்று புலவர் புகன்றனர். வைதவனிடத்திலும்,தீமை செய்தவனிடத்திலும் சினம் கொள்ளல் கூடாது என்பது கருத்து.

708. **பெரியவர் தம்மை காய்ந்தான் பிறங்கல் கல் லியகோல் ஒப்பான்**
புரிவன புரியப்பட்டு புலம்புவன் ஒத்தார்க் காய்ந் தான்
எரிநர கதனில் வீழ்வன் இழிந்தவர் காய்ந்தான் என்றால்
ஒருவர்தம் இடத்தும் சீற்றம் உறாமையே நன்று மாதோ 61

(இ.ள்) பெரியவர் தம்மைக் காய்ந்தான் பிறங்கல் கல்லியகோல் ஒப்பான் - வலியவராகிய பெரியவரை சினந்து தீங்குசெய்தவன் மலையை தோண்டிய கோலினை ஒப்பவன் ஆவன்; ஒத்தார் காய்ந்தான் புரிவனபுரியப் பட்டு புலம்புவன் - வலிமையில் ஒத்தவரை சினந்து தீங்கு செய்தவன், தன்னால் செய்யப்பட்டன வற்றை அவரால் செய்யப்பட்டு அதனால் வருந்தி நிற்பன்; இழிந்தவர் காய்ந்தான் எரிநரகு அதனில் வீழ்வன் - வலிமையில் குன்றியவனாகிய தாழ்ந்தோனைச் சினந்து தீங்கு செய்தவன் தெய்வத்தின் தண்டிப்பிற்கு உட்பட்டு எரியும் நரகத்தில் வீழ்ந்து வருந்துவன்; என்றால் - இம்மூன்று விதமான காரணங்களால் ஒருவர்தம் இடத்தும் சீற்றம் உறாமையே நன்று - பெரியவர் ஒத்தர்

Koviloor Digital Library

இழிந்தவர் என்கின்ற ஒருவரிடத்தும் சினங்கொண்டு தீங்கு செய்யாமையே நன்றாகும். (எ.று) மாது - ஓ.அசைகள்.

முடிபு-பெரியவரைக் காய்ந்தான் பிறங்கலை கல்லிய கோலினை ஒப்பான்; ஒத்தார் காய்ந்தான் புரிவன புரியப்பட்டு புலம்புவன் இழிந்தவர் காய்ந்தான் நரகதனில் வீழ்வன் என்றால் ஒருவரிடத்தும் சீற்றம் உறாமையே நன்று, புரிவன - வினையாலணையும் பெயர்.

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும் (303 குறள்)

என்னும் குறள் உரையில் வெகுளுதல்,வலியார்,ஒப்பார்,எளியார் மூவர் மட்டும் ஆகாமையின் யார் மட்டும் என்று கூறினார் பரிமேழகர்.அவர் கருத்தை இங்கே நோக்குக.

709. **யாவர்க்கும் ஒப்ப நன்றாம் என்னினும் சினமி லாமை**
மூவர்க்கும் அரிய செய்யும் [1]முனிவர்க்குச் சிறந்த தென்று
தேவர்க்கும் அரிய இன்பம் சித்தரா மப்பேர் அண்ணல்
மேவற்கு [2]வடிவம் கொண்டு மேவிய விமலன் சொன்னான்
62

(பா-ம்) [1]முனிவர்க்குஞ்; [2]வடிவு கொண்டு

(இ.ள்) சினம் இலாமை யாவர்க்கும் ஒப்ப நன்றாம் என்னினும் - வெகுளாமை எல்லா மக்களுக்கும் ஒவ்வும் படியான நல்ல அறமாயினும்; மூவர்க்கும் அரிய செய்யும் முனிவர்க்குச் சிறந்தது - பிரமன் முதலான மூன்று தேவர்க்கும் செய்ய முடியாத அரிய செயலைச் செய்கின்ற துறவிகளாகிய மௌன சீலர்க்கே சிறந்த அறமாகும்; என்று விமலன் சொன்னான் - என்று குற்ற மற்றவனாகிய அல்லமதேவன் கூறினான்; எத்தகைய விமலன் எனின்? தேவர்க்கும் அரிய இன்பம் சித்தராமப்பேர் அண்ணல் மேவற்கு வடிவம் கொண்டு மேவிய விமலன் - பிரமன் முதலான தேவர்க்கும் கிடைத்தற்கரிய இன்பத்தை சித்தராமன் என்கின்ற பெயரை உடைய பெரியோன் பொருந்துதற்கு திருக்கோலம் கொண்டு எழுந்தருளிய அல்லமதேவன் என்க; (எ.று)

முடிபு - சினம் இலாமை யாவர்க்கும் ஒப்பநன்றாம் என்னினும்; (அது)முனிவர்க்குச் சிறந்தது என்று சித்தராமற்கு விமலன் சொன்னான். ஏ என்னும் பிரிநிலை ஏகாரத்தை முனிவர் என்னும் சொல்லுடன் கூட்டிக் கொள்க. இக்கருத்தால்தான் திருவள்ளுவர், எல்லார்க்கும் உரிய

Koviloor Digital Library

வெகுளாமையை துறவறஇயலில் துறவிகளுக்கே சிறப்பாகக் கூறினார், இப்பாட்டு வெகுளாமையை துறவற இயலில் வைத்ததற்கு விளக்கம் கூறுதற்கு வந்ததாகும்.

710. **அல்லமன் அறைந்த மாற்றம் அறிந்துநஞ் சித்த ராமன்**
சொல்லுவன் முத்தி எய்தும் துணையசா தனங்கள் எல்லாம்
இல்லையென் னிடத்தி லேனும் என்னைநீ வலிந்தாட்
கொள்ள
[1]நல்லவ னாகச் செய்த நன்மையே நன்மை என்று 63

(பா-ம்) [1]நல்லவனாக்க;

(இ.ள்) நம் சித்தராமன் அல்லமன் அறைந்த மாற்றம் அறிந்து - நம்முடைய சித்தராம ஐயர் அல்லமதேவர் கூறிய மொழிப் பொருளை தெரிந்து கொண்டு; சொல்லுவன் - சொல்லத் தொடங்கினான்; முத்தி எய்தும் துணைசாத னங்கள் எல்லாம் என்னிடத்தில் இல்லை ஏனும் - வீடுபேற்றை அடைவதற்கு துணைபுரிவனவாகிய,கருவிகள் எல்லாம் என்னிடத்தில் சிறிதும் இல்லை என்றாலும்; என்னை நீ வலிந்து ஆட்கொள்ள - (நான் உன்னிடம் வந்து ஆட்படாமல்)நீயே என்னிடம் வலியவந்து ஆட்கொள்ள வேண்டி; நல்லவனாகச் செய்த நன்மையே நன்மைஎன்று - (முதலில் சினம் முதலான தீய பண்புகள் இல்லாத) நல்லவன் ஆகும்படி திருத்துதல் செய்த செயலே நல்ல செயலாகும் என்று கூறி; (எ.று)

முடிபு - சித்தராமன் அல்லமன் அறைந்த மாற்றத்தை அறிந்து சொல்லுவன். என்னிடத்தில் சாதனங்கள் எல்லாம் இல்லையேனும் நீ என்னை வலிந்து ஆட்கொள்ள(முன்னே) நல்லவனாகச் செய்த நன்மையே நன்மை என்று கூறி. முத்தி சாதனங்கள் நான்கு எனக்கூறுவர். ''உரைத்த சாதன சதுட்டயம், நித்த அநித்தப்படு பொருளின் விவேகம் இகபர போக விராகம், பழிப்பறிய சமை முதலிய முமூட்சுத்துவம் எனப்படுமால்'' (வேதாந்த சூடாமணி) மெய்ப் பொருள் பொய்ப் பொருள் உணர்வு; இம்மை இன்பம், மறுமை இன்பங்களில் பற்று அறுதல்;சமைமுதலான ஆறுகுணங் களைப் பெற்றிருத்தல்; வீடுபேற்றில் விருப்பம் என்பனவாகும். இக்கருத்து வேதாந்த சூடாமணி 6 ம் பாடலால் உணர்க; என்னை நீ வலிந்து ஆட்கொள்ள வேண்டி,முதலில் சினம் முதலிய தீய குணங்கள் இல்லாத,நற்பண்பு உள்ளவனாக ஆக்கிக் கொண்டாய் என்பது கருத்து.

Koviloor Digital Library

711. கருத்தழி கடமி றங்கு கவுள்கரி வலிந்து பற்றி
திருத்துபு தன்கால் ஏவும் செயல்செயக் கொள்வ தன்றி
ஒருத்தல்வந் தறிந்து தானே உறவுகொண் டிடுவதுண்டோ
தெரித்திடில் அடிய னேனின் திருவடிக் கத்தி றத்தேன் 64

(இ.ள்) கருத்து அழி கடம் இறங்கும் கவுள்கரி - உள்ளம் சிதைதற்கு ஏதுவாய் மதம் வடியும் கன்னத்தையுடைய யானையை; வலிந்து பற்றி திருத்துபு தன்கால் ஏவும் செயல் செயக்கொள்வது அன்றி - ஒருவர் தம் ஆற்றலால் அதைப் பிடித்து, திருத்தி தன்னுடைய காலால் ஏவிவிடுகின்ற செயல்களை அவ்யானை செய்யும்படி பழக்கிக் கொள்வதன்றி; ஒருத்தல் வந்து அறிந்து தானே உறவு கொண்டிடுவது உண்டோ - (அங்ஙனம் இன்றி) அந்த யானையே தானாக வலியவந்து. செய்ய வேண்டிய செயல்களைத் தானே அறிந்து தானே உறவு கொண்டிடுதல் உண்டோ?; (இல்லை என்க) தெரித்திடில் நின் திருவடிக்கு அடியனேன் அத்திறத்தேன் - ஆராய்ந்து கூறில். உன்திருவடிக்கு ஆட்படும் திறத்தில் நான் அவ்யானை போன்றவன் ஆவேன்.(எ.று)

முடிபு - கரியை வலிந்து பற்றி திருத்துபு, செயல் செயக்கொள்வ தன்றி,ஒருத்தல் தானேவந்து தானே அறிந்து, தானே உறவு கொண்டிடுவதுண்டோ? தெரித்திடில் நின் திருவடிக்கு அடியனேன் அத்திறத்தேன். தானே என்ற சொல்லை வந்து, அறிந்து என்ற சொற்களோடும் கூட்டிப் பொருள் கொள்க.

712. அடன்மலி வீரன் வீரம் அவன்எதிர் மலைந்து நின்றோன்
[1]படைமிசை கொண்டு காணப்படுமது போல வுன்றன்
கடல்மலி அருளின் ஆற்றல் கண்டிடப் படுமிங் கென்றன்
கொடுமையின் மிகையால் என்று குடந்தம்பட்டு அழுங்கிக்
கூறி 65

(பா.ம்) [1]படமிசை

(இ.ள்) அடல்மலி வீரன் வீரம் - வெற்றி மிகுந்த போர் வீரனுடைய வீரவுணர்ச்சியானது; அவன் எதிர் மலைந்து நின்றோன் படைமிசை கொண்டு காணப்படும் அது போல; அவனுடைய (எதிரிப்படையில்) முன்போரிட்டு நின்றோனுடைய படையின் மேல் வைக்கப்பட்டு உணரப் படுதல் போல; உன்தன் கடல்மலி அருளின் ஆற்றல் - உன்னுடைய கடல் போல் மிகுந்த திருவருளின் ஆற்றலானது; இங்கு என்றன் கொடுமை யின் மிகையால் கண்டிடப்படும் என்று குடந்தம்பட்டு அழுங்கிக்கூறி -

Koviloor Digital Library

இவ்விடத்தே எனது மிகுந்த கொடுமைச் செயலால் கண்டு கொள்ளப் படுவதாயிற்று என்று வழிபட்டு இரங்கிக் கூறி (எ.று)

முடிபு = வீரன் வீரம், எதிர் மலைந்து நின்றோனது, படை கொண்டு காணப்படுவது போல, உன்றன் அருளின் ஆற்றல் என் மிகுந்த கொடுமையால் கண்டிடப்படும் என்று குடந்தம்பட்டு அழுங்கிக்கூறி.

குடந்தம் என்பதற்கு வழிபட்டு என்று நச்சர் உரை. வணக்கம்பட்டு என்றும் உரைப்பர். குடவென்பது தட என்பது போல வளைவை உணர்த்துவதோர் உரிச்சொல் ஆதலின் அதனடியாகப் பிறந்த பெயருமாம்.

இதன் பின்னே குடந்தமாவது ''நால்விரல் முடக்கிப் பெருவிரனி ருத்தி நெஞ்சிடை வைப்பது குடந்தம் ஆகும்'' என்று ஓர் பிரதியில் உள்ளது.

713. என்குறை நினையா தெந்தாய் இனித்திரு வுளமி ரங்கி
நன்குறு முத்தி சேரும் நன்னெறி காட்டு கென்று
தன்குறை இரந்து [1]ளைந்து தனைநிகர் சித்த ராமன்
முன்கரை யிறந்த அன்பால் முதல்வனை வணங்கி னானால்
66

(பா-ம்) [1]நைந்து

(இ.ள்)தனைநிகர் சித்தராமன் - தனக்குத்தானே உவமையாகும் சித்தராமனானவன்; எந்தாய் - எம் ஞானத் தந்தையே!; என்குறை நினையாது இனித்திரு உளம் இரங்கி - என்னுடைய குறைபாடுகளை எல்லாம் கருதாமல், இப்பொழுது உன் சிறந்தமனம் இரங்கப்பெற்று; நன்கு உறு முத்தி சேரும் நல்நெறி காட்டுக என்று -நன்மையே வரும் வீடுபேற்றையான் சேருவதற்குரிய நல்ல வழியினை உபதேசிப்பாயாக என்று கூறி; தன்குறை இரந்து உளைந்து முன்கரை இறந்த அன்பால் முதல்வனை வணங்கினான் - தனக்கு வேண்டிய குறையானவற்றை இரந்துகூறி மனம் நெகிழ்ந்து முன்னே எல்லையற்ற அன்பினாலே அல்லமதேவனை வணங்கினான். ஆல்- அசை (எ.று)

முடிபு - சித்தராமன், எந்தாய்! என்குறையை நினையாது இரங்கி முத்திசேரும் நெறி காட்டுக என்று;தனது குறையை இரந்து உளைந்து அன்பால் முதல்வனை வணங்கினான், தன்குறை-தனக்கு இன்றியமை யாமல் வேண்டுவன;

Koviloor Digital Library

714. வணங்கிய அவனை ஞான வாரிதி அருளால் நோக்கி
இணங்கிய பருவம் [1]காணும் இவன்றனக் கின்ப முத்தி
அணைந்திடு நெறியீ தென்ன அறைவமென்று [2]எத்துட் கொண்டு
பிணங்குறு பிறவி என்னும் பிணிமருந் தனையான் சொல்வான் 67

(பா-ம்) [1]காணூ; 2 உளத்துக் கொண்டு

(இ.ள்) ஞானவாரிதி - ஞானக்கடல் போன்ற அல்லமதேவன்; வணங்கிய அவனை அருளால் நோக்கி - தன்னை வணங்கியசித்த ராமனை, அருட்கண்ணாலேபார்த்து; இணங்கிய பருவம் காணும் இவன் தனக்கு - பொருத்தமான பக்குவநிலை காணப்பட்டுள்ள இச்சித்த ராமனுக்கு; இன்பமுத்தி அணைந்திடும் நெறி ஈது என்ன அறைவம் என்று உளத்துள் கொண்டு - பேரின்பத்தைத் தரும் வீடுபேற்றினை பெறுவதற் குள்ள வழியை ஈது என்று கூறுவோம் என மனத்துள் கருதிக் கொண்டு பிணங்குறு பிறவி என்னும் பிணிமருந்து அனையான் சொல்வான் - மாறுபாட்டைப் பொருந்திய பிறவி என்னும் நோய்க்கு மருந்தினை ஒத்த அல்லமதேவன் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிபு - ஞானவாரிதி, வணங்கியஅவனை நோக்கி,பருவம் காணும் இவன்தனக்கு முத்தி அணைந்திடும் நெறி ஈது என்று அறைவம் என்று உளத்துள் கொண்டு பிறவிஎன்னும் பிணிக்கு மருந்து அனையான் சொல்வான். மாணவனுக்கு உபதேசம் செய்யுங்கால், அவனுக்கு ஞானம் உண்டாக வேண்டும் எனக் கருதுதலும், நோக்குதலும், முன்னே செய்கின்ற தீட்சையாகும், இதனை ''கைவல்யம்தன்னகம் கருதி நோக்கி'' என்று கூறும் மானச தீட்சையும் சச்சு தீட்சையும் கூறினார்.

ஞானாசிரியன் இலக்கணம் கூறுகின்றார்.

715. பருவமுற் றிலர்க்கு முக்கட் பகவனா கமத்தின் உண்மைப்
பெருமையைப் பொருளை எண்ணிப் பெருமிதத் துரைப்பில் அன்னான்
குரவரில் பதடி என்ப குறித்துநல் பருவம் நோக்கி
அருள் செயில் குரவ சிங்கம் அவனெனா அறைவன் ஐயன் 68

(இ.ள்) முக்கண் பகவன் ஆகமத்தின் உண்மைப் பெருமமையை - மூன்று கண்ணையுடைய சிவபெருமான் அருளிய சிவாகமத்தின்

Koviloor Digital Library

உண்மை இயல்பினை; பருவம் முற்றிலர்க்கு - பக்குவம் நிறையாத மாணவர்க்கு பொருளை எண்ணி - பொருள் வருவாய் ஒன்றையே கருதி; பெருமிதத்து உரைப்பில் - பெருமிதம் கொண்டு கூறில்; அன்னான் குரவரில் பதடி என்ப - கூறியஅவனை குருவர்க்கங்களுள் பதர் போன்றவன் என்று அறிஞர் கூறுவர்; குறித்து நல் பருவம் நோக்கி - ஆராய்ந்து மாணவனுடைய நல்ல பக்குவ நிலையைப் பார்த்து; அருள் செயில்-சிவாகம உண்மையை உபதேசித்தால்; அவன் குரவசிங்கம் எனாஅறைவன் ஐயன் - அத்தகையோன் குருவர்க்கங்களுள் சிங்கம் போன்றவன் ஆவன் என்று கூறிவிட்டு அல்லமதேவன் மேலும்கூறத் தொடங்கினான். (எ.று)

முடிபு - பகவன் ஆகமத்தின் பெருமையை பருவம் முற்றிலர்க்கு பொருளை எண்ணி உரைப்பின் அன்னான் குரவரில் பதடிஎன்ப; பருவம் நோக்கி குறித்து அருள் செயில் அவன் குரவசிங்கம் எனா; ஐயன் அறைவன். பருவம் உற்றிலர்க்கு எனப்பிரித்தும் உரைகொள்ளலாம். உண்மைப் பெருமை என்பது சிவாகமங்கள் கூறும் பொது, உண்மை என்னும் இரண்டு பகுப்புள்; இரண்டாவதாகக் கூறப்பட்ட உண்மை யையே இங்கு குறிப்பிடப்பட்டது.

716. **உரைசெயில் பரம ஞானம் ஒன்றுமே முத்திக் கேது**
சரிதைநல் கிரியை யோகம் தாமொரு மூன்றும் ஞானம்
மருவுதற் கேது என்று மறைபுகன் றுரைக்கும் இந்தக்
கருவியைப் பொருளென் றெண்ணிக் களிப்பவர் கயவர்
அன்றே 69

(இ.ள்) உரைசெயில் - சிவாகம உண்மை இயல்பைக் கூறத் தொடங்கின்; பரமஞானம் ஒன்றுமே முத்திக்கு ஏது - பாசஞானம்; பசுஞானம்,சிவஞானம் என்னும் மூன்று ஞானங்களுள்; மேலானஞானம் என்று கூறப்படும் சிவஞானம் ஒன்றுமே வீடுபேற்றைப் பெறுவதற்குக் காரணமாகும்; சரிதைநல் கிரியை யோகம்தாம் ஒருமூன்றும் - சரியை கிரியை யோகம் என்னும் இம்மூன்றும்; ஞானம் மருவுதற்கு ஏது என்று மறை புகன்று உரைக்கும் - பரம ஞானமாகிய சிவஞானத்தைப் பெறுவதற்கு இவை காரணமாகும் என்று சிவாகமங்கள் விரும்பிக்கூறும்; இந்தக் கருவியைப் பொருள் என்று எண்ணிக் களிப்பவர் கயவர் - இந்த சாதனங்களையே பொருளாகிய சாத்தியம் என்று எண்ணி அவற்றையே செய்து கொண்டு மகிழ்ந்திருப்பவர் நன்றறியாத கீழ்மையான மக்கள் ஆவர் (எ.று) அன்று-ஏ-அசை.

Koviloor Digital Library

முடிபு - உரைசெயில் பரமஞானம் ஒன்றுமே முத்திக்கு ஏதுவாம். சரியை முதலான மூன்றும் ஞானத்திற்கு ஏதுவாகும். என்று மறைபுகன்று உரைக்கும்.(அங்ஙனம் இருப்ப) இந்தக் கருவியை பொருள் என்று களிப்பவர் கயவர். வீடு அடைதற்கு ஞானம் ஏது; ஞானம் அடைவதற்கு சரியை கிரியை, யோகம் மூன்றும்ஏது. (அதனாலே) சரியை,கிரியை, யோகத்தால் ஞானத்தையும்; ஞானத்தால் வீடுபேற்றையும் அடைய வேண்டும் என்க. இங்குபொருள் என்பது செயப்படு பொருள். இதைச் சாத்தியம் என்பர். பத்தன் சரியை கிரியை பயில் உற்று; சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்; உய்த்த நெறியுற்று உணர்கின்ற ஞானத்தால்; சித்தம் குருவருளாா்சிவம் ஆகுமே. என்பதனால் உணர்க. (திரு மந் - 1455)

717. கருமமும் யோகமும் [1]தாமும் கரணததைப் புனிதம் ஆக்கிப்
பொறும்இடர் வாயில் தோறும் புக்குழல் கறங்கு போலத்
தெருமரா துண்ணி றுத்தும் தெளிந்தவக் கரணம் தன்னால்
நிருமலன் ஆகும் ஈசன் நித்தனென் றுணர்வு திக்கும் 70

(பா-ம்) [1]தானும்

(இ.ள்) கருமமும் யோகமும் தாமும் - சரியை, கிரியை என்னும் கருமமும்; அட்டாங்க யோகமும்; ஆகிய இவைகள் எல்லாம்; கரணத்தைப் புனிதம் ஆக்கி - முன்னே அந்தக்கரணங்களை தூய்மை ஆக்கி; பொறும் இடர்வாயில் தோறும் புக்குஉழல் கறங்கு போல தெருமராது உள் நிறுத்தும் - வறுத்தும் துன்பத்தை உண்டாக்குகின்ற ஐம்புலவழிகள் தோறும் புகுந்து, திரியும் காற்றாடிபோல சுழலாமல் இருக்கும்படி செய்து அந்தக் கரணங்களை உள்ளே நிறுத்திவிடும்; தெளிந்த அக்கரணம் தன்னால் - தூய்மையாகி உள்நின்று; தெளிவடைந்த அந்தக் கரணத்தால்; நிருமலன் ஆகும் ஈசன் நித்தன் என்று உணர்வு உதிக்கும் - பாசபந்த மில்லாத அப்பொழுது ஈசனே அழிவற்ற இறைவன் என்கின்ற உண்மை உணர்வு தோன்றும் (எ.று)

முடிபு - கருமமும் யோகமும் தானும்,கரணத்தைப் புனிதமாக்கி, கறங்குபோல் வாயில் தோறும் தெருமராது, உள்நிறுத்தும். (உள்நின்ற வழி) தெளிந்த அக்கரணத்தால். நிருமலனாகிய ஈசனே நித்தன்என்ற (உண்மை) உணர்வு உதிக்கும். நிருமலன் ஆகும் ஈசன் நித்தனென்ற உணர்வு உதிக்கும் என்றதால் மலசம்பந்தம் உடையவராய் பிறந்து இறந்து தொழில் செய்கின்ற, இந்திரன் முதலான தேவர்களை தெய்வம் என்ற இவர்கருதார் இக்கருத்தை,

Koviloor Digital Library

மாயையால் வருமொரு வாழ்வு பெற்றுள
சேயநான் முகன் முதல் தெய்வம் விட்டொரு
தூய நாயகியபர சிவனை துன்னுதல்
ஆயின் ஆகமமது சரணம் ஆகுமால்

(சரணாகட்ததலம்) என்ற சித்தாந்த சிகாமணி பாடலால் அறிக.

718. நித்தியன் நிமலன் என்னு நினைவுறின் அனித்த மாகிப்
பொய்த்தழி யுடம்பு டம்பை பொருந்திய பொருள் வெறுத்து
மெய்த்தருள் குரவன் தன்னை விரும்பினன் சென்றுசார்ந்து
தத்துவம் உதறி நின்ற தனியறி வினையே காணும் 71

(இ.ள்) நிமலன் நித்தியன் என்னும் நினைவுறின் - மலம்இல்லாத ஈசனே அழிவற்றவன் என்னும் எண்ணம் உண்டாயின்; அனித்தம் ஆகிபொய்த்து அழிஉடம்பு உடம்பைப் பொருந்திய பொருள் வெறுத்து - அழிவுடையதாகி பொய்யாக சிலகாலம் விளங்கி அழிந்து போகின்ற தேவவுடல் மக்களுடல் விலங்கு உடல், நரகர் உடல் என்னும் நால்வகை வுடம்புகளையும்; இவ் உடம்புகளைப் பற்றிய பொருள்களையும். பொய்ப் பொருள் என்று வெறுத்து நீக்கி; மெய்த்து அருள் குரவன் தன்னை விரும்பினன் சென்று சார்ந்து - உண்மையான பொருளை அறிவுறுத்தி அருள் செய்கின்ற ஞானாசிரியனை விரும்பிச் சென்று அடைந்து, தத்துவம் உதறி - தத்துவப் பொருள்களை எல்லாம் பிரித்துப் பிரித்து ஆராய்ந்து அவைகள் உண்மைப் பொருள்கள் அல்ல என அவற்றை நீக்கிவிட்டு; நின்றதனி அறிவினையே காணும - உண்மை யாகி நின்ற ஒன்றாகிய அறிவுப் பொருளையே தன்ஞான உணர்வால் காண்பான்.(எ.று)

முடிபு - நிமலன் நித்தியன் என்னும் நினைவுறின், அநித்தியமாகி அழியும் உடம்பு உடம்பைப் பொருந்திய பொருள் (ஆகிய இவற்றை) வெறுத்து குரவன்தன்னை விரும்பிசென்று சார்ந்து தத்துவம் உதறி நின்றதனி அறிவினையே காணும். விரும்பினன் என்ற முற்று எச்சப் பொருட்டு.

தத்துவம் உறுதலை இப்பாட்டு விளக்கிக் கூறும்

719. புலன்களை [1]ஒழித்த போதே பொறிகளும் பூதம் ஐந்தும்
கலங்குறு கரணம் நான்கும் கலாதியும் சுத்தம் ஐந்தும்

Koviloor Digital Library

விலங்குறும் அடியில் வைத்த வெறுங்குடம் தள்ளில் மேல்மேல்
மலங்குற ஒருங்க டுக்கும் மட்கலம் விழுத லேபோல் 72

(பா-ம்) [1]எடுத்த போதே

(இ.ள்) அடியில் வைத்த வெறும்குடம் தள்ளில் - எல்லா வற்றிற்கும் கீழே வைத்த பொருளில்லாத குடத்தை, பிடித்துத்தள்ளி நீக்கினால்; மேல்மேல் மலங்குற ஒருங்கு அடுக்கும் மட்கலம் விழுதலே போல் - அவ்வெறுங்குடத்துக்கு மேலே மேலே கெடும்படி ஒரு சேர அடுக்கப் பட்ட மட்கலங்கள் எல்லாம் கீழே விழுந்து விடுதலைப் போல; புலன்களை ஒழித்தபோதே - ஐம்புலப் பொருளில் பற்றுசெய்யாமல் நீக்கிய பொழுதே; பொறிகளும் - ஐம்புலப் பொருளைக் கவர்கின்ற ஐம் பொறிகளும்; பூதம் ஐந்தும்- அவற்றிற்கு இடமான ஐம்பூதங்களும்; கலங்குறு கரணம் நான்கும் - ஐம்புலப் பொருளை உணர்கின்ற கலக்கம் செய்கின்ற அந்தக்கரணங்கள் நான்கும்; கலாதியும்-அந்தக் கரணங் களைத் தொழில்படுத்துகின்ற வித்யா தத்துவமாகிய கலை முதலான தத்துவங்களும்; சுத்தம் ஐந்தும் - வித்தியாதத்துவங்களைத் தொழில் படுத்துகின்ற சிவதத்துவங்கள் ஐந்தும்; விலங்குறும் - ஆகிய இத் தத்துவங்கள் எல்லாம் நீங்கும்; (எ.று)

முடிபு - அடியில் வைத்த வெறுங்குடத்தைத் தள்ளின், மேல்மேல் ஒருங்கு அடுக்கியமட்கலம் விழுதலை போல், புலன்களை ஒழித்த போதே பொறிகளும்; ஐந்து பூதங்களும், நான்குகரணமும் கலாதியும் சுத்தம் ஐந்தும்; விலங்குறும்.

தத்துவம் உதறுதலுக்கு வேறு ஒரு வழி

720. இந்தியம் [1]ஓரொன் றாய்விட் டிடின்மற்றை ஒன்றுசாரும்
முந்திய மனம ழிப்ப முற்றும்போம் மணிய பாம்பின்
ஐந்தலை களினுள் ஒன்றை அரிந்திடின் மற்றொன்றாலஞ்
[2]சிந்திடும் மிடற ரிந்தால் தீர்ந்திடும் ஒருங்கு மாதோ 73

(பா-ம்) [1]ஒரோ ஒன்றாய்; [2]சிந்துறும்

(இ.ள்) மணியபாம்பின் ஐந்தலைகளின்உள் - தலையிலே மாணிக்கத்தையுடைய ஐந்தலை நாகத்தின் ஐந்துதலைகளுள்; ஒன்றை அரிந்திடில் - ஒருதலையை மட்டும் அரிந்து விட்டால்; மற்று ஒன்று ஆலம்சிந்தும் - அரியாத மற்றொரு தலை நஞ்சை விளைவிக்கும்;

Koviloor Digital Library

(ஆனால்) மிடறு அரிந்தால் - அப்பாம்பின் கழுத்தை அரிந்து விட்டால் ஒருங்கு தீர்ந்திடும் - எல்லாத்தலைகளும் விஷத்தைச் சிந்தாது போய் விடும்; (அதுபோல) இந்தியம் ஓரொன்றாய் விட்டிடில் - ஐம்புலன் களுடன்கூடிய ஐம்பொறிகளாகிய இந்திரியங்கள் ஒவ்வொன்றாக விட்டுவிட்டால்; மற்றை ஒன்று சாரும் - விடாத மற்றொன்று வந்து பற்றினைச் செய்யும்; முந்திய மனம் அழிப்ப முற்றும்போம் - இந்திரியங்ளுக்கு முதன்மையாய் இருக்கின்ற மனத்தை அழித்து விட்டால் ஐந்து இந்திரிய உணர்ச்சிகள் முற்றும் போய்விடும்; ஆகவே மனத்திற்கு முதலாகிய கலாதிகளும் சுத்தம் ஐந்தும் தானே விலகிப்போய் விடும். தத்துவம் உதறுதலுக்கு இரண்டாவது வழி இதுவாகும்.

முடிபு - பாம்பின் ஐந்தலைகளினுள் ஒன்றை அரிந்து விடின் மற்றொன்று ஆலம் இரிந்திடும்; மிடறு அரிந்தால் ஒருங்கு தீர்ந்திடும். அதுபோல இந்திரியங்களை, ஓரொன்றாய் விட்டிடின் விடாத மற்றொன்று சாரும். முந்திய மனத்தை அழிப்ப. அவ்விந்திரியங்கள் முற்றும் போம். இந்திரியங்களுக்கு மனம் தலைமையானது என்பதை ''இந்திரியங்களுக்கு இராசன் இதயமாம்'' என்னும் கைவல்யப் பாட்டால் அறிக.

721. **ஆதலால் மனம டங்கில் அங்கலிங் கங்கள் தம்முள்**
பேதமோ வபேத மோவென் றழிவுறு பித்து நீங்கும்
தீதிலாய் என்றி யம்பி பிச்சித்தரா மற்கு நாவால்
ஓதொணா வுணர்வின் உண்மை உணர்த்தினன் குருகு
கேசன் 74

(இ.ள்) தீதிலாய் - குற்றமில்லாத சித்தராமனே; ஆதலால் மனம் அடங்கில் - ஆகையினால், சரியை, கிரியை யோகத்தால் மனம் தூய்மையாகி உள் நின்று தெளிவுபெற்று அருள் குரவனைச் சார்ந்து தத்துவம் உதறி நின்ற தனிஅறிவனைக் கண்டால்; அங்கலிங்கங்கள் தம்முள் பேதமோ அபேதமோ என்று அழிவுறு பித்து நீங்கும் - அங்கமாகிய ஆன்மாவும், இலிங்கமாகிய பரமான்மாவும், தமக்குள் வேறுபாடு உடையதோ, வேறுபாடற்றதோ என்று வாதிட்டு அழியும் மயக்க உணர்ச்சி நீங்கும்; என்று இயம்பி சித்தராமற்கு நாவால் ஓதொணா உணர்வின் உண்மையை குருகேசன் உணர்த்தினன் - என்று இவ்வாறு கூறி சித்தராமருக்கு நாவினாலே சொல்ல முடியாத, ஞானத்தின் உண்மைப் பொருளை குருவாகிய அல்லமதேவர் விளக்கினான்.(எ.று)

Koviloor Digital Library

முடிபு - தீதிலாய் ஆதலால் மனம் அடங்கில் அங்கலிங்கங்கள் தம்முள் பேதமோ அபேதமோ என்று அழிவுறுவித்து நீங்கும் என்றுஇயம்பி - குருகுகேசன், சித்தராமர்க்கு, நாவலால் ஓதொணா உணர்வின் உண்மையை உணர்த்தினன்.

722. மனிதருள் உரகர் சித்தர் வானவர் கணங்கள் தம்முள்
முனிவருள் என்போல் நின்றன் முழுதருள் பெற்றார்
இல்லை
இனிஎனை நிகர்வார் யாவர் என்றருட் குரவ னார்தம்
பனிமலர் அடியில் வீழ்ந்து பணிந்தனன் சித்த ராமன் 75

(இ.ள்) சித்தராமன் - அல்லமதேவரால் உபதேசம் பெற்ற சித்தராமன் அல்லமதேவரைப் பார்த்து; மனிதருள் - மக்கள் பலருள்ளும்; உரகர், சித்தர், வானவர், கணங்கள் தம்முள் - நாகரும், சித்தரும், தேவரும்; ஆகிய இத்தகைய கூட்டத்தாருள்ளும்; முனிவருள் - நாரதர் முதலான முனிவர்களுக்குள்ளும், என்போல் நின்றன் முழுதருள் பெற்றார் இல்லை - என்னைப் போல உன்னுடைய முழுமையான அருளைப் பெற்றவர் கள் எவரும் இல்லை; இனிஎனை நிகர்வார் யாவர் என்று - இனிமேல் என்னை ஒத்து விளங்குபவர் யாவர் என்றுகூறி; அருள் குரவனார்தம் பனிமலர் அடியில் வீழ்ந்து பணிந்தனன் - திருவருள் தங்கிய குருவாகிய அல்லமதேவரது குளிர்ந்த மலர்போன்ற திருவடியில் வீழ்ந்து பணிந்தனன். (எ.று)

முடிபு - சித்தராமன் மனிதருள் கணங்கள் தம்முள்; முனிவருள், என்போல் நின்றன் அருள் பெற்றார் இல்லை; இனிஎனை நிகர்வார் யாவர் என்று. குரவனார்தம் அடியில் வீழ்ந்து பணிந்தான்.

723. இப்பரிசு அருளி னாலே இராமனுக் குபதே சித்து
செப்பரும் அவன் குற் றேவல் செய்யிய உளம கிழ்ந்து
கைப்படும் [1]அமிர்தம் அன்ன கருணைவா ரிதியி ருந்தான்
துப்புர அமைந்து சீர்சால் [2]சொன்னலா புரத்து மாதோ 76

(பா-ம்) [1]அமுதம்; [2]சொன்னலாபுரத்தின்

(இ.ள்) கைப்படும் அமிர்தம் அன்ன கருணைவாரிதி - உண்பதற்கு கையின்கண் அகப்பட்ட, அமிர்தத்தை ஒத்த அல்லமதேவன்; அருளி னாலே இப்பரிசு இராமனுக்கு உபதேசித்து - தன்னருளால் மேலே கூறியபடி சித்தராமனுக்கு உபதேசித்துவிட்டு, செப்பரும் அவன்

Koviloor Digital Library

குற்றேவல் செய்யிய - சொல்லுதற்கரிய அவன் தனக்கு பணிவிடைகள் செய்யும்படி; உளம் மகிழ்ந்து - மனம் மகிழ்ந்து; துப்புர அமைந்து சீர்சால் சொன்னலாபுரத்து இருந்தான் - உண்ணும் பொருள்கள் எல்லாம் அமைந்து அதனாலே சிறப்புப் பெற்றிருக்கும் சொன்னலாபுரத்தில் தங்கியிருந்தான். (எ.று) மா- ஓ.அசை

முடிபு - கருணை வாருதி இப்பரிசு இராமனுக்கு உபதேசித்து அவன்குற்றேவல் செய்யிய உளம் மகிழ்ந்து சொன்னலாபுரத்து இருந்தனன். இக்கதியில் சிவப்பிரகாச சுவாமிகள் தொடக்கத்தில் இருசீராகிய குறளடிப் பாடலில் தொடங்கி, அடுத்து சிந்தடிப் பாடல்களும், அளவடிப்பாடல்களும், நெடிலடிப் பாடல்களும், கழிநெடிலடிப் பாடல்களும் அமையுமாறு வைத்துப் பாடிவுள்ள யாப்பிலக்கண அழகைக் காணலாம்.

பதின்மூன்றாவது
சித்தராமையருக்கு உபதேசித்த கதி முற்றிற்று

Koviloor Digital Library

பதினான்காவது
வச வண்ணரைச் சார்ந்த கதி

வேறு

கதிநுதலியது

724. சித்த ராமனோ டாரியன் அல்லம தேவன்
பத்த ராகிய பயிர் செய்கல் யாணமாம் பழனத்(து)
[1]உய்த்த நீரெனும் வசவனை உழவரில் கண்டு
[2]மெத்தும் ஆர்வமங் கடைந்தமை யாமினி விரிப்பாம் 1

(பா.ம்) [1]உய்த்து; [2]மெய்த்து

(இ.ள்) ஆரியன் அல்லமதேவன் சித்தராமனோடு = ஆசிரியனாகிய அல்லமதேவன் சித்தராமனோடு சேர்ந்து கொண்டு; பத்தராகிய பயிர்செய் கல்யாணமாம் பழனத்து = தொண்டராகிய பயிர்களை வளர்த்தல் செய்யும் கல்யாணப் பட்டினமாகிய வயலிலே; உய்த்த நீர் எனும் வசவனை = பாய்ச்சிய தண்ணீர் என்று கூறுப்படும் வசவதேவனை; உழவரில் கண்டு ஏவும் வினைமுதலும் இயற்றும் வினைமுதலும் ஆகிய இருவகை உழவரைப் போலச் சென்று பார்த்து; மெத்தும் ஆர்வம் அங்கு அடைந்தமை யாம் இனிவிரிப்போம் = மிகவும் மகிழ்ச்சி அடைந்த கதியை யாம் இனிமேல் விளக்கமாகக் கூறுவாம்.(எ.று)

முடிபு - அல்லமதேவன் சித்தராமளோடு பத்தராகிய பயிரைச் செய்யும் கல்யாணமாகிய பழனத்தலே நீராகிய வசவனை உழவரை கண்டு ஆர்வம் அடைந்தமையை யாம் இனிவிரிப்பாம். மெத்து என்பது மிகவும் என்ற பொருளில் வந்துள்ளது. இப்பாட்டு உருவக அணி. உழவரில் கண்டு என்பது உவமையணி. பத்தரைப் பயிராகவும் கல்யாணபுரியைப் பழனமாகவும் வசவனை நீராகவும் அல்லமன் சித்தராமனை இருவகை உழவராகவும் உருவகித்துள்ளமையால் முற்றுருவக அணியின்பால்படும்.

725. அன்னம் மீனுடன் இகழ்வறக் கொண்டமை யாமல்
[1]சென்ன லார்வயல் தீப்பசி ஆற்றுபு சிறந்த
சொன்ன லாபுரம் தவம்செய்த தென்றுவான் துதிப்ப
என்னை ஆளுடை அல்லமன் இருந்தருள் நாளில் 2

(பா.ம்) [1]செந்நெலார்

Koviloor Digital Library

(இ.ள்) என்னை ஆளுடை அல்லமன் = அடியேனை ஆட்கொள்ளுகின்ற அல்லமதேவன்; சொன்னலாபுரம் தவம் செய்தது என்று வான் துதிப்ப = (அல்லமன் எழுந்தருளி இருப்பதற்கு) சொன்னலாபுராமாகிய நகர் தவத்தைச் செய்துள்ளது என்று கூறி தேவர்கள் எல்லாம் புகழ; இருந்தருள் நாளில் = அந்த நகரத்தில் தேவர்கள் தங்கியிருந்த காலத்தில்; எத்தகைய சொன்னலாபுரம் எனில்? அன்னம் மீனுடன் இகழ்வறக் கொண்டு அமையாமல் சென்னலார்வயல் = நல்ல நெல்களைப் பொருந்திய வயல்களானவை அன்னத்தை மீனுடன் குறைவற உட்கொண்டதோடு அமையாமல்; தீப்பசி ஆற்றுபு சிறந்த சொன்னலா புரம் = (அன்னம் மீன்களாகிய அவற்றின்) கொடும் பசியையும் ஆற்றுகின்ற சிறந்த செயலைச் செய்வதற்கு இடமாக விளங்கும் சொன்னலாபுரம். (எ.று)

முடிவு - என்னை ஆளுடை அல்லமன் சொன்னலாபுரம்தவம் செய்தது என்று வானோர் கூறித் துதிக்குமாறு அங்கு இருந்தருள் நாளில்; வயல்கள் அன்னத்தையும் மீனையும் தாம் குறைவற உட்கொண்டதோடு அமையாமல். அவற்றின் தீம்பசியையும் ஆற்றுதலைச் செய்து சிறந்திருக்கும் சொன்னலாபுரம் என்று சொன்னலாபுரத்தைச் சிறப்பித்துள்ளார். வயல்கள் தம்பசிக்கு உட்கொண்டபொருளுக்கே அவற்றின் பசியையும் நீக்குகின்றது என்ற கருத்து நயம் தோன்றியுள்ளமையக் காண்க. அன்னத்தையும் மீனையும் உட்கொண்டு அவற்றனோடு அமையாமல் அவற்றின் பசியையும் நீக்குகின்ற சிறப்பு வாய்ந்தன அவ்வயல்கள் என்பது நயம். அக்கமா தேவி உற்பத்தி கதியில் ''விருந்தினுக்கிடுவார் அன்னம் அந்நகரின் வேதியர் மடந்தைய ரெல்லாம் பொருந்து மன்னத்திற்கிடுவன விருந்து புனல் வயற் செங்கமலங்கள்'' என்ற வரியையும் ஒப்பு நோக்கி உணர்க.

726. **சந்தம் மேவுகல் யாணமாம் நந்தனம் தன்னில்**
நந்தி நாண்மலர் புகழ்மணம் நயந்தசொல் வளியால்
வந்து காதெனும் நாசியில் புகமிக மகிழ்ந்த(து)
உந்து வார்திரைக் கருங்கடல் உடுத்தபேர் உலகம் 3

(இ.ள்) உந்துவார்திரை கருங்கடல் உடுத்தபேர் உலகம் = எறிகின்ற நீண்ட அலைகளையுடைய கருமையாகிய கடலை ஆடையாக உடுத்த பெரிய இவ்வுலகத்திலே வாழ்கின்ற மக்கள்; சந்தம் மேவுகல்யாணமாம் நந்தனம் தன்னில் - அழகு பொருந்திய கல்யாண பட்டினமாகிய நந்தன வனத்திலே; நந்தி நாண்மலர் = வசவதேவராகிய அன்று அலர்ந்த

Koviloor Digital Library

பூவினுடைய; புகழ் மணம் - கீர்த்தியாகிய வாசனையானது; நயந்த சொல்வளியால் வந்து காது எனும் நாசியில் புக மிக மகிழ்ந்தது = (உலக மக்கள்) விரும்பிக் கூறும் சொற்களாகிய காற்றின் வழியாய் வந்து காது என்னும் மூக்கிலே புகுதலால் மிகவும் மகிழ்ந்தது (எ.று)

முடிபு - உலகம் கல்யாணமாகிய நந்தனம் தன்னில் நந்தியாகிய நாண்மலரின் புகழாகிய மணம் சொல்லாகிய காற்றினுல் வந்து காது எனும் நாசியிலே புக மிக மகிழ்ந்தது. கல்யாணபுரி முதலானவற்றை நந்தனவனம் முதலான பொருள்களாக உருவகத்தலால் இப்பாட்டு உருவக அணியின் பாற்படும்.

727. **முக்கண் நாயகன் புகழெனும் மூரலுண் பதற்குத்**
தக்க தீஞ்சுவைக் கறியெனச் சமைந்தது வசவன்
மிக்க வான்புகழ் அவற்றினை மாதவர் விரவித்
துய்க்கும் நாவினில் துய்த்தனர் பவப்பசி தொலைய 4

(இ.ள்) முக்கண் நாயகன் புகழ்எனும் மூரல் உண்பதற்கு = மூன்று கண்ணையுடைய சிவபெருமானது புகழ் என்ற சோற்றை தொண்டர்கள் உண்பதற்கு; தக்கதீம் சுவை கறி என சமைந்தது வசவன் மிக்க வான்புகழ் = வசவேசருடைய மிக்க உயர்ந்த புகழானது தகுதி வாய்ந்த இனிமையான சுவையையுடைய கறிகளாக அமைந்தது; மாதவர் விரவிபவப்பசி தொலைய அவற்றினை துய்க்கும் நாவினில் துய்த்தனர் = பெரியதவஞ் செய்யுஞ் சான்றோர் எல்லாம் தங்களுடைய பிறவியாகிய பசிநோய் நீங்குமாறு கூடி அவ்விரண்டு புகழினையும் உண்ணுகின்ற செவியாகிய நாவினாலே அதை உண்டனர். (எ.று)

முடிபு - நாயகன் புகழ் எனும் மூரலை உண்பதற்கு வசவன் புகழ்கறி எனச் சமைந்தது. அவற்றினை மாதவர்கள் விரவி பவப்பசி தொலைய நாவினில் துய்த்தனர். நாவினில் துய்த்தனர் என்பதற்கு நாவினுல் கூறினர் எனவும் அமையும். எனவே இரண்டு புகழ்களையும் மாதவர்கள் கூடி கேட்டும், கூறியும், தங்கள் பவப்பசியைத் தொலைத்துக் கொண்டார்கள் என்பதாகும்.

அல்லமதேவர் வசவண்ணரைக் காணக் கருதியது

728. **விலக்கும் உற்பவ சித்தரா மற்குமுன் விளம்பும்**
இலக்க ணத்தினுக்(கு) அருள்நந்தி எனுமிலக் கியத்தைக்
கலக்கம் அற்றறிந் திடுவதற் குதாரணம் காட்ட
மலக்கம் அற்றனம் அல்லமன் திருவுளம் வலித்தான் 5

Koviloor Digital Library

(இ.ள்) விலக்கும் உற்பவ சித்தராமற்கு முன் விளம்பும் இலக்கணத்தினுக்கு = பிறவியை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று கருதும் சித்தராமருக்கு முன்னே உபதேசித்த ஞான இலக்கணத்திற்கு; அருள் நந்தி எனும் இலக்கியத்தை = அருளையுடைய வசவேசன் என்னும் இலக்கியத்தை; கலக்கம் அற்று அறிந்திடுவதற்கு உதாரணம் காட்ட = ஐயவிபரீ தங்களால் ஏற்படுகின்ற கலக்கம் அற்று உண்மையை அறிந்திடுவதற்கு எடுத்துக் காட்டாகக் காட்ட; மலக்கம் அற்ற நம் அல்லமன் திருவுளம் வலித்தான் = கலக்கம் நீங்கிய அல்லமதேவன் தன்மனதில் கருதினான். (எ.று)

முடிவு - நம் அல்லமன் சித்தராமுக்கு முன்விளம்பும் இலக்கணத்திற்கு அருள் நந்தி எனும் இலக்கியத்தை அறிந்திடுவதற்கு உதாரணம் காட்ட திருவுளம் வலித்தான். ஒரு பொருளை அறிவுறுத்துவார் அப்பொருளுக்கு முன்னே இலக்கணம் கூறி அவ்விலக்கணம் அமைந்த இலக்கியத்தை எடுத்துக்காட்டாகக் கூற வேண்டும் என்ற மரபு பற்றி இவ்வாறு கூறினார்.

729. அடிய வர்க்கெளி யானெனும் அவனெம தகத்தில்
குடியி ருக்குமவ் விராமனை யுடன்கொடு குறிலோர்
நெடில டுத்தநன் னிரையென அந்நகர் நீங்கிக்
கொடிம திற்கலி யாணமா நகர்வழிக் கொண்டான் 6

(இ.ள்) அடியவர்க்கு எளியான் எனும் அவன் எமது அகத்தில் குடி இருக்கும் அவ்இராமனை உடன்கொடு = அடியார்க்கு எளியவன் என்று கூறப்படும் அவ்வல்லமன் எம்முடைய மனத்திலே நிலைபெற்றிருக்கும் அச்சித்தராமனை தன்னுடன் அழைத்துக் கொண்டு; குறில் ஓர் நெடில் அடுத்த நன்னிரையென = குற்றெழுத்தானது நெட்டெழுத்தோடு கூடிய நிரை அசை செய்யுளிலே நடப்பது போல; அந்நகர் நீங்கி = அச் சொன்னலாபுரம் நகரத்திலிருந்து நீங்கி; கொடிமதில் கலியாணமா நகர் வழிக் கொண்டான் = கொடிகள் கட்டிய மதில் சூழ்ந்த கல்யாணப் பட்டனத்திற்கு செல்லும் வழியை அடைந்து நடக்கத் தொடங்கினன். (எ.று)

முடிவு - அடியவர்க்கு எளியான் எனும் அவன் குறில் ஓர் நெடில் அடுத்த நன்நிரைஎன இராமனை உடன் கொடு அந்நகர் நீங்கி கலியாண மாநகர் வழிக்கொண்டான். தமிழ் யாப்பிலக்கணத்தில் நேரசை நிரையசை என இரு அசைகள் உள்ளன. நிரையசையாவது குறிலும்

Koviloor Digital Library

குறிலும் இணைந்தாவது குறிலும் நெடிலும் இணைந்தாவது ஒற்றடுத்தா வது வரும். இங்கே அல்லமன் சித்தராமனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு நேரசையைப் போன்றதன்று நிரையசைப் போன்றதாகும். அந்நிரையசையுள்ளும் குறிலும் நெடிலும் இணைந்த நிரையசை போன்றது என்றார். இங்கு குறில் அல்லமனாகவும் அதோடு சேர்ந்த நெடில் சித்தராமனாகாவும் குறிக்கப்படுகின்றனர். இங்கு குற்றெழுத்து நெட்டெழுத்தைத் தன்வசமாக்கி பிளவு படாது பாக்களில் இயங்குமாறு போல அல்லமன் சித்தராமனோடு கூடி இருவரும் பிரியாது வழி நடந்தனர் என்பதாயிற்று.

வழிநடந்தவர் வழியில் கண்ட காட்சி

730. நறும்ப ழஞ்செறி தனியிடம் மொய்த்திட நண்ணும்
எறும்பொ ழுங்கென அரனடி யவர்திரள் எழுந்து
மறந்தும் வெஞ்சமண் குண்டரை யிணங்குறா வசவன்
உறும்பு ரம்புகல் இருவரும் கண்டுளம் உவந்தார் 7

(இ.ள்) நறும்பழம் செறி தனி இடம் மொய்த்திட நண்ணும் எறும்பு ஒழுங்கு என = நல்லமணமுள்ள பழம் இருக்கின்ற தனி இடத்தில் சென்று கூடுதற்குப் போகின்ற எறும்பின் வரிசை போல; அரன் அடியவர் திரள் எழுந்து மறந்தும் வெஞ்சமண் குண்டரை இணங்குரு வசவன் உறும்புரம் புகல் = சிவபெருமானுடைய அடியவர் கூட்டம் புறப்பட்டு மறந்துகூட கொடிய சமணச் சமயத்தவராகிய உடல் பருத்தோரைக் கூடாத வசவ தேவர் வாழும் கலியாண புரத்திற்குப் போதலை; இருவரும் கண்டு உளம் உவந்தார் = அல்லமதேவரும் சித்தராமரும் ஆகிய இருவரும் பார்த்து மனம் மகிழ்ந்தனர். (எ.று)

முடிபு - பழம் செறி இடத்தை மொய்த்திட எண்ணும் எறும்பு ஒழுங்கு என அடியவர் திரள் எழுந்து வசவன் உறும் புரம் புகுதலை இருவரும் கண்டு உளம் உவந்தார். இப்பாட்டு வினை உவமையணி என அறிக.

இதுவுமது

731. தம்பி ரானருள் வசவனாக் கியவறச் சாலைக்
கும்ப வாசநீர் முதலிய [1]வேண்டுவ கொண்டு
வம்பு லாமலர் வனத்தயர் உயிர்த்துநல் வழிசேர்ந்(து)
எம்பி ரானடி யவர்திரள் ஏகுதல் கண்டார் 8

Koviloor Digital Library

(பா.ம்) [1]வேண்டும் ஊண் அடி; வேண்டு முன்

(இ.ள்) எம்பிரான் அடியவர் திரள் = எமக்குத் தலைவனாகிய சிவபெருமானுடைய அடியார் வட்டங்களானவை; தம்பிரான் அருள் வசவன் ஆக்கிய அறச்சாலை = தம்பிரானாகிய அருள் தங்கிய வசவதேவன் உண்டாக்கிய அறச்சாலைகளில்; கும்பவாசநீர் முதலிய வேண்டுவ கொண்டு = குடங்களிலே வைத்திருக்கும் மணமுள்ள தண்ணீர் முதலிய பல பொருள்களுள் தங்களுக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுக் கொண்டு நுகர்ந்தும்; வம்புலாமலர் வனத்து அயர் உயிர்த்து = மணம்வீசுகின்ற மலர்களையுடைய சோலைகளில் தங்கி இளைப்பாறியும்நல்வழி சேர்ந்து ஏகுதல் நடந்து கண்டார் = பின்னா், நல்ல நடக்கும் வழியைச் சேர்ந்து செல்லுதலைப் பார்த்தார்கள் (எ.று)

முடிபு - அடியவர் திரள் அறச்சாலையில் நீர் முதலிய வேண்டுவன கொண்டு மலர் வனத்திலே அயர் உயிர்த்து வழி சேர்ந்து ஏகுதல் கண்டார். தம்பிரான் தமக்குத் தாமே தலைவனாக உள்ளவன்.

கல்யாணபுரத்தினைக் கண்டது

732. **பாண்டில் மாவளம் சிவிகையூர்ந் தேகுநர் பரிந்து**
வேண்டு மாறுகொள் வேடத்தர் துறந்தவர் விரதர்
ஈண்டு மாறுகண் டுவந்துசென் றெழிலலங் கார
காண்ட மாமெனும் மங்கல புரத்தினைக் கண்டார் 9

(இ.ள்) பாண்டில் மாவளம் சிவகை ஊர்ந்து ஏகுநர் = வண்டியில் பெரிய வளமுள்ள பொருள்களெல்லாம் ஏற்றிவர பல்லக்கை ஊர்ந்து செல்கின்றவர்களும்; பரிந்து வேண்டுமாறு கொள்வேடத்தர் = விரும்பி தாங்கள் வேண்டயபடி மேற்கொண்ட வேடத்தவர்களும்; துறந்தவர் = துறவிகளும் (சந்நியாசிகளும்) விரதர் = பல விரதங்களை மேற்கொண்ட வர்களும்; ஈண்டுமாறு கண்டு உவந்து சென்று = ஆகிய இவர்கள் நெருங்கிச் செல்வதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து நடந்துபோய்; எழில் அலங்கார காண்டமாம் எனும் மங்கல புரத்தினைக் கண்டார் = பலவகை அழகுகளையும் தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கின்ற அலங்கார காண்டம் என்று கருதத்தக்க கல்யாண புரத்தைக் கண்டார்கள் (எ.று)

முடிபு - சிவகை ஊர்ந்து ஏகுநரும் வேடத்தரும் துறந்தவரும் விரதரும் (ஆகிய இவர்கள்) ஈண்டு மாற்றைக் கண்டு உவந்து சென்று அலங்கார காண்ட மாமெனும் மங்கல புரத்தினைக் கண்டார். கல்யாண

Koviloor Digital Library

புரத்திற்கு அலங்கார காண்டம் உவமையாயிற்று. இங்கு அலங்கார காண்டம் என்றது அணியிலக்கண நூலை என்க அது. சொல்லணி, பொருளணி, குணஅணி முதலிய பலவகை அணிகளைப் பெற்று விளங்குதல் போல கல்யாண புரமும் பலவகை அணிகளினால் விளங்குவதாயிற்று.

அல்லமன் நகர் வளத்தினைக் கூறக் கருதியது

733. கண்டு செல்லுமப் போதிலந் நகர்வளம் கருத்தில்
கொண்ட அல்லமன் திருவுளம் மிகக்களி கூர்ந்து
பண்டை நல்லிசைப் புலவர்சொல் இராமனைப் பார்த்து
மண்டு பல்வளம் காட்டுவன் தனித்தனி வகுத்து 10

(இ.ள்) கண்டு செல்லும் அப்போதில் = கல்யாணபுரத்தினைக் கண்டு செல்லும் அப்பொழுதில்; அந்நகர் வளம் கருத்தில் கொண்ட அல்லமன் = அந்த கல்யாணபுர நகரத்தின் புறவளத்தினையும், அக வளத்தினையும் மனத்தில் கொண்ட அல்லமதேவன்; திருஉளம் மிகக்களி கூர்ந்து = தன்னுடைய மனம் களிப்பில் மிகுந்து; பண்டை நல்லிசைப் புலவர் சொல் இராமனைப் பார்த்து = பழைய, நல்ல புகழையுடைய புலவர்களால் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற சித்தராமரைப் பார்த்து; மண்டு பல்வளம் தனித்தனி வகுத்துக் காட்டுவன் = அந்நகரத்தின் மிக்க பல்வளங்களையும் தனித்தனித்யாகப் பிரித்துச் சித்தராமனுக்கு விளக்கிச் சொல்லுதலை மேற்கொண்டான் (எ.று)

முடிவு - அப்போதில், நகர்வளம் கருத்தில் கொண்ட அல்லமன் களி கூர்ந்து இராமனைப் பார்த்து, பலவளங்களைத் தனித்தனி வகுத்துக் காட்டுவன்.

புறநகர் சோலை வளங் கூறியது

734. தனைவி ரும்பிவந் தடைந்தவர் தம்மைமுன் வெறுத்த
தினக ரன்கதிர் விரும்புறச் செய்தளித் திரள்கள்.
நனிவி ருந்துணும் கடிமலர் சுமந்துபொன் நகரார்
கனிவி ரும்புதண் பொழில்நிகழ் வதைஎதிர் காணாய் 11

(இ.ள்) தனைவிரும்பி வந்து அடைந்தவர் தம்மை முன் வெறுத்த தினகரன் கதிர் விரும்புறச் செய்து = பொழிலாகிய தன்னை விரும்பி வந்து அடைந்தவர்களை, அடைவதற்கு முன் தாம் வெறுத்த சூரியனுடைய வெயிலை விரும்புமாறு செய்தும்(இது நிழலின் சிறப்புக்

Koviloor Digital Library

கூறியது); அளித்திரள்கள் நனிவிருந்துணும் கடிமலர் சுமந்து = வண்டின் கூட்டங்களெல்லாம் மிகவும் புதுமைப் பொருளாகத் தேனையுண்ணும் மணமலரைத் தாங்கியும், (இது மலர் தேன் சிறப்புக் கூறியது) பொன் நகரார் கனிவிரும்பு தண்பொழில் = சுவர்க்க உலகில் உள்ளவர்கள் தாங்கள் உண்ணும் அமிர்த்தைக் காட்டிலும் சிறந்தது என்று கருதி அங்குள்ள கனியை விரும்புமாறு விளங்கும் குளிர்ச்சி பொருந்திய சோலைகள்(இது சோலைச் சிறப்புக் கூறியது) நிகழ்வதை எதிர் காணாய் - விளங்குவதை நீ முன்னால் பார்ப்பாயாக. (எ.று)

முடிபு - பொன் நகரார் கனி விரும்பு தண் பொழிலானவை. தன்னை விரும்பி வந்தடைந்தவரை முன் வருத்த தினகரன் கதிரை விரும்புற செய்து அளித்திரள்கள் விருந்துணும் மலரைச் சுமந்து நிகழ்வதை எதிர் காணாய். பொழில் விரும்புறச் செய்து மலர் சுமந்து நிகழ்வதை எதிர்காணாய். பொன்னகரார் கனிவிரும்புதல் எழுவாய்க்கு அடையாக நின்றது. எனவே தேவரும் விரும்பும் கனியாலும் சிறந்தது என்றவாறாம்.

சோலையில் உள்ள வண்டுகள் சிறப்பு

735. பூவி னோடுசெந் தேன்மழை யொழிவறப் பொழியும்
காவி னோடுவள் ளிதழவிழ்ந் தொழுகுதேங் கமல
வாவி யோடுநல் இசைபயில் அஞ்சிறை வண்டு
[1]பாவின் ஓடுவண் [2]குழலெனத் திரிதலைப் பாராய் 12

(பா.ம்) [1]பாவினோடுமொன்; [2]மென்குழல்

(இ.ள்) இசைபயில் அம்சிறைவண்டு = பலவகை இசைகளைப் பயிலும் சிறகினை யுடைய வண்டுகள்; பூவினோடு செந்தேன் மழை ஒழிவறப் பொழியும் காவினோடு = மலர்களோடு கூடி நல்ல தேன்மழையை நீக்கமின்றி சொறிந்து கொண்டிருக்கும் சோலைக ளோடும்; வள் இதழ் அவிழ்ந்து ஒழுகு தேம் கமலவாவி யோடும் = (அங்கிருந்து திரும்பி) செறிந்த இதழ்களை மலர்ந்து ஒழுகும் தேனையுடைய தாமரைத்தடாகங்களோடும்; பாவினோடு வண்குழ லெனத் திரிதலைப் பாராய் = தறியிலுள்ள நெய்யப்படும் பாவினுக்குள் இடமும் வலமுமாக ஓடுகின்ற நாடாவைப் போல திரிந்து கொண்டிருத்தலைப் பார்ப்பாயாக.

Koviloor Digital Library

முடிபு - வண்டு காவினோடும் வாவியோடும் பாவினோடு வண்குழல் எனத்திரிதலைப் பாராய். இது, வண்டு குழலைப் போல் திரிகின்றது என்பதால் வினை உவமையாயிற்று.

சோலையடுத்த மருதநிலம்

736. கடிம லர்ப்பசும் தேன்துளி பிலிற்றுபைங் காவைக்
குடியி ருக்குமவ் வளவெனக் கொண்டுவெண் குருகு
[1]மடிய டுத்தவர் எனவிருந் திளங்கயல் வரலும்
நொடியி னிற்கவர் தண்பணை மருதமும் நோக்காய் 13

(பா.ம்) [1]மிடியடுத்தவர்

(இ.ள்) வெண்குருகு = வெள்ளை நிறத்தையுடைய கொக்கின் கூட்டங்கள்; கடிமலர்ப் பசும் தேன் துளி பிலிற்று பைங்காவைக் குடியிருக் கும் அவ்வளவு எனக் கொண்டு = மணமுள்ள பூக்களிலிருந்து நல்ல தேன் துளியைச் சிந்துகின்ற பச்சையான நிறத்தையுடைய சோலை களைத்தாம் குடியிருக்கும் அந்த வீடாகக் கொண்டு; மடி அடுத்தவர் என இருந்து = அவ்வளவில் சோம்பல் உள்ளவர்களைப் போல வாளாயிருந்து; இளங்கயல் வரலும் = தான் உண்பதற்குரிய இளையகயல் மீன்கள் நீரின் மேல் பரப்பில் வரவும்; நொடியினில் கவர்தண் பணை மருதமும் நோக்காய் = ஒரு மாத்திரைப் பொழுதில் விரைந்து சென்று அவற்றைக் கவர்ந்து உண்ணும் குளிர்ச்சி பொருந்திய வயல் நிலங்களையுடைய மருத நிலத்தினையும் பாராய்(எ.று).

முடிபு - வெண்குருகு, காவை வளவெனக் கொண்டு மடியடுத்தவர் என இருந்து, கயல் வரலும் நொடியினில் கவர்கின்ற தண்பணை மருதத்தையும் நோக்காய், வளவு என்பது வீட்டின் பெயர். உலகவழக்குச் சொல்.

வயற்சிறப்பு

737. குதிரை அங்கதிர் மணிக்குடம் நீர்குடிப் பதுபோல்
அதிரி ளங்கமஞ் சூல்வளை தவழ்வயல் அணிநெற்
கதிர்வ ளைந்து தாமரை வாயுறக் கவிழ்ந்து
நுதிபொ ருந்திய அழகையும் ஐய!நீ நோக்காய் 14

(இ.ள்) குதிரை அம் கதிர் மணிக்குடம் நீர் குடிப்பது போல் = குதிரையானது அழகிய ஒளிவீசும் நீல மணியால் அமைந்த குடத்துள் தண்ணீரைக் குடிப்பது போல் தோன்றுமாறு; அதிர் இளம் கமம்சூல்வளை

Koviloor Digital Library

தவழ் வயல் = ஓசை எழும், இளைய நிறைந்த சூலையுடைய சங்குகள் தவழுகின்ற வயலிலே; செந்தாமரை வாயுற அணி நெல் கதிர் வளைந்து கவிழ்ந்து நுதி பொருந்திய அழகையும் ஐயநீ நோக்காய் = வயலில் செந்தாமரை மலரின் இடத்திலே பொருந்த, அழகிய நெற்கதிர் வளைந்து கவிழ்ந்து நுனி பொருந்திய அழகையும் ஐயனே நீ காண்பாயாக. (எ.று)

முடிபு - குதிரை மணிக்குடத்துள் நீர்குடிப்பது போல வயலில் செந்தாமரை வாயுற நெற்கதிர் வளைந்து கவிழ்ந்து நுனி பொருந்திய அழகையும் சித்தராமஐயனே! நீ பாராய்.

மதில் சிறப்பு

738. இங்குத் தன்னுள்வாழ் பயிற்சியால் இறந்துயிர் போயும்
அங்குப் பொன்னெயில் வட்டத்துள் இருள்மனத் தமணர்
தங்கற் குன்னுமிப் பொன்னெயில் வட்டமும் சடைமேல்
கங்கைப் பெண்ணமர் பரனடிக் கன்பநீ காணாய்

(இ.ள்) சடைமேல் கங்கைப் பெண்ணமர் பரன் அடிக்கு அன்ப!= சடையின்மேலே கங்கையாகிய பெண் பொருந்தி இருக்கும் பரமேசுவரனுடைய திருவடிக்கு அன்பரான சித்தராமனே; இருள் மனத்து அமணர்= அறியாமை தங்கிய மனத்தையுடைய சமணர்கள்; இங்கு தன்னுள் வாழ் பயிற்சியால் = இக்கல்யாண நகருள் மதிலாகிய தன்னுள் குடிவாழ்ந்திருக்கும் வழக்கத்தினாலே; இறந்துயிர் போயும் = தங்கள் உடலின் கண் உயிர் நீங்கிய பின்; அங்கு = மறுமையில்; பொன் எயில் வட்டத்துள் தங்கற்கு = வானுலகத்துக்கப்பாலுள்ள பொன்னாலான எயில் சூழ்ந்த வட்டத்துள் தங்க வேண்டும் என்று நினைத்தலுக்கு காரணமான; இப்பொன் எயில் வட்டமும் = இந்த கல்யாணபுரியின் பொன்னாலேயான மதில் வட்டத்தையும்; நீ காணாய் = நீ பார்ப்பாயாக. (எ.று)

முடிவு - பரனடிக்கு அன்பனே! அமணர் இங்கு தன்னுள் வாழ் பயிற்சியினாலே இறந்து உயிர் போயும் அங்கு பொன்னெயில் வட்டத்தில் தங்கற்கு உன்னும் இப்பொன்னெயில் வட்டத்தை நீ காணாய். சமணர்கள் இறந்த பின் அடையும் வீடுபேறு வானுலகுக்கு அப்பாலுள்ள பொன்எயில் வட்டமாகும். அந்தப் பொன்எயில் வட்டத்தை அவர்கள் விரும்புதற்குக் காரணம், கல்யாணபுரத்தைச் சூழ்ந்த பொன் எயில் வட்டத்துள் அவர்கள் தங்கி வாழ்ந்த காரணத்தால் அதை விரும்புகின்றார்கள் என்று தற்குறிப் பேற்ற அணிபடக் கூறுகின்றார். இப்பாட்டு தற்குறிப்பேற்ற அணியின் பாற்படும்.

Koviloor Digital Library

739. திறந்து மூடுநின் [1]நுதலிமை விழியெனச் சேர்ந்து
பிறங்கு மாமணிக் கதவிரு புடையினும் பெற்றுச்
சிறந்த கோபுர வாய்தலு மலர்மிசைத் தெய்வம்
பறந்து நாடிய முடியிறைக்கு அன்பநீ பாராய் 16

(பா.ம்) [1]நுதலின் நன்

(இ.ள்) மலர்மிசை தெய்வம் பறந்து நாடிய முடியிறைக்கு அன்ப!= தாமரை மலர் மேலே வாழும் நான் முகனாகிய தெய்வம், அன்னப் பறவை உருவாய் பறந்து சென்று காணமுயன்ற திரு முடியைப் பெற்றிருக்கும் சிவபெருமானுக்கு அன்பனாகிய சித்தராமனே; திறந்து மூடும் நின்னுதல் இமை விழி என = விழித்து மூடுகின்ற உன்னுடைய நெற்றியிலுள்ள இமையோடு கூடிய விழியைப் போல; சேர்ந்து பிறங்குமாமணிக் கதவு இரு புடையினும் பெற்றுச் சிறந்த கோபுரவாயில் = பொருந்தி விளங்குகின்ற பெரியமணிகள் பதித்த கதவுகளை இரண்டு பக்கத்திலும் பெற்று அதனால் சிறந்து விளங்குகின்ற மதில் கோபுர வாயிலையும் நீ பாராய் = நீ பார்ப் பாயாக. (எ.று)

முடிபு - அன்ப! நின் நுதல் இமைவிழி என சேர்ந்து பிறங்கு மாமணிக்கதவுகளை. இருபுடையினும் பெற்று சிறந்த கோபுரவாயில் களையும் நீ பாராய். நெற்றிவிழி மேல் நோக்கிய விழி யாதலின் அதன் இரண்டு இமைகளை மதில் கதவுகள் இரண்டிற்கும் உவமை கூறினார் இது உவமை அணியாகும்.

சிவபத்தர் தெரு

740. இலங்கு நீறெனும் கவசமிட்(டு) அக்கமென் றியம்பும்
அலங்கல் வாகைவேய்ந்(து) ஐஞ்செழுத்(து) அத்திர மடுத்த
நலங்கொள் வீரராம் பத்தர்தம் மறுகு[1]அமண் ணள்ளார்
கலங்கு பாசறை போன்றெதிர் நிகழ்வது காணாய் 17

(பா.ம்) [1]அமண்ணுள்ளார்

(இ.ள்) இலங்கு நீறு எனும் கவசம் இட்டு = விளங்குகின்ற திரு நீறு என்கின்ற கவசத்தை உடம்பில் அணிந்து கொண்டு; அக்கம் என்று இயம்பும் அலங்கல் வாகை வேய்ந்து = உருத்திராக்கம் என்று கூறப்படும் வெற்றி மாலையை அணிந்து; ஐந்து எழுத்து அத்திரம் அடுத்த = திரு ஐந்தெழுத்தாகிய படையுடன் கூடிய நலம் கொள் வீரராம் பத்தர் தம் மறுகு = நன்மை பொருந்திய போர் வீரர் போன்ற சிவனடியார்கள் வாழ்கின்ற

Koviloor Digital Library

தெரு; அமண்ணள்ளார் கலங்கு பாசறை போன்று எதிர் நிகழ்வது காணாய் = சமணராகிய பகைவர்கள் மனம் கலங்குவதற்குக் காரணமான பாசறைபோல எதிரிலே விளங்குவதை நீ பார்ப்பாயாக. (எ.று)

முடிபு - நீறு எனும் கவச மிட்டு அக்கம் என்ற வாகை வேய்ந்து ஐந்து எழுத்தாகிய அத்திரம் அடுத்த வீரராகிய பத்தர் தம்மறுகு சமணராகிய பகைவர்கள் கலங்கு பாசறை போறு எதிர் நிகழ்வதைக் காணாய் ''ஆன நீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்'' என்பது திருவாசகத்துள் திருப்படை எழுச்சி முதல் பாட்டில் காண்க. பாசறை என்பது போர் வீரர் தங்குமிடம். திருநீற்றைக் கவசமாகவும் உருத்திராக்க மாலையை வெற்றி மாலையாகவும் ஐந்தெழுத்தை அத்திரமாகவும் சிவபத்தரை வீரராகவும் சமணரைப் பகைவராகவும் உருக்கித்தமையால் இது உருவக அணி.

741. கட்டு வார்சடைக் கண்ணுதல் பூசனைக் கருமம்
அட்டு மாதவர் தீப்பசி ஆற்றுறும் அறமுள்
ளிட்டு மேற்புரம் கண்டவர் கொடியன என்னப்
பட்டு மாளிகை பற்பல நிகழ்வன பாராய் 18

(இ.ள்) கட்டு வார்சடைக் கண்ணுதல் பூசனை கருமம் அட்டு = சேர்த்துக் கட்டப்படும் நீண்டசடையைப் பெற்றிருக்கும் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானுக்குரிய பூசையாகிய செயல்களைச் செய்து; மாதவர் தீப்பசி ஆற்றுறும் அறம் உள்ளிட்டு = அடியார் களுடைய தீயபசியைத் தணிக்கும் அறச் செயலை உள்ளடக்கி; மேற்புரம் கண்டவர் கொடியன என்னப்பட்டு = மேலிடத்தைப் பார்ப்பவரால், இம்மாளிகை மேற்புறம் கொடியை உடையன என்று கூறப்பட்டு, பற்பல நிகழ்வன பாராய் = இவ்வாறு பற்பல மாளிகைகள் விளங்குவதை நீ பார்ப்பாயாக. (எ.று)

முடிவு - பற்பல மாளிகை பூசனைக் கருமம் அட்டும் தீப்பசி ஆற்றுறும் அறம் உள்ளிட்டும் மேற்புறம் கண்டவரால் கொடியன எனப் பட்டும் நிகழ்வன பாராய். மாளிகை அட்டும் முள்ளிட்டும் கொடியன எனப்பட்டும் விளங்குவன என்று மற்றோர் தொனிப் பொருளையும் தெரிவித்தல் காண்க. இது தொனிப் பொருளுக்கு அட்டு என்பதற்கு கொல்லுதல் என பொருள் கொள்க. மாளிகை அட்டு (சொன்றிட்டு) முள்ளிட்டு (முள்ளைஇட்டு) கொடியென(கொடி செயலுடையன) என்பது மற்றோர் பொருள்.

Koviloor Digital Library

742. பொறித்த வாழையின் கனியினைக் கடைத்தலை
பொருந்தக்
குறித்தி டாதுண வெனக்கறித் தலகு[1]நோய் கொண்டு
நிறுத்து வாழையின் கனியுமச் செய்கையாய் நினைந்து
கறித்தி டாதமர் செம்முகப் பசுங்கிளி காணாய் 19

(பா.ம்) [1]நோக்கொண்டு

(இ.ள்) கடைத்தலை பொருந்த பொறித்த வாழையின் கனியினை = வாயிற்படியைச் சாரஉள்ள சுவரில் பொருந்துமாறு எழுதப்பட்டிருந்த வாழை மரத்தில் உள்ள பழத்தை; குறித்திடாது உணவு எனக்கறித்து அலகு நோய் கொண்டு = உண்மையான பழம் அன்று எனக் கருதாமல் உண்பதற்குரிய பழம் என்றே கருதி அதைக் கடித்து அதனால் மூக்கினில் துன்பம் கொண்டு; நிறுத்து வாழையின் கனியும் அச்செய்கையாய் நினைந்து = உண்மையாகவே பந்தலில் கட்டிவைக்கப் பட்ட வாழை மரத்தின் கனியையும் பொய்யாய் செய்யப்பட்ட பழம் என்றே கருதிக் கொண்டு; கறித்திடாது அமர் செம்முகப் பசுங்கிளி காணுய் = நிறுத்த வாழையின் உண்மைக் கனியையும் கறிக்காமல் வாளா (சும்மா) உட்காந்திருக்கும் சிவந்த மூக்கினையும் பச்சை நிறத்தையும் உடைய கிளியையும் நீ பார்ப்பாயாக. (எ.று)

முடிபு - பசுங்கிளி பொறித்த வாழையின் கனியினைக் கறித்து (அதனால்) அலகு நோய்கண்டு நிறுத்து வாழையின் கனியும் அச்செய்கையாய் நினைந்து கறித்திடாது அமர்தலை காணாய். அமர் என்பது விகுதி பெறாத தொழிற்பெயர் (அமர்தல் எனப் பொருள்) ஐகாரம் விரித்து அமர்தலை காணாய் என முடித்துக் கொள்க.

743. வள்ளல் நல்வச வன்புகழ் வாயினால் வழுத்தா(து)
எள்ளும் வல்லமண் குண்டர்தம் பிறப்பினும் [1]இழிப்பில்
புள்ளு நல்லன எனவிளம் பூவையோ டிருந்து
கிள்ளை யவ்வச வன்புகழ் சொல்வது கேளாய் 20

(பா.ம்) [1]இழப்பில்

(இ.ள்) வள்ளல் நல் வசவன் புகழ் வாயினால் வழுத்தாது எள்ளும் வல்ல அமண் குண்டர்தம் பிறப்பினும் = கொடைவள்ளல் ஆகிய நல்ல வசவ தேவனுடைய கீர்த்தியை தம்வாயினால் சொல்லாமல் (அதற்குப் பதிலாக) பழித்துப் பேசும் இயல்பையுடைய கெட்ட சமணராகிய குண்டர்களின் மானிடப் பிறவியைக் காட்டிலும்; இழிப்பு இல் புள்ளு

Koviloor Digital Library

நல்லன என = தாழ்ச்சியான செயலைச் செய்யாத பறவை பிறப்பு நன்மையுடையன என்று கண்டோர் கூறும்படி; கிள்ளை பூவையோடு இருந்து = கிளிகள் நாகணவாய்ப்புள்ளுடன் கூடி இருந்து; அவ்வசவன் புகழ் சொல்வது கேளாய் = நாம் தேடிச் செல்கின்ற அவ்வசவ தேவனது சீர்த்தியை நமக்கு முன்னால் சொல்வதைக் கேட்பாயாக. (எ.று)

முடிவு - வசவன் புகழ் வழுத்தாது எள்ளும் குண்டர் தம் பிறப்பினும் புள்ளு நல்லன என கிள்ளை பூவையோடு இருந்து வசவன் புகழ் சொல்வது கேளாய்.

744. **என்று கூறியவ் விராம்னை மகிழ்வுசெய் இன்ப**
மன்றல் வீதியில் வசவநா யகன்திரு மனைமுன்
குன்று போலுயர் கோபுர வாய்தலைக் குறுகச்
சென்று மேவினன் எம்மையாள் அல்லம தேவன் 21

(இ.ள்) எம்மையாள் அல்லமதேவன் என்று கூறி அவ்விராமனை மகிழ்வு செய்து - எம்மை ஆட்கொள்ளும் அல்லம தேவரானவர் மேற் கூறியவாறு பலபுனைந்துரை மொழிகளைக் கூறி அச்சித்த ராமனை மகிழ்வு செய்து; இன்ப மன்றல் வீதியில் = இன்பத்தைத்தரும் மணம் வீசும் வீதியில்; வாசவ நாயகன் திருமனைமுன் = வசவ தேவரது அரண் மனைமுன் குன்று போல் உயர் கோபுர வாய்தலைக் குறுகச் சென்று மேவினன் =சிறிய மலைபோல் உயர்ந்த கோபுரத்தோடு கூடிய வாயிற்படியை நெருங்குமாறு சென்று அடைந்தான். (எ.று)

முடிவு - அல்லம தேவன் என்று கூறி சித்தராமனை மகிழ்வு செய்து வீதீயில் வசவ நாயகன் திருமனை முன் கோபுரவாய் தலைக்குறுக சென்று மேவினன்.

745. **தொடர்த்து ளைக்கைவெண் மருப்புரல் கால்கருந்**
தோற்றோல்
உடுத்த மெய்ப்பரன் கொலைகுறித்(து) எடாமழு ஒப்ப
அடைத்த லைக்குறி டாதசெம் மணிக்கத வடுத்த
கடைத்த லைக்கண்மா தவர்குழாம் நெருங்குதல் கண்டார்
22

(இ.ள்) தொடர் துளைக்கைவெள் மருப்பு உரல்கால் கருந்தோல் உடுத்த மெய்ப்பரன் = தொடர்பாகச் செல்லும் உள்துளையுடைய கையையும் (துதிக்கையை) வெண்ணிறத்தையுடைய தந்தங்களையும் உரல் போன்ற கால்களையும் உடைய கருநிறமுடையயானையினது

Koviloor Digital Library

தோலை உடையாக உடுத்திக் கொண்டமெய்ப் பொருளாகிய பரமேசுவரன்; கொலை குறித்து எடாமழு ஒப்ப = பிறி தொன்றைக் கொலை செய்ய வேண்டும் என்று கருதாமல், அழகாக வைத்துக் கொண்டிருக்கும் மழுவாயுதத்தை ஒவ்வும்படி; அடைத்தலைக் குறித்து இடாத செம்மணிக் கதவு அடுத்த கடைத்தலைக் கண் = மூடுதலைக் கருதி அமைக்காமல் அழகைக் கருதி அமைத்துக் கொண்ட சிவந்த மணிகள் பதித்த கதவுகள் பொருந்திய வாயிற் படியின் கண்; மாதவர் குழாம் நெருங்குதல் கண்டார் = பெரியதவம் செய்வோருடைய கூட்டம் நெருங்கி இருத்தலை அல்லம தேவரும் சித்தராமரும் கண்டார். (எ.று)

முடிபு - பரன், கொலைகுறித்து எடாத மழுவை ஒப்ப அடைத் தலைக் குறித்து எடாத கதவு; அக்கதவு அடுத்த கடைத்தலைக் கண் மாதவர் குழாம் நெருங்குதலைக் கண்டார். தொடர்துளைக்கை என்பது யானையினது தொடர்ந்த தூம்பையுடைய கை (தூம்பு - உள்துளை)

கடைத்தலைக் கண் போவாரும் வருவாரும்

வேறு

746. அறுசுவை அடிசில் உண்பான் அடைகுவார் அடிசில் உண்டு
மறுகிடை வருவார் சான்றோர் வைகிய இடங்கள் நாடிக்
கறியொடு மருவு சோற்றுக் காவடி சுமந்து செல்வார்
நறுமலர் சுமந்து தண்ட நாதன்பூ சனைக்குப் போவார் 23

(இ.ள்) அறுசுவை அடிசில் உண்பான் அடைவார் = அறு சுவைகளையுடைய உணவை உண்ணவேண்டி அங்கு செல்பவரும்; அடிசில் உண்டு மறுகிடை வருவார் = வசவ தேவரது அரண் மனைக்குள் அடிசிலை உண்டு பின் தெருவை நோக்கி வெளியில் வருபவரும்; சான்றோர் வைகிய இடங்கள் நாடி கறியொடு மருவுசோற்றுக் காவடி சுமந்து செல்வார் = பெரியோர்கள் தங்கி இருக்கும் வெளியிடங்களை ஆராய்ந்து சென்று (அவர்கள் உண்பதற்காக) பலவகை கறிகளோடு கூடிய உணவினைக் காவடியில் வைத்து தூக்கிச் செல்பவரும்; தண்ட நாதன் பூசனைக்கு நறுமலர் சுமந்து போவார் = வசவ தேவர் செய்யும் சிவபூசைக்கு வேண்டும் நறுமணமுள்ள மலர்களைச் சுமந்து செல்வோரும். (எ.று)

முடிபு - உண்பான் அடைகுவாரும், உண்டு வருவாரும், காவடி சுமந்து செல்வாரும், பூசனைக்கு மலர் சுமந்து போவாரும் ஆகிய

Koviloor Digital Library

இச்சொற்கள் 26ஆம் பாடலில் உள்ள 'ஆகி அடியவர் குழாம் நெருங்கும் கடைய' என்பதோடு முடியும். இங்கு சான்றோா் என்றது திரம் - சரம் - பரம் என்ற மூன்றுவகைச் சான்றோா்களில் திரம் என்ற சான்றோா் வகையினாராவாா். இதைச் சித்தாந்த சிகாமணி என்னும் நூலால் உணா்க.

747. செஞ்சரண் இறைஞ்சி நல்கும்
செழுந்துகில் கிழித்து [1]கீள்கொண்டு
எஞ்சிய மிகையென் றெண்ணி
யிட்டவண் அகன்று போவாா்
அஞ்சுடா் மணிப்ப சும்பொன்
அணிதுகில் அலங்கல் சாந்தம்
வஞ்சியா் தமக்க ளிப்பத்
தருகென வாங்கிச் செல்வாா் 24

(பா.ம்) [1]கீழ் கொண்டு

(இ.ள்) செம்சரண் இறைஞ்சி நல்கும் செழும் துகில் கிழித்து கீள் கொண்டு = சிவந்த நிறமுள்ள திருவடிகளை வணங்கி உபகாரிகள் கொடுக்கும் நல்ல ஆடையைப் பெற்றுக் கொண்டு அதனைக் கிழித்து கீள் என்னும் உடைக்கு வேண்டும் அளவுள்ள துணிகளை மட்டுமே எடுத்துக் கொண்டு; எஞ்சிய மிகை என்று எண்ணியிட்டு அவண் அகன்று போவாா் = கீளுக்குப் போக எஞ்சியுள்ள துணிகளை தங்களுக்கு வேண்டாதது என்று எண்ணி திருப்பிக் கொடுத்துவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்று போகின்றவா்களும்; அம்சுடா் மணிப்பசும் பொன், அணிதுகில், அலங்கல் சாந்தம், வஞ்சியா் தமக்கு அளிப்பத் தருக என வாங்கிச் செல்வாா் = அழகிய ஒளி பெற்ற மணிகளை அமைத்து நல்ல பொன்னால் செய்யப்பட்ட அணிகளையும் ஆடைகளையும் மாலை களையும் சந்தனக் குழம்புகளையும் ஆகிய இவற்றை தங்களுக்கே அன்றி தங்கள் வீட்டிலுள்ள பெண்களுக்கும் தருக என வாங்கிச் செல்பவரும். (எ.று)

முடிபு - சரண் இறைஞ்சி நல்கும் துகிலைக்கிழித்து கீள்மட்டும் கொண்டு எஞ்சிய மிகை என்று எண்ணிவிட்டு அகன்று போவாரும்; அணி, துகில், அலங்கல், சாந்தம் ஆகிய இவற்றைத் (தங்களுக் கேயன்றி) வஞ்சியா் தமக்கும் அளிப்பதருக என வாங்கிச் செல்பவரும். முடிவு 26 ம் பாடலில் காண்க. கீள் என்பது துறவிகளின் உடைவகையுள் ஒன்று. இது உடைக்குக் கீழ் அணிந்து கொள்வது. துணியைக் கிழித்து கோவ

Koviloor Digital Library

ணத்தின் இருபுறத்தும் வைத்துத் தைத்துச் செய்யப்பட்டது . இதை அரைஞாண் என்ற பகுதிக்குப் பதிலாக அணிவர். பிற்காலத்தார் இலங்கோடு எனவும் வழங்குவர் (இலங்கோடு கௌபீரணம்.)

748. **நிந்தைசெய் தெமையெ திர்ந்த நெறியில்புன் சமணர் தங்கள்**
மைந்தினை அறியச் சொல்வம் வசவனுக் கென்றுசெல்வார்
நந்தியை வணங்க வேறுநகர்தொறும் நின்று போந்து
சிந்துரம் வயமா அம்பொன் சிவிகைவிட் டிழிந்து செல்வார் 25

(இ.ள்) நிந்தை செய்து எமை எதிர்ந்த நெறிஇல் புன்சமணர் தங்கள்மைந்தினை = எங்களை நிந்தித்து பகைத்த நன்நெறியில் செல்லாத புல்லிய சமணர் தங்களுடைய வலிமை தங்கிய மாறுபாட்டினை; வசவனுக்கு அறிய சொல்வம் என்று செல்வார் = வசவ தேவருக்கு இச்செய்தியை அறியும்படி கூறுவோம் என்று வசவரிடம் செல்பவரும்; நந்தியை வணங்க வேறு நகர்தொறும் நின்று போந்து சிந்துரம் வயமா அம்பொன் சிவிகை விட்டு இழிந்து செல்வார் = வசவனை வணங்கி அருள் பெறுவதற்காக வெவ்வேறு நகரந்தோறும் இருந்து வந்து யானை குதிரை பொன்னாலாகிய பல்லக்கு ஆகிய இவற்றை விட்டு இறங்கி வசவதேவரிடம் செல்வாரும். (எ.று)

முடிவு - எமை நிந்தை செய்து எதிர்ந்த சமணர் தங்கள் மைந்தனை வசவனுக்குச் சொல்வம் என்று செல்வாரும்; நந்தியை வணங்க வேறு நகர் தொறும் நின்று போந்து சிந்துரம் வயமா சிவகை விட்டு இழிந்து செல்வாரும். முடிவு 26ம்பாடலில். தங்கள் குறை கூறிச் செல்வாரும் வணங்கச் செல்வாரும் ஆகிய இருதிறத்து அடியவர் திறம் கூறப்பட்டுள்ளது.

749. **சீர்கெழு வசவன் பாட திவவியாழ் கொண்டு செல்வார்**
ஆகிவில் மதனை வென்றோன் அடியவர் குழாம்நெருங்கும்
ஏர்கெழு மணிப்ப சும்பொன் னிருங்கடை நோக்கி நின்றார்
ஓகையோடு அலமன் நாமத்து ஒருவனும் இராமன் தானும் 26

(இ.ள்) சீர்கெழு வசவன்பாட திவவுயாழ் கொண்டு செல்வார் = புகழ்பொருந்திய வசவதேவனைப் புகழ்ந்துபாட கட்டமைந்த யாழை எடுத்துக் கொண்டு செல்பவரும்; ஆகி வில்மதனை வென்றோன்

Koviloor Digital Library

அடியவர் குழாம் நெருங்கும் ஏர் கெழு மணிப் பசும் பொன் இருங்கடை = மேற்கூறியவாறு பலவகையினராகி; வில்லையுடைய மன்மதனை வென்ற சிவபெருமானுடைய, தொண்டர் கூட்டங்களெல்லாம் நெருங்கி இயங்கும் அழகு பொருந்திய மணிகள் பதித்து நல்ல பொன்னால் செய்யப்பட்ட பெரிய திருவாயிலை; அலமன் நாமத்து ஒருவனும் இராமன் தானும் ஓகையோடு நோக்கி நின்றார் = அல்லமன் என்ற பெயரையுடைய ஒப்பற்றவனும் அவனுடன் வந்த சித்தராமனும் உவகையோடு பார்த்து நின்றனர் (எ.று)

முடிவு - அடியவர் குழாம் பலராகி நெருங்கும் கடையை அலமன் நாமத்து ஒருவனும் இராமன் தானும் உவகையோடு நோக்கி நின்றார். அடிசில் உண்பான் அடைகுவாரும், அடிசில் உண்டு மறுகிடை வருவாரும், காவடி சுமந்து செல்வாரும், பூசனைக்குப் போவாரும், மிகை என்று எண்ணி இட்டு அகன்று போவாரும், வஞ்சியர்தமக்கு அளிப்பத்தருக என வாங்கிச் செல்வாரும், புசமணர்தங்கள் மைந்தினை வசவனுக்குச் சொல்லும் என்று சொல்வாரும், வணங்க சிந்துரம் வயமா சிவிகை இட்டு இழிந்து செல்வாரும் யாழ் கொண்டு செல்வாரும் என்று இங்ஙனம் பலராகி அடியவர் குழாம் நெருங்கும் கடை என முடித்துச் கொள்க. அடியவர்குழாம் நெருங்கியுள்ள அக்கடைவாயிலை அல்லமனும் சித்தராமனும் உவகையோடு பார்த்து நின்றனர்.

750. **ஆயிடை நின்றோர் தம்மை அப்பணப் பெயரின் மிக்க**
தூயவன் எதிர்கண்டு ஓகை சொல்லுவல் ஐயற்கு என்று
கோயிலுள் [1]அமலன் பூசை குழாத்தொடு செய்யும் போதில்
போயினன் வசவ னோடு புகழ்ந்திது புகலல் உற்றான் 27

(பா.ம்) [1]அமலபூசை

(இ.ள்) ஆயிடை நின்றோர் தம்மை அப்பணப் பெயரின் மிக்க தூயவன் எதிர்கண்டு = வசவதேவனுடைய அரண்மனைக் கடைய வாயிலில் நின்ற அல்லமனையுமம் சித்தராமனையும் அப்பண்ணன் என்னும் பெயருடையவனாய் தூய எண்ணம்மிக்க அவ்ஏவலாளன் ஒருவன் தன்முன் பார்த்து; ஓகை சொல்லுவல் ஐயற்கு என்று கோயிலுள் அமலன் பூசை குழாத்தொடு செய்யும் போதில் போயினன் = இந்த உவப்பான செய்தியை ஐயனாகிய வசவதேவனுக்கு யான் சொல்வல் என்று நினைத்துக் கொண்டு அரண்மனையினுள் அடியார் கூட்டத்தோடு வசவதேவன் சிவபூசை செய்யுங் காலத்திலே அப்பணன் போயினன்;

Koviloor Digital Library

வசவனோடு புகழ்ந்து இது புகலல் உற்றான் = வசவதேவனோடு அவனைப் புகழ்ந்து வாழ்த்துக்கூறி இச்செய்தியை புகலல் உற்றான். (எ.று)

முடிவு - ஆயிடை நின்றோரை அப்பணத் தூயவன் கண்டு ஐயற்கு ஓகை சொல்லுவன் என்று பூசை குழாத்தொடு செய்யும் போதினில் போயினன். போனவன் வசவனோடு புகழ்ந்து இது புகலல் உற்றான்.

751. **மாதவர் இருவர் ஐய மழைமதர் நெடுங்கண் மங்கை**
பாதியன் உருவி ரண்டு படைத்துவந் தனனே என்னச்
சோதிய தரளக் கோவை தோரண வாய்தல் முன்னம்
வீதியில் நின்றார் என்று விளம்பினன் தவத்தில் மிக்கான்
28

(இ.ள்) தவத்தின் மிக்கான் = தவச்செயலில் மிக்கோனாகிய அப் பண்ணன்; (வசவதேவனோடு கீழ்வருமாறு சொல்லத் தொடங்கினான்) ஐய! = ஐயனே; மழைமதர் நெடுங்கண் மங்கைபாதியன் உரு இரண்டு படைத்து வந்தனனே என்ன மாதவர் இருவர் = குளிர்ந்த மதர்த்த விசாலமான விழியைப் பெற்றிருக்கும் உமாதேவியை இடப்பாகத்தில் பெற்றிருக்கும் சிவபெருமான் தானே தன்னுடைய சகுண நிற்குண உரு இரண்டையும் படைத்து வந்தான் என்று கூறும்படி; காட்சி அளிக்கும் மாதவர் இருவர்; சோதிய தரளக் கோவை தோரண வாய்தல் முன்னம் வீதியில் நின்றார் என்று விளம்பினன் = ஒளிறுயுடைய முத்துச் சரங்களால் அமைந்த தோரணத்தையுடைய நம் வாயிலின் முகப்பே தெருவில் நின்றார் என்று சொன்னான். (எ.று)

முடிவு - தவத்தின் மிக்கான் மாதவர் இருவர் தோரணவாய் முன்னம் வீதியில் நின்றார் என்று விளம்பினன். (எத்தகைய மாதவர் எனில்) மங்கை பாதியின் உரு இரண்டு படைத்து வந்தனனே என்ன (தோன்றுகின்ற) மாதவர் இருவர். உரு இரண்டு என்பது இறைவனுடைய சகுண - நிற்குணவடிவத்தைச் சாமரசன் இயற்றிய கன்னடப் பிரபு லிங்கலீலை அல்லமனும் சித்தராமனும் நின்ற நிலையை(இந்து மவுளிய சகுண நிற்குண) என்று கூறும்.

752. **என்றவன் இயம்ப நந்தி எனும் பெயர்க் கருணைக் குன்றம்**
கன்றினை நினைந்து நெஞ்சம் கரைந்துவந் தணையுந்
தாய்க்கிங்கு

Koviloor Digital Library

ஒன்றொரு தடையும் உண்டோ ஒல்லைநீ தருதி என்னச்
சென்றவன் அமல னோடு சித்தரா மனைவ ணங்கி 29

(இ.ள்) அவன் என்று இயம்ப = அப்பண்ணன் இவ்வாறு வசவ தேவரிடத்துக் கூற; நந்தி எனும் பெயர்க் கருணைக் குன்றம் = (இதனைக் கேட்ட) நந்தி என்னும் பெயரைத் தாங்கிய அருள்மலை போன்ற அவன்; கன்றினை நினைந்து நெஞ்சம் கரைந்து வந்து அணையும் தாய்க்கு இங்கு ஒன்று ஒரு தடையும் உண்டோ = தமது பிள்ளையாகிய கன்றினை எண்ணிக் கொண்டு மனம் நெகிழ்ந்து தானே வந்து சேரும் தாய்ப் பசுவுக்கு இத்தருவாயில் பொருந்தும் ஒரு தடையும் உள்ளதாகுமோ; ஒல்லை நீ தருதி என்ன = நீ சென்று விரைவாக அவர்களை இங்கே அழைத்துக் கொண்டு வருவாயாக என்று கூற; அவன் சென்று அமலனோடு சித்தராமனை வணங்கி = அப்பண்ணன் சென்று அல்லமதேவனையும் சித்தராமனையும் பணிந்து. (எ.று)

முடிபு - அவன் என்று இயம்ப கருணைக் குன்றம் கன்றை நினைந்து நெஞ்சம் கரைந்து வந்த அணையும் தாய்க்கு இங்கு தடையும் உண்டோ? நீ ஒல்லை தருதி என்ன; அவன் சென்று அமலனோடு சித்தராமனை வணங்கி.

753. பரசிவஇ[1]லிங்க பூசை பண்ணிய பயனே உங்கள்
வரவென வுளம கிழ்ந்தான் வசவன் நீர் வருக என்ன
வெருவொடும் உளமுளைந்து மெய்த்தவன் விளம்ப எங்கள்
குருபரன் முனிவான் போலக் குறுநகை கொண்டு கூறும் 30

(பா.ம்) [1]லிங்கபூசை

(இ.ள்) பரசிவ இலிங்கபூசை பண்ணிய பயனே உங்கள் வரவு என வசவன் உளம் மகிழ்ந்தான் = மேலான சிவவடிவான இலிங்கத்தை பூசித்துக் கொண்டிருக்கும் பயனே உங்கள் வருகை என்று எங்கள் வசவ தேவன் மனம் மகிழ்ந்தான்; நீர் வருக என்ன = ஆதலால் நீங்கள் உள்ளே எழுந்தருளுவீராக என்று கூறி; வெருவொடும் உளம் உளைந்து மெய்த்தவன் விளம்ப = (இம்மொழியை) அச்சத்தோடு மனம் வருந்தி உண்மைத் தவமுடைய அப்பண்ணன் இவ்வாறு கூற; எங்கள் குருபரன் முனிவான் போல குறுநகை கொண்டு கூறும் = இதனைக் கேட்ட அல்லமனாகிய எங்கள் குருபரன் வசவனை வெறுப்பவன் போல

Koviloor Digital Library

புன்னகை புரிந்து கொண்டு கீழ்வரும் சொற்களைச் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிபு - மெய்த்தவன் இலிங்க பூசை பண்ணிய பயனே உங்கள் வரவு என வசவன் உளம் மகிழ்ந்தான். ஆதலால் நீர்வருக என்ன. வெறு வொடு உளம் உளைந்து விளம்ப. (இதனைக் கேட்ட) குருபரன் முனிவான் போல குறுநகை கொண்டு கூறும். முனிவு - வெறுப்பு

754. **அரசியல் அடைந்தார் தம்பால் ஐயமேற் றருந்து கின்றோர்**
வருசெயல் வரிசை யன்று மறித்துநீ போதி என்னா
உரைசெய அமலன் அப்பன் உளம்வெரீஇ கடிது மீண்டு
வரை செயும் வயிரத் திண்டோள் வசவநா யகற்குச்
சொன்னான் 31

(இ.ள்) அமலன் = அல்லமதேவன்(அப்பணணைப் பார்த்து) அரசியல் அடைந்தார் தம்பால் = அரசியலைச் சார்ந்து வாழ்பவரிடத்தே; ஐயம் ஏற்று அருந்துகின்றோர் வருசெயல் வரிசை அன்று = பிச்சை வாங்கி உண்ணும் துறவிகள் தாமாக வருந்தொழில் முறைமை உடைத்து அன்று (ஆதலால்) நீ மறித்து போதி என்னா உரைசெய = நீ திரும்பிப் போவாயாக என்று கூற; அப்பன் உளம் வெரீஇ = (இதைக் கேட்ட) அப்பண்ணன் உள்ளம் அஞ்சி; கடிது மீண்டு = விரைவிலே திரும்பி; வரை செயும் வயிரத்திண்தோள் வசவநாயகற்குச் சொன்னான் = மலையால் செய்தாலொத்த உறுதியான திண்ணிய தோள்களையுடைய வசவதேவனுக்கு அல்லமன் கூறிய இச்செய்தியைக் கூறினான். (எ.று)

முடிபு - அமலன் ஐயமேற்று அருந்துகின்றோர் அரசியல் அடைந்தார் தம்பால் வருசெயல் வரிசையன்று (ஆதலால்) நீ மறித்துப்போ என்னா உரைசெய; அப்பன் உள்ளம் வெரீஇ மீண்டு வசவநாயகற்குச் (இதனை) சொன்னான். ஐயம் ஏற்று அருந்துகிற துறவிகளாகிய கிருத கிருத்தியருக்கு அரசியலடைந்தோரால் பெற வேண்டிய பயன் ஒன்றுமில்லை. ஆதலால் இவ்வாறு கூறினார்.

755. **அல்லமன் புகன்ற அப்பணன்**
சென்று நின்று
சொல்லலும் துணுக்கென் றுள்ளம்
சொற்றளர்ந் துடல்வி யர்த்துப்
புல்லவந் தணையுந் தாய்முன்
பொறாதுதும் பறுத்திட் டோடும்

Koviloor Digital Library

நல்லிளங்க கன்று போன்முன்
னான்செலா திருந்தே னென்று 32

(இ.ள்) அப்பணன் அல்லமன் புகன்ற மாற்றம் சென்று நின்று சொல்லலும் = அப்பண்ணன் என்பான், அல்லம தேவன் கூறிய மறுமொழியை வசவ தேவரிடத்துச் சென்று சொல்லலும்; துணக்கு என்று உள்ளம் சொல் தளர்ந்து உடல் வியர்த்து = (இதைக்கேட்ட வசவ தேவன்) தன் மனம் திடுக்கிட்டு மொழி தடுமாறி நிற்க உடம்பு வியர்க்கப் பெற்று; புல்ல வந்து அணையும் தாய் முன் பொறாதுதும்பு அறுத்திட்டு ஓடும் நல் இளம் கன்று போல் = பொருந்துதற்கு வந்து சேரும் தாய்ப்பசுவின் முன்னே அதுபுல்ல வரும் வரை தாங்காமல் கயிற்றை அறுத்துக் கொண்டு தாயை நோக்கி ஓடுகின்ற நல்ல இளமையான கன்றுக்குட்டியின் செயல் போல; நான் முன் செலாது இருந்தேன் என்று = நானே முதலில் அவர்கள் முன் அவர்களை வரவேற்கச் செல்லாது இருந்து விட்டேனே என்று கூறிக் கொண்டு.(எ.று)

முடிவு - அப்பண்ணன், அல்லமன் மாற்றத்தைச் சென்று நின்று சொல்லலும் (வசவ தேவன்), உள்ளம் துணுக்கென்று சொல் தளர்ந்து உடல் வியர்த்து புல்ல வந்தணையும் தாய் முன் பொறாதுதும்பு அறுத்திட்டு ஓடும் இளங்கன்று போல் நான் முன் செலாது இருந்தேன் என்று வசவன் அல்லம தேவரை வரவேற்கச் செல்லாதிருந்ததற்கு உள்ளம், சொல், உடல் என்னும் மூன்று கருவிகளாலும் வருந்தினான்.

இந்நிலையில் மாச்சி தேவன் வசவதேவரை நோக்கிக் கூறியது

756. கரைந் மனமுளைந்து [1]கவலைகொண் ட ழுங்க நந்தி
பெருந்தகை மாச்சி தேவன் பெருங்கடல் பிறந்த சாவா
மருந்து தன் எதிர்கி டைத்தும் மற்றதை வாரிக் கையால்
அருந்துற அலசு வான்போல் ஆயினை நீயும் என்றான் 33

(பா.ம்) [1]கன்றல் கொண்டு

(இ.ள்) நந்தி கரைந்துகும் மனம் உளைந்து கவலை கொண்டு அழுங்க = வசவதேவன் நெகிழ்ந்துஉருகுகின்ற மனம் வருத்தம் பெற்று கவலை அடைந்து இரங்கி நிற்க; பெருந்தகை மாச்சி தேவன் = இந்நிலையைக் கண்ட பெரிய தகுதி வாய்ந்த மடிவால மாச்சையன் (வசவதேவனை நோக்கி) பெருங்கடல் பிறந்த சாவா மருந்து தன் எதிர் கிடைத்தும் = பெரிய திருப்பாற்கடலில் தோன்றிய அமிழ்தம் தனக்கு

Koviloor Digital Library

முன்னாலே தானே வந்து கிடைக்கப் பெற்றும்; மற்று அதைவாரிக் கையால் அருந்துற அலசு வான் போல் ஆயினை நீயும் என்றான் =(அவ்வமிழ்தத்தை உடனே உண்ணாமல்) பின் அவ்வமிழ்தத்தை கையால் எடுத்து சிந்துவான் போல நீயும் ஆனாய் என்று சொன்னான். (எ.று)

முடிவு - நந்தி மனம் உளைந்து கவலை கொண்டு அழுங்க மாச்சி தேவன் சாவா மருந்து தன் எதிர் கிடைத்தும் அதைவாரி கையால் அருந்துற அலசுவான் போல் நீயும் ஆயினை என்றான். சிறந்த பொருள் கிடைத்தால் அதை விரைந்து எடுத்து அப்படியே கொள்ள வேண்டும். அவ்வாறின்றி அதைக்கையாலெடுத்து உண்ண வேண்டி அலசுதல் போல் நீஆயினை என்று கூறினான். அலசுதல் என்பதற்குக் கழுவுதல் என்னும் பொருளும் ஆகும்.

கேட்ட வசவதேவன் அருந்தவரொடு
அல்லமரைவர வேற்கச் சென்றது

757. **பெருந்தகை மாச்சி தேவன்**
பேசுசொல் விளக்குத் தூண்டும்
துரும்பென உதவச் செம்பொன்
தூணெனும் தோளான் மாழ்கி
[1]இருந்தவப் பிழையென் மேற்றே
என்றடி இறைஞ்சி ஒய்யென்(று)
அருந்தவ ரொடுபு றப்பட்(டு)
அல்லமன் அருகு வந்தான் 34

(பா.ம்) [1]இருந்தவ - என்று விளியான பாடமும் உண்டு

(இ.ள்) பெருந்தகை மாச்சி தேவன் பேசுசொல் = பெரிய தகுதி வாய்ந்த மடிவால மாச்சையன் இவ்வாறு கூறிய சொல்; விளக்குத் தூண்டும் துரும்பென உதவ = விளக்கினைத் தூண்டிவிடும் சிறிய தூண்டு கோல் போல் உதவ; செம்பொன் தூண்எனும் தோளான் மாழ்கி இருந்த அப்பிழை என் மேற்றே என்று அடி இறைஞ்சி - சிவந்த பொன்னினாலே செய்யப்பட்ட தூண் என்று கூறப்பட்ட தோளையுடைய அல்லம தேவன் மனம் கலங்கி நானே முன் சென்று வரவேற்காமல் இருந்த அப்பிழை என்மேலதே என்று கூறி மாச்சையனுடைய திருவடியை வணங்கிக் கொண்டு; அருந்தவரொடு ஒல்யென்று புறப்பட்டு அல்லமன் அருகு வந்தான் = அரிய தவம் செய்வாரின் கூட்டத்தோடு விரைந்து புறப்பட்டு

Koviloor Digital Library

அல்லம தேவருடைய அருகே வந்து சேர்ந்தான் (எ.று)

முடிபு - மாச்சி தேவன் பேசு சொல் விளக்குத் தூண்டும் துரும் பென உதவ தோளான் மாழ்கி இருந்த அப்பிழை என் மேற்றே என்று அடி இறைஞ்சி அருந்தவரொடு ஒய்யென்று புறப்பட்டு அல்லமன் அருகு வந்தான். மாச்சி தேவனது சொல் தூண்டு கோல் போல் உதவிற்று என்ற உவமையால். இப்பாட்டு வினை உவமையணியின் பாற்படும் என்க.

அல்லம தேவரிடம் சென்று வசவேசர் வேண்டுதல்

758. என்குணம் மறமே ஆகி யானதில் திரிதல் இல்லேன்
நின்குணம் அருளே யென்றால் நீயதில் நிற்றி எந்தாய்
புன்குண மகவின் தீமை பொறுத்தருள் செய்கை என்னும்
தன்குணம் விடுத்தொழிக்கும் தாய்வியன் உலகில்
உண்டோ 35

(இ.ள்) எந்தாய் = என் தந்தை போன்றவனே, என்தாய் போன்றவனே!; புன்குணமகவின் தீமை பொறுத்து அருள் செய்கை என்னும் தன்குணம் = தீய பண்பினையுடைய மகவினது தீச்செயலை பொறுத்துக் கொண்டு; அருள் செய்தல் என்னும் தன்னுடைய பண்பை; விடுத்து ஒழிக்கும் தாய் வியன் உலகில் உண்டோ = அறிதியாக விட்டு விடுகின்ற தாய் இப்பெரிய உலகத்தில் உண்டோ? (இல்லை என்றபடி) ஓகாரம் எதிர் மறை(ஆதலால்) என்குணம் மறமே ஆகியான் அதில் திரிதல் இல்லேன் = என்னுடைய பண்பு மறப்பண்பேயாகி யான் அப்பண்பிலிருந்து வேறுபட்டிலேன்; நின்குணம் அருளே என்றால் நீ அதில் நிற்றி = உன்பண்பு அருள் பண்பேயாகில் நீ அப்பண்பிலேயே நிலை பெறுவாயாக என்று வேண்டிக் கொண்டான்.

முடிபு - எந்தாய் புன்குண மகவின் தீமையைப் பொறுத்து அருள் செய்கை என்னும் தன் குணத்தை விட்டொழிக்கும் தாய்!வியன் உலகில் உண்டோ? என் குணம் மறமேயோகி யான் அதில் திரிதல் இல்லேன். நின் குணம் அருளே என்றால் நீ அதில் நிற்றி. இப்பாட்டு வேற்றுப் பொருள் வைப்பணி.

வசவ தேவன் அல்லமரை வேண்டி வணங்கியது

759. சூத்திரப் பாவை யான்அச் சூத்திரி நீய ருட்கண்
பார்த்தெனைக் குறைய கற்றிப் பணிசெயக் கோடி என்று

Koviloor Digital Library

வாய்த்தநற் குரவன் செந்தா மரையடி மிசைவி ழுந்தான்
ஏத்திமெய்ப் பத்தி நீத்தம் எனப்படும் வசவ தேவன் 36

(இ.ள்) மெய்பத்தி நீத்தம் எனப்படும் வசவதேவன் = உண்மையான பத்தி வெள்ளம் என்று கூறப்படும் வசவதேவன்; (அல்லமனை நோக்கி) யான் சூத்திரப் பாவை நீ அச்சூத்திரி = அடியேனாகிய நான் கயிறால் இயக்கப்படும் பாவை போன்றவன், நீயோ அப்பாவையை இயக்குகின்ற கயிற்றையுடையவன்; அருள் கண்பார்த்து எனைக்குறை அகற்றிப் பணி செயக் கோடி என்று = உன்னுடைய அருள் செய்யும் விழியால் என்னைப் பார்த்து என்னுடைய குறைகளை எல்லாம் நீக்கி யான் உனக்குப் பணிசெய்யுமாறு என்னைக் கொள்வாயாக என்று கூறி; ஏத்தி வாய்த்த நற்குரவன் செந்தாமரையடி மிசை விழுந்தான் = புகழ்ந்து கூறி இப்போது வந்து நல்ல குரவனாகிய அல்லம தேவருடைய செந்தாமரை மலர் போன்ற திருவடிமிசை வீழ்ந்து வணங்கினான். (எ.று)

முடிபு - வசவதேவன் யான்சூத்திரப்பாவை. நீ அச்சூத்திரி (ஆகையால்) அருட் கண்ணால் எனைப் பார்த்துக் குறையகற்றி பணி செயக் கோடி என்று ஏத்தி குரவன் அடிமிசை வீழ்ந்தான். கன்னடப் பிரபுலிங்க லீலையில் இவ்விடத்தில் நான் மருளுடைய மகவும் நீ அருளுடைய தாய். நான் குற்ற முடையவன். நீ குற்ற மில்லாத நிரஞ்சனன். யான் பந்திக்கப்பட்டபசு. நீ பந்தத்தை நீக்கும் பதி. ஆகையால் எனது தப்புகளை எல்லாம் நீக்கி யருள வேண்டும் என வேண்டிக் கொண்டதாகக் கூறும்.

சென்ன வசவன் வேண்டு கோள்

760. நிலமகள் பொறாது [1]தள்ளின் நிறுத்துனர் யாவர் ஓதை
மலிகடல் புரளும் ஆயின் மறிப்பவர் உளரோ எங்கள்
தலைவ நீ முனிவை ஆயில் தடுப்பர் உலகில் யாண்டும்
இலைஇலை அருள்செய் எந்தாய் எனச்சென்ன வசவன்
தாழ்ந்தான் 37

(பா.ம்) [1]தள்ள

(இ.ள்) சென்ன வசவன் = அப்பொழுது சென்ன வசவன் என்பான் (அல்லமனை நோக்கி); நிலமகள் பொறாது தள்ளின் நிறுத்துனர் யாவர் = எல்லோரையும் எல்லாப் பொருள்களையும் தாங்குகின்ற நில மகளே (ஒருவரை) தாங்க முடியாது என்று கூறி தள்ளி விட்டால் அதைத் தடை செய்பவர் யார்?; (ஒருவரும் இல்லை) ஓதைமலிகடல் புரளும் ஆயின்

Koviloor Digital Library

மறிப்பவர் உளரோ = ஓசை மிகுந்த கடலே கரையைக் கடக்குமாயின் அதைத் தடுப்பவர் யாரேனும் உள்ளாரோ?; (ஒருவரும் இல்லை) எங்கள் தலைவ நீ முனிவை ஆயில் - எங்களுக்குகெல்லாம் தலைவனாய் இருப்பவனே! அத்தகைய நீ இப்போது எங்களை வெகுளுவாயே ஆனால்; தடுப்பவர் உலகில் யாண்டும் இலைஇலை = அதைத் தடுக்கின்றவர்கள் இந்த உலகத்தில் எப்பொழுதும் இல்லை இல்லை; எந்தாய் அருள் செய் எனத் தாழ்ந்தான் = எந்தையே! எங்களுக்கு எல்லாம் நீ அருள் செய்வாயாக எனக் கூறி வணங்கினான். (எ.று)

முடிவு - சென்ன வசவன் (அல்லமனை நோக்கி) நிலமகள் பொறாது தள்ளினால் நிறுத்துனா் யாவர்? கடல்புரளுமாயின் மறிப்பவர் உளரோ எங்கள் தலைவ! நீ முனிவையாயின் தடுப்பவர் உலகில் யாண்டும் இலை இலை. ஆகையால் எந்தாய்! அருள்செய் எனத்தாழ்ந் தான். இலைஇலை என்பது துணிவு பற்றிய அடுக்கு எனக் கொள்க அல்லது. உலகில் இல்லை யாண்டும் எனப்பிரித்துக் கூட்டுக.

மடிவால மாச்சையன் வேண்டுகோள்

761. சொற்றிடும் குதலைச் சொல்லில் சொல்திறம் தெரிதல் போல்இச்
சிற்றிளங் குமரன் அன்பு செயவடி யிடுமுன் நோக்கேல்
சற்றுநின் கடைக்கண் வைத்து தண்ணளி புரிக என்று
[1]நற்றவ மாச்சி தேவன் நம்குர வனைப் பணிந்தான் 38

(பா.ம்) [1]நற்றவன்

(இ.ள்) நல்தவ மாச்சி தேவன் - நல்ல தவத்தையுடைய மடிவால மாச்சி தேவன் (அல்லமனைப் பார்த்து), சொற்றிடும் குதலை சொல்லில் திறம் தெரிதல் போல் = மகவு ஒன்று பேசத் தொடங்கும் குழரும் சொல்லிலே சொல்லிலக்கணக் கூறுகளை எல்லாம் ஆராய்தல் போல; இச்சிறு இளம் குமரன் அன்பு செய அடிஇடுமுன் நோக்கேல் = வசவனாகிய இந்த சிறிய இளைய பாலகன். பக்தி செய்ய தொடங்கு முன் அவனிடத்துப் பக்திக்குரிய இலக்கணங்களையெல்லாம் நோக்காதே; சற்று நின் கடைக்கண் வைத்து தண்ணளி புரிக என்று = சிறிது உனது கடைக்கண் நோக்கத்தைச் செலுத்தி பக்தி உண்டாகுக என்று அருள் செய்வாயாக என்று கூறி; நம்குரவனைப் பணிந்தான் = நம்குருவாகிய அல்லமதேவனைப் பணிந்தான்.(எ.று)

முடிவு - மாச்சி தேவன் அல்லமனை நோக்கி மகவு சொற்றிடும்

Koviloor Digital Library

குதலைச் சொல்லிலே சொல்திறம் தெரிதல் போல இக்குமரன் அன்பு செய அடியிடு முன் நோக்கேல் நின்கடைக் கண் சற்று வைத்து தண்ணருள் புரிக என்று நம் குரவனைப் பணிந்தான். சொற்றிறம் - சொல்லிலக்கணத்தை. இப்பாட்டில் உவமையை அறிக.

கின்னரப் பிரம்மையன் வணங்கிக் கூறியது

762. உரைமனம் மெய்யொ ருங்கி யுன்பணி செய்ய வல்லோன்
தரைமிசை யிவண லாது தாளொரு வரையும் [1]காணோம்
அருள்செய வேண்டும் என்ன அல்லமன் அடிப ணிந்தான்
கிரிமகள் கொழுநற்கு அன்பன் கின்னரப் பிரமன் அம்மா
39

(பா.ம்) [1]காணேம்

(இ.ள்) கிரிமகள் கொழுநற்கு அன்பன் கின்னரப் பிரமன் = மலைமகளுக்குக் கணவனாகிய சிவபெருமானின் அன்பன் என்று கூறப்படும் கின்னரப் பிரமன் என்பான் அல்லமனை நோக்கி; உரை மனம் மெய்யொருங்கியுன் பணி செய்ய வல்லோன் = உரையும் உள்ளமும் உடலும் ஆகிய இம் மூன்று கருவிகளும் ஒன்றுபட்டு உனக்குரிய தொண்டினைச் செய்வதற்கு வல்லமை படைத்தவன்; தரைமிசை இவன் அலாது தான் ஒருவரையும் காணோம் = இந்நிலவுலகத்தில் இவ் வசவதேவன் அல்லாது வேறு ஒருவரையும் கண்டிலோம்; அருள் செய வேண்டும் என்ன= அல்லமன் அடி பணிந்தான் = (ஆகையால்) இவ்வசவ தேவனுக்குத் திருவருள் செய்ய வேண்டும் என்று கூறி அல்லம தேவனுடைய திருவடியைப் பணிந்தான் (எ.று) அம்மா அசைச் சொல்

முடிவு - கின்னரப் பிரமன் அல்லமனை நோக்கி ஒருங்கி உன்பணிசெய்ய வல்லோன் தரைமிசை இவன் அலாது ஒருவரையும் காணோம் (ஆகையால் நீ) அருள் செயல் வேண்டும் என்ன அல்லமன் அடிபணிந்தான். வசவ புராணம் கின்னரப் பிரமய்யர், கின்னரய்யர், என்று இரண்டு அடியார்களைக் குறிக்கின்றது. அவருள் முதல்வராகிய கின்னரப் பிரமய்யர் பொன்டூரிலே பிறந்து கின்னரம் என்ற இசைக் கருவியை வாசித்து பக்தி செய்து இருந்தார். இறைவன் இவருக்கு ஏற்பட்ட வறுமை கண்டு நாடோறும் ஒரு பொற்காசினைக் கொடுத்து வந்தார் பின்னர் பசவரது புகழைக்கேட்டு கல்யாணப் பட்டிணத்துக்கு வந்து தங்கி பல அற்புதச் செயல்களைச் செய்து வந்தார் என அப் புராணம் கூறும்.(விரிவினை வசவ புராணத்துக் காண்க)

Koviloor Digital Library

மற்றுள்ள தவத்தோர் எல்லாம் அல்லமனை வணங்கி வேண்டுதல்

763. எமை யெலாம் அடிமை வேண்டின்
இவன்பிழை பொறுத்தி என்னா
அமையுலாம் [1]பணை[2]மென் தோட்சேய்
அரிமதர் மழைக்கண் செவ்வாய்
உமை மணா ளனையு வந்த
வொண்டவர் எலாம்பணிந்தார்
சமையுளார் உணரும் எங்கள்
தம்பிரான் சாற்றல் உற்றான்

(பா.ம்) [1]இணைமென்றோள்; [2]அணிமென்றேள்

(இ.ள்) அமையுலாம் பணைமென் தோள் சேய் அரிமதர் மழைக் கண் செவ்வாய் உமைமணாளனை உவந்த ஒண்தவர் எல்லாம் = மூங்கில் போல் விளங்கும் பருத்த மெல்லிய தோள்களையும்; சிவந்த இரேகை களையுடைய மதர்த்த குளிர்ந்த கண்களையும் சிவந்த வாயினையும் பெற்றிருக்கும் உமாதேவியின் கணவனாகிய சிவபெருமானை விரும்பிய ஒளி படைத்த தவத்தோர் எல்லாம்; (அல்லமனை நோக்கி) எமை எலாம் அடிமை வேண்டின்இவன் பிழை பொருத்தி என்னா = எங்களை எல்லாம் நீ தொண்டு கொள்ள வேண்டின் முதலில் வசவன் செய்த இப்பிழையைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி; பணிந்தார் = அல்லம தேவரைப் பணிந்தார்கள்; சமையுளார் உணரும் எங்கள் தம்பிரான் சாற்றல் உற்றான் = சமை என்னும் பண்புடையவரால் உணரப்படும் எங்கள் தம்பிரானாகிய அல்லமன் இவர்கள் கூறியவை எல்லாம் கேட்டுக் கொண்டு அவர்களுக்கு மாற்றாம் கூறத் தொடங்கினார்.

முடிபு - ஒண்தவர் எல்லாம் எமையெலாம் அடிமை வேண்டின் இவன் பிழை பொறுத்தி என்னா பணிந்தார். எம்பிரான் சாற்றலுற்றான். சமை என்பது சாதன வகையுள் ஒன்று. இது மனம் முதலான அந்தக் காரணங்களைப் பொறி வழி செல்லாது தடுத்தலாகும்(சமம் அகக் கரண தண்டம் என்பது கைவல்யம்) தம்பிரான் - தமக்குத் தாமே தலைவர்.

தம்பிரான் சாற்றியது

764. சொல்லிய சொற்கள் கற்றீர் சொற்றவந் நெறியில் நிற்கும்
நல்லியில் இல்லை நும்பால் நவில்தரு மாற்றம் ஒன்று

Koviloor Digital Library

புல்லிய செயலொன் றாகப் பொருந்துநர் தம்மில் ஆர்க்கும்
பல்லிய மொடுந டிக்கும் பரதரே பெரியர் ஆவார் 41

(இ.ள்) சொல்லிய சொற்கள் கற்றீர் = வசவரும் வசவரைச் சூழந்தோர் நீங்கள் எல்லோரும் சொல்லத்தக்க சொற்களை எப்படிச் சொல்லலாம் என்பதை நன்றாகக் கற்றுக் கொண்டுள்ளீர்கள் (ஆனால்); சொற்ற எந்நெறில் நிற்கும் நல்லியல் நும்பால் இல்லை = உங்களால் சொல்லப்பட்ட அந்த வழியிலே உங்கள் உடம்பு நின்று இலங்கும் நல்ல இயல்பு உங்களிடமில்லை; நவில் தரும் மாற்றம் ஒன்று புல்லிய செயல் ஒன்றாகப் பொருந்துநர் தம்மில் = தங்கள் நாவால் சொல்லும் சொல் ஒன்றாய் இருக்க தங்கள் உடம்பால் பொருந்தும்செயல்வேறொன்றாய் இருக்க இவ்வாறு செய்பவர்களைக் காட்டிலும்; ஆர்க்கும் பல்லியமொடு நடிக்கும் பரதரே பெரியர் ஆவார் = ஒலிக்கும் பலவிதமான வாத்தியங் களோடு இசைப்பாட்டுகளைப் பாடி அவைகளுக்குத் தகுதியாக உடம்பால் நடிக்கும் கூத்தரே சிறந்தோர் ஆவார். (எ.று)

முடிபு - நீவிர் சொல்லிய சொற்களைக் கற்றீர். சொற்ற அந்நெறி யில் நிற்கும் நல்ல இயல்பு நும்பால் இல்லை. நவில் தரும் மாற்றம் ஒன்று. புல்லிய செயல் ஒன்றாக பொருந்துநர் தம்மில். இயமொடு நடிக்கும் பரதரே பெரிய ராவார் பொருந்தும் செயல் அல்லது மேற் கொண்ட செயல் என்பது. பொருளாகும்(புல்லியசெயல் என்பதற்கு) ஒரு சொற்களைச் சொன்னால் சொன்னவாறு உடம்பு செயல்பட வேண்டும். அவ்வாறு செயல் படாமல் சொல்லுவது ஒன்றும் செய்வது வேறொன்று மாக வேறுபடுதல் கூடாது. அவ்வாறு வேறுபடுபவரைக் காட்டிலும் வேறுபடாத பரதரே மேலானவர். அவர்கள் வேறு படாமை யாவது. அவர்கள் இசைப் பாடல்களைச் சொல்லால் பாடி அதற்குரிய நடிப்பை உடம்பால் செய்வர். இவரிடம் சொல்லும் செயலும் ஒத்துள்ளன. அதனால் பரதரே பெரியராவார் எனக் கூறினார்.

765. ஆதர விலையேல் வேண்டும் அறத்தினில் பொருளோர் செம்பொன்
பூதர அளவ ளித்தும் பொருளழி வளவே யாகும்
ஆதர வுளதேல் நல்கும் பொருளணு வளவென்றாலும்
பூதர மெனவ ளர்ந்து புண்ணியப் பொருள ளிக்கும் 42

(இ.ள்) வேண்டும் அறத்தினில் ஆதரவு இலையேல் = தான் விரும்பிச் செய்யும் அறத்தினில் தமக்கு அன்பு இல்லாவிட்டால்;

Koviloor Digital Library

பொருள் ஓர் பூதரம் அளவு அளித்தும் பொருள் அழிவு அளவே ஆகும் = அவ்அறம் செய்வதற்காக பொருளை ஒப்பற்ற செம்பொன் மலையை ஒப்ப அவ்வளவு கொடுத்தாலும் அச்செயல் பொருள் அழிவு மாத்திரமே ஆகும். (அறமும் கிட்டாது பொருளும் வளராது) ஆதரவு உளதேல் = தான் செய்யும் அறத்தில் தனக்கு அன்புண்டாகுமேயானால்; நல்கும் பொருள் அணு அளவு என்றாலும் = அவ்வறத்துக்காக கொடுக்கப்படும் பொருள் அணுவைப் போல மிகச்சிறிதளவே யானாலும்; பூதரம் என வளர்ந்து புண்ணியப் பொருள் அளிக்கும் = அப்பொருள் மலையைப் போல வளர்ந்து புண்ணியமாகிய பயனையும் தரும். (எ.று)

முடிபு - வேண்டும் அறத்தினில் ஆதரவு இலையேல் பொருள் பூதரவு அளவு அளித்தும் பொருள் அழிவு அளவேயாகும். வேண்டும் அறத்தினில் ஆதரவு உளதேல் நல்கும் பொருள் அணுவளவு என்றாலும் (அது) பூதரம் என வளர்ந்து புண்ணியப் பொருளையும் அளிக்கும். இதனால் அறம் செய்பவர்க்கு அன்பு வேண்டும் என்பதாயிற்று.

766. **துறவறம் மனையறஞ்சீ தூய்மைநல் கல்வி நல்லோர்**
உறவொடு மகங்கள் தானம் ஒண்தவம் விரதம் பூசை
அறிவிவை அனைத்தும் இல்லை ஆதரவு இல்லை ஆயில்
[1]பெறுவன மெய்வ ருத்தம் பெரும்பொருள் அழிவு மாதோ
43

(பா.ம்) [1]பெறுமவன்

(இ.ள்) துறவறம் மனையறம்ஆதரவு இல்லையாயில் = துறவற நெறியின் கண்ணும் இல்லற நெறியின் கண்ணும் ஒருவனுக்கு அன்பில்லையானால்; சீர்தூய்மை நற்கல்வி நல்லோர் உறவொடு மகங்கள் தானம், ஒண்தவம், விரதம், பூசை, அறிவு இவை அனைத்தும் இல்லை = (அவ்விரு நெறிக்கும் வேண்டிய) சிறப்புப் பெற்ற இருவகைத் தூய்மையும் நல்ல கல்வியும் நல்லோர் உறவொடு கூடிச் செய்யும் யாகங்களும் தானங்களும் சிறந்த தவமும் விரதங்களும் கடவுட் பூசையும் ஞானமும் இவை அனைத்தும் இல்லையாகும்; பெறுவன = இவற்றை அன்பில்லாமல் செய்தால் இவற்றிலிருந்து பெறுவன; மெய்வருத்தம் பெரும் பொருள் அழிவு = உடல் வருத்தமும் பெரும் பொருள் அழிவு மேயாகும். துறவறப்பயனும் இல்லறப் பயனும்கிட்டா. (எ.று)

முடிபு - துறவறம் மனையறங்களில் ஆதரவு இல்லையாகில்

Koviloor Digital Library

அவ்விரண்டிற்கும் வேண்டிய தூயமை கல்வி நல்லோர் உறவொடு கூடிய மகம் தானம், தவம், விரதம், பூசை, அறிவு ஆகிய அனைத்தும் (பயன்தருவது) இல்லை. பெறுவன மெய்வருத்தமும் பெரும் பொருள் அழிவுமேயாகும்.

767. **ஆதர வுடையான் செய்யும் அலலவும் நல்ல ஆகும்**
ஆதர விலாதான் செய்யும் நல்லவும் அல்ல ஆகும்
ஆதர வதனால் ஆவிக் கருந்துணை இன்பம் முத்தி
ஆதர அலாது வேறொன் றளித்திடக் கண்ட துண்டோ 44

(இ.ள்) ஆதரவு உடையான் செய்யும் அல்லவும் நல்லவாகும் = அன்புடையான் செய்கின்ற தீச்செயலும் நல்ல செயலாகும்; ஆதரவு இலாதான் செய்யும் நல்லவும் அல்லாவாகும் = அன்பு இல்லாதவன் செய்கின்ற நற்செயலும் தீச்செயலாகும்; ஆதரவு அதனால் ஆவிக்கு அருந்துணை இன்பம் முத்தி ஆகும் = அன்பினாலே உயிருக்கு அரியதுணையாகிய இன்பமும் வீடு பேறும் கிடைக்கும்; ஆதரவு அலாது வேறு ஒன்று அளித்திடக் கண்டது உண்டோ = மேலே கூறிய இன்பத்தையும் முத்தியையும் அன்பு அல்லாமல் வேறு ஒன்று அளித்திடலை நாம் இவ்வுலகத்தில் கண்டது உண்டோ? (எ.று)

முடிபு - ஆதரவு உடையான் செய்யும் அல்லவும் நல்ல ஆகும். ஆதரவு இலாதான் செய்யும் நல்லவும் அல்லவாகும். ஆதரவதனால ஆவிக்கு அருந்துணை இன்பம்முத்தி உண்டாகும் ஆதரவு அலாது வேறு ஒன்று அளித்திடக் கண்டதுண்டோ? துணையை அடையாக்காமல் துணையும் இன்பமும் முத்தியும் ஆதரவு அதனால் கிடைக்கும் என்று பொருள் கூறிக்கொள்க.

அல்லமர் கூற்றும் தவத்தோர் கூற்றும்

768. **ஆதலால் அன்புஇல் நும்சொல் அகமகிழ் வினைசெயா என்(று)**
ஓதினான் அடியர் தீமை ஒழித்தருள் தொழிலில் நின்றோன்
காதலால் வணங்கி னோர்நின் கருணையால் அன்றி யாங்கள்
ஏதினால் நல்லர் ஆவேம் என்றடி தொழுது நின்றார் 45

(இ.ள்) அடியர் தீமை ஒழித்து அருள் தொழிலில் நின்றோன் = தொண்டர் உடைய தீமைகளைப் போக்கி அவர்களுக்கு அருள் செய்யும்

Koviloor Digital Library

செயலை மேற்கொண்டு நின்றோனாகிய அல்லம தேவன்(அவர்களைப் பார்த்து); ஆதலால் அன்பு இல்நும் சொல் அகம் மகிழ்வினை செயா என்று ஓதினான் = (துறவறச்செயல் இல்லறச் செயல் முதலானவற்றிற் கெல்லாம் அன்பு முதற் காரணமாய் வேண்டும்) ஆகையினாலே அன்பு இல்லாத உங்களுடைய உபசாரமொழி எனக்கு மனமகிழ்ச்சியைச் செய்யாது என்று கூறினான்; காதலால் வணங்கினோர் = அன்பினாலே வணங்கிய தவத்தோர் எல்லாம்; நின் கருணையாக அன்றி = நீ எங்களுக்குச் செய்யும் அருளால் அன்றி யாங்கள் ஏதினால் நல்லர் ஆவேம் என்று தொழுது நின்றார் = நாங்கள எதனாலே தூயவராக முடியும் என்று கூறி அல்லமதேவரது திருவடியினை மீண்டும் தொழுது நின்றார்கள்.(எ.று)

முடிபு - அடியர்தீமை ஒழித்து அருள் தொழிலில் நின்றோன். ஆதலால் அன்பு இல்லாத நும் சொல் மகிழ்வினைச் செய்யா என ஓதினான்(அப்பொழுது) காதலால் வணங்கினோர் நின்கருணை யாலன்றி யாங்கள். ஏதுனால் நல்லர் ஆவேம் என்று அடி தொழுது நின்றார்.

சித்தராமன் வேண்டுகோள்

769. காஞ்சிரம் கனிதின் றாங்குக் கடையனேன் பிழைபொறுத்தாய்
தீஞ்சுவை [1]அமிர்தம் அன்ன [2]திவ்விய கறியில் குற்றம்
ஆம்சுவை அறைதல் போலிவ் அன்பனைச் சீறேல் என்று
பூஞ்சரண் மிசைவ ணங்கிப் போற்றினன் சித்த ராமன் 46

(பா.ம்) [1]அமுதமன்ன; [2]தீவிய

(இ.ள்) சித்தராமன் = அப்பொழுது சித்தராமன் அல்லமனை நோக்கி; காஞ்சிரம் கனிதின்று ஆங்கு = எட்டிப் பழத்தையும் அதனுடைய கசப்பு நோக்கி விட்டுவிடாமல் நுகர்ந்தாற்போல; கடையனேன் பிழை பொறுத்தாய் = கடைப்பட்டவனாகிய நான் உனக்குச் செய்த பிழைகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு அருள் செய்தாய்; தீம் சுவை அமிர்தம் அன்ன திவ்விய கறியில் குற்றம் ஆம் சுவை அறைதல் போல் = இனிய சுவையையுடைய அமிர்தத்தை ஒத்த நல்ல உண்ணும் பொருள்களில் குற்றமாகிய சுவையைக் கற்பித்துச் சொல்லுதல் போல; இவ் அன்பனைச் சீறேல் என்ற = இந்த அன்பையுடைய வசவ தேவனை அன்பில்லை என்று கூறி நீ சினவாதே என்று கூறிக்கொண்டு; பூஞ்சரண் மிசை வணங்கிப்

Koviloor Digital Library

போற்றினன் = அல்லம தேவனுடைய மலர் போன்ற திருவடியின் மேல் வீழ்ந்து வணங்கிப் போற்றுதல் செய்தான்.

முடிபு - சித்தராமன் காஞ்சிரம் கனிதின்றாங்குக் கடையனேனுடைய பிழையையும் பொறுத்தாய். அமிழ்தம் அன்னகறியில் குற்றமாம் சுவை அறைதல் போல இவ்அன்பினைச் சீறேல் என்று சரண் மிசை வணங்கிப் போற்றினன்.

அப்பொழுது வசவதேவனும் சென்னவசவனும் அன்பரும் துதித்தது

770. அடைக்கலம் என்னை ஆளாய் அண்ணலே என்று நந்தி
கடிக்கம லங்கள் வென்ற கான்மிசை மீண்டும் தாழ்ந்தான்
விடுத்திடேல் என்று சென்ன வசவனும் வீழ்ந்தி றைஞ்சித்
தொடிக்கரம் தொழுதான் அன்பர் துதித்தனர் சூழ்ந்து
கொண்டு 47

(இ.ள்) நந்தி அடைக்கலம் என்னை ஆளாய் அண்ணலே என்று = அப்பொழுது வசவன் பெருமை தங்கியவனே யான் உனக்கு அடைக்கலம் என்னை நீ ஆள்வாயாக என்று கூறிக் கொண்டு; கடிக்கமலங்கள் வென்ற கால்மிசை மீண்டும் தாழ்ந்தான் = மணம் உள்ள தாமரை மலர்களை வென்ற அல்லமனுடைய திருவடிகளில் மறுபடியும் வீழ்ந்து கிடந்தான்; சென்னவசவனும் = அப்பொழுது சென்ன வசவதேவனும்; விடுத்திடேல் என்று = வசவனை வெறுத்து விட்டு விடாதே என்று கூறிக் கொண்டு; வீழ்ந்து இறைஞ்சி தொடிக்கரம் தொழுதான் = நிலத்தில் வீழ்ந்து வணங்கி தொடியணிந்த கைகளால் தொழுதான்; அன்பர் சூழ்ந்து கொண்டு துதித்தனர் = ஏனைய அடியார்களும் அல்லமதேவரைச் சுற்றிக் கொண்டு வேண்டினர்.(எ.று)

முடிவு - நந்தி அண்ணலே! அடைக்கலம் என்னை ஆளாய்என்று கால்மிசை மீண்டும் தாழ்ந்தான். சென்ன வசவனும் விடுத்திடேல் என்று வீழ்ந்து இறைஞ்சி தொழுதான். அன்பரும் சூழ்ந்து கொண்டு துதித்தனர். அன்பர் என்ற சொல்லில் இறந்தது தழுவிய எச்ச உம்மையை வருவிக்க.

அல்லமன் வசவனுக்கு அருள் செய்து திருமடத்துள் புகுந்தது

771. அல்லமன் எனும்எம் கோமான் அருள்கடைக் கண்வைத்
(து) ஐய
சொல்லுவன் [1]எழுநீ என்று துணைக்கையால் எடுத்து
அணைத்து

Koviloor Digital Library

நல்லருள் புரிந்து தண்ட நாயகன் திரும டத்துள்
எல்லையில் அடியர் சூழ இனிதெழுந் தருளினானால் 48

(பா.ம்) [1]எழுதி

(இ.ள்) அல்லமன் எனும் எம்கோமான் அருள், கடைக்கண் வைத்து = அப்பொழுது அல்லமதேவன் என்னும் பெயரையுடைய எம்முடைய தலைவன் அருளைத் தன்னுடைய கண்ணில் வைத்துப் பார்த்து; ஐய! எழு நீ = ஐயனே நீ எழுவாயாக; சொல்லுவன் என்று = உனக்கு அருள் உபதேசங்களைச் கூறுவேன் என்று கூறிக் கொண்டு; துணைக்கையால் எடுத்து அணைத்து நல்லருள் புரிந்து = இரண்டு கைகளாலும் வாரி எடுத்து அணைத்துக் கொண்டு நல்ல திருவருளைச் செய்து; தண்ட நாயகன் திருமடத்துள் எல்லையில் அடியர் சூழ இனிது எழுந்தருளி னான் = வசவதேவருடைய அழகிய மடத்தினுள் அளவற்ற அடியார்கள் சூழ நன்றாக அல்லமதேவன் எழுந்தருளினார். (எ.று) ஆல் - அசை

முடிவு - அல்லமனாகிய கோமான் கடைக் கண்வைத்து ஐய! நீ எழுதி சொல்லுவன் என்ற கையால் எடுத்தணைத்து அருள் புரிந்து திருமடத்துள் அடியாா் சூழ எழுந்தருளினான். கடைக்கண் வைத்து நோக்குதல் **சட்சு தீட்சை,** கையால் எடுத்தணைத்தல் - **ஸ்பரிச தீட்சை,** இனி சொல்லுவன் என்பது **உபதேச தீட்சை.**

பதினான்காவது
வச வண்ணரைச் சாா்ந்த கதி முற்றிற்று

Koviloor Digital Library

பதினைந்தாவது
மருள சங்கர தேவர்கதி

குறிப்பு-கன்னடப் பிரபுலிங்க லீலையில் இப்பெயருடைய கதி இல்லை. ஆனால் இக்கதியில் சொல்லப்படுகின்ற செய்தி வசவராஜனுக்கே இஷ்டலிங்க உபதேசா என்ற 11வது கதியிலேயே சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது.

கதிநுதலியது
வேறு

772. **தாணுவின் உயர்பிர சாத குண்டத்தில்**
காணரும் மருளசங் கரனைக் கண்டருள்
பூணணி அல்லமன் போதம் நல்கிய
மாணுறு நெறியினை வகுத்துக் கூறுவாம் 1

(இ.ள்) அருள் பூண் அணி அல்லமன் = அருளையே அணிகலனாக அணிந்த அல்லமதேவன்; தாணுவின் உயர்பிரசாத குண்டத்தில் காண் அரும் மருள சங்கரனைக் கண்டு = சிவபெருமானுக்குரிய உயர்ந்த பிரசாத குண்டம் உள்ள இடத்தில்; காணுதற்கு அரிய மருள சங்கரனைப் பார்த்து போதம் நல்கிய மாணுற நெறியினை வகுத்துக் கூறுவாம் = ஞானோபதேசம் செய்த மாண்பு பொருந்திய கதியைக் கூறுபாடு தோன்றயாம் கூறுவாம்.(எ.று)

முடிபு - அல்லமன் பிரசாத குண்டத்தில் மருள சங்கரனைக் கண்டு போதம் நல்கிய கதியை வகுத்துக் கூறுவாம். பிரசாதகுண்டம் என்பது அடியார் முதலியோர் உண்ட எச்சில் இலையைப் போடுகின்ற குப்பைத் தொட்டி அன்று. வீரசைவ நெறியில் நிற்கும் அடியவர் எல்லாம் இலையில் உணவு அருந்தமாட்டார். உண்கலத்தில் உணவிட்டு இறை நிவேதனம் செய்து, உணவை எஞ்சாமல் உண்டு, ஈற்றில் அக்கலத்தையும் கழுவி, கழுவிய நீரை குடித்து விடும் இயல்பினர் என்க. ஆகவே இங்கு பிரசாத குண்டம் என்பது இறைவனுக்கும், அடியவர்க்கும் அளித்ததுபோக எஞ்சிய உணவுப் பொருள்களைப் பாதுகாத்து வைத்திருக்குமிடம் என்க. அதனுல் அதை தாணுவின் பிரசாத குண்டம் என்றும் உயர்ந்த பிரசாத குண்டம் என்றும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

Koviloor Digital Library

வசவன் அல்லம தேவரை அழைத்துக் கொண்டு மனையுள் அடைதல்

773. மாதவர் எண்ணிலர் மருங்கு சூழ்தர
ஆதுலர் எதிர் பொருள் ஆக அல்லம
நாதனை அறிவறி நந்தி கொண்டுதன்
ஏதமில் மனையிடை எய்தல் மேயினன் 2

(இ.ள்) அறிவு அறிநந்தி - அறிய வேண்டியவற்றை அறிந்த வசவதேவர் ; மாதவர் எண்ணிலர் மருங்கு சூழ்தர = அளவற்ற பெரும் தவத்தோர் எல்லாம் சுற்றிலும் சுற்றிவர; ஆதுலர் எதிர் பொருளாக அல்லம நாதனை கொண்டு = வறியோர் பெற்ற பொருள் போல அல்லம தேவனை அழைத்துக் கொண்டு; தன் ஏதம் இல் மனையிடை எய்தல் மேயினன் = தன்னுடைய குற்றமில்லாத அரண்மனையின் உள்ளிடத்தை அடையப் பெற்றான் (எ.று)

முடிபு - நந்தி மாதவர் சூழ்தர அல்லம நாதனைக் கொண்டு தன் மனையிடை எய்தல் மேயினன்.

774. அவத்தைகள் [1]பற்பல அகன்று மெய்பர
சிவத்தினை அடைபவர் செய்கை போற்கடை
தவப்பல கடந்துபோய் சாத குண்டத்தை
உவப்புடன் அடைந்தனன் ஒப்பில் அல்லமன் 3

(பா.ம்) [1]பலபல

(இ.ள்) அவத்தைகள் பல்பல அகன்று மெய் பரசிவத்தினை அடைபவர் செய்கை போல்= நின்மலசாக்கிரம் முதலாகக் கூறப்படும் பற்பல அவத்தைகளைக் கடந்து சென்று; ஈற்றில் உண்மையான பரசிவத்தை அடைபவரின் செய்கை போல; ஒப்பில் அல்லமன் கடைதவப்பல கடந்து போய் = ஒப்பற்ற அல்லம தேவர் வாயிற்படி பலவற்றை மிகவும் தாண்டிச் சென்று; சாதகுண்டத்தை உவப்புடன் அடைந்தனன் = பிரசாதகுண்டத்தை மிகவும் மகிழ்ச்சியுடன் அடைந்தான்(எ.று)

முடிபு - பற்பல அவத்தைகள் கடந்து பரசிவத்தை அடைதல் போல அல்லமன் பலகடை வாயில்களைக் கடந்து போய் சாத குண்டத்தை அடைந்தனன். இங்கே கூறிய அவத்தைகள் நின்மலா அவத்தைகளாகும். இவற்றின் இயல்பை சிவஞான சித்தியார் சாக்கிரத்தில் ஐந்து, கனவிலே நான்கு, சுருத்தியிலே மூன்று, துரியத்தில் இரண்டு, துரியாதீதத்தில் ஒன்று

Koviloor Digital Library

என்ற முறையில் இருதயம் முதலான ஐந்து இடத்திலும் பொருந்தும் என்பர். அதாவது இவற்றின் விரிவை சிவஞான சித்தியார் சுபக்கத்தில் 4ம் சூத்திரத்தில் ''ஐந்து சாக்கிரத்தில்'' என்று தொடங்கும் பாடலைக் கொண்டு அறிக. அன்றியும் ''நவிற்றலரும்'' என்று தொடங்கும் அபிடேக மாலைப் பாட்டின், ''அவத்தைகள் கடந்து அவற்று அப்புறப் படும் அமலன்'' என்ற வரிகளைக் கொண்டும் அறிக.

775. **உயர்பிர சாதகுண் டத்தின் ஒண்கரை**
மயல்மலி பித்தரின் மருள சங்கரன்
பயிலுதல் கண்ணுறீஇ பரம யோகிதன்
[1]இயலினை உணர்ந்தனன் எம்பி ரானரோ 4

(பா.ம்) [1]இயல்பினை

(இ.ள்)உயர் பிரசாத குண்டத்தின் ஒண்கரை = பெருமையால் உயர்ந்த பிரசாத குண்டத்தின் நல்ல கரையாகிய வரம்பின் ஓரமாக; மருள சங்கரன் மயல் மலி பித்தரின் பயிலுதல் கண்ணுறீஇ = மருள சங்கரன் என்கின்ற ஞானி மயக்கம் மிகுந்த பித்தரைப் போல அங்கு வாழ்ந் திருத்தலை கண்ணாலே பார்த்து; எம்பிரான் பரமயோகி தன் இயலினை உணர்ந்தனன் = நமக்குத் தலைவனாகிய அல்லம தேவன் அந்த மேலான சிவயோகியின் உண்மை இயல்பை உணர்ந்து கொண்டான்(எ.று)

முடிபு - பிரசாத குண்டத்தின் ஒண்கரையில் பித்தரில் மருள சங்கரன் பயிலுதலை எம்பிரான் கண்ணுறீஇ. அப்பரமயோகிதன் இயல்பினை உணர்ந்தனன். இப்பாட்டிலும் பிரசாத குண்டத்தை உயர் பிரசாத குண்டம் என்று சிறப்பித்துக் கூறியுள்ளது.

776. **கண்டருள் அமலனைக் கண்டு தானெதிர்**
வெண்டிரை அமுதினை மிடியன் மேவியே
உண்டனன் எனமகிழ்ந் தோடி வீழ்ந்தனன்
வண்டிரு வடிமிசை மருள சங்கரன் 5

(இ.ள்) கண்டருள் அமலனை = தன்னைப் பார்த்த அல்லம தேவனை; மருள சங்கரன் தான் கண்டு = மருள சங்கரன் தானும் பார்த்து; வெண்திரை அமுதினை மிடியன் மேவியே உண்டனன் என மகிழ்ந்து - வெள்ளையான அலைகளையுடைய திருப்பாற் கடலில் தோன்றிய அமிர்தத்தை பெற்று உண்டவன் போல மகிழ்ச்சி அடைந்து; ஓடி வண் திருவடிமிசை வீழ்ந்தனன் - அல்லமனுக்கு முன்னாலே எதிர் ஓடிச்சென்று வளப்பதையுடைய திருவடியின் மேலே வீழ்ந்தனன்.(எ.று)

Koviloor Digital Library

முடிபு - மருள சங்கரன் கண்டருள் அமலனைத்தானும் கண்டு அமுதினை மிடியன் மேவியே உண்டனன் என மகிழ்ந்து எதிர்ஓடி திருவடிமிசை வீழ்ந்தனன். வெண்டிரை - அடையடுத்த சினையாகு பெயர்.

777. வணங்கிய அறவனை [1]வந்தெ டுத்துமெய்
அணைந்தெழும் உவகையோடு அருள்செய் தல்லமன்
[2]இணங்குற அருணிலை இராமற் பார்த்தவன்
குணங்களை வியந்திது கூறன் மேயினுன் 6

(பா.ம்) [1]வந்தடுத்து; [2]இணங்கெறி

(இ.ள்) அல்லமன் வணங்கி அறவனை வந்து எடுத்து = அல்லம தேவன் தன்னை வணங்கிய மருள சங்கரனை சென்று எடுத்து; மெய் அணைந்து =தன்னை உடம்போடு அணைத்துக் கொண்டு; எழும் உவகையோடு. இணங்குற அருள் செய்து = தோன்றிய விருப்பத்துடன் பொருந்துமாறு அருள் உபதேசம் செய்து; அருள் நிலை இராமனைப் பார்த்து = அருளுக்கு நிலைக்களமான சித்த ராமனைப் பார்த்து; அவன் குணங்களை வியந்து இது கூறல் மேயினுன் - மருள சங்கரனுடைய பண்பினைக் கண்டு அதிசயத்து கீழே வரும் இச் சொற்களைக் கூறத் தொடங்கினுன்.

முடிபு - அல்லமன் வணங்கிய அறவனை வந்து எடுத்து மெய் அணைந்து உவகையோடு இணங்குற அருள் செய்து(பின்பு) இராமனைப் பார்த்து அவன் குணங்களை வியந்து இது கூறல் மேயினுன்.

அல்லமன் மருள சங்கரன் பண்பை சித்தராமனுக்குக் கூறல்

778. குண்டமே வுறுபிரசாதம் கொள்ளைகொண்(டு)
உண்டுவாழ் மாதவன் உண்மைத் தன்மையைத்
தண்டநா யகன்முதல் சரணர் யாவரும்
[1]கண்டிலர் யாரினிக் காண வல்லவர் 7

(பா.ம்) [1]கண்டலார்

(இ.ள்) குண்டம் மேவுறு பிரசாதம் - பிரசாத குண்டத்தில் பொருந்தியுள்ள பிரசாதமாகிய குற்றமற்ற சிறந்த உணவை; கொள்ளை கொண்டு உண்டு = தானே மிகுதியாகப் பெற்று உண்டு; வாழ்மாதவன் உண்மைத் தன்மையை அதனுலேயே உயிர் வாழ்ந்திருக்கும் பெரிய

Koviloor Digital Library

தவமுடையோனுடைய மருள சங்கரன் உண்மை இயல்பை; தண்ட நாயகன் முதல் சரணர் யாவரும் கண்டிலர் - இம்மடத்திலேயே வாழ்ந்திருக்கும். வசவதேவன் முதலான அடியவர் எல்லாம் உணர்ந்திலர்; யார் இனிக் காணவல்லவர் - இங்கு உறையும் சரணர்களே உணரவில்லையாயின் வேறு இடங்களில் வாழும் சரணரில் யாவர் அறியவல்லவர். (எ.று)

முடிபு - பிரசாதம் கொள்ளை கொண்டு உண்டு வாழ் மாதவன் உண்மைத் தன்மையைத் தண்ட நாயகன் முதல் சரணர் யாவரும் கண்டிலர். அங்ஙனமாயின் இனி யார் காண வல்லவர். கொள்ளை கொண்டுண் ணல் - தானே மிகுதியாகக் கொண்டு உண்பது

779. சரிதை யொண் கிரியைகால் தடுக்கும் யோகிவை
புரிபவர் தம்மைப் புரியும் செய்கையால்
தெரிதரல் ஆகுமோர் செயலும் இன்றிவாழ்
அரியநன் ஞானியை அறியல் ஆகுமோ 8

(இ.ள்) சரிதை ஒண்கிரியை கால் தடுக்கும் யோகு இவைபுரிபவர் தம்மை = சரியைத் தொழிலும் கிரியைத் தொழிலும் மூச்சுக் காற்றைத் தடுக்கும் யோகச் செயலும் ஆகிய இவற்றை செய்பவரை; அப்புரியும் செய்கையால் தெரிதரல் ஆகும் = அந்த செய்யும் தொழில்களைப் பார்த்தே இவர் இன்னார் என்று அறிந்து கொள்ளக் கூடும்; ஓர் செயலும் இன்றி வாழ் அரிய நன் ஞானியை அறியல் ஆகுமோ = புறக்கருவி அகக் கருவி ஆகிய இரண்டு கருவிகளைக் கொண்டு செய்யும் செயல் சிறிதும் இல்லாத அரிய நல்ல ஞானிகளைத் தொழிலால் அறிந்து கொள்ள முடியுமோ? (அறிந்து கொள்ள முடியாது என்றபடி) (எ.று)

முடிபு - சரியை கிரியை யோகம் இவை புரிபவர் தம்மை அப்புரியும் செய்கையால் தெரிதரலாகும்; ஓர் செயலுமின்றி வாழ் ஞானியை அறியல் ஆகுமோ? அதனுல்தான் தண்டநாயகன் முதல் சரணர் யாவரும் கண்டிலர் ஆயிற்று.

780. நலமுறும் ஓர்சிவ ஞானி இல்லில்வாழ்
நிலையறம் [1]ஆகினும் நீத்து நிற்குமோர்
தலையறம் [2]ஆகினும் தரித்து ஞாலமேல்
இலைமறை காயென இருக்கும் என்பவே 9

(பா.ம்) [1]ஆயினும்; [2]ஆயினும்

Koviloor Digital Library

(இ.ள்) நலம் உறும் ஓர் சிவஞானி = நன்மையே பெறும் ஒப்பற்ற சிவஞானி; இல்லில் வாழ் நிலை அறம் ஆகினும் நீத்து நிற்கும் ஓர் தலைஅறம் ஆகினும் தரித்து = மனையில் வாழ்ந்திருந்து நிலைத்துச் செய்யும் அறங்களையாயினும் (அல்லது) எல்லாப் பற்றையும் துறந்து துறவற நிலையில் ஒப்பற்ற தலைமையான அறத்தையாயினும் இவ்விரண்டில் ஏதாவது ஒன்றை மேற்கொண்டு; ஞாலமேல் - உலகத்தின் கண் இலைமறை காய் என இருக்கும் என்ப = இலைகளால் மறைக்கப்பட்டகாயைப் போல ஒருவருக்கும் புலம்படாமலிருக்கும் என்று அறிஞர் கூறுவர். (எ.று)

முடிபு - சிவஞானி இல்லில் வாழ்அறம் ஆயினும் நீத்து நிற்கும் அறமாயினும் தரித்து ஞால மேல் இலை மறை காயென இருக்கும். இலை மறை காய்போல் என்பது ஒரு பழமொழி.

781. **வல்லனென் றிருப்பினும் இருக்கும் வன்மையொன்(று)**
இல்லனென் றிருப்பினும் இருக்கும் எள்ளுறப்
புல்லனென் றிருப்பினும் இருக்கும் புண்ணிய
நல்லனென் றிருப்பினும் இருக்கும் ஞானியே

(இ.ள்) ஞானியே - சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கில் ஞானத்தைப் பெற்ற ஒருவன்தானே; வல்லன் என்று இருப்பினும் இருக்கும் = உலகத்தவரால் வல்லமை யுடையவன் என்று கூறும்படி இருந்தாலும் இருப்பன்; (அன்றியே = அல்லாமல்;) வன்மை ஒன்று இல்லன் என்று இருப்பினும் இருக்கும் = வல்லமை சிறிதும் இல்லாதவன் என்று கூறும்படி இருந்தாலும் இருப்பன்; எள்ளுறப்புல்லன் என்று இருப்பினும் இருக்கும் = எல்லோரும் இகழும்படி அறமல்லாத புலம்பிய காரியத்தைச் செய்பவன் என்று கூறும்படி இருப்பினும் இருக்கும்; புண்ணிய நல்லன் என்று இருப்பினும் இருக்கும் = புண்ணியச் செயலைச் செய்யும் நல்லோன் என்று கூறும்படி இருந்தாலும் இருப்பன். (எ.று)

முடிபு - ஞானி வல்லன் என்று இருப்பினும் இருக்கும் ஒன்று இல்லன் என்று இருப்பினும் இருக்கும். புல்லன் என்று இருப்பினும் இருக்கும். நல்லன் என்று இருப்பினும் இருக்கும்.

பேதகர் மத்தால் வந்த பிராரத்த நாநா வாகும்
ஆதலால் விவகா ரங்க ளவரவர்க் காவ வாகும்
மாதவஞ் செயினும் செய்வார் வாணிபர் செயினும்செய்வார்

Koviloor Digital Library

பூதலம் புரப்பர் ஐயம் புகுந்துண்பார் சீவன் முத்தர்
(கைவல்யநவநீதம் 97)

782. அறிவறி ஞானியால் அன்றி [1]வன்பவம்
மறிவுறு கருமியால் மாய்வு றாதுகாண்
எறிகதிர் இரவிவந் தெழுந்தி டாவிடில்
செறியிருள் அகலுமோ சித்த ராமனே 11

(பா.ம்) [1]வன்றளை

(இ.ள்) சித்தராமனே - கருமயோகங்களையே செய்து வந்த சித்த ராமனே; அறிவு அறி ஞானியால் அன்றி = அறிவுப் பொருளை அறிந்த ஞானம் உடையவனே அல்லாமல்; வன்பவம் மறிவுறு கருமியால் மாய்வுறாதுகாண் = வலிய பிறவி நோய் மாறுபட்ட சரியை முதலான கன்மம் செய்பவரால் அழியாது என்பதை உணர்வாயாக (எதுபோல் எனில்) எறிகதிர் இரவிவந்து எழுந்திடாவிடில் செறியிருள் அகலுமோ = வெயிலை வீசும் சூரியன் வந்த உதிக்காவிட்டால் திணிந்த இருள் நீங்குமோ. (அது போல என்க) (எ.று)

முடிவு - சித்தராமனே வன்பவம் ஞானியாலன்றி கருமியால் மறிவுறாதுகாண். (எது போலெனின்) இரவி வந்து எழுந்திடாவிடில் இருள் அகலுமோ (அது போல என்க)

783. சங்கர முனிநிலை தனைகண் டாய்கொல்என்(று)
எங்குரு பரன்சொல இராமன் கைதொழு(து)
இங்கிவன் மருளரில் [1]இருக்கும் தன்மையென்
அங்கண அறைகென அறைதன் மேயினுன் 12

(பா.ம்) [1]இருந்த

(இ.ள்) எம்குருபரன் = எம்முடைய குருவாகிய மேலோன்; சங்கர முனிநிலைதனைக் கண்டாய் கொல் என்று சொல = இச்சங்கர முனிவ னின் இயல்பை நீ உணர்ந்து கொண்டாயோ என்று சித்தராமனுக்குக் கூற; இராமன் கை தொழுது = கேட்ட சித்தராமன் சங்கரமுனிவனது நிலையை யான் கண்டு கொண்டேன் என்று கூறி சங்கர முனிவனைக் கை கூப்பித் தொழுது விட்டு; இங்கு இவன் மருளரில் இருக்கும் தன்மை என் அங்கண அறைக என - அழகிய கண்ணையுடைய அல்லம தேவனே இங்கு இச்சங்கரன் மருளரைப் போல் இருக்கும் தன்மைக்கு காரணம் என்னை?

Koviloor Digital Library

சொல்லுக என்று சித்தராமன் வினவ; அறைதல் மேயினன் = அல்லம தேவன் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிவு - குரு பரன் சங்கர முனிநிலையைக் கண்டாய் கொல் என்ற சொல இராமன் கை தொழுது இவன் மருளரில் இருக்கும் தன்மை என்? அங்கணணே அறைக என(அல்லமன்) அறைதல் மேயினல்.

வேறு

784. தொழிலால் முயன்று நுகர்வம் எனில் துயர் ஒன்று உயிர்க்கு விளையுமென
ஒழியா அமல சரமூர்த்தி உண்ட [1]மிச்சில் நுகர்வம் எனில்
பழியா துமிலை அன்றுபோம் பவமும் என்னப் பிரசாதக்
குழியான் அதனை அகலாமல் கொண்டிங் இருந்தான் குணமிக்கான் 13

(பா.ம்) [1]மிச்சல்

(இ.ள்) குணம் மிக்கான் = சத்துவ குணமே மிகுந்த இந்த மருள சங்கரன் என்பான்; தொழிலால் முயன்று நுகர்வம் எனில் = துறவியாகிய நாம் தொழில் செய்வதால் பொருள் முயன்று, தேடிய அப்பொருளையே உண்டு வாழ்வோம் என்ன; உயிர்க்குத் துயர் ஒன்று விளையும் என = தொழில் செய்தலால் பிற உயிர்க்குத் துன்பமாகிய ஒன்று உண்டாகக் கூடும் என்று கருதிக் கொண்டு; அமலம் ஒழியா சரமூர்த்தி உண்ட மிச்சில் நுகர்வம் எனில் - இருவகைத் தூய்மையும் நீங்காத சங்கம வடிவுடையோர் உண்டு எஞ்சிய பிரசாத உணவை உண்டு வருவோமேயானல்; (அதனால்) பழியாதும் இலை பவமும் அகன்று போம் என்ன = எந்த பழிப்பும் உண்டாகாது பிறவி நோயும் நீங்கிப் போய்விடும் என்று கருதிக் கொண்டு; பிரசாதக் குழியான் அதனை அகலாமல் கொண்டு இங்கு இருந்தான் = பிரசாத குண்டத்தை அடுத்து வாழ்பவனாய் அதனை விட்டு நீங்காமல் அவ்விடத்தையே வாழுமிடமாகக் கொண்டு இங்கேயே தங்கி விட்டான்.(எ.று)

முடிபு - குணமிக்கான் தொழிலால் நுகர்வம் எனில் உயிர்க்குத் துயர் விளையுமென சரமூர்த்தி உண்ட மிச்சில் நுகர்வம் எனில் பழியாது மிலை பாவமும் அகன்றுபோம் என பிரசாதக் குழியானய் அதனை அகலாமல் கொண்டு இங்கு இருந்தான். பிரசாதக் குழியான் என்பது குறிப்பு வினை முற்று. அது எச்சப்பொருளில் வந்து இருந்தான் என்ற வினையுடன் முடிந்தது (பிரசாதக் குழியானய் இருந்தான்).

Koviloor Digital Library

785. பந்தம் அகன்ற சிவபத்தர் பாதம் விளக்கும் புனல் குழியில்
வந்து பிறந்து மூழ்கியதில் வைகும் புழுவின் பெறும்பேறு
முந்து கங்கை [1]முதலவா முற்றும் படிந்து தீவினைகள்
சிந்தும் அந்த ணாளருமே சேரார் என்று மறை சாற்றும் 14

(பா.ம்) [1]முதலவாய்

(இ.ள்) பந்தம் அகன்ற சிவபத்தர் - பற்று அற்ற சிவனடியாருடைய; பாதம் விளக்கும் புனல் குழியில் = திருவடிகளைக் கழுவிய நீர்நிற்கும் குழியின் கண்; வந்து பிறந்து மூழ்கி அதில் வைகும் புழுவின் பெரும்பேறு = வந்து பிறக்கும் பிறவியைப் பெற்று மேலும் அந்நீரிலேயே மூழ்கி அதிலேயே வாழ்ந்திருக்கும் புழுவினுக்குக் கிடைக்கும் பெரிய பயனை; முந்து கங்கை முதலவா முற்றும் படிந்து = முதன்மையான கங்கை முதலான தீர்த்தங்கள் எல்லாவற்றுள்ளும் முழுகி அவ்வாறு தீர்த்தம் ஆடியதால்; தீவினைகள் சிந்தும் அந்தணாளருமே சேரார் - தம்முடைய பாவவினைகளைப் போக்கிக் கொள்ளும் உயர்ந்த அந்தணர்களும் அடையார்; என்று மறைசாற்றும் = சங்கம மூர்த்திகளை சிறப்பித்துக் கூறுகின்ற சிவாகமங்கள் பிரசாதப் பெருமையை இவ்வாறு கூறும்.

முடிபு - பக்தர் பாதம் விளக்கும் புனல் குழியில் வந்து பிறந்து மூழ்கிவைகும் புழுவின் பெரும் பேற்றினைக் கங்கை முதலவா முற்றும் படிந்து தீவினைகளைச் சிந்தும் அந்தணுளருமே சேரார் என்று மறைசாற்றும். இங்கு மறை என்பது சிவாகமங்களை. அந்தணுளரும் என்ற சொல்லில் உம்மை உயர்வு சிறப்பு. ஏகாரம் பிரிநிலை. புனற் குழியில் தம் வசமின்றி வந்து பிறந்து வாழும் புழுவின் பெரும் பயனை கங்கை முதலவாம் தீர்த்தங்களில் ஆட வேண்டும்மெனக் கருதிக் கொண்டு அங்கே முறைப்படி மூழ்குகின்ற அந்தணர் குலத்தில் பிறந்தோரும் பெறார் என்ற கருத்தைச் சிவாகமங்கள் கூறுகின்றன.

786. [1]தாய்க்கு விழுவில் [2]மகளிர்க்கு
[3]தந்தை தனக்குப் [4]பசுவிற்குச்
[5]சேய்க்கு [6]மறையோர் தமக்கு இடர்செய்
தீர்வில் கொடிய பாதகமும்
போக்கும் இமைப்பில் கரணத்தைப்
புனிதம் ஆக்கிச் சிவமாக
ஆக்கும் அரன்றன் பிரசாதம்
ஆயின் அதற்கு நிகருண்டோ 15

Koviloor Digital Library

(பா.ம்) [1]தாய்க்கும்; [2]மகளிர்க்கும்; [3]தந்தை தனக்கும்; [4]பசுவிற்கும்; [5]சேய்க்கும்; [6]மறையோர் தமக்கும்

(இ.ள்) அரன் தன் பிரசாதம் = சிவபெருமானுடைய பிரசாதப் பொருள்களானவை; தாய்க்கு = தன்னை ஈன்ற தாய்க்கும்; வழுவில் மகளிர்க்கு = குற்றமில்லாத பெண்களுக்கும்; தந்தை தனக்கு = தன்னை ஈன்ற தந்தைக்கும்; பசுவிற்கு = புண்ணியப் பிறவியாகிய பசுக்களுக்கும்; சேய்க்கு = குழந்தைகளுக்கும்; மறையோர் தமக்கு = உயர்ந்த பிறவியினராகிய அந்தணர்களுக்கும்; இடர் செய்தீர்வில் கொடிய பாதகமும் (ஆகிய இவர்களுக்கு) துன்பத்தையே செய்து வருகின்ற பிராயச்சித்த மில்லாத கொடிய பாவங்களையும்; போக்கும் = நீக்கிவிடும்; கரணத்தை இமைப்பில் புனிதம் ஆக்கி சிவமாக ஆக்கும் = புறக் கருவிகளையும் உட்கருவிகளையும் விரைவிலேயே தூய்மைப்படுத்தி சித்தத்தில் சிவம் தோன்றச் செய்யும்; ஆயின் அதற்கு நிகர் உண்டோ - அரன் தன் பிரசாதம் இவற்றை எல்லாம் விளைவிக்குமாயின் அதற்கு ஒப்பான பொருள் உலகத்தில் உண்டோ? இல்லை என்றதாகும் (ஓகாரம் - எதிர்மறை) (எ.று)

முடிபு - அரன் தன் பிரசாதம் தாய்க்கும் மகளிர்க்கும் தந்தைக்கும் பசுவிற்கும் சேய்க்கும் மறையோர்க்கும் இடர்செய் கொடிய பாதகமும் போக்கும். (மேலும்) கரணத்தைப் புனிதமாக்கிச் சிவமாக்கும் ஆயின் அதற்கு நிகருண்டோ? இங்கு அரன் தன் பிரசாதம் என்பது. சிவனுக்குப் பயன் படுத்துகின்ற நீர், திருநீறு, சந்தனம், மலர், ஆடை, அணி, நிவேதனப் பொருள்கள் முதலிய எல்லாம் ஆம்.

787. பசிக்கும் மருந்தும் ஆய்வீடு பயக்கும் வண்மை சேர்ந்து
பவம்
ஒசிக்கும் அரன்தன் பிரசாத ஊதி யந்தான் உணர்ந்திங்கு
வசிக்கும் [1]தகைமைசங்கரற்கே வருவ தன்றிப் பசிக்குணவு
புசிக்கும் மனிதர் தனக்கென்றும் பொருந்தா தென்றான்
எம்பிரான் 16

(பா.ம்) [1]தகைமைச் சங்கரற்கே

(இ.ள்) எம்பிரான் = எமக்குத் தலைவனுகிய அல்லமதேவன்; (சித்தராமனை நோக்கி) பசிக்கு மருந்தும் ஆய் வீடு பயக்கும் வண்மை சேர்ந்து = பசி நோய்க்கு அதனைத் தீர்க்கின்ற மருந்தும் ஆகியும் முத்தியைத் தரும் தகுதியும் சேர்ந்து; பவம் ஒசிக்கும் அரன்தன் பிரசாத

Koviloor Digital Library

ஊதியம் தான் உணர்ந்து - பிறவியை நீக்கும் சிவப்பிரசாத பயனை நன்றாகத் தெரிந்து கொண்டு; இங்கு வசிக்கும் தகைமை சங்கரற்கே வருவது அன்றி - இங்கே பிரசாத குண்டத்தினனாய் வாழும் தகுதி இச் சங்கர முனிவனுக்கே வருவது அன்றி; பசிக்கு உணவு புசிக்கும் மனிதர் தமக்கு என்றும் பொருந்தாது என்றான் - பசி தீர்தல் ஒன்றையே பயனுகக் கருதி அதற்கு உணவுப் பொருளை உண்ணும் மக்கள் தமக்கு இத்தகைமை எப்பொழுதும் கிட்டாது என்று கூறினுன்.

முடிபு - எம்பிரான் பிரசாத ஊதியம் தான் உணர்ந்து இங்கு வசிக்கும் தகைமை சங்கரர்க்கே வருவதன்றி பசிக்குணவு புசிக்கும் மனிதர்க்குப் பொருந்தாது என்றான். பிரசாத ஊதியம் மூன்று என்க. அவை பசிக்கும் மருந்தாதல்; வீடுபயத்தல்; பிறவியை நீத்தல் என்பவனவாம். இதனை நன்குணர்ந்தவர்மருள சங்கரர் என்க. எனவே அவருக்குள்ள தகுதி பசி ஒன்றின் தீர்வு கருதியே உணவு உண்பவர்க்கு அத்தகுதி கிட்டாது என்பதாயிற்று. பிரசாதம் பலவகை யாதலை சித்தாந்த சிகாமணியில்;

நற்பழங்கடி நாண்மலர் பத்திர
மெற்ப தம்புனலேமுதல் யாவையுந்
தற்பெருஞ்சிவ லிங்கந் தனக்கரோ
வர்ப்பி தஞ்செய்து கொள்ளுவனன்பினேன்

(சதுர் வித தாரத்தலம்)

எல் - ஒளியையுடைய; பதம்புனல் - அந்நம் நீர் இப்பிரசாதம் சிவம் குரு சங்கமங்களுக்குரிய சுத்தப் பிரசாதம் சித்தப் பிரசாதம் பிரசித்தப் பிரசாதம் என மூவகையாக இருக்கும். இவை எல்லாம் சிவப் பிரசாதம் என்க.

788. நின்னை அறிவன் சங்கரனே நீயே அவனை அறிகுவாய்
பின்னை உலகில் யாரறிவார் பேசில் பாம்பே பாம்பின்கால்
தன்னை அறியும் எனஅலமன் தாந்தா மரையின்
கீழ்ப்பணிந்தான்
என்னை அடிமை யாவுடைய இராமன் என்னும்
இணையில்லான் 17

(இ.ள்) என்னை அடிமையா உடைய இராமன் என்னும் இணையில்லான் = அறிவில்லாத என்னையும் தன் கருணைத் திறத்தால் ஆட்கொண்டு அடிமையாகவுடைய சித்தராமன் என்னும் ஒப்பற்றவன்;

Koviloor Digital Library

(அல்லமதேவர் கூறிய மொழியைக் கேட்டு) சங்கரனே நின்னை அறிவன்; நீயே அவனை அறிகுவாய் = ஞானியாகிய மருள சங்கரனே உன் இயல்பை அறிவான் ஞானியாகிய அல்லமன் நீயே அம்மருளசங்கரனுடைய இயல்பை அறிகுவாய்; உலகில் பின்னை அறிவார் யார் = மற்று இவ்வுலகத்தில் ஞான மில்லாத எவர் மருள சங்கரனை அறிவார்? பேசில் = ஆராய்ந்து கூறினுல்; பாம்பே பாம்பின் கால் தன்னை அறியும் என அமலன் தாள்தாமரையின் கீழ்ப் பணிந்தான் = அரவே அரவினுடைய காலை அறியும் என்ற பழமொழியைக் கூறி அல்லம தேவருடைய தாளாகிய தாமரையின் கீழ் வீழ்ந்து வணங்கினுன். (எ.று)

முடிபு - இராமன் என்னும் இணையில்லான் சங்கரனே நின்னை அறிவன்; அவனை நீயே அறிகுவாய்; பின்னை உலகில் யார் அறிவார்? பேசில் பாம்பே பாம்பின் கால் அறியும் எனக் கூறி அமலன் தாள் தாமரையைப் பணிந்தான். இப்பாட்டு வேற்றுப் பொருள்வைப் பணி.

789. அம்பொன் வைப்பின் மீதிருந்தும்
அறியாது அல்லல் படுவான்போல்
நம்பன் மருள சங்கரனை
நாஞே அறியா திருந்தழிந்தேன்
இம்பர் மருவி நிரஞ்சனநீ
எனக்குக் காட்டித் தந்தனையென்(று)
உம்பர் பரவும் அல்லமனை
உவந்து பணிந்தான் அருள்நந்தி 18

(இ.ள்) அருள் நந்தி = அல்லமன் சித்தராமனுக்குக் கூறிய மொழியை பக்கத்திலிருந்து கேட்ட பசவதேவன்; அம்பொன் வைப்பின் மீது இருந்தும் அறியாது அல்லல் படுவான் போல் = அழகிய பொன்னை புதைத்து வைத்திருந்த இடத்தின் மேலிருந்தும். அப்பொன்னை அறியாது துன்பப்படுபவனைப் போல; நம்பன் மருள சங்கரனை நான் ஓ அறியாதிருந்து அழிந்தேன் = மறைந்திருக்கும் சிவனை ஒத்தமருள சங்கரனை அறிவில்லாத நான் ஓ அறியாதிருந்து கெட்டேன்; நிரஞ்சன நீ இம்பர் மருவி எனக்குக் காட்டித் தந்தனை = இருள் இல்லாதவனுகியநீ இங்கே வந்த எனக்கு இருளை நீக்கிக் காட்டித் தந்தனை; என்று உம்பர் பரவும் அல்லமனை உவந்து பணிந்தான் = என்று கூறி. தேவர்கள்

Koviloor Digital Library

எல்லாம் வணங்கும் அல்லம தேவனை உவப்படைந்து வணங்கினுன். (எ.று)

முடிபு - அருள்நந்தி (அல்லமனை நோக்கி) பொன்வைப் பின்மீதிருந்தும். அறியாது அல்லற்படுவான்போல மருள சங்கரனை நான் ஓ அறியாது அழிந்தேன். நிரஞ்சன நீ இம்பர் மருவி எனக்குக் காட்டித் தந்தனை என்று அல்லமனை உவந்து பணிந்தான். வைப்பு என்றால் புதையல். இது வைப்பை உணர்த்தாமல் புதையலிருந்த இடத்தை உணர்த்திற்று. அஞ்சனம் என்றால் இருள். நிரஞ்சனம் என்றல் இருளில்லாதவன். இதனுள் வந்த உவமையை அறிக. (அறியாதிருத்த லுக்கு உவமை)

790. இணங்கும் மிக்க காமிதனக்
கின்பம் ஊடல் சரலிங்கம்
பிணங்கல் முத்தி காமிக்குப்
பேரின்பு என்ப(து) உணர்த்தற்கு
குணங்கள் மிக்காய்நினைச் சினந்தாம்
குறையொன் றுளதோ நினக்கரவின்
பணங்கொள் நிலத்தில் பரமசிவ
பத்திக் குவால்நீ என்றக்கால் 19

(இ.ள்) குணங்கள் மிக்காய் = உயர்ந்த பண்புகள் மிகுந்தவனே; இணங்கும் மிக்க காமி தனக்கு இன்பம் ஊடல் = மற்றொருவருடன் கூடும் மிகுந்த காம உணர்வு உடையார்க்கு இன்பமாவது கூடுதற்குரியாருடன் ஊடுதலாகும்; (அஃதே போல்) முத்திகாமிக்கு சரலிங்கம் பிணங்கல் பேரின்பு = முமூட்சுவத்துவம் என்னும் மோட்ச இச்சையை உடையார்க்கு சரலிங்கம் என்று கூறப்படும் அடியவர் பிணங்கிக் கொள்ளுதல் பேரின்பத்தை உண்டாக்கும்; என்பது உணர்த்தற்கு = என்னும் முறையை உணர்த்துவதற்காக; நினைசினந்தாம் = முத்திகாமியாகிய உன்னை (பசவனை) சரலிங்கமாகிய யாம்(அல்லமர்) சினந்தாம்; அரவின் பணங்கொள் நிலத்தில் = ஆதி சேடனாகிய அரவின் படம் தாங்கும் இந்நில உலகத்திலே; நீ பரமசிவ பத்திக்குவால் என்றக்கால் வசவனுகிய நீ பரமசிவ பத்தியின் குவியல் என்று உலகத்தாரால் கூறப்படுவதால்; குறை ஒன்று உளதோ - உன்னிடத்தில் பத்திக்குறைவு சிறிதும் உண்டோ? (இல்லை என்றபடி) (எ.று)

முடிபு - குணங்கள் மிக்காய்! காமி தனக்கு இன்பம் ஊடல் (அஃதே

Koviloor Digital Library

போல்) முத்திகாமிக்கு சரலிங்கம் பிணங்கல் பேரின்பு என்பதை உணர்த்துதற்கு நினைச் சினந்தாம். இந்நிலத்தில் நீ பரமசிவ பத்திக்குவால் என்றக்கால் குறை ஒன்று உளதோ. பரம சிவபத்திக்குவால் என்றது புறப்பத்தி அகப்பத்தி என்ற இருவகையாய். மனத்தால் சொல்லால் உடம்பால் செய்யும் பத்தி மூன்று வகைப்பட்டு, வணங்கல் முதலான ஒன்பது வகையாக வரும். அப்பத்தி சிவபத்தி, குருபத்தி, அடியார் பத்தி என மூவகையாக விரியும்.

791. இங்கு மருள சங்கரன்போல்
எண்ணி லார்நின் மனைவாய்தல்
கங்குல் பகலும் அகலாமல்
காப்பர் என்னில் நின்முன்றில்
பங்க வினையின் வலிகடந்த
பலரும் தாம்செய் தவப்பயனுல்
தங்கு கயிலை மலையன்றோ
தண்ட நாத வென்றமலன் 20

(இ.ள்) அமலன் - மலம் அற்ற அல்லமதேவன்; (வாசவதேவனைப் பார்த்து) இங்கு மருள சங்கரன் போல் எண்ணிலார் நின்மனைவாய்தல் கங்குல் பகலும் அகலாமல் காப்பர் என்னில் - இவ்விடத்திலே மருள சங்கரன் போன்ற அளவற்ற அடியவர் உன் வீட்டு வாயிற் படியில் இரவும் பகலும் நீங்காமல் காத்துத் தங்கி இருப்பர் என்றல்; நின்முன்றில் = உன் அரண் மனையின் முன்னிடம்; பங்க வினையின் வலி கடந்த பலரும் = பழுதினைச் செய்யும் வினை வலி கடந்த பல அடியார்களும்; தாம் செய் தவப்பயனுல் - தாம் முன்னே செய்த தவச் செயலின் பயனுல்; தண்டநாத - தண்டநாதனே; தங்கு கயிலை மலையன்றோ - தங்கி வாழ்தற்குரிய கயிலைமலை அல்லவோ என்று = என்று கூறி. (எ.று)

முடிபு - அமலன் தண்டநாத இங்கு மருள சங்கரன் போல் எண்ணினார் நின் மனைவாய்தலில் கங்குலும் பகலும் அகலாமல் காப்பர் என்னில் நின் முன்னில் வினையின் வலிகடந்தவர் பலரும் தாம்செய் தவப்பயனுல் தங்கும் கயிலை மலை அன்றோ என்று.

792. [1]வெம்மை எதன்கண் நிகழ்ந்திடினும்
வெந்தீக் குணமென் பதுபோல
மும்மை உலகில் யாண்டேனும் முளைக்கில்
பத்தி யதை நினதென்(று)

Koviloor Digital Library

இம்மை உலகம் இயம்புமெனில்
எங்கள் வசவ நின்பெருமை
கொம்மை யிளமென் முலைமடந்தை
கூறன் அன்றி யாரறிவார் 21

(பா.ம்) [1]வெம் தன்கண்

(இ.ள்) எங்கள் வசவ! = சிவபெருமானும் யானும் ஆகிய எங்களுக் குரிய வசவ தேவனே; வெம்மை எதன் கண் நிகழ்ந்திடினும் = வெப்ப மாகிய பண்பு எந்த பொருளிலே தோன்றினுலும்; வெம் தீக்குணம் என்பது போல - அப்பண்பு வெப்பமான நெருப்புக்குரிய பண்பு என்று உலகம் கூறுவது போல; மும்மை உலகில் யாண்டேனும் பத்தி முளைக்கில் = நில உலகம் வானுலகம் பாதாள உலகம் ஆகிய மூன்று உலகத்தில் சிவ பத்தியானது எவ்விடத்தில் தோன்றினுலும்; அதை நினது என்று இம்மை உலகம் இயம்பும் எனில் - அப்பத்தியை உன்னுடைதென்ற இந்த உலகம் கூறுமேயாஞல்; நின் பெருமை - உன்னுடைய பெருமையை; கொம்மை இள மென் முலை மடந்தை கூறன் அன்றி யார் அறிவார் = திரண்டஇளைய மெல்லிய நகிலையுடைய பார்வதிதேவியை ஒரு கூறிலேயுடைய சிவபெருமான் அன்றி வேறு யார் அறிவார்? (எ.று)

முடிபு - எங்கள் வசவ! எதன் கண் வெம்மை நிகழ்திடினும்(அது) வெந்தீக்குணம் என்பது போல உலகில் யாண்டேனும் பத்தி முளைக்கில் அதை நினது என்று உலகம் இயம்பும் எனில் நின் பெருமையை மடந்தைக் கூறன் அன்றியார் அறிவார். அல்லம தேவருக்கு வசவர் சிஷ்ய நந்தி. சென்ன வசவர் புத்திர நந்தி; சித்ராமன் மித்திரநந்தி; ஆதலின் இங்கே எங்கள் வசவ என்றுரிமை தோன்றிக் கூறினுர். இவ்வசவன் சிவபெருமானுக்கும் அல்லமனுக்கும் அன்பு பூண்டு ஒழுகுபவர் ஆதலின் பன்மை தோன்ற எங்கள் நந்தி எனக் கூறினுர்

793. பத்திக் கடலே குணக்குன்றே பாசப் பகையே எம்உறவே
முத்திக் கரசே சிவாநந்த முதலே ஞான மணிவிளக்கே
சித்திப் பொருளே அருள்நந்தித் தேவே நின்னைத்
தொழுமடியார்
புத்திக் கமுதே யாவர் நினைப் போல்வார் அவரை
அறியேமால் 22

(இ.ள்) பத்திக்கடலே = சிவ பத்தியுள் கடல் போல மிகுந்தவனே; குணக்குன்றே = நற்குணங்களுள் குன்று போல் உயர்ந்தவனே;

Koviloor Digital Library

பாசப்பகையே = பிணிக்கும் பாசத்திற்கு பகையாய் உள்ளவனே; எம்உறவே - எங்களுக்கு உறவாயுள்ளவனே; முத்திக்கு அரசே = மோட்சத்தைத் தருபவர்களுள் அரசாயிருப்பவனே; சிவாநந்த முதலே = சிவாநந்தத்தைத் தருபவர்களுக்குள் முதன்மை யாயிருப்பவனே; ஞானமணி விளக்கே = ஞானம் என்கின்ற மாணிக்கவிளக்கே; சித்திப் பொருளே = அடையப்படும் பொருளாய் உள்ளவனே; அருள் நந்தி தேவே = அருளையுடைய நந்திதேவரின் கூறாய் உள்ளவனே; நின்னைத் தொழும் அடியார் புத்திக்கு அமுதே = உன்னை வணங்குகின்ற தொண்டர்களின் அறிவுக்கு அமிழ்தம் போல் இனிப்பவனே; நினைப்போல்வார் யாவர் = உன்னைப் போன்றவர் உலகத்தில் யார் உள்ளனர்? அவரை அறியேம்= அவரைத் தேடின் அவரை அறியேம். ஆல் - அசை (எ.று)

முடிபு - பத்திக்கடல் முதலான பல பொருள் போன்ற அருள் நந்தித்தேவ நினைப் போல்வார் யாவர்? அவரை அறியேம்.

அல்லமதேவன் தன்னை புகழ்ந்தது கேட்டு வசவேசன் கூறியபணி மொழியும் அடியவர் உவப்பும்

794. **என்று கூற [1]எமையுடையான் எனக்கு புகன்ற நலமெல்லாம்**
சென்ற நாளில் இலைநினது செந்தா மரைத்தாள் தொழப்பெற்ற
இன்று தொடங்கி உளவாமென்று எந்தை நந்தி வணங்கி எழ
நின்ற அமல் சிவசரணா் நெஞ்சம் உவகை பூத்தனரால் 23

(பா.ம்) [1]எமை உடையாய்.

(இ.ள்) எமை உடையான் என்று கூற = எம்மை உடைமைப் பொருளாக உடைய அல்லமதேவன் மேற் கூறியவாறு வசவதேவனைப் புகழ்ந்து கூற; எந்தை நந்தி = புகழ் உரையைக் கேட்ட எம் தந்தையாகிய வசவ தேவன்; (அல்லமனை நோக்கி) எனக்கு புகன்ற நலம் எல்லாம் சென்ற நாளில் இலை = எனக்கு உள்ளதாக தாங்கள் கூறிய நற்பண்பு முதலானவை எல்லாம் கழிந்த காலத்திலே இல்லை; நினது செந்தாமரைத் தாள் தொழப் பெற்ற இன்று தொடங்கி உளவாம் என்று வணங்கி எழ = உன்னுடைய செந்தாமரை மலர் போன்ற திருவடியை அடைந்து வணங்கப் பெற்ற இன்றைய காலத்திலிருந்து அவை எல்லாம் உள்ளனவாகும் என்று கூறி அல்லம தேவனை பணிந்து எழ; நின்ற அமல

Koviloor Digital Library

சிவசரணர் நெஞ்சம் உவகை பூத்தனர் = உடன் நின்ற குற்றமற்ற சிவனடியார்தம் மனத்தில் உவகைப் பூத்தனர். ஆல்-அசை (எ.று)

முடிவு - எமை உடையான் என்று கூற, எந்தை நந்தி (அல்லமனை நோக்கி) எனக்குப் புகன்ற நலம் எல்லாம் சென்ற நாளில் இலை நின் செந்தாமரைத்தாள் தொழப்பெற்ற இன்று தொடங்கி உளவாம். என்று வணங்கி எழ. (அப்பொழுது) நின்ற சிவசரணர் நெஞ்சம் உவகைப் பூத்தனர்.

அப்பொழுது அல்லம தேவர் மருள சங்கரர்க்கு உபதேசித்தது.

795. **அருளால் மருள சங்கரனுக் கமரர் தாமும் அறிவரிய**
பொருளா கியபே ரின்பவநு பூதி விளக்கம் அருள்
செய்தான்
உரையால் நினைவால் அருள்நோக்கால் உலகர்
உணர்வை பிணித்தமல
இருளா னதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே 24

(இ.ள்) உரையால் நினைவால் அருள்நோக்கால் = தன்னுடைய ஞானோபதேச மொழியாலும், அதை உட் கொண்ட நினைவாலும் அதை அளிக்கும் அருள் நோக்காலும்; உலகர் உணர்வை பிணித்த = உலகமக்களுடை அறிவை விளக்க முறாமல் மறைத்த; மல இருளானதனை அறமாற்ற = ஆணவ மலமாகிய இருளை முற்றிலும் போக்குவதற்காக; எழுந்த ஞான சூரியன் = உதித்த ஞான சூரியன் போன்ற அல்லம தேவன்; அருளால் = தன்னிடத்து உண்டான அருளாலே; மருள சங்கரனுக்கு அமரர் தாமும் அறிவரிய பொருளாகிய பேரின்ப அநுபூதி விளக்கம் அருள் செய்தான் = மருள சங்கரன் என்னும் முனிவனுக்கு தேவர் தாமும் அறிதற்கரிய பொருளாகிய பேரின்பத்தைத் தரும் சிவாநுபூதி விளக்கத்தை அருளிச் செய்தான் (எ.று)

முடிபு - உலகர் உணர்வைப் பிணித்த மல இருளானதனை உரையால் நினைவால்நோக்கால்; அறமாற்ற எழுந்த ஞான சூரியன் போன்ற (அல்லம தேவன்) மருள சங்கரனுக்கு அருளால் அறிவரிய பொருளாகிய பேரின்ப அநுபூதி விளக்கத்தை அருளிச் செய்தான். இவ்வநுபூதி விளக்கத்தை கன்னடப் பிரபுலிங்கலீலை 'ஐக்கிய பதவி' என்று கூறும்.

பதினைந்தாவது
மருள சங்கர தேவர்கதி முற்றிற்று

Koviloor Digital Library

பதினாறாவது
இட்டலிங்க கதி

வேறு

கவி நுதலியது

கன்னடப் பிரபுலிங்க லீலை, இக்கதியை ''பசவராசனுக்கே இஷ்டலிங்க உபதேச'' என்று பெயர் கூறும். அங்கே இக்கதியுள், வசவண்ணரைச் சார்ந்தகதி, மருளசங்கர தேவர்கதி. இஷ்டலிங்க கதி ஆகிய மூன்று கதிப்பொருள்களையும் சேர்த்து கூறப்பட்டுள்ளது.

796. **சிட்டன் அல்லம தேவன் அருளுறீஇ**
நட்ட நண்பொடு நந்தி யுணர்வுற
இட்ட லிங்கத்(து) இயல்பு புகன்றமை
கட்டு வல்வினைக் கட்டற ஓதுவாம் 1

(இ.ள்) சிட்டன் அல்லமதேவன் அருள் உறீஇ-சிறந்தோனாகிய அல்லமதேவன் அருள் குணத்தை மேற்கொண்டு; நந்தி நட்ட நண்பொடு உணர்வுற - வசவதேவனிடத்து, தாம் கொண்ட நட்பு என்னும் குணத்தினோடு ஞானத்தையும் அவன் பெறவேண்டி; இட்டலிங்கத்து இயல்பு-இட்டலிங்கத்தின் இலக்கணத்தினை புகன்றமை - கூறிய செயலை; கட்டு வல்வினை கட்டு அற ஓதுவாம் - பிணித்த வலிய வினைகளின் பிணிப்பு நீங்க; எடுத்துச் சொல்லுவாம். (எ.று)

முடிபு - அல்லம தேவன் அருள் உறீஇ, நந்தி நண்பொடு உணர்வுற இட்டலிங்கத்து இயல்பு புகன்றமையை வல்வினைக்கட்டு அற ஓதுவாம். பாவலிங்கத்தால் ஆணவமலமும், பிராணலிங்கத்தால் மாயாமலமும், இட்டலிங்கத்தால் கன்ம மலமும் நீங்குமாதலின் இங்கு கன்ம மலத்தையே சுட்டி வல்வினைக் கட்டு என்று ஓதினார். எனவே இட்டலிங்க வழிபாட்டால் கன்ம மலம் நீங்கும் என்க. இது கருதியே துதிகதியில் ''என் கரதலத்து மேவா அமர்ந்த மாமணியைத் தொழுது வினைக்கு விடைக் கொடுப்பாம்'' எனக்கூறினார். எனவே அப்பாட்டு இட்டலிங்க வணக்கத்தைக் கூறியது என்க.

Koviloor Digital Library

அல்லமன் நந்தியின் திருமாளிகையினைக் கண்டது

797. சங்க ரற்கு தனைநிகர் இன்பவீடு
அங்கு அளித்தருள் அல்லமன் நந்திதன்
மங்க லத்திரு மாளிகை கட்செவிக்
கங்க ணற்கினி யாரொடு கண்டனன் 2

(இ.ள்) சங்கரற்கு தனைநிகர் இன்பவீடு அங்கு அளித்து அருள் அல்லமன் - மருள சங்கர தேவருக்கு, தனக்குத் தன்னையே ஒத்த பேரின்பமாகிய வீடு பேற்று நெறியை அவரைக் கண்ட அப்பொழுதே அளித்தருளிய அல்லமாப் பிரபுதேவர்; கண்செவிக்கங்கணற்கு இனியாரொடு-கண்ணையே காதாகப் பெற்றுள்ள பாம்பினாற் செய்த கங்கணம் என்னும் அணியை அணிந்துள்ள சிவபெருமானுக்கு இனியவராயுள்ள தொண்டரொடு கூடி; நந்திதன் மங்கலத் திருமாளிகை கண்டனன்-வசவதேவரது சிவம் என்னும் மங்கலம் விளங்குகின்ற திருமாளிகையைச் சென்று பார்த்தான் (எ.று)

முடிபு- அல்லமன் நந்திதன் மங்கலத் திருமாளிகையை, கட்செவிக் கங்கணற்கு இனியாரொடு கண்டனன். கட்செவிக் கங்கணன் என்பது சிவபெருமானை. இது அணியால் பெற்ற பெயர். இனியார் என்பது அடியார்களை; மங்கலம் என்பது சிவமாகிய மங்கலப் பொருளை; உணர்த்திற்று.

வசவதேவன் சிவானுபவமண்டபத்தில் ஆதனம் அமைத்தலும் அதில் அல்லமதேவர் எழுந்தருளியிருத்தலும்

798. மண்டு பேரொளி மாடத்து நாப்பண்நம்
தண்ட நாதன் தவிசொன்று அமைத்திட
[1]அண்ட நாயகன் அல்லமன் ஆயிடைக்
கண்ட நோக்கம் களிப்ப இருந்தனன். 3

(பா.ம்) [1]அண்டர்நாயகன்

(இ.ள்) நம் தண்ட நாதன், மண்டு பேரொளி மாடத்து நாப்பண் தவிசு ஒன்று அமைத்திட - நம்முடைய வசவதேவன், தன்னுடைய மிக்க பெரிய ஒளியை உடைய மாளிகையின் நடுவே இருக்கை ஒன்றை அமைத்திட; அண்ட நாயகன் அல்லமன்- எல்லா உலகத்திற்கும் தலைவனாகிய அல்லமதேவன்; கண்ட நோக்கம் களிப்ப ஆயிடை இருந்தனன் - பார்த்தாருடைய பார்வை எல்லாம் மகிழ்ச்சி அடையும்படி அவ்வாசனத்தின் மேலே எழுந்தருளிஇருந்தான். (எ.று)

Koviloor Digital Library

முடிபு- தண்டநாதன் மாடத்து நாப்பண் தவிசு ஒன்றை அமைத்திட அல்லமன், நோக்கம் களிப்ப ஆயிடை இருந்தனன். மாளிகை நாப்பன் என்பது வசவேசருடைய மாளிகையின் நடுவே அமைந்த சிவானுப மண்டபத்தை என்க.

எழுந்தருளிய அல்லம தேவரை நந்தி வழிபாடு செய்தது

799. ஆத னத்தில் அமர்ந்தருள் அல்லமன்
பாதம் [1]அன்பொடு பன்மலர் தூய்இது
மாத வத்தின் வலியெனத் தாழ்ந்துஎழு
காதல் மிக்குக் கசிந்துளம் நந்திதான் 4

(பா.ம்) [1]அற்பொடு

(இ.ள்) நந்திதான் - வசவதேவன்தான்; ஆதனத்தில் அமர்ந்தருள் அல்லமன்பாதம் அன்பொடு பன்மலர் தூய்- ஆதனத்திலே எழுந்த ருளியுள்ள அல்லமதேவனுடைய திருவடிகளில் அன்புடன் பலவகைப் பூக்களைத் தூவி வழிபட்டு; இதுமாதவத்தின்வலி- அல்லமதேவன் எழுந்தருளிய இது; யான் செய்த பெரிய தவத்தின் வலிமையாகும் என்று கூறிக் கொண்டு; தாழ்ந்து எழு காதல் மிக்கு உளம்கசிந்து - வணங்கி எழுவதில் விருப்பமிகுந்து உளம் உருகி; (எ.று)

முடிபு- நந்தி தான் அல்லமன்பாதம் அன்பொடு பன்மலர்தூய் இது- மாதவத்தின் வலிஎன, தாழ்ந்து எழு காதல் மிக்கு உளங்கசிந்து; இப்பாட்டின் எச்சம், உருகி என்பது அடுத்த பாட்டிலுள்ள மொழிந்தருள் என்பதனோடு முடியும்.

நந்தி அல்லமரிடம் சிவபக்தியை உபதேசிக்குமாறு கேட்டுக் கொண்டது

800. அடிய னேன்சிவ பத்தி அறிந்தமை
படியில் ஊமன் கனவெனப் பட்டது
முடியு மாறு மொழிந்தருள் என்றுபொற்
றொடியு லாங்கை தொழுது விளம்பினான் 5

(இ.ள்) அடியனேன் சிவபத்தி அறிந்தமை - அடியேனாகியயான், சிவபத்தியை அறிந்து கொண்டுள்ள இயல்பு எத்தகையதெனில்? படியில் ஊமன்கனவு எனப்பட்டது - உலகத்தில் ஊமையன் கண்ட கனாப் பொருளை ஒத்துள்ளது; முடியுமாறு மொழிந்து அருள் என்று - என்னுடைய சிவபத்தி நிறைவுறும்படி உபதேசித்து அருள்வாய் என்று

Koviloor Digital Library

கூறி; பொன் தொடி உலாம்கை தொழுது விளம்பினான் - பொன்னால் செய்யப்பட்ட கங்கணம் இயங்குகின்ற கையினால் தொழுது நந்தி மேலே கண்ட வார்த்தையைக் கூறினான். (எ.று)

முடிபு- (நந்தி அல்லமனை நோக்கி) அடியனேன் சிவபத்தி அறிந்தமை ஊமன் கனவு எனப்பட்டது. முடியுமாறு மொழிந்தருள் என்று கைதொழுது விளம்பினான். ஊமையன் கண்ட கனவு என்ற பழமொழி எடுத்தாளப்பட்டடுள்ளது தன்னுடைய சிவ பத்தியை ஊமையன் கண்ட கனவுக்கு உவமை கூறியது. அதனை வெளிப்படுத்திப் பிறருக்கு கூற இயலாத நிலையை உணர்த்திற்று.

விளம்பிய நந்திக்கு அல்லமன் கூறியபதில்

801. கேட்ட ஆரியன் கேடில் சிவநெறிக்
கூட்டம் மேவுறு கொள்கையினாய் நினைக்
காட்டு வாருள ரோசெங் கதிர்க்கிருள்
ஓட்டு சோதியும் உண்டுகொ லோவென்றான் 6

(இ.ள்) கேட்ட ஆரியன்- வசவ தேவனுடைய விண்ணப்பத்தைக் கேட்ட அல்லமதேவர்; கேடுஇல் சிவநெறிக் கூட்டம்மேவுறு கொள்கையினாய் - அழிதல் இல்லாத சிவபத்திவழியில் செல்கின்ற, பத்தர்கள் கூட்டத்தோடு பொருந்தி இருத்தலையே கொள்கையாக உடையவனே!; நினைக் காட்டுவார் உளரோ- அத்தகைய உனக்கு சிவபத்தியின் வழியை, உலகத்தில் அறிவிப்பவரும் உள்ளார்களோ; செங்கதிர்க்கு இருள் ஓட்டு சோதியும் உண்டு கொலோ என்றான்- சூரியனுக்கு இருளை ஓட்டுகின்ற மற்றொரு சோதியும் உண்டோ? என்று கூறினான். (எ.று)

முடிவு - கேட்ட ஆரியன் சிவநெறிக்கூட்டம் மேவுறு கொள்கை யினாய், நினை (நினக்கு) காட்டுவார் உளரோ? செங்கதிர்க்கு இருள் ஓட்டு சோதியும் உண்டு கொலோ என்றான். நினை என்ற இரண்டாம் வேற்றுமையினை நினக்கு என நான்காம் வேற்றுமையாகத் திரித்துக் கொள்க. இப்பாட்டு வேற்றுப் பொருள்வைப் பணியின் பாற்படும். நந்தியை, செங்கதிர்க்கு ஒப்பக்கூறி, செங்கதிர்க்கு இருளோ:ட்டு சோதி வேறொன்று வேண்டுவதில்லை போல் உனக்கு சிவபத்தி அறிவுறுத்தற்கு வேறு ஒருவரும் வேண்டுவதில்லை என்று புகழ்ந்து கூறி மறுத்தார்

Koviloor Digital Library

அல்லமரின் மறுப்புரையைக் கேட்ட நந்தி உள்ளுடைந்து கூறத் தொடங்கியது.

802. வள்ளல் இன்றெனை வந்து புகழ்ந்தனன்
தெள்ளு தண்புனல் தேக்கு முளைத்தலைக்
கிள்ளி நின்றெறி கின்றவர் போலெனா[1]
உள்ளு டைந்திட் டுரைக்கும் வசவனே 7

(பா.ம்) [1]என

(இ.ள்) வசவனே - அல்லம தேவர் கூறியதைக் கேட்ட வசவ தேவர்; தெள்ளு தண்புனல் தேக்கு முளைத்தலைக் கிள்ளி நின்று எறிகின்றவர் போல்- தெளிந்த குளிர்ச்சி பொருந்திய நீரால் தேக்கு மரத்தின் விதை முளைத்து வருதலை நின்று அம்முளையைக் கிள்ளி எறிகின்றவரைப் போல; வள்ளல் இன்று எனைவந்து புகழ்ந்தனன் - வள்ளலாகிய பிரபு தேவன், இன்றையதினம் என்னிடம் வந்து எனக்கு உபதேசிக்க விரும்பாமல் என்னைப் புகழ்ந்து கூறி மறுத்து விட்டான்; எனா- என்று எண்ணிக் கொண்டு; உள்உடைந்திட்டு உரைக்கும் - உனக்குக் காட்டுவாருளோ என்று கூறிய சொல்லைக் கேட்டு அதற்காக உள்ளம் உடைந்திட்டு மேலும்சொல்லத் தொடங்கினான் (எ.று)

முடிபு- வசவன் தேக்கு முளைத்தலைக் கிள்ளி நின்று எறிகின்றவர் போல், வள்ளல் இன்று வந்து என்னைப் புகழ்ந்தனன். எனா; உள்ளுடைந்திட்டு உரைக்கும்.

தேக்கின் விதை முளைத்து வந்தால் அம்முளையினைக் கிள்ளி விட்டால் பின்னா் மரமாகாது அழிந்து போகும். அதனை உவமையாகக் கூறி, அல்லமதேவன் என்னைப் புகழ்ந்து கூறி, சிவபக்தியை அறிவிக்காமல் விட்டு விட்டானே என்று வசவதேவன் வருந்தி மறுமொழிக் கூறத் தொடங்குதல்.

வேறு

803. இகழ்தென துளச் செருக் கினைய கற்றிலாய்
புகழ்ந்தனை விழைபுளிங் கறியிட்டு ஆறுநோய்
மிகுந்தெழ வளர்த்தல்போல் எனவிளம்புபு
தகுங்கழல் இறைஞ்சினன் தண்ட நாயகன் 8

Koviloor Digital Library

(இ.ள்) தண்ட நாயகன் - வசவதேவன் அல்லமதேவரை நோக்கி; விழைபுளிங்கறியிட்டு ஆறுநோய் மிகுந்து எழ வளர்த்தல் போல் - நாக்கு விரும்புகின்ற புளிப்புச் சுவையுள்ள கறியை உணவாகக் கொடுத்து; தணிந்த பிணியை மிகுந்து எழுமாறு வளர்த்தலைப் போல; எனது உளச் செருக்கினை இகழ்ந்து அகற்றிலாய் புகழ்ந்தனை - நானே அறிந்தவன் என்று எழக்கூடிய உள்ளச் செருக்கை; இகழ்ந்து அதை நீக்கினாய் அல்லை; புகழ்ந்து கூறி அதை வளர்த்து விட்டாயே; என விளம்புபு தகுங்கழல் இறைஞ்சினன் - என்று கூறிக் கொண்டு; அல்லம தேவரது திருவடியினை வணங்கினான்.

முடிபு- தண்ட நாயகன், புளிங்கறியிட்டு ஆறுநோய் மிகுந்து எழ வளர்த்தல் போல; உளச் செருக்கினை இகழ்ந்து அகற்றிலாய் புகழ்ந் தனை, எனா, கழல் இறைஞ்சினன். ''போன நோயைப் புளியிட்டழைத் தாற்போல'' என்பது ஓர் பழமொழி இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது.

வசவ தேவன் தனக்கருள் செய்யுமாறு வேண்டிக் கோடலும் அதனை ஏற்று அல்லமதேவர் அருள் செய்யத் தொடங்குதலும்

804. **அருளினால் நினதடி அருச்சிக் கும்படி**
தெருளிலா எனக்குரை செய்தி என்றலும்
மருளனாம் எனுமொரு மதிஞற் கீந்தருள்
பொருளினான் இனையன புகறல் மேயினான் 9

(இ.ள்) (தண்ட நாயகன்) அருளினால் நினது அடி அருச்சிக்கும்படி தெருள் இலா எனக்கு உரை செய்தி என்றலும் - நீ அருள் செய்யும் அருள்மொழியால் உன்னுடைய திருவடியை யான் பூசித்து ஒழுகும்படி மனத் தெளிவு இல்லாத எனக்கு சிவபத்தி நெறியை உரைப்பாயாக என்று வசவதேவர் வேண்டிக் கூறுதலும்; மருளனாம் எனும் ஒரு மதிஞற்கு ஈந்து அருள் பொருளினான் - மருளசங்கரன் எனப்பெயர் பூண்ட அறிஞனுக்கு உபதேசித்தருளிய பொருளையுடைய அல்லமதேவன் இணையன புகறல் மேயினான் - கீழே கூறப்படும் இத்தகைய உபதேச மொழிகளைச் சொல்லத் தொடங்கினான் (எ.று)

முடிபு- (தண்ட நாயகன்) நினது அடி அருளினால் அருச்சிக்கும் படி தெருளிலா எனக்கு உரை செய்தி என்றலும் (அதனைக் கேட்ட) மருளனாம் எனுமொரு மதிஞற் கீந்தருள் பொருளினான் இணையன புகறல் மேயினான். தண்ட நாயகன் எனக்கு உரை செய்தி என்றலும், பொருளினான் இனைய புகறல் மேயினான்.

Koviloor Digital Library

மக்கள் பிறப்பின் அருமை கூறிற்று

805. புல்மரம் நெளிபுழுப் புள்வி லங்கெனும்
பன்மய துயர்செயும் பவங்கள் தப்பியே
வன்மைகொள் நிலமிசை மக்கள் ஆகுதல்
நன்மைகொள் உயிர்க்கலால் அரிது நந்தியே 10

(இ.ள்) நந்தியே- வசவதேவனே!; புல்மரம், நெளிபுழு, புள், விலங்கு எனும் பன்மயதுயர் செயும் பவங்கள் தப்பியே - புல்லும், மரமும், நெளிகின்ற புழுவும், பறவையும், விலங்குகளும் என்று கூறப்படும் பலவகையான துன்பத்தை உண்டாக்கும் பிறவிகளுக்குத் தப்பியே; வன்மை கொள் நிலமிசை மக்கள் ஆகுதல்- வலிமையைக் கொண்ட இந்நிலவுலகத்தின்கண், மக்கள் பிறப்பினராதல்; நன்மை கொள் உயிர்க்கு அலால் அரிது - நல்வினையைக் கொண்ட உயிர்களுக்கு அல்லாமல் தீவினையைக் கொண்ட உயிர்களுக்கு அப்பிறப்பு அரிது என்க (எ.று)

முடிபு- புல், மரம், புழு, புள் விலங்கு எனும் துயர் செயும் பவங்கள் தப்பியே, நிலமிசை மக்களாகுதல் நன்மைகொள் உயிர்க்கு அல்லால் தீமை கொள் உயிர்க்கு அரிது. நன்மை கொள் உயிர்க்கலால் என்றமையான் தீமை கொள் உயிர் என்பது வருவிக்கப்பட்டது. அரிது என்பது இன்மைப் பொருளது. இப்பாடல் கருத்தை, சீவசிந்தமணி, சிவஞான சித்தியார், சிவதருமோத்திரம் முதலிய நூல்களாலும் அரிது அரிது மானிடராதலரிது என்ற ஔவைப்பாட்டாலும் உணர்ந்து கொள்ளலாம்.

806. நரர்வடிவு ஆயினும் நன்மை ஆற்றுறா
மரபினில் உலகினில் வருதல் தப்புதல்
அரிதுநல் அறம்புரி வழிய டுப்பினும்
மருவுதல் அரிதுஅறம் வளர்க்கும் அங்கமே 11

(இ.ள்) நரர்வடிவு ஆயினும் - ஓர் உயிர் சிறந்த மக்கள் பிறப்பில் பிறந்தது ஆயினும்; நன்மை ஆற்றுறா உலகினில் நன்மை ஆற்றுறா மரபினில் வருதல் தப்புதல் அரிது - நல்லறத்தைச் செய்யாத உலகத்திலும், நல்லறத்தைச் செய்யாத குலத்திலும் பிறத்தலுக்குத் தப்புதல் அரிதாகும்; நல் அறம்புரி வழி அடுப்பினும் - நல்ல அறத்தைப் புரிதலுக்கு வழியாகிய நல்ல உலகும், நல்ல மரபும் ஒரு உயிர்க்குக் கிடைத்தாலும்; அறம் வளர்க்கும் அங்கமே மருவுதல் அரிது - அறத்தை வளர்த்தற்கு ஏதுவான

Koviloor Digital Library

உடம்பும், பொருளும் ஏவலும் ஆகிய இவ்வங்கங்களைப் பொருந்துதல் மிகவும் அரிதாகும். (எ.று)

முடிபு - நரர் வடிவு ஆயினும் நன்மை ஆற்றுறாத உலகினில், மரபினில் வருதலுக்குத் தப்புதல் அரிது. வழி அடுப்பினும் அறம்வளர்க்கும் அங்கம் மருவுதல் அரிது. அங்கம் என்பது இடம் பொருள் ஏவல் முதலியனவாம். பகவத்கீதை உடம்பினை தொழில் செய்வதற்குரிய இடமாகக் கூறும். இடம் என்றாலும் அதிகரணம் என்றாலும் ஒன்று.

807. அறத்துறுப் பெய்தினும் அன்பி னாலறம்
சிறப்புறச் செய்தலிங் கரிது செய்யினும்
புறச்சம யங்களைப் போக்கி ஆகம
நெறிச்சம யங்களை [1]அரிது நேர்தலே 12

(பா.ம்) [1]அறிந்து நேர்தலே

(இ.ள்) அறத்து உறுப்பு எய்தினும் - அறத்தைச் செய்வதற்கு அங்கமாகிய இடம், பொருள், ஏவல்களை ஒருவன் பெற்றிருந்தாலும்; அன்பினால் அறம் சிறப்புறச் செய்தல் இங்கு அரிது - அன்பு என்கின்ற உயர்ந்த பண்பினாலே; அறத்தைச் சிறப்பு அமையும் படி செய்தல் மிகவும் அரியதாகும்; செய்யினும் - அன்பு அமைய அறங்களைச் செய்தாலும்; புறச் சமயங்களைப் போக்கி - புறச்சமயங்கள் கூறும் அற நெறிகளைச் செய்யாது விட்டு; ஆகம நெறிச் சமயங்களை நேர்தலே அரிது - சிவாகமநெறியிலே செல்லும் சமயங்கள் கூறும் அறச்செயல் களை அறிந்து செய்தல் மிகவும் அரிதாகும். (எ.று)

முடிபு- அறத்துறுப்பு எய்தினும், அன்பினால் அறம் செய்தல் அரிது; செய்யினும் புறச்சமயங்களைப் போக்கி ஆகம நெறிச் சமயங்களை நேர்தலே அரிது.

அறத்திற்கு உடம்பும், இடமும் பொருளும் ஏவலும் ஆகிய இவை எல்லாம் புறத்துறுப்பு என்றும், அன்பு ஒன்றே அகத்துறுப்பு என்றும் கருதிய வள்ளுவர் ''புறத்துறுப் பெல்லா மெவன் செய்யும் யாக்கை அகத்துறுப் பண்பிலவர்க்கு'' (69) என்று கூறினார். இவற்றைக் கருதியே இவ்வன்பின் சிறப்பை பசவண்ணரைச் சார்ந்த கதியில் 41, 42, 43, 44ம் பாடல்களில் அல்லமதேவர் முதல் உபதேசமாக அங்கே கூறியுள்ளார். சிவப்பிரகாச உரையாசிரியர்களில் ஒருவராகிய நந்தி சிவாக்கிரயோகி கள் என்னும் அருள் நந்தியார் எழுதிய உரையுள் ''புறச்சமயத்தவர்க்கு

Koviloor Digital Library

இருளாய்'' (8 சிவப்பிரகாசம்) என்னும் பகுதிக்கு வேதத்திற்கு புறம்பான பௌத்தாதி சமயத்தவர்களுக்கு அஞ்ஞான இருளாலே தெரிவரிதாய், என்று எழுதிவிட்டு புறச் சமயமானது, வேதம் சொன்ன தர்மத்தில் நடவாத புத்தர், சமணர், சார்வாகர் (உலோகாயதர்) முதலான பாஷாண்டிகள் என்பர். ஆனால் இலக்கணம் சிதம்பரநாத முனிவர் என்பார். உலகாயதன், புத்தன், சமணன், மீமாம்சன், மாயாவாதி, பாஞ்சராத்திரி என்னும் புறச் சமயர் அறுவர்க்கும் இருளாய் என்று கூறியுள்ளார். இவர் கூறியுள்ளது உலகாயதம், புத்தம், சமணம், மீமாம்சை, பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம் இவ்வகை ஆறும் புறச்சமயம் ஆகும். (3-95) பிங்கல நிகண்டு கூறுகின்றது.

808. **ஆகமம் புகல்நெறி அடைவன் ஆயினும்**
சோகமில் சைவநல் துறையை நன்றெனச்
சேர்குதல் அரிதது சேர்வன் ஆயினும்
ஏகலிங் கயிக்யனா குதலன் றெண்மையே 13

(இ.ள்) ஆகமம் புகல்நெறி அடைவன் ஆயினும் - வேத சிவாக மங்கள் கூறும் சமய நெறியை ஒருவன் அடைந்தான் ஆயினும்; சோகம் இல் சைவநல் துறையை நன்று எனச் சேர்குதல் அரிது - துன்பம் இல்லாத சைவசமயமாகிய நல்ல வழியை நல்ல நெறி என்று கருதி அடைதல் அவற்றினும் அரிதாயிருக்கும்; அது சேர்வன் ஆயினும் -அச்சைவ நெறியினை ஒருவன் அடைவான் ஆயினும்; ஏகலிங்க ஐக்கியன் ஆகுதல் எண்மையே அன்று - சௌராதி சண்டேஸ்வராந்தமான பர தெய்வங்களை வழிபடாமல் விட்டு ஒன்றாகிய இலிங்கம் ஒன்றையே கருதி அதனுள் அடங்கி நிற்றல் எளிமையே அன்று. (அரிது என்பது பொருள்) (எ.று)

முடிபு- (ஒருவன்) ஆகமம் புகல் நெறியை அடைவன் ஆயினும் சைவத் துறையை நன்றெனச் சேர்தல் அரிது. சேர்வன் ஆயினும் ஏகமாகிய இலிங்க ஐக்கியனாகுதல் எண்மையே அன்று.

சிவபூஜை சுத்த பூசை என்றும் மிசிர பூசை என்றும் இருவகைப் படும். மிசிரபூசையாவது, சூரியன், எட்டுதிக்குப்பாலகர்; பிரம்ம விஷ்ணுக்கள் சக்தி, சிவம், சண்டேஸ்வரர் முதலான பல தெய்வமூர்த்தங் களைப் பூசித்தலாகும். சுத்தபூசை என்பது சிவம் ஒன்றையே பூசித்தலாகும். இக்கொள்கை உணர்வு சிதையாமல் ஒருமைப்படுதலுக்கு ஏதுவாய் இருத்தலில் இதுவே மிகச்சிறந்ததாம். திருஞான சம்பந்தர்,

Koviloor Digital Library

திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் முதலான நால்வரும் சிவம் ஒன்றையே கருதியவராவர். இக்கருதும் நெறி, உபாசனாஉலகிற்கு மிகச்சிறந்தது என்க. வீரசைவநெறி இதன்பாற்பட்டு வேறு எத்தெய்வத் தையும் பூசிக்காமல் சிவமாகிய இலிங்கத் தையே பூசித்தலின் இது ஏனைய சமயத்தினும் சிறந்ததாகும் என்பது கருத்தாகும். ''ஆகம நெறிச் சமயங்களை நேர்தலே அரிது என்பதற்கு அகச்சமயத்து ஒளியாய்'' என்ற சிவப்பிரகாசக் கருத்தை ஒத்துள்ளது. அதற்கு உரை, பாடாண வாத சைவர் முதலிய அகச் சமயத்தோர்க்கு அறிவுறுத்தின் ஏற்று அறிந்து கொள்ளத்தக்கதாய்'' என்று நந்திசிவாக்கிர யோகிகள் உரை கூறியுள்ளார். இலக்கணம் சிதம்பரநாத முனிவர், அகச் சமயத்து ஒளியாய் என்ற இப்பகுதிக்கு, சைவம் பாசுபதம், காளாமுகம், வைரம், வாமம், மாவிரதம் என்னும் உட்சமைகள் அறுவர்க்கும் விளக்கமாய்'' என்று உரை கூறியுள்ளார். இவர் இவ்வாறு கூறுவது, ''வைரவம் வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம் சைவமென்று உட்சமயம் ஆறே'' (3-96) பிங்கலநிகண்டு நூற்பாவுக்கு ஒத்துள்ளது. சித்தாந்த சிகாமணி வேதத்தை பிரமாணமாகக் கொள்ளாதவை, பௌத்தம் முதலான சமயங்கள் என்றும் வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டவை சாங்கியம் முதலானவை என்றும் வகுத்துக் கொண்டு, வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட சமயங்கள் - சாங்கியம், யோகம், பஞ்சராத்திரம், பாசுபதம் ஆகிய இவைகள் என்று கூறும்

ஆய்ஞ்ச சாங்கியம் ஆறு யோகநற்
பாஞ்ச ராத்திரம் பாசுப தத்தொடு
வாய்ஞ்ச வேதம் இவைபிர மாணமாய்த்
தாம்செய் வாதத்திற் றள்ளுவ வல்லவாம்

(சித்தாந்த சிகாமணி - உபதேசம் 4)

சிவப்பிரகாசர் ஆகம நெறிச் சமயங்கள் என்று கூறுவது, வேதங் களையும், சிவாகமங்களையும் பிரமாணமாகக் கொண்ட சமயங்கள் என்று பொருள் வரும்.

பரவுல் காயுதாதி பாஞ்சராத் திரிஈருக
திரமிகு சமயத்தோர்கள் திருக்கினை அடவே நீக்கி
தரமிகும் சைவத் தாக்கி சரிதைநாள் கியற்றப் பண்ணி
விரவிய பரம ஞானம் தருவதும் வீர சைவம்

(வீராகமம் 12 பாட்டு)

Koviloor Digital Library

809. புண்ணிய முதிர்வினால் பொருந்தி அங்கையில்
கண்ணுற நிகழ்வுறு சிவலிங் கத்தினை
எண்ணிய மனமுடன் என்றும் வந்தனை
பண்ணிய முயல்பவன் பத்தன் என்பவே 14

(இ.ள்) புண்ணிய முதிர்வினால் - பல முன் பிறவிகளில் செய்த சிவபுண்ணியங்களின் மிகுதியினாலே கிடைத்த; அங்கையில் பொருந்தி கண்ணுற நிகழ்வுறு சிவலிங்கத்தினை - அழகிய இடக்கையில் வைத்துப் பூசிக்குமாறு விழிக்கு விளங்கிக் கொண்டிருக்கும் சிலிங்கத்தினை; என்றும் எண்ணிய மனமுடன் வந்தனை பண்ணிய முயல்பவன் பத்தன் என்பவே - நாள்தோறும், கருதிய மனத்துடன் வழிபாடு செய்ய முயல்பவனை அறிஞர்கள் பத்தன் என்று கூறுவர் (எ.று)

முடிபு- சிவலிங்கத்தினை என்றும் எண்ணிய மனமுடன் வந்தனை பண்ணிய முயல்பவனை (அறிஞர்) பத்தன் என்ப.

எத்தகைய சிவலிங்கம் எனில் புண்ணிய முதிர்வினாலே அங்கையில் பொருந்தி, கண்ணுற நிகழ்வுறு சிவலிங்கம் என்க. எனவே இச்சிவலிங்கம் கோவில்களில் நாட்டப்பட்ட தாவரலிங்கம் அன்று. ஒருவர்தம் வழிபாட்டுக்காக ஆசிரியனால் கொடுக்கப்பட்ட சரலிங்கம் என்க. பத்தன் என்பது பத்தத்தலத்துக்கு உரியவனை; இப்பத்தன் ஒருவனே தன்பக்குவ நிலையால் மாகேஸ்வரன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், ஐக்கியன் என்று ஆவான் என்க. பண்டு ஒரு ஆயிரம் பிறவியில் செய்த புண்ணியத்தாலே ஒருவன் முத்தி பெறுவதற்குரிய தூய மனத்துடன் மக்கள் பிறவியில் ஒரு நல்ல பிறவியைப் பெற்று பிறக்கிறான். இதற்குப் பிண்டத்தலம் என்று பெயர். அப்படிப் பிறந்தவன், தன் அறிவினால் உடம்பு- உயிர் - இவற்றிற்கு வேறாகிய இறைவன் ஆகிய மூன்று பொருள்களையும் வெவ்வேறு என்று பிரித்து அறிகின்றான். இதற்குப் பிண்ட ஞானத்தலம் என்று பெயர். இப்படிப் பிறந்த ஞானத்தால் இறந்து இறந்து பிறக்கின்ற சம்சார நிலையைத் தீயதென்று உணர்ந்து உலகப் பொருள்களில் பற்று நீங்குகின்றான். இதற்குச் சம்சாரநீக்கத்தலம் என்று பெயர். இத்தகையோன், தனக்கு உபதேசித்து அருளும்படி, குருவை அடுத்து வேண்டுகின்றான். அக்குரு இவனது பக்குவ நிலையினைக் கருதிப் பார்த்து அருளால் உபதேசம் புரிகின்றான். இதற்கு குரு காருண்யத்தலம் என்று பெயர். அக்குருவினால் நாள்தோறும் வழிபாடு செய்வதற்குரியதாகக் கொடுக்கப்பட்ட இலிங்கமே அங்கையில் பொருந்தி கண்ணுற நிகழ்வுறு சிவலிங்கம் என்க. சிறந்த வீர

Koviloor Digital Library

சைவராகிய திருமூலர் இச்சிவலிங்கத்தினை, ''கண்காணியாக என் கையகத்தெழும்'' என்று கூறுகின்றார்.

குரு அருளுபதேசம் செய்யுமிடத்துச் செய்யும் சம்பிரதாய நெறியினைக் கூறுகின்றது.

810. ஆவுறு பிணிகெட ஆவின் பால்கறந்து
ஆவினை ஊட்டல்போல் ஆண வங்கெட
ஆவியுள் அமலனை அங்கை தந்துபின்
ஆவியுள் [1]அமைவுற ஆக்கும் ஆரியன்

(பா.ம்) [1]அமையுற

(இ.ள்) ஆஉறு பிணிகெட ஆவின் பால்கறந்து ஆவினை ஊட்டல் போல் - பசு ஒன்று அடைந்த நோய் கெடுமாறு அப்பசுவின் பாலையே கறந்து, அப்பிணிக்கு மருந்தாக அதற்கே ஊட்டுதல் போல; ஆணவம் கெட - ஆன்மாஉற்ற ஆணவ நோய் கெடுமாறு; ஆவியுள் அமலனை அங்கை தந்து - ஆன்மாவுக்குள் எழுந்தருளியுள்ள இறைவனை, இட்டலிங்க வடிவாக உள்ளங்கையிலே தந்து; பின் ஆரியன் ஆவியுள் அமைவுற ஆக்கும் - பின்னர் அவ் இட்டலிங்கத்தை ஆன்மாவுக்குள் பொருந்துமாறு ஏக பாவம் செய்வன் ஆசிரியன் என்க. (எ.று)

முடிபு - ஆவுறு பிணிகெட அவ்ஆவின் பாலையே கறந்து அவ்வாவினுக்கு ஊட்டல் போல்; ஆணவம் கெட ஆவியுள் அமலனை அங்கை தந்து பின், ஆரியன் ஆவியுள் அமைவுற ஆக்கும். இப்பாட்டின் கருத்தை அத்துவிதவெண்பா கீழ்வரும் வெண்பாவினால் உணர்க.

ஆவின் உறும்பிணிக்கு இங்குஆன்பால் மருந்துஎன்றுஇங்கு
ஓவது அறிந்தால் பசுவின் உள்ளபால் - ஆவில்
கறந்து பாகஞ்செய்து காதலினோடு உள்ளே
உறைந்திடவே ஊட்டத் தீ நோய்

நீங்கி சுகமாய் நிலவுதல் போல் சற்குருவும்
ஓங்கும் மைந்தன் உள்ளத்து உணர்வாகி - நீங்காத
மெய்ப் பொருளை வாங்கி மிகும்இலிங்கம் ஆக்கி மைந்தர்க்கு
உய்ப்ப அதனால் மல நீங்கும்

(இ.ள்) பசுவுக்கு வரும் வியாதிக்கு பசுவின் பாலே நீக்குவதாகிய மருந்தென அறிந்தாராயின், அப்பசுவினிடத்துண்டாகிய பாலைக் கறந்து

Koviloor Digital Library

காய்ச்சி, அப்பசுவுக்கு ஊட்ட, அக்கொடிய வியாதி நீங்கி சுகமாய் விளங்குவது போல; ஆச்சாரியரும், பரிபாகத்தினை யுடைய மாணாக் கன் அறிவுக்கு அறிவாகி நீங்காமலிருக்கும் சுத்த சிவத்தை வாங்கி சிவலிங்கமாக்கி தரிக்கவே இவனும் அந்த இலிங்க ரூபம் ஆவன். அவனைப் பற்றிய ஆணவமலமும் நீங்கும் (என்றவாறு) திருவாசகம் கோயில் திருப்பதிகமும் "என் உள் எழுபரம் சோதி, உள்ளவா காணவந்து அருளாய்" என்று கூறி உள்ளே இருக்கும் அருவமாகிய பரசிவத்தை, கண்ணுக்குக் காணும் உருவமாக வந்து அருளும்படி வேண்டிக் கொள்வதை இப்பகுதியில் உணரலாம்.

811. கருங்கொடி இருவிழிக் கண்ணும் ஓர் மணி
திரிந்திடு செயலெனத் திரிதல் இன்றியே
பொருந்துறும் அகமொடு புறமும் தீர்வற
இருந்தில குறுமருள் இட்ட இலிங்கமே 16

(இ.ள்) கருங்கொடி இருவிழிக் கண்ணும் ஓர் மணி திரிந்திடு செயல் என- காக்கையினுடைய இரண்டு விழியினிடத்தும், ஒன்றாகிய கண்மணிதானே அங்கும் இங்குமாகப் பொருந்தி விளங்குதல் போல்; அருள் இட்டலிங்கமே - ஆசிரியனால் அருளப்பட்ட இட்டலிங்கம் என்னும் ஒரு பொருளே; திரிதல் இன்றி பொருந்துறும் அகமொடு புறமும் தீர்வற இருந்து இலகுறும் -மாறுபாடின்றி, மனம், அறிவு என்னும் அகத்தின் கண்ணும் உடம்பு என்னும் புறத்தின் கண்ணும் தங்கி இருந்து விளங்கும் என்க. (எ.று)

முடிவு- கருங்கொடி இருவிழிக்கண்ணும் ஓர்மணி திரிந்திடு செயலென இட்டலிங்கம், திரிதல் இன்றி அகமொடு புறமும், தீர்வு அற இருந்து இலகுறும். இப்பாட்டு உவமை அணி.

காகத்து இரு கண்ணிற்கு ஒன்றே மணிகலந்தாங்கு

என்பது திருக்கோவையார். இட்டலிங்கம் ஒன்றுதானே, உடம்பாகிய புறத்தில், கிரியாலிங்க வடிவமாகவும், மனமாகிய அகத்தில் மந்திரவடிவாகவும் ஆன்ம அறிவுக்குள் அறிவே வடிவமாகவும் இருத்தலின் அகமொடு புறமும் தீர்வற இருந்திலகுறும் என்றார்.

812. குறிபல பலமுறை கொண்டு பல்வகைப்
பொறிதொறும் மருவியொண் புலனுகர்ந்து மாய்ந்து
அறிவரும் நிலையஆ தாரம் மேவியும்
நிறைவுறும் அங்கையில் நிகழும் இட்டமே 17

Koviloor Digital Library

(இ.ள்) அம்கையில் நிகழும் இட்டமே - உள்ளங்கையில் எழுந்தருளி இருக்கும், செயல் வடிவமாகிய இட்டலிங்கம் ஒன்றுதானே; குறிபல பலமுறை கொண்டும் - இட்டலிங்கம் பிராணலிங்கம், பாவ லிங்கம் என்றும், ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சரலிங்கம், பிரசாதலிங்கம், மகாலிங்கம் என்றும் பல பெயர்களைக் கொண்டு விளங்கியும்; (குறி என்பது பெயரை) பல்வகைப் பொறி தொறும் மருவி ஒண்புலன் நுகர்ந்தும் - ஐம்பொறி, மனம் என்னும் பலவகைப் பொறிக ளோடு கூடி; நல்ல ஐம்புலப் பொருள்களைத் துய்த்தும்; ஆய்ந்து அறிவுரும் நிலைய, ஆதாரம் மேவியும் - தெரிந்து அறிதற்கு அரிய, மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களைப் பொருந்தியும்; நிறைவுறும் - உடம்பு முற்றிலும் நிறைந்திருக்கும் (எ.று)

முடிபு- அங்கையில் நிகழும் இட்டமே, பல பல முறை குறி கொண்டும்; பல்வகைப் பொறிதொறும் மருவிபுலன் நுகர்ந்தும், ஆதாரம் மேவியும் நிறைவுறும். இலிங்கம்பலகுறி பெறுதலை.

நண்பாகும் இட்ட லிங்கம் நன்றாம் பிராணலிங்கம்
ஒண்பாவ லிங்கமாம் ஓர் பொருளிங் கென்றானோ (தாலாட்டு 4)
ஆசார லிங்கமுடன் ஆருங் குருலிங்கந் தே
தசாரும் இட்டலிங்கம் சேர்ந்தாகும் என்றானோ (தாலாட்டு 5)
அந்தப் பிராணலிங்கத் தாகும் சிவலிங்கம்
இந்தச் சரலிங்கம் என்ற சிவஞா னியோ (தாலாட்டு 6)
பாவலிங்கந் தன்னில் பரமப் பிரசாதந்
தாவகன்ற மாலிங்கஞ் சார்ந்து வரும் என்றானோ (தாலாட்டு 7)

ஆசாரலிங்கம் மூக்கு என்பொறியை இடமாகக் கொண்டு மனம் என்னும் புலனை நுகரும்; குருலிங்கம் நா என்னும் பொறியை இடமாகக் கொண்டு சுவை என்னும் புலனை நுகரும்; சிவலிங்கம் கண் என்னும் பொறியை இடமாகக் கொண்டு உருவம் என்னும் புலனை நுகரும் சங்கமாய்ச் சரலிங்கம் உடம்பு என்னும் பொறியை இடமாகக் கொண்டு ஊறு என்னும் புலனை நுகரும். பிரசாதலிங்கம் செவி என்னும் பொறியை இடமாகக் கொண்டு ஒலியாகிய புலனை நுகரும். மகாலிங்கம் மனம் என்னும் பொறியை இடமாகக் கொண்டு ஐம்புலனையும் நுகரும். 1. மூலாதாரமாகிய பீடத்தில் ஆசாரலிங்கம் கிரியாசக்தியுடன் கூடியிருக்கும். இதன் எழுத்து நகாரம் 2. சுவாதிஷ்டானமாகிய பீடத்தில் - குருலிங்கம் ஞானசக்தியுடன்

Koviloor Digital Library

கூடியிருக்கும். இதன் எழுத்து மகாரம். 3. மணிபூரகமாகிய பீடத்தில் - சிவலிங்கம் இச்சாசக்தியுடன் கூடியிருக்கும். இதன் எழுத்து சிகாரம். 4. அனாகதமாகிய பீடத்தில் - சங்கமலிங்கம் (அல்) சரலிங்கம் ஆதிசக்தியுடன் கூடியிருக்கும். இதன் எழுத்து வகாரம். 5. விசித்தியாகிய பீடத்தில் - பிரசாதலிங்கம் - பராசக்தியுடன் கூடி இருக்கும். இதன் எழுத்து யகாரம். 6. ஆக்ஞையாகிய பீடத்தில் - மகாலிங்கம் சிற்சக்தியுடன் கூடியிருக்கும். இதன் எழுத்து ஓங்காரம்.

இலிங்கார்ப்பிதத்திறம்

813 **அடைந்துள உருச்சுவை அமைதி [1]என்பன**
உட்பொரு மூன்றினும் உற்ற டைந்திடும்
தொடர்ந்துள வினைவலி தொலைத்தி யானெனும்
இடும்பையில் இன்பருள் இட்ட இலிங்கமே 18

(பா.ம்) [1]என்றன

(இ.ள்) தொடர்ந்து உள வினைவலி தொலைத்து யான் எனும் இடும்பை இல் இன்பு அருள் இட்ட இலிங்கம் - ஆன்மாக்களைத் தொடர்ந்துள்ள கர்மமலத்தின் ஆற்றலை நீக்கி, யான் என்று பற்றுச் செய்யும் பற்றாகிய துன்பத்தையும் இல்லாமல் நீக்கி, பேரின்பத்தை நல்குகின்றன. இட்ட இலிங்கம் என்ற பெயரினால் வழிபடப் பெறும் அவ்விறைவன் தானே; அடைந்து உள உரு சுவை அமைதி என்பன - நிவேதனமாகப் பொருந்தியுள்ள, பொருள்களின் உருவமும், அப்பொருள்களின் சுவையும், அப்பொருள்களால் உண்டாகின்ற நினைவும் என்பனவாகிய இம்மூன்றும்; உடம்பு ஒரு மூன்றினும் உற்று அடைந்து இடும் - ஒரு மூன்றாகிய உடம்பினும், எழுந்தருளியுள்ள இஷ்ட, பிராண, பாவலிங்கங்களுக்கு நிவேதனமாகப் பொருந்தும். (எ.று)

முடிபு - இட்டலிங்கமே அடைந்துள உரு, சுவை, அமைதி என்பன உடம்பொரு மூன்றினும் உள்ள (இலிங்கங்களுக்கு) உற்று அடைந்திடும்.

இஷ்டலிங்கத்திற்கு நிவேதிக்கப்பட்ட பொருள்கள்; இட்ட லிங்கத்துக்கு உருவமும், பிராணலிங்கத்திற்குச் சுவையும் பாவ லிங்கத்துக்கு அமைதியும், ஆக நிவேதிக்கப்படும். நிரல் நிறையாகக் கொள்க. மூவகை அர்ப்பிதத்தை.

உருவம் சுவை நிறைவாய் ஓங்கர்ப் பிதங்கள்
மருவுந் திறஞ்சொல் மயிலை மலை விளக்கோ

(தாலாட்டு 24)

Koviloor Digital Library

என்றும் சி.பா.சு தாலாட்டை ஒப்பு நோக்கி உணர்க. ''ஒன்றொரு விடயந் தன்னில் உருசுவை நிறை வென்றாக்கி, என்றுமெம் முகத்த ளித்திட்(டு) எம் பிரசாதங்கொண்டு; துன்றுறு கருமம் உன்னாத் தூய்மை யில் வீரசைவத்(து), அன்றிவேறொரு மார்க்கத்தின் அடுக்குமோ வடுக்கண்மாதே (பிரபு-மான் செய் 14) என்பதனையும் ஒப்பு நோக்குக. மேலும் நிரஞ்சனமாலையில்,

உருவஞ் சுவைநிறைவாகிய மூன்று முவந்து கொண்டு
மருவங்க முள்ள முருவகலாதுள்ள வாறு நின்றாய்
அருவன் றுருவன் றருவுரு வன்றி யறிவுருவாய்க்
கருவன் றுலகம் படைத்தாடுமென் கைக்கறைக்கண்டனே

(நிரஞ்சன 29)

என்பதனாலும்;

ஆன புண்ணிய ஈசுரார்ப்பணம் செயின் அசுசி போம் சுசியாகும்
(சந்தேகம் தெளிதல் படலம் 64ம் பாட்டு)

என்னும் கைவல்யம்; என்பதனாலும் அறிந்து கொள்க.

ஆனரூபம் ருசியு மாம் பரிணாம முறத்
தானே சிவனருந்தத் தானருந்தித் - தானறவே
நிற்பதுதா னாகு நிகழுஞ் சடுத்தலமென்
றற்புதமா யாகமஞ்செப்பும்

(186ம் அத்துவிதவெண்பா)

(இ.ள்) பரிணாமமாகவரும் விடயபதார்த்தத்திற்கு மூன்று குணம் அவையாவையென்னின், அப்பதார்த்தத்தின் வடிவமே ரூபம், அஃதித்தன்மைய தென்றறிவதே ருசி, அதனால் வருஞ்சுகத்தினைய னுபவிப்பதே திருத்தி, இங்ஙனம் கூறிய ரூபுருசி திருத்தியைச் சிவன் புசிக்க அதைச் சிவப்பிரசாதமாகத்தான் புசித்து நான் புசிக்கிறே னென்னுந்தன்மைதோன்றாமல் நிற்பதுவே சடுத்தலவற் பிதமென்று ஆகமங்கள் சொல்லும். (எ.று) என்னும் அத்துவிதவெண்பாவாவினால் அறிக

இட்டலிங்க உணர்ச்சியையே உடையவனை மாயையை வென்றவன் என்று வேதம் கூறும்.

814. **என்றறி வறவழிந் திட்ட லிங்கமாம்**
ஒன்றொரு பொருளிலே யுறவி ழித்தவன்

Koviloor Digital Library

பொன்றுறு சகமெனப் புணர்ந்த மாயையை
வென்றவன் அவனொனா விளம்பும் வேதமே 19

(இ.ள்) என்று அறிவுஅற அறிந்து - மேற்கூறியவாறு இட்டலிங்கத் தியல்பின் அறிவினை ஐயம் திரிபு அற அறிந்து; இட்டலிங்கமாம் ஒன்று ஒரு பொருளிலே உறவிழித்தவன் - இட்ட லிங்கமாகிய பொருந்திய ஒப்பற்ற பொருளிலே செயலும் வாக்கும், மனமும், அறிவும் பொருந்த உணர்ந்திருப்பவன்; பொன்று உறு சகம் என புணர்ந்த மாயையை வென்றவன் அவன் எனா - அழியும் இயல்பையுடைய உலகம் என்று சொல்லப்பட்டு (கூறப்பட்டு) கூடியிருக்கின்ற மாயையாகிய மலத்தை வென்றவனாகிய அத்தகையோன் என்று; வேதம் விளம்பும் - வேதம் கூறும். (எ.று)

முடிபு - என்று அறிவை அறஅறிந்திட்டு, இட்டலிங்கமாம் பொருளிலே விழித்தவனை, சகம் எனப்புணர்ந்த மாயையை வென்றவன் அவன் எனா வேதம் கூறும்.

அகப்பத்திசெயும் பத்தரியல்பு கூறுகின்றது

815. பொருவில்சற் பத்தியாம் தாரம் பூண்டொரு
வரவயி ராகமாம் வத்தி ரம்புனைந்(து)
[1]ஒருவலில் உணர்வெனும் செச்சை ஒன்றுறப்
பரமனை இருத்துவோன் பத்தன் ஆகுவான் 20

(பா.ம்) [1]ஒருவலி உணர்வெனும்

(இ.ள்) பொரு இல் சற்பத்தியாம் தாரம் பூண்டு - ஒப்பில்லாத உண்மை அன்பாகிய சிவதாரக் கயிற்றினால் பிணித்து; வரவயிராகமாம் வத்திரம் புனைந்து - சிறந்த வயிராக்கியம் என்கின்ற துணியைப் பாதுகாவலாக மேலே சுற்றி; ஒருவல் இல் உணர்வு எனும் செச்சை - நீக்கமற்ற நினைவு என்கின்ற செச்சையின் கண்; (பெட்டகத்தின்கண்) ஒன்று உறபரமனை இருத்துவோன் பத்தன் ஆகுவான் - பொருந்துமாறு மேலான பரம் பொருளை வைத்துக் கொள்பவனே அகப்பத்தன் ஆவான் (எ.று)

முடிபு - சற்பத்தியாகிய தாரம் பூண்டு வயிராக்கியமாகிய வத்திரத்தை மேலே அணிந்து, உணர்வு எனும் செச்சையின் கண்பர மனை இருத்துவோன் பத்தனாகுவான். வீரசைவ அடியவர் தாம் வழிபடும் இட்டலிங்கத்தைச் செச்சை என்னும் பெட்டகத்தில் வைத்து, அப்பெட்டகத்தை வத்திரத்தினாலே சுற்றி, கயிற்றிலே கோத்து கழுத்தில்

Koviloor Digital Library

அணிந்து கொள்வார்கள். இதனையே அகப்பத்தர்கள் சற்பத்தியாகிய தாரத்துப் பிணித்து வைராக்கியமாகிய வத்திரத்தால் மூடி நீங்காத உணர்வாகிய செச்சையுள் நிஷ்கள வடிவமாகிய சிவத்தை வைத்துக் கொள்வார்கள். இங்கு பரமன் என்பது நிஷ்களவடிவ சிவத்தை வீராகமம் என்னும்,

செறிதரு கரணம் நான்கும் சிவாதாரம் ஆகும் செச்சை அறிவதாம்
(பாட்டு 31 வீராகமம்)

இப்பாட்டு அறிவினை செச்சை என்றும், அந்தக் கரணங்கள் நான்கினையும் சிவாதாரம் என்றும் கூறும். தாரம் - கயிறு. சிவாதாரம்.

இலிங்கதாரணம் மூன்றுடம்பிலும் அமையவேண்டும்

816. ஒன்றினொன் றுள்ளுற உடம்பு மூன்றையும்
மன்ற நல் வத்திர மடிய தாக்கியே
என்றுமங் கமைவுற இட்டம் வைப்பனேல்
அன்றவன் சிவமயம் ஆகும் என்பவே 21

(இ.ள்) ஒன்றின் ஒன்று உள்ளுற உடம்பு மூன்றையும் -ஒரு உடம்புக்குள்ளே மற்றொரு உடம்பு உள்ளே பொருந்த விளங்கும் (மூன்று) தூலம், சூக்குமம், காரணம் என்னும் மூன்று உடம்புகளையும்; மன்ற நல்வத்திரம் மடிஅது ஆக்கியே - தேற்றமாக நல்ல துணியின் மடிப்புப் போல அமைத்துக் கொண்டு; என்றும் - எப்பொழுதும்; அங்கு அமைவு உற-அம்மூன்று உடம்புகளிலும் பொருந்த; இட்டம் வைப்பனேல் - தன் இட்டலிங்கத்தை எழுந்தருளச் செய்வானே ஆனால்; அன்று - அந்த நிலைபெற்ற அப்பொழுது; அவன்- அத்தகையோன்; சிவமயம் ஆகும் என்பவே - மூன்று உடம்பும் சிவத்தால் விளங்கப் பெறுபவன் ஆவன் (எ.று)

முடிபு - ஒன்றின் ஒன்று உள்ளுற (விளங்கும்) உடம்பு மூன்றையும் வத்திரமடிலது ஆக்கி, என்றும் அங்கு அமைவுற இட்டலிங்கத்தை வைப்பனேல் அவன் அன்று சிவமயம் ஆகும் என்ப. உள்ளுற என்னும் சொல்லொடு விளங்கும் என்னும் சொல்லை வருவித்துக் கூட்டி உள்ளுற விளங்கும் உடம்பு மூன்று எனப் பொருள் கொள்க. உடம்பு மூன்றையும் என்னும் உம்மை, முற்றும்மை. மடியதாக்கியே என்பதை உவமையாகக் கொள்க. அஃதாவது இங்கு வத்திரம் என்பது இட்டலிங்கத்தை எழுந்தருளச் செய்யும் துணியை. இதன்னை வீரசைவர்கள் உள்வத்திரம் என்பர் (அ) உளவத்திரம் என்பர் அவ்வத்திரம் ஒன்றின் ஒன்று உள்ளுற

Koviloor Digital Library

மூன்று மடிப்பாக மடித்து செச்சையில் வைக்கப்பெற்று அதன்மேல் இட்டலிங்கத்தை எழுந்தருளச் செய்தல் மரபாகும். அதை நினைவு செய்து அவ்வத்திரத்தின் மேல் இட்டலிங்கத்தை எழுந்தருளச் செய்வது போல, மூன்று உடம்பின் கண்ணும் எழுந்தருளச் செய்யவேண்டும் என்பதைக் கூறியுள்ளார். அப்போதுதான் அவன் சிவமயமாகுவான். இலிங்கதாரணம் உள்ளே தரித்தலும், வெளியே தரித்தலும் என இருவகைப்படும். உள்ளே தரித்தலை அகலிங்கதாரணம் என்பர். வெளியே தரித்தலைப் புறலிங்கதாரணம் என்பர். அகலிங்கதாரணம் சூக்கும உடம்பில் தரித்தல் என்றும் காரண உடம்பில் தரித்தல் என்றும் இருவகைப்டும். ஆகவே இவ்விலிங்கதாரணம் புற உடம்பில் தரித்தலையும் கூட்டி மூன்று வகைப்படும் என்க. இக்கருத்தை

தகைபெறு பரம லிங்க தாரண முட்புறம்பாம்
வகைபெற விரண்டாமென்பர் மாதவர வற்றுளாதி
பகவனென் பெயர்புனைந்த பரமசிந் மயலிங்கத்தை
யகமதி லுறத்த ரித்தலாந் தரமாகு மன்றே

(சித்தாந்த சிகாமணி இலிங்கதாரணத்தலம் 7ம் பாட்டு)

புறத்தில் இலிங்கதாரணம் செய்தலைக் காட்டிலும் அகத்தில் லிங்கதாரணம் செய்தல் சிறந்ததாகும்.

புறத்துறு தாரணத்திற் புகல்கோடி மடங்கு மிக்க
சிறப்புறு மகவிலிங்க தாரணம் (சித்தாமணி.15)

திரம்பெறு மிலிங்க மூன்று திறத்ததாந் தூல லிங்கம்
பரம் பெறு சூக்குமம்பின் பராற்பர மென்னத் தூலங்
கரம் பெறு மிட்டலிங்கங் கருத்தது சூக்கு மந்தா
னிரம் புறு மிலிங்கந் தானே நிகழ்பராற் பரமென் றோர்வாய்

(சித்-மணி- இலிங். 21)

(வி.ரை)

திறம் - வகை

திரிவிதலிங்கம் வெகுவிதபாவனை - தநு இஷ்டலிங்கம்; மனம் பிராண லிங்கம், ஆத்மாபாவலிங்கம் ।। ஸ்தூல தநு இஷ்டலிங்கம், சூக்ஷ்மதநு பிராணலிங்கம், காரணதநுபாவலிங்கம் ।।

ஜீவாத்மா இஷ்டலிங்கம், அந்தராத்மா பிராணலிங்கம், பரமாத்வா பாவலிங்கம் ।।

Koviloor Digital Library

விஶ்வான் இஷ்டலிங்கம், தைஜஸன் பிராண லிங்கம், ப்ராஜ்ஞன் பாவ லிங்கம்।।

சத்பாவம் இஷ்டலிங்கம், அநுபாவம் பிராணலிங்கம், நிர்பாவம் பாவலிங்கம்।।

அதோமுகம் இஷ்டலிங்கம், அபிமுகம் பிராணலிங்கம், ஊர்த்வமுகம் பாவலிங்கம்।

ஸாங்கம் இஷ்டலிங்கம், பிரத்யாங்கம் பிராணலிங்கம், உபாங்கம் பாவலிங்கம்।।

இடம் இஷ்டலிங்கம், வலம் பிராணலிங்கம், நடு பாவலிங்கம்।।

காயிகம் இஷ்டலிங்கம், வாசிகம் பிராணலிங்கம், மானஸிகம் பாவலிங்கம்।।

நடை இஷ்டலிங்கம் -நுடி பிராணலிங்கம், நடைநுடி இரண்டின் கூட்டம் பாவலிங்கம்।।

நிற்றல் இஷ்டலிங்கம் . உட்கார்தல் பிராணலிங்கம். படுத்தல் - பாவலிங்கம்।।

ஜாக்ரம் - இஷ்டலிங்கம் ஸ்வப்நம் பிராணலிங்கம். சுஷுப்தை பாவலிங்கம்

தீக்ஷாகுரு - இஷ்டலிங்கம், சிக்ஷாகுரு பிராணலிங்கம், மோக்ஷகுரு பாவலிங்கம்

ஆசாரம் இஷ்டலிங்கம் - மந்திரம் பிராணலிங்கம்,ஐக்யம் பாவலிங்கம்

ஸ்வயஜங்கமன் - இஷ்டலிங்கம்- சர ஜங்கமன் பிராணலிங்கம் பரஜங்கமன் பாவலிங்கம்

அகலிங்க பூசையை உணர்த்துகிறது

817. அருளெனும் புனலினை ஆட்டிச்சாந்தமாம்
வரைநறும் சந்தொடு [1]மருவ இந்திய
விரைமலர் புனைந்து அறிவினை அருந்துறில்
பரமனை யவன்சிவ பத்தன் ஆகுவான் 22

(பா.ம்) [1]மருவி

(இ.ள்) அருள் எனும் புனலினை ஆட்டி - பரமனுக்கு அருள் என்று சொல்லக் கூடிய நீரை அபிஷேகித்து; சாந்தமாம் வரை நறும்

Koviloor Digital Library

சந்தொடுமருவ- சத்துவகுணமாகிய, சந்தனக்குழம்பொடு பொருந்தச் செய்து; இந்திய விரைமலர் புனைந்து - ஐம்பொறிகளாகிய மணமலரைச் சூட்டி; பரமனை அறிவினை அருத்துறில் - பரமனுக்கு ஆன்ம போதமாகிய உணவினை நிவேதித்தால் அவன் சிவ பத்தன் ஆகுவான் - அத்தகையோன் அகவழிபாடு செய்த சிவபத்தனாவான்.

முடிபு- அருள் எனும் புனலினை ஆட்டி, சாந்தமாம் சந்தொடுமருவ இந்திரிய மலரைப் புனைந்து, அறிவினை பரமனை அருத்துறில் அவன் சிவபத்தன் ஆகுவான். பரமனை அருத்துறில் என்பதிலுள்ள இரண்டாம் வேற்றுமையினை நான்காம் வேற்றுமையாகத் திரித்துக் கொள்க. சந்தனத்தையும் மலரையும் ஒருங்கு இயையும் பொருளாகக் கருதி, மருவ மலர் புனைந்து என்று கோர்த்துக் கூறினார். பத்தன்; மாகேஸ்வரன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், ஐக்கியன் என வீரசைவ நெறியினர் அறுவகைப்படுவர். அவ்வறுவருள் பத்தனும் மாகேஸ்வரனும், பிரசாதியும், கர்ம மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவர் ஆவர்; பிராணலிங்கியும் சரணனும், ஐக்கியனும் ஞான மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவர் ஆவர். ஞான மார்க்கத்தைப் பற்றி ஒழுகும் அவர்கள் செய்யும் பூஜையை இப்பாட்டு குறிப்பிடுகின்றது. சித்தாந்த சிகாமணி, பிராணலிங்கத்தலப் பிரிவில் பிராணலிங்கார்ச்சனை என்னும் தலத்தில், பிராணலிங்கத்தை எவ்வாறு பூசிக்க வேண்டுமெனக் கூறுகின்றார். அப்பாடலை கீழே காண்க.

ஆடறல் பொறைவி வேக மாடை பூண் வாய்மை மாலை
தாடரு துறவு கந்தஞ் சமாதியக் கதையால் கார
வீடெழு தூபந் தூய்மை விளக்கறி வுலக மெல்லாம்
பீடுறு நிவேத நந்தம் பிராற்கொலி மணிநன் மோனம்
(சித்.பிர. 3)

குருபாதோதகம் இஷ்டலிங்கம், லிங்கபாதோதகம் பிராணலிங்கம், ஜங்கமபாதோதகம் பாவலிங்கம். சுத்தப்பிரசாதம் இஷ்டலிங்கம், சித்தப் பிரசாதம் பிராணலிங்கம், பிரசித்தப் பிரசாதம் பாவலிங்கம். கரதலத்தில் அர்ச்சிக்கத்தக்கது இஷ்டலிங்கம்; மனதில் தியானிக்கத்தக்கது பிராணலிங்கம் அநுபவத்தில் அறியத்தக்கது - பாவலிங்கம். மஹா லிங்கமே சகளமாய்க்க கண்ணுக்கு கோசரித்து ஆநந்த ரூபமானது இஷ்டலிங்கம். அதே சகளநிஷ்களமாய் மனதற்குக் கோசரித்துச் சித்ரூபமானது பிராண லிங்கம்;।। அதே நிஷ்களமாய்ப் பாவத்திற்குக் கோசரித்துஸ்த்ரூபமானது பாவலிங்கம்।। கிரியா தீக்ஷையால் ஸ்தூல

Koviloor Digital Library

சரீரத்தில் தரித்தல் இஷ்டலிங்கம்; மந்திரதீக்ஷையால் சூக்ஷ்ம சரீரத்தில் மந்திர உபதேசபூர்வமாய் நிலைக்கச் செய்தல் பிராணலிங்கம்; வேதாதீக்ஷயினால் காரண சரீரத்தில் குருவானவர் ஹஸ்தமஸ்தகஸ்தம் யோகத்தினால் பிரதிஷ்டித்தல் பாவலிங்கம்.

இருவகைப்பூசைக்கும் அன்பு வேண்டும் என்பது

818. ஆசறும் மனத்தெழும் அன்பை அன்றியே
பூசனை [1]உவக்கிலென் புராரி சென்னிமேல்
வீசுறு திரையினும் மிக்க தோசொலாய்
ஊசல்செய் மனம்உடை ஒருவன் ஆட்டுநீர் 23

(பா.ம்) [1]உவக்கிலன்

(இ.ள்) ஆசு அறும் மனத்து எழும் அன்பை அன்றியே - குற்றம் அற்ற மனத்தின்கண் தோன்றும் அன்பினை அல்லாமல்; பூசனை உவக்கில் என் - சிவபூசையினை செய்வதற்கு ஒருவன் விரும்பினால் அதனால் பயன் என்ன?; புராரி சென்னிமேல் வீசுறு திரையினும் - சிவபெருமானுடைய திருமுடியின் கண், அலைவீசிக் கொண்டிருக்கும் கங்கையைக் காட்டிலும்; ஊசல் செய் மனம் உடை ஒருவன் ஆட்டு நீர் மிக்கதோசொலாய்- சிவனை அன்பினால் பற்றாத மனமுடைய ஒருவன்; அபிஷேகிக்கின்ற நீர், சிறந்ததாயிருக்குமோ? சொல்வாயாக. (எ.று)

முடிபு- மனத்தில் எழும் அன்பையன்றி (ஒருவன்) பூசனையை உவக்கில் (பயன்) என்? ஊசல் செய் மனம் உடை ஒருவன் ஆட்டுநீர் புராரி சென்னிமேல் வீசுறு திரையினும் மிக்கதோ? சொலாய். எனவே, புறப்பூசை, அகப்பூசை என்றும் இரண்டிற்கும் அன்பு முதலில் வேண்டும் என்பதாயிற்று. திரையினும் என்னும் ஐந்தாம் வேற்றுமை, உறட்சிப் பொருளில் வந்துள்ளது.

பொறிவிட யார்ப்பி தந்தாம் பூலமவ் விடயத்தோய்த
லறுமது வலம திக்கிங் கதன்வடி வாகுஞ் சத்தி
பெறுமது வணக்க மாமிப் பெற்றியின் மனலிங்கத்தை
மறுவறு மனத்தர்ச் சிக்க வாலிய பொருள்கள் கொண்டே

(சித்.மணி. பிரா.லிங்.தலம்.)

சித்தாந்த சிகாமணியில் பிராணலிங்கத் தலத்தில், பிராணலிங்க மாவது தன் சக்தியுடன் கூடிய பிரமமே பிராணலிங்கமாகும் என்று கூறி அடுத்த பிராண லிங்கார்ச்சனத் தலத்தில் அவ்விலிங்கத்தைப் பூசிக்கும் முறையைக் கூறுகின்றார்.

Koviloor Digital Library

பூசை முறை, இதயத்திலே ஈசனுக்கு பாவபூசை செய்க என்று கூறி, பொறுமையை அபிஷேக நீராகவும்; விவேகத்தை ஆடையாகவும்; வாய்மையைப் பூணாகவும்; துறவை மாலையாகவும் சமாதியை சந்தனமாகவும்; நிராங்காரத்தை அட்சதையாகவும்; தூய்மையைத் தூபமாகவும், அறிவை விளக்காகவும்; எல்லா உலகத்தையும் நிவேதனப் பொருளாகவும்; மோனத்தை மணி ஓசையாகவும்; விடயார்ப்பிதத்தைத் தாம்பூலமாகவும்; விடய அறுதியை வலம் வருதலாகவும், இறை வடிவாய் இருத்தலை வணக்கமாகவும், கொண்டு அர்ச்சிக்க என்று கூறும்.

தவத்திரு - நாகிச் செட்டியாரவர்கள், பிராண லிங்கார்ச்சனத்தலத்தில் இவ்விட்ட லிங்கதியில் வந்துள்ள,

பொருவில் சற்பத்தி...
அருளெனும் புனல்...
ஒன்றினென்று உள்ளூற...

என்ற மூன்று பாடல்களையும் பிராணலிங்கார்ச்சனைக்கு உரியதாக எடுத்துக் காட்டியுள்ளார்.

819. **பூப்புனை கையும்எம் புனிதன் தன்புகழ்**
பாப்புனை நாவுமே படைத்து ளான்றனைச்
சேப்புனை கொடியுடைத் தேவ னேயென
நாப்புனை புகழொடு நாகர் ஏத்துவார் 24

(இ.ள்) எம் புனிதன் பூப்புனை கையும் - எங்களுக்குரிய, தூயோனாகிய சிவபெருமானுக்கு மலரை அணிகின்ற கைகளையும்; புனிதன் தன்புகழ் பாப்புனை நாவுமே படைத்துளான்தனை- அப்புனிதனுடைய கீர்த்தியை, பாட்டில் வைத்துப் பாடும் நாவினையும் பெற்றுள்ள ஒருவனை; நாகர்- தேவர் எல்லோரும்; சேப்புனை கொடியுடைத் தேவனை என நாப்புனை புகழொடு ஏத்துவார் - நந்தி இடபக் கொடியுடைய சிவபெருமானே என்று கூறி, நாவினால் புனைந்து கூறும் புகழொடு, அவனைத் துதிப்பார்கள். (எ.று)

முடிபு- நாகர், பூப்புனை கையும், பாப்புனை நாவும் படைத்துளான் தனை தேவனே என புகழொடு ஏத்துவார். திருநாவுக்கரசர், திருஅங்கமாலையில் கைகாள் கூப்பித்தொழீர் என்றும்; வாயே வாழ்த்து கண்டாய் என்றும் கூறுமற்றை உணர்க. கையையும் நாவையும் மட்டும் கூறியதால், இனம் பற்றி ஏனைய உறுப்புக்களையும் கொள்க.

Koviloor Digital Library

820. பூசனை செயாதகை புராந்த கன்புகழ்
பேசுதல் இலாதவாய் பெற்று ழன்றிடும்
நீசரா னவர்தமின் நெடுவ னத்திடைக்
கூசுதல் இலாதபுன் குரங்கு நன்று அரோ 25

(இ.ள்) பூசனை செயாதகை - சிவபூசை செய்யாத கைகளையும்; புராந்தகன் புகழ் பேசுதல் இலாதவாய் - சிவபெருமானுடைய புகழை, கூறாதவாய்களையும்; பெற்று உழன்றிடும் நீசரானவர் தமின் - உறுப்பாகப் பெற்று நாட்டின் கண், ஒரு பயனும் இன்றி திரிந்து கொண்டிருக்கும் தாழ்ந்தோரைக் காட்டிலும்; நெடுவனத்து இடை கூசுதல் இலாத புன் குரங்கு நன்று - நீண்ட காட்டின்கண், நாணமின்றி, புன் தொழில் செய்துவரும் குரங்குகள் நன்மை உடையதாம் (எ.று) அரோ-அசை

முடிபு- பூசனை செயாத கையும், புராந்தகன் புகழ் பேசுதல் இலாத வாயும் ஆகிய இவைகளைப் பெற்று, உழன்றிடும் நீசனெவர்தம்மில் வனத்திடைக்குரங்கு நன்று. இவர்கள் நாட்டிலே வாழ்ந்திருந்தும் உயர்ந்த செயலைச் செய்ய முடியாதவராயிக்கின்றார் என்பது கருத்து. இங்கு வனம் என்றதனால் நாட்டிலே என வருவித்துக் கொண்டோம்.

உண்ணும் பொருள்களை எல்லாம் இலிங்கத்திற்கு நிவேதனம் செய்தே உண்க என்றது

821. குடிப்பன விழுங்குவ கூரெ யிற்றினால்
கடிப்பன நக்குவ அனைத்தும் கைம்மலர்
அடுத்துள சிவன்தனக்கு அற்பித்து உண்பவன்
விடுத்தவன் மேல்வரும் வினைகள் யாவுமே 26

(இ.ள்) குடிப்பன - குடித்துண்ணும் உணவுப் பொருளையும்; விழுங்குவ - விழுங்கி உண்ணும் உணவுப் பொருளையும்; கூர்எயிற்றி னால் கடிப்பன - கூர்மையான பல்லியினாலே கடித்துத் தின்னும் உணவுப் பொருளையும்; நக்குவ - நாவினால் நக்கி உண்ணும் உணவுப் பொருளினையும்; அனைத்தும் - இன்னும் உறிஞ்சுதல் முதலான தொழிலால் உண்ணும் மற்றைய உணவுப் பொருள்களையும் கைம்மலர் அடுத்துள சிவன் தனக்கு அற்பித்து உண்பவன் - கையாகிய தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் இட்ட லிங்கப் பெருமானுக்கு முன்னே நிவேதனம் செய்து பின்னே சிவப்பிரசாதமாக அதனை உண்பவன்.

Koviloor Digital Library

மேல்வரும் வினைகள் யாவுமே விடுத்தவன் - மேல்வரும் வினையாகிய ஆகாமிய வினைகள் எல்லாவற்றையும் விட்டவனாவன் (எ.று)

முடிபு- குடிப்பன, விழுங்குவ, கடிப்பன, நக்குவ, அனைத்தும், சிவன் தனக்கு அர்ப்பித்து உண்பவன், மேல்வரும் வினைகள் யாவுமே விடுத்தவன். மேல்வரும் வினை என்றது ஆகாமிய வினையினை; இப்படி உண்ணும் முறையை, காயார்ப்பிதம் என்று வீரசைவ நூல்கள் கூறும். குடிப்பன முதலானவற்றை நால்வகை உண்டி என்று இலக்கியங்கள் கூறும். அந்நால் வகையுடன் உறுஞ்சுதலாகிய சோஷியம் என்பதையும் சேர்த்து ஐவகை உண்டியாக ஆக்கி இவ்உண்டிகளை விழுங்கும் உண்டியை ஆசாரலிங்கத்திற்கும்; பருகும் உண்டியை குருலிங்கத்திற்கும்; மெல்லும் உண்டியை சிவலிங்கத்திற்கும் உறுஞ்சும் உண்டியை சரலிங்கத்திற்கும், நக்கல் என்னும் இலேகிய உண்டியை பிரசாதலிங்கத் திற்கும், இவ்வைந்தின் நிறைவை மகாலிங்கத்திற்கும் நிவேதனம் செய்வர். இக்கருத்துக்களை

13. விழுங்கல் பருகலொடு மெல்லல் ஆசாரம்
ஒழுங்கில் குருசிவமும் உற்றிடுமிங் கென்றானோ
14. சோகிய லேகியமும் சொன்ன இவற்றறிவும்
ஏகியுறும் பின்மூன் றிலிங்கத்தும் என்றானோ
15. இந்தக் காயார்ப்பணங்கள் இட்டலிங்கத்து என்றெனக்குச்
சந்தப் படவுரைத்துத் தந்தசிவ ஞானியோ

சோஷியம் என்ற வடசொல் சோகியம் எனத்திரிந்தது. இவற்றின் விளக்கத்தை கீழ்வரும் மிசிரசடுத்தலப் பாட்டாலறிக. அவையாவன,

அற்பிதம் தான் மூன்று வகை படுவ என்றே
அறையுங்கால் காயார்ப் பிதந்தான் என்றும்
மற்பயிலும் கரணார்ப்பி தந்தான் என்றும்
மருவியநல் பாவார்ப்பி தந்தான் என்றும்
சொற்பயிலும் இவை மூன்றில் காயார்ப்பி தந்தான் என்னல்
சொல்தனுவிற்காகும் அதனால் தொழிலே செய்யில்
முற்படவே பிடித்துண்ணும் பதார்த்தம் தானே
முறைமையில் ஆசாரலிங்கத் தர்பிதமாம் மொழியில்

(மிசிர-சடுத் செய் 3)

Koviloor Digital Library

அங்கையினால் குடிக்கைகுரு லிங்கத்துற்கே
ஆகு மெல்லல் தான் சிவலிங் கத்துக்காகும்
இங்கிதமாய் உறுஞ்சுகின்ற பதார்த்தம் தானே
எழிலாரும் சங்கமலிங் கத்துக் காகும்.
தங்கியநல் பதார்த்தம் நக்கல் பிரசாதலிங்கம்
தனக்காகும் இவைகளின் நல் திருத்தி எல்லாம்
துங்கமகா லிங்கத்து காகும் என்று
சொல்லுங்கா யார்ப்பி பிதத்தைத் துணிந்து நூலே
(மிசர.ச.செ.4)

என உரைத்தலும் காண்க.

822. தானுறும் உடல்மனம் தனம்என் றுள்ளவை
ஈனமில் குருசிவ சரங்கட் கீந்துதான்
யானென தென்குதல் இன்றி வைகுவோன்
மேனிகழ் சிவமொடு வேற லானரோ 27

(இ.ள்) தான்உறும் உடல் மனம் தனம் என்று உள்ளவை- ஒருவன் தான் பெற்றிருக்கும் உடம்பு- உள்ளம் பொருள் என்று கூறப்பட்டு மூன்று வகையாக உள்ள இப்பொருள்களை எல்லாம்; ஈனம் இல் குரு சிவ சரங்கட்டு ஈந்து - முறையே இழிவில்லாத குருவிற்கும், சிவத்திற்கும், அடியார்கட்கும் கொடுத்து; யான் என்னது என்கின்ற இருவகைப் பற்றுமின்றி துறந்து இருப்பவன்; மேல் நிகழ் சிவமொடு வேறு அலான் - மேல் நிகழ்சிவமாகிய நிஷ்கள சிவத்தொடு வேறு பாடு அற்றவனாவன். (எ.று) (அறோ- அசை)

முடிபு- தான் உறும் உடல் மனம் தனம் என்றுள்ளவைகளை குருசிவ சரங்கட்கு ஈந்து; யான் எனது என்குதலின்றி வைகுவோன், சிவ மொடுவேறலான். இரண்டாவது அடியின் ஈற்றில் வந்துள்ள தான் என்பதை அசையாகக் கொள்க. குருவிற்கு உடல்தந்து, சிவனுக்கு மனம் தந்து; சங்கமர்க்கு பொருளைத்தந்து, இம்மூவர்க்கும் இம்மூன்றும் தந்து, நான் தூயவனானேன். காணாய் கூடலசங்கமதேவா என்பது வசவ வசனம்.

823. குருசிவ சரங்கொளக் கொடுத்த மெய்மனம்
பொருளிவை நமவெனப் புந்தி செய்துகொள்

Koviloor Digital Library

ஒருவனில் வழிமறித் தொறுத்துக் கொள்வன
சரனனி நல்லன்மெய் தவறு இலாமையால் 28

(இ.ள்) குரு சிவ சரம் கொள கொடுத்த மெய்மனம் பொருள் இவை- குருவிற்கும் சிவத்திற்கும் அடியார்களுக்கும் கொடுத்த உடம்பையும், உள்ளத்தையும் பொருள்களையும் ஆகிய இவற்றை; நமவெனப் புந்தி செய்து கொள் ஒருவனில்- நம்முடையன என கருதிக் கொண்டிருக்கும் ஒருவனைக் காட்டிலும்; வழி மறித்து ஒறுத்துக் கொள் வனசரன் நனி நல்லன் - செல்வார் செல்லும் வழியைத் தடுத்து அவர்களைத் தண்டித்து, அவர்பால் உள்ள பொருளைப் பரித்துக் கொள்ளும் வேடன் மிகவும் நல்லவனாவன்; எதனால் எனில்? மெய்தவறு இலாமையால் - தன்னுடைய உண்மையில் அவன் எப்பொழுதும் தவறில்லாமல் நடந்து கொள்வதால் என்க. (எ.று)

முடிபு- குரு சிவசரம் கொள, கொடுத்த மெய் மனம் பொருள் என்னும் இவைகளை, நமவெனப் புந்தி செய்து கொள் ஒருவனில்; வழிமறித்து ஒறுத்துக் கொள்ளும் வனசரன் நனிநல்லன். எதனால் எனில் மெய்தவறிலாமையால் வனசரனிடம் கொடுத்த பொருளை நம்முடையது எனப்பற்றிக் கொள்ளும் இயல்பு அவனிடமில்லை. அதனால் நனி நல்லன் என்றார்.

824. விடுவன காமம் வெவ்வெகுளி மாலிவை
தொடுவன குருசிவ சரங்கள் தொல்பவம்
கடுவென வெருவிய கருத்து ளார்க்கிவண்
அடுவன எனப்புலன் அட்ட ஆற்றலாய் 29

(இ.ள்) விடுவன எனப்புலன் அட்ட ஆற்றலாய் - வெல்லத்தக்கன எனக் கருதி, ஐம்புலன்களை வென்ற ஆற்றலையுடைய வசவதேவனே!; இவண் தொல்பவம் கடுவென வெருவிய கருத்துளார்க்கு - இந்த உலகத்தில், பழைய பிறவி நோயை, நஞ்சு என அஞ்சிய எண்ணமுடையவர்களுக்கு; காமம் வெவ்வெகுளி மால் இவை விடுவன - காமமும் கொடிய சினமும்; மயக்கமும் ஆகிய இவை விடத்தக்கனவாம்; குரு சிவசரங்கள் தொடுவன - குருவும், இலிங்கமும் அடியார்களும் ஆகிய இவை, விடாமல் பற்றத்தக்கனவாகும். (எ.று)

முடிபு- புலன் அட்ட ஆற்றலாய், பவம் வெருவிய கருத்துளார்க்கு; காமம் வெவ்வெகுளி மாலிவை விடுவன; குரு சிவ சரங்கள் தொடுவன. பதஞ்சலி யோக சூத்திரம் கிலேசங்கள் ஐந்து என்று குறிப்பிடும். அவ்

Koviloor Digital Library

ஐந்தாவன அவித்தை; அஸ்மிதை; இராகம்; துவேஷம்; அபினிவேஸம் என்பன. அவித்தை என்பது அறியாமை; அஸ்மிதை என்பது நான் என்னும் அகங்காரம்; இராகம் என்பது காமம்; துவேஷம் என்பது சினம்; அபினி வேஸம் என்பது பற்று; (இவை பஞ்சக் கிலேசம்) இவ்வைந்தை இங்கே மூன்றாக அடக்கிக் கூறினார். (காமம் வெகுளி மயக்கம் என மூன்றாக அடக்கிக் கூறினார்).

காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய் (குறள் 360)

மெய்யுணர்தல் என்னும் இக்குறளுரையில் பரிமேலழகர் ஆனாதி யாய அவிச்சையும் அதுபற்றி யான் என மதிக்கும் அகங்காரமும் அதுபற்றி எனக்கு இது வேண்டும் என்னும் அவாவும், அது பற்றி அப்பொருள் கண் செல்லும் ஆணுயும் அது பற்றி அதன் மறுதலைக் கண் செல்லும் கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்து என்றார். திருவள்ளு வர் அவற்றுள் அகங்காரத்தை அவிச்சைக் கண்ணும் அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலால் மூன்று என்றார் என்பர். இங்குகாமம் என்பது இராகமும், அபினி வேஸமும் ஆகும். வெகுளி என்பது துவேஷமாகும். மயக்கம் என்பது அவத்தையும் அஸ்மிதையுமாகும். குரு சிவ சரங்களிடத்து ஒருவன் அன்பு செய்தால் அதனால் பஞ்சக் கிலேசங்குகளும் குறையும் என்பது பதஞ்சலியோக சூத்திரக்கருத்து (ஸ்ரீ சாதனபாதம் சூத்திரம் 3)

825. **அங்கையின் அமர்தரும் அரனை விட்டொரு**
வெங்கட வுள்தமை விழைந்து போற்றுவார்
கங்கையை அகன்றுவர் கழியின் மூழ்குநர்
தங்களின் வேறலர் தரும மூர்த்தியே 30

(இ.ள்) தரும மூர்த்தியே - அறமே வடிவான வசவதேவனே!; அம் கையில் அமர்தரும் அரனை விட்டு - நம்முடைய உடம்பில் உள்ளங்கையினிடத்தே எழுந்தருளி இருக்கும் இட்டலிங்கப் பெருமானை வழிபடுதல் விட்டு; ஒருவெம் கடவுள்தமை விழைந்து போற்றுவார் - வேறொரு வேண்டுங்கடவுளரை விரும்பி வழிபாடு செய்பவர்; கங்கையை அகன்று உவர்கழியின் மூழ்குநர் தங்களின் வேறு அலர் - சிறந்த கங்காநதியை விட்டு, உப்பங்கழியினிடத்துச் சென்று நீராடுபவரை ஒத்தவர் ஆவர். (எ.று)

Koviloor Digital Library

முடிபு- தரும மூர்த்தியே! அங்கையில் அமர்தரும் அரனைவிட்டு ஒரு வெங்கடவுளார் தமை விழைந்து போற்றுவார்; கங்கையை அகன்று உவர்க்கழியின் மூழ்குநர் தங்களின் வேறலர்.

அங்கலிங்கத்தை எண்ணாது அயல்பதி தீர்த்தம் லிங்கம்
பொங்கிய பரிவு கூற போய்ப் பணிந் திடுவோர் நீர்மை
மங்குறு களவில் சோர மகிழ் நன்பால் மணம் புணர்ந்த
அங்கண வனையும்கொண்டு சாரும் நா ரியர் நேராமே

(வீராகமம் பாட்டு 42)

வெங்கடவுள் என்றது சிவசம்பந்தம் இல்லாத பிற தெய்வங்களை.

குருவும் அடியார்களும் முனிந்தால் அதனால் உண்டாகும் நன்மையைக் கூறும்

826. **மோகமில் குருசரம் முனியின் முன்னுள**
தாகிய செயிர்முழு தகன்று வண்துறை
போகிய மடியெனப் புனிதன் ஆகுமேல்
பாகியல் மொழியுமை பாகற்கு அன்பனாம் 31

(இ.ள்) மோகம் இல் குரு சரம் முனியின் - அறியாமையும் அகங்காரமும் இல்லாத குருவும்; அறியாமையும் அகங்காரமும் இல்லாத அடியார்களும் வெகுள்வாராயின்; முன்னுளதாகிய செயிர் முழுது அகன்று, வண்துறை போகிய மடி என புனிதன் ஆகும் = முன்னே உள்ளதாகிய, சஞ்சித வினை முதலான குற்றங்களெல்லாம் நீங்கப் பெற்று, நல்ல நீர்த்துறையிடத்தே கொண்டுபோய் துவைக்கப்பட்ட துணியைப் போல் தூய்மை அடைவன்; மேல் பாகியல் மொழி உமை பாகற்கு அன்பனாம் - இதற்குப் பிறகு வெல்லப்பாகின் இயல்பு போல் இனிக்கும் இயல்பையுடைய மொழியைப் பெற்றிருக்கும் உமாதேவியாரை இடப்பாகத்தில் உடைய சிவபெருமானுக்கு அன்புடையவனாவான். (எ.று)

முடிபு- குருவும் சரமும் முனியின், துறைபோகிய மடி என முன் உளதாகிய செயிர் முழு தகன்று புனிதன் ஆகும். மேல் உமை பங்கற்கு அன்பனாம். வெகுளப்பட்டவனுக்கு உண்டாகும் நன்மையினை, பஞ்சியிற்புகுமழல் போல் ஒறுக்கப்பட்டவன் பவம் பினை ஒழித்திடும் சித்தராமர்கதி 38ம் பாடலால் உணர்க.

Koviloor Digital Library

பவம் என்பது சஞ்சித வினையால் பிறக்கும் பிறவியைக் குறித்தது. மோகம் என்னும் சொல் பஞ்சக்கிலேசங்களில் அவித்தையையும் அகங்காரத்தையும் குறிக்கும் என்க. மேற்கூறிய குரு சரம் என்னும் இரண்டில் சரம் என்னும் அடியார் எத்தகைய பிழைகள் செய்தாலும் அதைப் பொறுப்பவர் களே சிறந்த தொண்டராவார்.

827. விள்ளரும் நல்சிவ வேடத் தோர்பொருள்
கொள்ளைகொள் கிற்பினும் குறைகள் கூறினும்
பிள்ளையை அறுப்பினும் பிழைகள் செய்யினும்
எள்ளுதல் இலன் எனில் ஈசற்கு அன்பனாம் 32

(இ.ள்) விள் அரும் நல்சிவ வேடத்தோர் - நீங்குதல் அற்ற நல்ல சிவ வேடம் பூண்ட அடியவர்கள்; பொருள் கொள்ளை கொள்கிற்பினும் - தன் பொருளை கொள்ளை கொண்டாலும்; குறைகள் கூறினும் - தன்னை பழித்துச் சொன்னாலும்; பிள்ளையை அறுப்பினும் - தன்னுடையப் பிள்ளையை அறுப்பித்தாலும்; பிழைகள் செய்யினும் - ஏனைய குற்றங்களைத் தனக்குச் செய்யினும்; எள்ளுதல் இலன் எனில் - அங்ஙனம் செய்த அடியவரை, பழித்தல் இல்லாதவனாயின்; ஈசற்கு அன்பனாம் - அத்தகையோன் சிவபெருமானுக்கு அன்புடையோன் ஆவான் (எ.று)

முடிபு- சிவவேடத்தோர் பொருளை கொள்ளை கொள்கிற்பினும்; குறைகள் கூறினும் பிள்ளையை அறுப்பினும், பிழைகள் செய்யினும் எள்ளுதல் இலன் எனில் (அவன்) ஈசற்கு அன்பனாம்.

பத்தி மார்க்கம் விதி மார்க்கம் என்று இரண்டு நெறிகள் உள்ளன. விதி மார்க்கமாவது, மனு முதலான ஸ்மிருதிகள் விதித்தபடி ஒழுகுதலாம். பத்தி மார்க்கமாவது சிவாகமங்கள் விதித்தபடி ஒழுகுதலாம். சிவாகம நெறி ஒழுகுவோர். குரு லிங்கசங்கமங்களை உண்மைப் பொருள் என்று எண்ணி நடப்பவராவர். அப்படி நடக்கும் பொழுது, சங்கமராகிய அடியவர்கள், விதி மார்க்கத்தைத் தவறி நடந்தாலும், அதை உண்மை அன்பர்கள் கருத மாட்டார்கள். பிழையுடையவராகக் கருதாமல் அவர்களைச் சிவமாகவே கருதி பத்தி செய்வார்கள்.

828. சங்கமம் தனக்கொரு சாதி உன்னினான்
அங்கையின் அமர்தரும் அரற்கும் உன்னினான்

Koviloor Digital Library

சங்கர னொடுசரம் தம்மில் வேறெனும்
அங்கவன் அறிவரும் அளந்து அழுந்துவான் 33

(இ.ள்) சங்கமம் தனக்கு ஒரு சாதி உன்னினான் - சங்கமமாகிய அடியவர்களுக்கு, நால் வகைச் சாதி முதலானவற்றுள், ஒரு சாதியைக் குறிப்பிட்டு அச்சாதியாய் அவனை நினைந்தானே ஆனால்; அங்கையில் அமர்தரும் அரற்கும் உன்னினான் - அழகிய கையினிடத்தே எழுந்தருளி இருக்கும் இட்டலிங்கத்திற்கும் சாதியைக் கற்பித்தவன் ஆவான்; சங்கரன் ஒடுசரம் தம்மில் வேறு எனும் அங்கவன் - இட்டலிங்கத்தொடு, இட்டலிங்கத்தை அணிந்த அடியவர்களிடத்தில் சாதி, வேறுபாடு உண்டு என்று கருதி, அடியவர்களுக்கு மட்டும் சாதி வேற்றுமைக் கருதுகின்ற அத்தகையோன்; அறிவு அரும் அளற்று அழுந்துவான் - அறிதற்கரிய நரகத்தில் அழுந்துவான் என்க. (எ.று)

முடிபு- சங்கமம் தனக்கு சாதி உன்னினான், சங்கமன் கையில் அமர்தரும் அரனுக்கும் உன்னினான். சங்கரனொடு சரம் தம்மில் வேறு எனும் அங்கவன் அளற்று அழுந்துவான்

829. தலைமைகொள் குருசிவ சரங்கட் காகவே
உலையிடும் [1]அரிசியன்று ஓங்கன் மத்தெறி
அலையமு தாந்தமக்கு ஆக ஆக்குறில்
கொலைசெயும் [2]நஞ்சினும் கொடிய தாகுமால் 34

(பா.ம்) [1]அரிசியின்று ஓங்கல்; [2]நஞ்சனும்

(இ.ள்) தலைமைகொள் குருசிவ சரங்கட்கு ஆகவே உலையிடும் அரிசி - முதன்மை கொண்ட குருவிற்கும், இலிங்கத்திற்கும் அடியார் கட்கும் ஆகும்படி, உலையின் கண் இடப்படும் அரிசி; அன்று ஓங்கல் மத்து எறி அலை அமுதாம் - அக்காலத்தில் மந்திரமலையால் கடையப் பட்ட திருப்பாற்கடலில் தோன்றிய அமிழ்தமாகும், தமக்காக ஆக்குறில் - (அங்ஙனமின்றி) தமக்கென்று கருதிக்கொண்டு அவ்வரிசியை உலையில் இட்டால் அவ்வரிசி; கொலை செயும் நஞ்சினும் கொடிய தாகும் - கொல்லுதலைச் செய்யும் நஞ்சைக் காட்டிலும் கொடிய பொருளாகும். (எ.று) (ஆல்-அசை)

முடிபு- குரு சிவ சரங்கட்காகவே உலையிடும் அரிசி அமுதாம்; தமக்காக ஆக்குறில் நஞ்சினும் கொடியது ஆகும். ஒருவர் தன்னலங் கருதாமல், பிறர் நலம் கருதி வாழ வேண்டும் என்பது கருத்தாகும்.

Koviloor Digital Library

830. தனுவுள அளவுமோர் தகுதல் செய்கையும்
மனமுள வளவும் பாவனையும் ஞானமுண்(டு)
எனவுள அளவும் ஞேயமும் இயைந்தவன்
பினையுள அளவும் நோய் பிறர்க்(கு) அகற்றுமே 35

(இ.ள்) தனுஉள அளவும் - உடம்பு உள்ள காலம் வரையும்; ஓர் தகுநல் செய்கையும் - ஒப்பற்ற தக்க நல்ல செயல்கள் செய்தலையும் மனம் உள அளவும் பாவனையும் - மனம் உள்ள காலம் வரையும் ஒப்பற்றதக்க நல்ல பொருள்களை எண்ணுதலையும்; ஞானம் உண்டு என உள அளவும் ஞேயமும் - அறிவு உண்டு எனக்கூறும் அளவும் ஒப்பற்ற தகுதி வாய்ந்த நல்ல பொருள்களையே அறிதலும்; இயைந்தவன் - பொருந்திய ஒருவன்; பினை உள அளவும் நோய் பிறர்க்கு அகற்றுமே - பின்னர் தான் வாழும் காலம் வரை, பிறர்க்கு ஏற்படும் துன்பங்களை அகற்றுபவனாய் இருப்பன் (எ.று)

முடிபு - தனுஉள அளவும் நற்செய்கையும், மனமுள அளவும் நற் பாவனையும், ஞானம் உண்டு என உள அளவும் நல்ஞேயமும் இயைந்துளோன், பிணை உள அளவும் பிறர்க்கு நோய் அகற்றும். ஓர், தகு, நல் என்னும் அடையை பாவனையோடும் ஞேயத்தோடும் கூட்டிக் கொள்க. ஞேயம் என்பது அறியப்படும் துணிந்த பொருள். எண்ணுதல் மனத்தின் தொழில். அது பாவமாகும். எண்ணித் துணிதல் அறிவின் தொழில் அது ஞேயமாகும்

831. ஈசனை இருத்துறும் இதயத்(து) ஓர் பொருள்
ஆசையை இருத்துதல் அந்த ணாளர்தாம்
வாசமுற் றிடுமொரு மனையில் புன்செயல்
நீசரை இருத்துதல் நிகர்க்கும் என்பரால் 36

(இ.ள்) ஈசனை இருத்துறும் இதயத்து - இறைவனை தியானம் செய்து தங்கவைக்கும் உள்ளத்திலே; ஓர் பொருள் ஆசையை இருத்துதல் - ஒன்றாகிய பொருளாசையை எண்ணித் தங்க வைத்தலானது; அந்தணாளர் தாம் வாசமுற்றிடும் ஒரு மனையில் - அருளுடைய அந்தணர்கள் தங்குதற்குரிய வீட்டின்கண்; புன்செயல் நீசரை இருத்துதல் நிகர்க்கும் என்பரால்- தீய தொழில்களைச் செய்யும் தாழ்ந்தோரை தங்க வைத்தலுக்கு ஒக்கும் என்று அறிஞர் கூறுவர் (எ.று)

முடிபு- ஈசனை இருத்துறும் இதயத்து பொருளாசையை இருத்துதல்

Koviloor Digital Library

அந்தணாளர் வாசமுற்றிடும் மனையில் நீசரை இருத்துதல் நிகர்க்கும் என்பர். (ஆல் - அசை)

832. சினம்முத லியமயல் தீர மாற்றுப்
வினைதபு வாய்மையாம் மெழுக்கை அன்பெனும்
புனலொடு விரவியே பூசின் அல்லது
மனமெனும் மனையிடை வராது இலிங்கமே 37

(இ.ள்) சினம் முதலிய மயல் தீர மாற்றுபு- வெகுளி முதலான மயக்கத்தைச் செய்யும் பொருள்களை, முற்றிலும் நீங்கும்படி போக்கி; வினைதபுவாய்மையாம் மெழுக்கை அன்பெனும் புனலொடு விரவியே பூசின் அல்லது - தீவினையைக் கெடுக்கும், உண்மை என்றும் சாணத்தை அன்பு என்னும் தண்ணீரிலே கலந்து மெழுகினால் அல்லாமல்; மனம் எனும் மனையிடை இலிங்கம் வராது - மனம் என்னும் வீட்டின்கண், இலிங்கம் என்னும் சிவப் பொருள் எழுந்தருளி இருக்காது என்பதாம். (எ.று)

முடிபு- சினம் முதலிய மயலைதீர மாற்றுபு வாய்மையாம் மெழுக்கை, அன்பெனும் புனலொடு விரவியே பூசின் அல்லது மனம் எனும் மனையிடை இலிங்கம் வாராது. சினம் முதலிய மயல்தீர மாற்றுதல், திருவலகிடுதல் பூசுதல் திரு மெழுக்கு இடுதல் 'புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டு' என்ற அப்பர் திருத்தாண்டகத்தை ஒப்பு நோக்குக.

833. காலமும் கருமமும் கடந்த காரணன்
பாலுறும் பரிசறப் பார்ம டந்தையர்
கோலமும் பொருளையும் குறித்து நச்சுநர்
சீலமும் விரதமும் தீய என்பரால் 38

(இ.ள்) காலமும் கருமமும் கடந்த காரணன் பாலுறும் பரிசற- இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று பிரித்து வழங்கும் கால தத்துவ வாகையையும், சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்கின்ற மூன்றுபிரிவான வினையையும் கடந்த முதல்வனிடத்தே பொருந்தும் விருப்பம் அற; பார், மடந்தையர் கோலமும் பொருளையும் குறித்து நச்சுநர்- நிலமும் பெண்களின் அழகும் பொன்னும் இம்மூன்றையும் கருதி விரும்புபவர் மேற்கொள்ளும்; சீலமும் விரதமும் என்பரால் - ஒழுக்கமும் விரதமும் தீயனவாகும் என்று கூறுவர் (எ.று)

Koviloor Digital Library

முடிபு - காரணன் பால் உறும் பரிசு அற, பாரையும் மடந்தையர் கோலத்தையும், பொருளையும் குறித்து நச்சுநர் (மேற்கொண்ட) சீலமும் விரதமும் தீய என்பர். (ஆல்-அசை) பார் மடந்தையர் கோலம், பொருளை நச்சுணர் என்றது மூவேடணை உடையாரை.

834. **வெங்கொலை களவுபொய் வெகுளி ஆசைஎன்(று)**
இங்கிவை யொடுமறீஇ இருக்கின் றார்தமக்(கு)
அங்கையில் நெல்லிபோல் அவிர்சடைப்பிரான்
செங்கையில் இருப்பினும் சேயன் சேயனே 39

(இ.ள்) வெம்கொலை களவு பொய் வெகுளி ஆசை என்று இங்கு இவை ஒடு மறீஇ இருக்கின்றார் தமக்கு - கொடிய கொலையும் களவும், பொய்யும், சினமும், ஆசையும் என்று கூறப்படும் இவற்றொடு பொருந்தி இருப்பவர் தங்களுக்கு; அவிர்சடைப்பிரான் அங்கையில் நெல்லி போல் - விளங்கும் சடையையுடைய சிவபெருமான் உள்ளங்கை நெல்லிக்கனி போல; செங்கையில் இருப்பினும் சேயன் சேயனே - தம்முடைய சிவந்த கையின் கண்ணே அணுக இருந்தாலும், தூரத்தில் உள்ளவன், தூரத்திலுள்ளவனே ஆவான் (ஏ.று)

முடிபு - கொலை, களவு, பொய், வெகுளி, ஆசை என்று இவையொடு மறீஇ, இருக்கின்றார்தமக்கு, பிரான் அங்கையின் நெல்லிபோல் செங்கையிலிருப்பினும் சேயன் சேயனே.

835. **பத்தரை புகழ்வுறப் பணிய உண்டவர்**
வைத்தன கொளவுடன் மருவப் [1]பெற்றவர்
சித்தியும் கடவுள் சிறப்பும் வேறொரு
முத்தியும் பொருளென முன்னு றார்களால் 40

(பா.ம்) [1]பெற்றிவர்

(இ.ள்) பத்தரை புகழ்வுறப் பெற்றவர் - சிவபத்தரை புகழ்ந்து கூறுதலைப் பெற்றவரும்; பத்தரைப் பணியப் பெற்றவரும் - சிவபத்தரை வணங்கப் பெற்ற வரும்; உண்டு அவர் வைத்தன கொளப் பெற்றவரும் - அச்சிவபக்தர் உண்டு எச்சமாக வைத்தனவற்றைப் பிரசாத உணவாகக் கொள்ளப் பெற்றவரும் ;உடன் மருவப் பெற்றவரும் - அவருடன் கூடி இருக்கப் பெற்றவரும் (ஆகிய இவர்கள்); சித்தியும் கடவுள் சிறப்பும், வெறொரு முத்தியும் பொருள் என முன்னுறார்கள் - அட்டமாசித்தி களையும் தெய்வங்களுக்குச் செய்யும் வழிபாட்டினையும் வேறுபட்ட

Koviloor Digital Library

ஒன்றாகிய முத்தியினையும், அடையும் பொருள் எனக் கருத மாட்டார்கள். (எ.று) (ஆல்-அசை)

முடிபு- பத்தரைப் புகழ்வுற, பணிய வைத்தனகொள, உடன் மருவப் பெற்றவர், சித்தியும், சிறப்பும், முத்தியும், பொருள் என முன்னுறார்கள். பெற்றவர் என்பது வினையாலணையும் பெயர்.

836. **இன்னணம் நன்னெறி யாவும் ஆயிடைத்**
துன்னிய சிவகணம் துணிந்து கொள்ளவே
மன்னவன் எனும்அருள் வசவ நாயகன்
தன்னொடு புகன்றனன் தலைவன் அல்லமன் 41

(இ.ள்) தலைவன் அல்லமன் இன்னணம் - தலைவனாகிய அல்லமதேவன் இவ்வாறு; நல் நெறியாவும் - இட்டலிங்கத்தைப் பற்றிய நல்வழிகள் எல்லாவற்றையும்; ஆயிடைத்துன்னிய சிவகணம் துணிந்து கொள்ளவே - அவ்விடத்தே, பொருந்தியுள்ள சிவனடியார் கூட்டங் களும் தெளிந்து கொள்ளும்படி; மன்னவன் எனும் அருள் வசவ நாயகன் தன்னொடு புகன்றனன் - அருள்தங்கிய பசவராசன் என்ற பெயரையு டைய தலைவனுக்குக் கூறினான். (எ.று)

முடிபு- அல்லமன் இன்னணம் நன்னெறியாவும் சிவகணமும் துணிந்து கொள்ள வசவ நாயகன் தன்னொடும் புகன்றனன். இவ்வண்ணம் என்ற சொல் இன்னணம் என மருவிற்று சிவகணமும் என எச்ச உம்மை வருவிக்க வசவராசன் என்ற பெயரைக் கருதி, மன்னவன் வசவன் என்றார் வசவன் தன்னொடு என்ற ஒடு உருபை, 'கு'வுரு பாகத்திரித்துக் கொள்க. பசவ ராசனுக்கே இஷ்டலிங்க உபதேசம் என்பது கன்னடப் பிரபுலிங்க லீலை.

837. **பாடினன் பரவினன் பணிந்த சொல்லுரை**
ஆடினன் பன்முறை அல்ல மன்திருத்
தாடலை புனைந்தனன் தண்ட நாயகன்
மூடிய உவகையின் மூழ்கி னானரோ 42

(இ.ள்) தண்ட நாயகன் - விச்சலமன்னனுடைய படைகளுக்குத் தலைவனாகிய வசவதேவன் (அல்லமதேவன் உபதேசித்த உபதேச மொழிகளைக் கேட்டு) பாடினன் - புகழைப் பாடினன்; பரவினன் - முன்னின்று மலர் தூவி வணங்கினன்; பணிந்த சொல் உரையாடினன் - பணிவான மொழிகளால் உரையாடினான்; பல்முறை அல்லமன் திருத்தாள் தலை புனைந்தனன் - பல தடவை அல்லமனது அழகிய

Koviloor Digital Library

திருவடியைத் தன் தலையின் மேல் சூட்டிக் கொண்டான்; மூடிய உவகையின் மூழ்கினான் - தன்னை முற்றிலும் சூழ்ந்து கொண்ட உவகைக் கடலுள் மூழ்கினான் (எ.று) அரோ- அசை

முடிபு- தண்ட நாயகன் பாடினன், பரவினன், உரையாடினன், திருத்தாள் தலை புனைந்தனன் (மேலும்) உவகையுள் மூழ்கினான். பரவல் என்பது முன்னிலைப் பரவல்; தண்டநாயகன், பாடி, பரவி, உரையாடி, அல்லமன் திருத்தாளைத் தலை புனைந்தனன். அதனால் உவகையில் மூழ்கினன் எனவும் முடித்துக் கொள்க. இவ்வாறு கொள்ளின் பாடி முதலானவை முற்றெச்சமாகும்.

838. திருந்தவிவ் வகையுப தேசித் தெண்ணிலா
அருந்தவர் குழாத்தொடும் அருணந் திப்பெயர்
பெருந்தகை மகிழ்வுறப் [1]பிறழ்வில் ஆரியனை
இருந்தனன் மலிகலி யானத் தென்பவவே 43

(பா.ம்) [1]பிரிவில் ஆரியன்

(இ.ள்) பிறழ்வுஇல் ஆரியன் - ஐய உணர்வாலும், திரிபு உணர்வாலும் பிறழ்ச்சி யடையாத ஆசிரியனாகிய அல்லமதேவன்; திருந்த இவ்வகை உபதேசித்து - கேட்டவர் மனம் திருத்தம் அடையும்படி இவ்வகை உபதேசம் செய்து; எண்ணிலா அருந்தவர் குழாத்தொடு, அருள் நந்திப் பெயர் பெருந்தகை மகிழ்வுற- கணக்கற்ற, அரிய தவத்தினர் கூட்டங்களோடு, அருள் நந்தி என்ற பெயரையுடைய பெருந்தகையும் மகிழ்ச்சி அடைய; மலி கலியாணத்து இருந்தனன் என்ப- நல்லன எல்லாம் மிக்க கலியாண பட்டிணத்திலே, வசவன் திரு மாளிகையில் சிவானுபவ மண்டபத்தில் இருந்தனன் என்ப. (எ.று)

முடிபு- பிறழ்வில் ஆரியன் திருந்த இவ்வகை உபதேசித்து, தவர் குழாத்தொடு பெருந்தகை மகிழ்வுற, கலியாணத்து இருந்தனன் என்ப.

பதினாறாவது
இட்டலிங்க கதி முற்றிற்று

Koviloor Digital Library

பதினேழாவது
கதலி வன கதி

(இப்பெயருடைய கதி கன்னடப் பிரபுலிங்க லீலையில் இல்லை. இங்கு சொல்லப்படுகின்ற செய்தி, இஷ்டலிங்க கதியிலேயே கூறப்பட்டுள்ளது என்பதை முன்னரே கூறியுள்ளளோம்).

வேறு

அல்லமனிடத்தில் உபதேசம் பெற்ற மாதேவி அம்மை ஸ்ரீசைலத்தில் உள்ள கதலிவனத்தில் சென்று தங்கி இருந்து சமாதி கூடியிருந்த நிலையைக் கூறுவதால் இக்கதிக்குக் கதலி வன கதி என்று பெயராயிற்று.

கதிநுதலியது

839. வரையில் புண்ணிய வனத்தில் வளங்கெழும் நதியின்
கரையில் பன்னெடு நாளருள் குரவனைக் காண்பான்
திரிதற் குற்றுலாய் வந்துமா தேவிகல் யாண
புரியில் கண்டுவந் தேகிய முறையினிப் புகல்வாம் 1

(இ.ள்) மாதேவி = மாதேவி அம்மையானவள்; அருள் குரவனை காண்பான் = அருள் தங்கிய அல்லம தேவனாகிய குருவை காண வேண்டி; பன்னெடுநாள் = பலவாகிய நெடு நாட்காலம் வரை; வரையில் = மலை சார்ந்த இடங்களிலும்; புண்ணிய வனத்தினில் = அறம் பொருந்திய காடு சார்ந்த பகுதியிலும் வளங் கெழும் நதியின் கரையில் = வளப்பம் பொருந்திய ஆற்றின் கரை சார்ந்த பகுதியிலும்; திரிதற்கு உற்று உலாய் வந்து = தேடித்திரிதலுக்குப் பொருந்தி நடந்து வந்து (கடைசியில்) கல்யாணபுரியில் கண்டு உவந்து ஏகிய முறை இனிப் புகல்வாம் = கல்யாண பட்டிணத்திலே அருட்குரவனைப் பார்த்து உவப்படைந்து (உபதேசம் பெற்றுக் கொண்டு) கதலிவனத்தின் கண் ஏகிய முறையை இனிமேல் சொல்லுவாம் (எ.று)

முடிவு - மாதேவி அருள் குரவனைக் காண்பான் நெடுநாள் வரையிலும் வனத்திலும் நதியின் கரையிலும் திரிதற்கு உற்று உலாய் வந்து (ஈற்றில்) கல்யாண புரியில் கண்டு உவந்து ஏகிய முறையை இனிப்புகல்வாம்.

840. காட்டி னும்பெரும் குன்றினும் தேடினள் காணாள்
வாட்டு றும்பிறப் பெனும்பிணி மாய்வுற வீட்டில்

Koviloor Digital Library

கூட்டும் நன்மருந்து இருப்பதை அறிஞரார் கூறக்
கேட்டு வந்துமா தேவியந் நகரினைக் கிடைத்தாள் 2

(இ.ள்) மாதேவி = மாதேவி அம்மை; காட்டினும் பெரும் குன்றினும் தேடினள் காணாள் = காடு சார்ந்த பகுதியினும் பெரிய மலை சார்ந்த பகுதியினும் அருட் குரவனைத் தேடிப் பார்த்தாள் அவ்விடங் களில் காணளாயினள்; வாட்டுறும் பிறப்பு எனும் பிணிமாய்வுற = வருத்துகின்ற பிறப்பு என்கின்ற நோய் போகும்படி; வீட்டில் கூட்டும் நன் மருந்து வீட்டில் இருப்பதை அறிஞரால் கூறக்கேட்டு = முத்தியாகிய வீட்டில் சேர்ப்பிக்கும் நல்ல மருந்து போன்ற அருட்குரவன், வசவராஜனது வீட்டிலேயே இருப்பதை அறிந்துள்ள சான்றோர்களால் கூறப்பெற்று அதனைச் கேட்டு; வந்து அந்நகரினைக் கிடைத்தாள் = அங்கேவந்து அந்நகரினை அடைந்தாள். (எ.று)

முடிபு - மாதேவி காட்டினும் குன்றினும் தேடினள் காணுள் பிறப்பெனும் பிணி மாய்வுற வீட்டில் கூட்டும் நன்மருந்து வீட்டில் இருப்பதை அறிஞரால் கூறக்கேட்டு வந்து அந்நகரினைக் கிடைத்தாள். வீட்டில் கூட்டும் நன்மருந்து வீட்டில் இருப்பதை என்று கூட்டிப் பொருள் கொள்க. அறிஞர் - அறிந்துள்ளவர் (அல்லம தேவன் எங்குள்ளார் என்பதை அறிந்துள்ளவர்.)

841. தலையில் வெண்கலை ஒன்றுற வெற்றரை சமைந்து
பலிகொ ளும்படி மனைதொறும் உலகெலாம் பழிச்ச
அலம ரும்பரற் கினியவள் வெற்றரை யாய்க்கண்
[1]புலன்வி ருந்துணும் கடிநகர் வீதியுள் புகுந்தாள் 3

(பா.ம்) [1]புலம் விருந்துணும்

(இ.ள்) தலையில் வெண்கலை ஒன்று உற வெற்று அரை சமைந்து பலிகொளும்படி மனைதொறும்உலகெலாம் பழிச்ச அலமரும் பரற்கு இனியவன் = தலையிடத்தே வெண்மையான கலையையுடைய திங்கள் ஒன்றுமே தங்க, கலை என்னும் ஆடை இல்லாத இடையை உடைய வனாய் அமைந்து, பிச்சை வாங்கும் பொருட்டு வீடுகள் தோறும் உலகு எலாம் வணங்க உழன்று திரியும் பரமேஸ்வரனுக்கு இனியவளா யிருக்கும் அக்கமா தேவி அம்மையானவள்; வெற்று அரையாய் = அப்பரனைப் போலவே இவளும் இடையில் கலை இல்லாதவளாய்; கண்புலன் விருந்து உணும் கடிநகர் வீதியுள் புகுந்தாள் = காண்பாருடைய கண்ணாகிய புலன் எல்லாம் புதிய புதிய பொருளைக் கண்டு உவத்

Koviloor Digital Library

தலுக்கு இடமான விளக்கமுடைய கல்யாண பட்டிணத்து வீதியுள் புகுந்தாள். (எ.று)

முடிபு - பரற்கு இனியவள் அப்பரனைப் போலவே வெற்றரையாய் கட்புலம் விருந்துணும் நகர் வீதியுள் புகுந்தாள். எழுவாய் செயப்படு பொருள் பயனிலை என்னும் மூன்றால் ஒருசொற்றொடர் முடியும். இம் மூன்றுள் எழுவாய்க்கும் செயப்படுபொருளுக்கும் பயனிலைக்கும் அடைமொழிகளைக் கொடுத்துப் புலவர் கூறுவர். அம்மூன்றுவகையில் இங்கே அடைமொழிகள் கொடுக்கப் பட்டுள்ளன. இங்கே இனியவள் என்ற சொல் எழுவாயாகும். யார்க்கு இனியவள் என்று வினவினால் பரனுக்கு இனியவள் என்பது விடையாக வரும். எத்தகைய பரன் என்று வினவினால் ''தலையில் வெண்கலை ஒன்றுற வெற்றரை சமைந்து பலிகொள்ளும்படி மனைதொறும் உலகெலாம் பழிக்க அலமரும் பரமன்'' என்று வரும்.

பரந்துல கேழும் படைத்த பிரானை
இரந்துணி என்பார்கள் எற்றுக் கிரக்கும்
நிரந்தர மாக நினையும் அடியார்
இரந்துண்டு தன்கழல் எட்டச் செய்தானே!!

(திருமந்திரம் 1888)

பிட்சா விதி என்னும் திருமந்திரம் இறைவன் இரந்துண்ணுதலை மேற் கொண்ட தற்குக்காரணம் அறிக.

842. நாற்கு ணங்களுள் முதற்குணம் ஆகிய நாணைத்
தீர்க்கும் இம்மடம் உடையவள் யார்கொலோ தெரியேம்
பார்க்கில் இன்னவள் பித்துடை யாளெனப் பலரும்
நோக்கும் வண்ணம் வந்து உற்றனள் உலகியல் நோக்காள் 4

(இ.ள்) (புகுந்தாளாகிய பரற்கு இனியவள்) நால் குணங்களுள் = பெண்களுக்குள்ள நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களுள்; முதற்குணம் ஆகிய நாணைத் தீர்க்கும் இம்மடம் உடையவள் = முதல் குணமாய் விளங்கும் நாணத்தை விடுகின்ற இரண்டாவது குணமாகிய மடம் ஒன்றையே உடையவளாகிய இவள்; பார்க்கில் யார்கொலோ தெரியேம் = ஆராய்ந்து பார்க்கில் எந்நாட்டி னளோ எவ்வூரினளோ யார் மகளோ என்னும் இவற்றைத் தெரியேம்;

Koviloor Digital Library

இன்னவள் பித்துடையாள் எனப் பலரும் நோக்கும் வண்ணம் = இத்ததைய இவள் பித்தினை உடையவள் என்று கருதி பலரும் வியந்து பார்க்கும்படி; உலகியல் நோக்காள் உற்றனள் = பலவாறு கருதும் உலக மக்களின் கருத்தை எண்ணிப் பார்க்காதவளாகிய மாதேவி கலியாண நகரத்து வீதிலே வந்துள்ளாள் (எ.று)

முடிபு - பலரும் நாற் குணங்களுள் முதற் குணமாகிய நாணை தீர்க்கும் இம்மடம் உடையவள் பார்க்கில் யார் கொலோ தெரியேம் என நோக்கும் வண்ணம் உலகியல் நோக்காள் வந்து உற்றனள்.

843. உலகு ளார்தமைப் பேதையென் றுணர்ந்தன ளோதான்
உலகு ளார்தனைப் பேதையென் றுணர்குவர் என்றோ
உலகு ளார் தமை நாணிலள் நீங்கிய உடையாள்
உலகு ளார் தொழும் தண்டநா யகன்மடத்து உற்றாள் 5

(இ.ள்) உலகு உளார்தமை பேதை என்று தான் உணர்ந்தனளோ = உலகத்திலுள்ள மக்களை தான் ஞான உணர்வு இல்லாதவராகிய அறிவிலிகள் என்று கருதியதனாலோ(அல்லது); உலகுளார் தனைபேதை என்று உணர்குவர் என்றோ = உலகத்திலுள்ள மக்கள் தன்னை உலகியில் அறிவில்லாத பேதை என்று உணர்வார்கள் என்று கருதியோ; உலகுளார் தமை நாணிலள் = உலகத்திலுள்ள அவர்களைக் கண்டு சிறிதும் நாணம் இல்லாதவளாய்; நீங்கிய உடையாள் = உடையும் இல்லாதவளாய் இத்துறவு கோலத்துடன்; உலகுளார் தொழும் தண்டநாயகன் மடத்து உற்றாள் = உலகத்திலுள்ள பேரறிஞர் எல்லாம் வணங்கத்தக்க வசவதேவனுடைய திருமடத்தை அடைந்தாள். (எ.று)

முடிபு - (உலகியல் நோக்காள்) தான் உலகுளார் தமை பேதை என்று உணர்ந்தனளோ? உலகுளார் தன்னைப் பேதை என்று உணர்குவர் என்றோ? உலகுளார் தமை நாணிலள். நீங்கிய உடையாள் தண்ட நாயகன் மடத்து உற்றாள். உணர்ந்தனளோ உணர்குவர் என்றோ என்ற இரண்டு இடத்தும் வந்த ஓகாரங்கள் ஐயப் பொருட்டு. உலகுளார் தமை நாணிலள் என்பதில் நாண மில்லாமைக்குக் காரணம். இந்த இரண்டில் எது என்பது விளங்காமையால் ஐயப்பொருட்டு ஆயிற்று.

நாணிலள் என்பது அகத்துறவு; நீங்கிய உடையாள் என்பது புறத்துறவு. ''அகன்றாள் அகலிடத்தார் ஆச்சாரத்தை'' என்ற அப்பர் திருவாக்கை நினைவு கூர்க.

Koviloor Digital Library

844. தண்ட நாயக னொடுபலர் நெருங்குறத் தவிசில்
[1]அண்ட நாயகன் அல்லமன் வீற்றிருந் தருளக்
கண்டு போய்அருகு இறைஞ்சினள் ஆண்டமர் கணங்கள்
பண்டு தாம் அறியாவியப்(பு) அடைந்தனர் பார்த்து 6

(பா.ம்) [1]அண்டர் நாயகன்

(இ.ள்) தண்ட நாயக னொடு பலர் நெருங்குற = தலைமையான வசவ ராஜனொடு அடியார்கள் பலரும் (நெருங்கி) சூழ்ந்து இருக்க; அண்ட நாயகன் அல்லமன் தவிசில் வீற்று இருந்து அருள = உலகத் தலைவனாகிய அல்லமதேவன், தனக்குரிய ஆசனத்தில் எழுந்தருளி இருக்க; கண்டு அருகு போய் இறைஞ்சினள் = மாதேவி அம்மை பார்த்து அருகே சென்று வணங்கினாள்; ஆண்டு அமர்கணங்கள் பார்த்து பண்டுதாம் அறியாவியப்பு அடைந்தனர் = (வணங்கிய அப்பொழுது) அங்கே சூழ்ந்துள்ள. சிவகணங்களாகிய தொண்டரெல்லாம் இந் நிகழ்ச்சியை நோக்கி. இதற்கு முன்தாம் அறியாத வியப்பை அடைந்தனர். (எ.று)

முடிபு - அண்டர் நாயகன் அல்லமன் தண்ட நாயகனொடு பலர் நெருங்குற. தவிசில் வீற்றிருந்தருள (மாதேவி அம்மை) கண்டு அருகு போய் இறைஞ்சினள் (அப்பொழுது) ஆண்டமர் கணங்கள் பார்த்து பண்டுதாம் அறியாவியப்பு அடைந்தனர்.

மாதேவ அம்மை அல்லமனை தொழுது கூறியது

845. நெஞ்சம் ஆர்அழல் அரக்கென நெக்குநெக்கு உருகச்
செஞ்சொல் வாய்தடு மாறவாள் விழிபுனல் சிந்தக்
கஞ்ச நாண்மலர் கைதொழுது அநங்கநோய் காணாள்
அஞ்சி னேன்பவப் [1]பிணிகெட யருள்செயென்று அழுதாள் 7

(பா.ம்) [1]பிணியினி

(இ.ள்) அநங்கன் நோய்காணாள் = காமன் செய்யும் காமநோயை அறியாதவளாகிய மாதேவி; நெஞ்சம் ஆர் அழல் அரக்கு என நெக்கு நெக்கு உருக = தன் உள்ளம் நெருப்பிலே பொருந்திய அரக்கைப் போல நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகவும்; செஞ்சொல் வாய் தடுமாற = நல்ல சொல்லானது வாயினிடத்துத் தடுமாறிவரவும்; வாள் விழி புனல்சிந்த = ஒளிபெற்ற கண்களானது அன்புப் புனலைச் சிந்தவும்; கஞ்ச நாண்மலர்

Koviloor Digital Library

கைதொழுது = தாமரை மலர் போன்ற கைகளால் அல்லமதேவரை வணங்கி; அஞ்சினேன் பவப் பணிகெட அருள் செய் என்று அழுதாள் = பவப்பிணிக்கு யான் அஞ்சினேன்; அப்பிணிகெட. அருள் செய்வாயாக என்று கூறி அழுதாள் (எ.று)

முடிபு - அநங்கன் நோய் காணாள், தன் நெஞ்சம் அழல் அரக்கென உருகவும் தன்சொல் வாயிடத்தே தடுமாறவும் தன்விழி புனல் சிந்தவும், மலர்க்கையால் தொழுது பவப்பிணிக்கு அஞ்சினேன். பவப்பிணிகெட அருள்செய் என்று அழுதாள். இப்பாட்டில் பத்திச் சுவையின் மெய்ப்பாட்டை உணர்க.

அல்லமதேவன் மாதேவியின் பக்குவ நிலையை உணர்ந்தது

846. வீடு உவப்பவர் ஆண்என பெண்என வேறா
ஏடு அலர்க்குழல் உமைகலை யேயிவள் இவள்போல்
நாடு றில்பரு வம்பெறும் அவரிலை ஞானம்
கூடு தற்குரி யாளென அல்லமன் குறித்தான் 8

(இ.ள) அல்லமன் = (மாதேவி கூறிய மொழியைக் கேட்டு) அல்லம தேவன்; வீடு உவப்பவர். ஆண் என, பெண் என வேறோ = (சிலநூல்கள் வீடு அடைவதற்கு ஆண்களே உரியவர் பெண்கள் உரியர் அல்லர் என்று கூறும்) ஆனால் சிவாகமங்களோ வீடு பேற்றை விரும்புவருள் ஆண் என பெண் என வேறுபாடு உண்டோ? இல்லை என்று கூறும்; இவள் ஏடுஅலர்க்குழல் உமைகலையே = (என்னை வந்து வழிபட்ட) இவள் இதழ்களோடு கூடிய மலர்களை அணிந்த கூந்தலைப் பெற்றிருக்கும் உமாதேவியின் சத்துவகலை மடந்தையே ஆவள்; நாடுறில் இவள் போல் பருவம் பெறும் அவர் இலை = ஆராய்ந்து பார்ப்பின் இங்கு வந்துள்ள இவளைப் போல சத்தினி பாதமாகிய பருவத்தைப் பெறுபவர் வேறு ஒருவருமில்லை. (ஆதலால்) ஞானம் கூடுதற்கு உரியாள் எனக் குறித்தான் = சிவஞானத்தை அடைவதற்கு உரியவள் ஆவாள் என மனத்தின் கருதிக் கொண்டான். (எ.று)

முடிபு - அல்லமன் வீடு உவப்பவர் ஆண் என பெண் எனவேறோ? இவள் உமைகலையே; இவள் போல் நாடுறில் பருவம் பெறும் அவர் இலை. (ஆதலால்) ஞானம் கூடுதற்குரியாள் என குறித்தான். வைதீக நூல்கள் பெண்கள் வீடு பெறுவதற்குரியர் அல்லர் என்று கருதிக் கொண்டு அவர்களுக்கு உபநயனமும், பூ நூலணிதலும், வேத ஓதுதலும் ஞானநூல் ஓதுதலும் சந்நியாசம் பெறுதலும் முதலியன இல்லை எனக் கூறும்.

Koviloor Digital Library

ஆனால் சிவாகமங்களோ ஆண்கள், பெண்கள் இருவரும் வீடு பேற்றிற்கு உரியர் எனக் கொண்டு அவ்விருவர்க்கும் அதற்குரிய தீட்சையும் இலிங்க தாரணமும் ஞானேபதேசமும் உரியன என்று கூறும். அதனைக் கருதி வீடுவப்பவர் ஆணெனப் பெண்ணெனவேறோ எனக் கூறினர்.

அப்பொழுது அங்கே இருத்தவர் கருதியது

847. தான்அ லாதொரு பொருளிலைச் சகம்என என்னும்
ஞானம் மேவலால் காமவின் பந்தனை நண்ணாள்
தான்நல் ஆதர வால்தனை தழுவியின் புறுநர்
ஏனை மாந்தருள் உள்கொலோ என்றனர் இருந்தார் 9

(இ.ள்) தான் அலாது சகம் என ஒரு பொருள் இல்லை என்னும் ஞானம் மேவலால் = தான் என்னும் ஆன்மா அல்லது உலகம் என்கின்ற ஒரு பொருள் இல்லை என்கின்ற ஞானத்தை இவள் பெற்றுள்ளதால்; காம இன்பந் தனை நண்ணாள் = உலகத்தில் மற்றொருவனை நாடி அடைகின்ற காம இன்பத்தை இவள் அடையாதவளாயினாள்; தான் நல் ஆதரவால் தனை தழுவி இன்புறுநர் = ஆன்மாவாகிய தான் பரமான்மாவாகிய தன்னையே தழுவி இன்பத்தை அடைபவர். ஏனைமாந்தருள் உள்கொலோ என்றனர் இருந்தார் = இம்மாதேவியைத் தவிர மற்றைய மக்களுள் வேறு எவராவது உள்ளனரோ? என்று தமக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள் அங்குள்ளவர்கள். (எ.று)

முடிபு - தான் அலாது சகமென ஒரு பொருள் இல்லை என்னும் ஞானம் மேவலால் காம இன்பந்தனை நண்ணுள். தான் நல் ஆதரவால் தன்னையே தழுவி இன்புறுநர். ஏனைய மாந்தருள் உள்ளார் கொல்லோ என்றனர் இருந்தார். தான் என்கின்ற சொல் ஆன்மா என்னும் பொருளுடையது. அவ் ஆன்மா தூலாமாகிய சீவான்மா என்றும். ஆச்சூவமாகிய பரமான்மா வென்றும் இருவகைப்படும். இவ்விரண்டு ஆன்மாக்களும் இவ்உலகத் தோற்றத்திற்கு ஏதுவாகும். அதனாலே தான் அலாது சகம்என ஒருபொருளில்லை எனக் கூறினார். அதனாலே அறிஞர்கள் சகத்தை அறியாமல் சகத்திற்குக் காரணமாகிய தன்னையே அறியமுற்படுகின்றனர். திருமூலர் இதனையே,

தன்னை அறிவது அறிவாம் அஃதன்றிப்
பின்னை அறிவது பேயறி வாகுமே (திருமந்திரம் 2318)

என்ற கூறியதையும் காண்க.

Koviloor Digital Library

தன்னை அறியத் தொடங்கும்பொழுது அவ்அறிவு தன்னையும் தனக்காதாரத் தலைவனையும் அறிதில் என்று இருவகைப்படும். தான் நல் ஆதரவால் தனைத் தழுவி இன்புறுநர் என்னும் அடிக்கு சீவான் மாவாகிய தன்னுடைய அன்பினுலே பரமான்வாகிய தன்னைத் தழுவி இன்பத்தை அடைபவர் எனப் பொருள்கொள்க. இப்பொருளைக் கருதி தன்னை அறிந்து சிவனுடன் தாஞக மன்னும் மலம் குணம் மாளும் பிறப்பு அறும் (திருமந்திரம் 2331) என்று கூறினார். அல்லாமால்,

தன்னை அறிந்து இடையீடற முக்கண் தலைவன் பால்
பின்னம் அறும்படி மேவு பெரும் பருவப்பெண்

என்று(அக்க மாதேவி துறவுகதி.4) மாதேவி சுட்டப்படுகிறாள். முக்கண் தலைவன் பால் என்பது பரமான்வாகிய தன்னை.

அவண் அமர்ந்துள்ள சிலரின் கூற்று

848. இன்று காமனை வென்றவள் இனையள் ஆயிழையோ(டு)
ஒன்றும் மேனியன் ஆகிய கண்ணுதல் ஒருவன்
வென்று ளானென வுலகினில் எடுத்தசொல் மெய்ம்மை
அன்று போலுமென்று இயம்பினர் சிலர்அவண்
அமர்ந்தோர் 10

(இ.ள்) அவண் அமர்ந்தோர் சிலர் = அங்கே மேவியசிலர்; இன்று காமனை வென்றவள் இனையள் = இப்பொழுது காமதேவனுல் உண்டாகும் காமத்தை வென்றவள் இவளே யாவள்; ஆயிழையோடு ஒன்றும் மேனியன் ஆகிய கண்ணுதல் ஒருவன் வென்றுளான் என உலகினில் எடுத்த சொல் மெய்ம்மை அன்று போலும் என்று இயம்பினர் = ஆய்ந்து கொள்ளும் அணிகலன் அணிந்த உமாதேவியோடு பொருந்தி யுள்ள ஒருவனாகிய சிவபெருமான், காமனை வென்றுளான் என்று உலகத்தின் கண் எடுத்துக் கூறப்படும் சொல்உண்மை அன்று போலும். என்று இயம்பினர் (எ.று)

முடிபு - அவண் அமர்ந் தோராகிய சிலர் காமனை வென்றவள் இன்று இனையளே; கண்ணுதல் ஒருவன் வென்றுளான் என உலகினில் எடுத்த சொல் மெய்மையன்று போலும் என்று இயம்பினர். மாதேவி காமதேவனுல் ஏற்படும் காமத்தை வென்றாள், சிவபெருமானோ காமனை மட்டும்வென்று காமத்தை வெல்ல முடியாமல் ஆயிழையோடு ஒன்றி இருந்தார் என்று சிலர் அமர்ந்திருந்தே கூறினர்கள்.

Koviloor Digital Library

கண்டார்கூற்று

849. உடலம் மானம் அற்று இவள்என அனைத்தையும் ஒருங்கு
விடவ லார்க்கலால் இளமையும் செல்வமும் விரும்பி
நடலை வாழ்வினில் வெறுப்புறாப் புல்லிய நரர்க்கு
தொடரும் மாவினை தொலையுமோ எனச்சிலர் சொன்னர் 11

(இ.ள்) சிலர் = மாதேவியைக் கண்டசிலர் (மாதேவியைப் பார்த்து); இவள்என = இம்மாதேவியைப் போல; உடலம் மானம் அற்று அனைத்தையும் ஒருங்கு விடவலார்க்கு அலால் = உடம்பின் மேல் பற்றற்று எப்பொருள்களையும் ஒரு சேர துறத்தல் வல்லார்க்கு அல்லாமல்; இளமையும் செல்வமும் விரும்பி = தன் உடம்பின் இளமைப் பருவத்தையும் தமக்கு வேண்டும் செல்வங்களையும் ஆசைப்பட்டு; நடலை வாழ்வினில் வெறுப்பு உறாப்புல்லிய நரர்க்கு = துன்பத்தையே தரும் இவ்வுலக வாழ்வின்கண் வெறுத்தலைக் கொள்ளாத சிற்றறிவையுடைய மக்களுக்கு; தொடரும் மாவினை தொலையுமோ என சொன்னார் = நிழல் போலத் தொடர்ந்து வருகின்ற பெரிய வினைக்கட்டு தொலைவதற்கு வழியுண்டோ என்று கூறினார்கள்.(எ.று)

முடிபு - சிலர், இவள் என, மானம் அற்று அனைத்தையும் ஒருங்கு விடவல்லார்க்கு அல்லாமல் இளமையும் செல்வமும் விரும்பி நடலை வாழ்வினில் வெறுப்புறாத புல்லிய நரர்க்கு மாவினை தொலையுமோ என்று சொன்னர். நடலையே என்று தேற்றே காரம் விரித்துக் கொள்க. வெறுப்புறா என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். ''அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும், வேண்டிய எல்லாம் ஒருங்கு'' (குறள் - துறவு 343) ஒருங்கு விடல் வேண்டும் என்பதற்கு இக்குறள். திருநாவுக்கரசர்,

நடலை வாழ்வு கொண்டு என் செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற் பிராமாணமே
கடலின் நஞ்சமுது உண்டவர் கைவிட்டால்
உடலினர் கிடந்து ஊர் முனி பண்டமே

திருவிருத்தத்தால் அறிக. நடலை வாழ்வினை ''தோன்றி நின்று அழியப்படும் இவ்வுலகில் துன்பமே அன்றி என்துணையும். ஊன்றி நெஞ்சகத்து ஓர்ந்திடில் பிறிதிலையால்'' என்பது வைராக்கியதீபத்தாலும் அறிக.

Koviloor Digital Library

அப்பொழுது பிரபுதேவன் நினைந்தது

850. சென்று தேடி நாம் தத்துவம் அருள் செயும் சீடர்
அன்றி ஞானதே சிகனுள னோவென வாய்ந்திட்(டு)
இன்று மேவுமா தேவிபோல் இலையென எம்மான்
நின்ற ஞானமூ லந்தனை உணர்த்துவான் நினைந்தான் 12

(இ.ள்) எம்மான் = எம்முடைய தலைவனாகிய பிரபு தேவன்; நாம் சென்று தேடி தத்துவம் அருள் செயும் சீடர் அன்றி = மாற்சால நியாயத்தாலே நாமே சென்று தேடிக்கண்டு; உண்மைப் பொருளை உபதேசிக்கும் சீடரன்றி; ஞான தேசிகன் உளனோ என ஆய்ந்திட்டு இன்று மேவும் மாதேவி போல் இலையென = மற்கட நியாயத்தாலே ஞான குரு எங்கு உள்ளானோ என ஆராய்ந்து இப்பொழுது நம்மை அடைந்த மாதேவி போல் பக்குவமுடையவர் வேறு ஒருவரும் இல்லை எனக் கருதிக் கொண்டு; நின்ற ஞான மூலந்தனை உணர்த்து வான் நினைந்தான் = உண்மையாய் நின்ற ஞானங்களுக்கெல்லாம் அடியாகி நின்ற பரஞானத்தை உபதேசிக்கக் கருதினான்.(எ.று)

முடிபு - எம்மான் நாம் சென்று தேடி அருள் செயும் சீடரன்றி தேசிகன் உளனோ என ஆய்ந்திட்டு இன்று மேவும் மா தேவி போல் (பக்குவ முடையவர்) இலை என ஞான மூலந்தனை உணர்த்துவான் நினைந்தான்.

பிரபு தேவர் மாதேவிக்கு அருள் செய்தது

851. பூதம் நீயலை [1]பொறிகளும் நீயலை புந்தி
ஏதும் நீயலை இவற்றினை மயங்கியான் என்னும்
போதம் நீயலை என்றிவை அனைத்தையும் போக்கிச்
சோதி ஆகிய பிரமமே நீயெனச் சொல்லி 13

(பா.ம்) [1]பொறிகளும் அலை அலை

(இ.ள்) பூதம் நீ அலை = உலகத்திலுள்ள நிலம் முதலான ஐந்து பூதங்களுள் ஒரு பூதமும் நீ அல்லை; பொறிகளும் நீயலை = உடம்பில் வாழும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளுள் ஒரு பொறியும் நீயல்லை; புந்தி ஏதும் நீயலை = புத்தி முதலாகக் கூறும் நாற்கரணங்களுள் ஒரு கரணமும் நீயல்லை; மயங்கி இவற்றினை யான் என்னும் போதம் நீயலை = மயக்க உணர்வைப் பெற்று மேலே கூறிய பூதம் - பொறி - கரணங்களாகிய இவற்றினை யான் என்று வழங்கும் சீவ போதமும் நீயில்லை; என்று இவை அனைத்தையும் போக்கி = என்று

Koviloor Digital Library

கருதி இவற்றை எல்லாம் விடுத்து சோதியாகிய பிரமமே நீ எனச் சொல்லி = ஒளிவடிவாகிய பிரமம் என்னும் சிவனுகிய ஞேயப் பொருளே நீயாவாய் எனக்கூறி. (எ.று)

முடிவு - நீ பூதம் அலை நீ பொறிகளும் அலை. நீ புந்தி ஏதும் அல்ல. மயங்கியான் என்னும் போதமும் நீ அலை என்று இவை அனைத்தையும் போக்கி. நீ சோதியாகிய பிரமமே எனச் சொல்லி, இக்கருத்து மனோலயகதி 15ம் பாடலிலும் கூறப்பட்டுள்ளது.

852. ஞேயம் ஞானஞா துருவெனு மிவைபல நிற்கும்
ஆயின் வேறறும் முத்தியன்று அதுசகம் ஆம்என்று
ஏயு மாறிதுஅதுவெனுஞ் சுட்டிலா இயல்பை
மாயை மாறிய தேவிபால் அருளினன் வள்ளல் 14

(இ.ள்) வள்ளல் = பிரபு தேவராகிய வள்ளல்; ஞேயம், ஞானம் ஞாதுரு எனும் இவைபல நிற்கும் ஆயின் = அறியப்படும் அறிபொருளாகிய காட்சிப்பொருள் என்னும்ஞேயமும், ஞேயப்பொருளை அறிகின்ற காட்சியாகிய ஞானமும், அறிதற்குக் கருத்தாவாகிய காண்பான் என்னும் ஞாதுருவும் என்னும் இவை ஞேயமாகிய ஒரு பொருளாகாமல் பல பொருளாய் நிற்குமாயின்; வேறு அது முத்தியன்று அது சகம் ஆம் என்று = அது ஒன்றாகிய முத்தியன்று; அது பலவாய் விளங்கும் உலகமாகும் என்று கூறி; இது அது எனும் சுட்டிலா இயல்பை ஏயுமாறு = இது என்றும் அது என்றும் வேறுபடுத்திக் கூறும் சுட்டுணர்வு பெறாத பிரமநிலை ஒன்றையே பொருந்துமாறு; மாயை மாறிய தேவிபால் அருளினன் = நாமம் - ருபம்; தொழில் என்னும் இவற்றால் பலவாயிருக்கும் மாயையின் பண்பு மாறிய மாதேவிபால் அருள் செய்தான். (எ.று)

முடிபு - வள்ளல் ஞேயம் எனும் ஞானம் எனும் ஞாதுருவெனும் இவை பலவாய் நிற்குமாயின் அதுவேறறு முத்தி அன்று. சகமாகும் என்று இது அது எனும் சுட்டிலா இயல்பை ஏயுமாறு மாதேவிபால் அருளினன். ஒன்றாய் இருப்பதே முத்தி வெவ்வேறாய் இருப்பது முத்தி அன்று என்னும் கருத்தால் மேலே ஏகமாம் இன்பசித்தி என்றார். அங்கே ''ஏகமாம் இன்பசித்தி''யை இங்கு வேறறும் முத்தி என்று கூறுகின்றார் (அங்கே என்பது கைலாய கதியிலுள்ள 52ம் பாடல்)

853. தேறு நீரென எனதுளம் [1]தெளித்ததே சிகைகம்
மாறு காண்கிலேன் உடல் பொருள் ஆவிகள் மதிப்பில்

Koviloor Digital Library

வேறு போய்நின வாயின என்றவள் விழிகள்
ஊறு நீரொடும் அல்லமன் தாள் தொழுது உளைந்தாள்

(பா.ம்) [1]தெளிந்த

(இ.ள்) தேறு நீரென எனது உளம் தெளித்த தேசிக = தேற்றாங் கொட்டையால் தேற்றப் பட்ட தெளிந்த நீரைப்போல என்னுடைய உள்ளத்தை தெளிவித்தகுரு மூர்த்தியே; கைம்மாறு காண்கிலேன் = நீ செய்த உதவிக்கு மாறாகச்செய்யும் உதவிப் பொருளை யான் கண்டேன் இல்லை (ஏனென்றால்) உடல் பொருள் ஆவிகள் மதிப்பில் வேறு போய் நினவாயின = என்னுடைய உடம்பும் பொருளும் உயிரும் உனக்குக் கைம்மாறாகக் கொடுக்கலாமே எனக்கருதினால் அவை என்னொடு பொருந்தாமல் வேறுபட்டுப் போய், உனக்கே உரிய உரிமைப் பொருள் ஆகிவிட்டன; என்று அவள் விழிகள் ஊறு நீரொடும் அல்லமன்தாள் தொழுது உளைந்தாள் = என்று கூறி அம்மாதேவி விழிகளிலிருந்து ஒழுகும் அன்பு நீரொடும் அல்ல மதேவரது திருவடியினைத் தொழுது உள்ளம் உருகப் பெற்றாள். (எ.று)

முடிபு - எனது உளத்தை தேறு நீரெனத் தெளித்த தேசிக(யான்) கைம்மாறு காண்கிலேன் மதிப்பில் உடல் பொருள் ஆவிகள் வேறு போய் நின ஆயின என்று அவள் விழிகள் ஊறு நீரொடு அல்லமன் தாளைத் தொழுது உளைந்தாள். நின ஆயின = நின்னுடைப் பொருள் ஆயின.

854. அன்னை நீயினிக் கதலிமா [1]வனத்தினை அடைந்திட்(டு)
என்னை மேவினை கேட்டவிப் பொருளினை எல்லாம்
நின்னில் நீதெளிந்து உறுதிகொள் நிதித்தியா சனத்தின்
மன்னு வாயென ஏவினன் தற்கொடை வள்ளல் 16

(பா.ம்) [1]வனத்திடை

(இ.ள்) தன்கொடை வள்ளல் = தன்னை அறிவித்துக் கொடுக்கும் வள்ளலாகிய பிரபுதேவர் (மாதேவியை நோக்கி); அன்னை நீ இனி = தாயே என் உபதேசமொழியைக் கேட்ட பின்னர் நீ; கதலி மாவனத்தினை அடைந்திட்டு = ஸ்ரீ சைலத்திலுள்ள கதலிவனத்தை அடைந்து; என்னை மேவினை கேட்ட இப்பொருளினை எல்லாம் நின்னில் நீ தெளிந்து உறுதி கொள் = என்னை அடைந்தனையாய் என்னிடம் கேட்ட ஞானப் பொருளை எல்லாம் உனக்குள் நீ ஆராய்ந்து திடங்க கொள்வாயாக; நிதித்தியாசனத்தில் மன்னுவாய் என ஏவினன் = பின்னர் நிதித்தியாசனம்

Koviloor Digital Library

என்னும் தெளிவு நிலையில் நிலைபெற்று இருப்பாயாக என்று கூறி அங்கே போகச் செய்தான். (எ.று)

முடிபு - தற்கொடை வள்ளல் அன்னையே! நீ கதலி மாவனத்தினை அடைந்திட்டு என்னை மேவினை கேட்ட இப்பொருளினை எல்லாம் நின்னில் நீ தெளிந்து உறுதி கொள் (பின்னர்) நிதித்தியாசனத்து மன்னுவாயென ஏவினன்.

உண்மை ஞானத்தை அடைவதற்கு தடைகள் உண்டாகும். அத்தடைகள் எவை எனில் அஞ்ஞான உணர்வும் ஐய உணர்வும் விபரீத உணர்வும் என மூன்றுமாம். இம்மூன்றையும் போக்கிக் கொள்வதற்கு கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற மூன்றும் வேண்டும். இந்த மூன்றையும் வடநூலார் முறையே சிரவணம்- மனனம் - நிதித்தியாசனம் என்பர். இந்த முன்றில் கேட்டல் என்பது தத்துவ அநுபவங்களை ஆசிரியரிடம் கேட்டலாகும். கேட்ட பொருளை தன்னுடைய அறிவால் பொருந்த ஆராய்ந்து உணர்தல் சிந்தித்தலாகும். சிந்தித்து முடிந்த முடிவின்படி அநுபவ நிலை பெறுதல் தெளிதல் என்னும் நிதித்தியாசனமாகும்.

தத்துவ வநுபோ கந்தான் சாதித்தல் கேட்ட லென்பார்
ஒத்துள பொருளு கந்தாலு சாவல் சிந்தித்த லென்பார்
சித்தமே காந்த மான தெரிசனந் தெளித லென்பார்
நித்தமிப் படிசெய் தக்கானிர் வாணம் பெறுவாய் நீயே

(கைவல். தத்து. விள. படலம் 92)

மாதேவி பருப்பதயமலையை அடைந்தது

855. வள்ளல் நாண்மலர்த்திருவடி வணங்கியம் மருங்கில்
கொள்ளை மாதவர் தாள் தொழுது அருள்விடை கொண்டு
வெள்ளம் ஆகிய அன்புநின்று உய்த்திட மேவித்
தெள்ளும் ஆரமுது அனையவள் பருப்பதம் சேர்ந்தாள் 17

(இ.ள்) தெள்ளும் ஆர் அமுது அனையவள் = தெளிந்த அரிய அமிழ்தத்தை ஒத்த வளாகிய மாதேவி; வள்ளல் நாண் மலர் திருவடி வணங்கி அம்மருங்கில் கொள்ளை மாதவர் தாள் தொழுது = பிரபு தேவரின் அன்றலர்ந்த தாமரை மலர்போலும் திருவடியை முதலில் வணங்கியும் பின்னர் அவ்விடத்திலுள்ள மிகுதியான பெரியதவத்தினருடைய திருவடியினைத் தொழுதும்; அருள் விடை கொண்டு =

Koviloor Digital Library

அவ்விருவரும் தனக்கு அருளிய நல்லாசியாகிய விடையினைப் பெற்றுக் கொண்டு; வெள்ளம் ஆகிய அன்பு நின்று உய்த்திட = நிதித்தியாசனப் பொருளை அடைவதற்கு கடல் வெள்ளம் போன்ற அன்பு -தன் மனத்தில் நின்று செலுத்த; மேவி பருப்பதம் சேர்ந்தாள் = செல்லுதலை மேவி ஸ்ரீசைலம் மலையை அடைந்தாள். (எ.று)

முடிவு - அமுதனையவள் வள்ளல் திருவடிவணங்கி அம்மருங்கி லுள்ள மாதவர்தாள் தொழுது அருள் விடை கொண்டு அன்பு நின்று உய்த்திட மேவி பருப்பதம் சேர்ந்தாள்.

கதலிவனச் சிறப்பு

856. வசவன் பாலருள் அல்லமன் உற்றென வானோா்
பசுவின் பால்நிறை சுனையிடை நழுவிவீழ் பழத்தை
மிசையும் பூங்கிளி மிழற்றொலி கடலென விரவ
இசையும் பாசிலைக் கதலியம் காடுஅதில் இலங்கும் 18

(இ.ள்) வசவன் பால் அருள் அல்லமன் உற்று என = வசவராசனிடத்தில் அருளையுடைய அல்லமதேவன் வந்து சேர்ந்தாற் போல; வானோர் பசுவின் பால் நிறை சுனையிடை நழுவிவீழ் பழத்தை = தேவர் பசுவாகிய காமதேனுவின் பால் நிறைந்து விளங்கும் சுனைக்கண் தானே நழுவி விழந்த பழங்களை; மிசையும் பூங்கிளி மிழற்று ஒலி = உண்ணுகின்ற அழகிய கிளிகள் ஒலிக்கின்ற ஓசை; கடல் என விரவ = கடல் ஓசையைப் போல கலந்துவர; பாசிலை இசையும் கதலியம் காடு அதில் இலங்கும் = பச்சையான வாழை இலைகள் பொருந்தி இருக்கின்ற கதலிவனமாகிய காடு. அச் ஸ்ரீசைல மலையில் விளங்கும்.

முடிபு - கிளி மிழற்றொலி கடலென விரவ, பாசிலை கடல்நீரை இசையும் கதலியம் காடு அதில் (மலைமேலே உள்ள கடலைப் போல) விளங்கும். எத்தகையகிளி எனின்; காமதேனுவின் பால் நிறைந்த சுனையின் கண் நழுவி வீழ்ந்த பழத்தை உண்ணுகின்ற கிளிகள். அச்சுனையிடை வீழ்ந்த பழம் எதனை நிகர்க்கும் எனில் வசவ தேவனிடத்தில் அல்லமன் உற்றதை நிகர்க்கும். கதலி வனத்துள்ள வாழை இலைகள் கடல் நீரைப் போன்றுள்ளன. கிளிகளின் மிழற்றொலி கடலின் ஓசையைப் போன்றுள்ளன. காமதேனுவின் பால் சுனையிடை உற்றது என்றது ஸ்ரீசைலமலை வானுலகத்தை அளாவியுள்ளது என்பதைக் குறிக்கின்றது. பாலில் பழம் விழுந்தாற் போல என்ற பழமொழி எடுத்தாளப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

857. விரிந்த வாழையின் நெட்டிலை மிசைநிறை மதியம்
பொருந்து மாறுவிண் முழுதையும் அளித்தருள் புத்தேள்
அருந்த வாய்மடை தொழில்திறம் நிரம்பிய அடிசில்
சொரிந்த தாமென மனங்களி கூர்தரத் தோன்றும் 19

(இ.ள்) விரிந்தவாழையின் நெட்டிலை மிசை = வாழையினுடைய விரிந்த நீண்ட இலையின்மேல்; நிறை மதியம் பொருந்துமாறு = முழுமதி பொருந்தி இருக்கும் காட்சி; விண் முழுதையும் அளித்தருள் புத்தேன் = வானுலகம் முழுதையும் அரசு செலுத்தியிருக்கும் இந்திரன்; அருந்த = உண்பதற்காக; வாய்மடை தொழில் திறம் நிரம்பிய அடிசில் சொரிந்த தாம் என = வாய்ப்புடைய சமையல் தொழிலின் கூறுபாடுகள் எல்லாம் முற்றியுள்ள உணவினை படைக்கப் பட்டதாம் என்று சொல்லும்படி; மனம் களிகூர்தரத் தோன்றும் = கண்டார் மனம் களிப்பு மிகும்படி தோன்றும். (எ.று)

முடிபு - வாழையின் விரிந்த நெட்டிலை மிசை நிறை மதியம் பொருந்துமாறு; புத்தேன் அருந்த அடிசில் சொரிந்ததாம் என மனம்களி கூர் தரத்தோன்றும். முன் உரையாசியராகிய சச்சிதானந்தாம் பிள்ளை அவர்கள் புத்தேள் என்னும் சொல்லுக்குப் பிரமன் உன்று உரை காண்பர். இப்பாட்டு உவமையணியாகும்.

858. இனைய வாழையங்காடு கண்டு எங்கள்மா தேவி
முனிவர் வானவர் யாவரும் முறைமுறை போற்றத்
தனிய ளாயொரு புறம்பசந் துளசுவை தருசெங்
கனிய வாவிய உளமொடும் இருந்தனள் களித்து 20

(இ.ள்) எங்கள் மாதேவி = எங்களுடைய மாதேவி அம்மையார்; இனிய வாழையம் காடுகண்டு = மேற் கூறியவாறு இனிமை மிகுந்த வாழைக் காட்டைப் பார்த்து; களித்து = உவப்படைந்து; முனிவர் வானவர் யாவரும் முறைமுறை போற்ற = நிலவுலகத்தில் வாழும் முனிவர்களும் வானுலகத்தில் வாழும் தேவர்களும், ஆகிய எல்லோரும் தங்களுக்குள்ள முறைமைப்படி வந்து வணங்க; தனியளாய் = தனித்த இடத்தில் தங்கு பவளாய்; ஒருபுறம் பசந்துள சுவைதரு செங்கனி அவாவிய உளமொடும். இருந்தனள் = ஒருபுறம் பச்சை நிறத்தைப் பெற்றுள்ள சுவைதரக் கூடிய சிவந்த கனிபோன்ற சிவபெருமானை விரும்பி கருதும் உள்ளத் தோடு நிருத்தியாசனத்தில் இருந்தாள்(எ.று)

Koviloor Digital Library

முடிபு - எங்கள் மாதேவி இனிய வாழையம் காடு கண்டு களித்து; முனிவர், வானவர், யாவரும் முறை முறை போற்ற தனியளாய், ஒருபுறம் பசுந்துள தருசெங்கனியை அவாவிய உள்ளத்தோடு இருந்தனள். இங்கு சிவபெருமானை ஒருபுறம் பசந்துள்ள செங்கனியாகக் கூறினர், திருநாவுக்கரசர் சிவபெருமானைக் கனி என்பர். அப்பாடல்

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈச னெனுங்கனி
இனிது சாலவும் ஏசற்றவர் கட்கே (தனி.குறு.7)

மாதேவி அல்லம தேவரிடம் கேட்ட சிரவணப் பொருளைச் சிந்தித்து நிட்டை கூடுதலுக்காக ஸ்ரீசைலத்துள்ள கதலிவனத்தை அடைந்தாள். அவ்விடத்தைப் பார்த்ததும். இவ்விடம் தகுதியுனடத்து என்று களித்தாள். அங்கே தனித்த இடத்திலிருந்து தன்னுடைய சிவயோகத்தைச் செய்யத் தொடங்கினுள்

யோகச் செயலை பகவத்கீதை,

தலையாமிந்த யோகத்தைத் தலைநின்றொழுகுந் தன்மைகேள்
உலையாவாசை யறமாற்றி யொன்றுந் தனக்கென் றொழுகாதே
மலையார் முழைஞ் சேமுதலாக யோகங்களுக்கு வகுத்துரைத்த
நிலையாவையினு மொன்றினில் வந்தியாது நலியா நிலந்தனிலே

ஒக்கும் வகையாற் குசை பரப்பி யதன் மேலுழையின் தோல் படுத்து
தக்க புடைவையதன் மேலே விரித்துத் தானங் கதிலிருந்து
மிக்க மனனையற வொடுக்கி வேறு செய்யும் வினைகளுடன்
தொக்க புலன் கடமையடக்கி யுணர்வு தூய்தாவதன் பொருட்டால்

தலையுங் கழுத்தும் உடம்புமிவை செவ்வேதள ராதேயிருத்தி
நிலையிலிருந்து கண்களைத்தன் மூக்கு நுனிமேலே நிறுத்தி
அலையுங்கடல் போல் காமமு மெய்ப் பயமுந்தன்னை விட்டகல
உலையுமனமுள் ளடக்கியெனை யுணர்ந் தேஇருக்கு மதுயோகம்

இவ்வாறு கூறும்.

பதினேழாவது கதலிவன கதி முற்றும்

Koviloor Digital Library

பதினெட்டாவது

சாதகாங்க கதி

சாதகம் + அங்கம் + கதி என்னும் சொற்கள் சேர்ந்து சாதகாங்ககதி எனப்புணர்ந்தன. சாதகம் என்பதை சுவாமிகள் மன அடக்கம் என்று கூறுகின்றார். இதையே மூன்றாவது பாட்டில் இக்கதி (சாதக மூன்று) முத்தி சாதனம் என்பர். கன்னட பிரபுலிங்கலீலை இதனைப் பிராணலிங்க உபதேச கதி என்று கூறும். இக்கதியுள் அங்கே கதலிவனச் செய்தியும் சாதகாங்ககதிச் செய்தியும் சேர்த்துக் கூறப்பட்டுள்ளன. வீரசைவ நெறி யினராகிய பக்தர். மாகேசர் பிரசாதி என்னும் கர்ம யோகிகளுக்கு இலிங்க நிஷ்டையும்; பிராணலிங்க சரணன் ஐக்கியன் என்னும் ஞானயோகிகளுக்கு சிவயோகசமாதியும் சித்தாந்த சிகாமணியில் கூறப்பட்டுள்ளன. இங்கு சாதகாங்க கதியில் கூறப்படும் செய்தி. அந்த ஞானயோகிகளுக்கு உரிய சிவயோக சமாதிக்கு அங்கமாகப் பயன் படுவனவாகும். இதற்கு சாதன கதி என மற்றொரு பெயரும் உண்டு.

859. வினைய டுத்த விழுமம் துடைத்தெமக்(கு)
அனைய டுத்த அருளுடை அல்லமன்
மனன்அ டக்கம் வசவற்(கு) உணர்த்துதல்
தனையெ டுத்தினி சாற்றுதும் நாமரோ 1

(இ.ள்) எமக்கு அனை அடுத்த அருள் உடை அல்லமன் = எங்களுக்கு எல்லாம் தாயின் அருள் போன்ற பொருந்தும் அருளுடைய அல்லமன்; வசவற்கு வினை அடுத்த விழுமம் துடைத்து மனம் அடக்கம் உணர்த்துதல் தனை = வசவராசனுக்கு இருவினை காரணமாக வரும் துன்பங்களை எல்லாம் போக்கி மன அடக்கம் உணர்த்துதல் தன்னை; இனி எடுத்து நாம் சாற்றுதும் = இனிமேல் சாதனங்ளைச் சொல்லும், யோக நூல்களிலிருந்து நாம் அவற்றைச் சொல்லுவோம்.(எ.று)

முடிபு - அல்லமன் வசவற்கு விழுமம் துடைத்து மனம் அடக்கம் உணர்த்துதல் தன்னை நாம் எடுத்து இனிச் சாற்றுதும்.

வசவன் அல்லமரிடம் விண்ணப்பித்துக் கொள்ளுதல்.

860. காவில் நீடும் கதலி வனத்துமா
தேவி போதத் திருவருள் செய்தவண்
மேவி ஞான விளக்குற எம்முடை
ஆவி போலும் வசவன் அறைகுவான் 2

Koviloor Digital Library

(இ.ள்) ஞானவிளக்கு = ஞானவிளக்காகிய அல்லமதேவன்; காவில் நீடும் கதலி வனத்து மாதேவி போதத் திருவருள் செய்து = பலவனங்களில் மிக்குவிளங்கும் கதலி வனத்தின்கண், மாதேவி அம்மையார். போய்த்தங்குமாறு திருவருள் செய்து கூறி; அவண்மேவி உற = கல்யாணபட்டிணத்தில் வசவர் மாளிகையிலுள்ள சிவாநுபவ மண்டபத்தில் தங்கி இருக்க; எம்முடை ஆவி போலும் வசவன் அறைகுவான் = (அப்பொழுது) எம்முடைய உயிர் போன்ற வசவ தேவன் அல்லமதேவிரிடம் விண்ணப்பிக்கத் தொடங்குகின்றார். (எ.று)

முடிபு - ஞானவிளக்கு மாதேவி கதலிவனத்துக்கு போகத் திருவருள் செய்து அவண் மேவியுற எம் ஆவி போலும் வசவன் அறைகுவான். திருவருள்செய்து கூறுதலை திருவருள் செய்து என்றார். ஸ்ரீசைலத்திலே பலவனங்கள் உள்ளன. அவற்றுள் கதலிவனம் மிகச் சிறந்தது ஆதலின் காவில் நீடும் கதலி வனம் என்றார்.

வசவர் விண்ணப்பத்தைக் கேட்டு அல்லமர் உபதேசிக்கத் தொடங்குதல்

861. [1]மத்தர் வாத மயக்கம் இலாதுயர்
முத்தி சாதனம் ஒன்று மொழிந்தருள்
அத்த நீஎன்(று) அடிகள் தொழுதெழப்
பத்தி வேண்டும் பரமன் பகருமால் 3

(பா.ம்) [1]மத்தவா

(இ.ள்) அத்த நீ = ஞானத்தந்தையே! நீ; மத்தர் வாத மயக்கம் இலாது = அறியாமையால் மயங்கிய மயக்க முடையவரால் தர்க்கித்து கூறப்படும், பொய்பொருளில்லாது உயர் முத்திசாதனம் ஒன்று மொழிந்தருள் என்று அடிகள் தொழுது எழ = உயர்ந்த வீடுபேற்றினை அடைவதற்குக் கருவியான ஒன்றினை எனக்கு உபதேசித்து அருள் வாயாக என்று கூறி பிரபு தேவரின் திருவடிகளை வணங்கி எழ; பத்தி வேண்டும் பரமன் பகரும் = அடியவரிடத்துள்ள பத்தி ஒன்றனையே விரும்புகின்ற அல்லம தேவன் இவற்றைக் கூறத் தொடங்கினான்.

முடிபு - அத்த நீ மயக்கமிலாது உயர் முத்தி சாதனம் ஒன்றை மொழிந்தருள் என்று அடிகளைத் தொழுது எழ (இதனைக் கேட்ட, பரமன்பகரும். மயக்கமிலாது மயக்கம் கொண்டு கூறும் ஐய விபரீதப் பொருளாகிய பொய்ப் பொருள் இல்லாது என்பது பொருள்.

Koviloor Digital Library

862. பரம முத்தி பதம்பெறும் ஏதுவுள்
கரண சுத்தி யதனது காரணம்
அரண் எரித்த அமலன் குறித்தநல்
கிரியை இத்திறம் வேதம் கிளக்குமால் 4

(இ.ள்) பரம முத்தி பதம் பெறும் ஏது = மேலான முத்தியாகிய பதத்தை ஒருவர் பெறுதற்குக் காரணமாவது; உள்கரண சுத்தி = உட் கரணம் என்னும் அந்தக் கரணத்தூய்மையே காரணமாகும்; அதனது காரணம் அரண் எரித்த அமலன் குறித்த நல்கிரியை அந்த அந்தக் கரண சுத்திக்குக் காரணமாவது; திரிபுரங்களை எரித்த மலமற்ற சிவபெருமானைக் கருதிய புறப்பூசையும் அகப்பூசையுமாகும்; இத்திறம் வேதன் கிளக்குமால் = இக்கூறுபாடான மொழிகளை அறிவு நூல்களாகிய சிவாகமங்கள் கூறும். (எ.று) ஆல் அசை.

முடிபு - முத்திப்பதம் பெறும் ஏது. உட்கரண சுத்தி (ஆகும்) அதனது காரணம். அமலன் குறித்த நல்கிரியை(ஆகும்) இத்திறங்களை வேதம் கூறும். உட்கரணம் என்பது அந்தக் கரணங்களை உள்ளம், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் ஐந்தென்றும் மனம் புத்தி சித்தம் அங்காரம் என்று நான்கென்றும் மனம், புத்தி என இரண்டு என்றும் கூறுவர். அரண் எரித்த அமலன் என்பது ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களின் காரியங்களை தீட்சையால் எரித்த குற்ற மற்றவன் என்று பொருள். இக்கருத்தை,

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பார்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே

(திருமந்திரம் 343) பாடலால் அறிக.

863. மனம்இ லிங்கம் மருவிலை யேலுடல்
தனிலி லிங்கம் தரித்தும் இலைஇலை
எனஇ[1] யம்பும் இணையிலி ஆகமம்
நினைவ ரன்கழல் நிற்க நிறுத்தினாய் 5

(பா.ம்) [1]விளம்பும்

(இ.ள்) நினைவு அரன் கழல் நிற்க நிறுத்தினாய் = மனத்தின் நினைவை சிவபெருமானுடைய திருவடியிலேயே நிற்குமாறு நிறுத்திய

Koviloor Digital Library

வசவ தேவனே!; மனம் இலிங்கம் மருவு இலை மேல் =ஒருவனுக்கும் உடம்பு வகையைச் சார்ந்த மனமானது; மந்திர வடிவாகிய இலிங்கத்தை அணிந்ததில்லன ாயின்; உடல் தனில் இலிங்கம் தரித்தும் = தூல உடலின் கிரியாவடிவமான இஷ்டலிங்கத்தை அணிந்திருப்பினும்; இணையிலி ஆகமம் இலை; இலை என இயம்பும் = ஒப்பற்ற சிவபெருமானால் செய்யப்பட்ட சிவாகமங்கள் இவனுக்கு இலிங்கதாரண மில்லை இலிங்கதாரண மில்லை என்றே கூறும்.

முடிபு - நினைவை அரன் கழலில் நிறுத்தினாய் இணையிலி ஆகமம் மனம் இலிங்கம் மருவிலையேல், உடல் தனில் இலிங்கம் தரித்தும் இலை இலை என இயம்பும். சித்தாந்த சிகாமணி குருகாருண்ய தலத்தின் கடைசியில், ஆண்டு அருகிருந்த சித்தனாகிய மாணக்கன் தன் வலக்காதின் கண் பவம் பிணி மருந்தாய் நல்லோர் வேண்டும் ஐந்தெழுத்தை மெல்லவிளம்ப வேண்டுமென்றும் (குருகாருண்யத்தலம் பாட்டு 12.) அதன் பின்னரே இலிங்கதாரணம் செய்ய வேண்டுமென்று கூறும். ஆக பஞ்சாக்கரம் இலிங்கவடிவானது.

மனம் இலிங்கம்மருவாமல் செய்யும் இட்டலிங்க
பூசை பயனில்லை என்பது

864. தாவி லாத மனமொடு சார்தராது
ஓவும் ஆயின் உலகில் புனலு[1]மொண்
பூவும் நாள்தோறும் போக்குறு பூசனை
ஆவி போகிய ஆகம் நிகர்க்குமால்.

(பா.ம்) [1]மென் பூவும்

(இ.ள்) தா இலாத மனமொடு சார்தராது ஓவும் ஆயின் = குற்றமில்லாது தூய்மை பெற்ற மனத்தொடு இலிங்கம் பொருந்தாது நீங்குமாயின்; ஒடு உருபை கண் உருபாசத்திரித்துக் கொண்டு; மனத்தின் கண் இலிங்கம் சார்தராது ஓவுமாயின் எனவும் பொருள் கொள்க, உலகில் புனலும் ஒண்பூவும் நாள்தொறும் போக்குறும் பூசனை = இவ்உலகத்தின் கண் நாள் தோறும் அபிஷேகிக்கும் நீரையும் பூசிக்கும் பூவையும் செலவழித்துக் செய்யும் பூசை எல்லாம் ஆவிபோகிய ஆகம் நிகர்க்கும் = உயிர் கழிந்த உடம்பை நிகர்க்கும் (எ.று)

முடிபு - மனமொடு (இலிங்கம்) சார்தராது ஓவுமாயின் உலகில் புனலையும் பூவையும் நாடொறும் போக்கும் பூசனை ஆவி போகிய ஆகம் நிகர்க்கும். மேல்பாட்டில் மனம் இலிங்கத்தை மருவாதாயின்

Koviloor Digital Library

உடம்பில் இலிங்கம் தரித்தும் இலையிலை என்றார். இங்கு அத்தரித்துக் கொண்டுள்ள இலிங்கத்தைப் பூசிக்கும் பொழுது மனத்தின்கண் இலிங்க உணர்வுகள் இல்லாவிடில், அப்பூசை ஆவிபோகிய ஆகத்தை நிகர்க்கு மென்றார். எனவே சிவபூசைக்கு உயிரானது மனம் இலிங்கத் தொடுமரு வுதல் என்க.

865. புறம்பு காண்குவன் புல்லியன் ஈசனை
அறிந்த ஞானி [1]அகம்உற காண்பனால்
எறும்பி காணுறில் இன்கரும் பேகொளும்
செறிந்த ஆடிலை தின்பன் என்பவே 7

(பா.ம்) [1]அகம் புறம்

(இ.ள்) புல்லியன் ஈசனை புறம்பு காண்குவன் = அற்ப அறிவையுடைய ஒருவன் இறைவனை தனக்குப் புறத்தேயே காண்பன்; அறிந்த ஞானி = முற்றும் அறிந்த ஞானியானவன்; ஈசனை அகம் உறகாண்பன் = இறைவனை தனக்கு உள்ளேயே கண்டு கொள்வன்; (அகம் புறம் என்ற பாடத்திற்கு உள்ளும் புறமும் ஆகிய எல்லா இடத்தும் இறைவன் உள்ளான் என்பதை அறிந்து காண்பான் எனப் பொருள் படுமாறு அறிக.) எறும்பி காணுறில் இன் கரும்பே கொளும் = யானை யானது கரும்பு ஒன்றினைக் கண்டால் மேலே இருக்கும் சோலை முதலானவற்றைப் போக்கி விட்டே உள்ளிருக்கும் கரும்புத் தட்டையே கொள்ளும்; செறிந்த ஆடு இலைதின்பன என்பவே = பொருந்திய ஆடானது உள்ளே உள்ள கரும்புத்தட்டையைத் தின்னாமல் மேலேயுள்ள அதன் இலையையே தின்னும் (எ.று)

(முடிபு) புல்லியன் ஈசனைப் புறம்பு காண்குவன். அறிந்த ஞானி ஈசனை அகமுறக் காண்பன் எறும்பி காணுறில் இன் கரும்பே கொளும் ஆடு இலைதின்பன என்ப. புல்லியன் புறப் பார்வையுடையவன் ஞானி அகநோக்குடையவன் என்பதாயிற்று. இது வேற்றுப் பொருள்வைப் பணியாகும்.

866. கரங்கள் நல்ல கருமம் செயாநிற்பத்
திரிந்து செல்லும் செலாதஇ டந்துநெஞ்(சு)
ஒருங்கு உறாத ஒருமனம் தன்னினும்
பரந்த அல்லல் படுக்கும் பகையிலை 8

(இ.ள்) கரங்கள் நல்லகருமம் செயாநிற்ப = ஒருவனுடைய கைகள் சிவபூசை முதலிய செயல்களையே செய்து கொண்டு இருப்ப; நெஞ்சு

Koviloor Digital Library

திரிந்து செலாத இடத்துச் செல்லும் = அப்பொழுது அவருடைய மனமானது சிவ பூசை முதலான செயல்களில் வேறுபட்டு செல்லத்தகாத தீய இடங்களிலேயே சென்று கொண்டிருக்கும்; ஒருங்கு உறாத ஒரு மனம் தன்னினும் = செய்யும் செயல்களொடு பொருந்தி உறாத இத்தகைய மனத்தைக் காட்டிலும் பரந்த அல்லல் படுக்கும் பகை இல்லை = மிகுந்த துன்பத்தை உண்டாக்கும் பகை வேறொன்று இல்லை.(எ.று)

முடிபு - கரங்கள் நல்ல கருமம் செயா நிற்ப (அப்பொழுது) நெஞ்சும் திரிந்து செல்லாதவிடத்துச் செல்லும். ஒருங்கு உறாத ஒருமனம் தன்னினும் அல்லல்படுத்தும் பகை(வேறு)இலை. செயலோடு ஒருங்குபடாத மனமுடையவனுக்கு அவன் மனமே பகை என்பதாம்.

867. துயிலை இன்பென சொல்லுதல் இந்தியத்து
இயலும் நெஞ்சம் இலாமையி னாலன்றோ
பயிலும் நெஞ்சம் பரந்து திரிதரும்
செயலில் இல்லை சிறிதும் சுகமரோ 9

(இ.ள்) துயிலை இன்பு என சொல்லுதல் = சுழுத்தி உறக்கத்தை பிரமானந்தமாகிய இன்பம் என்று சொல்லுதலுக்குக் காரணம்; இந்தியத்து இயலும் நெஞ்சம் இலாமையினாலன்றோ = ஞானேந் திரியம் கன் மேந்திரியம் என்னும் இந்திரியங்களோடு கூடி நடக்கின்ற மனம் அச்சுழுத்தியில் இல்லாமையினால் அன்றோ (அல்லவா) பயிலும் நெஞ்சம் பரந்து திரிதரும் செயலில் = இந்திரியங்களில் பயின்று திரியும் நெஞ்சம் அது ஒரு நிலையில் நில்லாமல் மிகுந்து திரியும் செயலில்; சிறிதும் சுகமரோ = சிறிதும் இன்பமில்லை; (எ.று)

முடிபு - துயிலை இன்பெனச் சொல்லுதலுக்கு (காரணம்) இந்தியத்து இயலும் நெஞ்சம் (அங்கு) இலாமையினால் அன்றோ பயிலும் நெஞ்சம் பரந்து திரிதரும் செயலில் சிறிதும் சுகமில்லை. துயில் சுழுத்தித் துயில் என்றும் கனாத்துயில் என்றும் இருவகைப்படும். அவ்விரண்டுள் இங்கு துயில் என்றது சுழுத்தி துயிலை என்க. சுழுத்தி துயிலை நித்திரைப் போதுளது பிரமசுகமாம் என்ற அடியினால் பிரம்மானந்தம் என்று கூறுகின்றது கைவல்யம் (264 ம் பாடல்) சுழுத்தித்துயிலில் திரிபுடி உணர்ச்சி இல்லாமல், ஆன்மாவாகியதான் பரமான்மாவுடன் ஒன்றியிருக்கும். (கைவல்யம் 266.) என்று கூறும் கைவல்யம்.

Koviloor Digital Library

868. மனம் ஒருத்தன் வசப்படு மேல்அவன்
பினைவ ருத்தும்பிறப்பை அடைந்திடான்
மனம்ஒ ருத்தன் வசப்படாது ஓடுமேல்
நனிபி றப்பிடை நாளும் சுழலுமே 10

(இ.ள்) மனம் ஒருத்தன் வசப்படுமேல் = அந்தக் கரணங்களில் ஒன்றாகிய மனம் ஒருவன் வசப்பட்டு நடக்குமேயானால்; அவன் பினை வருத்தும் பிறப்பை அடைந்திடான் = அத்தகையோன் பின்னர் தன்னைத் துன்புறுத்துகின்ற பிறவி நிலையை அடைய மாட்டான்; மனம் ஒருத்தன் வசப்படாது ஓடுமேல் = அம்மனம் ஒருவன் வசப்பட்டு ஒழுகாமல் உலகப் பொருள்களில் வரம்பு கடந்து ஓடுமேயானால்; நனி பிறப்பிடை நாளும் சுழலுமே = நாள் தோறும் மிக்க பிறவி நெறியின்கண்ணேயே சுழன்று கொண்டிருக்கும் (எ.று)

முடிபு - மனம் ஒருத்தன் வசப்படுமேல் அவன் பிறப்பை அடைந்திடான். மனம் ஒருத்தன் வசப்படாது ஓடுமேல் நாளும் பிறப்பிடைச் சுழலும் ஆகவே இங்கு பிறப்பு என்றது, பிறந்தும் இறந்தும் வருகின்ற சம்சார நெறியை; இதனை,

பிறந்தவற்கு உண்மையே பெறும் இறப்பு மற்றும்
இறந்தவர்க்கு அன்னதே பிறப்பும் இவ்வகை
செறிந்துள பிறப்புடன் இறப்பில் சீவனும்
மறிந்திடு சகடமே போல வந்துறும்

(சித். சம்சாரநீக்கத்தலம் 3ம்பாடல்) என்னும்.

இல்லறம் துறவறம் இரண்டையும் அடையத் துணைபுரிவது மனம்

869. அறவி னைக்கும் அரும்பொருள் இன்பொடு
பெறுவ தற்கும் பெருங்கல்வி கற்றுயர்
விறலி னுக்கும்நல் வீரம் தனக்கும்ஒண்
துறவி னுக்கும் துணைமனம் என்பவே 11

(இ.ள்) அறவினைக்கும் = இல்லறச் செயலைச் செய்வதற்கும்; அரும் பொருள் இன்பொடு பெறுவதற்கும் = பெறுதற்கரிய பொருளை இன்பத்தொடு அடைவதற்கும்; பெரும் கல்விகற்று உயர் விறலினுக்கும் = பெரியவித்தைகளைக் கற்று அதில் உயர்ந்த வலிமை பெறுவதற்கும்; வீரம் தனக்கும் = போரிலே வீரச்செயல் புரிவதற்கும்; ஒண்துறவினுக்கும்

Koviloor Digital Library

= இவையல்லாமல் அறிவுடைய துறவறநெறியை மேற்கொண்டு செய்யும் தவம் முதலான செயல்களுக்கும் துணைமனம் என்பவே = துணையாயிருப்பது மனம் என்னும் அகக்கருவி என்று அறிஞர் கூறுவர் (எ.று)

முடிபு - அறவினைக்கும், பொருளை இன்பொடுபெறுவதற்கும், கல்வி கற்றுயர் விறலினுக்கும், வீரம் தனக்கும், ஒண்துறவினுக்கும் துணையாவது மனம் என்ப (ஏகாரம் ஈற்றசை) உம்மைகள் யாவும் எண்ணும்மைகளாம்.

870. நல்ல செய்து நரரை உயர்த்தவும்
அல்ல செய்தங் களற்றிடை ஆழ்ப்பவும்
வல்லது இந்த மனமலது ஐயனே
இல்லை என்ன இயம்பும் மறைஎலாம் 12

(இ.ள்) ஐயனே; வசவராசனே! = நல்ல செய்து நரரை உயர்த்தவும் = நற்செயல்கள் பலவற்றை செய்வித்து மக்களை உயர்த்துவதற்கும்; அல்லசெய்து அங்கு அளற்றிடை ஆழ்ப்பவும் = நல்லது அல்லாத செயல்களைச் செய்வித்து அப்பொழுது அவர்களை நரகத்தின் கண் ஆழ்த்துதற்கும்; வல்லது = வல்லமை படைத்தது; இந்தமனம் அலது இல்லை என்ன மறைஎலாம் இயம்பும் = இந்த மனம் என்னும் அகக் கருவி அல்லது உடம்பினுள் வேறு ஒரு கருவியும் இல்லை என அறிவுநூல் களெல்லாம் கூறும். (எ.று)

முடிவு - ஐயனே! நல்ல செய்து நரரை உயர்த்தவும் அல்ல செய்து அளற்றிடை ஆழ்ப்பவும் வல்லது இம்மனம், அலது இலை என மறை எலாம் இயம்பும். அலது என்பது அல்லாதது எனப் பொருள்படும் குறிப்பு வினையாலணையும் பெயர்.

871. நெஞ்சம் மாதுமை நேசனை நண்ணுமேல்
விஞ்சு பாதகம் கோடி விளைப்பினும்
அஞ்சு ரானவன் அவ்வினை யாவையும்
பஞ்சு தீயிடைப் பட்டென மாயுமே 13

(இ.ள்) நெஞ்சம் மாது உமை நேசனை நண்ணுமேல் = மேல் கூறிய வாறு சிறப்பைப் பெற்றுள்ள மனம் என்னும் ஒருவனுடைய அகக் கருவியானது அழகிய உமாதேவியையுடைய இறைவனை அடையுமே யானால்; அவன் விஞ்சு பாதகம் கோடி விளைப்பினும் அஞ்சுரான் = அத்தகையோன் மிக்க கோடிக் கணக்கான பாவங்களை விளைவித்திருந்

Koviloor Digital Library

தாலும் அவற்றிற்காக அஞ்சமாட்டான்; அவ்வினையாவையும் பஞ்சு தீயிடைப்பட் டெனமாயுமே = அந்த வினைகள் எல்லாம் நெருப்பிடைப் பட்ட பஞ்சுப் பொதி போல அழிவுறும்.(எ.று)

முடிவு - நெஞ்சம் உமைநேசனை நண்ணுமேல் பாதகம் கோடி விளைப்பினும் அவன் அஞ்சுரான். அவ்வினையாவும் தீயிடைப்பட்ட பஞ்செென மாயும்.

பதஞ்சலி யோக சூத்திரங்கள் தவமும் ஸ்வாத்தியாயமும் ஈஸ்வரப் பிரணிதானமும் ஆகிய இவை கிரியாயோகம் என்னும். இம் மூன்றும் அவித்தை அகங்காரம் இராகம் துவேஷம் பற்று என்கிற ஐந்து கிலேசங்களையும் குறைத்து சமாதி நிலையை உண்டாக்கும் என்றும் கூறும். அவற்றுள் இங்கு நெஞ்சம் மாதுமைநேசனை நண்ணுதல் ஈஸ்வர பிரணிதானமாகும்.

872. **மக்கள் மானிடர் என்று மனத்தினால்**
மிக்க மேன்மை விளங்கினர் இல்எனில்
பொக்கம் மேவும் பொறிகள்ஓர் ஐந்தினால்
ஒக்கும் மாவினை ஒத்துயர் உற்றிடார்

(இ.ள்) மக்கள் = மக்களென்று வழங்கப்படுபவர் மனத்தினால் மானிடர் என்று மிக்க மேன்மை விளங்கினர் = மனம் என்னும் அகக் கருவியைப் பெற்ற காரணத்தினால் மானிடர் என்று பெயர் கூறப்பட்டு மிகவும் மேன்மை பெற்று விளங்கினர்; இல்எனில் = இவ்வாறு இல்லையாயின்; பொக்கம் மேவும் பொறிகள் ஓர் ஐந்தினால் ஒக்கும் மாவினை ஒத்து உயர் உற்றிடார் = தீயபண்புகளைப் பொருந்தி இருக்கும் ஐந்து பொறிகளாலே ஒத்துச் செய்யப்படும் விலங்குகளை ஒத்து உயர்ந்த இயல்பை அடையமாட்டார் (எ.று)

முடிபு - மக்கள் மனத்தினால் மானிடர் என்று மேன்மை விளங்கினார். இல்லை எனில் பொறிகள் ஓர் ஐந்தினால் ஒக்கும் மாவினை ஒத்து உயர்வு உற்றிடார். ஐந்தினால் ஒக்கும்மா என்றது. ஐந்து பொறிகளால் மட்டும் ஒத்துச் செயல்படுகின்ற விலங்குகள் என்று பொருள்படும். மக்கள் மனம் என்னும் ஆறாவது அறிவைப் பெற்று விளங்குவதால் அவர் மானிடர் என்று கூறப்பட்டனர் என்க. எனவே மனத்தினால் செயல்படுவரே மக்களாயிற்று. மாவும் மக்களும் ஐயறிவினவே, மக்கள் தாமே ஆறு அறிவுயிரே. (தொல். மரபு.32 - 33) எனவே மனஅறிவு நன்கு விளங்கப் பெற்றவரே மக்களவார். மன அறிவு

Koviloor Digital Library

விளங்காமல் ஐந்து அறிவுகளை மட்டும் பெற்றவர் விலங்குகளை ஒத்த மாக்களாவர் என்பது கருத்து. எனவே மக்கள் ஆறறிவுடையவர், அம்மக்களே மனஅறிவின் சிறப்பில்லாமல், ஐம்புல அறிவையே பெற்றிருந்தால் மாக்களாவார்; மா என்பது, ஐந்து அறிவையுடைய விலங்குகளாகும். மக்கள் மாக்கள் மா என்று வேறு பாட்டினை அறிக. மன ஏவ மனுஷ்யாணும். காரணம் பந்த மோஷயோ என்பது அமிர்தபிந்து உபநிஷத்து.

873. கெடுக்க வல்லதும் கெட்டவர் தங்களை
எடுக்க வல்லதும் இம்மனம் என்றதை
அடக்க வல்லவன் ஐய பவக்கடல்
கடக்க வல்லவன் ஆவன் கடிதரோ 15

(இ.ள்) ஐய = வசவராசனே; கெடுக்க வல்லதும் = அடங்காமல் ஒழுகி கெடுக்க வல்லதும்; கெட்டவர் தங்களை எடுக்க வல்லதும்; கெட்டுப் போனவர்களை அடங்கி ஒழுகி உயர்த்த வல்லதும்; இம்மனம் = இம்மனமாகும்; என்று அதை அடக்க வல்லவன் = என்று அதன் இயல்பை அறிந்து அம் மனத்தை அடக்கி நடத்த வல்லவனே; பவக்கடல் கடிது கடக்க வல்லவன் ஆவன் = பிறவிக் கடலை விரைந்து கடக்கும் வல்லமை படைத்தவன் ஆவன் (அரோ அசை) (எ.று).

முடிபு - ஐயனே கெடுக்க வல்லதும் கெட்டவர் தங்களை எடுக்க வல்லதும் இம்மனம் என்று அதை அடக்க வல்லவன் பவக்கடலைக் கடிது கடக்க வல்லவன் ஆவன்.

874. ஆயின் மிக்கோர் அரிய செயலெலாம்
நேயம் மிக்க மனத்தை நிறுத்தல்காண்
வாயு நிற்க மனமும் உடன்நிற்கும்
தோயம் நிற்குறில் நிற்கும் துரும்புமே 16

(இ.ள்) ஆயின் = நாம் ஆராய்ந்து பார்ப்போமாயின்; மிக்கோர் அரிய செயல்எலாம் = ஆற்றல் மிக்கோருடைய செய்தற்கரிய செயல்கள் எல்லாம்; நேயம் மிக்க மனத்தை அடக்கல் காண் = தம்மொடு பொருந்துதல் மிகுந்த மனம் என்னும் அகக் கருவியை அடக்கி ஒழுகும் செயல் ஒன்றுமே என்பதைக் காண்பீராக; அதனை எவ்வாறு அடக்குதல் எனில்? வாயு நிற்க மனமும் உடன் நிற்கும் = முச்சுக்காற்று இயங்காமல் கும்பகப்பட்டு நின்றால் அக்காற்றைப் பற்றி இயங்குகின்ற மனமும் உடனே நின்று விடும்; எது போல் எனில்? தோயம் நிற்குறில் நிற்கும்

Koviloor Digital Library

துரும்புமே = ஆற்றுநீர் ஒடாமல் நிற்குமாயின் அதில் மிதந்து வரும் சிறு துரும்பும் நின்று விடுதல் போல. (எ.று)

முடிவு - ஆயின் மிக்கோரது அரிய செயல் எல்லாம். மனத்தை அடக்கல் காண். வாயு நிற்க மனமும் உடன் நிற்கும். தோயம் நிற்குறில் துரும்பும் நிற்கும்.

875. ஓடும் மாவை நிறுத்துறின் உள்ளுறக்
கோடும் வாய்க்கலி னத்தினைக் கொள்ளுவார்
நீடும் மாமனம் நிற்க நிறுத்துறில்
ஓடும் வாயுவை உள்ளுற ஈர்ப்பரால் 17

(இ.ள்) ஓடும் மாவை நிறுத்துறின் = ஓடிக் கொண்டே இருக்கும் குதிரையை; ஒருவர் நிறுத்தத் தொடங்கின்; வாயின் உள்உற கோடும் கலினத்தினைக் கொள்ளுவார் = வாயின் உள்பொருந்தக் கொண்டிருக்கும் கடிவாளத்தினை இழுத்துப் பிடித்துக் கொள்ளுவார். (அது போல) நீடும் மாமனம் நிற்க நிறுத்துறில் ஓடிக் கொண்டிருக்கும் குதிரையை ஒத்த மனத்தை நிலை பெறும்படி நிறுத்தத் தொடங்கினால்; ஓடும் வாயுவை உள்ளுற ஈர்ப்பர் = ஓடிக்கொண்டே இருக்கும் மூச்சுக் காற்றினை உள்ளே பொருந்தும் படி இழுத்துக்கும் பகம் செய்வர். (ஆல் - அசை) (எ.று)

முடிபு - ஓடும்மாவை நிறுத்துறின் கலினத்தினைக் கொள்வார் (அதுபோல்) மனம் நிற்க நிறுத்துறில் ஓடும்வாயுவை உள்ளுற ஈர்பர். (ஆல் அசை) கலிநம் என்னும் வடசொல் கலினம் எனத்திரிந்து நின்றது.

ஓடுங் குதிரைக் குசைதிண்ணம் பற்றுமின்
வேடங் கொண்டென் செய்வீர் வேண்டா மனிதரே
நாடுமின் நந்தியை நம்பெருமான் தன்னைத்
தேடும் இன்பப்பொருள் சென்றெய்தலாமே
(1679 திருமந்திரம்)

876. அடுத்த நாடிகள் ஆங்கொரு மூன்றினும்
விடுத்து வாங்கியும் மேவ நிறுத்தியும்
தடுத்தும் வாயுவைத் தன்வசம் [1]ஆக்கின்வாய்
மடுத்தி டாது மனமும் வசப்படும் 18

(பா.ம்) [1]ஆக்கில்வாய்.

Koviloor Digital Library

(இ.ள்) வாயுவை = முச்சுக்காற்றை; அடுத்த நாடிகள், ஆங்கு ஒரு மூன்றினும் - பொருந்திய நாடிகளாகிய இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்றினிடைத்தும் பயிலுமாறு; விடுத்து வாங்கியும் - வாயுவை வெளியே விட்டு (இதனை ரேசகம் என்பர்) அதனை உள்ளே இழுத்தும் (இதனை பூரகம் என்பர்) மேவநிறுத்தியும் = பொருந்துமாறு அக்காற்றை உள்ளே நிற்கும் படிசெய்தும்(இதனைக் கும்பகம் என்பர்) தடுத்தும் = இவ்வாறு மிக்ககாலம் வரை தடுத்து வைத்திருந்தும்; தன்வசம் ஆக்கின் = தன்விருப்பப்படி நடக்கு மாறு வசப்படுத்திக் கொண்டால்; மனமும் வாய் மடுத்திடாது வசப்படும் = வசப்படாது ஒழுகும் மனம்தானும் இந்திரியங்களின் வழி நடக்காது வசப்படும் என்க(எ.று).

முடிபு - வாயுவை நாடிகள் ஆங்கொரு மூன்றினும்(பயிலுமாறு) விடுத்து வாங்கியும் நிறுத்தியும் தடுத்தும் தன்வசம் ஆக்கின் மனமும் வாய் மடுத்திடாது வசப்படும்.

மூச்சுக்காற்று இடது மூக்காகிய இடைகலை நாடியிலும்; வலது மூக்காகிய பிங்கலை நாடியிலும் இடது மூக்கு வலது மூக்கு என்னும் இரண்டும் சேர்ந்த சுழுமுனை நாடியிலும் பயிலுமாறு விடுத்து வாங்கி நிறுத்த வேண்டும் என்க.

தடுத்தும் என்றது காலம் ஒன்றுக்கொன்று அதிகமாகும் படி அக்காற்றை நிறுத்திப் பழகுதல்; தொடக்கத்தில் ஒரு குறிப்பிட்ட கால அளவும் அதன் பின்னர் சிறிது சிறிதாக அதிகரித்துக் கொண்டே போய் மிக்க பொழுதுவரை தடுத்த வைத்திருப்பது. வாய் மடுத்திடாது என்ற சொல்லில் வாய் என்பது ஞானனேந்திரியங்கள் முதலானவற்றை. வாய் என்பது வாய்தல்.

சமநிலை பெற்ற மனமே நன்மனம்

877. **ஓடும் பொன்னும் உறவும் பகையுமோர்**
கேடும் செல்வமும் கீர்த்தியும் நிந்தையும்
வீடும் கானமும் வேறற நோக்குதல்
கூடும் தன்மை கொளும்மனம் நன்மனம் 19

(இ.ள்) ஓடும் பொன்னும் = மண் ஓட்டையும் பொன்னையும்; உறவும் பகையும் = நண்பாவாரையும் பகையாவாரையும்; கேடும் செல்வமும் = வறுமை நிலையும் செல்வநிலையும்; கீர்த்தியும் நிந்தையும் = ஒருவர் புகழ்ந்து பேசுதலும் பழித்துப் பேசுதலும்; வீடும் கானமும் = வீட்டிலே வாழ்தலும் காட்டிலே வாழ்தலும்; வேறு அறநோக்குதல் கூடும்

Koviloor Digital Library

தன்மை கொளும் மனம் நன்மனம் = என்னும் வேறுபாட்டினையுடைய இவற்றின் கண் வேறுபாடு அற சம நிலை வரும்படிப் பார்க்கும் தன்மையை பொருந்திய மனமே நல்லமனம் என்க. (எ.று)

முடிபு - ஓடும் பொன்னும், உறவும் பகையும் கேடும் செல்வமும் கீர்த்தியும் நிந்தையும் வீடும் கானமும் (ஆகிய வேறுபாடுடைய இவற்றினை) வேறற நோக்குதல் கூடும் தன்மை கொள்ளும் மனம் நன்மனம். இன்பத்தையும் துன்பத்தையும் விளைவிக்கின்ற இவ்வேறு பாட்டு நிலையை வடநூலார் துவந்துவம் என்பர். இத்து வந்துவ உணர்ச்சி நீங்குதலே சமநிலையாகும். இச்சமநிலையை ''மெய் திருவந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளத்துற வோனே'' என்னும் நளவெண்பாப் பாட்டால் அறிக.

878. **மன்னு காமம் வெகுளி மயக்கமென்று**
இன்ன கூடி எறிவளி முன்சுடர்
என்ன ஆடும் இயல்மனம் தீமனம்
தன்னை யாரும் தடுக்கத் தகாதரோ 20

(இ.ள்) மன்னு காமம் வெகுளி மயக்கம் என்று இன்ன கூடி = நிலை பெற்ற மண், பெண், பொன் என்னும் மூன்றையும் விரும்புகின்ற ஆசையும்; இவற்றின் மறுதலையால் ஏற்படுகின்ற சினமும், எல்லா வற்றிற்கும் அடியாகிய அறியாமையும் என்று சொல்லப்படும் இவற்றோடு கூடப்பெற்று; எறிவளி முன்சுடர் என்ன = வீசும் காற்றின் முன் அசைகின்ற விளக்கின் சுடர்போல; ஆடும் இயல்மனம் தீமனம் = அசைந்து கொண்டே இருக்கும் (சஞ்சலமான) இயல்பையுடைய மனம் தீயமனம் என்க; தன்னையாரும் தடுக்கத் தகாது = அத்தகைய தீயமனத்தை எத்தகைய ஆற்றல் உடையவராலும் அடக்க முடியாது என்க. (எ.று)

முடிபு - காமம் வெகுளி மயக்கம் என்று இன்னகூடி எறிவளிமுன் சுடர் என்ன; ஆடும் இயல் மனம் தீமனம்(ஆகும்) தன்னை யாரும் தடுக்கத் தகாது.

879. **[1]மறிந்தி டாத மனபவ னங்கள்தாம்**
செறிந்த ஆயில் சிவமயம் ஆகுமால்
அறிந்து வாயுவை அங்ஙனம் எய்தினோன்
இறந்தி டாத இலிங்கப் பிராணியாம் 21

(பா.ம்) [1]மறிந்திடாது

Koviloor Digital Library

(இ.ள்) மறிந்திடாத மனம் பவனங்கள் தாம் = தடுக்கப் பெறாத மனமும் தடுக்கப் பெறாத மூக்சுக்காற்றும்; செறிந்த ஆயில் = யோகப் பயிற்சியால் அடங்கினவானால்; சிவமயம் ஆகும் = அம்மனம் தூய்மை பெற்று தாரணையுடையதாகி தியானத்தைப் பெற்று சிவமயமாக விளங்கும் சமாதி நிலையை அடையும்; வாயுவை அறிந்து = பிரணவாயுவின் நிலையை மேலே கூறியவாறு தெரிந்து கொண்டு; அங்ஙனம் எய்தினோன் = மேற்சொன்ன சிவமயமாகும் இயல்பைப் பெற்றுள்ளவன்; இறந்திடாத இலிங்கப் பிராணியம் = அழிவடையாத பிராணலிங்க தாரணம் உடையவனாகும். (எ.று)

முடிபு - மறிந்திடாத மனமும் மறிந்திடாத பவனமும் ஆகிய இவைகள் தாம், செறிந்த ஆயின் சிவமயமாகும். வாயுவை அறிந்து அங்ஙனம் எய்தினோன் இறந்திடாத பிராணலிங்கியாகும். பிராணி என்பதனின் ஈற்றிலுள்ள இகர விகுதியைப் பிரித்து இலிங்கம் என்னும் சொல்லுடன் கூட்டி பிராணலிங்கி என ஆக்கிக் கொள்க. கன்னடப் பிரபுலிங்க லீலை இச்சாதங்க கதியை பிாராணலிங்க உபதேச கதி என்று கூறும் கருத்தை உணர்ந்து கொள்க. இச்செய்யுள் பிராணலிங்க உபதேச மாகும். நாத்திகம் விடும்வரை பக்தன் என்றால் எவ்வாறு? பிறர் பொருள் பிறர் மனை நச்சாத வரையில் மகேஸ்வரன் என்பது எவ்வாறு? பழவினை அழியும் வரை பிரசாதியாவது எங்ஙனம்? உயிர் இறைவனோடு ஒன்றாத போது பிராணலிங்கியாவது எங்ஙனம்? ஐம் பொறிகள் அடங்காத போது சரணன் ஆவது எங்ஙனம்? பிறப்பிறப்பு ஒழியாதபோது ஐக்கியன் என்பது எங்ஙனம்? இன்னும் வசவ வசனத்தில் பக்தன் முதலான அறுவரின் நிலையையும் அறிந்து கொள்க. அதனுள் உயிர் இறைவனோடு ஒன்றாத போது பிராணலிங்கியாவது எங்ஙனம் என்பது பிராணலிங்கியின் நிலையாகும்.

880. இன்ன வாறு பலவு மியம்பினான்
அன்னை போலும்நம் அல்லம தேசிகன்
தன்னை நேர்தரு சைவம் வளர்க்குமோர்
மன்னன் ஆகும் வசவனை நோக்கியே 22

(இ.ள்) அன்னை போலும் நம் அல்லம தேசிகன் = தாயை ஒத்த நம்முடைய அல்லமனாகிய ஆசிரியன்; தன்னை நேர்தருசைவம் வளர்க்குமோர் மன்னன் ஆகும் வசவனை நோக்கியே = தனக்குத் தானே நிகராகிய சைவசமயத்தை வளர்க்கும் தொண்டினை மேற் கொண்ட ஒப்பற்ற பசவராசனை நோக்கி; இன்னவாறு பலவும் இயம்பினான் = மேற்

Koviloor Digital Library

கூறியபடி பல உபதேச மொழிகளைக் கூறினான்(எ.று)

முடிவு - நம் அல்லம தேசிகன் வசவனை நோக்கி இன்னவாறு பலவும் இயம்பினான்.

வசவராசன் அல்லமனை வணங்கியது

881. நின்னை நோக்கவும் நின்னை இறைஞ்சவும்
நின்னை வாழ்த்தவும் நின்மொழி கேட்கவும்
என்ன மாதவம் எய்தினை வோஎனப்
பன்னி நாதன் பணிந்தனன் நந்தியே 23

(இ.ள்) நந்தி - அல்லமரின் உபதேச மொழியைக் கேட்ட வசவ ராஜன்; (அல்லமதேவரை நோக்கி) நின்னை நோக்கவும் = உன்னை என்னுடைய கண்கள் பார்க்கவும்; நின்னை இறைஞ்சவும் = உன்னை என் உடம்பு வணங்கவும்; நின்னை வாழ்த்தவும் = உன்னை என் வாய் வாழ்த்து கூறவும்; நின் மொழி கேட்கவும் = உன்னுடைய உபதேச மொழியினை என் செவிகள் கேட்கவும்; என்ன மாதவம் எய்தினவோ் எனப் பன்னி = எத்தகைய பெரியதவத்தை அவ்உறுப்புகள் பெற்றனவோ எனக் கூறி; நாதன் பணிந்தனன் = அல்லம தேவனை வணங்கினான்.

முடிபு - நந்தி, நோக்கவும், இறைஞ்சவும், வாழ்த்தவும், கேட்கவும் (என உறுப்புகள்) என்னமாதவம் எய்தினவோ எனப் பன்னிநாதனைப் பணிந்தனன்.

சித்தராமன் முதலானோர் அல்லமனை வணங்கியது

882. சித்த ராமனும் சென்ன வசவனும்
முத்த நாம்அருள் மாச்சன் முதலிய
பத்தர் ஆகும் பலரும்என் புன்தலை
வைத்த நாதன் மலரடி வாழ்த்தினார் 24

(இ.ள்) சித்த ராமனும் சென்ன வசவனும் முத்த நாம் அருள் மாச்சன் முதலிய பத்தர் ஆகும் பலரும் = சித்தராம தேவரும், சென்ன வசவ தேவரும் பற்றற்ற அருள் தங்கிய மடிவாலமாச் சையன் முதலிய அன்பராகும் பலரும்; என்புன் தலை வைத்த மலரடி வாழ்த்தினான் = அல்லமதேவருடைய என் புல்லிய தலையின் மேல் வைத்த திருவடியை வாழ்த்தினார்.

முடிபு - சித்தராமனும் சென்ன வசவனும் மாச்சன் முதலிய பத்தராகும் பலரும். நாதன் மலரடியை வாழ்த்தினார். என் புன்தலைமேல்

Koviloor Digital Library

வைத்த என்னும் பெயரெச்சத்தை மலரடி என்பதனோடு கூட்டிக் கொள்க. இதில் வந்துள்ள உம்மைகள் எழுவாய்மேல் வந்துள்ள எண்ணும் மைகள்.

883. **ஆன காலையில் அல்லமன் ஆகிய**
ஞான வாரி நடந்துல கெங்கணும்
ஏனை மாதவர்க்(கு) இன்பம் அளிக்குவல்
யானெ னாவுளத் தெண்ணினன் என்பவே 25

(இ.ள்) ஆன காலையில் = மேற்கூறியவை எல்லாம் நிகழ்ந்து முடிந்த இக்காலத்திலே; அல்லமன் ஆகிய ஞானவாரி = அல்லமன் என்னும் பெயர் பூண்ட அறிவுக்கடல் போல்வான்; உலகு எங்கனும் நடந்து = உலகத்தில் எல்லா விடத்தும் தான் சென்று; ஏனை மாதவர்க்கு = மற்றையோராகிய பெரும் தவம் செய்த அடியவர்க்கு; யான் இன்பம் அளிக்குவல்என = நான் பேரின்பத்தைக் கொடுப்பேன் என்று; உளத்து எண்ணினன் என்ப = தன் மனத்தில் கருதினான் என்று அறிஞர் அவர் வரலற்றினைக் கூறுவர் (எ.று) ஏகாரம் ஈற்றிசை.

முடிபு - ஆனகாலையிலே அல்லமனாகிய ஞானவாரி உலகு எங்கணும் நடந்து மாதவர்க்கு யான் இன்பம் அளிக்குவல் எனா மனத்து எண்ணினன் என்ப.

பதினெட்டாவது
பிராணலிங்க உபதேச கதி முற்றும்

KOVILO... ...DAVAR
A. No. 16233
LIBRARY, KO...LOOR

Koviloor Digital Library

பத்தொன்பதாவது
கோரக்கர் கதி

கதி நுதலியது

884. வசவனை முதலாய் உள்ள மாதவர் தமையகன்று
பசுமதி தவழ்கு வட்டுப் பருப்பத மலையை நண்ணிக்
குசைசுடும் மறையோர் போற்றும் கோரக்கன் எனும்பேர் சித்தன்
இசைவுற உண்மை எந்தை இயம்பிய ஆறு சொல்வாம் 1

(இ.ள்) எந்தை = (என்தந்தையாகிய) அல்லமதேவன்; வசவனை முதலாய் உள்ள மாதவர் தமை அகன்று = வசவதேவனை முதலாகப் பெற்றுள்ள பெரிய தவம் உடையோரை நீங்கி; பசுமதி தவழ் குவட்டுப்பருப்பத மலையை நண்ணி = குளிர்ந்த திங்கள் தவழ்ந்து செல்லும் சிகரங்களையுடைய ஸ்ரீசைலமலையை அடைந்து; குசை சுடும் மறையோர் போற்றும் கோரக்கன் எனும் பேர் சித்தன் இசைவுற = (அங்கே வாழ்ந்து கொண்டு இருக்கும்) தருப்பையை சுட்டு வேள்வியினைச் செய்கின்ற அந்தணர்களாலே போற்றப்படும். கோரக்கன் என்னும் பெயரையுடைய சித்தனது மனம் பொருந்த; உண்மை இயம்பிய ஆறு சொல்வாம் = மெய்யறிவை கூறிய வகையினையாம் சொல்லுவாம். (எ.று)

முடிபு - எந்தை வசவனை முதலாய் உள்ள மாதவரை அகன்று பருப்பத மலையை நண்ணி கோரக்கன் எனும் பேர் சித்தன் இசைவுற உண்மையை இயம்பிய வாறு சொல்வாம். கோரரட்சன் என்ற வடசொல் கோரக்கன் எனத்திரிந்தது. 'சௌரங்கிமீன' கோரட்ச என்று அடயோக பிரதிபீகையில் சித்தர் வரிசையில் இவரது பெயர் சிறப்பித்து ஓதப்பட்டுள்ளது.

885. பொறிவழி செலாது நெஞ்சம் புனிதமாம் வகைபு கன்ற
நெறிமுறை வழாது இயற்றி [1]நீவிர்நின் மின்கண் மிக்க
அறவரை உலகில் கண்டிங்கு அடைதுமென்று ஆண்டயோர்கட்(கு)
இறையவன் இனிது இயம்பி எழுந்துமின் என மறைந்தான் 2

Koviloor Digital Library

(பா.ம்) [1]நிலீஇயரோ நீவிர்மிக்க.

(இ.ள்) இறையவன் = அல்லமதேவன்; ஆண்டையோர்கட்கு = அங்கேயுள்ள வசவனை உள்ளிட்ட தவத்தோர்கட்கு நெஞ்சம் பொறிவழி செலாது = உங்களுடையமனம் ஐம்பொறிகளின் வழியே செல்லாமல்; புனிதம் ஆம்வகை புகன்ற நெறிமுறை = தூய்மையாகும்படி யாம் உங்களுக்குக் கூறிய வழிமுறையை; வழாது இயற்றி நீவிர் நின்மின்கள் = தவறாமல் பயிற்சி செய்து நீங்களெல்லாம் அந்நெறியில் நிற்பீராக; மிக்க அறவரை உலகில் கண்டு இங்கு அடைதும் என்று = யாம் சிறந்த அறம் உடையோரை உலகத்தின் கண் பார்த்து அவர்களுக்கு அருள் செய்துவிட்டு இங்கே வருவோம் என்று கூறி; இனிது இயம்பி எழுந்து மின் என மறைந்தான் = இனிமையாகக் கூறி அவ்விடத்தை விட்டு அகன்று மின்னலைப் போல மறைந்து விட்டான். (எ.று)

முடிவு - இறையவன் ஆண்டையோர் கட்கு நெஞ்சம் புனிதமாம் வகை புகன்ற நெறி முறையை வழாது இயற்றி நீவிர் நின்மின்கள்(யாம்) அறவரை உலகில் கண்டு இங்கு அடைதும் என்று இனிது இயம்பி எழுந்து மின் என மறைந்தான். புனிதமாம் வகைபுகன்ற நெறிமுறையாவது சாதகாங்க கதியால் கூறப்பட்ட செய்திகளை.

அல்லமன் பிரிவால் வசவன் ஆதியோர் வருந்தியது

886. கன்றின்வாய் முலைநெ கிழ்த்துக் கறவைவிட் டகன்ற தென்னச்
சென்றனன் ஐயன் என்று திசைதோறும் நோக்கி மாழ்கி
வன்தழல் இழுது போல மனமுகக் கண்ணீர் [1]மல்கி
நின்றனர் வசவன் ஆதி நிகரில்சற் பத்தர் எல்லாம் 3

(பா.ம்) [1]மல்க

(இ.ள்) வசவன் ஆதி நிகரில் சற்பத்தர் எல்லாம் = வசவண்ணன் முதலாகிய ஒப்பற்ற உண்மையான தொண்டர்கள் எல்லோரும் அப்பொழுது; ஐயன் கன்றின்வாய் முலை நெகிழ்த்துக் கறவை விட்டு அகன்றது என்னச் சென்றனன் என்று = ஊட்டிக் கொண்டிருக்கும் கன்றுக்குட்டியின் வாயிடத்திலிருந்து தன்னுடைய முலைக்காம்பை நெகிழ்த்துவிட்டு பசு கன்றை விட்டு அகன்றமை போல நம் முதல்வனுகிய அல்லமதேவன் நம்மை விட்டுச் சென்று விட்டான் என்று கூறிக்கொண்டு; திசை தோறும் நோக்கி மாழ்கி = நான்கு திசைகள் தோறும் பார்த்து மயங்கி; வன் தழல் இழுது போல மனம் உக = கொடிய

Koviloor Digital Library

நெருப்பின் கண்பட்ட வெண்ணெய் போல உள்ளம் உருக; கண்ணீர் மல்கி நின்றனர் = கண்ணிலிருந்து துன்பக் கண்ணீர் மிகுந்து வர செயலற்று நின்றனர்.(எ.று)

முடிபு - வசவனாதி பத்தர் எல்லாம் கறவை முலை நெகிழ்த்து விட்டு அகன்றது என்ன, ஐயன் சென்றனன் என்று திசைதோறும் நோக்கி மாழ்கி தழல் இழுது போல மனம் உக கண்ணீர் மல்கி நின்றனர். கண்ணீர் மல்கி நின்றனர் என்ற தொடரில் சினைவினை முதல்வினையோடு முடிந்தது. கன்றின் வாய்முலை நெகிழ்த்துக் கறவை விட்டு அகலுதல் போல என்பதும் தழல் இழுது போல என்பதும் வினை உவமையின்பால்படும்.)

887. **காணுதல் ஒழிக நல்லார் காணில் அங்கு அவர்பால் நட்புப்**
பேணுதல் ஒழிக பேணில் பிரிவுறல் ஒழிக உற்றால்
மாணுயிர் உடம்பில் வாழும் வாழ்க்கை போய் ஒழிக என்னு
ஊணிடும் ஒருதாய் நீத்த பார்ப்புஎன உளங்கு லைந்தார் 4

(இ.ள்) நல்லார் காணுதல் ஒழிக = ஒருவர் நல்லோரை காணுதலை விடுக; காணில் அங்கு அவர்பால் நட்புப் பேணுதல் ஒழிக = அவரைக் கண்டால் அப்பொழுது அவரிடத்தே நட்புச் செய்தலையேனும் விடுக; பேணில் பிரிவுறல் ஒழிக = அவர்களுடன் நட்புச் செய்யின் அவரிடத்தி னின்றும் பிரிதலையாவது விட்டு விடுக; உற்றால் மாண் உயிர் உடம்பில் வாழும் வாழ்க்கை போய் ஒழிக = அவரைப் பிரிவுற்றால் மாட்சிமை தங்கிய உயிர் உடம்பினிடத்திலே தங்கிவாழும் வாழ்க்கை நீங்கி ஒழிந்தே போய் விடுக; என்னு = என்று இவ்வாறு கூறி; ஊண் இடும் ஒரு தாய் நீத்த பார்ப்பு என உளம் குலைந்தார் = தமக்கு உணவினைக் கொடுக்கின்ற ஒப்பற்ற தாய் பறவையைப் பிரிந்த குஞ்சுகள் போல் வசவனாகிய பத்தர் எல்லாம் மனம் வருந்தினர்.(எ.று)

முடிபு - நல்லோர் காணுதல் ஒழிக; காணின் அவர்பால் நட்புப் பேணுதல் ஒழிக. பேணில் பிரிவுறல் ஒழிக; உற்றால் உயிர் உடம்பில் வாழும் வாழ்க்கை போய் ஒழிக; என்னு தாய் நீத்த பார்ப்பென பசவனுதி பத்தர்கள் உளம் குலைந்தார். தீயோரைப் பிரிதல் மனம் மகிழ்ச்சி தரும்; நல்லோரைப் பிரிதல் மனத்துன்பத்தைத் தரும். எனவே, அவரைப் பிரிந்து துன்புற்று வாழ்தலினும் இறந்து விடும் துன்பத்தைப் பெறுதல் மிக இனிதாயிருக்கும் என்பது கருத்து.

Koviloor Digital Library

அல்லமனைப் பிரிந்த வசவன் சித்தராமன் செயல்

888. தண்டநா யகன்க ரத்தில் தம்பிரான் தன்னைக் கண்டு
பண்டுபோல் உவகை பூத்துப் பத்திசெய்து ஆங்கு இருந்தான்
தொண்டனு கியவி ராமன் சொன்னலா புரத்தில் நெஞ்சில்
கொண்டஆ ரியனே ஞெடு ஏகி கொடுவழி [1]தப்பி நின்றான்

(பா.ம்) [1]தப்ப நின்றான்.

(இ.ள்) தண்ட நாயகன் கரத்தில் தம்பிரான் தன்னைக் கண்டு = அப்பொழுது வசவராஜன் தன்னுடைய கையிலே எழுந்தருளி இருக்கும் இட்டலிங்கப் பெருமானை அல்லம தேவனுகவே பார்த்து; பண்டு போல் உவகை பூத்து பத்தி செய்து ஆங்கு இருந்தான் = அல்லம தேவனுடன் கூடியிருந்த அப்பழையகால நிலையைப் போலவே பிரிந்த காலத்திலும் அல்லம தேவனிடத்தில் செய்த பக்தியை இட்டலிங்கப் பெருமானுக்குச் செய்து கல்யாண புரத்தில் வீற்றிருந்தான்; தொண்டனுகிய இராமன் = அடியவனுகிய சித்த ராமன்; சொன்னலா புரத்தில் = தன் ஊராகிய சொன்னலாபுரத்தின் கண்; நெஞ்சில் கொண்ட ஆரியனோடு ஏகி = மனத்தில் தங்கவைத்துக் கொண்ட அல்லம தேவனோடு சென்று; கொடுவழிதப்பி நின்றான் - கர்மயோகமாகிய கொடுவழி நீங்க ஞானநெறியின் கண் நின்றான்(எ.று)

முடிபு - தண்ட நாயகன் கரத்தில் தம்பிரானைக் கண்டு உவகை பூத்து பக்தி செய்து இருந்தான். இராமன் சொன்னலாபுரத்தில் நெஞ்சில் கொண்ட ஆரியனோடு ஏகி, கொடுவழிதப்பி (ஞானநெறியில்) நின்றான். குருவே சிவம்; சிவமே குரு ஆதலின் வசவராஜன் இட்டலிங்கத்தை அல்லமனுகிய குருவாகக் கண்டார் என்க.

அல்லமனைப் பிரிந்த பிறர் செயலும் பிரிந்த
அல்லமன் செயல்களும்

889. அல்லமன் அறைந்த மாற்றம்
அகங்கொடு பிறரும்தாம் செய்
நல்லன புரிந்து தத்தம்
இடந்தொறும் நணுகி வாழ்ந்தார்

Koviloor Digital Library

தொல்லைநல் வினையால் தன்னை
தொழப்பெறும்அடியர் தம்பால்
செல்லுவன் என்று சென்றோன்
செயல்இனி தெரிக்கல் உற்றாம் 6

(இ.ள்) பிறரும் = மடிவால மாச்சையா் முதலிய அடியவரும்; அல்லமன் அறைந்த மாற்றம் அகம்கொடு = அல்லம தேவன் உபதேசித்த உபதேச மொழிகளை மனத்தில் கொண்டு; தாம் செய் நல்லன புரிந்து தத்தம் இடந்தொறும் நணுகி வாழ்ந்தாா் = தாம் வழக்கமாகச் செய்து வருகின்ற நல்ல தொழில்களை செய்து கொண்டு தாங்கள் தாங்கள் வாழ்ந்து வரும் இடங்கள் தோறும் நண்ணி அங்கு வாழ்ந்திருந்தனா்; தொல்லை நல்வினையால் தன்னைத் தொழப் பெறும் அடியா் தம்பால் = பழைய காலத்தில் செய்த நல்ல புண்ணியப் பேற்றால் (அல்லம தேவனுகிய) தன்னை வணங்கப் பெறும் தொண்டா்களிடத்தே; செல்லுவன் என்று சென்றோன் = போவேன் என்று கருதிக் கொண்டு சென்ற அல்லம தேவனுடைய செயல்இனி தெரிக்கல் உற்றாம் = அவா்கள் பால் செய்த உபதேசச் செயல்களை இனி மேல் விளக்கிக் கூறுவாம் (எ.று)

முடிபு - பிறரும் அல்லமன் அறைந்த மாற்றம்அகம் கொடு நல்லன புரிந்து தத்தம் இடந்தோறும் நணுகி வாழ்ந்தாா். அடியாா் தம்பால் செல்லுவன் என்று சென்றோருடைய செயலை இனித் தெரிக்கலுற்றாம்.

890. எரிபுரை தளிர்தளிர்ப்ப இளமரக் காவில் தென்றல்
மருவுதல் போலஅன்பர் மனமொடு கண்க ளிப்பத்
திருவுரு ஒன்ற டைந்து சென்றவக் கருணை வள்ளல்
கருமுகில் தவழ்ப ராரைப் பருப்பதம் கண்டு சென்றான் 7

(இ.ள்) எரிபுரை தளிர் தளிர்ப்ப இளமரக் காவில் தென்றல் மருவுதல் போல - நெருப்பினை ஒவ்வும் இளம் தளிர் தளிர்க்கும்படி இளையமரங்கள் செறிந்த சோலையின் கண், தென்றல் காற்று வந்து பொருந்துதல் போல; அன்பர் மனமொடு கண்களிப்பதிரு உரு ஒன்று அடைந்து சென்ற அக்கருணை வள்ளல் = அன்பையுடைய தொண்டர் தம் உள்ளத் தோடு விழிகளும் களிப்படையும்படி அழகிய உடல் உருவம் ஒன்றை எடுத்துக் கொண்டு அவா்களிடம் சென்ற அக்கருணை உடையவள்ளலாகிய அல்லம தேவன்; கருமுகில் தவழ் பராரைப் பருப்பதம் கண்டு சென்றான் = கருத்த மேகக் கூட்டங்கள் படிந்து செல்லும்

Koviloor Digital Library

பருத்த அறைகளையுடைய திருச்சைல மலையை நோக்கிச் சென்றான். (எ.று)

முடிபு - தளிர் தளிர்ப்ப காவில் தென்றல் மருவுதல் போல அன்பர் மனமொடு கண்களிப்ப உரு ஒன்று அடைந்து சென்ற அக்கருணை வள்ளல் பருப்பதம் கண்டு சென்றான். யோகிகள் தங்களுடைய திருவுருவத்தை அன்பர்களுக்குக் காட்டி அவர்களுக்கு அனுக்கிரகம் செய்வர். இதனை, ''காயா அனுக்கிரகத்தலம்'' (63வது) என்று சித்தாந்த சிகாமணி கூறும்.

> இந்த யோகிதன் மெய்யினை யிலங்குறக் காட்டி
> வந்தி யாரையு முலகினி லளித்திடு மாற்றா
> லுந்து பேரெழி லுடலநுக் கிரகனென் றுரைக்கு
> முந்து நாமமுற் றிடுமென அறைகுவர் முன்னோர்
>
> (காயா.நுக்.)

இத்தலத்தினுடைய கருத்தினை கருதி இளமரக்காவில் தென்றல் மருவுதல் போல அன்பர் மனமொடு கண்களிப்பதிருவுரு ஒன்று அடைந்து சென்றார் என்று கூறினார். இப்பாட்டு உவமையணி.

பரு + அரை=பராரை என்று ஆயிற்று. பருப்பத மலையின் சுற்றுப் பகுதியைப் பராரை எனக் கூறினார்.

நூலாசிரியர் பருப்பத மலையின் சிறப்பைக் கூறத் தொடங்குகின்றேன் என்றல்

891. அல்லமன் கண்டு செல்லும் அப்பரும் பதத்தின் மேன்மை
சொல்லுதல் அறியா ராகி சுரர்முனி வர்கள் தம்முள்
வல்லவர் எனவிருக்கும் [1]அறிஞரும் மயங்கி நிற்ப
புல்லறி வாண்மை கொண்டு புகலுவன் சிறிதஞ் சாமல் 8

(பா.ம்) [1]மதிஞர்.

(இ.ள்) அல்லமன் கண்டு செல்லும் அப்பருப்பதத்தின் மேன்மை = அல்லம தேவன் பார்த்துக் கொண்டு செல்லும் அந்த ஸ்ரீசைல மலையின் சிறப்பினை; சுரர் முனிவரர்கள் தம்முள் வல்லவர் என விருக்கும் அறிஞரும் = தெய்வ உலகத்திலுள்ள தேவர் நிலவுலகத்திலுள்ள முனிவர் இவர்கள் தம்முள் வல்லமை படைத்தவர்கள் எனவிருக்கும் அறிஞர்களும்; சொல்லுதல் அறியாராகி மயங்கி நிற்ப = சொல்லுதலை அறியாதவராய் தெளிவற்று இருப்ப; புல்லறிவு ஆண்மை கொண்டு

Koviloor Digital Library

புகலுவன் சிறிதும் அஞ்சாமல் = யான் என்னுடைய சிறிய அறிவின் ஆண்மையால் சிறிதும் அச்சம் கொள்ளாமல் சொல்லத் தொடங்குகின்றேன். (எ.று)

முடிபு - பருப்பதத்தின் மேன்மையை சுரர் முனிவர் தம்முள் வல்லவர் என இருக்கும் அறிஞரும் சொல்லுதல் அறியாராகி மயங்கி நிற்ப(யான்) சிறிதும் அஞ்சாமல் புகலுவன். இப்பாட்டு நூலாரியர் கூற்று.

மிக்கநற் றீர்த்தங் கட்கும் விண்ணவர் முனிவோர் கட்கும்
தக்கமா தானமாகிச் சாதக சித்தரானோர்
பக்கமா னவைய ளித்தப் பணிந்தமானிடருக் கன்பால்
அக்கணத் தின்ப நல்கும் பருப்பதத் தளவார் சொல்வார்
(பசவபுராணம் (திருக்கூட்டச்சருக்கம் 14)

திருப் பருப்பதத்தை உதயமலையும் அத்தமன
மலையும் ஒவ்வாது எனல்

892. நாள்தோறும் உதித்து ஒடுங்கும் ஞாயிறு தனைச்சு மக்கும்
கோடுறு வரைகு ணக்கும் குடக்குமாய்த் திகைத்து நிற்பக்
கூடுதல் பிரிதல் இன்றி குறைமதி தலைச் [1]சேர்ந்து இன்பம்
தாள்தரு கதிரை சென்னி தரிப்பதுஅக் குன்றம் மாதோ 9

(பா.ம்) [1]சேரின்பம்

(இ.ள்) நாள்தொறும் உதித்து ஒடுங்கும் ஞாயிறுதனைச் சுமக்கும் கோடு உறுவரை = ஒவ்வொரு நாளும் உதித்தலையும் ஒடுங்குதலையும் செய்கின்ற சூரியனைத் தாங்குகின்ற சிகரங்களுடன் விளங்கும் மலைகளானவை; குணக்கும் குடக்குமாய்த்திகைத்து நிற்ப = உதிக்கும் காலத்தில் சுமந்து குணக்கு மலை என்றும் ஒடுங்கும் காலத்துச் சுமந்து குடக்கு மலை என்றும் பெயர் பெற்று தம்முள் உரிமை கொள்ளாமல் திகைப் படைந்து நிற்ப; கூடுதல் பிரிதல் இன்றி = அவ்விரண்டு மலைகளைப் போல கூடுதலையும் பிரிதலையும் பெறாமல்; இன்பம் தாள் தருகதிரை = பேரின்பத்தைத் தன்னுடைய திருவடியினலே தருகின்ற ஞானக் கதிராகிய மல்லிகேஸ்வரரை; சென்னி தரிப்பது அக்குன்றம் = தன்னுடைய சென்னியாகிய சிகரத்தின் கண் எப்போதும் அணிந்து கொண்டிருப்பது அத்திருப் பருப்பத மலை என்க; அக்கதிர் எத்தகைய கதிர் எனில்? குறை மதி தலை சேரப்பெற்று இன்பத்தைத் தாளாலே தருகின்ற கதிர் என்க.(எ.று) இங்கு குறை மதி என்றது பிறையை.

Koviloor Digital Library

முடிபு - ஞாயிறு தனைச் சுமக்கும் வரை குணக்கும் குடக்குமாய் திகைத்து நிற்ப இன்பத்தாள் தருகதிரை கூடுதல் பிரிதலின்றி (எப்பொழுதும்) சென்னி தரிப்பது அக்குன்றம். அக்குன்றமென்பது திருப்பதி மலையை(மாது -ஓ. அசை) சூரியனைச் சுமக்கும் குணக்கு மலையாகிய உதய மலையும் குடக்கு மலையாகிய அத்தமன மலையும் இன்பத்தைத் தாளால் தரும் கதிரை கூடுதல் பிரிதல் இன்றி தன் சென்னியில் எப்போதும் அணிந்து கொண்டிருக்கின்ற திருப்பருப்பத மலை போலாது ஒரு காலத்தில் கூடியும் பிரிந்தும் பெற்று இரண்டு இயல்பைப் பெற்றிருக்கும் என்க.

திருக் கயிலாயமலை திருப்பருப்பதச் சிறப்பை உணர்ந்து நாணி வெளுத்துப் போயிற்று என்றல்

893. [1]பொன்னற் குன்று எழுவாய் ஆக
பொருப்ப[2]ள இறந்த நிற்ப
சென்னிக்கண் தவழ்வெண் திங்கள்
சிலாதரன் குழவி வெற்பு
தன்னைக்கண் டவரை என்னோர்
தலைமிசை ஏற்றும்என் என்று
இன்னல்கண் படிந்தன் றோஅவ்
இறைமலை விளர்த்தது அம்மா 10

(பா.ம்) [1]பொன்னிற்குன்று; [2]அளவிறந்து

(இ.ள்) பொன்நல் குன்று எழுவாய் ஆக பொருப்பு அளவு இறந்த நிற்ப = பொன்னால் இயன்ற நல்ல மலையாகிய மேரு முதலான மலைகள் அளவு இறந்தனவாய் இருப்பதுவும்; சிலாதரன் குழவி வெற்பு தன்னைக் கண்டவரை = சிலாதர முனிவரின் குழந்தையாகிய நந்தி தேவரின் மலை என்று கூறப்படும் திருப்பருப்பத மலையினை (சென்று) தரிசித்தவரை; என் ஓர்தலை மிசை ஏற்றும் = என்னுடைய ஒரே தலையின் கண்ணேயே ஏற்றிவிடும்; என் என்று இன்னல் கண்படிந்தன்றோ அவ் இறைமலை விளர்த்தது = இதற்குக் காரணம் என்ன என்று கருதி அந்தத் துன்பத்தின் கண் மூழ்கி இருத்தலால் அல்லவோ? அந்த இறையாகிய சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் திருக்கயிலாய மலை வெளுத்தது (அம்மா - அசை) எத்தகைய வெற்பு எனின்? சென்னிக் கண் தவழ் வெண்திங்கள் சிலாதரன் குழவி வெற்பு = சிகரங்களில் வெண்திங்கள் தவழ்ந்து ஓடுதற்கு இடமான வெற்பு சிலாதர முனிவருடைய குழந்தையாகிய நந்தி

Koviloor Digital Library

கேஸ்வரது பெயரால் வழங்குகின்ற நந்தி மலை என்கின்ற திருப்பருப்பத மலை என்க. (எ.று)

முடிபு - பொன்னற் குன்று எழுவாயாக பொருப்பு அளவு இறந்த நிற்பவும் சிலாதரன் குழவி வெற்புத் தன்னைக் கண்டவரை என் ஓர் தலை மிசை ஏற்றும் என் என்று இன்னல் கண் படிந்து அன்றோ அவ் ''இறை மலைவிளர்த்தும். ஊரினின் நெடும் கோபுரத்து உயர்ச்சி கண்டு உணர்ந்தால் மேரு எங்ஙனம் விளர்க்குமோ முழுமுற்றும் வெள்கி'' என்னும் பகுதியை ஒப்புநோக்குக. (கம். சுந். ஊர் .20)

மேருமலை திருப்பருப்பத மலையின் பேற்றினைக் கண்டு உருகிற்று என்பது

894. **பரசிவ லிங்கம் ஒன்று பருப்பதம் போல் தரிப்பத்**
துரிசற அடைந்தே னில்லை என்னும்அச் சோகத் தீயால்
உருகுறும் அமையத்து ஓடி ஒருமலை குழைத்தான்அன்றிக்
குருகமர் தளிரி யற்கு குழைந்தவன் குழைக்கு மோதான் 11

(இ.ள்) பரசிவ இலிங்கம் ஒன்று = மேலான சிவலிங்க வடிவம் ஒன்றினை; பருப்பதம் போல் தரிப்பத்துரிசு அற அடைந்தேன் இல்லை = இத்திருப்பருப்பத மலைபோல அணிந்து கொள்ள அதனால் என்னுடைய குற்றம் நீங்கப் பெற்றேன் இல்லை; என்னும் அச்சோகத்தீயால் உருகுறும் அமையத்து = என்று கருதும் துன்பமாகிய நெருப்பினால் உருகி இருந்த காலத்திலே; ஓடி ஒருமலை குழைத்தான் அன்றி = சிவபெருமான் விரைந்து சென்று ஒன்றாகிய மேருமலையை வளைத்தானே அல்லாமல்; குருகு அமர் தளர் இயலுக்கு குழைந்தவன் = வளையல்கள் பொருந்தியுள்ள தளிர் போன்ற இயல்பினைப் பெற்றிருக்கும் உமாதேவி தழுவிக் கொள்ள குழைந்த அத்தையோன்; குழைக்குமோதான் = அம்மேரு மலையை வளைக்க வல்லமை உடையவன் ஆவானோ? (ஆகான் என்க). (எ.று)

முடிபு - ஒரு மலை சிவலிங்கம் ஒன்றினை பருப்பதம் போல் தரிப்ப துரிசற அடைந்தேன் இல்லை, என்னும் அச்சோகத் தீயால் உருகுறும் அமையத்து ஓடி (அதனை) குழைத்தானன்றிதளர் இயலுக்குக் குழைந்தவன் ஒரு மலையைக் குழைக்கு மோதான். ஒருமலை என்றது மேருமலையை. ''மேரு சிகரி நாம் அகம்'' (10.23) பகவத் கீதையில் மலைகளுள் நான் மேரு மலையாக இருக்கின்றேன் என்று கண்ணன் ஓதுகின்றான். அதனால் இங்கே ஒரு மலை எனச் சிறப்பித்தார். குருகு

Koviloor Digital Library

அமர் தளிர் இயலுக்கு - வண்டு பொருந்திய தளிர் போன்றகையை யுடைய உமா தேவிக்கு குருகு - வண்டு அது வளையலை உணர்த்திற்று.

மைநாக மலையின் பருப்பத மலையின் பெயரை கருத்துள் கொண்டு கடலில் வீழ்ந்து மறைந்தது என்று பெயர் சிறப்பு உரைத்தல்

895. பொருப்பிறை மகனுன் எற்குப் பொருந்துறாது ஈசன் நாமம்
நெருப்பனையான் சார்ந்தாங்கு நிகழ் தொடர் மொழியின் அன்றி
பருப்பதம் எனவே கூறப்படும் இது என்னும் நாணால்
திரைப்பொலி கடலில் சென்ற வீழ்ந்தது சிலம்பு ஒன்று அம்மா 12

(இ.ள்) நான் பொருப்பு இறைமகன் = (மைநாகமலையாகிய) நான் மலைகளுக்கெல்லாம் அரசாகிய மேருமலையின் மகனுவேன்; (அவ்வாறிருக்க) எற்குப் பொருந்தறாது - எனக்குப் பருவதம் என்ற அப்பெயர் பொருந்தாமல்; ஈசன் நாமம் நெருப்ப பனையான் சார்ந்தாங்கு = ஈசன் என்கின்ற பெயரை நெருப்பை ஒத்த சிவபெருமான் ஒருவனையே அடைந்தாற் போல; இது நிகழ்தொடர் மொழியின் அன்றி பருப்பதம் எனவே கூறப்படும் = இம்மலை விளங்கும் அடைமொழி ஒன்றுமின்றி பருப்பதம் பருப்பதம் என்ற பெயராலயே கூறப்படுகின்றது; நாணால் திரைப்பொலி கடலில் சென்று வீழ்ந்தது சிலம்பு ஒன்று = என்று கருதி நாணத்தினால் மைநாகமலையாகிய ஒரு மலை அலை மிகுந்த கடலில் சென்று வீழ்ந்து மறைந்தது.

முடிபு - நான் பொருப்பிறைமகன், எற்குப் பொருந்துறாது. ஈசன் நாமம் நெருப்பனையான் பெற்றாங்கு. இது நிகழ் தொடர் மொழியின் அன்றி பருப்பதம் எனவே கூறுப்படும் என்னும் நாணத்திலுல் சிலம்பு ஒன்று கடலிற் சென்று வீழ்ந்தது. இது மைநாகமலை கடலில் வீழ்ந்து மறைந்தற்கு நூலாசிரியர் தானாக ஓர் காரணம் கற்பித்தலால் தற்குறிப் பேற்ற அணி என்க.

திருப்பருபத மலையை விந்திய மலையும் மந்தரமலையும் ஒவ்வாதெனல்

896. தன்னையோர் கையால் வீழப் பிலத்திடைத் தள்ளி வந்தோன்
சென்னியால் வணங்கி ஏத்தும் சிலம்பினை விந்தம்ஒக்கும்

Koviloor Digital Library

என்னலாம் என்னலாமோ இணையறு பருப்ப தத்தைப்
பின்னுவார் திரையில் இட்டு பெயர்த்த புன்மத்தோ ஒக்கும்
13

(இ.ள்) தன்னை ஓர் கையால் வீழபிலத்திடைத்தள்ளி வந்தோன் = (விந்திய மலையாகிய) தன்னை தன்னுடைய ஒரு கையினாலேயே பாதாளத்தில் விழுமாறு தள்ளி வந்த அகத்திய முனிவன்; சென்னியால் வணங்கி ஏத்தும் சிலம்பினை விந்தம்ஒக்கும் என்னலாம் என்னலாமோ - தன்னுடைய தலையால் வணங்கி வாயால் புகழ்ந்து கூறத்தக்க இத்திருபருப்பத மலையை விந்திய மலையை ஒவ்வும் என்று கூறலாமோ? (கூறமுடியாது) இணையறு பருப்பதத்தை - ஒப்பற்ற பெயர்க்க முடியாத இப்பருப்பத மலையை; பின்னும்வார் திரையில் இட்டு பெயர்த்த புன் மத்தோ ஒக்கும் = பின்னலிடும் நீண்ட அலை களையுடைய பாற் கடலினிடத்தே இட்டு சுழற்றிய எளிமையான மந்தரமலையாகிய மத்தோ இதற்கு ஒவ்வும் (ஒவ்வொதென்க). (எ.று)

முடிபு - ஓர் கையால் தன்னை பிலத்திடை வீழத்தள்ளி வந்தோன் சென்னியால் வணங்கி ஏத்தும் சிலம்பினை விந்தம் ஒக்கும் என்னலாமோ? இணையறு பருப்பதத்தை திரையிலிட்டு பெயர்த்த புன்மத்தோ ஒக்கும்? வந்தோன் வினையாலணையும் பெயர். இது அகத்திய முனிவரைக் குறித்தது. என்னலாமோ என்னலாமோ என்ற அடுக்கில் ஓகாரம் குறைந்து வந்தது. அடுக்கும் ஓகாரமும் என்று கூறக் கூடாது என்ற தேற்றத்தை உணர்த்திற்று.

சுனைச்சிறப்பு கூறியது.

897. நகைமதிப் பிள்ளை போல நரைத்தகூன் கிழவன்
சென்றோா
முகைமலர்ச் சுனையில் மூழ்கி முருகுகொப் பளிக்கும்
தோட்டுப்
பகைமலர்க் குழல்ம டந்தை பகர்ந்தஓர் ஆணை காத்து
மகிழ்மனத்து அன்ப னேபோல் வந்துமேல் எழுவன்அன்றே
14

(இ.ள்) நரைத்தகூன் கிழவன் சென்று = நரைத்த மயிரையுடைய வளைந்த உடம்பினையுடைய முதியோன் போய்; ஓர் முகைமலர்ச் சுனையில் மூழ்கி = ஒப்பற்ற அரும்பையும் மலர்களையும் உடைய சுனையிடத்தே படிந்து நீராடி; முருகுகொப்பளிக்கும் தோட்டு பகை

Koviloor Digital Library

மலர்க்குழல் மடந்தை பகர்ந்த ஓர் ஆணைகாத்து = மணத்தை வெளிப் படுத்தும் இதழ்களோடு கூடிய மாறுபட்ட மலரை அணிந்த கூந்தலைப் பெற்றிருக்கும் தன் மனைவியாகிய மடந்தை திருநீல கண்டத்தின் மேல் ஆணை எனப் பகர்ந்த ஓர்சூளினைப் பாதுகாத்து; மகிழ் மனத்து அன்பன் போலவும் நகை மதிப் பிள்ளை போலவும் வந்து மேல் எழுவன் = மகிழ்ந்த உள்ளத்தையுடைய திருநீலகண்ட நாயனாரைப் போலவும் ஒளி விளங்கும் நிலவும் திங்கள் குழவிபோலவும் மேல் எழுந்து வந்து விளங்குவன். (எ.று)

முடிபு - கூன்கிழவன் சென்று சுனையில் மூழ்கி மடந்தை பகர்ந்த ஓர் ஆணைகாத்து மகிழ்மனத்து அன்பன் போல. நகைமதிப் பிள்ளை போல வந்து மேல் எழுவன். நகை மதிப்பிள்ளைபோல என்ற உவமை யால் முதுமை நீங்கி இளமை பெற்ற செய்தி புலனுகின்றது. இப்பாட்டு சுனையின் சிறப்பைக் கூறுகின்றது. ஸ்ரீசைலத்துள்ள சுனை தன்னிடத்து மூழ்கிய முதியோரை இளையோராக்கி விடும் அத்தகைய சிறப்புடைய தென்க.

898. சினைமலர் புதல்மென் போது செழும்புனல் பசுந்தாள் செந்தேன்
நனைமலர் தமது தண்பூ நண்ணியீர்ங் கொடிகள் குண்டு
சுனைமலர் விழிகள் போலத் தோன்றுமப் பராரைக்குன்றில்
புனைமலர் பலவும் காட்டுப் புரிகுழல் மகளிர் போலும்

(இ.ள்) சினைமலர் = மரத்தின் கிளைகளில் உள்ள மலர்களும்; புதல் மென்போது = புதர்களில் உள்ள மெல்லிய மலர்களும்; செழும் புனல் பசுந்தாள் செந்தேன் நனைமலர் தமது தண் பூ = வளத்தை உண்டாக்கும் நீரிலேயுள்ள பச்சை நிறமான தாளையும் சிவந்த தேனை அரும்பிலிருந்து உண்டாக்கும் தம்முடைய குளிர்ந்த பூக்களும்; நண்ணி = பொருந்தப் பெற்று; ஈங்கொடிகள் குண்டு சுனை மலர் விழிகள் போல தோன்றும் = குளிர்ந்த கொடிகளிடத்தே ஆழமான சுனையின்கண் தோன்றும் குவளை முதலான மலர்களெல்லாம் விழிகளைப் போலக் காட்சி தருகின்றன; அப்பராரைக் குன்று இல் = அந்த பருத்த அரையையுடைய மலையின் இடங்கள் எல்லாம்; புனைமலர் பலவும் காட்டும் புரிகுழல் மகளிர் போலும் = அணிந்து கொள்ளும் மலர்கள் பலவற்றுடன் காட்சி தரும் கூந்தலையுடைய பெண்களைப் போல் விளங்கும். (எ.று) குன்றில் என்னும் சொல்லை. குன்றின் இடங்கள் என்னும் பொருள் தோன்ற குன்று

Koviloor Digital Library

+ இல் எனப் பிரித்து கொள்க. இங்கு இடம் எழுவாய் ஆயிற்று (இல் என்பது வேற்றுமை உருபு அல்ல)

முடிபு - சினைமலரும் புதல்போதும் புனல் தமது தண்பூவும் நண்ணி சுனைமலர் விழிகள் போல தோன்றும். அப்பராரைக் குன்று இல் பல மலர் புனைந்து காட்டும் புரிகுழல் மகளிர் போலும். கோட்டுப்பூ நிலப்பூ - நீர்ப்பூ - கொடிப்பூ - பலவகைப் பூக்களாலே நிரம்பிய அப்பராரைக் குன்றின் இடங்கள் பலவகை மலர்களைக் கூந்தலில் அணிந்த மகளிர் போல் விளங்கும் என்றது.

899. தூங்கிசை அருவி பாயத் [1]துளைக் கைவெண் கோட்டு உரல்கால்
ஈர்ங்கவுள் நெடுநல் யானை ஏற்பவெந் தழல்அ லாமல்
தேங்குதண் புனல்மேல் நோக்காது என்பது தீரச் சென்று
பூங்கதிர்ப் பனிவெண் திங்கள் போன்மெனத் திவலை செய்யும் 16

(பா.ம்) [1]தொளைக்கை.

(இ.ள்) தூங்கு இசை அருவிபாய = மென்மையான இசையுடைய அருவி கீழ் நோக்கிப் பாய; துளைக்கை வெண் கோட்டு உரல்கால் ஈர்ங்கவுள் நெடு நல்யானை ஏற்ப = தூம்பினையுடைய கையையும் வெண்மையான தந்தங்களையும் உரல் போன்ற கால்களையும் மத நீரால் நனைந்த கன்னத்தையும்; உடைய யானைகள் தீம் கையால் தடுத்து பிடிப்ப வெந்தழல் அலாமல் தேங்குதண் புனல்மேல் நோக்காது என்பது தீர = ஐந்து பூதங்களில் நெருப்பு என்னும் பூதம் அன்றி, நீர் என்னும் பூதம் மேல் நோக்கிச் செல்லாது என்னும் உலக நியதி நீங்குமாறு சென்று; பூங்கதிர்ப் பனிவெண் திங்கள் போன் மெனத்திவலை செய்யும் = வெண்மையான திங்களின் குளிர்ந்த பொலிவையுடைய கதிரைப் போல் சென்று விளங்கும்படி ஏற்ற நீர் மேலே செல்லுமாறு திவலையாக வீசும். (எ.று)

முடிபு - அருவிபாய யானை ஏற்ப தழல் அல்லாமல் புனல் மேல் நோக்காது என்பது தீரச்சென்று திங்கள் கதிர் போன் மெனத் திவலை செய்யும் யானை ஏற்ப (ஏற்ற நீரால்) சென்று திவலை செய்யும் என முடித்துக் கொள்க. ''அக்ரேநயதி அக்கினி'' மேலே நோக்குவது. நெருப்பு என்பது நெருப்புக்குரிய காரணப் பெயர் கீழே நோக்குவது புனல் என்கின்ற கருத்தில் தண்ணீருக்கு ''சா்வ அதோ முக'' என்கின்ற பெயரை

Koviloor Digital Library

வடமொழியாளர் வழங்குவர். இவற்றைக் கருத்தில் கொண்டு நீரும் நெருப்பைப்போல் மேல் நோக்கிச் செல்லும் என்னும் புனைந்துரை கூறப்பட்டுள்ளது.

பருப்பத மலையி புற ஓசை கேட்பாரும் அக ஓசை கேட்பாரும்.

900. விஞ்சையர் உளர்ந ரம்பின் வீணையாழ் எழும்இன் ஓசை
குஞ்சரம் அனைய வென்றிக் குன்றவர் புரத்தில் என்றும்
தஞ்செவி மடுத்துக் கேட்பார் தனிநிலை யோகம் உற்றார்
அஞ்செவி நிறைய உள்ளே அரியயாழ் ஓசை கேட்பார் 17

(இ.ள்) விஞ்சையர் உளர் நரம்பின் வீணையாழ் எழும் இன் ஓசை = வித்தியாதரர்கள் விரலால் தடவி எழுப்பும் நரம்பினையுடைய வீணையாகிய யாழின் இனிய ஓசையை; குஞ்சரம் அனைய வென்றிக் குன்றவர் = யானையை ஒத்த வலிமையையுடைய கொற்றம் தங்கிய குன்றில் வாழ் மக்களாகிய குறவர்கள்; புரத்தில் என்றும் தம் செவி மடுத்துக் கேட்பார் = புரவிடத்திலிருந்து எப்பொழுதும் தம் செவிக்குப் பொருந்தக் கேட்பார்கள் (இவர்கள் செயலுக்கு மாறாக) தனி நிலை யோகம் உற்றோர் = தனித்த இடத்திலிருந்து சிவயோகம் பயின்ற யோகிகள்; உள்ளே அஞ்செவி நிறைய அரிய யாழ் ஓசை கேட்பார் = தம் உடம்பினுள்ளே இருந்து எழும் அரிய யாழின் ஓசையை உட்செவி நிறையக் கேட்பார்கள்.(எ.று) அகம் செவி என்ற சொல் அம்செவி என்றாயிற்று.

முடிபு - குன்றவர் என்றும் புரத்தில் விஞ்சையர் யாழ் எழும் இன்னோசையைக் கேட்பார். யோகமுற்றோர் உள்ளே அரிய யாழோசையை அம்செவி நிறையக் கேட்பார்.

901. பீடுறு கருவிஞ்ஞேடு பெயரிய இல்லில் உம்பர்
ஓடுறு பசும்பொனுற் செய்து ஓங்குறு சிகரம் ஒன்று
நீடுறு சிலாத ரன்றன் நெடுந்தவப் பிள்ளைக்குன்றின்
மோடுறு முடியின்மீது கவிழ்த்த பொன் முடியை ஒக்கும் 18

(இ.ள்) பீடுஉறு கருவிஞ்ஞேடு பெயரிய இல்லில் = உம்பர் பெருமை பொருந்திய மல்லிகார்ச்சுனரின் திருக்கோவிலிலுள்ள கருப்பக்கி ரகத்தின் மேல் இடத்தே; ஓடுஉறு பசும்பொன்னுல் செய்து ஓங்குறு சிகரம் ஒன்று = உருக்கித் தூய்மை செய்த நல்ல பொன்னுல் செய்யப் பட்டு உயர்ந்து

Koviloor Digital Library

விளங்கும் கோபுரமாகிய சிகரம் ஒன்று விளங்குவது; நீடுஉறு சிலாதரன்தன் நெடும் தவப்பிள்ளைக் குன்றின் = உயர்வு பொருந்திய சிலாதர முனிவரின் நெடிய தவப் பிள்ளையாகிய நந்திகேஸ்வருக்குரிய மலையாகிய திருப்பருப்பதத்தின் மோடுஉறு முடியின் மீது கவிழ்த்த பொன் முடியை ஒக்கும் = உயர்ந்த தலையிடத்தே கவிழ்த்த பொன்னுல் செய்த முடியை ஒத்திருக்கும். (எ.று)

முடிவு - கருவினேடு பெயரிய இல்லில் உம்பர் பொன்னாற் செய்த சிகரம் ஒன்று(விளங்குவது) சிலாதரன் பிள்ளைக் குன்றின் முடியின் மீது கவிழ்த்த பொன் முடியை ஒக்கும். கருவினேடு பெயரியஇல் என்பது கருப்பக்கிரகத்தை. சிகரம் என்றது. கருப்பக்கிரகத்தின் மேலுள்ள கோபுரத்தை. கருப்பம் - கரு கிரகம் - இல் எனப் பிரித்துப் பொருள் காண்க.

902. செங்கதி ரவனெ ழுந்த திவாவிடை குடம்பை தெற்றி
பொங்கொளி மரத்தில் சீர்சால் புள்ளினம் பொறையு யிர்த்து
கங்குலில் அடைகி டப்பக் கருதிவந்து அதனைக் கண்டு
வெங்கனல் கொளுத்திற் றென்று மீமிசை சுழன்றி ரங்கும்
19

(இ.ள்) சீர் சால் புள்ளினம் = சிறப்பு அமைந்த பறவைக் கூட்டங்கள்; பொங்கு ஒளி மரத்தில் = ஒளி பொங்குகின்ற மரத்தின் கண்(சோதிவிருட்சத்தில்); செங்கதிரவன் எழுந்த திவாவிடை குடம்பை தெற்றி = ஞாயிறு எழுந்து விளங்கும் பகல் காலத்திலே கூட்டினைக் கட்டி; பொறை உயிர்த்து = அக்கூட்டிலே தம்முட்டையினை இட்டு (வெளியே சென்று); கங்குலில் அடைகிடப்பக் கருதிவந்து = இராக்காலத்திலே அடைகாத்தலைக் கருதி அங்குவந்து; அதனைக்கண்டு = அம்மரம் இராக் காலத்தில் ஒளிமயமாய் விளங்குவதைக் கண்டு; வெங்கனல் கொளுத்திற்று என்று மீமிசை சுழன்று இரங்கும் = நம்முடைய கூட்டையும் முட்டையினையும் கொடிய நெருப்பு கொண்டது என்று கருதி மேலிடத்திலேயே வட்டமிட்டு. இரக்கமடையும் (எ.று)

முடிவு - புள்ளினம் ஒளிமரத்தில் திவாவிடை குடம்பை தெற்றி பொறை உயிர்த்து (போய்) கங்குலில் அடைகிடைப் பக்கருதி வந்து அதனைக் கண்டு கனல் கொளுத்திற்று என்று மீமிசை சுழன்று இரங்கும்.

திவா - பகற் காலம். தெற்றுதல் - பின்னிக் கூடு அமைத்தல் கொளுத்திற்றென்று என்னும் சொல் கொழுந்திற்றன்று என மெலித்தல் விகாரம் பெற்றது.

Koviloor Digital Library

903. நறுமலர் குழல் வெண் முத்த நகைமலை மடந்தை மிக்க
அறம்வளர்ப் பதற்கு நெல்சிற் றளவிரு நாழி என்று
கறைமிடற் றிறைய ளப்ப ஒருபெரும் கருதிதானிவ்
வெறிமலர்க் குடுமிக் குன்றின் [1]வேய்களுள் ஒன்றில்
பெற்றாள் 20

(பா.ம்) [1]வேய்களில்

(இ.ள்) நறுமலர் குழல் வெண் முத்த நகைமலை மடந்தை = மணந்தங்கிய பூக்களை அணிந்த கூந்தலையும் வெண்மையான முத்து போன்ற பற்களையும் உடைய பார்வதி அம்மை; மிக்க அறம் வளர்ப்பதற்கு = சிறந்த 32 அறங்களையும் உலகத்தில் வளர்ப்பதற்குப் (பயன்படும்படி); கறைமிடற்று இறை நெல் சிற்றளவு இருநாழி என்று அளப்ப = கருத்த கண்டத்தையுடைய சிவபெருமான் நெல்லினை சிற்றளவாகிய இரு நாழி என்று கணக்கிட்டு அளந்து தருதற்கு; ஒருபெரு கருவிதான் = ஒப்பற்ற பெரிய நாழி என்னும் அளவு கருவி தன்னை; இவ்வெறிமலர்க் குடுமிக்குன்றின் வேய்களுள் ஒன்றில் பெற்றாள் = இந்த மணம் தங்கிய பூக்களையுடைய சிகரத்தோடு கூடிய திருப்பருப்பத மலையின் தோன்றியுள்ள மூங்கில்களுள் ஒன்றிலிருந்தே பெற்றுக் கொண்டாள். (எ.று)

முடிபு - மலைமடந்தை அறம்வளர்த்தற்கு கறை மிடற்றிறை நெல் சிற்றளவு இரு நாழி என்று அளப்ப ஒருபெரும் கருவிதான் இக் குன்றின் வேய்களுள் ஒன்றில் பெற்றாள்.

904. நெடியவன் குறுகி யப்பால்
நின்றுகை தொழுமவ் வெற்பின்
மிடியுடை ஒருவன் விற்கும்
விறகினைக் குறித்துச் சென்று
வடியுடை நவியம் கொண்டுஓர்
மரத்தினைத் துணித்த லோடும்
[1]படியறும் பசும்பொன் ஆகும்[2]பரிசு
கண்டு உவந்து செல்வான் 21

(பா.ம்) [1]படியுறும்; [2]பரிசு கொண்டு

(இ.ள்) நெடியவன் குறுகி அப்பால் நின்றுகை தொழும் அவ்வெற்பில் - நெடுமாலாகிய திருமால் பணிவாகக் குறுகி வெகு தூரத்திலிருந்து

Koviloor Digital Library

கைகூப்பித் தொழும் பெருமை வாய்ந்த இத்திருப்பருப்பத மலையிலே; மிடியுடை ஒருவன் விற்கும் விறகினைக் குறித்துச் சென்று = வறுமையையுடைய ஒருமகன் விலைப்படுத்தும் விறகைப் பெறுதற்கு மனத்திலே கருதிக் கொண்டு சென்று; வடியுடை நவியம் கொண்டு ஓர் மரத்தினைத் துணித்தலோடும் = (இரும்பாலாகிய) கூர்மையான கோடரியைக் கைக்கொண்டு ஒரு மரத்தை வெட்டத் தொடங்கிய உடனே; படியறும் பசும்பொன் ஆகும் பரிசு கண்டு உவந்து செல்வான் -(வெட்டிய அம்மரம் இரும்பைப் பொன்னாக்கும் இயல்புடையது ஆதலால்) ஒப்பற்ற நல்ல பொன்னாகும் தன்மையைப்பார்த்து மனம் மகிழ்ந்து செல்வான். (எ.று)

முடிபு - நெடியவன் குறுகி அப்பால் நின்று கைதொழும் வெற்பிலே மிடியையுடைய ஒருவன் விறகினைக் குறித்துச் சென்று நவியங் கொண்டு ஓர் மரத்தினைத் துணித்தலோடும் பசும்பொன்னுகும் பரிசு கண்டு உவந்து செல்வான்.

905. கொண்டல்கள் முழவில் ஆர்க்கும்
கோதைவெள் அருவி வெற்பில்
[1]வண்டுபாண் முரன்று மூசி
[2]மலர்திளைத்து ஊறு செந்தேன்
உண்டுகண் துயில்பூங் கொம்பர் உயர்
மரத்து இவர்ந்து இராசி
ஞெண்டுகண்டு அஞ்சி மந்தி
ஞெரேல்என இழியும் அன்றே 22

(பா-ம்) [1]வண்டு பண்; [2]மலர்கிளைத்து

(இ.ள்) கொண்டல்கள் முழவின் ஆர்க்கும் வெற்பு = முகில்கள் மத்தள ஓசைபோல் ஆரவாரிக்கின்ற மலை; கோதை வெள் அருவி வெற்பு = மாலை போல வெண்மையான அருவிகள் பாயும் வெற்பு; (அத்தகைய வெற்பில்) வண்டுபாண் முரன்று மூசி மலர் திளைத்து ஊறுசெந்தேன் உண்டு கண்துயில் பூங்கொம்பர் உயர்மரம் =வண்டுகள் பண்களை ஒலித்து மொய்த்து பூக்களிலே திளைத்து அதிலிருந்து ஊறுகின்ற செந்தேனை நுகர்ந்து அங்கேயே உறங்குகின்ற பூக்களையுடைய கிளைகளைப் பெற்றிருக்கும் மரங்கள்; மந்தி மரத்து இவர்ந்து இராசி ஞெண்டு கண்டு அஞ்சி ஞெரேல் என இழியும் = அத்தகைய மரத்தில்

Koviloor Digital Library

பெண் குரங்கு ஏறிச் சென்று வான வீதியிலேயுள்ள இராசியாகிய நண்டினைப் பார்த்து அஞ்சி சரேல் என்று கீழே இறங்கி வரும். (எ.று)

முடிபு - வெற்பில் உயர் மரத்தில் மந்தி இவர்ந்து இராசி ஞெண்டு கண்டு அஞ்சி ஞெரேல் என இழியும் (எத்தகைய வெற்பு எனில்) கொண்டல்கள் முழவில் ஆர்க்கும் வெற்பு; கோதைவெள் அருவி (பாயும்) வெற்பு; எத்தகைய உயர் மரம் எனின்? வண்டுகள் பாண் முரன்று மூசி மலரிலேதிளைத்து ஊறுகின்ற செந்தேனை உண்டு கண்துயில்கின்ற பூங்கொம்பையுடைய உயர் மரம். மலையின் தன்மையும் அம்மலையிடத்தேயுள்ள உயர் மரத்தின் தன்மையும் அம்மரக்கிளைகளில் வாழும் வண்டுகளின் தன்மையும் கூறுதலால் இப்பாட்டு தன்மை நவிர்ச்சியணி ஆகும் என்க. குரங்கு நண்டைக் கண்டு அஞ்சுவது இயல்பு. அத்தகைய குரங்கு உயர் மரத்தில் ஏறி வானவட்டத்திலுள்ள இராசியாகிய நண்டை (கடகராசியை) பார்த்து அஞ்சிற்று என்பது மரத்தின் உயர்ச்சியை குறித்தலால் உயர்வு நவிர்ச்சியணியாகும். குரங்குவான இராசியாகிய நண்டை மண்ணுலகத்திலேயுள்ள நண்டாகக் கருதி மயங்கியது மயக்க அணியும் ஆகும்.

அம்மலையிலுள்ள யானைகளின் ஊடல்

906. தளிர்க்குள கினைத்தேன் தோய்த்துத்
தனதுவாய்க் கொடுக்கும் செய்கை
பளிக்கறை அதனுள் கண்டு
பரிந்துவே றொன்றி னுக்குஇங்கு
அளித்ததென் றுளமயங்கி
அரும்பி டிஒருகூர்ங் கோட்டுக்
களிற்றினை முனிந்து செல்லும்
கம்பலை யுடைத்தக் குன்றம் 23

(இ.ள்) அரும்பிடி = அரிய பெண் யானையானது; தளிர் குளகினை தேன் தோய்த்து தனது வாய் கொடுக்கும் செய்கை = இளந்தளிராகிய தீனியை தேனிலே தொட்டு தன்னுடைய வாயிலே தன் களிற்று, யானைக் கொடுக்கும் செயலை; பளிக்கறை அதனுள் கண்டு = பளிங்குக் கல்லாலாகிய பாறையில் நிழலிலே பார்த்து; பரிந்து வேறு ஒன்றினுக்கு இங்கு அளித்தது என்று உளம் மயங்கி = தனக்குரிய களிறு வேறு ஒரு பிடியினிடத்து அன்பு கொண்டு குளகினை அளித்தது என்று உள்ளம்

Koviloor Digital Library

மயங்கி எண்ணி; ஒரு கூர்ங்கோட்டு களிற்றினை முனிந்து செல்லும் கம்பலை உடைத்து அக்குன்றம் = தனக்குரியதாகிய (ஒன்றாகிய) கூரிய தந்தத்தையுடைய ஆண்யானையை புலந்து செல்லும் ஆரவாரத்தினை உடையது அம்மலை என்க. (எ.று)

முடிவு - அரும்பிடி, குளகினை தேன் தோய்த்து (களிறு) தனதுவாய் கொடுக்கும் செய்கையை பளிக்கறை அதனுள் கண்டு பரிந்து வேறு ஒன்றினுக்கு அளித்ததென்று உளம் மயங்கி களிற்றினை முனிந்து செல்லும் கம்பலை உடைத்து அக்குன்றம். அக்குன்றம் அரும்பிடி களிற்றினை முனிந்து செல்லும் கம்பலை உடைத்து பிடி தன்களிற்று யானை தனக்கு உணவு தரும் செயலை பிரி தொன்றினுக்குக் கொடுத்த தாக எண்ணி மயங்கலால் இது மயக்க அணியாகும் என்க.

907. நண்ணுறு மதியின் மானைப்
பிடித்து நீ நல்கு கென்னா
ஒண்ணுதல் மடந்தை வேண்ட
ஒருகுறமகன் கேட்டு அன்று
பெண்ணுரை கொண்டி ராமன்
பிடிப்பதற் கெண்ணு மாபோல்
எண்ணிலன் இதற்கென் செய்வென்
என்றுளம் நைந்து நிற்பான் 24

(இ.ள்) ஒள்நுதல் மடந்தை நண்ணுறு மதியின் மானைப் பிடித்து நீ நல்குக என்னு வேண்ட = ஒளி பெற்ற நெற்றியையுடைய குறமகள் ஒருத்தி (தன் தலைவனைப் பார்த்து) மதியில் பொருந்தியுள்ள மானை நீ பிடித்து எனக்குக் கொடுப்பாயாக என்று வேண்டி கேட்டுக் கொள்ள. ஒரு குறமகன் கேட்டு = அவள் கூறியதை அவளது கணவனாகிய ஒரு குறமகன் கேட்டு; அன்று இராமன் பெண் உரை கொண்டு பிடிப்பதற்கு எண்ணுமா போல் எண்ணிலன் அக்காலத்தில் சீதையாகிய பெண்கூறிய மொழியைக் கேட்டு இராமன் மானைப் பிடிப்பதற்கு எண்ணினுற் போல. அம் மானைப் பிடித்தற்கு இவன் எண்ணிலன்; இதற்கு என் செய்வேன் என்று உளம் நைந்து நிற்பான் = அறியாமையால் இவள் இவ்வாறு கேட்கின்றதற்கு நான் என் செய்வேன் என்று உள்ளம் நைந்து ஒன்றும் செய்யாமல் நிற்பான். (எ.று)

முடிபு - மடந்தை மதியின் மானை பிடித்து நீ நல்குக என்று வேண்ட அதனை ஒருகுறமகன் கேட்டு அன்று பெண்ணுரை கொண்டு இராமன்

Koviloor Digital Library

பிடிப்பதற்கு எண்ணுமா போல் எண்ணிலன் இதற்கு என்செய்கேன் என்று உளம் நைந்து நிற்பான். எனவே இக்குறமகன் இராமனினும் சிறந்த அறிவுடையான் என்பது புலனாயிற்று.

908. மேருமந் தரமே ஆதி வெற்பெலாம் எனைவெ றுப்பச்
சாருமென் மாட்டே முக்கண் தம்பிரான் என நினைந்து
சேருமொன் னலரை அஞ்சி சிலம்பழுமாறு போல
ஆரவெள் அருவி பாயும் அழகினை உடைத்து மாதோ 25

(இ.ள்) மேரு மந்தரமே ஆதி வெற்பெலாம் = மகா மேரு மலை மந்தரமலை முதலான மலைகளெல்லாம்; முக்கண் தம்பிரான் என் மாட்டேசாரும் என நினைந்து எனைவெறுப்ப = மூன்று கண்ணை யுடைய எனக்குத் தலைவனாகிய இறைவன் என்னிடத்திலேயே தங்கி இருப்பன் என்பதைக் கருதி அவைகள் எல்லாம் எனைவெறுப்ப(இதன் காரணமாய்); சேரும் ஒன்னலரை அஞ்சி சிலம்பு அழுமாறு போல = வரக்கூடிய பகைவரின் துன்பத்தைக் கருதி அத்திருப்பருப்பத மலை அழுதல் போல; ஆரவெள் அருவி பாயும் அழகினை உடைத்து = முத்துக்களையுடைய வெண்மையான அருவி நீர் ஒலித்துக் கொண்டு பாயும் அழகினை அம்மலை உடைத்து. (எ.று) (மாது, ஓ = அசை).

முடிபு - சிலம்பானது மேருமந்தரமேயாதிவெற்பலாம் முக்கண் தம்பிரான் என்மாட்டேசாரும் என நினைந்து எனை வெறுப்ப (அதன் காரணமாக) சேரும் ஒன்னலரை அஞ்சி அழுமாறுபோல அருவி பாயும் அழகினை உடைத்து. அருவி ஒலித்துக் கொண்டு பாய்வது அது அழுதல் போல் உள்ளது என்பது தற்குறிப்பேற்றம். அது அழுதற்குக் காரணம் கூறியதால் காரணத்தோடு கூடிய தற்குறிப்பேற்ற அணியாகும்.

அல்லமதேவர் கோரக்கர் இருக்குமிடத்தை அடைந்தது

909. இனையன [1]வளமிகுந்த எந்திருச் சயிலம் தன்னை
அனையினும் இனியன் எங்கோன் அல்லமன் சென்று நண்ணித்
தனியுடல் சித்தி பெற்று தருக்குமக் கோரக் கன்றான்
நனியுளம் மகிழ்ந்தி ருக்கும் நல்லிடம் தனைய டைந்தான் 26

(பா.ம்) [1]வளமிகுத்த

(இ.ள்) அனையினும் இனியன் எங்கோன் அல்லமன் = தாயைக்

Koviloor Digital Library

காட்டிலும் நல்லோனுகிய என் தலைவனாகிய அல்லமதேவன்; இனையன வளம் மிகுந்த எம் திருச்சயிலம் தன்னைச் சென்று நண்ணி = மேலே கூறியவாறு பலவகை வளங்கள் மிகுந்த எங்கள் திருப்பருப் பதத்தைச் சென்று அடைந்து; தனியுடல் சித்தி பெற்று, தருக்கும் அக்கோரக்கன் தான் = வேறுபட்டு அழியும் உடம்பின் சித்தி பெற்று அதன் காரணமாக செருக்கடைந்து நிற்கும் அத்தகைய கோரக்கன் என்னும் சித்தன்தான்; நனி உளம் மகிழ்ந்திருக்கும் நல்லிடம் தனை அடைந்தான் = தன்காய சித்தியைக் கருதி மிகவும் உள்ளம் மகிழ்ந்து வாழ்ந்திருக்கும் நல்ல இடத்தை அடைந்தான்(எ.று)

முடிபு - அல்லமன் வளம் மிகுந்த திருச்சைலம் தன்னை சென்று நண்ணி உடல் சித்திபெற்று தருக்கும் அக்கோரக்கன் தான் உளம் மகிழ்ந்திருக்கும் நல்லிடம் தனை அடைந்தான். உடல்சித்தி - காயசித்தி. ஸ்ரீசைலமலைச் சார்பில் கோரக்கன் வாழ்ந்திருந்த இடம் மிகச் சிறந்த இடமாதலின் நல்லிடம். என்றார். தனி உடல் = தனித்து அழியும் உடல் ''குடம்பை தனித்தொழிய புட்பறந்தற்றே'' என்ற திருக்குறள் கருத்தை உணர்க.

கோரக்கன் அல்லமரைக் கண்டு முகமன் கூறுதல்.

910. அத்தன் நேர் வருதல் கண்ணுற்(று) அப்பெரும் சித்தன்
தன்னோடு
ஒத்தஓர் சித்தனுக உன்னுபு தனைவி யந்து
நித்தனுள் மலர்த்தாள் [1]தாழான் நின்றுகை குவித்து ஞான
சித்தநீ வருக என்றோா் தவிசிடைச் சேர்த்திச் சொல்வான்
27

(பா.ம்) [1]தாழாநின்று

(இ.ள்) அப்பெரும் சித்தன் அத்தன் நேர் வருதல் கண்ணுற்று = அத்தகைய பெரும் சித்தனுகிய கோரக்கன் அல்லம தேவன் தனக்கு முன் வருதலைப் பார்த்து; தன்னோடு ஒத்தஓர் சித்தனுக உன்னுபு = காயசித்தி அடைந்த தன்னேடு ஒத்த காய சித்தி அடைந்த சித்தனுகவே நினைத்து; தனைவியந்து=மேலும் வந்த அல்லமனைக் காட்டிலும் தான் பெரியவன் என்று தன்னை மிக்கோனாக எண்ணிக்கொண்டு; நித்தன் நாள் மலர்த்தாள் தாழான் = அழிவற்றவனாகிய அல்லம தேவனின் அன்றலர்ந்த தாமரை மலர் போன்ற திருவடியினை தாழ்ந்து வணங்கானுய்; நின்று கைகுவித்து = நேராக நின்றுகை குவித்து; ஞானசித்த நீ வருக என்று ஓர் தவிசிடை

Koviloor Digital Library

சேர்த்திச் சொல்வான் = ஞான சித்தனே நீ வருக என்று கூறி ஓர் ஆசனத்திடை அமரச் செய்து மேலும் சொல்லத் தொடங்கினுன் (எ.று)

முடிவு - அப்பெரும் சித்தன் அத்தன் நேர் வருதல் கண்ணுற்று தன்னோடு ஒத்த ஓர் சித்தனுக உன்னுபு தன்னை வியந்து நித்தன் தான் தாழானுய் நின்று கைகுவித்து ஞானசித்த! நீ வருக என்று கூறி ஓர் தவிசிடை சேர்த்தி சொல்வான்.

வேறு

911. இரவி வானவன் எழுந்ததும் இன்றெ னக்கு அதா[1]அன்று
தெரிவ [2]ஆயின கண்களும் இன்று நின் சிறந்த
வரவு நானெதிர் இன்று பெற்றமையினின் வரவு
பொருவில் மாதவம் புரிந்திடார்க்கு எளியதோ [3]புகலின் 28

(பா.ம்) [1]ஒன்று; [2] தெரியவாயின ; [3]புகலில்

(இ.ள்) இரவி வானவன் எழுந்ததும் இன்று = தெய்வங்களில் ஒளிபொருந்திய தெய்வமாகிய சூரியனுகிய தேவன் என்னிடம் எழுந்து வந்ததும் இல்லை; அதாஅன்று = அதுவும் அல்லாமல்; தெரிவ ஆயின கண்களும் எனக்கு இன்று = (ஒருக்கால் அவன் வருவானே ஆனுல் அவனைப்) பார்த்துத் தெரிந்து கொள்கின்ற கண்களும் எனக்கு இல்லை; நின் சிறந்த வரவு நான் எதிர் இன்று பெற்றமையின் = சூரியனுடைய வருகையைக் காட்டிலும் சிறந்த உன்னுடைய வருகையை எளியேனுகியநான் எனக்கு எதிராக இன்றைய நாள் பெற்றமையால்; புகலின் = இந்நிகழ்ச்சிக்குக் காரணத்தை ஆராய்ந்து கூறின்; நின்வரவு பொருவில் மாதவம் புரிந்திடார்க்கு எளியதோ = உன்னுடைய வருகை ஒப்பில்லாத பெரியதவத்தைச் செய்யாதவர்க்கு கிடைப்பதற்கு எளிதாகுமோ (எ.று) எளிதாகாது என்பது பொருள். தவம் புரிந்திடார்க்கு உன் வருகை எளிதாக கிடைக்காது என்பதாயிற்று.

முடிபு - இரவியாகிய வானவன் எழுந்ததும் இன்று; அதா அன்று தெரிவ ஆயின கண்களும் எனக்கு இன்று; நின் சிறந்த வரவை நான் இன்று பெற்றமையின் நின் வரவு புகலின் மாதவம் புரிந்திடார்க்கு எளியதோ? புறவிருளைப் போக்கும் சூரியனுடைய வருகையைக் காட்டிலும் அக இருளைப் போக்கும் உன்னுடைய வருகை எனக்குச் சிறந்தாயிற்று . இதைப் பெறுதற்கு யான் பெருந்தவம் புரிந்திருக்க வேண்டும் என்பது கருத்தாயிற்று.

Koviloor Digital Library

இதுவுமது

912. மதலை ஆகிய நற்குணம் சார்ந்துநல் வாய்மை
சிதைவி லாவடி யாரினம் சேர்ந்திடா தவன்கண்
நுதலி னானையும் சேர்ந்திடான் என்பஎந் நூலும்
முதலி லான்பெறும் ஊதியம் யாதுகொல் மொழியில் 29

(இ.ள்) மதலை ஆகிய நல் குணம் சார்ந்து = சான்றாண்மைக்கு தூண் போன்ற அன்பு; நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை என்னும் நற்குணங்கள் அமையப் பெற்று; நல்வாய்மை சிதைவிலா அடியார் இனம் சேர்ந்திடாதவன் = அந் நற்குணங்களுள் மெய்ப்பொருள் உணர்ச்சியை கெடாமல் பெற்றிருக்கும் அடியவரின் கூட்டத்தை அடையாதவன்; கண்ணுதலினானையும் சேர்ந்திடான் என்ப எந்நூலும் = நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானையும் அடையான் என்று கூறும் எல்லா நூல்களும்; மொழியில் = ஆராய்ந்து கூறில்; முதல் இலான் பெறும் ஊதியம் யாது கொல் = முதற் பொருள் இல்லாதவன் அடையக்கூடிய ஊதியப் பொருள் எதுவாயிருக்கும்? முதலிலார்க்கு ஊதியம் இல்லை என்பது கருத்து. (எ.று)

முடிவு - நற்குணம் சார்ந்து (அவற்றுள்) வாய்மை சிதைவிலா அடியாரினத்தைச் சேர்ந்திடாதவன் கண்ணுதலினுனையும் சார்ந்திடான் என்ப எந் நூலும் மொழியில் முதலிலான் பெறும் ஊதியம் யாது கொல்? கொல் என்னும் இடைச்சொல் வினுப் பொருட்டு. மதலை - இங்கு தூண் என்கின்ற பொருளில் வந்துள்ளது. திருவள்ளுவர் சான்றாண்மையைத் தாங்கும் தூண் ஐந்து என்பர். அதனை, ''அன்பு, நாணொப்புரவு கண் ணோட்டம், வாய்மையோடைந்து சால் பூன்றிய தூண்.'' இக்குறளால் அறிக சான்றாண்மை. (திருக்குறள் 983). அவ்ஐந்துள் ஒடுக்கொடுத்துக் கூறிய வாய்மை அடியார்க்கு இன்றியமையாது வேண்டப் படுதலின், ''வாய்மை சிதைவிலா அடியாரினம்'' எனக் கூறினார். இப்பாட்டு;

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை (திருக்குறள். 449)

என்னும் குறளை அடிஒற்றி எழுந்தது. உரையாசிரியராகிய சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் மதலையாகிய நற்குணங்களைச் சார்ந்து - என்பதற்கு குழந்தைப் பருவத்திற்குரியதாகிய நற்குணங்களை அடைந்து என்று பொருள் காண்பர். ஆகிய என்ற சொல்லைக் கருதினால்

Koviloor Digital Library

அப்பொருள் பொருத்தம் இல்லை. மதலைக்குரிய நற்குணம் என நான்காம் வேற்றமைப் பொருள் பொருத்தம்.

913. ஒருவி ருந்தினர்க் குரைசெயு முகமனே டொப்பக்
குருப ரன்தனக்கு இனையன இன்மொழி கூறி
வருபெ ருந்தகை யார்கொல்நீ உரைஎன வாழ்த்தி
அருளின் அங்கடல் தனைவினய் நின்றனன் நன்றே 30

(இ.ள்) ஒரு விருந்தினர்க்கு உரைசெயும் முகமனேடு ஒப்ப = தன்னை நோக்கி வந்த ஒருவிருந்தினர்க்குக் கூறப்படும் இன் சொல்லாகிய முகமனேடு ஒவ்வும்படி; குருபரன் தனக்கு இனையன இன்மொழி கூறி = மேலான குருவாகிய இவ் அல்லம தேவனுக்கு இத்தகைய முகமன் சொற்களைக் கூறி; வாழ்த்தி = வாழ்த்துக் கூறி; அருளின் அங்கடல் தனை = அருளிலே அழகிய கடலை ஒத்த அல்லம தேவனை; வரு பெருந்தகை யார் கொல் நீ உரை என நன்றே வினய் நின்றனன் = என்னை நோக்கி வந்துள்ள பெருந்தகையாகிய நீ யார் எனச் சொல்வாயாக என்று நன்றாகக் கேட்டு நின்றான். (எ.று)

முடிபு - (அப்பெரும் சித்தன்) விருந்தினர்க்கு உரைசெயும் முகமனேடு ஒப்ப குருபரன் தனக்கு இனையன இன்மொழி கூறி வாழ்த்தி அருள் கடல்தனை வருபெருந்தகை யார்கொல் நீ உரை என நன்றே வினய் நின்றனன்.

யார் கொல் நீ உரை எனக் கேட்ட கோரக்கனுக்கு அல்லமதேவர் கூறிய பதில்

914. செறிந்த மூலஆங் காரத்தின் வேறெனத் தீர்ந்திட்டு
இறந்தி [1]டாததற் கண்டவன் என்னையும் காண்பான்
மறிந்து போமுடல் மானியை உரைப்பதென் மதித்தென்று
அறிந்த ஞானிகள் வேறற அறிபவன் அறைந்தான் 31

(பா.ம்) [1]இறந்திடாது

(இ.ள்) அறிந்த ஞானிகள் வேறு அற அறிபவன் = அறிந்த ஞானிகளால் தமக்குள் வேறுபாடு அற அறியப்படு பவனாகிய அல்லம தேவன்; (கோரக்கன் யார் நீ உரை என்று கூறியதைக் கேட்டு அதற்கு விடையாக) செறிந்த மூல ஆங்காரத்தின் வேறு என தீர்ந்திட்டு = மாயையின் கண் பொருந்தியுள்ள உலக உற்பத்திக்கு அடியான அகங்காரத்தத்துவப் பொருள்களில் வேறாகும் என ஆராய்ந்து முடிபு கட்டப்பெற்று; இறந்திடாத தன் கண்டவன் = அழியாத பொருள் எனும்

Koviloor Digital Library

ஆன்மாவாகிய தன்னைக் கண்டவன்; என்னையும் காண்பான் = பரமாத்மாவாகிய என்னையும் உணர்வான்; மறிந்து போம் உடல் மானியை உரைப்பது என் மதித்து என்று அறைந்தான் = அழிந்து போகின்ற உடலையே கருதி அதில் பற்று வைத்திருக்கின்ற உனக்கு எதைக் கருதி விடை கூறுவது என்று கூறினான். (எ.று)

முடிபு - ஞானிகள் வேறு அற அறிபவனுகிய அல்லமன் (கோரக்கனை நோக்கி) மூல ஆங்காரத்தின் வேறு என தீர்ந்திட்டு, இறந்திடாத தற்கண்டவன் என்னையும் காண்பான். மறிந்துபோம் உடல் மானியை என் மதித்து உரைப்பது.

அவ்வியத்தமாகிய மாயையிலிருந்து மகதத்துவம் தோன்றும் என்றும், அம்மகத்துவத்திலிருந்து அகங்காரம் தோன்றும் என்றும்; அவ் அகங்காரத்துவம் மூன்று குணங்களாக விளங்கி (சத்துவம் 'இராசதம்' தாமதம்) அவற்றிலிருந்து ஈசனும், சீவனும், தனு, கரண, புவன போகங்களும் உண்டாகும் என்றும், தத்துவ நூல்கள் கூறும் இப்பொருளைக் கருத்தில் கொண்டு இப்பாட்டிற்கு உரை கூறத் தொடங்குக. மேலே கூறிய அகங்காரதத்துவத்தை இவர் மூல ஆங்காரம் எனக் கூறுகின்றார். அது மாயையாகிய (வியக்தம்-வெளிப்படை, அவ்வியத்தம் - வெளிப்படாதது) அவ்வியத் தியத்தில் பொருந்தி உள்ளமையால் அது செறிந்த மூல ஆங்காரம் எனக் கூறினார். மூலாங்காரத்தில் தோன்றிய பொருள்கள் உடம்பும் ஐம்பொறியும் அந்தக் கரணம் நான்கும் பிராணவாயும் என்று இவற்றை ஏழுவகையாக பிரிப்பர். இவற்றிக்குச் சீவ உபாதி என்று பெயர். இந்த சீவ உபாதியை ஆராய்ந்து வேறுபடுத்தியே தன்னைக் காண வேண்டும். அதனுல்தான் மூல ஆங்காரத்தின் வேறெனத் தீர்ந்திட்டிறந்திடாததன் என்று கூறினார். தன் என்பது ஆன்மாவை ஆன்மா இறவாதது. ஆதலின் இறந்திடாத தன் என்று குறிப்பிட்டார். ஆன்மாவாகிய தன்னைக் கண்டவனே பரமான் மாவாகிய என்னைக் காண்பன். ஆதலின் ''தற்கண்டவன் என்னைக் காண்பான்'' என்றார். எனவே ஆன்ம ஆராய்ச்சி செய்து தன்னை உணர்ந்து கொண்டு பின்னர் முதலாகிய பரமான்மா ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்க. ஆன்மாவாகிய தன்னை மட்டும் ஆராய்ந்து பரமான்மா ஆராய்ச்சி செய்யாவிடில் அவருக்குப் பிறப்பு அறாது.

''தன்னை அறிந்தும் பிறவி தணவாதால்'' (திருமந்.2279) என்றும், ''தன்னை அறிந்து சிவனுடன் தானுக மன்னும் மலங்குணம் மாளும் பிறப்பறும். (திருமந்தி 2331) (சமய நுண் பொருளை இதன் பால் காண்க)

Koviloor Digital Library

என்னும் இவற்றால் தன்னையும் தனக்கு ஆதாரத்தலைவனையும் அறிந்து கொள்ள வேண்டும் என்க. கோரக்கன் மூல ஆங்காரத்தில் தோன்றிய அழிந்து போகும் உடம்பு ஒன்றையே அடையும் பொருளாகக் கருதி பற்று செய்திருத்தலின் அத்தகையோருக்கு சீவ ஆன்ம பரமான்ம ஆராய்ச்சி விளங்காதாதலின் ''மறிந்து போம் உடல் மானியை உரைப்பது என்'' என்று கூறினார். எனவே மூல அகங்காரத்தைப் பற்றுக் கோடாகக் கொண்ட உனக்கு அப்பற்று நீங்கிய (மூல அகங்காரத்தை) என்னை உணர்த்த முடியாது என்பதாயிற்று. நீ அகங்காரம் உடையவன் நான் அகங்காரமில்லாதவன் என்று குறிப்பிட்டார் ஆயிற்று. மானியை உரைப்பதென் என்ற இடத்தில் ஐயுருபைக் குவ் உருபாகத் திரித்துக் கொள்க.

அங்ஙனம் கூறிய அல்லமனுக்கு கோரக்கன் கூறுவது

915. ஆதி நாதனது அருளினுல் குளிகையா திகளால்
மேதை யாமுடல் சித்திபெற் றவனென்றும் விளியான்
ஆத லாலது பெறாதவன் அழியுமென் றறைந்தான்
பூத மேனியே தானெனப் பொருந்து புந் தியினுன் 32

(இ.ள்) பூத மேனியே தான் எனப் பொருந்து புந்தியினுன் = ஐம்பூதங்களால் உண்டாகிய இவ்வுடம்பினையே தானுகக் கருதிக் கொண்டிருக்கும் அறிவினையுடைய இக் கோரக்கன்; (அல்லமனை நோக்கி) ஆதிநாதனது அருளினுல் = சித்தர்களுக்கெல்லாம் முதல்வனுகிய ஆதிநாதனது திருவருளினுலும்; குளிகை ஆதிகளால் = காய சித்தியை உண்டாக்குகின்ற இரச குளிகை முதலான பொருள்களாலும்; மேதையாம் உடல் சித்தி பெற்றவன் என்றும் விளியான் = அறிவுக்குக் காரணமாகிய இவ்உடம்பின் நிலை பேற்றைப் பெற்றுக் கொண்ட ஒருவன் எப்பொழுதும் இறக்கமாட்டான்; ஆதலால் அது பெறாதவன் அழியும் என்று அறைந்தான் = ஆகையினாலே அச்சித்தி பெறாதவன் அழிந்து போவான் என்று அறுதி இட்டு கூறினான். (எ.று)

முடிபு - மேனியே தான் எனப் பொருந்து புந்தியினுன் ஆதி நாதனது அருளினுலும், குளிகை ஆதிகளாலும் உடல் சித்தி பெற்றவன் என்றும் விளியான். ஆதலால் அது பெறாதவ(னே) அழியும் என்று அறைந்தான்.

மேற்பாட்டில் அல்லமதேவர் மறிந்து போம் உடல் மானிக்கு கூறுவது என்ன இருக்கிறது என்று அல்லமதேவன் கூறினார். அதைக்

Koviloor Digital Library

கேட்ட கோரக்கன் காய சித்தி பெற்றவன் இறவான், காய சித்தி பெறாதவனே இறப்பான் என்று மறுத்துக் கூறினார். ஆதி நாதன் என்பது சித்தருக் கெல்லாம் தலைவனுகிய சிவபெருமானை. கோரக்கரின் சீடரான சுவாத்மராம யோகி என்பார் இயற்றிய ஹடயோக பிரதீபிகை என்னும் நூலில் சித்தர்களின் பெயர்களை எல்லாம் வரிசைப் படுத்திக் கூறும்போது. ஆதி நாதனையே முதற்கண் வைத்து ஓதியுள்ளார். வேம்பத்தூரார் செய்த திருவிளையாடற் புராணத்தில் எல்லாம் வல்ல சித்தரது விளையாட்டைக் கூறும் படலத்துள் ஆதிநாதனையே முதலில் வைத்துச் சிறப்பித்து ஓதுகின்றார். பூத மேனியைத்தான் என்பானை தத்துவ நூல்கள் தேகான்மவாதி என்று கூறும்.

கோரக்கன் உடல் சித்திபெற்றவன் என்றும் இறவான் என்று கூறியதைக் கேட்ட அல்லமன் அவனுக்குக் கூறிய மறுமொழி.

916. உடம்பு வாழ்தல்தான் வாழ்தலும் ஊன்பொதிந்து இயற்றும்
உடம்பு சாதல்தான் சாதலும் ஆகவே உரைத்தாய்
உடம்பு தானுயிர் என்னநீ யுன்னினை போலும்
உடம்பு வேறறி யாவுல காயதன் ஒத்து 33

(இ.ள்) உடம்பு வேறுஅறியா உலகாயதன் ஒத்து = உடம்பினை தனக்கு வேறாக அறியாத உலகாயத சமயத்தவனைப் போல. (கோரக்கனே நீயும்); உடம்பு வாழ்தல் தான் வாழ்தலும் = உடம்பு அழியாமல் இவ்வுலகத்திலே வாழ்ந்திருத்தலே தான் வாழ்தலாகவும்; ஊன் பொதிந்து இயற்றும் உடம்பு சாதல் தான் சாதலும் ஆகவே உரைத்தாய் = தசையால் மூடப்பட்டு உண்டாக்கிய உடம்பு இறத் தலையே. தான் இறத்தலும் ஆகும் படியே நீ உரைத்தாய்; (இதனால்) உடம்புதான் உயிர் என்ன நீ உன்னினை போலும் = உடம்பு ஒன்றையே நீ உயிர் என்று கருதினாய் போலும். (எ.று)

முடிபு - (கோரக்கனே நீ) உலகாயதன் ஒத்து உடம்பு வாழ்தல்தான் வாழ்தலும்; உடம்பு சாதல் தான் சாதலும் ஆகவே உரைத்தாய். இதனால். உடம்புதான் உயிர் என்ன நீ உன்னினை போலும். இங்கு சிவப்பிரகாசர் உலகாயதனை ஒத்து நீ கூறினாய் என்று குறிப்பிடுகின்றார். கன்னடப் பிரபுலிங்கலீலையில் சாமரசன் காபாலிகளை ஒத்து நீ இவ்வாறு கூறினாய் என்று கூறுகிறார்.

Koviloor Digital Library

917. யாக்கை தானெனில் [1]எனதுடம்பு என்பதிங் கென்னை
போக்கும் ஆடைபொன் முதலிய பொருளுள் ஒன்று
எனதென்று
ஆக்கு வார்தமில் அதனை யான் [2]என்பவர் ஐய
பார்க்கில் யாருளர் பகர்தி என்று அல்லமன் பகர 34

(பா.ம்) [1]எனதுடலென் பதிங்; [2]யான் எனப்படுபவரை

(இ.ள்) யாக்கை தான் எனில் = உடம்பே தான் என்னும் சொல்லால் குறிக்கப் பெறும் ஆன்மாவாக இருக்குமேயானுல்; போக்கும் ஆடை பொன் முதலிய பொருளுள் ஒன்று எனது என்று ஆக்குவார் தமில் = வேறாக விடுக்கும் ஆடை, பொன் முதலிய பொருள்களுள் ஒன்றினை, எனது என்று வழங்குபவரை போல; எனதுடம்பு என்பது இங்கு என்னை = என்னுடைய உடம்பு ஒன்று வேறுபடுத்தி வழங்குவதற்குக் காரணம் என்ன? அதனை யான் என்பவர் ஐய! பார்க்கில் யார் உளர் என்று அல்லமன் பகர = பிறிதின் கிழமைப் பொருளாகிய அவ்வுடம்பினையான் என்று வழங்குபவர் ஐயனே! ஆராய்ந்து பார்க்கில் இவ்வுலகத்தில் யார் உளர் என்று அல்லமதேவர் சொல்ல, (எ.று)

முடிபு - யாக்கை தான் எனில் ஆடை பொன் முதலிய பொருளுள் ஒன்றை எனது என்று ஆக்குவார் தம்மைப் போல எனது உடம்பு என்று வழங்குவதற்குக் காரணம் என்னை? அதனை (உடம்பை) யான் என்று வழங்குபவர் உலகத்தில் யார்? ஐய! பகர்தி என்று அல்லமன் பகர.

கோரக்கன் வினா

918. யான்நி னைந்தனன் ஓடினன் என்றியம் புதலால்
தானெனப்படு கின்ற(து) ஏது எனக்கது தன்னை
நீநி கழ்த்துக என்ற கோ ரக்கன்நின்று இயம்ப
ஞான நற்குரு பரனிது நவின்றனன் நயந்து 35

(இ.ள்) கோரக்கன் நின்று = கோரக்கன் என்பான் அல்லமதேவன் முன்நின்று; யான் நினைந்தனன் ஓடினன் என்று இயம்புதலால் = யான் நினைந்தனன் யான் ஓடினன் என்று மக்களாலே இச் சொல் வழங்கப் படுதலால் (இங்கே); தான் எனப்படுகின்றது எது எனக்கு அதுதன்னை நீ நிகழ்த்துக என்று = தான் எனப் பொருள்படுகின்ற யான்என்பது எது அதை எனக்கு நீ கூறுவாயாக என்று கேட்க; ஞான நல் குருபரன் இது நயந்து நவின்றனன் = ஞானத்தை உணர்ந்தநல்ல குருபரனுகிய அல்லம தேவன் கீழே வரும் சொற்களை விரும்பிக் கூறினான். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - கோரக்கன் நின்று, யான்நினைந்தனன் யான் ஓடினன் என்று இயம்புதலால் தான் எனப்படுகின்ற யான் என்பது எது? அது தன்னை நீ நிகழ்த்துக என்று இயம்ப; குருபரன் இது நயந்து நவின்றனன். தானெனப் படுகின்றது எது என்பதற்குப் பதிலாக யான் எனப்படுகின்றது எது என்ற பாடம் கொண்டால் மிக நன்றாயிருக்கும். யான் ஓடினேன் என்றால் இங்கு ஓடுவது உடம்பாகும். அதேபோல யான் நினைந்தேன் என்றால் நினைப்பதும் உடம்பு தானே என்று கருதி இவ்வாறு கூறினார் கோரக்கர்.

அல்லம தேவர் கூறிய பதில்

919. நான்நி னைந்தனன் எனல் கரணத்தினை நண்ணும்
ஆன தன்மையால் உடல் பொறி காரணங்கள் அனைத்தும்
நான்எ னும்படி வரும்வரத் [1]தான்பல அதனுல்
நீந வின்றது அத் தியாசமென்று அறிகென நிகழ்த்த 36

(பா.ம்) [1]நான்பல அதனுல்.

(இ.ள்) (மேலே கூறிய இரண்டு எடுத்துக் காட்டுள்; நான் ஓடினேன் என்பதில் நான் என்பது உடம்பைக் குறிக்கும்; ஆனுல்) நான் நினைந்தனன் எனல் கரணத்தினை நண்ணும் = நான் நினைந்தனன் என்னும் தொடரில் நான் என்பது அந்தக் கரணத்தையே குறிக்கும்; ஆன தன்மையால் = இப்படி வேறுபட்டு வரும் தன்மையால்; உடல், பொறி கரணங்கள் அனைத்தும் நான் எனும்படி வரும் = உடம்பும் ஐம்பொறி களும் நாற் கரணங்களும் நான் என்று வழங்குவதற்கு உரித்தாகும் படிவரும்; வர தான்பல = இவ்வாறுவர நான் என்னும் பொருளுக்குரிய தான் என்பது பலவாகும்; அதனுல் நீ நவின்றது அத்தியாசம் என்று அறிக என நிகழ்த்த = அக்காரணத்தினுலே நீ இவ்வாறு கூறியுள்ளது; ஒரு பொருளை மற்றொரு பொருளாகக் கருதிய கற்பனையால் வந்த விளைவு என்பதை நீ அறிவாயாக என்று கூற. (எ.று)

முடிபு - நான் நினைந்தனன் எனலில் (நான்) கரணத்தினை நண்ணும்; ஆனதன்மையால் உடல் பொறி கரணங்கள் அனைத்தும் நான் என்று வழங்கும்படிவரும். வர தான் என்னும் நான் பல; அதனுல் இவற்றை எல்லாம் (நீ நவின்றது) அத்தியாசம் என்று அறிக)என நிகழ்த்த.

கோரக்கன் ஐய வினுவும் அல்லமன் மறுமொழிக் கூறத் தொடங்குதலும்

920. ஒழியும் என்னுயிர் எனுமிடத்து அவ்வுயிர் ஒழிய
மொழிய வேறுமோர் உயிர் உளதோ இதை [1]மொழி நீ

Koviloor Digital Library

பழியில் நல்லருள் குன்றமே என்றவன் பகரச்
செழிய மென்மலர்ப் பதத்தெமை ஆள்பவன் செப்பும் 37

(பா.ம்) [1]மொழிதி

(இ.ள்) பழியில்நல் அருள்குன்றமே = பழிப்பில்லாத நல்ல அருளையுடைய மலை போன்றவனே; என் உயிர் ஒழியும் எனும் இடத்து = என்னுடைய உயிர் ஒழியும் என்று சொல்லும் பொழுது; அவ் உயிர் ஒழிய வேறும் ஓர் உயிர் உளதோ = அத்தொடரில் உயிர் என்னும் சொல்லால் குறிக்கப்படும் உயிர் என்பது நீங்க என் என்னும் சொல்லால் மொழியப்படும் வேறும் ஓர் உயிரும் உளதோ; இதை நீ மொழி = இதை நீ கூறுவாயாக; என்று அவன் பகர = என்று கோரக்கன் கூற; செழிய மென் மலர் பதத்து எமை ஆள்பவன் செப்பும் = செழுமையான மென்மை தங்கிய மலர் போன்ற திருவடியால் எம்மை ஆட்கொள்ளும் அல்லமதேவன் இதனைக் கூறத் தொடங்கினுன் (எ.று)

முடிவு - பழியில் நல்லருள் குன்றமே, என் உயிர் ஒழியும் என்னும் இடத்து அவ்வுயிர் ஒழிய, மொழிய வேறும் ஓர் உயிர் உளதே. இதை நீ மொழி என்று அவன் பகர; மலர் பதத்தால் எமை ஆள்பவன் பகரும்.

821. உயிரெனும் பெயர் இயங்கு காற்கு இயற்பெயர்
உரைப்பின்
அயலு றுந்தனக்கு அப்பெயர் ஆகுபே ராமென்று
இயலு ணர்ந்தவர் இயம்புவர் என்றெமக்கு இறைவன்
மயல றும்படி [1]உணர்த்தி இஃது உரைத்தனன் மன்னே 38

(பா.ம்) [1]உரைத்திஃது; உணர்ந்திஃது

(இ.ள்) எமக்கு இறைவன் = கோரக்கன் கூறியதைக் கேட்ட எம் இறைவனுகிய அல்லம தேவன் (கோரக்கனைப் பார்த்து); உயிர் எனும் பெயர் இயங்கு காற்கு இயற்பெயர் = உயிர் என்கின்ற பெயரானது மூக்கினிடத்தே இயங்குகின்ற காற்றினுக்கு இயற்பெயராகும்; உரைப்பின் = ஆராய்ந்து கூறின்; அயல் உறும் தனக்கு = அக்காற்றிற்கு வேறாயிருக்கும் ஆன்மாகிய தனக்கு; அப்பெயர் ஆகுபெயர் ஆம் என்று = உயிர் எனும் பெயர் ஆகு பெயராய் வழங்கப்படும் என்று; இயல் உணர்ந்தவர் இயம்புவர் என்று = சொல்லிலக்கண நூலினை ஆராய்ந்தவர் கூறுவார் என்று; மயல் அறும்படி உணர்த்தி = மயக்கம் நீங்கும் படி கூறி இஃது உரைத்தனன் = மேலும் இதனைக் கூறத் தொடங்கினுன் (மன், ஓ - அசைச்சொல்)

Koviloor Digital Library

முடிபு - எமக்கு இறைவன் (கோரக்கனை நோக்கி) உரைப்பின் உயிர் எனும் பெயர் இயங்கு காற்றிற்கு இயற்பெயர்; அயல் உறும் தனக்கு அப்பெயர் ஆகுபெயராம் என்று இயல் உணர்ந்தவர் இயம்புவர் என்று மயல் அறும்படி உணர்த்தி இஃது உரைத்தனன். உயிர்ப்பது உயிராகும். உயிர்த்தல் - மூச்சுவிடுதல். இக்காரணத்தினுல் உயிர் என்னும் பெயர் மூச்சுக் காற்றுக்கு இயற்பெயர் ஆயிற்று. ஆன்மா மூச்சுக் காற்றின் உபாதியைப் பெற்றிருப்பதால் அதற்கும் உயிர் என்ற பெயர் வழங்கலாயிற்று.

இதுவுமது

922. தன்னைச் சச்சிதா னந்தமென்று அருமறை சாற்ற
மின்னில் கெட்டிடும் தசைநிணம் என்புதோல் மேய்ந்த
இன்னல் பொய்க்குடி லாகிய உடம்பினை யானென்று
உன்னிக் கெட்டனை என்கொல்நீ என்றினும் [1]இயம்பும் 39

(பா.ம்) [1]உரைக்கும்.

(இ.ள்) தன்னை = தத்பதப் பொருளாகிய பிரமத்தை; சச்சிதானந்தம் என்று அருமறை சாற்ற = சத்து சித்து ஆனந்தம் என்னும் மூன்று இயல்புகளையும் உடையது என்று அரிய வேதங்களெல்லாம் கூற; மின்னில் கெட்டிடும் தசை நிணம் என்புதோல் மேயந்த இன்னல் பொய்க்குடில் ஆகிய உடம்பினை = மின்னலைப் போல தோன்றி அழியும் இயல்புள்ளதாய் தசையும் நிணமும் எலும்பும் தோலும் ஆகிய இவற்றால் வேயப்பட்ட தாயும் துன்பத்தைத் தருவதாயும் பொய்யாகிய குடில் என்னும் இவ்வுடம்பை; யான் என்று உன்னி நீ கெட்டனை = இதையே ஆன்மாவாகிய யான் என்று கருதி நீ கெட்டாய்; என் கொல் = இதற்குக் காரணம் என்ன?; என்று இன்னும் இயம்பும் = என்று கூறி மேலும் கூறத் தொடங்கும்.

முடிபு - அருமறை தன்னைச் சச்சிதானந்தம் என்று சாற்ற உடம்பினை யான் என்று உன்னி நீ கெட்டனை என் கொல்? என்று பின்னும் இயம்பும். சத்து, சித்து, ஆனந்தத்திற்குமாறாக அசத்தாகவும், அசித்தாகவும், ஆனந்தமில்லாததாகவும் இருக்கின்ற உடம்பினை, நீ விரும்பினை என்னும் கருத்தால் மின்னில் கெட்டிடும் என்றும்; தசை, நிணம், என்பு, தோல் மேய்ந்த பொய்க்குடில் என்றும் இன்னலை உடையது என்றும்; உடம்பினை இழித்துக் கூறினார். மேல் வரும் 4 பாடல்களாலும் உடல் இழிபு கூறுகின்றார்.

Koviloor Digital Library

923. வெருவு றப்படும் பிறவியை ஒழித்தமெய் வீடு
மருவு தற்குளம் வைத்தவன் இம்மல வடிவைத்
தெருவி னிற்புனி தம்படா ஒன்றினைத் தீண்டி
அருவ ருப்பவன் போலரு வருத்ததை அகற்றும் 40

(இ.ள்) வெருவு றப்படும் பிறவியை ஒழித்த மெய் வீடு மருவுதற்கு உளம் வைத்தவன் =(உண்டாகும் துன்பத்தை எண்ணி) அச்சம் அடையப் பெறும் பிறவி நோயை அகற்றி உண்மையான முத்தி நிலையை அடைதற்கு மனம் விரும்பிய ஒருவன்; இம்மலவடிவை = இந்த அழுக்கே வடிவாக உடையவுடம்பை; தெருவினில் புனிதம்படா ஒன்றனைத் தீண்டி அருவருப்பவன் போல தெருவினிடத்தே தூய்மை இல்லாத தாகிய மலம் என்னும் ஒருபொருளை மறதியினுல் மிதித்துக் கொண்டு உணர்ந்தபின் அருவருப்பவன் போல; அருவருத்து அதை அகற்றும் = அருவருப் படைந்து அம்மலவடிவாகிய உடம்பை நீக்க முயல்வான். (எ.று)

முடிப்பு - பிறவியை ஒழித்த வீடு மருவுதற்கு உளம் வைத்தவன் இம்மல வடிவை புனிதம்படா ஒன்றனைத் தெருவினில் தீண்டி அருவருப் பவன் போல் அருவருத்து அதை அகற்றும். கண்ணிடத்தே பீளையும் காதினிடத்தே குறும்பியும், மூக்கினிடத்தே சளியும் வாயினிடத்தே எச்சிலும் குதத்தின் கண் மலமும் நிறைந்துள்ள உடம்பாதலின் இவ் உடம்பை மலவடிவு என்றார்.

924. மருந்து கொண்டு நோய் தீர்ப்பவர் போல்சிவம் மருவி
இருந்த இவ்வுடம் பினைப்பெரி யவர்விட எண்ண
மருந்து கொண்டுநோய் யோடுற மதிப்பவன் போல
இருந்த இவ்வுடம் போடுற எண்ணினை என்ஞே 41

(இ.ள்) பெரியவர் = அறிவில் பெரியோர் எல்லாம்; மருந்து கொண்டு நோய் தீர்ப்பவர் போல் = நோய் தீர்க்கும் மருந்தை உட்கொண்டு நோயைத் தீர்த்துக் கொள்பவர் போல; சிவம் மருவி = பிறவிநோயைத் தீர்க்கும் சிவமாகிய மருந்தினைப் பொருந்தி; இருந்த இவ் உடம்பினை விட எண்ண = நோய்க்கு இடமாய் இருந்த இவ்உடம்பில் பற்று அற்று விடக் கருதவும்; மருந்து கொண்டு நோயோடு உறமதிப்பவன் போல = நோயோடு இருப்பதற்கு மருந்து கொண்டு நோயோடு இருக்கக் கருதுபவன் போல; (நோயோடு உற மருந்து கொண்டு நோயோடு உற மதிப்பவன் போல என்று கூட்டிப் பொருள்

Koviloor Digital Library

கொள்க) இருந்த இவ்உடம்போடு உற எண்ணினை என்னே = பிறவி நோய்க்குக் காரணமாயிருந்த இந்த உடம்போடு, என்றும் பொருந்தி இருக்க; நீ கருதினையே அப்படிக் கருதியமைக்குக் காரணம் என்னவோ. (எ.று)

முடிவு - பெரியவர் மருந்து கொண்டு நோய் தீர்ப்பவர்போல, சிவம் மருவி இவ்வுடம் பினைவிட எண்ண நோயோடுற மருந்து கொண்டு நோயோடுற மதிப்பவர்போல இவ்வுடம்போடு உற எண்ணினை. என்னோ? உடம்போடு உற எண்ணுதலாவது :- ஆதிநாதனது அருளினாலும் குளிகை ஆதிகளாலும் உடல் சித்திப் பெறக்கருதல்.

925. பிறந்த ஆகமொன்(று) இறந்திடாப் பெருமையும் உடைத்தோ
எறிந்த வான்சிலை வீழ்ந்திடாது இருப்பதிங் கில்லை
செறிந்த காரியம் என்பதென் றாயினும் சிதையும்
இறந்தி டாதுகா ரணமெனப் படுமதே என்றும் 42

(இ.ள்) வான் எறிந்த சிலை வீழ்ந்திடாது இருப்பது இங்கு இல்லை = வானிடத்தே மேல் நோக்கி வீசியகல்; நிலத்திடத்தே வீழாது இருப்பது எவ்விடத்தும் எக்காலத்திலும் இல்லை; (அஃதே போல்) பிறந்த ஆகம் ஒன்று இறந்திடாப் பெருமையும் உடைத்தோ = உலகில் பிறந்த உடம்பு ஒன்று இறவாமல் இருக்கும் பெருமையையும் பெற்றிருக்குமோ? ஓ என்னும் எதிர் மறையால் பெற்றிருக்காது என்பது கருத்து. எந்த நியதியால் எனின்? செறிந்த காரியம் என்பது என்றாயினும் சிதையும் = கருத்தா முதலானவற்றால் உண்டான காரியப் பொருள்கள் எல்லாம் எவ்வளவு காலம் கழிந்தாலும் இறுதியில் அழிந்தே ஒழியும்; இங்கு காரியம் என்றது செயப்படு பொருளை. காரணம் எனப்படுமதே என்றும் இறந்திடாது = காரியப் பொருளுக்கு அடியான காரணம் என்று கூறப்படும் பொருள் ஒன்றே என்றும் அழிவற்றதா யிருக்கும். (எ.று)

முடிபு - வானில் எறிந்தசிலை வீழ்ந்திடாது இருப்பது இங்கு இல்லை. அது போல இவ்வுலகத்தில் பிறந்த ஆகம் ஒன்று இறந்திடாப் பெருமையும் உடைத்தோ? காரியம் என்பது என்றாயினும் சிதையும் காரணம் எனப்படுமதே என்றும் இறந்திடாது. இப்பாட்டு எடுத்துக் காட்டுவமையணி.

Koviloor Digital Library

926. மருந்தி ஞலுடல் நித்தமாம் [1]என்றுநீ வகுத்தது
இருந்து வாழுநாள் பன்மை கொண்(டு)அன்றிவேறில்லை
பொருந்தி நீயுடல் அழிந்திடாது என்பது பொருந்தாது
அருந்த வாவினி வீடுவேண்டு என்றனன் ஐயன் 43

(பா.ம்) [1]எனவும் நீ

(இ.ள்) மருந்திஞல் உடல் நித்தமாம் என்று நீ வகுத்தது = உடல் சித்திக்குரிய மருந்திஞலே உடம்பு அழியாமலிருக்கும் என்று நீ கூறுபாடு செய்து கொண்ட கருத்து (எதஞல் எனில்); இருந்து வாழும் நாள் பன்மை கொண்டு அன்றி வேறு இல்லை = இவ்வுலகத்திலிருந்து வாழும் காலம்மிகுதி கொண்டதாயிருக்கும் என்பதை அன்றி வேறு ஒருகருத்தும் இல்லை; நீ பொருந்தி உடல்அழிந்திடாது என்பது பொருந்தாது = நீ இவ்வுடம்பு எக்காலத்திலும் பொருந்தி இருந்து அழியாது என்று கூறுகின்ற கருத்து பொருத்தம் உடையது ஆகாது; ஆகையினாலே அருந்தவா இனி வீடு வேண்டு என்றனன் ஐயன் = அரியதவத்தை செய்து கொண்டு இருப்பவனே! அத்தவத்தின் பயஞக இனிமேல் வீடு பேறு ஒன்றினையே விரும்புக; உடல் சித்தியை விரும்பாதே என்று கூறினன் அல்லமதேவன் (எ.று)

முடிபு - மருந்திஞலே உடல் நித்தமாம் என்று நீ வகுத்தது வாழு நாள் பன்மை கொண்டு அன்றி வேறு இல்லை. நீ உடல் அழிந்திடாது என்பது பொருந்தாது அதஞல் அருந்தவா! இனி வீடு வேண்டு என்றனன் ஐயன். வாழு நாள் பன்மை என்றது உடம்பு வாழும் காலம் சேய்மையாய் இருத்தல். தொல்காப்பியரும் ''வாழிய என்னும் சேய என்கிளவி'' என்பர். இதற்கு இளம் பூரணர் உரை வாழிய என்று சொல்லப்படுகின்ற அவ்வாழுங் காலம். அண்மைய அன்றி சேய்மைய என்று உணர்த்தும் சொல் என்று பொருள் கூறுவார். (தொல். எழு. 212)

927. ஏது சொல்லினும் என்உடல் அழிவுறா(து) என்றும்
வாது செய்வதென் காட்சியால் உணர்த்துவன்வலியின்(று)
ஆதி நாதனது அருளிஞல் என்றுகோ ரக்கன்
தீதி லாவருள் வாரியோடு உரைத்திது செய்யும் 44

(இ.ள்) கோரக்கன் = அப்பொழுது கோரக்கஞனவன்; அல்லம தேவனை நோக்கி ஏது சொல்லினும் என் உடல் அழிவுறாது = உடம்பு அழிந்து போகுமென்று நீ எத்தகைய பிரமாண மொழிகளைக் கூறிஞலும் எந்தக் காலத்திலும் என் உடல் அழிவுறாது; வாது செய்வது என் = நானும்

Koviloor Digital Library

பிரமாண மொழிகளைக் கூறி உன்னோடுவாது செய்வதால் பயன் என்ன? ஆதி நாதனது அருளினுல் வலி இன்று காட்சியால் உணர்த்துவன் என்று = முதல் சித்தனுகிய ஆதிநாதனது திருவருளாலே என்னுடைய உடம்பின் வலிமையை இன்றைய நாளில் காட்சி அளவையினு லேயே உனக்கு உணர்த்திவிடுவேன் என்று; தீதிலா அருள் வாரியோடு உரைத்து இது செய்யும் = குற்றமில்லாத அருட்கடலாகிய அல்லம தேவனேடு இம்மொழிகளைக் கூறி இச்செயலைச் செய்யத் தொடங்கினுன். (எ.று)

முடிபு - கோரக்கன், ஏது சொல்லினும் என் உடல் என்றும் அழிவுறாது, வாது செய்வது என்? ஆதி நாதனது அருளினுல் வலியை இன்று காட்சியால் உணர்த்துவன் என்று அருள்வாரியோடு உரைத்து இது செய்யும்.

928. இன்னி யங்களின் முழங்குவெள் அருவி வெற்பு எறிந்த
மன்ன வன்படை அன்னதோர் ஒளிர் அயில் வாய்வாள்
தன்னை எம்பிரான் கைக்கொடுத்து அனையன்என் தன்னை
நின்னி ரும்புய வலியினுல் எறிகென நிகழ்த்தி 45

(இ.ள்) அனையன் = அத்தகையோனுகிய கோரக்கன்; வாள் தன்னை எம்பிரான் கைக் கொடுத்து = வாட்படை ஒன்றை எம்பிரானுகிய அல்லம தேவனுடைய கையிலே கொடுத்து; என் தன்னை நின் இரும்புய வலியினுல் எறிக என நிகழ்ச்சி = என்னை உன்னுடைய பெரிய தோள் வலியினுலே வெட்டுக எனக்கூறி. கோரக்கன் கொடுத்த வாள் எத்தகையது எனில்; இன் இயங்களில் முழங்கும் வெள் அருவி வெற்பு எறிந்த மன்னவன் படை அன்னதோர் ஒளிர் அயில் வாய்வாள்= இனிமையைச் செய்யும் வாத்தியங்களின் ஓசையைப் போல முழக்க மிடுகின்ற வெண்மையான அருவிகளைப் பெற்றிருக்கும் மலைச் சிறகுகளை வெட்டிய இந்திரனது வலிய படையாகிய வச்சிரம் அன்னதாகிய ஒரு ஒளி வாய்ந்த கூரியவாயையுடைய வாள் என்க. (எ.று)

முடிபு - அனையன் மன்னவன் படை அன்னதோர் வாய்வாள் தன்னை எம்பிரான் கைகொடுத்து என்தன்னை நின்புய வலியினுலே எறிக என நிகழ்த்தி. வெற்பு என்றது வெற்பினது இறகை. ஆகுபெயர் (முதலாகு பெயர்) முதற்பெயர் சினைக்காகி வந்துள்ளது

929. அத்த ஈச்சிறகு அன்னதோர் தோலறு மேனும்
சித்தன் நானலேன் என்றுமுன் நின்றனன் செருக்கி

Koviloor Digital Library

நித்தன் யானிவன் கருதிய தேசெய்து நெஞ்சின்
வைத்த மாதருக்(கு) ஒழிப்பலென்று அருளுளம்
வலித்தான் 46

(இ.ள்) அத்த = அத்தனே! ஈச்சிற்கு அன்னதோர் தோல் அறுமேனும் = நீ என் உடம்பை வெட்டும்வெட்டினுல் ஈயின்சிறகு போன்ற சிறு தோலும் என் உடம்பில் அறுபடுமே யாஞல்; நான் சித்தன் அல்லேன் = நான் காய சித்தி பெற்ற சித்தி பெற்ற சித்தன் அல்லேன் என்று கூறி; செருக்கி முன் நின்றனன் = செருக்கடைந்து அல்லம தேவன் முன் தன் உடம்பைக் காட்டிக் கொண்டு நின்றனன்; நித்தன் = அப்பொழுது நித்தஞகிய அல்லம தேவன்; இவன் கருதியதே செய்து = இவன் மனத்தில் கருதிய செயலையே செய்து முடித்த அதனுல்; நெஞ்சின் வைத்த மாதருக்கு யான் ஒழிப்பல் என்று அருள் உளம் வலித்தான் = கோரக்கன் தன் மனத்தின் கண்ணே வைத்துள்ள பெரிய செருக்கினை யான் ஒழித்து விடுவேன் என்று நினைத்துக் கொண்டு தன் அருள் உள்ளத்தால் அவன் கூறிய செயலையே செய்ய உறுதி கொண்டான்.(எ.று)

முடிபு - (கோரக்கன்) அத்தனே! ஈச்சிறகு அன்னதோர்தோல் அறுமேனும் நான் சித்தனல்லேன். என்று செருக்கி முன்னின்றனன். (அப்பொழுது) நித்தன் இவன் கருதியதே செய்து நெஞ்சின் தருக்கை யான் ஒழிப்பல் என்று உளம் வலித்தான்.

930. வாங்கு வாளினை மின்னென விதிர்த்தருள் மாரி
ஓங்கி வானுரும் மேறென அதிர்த்தவன் உடம்பில்
தாங்க மால்வரை மீதெறிந் தானெனத் தாக்க
ஆங்கொ ரோதைகிண் ணென்று மேல் எழுந்ததை அன்றே
47

(இ.ள்) அருள் மாரி = அருளாகிய நீரைப் பெய்யும் முகில் போன்ற அல்லமதேவன்; வாங்கு வாளினை மின் என விதிர்த்து = கோரக்கனது கையிலிருந்து வாங்கிய வாட்படையை மின்னலைப் போல அசைத்து ஓங்கி மேலே உயர்த்தி; வான் உரும் ஏறு என அதிர்த்து = வானிடத் தேயுள்ள இடியேற்றினைப் போல் ஓசை எழுப்பி; அவன் உடம்பில் தாங்க=அக்கோரக்கனது உடம்பிலே படும்படி; மால்வரை மீது எறிந்தான் எனத்தாக்க = பெரிய மலை மீது வெட்டி ஞற்போல வெட்ட; ஆங்கு ஓர் ஓதை கிண் என்ற மேல் எழுந்தது = அப்பொழுது ஒன்றாகிய ஒலி கிண் என்னும் ஓசை வடிவாய் வானத்தின் மேலிட மெல்லாம் எழுந்தது. ஐ, அற்று, ஏ இவை அசைச் சொற்கள். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - அருள்மாரி வாளினை மின் என விதிர்த்து ஓங்கி அதிர்த்து உடம்பில் தாங்க வரை மீது எறிந்தான் எனத் தாக்க ஓர் ஓதைகிண் என மேலெழுந்தது. தாக்க என்பது வெட்டுதல் என்னும் பொருளில் வந்துள்ளது. ஓசை என்பது ஓதை என்றாயிற்று.

அல்லமன் கோரக்கன் உடம்பை வாளால்
எறிந்த போது நிகழ்ந்த நிகழ்ச்சி

931. திருப்ப ருப்பதம் நடுங்கிய(து) அவ்விறல் சீற்றத்(து)
அரக்கன் உற்றிது தனையுமின்று எடுத்தனன் ஆம் என்று
உரைப்ப தற்கரி(து) ஆகிய அச்சமுற்று ஓடிப்
பொருப்பி றைக்கொரு மகள்அரன் புயங்கள் புல்லினளால் 48

(இ.ள்) திருப்பருப்பதம் நடுங்கியது = கிண் என்று எழுந்த ஓசையால் திருச்சைலமாகிய மலை நடுங்கியது(அப்பொழுது) பொருப்பு இறைக்கு ஒருமகள் - மலையரசனுக்கு மகளாகிய பார்வதி அவ்விறல் சீற்றத்து அரக்கன் உற்று - அந்த வெற்றியையும் சினத்தையும் உடைய இராவணனாகிய அரக்கன் இங்கு வந்து இது தனையும் இன்று எடுத்தனன் ஆம் என்று - இத்திருப் பருப்பதமலையையும் இன்றைய நாள் பெயர்த்து எடுத்தான் போலும் என்று கருதி; உரைப்பதற்கு அரிதாகிய அச்சமுற்று - சொல்லுதற்கு அரிதாகிய பயத்தை அடைந்து; ஓடி அரன் புயங்கள் புல்லினள் - மிகவிரைவாகச் சென்று சிவபெருமானது தோளை தழுவிக் கொண்டாள். (ஆல் - அசை)

முடிபு - (அப்பொழுது) திருப்பருப்பதம் நடுங்கியது. பொருப்பு இறைக்கு ஒரு மகன் அரக்கன் உற்று இது தனையும் இன்று எடுத்தனன் ஆம் என்று அச்ச முற்று ஓடி அரன் புயங்கள் புல்லினள்.

932. விஞ்சை மாதர்தம் யாழொலி கேட்டமா வேடர்
அஞ்சில் ஓதியர் பதலை கேட்டு அயர் அசுணம் போல்
நெஞ்சம் மாழ்கினர் புள்ளினம் எழுந்தகால் நிமிர்த்துத்
துஞ்சும் மாஎழுந்து ஓடின வான்துளி துளித்த 49

(இ.ள்) விஞ்சை மாதர்தம் யாழ்ஒலி கேட்டமா வேடர் = வித்தியாதரப் பெண்களுடைய யாழ் ஓசையைக் கேட்டுக் கொண்டிருந்த பெரியவேடர் எல்லாம்; இக்கிண் என்னும் ஓசையைக் கேட்டவுடன்; அம் சில் ஓதியர் பதலை கேட்டு அயர் அசுணம் போல் நெஞ்சம் மாழ்கினர் = அழகிய சிலவாகிய கூந்தலையுடைய வேடப்பெண்களின் பறை

Koviloor Digital Library

ஓசையைக் கேட்டு அதனுல் அயர்ந்த அசுணமாவைப் போல நெஞ்சம் வருந்தினர்; கால் நிமிர்த்து புள்ளினம் எழுந்த = காலை உதறிக் கொண்டு பறவைக் கூட்டங்கள் எழுந்து பறந்தன; துஞ்சுமா எழுந்து ஓடின = உறங்கிக் கொண்டிருந்த விலங்குகள் எல்லாம் எழுந்து ஓடின; வான் துளி துளிர்த்த = வானத்தின்கண் உள்ள முகில் கூட்டங்களும் துளியைச் சொரிந்தன. (எ.று)

முடிபு - விஞ்சை மாதர்தம் யாழொலி கேட்ட வேடர் பதலை கேட்டு அயர் அசுணம் போல் நெஞ்சம் மாழ்கினர் கால் நிமிர்த்துப்புள்ளினம் எழுந்தன துஞ்சும்மா எழுந்து ஓடின வானமும் துளி துளிர்த்த. இங்கே பதலை என்றது ஒரு கண் பகுவாயையுடைய பறை என்னும் தோற் கருவியாகும் . இங்கு அதன் ஓசைக்கு ஆகி வருதலால் ஆகுபெயர்.

933. **இன்ன வாறொலி எழவுடல் ஊறின்றி இருப்ப**
முன்னம் மேவிய செருக்கினும் மும்மடங்கு எய்தி
என்னை நேர்பவர் இலைஎன அவனுளத்து எண்ணித்
தன்னை யேநனி வியந்தமை அறிந்தனன் தலைவன் 50

(இ.ள்) இன்ன ஆறு ஒலி எழ = இத்தகைய நிகழ்ச்சிகளெல்லாம் நடக்கும் படி வாள் தாக்கியதால் கிண் என்னும் ஓசை எழவும்; உடல் ஊறு இன்றி இருப்ப = அல்லமன் எறிந்த வாள் வீச்சினுல் சிறிதும் ஊறு பாடின்றி கோரக்கனது உடல் இருப்ப; முன்னம் மேவிய செருக்கினும் மும்மடங்கு எய்தி = கோரக்கன் காய சித்தியுடையேம் என்று முன்னர் பெற்றிருந்த செருக்கைக் காட்டிலும் இப்பொழுது மூன்றுமடங்கு செருக்கினைப் பெற்று; என்னை நேர் பவர் இலை என அவன் உளத்து எண்ணி = என்னை ஒத்த சித்தர்கள் உலகத்தில் ஒருவருமில்லை என்று அவன் மனத்திலே கருதிக் கொண்டு; தன்னையே நனி வியந்தமை = தன்னையே மிகவும் உயர்ந்தவன் என்று கருதி வியந்திருத்தலை; தலைவன் அறிந்தனன் = அல்லமதேவனுகிய தலைவன் அறிந்து கொண்டான். (எ.று)

முடிவு - இன்னவாறு ஒலி எழ உடல் ஊறு இன்றி இருப்ப (அதனுல்) முன்னம் மேவிய செருக்கினும் மும்மடங்கு எய்தி நேர்பவர் இலை என உளத்து எண்ணி தன்னையே வியந்தமையை தலைவன் அறிந்தனன்.

934. **ஒலியெ ழுந்திட இன்னணம் நினதுபேர் உடம்பு**
வலிய டைந்தநின் ஒப்பவர் இலைவளி வழங்கும்

Koviloor Digital Library

உலகில் என்றுகை குலைத்திள நகைபுரிந்து ஒருகைம்
மலர்பொ ருந்துவாள் அவன்கையில் கொடுத்திது
வகுத்தான் 51

(இ.ள்) இன்னணம் ஒலி எழுந்திட = இவ்வாறு கிண் என்னும் ஓசை எழுமாறு; நினது பேர் உடம்பு வலியடைந்தது = உன்னுடைய பெரிய உடம்பானது வலிமையைப் பெற்றுள்ளது; (வலி அடைந்தது என்னும் சொல்லில் இறுதி கெட்டு வலியடைந்த என நின்றது. இது செய்யுள் விகாரம்) வளி வழங்கும் உலகில் நின் ஒப்பவர் இலை என்று கை குலைத்து இள நகை புரிந்து = காற்றுச் சூழ்ந்துள்ள இந்நிலவுலகத்திலே உன்னை ஒத்தவர் யாருமில்லை என்று கூறி கை கொட்டி புன் சிரிப்புச் சிரித்து; ஒருகைம் மலர் பொருந்து வாள் அவன்கையில் கொடுத்து இது வகுத்தான் = ஒன்றாகிய மலர் போன்ற கையில் தான் வைத்திருக்கும் வாளினை கோரக்கனது கையிலே கொடுத்து; கீழே வரும் சொற்களைக் கூறத் தொடங்கினுன். (எ.று)

முடிபு - இன்னணம் ஒலி எழுந்திட நினது பேர் உடம்பு வலி யடைந்தது உலகில் நின் ஒப்பவர் இலை என்ற கை குலைத்து இளநகை புரிந்து கை மலர் பொருந்தும் வாளை அவன் கையிற் கொடுத்து இது வகுத்தான்.

935. வாங்கும் வாளினால் நின்வலி யொடு நுமர் வலியும்
தாங்கி என்னைநீ எறிந்துகாண் என்றுநந் தலைவன்
ஆங்கு நின்றனன் சித்தனும் அஞ்சிலன் ஆகி
ஓங்கி வாளினுல் எறிந்தனன் ஒப்பிலான் உருவை 52

(இ.ள்) நம் தலைவன் = நம்முடைய தலைவனுகிய அல்லம தேவன் (கோரக்கனை நோக்கி) வாங்கும் வாளினுல் = என் கையிலிருந்து உன் கைக்கு வாங்கப் பெற்ற வாட்படையால்; நின் வலியொடு நுமர் வலியும் தாங்கி = உன்னுடைய ஆற்றலோடு உன் சுற்றத்தார் வலியையும் சேர்த்துக் கொண்டு; என்னை நீ எறிந்து காண் என்று ஆங்கு நின்றனன் = என்னை நீ வெட்டிப் பார்ப்பாயாக என்று கூறிக் கொண்டு கோரக்கன் முன் நின்றான்; சித்தனும் அஞ்சிலன் ஆகி = கோரக்கனும் இச்செயல் செய்வதற்குச் சிறிதும் அஞ்சானுய்; ஒப்பிலான் உருவை ஓங்கி வாளினுல் எறிந்தனன் = ஒப்பற்ற அல்லம தேவனது உடம்பை மேல் ஓச்சி வாட்படையால் வெட்டினான். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - நம் தலைவன் வாங்கும் வாளினுலே நின் வலியொடு நுமர் வலியும் தாங்கி என்னை நீ எறிந்து காண் என்று நின்றனன். சித்தனும் அஞ்சிலனுகி ஒப்பிலான் உருவை ஓங்கி வாளினுல் எறிந்தனன்.

936. அணும யங்கும் இல் நுழைகதிர் எறிந்தவாள் ஆக
[1]இணைம யங்குமெய் படாதுவாள் வறிது போயிற்று
பணைம யங்குதோள் மாயைதன் படாம்முலை படாத
மணம்ம யங்குதண் சோதிமேல் வாள் பட வற்றோ 53

(பா.ம்) [1]விணைமயங்கு

(இ.ள்) வாள் - கோரக்கன் வீசியவாள்; அணுமயங்கும் இல் நுழை கதிர் எறிந்தவாளாக = சிறிய அணுக்கள் சுழன்றுதிரியும் இல் நுழை கதிரின் வடிவத்தை வெட்டிய வாளினை ஒவ்வும்படி; இணை மயங்கு மெய்படாது வறிது போயிற்று = ஒப்புவமை இல்லாத அல்லமனின் உடம்பில் படாமல் வெறுமனே போயிற்று; பணைமயங்கு தோள் மாயை தன் படாம் முலை படாத மணம் மயங்கு தண் சோதிமேல் = மூங்கிலை ஒத்த தோளையுடைய மாயையினது முன்தானையாகிய ஆடையை அணிந்த நகிலால் தழுவ முடியாத தெய்வ மணத்தோடு கூடிய குளிர்ந்த ஒளி வடிவான அல்லமன் உடம்பின் மேல்; வாள்படவற்றோ = கோரக்கன் வீசியவாள் படுதற்கு வல்லமையுடைத்தோ? எதிர்மறை ஓகாரத்தால் வல்லமை இல்லாததாயிற்று. (எ.று)

முடிபு - (கோரக்கன் வீசிய) வாள் இல் நுழை கதிரை எறிந்த வாளாக மெய் படாது வறிது போயிற்று. மாயைதன் முலைபடாத சோதி மேல் வாள்படவற்றோ இல் நுழை கதிரின் வடிவத்தில் அணுக்கள் சுற்றித் திரியும் என்பதை, ''இல்நுழைகதிரின் துன் அணுப்புரைய'' என்னும் திருவாசக அடியால் உணர்க.

வேறு

937. வானெறிந்து கையிளைத்த கோரக்க
நாதன் மிகமனம் வியந்து
நானிறைஞ்சும் பரஞ்சுடரே இவனென்று
மெய்விதிர்ப்ப நடுநடுங்கித்
தானடைந்த செருக்கொழிந்து தலையன்
பின்நெறி நடப்ப தலைப்பட்டு

Koviloor Digital Library

தேனடைந்த செழுங்கமலத் திருவடியில்
வீழ்ந்தெழுந்து எங்கோன் செப்புகின்றான் 54

(இ.ள்) வான் எறிந்து கையிளைத்த கோரக்கநாதன் = அல்லம தேவன் உடம்பாகிய சிதாகாசத்தை வெட்டத் தொடங்கி வெட்ட முடியாமல் கையிளைத்துப் போன கோரக்க நாதன் என்பான்; மிகமனம் வியந்து = அல்லம தேவன் பெற்றிருக்கும் இத்தகைய சித்தியை அறிந்து மிகவும் மனம் வியப்புற்று; நான் இறைஞ்சும் பரம் சுடரே இவன் என்று = நான் வணங்கும் ஆதி நாதஞகிய சித்தனே இவன் என்று கருதிக் கொண்டு; மெய் விதிர்ப்ப நடு நடுங்கி = உடம்பு குலுங்கும்படி மிகவும் நடுநடுங்கி; தான் அடைந்த செருக்கு ஒழிந்து = தான் பெற்றிருந்த காய சித்தி காரணமாக தனக்குத் தோன்றிய செருக்கினை விட்டு ஒழித்து; தலை அன்பின் நெறி நடப்ப தலைப்பட்டு = மிகச்சிறந்த அன்பின் வழியிலே நடப்பதற்கு ஒருப்பட்டு; எங்கோன் தேன் அடைந்த செழுங்க கமலத் திருவடியில் வீழ்ந்து எழுந்து செப்புகின்றன் = எம் தலைவனாகிய அல்லமதேவனின் தேன் பொருந்திய நல்ல தாமரை மலர் போன்ற திருவடியில் பணிந்து எழுந்து சொல்லத் தொடங்குகின்றான்.

முடிவு - வாளை எறிந்து கையிளைத்த கோரக்க நாதன் மிகவும் மனம் வியந்து. இவன் நான் இறைஞ்சும் பரஞ் சுடரே என்று மெய் விதிர்ப்ப நடு நடுங்கி செருக்கு ஒழிந்து தலையன்பின் நெறி நடப்பத் தலைப் பட்டு எங்கோன் திருவடியில் வீழ்ந்து எழுந்து செப்புகின்றான்.

கோரக்கன் தன் பிழைகளை பொறுத்துக் கொள்ள வேண்டல்

938. நின்னையறி யாதுமது உண்டவன்போல்
மனம்செருக்கி நினைந்த பாவம்
பின்னர்எதிர் நின்றுநினது உரைமறுத்துப்
பித்தனென பிதற்றும் தீமை
[1]இன்னுயிர் கொன் றுடல்கவரும் மறவன்போல்
செய்தபிழை எல்லாம் எந்தாய்
மன்னியநின் பேரருளால் தீர்த்தெனையாட்
கோடியென மறித்தும் தாழ்ந்தான் 55

(பா.ம்) [1]இன்னுயிர் கொண்டு

(இ.ள்) மது உண்டவன் போல் = கள்ளினைக் குடித்தவன் போல;

Koviloor Digital Library

நின்னை அறியாது = உன்னுடைய பெரும் சிறப்பை அறியாமல்; மனம் செருக்கி நினைந்த பாவம் = என் உள்ளம் மயக்கம் அடைந்து என் செருக்கான உள்ளத்தால், உன்னை அற்பமாக கருதிய பாவமும்; (இது மனப்பிழை) பின்னர் எதிர் நின்று = அதன் பின்னர் உன்னுடைய முன்னே பணிவின்றி நின்று; உரை மறுத்து = நீ கூறிய உறுதிப்பொருளை உணர்த்தும் சொற்களை எல்லாம் தடுத்து; பித்தன் என பிதற்றும் தீமை = பித்தனைப் போல் உளறிய சொல் தீமையும்; (இது சொல் பிழை) இன்னுயிர் கொன்று உடல் கவரும் மறவன் போல் செய்த பிழை - ஒன்றன் உயிரை வாள் முதலான படைகளால் கொன்று உடம்பினை எடுத்துக் கொள்ளும் வேடனைப் போல, உன் உடம்பின் மேல் வாள் வீசிச் செய்த பிழை(இது உடம்பால் செய்த பிழை, எல்லாம் - இம்முப் பிழை களெல்லாம்; எந்தாய் = என்னுடைய தந்தையே! எம்முடைய தாய் போன்றவனே என்றுமாம்; மன்னிய நின் பேரருளால் தீர்த்து = உன் உள்ளத்துள் பொருந்தி இருக்கின்ற பெரிய அருட் குணத்தால் நீக்கி எனை ஆட்கோடி - என்னை அடிமைகொள்வாயாக. என மறித்தும் தாழ்ந்தான் = எனக் கூறி மீண்டும் வணங்கினான். (எ.று)

முடிபு - எந்தாய்! மது உண்டவன் போல் நின்னை அறியாது செருக்கி நினைந்த பாவமும் பின்னர் எதிர் நின்று நினது உரையை மறுத்துப் பித்தன் என பிதற்றும் தீமையும் உயிர் கொன்று உடல் கவரும் மறவன் போல் (வாள் கொண்டு) செய்த பிழையும் இவை எல்லாம் நின்பேரருளால் தீர்த்து ஆட்கோடி என மறித்தும் தாழ்ந்தான். மனம் செருக்கி நினைந்த பிழைக்கு மது உண்டவனும் உரை மறுத்துப் பேசியமைக்குப் பித்தனும் வாள் கொண்டு வீசிச் செய்த பிழைக்கு வேடனும் உவமையாயின இப்பாட்டு உவமையணி.

அல்லமன் கூற்றும் அடுத்து கோரக்கன் கூற்றும்

939. செய்தபிழை போகவினிப் பிழை செய்யாது
உடம்புநசை தீர்ந்து நின்றன்
மெய்தெரியின் [1]எமக்குநீ இனியன்எனப்
பெருங்கருணை வெள்ளம் கூற
உய்தலிலென் பிழை பொறுத்திட்(டு) அடித்தரிய
வானமுதம் ஊட்டு கின்றாய்
கைதருசெம் மணிஅனையாய்யான்
செய்வது ஏதுளது கைமாறு என்று 56

Koviloor Digital Library

(பா.ம்) [1]எனக்கு

(இ.ள்) செய்தபிழை போக இனிப்பிழை செய்யாது = நீ இதுவரை செய்து வந்த பிழைச் செயல்களெல்லாம் நீங்க, இனிமேல் அவற்றைச் செய்யாமல்; உடம்பு நசை தீர்ந்து நின்றன் மெய் தெரியின் = உடம்பை நான் என்று கருதிய பற்று தீர்ந்து. ஆன்மாவாகிய உன்றன் உண்மை இயல்பைத் தெரிந்து கொண்டால்; எமக்கு நீ இனியன் எனப் பெருங்கருணை வெள்ளம் கூற = எம் தமக்கு நீ இனியன் ஆவாய் என்று பெரிய அருள் வெள்ளத்தை உடைய அல்லமன் கூற; கை தருசெம் மணி அனையாய் = கையில் கிடைத்த சிவந்த மாணிக்கமணி போன்ற அரிய ஐயனே! ; உய்தலில் என்பிழை பொறுத்திட்டு = பிழைத்தல் இல்லாத பிழையை நீ பொறுத்துக் கொண்டு; அடித்து அரிய வானமுதம் ஊட்டுகின்றாய் = என்னை அடித்து உயர்ந்த அமுதத்தை உண்ணும்படி நீ எனக்கு ஊட்டுகின்றாய்; கைமாறு யான் செய்வது ஏது உளது = இதற்கு பதில் உபகாரமாகயான் உனக்குச் செய்வது என்ன இருக்கின்றது; என்று = என்று கூறி. (எ.று)

முடிபு - கருணை வெள்ளமாகிய அல்லமன் (கோரக்கனை நோக்கி) செய்த பிழைபோக இனிப்பிழை செய்யாது உடம்பு நசை தீர்ந்து நின்றன்மெய் தெரியின் எமக்கு நீ இனியன் எனக் கூற (கோரக்கன்) மணிஅனையாய் என் பிழை பொறுத்திட்டு அடித்து அமுதம் ஊட்டுகின்றாய்; கைமாறு யான் செய்வது யாதுளது என்று ''அடித்தரிய வானமுதம் ஊட்டுகின்றாய்'' என்னும் பகுதிக்கு அடித்தடித்து அக்காரமுன் தீற்றிய அற்புதம் அறியேன்'' என்னும் திருவாசகப்பகுதி நினைவு கூர்க.

940. முற்றும்அருள் செய்து நீ யான்அறிய
வேண்டும்பொருள் மொழிதி என்று
பற்றுடல் [1]நசைதீர்ந்து கோரக்கன்
நிற்பஅவன் பருவம் கண்டு
கற்றறியும் அறிவினுல் அறிவரிய
பரஞ்சோதி கருணை கொள்ளப்
பெற்றதிரு உளமகிழ்வுற்(று) அன்பொடுகேள்மதி
என்னுப் பேசல் உற்றான் 57

(பா.ம்) [1]நசை துறந்த

Koviloor Digital Library

(இ.ள்) முற்றும் அருள் செய்து = (இப்பொழுது வந்து உணர்த்திய தோடு அல்லாமல்) இனி முழுதும் அருள் செய்து; யான் அறிய வேண்டும் பொருள் நீ மொழிதி என்று = யான் அறியவேண்டிய உண்மைப் பொருளை நீ உபதேசிப்பாயாக என்று கூறி; கோரக்கன் பற்று உடல் நசை தீர்ந்து நிற்ப = கோரக்கன் எல்லாப் பற்றுக்குக் காரணமான உடம்பின் பற்றை நீங்கி அல்லமன் முன் நிற்ப; கற்றறியும் அறிவினுல் அறிவரிய பரஞ்சோதி = அநுபூதி அறிவாலன்றி கல்வி அறிவினுல் உணர்த்தற்கரிய மேலான ஒளியாகிய அல்லமதேவன்; அவன் பருவம் கண்டு = கோரக்கனுடைய பக்குவநிலையை ஆராய்ந்து உணர்ந்து; கருணை கொள்ளப் பெற்ற திருஉளம் மகிழ்உற்று = அருள் கொள்ளுதலாகிய ஒன்றையே பெற்றதிரு உள்ளம் மகிழ்வுற்று; அன்பொடு கேள் மதி என்னுப் பேசல் உற்றான் = யான் கூறுவதை அன்புடன் கேட்பாயாக என்று உண்மைப் பொருளை உபதேசிக்கத் தொடங்கினுன்.(எ.று)

முடிபு - கோரக்கன் நீ முற்றும் அருள் செய்து யான் அறிய வேண்டு பொருளை மொழிதி என்று உடல் நசை தீர்ந்து நிற்ப; பரஞ்சோதி அவன் பருவம் கண்டு திருவுளம் மகிழ்வுற்று அன்பொடு கேண்மதி என்னு பேசலுற்றான். கற்றறியும் அறிவு என்பது அபரஞானத்தை; அநுபூதி அறிவு என்பது பரஞானத்தை என்று உணர்க.

அல்லம தேவன் கோரக்கனுக்கு உபதேசித்தது

941. இருந்தபடி குகேசனைநீ அறிவைஎனில்
நின்பிறவி எனும்நோய் தீர்ந்து
பொருந்துறுவை பேரின்பம் என்றமலன்
கூறஅவன் போற்றி எந்தாய்
பரிந்தருள்செய் குகேச னெனும் மொழிப்பொருள்ஏது
அதுகூறப் படுவான் யாவன்
தெரிந்துணர அருள்செய்வாய் என்று
தொழ எம்பெருமான் செப்புகின்றான் 58

(இ.ள்) அமலன் = குற்றமற்றவனுகிய அல்லம தேவன் கோரக்கனை நோக்கி; நீ இருந்தபடி குகேசனை அறிவை எனில் = நீ வேறு செயல்கள் எதுவும் இல்லாமல் இருந்த வண்ணம் குகேசன் என்பவனை அறிந்து கொள்வாயேயானால்; நின்பிறவி எனும் நோய் தீர்ந்து = உன்னுடைய பிறப்பாகிய நோய் தீர்ந்து; பேரின்பம் பொருந்துறுவை என்று கூற = பேரின்பமாகிய இறவா நிலையை நீ அடைவாய் என்று

Koviloor Digital Library

உபதேசிக்க; அவன் போற்றி = அதனைக் கேட்ட கோரக்கன் அல்லமனை வணங்கி; எந்தாய் = எந்தையே!; பரிந்து அருள் செய் குகேசன் எனும் மொழிப்பொருள் ஏது = அன்பு கொண்டு நீ அருள் செய்த குகேசன் என்னும் சொல்லுக்குப் பொருள் என்ன?; அது கூறப்படுவான் யாவன் = அம் மொழியினுல் கூறப்பட்ட குகேசன் என்பவன்யாவன்?; தெரிந்து உணர அருள் செய்வாய் என்று தொழ = யான் இவற்றைத் தெரிந்து உணர்ந்து கொள்ளும்படி உபதேசிப்பாயாக என்று கூறிவணங்க; எம்பெருமான் செப்புகின்றான் = எம் பெருமாஞகிய அல்லம தேவன் சொல்லத் தொடங்கினுன்.

முடிபு - அமலன் நீ இருந்தபடி குகேசனை அறிவை எனில் பிறவி எனும் நோய்தீர்ந்து பேரின்பம் பொருந்துறுவை; என்று கூற (கேட்ட) அவன் போற்றி எந்தாய்! (நீ) அருள் செய்குகேசன் எனும் மொழிப் பொருள் ஏது? அது கூறப்படுபவன் யாவன்? தெரிந்துணர அருள் செய்வாய் என்று தொழ எம்பெருமான் செப்புகின்றான். இந்நூலின் துதிகதியின் ஈற்றில்,

ஆக்குறுஞ் செயலதொன்றே அயன் தனக்கு ஆக்கலோடு
காக்குறுஞ் செயரிரண்டுங் கண்ணனுக்கு ஆக்கல் காத்தல்
போக்குதல் என்றிம் மூன்றும் புராந்தகற் களித்து அவர்க்கு
நீக்கரும் இறைமை நல்கி நிறுவினன் குருகுகேசன்

என்னும் பாடலால் குருகேசன் சிறப்பினை உணர்க(துதிகதி 21)

அக்குகேசனே அல்லமதேவன் என்பதை, ''மலை வினங்குருகு கேசேன் வயங்குறுப்பெலாம் அணிந்து'' என்னும் பிரபு தேவர் வந்தகதியின் 9ஆம் பாட்டாலும் அறிக. குகேசன் என்னும் சொற் பொருளை பஞ்சதசி என்னும் வேதாந்த நூலில் பஞ்சகோச விசாரம் பற்றி கூறும் பகுதியில் படித்துணர்க.

942. குகைஇதயம் அதன்கணமர் இறைஈசன்
என்றுபொருள் குறித்துக் கொண்மோ
நிகழ்அனைய குகேசமொழி யுடையன்
யான் தான் எனவே நிமலன் கூற
அகம்மகிழ முகமலர்ந்து சித்தன்அறை
குவன்நீயே ஆகில் உன்றன்
முகை அவிழ்மென் மலர்க்கரத்தில் சிவலிங்கம்
கொண்டதென்கொல் மொழிதி என்றான் 59

Koviloor Digital Library

(இ.ள்) குகை இதயம் அதன் கண்அமர் இறை ஈசன் என்று பொருள் குறித்துக் கொண்மோ = குகை என்னும் சொல் நெஞ்சத்தாமரை என்றும் ஈசன் என்னும் சொல் அதன் கண் எழுந்தருளி இருக்கும் இறைவன் என்றும் இவ்வாறு குகேசன் என்னும் சொல்லுக்குப் பொருளினை கருதிக் கொள்வாயாக; நிகழ் அனைய குகேசன் மொழி உடையன் யான் தான் எனவே நிமலன் கூற = விளங்கும் அத்தகைய குகேசன் என்னும் மொழிக்குப் முக்கியப் பொருளாய் இருப்பவன் யான் ஒருவனே என்று அல்லம தேவன் சொல்ல; சித்தன் அகம் மகிழமுக மலர்ந்து அறைகுவன் = அதனைக் கேட்ட கோரக்கன் வியப்பினுல் முன்னே மனம் மகிழ பின்னே முகம் மலர்ந்து சொல்லத் தொடங்கினுன்; நீயே யாகில் = நெஞ்சத்தாமரையில் உள்ள ஈசன் நீயே ஆகில்; உன்தன் முகை அவிழ் மென் மலர்க் கரத்தில் சிவலிங்கம்கொண்டது என் கொல் மொழிதி என்றான் = உன்னுடைய முருக்கவிழ்ந்த மெல்லிய மலரைப் போன்ற உள்ளங்கையினிடத்தே வழிபடும் ஈசனுக சிவலிங்கம் ஒன்றைக் கொண்டுள்ளாயே, அதற்குக் காரணம் என்னை அதை சொல்லு வாயாக. (எ.று)

முடிபு - நிமலன்; குகை இதயம் அதன்கண் அமர் ஈசன் இறைவன் என்று என் பொருளை குறித்துக் கொண்மோ? அனைய குகேச மொழியுடையன் யான்தான் எனவே கூற கேட்டசித்தன் அகமகிழ முக மலர்ந்து அறைகுவன் நீயே யாகில் உன்றன் கரத்தில் சிவலிங்கம் கொண்டது என் கொல்மொழிதி என்றான். எல்லா உயிர்களின் இதயத்துள் இறைவன் இருந்து இயக்குகின்றான் என்பதை ''ஓதில் பெருகும் பூதங்கட்கு எல்லாம் இதயத்து உள்இறை நான்'' (பகவத்கீதை - அத்தியாயம் 10 பாட்டு 13)

இங்கு பூதங்கள் என்றது உலக உயிர்களைக் குறிக்கும். மணி வாசகரும், ''இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்'' என்று இறைவனைக் குறிப்பிடுகின்றார். யான்தான் என்பதில் தான்தேற்றப் பொருட்டு. கொண்மோ என்றதில் மோ என்றது முன்னிலை அசைச்சொல்.

943. பிறந்தபயன் பெற[1]உலகர் எனைக்கண்டு
கொண்டு மனம்பிறழ்தல் இன்றி
சிறந்தசிவ லிங்கமலர்கரங் கொண்டு
[2]பூசனைதாம் செய்ய வேண்டி

Koviloor Digital Library

நிறைந்தஎன(து) உருவாகும் இக்குறிகைக்
கொண்டனன் யான்நீங்காது என்றும்
அறிந்து [3]தெளி குதிமனம்என்(று) அருள்செய்து
எம்குருதேவன் அறையல் உற்றான் 60

(பா.ம்) [1]உலகம்; [2]பூசனையாம்; [3]தெளிகுதியாம்

(இ.ள்) உலகர் பிறந்த பயன்பெற எனைக் கண்டு கொண்டு = உலக மக்கள் பெறுதற்கரிய மானிடப்பிறப்பில் பிறந்த பயனை பெற வேண்டி எனைக் கண்ணுல் தரிசித்தும்; மனம் பிறழ்தல் இன்றி சிறந்த சிவலிங்க மலர்க்கரம் கொண்டு பூசனைதாம் செய்ய வேண்டி = மனம் வேறு படாமல், சிறந்த சிவலிங்கத்தை மலர் போன்ற கையினிடத்திலே வைத்து பூசையை அவர்கள் செய்யவேண்டியும்; நிறைந்த எனது உருவாகும் இக்குறி என்றும் நீங்காது யான் கைக் கொண்டனன் என்றும் = உலக மெங்கும் நிறைந்த எனது வடிவமாகக் கருதப்பெறும் இச்சிவலிங்கத்தை என்றும் பிரியாது, யான்கையினிடத்தே கொண்டுள்ளேன்; மனம் அறிந்து தெளிகுதி = உன்மனம் அறிந்து தெளிவாயாக; என்று எம் குரு தேவன் அருள் செய்து அறையல் உற்றான் = என்று உபதேசித்து எம் குருதேவன் இவ்வாறு அருள் செய்து மேலும் கூறத் தொடங்கினுன் (எ.று)

முடிபு - உலகர் பிறந்த பயன் பெற எனைக் கண்டு கொண்டும் மனம் பிறழ்தலின்றி சிவலிங்கம் கரம் கொண்டு பூசனையை தாம் செய்ய வேண்டியும் எனது உருவாகும் இக்குறியை என்றும் நீங்காது யான் கைக் கொண்டனன். (இதனை) மனம் அறிந்து தெளிகுதி என்று எனது குருதேவனருள் செய்து அறையலுற்றான். பிறந்தபயன் பெற உலகர் எனைக் கண்டு கொண்டு என்றது காயானுக்கிரத்தலமாகும்.

போதக குருவின் நற்செய்கை

944. போதகனு கியகுரவன் எஞ்ஞான்றும்
நல்கருமம் புரிக என்று
வேதமுத லாகியநூல் முழுதுமொருங்கு
ஒரு அந்தம் விதித்தலாலே
சாதகனு கியபருவ மாணாக்கன்
பாசவலி தணிக்க வல்லான்
மேதினிமேல் உடலொடுநற் செயல்
விடுவ(து) அன்றியிடை விடலா காதால் 61

Koviloor Digital Library

(இ.ள்) போதகன் ஆகிய குரவன் = ஞான நூல்களைப் போதிப்பவ ஞகிய நல்லாசிரியன்; எஞ்ஞான்றும் நல்கருமம் புரிக என்று = எந்தக் காலத்திலும் நல்ல செயல்களையே செய்து வருவாயாக என்று; வேத முதலாகிய நூல் முழுதும் ஒருங்கு ஒரு அந்தம் விதித்தலாலே = வேதத்தை முதலாகக் கொண்ட நூல்களெல்லாம் ஒரு சேர ஒரே முடிவாக விதிவாக்கியத்தால் கூறுதலாலே; சாதகனாகிய பருவமாணாக்கன் பாசவலி தணிக்க வல்லான் = பயிலுபவஞகி பக்குவ நிலையைப் பெற்றிருக்கும் மாணாக்கனது. பந்தங்களின் ஆற்றலை நீக்குதற்கு வல்லமை படைத்த ஞானாசிரியன் ஒருவன் மேதினிமேல் உடலோடு நற்செயல் விடுவது அன்றி இடைவிடல் ஆகாதால் = உலகத்தின் கண் உடல் விடுதலோடு நற்கருமத்தை விடுதலன்றி வாழும் காலத்தினிடையே சிறிதுகால மேனும் விடலாகாது. (எ.று)

முடிபு - வேதமுதலாகிய நூல் முழுதும் குரவன் எஞ்ஞான்றும் நற்கருமம் புரிக என்று ஒருங்கு ஒரு அந்தமாக விதித்தலால் பாச வலி தணிக்க வல்லான் உடலொடு நற்செயல் விடுவதன்றி இடைவிடல் ஆகாதால் வேதம் முதலான நூல்கள் மக்களுக்கு விதி வாக்கியத்தாலும் விலக்குவாக்கியத்தாலும் அறங்களைக் கூறும் விதிவாக்கியத்தால் செய்ய வேண்டியதைப் பற்றியும் விலக்கு வாக்கியத்தால் செய்யத்தகாத வற்றையும் கூறும் என்க. சாதகன் - பயில்வோன்.

945. **என்று தன(து) இயல் உணர்த்தி உடம்புநான்**
என்றிருந்த இயல்பு போல
நின்றஎனை உணர்ந்து நீ சோகம் பாவனை
கொண்டுபோல நிற்பை ஆயில்
பொன்றலுறு விடம்கலுழன் தனைநினைப்பப்
போதல் போல்போம் அவிச்சை
நன்றறிதி என அறிவித் தனனெங்கோன்
கோரக்க நாதன் தன்னை 62

(இ.ள்) என்று தனது இயல்பு உணர்த்தி = மேல் கூறியவாறு தன்னுடைய இலக்கணத்தைச் சொல்லிக் காட்டி; உடம்பு நான் என்று இருந்த இயல்பு போல = இக்காலம் வரை உடம்பே நான் என்று கருதிக் கொண்டிருந்த இயல்பு போலவே; நின்ற எனை உணர்ந்து நீ சோகம் பாவனை கொண்டு நிற்பை ஆயில் = முன்னே நிலை பேறாகநின்ற என்னை மெய்ப்பொருளாக அறிந்து கொண்டு பின் என்னை

Koviloor Digital Library

அடைவதற்கு சோகம் பாவனையைப் பயின்று அவனே நான் என்று கருதும் அதன் கண் உறைத்து நிற்பாய் ஆகில்; பொன்றல் உருவிடம் கலுழன்தனை நினைப்பப் போதல் போல = இறத்தலை உண்டாக்கும் பாம்பின்விடம் கருடத்தியானம் செய்ய போதலைப் போல; அவிச்சை போம் = பிறவிக்கெல்லாம் மூலகாரணமாகிய அவித்தை யாகிய அறியாமை கெடும்; நன்று அறிதி என அறிவித்தனன் எங்கோன் கோரக்க நாதன் தன்னை = ஈற்றில் சொன்ன இவ்வுபதேசத்தை மட்டும் நன்றாக அறிந்து கொள்வாயாக என்று எம்கோமான் கோரக்க நாதனை அறிவித்தனன். கோரக்க நாதனுக்கு அறிவித்தனன் என்றும் ஆம். (எ.று)

முடிவு - எங்கோன் என்று தனது இயல் உணர்த்தி உடம்பு நான் என்று இருந்த இயல்பு போலவே அதைவிட்டு நீ நின்ற எனை உணர்ந்து மேலும் சோகம் பாவனை கொண்டு நிற்பையாயில் விடம் கலுழன் தனை நினைப்பப் போதல் போல் அவித்தை போம் நன்று அறிதி என கோரக்க நாதன் தனை அறிவித்தனன்.

946. ஞானகுரு பரனருளால் தனக்குரைத்த
மொழிப்பொருளை நன்ற றிந்திட்(டு)
ஊனைவடி வென்பது விட்(டு) உண்மை
யலாவனைத் தையுநீத்துண்மை கண்டு
தானதனை அடைந்துதான் அதுவென்னும்
மருள் அகன்று தானே ஆகி
வானவரும் அறிவரிய பெரும் புகழ்கோ
ரக்கன் அவண்மன்னி னானால் 63

(இ.ள்) வானவரும் அறிவரிய பெரும் புகழ் கோரக்கன் = நில உலகமக்களே அன்றிவான நாட்டவரும் அறிதற்கு அரிய பெரிய புகழைப் பெற்றிருக்கும் கோரக்க நாதன் என்னும் சித்தனானவன்; ஞான குருபரன் அருளால் தனக்கு உரைத்த மொழிப்பொருளை = ஞானத்தை நன்கு உணர்ந்த மேலான ஆசிரியனாகிய அல்லம தேவன், அருள் கொண்டு தனக்கு உபதேசித்த குகேசன் என்னும் மொழிப் பொருளை; நன்று அறிந்திட்டு - அவன் மேலே நன்றறிதி என்று கூறிய படியே நன்று அறிந்திட்டு; ஊனை வடிவு என்பது விட்டு உண்மை அலா அனைத் தையும் நீத்து = சீவ உபாதிகளில் ஒன்றாகிய உடம்பே தனக்கு வடிவு என்பதை விட்டு உண்மைப் பொருள் அல்லாத ஏனை உபாதிகளாகிய பொறிகள் அந்தக் கரணங்கள் பிராணவாயு என்று கூறும் எல்லா

Koviloor Digital Library

வற்றையும் களைந்து விட்டு; உண்மைகண்டு = உண்மைப் பொருளாகிய ஆன்மாவையும் பரமான்மா மாவையும் உணர்ந்து; தான் அதனை அடைந்து - தான் அவ்வுண்மை நிலையையே பற்றுக் கோடாகக் கொண்டு (அதனை என்பது ஆன்மா பரமான்மாவை உணர்ந்த நிலையை) தான் அது என்னும் மருள் அகன்று = ஆன்மா; பரமான்மா என்று பேதபாவனையாக எண்ணும் மயக்கமும் நீங்கி; தானே ஆகி = சிவமே ஆகி; அவண் மன்னினான் = திருப்பருப்பதமலை சாரலில் உள்ள நல்லிடத்தில் நிலை பெற்று வாழ்ந்தான். (எ.று)

முடிவு - கோரக்கன் குருபரன் அருளால் உரைத்த மொழிப் பொருளை நன்று அறிந்திட்டு ஊனை வடிவு என்பது விட்டு உண்மையல்லா அனைத்தையும் நீத்து (பின்) உண்மை கண்டு தான் அதனை அடைந்து தான் அது என்னும் மருள்அகன்று தானேயாகி அவன் மன்னினுன். மகாவாக்கியத்துள் விசேடம். துவம்பதப் பொருளாகிய சீவனும் தத்பதப் பொருளாகிய பிரமமும் அசிபதப் பொருளால் ஒன்றாதலை சிவம் என்று திருமுலர் கூறுவர். மகாவாக்கியத்துள் துவம் பதப் பொருளாகிய சீவனும் தத்பதப் பொருளாகிய பிரமமும் அசிபதப் பொருளால் (தத்தவமசி) (தத்+துவம்+அசி) ஒன்றாதலை திருமூலர் சிவம் என்பர். அது+நீ+ஆனாய். அதனுல் இப்பாட்டில் தானுகி என்பது இரண்டன் ஐக்கியம் ஆதலில் அதற்கு சிவமாகி என்று பொருள் கூறப்பட்டது.

துவம்பதம் - தத்பதம் தோன்றும் அசிபதம்
நம்பிய சீவன் பரன் சீவனுய் நிற்கும் (திருமந்திரம் 2441)

பத்தொன்பதாவது கோரக்கர் கதி
முற்றிற்று

Koviloor Digital Library

இருபதாவது
முனிவரர் கதி

கதி நுதலியது

வேறு

947. பனிவரை மகளொடு பவள வார் சடைத்
தனிவரை அமர்திருச் சயிலம் நீங்கியே
துனிவரை அல்லமன் சுருதி மெய்ப் பொருள்
முனிவரை உணர்த்திய முறைமை கூறுவாம் 1

(இ.ள்) துனிவரை அல்லமன் = வெறுப்பு (விருப்பற்று) அல்லம தேவன்; பனிவரை மகளொடு = இமய மலை அரசன் மகளாகிய பார்வதியொடு; பவள வார் சடைத்தனிவரை அமர்திருச் சயிலம் = பவளம் போல் சிவந்த நீண்ட சடையையுடைய ஒப்பற்ற மலை போன்ற சிவபெருமான் எழுந்தருளி விளங்கும் திருச்சயிலமலையை விட்டு நீங்கி; முனிவரை = முனிவருக்கு; சுருதி மெய்ப் பொருள் = இருவகை சுருதிகளின் உண்மையான பொருளை; உணர்த்திய முறைமை கூறவாம் = அறிவுறுத்திய (உபதேசித்த) முறையை யாம் சொல்லுவாம். (எ.று)

முடிவு-அல்லமன் திருச்சயிலம் நீங்கி முனிவரை சுருதிமெய்ப் பொருள் உணர்த்திய முறைமை கூறுவாம். முனிவரை என்ற இரண்டாம் வேற்றுமையை நான்காம் வேற்றுமையாகத் திரித்துக் கொள்க. துனி - வெறுப்பு. இனம் பற்றி விருப்பும் கொள்ளப் பட்டது. சுருதி - வேதம். சுரோத்திர இந்திரியத்தால் கேட்டு உணரப் படுவதாதலின் சுருதி எனப் பெயர் பெற்றது. அச்சுருதி அற்பசுருதி என்றும் பிரபல சுருதி என்றும் இருவகைப்படும். அற்பசுருதி கர்மத்தைக் கூறும். பிரபல சுருதி ஞானத்தைக் கூறும். இக் கதியால் முனிவருக்கு அற்பசுருதியால் கூறப்படும் கருமங்களை விட்டு விட்டு பிரபலசுருதியாக கூறப்படும் ஞானத்தை அடையும் படி அல்லம தேவன் உபதேசிக்கத் தொடங்கு கின்றார். இம்முனிவரர் கதியினை கன்னடப் பிரபு லிங்க லீலை ''கோரட்சாதிகளி உபதேச'' என்று ஒரே கதியாகக் கூறும்.

948. அருந்தவம் முயன்றகோ ரக்கற்(கு) அம்முறை
[1]விரிந்தறி உருவமாம் மெய்ம்மைத் தன்மையைப்

Koviloor Digital Library

பரிந்தருள் அமலன்அப் பாலும் உத்தரம்
பொருந்துநர் தமக்கு அருள் புரியப் போயினுன் 2

(பா.ம்) [1]விருந்தறி.

(இ.ள்) அருந்தவம் முயன்ற கோரக்கற்கு = செய்தற் கரியதவத்தை முயன்று செய்து கொண்டிருந்த கோரக்கனுக்கு; அம்முறை = மேலே கூறிய முறைப்படி; விரிந்து அறிவு உருவமாம் மெய்மைத் தன்மையை = விரிவுடைத்தாகி. அறிவின் வடிவாய் விளங்குகின்ற உண்மைத் தன்மையை; பரிந்து அருள் அல்லமன் = அன்பு கொண்டு அவனுக்கு (கோரக்கனுக்கு) உபதேசித்த அல்லம தேவன்; அப்பாலும் = அதற்கு மேலும்; உத்தரம் பொருந்துநர்தமக்கு = ஸ்ரீ சைலமலையின் வடக்கே வாழ்ந்துள்ள முனிவர்களுக்கு; அருள்புரியப் போயினுன் = உபதேசிக்கச் சென்றான். (எ.று)

முடிபு - கோரக்கனுக்கு அம்முறை அறிவுருவமாம் மெய்ம்மைத் தன்மையை பரிந்து அருளிய அல்லமன் அப்பாலும் உத்தரம் பொருந்துநர் தமக்கு அருள் புரியப் போயினுன். விரிந்து அறிவு உருவமாம் மெய்ம்மைத்தன்மையை என்னும் தொடருக்கு வியாபக மாய், ஞான வடிவாயிருக்கின்ற உண்மைப் பொருளாகிய சிவத்தின் தன்மையை என்று பொருள் கூறிக்கொள்க.

அல்லமதேவன் இயல்புரைத்தல்

949. நல்லன தீயன நாடு றாதுகொள்
வல்லழல் எனஅருள் மழையெ னப்படும்
அல்லமன் எதிர்ந்தவர் அறமு ளாரறம்
இல்லவர் எனு(து)அறிவு இயற்றி ஞனரோ 3

(இ.ள்) அருள் மழை எனப்படும் அல்லமன் = அருளையுடைய முகில் என்று கூறப்படும் அல்லமதேவன்; நல்லன தீயன நாடுறாது கொள் வல்லழல் என = இப்பொருள் நல்லன எனவும் இப்பொருள் தீயன எனவும் ஆராயாமல்ல; அவற்றைப் பற்றி எரிக்கும் வலிய நெருப்பைப் போல; எதிர்ந்தவர் அறமுளார் அறம் இல்லவர் எனுது = தன்முன் எதிர்ப்பட்டவர் அறமுள்ளவர்கள் என்றும் அறமில்லாதவர்கள் என்றும் வேறுபாடு கருதமால்; அறிவு இயற்றினுன் = எல்லோருக்கும் ஞானேபதேசம் செய்தான். (எ.று) (அரோ-அசை)

முடிபு - அருள் மழை எனப்படும் அல்லமன்; வல்லழல் என எதிர்ந்தவர் அறமுளார் அறமில்லவர் எனாது (எல்லோருக்கும்) அறிவு

Koviloor Digital Library

இயற்றினன். அக்கினிபோல் பருவம் பாராது அனுக்கிரகித்தான் என்பது திரு-சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் உரை.

இதுவுமது

950. யாவரும் தனதருட்(கு) ஏற்று ளாரெனப்
பாவவன் தளையறப் பரிந்து நன்னெறி
மேவவந்(து) அருள்புரி விமலன் ஆயிடை
மாவழங் குறுமொரு வனத்தில் போயினன் 4

(இ.ள்) யாவரும் = எல்லோரும்; தனது அருட்கு ஏற்றுள்ளார் என = தன் உபதேசச் செயலுக்கு பொருந்தியவர்களே என்று கருதிய காரணத்தால்; பாவவன் தளை பறிந்து அற நன்னெறி மேவ = பாவமாகிய வலிய கட்டு அறுக்கப்பட்டு நீங்கவும்; நல்ல நெறியை அடையவும்; வந்து அருள்புரிவிமலன் = அவர்களிடம் தானே வந்து அருள் செய்யக் கூடிய குற்ற மற்றவனுகிய அல்லமதேவன்; ஆயிடை மாவழங்குறும் ஒருவனத்தில் போயினான்= ஸ்ரீசைலத்துக்கு வடக்கேயுள்ள அவ்விடத்து விலங்குகளே திரிந்து கொண்டிருக்கின்ற ஒரு காட்டினிடத்தே சென்றான். (எ.று)

முடிவு - அருள் புரிவிமலன் ஆயிடை ஒரு வனத்தில் போயினன். எத்தகைய விமலன் எனில்? யாவரும் தனது அருட்கு ஏற்றுளார் எனக் கருதி அவர்கள் பாவவன் தளை பரிந்து அறவும் நன்னெறி மேவவும் வந்து அருள் புரியக் கூடிய விமலன்.

அல்லம தேவன் முன் ஒரு வேடன் தோன்றியது

951. அக்கொடு வனத்தெதிர் அன்பென் கின்றதுஉள்
புக்கறி கிலாஒரு புளினன் கூன்புறக்
கொக்கென நாள்தொறும் கொலை குறித்தவன்
கைக்கொடு மரமோடு கடிது தோன்றினன் 5

(இ.ள்) அகொடு வனத்த எதிர் = அந்த கொடிய காட்டின் கண் அல்லம தேவருக்கு முன்னல்; அன்பு என்கின்றது உள்புக்கு அறிகிலா ஒரு புளினன் = அன்பு என்கின்ற இரக்க குணம் மனத்தினுள் புகுந்தறிகிலாத ஒரு வேடன்; நாள்தொறும் கூன் புறக்கொக்கென கொலை குறித்தவன் = நாள்தோறும் வளைந்த முதுகையுடைய கொக்கைப்போல உயிர்களை கொலை செய்தலையே குறிக்கோளாகக் கொண்டவன்; கைகொடு மரமொடு கடிது தோன்றினன் = அத்தகை

Koviloor Digital Library

யோன் கையின்கண் வில்லொடு கொலைத் தொழில்செய்வதற்காக விரைந்து தோன்றினுன். (எ.று)

முடிவு - அக்கொடுவனத்து எதிரில் ஒரு புளினன் கொக்கென நாள் தோறும் கொலை குறித்தவனுய் கையின் கண்கொடு மரத்தோடு தோன்றினுன்.

அவ்வேடனிடத்தே அல்லம தேவன் மனம் இரங்கி அருள்புரியச் சென்றது

952. அன்பனாய்க் கண்இடந்து அப்பும் வேடனுக்(கு)க்
இன்பம்ஈகுதல் புகழ்க்கு ஏற்றது அன்றுநான்
வன்பனுய்த் திரியுமிம் மறவன் காப்பலென் (று)
[1]என்பொலா மணிமனம் [2]இரங்கிச் சென்றனன் 6

(பா.ம்) [1]என் பொலாநெறி மனம்; [2]இரங்கிற்று என்றனன்.

(இ.ள்) என் பொலாமணி = என்னுடைய துளைக்கப் பெறாத மணி போன்ற அல்லமதேவன்; அன்பனுய் கண்இடந்து அப்பும் வேடனுக்கு இன்பம் ஈகுதல் புகழ்க்கு ஏற்றது அன்று = இறைவன் மேல் பேரன்பு டையவனுய் தன் கண்ணைத் தோண்டி இறைவன் கண்ணிடத்தே அப்பியகண்ணப்பனுகிய வேடனுக்கு பேரின்பத்தைத் தரும் செயல் புகழுக்குரிய செயலாகாது; (அவ்வாறின்றி) நான் வன்பனுய்த் திரியும் இம் மறவன் காப்பல் என்று = வன் குணமே உடையவனுய் கொலைத் தொழிலிலேயே திரிகின்ற மறவனை நான் காத்து அருள் செய்வேன் என்று கூறிக் கொண்டு; மனம் இரங்கிச் சென்றனன் = அவ்வேடனிடத்தே மனம் இரக்கமுடையவனுய் அவன் முன்னே சென்றான். (எ.று)

முடிவு - என் பொலாமணி அன்பன் ஆய் கண் இடந்து அப்பும் வேடனுக்கு இன்பம் ஈகுதல் புகழ்க்கு ஏற்றது அன்று. வன்பனுய்த் திரியும் மறவனை நான் காப்பல் என்று மனமிரங்கிச் சென்றனன் பக்குவம் நோக்கி அருள் செய்தலைக் காட்டிலும் பக்குவ மில்லாதவர்கட்கு பக்குவம் வரச் செய்து அவர்களைக் காத்தலே மிக நல்லது என்னும் கருத்தால் அன்பனுய் கண்ணிடந்து அப்பும் வேடனுக்கு இன்பம் ஈகுதல் புகழ்க்கு ஏற்றதன்று என்றும் வன்பனுய்த் திரியும் மறவனைக் காப்பல் என்றும் கூறினார்.

அல்லம தேவன் அவ்வேடனுக்கு அருள் செய்ய முன்னே அருட் கண் வைத்தது (இது சட்சு தீட்சை)

953. நல்லறிவு அவன்உளம் நடுதற்கு ஒப்பிலா

Koviloor Digital Library

அல்லமன் வினை அற அருன்கண் வைத்தனன்
கொல்லையில் விதையிட [1]கொழுப்பு காமுளி
புல்எரி உறஅழல் போகட்டு என்னவே 7

(பா.ம்) [1]கொழுபுக்காமுளி

(இ.ள்) கொல்லையில் விதை இட = முல்லை நிலக்காட்டில் விதை இடுதல் வேண்டி; கொழுபுகா முளிபுல் எரி உற = கலப்பையின் கொழுமுனையும் புகமுடியாத உலர்ந்த புற்கள் எல்லாம் எரிந்து சாம்பலாகும்படி; அழல் போகட்டு என்ன = நெருப்பை இட்டால் போல; ஒப்பிலா அல்லமன் = தனக்கு உவமை இல்லாத அல்லம தேவன்; நல் அறிவு அவன் உளம் நடுதற்கு = நல்ல ஞானத்தை அவனது உள்ளத்திலே பதியவைத்தற்காக; வினைஅற = சித்த மலமாகிய வினைகளெல்லாம் அற்றுப் போகும்படி; அருள் கண்வைத்தனன்=தன் அருளோடு கூடிய பார்வையை அவன் மேல் செலுத்தினுன். (எ.று)

முடிவு - கொல்லையில் விதை இட கொழு புகா முளிபுல்லுக்கு எரி போகட்டு என்ன வே ஒப்பிலா அல்லமன் நல்லறிவை அவன் உளம் நடுதற்காக வினை அற அருட்கண் வைத்தனன். இப்பாட்டு உவமை யணியின் பாற்படும். போகட்டு என்பது போடுதல் என்பது பொருள். அது இங்கு நெருப்புப் போடுதல் (புல்லின்மேல் நெருப் பிடுதல்) என்ற பொருளில் வந்துள்ளது ''முதையாம் எமது மனப்புலத்தை மூடும் காமவெகுளி வனம் முற்றும் கருணைத் தீக்கொளுவி'' என்பதனை (சிவ. பா. பிள்.) ஒப்பு நோக்குக. திரு சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் கொழுப்புக்கா எனப் பாடங்கொண்டு கொழுப்பு என்றால் எரு. எருவிற்காக எனப் பொருள் காண்பார்.

954. மேவுதீ வினையெலாம் விளிந்து தூயனுய்ப்
பாவியேன் உய்வகை பகர்தி என்றனன்
மாஅலால் வழங்குறா வனத்தில் வேட்டுவன்
யாவர்தாம் இறையருள் எய்தின் உய்ந்திடார் 8

(இ.ள்) மா அலால் வழங்குறா வனத்தில் வேட்டுவன் = விலங்குகளை அன்றி மக்களுள் யாரும் பயிலாத அக்காட்டிலே வாழ்கின்ற வேடன்; மேவுதீ வினை எலாம் விளிந்து தூயனுய் = (அல்லம தேவன் நோக்கிய அருள் நோக்கால்) தான் பெற்றிருந்த தீவினைப் பரப் பெல்லாம் அழிந்து தூய்மையைப் பெற்றவனுய்; பாவியேன் உய்வகை பகர்தி என்றனன் = (நல்லுணர்வு வரப் பெற்றமையால் அல்லம தேவனை

Koviloor Digital Library

நோக்கி) பாவத்தையுடைய தீயேன் உய்யும்படியான வழியை நீ கூறுவாயாக என்று கேட்டுக் கொண்டான்; இறையருள் எய்தின் யாவர் தாம் உய்ந்திடார் = இறைவனுடைய திருவருள் ஒருவனுக்குக் கிடைத்து விட்டால் எவர்தாம் தீவினையிலிருந்து தப்பமாட்டார். (எல்லாரும் தீவினையிலிருந்து உய்வர் என்பது கருத்து). (எ.று)

முடிவு - வனத்தில் வேட்டுவன் வினையெலாம் விளிந்து தூயனுய் பாவியேன் உய்வகை பகர்தி என்றனன். இறையருள் எய்தின் யாவர்தாம் உய்ந்திடார். யாவர்தாம் எய்தின் உய்ந்திடார் என்பது வேற்றுப் பொருள் வைப்பணி.

ஐம்புலன்களை அடக்கும் முறைமையினை வேடனுக்கு உபதேசித்தது

955. அறிவெனும் வேலினுல் ஐம்பு லன்களா
மறியினம் அருள்எனும் வலையை தப்புறா(து)
எறிகுவை எனில் உனக்கு இல்லை துன்பெனு
நெறியினை வழுவற நிமலன் கூறினுன் 9

(இ.ள்) ஐம்புலன் களாம் மறியினம் அருள் எனும் வலையை தப்புறாது = உன்னுடைய ஐம்புலன்களாகிய மான் கூட்டங்கள் அருள் என்னும் வலையில் அகப்பட்டு அவற்றினின்றும் தப்பி ஓடாதபடி; அறிவு எனும் வேலினால் எறிகுவை எனில் = உன்னுடைய ஞானமாகிய வேல் படையினுல் அவற்றை எறிந்து வசப்படுத்துவாயே யானால்; உனக்கு துன்பு இல்லை எனா = உனக்கு எவ்வித துன்பமும் இல்லை என்று கூறி; நெறியினை வழுவற நிமலன் கூறினுன் = ஐம்புலன்களை அடக்கும் நெறியினை, குற்றமற அல்லமதேவன் அம்மறவனுக்குக் கூறினுன்.(எ.று)

முடிபு - விமலன் (அவ்வேடனை நோக்கி) ஐம்புலன்களாகிய மறியினம், அருள் எனும் வலையை தப்புறாது அறிவெனும் வேலினால் எறிகுவை எனில் உனக்குத் துன்பு இல்லை என்று கூறி வழுவற அந்நெறியினைக் கூறினுன். ஐம்புலன்களாகிய மறிஇனம் விரும்பிய வாறு திரியுமேயா னுல் அவற்றை அருளாகிய வலையை வீசி அகப் படுத்தி அறிவினுல் எறிய வேண்டும் என்பதாயிற்று.

956. அறிவொடு மனம்சிலை [1]அம்ப தாகநான்
குறியென எய்வையேல் குமர! நின்றனைப்
பொறிமதில் இலங்கைமுன் புரந்து ளான்தலை
பறிபட எய்தவன் பணியும் என்றுமே 10

Koviloor Digital Library

(பா.ம்) [1]அம்பதாகதான்

(இ.ள்) குமர = முருகனை ஒத்தவனே!; அறிவொடு மனம்சிலை அம்பதாக = அறிவொடு கூடியமனமே வில்லொடு கூடிய அம்பாக; நான் குறிஎன எய்வையேல் = நான் என்கின்ற ஜீவ போதத்தை இலக்குப் பொருளாகக் கொண்டு அதை எய்து வீழ்த்தவாயோனல்; நின்தனை = இவ்வாறு எய்த உன்னை; பொறிமதில் இலங்கை முன்புரந்துளான் தலை பறி பட எய்தவன் = பலவகைப் பொறிகளோடு கூடிய மதில் சூழ்ந்த இலங்கையினை ஆட்சி செய்த இராவணனது பத்து தலைகளையும் அற்றுப் போம்படி அம்பு எய்த இராமனும்; பணியும் என்று மேதனக்கு = இத்தகைய ஆற்றல் இல்லை என்று கருதி எப்போதும் வணங்கும் என்க. (எ.று)

முடிபு - குமர! அறிவோடு கூடிய மனம் சிலையொடு கூடிய அம்பாக நான் குறியாக எய்வாயே யானல் நின்தனை இலங்கை புரந்துளான் தலை பறி பட எய்தவன் என்றுமே பணியும் இப்பாட்டு உருவக அணி. அறிவொடு கூடிய மனத்தை வில்லொடு கூடிய அம்பாக உருவகித்துத் நான் என்னும்சீவ போதத்தை இலக்காக உருவகித்தலின் உருவக அணி என்க. நான் என்பது ஆன்ம போதம் என்கிற சீவ போதத்தை. அதனை அறிவொடு கூடிய மனத்தால் அழிக்க வேண்டி இருத்தலின் இவ்வாறு கூறினார். நான் என்னும் சீவபோதம் அழிய வேண்டும் என்பதை மாணிக்கவாசகர்,

வான் கெட்டு மாருதம் மாய்ந்தழல் நீர் மண்கெடினும்
தான் கெட்டலின்றிச் சலிப் பறியாத தன்மையனுக்கு
ஊன் கெட்கு உயிர் கெட்டு உணர்வு கெட்டுஎன் உள்ளமும் போய்
நான் கெட்ட வா பாடித் தென்ளேணம் கொட்டாமோ

(திருவா.திருத்தெள்.18)

வில் வீரர்களில் இராமன் சிறந்தவன் என்பதை

தரித்தவரி வில்லிகளில் தாழ் தடக்கை இராமனும் நான்

(கூர்மபுரா - வீபூதி அத்தி -3)

என்பதனல் அறிக. எனவே வில் வீரரில் சிறந்த இராமனும் தனக்கு இவ்வாறு எய்யும் ஆற்றல் இல்லாமையினல் இக்குமரனைப் பணிவான் என்க.

Koviloor Digital Library

957. இப்பரிசு எறுழ்வலி எயினன் உய்வகை
செப்பிநன் னிலையருள் செய்தி ருத்தியே
அப்புறம் அருளுடை அமலன் போம்பொழுது
ஒப்பறு தவவனம் ஒன்று தோன்றிற்றே 11

(இ.ள்) அருள் உடை அமலன் = அருளுடைய குற்றமற்றவனுகிய அல்லமதேவன்; இப்பரிசு எறுழ்வலி எயினன் உய்வகை செப்பி = இவ்வண்ணம் மிக்கவலிமையுடைய வேடன் துன்பத்திலிருந்து நீங்கி உய்யும் வகையைச் சொல்லி; நன்னிலை அருள் செய்து இருத்தியே = அவனுக்கு நல்ல ஞான நிலைகளை உபதேசித்து, அதில் பயிலும் படி அங்கேயே இருக்கச் செய்து; அப்புறம் போம் பொழுது = அவ்விடத்தை விட்டு நீங்கிச் செல்லும் பொழுது; ஒப்பறு தவவனம் ஒன்று தோன்றிற்று = ஒப்பற்றதபோவனமொன்று அல்லம தேவருக்கு முன்னாலே தோன்றிற்று. (எ.று)

முடிபு - இம்முனிவரர் கதியில் ஐந்தாம் பாடலிலிருந்து பதினோராம் பாட்டின் முதல் இரண்டடிவரை வன சரன் கதி என்க. இதன் பின்பே முனிவரர் கதி கூறப்படும் என்க.

958. கோடமை கரிகளும் கொடும டங்களும்
பாடமை பகைதவிர் பரிசி னானதற்கு
ஆடர வொடுமதி அமர்பி ரான்சடைக்
காடல துவமையாம் கண்ட தில்லையே 12

(இ.ள்) கோடுடமை கரிகளும் கொடுமடங்களும் - கொம்புள்ள யானைகளும், கொடிய சிங்கங்களும்; பாடுஅமை பகைதவிர் பரிசினால் அதற்கு - கெடுதல் அமையும் பகைப்பண்பு நீக்கப்பெற்று ஒன்றாக வாழும் தன்மையினாலே அக்காட்டிற்கு; ஆடுஅரவு ஒடு மதி அமர் பிரான் சடைக்காடலது, உவமையாம் கண்டது இல்லையே - படம் எடுத்து ஆடும் பாம்பொடுதிங்களும், பகை நீங்கி ஒன்றாக அமர்ந் திருக்கும், சிவபெருமானுடைய சடைக்காடே அன்றி; வேறு பொருள் எதையும் யாம் உவமையாகக் கண்டது இல்லை. (எ.று)

முடிபு - கரிகளும் மடங்களும், பகைதவிர் பரிசினால் அதற்கு (அக்காட்டிற்கு) அரவொடு மதிபகை தவிர்ந்து அமர்ந்திருக்கும் பிரான் சடைக்காடலது உவமையாக யாம் கண்டது வேறுஇல்லை.

959. பெயர்குறு கால்கள் கையாகப் பெற்றவும்
உயிர்க்குறும் நாசிகை யாக உள்ளவும்

Koviloor Digital Library

மயக்கறு தீயினை வளர்த்து வான்புனல்
பயக்குறும் முனிவரர் பணிகள் செய்யுமால் 13

(இ.ள்) பெயர்க்குறு கால்கள் கையாகப் பெற்றவும் = நடத்தற்கு இயைந்த கால்களையே கையாகப் பெற்ற விலங்குகளும் (அவைபுலி சிங்கம் கரடி குரங்கு முதலியன) உயிர்க்கு உறும் நாசிகையாக உள்ளவும் = மூச்சு விடுகின்ற முக்கினையே கையாகப் பெற்றிருப்பனவும் (அவை யானை யாளி முதலியன); மயக்கறு தீயினை வளர்த்து வான் புனல் பயக்குறும் முனிவரர் பணிகள் செய்யும் = குற்றமற்ற யாகாகக்கினியை வளர்த்து அதனுலே வானம் பெய்கின்ற நீரை உலகத்திற்கு உண்டாக்கும் சிறந்த முனிவர்கள் அவர்களுக்குச் செய்ய வேண்டிய குற்றேவல்களை அவ்விலங்குகள் செய்யும் என்க. (எ.று)

முடிபு - கால்களைக் கையாகப் பெற்றவும் நாசியைக் கையாக உள்ளவும் (ஆகிய விலங்குகள்) தீயினை வளர்த்து வான் புனல் பயக்கும் முனிவரர் உடைய பணிகளைச் செய்யும் என்க ''வளவான் மழை உயர் வானவர் மகிழ்வால் வரும்'' (பகவத் கீதை - அத் - 3 - 9ம்பாடல்) தேவர்களை மகிழ்விக்கின்ற யாகத்தால் வானமழை வரும் என்பது பொருள்.

முனிவர்கள் ஞானத்தினை உணராமல் கன்மங்களைச் செய்தல்

960. **மறைபல ஓதுநர் மகம்வ ளர்க்குநர்**
கறைமிட றுடையநம் கடவுள் பூசனை
முறைவழி புரிகுநர் மூச்சு அவித்தொரு
தறியென அசைவற இருக்கும் தன்மையார் 14

(இ.ள்) மறை பல ஓதுநர் =(அங்கேயுள்ள முனிவர் எல்லாம்) பலவகை வேதங்களை எல்லாம் ஓது நராயும்; மகம் வயர்க்குநர் = மறை கூறியபடி யாகங்களைச் செய்கு நராயும்; கறை மிடறுடை நம் கடவுள் பூசனை முறைவழி புரிகுநர் = நஞ்சினுல் உண்டான கறுப்பை கண்டத்தின்கண்ணேயுடைய நம் கடவுளாகிய சிவபெருமானைக் குறித்துச் செய்யும் பூசையை ஆகம முறைப்படி செய்கு நராயும்; மூச்சு அவித்து ஒரு தறி என அசைவு அற இருக்கும் தன்மை யார் = பிராணவாயுவை அடக்கி ஒன்றாகிய தூண்போல அசையாமல் இருக்கும் யோகப் பயிற்சியுடையாரும். ஆயிருக்கும் அருந்தவர் என அடுத் பாடலில் முடியும். (எ.று)

Koviloor Digital Library

முடிவு - மறைபல ஓதுநரும் மகம் வளர்க்குநரும் பூசனை புரிகுநரும் மூச்சு அவித்த தறி என அசைவற இருக்கும் தன்மையரும் ஆயிருக்கும் அருந்தவர் என அடுத்த பாட்டில் முடியும்.

வேறு

961. **ஆயி ருக்கும் அருந்தவர் தங்கள் பால்**
போயி வர்க்குறு போதனை யாற்பவ
நோய கற்றுவல் என்று நுவன்றனன்
தாயெ னக்கொரு தான்எனும் அல்லமன் 15

(இ.ள்) எனக்கு ஒரு தாய் தான் எனும் அல்லமன் - என் தனக்கு ஒப்பற்ற தாயே என்று கருதப்படும் அல்லம தேவன்; ஆயிருக்கும் அருந்தவர் தங்கள் பால் போய் - மேற்கூறியவாறு பலவகையரா யிருக்கும் அரிய தவச் செயல்களையே செய்பவர் தங்கள் பால்போய்; இவர்க்கு உறு போதனையால் = இவர்களுக்கு பொருந்திய ஞான போதனையினுல்; பவநோய் அகற்றுவல் என்று நுவன்றனன் = இவர்களது பிறவிநோயை யான் நீக்கி விடுவல் என்று தனக்குள்ளளே கூறிக் கொண்டார்.(எ.று)

முடிபு - ஆய் இருக்கும் அருந்தவர் தங்கள் பால் போய் போதனை யால் பவநோயை அகற்றவல் என்று அல்லமன் நுவன்றனன்.

962. **நோற்று நோன்புடல் நொந்த வருந்துவீர்**
[1]ஆற்றும் நீர்மகம் ஆதி வினையினுல்
மாற்றும் மாயை மலம்செறு வில்படும்
சேற்றி னுல்கழும் சேறு நிகர்க்குமால் 16

(பா.ம்) [1]ஆற்றி

(இ.ள்) நோன்பு நோற்று உடல் நொந்த வருந்துவீர் = பலவகை கர்மங்களாகிய மறை ஒதல் முதலான நோன்புகளையே செய்து, அதனுல் உடல் இளைத்து வருந்துபவர்களே; ஆற்றும் நீர் = கன்மங்களைச் செய்கின்ற நீங்கள்; மகம் ஆதிவினையினுல் மாற்றும் மாயை மலம் = யாகம் முதலான கர்மங்களால் ஒழிக்க கருதிய உடம்பாகிய மாயாமலம் எத்தகையது என்றால்?; செறுவில் படும் சேற்றினுல் கழும் சேறு நிகர்க்குமால் = வயலில் தோன்றிய சேற்று நீரால் காலில் பட்ட சேற்றைக் கழுவுதற்குச் சமானமாகும். (எ.று)

Koviloor Digital Library

முடிவு - நோன்பு நோற்று உடல் வருந்துவீர்! ஆற்றும் நீர் மகம் ஆதி வினையினுல் மற்றும் மாயை மலம், செறுவில் படும் சேற்றில் கழும் சேறு நிகர்க்கும். மாயாமலம் என்பது இறத்தல் பிறத்தல் என்கின்ற வட்டத்தை உண்டாக்குவதற்கு ஏது வான கருவியாம். அதை ஞானம் கொண்டு கழுவாது மகமாதி கர்மங் கொண்டு கழுவினுல் அது சேற்றால் சேற்றைக் கழுவுதல் போலும்.

963. ஞானம் கொண்டு நணுகும் சிவபதம்
ஊனம் கொண்ட கருமத்து உறுவது
வானம் கொண்டு வளர்த்தல் புகையநு
மானம் கொண்டு வளர்த்தலை ஒக்குமால் 17

(இ.ள்) ஞானம் கொண்ட நணுகும் சிவபதம் = சிவஞானத்தை கருவியாகக் கொண்டு அதனுல் அடையப்படும் சிவபதமாகிய பரமுத்தியை; ஊனம் கொண்ட கருமத்து உறுவது = பழுதினைக் கொண்ட சரியை, கிரியை யோகம் என்னும் கருமங்களாலே அடைய.முயல்வது எத்தகையது எனெனில்?; வானம் கொண்டு வளர்த்தல்= மழையைக் கொண்டு வளர்த்தலாகிய பயிர் முதலானவற்றை; புகை அநுமானம் கொண்டு வளர்த்தலை ஒக்கும் = புகையினுல் அநுமானித்து அறியப் படும் நெருப்பினைக் கொண்டு வளர்க்க முயன்றதை ஒக்கும்.(எ.று)

முடிபு - ஞானத்தைக் கொண்டு நணுகும் சிபதத்தை கருமத்தாலே உறுவது (எத்தகையது எனில்) வானம் கொண்டு வளர்த்தலை - புகைய நுமானமான நெருப்பைக் கொண்டு வளர்த்லை ஒக்கும். இக்கருத்தை - ''வித்துபயிர் தாயாகியே வளர்க்கும் தண்புனலால் அல்லாது தீயால் வளருமோ செப்பு'' என்னும் (நீதி வெண்பா 57) பாடலாலும் உணர்க. புகையநு மானம் என்பது நெருப்பை - புகையினால் அநுமானித்து உணரப்படும் நெருப்பு என்பது பொருள். வடமொழியில் நெருப்பிற்கு கிருபீடயோனி என்று ஒரு பெயர் உண்டு. இங்குக் க்ருபீடம் என்பது புகையை. இப்பாட்டிற்கு திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் விசாரஞானம் காரணமாக அடைதற்கு இயைந்த சாயுஜ்ய பதவியை இழிபுள்ள யாகாதி சிவபபுண்ணிய கருமங்களால் அடைவது உலர்த்து மரம் கொண்டு வளர்த்தல் உறுவது. புகையால் அதை அநுமான காரணமாகக் கொண்டு வளர்த்தலை ஒக்கும் என்று உரை எழுதியுள்ளார். இதில் வானம் என்ற சொல்லிற்கு உலர்ந்த விறகு எனப் பொருள் கொண்டுள்ளார். இப்பிழையான உரைக் கருத்து அரசாங்க அகராதியிலும் ஏறிவிட்டது. (லெக்சிகன்)

Koviloor Digital Library

964. குடுமி அம்கிரி ஒப்பக் குவித்த புல்
சுடுதல் கொண்டு பிறவி சுடப்படாது
அடுபு லன்கள் அறிவெனு மங்கியல்
சுடுதல் கொண்டு பிறவி சுடப்படும் 18

(இ.ள்) குடுமி அம்கிரி ஒப்பக்குவித்த புல் சுடுதல் கொண்டு = சிகரத்தையுடைய அழகிய மலை போல வைத்துள்ள தர்ப்பைப் புற்களை அல்லது சமித்துக்களை யாக நெருப்பில் சுடுதல் காரணமாக; பிறவி சுடப்படாது = யாகத்தைச் செய்பவனுடைய செய்வித்தவனுடைய பிறவி நோய் (எரித்து அழிக்கப் படாதாகும்)சுடப்படாது. (ஆனால்) அடுபுலன் அறிவு எனும் அங்கியில் சுடுதல் கொண்டு பிறவி சுடப்படும் = வருத்தும் ஐம் புலன்களை ஞானம் என்னும் நெருப்பிலே இட்டுச் சுடுதலால் ஒருவனுடைய பிறவி நோய் சுடப்படும் என்க. (எ.று)

முடிபு - கிரியை ஒப்ப குவித்தபுல் சுடுதல் கொண்டு பிறவி சுடப்படாது. புலன்களை அறிவு என்னும் அங்கியில் சுடுதல் கொண்டு பிறவி சுடப்படும். இக்கருத்தை ''பரசிவ வங்கி தன்னிற் படர்புல விந்த நத்தை; துரிசறு பாவத் தாலே சுடுதலே யாகமாகும்'' (சித்.சிகா). மிகுதியான சமித்துக்களைக் கொண்டு யாகத்தீயில் சுட்டுயாகம் வளர்த்தலாலே வெறும் புண்ணியமாகிய கர்மமே கிடைக்கும். அதனுல் சுவர்க இன்பமே உண்டாகும். அச்சுவர்க்க இன்பமும் புண்ணிய முடிவில் அழிந்த போகும். அதன் பின்னர் மீண்டும்பிறவிக்கு வர வேண்டும். அதனுலே புல் சுடுதல் கொண்டு பிறவி சுடப்படாது எனக் கூறினார். ஐம்புல இச்சையாகி பற்று அற்ற பொழுதே வீடு பேறு கிடைக்கும். ஆதலால் புலன் அறிவு எனும் அங்கியில் சுடுதல் கொண்டு பிறவி சுடப்படும் என்றார்.

965. போதம் ஆகும் புனிதத் தழலினுள்
பேத பாவனைப் பேரவி பெய்வனேல்
ஆதி சோவுடை மாசி அவனென
வேதம் யாவும் விளங்க விளம்புமே 19

(இ.ள்) போதம் ஆகும் புனித தழலினுள்= மெய்ஞ்ஞானம் என்கின்ற தூய நெருப்பிலே; பேதபாவனை பேரவி பெய்வனேல் - தான் என்றும் சகம் என்றும் சிவம் என்றும் கருதுகின்ற பேத எண்ணமாகிய பெரிய அவிர்ப் பாகத்தை பெய்து யாகம் செய்வானே யானுல்(செய்த அவனை); ஆதி சோவுடை மாசி அவன் என = முதன்மையான சோமாசி

Koviloor Digital Library

என்னும் யாகத்தைச் செய்து முடித்த சோமாசிமாற நாயனுரே இவன் என்று; வேதம் யாவும் விளங்க விளம்பும் = ஞான நூல்களெல்லாம் விளக்கமாகக் கூறும். (எ.று) ஏ - அசை.

முடிபு - போதமாகிய தழலினுள் பேத பாவனையாகிய அவியை பெய்வனேல் (அவனை) சோமாசி என்று வேதம் யாவும் விளம்பும். வேதம் கர்மத்தையும் சொல்லும், ஞானத்தையும் சொல்லும். அவ்விரண்டுள் ஞானத்தைச் சொல்லும் வேதமே சிறந்தது என்க. அதனுல் வேதம் யாவும் என்பதற்கு ஞான நூல்களெல்லாம் என பொருள் கூறப்பட்டது. சோமாசிமாற நாயனுர் என்பவர் அறுபத்து மூவரில் சிறந்தவராவார். அவர் தாம் செய்த சோமசியாகத்தில் இறைவன் நீசர் கோலத்தில் வந்து அவிர்பாகம் கேட்டதால் வந்தவரை நீசர் எனக் கருதாமல் அவருக்கு அவிர் பாகம் கொண்டுத்தமையால் அவர் பேதபாவனை அற்றவர் ஆவர். பேத பாவனை அற்றவரை சோமாசி போன்றவர் என்று வேதம் கூறும் என்றார். ஞானிகள் பேத பாவனை அற்றவராய் இருக்க வேண்டும் என்பதை,

செய்த் தகு செயல் செய்யாத செயலெல்லாம சிவன்பால் வைத்த
மயக்கமி லறிஞன் றீமை மருவுறா னென்பர் தன்னை
வியக்குறு முலகை ஞான விமலனை வேறி லாமல்
அயிர்ப்பற வொன்றாய்க் கண்டோன் கண்டவனுக மன்றே
(சித்.சிகா.பாவா.தலம்.5)

தான் என்றும் சகம் என்றும் சிவம் என்றும் வேறுபடுத்திக் காணாமல் எல்லாம் காண்டலே பேதபாவனை அறுதலாகும். இதனை சிவமயம் என்பர். காண்பான் - காட்சி - காணப்படு பொருள் என்னும் திரிபுடி உணர்ச்சியும் பேத பாவனையாகும். அவ்வாறு கருதாமல் ஞேயமாகிய ஒன்றையே கருதி இருப்பதும் பேதபாவனை அற்றது என்பதாகும்.

966. **மறையில் உள்ள கரும மனவினை**
வறியர் கொள்ளுதல் போல மதியறும்
சிறியர் கொள்வர் தெளிதத் துவமசி
அறிஞர் கொள்வர் அணிகொளும் செல்வர் போல்

(இ.ள்) மறையில் உள்ள கருமம் = வேதத்தில் உள்ள அற்ப சுருதியால் கூறப்படும் யாகாதி கர்மங்களை; வறியர் மனவினை கொள்ளுதல் போல = வறுமையுடையோர் சங்கு மணியை வாங்கி அணிந்து கொள்ளுதல் போல; மதி அறும் சிறியர் கொள்வர் = அறிவு

Koviloor Digital Library

அற்ற சிறியவர்கள் கைக் கொண்டு செய்வார்கள்; அணிகொளும் செல்பவர் போல் = பொன்னுற் செய்த அணிகலன்களை வாங்கி அணிந்து கொள்ளும் செல்வந்தரைப் போல; மறையில் உள்ள தெளிதத்து வமசி அறிஞர் கொள்வர் = வேதத்திலுள்ள பிரபல சுருதியால் கூறப்படும் ஞானத்தை உண்டாக்குகின்ற, தெளிந்த தத்துவமசி மகாவாக்கியப் பொருளை ஞானமுடையோர் கொள்வர். (எ.று)

முடிபு - மனவினை வறியர் கொள்ளுதல் போல, மறையில் உள்ள கருமத்தை மதியறும் சிறியர் கொள்வர்; பொன்னணியைக் கொள்ளும் செல்வர் போல மறையிலுள்ள (ஞானத்தைக் கூறும்) தெளிதத்துவ மசியை அறிஞர் கொள்வர்.

இப்பாட்டின் கருத்தை பகவத் கீதை சாங்கிய யோக அத்தியா யத்தில் 42- 43- 44 என்னும் சுலோகங்களின் பொருளால் உணர்க. அப்பொள்களாவன வேத மொழியில் விருப்பமுடையவர் சுவர்க்கத்தை விளைவிக்கிற கருமத்திற்கு வேறாக ஒன்று மில்லை என்று கூறுவார்கள். அவர் காமம் நிறைந்தவர். சுவர்க்கமே முடிவான பேறு என்று கருதிக் கொண்டிருப்பவராவர். இத்தகைய அறிவில்லாதவர்களுடைய புஷ்பாலங்காரமான சொற்களைக் கேட்டு மக்கள் அறிவு கலங்கி போக ஐசுவர்யத்தில் பற்றுடையவராய் வெறுமே கர்மங்களையே செய் கொண்டிருப்பர் அவர்கள் ஞான நெறியைக் கருதுவதில்லை.

முனிவர் அல்லமனைத் தொழுது வணங்குதல்

967. என்று கூற இருந்தவர் அன்பொடு
நின்று ஞான நெடுந்தகை தாள்மிசை
இன்று நீவர எத்தவம் செய்தனம்
மன்ற யாமென வாழ்த்தி வணங்கினர் 21

(இ.ள்) என்று கூற = என்று அல்லமதேவன் முனிவர்களுக்கு இவ்வாறு எடுத்துக் கூற; இருந்தவர் அன்பொடு நின்று = பெரிய தவம் செய்பவர்கள் அல்லமதேவரிடத்தில் அன்போடு நின்று; யாம் இன்று நீவர எத்தவம் மன்ற செய்தனம் என = யாங்கள் இற்றைய நாள். நீ வருதற்கு எத்தகைய தவத்தை தேற்றமாகச் செய்தோம் என்று கூறி; வாழ்த்தி ஞான நெடுந்தகை தாள் மிசை வணங்கினார் = வாழ்த்துக் கூறி ஞானத்தை யுடைய பெரியயோனாகிய அல்லமதேவன் திருவடியினிடத்து வணக்கம் செய்தனர். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - அல்லமன் என்று கூற, (கேட்ட) இருந்தவர் அன்பொடு நின்று இன்று நீவர யான் எத்தவம் மன்ற செய்தனம் என வாழ்த்தி ஞான நெடுந்தகை தாள்மிசை வணங்கினுர்.

அவர்கள் இன்னுர் என்று அறிந்து கொள்ளுதல்

968. மாயை தோன்றிய ஞான்று [1]மனத்தினை
மூய மோகம் முடிந்திட செம்மலர்
வாயி னுல்துரு வாசன் சொலப்படும்
தூயன் ஆம்இவன் என்று துதித்தனர் 22

(பா.ம்) [1]மனத்தேழு.

(இ.ள்) மாயை தோன்றிய ஞான்று = மாயையானவள் நிலவுலகில் வந்து பிறந்த காலத்தில்; மனத்தினை மூய மோகம் = தவஞ்செய்வோருடைய மனத்தினை முடிய மோக உணர்ச்சியானது; முடிந்திட = நீங்குமாறு; துருவாசன் செம்மலர் வாயினுல் சொலப்படும் = துருவாச முனிவனுடைய மலர் போன்ற வாயல் கூறப்படும்; தூயனும் இவன் என்று = தூயவனுகும் இப்போது நமக்கு முன் எதிர்ப்பட்ட இவன் என்று கூறிக் கொண்டு; துதித்தனர் = முனிவர் வணங்கினர் (எ.று)

முடிபு - மாயை தோன்றிய ஞான்று மனத்தினை மூய மோகம் முடிந்திட துருவாசன் வாயினுல் சொல்லப்படும். தூயனும் இவன் என்று துதித்தனர். இவன் என்பது முன்னிலைச் சுட்டு. துருவாசர் உரைத்த செய்தியினை முன்னுள்ள மாயையினுற்பத்தி கதி 32ம் பாடல் முதலாக உள்ளதால் உணர்க.

969. இன்ன வாறிங் கிருந்தவர் இன்புற
மன்னும் ஞான மறைமொழி கூறியே
தன்னை மேவும் தலைமை புரிந்தனன்
அன்னை போலுநம் அல்லம தேவனே 23

(இ.ள்) அன்னை போலும் நம் அல்லம தேவன் = தாய் போன்ற நம்முடைய அல்லம தேவன் என்கின்ற ஞானுசிரியன்; இங்கு இரும்தவர் இன்புற = தபோவனத்தில் உள்ள பெரியதவம் செய்வோர் எல்லாம் இன்பம்அடையும்படி; இன்னவாறு-மேற்கூறியபடி; மறைமொழி கூறியே = வேதத்தில் கூறப்படும். தத்துவமசி என்னும் மகாவாக்கியப் பொருளை உபதேசித்து; தன்னை மேவும் தலைமை புரிந்தனன் = தத்பதப்பொருளாகிய சிவத்தை அடையும் தலைமை நிலையை அருளிச் செய்தனன். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - அன்னை போன்ற அல்லமதேவன்; தவர் இன்புற இன்னவாறு மறைமொழி கூறி, தன்னை மேவும் தலைமையை (அருள்)புரிந்தனன். இப்பாட்டில் தன்னை மேவும் தலைமை புரிந்தனன் என்னும் பாடல் பகுதியைக் கருதினுல் சோணசைல மாலையிலுள்ள;

நின்னையே நோக்கி விடாத கட்புலனும்
நின்னையே நினைக்கு நெஞ்சகமு
நின்னையே துதிக்கு நாவு மென்றருளி
நின்றிரு வடியின் வைத்த ருள்வாய்
தன்னையே றிணர்க்குச் சகமெலாங் காட்டும்
தரணி யோடிகலி மேவிணர்க்குத்
தன்னையே காட்டு மலையேனுஞ் சோண
சைலனே கைலை நாயகனே

(சோணசைல மாலை 93)

என்ற வடிவத்தில் இருக்கும் பாட்டு

தன்னையே நோக்கி விடாதகட் புலனும்
தன்னையே நினைக்கு நெஞ்சமும்
தன்னையே துதிக்கு நாவு மென்றருளித்
தன் றிருவடியில் வைத்தருள்வாய்
தன்னையே றிணர்க்குச் சகமெலாங் காட்டும்
தரணி யோடிகலி மேவிணர்க்குத்
தன்னையே காட்டும் மலையெனும் சோண
சைலனே கைலை நாயகனே

என்ற வடிவத்திலும் இப்பாட்டு இருக்கலாம் போலும்.

இருபதாவது
முனிவரர் கதி முற்றிற்று

Koviloor Digital Library

இருபத்து ஒன்றவது
சூனிய சிங்காதனத்தை இயற்றியகதி

கதிநுதலியது

வேறு

970. அல்லமனை அறிதற்கோர் அறிகருவி யாகவுனிச்
சொல்லரிய எழுநிலைப்பொன் சூனியசிங் காதன
மொன்(று)
இல்லையெனல் இல்லைஎனும் எங்கள்குரு வசவேசன்
மல்லலுற இனிதாற்றி வைகுமுறை வகுத்துரைப்பாம் 1

(இ.ள்) இல்லை எனல் இல்லை எனும் எங்கள்குரு வசவேசன் - கடவுள் முதலான மெய்ப் பொருள்களை இல்லை என்று கூறும் கொள்கையை இல்லை என மறுத்துரைக்கும் எங்கள் ஆசிரியனுகிய வசவேசன்; அல்லமனை அறிதற்கு ஓர் அறி கருவியாக உன்னி - அல்லமதேவருடைய பெருமையை உலகத்தோர் அறிந்து கொள்வதற்கு ஓர் கருவியாகக் கருதி; சொல்லரிய எழுநிலைப் பொன் சூனிய சிங்காதனம் ஒன்று = கூறுதற்கரிய ஏழுநிலைகளையுடைய பொன் முதலானவற்றைக் கொண்டு இயற்றிய; சூனியசிங்காதனம் ஒன்றனை; மல்லல் உற இனிது ஆற்றி - வளப்பம் பொருந்த நன்றாகச் செய்து; வைகுமுறை வகுத்து உரைப்பாம் - அல்லம தேவரது வருகையை எதிர் நோக்கிதாங்கியிருந்த முறைமையை இக்கதியால் இனிது கூறுவாம். (எ.று)

முடிபு - எங்கள் குருவசவேசன் அல்லமனை அறிதற்கு ஓர் அறி கருவியாக உன்னி, சூன்ய சிங்காதனம் ஒன்று இனிது ஆற்றி, வைகும் முறையை(யாம்) வகுத்து உரைப்பாம். இல்லை எனல் = உலகத்தார் உண்டு என்பதை இல்லை எனக் கூறுதல்; வசவ வசனத்தில்(29) நாத்திகம் விடும் வரை பக்தன் என்றல் எவ்வாறு என்று கூறுகின்றார். கடவுள் முதலான மெய்ப் பொருளை இல்லை என்று கூறுவது நாத்திகர் கொள்கையாகும். அக்கொள்கை வீரசைவ சமயத்தில் எள்ளளவுமில்லை என்பதை வற்புறுத்தக் கருதியே இல்லை எனல் இல்லை எனும் எங்கள் குரு வசவேசன் என்று கூறினர்.

Koviloor Digital Library

வசவராசன் மன அடக்கம் பயின்றது

971. ஒடுக்கு மனம் வீட்டுநெறிக்கு ஒருதுணையா கும்புறத்து
நடக்குமனம் [1]நிரையவழி நடப்பதற்குத் துணையா
மென்(று)
இடக்கர்மனம் அடக்கும்வகை எம்பிரான் இயம்பியவாறு
அடக்கமனம் உறுநெறியில் அருள்நந்தி தலைப்பட்டான்
2

(பா.ம்) [1]நிரயவழி

(இ.ள்) அருள்நந்தி = அருளையுடைய வசவராசன்; ஒடுக்குமனம் வீட்டு நெறிக்கு ஒருதுணையாகும் = அகத்தே நிற்கும்படி அடக்கப்படும் மனம் முத்தி நெறியை அடைவதற்கு ஒரு கருவியாக நின்று பயன்படும் என்றும்; புறத்து நடக்கு மனம் நிரையவழி நடப்பதற்குத் துணையாம் என்று = வெளியே உலகப் பொருள்களை நோக்கி அடங்காமல் செல்கின்ற மனம் நரகத்திற்குச் செல்லும் வழியை நோக்கி நடப்பதற்குத் துணை புரிவதாகுமென்றும்(கருதிக் கொண்டு); எம்பிரான் இடக்கர் மனம் அடக்கும் வகை இயம்பியவாறு - எம்முடைய அல்லம தேவன் முரட்டு மனத்தை அடக்கும் வகையினை சாதகாங்க கதியில் கூறியுள்ளபடி; மனம் அடக்கம் உறு நெறியில் தலைப்பட்டான் = மனம் அடக்கம் அடைவதற்கு ஏற்ற வழியை அறிந்து அதை அடைய முற்பட்டான். (எ.று)

முடிபு - அருள் நந்தி ஒடுக்கு மனம் வீட்டு நெறிக்கு ஒரு துணையாகும் என்று புறத்து நடக்கு மனம் நிரைய வழி நடப்பதற்குத் துணையாம் என்றும் அறிந்து கொண்டு எம்பிரான் மனம் அடக்கும் வகையை இயம்பியவாறு மனம் அடக்கமுறுநெறியில் தலைப்பட்டான்.

இதுவுமது

972. நில்லாது போம் மனத்தை கால்பிடித்து நிறுத்தியே
வில்லாரும் மதியமுதம் விருந்திட்டு நட்புறீஇப்
பொல்லாத புலன்நுகரப் புறத்தநிலை தடுமாறிச்
செல்லாமல் உடன்கொண்டு சித்திரம் ஒத்து இருந்தனனுல்
3

(இ.ள்) நில்லாது போம் மனத்தை = தன்னுடன் நில்லாது வெளிப் பொருள்களில் ஓடுகின்ற மனத்தை; கால் பிடித்து நிறுத்தியே = நாம் கூறிய படிநிற்காதவரை காலினைப் பிடித்து நிறுத்தும் முயற்சியினைப் போல;

Koviloor Digital Library

முச்சுக் காற்றினை அடக்கி அம்மனத்தை நிறுத்தி; வில்லாரும் மதி அமுதம் விருந்து இட்டு நட்புறீஇ = அம்மனத்திற்கு தலை உச்சியின் கண் இருக்கும் சந்திர மண்டலத்திலுள்ள ஒளி பொருந்திய மதியின் அமுதத்தை விருந்துணவாகக் கொடுத்து நட்புச் செய்து; பொல்லாத புலன் நுகரப் புறத்து நிலை தடுமாறிச் செல்லாமல் உடன் கொண்டு = தீங்கினைத் தருவதாகிய ஐம்புலப் பொருள்களைத் துய்ப்பதற்கு புறத்தே நிலை தடுமாறிச் செல்லாமல் தன்னேடே ஒன்றி இருக்கும்படி பயிற்சி செய்து (மனம் அடங்கிய படியால்); சித்திரம் ஒத்து இருந்தனன் = எழுதிய ஓவியம் போல் சலனமின்றி வசவராசன் இருந்தான். (எ.று)

முடிபு - வசவராசன் மனத்தைக் கால் பிடித்து நிறுத்தி மதிய முதவிருந்நிட்டு நட்புறீஇபுலன் நுகரப் புறத்து நிலை தடுமாறிச் செல்லாமல் உடன் கொண்டு சித்திரம் ஒத்து இருந்தனனன் (ஆல் அசை). முச்சுக்காற்றை இயங்காமல் கும்பகம் செய்த பொழுது மூலாதாரத் திலுள்ள அக்கினி மண்டலத்திலிருந்து தீமேல் நோக்கிச் செல்லும். அத்தீயால் சந்திர மண்டலத்திலுள்ள சந்திரன் உருகி அதனிடத்திலிருந்து அமுதம் ஒழுகும். அதை ஞானிகளருந்தி யோகதிதிலிருப்பார்கள். அச் செயலை இவ்வாறு கூறினார்.

973. **[1]நின்றமனம் கொண்டுதான் நித்தமாம் தனை உணர்த்த**
என்றுவரும் ஞானகுரு எனஎழுந்து வளர்காதல்
ஒன்றும்ஒழி வறநிற்ப உவப்பதுல கிற்பொருள்வே(று)
இன்றியருள் நந்திபிரான் எந்தை வர வினைநோக்கி 4

(பா.ம்) [1]நின்றுமனம்

(இ.ள்) அருள் நந்தி பிரான் = அருளையுடைய வசவதேவன்; நின்ற மனம் கொண்டு = புறத்தே புலன்களில் செல்லாமல் அகத்தே; தன்னுடன் நின்ற மனத்தைக் கருவியாகக் கொண்டு; நித்தமாம் தனை உணர்த்த = அழிவற்ற தத் பதப் பொருளாகிய சிவத்தினை உணரச் செய்வதற்கு; ஞானகுரு என்று வரும் என எழுந்து வளர்காதல் ஒன்றும் ஒழிவற நிற்ப = ஞானசிரியன் என்றைக்குவருமோ எனக் கருதி எழுந்து மேலும் மேலும் வளர்கின்ற விருப்பம் ஒன்றுமே நீக்கமற நிற்ப; உலகில் உவப்பது பொருள் வேறு இன்றி - இவ்வுலகத்திலே உவப்பை அடைவதற்கு வேறு எப்பொருளும் இல்லாமல்; எந்தை வரவினை நோக்கி - எந்தையாகிய அல்லம தேவனுடைய வருகையினையே எதிர் நோக்கிக் கொண்டு இருந்தான். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - அருள் நந்திபிரான் நின்றமனத்தைக் கொண்டு தன்னை உணர்த்த ஞானகுரு என்று வரும் என எழுந்து வளர் காதல் ஒன்றுமே ஒழிவற நிற்ப உலகில் உவப்பது பொருள் வேறின்றி எந்தை வரவினை நோக்கி (இருந்தான்) அல்லமன் வருகை ஒன்றினையே கருதி இருந்தான் என்பது கருத்து.

வசவதேவர் அல்லமனை அறியுமாறு சூனியசிங்காதனம் அமைத்தது

974. **எவ்வுருவி னொடுவருமோ எம்பிரான் தெளியகிலேன்**
செவ்வியவோர் தவிசமைத்து சேர்ந்ததன்மேல் இருப்பவனை
அவ்வியமில் அல்லமன் என்று அறிவன்யான் என்று துணிந்து
இவ்வுலகம் உளம்வியப்ப இதுசெய்தான் அருள்நந்தி

(இ.ள்) அருள் நந்தி = (எந்தை வரவினை நோக்கி இருந்த) வசவேசுவரர்; எம்பிரான் எவ் உருவினொடு வருமோ தெளியகிலேன் = எம்தலைவன் எந்த வடிவத்தைப் எடுத்துக் கொண்டு வருவானோ? அவ்வடிவத்தையான் தெளிவாக அறியவல்லமையுடையயேனல் லேன்; செவ்விய ஓர்தவிசு அமைத்து = அவன் அமர்தற்குத்தகுதியான ஒப்பற்ற பீடம் ஒன்றை இயற்றி; அதன்மேல் சேர்ந்து இருப்பவனை = அந்த பீடத்தின் மேல் சென்று எழுந்தருளி இருப்பவனை; அவ்வியமில் அல்லமன் என்று யான் அறிவன் என்று துணிந்து = வஞ்சகமில்லாத அல்லமன் என்று யான் அறிந்து கொள்வேன் என்று உறுதி செய்து கொண்டு இவ்வுலகம் உளம்வியப்ப இது செய்தான் = இவ்வுலக மக்களெல்லாம் உணர்ந்து மனம் வியக்குமாறு கீழேகுறிப்பிட்ட செயலினைச் செய்யத் தொடங்கினுன். (எ.று)

முடிபு - (எந்தை வரவினை நோக்கி இருந்த) அருள் நந்தி, எம்பிரான் எவ்வுருவினொடு வருமோ? தெரியகிலேன் தவிசு அமைத்து அதன் மேல் சேர்ந்து இருப்பவனை அல்லமன் என்று யான் அறிவன் என்று துணிந்து இவ்வுலகம் உளம் வியப்ப இது செய்தான்.

வேறு

975. **ஆதியா தாரம் ஆதி அடுக்கெனப் பன்னி றத்த**
சோதியேழ் நிலைகள் ஓங்க சூனிய பீடம் ஒன்று

Koviloor Digital Library

போதிஞேன் உளம்வி யப்பப் பொன்மணி பளிங்கு
கொண்டு
சாதிநான் மறைகள் போற்றும் சைவநா யகன்செய்வித்தான்
6

(இ.ள்) சாதி நான் மறைகள் போற்றும் சைவ நாயகன் = உயர்வான நான்கு வேதங்களால் போற்றப்படும் சைவசமயத்தின் தலைவஞகிய வசவராசன்; ஆதி ஆதாரம் ஆதி அடுக்கென = மூலாதாரம் முதலானவற்றின் அடுக்குகளைப்போல; பல் நிறத்த சோதி ஏழ்நிலைகள் ஓங்க = பலவகை நிறங்களையுடை ஒளியோடு கூடிய ஏழ் அடுக்குகள் உயர்ந்து நிற்க; சூனியபீடம் ஒன்று = சூனியத்தை இறுதியில் பெற்றிருக்கும் ஆசனம் ஒன்றினை; போதிஞேன் உளம்வியப்ப = உடம்பின் கண் ஆதாரங்களை எல்லாம் படைத்த, பிரமதேவனும் இதைப் பார்த்து வியக்கும் படி; பொன்மணி பளிங்கு கொண்டு = பொன்ஞகிய உலோகமும் மாணிக்கம் மரகதம் நீலம் என்னும்மணிகளும் பளிங்குக்கல்லும் ஆகிய இவற்றைக் கருவியாகக் கொண்டு; செய்வித்தான் = சிற்பிகளைக் கொண்டு செய்வித்தான்.(எ.று)

முடிபு - சைவநாயகன் ஆதியாதாரம் ஆதி அடுக்கென ஏழ் நிலைகள் ஓங்க சூனியபீடம் ஒன்றினை பொன்னும் மணியும் பளிங்கும் கொண்டு போதினோன் உளம் வியக்கும் படி செய்வித்தான்.

செய்த ஆசனம் சூனியத்தை இறுதியாகக் கொண்ட ஏழ்நிலைத் தவிசு என்க. ஏழ்நிலைகளாவன மூலாதாரம், ஸ்வாதிட்டானம், மணிபூரகம் அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களும் அதற்கு மேலுள்ள நிராதாரம் ஒன்றும் ஆகிய இவைகளாம். இவற்றுள் மூலாதாரம் மாணிக்க நிறமும் சுவாதிட்டானம் செம்பொன் நிறமும் மணிபூரகம் மரகத நிறமும் அநாகதம் படிக நிறமும் விசுத்தி மேக நிறமும் ஆக்ஞை படிக நிறமும் உடையன ஆதலின் பொன் மணிபளிங்கு கொண்டு இவ்வாசனம் செய்யப் பட்டதென்க.

976. காரண உபாதி ஏழ்மேல் கண்டிடும் ஞானி போலச்
சீரணி நுதலின் மீது சென்றுகாண் யோகி போலப்
பூரண ஞாஞ நந்தப் போதகன் இருப்புக் காண்பான்
ஏரணி நிலைகள் ஏழ்மேல் நிகழ்வெளித் தவிசு அமைத்தான்
7

Koviloor Digital Library

(இ.ள்) காரண உபாதி ஏழ்மேல் கண்டிடும் ஞானிபோல - தத்துவமசி என்னும் மகாவாக்கியப் பொருளை ஆராய்ச்சி செய்யும் ஞானிகள் பரத்தைக் குறிக்கும் தத்பதப் பொருளை ஆராயும் போது அப்பரத்துக்குள்ள சர்வக்ஞன், சர்வகாரணன், சர்வேந்திரியாமி, சர்வேஸ்வரன், சர்வசிருஷ்டி, சர்வதிதி, சர்வசங்காரன் என்னும் காரண உபாதிகள் ஏழினையும் நீக்கி எட்டாவது நிலையில் அப்பரதுரியத்தை உணர்வது போலவும்; சீர்அணி நுதலின் மீது சென்று காண்யோகிபோல = சிவயோக சாமாதி செய்யும் யோகிகள் மூலாதாரம் முதலான ஆறு நிராதாரம் ஒன்று ஆக ஏழு ஆதாரங்களையும் கடந்து எட்டாவது நிலையில் சீர்த்தியும் அழகும் வாய்ந்த நெற்றிக்கு மேலே உள்ள குற்றமற்ற சந்திர மண்டத்திலுள்ள சந்திரனில் காணப்படும் நுட்பமாகிய பிரமப்புழையைக் கலையாகப் பாவித்து அங்கே நிஷ்கள சிவத்தை அறிதல் போலவும்; பூரண ஞானநந்தப் போதகன் இருப்புக் காண்பான் = பூரண ஞானனந்தப் போதகனுகிய அல்லமதேவன் வந்து இருத்தலைக் காணவேண்டி; ஏர் அணி நிலைகள் ஏழ்மேல் நிகழ்வெளித்தவிசு அமைத்தான் = எழுச்சியும் அழகும் வாய்ந்த ஏழுநிலைகளுக்கு மேலே எட்டாவது நிலையாக விளங்கும் சூனிய சிங்காதனத்தை வசவதேவன் இயற்றுவித்தான். (எ.று)

முடிவு - காரண உபாதி ஏழ் மேல்கண்டிடு ஞானி போலவும் நுதலின் மீது சென்றுகாண் யோகி போலவும் (வசவனுகியதான்) போதகன் இருப்புக்காண வேண்டி நிலைகள் ஏழ்மேல் வெளித்தவிசை அமைத்தான். வெளித்தவிசு = சூனியசிங்காதனம். பூரண ஞானனந்தப் போதகன் என்பதற்கு நிறைவும் அறிவும் இன்பமும் அமைந்த போதகாசிரியனுகிய அல்லம தேவன் என்க. ஞானிகள் மகாவாக்கியப் பொருளை ஆராயும் பொழுது சீவபதமாகிய துவம் பதத்திற்கு உடம்பு = பொறி உணர்வு நாற் கரணம். பிராணவாயு என்னும் ஏழு உபாதிகளை நீக்கியே சீவதுரியத்தைக் காண்பார். இந்த ஏழையும் காரிய உபாதி என்பர். எனவே காரண உபாதிகள் ஏழையும் கடந்து காண்பது பரதுரியம் காரிய உபாதிகள் ஏழையும் கடந்து காண்பது சீவதுரியம் என்க. இந்தக் கருத்தை,

செற்றிடும் சீவ உபாதி திறன் ஏழும்
பற்றும் பரோபாதி ஏழும் பகர்வுரை
உற்றிடும் காரிய காரணத்தோடற
அற்றிட அச்சிவ மாகும் அணுவனே (திருமந் 2501)

Koviloor Digital Library

உபாதி என்னும் பலபொருள் ஒருசொல், இங்கு உடம்பு என்னும் ஒரு பொருளில் வந்துள்ளது. பரனுக்கு உடம்பாயிருப்பது பரோபாதி யாகிய காரண உபாதி; சீவனுக்கு உடம்பாயிருப்பது சீவோகபாதியாகிய காரிய உபாதி. இங்கு காரிய உபாதிகள் ஏழை சொல்லாவிட்டாலும், அல்லம தேவன் சூனியசிங்காதனத்தில் இருந்து நிலையைச் சொல்லும் போது, ''உடம்பொடு பொறிநாற் காரண மற்றுயிரென்று ரைத்திடப்படும் உபாதிகளைக் கடந்துள நிலையில் சோதியாய் இலங்கக் கண்டிடுதுரி யனைப் போல'' என்று கூறியுள்ளார். (சூனி. இரு. கதி. 58)

இப்பாட்டில் உயிர் என்றது பிராணவாயுவை (மூச்சுக் காற்றை). இங்கு துரியன் என்பது சீவ துரியத்தை.

977. **களங்கமில் மதியம் போலக் கண்டவர் மனம் மலர்த்தும்**
பளிங்குசெய் நிலையுள் வந்த பார்ப்பவர் மெய்ந்
நிழற்போய்
[1]விளங்குதல் அதன்மேல் தோன்ற வெந்தெரி பசும்பொ
ஞற்செய்
துளங்கொளி நிலையைச் சென்னி சுமத்தல் போல்
செய்தல் ஒக்கும் 8

(பா.ம்) [1]விளங்குதறன் மேற்றோன்ற.

(இ.ள்) களங்கம் இல் மதியம் போல = குற்றமில்லாத சந்திர மண்டலத்தைப் போலவிளங்கி; கண்டவர் மனம் மலர்த்தும் பளிங்கு செய்நிலை = பார்ப்பவர்களுடைய மனங்களை எல்லாம் உவகையுறச் செய்யும் பளிங்குக்கல்லினுலே செய்த ஏழ்நிலை ஆசனம்; அப்பளிங்கு நிலையுள் வந்து பார்ப்பவர் மெய்ந்நிழல் போய் அதன்மேல் தோன்ற விளங்குதல் = அப்பளிங்கு நிலையில் உள்ளே வந்து பார்ப்பவர் களுடைய உடம்பின் நிழல் போய் அந்நிலையின் உட்பகுதியின் அமைப்பில் காணும் படிவிளங்குதல்; வெந்து எரி பசும் பொனுல் செய்துளங்கு ஒளி நிலையை சென்னி சுமத்தல் போல் செய்தல் ஒக்கும் - நெருப்பால் சுடப்பட்ட நல்ல பொன்னுல் செய்யப்பட்டு ஒளி அசையும் படி செய்யப்பட்ட அந்த ஏழ்நிலைச்சிங்காதனத்தை சுமத்தல் செய்தலை போல் விளங்கும். (எ.று)

முடிபு - மதியம் போல கண்டவர் மனம் மலர்த்தும் பளிங்கு செய்நிலை; அந்நிலையுள் வந்து பார்ப்பவர் மெய்ந் நிழல் போய் அதன்

Koviloor Digital Library

மேல் தோன்ற விளங்குதல்; அந்த ஒளி நிலையை சென்னியால் சுமத்தல் செய்தல் போல் ஒக்கும்.

978. திருந்திய பளிங்கு கொண்டு செய்தஅந் நிலையின் வாய்தல்
பொருந்துதல் தெரிகி லாராய்ப் புகுந்துகாண் மனிதர் எல்லாம்
கரங்கொடு தடவிக் கண்டு [1]கண்தெரி யார்கள் போல
வருந்திய மனம்ம கிழ்ந்து வசவனை வியப்பார் அன்றே 9

(பா.ம்) [1]கண்டறியார்கள் போல

(இ.ள்) திருந்திய பளிங்கு கொண்டு செய்த அந்நிலையில் = குற்ற மில்லாத பளிங்கு கற்களைக் கருவியாகக் கொண்டு செய்யப்பெற்ற எழுநிலைச் சிங்காதனத்தில்; புகுந்துகாண் மனிதர் எல்லாம் = உட்புகுந்து பார்க்கும் மக்கள் எல்லாம்; வாய்தல் பொருந்துதல் தெரிகிலாராய் = வாயிற்படி இருக்கும் இடத்தைத் தெரியாதவராய்; கண்தெரியார்கள் போல கரங்கொடு தடவிக் கண்டு = கண்தெரியாத குருடரைப் போல தம் கையைக் கொண்டு தடவி வாயிற்படி யினைக் கண்டு; வருந்திய மனம் மகிழ்ந்து = (வாயிற்படி தெரியா மல்) முன்வருந்திய மனம் இப்போது மகிழ்ச்சியடைந்து; வசவனை வியப்பர் - இந்த வகையில் சூனிய சங்காதனம் அமைத்த வசவ தேவரை மக்கள் வியப்படைவார்கள். (எ.று)

முடிபு - பளிங்கு கொண்டு செய்த அந்நிலையில் (உள்) புகுந்து காண்மனிதர் எல்லாம் வாய்தல் பொருந்துதல் தெரிகிலாராய், கண் தெரியார்கள் போல கரங்கொடு தடவிக் கண்டு, வருந்திய மனம் மகிழ்ந்து வசவனை வியப்பர்.

979. நினைவினுல் ஒருவன் செய்த நெஞ்சுள் ஆலயமே அன்றி
வினையினுல் உலகர் செய்து விளங்கிய பணிகள் தம்முள்
இனையதோடு உவமை ஆதல் இல்லையென் றும்பர் எல்லாம்
தனையலா நிகரி லாத தவிசினை வியந்து நின்றார் 10

(இ.ள்) ஒருவன் நினைவினுல் செய்த நெஞ்சுள் ஆலயமே அன்றி - பூசலான் என்ற பெயர் கொண்ட ஒருவன் தன்னுடைய மன உணர்வால் இயற்றிய மனத்திடத்தே உள்ளே திருக்கோயிலே அன்றி, உலகர்

Koviloor Digital Library

வினையினுல் செய்து விளங்கிய பணிகள் தன்முள் - உலகமக்கள் தன் உடம்பின் தொழிலால் செய்து விளங்கிய திருக்கோவில் திருப்பணிகள் தம்முள்; இனையதோடு உவமை ஆதல் இல்லை என்று - இச்சூனிய சிங்காதனத் திருப்பணியோடு உவமை ஆதல் ஒன்றுமில்லை என்று கூறி; உம்பர் எல்லாம் தனையலா நிகரிலாத தவிசினை வியந்து நின்றார் - தேவரெல்லாம் தனக்குத் தானே நிகரன்றிவேறு உவமை இல்லாத அச்சூனிய சிங்காதனத்தை கண்டு வியப்படைந்து நின்றனர். (எ.று)

முடிபு - ஒருவன் நினைவினுல் செய்த நெஞ்கள் ஆலயம் அன்றி உலகர் வினையினுல் செய்து விளங்கிய பணிகள் தம்முள் இனைய தோடு உவமையாதல் இல்லை என்று உம்பரெல்லாம் தவிசினை வியந்து நின்றார்

980. **அம்பரா சனம்இ யன்ற அதிசயம் கேளா முக்கண்**
தம்பிரான் அடிய ராகத் தரையுளார் எல்லாம் சென்று
செம்பொனுல் இயன்ற அந்தச் சீர்கெழு பீடம் நோக்கி
எம்பிரான் வசவ தேவன் இணையடி தொழுதி ருந்தார் 11

(இ.ள்) முக்கண் தம்பிரான் அடியர் ஆக தரையுளார் எல்லாம் = மூன்று கண்ணையுடைய தலைவனுகிய சிவபெருமான் தொண்டராக உலகத்திலே உள்ள எல்லோரும்; அம்பராசனம் இயன்ற அதிசயம் கேளா = சூனிய சிங்காதனம் செய்யப்பட்ட அதிசயச் செயலைக் கேள்வியுற்று; சென்று = அவ்விடத்தே சென்று; செம்பொனுல் இயன்ற அந்தச் சீர்கெழு பீடம் நோக்கி = சிவந்த பொன்னுல் செய்யப்பட்ட அந்த சிறப்பு பொருந்திய பீடத்தைப் பார்த்து; எம்பிரான் வசவ தேவன் இணையடி தொழுது இருந்தார் = எமக்குத் தலைவனுகிய வசவேசருடைய இரண்டு திருவடிகளையும் வணங்கி அங்குதங்கி இருந்தனர். (எ.று)

முடிபு - தம்பிரான் அடியராகத் தரையுளார் எல்லாம் அம்பராசனம் இயன்ற அதிசயம் கேளா, சென்று, நோக்கி வசவதேவன் இணையடி தொழுது இருந்தார். அம்பராசனம் என்றது சூனிய சிங்காதனத்தை அம்பராசனம் = வெளித்தவிசு, சூன்யசிங்காதனம் என்பதெல்லாம் ஓர் பொருள் சொற்கள்.

981. **கரையிது கல்விக் கென்னக் கற்றவர் பலரும் ஏத்தத்**
தரைமிசை [1]அமைத்தி ருந்த [2]சாரதா பீட மேபோல்
உரைமனம் இறந்த தாமிவ் ஒருதனி ஞான பீடம்
அருள்தரு குருகு கேசன் அன்றியே றிடுதற் காமோ 12

Koviloor Digital Library

(பா.ம்) [1]அமைந்திருந்த; அமர்ந்திருந்த; [2]சார்தருபீடம்

(இ.ள்) கற்றவர் பலரும் கல்விக்குக் கரைஇது என்ன ஏத்த = கற்றோர் பலரும் இச்சூன்ய சிங்காதனம் கல்விக்கு வரம்பாகும் என்று சொல்லிப் புகழ்ந்து கூறுமாறு; தரைமிசை அமைத்து இருந்த சாரதா பீடமே போல் = உலகத்தின்கண் பேரறிஞரால் அமைக்கப்பட்டிருந்த சாராத பீடத்தைப் போல விளங்கும்; உரை மனம் இறந்ததாம் இவ் ஒருதனி ஞானபீடம் = சொல்லும், மனமும் கடந்ததாகிய இந்த ஒப்பற்ற சூனியசிங்காதனமாகிய ஞானபீடத்தை; அருள்தரு குரு குகேசன் அன்றி ஏறிடுதற்கு ஆமோ - அருளைச் செய்கின்ற குருவாகிய எல்லோருடைய மனத்திலும் வீற்றிருக்கும் இறையாகிய குகேசன் அன்றி வேறு எவரும் ஏறி அமர்தற்கு அமையுமோ?

முடிவு - கற்றவர் பலரும் இது கல்விக்கு கரை என்ன ஏத்த; தரைமிசை அமைத்திருந்த சாரதா பீடமே போல், உரையும் மனமும் இறந்ததாம். இவ் ஒருதனி ஞான பீடத்தை குகேசன் அன்றி(வேறு எவரும்) ஏறிடுதற்கு ஆமோ (ஆகாது) (ஓகாரம் எதிர் மறை) இப்பாட்டில் சாரதா பீடம் குறிக்குப் படுகின்றது. இது இப்போது சிருங்கேரியில் இருப்பதாக அறிஞர் கூறுகின்றனர். **இஞ்ஞான பீடமாகிய சூனிய சிங்காதன பீடம் சித்திரகல் துருகத்தில் உள்ளது.** இது அல்லம தேவரைத் தலைமையாகக் கொண்டது.

பவவேசர் வெளியில் கூறாமல் மனதில் கருதிக் கொண்டிருந்தது

982. இப்பெரும் பீடம்ஏறி இருந்திட வல்லோன் என்றும்
வைப்பெறும் படிமறைந்தெம் [1]மனத்திருப் பதற்கும்வல்ல
அப்பெரும் கருணைக் குன்றம் ஆகுஅல் லமனே என்று
செப்புறு பரிசி லாஞய்ச் சிந்தைசெய் திருந்தான் நந்தி 13

(பா.ம்) [1]மனத்திருப்பதற்கு

(இ.ள்) இப்பெரும் பீடம் ஏறி இருந்திடவல்லோன் = இந்த பெரிய சூனிய சிங்காதன மாகிய பீடத்தின் மேல் ஏறி அமர்ந்திட வல்லவனே; என்றும் வைப்பு எனும் படி = எப்பொழுதும் புதைத்து வைத்து இருக்கும் புதையல் என்னும்படி; மறைந்து எம் மனத்து இருப்பதற்கும் வல்ல அப்பெரும் கருணைக் குன்றம் ஆகும் அல்லமனே என்று = பிறருக்குத் தெரியாமல் மறைந்து எம்மனத்தில் இருப்பதற்கும் வல்லமை படைத்த அப்பெரிய அருள் மலையாகும் அல்லமனே என்று கருதிக் கொண்டு;

Koviloor Digital Library

நந்தி செப்புறு பரிசிலானுய்ச் சிந்தைசெய்திருந்தான் = வசவேசுரர் வெளியில் சொல்லாதவனுய் தன் மனத்தில் கருதிக் கொண்டிருந்தான். (எ.று)

முடிபு - நந்தி இப்பீடம் ஏறி இருந்திட வல்லோன் என்றும் எம்மனத்திருப்பதற்கும் வல்ல அல்லமனே என்று செப்புறு பரிசிலானாய் சிந்தை செய்திருந்தான்.

983. **கரைபொரு கங்கை ஆற்றில் கண்ணிவைத்(து) அரச அன்னம்**
வருதலை நோக்கி நிற்கும் [1]வாறுபோல் இருள்வி ழுங்கிப்
பெருகொளி விரிக்கும் ஞான பீடமொன் றமைய ஆக்கி
குருபரன் வரவு நோக்கிக் கொண்டிருந் தனனெங்கோமான் 14

(பா.ம்) [1]நிற்கு மாறு போல்

(இ.ள்) எம்கோமான் = எம்தலைவனுகிய வசவதேவன்; கரை பொரு கங்கை ஆற்றில் கண்ணிவைத்து அரச அன்னம்வருதலை நோக்கி நிற்கும் வாறு போல் = கரைகளைத்தாக்கும் இயல்புடைய கங்கை ஆற்றிலே ஒருவன் வலையை வைத்து தலைமையான அன்னப் பறவை வந்து அகப்படுதலை பார்த்துக் கொண்டே நிற்கும் வகையைப் போல; இருள் விழுங்கி பெரு கொளி விரிக்கும் ஞான பீடம் ஒன்று அமைய ஆக்கி = இருட்டைப் போக்கி மிக்க ஒளியை உண்டாக்கும் ஞானபீடம் ஒன்றினைப் பொருந்தச் செய்து அதன்மேல் வந்து அமரும்; குருபரன் வரவு நோக்கிக் கொண்டிருந்தனன் = மேலான ஆசிரியனுடைய வருகையையே கருதிக் கொண்டிருந்தான். (எ.று)

முடிபு - எங்கோமான் கங்கையாற்றில் கண்ணி வைத்து அரச அன்னம் வருதலை நோக்கி நிற்கும்வாறு போல் ஞானபீடம் ஒன்று அமைய ஆக்கி குருபரன் வரவு நோக்கிக் கொண்டு இருந்தனன் வாறு = விதம் என்பது பொருள். வகை எனவுப் பொருள்படும்.

984. **ஏட்டினைப் புதுநீர் ஆற்றில் எதிர்கிழித்து ஏற விட்டோன்**
பாட்டுடைத் தலைவன் அன்பர் பலரும்நம் வசவன்தன்னை
நாட்டமுற்று அடையும் ஆசான் நமக்கும் ஆம் என்றிருந்தார்
வீட்டினுக்கு ஏற்றும் சோதி விருந்திற்கும் உதவுறாதோ 15

(இ.ள்) ஏட்டினை புது நீர் ஆற்றில் எதிர் கிழித்து ஏறவிட்டோன் = திருப்பதிகம் எழுதிய ஏட்டினை புதுவெள்ளம் வரும் வைகையாற்றிலே;

Koviloor Digital Library

நீரோட்டத்திற்கு எதிராக நீரைக்கிழித்துக் கொண்டு ஏறும்படி செய்த திருஞான சம்பந்தப் பெருமான்; பாட்டுடைத் தலைவன் அன்பர் பலரும் = அத்திரு ஞானசம்பந்தனுடைய பாட்டிற்குப் பாட்டுடைத் தலைவனுய் விளங்கும் சிவபெருமானுடைய அடியவர் பலரும்; வசவன் தன்னை நாட்ட முற்று அடையும் ஆசான் நமக்கும் ஆம் என்று இருந்தார் = வசவதேவனைக் கருதி வருகின்ற அல்லமதேவனுகிய ஞானசிரியன் நமக்கும் அருள் புரிவான் என்று கருதிக் கொண்டிருந்தனர். எதுபோல் எனில்?; வீட்டினுக்கு ஏற்றும் சோதி விருந்திற்கும் உதவுறாதோ = ஒருவர் தம் வீட்டிற்கு ஏற்றுகின்ற விளக்கு அவ்வீட்டிற்கே அன்றி விருந்தாய் வந்தவர்க்கும் ஒளிசெய்து உதவி செய்யாமலிருக்குமோ? உதவும் என்றபடி. (அதுபோல் என்க) (எ.று)

முடிபு - அன்பர் பலரும் வசவன் தன்னை நாட்டமுற்று அடையும் ஆசான். நமக்கும் ஆம் என்று இருந்தார். எதுபோலெனில் வீட்டிற்கு ஏற்றும் சோதி அவ்வீட்டிற்கு வந்துள்ள விருந்திற்கும் உதவுறாதோ? அன்பர் ஏத்தகையோர் எனில் ஏட்டினை புது நீர் ஆற்றிலே ஏறவிட்டோனது பாட்டு அப்பாட்டுடைத் தலைவன் அத்தலைவனுக்கு அன்பர்.

இருபத்து ஒன்றவது
சூனிய சிங்காதனத்தை இயற்றியகதி முற்றிற்று

Koviloor Digital Library

இருபத்திரண்டாவது
சூனிய சிங்காதன ஆரோகண கதி

கதி நுதலியது
வேறு

985. பள்ளம்புகு புனல்போல்நெறி படரும்சிவன் அடியார்
உள்ளம் புகும் அருள்நந்திஇவ் வுலகோர் அறியாமல்
கள்ளம் கொளும் மனமோடு செய் அணைமேலொரு கருணை
வெள்ளம் கடி தேறுஞ்செயல் விருபாலெடுத் துரைப்பாம் 1

(இ.ள்) பள்ளம்புகும் புனல்போல் = பள்ளம் உள்ள இடத்தை நோக்கி விரைந்து செல்லும் நீரைப் போல்; நெறிபடரும் சிவன் அடியார் = நன்னெறி உள்ள இடத்தை நோக்கிச் செல்லுகின்ற சிவத்தொண்டர் களது; உள்ளம்புகும் அருள்நந்தி = உள்ளத்தின் உள்ளே புகுந்திருக்கும் அருள் தங்கிய வசவதேவர்; இவ்வுலகோர் அறியாமல் கள்ளம் கொளும் மனமோடு செய் அணைமேல் = ''செப்புறு பரிசிலானாய் சிந்தை செய் திருந்தான் நந்தி'' (பிர.21 கதி. 13) என்றபடி. இவ்வுலகோருக்கு வெளிப்படக்கூறாமல் தன் கருத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் மனத்தோடு செய்யப்பட்ட இச்சூனிய சிங்காதனத்தின்மேல்; ஒரு கருணைவெள்ளம் கடிது ஏறும் செயல் விருப்பால் எடுத்து உரைப்பாம் = ஒப்பற்ற அருள்வெள்ளம் போன்ற அல்லமதேவன் விரைந்து ஏறி அமர்ந்தருளும் செயலையாம் விழைவுடன் எடுத்துச் சொல்வாம் (எ.று)

முடிபு- சிவனடியார் உள்ளம் புகும் அருள்நந்தி, இவ்வுலகோர் அறியாமல், கள்ளம் கொளும் மனமோடு செய் அணை மேலே, கருணைவெள்ளம் ஏறும் செயலை யாம் விருப்பால் எடுத்துக் கூறுவாம். ஏறுதலை வடமொழியாளர் ஆரோகணம் என்பர். சூனியசிங்காதனத்தில் ஆரோகணமான செயலை கூறுவாம் என்பது ஆயிற்று. இக்கவிக் கூற்றைக் கருதியே இக்கதிக்கு சூனியசிங்காதன ஆரோகண கதி எனப் பெயர் வைக்கப்பட்டது. கொடியேற்றத்தை ஆரோகணம் என்பர்.

Koviloor Digital Library

986. சிரல்நாடுறு கயலாடல்செய் செய்ந்நாடுடை உழவர்
அரன்நாடுறும் ஒருகாவிரி அறல்நாடுறு முறைபோல்
[1]பரன் நாடுறும் அடியார்வினை பரியத்திரி குரவன்
வரன்நாடுறும் உருகும்பர வச அன்புறு வசவன் 2

(பா.ம்) [1]பர நாடுறு.

(இ.ள்) உருகும் பரவச அன்புறு வசவன் = மனம் நெகிழத்தக்க தன்வசம் இழந்த அன்பைப் பெற்றிருக்கும் வசவேஸ்வரன்; சிரல் நாடுறு கயல் ஆடல்செய் செய்ந்நாடுடை உழவர் = சிச்சிலிப்பறவை விரும்பத் தக்க கயல்மீன்கள் துள்ளும் வயல்களையுடைய சோழ நாட்டு உழவர் கள்; அரன் நாடுறும் ஒரு காவிரி அறல் நாடுறும் முனைபோல் = சிவபெருமான் விரும்புகின்ற ஒப்பற்ற காவிரியாற்றில் தண்ணீர் வருதலை விரும்புதல்போல; பரன் நாடுறும் அடியார் = சிவபெரு மானையே விரும்புகின்ற அடியார்; வினைபரியத் திரிகுரவன் = அவர்களுடைய வினையாகிய பாசமெல்லாம் அறும்படி உபதேசம் செய்து திரிகின்ற அல்லமதேவன்; வரல் நாடுறும் = வருதலை நாடி நிற்கும் (எ.று)

முடிபு- வசவன், செய்நா டாடுடை உழவர், காவிரியில் அறல் (வருதலை) நாடுதல் போல, குரவன் (சிங்காதனத்தில்) ஆன் வரல் நாடுறும். சோழ நாட்டு உழவர் காவிரியில் நீர் வருதலை விரும்புதலைப் போல வசவதேவர் (சூனிய சிங்காதனத்தில்) அல்லமன் அமரவருதலை நாடும். இது உவமையணி; செய்நாடு என்பது சோழ நாட்டுக்குப் பெயர். அறல் என்னும் பல பொருள் ஒரு சொல், இங்கே நீரை உணர்த்திற்று. வரல் + நாடுறும் என்பது வரனாடுறும் எனப் புணர்ந்தது.

அல்லமன் வரவு தாழ்ப்ப வசவதேவன் மனம் வருந்துதல்

987. பொன்னால்அமைகதிர் வீச
ணைபுரிந் தீர்அறு பருவம்
பின்னாயின யான் செய்தொழில்
பிள்ளைத் தொழில் ஆயிற்(று)
என் நாள்வரும் எனையாளுடை
எம்மான் அறியே னென்(று)
உன்னாவரு துயரோடுஉளம்
உளைந்தான்வினை களைந்தான் 3

Koviloor Digital Library

(இ.ள்) வினைகளைந்தான் = கர்ம மலத்தைக் களைந்தவனாகிய வசவதேவன்; பொன்னால் அமைகதிர்வீசு அணைபுரிந்து ஈர்அறு பருவம் பின் ஆயின = பொன் முதலானவற்றாலமைந்த ஒளிவீசும் சூனிய சிங்காதனத்தை இயற்றி பன்னிரண்டு திங்களுக்கு மேல் ஆகிவிட்டன. (அல்லமன் இதுவரை வாராமையால்); யான் செய்தொழில் பிள்ளைத் தொழில் ஆயிற்று = சிவபக்தரும் தண்ட நாயகனும் ஆகியயான், செய்த இச்செயல் சிறுபிள்ளை செய்யும் தொழில் போலாயிற்று; எனை ஆளுடை எம்மான் என்னாள் வரும் அறியேன் என்று = என்னை ஆட் கொண்ட அல்லமதேவன், எந்த காலத்தில் வருவான் என்பதை யான் அறியேன் என்று; உன்னாவரு துயரோடு உளம் உளைந்தான் = நினைத்து அதனாலே ஏற்பட்ட துன்பத்தோடு உள்ளம் நைந்திருந்தான் (எ.று)

முடிபு- வினை களைந்தவன், அணைபுரிந்து ஈர்அறு பருவம் பின்னாயின, யான் செய்தொழில் பிள்ளைத் தொழிலாயிற்று. எனை யாளுடைய எம்மான் எந்நாள்வரும் அறியேன் என்று, உன்னாவரு துயரோடு உளம் உளைந்தான். சிறுபிள்ளை இட்ட வெள்ளாமை வீடு வந்து சேராது என்ற பழமொழிப் படி யான் செய்தொழில் பிள்ளைத் தொழிலாயிற்று என்றார்.

வசவதேவன் மனத்தில் அல்லமதேவன் நிமித்தம் வரும் தோன்றியது

988. **இவ்வாறமர் நாளோர்பகல் எமையாளுடை வசவன்**
செவ்வாறுசெல் மனத்தல்லம தேவன் வரல் தோன்றிற்று
அவ்வாறது நிகழ்வுற்றவன் ஆர்வந்தனை ஒருநான்
எவ்வாறுரை செய்வன்பணி இறையுஞ்சொல அரிதால் 4

(இ.ள்) இவ்வாறு அமர்நாள் ஓர்பகல் = இவ்வாறு இருக்கும் காலத்தில் ஒருநாள்; எமை ஆளுடை வசவன் செவ் ஆறு செல்மனத்து = எங்களை ஆட்கொண்டருளும் வசவதேவனுடைய நல்வழியில் செல்லும் மனத்தின்கண்; அல்லமதேவன் வரல் தோன்றிற்று = அல்லமதேவன் வருதற்குக் காரணமான முன்நிமித்தம் தோன்றிற்று; அவ்வாறு அது நிகழ்வுற்றவன் ஆர்வம்தனை = அவ்வகை அந்நிமித்தம் நிகழப் பெற்றவனுக்கு, உண்டாகிய உவகையை ஒரு நாள் எவ்வாறு உரை செய்வன் = சிறியேனாகிய நான், எவ்வகையாற் கூறுவேன்; பணி இறையும் சொல அரிதால் - ஆதிசேடனும் சொல்லுதற்கு அவ்ஆர்வம் அரிது. (எ.று) (ஆல்- அசை).

Koviloor Digital Library

முடிபு- இவ்வாறு அமர் நாள் ஓர் பகல், வசவன் மனத்து அல்லமதேவன் வரல் தோன்றிற்று. அது நிகழ்வுற்றவன் ஆர்வந்தனை பணி இறையும் சொல அரிது. ஒரு நான் எவ்வாறு உரை செய்வன்.

வசவன் தனக்கு ஏற்பட்ட நன்நிமித்தத்தை சென்ன வசவற்குக் கூறத் தொடங்கியது

989. வலம் ஆடின விழிதோள் அருள் வசவற்கதி தூரம்
செலும் ஆடவன் வருநாள் விழி இடமாடிய செயல்வாய்
குலமாதுளம் எனவே மகிழ் கொண்டன்பு நிறைந்து
மலமாயைகள் துரக்கும் [1]சென்ன வசவற்கிது புகல்வான் 5

(பா.ம்) [1]சென வசவற்கது -அப்பாடம் யாப்பமைதிக்கு ஏற்றது.

(இ.ள்) அருள் வசவற்கு விழி தோள்வலம் ஆடின = அருளை யுடைய வசவ்தேவனுக்கு மனத்திலே தோன்றிய நிமித்தமன்றி உடம்பின் கண் கண்ணும், தோளும் வலப்பக்கம் துடித்தன; அதிதூரம் செலும் ஆடவன் வருநாள் = மிகவும் சேய்மையான இடத்தை நோக்கிப் பிரிந்து சென்ற தலைவன், திரும்பிவரும் காலத்தில் விழி இடமாடிய செயல்வாய் குலமாதுளம் எனவே மகிழ் கொண்டு; அன்பு நிறைந்து = கண் இடப் பக்கம் துடித்த செயல் நிகழ்ந்த பொழுது நல்ல குலத்தின்கண் பிறந்த தலைவிக்கு ஏற்பட்ட மன நிகழ்ச்சியைப் போல; (வசவனுடைய உள்ளம்) மகிழ்ச்சி கொண்டு அன்பு நிறைந்து; மலமாயைகள் துரக்கும் சென்ன வசவற்கு இது புகல்வான் = ஆணவை மலத்தையும், மாயாமலத்தையும், நீக்கி ஒழுகும் சென்ன வசவ தேவனுக்கு இச் சொற்களைச் சொல்லத் தொடங்கினார். (எ.று)

முடிபு- வசவற்கு விழியும் தோளும் வலமாடின; அதனால் ஆடவன் வருநாள் விழி இடமாடிய செயல்வாய், குலமாதின் உளம் என (வசவன்) மகிழ்கொண்டு அன்பு நிறைந்து சென்னவசவற்கு இது புகல்வான்.

வசவ தேவன் வினாவும் சென்ன வசவதேவன் விடை கூறலும்

வேறு

990. நற்குறி பலவும் இற்றை நாள்நிகழ் கின்ற என்பால்
வற்கலை முனிவர் போற்றும் வசவஅந் நிகழ்ச்சி யால் நாம்
பிற்பெறு பயன்யா தென்று பெருந்தகை வினவ நின்ற
சிற்பரம் உணர்ந்த சென்ன வசவதே சிகனு ரைப்பான் 6

Koviloor Digital Library

(இ.ள்) பெருந்தகை = பெரிய தகுதி வாய்ந்த வசவதேவன்; (சென்ன வசவனை நோக்கி); இற்றை நாள் என்பால் நற்குறி பலவும் நிகழ்கின்ற = இன்றைய நாளின்கண் என்னிடத்தே நன்னிமித்தங்கள் பலவும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன; வற்கலை முனிவர் போற்றும் வசவ = மரவுரி அணிந்த முனிவரால் வணங்கப் பெறும் சென்ன வசவனே! அந்நிகழ்ச்சியால் நாம்பின் பெறு பயன் யாது என்று வினவ = அந்த நன் நிமித்தங்களால் நாம் பின்னர் பெறக்கூடிய பயன் எதுவாய் இருக்கும் என்று கேட்க; நின்ற சிற்பரம் உணர்ந்த சென்ன வசவ தேசிகன் உரைப்பான் = (அதனைக் கேட்ட) முன்நின்ற அறிவு வடிவான பரம் பொருளை உணர்ந்த சென்னவசவ தேசிகன், வசவ தேவனுக்குச் சொல்லத் தொடங்கினான். (எ.று)

முடிவு- பெருந்தகை வசவ! இற்றை நாள் என்பால் நற்குறி பலவும் நிகழ்கின்ற அந்நிகழ்ச்சியால் நாம் பிற்பெறு பயன்யாது என்று வினவ நின்ற சென்ன வசவதேசிகன் உரைப்பான்.

991. **[1]அய்யஇந் நிமித்தம் தன்னால் அல்லமன் காண்பை இன்று**
மெய்யுரை இதுகாண் என்னா விடுத்தனன் மருகன் எங்கள்
கையுறும் அமுதன் தான்றான் கருதிய படிவிண் ணப்பஞ்
செய்யவுள் மகிழ்வு பூத்து செயல் செய்வார்க்கு உரைக்கல்
உற்றான் 7

(பா.ம்) [1]ஐய

(இ.ள்) மருகன் = சென்ன வசவதேசிகனாகிய மருமகன்; (வசவ தேவனை நோக்கி); அய்ய! இந்நிமித்தம் தன்னால் = அய்யனே! உன்னிடம் இன்று நிகழ்ந்த நல்ல நிமித்தத்தால்; இன்று அல்லமன் காண்பை = இற்றைய நாள் அல்லமதேவனைக் காண்பாய்; இது மெய்யுரைகாண் என்னாவிடுத்தனன் = யான் சொல்லுகின்ற இச்சொல், உண்மையான சொல்லாகும் என்பதை காண்பாயாக என்று விடை கூறினான்; எங்கள் கையுறும் அமுதுஅன்னான், தான் கருதியபடி விண்ணப்பம் செய்ய = எங்கள் கையில் கிடைத்த தேவாமிர்தத்தை ஒத்த வசவதேவன், தான் நினைத்தபடியே சென்னவசவனும்கூறிவிட; உள்மகிழ்வு பூத்து செயல் செய்வார்க்கு உரைக்கல் உற்றான் = தன் உள்ளத்தில் மகிழ்ச்சி மலர தான் ஏவிய செயலை செய்து முடிக்கும் பணி யாட்களைப் பார்த்து அவர்களுக்குச் சொல்லத் தொடங்கினான். (எ.று)

Koviloor Digital Library

முடிபு- மருகன், அய்ய! இந்நிமித்தம் தன்னால் இன்று அல்லமன் காண்பை. இது மெய்யுரை காண் என்றா விடுத்தனன். அமுதனான் தான் கருதியபடி (மருகன்) விண்ணப்பம் செய்ய உன் மகிழ்வுபூத்து, செயல் செய்வார்க்கு உரைக்கலுற்றான் சென்ன வசவன் வசவதேவருடைய அக்காளாகிய நாகாம்பிகையின் மகன் ஆதலின் அவனை மருகன் என்றார்.

992. உடம்பெனும் வனத்தில் நின்ற
உயிரெனும் கன்னி தன்னைத்
தொடர்ந்திசை மணத்தால் சேர்ந்த
துணைவன்அல் லமனின் றெய்தும்
அடைந்தருள் [1]கல்யாணத்தை அணிமி
னென்று எந்தை கூற
நடந்தனர் நன்றென்று அன்னார்
நகரியோர்க்கு உணர்த்தி னாரால் 8

(பா.ம்) [1]கலியாணத்தை

(இ.ள்) எந்தை = என்தந்தை போன்ற வசவதேவன் (செயல் செய்வாரைப் பார்த்து); உடம்பு எனும் வனத்தில் நின்ற உயிர் எனும் கன்னிதன்னை = உடம்பு என்கின்ற தினப்புனக்காட்டிலே, காவல் காத்து நின்ற உயிர் என்று சொல்லுகின்ற ஓர் பருவப் பெண்ணை; தொடர்ந்து இசை மணத்தால் சேர்ந்த துணைவன் அல்லமன் இன்று எய்தும் = இரந்து பின்னிற்றலைச் செய்து யாழோர்மணம் என்னும் களவு நெறியால், அவனைக் கூடிய தலைவனாகிய அல்லம தேவன் இன்றைய தினம், அவளை கற்பு நெறியால் மணந்து கொள்வதற்கு இங்கு வரும்; அடைந்தருள் கல்யாணத்தை அணிமின் என்று கூற = அவன் அடையும் கல்யாண பட்டினத்தை அவனை வரவேற்பதற்காக அழகு படுத்துங்கள் என்று சொல்ல; (சிலேடையால் கற்பு நெறி என்னும் கல்யாணத்தை சிறப்புறச் செய்யுங்கள் என்று உரைகூறிக் கொள்க) அன்னார் நன்று என்று நடந்தனர் = அதைக் கேட்ட செயல் செய்வார் நன்று என்று உடன்பட்டுச் சென்றனர்; நகரியோர்க்கு உணர்த்தினார் = சென்றவர் கல்யாண நகரத்தை அணிசெய்யும்படி நகர மக்களுக்குக் கூறினார் (எ.று);

முடிபு- எந்தை (செயல்செய்வாரை) நோக்கி உடம்பு எனும் வனத்தில் நின்ற உயிர் எனும் கன்னியை இசை மணத்தால் சேர்ந்த துணைவனாகிய அல்லமன் இன்று எய்தும் கல்யாணத்தை துணிமின்

Koviloor Digital Library

என்று கூற, அன்னார் நன்றென்று நடந்தனர். நகரியோர்க்கு உணர்த்தினார். நடந்தனர் என்பது முற்றெச்சம், இசை மணம் என்பது யாழோர் மணத்தை.

நகரமக்கள் நகரை அணிசெய்தது தோரணம் கட்டியது

993. அலர்கதிர் ஞாயிறு ஊரும் அணிநெடும் தேர்க்[1]கொடிஞ்சி
விலகுற அதில்தாக்காமல் மேலளவு ஒருசாண் நிற்பப்
பலர்புகழ் மணிமா டத்துப் பறக்குமொண் கிளியொ
ழுங்கில்
இலைசெரு கியப சும்பூந் தோரணம் இசைய ஆர்த்தார் 9

(பா.ம்) [1]கொடிஞ்சில்.

(இ.ள்) அலர் கதிர் ஞாயிறு ஊரும் அணி நெடும்தேர்க்கொடிஞ்சி = பரவும் வெயிலையுடைய கதிரவன் ஏறிச் செல்லும் அழகிய பெரிய தேரின் உச்சியில் கட்டிய கொடியானது; விலகுற அதில் தாக்காமல் மேல்அளவு ஒரு சாண் நிற்ப = விலகி அக்கொடியில் படாமல் மேலே ஒரு சாண் அளவு நிற்கும்படி; பலர்புகழ் மணிமாடத்து தோரணம் இசைய ஆர்த்தார் = பலரும் புகழ்கின்ற மணிகள் அமைத்துச் செய்யப்பட்ட மாளிகைகளின் மேல் தோரணத்தை பொருந்துமாறு கட்டினார்கள்; எத்தகைய தோரணம் எனில்?; பறக்கும் ஒண் கிளி ஒழுங்கில் இலை செருகிய பசும் பூம் தோரணம் = வானத்திலே பறந்து செல்லும் அழகிய கிளிகளின் வரிசையைப் போல் மாவிலை செருகிய பச்சையான பொலிவான தோரணம் என்க; (எ.று)

முடிபு- ஞாயிறு ஊரும் தேர்க்கொடிக்கு, அதில் தாக்காமல் விலகுற ஒரு சாண் அளவு மேல் நிற்ப, மாடத்திலே கிளி ஒழுங்கைப் போல இலை செருகிய தோரணத்தை இசைய ஆர்த்தார்; சூரியனுடைய தேர்க்கொடிஞ்சிக்குமேலே ஒரு சாண் அளவு நிற்கும்படி தோரணத்தைக் கட்டினார்.

கொடி கட்டியதும் நிலைத்தேர் அமைத்ததும்

994. போதகக் குருநம் ஊருள் புகக்கொடி கட்டல் நன்றென்று
ஆதர ஒடும்அ சைத்தார் அவிர்கொடி மாடத் தும்பர்
சோதிதன் இரதம் என்றும் சுழன்மென நகுதல் போல
வீதியுள் ஆடியோடு விளங்குறு நிலைத்தேர் செய்தார் 10

Koviloor Digital Library

(இ.ள்) போதகக்குரு நம் ஊருள்புக = பலகுருமார்களில் சிறந்த போதகக் குருவாகிய அல்லமன், நம் ஊருக்குள் புகுதலைக் கருதி; கொடிகட்டல் நன்று என்று = அக்குருவைச் சிறப்பிக்கும் கொடி கட்டுதல் நன்று என்று சொல்லும்படி; மாடத்து உம்பர் = மாளிகை களின்மேலே ; அவிர்கொடி ஆதரவொடும் அசைத்தார் = ஒளி விளங்குங் கொடியை அன்போடு கட்டினர் ; சோதிதன் இரதம் என்னும் சுழன்மென நகுதல் போல = கதிரவனுடைய தேரானது எக்காலத்தும் நிற்காமல் சுழன்று கொண்டே இருக்கும் என்பதைக் கருதி, அதைப்பார்த்து இகழ்ந்து சிரித்தலைப் போல விளங்கும்படி; வீதியுள் ஆடியோடு விளங்குறு நிலைத்தேர் செய்தார் = தெருக் களிலே, கண்ணாடியோடு விளங்குகின்ற நிலைத்தேரைச் செய்து அமைத்தார் (எ.று)

முடிபு- போதகக்குரு நம் ஊரில் புக, கொடி கட்டல் நன்று என்று மாடத்து உம்பர் கொடியை ஆதரவொடும் அசைத்தார்! சோதி தன் இரதம் என்றும் சுழலும் என எண்ணி அதைப் பார்த்து நகுதல் போல் விளங்கும் படி வீதியுள் நிலைத்தேர் செய்தார். ஆடி என்பது கண்ணாடி; சுழலும் என என்றசொல் சுழன்மென என்றாயிற்று. இது மகரக்குறுக்கம்; சூரியன் தேர் என்றும் திரிவது இங்குள்ள தேர் என்றும் நிற்பது.

தெருக்களில் பனிநீர் சிந்தியதும் பந்தரில் மாலைகள் தூக்கியதும்

995. குங்குமம் நறிய சந்தம் [1]குழைத்தன பனிநீர் சிந்திப்
பொங்கெழில் மறுக னைத்தும் புதைசெரும் சேறு செய்தார்
மங்கல மனைமுன் பந்தர் மணப்பந்தர் உண்மை ஆகக்
கொங்கவிழ் இதழ்ந றும்பூங் கோதைகள் தூக்கினாரால் 11

(பா.ம்) [1]குழைத்தண்

(இ.ள்) குங்குமம் நறிய சந்தம் குழைத்தன பனிநீர் சிந்தி = குங்குமப் பொடியையும், நறுமணமுள்ள சந்தப் பொடியையும் ஒன்று படும்படி குழைத்தனவாகிய பனிநீரைத் தெளித்து; எழில் பொங்கும் மறுகு அனைத்தும் புதை செழும் சேறு செய்தார் = அழகு மிகும் எல்லாத் தெருக்களிலும் நடந்து செல்வோருடைய கால் புதையும் படி நல்ல சேற்றைச் செய்து விட்டனர்; மங்கலமனை முன் மணப்பந்தர் உண்மை யாக = எல்லா மங்கலப் பொருள்களும் நிறைந்த மனைகளின் முன்னே,

Koviloor Digital Library

மணப்பந்தலும் உளதாக வேண்டி; பந்தர் = வீட்டிற்கு இடும் பந்தலில்; கொங்கவிழ் இதழ் நறும் பூம் கோதைகள் தூக்கினார் = தேன் அவிழும் இதழ்களோடு கூடிய, நறுமணம் வாய்ந்த பூக்களாலான மாலைகள் எல்லாம் தொங்க விட்டனர். (எ.று)

முடிபு - குங்குமமும், சந்தனமும் குழைத்தனவாகிய பனிநீரைச் சிந்தி மறுகு அனைத்தும் சேறு செய்தார். மங்கலமனைமுன் மணப்பந்தர் உண்மையாக பந்தரில் நறும்பூங் கோதைகள் தூக்கினார். பனிநீர் என்பது பன்னீர் என மறுவிற்று.

வாயில் முகப்பில் வாழையும் கரும்பும் கமுகும் கட்டியமை

996. வயலிடம் சேர்ந்து நின்ற வாழையும் கரும்பும் பாளை
உயரிளம் கமுகும் ஒன்றோ டொன்று நின்று சாவித்தாமெல்
லியர்அருந் தொடைதோள் கண்டம் எனுமுறுப் பழகி ரக்கும்
செயலில் வந் தடைந்த என்ன செழுங்கடைத் தலைமுன் ஆர்த்தார் 12

(இ.ள்) வயல் இடம் சேர்ந்து நின்ற வாழையும் கரும்பும் பாளைஉயர் இளம்கமுகும் செழுங்கடைத்தலைமுன் ஆர்த்தார் = மருத நிலத்தைச் சார்ந்து விளங்கும் வாழையும், கரும்பும், பாளையையுடைய உயர்ந்த இளம் கமுகும் ஆகிய இவற்றை வளப்பமுள்ள மனையின் வாயிலினிடத்தே கட்டினார். அது எதுபோல் இருந்தது எனில்?; ஒன்றோடு ஒன்று நின்று உசாவி = அவை அங்கே நின்று ஒன்றுடன் ஒன்று வினாவிக் கொண்டு ; தாம் மெல்லியர் அருந்தொடைதோள், கண்டம், எனும் உறுப்பு அழகு இரக்கும் செயலில் வந்து அடைந்த என்ன = தாங்கள் மென்மை வாய்ந்த பெண்களுடைய அரிய தொடை, தோள், கண்டம் என்னும் உறுப்புகளின் அழகினை இரந்து பெறுவதற்காக இங்கு வந்து அடைந்தன என்று கருதும்படி; செழுங்கடைதலைமுன் ஆர்த்தார் = வளப்பமுள்ள மனையின் வாயிலினிடத்தே கட்டினார் (எ.று)

முடிபு- வாழையும், கரும்பும், கமுகும் ஒன்றோடு ஒன்று உசாவித்தாம் மெல்லியல், தொடை - தோள் - கண்டம் எனும் உறுப்புக் களின் அழகினை இரக்கும் செயலில் வந்து அடைந்த என்னும்படி (அவற்றை) கடைத்தலை முன் ஆர்த்தார்.

Koviloor Digital Library

வேதிகையின் மேல்நிறை குடம் வைத்தணி செய்தது

997. இலையினால் [1]பொலிந்த வாழை
தொடையினால் எய்தும் பேறு
முலையினால் பெறுவம் என்று
முன்னிவந் [2]திருத்தல் போலக்
கலையினால் சிறந்த அல்குல்
கயற்கணார் நிறைகு டங்கள்
விலையினால் சிறந்த செம்பொன்
வேதிகை மீது வைத்தார் 13

(பா.ம்) [1]பொதிந்த ; [2]இறுத்தல் போல

(இ.ள்) கலையினால் சிறந்த அல்குல் கயல்கணார் = மேகலை என்னும் அணியால், சிறந்து விளங்கும், அல்குலையுடைய கயல் போன்ற கண்களையுடைய பெண்கள்; நிறைகுடங்கள் = பூரண கும்பம் என்னும் நிறைகுடங்களை; விலையினால் சிறந்த செம்பொன் வேதிகை மீது வைத்தார். விலை உயர்ந்த செம்பொன்னால் செய்த, திண்ணைகளின் மேலைவைத்தணி செய்தனர்; (அது எது போலிருந்ததெனில்); இலை யினால் பொலிந்த வாழை தொடையினால் எய்தும் பேறு = இலைகளால் சிறந்து விளங்கும் வாழைமரம், தொடைக்கும் உவமையாகி (உயர்ந் ததன் மேற்றே உள்ளுங்காலை ; தொல். உவமை.3)) என்னும் சிறப்பித்து ஓதும் சிறப்பினைப் பெற்றார்போல; முலையினால் பெறுவம் என்று முன்னி வந்திருத்தல் போல = இந்நிறைகுடங்களும்; பெண்களுடைய இம்முலைக்கு உவமையாகி, அத்தகைய சிறப்பை பெற்றுக் கொள் வோம் என்று கருதி வந்திருத்தல் போல, நிறைகுடங்களை வேதிகையின் மேல் வைத்தார். (எ.று)

முடிபு - கயற்கணார் நிறைகுடங்களை, வாழை தொடையினால் எய்தும் பேற்றினை, நாம் முலையினால் பெறுவம் என்று முன்னி வந்து இருத்தல்போலும் படி செம்பொன் வேதிகை மீது வைத்தார். எய்தும் பேறாவது உவமை, பொருள் என்னும் இரண்டில் உவமை பொருளுக்கு உவமையாகி, உவமை தான் சிறப்பைப் பெறும். இதனால் தொல்காப்பி யர், ''உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை'' என்னும் நூற்பாவினால் உவமையைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். அச்சிறப்பே இங்கு ''எய்தும் பேறாகும்'' என்க.

Koviloor Digital Library

வாயிற்படி முன் விளக்கு வைத்தணி செய்தது.

998. மனத்திருள் அகற்றா நின்ற மணிச்சுடர் வரவு பார்ப்ப
நினைத்துவந் திருத்தல் போல நெடுமணி கதவு வாய்தன்
முனைதிரு விளக்கு வைத்தார் முகிழ்முலை கருநெ
டுங்கண்
தனிச்சிலை நுதல்பூங் கோதை சரிகுழல் தளிர்க்கை
நல்லார் 14

(இ.ள்) முகிழ்முலை கருநெடுங்கண் தனிச்சிலை நுதல் பூங்கோதை சரி குழல் தளிர்க்கை நல்லார் = அரும்பு போன்ற நகிலும், கருத்த நீண்ட கண்களும், ஒன்றாகிய வில் போன்ற நெற்றியும், மலர் மாலை அணிந்த சரியும் கூந்தலும்; தளிர் போன்ற மென்மையான கைகளும், ஆகிய இவ்வுறுப்புகளையுடைய நல்லாராகிய பெண்கள்; நெடுமணி கதவு வாய்தல் முனை திருவிளக்கு வைத்தார் = நீண்ட மணிகள் பதித்த கதவுகளையுடைய, வாயிற்படியின் முன்னிடத்தே திருமகள் உருவம் பொறிக்கப்பட்ட; விளக்குகளை வைத்தனர்; அது எது போலிருந்தது எனில்? ; மனத்து இருள் அகற்றா நின்ற மணிச்சுடர் வரவு பார்ப்ப நினைத்து வந்து இருத்தல் போல = நாம் புறத்திருளையே நீக்கும் அகல், திரி, எண்ணெய் என்னும் இவற்றாலாக்கப்பட்ட சுடராக உள்ளோம். ஆனால் இன்று எல்லோருடைய மனத்திருளையும் அகற்றுகின்ற மாணிக்கச் சுடர் ஒன்று வருகிறது. அதனை நாம் பார்க்கவேண்டு மென்று நினைத்து வந்து இருத்தல் போலும்படி உள்ளது. (எ.று)

முடிபு - நல்லார், திருவிளக்குகளை மணிச்சுடர் வரவு பார்ப்ப நினைத்து வந்து இருத்தலை போலும்படி, கதவு வாய்தல் முனையில் வைத்தார்.

999. அல்லம குரவன் தன்னை அருள்நந்தி யோடு காணச்
செல்லுவம் என்று செம்பொன் சீர்கெழு விமானத் தோடும்
ஒல்லையில் நிலத்தி ழிந்த உம்பர்வாழ் மகளிர் போல
இல்எனும் மருங்குல் மாதர் இருந்தனர் நிலைத்தேர் ஏறி 15

(இ.ள்) இல் எனும் மருங்குல் மாதர் = இல்லை என்று கூறத்தக்க நுணுகிய இடையையுடைய பெண்கள்; நிலைத்தேர் ஏறி இருந்தனர் = தெருக்களில் உள்ள நிற்கும் தேர்களின் மேலே ஏறி பார்த்துக் கொண்டு இருந்தனர்; அது எவ்வாறு இருந்தது எனில்? ;அல்லம குரவன் தன்னை

Koviloor Digital Library

அருள் நன்தியோடு காணச் செல்லுவம் என்று = அல்லமன் என்னும் ஆசிரியனை, மாணாக்கனாகிய அருள் நந்தியோடு சேர்த்து காண்பதற்குச் செல்வோம் என்று கருதிக் கொண்டு; செம்பொன் சீர் கெழு விமானத்தோடு = செம்பொன்னால் செய்த சிறப்புப் பொருந்திய தேவ விமானத்தோடு; ஒல்லையில் நிலத்து இழிந்த உம்பர்வாழ் மகளிர் போல = விரைந்து நில உலகத்தின் கண் இறங்கிவந்த, தேவ மகளிரைப் போல விளங்கினர். (எ.று)

முடிபு - இல்லெனும் மருங்குல்மாதர் அல்லமனை அருள் நந்தியோடு காணச் செல்லுவம் என்று, விமானத்தோடு, நிலத்து இழிந்த உம்பர்வாழ் மகளிர் போல, நிலைத் தேர் ஏறி இருந்தனர்.

கல்யாணபுரத்தை இப்பொழுது அலங்கரித்த அலங்காரத்தின் சிறப்பு

1000. திருநகர் இதனை இன்று திருந்தவே றலங்க ரிப்ப
நெருநலுள் ளனக ழித்து நீத்தவை அமரர் கோமான்
ஒருநகர் அலங்க ரித்தற்கு ரியன என்னின் நந்தி
பெருநகர் அணியின் மிக்க பெருமையார் கூற வல்லார் 16

(இ.ள்) திருநகர் இதனை இன்று = கலியாண பட்டிணமாகிய இந்நகரத்தை இன்றையநாள்; திருந்த வேறு அலங்கரிப்ப நெருநல் உள்ளன கழித்து நீத்தடை = திருத்தமாக முன்னையதினும் வேறாக, அலங்கரிக்க வேண்டி; நேற்று உள்ள பொருள்களை, ஒழித்து நீக்கிய பொருள்கள் எல்லாம்; அமரர் கோமான் ஒரு நகர் அலங்கரித்தற்கு உரியன என்னில் = தேவர்கள் தலைவனாகிய இந்திரனது ஒப்பற்ற நகரத்தை, அலங்காரம் செய்வதற்கு உரியனவாக இருக்கும் என்று கருதப்பட்டால்; நந்தி பெருநகர் அணியின் மிக்க பெருமையார் கூறவல்லார் = பசவராசனது பெரிய நகரத்தை இப்பொழுது அலங்கரித்த அலங்காரத்தின் மிக்க பெருமையை யார் மதிப்பிட்டுக் கூறவல்லவர். (எ.று)

முடிபு - திருநகராகிய இதனை இன்று அலங்கரிப்ப, நெருநல் உள்ளன கழித்து நீத்தவை, அமரர் கோமான் நகரை அலங்கரித்ததற்கு உரியன ஆம் என்னில், நந்தி பெருநகரத்தின் அணியின் மிக்க பெருமையை கூறவல்லார் யார்?

Koviloor Digital Library

வசவதேவர் அல்லமனை எதிர்கொள்ள அரண்மனையிலிருந்து செல்லுதல்

1001. இன்னணம் அலங்க ரித்த எழில்மணி மறுகின் ஊடு
மன்னவர் மன்னன் உய்ய மந்திரிக் கிழமை பூண்டோன்
தன்னொரு குரவன் தன்னைத் தானெதிர் கொள்ள வேண்டிப்
பொன்னவர் கோயில் நின்றும் [1]புறப்படாப் போதல் உற்றான் 17

(பா.ம்) [1]புறப்பட; புறப்பட்டு

(இ.ள்) இன்னணம் அலங்கரித்த எழில்மணி மறுகின் ஊடு = இவ்வாறு அலங்காரம் செய்த மிக்க அழகையுடைய தெருவின் வழியாக; மன்னவர் மன்னன் உய்ய மந்திரிக்கிழமை பூண்டோன் = வேந்தர்க் கெல்லாம் வேந்தாகிய விச்சலமன்னன் உய்ய வேண்டி = அவனிடம் அமைச்சர் தொழிலை மேற்கொண்டவனாகிய வசவதேவன்; தன் ஒரு குரவன் தன்னைத் தான் எதிர் கொள்ள வேண்டி = தன்னுடைய ஒப்பற்ற ஆசிரியனாகிய அல்லமனை தான் எதிர்சென்று அழைக்க வேண்டி; பொன் அவிர் கோயில் நின்றும் புறப்படாப் போதல் உற்றான் - பொன் நிறம் விளங்கும் தன் அரண்மனையினின்றும் புறப்பட்டுப் போகத் தொடங்கினான். (எ.று)

முடிபு- மந்திரிக் கிழமை பூண்டோன் தன் குரவன் தன்னைத்தான் எதிர் கொள்ள வேண்டி, பொன்னவிர் கோவில் நின்றும் புறப்படா மறுகினூடு போதலுற்றான். விச்சலமன்னனுக்கு அல்லமதேவன் குரு அல்லாமையினாலே, தன்னொரு குரவன்தன்னை தான் எதிர் கொள்ளத் தானே புறப்பட்டான் என்றார்.

சென்னவசவனும் மருங்கு சென்றது

1002. பதியும் அப்பதியால் காணும் பசுவும் அப்பசுவின் ஞானம்
பொதியும் அப், [1]பாசந்தானும் பொருளை வழக்கில் கூறும்
விதியும் அப்[2]பாசம் பொய்யாய் [3]வேறறும் வீடும் ஓதி
மதிமயக் கறுத்த சென்ன வசவனும் மருங்கி சென்றான் 18

(பா.ம்) [1]ஐம்பாசந்தானும்; [2]பாசம் மெய்யாய் (இது கதிரை வேல் பிள்ளை பாடம்); [3]வேற்று

Koviloor Digital Library

(இ.ள்) சென்னவசவனும் மருங்கு சென்றான் = வசவதேவன் புறப்பட்டுச் சென்றபோது சென்னவசவ தேவனும் அவன் பக்கத்தில் சென்றான்; அச்சென்ன வசவதேவன் எத்தகையயோன் எனில்?; பதியும் = முதற் பொருளாகிய பதிப்பொருளும்; அப்பதியால் காணும் பசுவும் = அப்பதியினாலே உணர்த்தப்பட்டு உணருகின்ற பசுவாகிய உயிரும்; அப்பசுவின் ஞானம் பொதியும் அப்பாசம் தானும் = அப்பசுவாகிய உயிரின் அறிவை மூடும் அப்பாசமும்; வழக்கில் பொருள் என கூறும் விதியும் = பந்தம் உற்ற உலகவழக்கில் பதி, பசு, பாசம் என முப்பொருள் எனக்கூறும் விதியும்; (அம்மூன்றுள்) அப்பாசம் பொய்யாய் வேறறும் வீடும் ஓதிமதி மயக்கறுத்த சென்னவசவன் = அப்பாசம் பொய்யாகிப் போய்விட, பசுவும் பதியும் வேறுபாடற்று ஒன்றாக நிற்கும் வீடும் ஆகிய இந்நிலையை ஓதி மக்களின் அறிவு மயக்கத்தை அறுத்துவிட்ட சென்னவசவன் என்க; (எ.று)

முடிபு- பதியும், பதியால் காணும் பசுவும், அப்பசுவின் ஞானம் பொதியும் பாசந்தானும், முப்பொருளென வழக்கிற் கூறும் விதியும் (பின்னர்) பாசம் பொய்யாய் (சீவனும் சிவனும்) வேறறும் வீடும் ஓதி மதிமயக்கறுத்த சென்னவசவனும் மருங்கு சென்றான். விதியும் வீடும் ஓதி மதி மயக்கறுத்த சென்னவசவன் எனக்கூட்டுக. விதி என்றது பந்தத்தை. வீடு என்றது மோட்சத்தை. எனவே பந்த மோட்சங்களின் இயல்பைக் கூறிய சென்ன வசவன் என்பது கருத்து.

இப்பாடலின் கருத்தை கீழ்வரும் திருமந்திரப் பாடலால் அறிக.

பதியும் பசுவொடு பாசமும் மேலைக்
கதியும் பசுபாச நீக்கமும் காட்டி
மதிதந்த ஆனந்த மாநந்தி காணும்
துதிதந்து வைத்தனன் சுத்தசை வத்திலே (திருமந் – 2413)

இப்பாட்டில் மேலைக்கதி என்றது பந்தத்தை; பசு பாச நீக்கம் என்பது வீட்டை.

மடிவால மாச்ச தேவனும் வசவனுடன் சென்றது

1003. எம்மடி மாசும் முக்கண் இறையவன் அடிமை பூண்டோர்
தம்மடி மாசும் நீக்கும் தன்தொழில் நெறி வழாத
செம்மடி வால [1]மாச்ச தேவனும் அன்பு தாயின்
மும்மடி யாகும் நந்தி முதல்வனோடு அருகு சென்றான் 19

Koviloor Digital Library

(பா.ம்) [1]மாச்சி தேவன்

(இ.ள்) செம்மடிவால மாச்ச தேவனும் நந்தி முதல்வனோடு அருகு சென்றான் = செம்மை நெறியில் நிற்கும் மடிவாலமாச்சதேவன் என்னும் தொண்டரும் வசவதேவனோடு பக்கத்திலே சென்றான்; எத்தகைய மடிவால மாச்சன் எனின்? ; எம் அடி மாசும் = எம்முடைய மூலகாரண மாகிய ஆணவமலமென்னும் அழுக்கினையும்; முக்கண் இறையவன் அடிமை பூண்டோர்தம் மடிமாசும் = மூன்று கண்ணையுடைய இறைவனுக்கு தொண்டு பூண்டோர்தம் ஆடையின் கண் உள்ள அழுக்கினையும்; நீக்கும் தன் தொழில் நெறிவழாத = போக்கிவிடுகின்ற தனது தொழிலின் முறை வழுவாது நிற்கின்ற; செம்மையான மடிவாலமாச்சதேவன் என்க; நந்தி எத்தகையோன் எனில்? ; அன்புதாயின் மும்முடி ஆகும் நந்தி = அன்பு என்னும் பண்பினை தாயின் அன்பைக் காட்டிலும் மூன்று மடங்கு மிகுதியாகப் பெற்றுள்ள நந்தி தேவன் என்க; (எ.று)

முடிபு- மடிவால மாச்சதேவனும், நந்தி முதல்வனோடு அருகு சென்றான். மடிவால மாச்சதேவரின் வரலாற்றைப் படித்தால், வசவதேவர் முதலானவர்க்கு ஒவ்வொரு காலத்தில் உண்டாகிய செருக்கினை அஞ்சாமல், இடித்துக் கூறி திருத்திய செய்தியை தெரிந்து கொள்ளலாம். இவற்றை எல்லாம் கருதி எம் அடி மாசும் என்றார்.

கின்னரப் பிரமய்யனும் வசவதேவனுடன் சென்றது

1004. **சங்கரன் சடையில் பாம்பும் தவழ்ந்தெதிர் கிடந்த பிள்ளைத்**
திங்களும் செய்த ஒப்பச் செங்கைமான் அவசம் ஆகக்
கங்கையும் திரைய டங்கக் [1]கானமுன் பாடும் ஈச
கிங்கரன் தனது பாங்கர் கின்னரப் பிரமன் சென்றான் 20

(பா.ம்) [1]கானமுன்பாடி

(இ.ள்) கின்னரப் பிரமன், ஈசகிங்கரன் தனது பாங்கர் சென்றான் = கின்னரப் பிரமஐயன் என்னும் தொண்டனும், சிவபெருமானுக்கு அடியவனாயிருக்கும் வசவதேவனது பக்கத்தில் உடன் சென்றார்; எத்தகைய கின்னரப் பிரமஐயனெனில்? ; சங்கரன் சடையில் பாம்பும் = சிவபெருமானுடைய சடையினிடத்தே ஊர்ந்து செல்லும் பாம்புகளும்; தவழ்ந்து எதிர்கிடந்த பிள்ளைத் திங்களும் = அச்சடையினிடத்தே, தவழ்ந்து பாம்பின் எதிரே கிடந்த இளந்திங்களும்; செய்த ஒப்ப = எழுதுதல் செய்த சித்திரத்தை ஒப்ப அசையாமலிருப்ப; செங்கைமான்

Koviloor Digital Library

அவசம் ஆக- சங்கரனுடைய சிவந்தகையிலேயுள்ள மான்தன் வசமிழக்க (பரவசமாக); கங்கையும் திரை அடங்க = சங்கரனுடைய சடையிலேயுள்ள கங்காநதியும் அலை செய்யும் தொழில் அடங்க ; கானமுற் படும் = கின்னரம் என்னும் இசைக்கருவியை வைத்துக் கொண்டு இசைப்பாட்டைப் பாடுகின்ற கின்னரப் பிரம ஐயன் என்க (எ.று). கானம் = இசைபாட்டு

முடிபு- சங்கரன் சடையினிடத்தேயுள்ள பாம்பும், திங்களும் செய்த ஒப்ப இருப்பவும், செங்கையிடத்தேயுள்ள மான் அவசமாகவும், கங்கையும் திரை அடங்கவும் கானத்தை (சிவபெருமான்) முன்பாடும் கின்னரப்பிரமன் என்க. ஊர்ந்து செல்லும் பாம்பும், தவழ்ந்து செல்லும் திங்களும், மானும், திரை வீசும் கங்கையும், தன் செயலிழந்து நிற்கும்படி சிவபெருமான் முன் கின்னரப் பிரம ஐயர் இசைப்பாட்டைப் பாடிக் கொண்டிருப்பார். அத்தகைய கின்னரப் பிரமனும் வசவ தேவனுடன் சென்றார் என்க. இவ்வாறு உரை கொள்வதற்கு சுவடியில் கண்ட பாடும் என்ற பாடமே தக்கதாகும். அச்சுப் பிரதியிலுள்ள பாடி என்ற பாடம் தகுதி உடைத்ததாகாது. தவழ்தல்- தத்திச் செல்லுதல், தத்திச் செல்வதால் தவளையாயிற்று.

எண்ணிறந்த பலவகை அடியவர் உடன் சென்றது

1005. தண்டினா் கரகக் கையா் சடையருத் தூள னத்தா்
புண்டர நுதலா் கல்தோய் பூந்துகில் உடையா் நீல
கண்டனை அகம் புறத்தும் கண்டவா் வினையில் நீங்கித்
தொண்டுறு நெறியில் நின்றோா் சூழ்ந்தனா் எண்ணிலாரே
21

(இ.ள்) தண்டினா் = ஏக தண்டம், திரிதண்டம் என்கின்ற கோல்களை ஏந்திய துறவியரும்; கரகக்கையா் = கமண்டலத்தைக் கையில் உடையவரும்; சடையா் = மழித்துக் கொள்ளாமல் சடை வளா்த்துக் கொள்பவரும் (சடையோடு கூடியவா்) ; உத்தூளனத்தா் = திருநீற்றை தண்ணீரில் குழைக்காமல் பூசிக் கொள்ளுநரும் ; புண்டர நுதலா் = திருநீற்றைத் தண்ணீரில் குழைத்து நெற்றி முதலான இடங்களில் மூன்று குறியாக (திரிபுண்டரமாக) அணிந்து கொள்பவரும்; கல்தோய் பூந்துகில் உடையா் = காவிக்கல் குழம்பில் தோய்த்து எடுத்த பொலிவான ஆடையினை அணிந்து செல்பவரும்; நீல கண்டனை அகம்புறத்தும் கண்டவா் = சிவபெருமானை உள்ளும் புறத்தும் வைத்து வழிபாடு செய்பவரும்;

Koviloor Digital Library

வினையில் நீங்கி தொண்டுறு நெறியில் நின்றோர் = வேறு தொழில்களிலிருந்து நீங்கி தொண்டு செய்யும் நெறியாகிய (தாசமார்க்கத்திலேயே) நின்றவரும்; எண்ணிலார் சூழ்ந்தனர் = ஆகிய இத்தகையோர் அளவிடுதற்கரியராய் வசவதேவனுடன் சூழ்ந்து சென்றனர் (எ.று)

முடிபு- தண்டினரும், கரகக்கையரும், சடையரும் உத்தூளனத்தரும், புண்டரநுதலரும், கல்தோய் துகில் உடையரும், நீலகண்டனை அகம்புறத்துக் கண்டவரும், தொண்டுறு நெறியில் நின்றோரும் ஆகிய எண்ணிலார் சூழ்ந்தனர்.

காலாட் படையினரும் உடன் சென்றது

1006. தோள்வலம் துடித்தது இன்று
சுடரிலை வேல்புண் ஒன்று
கோள்வலம் கொள்ளும் செம்பொன்
குன்றெனும் மார்பில் காண்பேம்
வேள்வலம் கொண்ட நெற்றி
விழியிறை அருளால் என்னும்
வாள்வலம் கொண்ட சேனை
மறவர்வா ரிதிபோல் சூழ்ந்தார் 22

(இ.ள்) வாள் வலம் கொண்ட சேனை மறவர் = வாள் என்னும் படையை வலக்கையில் கொண்ட சேனையிலுள்ள காலாட் படையினர்; வாரிதி போல் சூழ்ந்தார் = கடல் போல, வசவ தேவரைச் சுற்றிச் சென்றனர்; அம்மறவர் எத்தகையவர் எனில்? ; இன்று தோள் வலம் துடித்தது = இன்றைய நாள் நம்முடைய வலது தோள்துடித்தது; (அந்நன் நிமித்தத்தால்) ; வேள்வலம் கொண்ட நெற்றி விழியிறை அருளால் = மன்மதனை வெற்றிகொண்ட, நெற்றிக் கண்ணையுடைய இறைவன் திருவருளாலே; கோள்வலம் கொள்ளும் செம்பொன் குன்றெனும் மார்பில் = ஞாயிறு முதலான கோள்களெல்லாம் வலமாகச் சுற்றி வரும் இயல்புடைய மேருமலை போன்ற நம்முடைய மார்பிலே; சுடரிலை வேல்புண் ஒன்று காண்பேம் = ஒளிதாங்கிய இலைவடி போன்ற வையுடைய வேல் என்னும் படையால் உண்டாகும் விழுப்புண் ஒன்றினை யாம் பெறுவோம் என்று விழுப்புண் பேற்றையே பெற விரும்பும் மறவர்கள் என்க.

முடிபு - சேனை மறவர் வாரிதி போல் சூழ்ந்தார். எத்தகைய சேனை மறவர் எனில் இன்று தோள்வலம் துடித்தது; நெற்றி விழி

Koviloor Digital Library

இறைஅருளால், நம்குன்றெனும் மார்பில், வேல்புண் ஒன்று காண்பேம் என்னும் மறவர்.

குதிரைக்கூட்டங்கள் சென்றது

1007. **எங்கள்வாழ் வனைய நந்தி எழுந்தருள் மருகின் ஊடு**
மங்குல்வான் இரவிப் புத்தேள் மணிநெடும் தேர்ப்பபைங் கிள்ளை
தங்கள் கால் தூட்கு உடைந்து தரிப்பரி தாகி ஓட
அங்கண்மா ஞாலம் எல்லாம் அதிர்தர நடந்த அம்மா 23

(இ.ள்) அங்கண்மா = அழகிய கண்களையுடை குதிரைக்கூட்டங்கள்; எங்கள் வாழ்வனைய நந்தி எழுந்தருள் மருகினூடு = எங்களுடைய வாழ்வுப் பொருளை ஒத்த வசவ தேவன் செல்கின்ற தெருவினுள்; ஞாலம் எல்லாம் அதிர்தர நடந்த அம்மா = உலகமெல்லாம் அதிரும்படி நடந்தன. அவை நடந்தது வியப்புக்குரியவாயிருந்து; வியப்புக்குரிய செயல் என்ன எனில்?; மங்குல்வான் இரவிப்புத்தேள் = மேகத்தையுடைய வானத்திலே இயங்கும், சூரிய தேவனுடைய; மணிநெடும் தேர்ப்பைங் கிள்ளை = அழகிய நெடிய தேரிலே பூட்டிய பச்சை நிறத்தையுடைய குதிரைகள் ஏழும்; தங்கள் கால் தூட்டு உடைந்து தரிப்பு அரிதாகி ஓட = தங்களுடைய காலிலே இருந்து எழும் புழுதிக்கு அஞ்சி, நிற்க முடியாமல் ஓடும்படியான செயலைச் செய்தது வியப்பு என்க. (எ.று)

முடிபு- அங்கண்மா, நந்தி எழுந்தருள் மருகினூடு இரவிப்புத்தேள் தேர்ப்பைங்கிள்ளைகள், தங்கள் கால் தூளுக்கு உடைந்து தரிப்பரிதாகி ஓடும்படி ஞாலம் எல்லாம் அதிர்தர நடந்த அம்மா அங்கண்மா என்னும் பால்பகா அஃறிணைப் பெயர் நடந்த என்ற பன்மை வினை கொண்டு முடிந்தது. பைங்கிள்ளை - பச்சைக்குதிரை

யானைக்கூட்டங்கள் சென்றது

1008. **அரவொடு மண்சு மக்கும் [1]அடுகளிறு எட்டோ டும்போர்**
பொரஒரு களிநல் யானை போதுமென் றெண்ணி லாத
இரவொடு புரைநி றத்த ஈர்ங்கவுள் சிறுகண் தூங்கு
கரவளை வெண்ம ருப்புக் கடாக்களி றெழுந்த அன்றே 24

(பா.ம்) [1] அடுகளிர் ஈரெட்டோடும்

(இ.ள்) கடாக்களிறு எழுந்த = மதத்தையுடைய களிற்று யானை நிரைகள், அவ்வசவ தேவனோடு சென்றன ; அந்த யானைகள்

Koviloor Digital Library

எத்தகையன எனில்? ; அரவொடு மண் சுமக்கும் அடு களிறு எட்டோடு போர் பொர ஒரு களி நல்யானை போதும் என்று = எட்டு நாகப்பாம்புடன். சேர்ந்து இந்நிலவுலகத்தைத் தாங்கும், கொல்லும் தன்மையுள்ள களிற்றுயானை எட்டுடனே; போர் செய்ய ஒரு யானையே போதும் என்று கருதத்தக்க ஆற்றலுடையனே ; எண்ணிலாத = கணக்கற்றன; இரவொடு புரை நிறத்த = இரவுக்காலத்தோடு ஒவ்வும் கறுத்த நிறம் உடையன; ஈங்கவுள் = மதநீரால் ஈரமான கன்னத்தையும்; சிறுகண் = சிறிய கண்ணையும்; தூங்குகரம் = தொங்குகின்ற துதிக்கையினையும் ; வளைவெண் மருப்பு = வளைந்த வெண்மையான தந்தங்களையும் ; கடாக்களிறு = மதத்தையுடைய களிறு என்க (எ.று)

முடிபு - அரவொடு மண்சுமக்கும் களிறு எட்டோடும், போர் பொர ஒரு யானையே போதும் என்று கருதத்தக்க; எண்ணிலாத இரவொடு புரை நிறத்த ஆகிய, கவுளையும் கண்ணையும் கரத்தையும் மருப்பையுமுடைய கடாக்களிறு

சேனைக் காவலர் பலர் சென்றது

1009. **ஆனைமேல் [1]கொண்டும் வாவும் ஆடல்வெம் பரியி வர்ந்தும்**
கூனல்வேய் தொடுத்து ஞான்ற குச்சுடைக் சிவிகை ஊர்ந்தும்
சேனைகா வலரெண் ணில்லார் சிலைமதன் கோலம் என்ன
மானவேல் மன்னர் மன்னன் மந்திரி மருங்கு சென்றார் 25

(பா.ம்) [1] கொண்டு லாவும்

(இ.ள்) சேனை காவலர் எண்ணில்லார் = படைத்தலைவரில் அளவற்றவர்; ஆனைமேல் கொண்டும் = யானையின் மேலே ஏறியும்; வாவும் ஆடல் வெம்பரி இவர்ந்தும் = தாவிச் செல்லும் ஆடுகின்ற விரும்பத்தக்க குதிரைகளின் மேல் ஏறியும்; கூனல் வேய் தொடுத்து ஞான்ற குச்சுடைச் சிவிகை ஊர்ந்தும் = வளைந்த மூங்கிலை பொருத்திக் கட்டி தொங்குகின்ற குஞ்சத்தையுடைய பல்லக்கில் ஊர்ந்தும்; சிலைமதன் கோலம் என்ன = இவர்கள் வடிவு மன்மதனது வடிவத்தை ஒத்திருக்கின்றது என்று சிலர் கூறும்படி; மானவேல் மன்னர் மன்னன் மந்திரி மருங்கு சென்றார் = பெருமை தங்கிய வேற்படை ஏந்திய அரசர்க்கெல்லாம் அரசனாகிய விச்சலனுடைய அமைச்சராகிய வசவேசர் பக்கல் சென்றனர். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - சேனை காவலர் எண்ணில்லார், மதன் கோலம் என்ன கோலங்கொண்டு ஆனைமேல் கொண்டும், பரி இவர்ந்தும் சிவிகை ஊர்ந்தும், மந்திரி மருங்கு சென்றார்.

வெண்குடை எழுந்ததும் சாமரை வீசிய காட்சியும்

1010. நலங்கிளர் மதன்கு டைக்கு நகைமணிக் காம்பில் என்ன
இலங்குறு பசும்பொன் காம்போடு எண்ணில்வெண் குடையெழுந்த
புலன்களை வென்ற வீரன் போகிய மறுகில் எங்கும்
விலங்கினை அன்றி அந்த விலங்கின்வால் ஆடிற் றன்றே 26

(இ.ள்) நலங்கிளர் மதன்குடைக்கு = அழகு மிக்கு எழும் மன்மதனுடைய சந்திரனாகிய வெண்குடைக்கு; நகைமணிக்காம்பு இல் என்ன = ஒளிமலரும் அழகிய பிடிக்கும்குச்சி இல்லை என்று உலகத்தார் எல்லாம் ஒரு குறை சொல்ல ; இலங்குறு பசும்பொன் காம்போடு = விளங்குகின்ற பசியபொன்னால் செய்த குடைக்காம்புடன் ; எண்ணில் வெண்குடை எழுந்த = அளவற்ற வெள்ளைக் குடைகள் பிடிக்கப்பட்டு வந்தன; புலன்களை வென்ற வீரன் போகிய மறுகில் - ஐம்புலன்களையும் வென்ற வீரனாகிய வசவதேவன் சென்ற தெருவிலே; எங்கும் = எவ்விடத்தும்; விலங்கினை அன்றி அந்த விலங்கின் வால் ஆடிற்று = கவரிமான் என்னும் விலங்கே அன்றி அம்மாவின் வால் மயிரால் செய்த கவரி வீசப்பட்டது. (எ.று) (அன்று - ஏ-அசை)

முடிபு - மதன்குடைக்கு காம்பில்லை என்று குறை கூறும்படி பொற்காம்போடு கூடிய எண்ணில் வெண்குடை எழுந்த; வீரன் போகிய மறுகில் எங்கும் விலங்கினை அன்றி விலங்கின் வால் ஆடிற்று. கவரி என்கின்ற வெண்சாமரை கவரிமாவின் வால் மயிரால் செய்யப் படுதலின் அவ்வாறு கூறினார். கவரியை சவுரி என்றும் சாமரை என்றும் வழங்குவர்.

1011. மாயைதன் தோல்வி எல்லாம் மாதர்க்கும் வந்த அன்றோ
நாயகன் தன்னைப் பற்றி நாம்வென்றி கொள்வமென்று
போயுறு தன்மை போலப் புணர்முலைக் கருநெடுங்கண்
தேயுநுண் மருங்குல் மாதர் திரள்பல எழுந்த அன்றே 27

(இ.ள்) புணர்முலை கரு நெடுங்கண் தேயுநுண் மருங்குல் மாதர்

Koviloor Digital Library

திரள்புல எழுந்த = ஒன்றோடு ஒன்று சேர்ந்திருக்கும் முலையையும், கருமையான நீண்ட கண்ணையும் இளைத்த நுண்ணிய இடையினையும் உடைய பெண்களினுடைய; கூட்டங்கள் பலவும் வசவதேவனுடன் எழுந்துச் சென்றன. அவர்கள் சென்றது எதைப் போலிருந்தது எனில்?; மாயை தன் தோல்வி எல்லாம் மாதர்க்கும் வந்த அன்றோ = மாயை யானவள் அல்லமனைப் பற்ற முடியாமல் பெற்ற தோல்விகளத்தனையும், பெண்களுக்கும் வந்தன அல்லவோ? ஆகையினால் இப்பொழுது; நாயகன் தன்னைப் பற்றி = அல்லமதேவனாகிய தலைவனை நாம் பற்றி; நாம் வென்றி கொள்வோம் என்று = நாம் இப்பொழுது வெற்றியை அடைவோம் என்று கருதிக் கொண்டு; போய்உறும் தன்மைபோல = போகும் தன்மை போல் இருந்தது அவர்கள் சென்றது என்க.

முடிபு- மாதர் திரள் பல, மாயை தோல்வி எல்லாம் மாதர்க்கும் வந்தது அன்றோ (ஆகையால்) நாம் நாயகன் தன்னைப் பற்றி வென்றி கொள்வோம் என்று போய் உறுதன்மைபோல (விளங்கும்படி) எழுந்த; இது தற்குறிப்பேற்ற அணி.

1012. **பரிகளின் முழக்கும் மிக்க பல்லிய முழக்கும் பூட்கை**
கரிகளின் முழக்கும் வீரக் கழலொடு செல்லும் வெங்கோ
ளரிகளின் முழக்கும் மாதர் அணிகளின் முழக்கும்
செங்கைச்
சரிகளின் முழக்கும் விம்மித் தடங்கடல் போன்ற அன்றே
28

(இ.ள்) பரிகளின் முழக்கும் = குதிரைத்திரள்களின் முழக்கமும்; மிக்க பல் இய முழக்கும் = மிகுந்த பல வாத்தியங்களின் முழக்கமும்; பூண்கை கரிகளின் முழக்கும் = பூண்களை அணிந்த கைகளைப் பெற்றிருக்கும் யானைகளின் முழக்கமும்; வீரக்கழலொடு செல்லும் வெங்கோளரிகளின் முழக்கும் = காலிலே வீரக்கழல் என்னும் அணியுடன் செல்கின்ற சிங்கம் போன்ற வீரர்களின் முழக்கமும்; மாதர் அணிகளின் முழக்கமும் = மாதர்களணிந்த சிலம்பு முதலான அணிகளின் முழக்கமும்; செங்கைச்சரிகளின் முழக்கும் = அவர்கள் சிவந்த கையினிடத்தே அணிந்த வளையல்களின் முழக்கம்; விம்மித்தடங்கடல் போன்ற = பலவகை முழக்கங்களும் மிகுந்து பெரிய கடல் முழக்கம் போன்றன (அன்று. ஏ.அசை)

Koviloor Digital Library

முடிபு- பரிகளின் முழக்கும், பல்லிய முழக்கும், கரிகளின் முழக்கும், கோளரிகளின் முழக்கும், மாதர் அணிகளின் முழக்கும் செங்கைச் சரிகளின் முழக்கும் விம்மிக்கடல் போன்ற

எழுந்து செல்லும் கூட்டத்தின் பலவகை நிகழ்ச்சி

1013. ஆடுவ கவரி எங்கும் அசைவன சிவிறி எங்கும்
மூடுவ குடைகள் எங்கும் முழங்குவ இயங்கள் எங்கும்
பாடுவ இசைகள் எங்கும் பாய்வன கரிகள் எங்கும்
ஓடுவ புரவி எங்கும் உயர்வன தூளி எங்கும் 29

(இ.ள்) கவரி எங்கும் ஆடுவ = வெண்சாமரைகள் எல்லா இடத்தும் அசைவனவாம்; சிவறி எங்கும் அசைவன = விசிறிகள் எங்குமசைந்து காற்று எழுப்புவனவாம்; குடைகள் எங்கும் மூடுவ = குடைகள் எல்லா விடத்திலும் மறைத்து நிழலைச் செய்வனவாம்; இயங்கள் எங்கும் முழங்குவ = வாத்தியங்கள் எங்கும் முழங்கி இன்னோசை செய்வன வாம் ; இசைகள் எங்கும் பாடுவ = இசைப்பாட்டுகள் எங்கும் இசைக்கப் பெற்று வசவன் புகழைப் பாடுவனவாம்; கரிகள் எங்கும் பாய்வன = யானைகள் எவ்விடத்தும் பரந்து செல்வனவாம்; புரவி எங்கும் ஓடுவ = குதிரைகள் எல்லாவிடத்தில் விரைந்து நடப்பனவாம் ; தூளி எங்கும் உயர்வன = பலரும் இயங்கும் இயக்கத்தால் புழுதிகள் எங்கும் எழுவனவாம் (எ.று)

முடிபு - கவரி ஆடுவ; சிவிற அசைவன, குடைகள் மூடுவ; இயங்கள் எங்கும் முழங்குவ; இசைகள் பாடுவ; கரிகள் பாய்வன. புரவி ஓடுவ (இந்நிகழ்ச்சிகளால்) தூளி எங்கும் உயர்வன.

வசவனது சேனை கடல் போலச் செல்லுகின்ற
தென்று உருவகித்தல்

1014. கரிகலம் அசையா நின்ற கவரிகள் நுரைகள் மொக்குள்
விரிகுடை மதுகை வீரர் விதிர்க்குவாள் உகள்மீன் பாயும்
பரிதிரை முழக்கம் ஆர்க்கும் பல்லியம் முழக்கம் ஆகப்
பொருகட லெனவெ ழுந்து போயது வசவன் சேனை 30

(இ.ள்) வசவன்சேனை = வசவதேவனுடைய படைகள்; கரிகலம் = யானைகளைக் கப்பலாகக் கொண்டும்; அசையாநின்ற கவரிகள் நுரைகள் = அசையும் வெண்சாமரைகளை நுரையாகக் கொண்டும்; விரிகுடை மொக்குள் = விரிந்த குடைகளை குமிழியாகக் கொண்டும்;

Koviloor Digital Library

மதுகை வீரர் விதிர்க்கும் வாள் உகள்மீன் = வலிமை தங்கிய போர்வீரர்கள். அசைத்து வீசும் வாள் துள்ளுகின்ற மீன்களாகவும் கொண்டும்; பாயும் பரிதிரை = வரிசையாகப் பாய்ந்தோடும் குதிரைக் கூட்டங்களை அலையாக கொண்டும்; ஆர்க்கும் பல்லியம் முழக்கம் முழக்கமாக = ஆரவாரம் செய்கின்ற பலவிதமான வாத்திய முழக்கங் களை கடல் முழக்கமாகக் கொண்டும்; (என்னும் இவற்றால்) பொருகடல் என எழுந்து போயது = கரையைத் தாக்குகின்ற கடலைப் போல எழுந்து சென்றது (எ.று)

முடிபு- வசவன் சேனை கரிகலம்; கவரிகள் நுரை; குடைமொக்குள்; வாள் உகள்மீன்; பரிதிரை; பல்லிய முழக்கம்; முழக்கம் ஆக கடலென எழுந்து போயது.

வேறு

1015. இன்ன வாறெழுந் திரளொடு நந்தியெம் பெருமான்
தன்னை நேர்குரு பரனெதிர் சென்றவன் றாளைச்
சென்னி யால்வணங்குவனெனும் ஓகையால் சென்றான்
துன்னும் வானவர் தொகுதியும் வியப்பொடு துதிப்ப 31

(இ.ள்) நந்திஎம்பெருமான் = வசவதேவன்; இன்னவாறு எழும் திரளொடு = மேற்கூறியவாறு வரவேற்பதற்காக எழுந்துவரும் கூட்டத்தினரொடு; தன்னை நேர் குருபரன் எதிர்சென்று = தனக்குத்தானே நிகரான மேலான குருவாகிய அல்லமதேவன் எதிரே சென்று ; அவன்தாளை சென்னியால் வணங்குவன் எனும் ஓகையால் = அவனது திருவடியை தன்தலையால் வணங்குவேன் என்று எழுந்த உவப்பி னாலே; துன்னும் வானவர் தொகுதியும் வியப்பொடு துதிப்ப சென்றான் = வானத்தில் பொருந்தி இருக்கின்ற தேவர் கூட்டமும் வியப்பொடு புகழுமாறு சென்றான் (எ.று)

முடிபு- நந்தி எம்பெருமான் எழும் திரளொடு, குருபரன் எதிர் சென்று அவன்தாளை சென்னியால் வணங்குவன் எனும் ஓகையால் வானவர் தொகுதியும் வியப்பொடு துதிப்பச் சென்றான்.

இச்செயலைக் கண்ட புத்தர் சமணர் முதலியோர் சிவசரணரை இகழ்ந்து கூறுதல்.

1016. அத்தி றஞ்செலும் செலவினை அகங்குருட் டமணர்
புத்தர் கண்டிவர் என்கொலோ வறிதெதிர் போதல்

Koviloor Digital Library

பித்தன் என்றுதம் இறைவனைச் சொல்லுமிப் பேயர்
எத்தி றஞ்செயார் எனச்சிவ சரணரை இகழ்ந்தார் 32

(இ.ள்) அத்திறம் செலும் செலவினை = அவ்வாற்றால் வசவதேவர் முதலியோர் அல்லமனை வரவேற்கக் கருதி செல்லுகின்ற செல்கையை; அகம் குருட்டு அமணர் புத்தர் கண்டு = அகக் கண் குருடாகிய சமணரும் புத்தரும் பார்த்து; இவர் வறிது எதிர் போதல் என்கொலோ = இக்கூட்டத்தினர் தம்மால் குறிப்பிடப்பட்ட ஒருவர் எதிரில் வாராமலிருக்கவும் வீணே எதிர் போதலுக்கு காரணம் என்னவாயிருக்கும்? (என்று தமக்குள் கூறிக் கொண்டு); தம் இறைவனை பித்தன் என்று சொல்லும் இப்பேயர் - தாம் வழிபடும் கடவுளை பித்தன் என்ற பெயரால் கூறிக் கொள்ளுகின்ற பேய் போன்ற இவர்; எத்திறம் செயார் என - இது போன்ற எவ்வகையான செயல்களைத்தான் செய்யாமலிருப்பார்கள் என்று கூறி; சிவ சரணரை இகழ்ந்தார் - சிவனை அடைக்கலமாக உடைய தொண்டர்களை இகழ்ந்து கூறினார்கள் (எ.று)

முடிபு- அத்திறம் செலும் செலவினை அமணரும் புத்தரும் கண்டு, இவர் வறிது எதிர் போதல் என்கொலோ பித்தன் என்று தம் இறைவனைச் சொல்லும் இப்பேயர் எத்திறஞ்செயார் எனக்கூறி சிவசரணரை இகழ்ந்தார்.

சமணர் விச்சலமன்னனிடம் சென்று வசவேசராகிய அமைச்சரை இகழ்ந்து கூறியது

1017. மன்னன் விச்சலன் பாலடைந்து அருகரெம் மன்னா
நின்ன கர்க்கொரு புதுமையொன்று உற்றது நீகேள்
நல்நி மித்தமொன்று எய்திய தேகொடு நந்தி
தன்னி டத்தொரு வன்வரும் என்றெதிர் சாரும் 33

(இ.ள்) அருகர் மன்னன் விச்சலன் பால் அடைந்து - அப்பொழுது சமணர்கள் விச்சல மன்னவனிடம் சென்று; எம் மன்னா - எங்களது அரசனே!; நின் நகர்க்கு ஒரு புதுமை ஒன்று உற்றது நீகேள் - இன்றைய நாள் உன்னுடைய நகரின் கண் புதுமையான செய்தி ஒன்று நிகழ்கின்றது. அதனை நீ கேட்பாயாக; நந்தி நல் நிமித்தம் ஒன்று எய்தியதே கொடு - உன்னிடம் அமைச்சர் பணிபுரியும் நந்தி என்பவன் தன்னிடம் தோள் துடித்தலாகிய நல்ல நிமித்தம் ஒன்று நிகழ்ந்ததையே அறி கருவியாகக் கொண்டு; தன்னிடத்து ஒருவன் வரும் என்று எதிர்ச்சாரும் - தன்னிடத்தில்

Koviloor Digital Library

தன்னால் விரும்பப்பட்ட யாரோ ஒருவன் வரும் என்று கருதிக் கொண்டு அவனை வரவேற்க எதிர்கொண்டு செல்லும் (எ.று)

முடிபு- அருகர் விச்சல மன்னவன் பாலடைந்து எம்மன்னா! நின் நகர்க்கு ஒரு புதுமை ஒன்று உற்றது. (அதனை) நீ கேள். நல் நிமித்தம் ஒன்று எய்தியதே கொடு, நந்தி தன்னிடத்து ஒருவன் வரும் என்று எதிர் சாரும்; நின்னகர்க்கு என்ற நான்காம் வேற்றுமையை ஏழாம் வேற்றுமை யாகத் திரித்துக் கொள்க.

இதுவுமது

1018. **தண்ட நாயகன் தோள்வலம் துடித்தது தன்னைக்**
கொண்டு தான்வரும் குருபரன் என்றெதிர் கோடல்
கண்ட ஓர்கன விற்பெறும் அடிசிலைக் கருதி
உண்டு போம் விருந் தினர்தமைத் தேடுதல் ஒக்கும் 34

(இ.ள்) தண்ட நாயகன் தோள்வலம் துடித்தது தன்னைக் கொண்டு - உன்னிடத்தில் தண்டநாயகனாகப் பணிபுரியும் வசவனது, தோளானது வலப்பக்கம் துடித்தது என்ற அந்த ஒன்றையே கருவியாகக் கொண்டு; வரும் குருபரன் என்று தான் எதிர்கோடல் - தன்னுடைய குரு தன்னிடம் வருவான் என்ற அவன் எதிர்கொள்வது எதைப் போன்றது எனில்?; கண்ட ஓர் கனவில் பெறும் அடிசிலைக் கருதி - தான் கண்ட ஓர் கனாக் காலத்திலே பெறக்கூடிய சோற்றினைக் கருதி; உண்டுபோம் விருந்தினர் தமை தேடுதல் ஒக்கும் - நனாக்காலத்திலே உண்டு போகும் விருந்தினரைத் தேடும் செயலுக்கு ஒப்பாயிருக்கும் (எ.று)

முடிபு- தண்ட நாயகன் தோள் வலம் துடித்தது. தன்னைக் கொண்டு குருபரன் வரும் என்று தான் எதிர் கோடல், கண்ட கனவிலே பெறும் அடிசிலைக் கருதி (நனவிலே) உண்டு போம் விருந்தினர்தமை தேடுதலுக்கு ஒக்கும். துடித்த அது தன்னைக் கொண்டு என்று பிரித்துப் பொருள் கூறினும் அமையும். ''கனவிலே கண்ட சோற்றுக்கு, நனவிலே விருந்தாளியைத் தேடினாற்போல'' என்ற பழமொழியையும் கருதுக.

1019. **ஒருவன் வந்திடும் என எதிர் கடற்படை ஒருங்கு**
பரவி வந்திடச் செலுமிவன் தன்னை நீ பார்த்துப்
பொருவில் மந்திரக் கிழமைநல் கியவுனைப் போல்வார்
அரவின் வன்தலைப் படிமிசை இலையென அறைந்தார் 35

(இ.ள்) ஒருவன் வந்திடும் என - யாரோ ஒருவன் வருவான் என்பதற்காக; எதிர் கடல்படை ஒருங்கு பரவி வந்திட செலும் இவன்தன்னை -

Koviloor Digital Library

எதிர் கொள்வதற்காக ; கடல் போன்ற பெரும் படைத்திரள்கள் ஒன்று சேர்ந்து துதித்து வருமாறு, செல்லக்கூடிய இத்தகைய அறிவுள்ளவனை; நீ பார்த்து பொருவில் மந்திரக்கிழமை நல்கியவனைப் போல்வார் = நீ ஆராய்ந்து பார்த்து ஒப்பற்ற அமைச்ச உரிமையை கொடுத்த, உன்னைப் போன்றவர்கள்; அரவின் வன்தலைப் படி மிசைஇலை என அறைந்தார் = ஆதிசேடனுடைய வலிய தலையினால் சுமக்கப் பெறும் இந் நிலவுலகத்தின் கண் வேறு ஒருவரும் இல்லை என அறுதியிட்டுக் கூறினர் (எ.று)

முடிபு - ஒருவன் வந்திடும் என எதிரே கடல்படை ஒருங்கு பரவி வந்திட செலும் இவன்தனை நீ பார்த்து, மந்திரக் கிழமை நல்கினை உனைப் போல்வார் வேறு இலை என அறைந்தார். நல்கிய என்ற எச்சத்தை நீ என்னும் எழுவாய்க்குப் பயனிலையாகக் கொண்டு, நல்கினை என முற்றாகத் திரித்துக் கொள்க. நீ பார்த்து பொருவில் மந்திரக் கிழமை நல்கினை. நல்கிய உன்னைப் போல்வார். படிமிசை இலை என்று இத்தொடர் அமைய வேண்டும்.

அருகர் வாசகம் கேட்டவிச்சல மன்னன் வியந்து இருந்தது

1020. **அருகர் வாசகம் கேட்டலும் உளம்வியந்து அடிகேள்**
விரகி னால் மிகும் தண்டநாயகனும் எவ்விளைவு
கருதி னான்கொலோ அறிகிலம் முடிவுறக் காண்பம்
வருக நீரிரு மின்களென்று இருந்தனன் மன்னன் 36

(இ.ள்) மன்னன் அருகர் வாசகம் கேட்டலும் = விச்சல மன்னன் இவ்வாறு சமண சமய அடிகளார் கூறிய சொற்களைக் கேட்டலும்; உளம் வியந்து = மனம் மிகவும் வியப்படைந்து; அடிகேள் = அடி களே! விரகினால் மிகும் தண்டநாயகனும் = அறிவினால் மிகுந்த தண்ட நாயகனாகிய வசவதேவனும்; எவ்விளைவு கருதினான் கொலோ = எந்தப் பயனைக் கருதினானோ?; அறிகிலம் = நாம் அப்பயனை அறிகிலோம்; (ஆகையால்) ; முடிவுறக் காண்பம் = செயல் முடிவுவரை பொறுத்திருந்து பார்ப்போம்; வருக நீர் இருமின்கள் என்று இருந்தனன் = இந்நிகழ்ச்சியை பார்த்தற்குரிய இடத்தின் கண் இருந்து பார்த்தற்காக நீவிரும் வருவீராக என்று அவ்விடத்தில் சென்று அவருடன் இருந்தனன் (எ.று)

முடிபு- மன்னன் அருகர் வாசகர் கேட்டலும் வியந்து, அடிகேள் விரகினால் மிகுதண்ட நாயகனும், எவ்விளையு கருதினான் கொலோ

Koviloor Digital Library

அறிகிலம், முடிவுறக் காண்பம் நீர்வருக இரு மின்கள் என்ற அவருடன் இருந்தனன்.

அமணர் செருக்கழிய அல்லமன் வசவவேசர் முன்வர நினைத்தது.

1021. தண்ட நாயகன் தனதுளம் தங்குறத் தான்அத்
தண்ட நாயகன் தன்மனம் தங்கிய தலைவன்
தண்ட நாயகன் தனையிகழ் சமண்செருக்கு அழியத்
தண்ட நாயகன் எதிர்செல நினைந்தனன் தனித்து 37

(இ.ள்) தண்டநாயகன் தனது உளம் தங்குற = தண்ட நாயகனாகிய வசவதேவன், தன்னுடைய மனத்திலே தங்கியிருக்க; தான் அத்தண்ட நாயகன் தன் மனம் தங்கிய தலைவன் = தான் அந்த தண்ட நாயகனுடைய மனத்திலே வீற்றிருந்த தலைவனாகிய அல்லமதேவன்; தண்டநாயகன் தனை இகழ் சமண் செருக்கு அழிய = தண்டநாயகனாகிய வசவ தேவனை பழித்துப் பேசிய சமணர்தம் செருக்கழியுமாறு; தண்டநாயகன் எதிர் தனித்துச் செல நினைந்தனன் = வசவதேவன் முன்பு தான் தனியாகச் செல்லக் கருதினன் (எ.று)

முடிபு- தலைவன் இகழ் சமண் செருக்கழிய தண்ட நாயகன் எதிர் தனித்துச் செல நினைந்தனன். எத்தகைய தலைவன் எனில்; தண்டநாயகன் தனதுளம் தங்குற தான் அத்தண்ட நாயகன் தன் மனம் தங்கிய தலைவன். இதனை ஒருவர் ஒருவரில் கலந்த உறவு என்பர்.

அல்லமன் வேற்றுருவடைந்து வசவர் முன் தோன்றல்

1022. என்னைக் காண்குவன் எவ்வகை செல்லினும் என்று
துன்னல் கோவண மொடுவிரி குஞ்சியும் தோன்றத்
தன்னைக் காண்குநர் பித்தனென்று எள்ள என் தனக்குப்
பொன்னைப் போலும் நல் வசவநா யகனெதிர் போனான்
38

(இ.ள்) எவ்கை செல்லினும் என்னைக் காண்குவன் என்று = அல்லமதேவன் தான் எந்தக் கோலத்தில் சென்றாலும், வசவதேவன் என்னைக் கண்டுகொள்வான் என்று கருதிக் கொண்டு; துன்னல் கோவண மொடு விரிகுஞ்சியும் தோன்ற = கீளோடு சேர்த்துத் தைத்த கோவணவுடையோடு, விரிந்த தலை மயிரும் தோன்ற; தன்னைக் காண்குநர் பித்தன் என்று எள்ள = தன்னைப் பார்ப்போரெல்லாம், இவன்

Koviloor Digital Library

ஒரு பித்தனாகும் என்று கருதி இகழ்ந்து ஒதுக்குமாறு; என்தனக்குப் பொன்னை போலும் நல் வசவ நாயகன் எதிர் போனான் = எனக்குப் பொன்னைப் போல் சிறந்து விளங்குகின்ற வசவதேவனது முன்னே இக்கோலத்தோடு அல்லமதேவன் போனான் (எ.று)

முடிபு - (அல்லம தேவன்) எவ்வகை செல்லினும் என்னைக் காண்குவன் என்று கோவணமொடு விரி குஞ்சியும் தோன்ற பித்தனென்று எள்ள, வசவநாயகன் எதிர் போனான். துன்னல் கோவணம் - கோணவனத்தின் தலைப்பில் கீள் என்னும் துணியை வைத்துத் தைத்தக் கோவணம் என்க. கீளோடு கூடிய கோவணம் என்க. இதனை இக்காலத்தார் இலங்கோடு என்பர். விரிகுஞ்சி, பரட்டை மயிர் (ஆண்மயிர் - குஞ்சி)

மருவி நின்றவர் வேற்றுவடிவில் வந்த அல்லமனை விலக்கியது

1023. மருவிநின் றவரிவன் மருள னேயென
விரைவிலிங்(கு) அகல்அகல் என விலக்கினார்
ஒருவரும் கண்டிறை உருவு ணர்ந்திலர்
உருவுகண்(டு) எள்ளுநர் உரை வல்லரோ 39

(இ.ள்) மருவி நின்றவர் = வசவ தேவனைச் சூழ்ந்து நின்றவர்; இவன் மருளனே என = வசவதேவனை நோக்கி வருகின்ற இவன் ஒரு பித்தனே எனக் கருதிக் கொண்டு; விரைவில் இங்கு அகல் அகல் என விலக்கினார் = அல்லம தேவன் வருவதற்கு முன் மிக விரைந்து இவ்விடத்தை விட்டு அகல்வாயாக, அகல்வாயாக என்று கூறி அவனைத் தடுத்தனர்; ஒருவரும் கண்டு இறைஉரு உணர்ந்திலர் = எந்த ஒருவரும் பார்த்து அல்லமதேவனது உருவத்தின் இயல்பை அறியாதவரானார்; உருவுகண்டு எள்ளுநர் உணர வல்லரோ = ஒரு பொருளின் மேல் வடிவத்தை மட்டும் பார்த்து, அது இருந்தபடியைக் கண்டு இகழ்ந்து ஒதுக்கும் தன்மையுடையோர் இப்பொழுது மாறு வேடத்தில் வந்த அல்லமதேவனை உணரவல்லமை படைத்தவர் ஆவரோ? (வல்லமையுடையர் ஆகார் என்க) (எ.று)

முடிபு - மருவி நின்றவர் (வந்த) இவன் மருளனே என விரைவில் இங்கு அகல் அகல் என விலக்கினார். இறை உருவத்தை ஒருவரும் கண்டு உயர்ந்திலர்; உருவுகண்டு எள்ளுநர் உணர வல்லரோ? ஓகாரம் எதிர்மறை.

Koviloor Digital Library

அப்பொழுது அல்லமன் செய்த விளையாடல்கள்

1024. அல்லமன் ஆயிடை ஆடல் உன்னியே
பல்லெழு வாயுடைப் பாலன் ஆகுவன்
கொல்லிள ஏறெனக் குமரன் ஆகுவன்
வில்லென உடல்வளை விருத்தன் ஆகுவன் 40

(இ.ள்) அல்லமன் ஆயிடை = அல்லமதேவன் அப்பொழுது; ஆடல் உன்னினே - சில திருவிளையாடற் செயல்களைச் செய்யக்கருதி; பல் எழு வாயுடைப் பாலன் ஆகுவன் = பல்முளைக்கின்றவாயையுடைய குழந்தை வடிவாகத் தோன்றுவான்; கொல்இள ஏறு எனக்குமரன் ஆகுவன் = கொல்லும் இயல்பையுடைய இளமையான காளை போன்ற குமரன் வடிவனாகத்தோன்றுவான்.வில்லென உடல்வளைவிருத்தன் ஆகுவன் = வில்லைப் போல உடல் வளைந்த கிழவன் வடிவம் உள்ளவனாகவும் தோன்றுவான் (எ.று)

முடிபு - அல்லமன் ஆயிடை ஆடல்உன்னி, பாலன் ஆகுவன், குமரன் ஆகுவன் விருத்தன் ஆகுவன்.

இதுவுமது

1025. விஞ்சையர் மகிழ்வுற வீணை ஒன்று கைக்
கஞ்சமென் மலர்கொடு கானம் பாடுவன்
அஞ்சன விழிமணி அரிச்சிலம்படி
வஞ்சியர் மனம்மயல் வளர ஆடுவன் 41

(இ.ள்) விஞ்சையர் மகிழ்வுற = வித்தியாதரரும் உவகையடையும் படி; வீணை ஒன்று = வீணை ஒன்றினை; கைக் கஞ்சமென் மலர்கொடு = கையாகிய தாமரை மலரைக் கொண்டு இசை எழுப்பி ; கானம் பாடுவன் = அல்லமன் இசைப் பாடல்களைப் பாடுவான்; அஞ்சன விழிமணி அரிச்சிலம்படி வஞ்சியர் மனம் மயல் வரை ஆடுவன் - மை எழுதிய விழியையும் மாணிக்கத்தை உள்ளீடு பரலாகக் கொண்ட சிலம்பினை அணிந்த அடியையும் உடைய வஞ்சிக் கொடி போன்ற பெண்களின் உள்ளத்திலே காம மயக்கம் தோன்றுமாறு ஆடல்களை நிகழ்த்துவன் (எ.று)

முடிபு - அல்லமன், வீணை ஒன்று கைக் கொண்டு விஞ்சையர் மகிழ்வுற கானம் பாடுவர். விழியையும் அடியையும் உடைய வஞ்சியர். மனத்தில் மயல்வளர ஆடுவன்.

Koviloor Digital Library

1026. [1]இந்திரன் இவனென யானை மேற்கொளா
வந்தொரு புடைநரர் மருளத் தோன்றுவன்
[2]பந்தொடு பெயர்தரு பாணி போலவே
பந்திமுன் முடங்குளைப் பரிந டத்துவன் 42

(பா.ம்) [1]இந்திரனே என; [2]பைந்தொடி

(இ.ள்) இவன் இந்திரனே என = இவன் தேவேந்திரனே என்று கருதும்படி (அவனுக்குரியவாகனமாகிய); யானை மேற்கொளா = யானையை ஊர்தியாக மேற்கொண்டு; நரர்மருள வந்து ஒரு புடைதோன்றுவன் - மக்கள் எல்லாம் அதிசயிப்ப வந்து ஒரு பக்கத்தில் தோன்றுவன்; பந்தொடு பெயர் தரு பாணி போலவே - பந்தினுடன் அதனை வீசும் கையைப் போல இருந்து ; பந்திமுன் முடங்குளைப் பரி நடத்துவன் - குதிரைக் கூட்டங்களிடத்தே, மடங்கிய பிடரிமயிரை யுடைய குதிரையை நடத்திச் செல்வன் (எ.று)

முடிபு - யானை மேற்கொளா, ஒரு புடை வந்து, நரர் மருளத் தோன்றுவன்; பந்தொடு பெயர் தரும் பாணியைப் போல பந்திமுன் பரியை நடத்துவன்.

1027. வானிடைக் கண்டனன் மனையில் கண்டனன்
சேனையுள் கண்டனன் தெருவில் கண்டனன்
யான்எனக் கடிநகர் எங்கும் தோன்றுவன்
ஞானநற் கண்ணினால் காணும் நம்பனே 43

(இ.ள்) ஞான நல் கண்ணினால் காணும் நம்பனே = ஞானமாகிய விழியால் ஒரு பொருளாகக் காணப்படும் இவ்வல்லமதேவன்; யான் வானிடைக் கண்டனன் என்வும் = நான் வந்த ஒருவனை வானத்திலே பார்த்தேன் எனவும்; யான் மனையில் கண்டனன் எனவும் = நான் வந்த ஒருவனை குடியிருக்கும் வீட்டிலே பார்த்தேன் எனவும்; யான் சேனையுள் கண்டனன் எனவும் = யான்போர் செய்யும் படைகளிடத்தே கண்டேன் எனவும்; யான் தெருவில் கண்டனன் எனவும் = நான் எல்லோரும் நடந்து செல்லும் தெருவில் பார்த்தேன் எனவும்; (என்று இங்ஙனம் பலரும் பலவாறு சொல்லும்படி பல உருவம் உடையவனாய்); கடிநகர் எங்கும் தோன்றுவன் = விளக்கமுடைய கல்யாண நகர் எங்கும் தோன்றுபவனாயிருந்தான் (எ.று)

Koviloor Digital Library

முடிபு - ஞானக் கண்ணினால் காணும் நம்பன். யான், வானிடைக் கண்டனன் என, யான் மனையில் கண்டனன் என, யான் சேனையும் கண்டனன் என யான் தெருவிற் கண்டனன் எனத் தெருவில் தோன்றுவன்.

1028. **ஆடுநர் தம்முடன் ஆடும் நல்லிசை**
பாடுநர் தம்முடன் பாடும் மென்மலர்
சூடுநர் தம்முடன் சூடும் வாள்விதிர்த்து
ஓடுநர் தம்முடன் ஓடும் அல்லமன் 44

(இ.ள்) அல்லமன் ஆடுநர் தம்முடன் ஆடும் = அல்லமதேவன் பல்வகையாக ஆட்டத்தை நிகழ்த்துபவருடன் சேர்ந்து அவ்வாறே ஆடுவன்; நல்லிசை பாடுநர் தம்முடன் பாடும் = நல்ல இசைப் பாடல் களைப் பாடுபவர்களுடன் கூட அவர்களைப் போலவே பாடுவன்; மென்மலர் சூடுநர் தம்முடன் சூடும் = மென்மையான பூக்களை அணி பவர்களுடன் கூடி அவ்வாறே மலர்களை இவனும் அணிவன்; வாள் விதிர்த்து ஓடுநர் தம்முடன் ஓடும் = வாள் படையை அசைத்துக் கொண்டு ஓடுபவர் தம்முடன் இவனும் அவ்வாறு ஓடுவன். (எ.று)

முடிபு- அல்லமன் ஆடுநர் தம்முடன் ஆடும், இசை பாடுநர்தம் மொடும் பாடும், மலர் சூடுநர் தம்முடன் சூடும் வாள் விதிர்த்து ஓடுநர் தம் மொடும் ஓடும்.

1029. **பொருவிலா வளநகர் பொருந்தும் [1]மானிடர்**
வரைவிலா ஆடலிவ் வகைசெய் கிற்பவர்
ஒருவரோ பலர்கொலோ உணர்தி லோமென
வெருவினார் அல்லமன் விநோதம் நோக்கியே 45

(பா.ம்) [1]மானுடர்

(இ.ள்) பொருவிலா வளநகர் பொருந்தும் மானிடர் = ஒப்புமை இல்லாத வளப்பத்தையுடைய அக்கல்யாண புரியில் வாழ்ந்திருக்கும் மக்களெல்லாம்; அல்லமன் விநோதம் நோக்கியே = அல்லமதேவனு டைய இத்தகைய விளையாட்டைப் பார்த்து; வரைவிலா ஆடல் இவ்வகை செய்கிற்பவர் = அளவில்லாத திருவிளையாடல்கள் இவ்வாறு செய்யும் ஆற்றல் படைத்தோர் ; ஒருவரோ, பலர் கொலோ உணர்தி லோம் என வெருவினார் = ஒருவர் தானோ? அல்லது பலர் தாமோ என்று பாம் அறிகிலோம் என்று கூறி அஞ்சி நின்றனர். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - நகர் பொருந்தும் மானிடர் அல்லமன் விநோதம் நோக்கி; இவ்வகை வரைவிலா ஆடல் செய்கிற்பவர் ஒருவரோ பலர்கொலோ, உணர்கிலோம் என அஞ்சினர்.

அல்லமதேவரை ஐயமற அறிந்தது

1030. மண்ணிடை மறைவுறு நிதிய வைப்பினை
கண்ணிடும் அஞ்சனக் காரன் காண்கைபோல்
நண்ணிடும் உணர்வுடை நந்தி எம்பிரான்
அண்ணலை அறிந்தனன் ஐயம் இன்றியே 46

(இ.ள்) மண்ணிடை மறைவுறும் நிதிய வைப்பினை = நிலத்தின் கண்புதைக்கப் பெற்று மறைந்து கிடக்கும் பொருள் குவியலை; கண்ணிடும் அஞ்சனக்காரன் காண்கைப் போல் = கண்ணின் கண் அஞ்சனம் என்கின்ற ஒரு வகை மையினைப் பூசிக் கொண்டவன் காணுதல் போல; (கண்டறிதல் போல); நண்ணிடும் உணர்வுடை நந்தி எம்பிரான் = இறைவன் திருவருளால் அடையப் பெற்றிருக்கும் வசவதேவனாகிய எம்தலைவன்; ஐயம் இன்றியே அண்ணலை அறிந்தனன் = (திருவிளையாடல் செய்த பல வடிவத்துள் இது உண்மையான வடிவம் என்று) அல்லமதேவனது உண்மை வடிவத்தை ஐயம் இன்றியே அறிந்து கொண்டனன். (எ.று)

முடிபு - நிதிய வைப்பினை, கண்ணிட்ட அஞ்சனக்காரன் காண்பது போல (திருவருளால்) நண்ணிடும் உணர்வையுடைய நந்தி எம்பிரான் ஐயமின்றி அண்ணலை அறிந்தனன்.

அல்லமரை அறிந்த வசவதேவன் அவ்ரை வணங்கியது

1031. உடம்பெலாம் உள்ளமாய் உருகிக் கண்கள்நீர்
அடங்குறாது ஒழுகமெய் விதிர்ப்ப அன்பினால்
தொடர்ந்தெலா உயிரையும் தொண்டு கொண்டருள்
நெடுந்தகாய் அருளென நிலத்தி றைஞ்சினான் 47

(இ.ள்) அன்பினால் = தன் மனத்தில் எழுந்த அன்பினாலே; உடம்பெலாம் உள்ளமாய் உருகி = தூல உடம்பெல்லாம் சூக்கும உடம்பின் பகுதியாகிய உள்ளம் போல உருகி; கண்கள் நீர் அடங்குறாது ஒழுக = விழிகளில் அன்புக் கண்ணீர் அடங்காமல் ஒழுகிக் கொண்டே இருக்க ; மெய் விதிர்ப்ப = உடம்பு புளகம் கொள்ள; தொடர்ந்து எலா உயிரையும் தொண்டு கொண்டு அருள் நெடுந்தகாய் அருள்என =

Koviloor Digital Library

பக்குவம் நோக்கி, பின் தொடர்ந்து எல்லா உயிர்களையும் தொண்டாகக் கொண்டு அருளும் பெருமையுடையோனே! நீ அருள்வாயாக என்று கூறிக் கொண்டு; நிலத்து இறைஞ்சினான் - மண்ணின் மேல் வீழ்ந்து வணங்கினான். (எ.று)

முடிபு - (அறிந்த நந்தி எம்பிரான்) அன்பினாலே உடம்பெலாம் உள்ளமாய் உருகி, கண்கள் நீர் அடங்குறாது ஒழுக. மெய் விதிர்ப்ப, எல்லா உயிரையும் தொடர்ந்து தொண்டு கொண்டருள் நெடுந்தகையாய் அருளெனக் கூறி நிலத்திறைஞ்சினான்.

தொண்டரும் வணங்கியது

1032. தண்டநா யகனிலம் [1]தண்டில் தாழ்ந்திட
தொண்டரா யவனொடு துன்னி னாரெலாம்
கண்டுநீர் விழியுகக் கசிந்த அன்பினால்
அண்டநா யகன்றிடு வடியி றைஞ்சினார் 48

(பா.ம்) [1]நிலத்து அன்பில் தாழ்ந்தெழ

(இ.ள்) தண்ட நாயகன் நிலம் தண்டில் தாழ்ந்திட = வசவதேவன் அல்லமதேவனைக் கண்டு நிலத்தின்மேல் தண்டம்போல் வீழ்ந்து வணங்க; தொண்டராய் அவனொடு துன்னினார் எலாம் = அடியவராகி அவ்வசவதேவனோடு கூடி வந்துள்ள எல்லோரும்; கண்டு = உண்மை யான அல்லமனைக் கண்டு; நீர்விழியுக = விழியிலிருந்து அன்பு நீர்சிந்த; கசிந்த அன்பினால் = ஊறிவரும் அன்பினாலே; அண்டநாயகன் திருவடி இறைஞ்சினார் - உலகத்தலைவனாகிய அல்லமதேவனது திருவடி யினைத் தொழுதனர். (எ.று)

முடிபு- தண்ட நாயகன் தாழ்ந்திட, அவனொடு தொண்டராய் துன்னிராரெலாம் கண்டு, அன்பினால் நீர்விழியுக, அண்டநாயகன் திருவடி இறைஞ்சினார். தாழ்ந்தெழ என்ற பாடம் உண்டு அதைக் காட்டிலும் தாழ்ந்திட என்ற பாடமே நன்று.

தேவர் மலர் மழை சிந்தி துந்துபி ஆர்த்தது

1033. நந்திதன் அன்பையும் நந்தி பால்வரும்
எந்தைதன் அருளையும் [1]என்சொல் வாமெனச்
சிந்தினர் மலர்மழை தேவர் யாவரும்
துந்துபி அதிர்த்தனர் தொண்டர் ஆர்ப்பவே 49

(பா.ம்) [1]என் கொலாமென

Koviloor Digital Library

(இ.ள்) தேவர் யாவரும் = வானிலத்துள்ள எல்லாத் தேவரும்; நந்தி தன் அன்பையும் = வசவதேவன் அல்லமதேவன் பால் கொண்டிருந்த அன்பையும்; நந்திபால் வரும் எந்தைதன் அருளையும் = அத்தகைய வசவதேவன் பால் வருகின்ற எந்தையாகிய அல்லமதேவனுடைய அருள்திறத்தையும்; என்சொல்வாம் என = என்ன சொல்லிப் புகழ்வோ மெனக் கூறிக்கொண்டு; சிந்தினா் மலர்மழை = கற்பகமலரை மழை போலச் சொரிந்தனா்; தொண்டர் ஆர்ப்ப துந்துபி அதிர்த்தனா் = அடியவர் எல்லாம் ஆரவாரம் செய்யும்படி தெய்வதுந்துபி என்ற வாத்தியத்தை அதிர்த்தனா். (முழங்கினா்). (எ.று)

முடிபு - தேவர் யாவரும் நந்திதன் அன்பையும், நந்திபால்வரும் எந்தை தன் அருளையும் என் சொல்வாம் எனக்கூறி மலர் மழை சிந்தினா். தொண்டர் ஆர்ப்ப துந்துபி அதிர்த்தனா்.

கலியாணபுரி கயிலையை ஒத்தது எனல்

1034. மயலிலா நங்குரு வசவன் வாழ்தரும்
இயலினால் அல்லமன் எண்ணி வந்தருள்
செயலினால் அடியவர் திரள் களித்தலால்
கயிலையே வளங்கெழு கல்லி யாணமே 50

(இ.ள்) மயலிலா நம்குரு வசவன் வாழ்தரும் இயலினால் - மயக்க உணா்வு இல்லாத நமக்கு எல்லாம் முதற்குருவாகிய வசவதேவன் என்னும் நந்திகேஸ்வரன் வாழும் இயல்பினாலும்; அல்லமன் எண்ணி வந்தருள் செயலினால் = அல்லமன் என்ற பெயரையுடைய சிவபெரு மான், நந்தியை எண்ணி வந்தருளும் செயலினாலும்; அடியவர் திரள் களித்தலால் = இவ்விருவரையும் பார்த்து இப்பொழுது அடியவர்களின் கூட்டம் மகிழ்ச்சியை அடைதலாலும்; வளங்கெழு கல்லியாணமே கயிலையே = வளப்பத்தைப் பொருந்திய கல்யாண புரி என்னும் இந்நகரம்தானே, திருக்கயிலாய மலையாகவே சிறப்பு எய்திற்று

முடிபு - வசவன் வாழ்தரும் இயல்பினால் அல்லமன் எண்ணி வந்தருள் செயலினால், அடியவர் திரள் களித்தலால் கலியாணமே கயிலையே

அமணா்கள் அழுக்காறு நீங்காமை

1035. தெரியநற் றண்டநா யகன்றன் செய்கையும்
பெரியவக் குருபரன் பெருமை தன்னையும்

Koviloor Digital Library

கரியமெய்ச் சமணர்தாம் கண்டும் அன்பிலர்
அரியவற்று அரிது அழுக்காறு வெல்வதே 51

(இ.ள்) கரியமெய் சமணர்தாம் = கருத்த உடம்பையுடைய சமணர்கள் தாம்; நல் தண்டநாயகன் தன் செய்கையும் பெரிய அக்குருபரன் பெருமை தன்னையும் = நல்ல தண்ட நாயகன் என்னும் வசவதேவனுடைய செயல்களையும்; சிறந்த அந்த அல்லமனாகிய குருபரனுடைய பெருமை தன்னையும்; தெரியகண்டும் = நன்கு தெளிவாகத் தெரியும்படி பார்த்தும்; அன்பிலர் = வசவதேவன் மேலும் அல்லமன் மேலும் அன்பு அற்றவராயிருந்தனர்; இதற்குக் காரணம் என்ன எனில்? அவர்கள் அழுக்காறு கொண்டமையே ஆகும்; அரியவற்று அரிது அழுக்காறு வெல்வதே = ஒருவர் தம் மனத்தில் தோன்றிய பொறாமையை வெல்வது அரிய செயல்கள் பலவற்றுள்ளும் அரிய செயலாகும். (எ.று)

முடிபு - சமணர் தாம், தண்ட நாயகன் தன் செய்கையையும், குருபரனுடைய பெருமை தன்னையும் தெரியக் கண்டும் அன்பிலர் அழுக்காறு வெல்வது அரியவற்று அரிது. ஏகாரம் ஈற்றசை. இப்பாட்டு வேற்றுப் பொருள் வைப்பணி.

அல்லமதேவன் வசவேசர் அரண்மனைக்குச் சென்றது

1036. **தந்திர [1]முடிவெனும் சைவ தேசிகன்**
வந்தெதிர் தனதுதாள் வணங்கி னாரொடு
செந்திரு மகளுலாம் தெருவுள் போகியே
நந்திதன் மந்திரம் நணுகி னானரோ 52

(பா.ம்) [1]முடியெனும் சைவத்தேசிகன்

(இ.ள்) தந்திர முடிவு எனும் சைவ தேசிகன் = சிவாகமங்களின் முடிந்தகருத்து என்னும் ஞானத்தை உணர்த்தும் சைவசமய ஆசிரியராகிய அல்லமதேவன்; எதிர்வந்து தனது தாள் வணங்கினாரொடு = எதிர்கொண்டு வந்து தன்னுடைய பாதத்தை வணங்கிய வசவதேவன் முதலான தொண்டர்களோடு; செந்திரு மகள் உலாம் தெருவுள் போகிய = சிவந்த நிறத்தையுடைய திருமகள் உலாவுதற்கு இடமான தெருவின் வழியாகச் சென்று; நந்திதன் மந்திரம் நணுகினான் = வசவேசரது அரண்மனையை அடைந்தான். (அரோ-அசை)

முடிபு- சைவ தேசிகன் எதிர்வந்து தாள் வணங்கினாரொடு தெருவுள் போகியே நந்தி தன் மந்திரம் நணுகினான்

Koviloor Digital Library

அல்லம தேவன் சூனிய சிங்காதனத்தை நோக்கியது

1037. தேவரும் முனிவரும் சித்தர் ஆகிய
யாவரும் இதனியல் இன்னது என்றுளத்து
ஆய்வரும் நிலையுடைய அம்ப ராதனம்
மூவரும் அடிதொழும் முதல்வன் நோக்கினான் 53

(இ.ள்) மூவரும் அடிதொழும் முதல்வன் = அயன், கண்ணன், புராந்தகன் என்னும் மூவரும், திருவடியைத் தொழத்தக்க முதல்வனாகிய அல்லமதேவன்; தேவரும், முனிவரும், சித்தர் ஆகிய யாவரும் = வானுலகத்திலே வாழும் தேவரும்; நிலவுலகத்திலே வாழும் முனிவரும், சித்தரும் ஆகிய யாவரும்; இதன் செயல் இன்னது என்று உளத்து ஆய்வு அரு நிலையுடை அம்பராதனம் = இதனுடைய இலக்கணம் இன்னது என்று தம் உளத்தினால் ஆய்வதற்கு அரிய ஏழுநிலைகளையுடைய சூன்யசிங்காதனத்தை; நோக்கினான் = அதன் முன் நின்று பார்த்தான். (எ.று)

முடிபு - முதல்வன், தேவன், முனிவர், சித்தர் ஆகிய யாவரும் இதன் இயல் இன்னது என்று உளத்து ஆய்வு அரு நிலையுடை அம்பராதனத்தை நோக்கினான். மூவரும் அடி தொழும் முதல்வன் என்ற கருத்தை துதி கதியில் (53) ''ஆக்குறும் செயலதொன்றே'' என்னும் பாடலால் உணர்க.

சூன்ய சிங்காதனத்தின்மேல் அல்லமன் ஏறியது

1038. அசைவறும் அறிவுரு ஆகும் அல்லமன்
திசையுறும் மணியணை சென்னி மீமிசை
வசையறு வழிநடை வசவ தேசிகன்
இசையமர் உலகிடை ஏற ஏறினான் 54

(இ.ள்) அசைவு அறும் அறிவு உரு ஆகும் அல்லமன் = ஐயவிபரீதங்களால் அசைதல் அற்ற மெய்யுணர்வே உருவமாக அமைந்த அல்லமதேவன்; திசை உறும் மணிஅணை சென்னி மீமிசை = பலதிசைளிலிருந்தும் கொண்டு வரப்பட்ட மணிகளரல் செய்தமைத்த சூனியசிங்காதனத்தின் உச்சியின் மேலிடத்தே; வசையறு வழிநடை வசவதேசிகன் இசை = பழிப்பற்ற வழியிலே நடக்கின்ற வசவதேசிகனது பெரும்புகழ்; அமர் உலகிடை ஏற ஏறினான் = அமரர் உலகத்தின் கண்ணே ஏறும்படி எறினான் (எ.று)

முடிபு - அல்லமன் அணைசென்னி மீமிசை வசவதேசிகன் இசை

Koviloor Digital Library

அமரர் உலகிடை ஏற ஏறினான். அமரர் என்னம் சொல் ஈறுகுறைந்து அமர் என நின்றது. மீமிசை என்றது = மீதானத்தை ;

ஆதாரத்தாலே நிராதாரத்தே சென்று
மீதானத்தே செல உந்தீபற
விமலர்க்கு இடமதென்று உந்தீபற

என்னும் திருவுந்தியார் பாட்டால் ஆதாரம் ஆறும் நிராதாரம் ஒன்றம் ஆக ஏழையும் கடந்து நிற்பது மீதானம் என்னும் செய்தி புலனாகும்.

1039. **கூறரும் ஒளியுடை குதிரைத் தேரினான்**
வேறொரு மணிமய வெற்பு இவர்ந்தெனத்
தேறரும் அணைமிசை தேசி கோத்தமன்
ஏறலும் மலர்மழை இழிந்த என்பவே 55

(இ.ள்) கூறுஅரும் ஒளியுடை குதிரைத் தேரினான் = சொல்லுதற்கரிய ஒளியினைப் பெற்ற பச்சைக் குதிரையைக் கட்டிய தேரினையுடைய சூரியதேவன்; வேறு ஒரு மணிமய வெற்பு இவர்ந்தென = உதயமலை அல்லாமல் மற்றொரு மணிமயமான மலையிலே ஏறினாற்போல; தேசிகோத்தமன் = ஆசிரியருள் உயர்ந்தோனாகிய அல்லமதேவன்; தேறு அரும் அணை மிசை ஏறலும் = தெளிதற்கரிய அச்சூனிய சிங்காதனத்தின் கண்ணே ஏறுதலும்; மலர்மழை இழிந்த என்பவே = பலரும் சொரிந்த அல்லது தேவர்கள் சொரிந்த மலர் மழை பெய்தது என்று அறிஞர் கூறுவர். (எ.று) (ஏகாரம் - ஈற்றசை)

முடிபு - தேசிகோத்தமன் குதிரைத் தேரினான், வேறு ஒரு மணிமய வெற்பு இவர்ந்தென, அணைமிசை ஏறலும், மலர்மழை இழிந்த என்ப. என்ப என்கின்ற சொல், கன்னட மொழியில் பிரபுலிங்கலீலை முன்னியற்றிய **சாமரசனைக்** குறிக்கும் போலும்; முன்னே கயிலாச கதியில் இறைவன் ஆதனத்திலிருந்த சிறப்பைக் கூறும்போது, ''மின்னு செம்மணி வேதிகை ஒன்றன்மேல்; மன்னு செங்கதிர் மண்டலத்து உற்றனன்; என்ன வந்தங்கிருந்தனன் என்பவே''; என்ற பாடலை ஒப்புநோக்குக.

பல்லிய முழக்கமும் அடியவர் ஒலித்த அரகர எனும் முழக்கமும் ஓங்கி எழுந்தமை

1040. **முரசொடு பல்லிய முழக்கெழுந்தன**
துரிசறும் அடியவர் தொகுதி கைகுவித்(து)

Koviloor Digital Library

அரகர எனுமொலி அண்ட கூட மட்(டு)
ஒரு கணம் ஒடுங்குமுன் ஓடிற்று என்பவே 56

(இ.ள்) முரசு ஒடு பல்லிய முழக்கு எழுந்தன = அப்பொழுது பேரிகை என்னும் வாத்தியத்துடன், பல வாத்தியங்களுடைய முழக்கங்களும் கலந்து எழுந்தன; துரிசு அறும் அடியவர் தொகுதி கைகுவித்து அரகர எனுமொலி = குற்றமறும் அடியவர்கள் கூட்டம், தம் கைகளை குவித்து வணங்கி அரகர என்று ஒலித்த ஒலி; ஒரு கணம் ஒடுங்குமுன் அண்டகூட மட்டு ஓடிற்று என்பவவே = ஒரு கணப் பொழுது முடிவதற்குள் மேல் அண்டத்தில் உச்சிவரை ஓடி நிறைந்தது என்றனர் அறிஞர். (எ.று)

முடிபு - முரசொடு பல்லிய முழக்கு எழுந்தன. அடியவர் தொகுதி கைகுவித்து அரகர எனுமொலி ஒருகணம் ஒடுங்கு முன் அண்டகூட மட்டும் ஓடிற்று என்பவே.

வேறு

1041. முதனிலை முதலா மூவிரு நிலையின்
மூலமாம் முதலவா தார
இதழ்அவிழ் கமலப் [1]பொகுட்டினும் நின்ற
இலிங்கமோர் ஆறென நின்று
நுதல்மிசை இலகும் நிட்களம் போல
நுவன்ற ஏழாம் நிலைஆகும்
அதன்மிசை அமலன் அல்லம தேவன்
அமர்ந்தனன் அமரரும் வியப்ப 57

(பா.ம்) [1]பொகுட்டினுள்

(இ.ள்) முதனிலை முதலா மூவிரு நிலையின் = வசவதேவன் அமைத்த சிங்காதனத்தில் உள்ள, முதல் நிலை முதலான ஆறு நிலைகளுள்; மூலமாம் முதல ஆதார இதழ் அவிழ்கமலப் பொகுட்டினும் நின்ற = மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்களில் உள்ள இதழ் அவிழ்ந்த தாமரைக் கொட்டைகள் தோறும் ஏறி நின்ற இலிங்கம் ஓர் ஆறு என நின்று = ஆசாரலிங்கம்; குருலிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், பிரசாத லிங்கம், மகாலிங்கம் என்னும் ஆறு இலிங்கங்களைப் போல் அந்நிலைகளில் அல்லமன் நின்று; நுதல் மிசை இலகும் நிட்களம் போல நுவன்ற ஏழாம் நிலை ஆகும் அதன்மிசை = நெற்றிக்கு மேலேயுள்ள நிராதாரத்தில்

Koviloor Digital Library

விளங்கும் நிட்கள லிங்கம் போல, சொல்லப்பட்ட சூனிய சிங்காதனத்தில் உள்ள ஏழாம் நிலைக்கு மேலே; அமரரும் வியப்ப அமலன் அல்லமதேவன் அமர்ந்தனன் = தேவர்களும் வியக்கும்படி அல்லம தேவன் உட்கார்ந்தான் (எ.று)

முடிபு - (சூனிய சிங்காதனத்திலுள்ள) முதனிலை முதலா மூவிரு நிலையில் மூலமாம் முதல ஆதார கமலப் பொகுட்டினுள் நின்ற ஆறு இலிங்கங்களைப் போல அல்லமன் (அங்கே அங்கே நின்று) நுதல்மிசை இலகும் நிட்களம் போல நுவன்ற ஏழாம் நிலை ஆகும். அதன் மிசை அல்லம தேவன் அமரரும் வியப்ப இருந்தனன்.

முதனிலை முதலா மூவிரு நிலை என்றது, வசவ தேவன் அமைத்த சிங்காதனத்திலுள்ள ஆறு நிலைகளைக் குறிக்கும். மூலமாம் முதல என்பதற்கு மூலாதாரமாம் முதலான ஆறு ஆதாரங்கள் என்று பொருள் கொள்க. அல்லம தேவன் சூனிய சிங்காதனத்தில் அமைந்த ஏழு நிலைகளுள் ஒவ்வொரு நிலையிலும் நின்று நின்று ஒவ்வொரு நிலையையும் கடந்து ஏழாம் நிலையை அடைந்து அதற்கு மேலுள்ள அம்பராதனம் என்னும் சூனிய சிங்காதனத்தில் அமர்ந்த செய்தியை இப்பாட்டு கூறுகின்றது. அல்லம தேவன் சூன்யசிங்காதனத்தின் **முதல் நிலையில்** ஏறி நின்ற பொழுது, **மூலாதாரத்திலுள்ள ஆசாரலிங்கம்** போல் விளங்கினான். **இரண்டாம் நிலையில்** ஏறிநின்ற பொழுது **சுவாதிட்டானத்திலுள்ள குருலிங்கம்** போல விளங்கினான்; **மூன்றாம் நிலையில்** ஏறி நின்ற பொழுது **மணிபூரகத்திலுள்ள சிவலிங்கம்** போல விளங்கினான்; **நான்காம் நிலையில்** ஏறி நின்றபொழுது **அநாகதத்திலுள்ள சங்கம லிங்கம்** என்னும் சரலிங்கம் போல் விளங்கினான். **ஐந்தாம் நிலையில்** ஏறி நின்றபொழுது **விசுத்தியிலுள்ள பிரசாத லிங்கம்** போல் விளங்கினான். **ஆறாம் நிலையில்** ஏறி நின்ற பொழுது **ஆஞ்ஞை யிலுள்ள மகாலிங்கம்** போல் விளங்கினான். **ஏழாம் நிலையில்** ஏறிநின்றபொழுது நிராதாரத்தில் நின்ற **நிஷ்கள லிங்கம்** போல் விளங்கி அதன் மிசையிலுள்ள சூன்ய சிங்காதனத்தில் அமர்ந்தனன்.

1042. உடம்பொடு பொறி நால் கரணமற்று
உயிரென்று உரைத்திடப் படுமுபாதிகளை
கடந்துள நிலையில் சோதியாய் [1]இலங்கக்
கண்டிடும் துரியனைப் போல்

Koviloor Digital Library

நெடுந்தவி சமைய அமைத்தசெம்
மணிப்பொன் நிலைகளோர் ஏழையும் கடவா
இடந்தனி விசும்பென்(று) அல்லமன் இருப்ப
இருந்தவர் யாவரும் கண்டார் 58

(பா.ம்) [1]இலங்கை .

(இ.ள்) உடம்பொடு பொறி, நால்கரணம், மற்றுஉயிர், என்று உரைத்திடப்படும் உபாதிகளைக் கடந்துள நிலையில் = மகாவாக்கிய விசாரம் செய்பவர், சீவனைக் குறிக்கும். த்வம் என்னும் சொல்லின் பொருளை ஆராயும் பொழுது சீவனுக்குள்ள உடம்பு, இந்திரியம், மனம், புத்தி, அகங்காரம், சித்தம், பிராணன் என்னும் காரிய உபாதிகள் எழும். சீவனல்ல என நீக்கும் நிலையின் கண்; சோதியாய் இலங்கக் கண்டிடும் துரியனைப் போல = அதற்கு மேலே அறிவு மயமாய் விளங்குதலை கண்டுணரப்படும் சீவதுரியனைப் போல; நெடும்தவிசு அமைய அமைத்த செம்மணிப் பொன் நிலைகள் ஓர் ஏழையும் கடவா இடம் = உயர்ந்த தவிசு அமையும்படி செம்மணி, பொன் இவற்றால் அமைத்த ஒப்பற்ற ஏழுநிலைகளையும் கடந்துள்ள இடம்; தனிவிசும்பு என்று அல்லமன் இருப்ப = அவ்விடமே (சித்+ஆகாயம்) சிதாகாயமாகிய ஒப்பற்ற விசும்பு என்று கருதும் படி அவ்விசும்பில் அல்லமதேவன் எழுந்தருள; இருந்தவர் யாவரும் கண்டார் = அங்கு வந்திருந்த எல்லோரும் பார்த்தார்கள்; இருந்தவர் என்பதற்கு பெரிய தவமுடையோர் என்று பொருள் கொள்ளினும் அமையும்.

முடிபு - உடம்பொடு, பொறி, நாற்கரணம், உயிர் என்று உரைத்திடப்படும் உபாதிகளைக் கடந்துள நிலையில் கண்டிடும் துரியனைப் போல, நிலைகள் ஓர் ஏழையும் கடவா இடம் தனி, விசும்பு என்று அல்லமன் இருப்ப, (அவ் இருப்பை) இருந்தவர் யாவரும் கண்டார். இப்பாட்டின் பொருளை சூன்ய சிங்காதனம் இயற்றிய கதியில் உள்ள 7ஆம் பாட்டில், ''காரண உபாதி ஏழு மேல் கண்டிடும் உபாதி போல'' என்பதற்கு எழுதிய உரையுடன் ஒப்பிட்டு படிக்க. (7வது பாட்டு). இப்பாட்டில் துரியன் என்றது சீவதுரியனை. இவ்வாறே தத்பதப் பொருளாகிய பரத்தை உணரும் பொழுது, காரண உபாதி ஏழனையும் நீக்கி உணர்வர். அதற்கு பரதுரியம் என்று பெயர். இதற்கு சீவதுரியம் என்று பெயர். அவ்விடத்தே பரதுரியனையும், இவ்விடத்தே சீவதுரியனைக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு கூறியுள்ளதைக் கருதினால் அல்லமதேவன், சூன்யசிங்காதனத்திலுள்ள ஏழு நிலைகளையும்

Koviloor Digital Library

தாண்டி, அப்பாலுள்ள அம்பராதனத்தில் காணப்படும் காட்சி. சீவதுரியனையும், பரதுரியனையும் கண்டாற்போன்றது என்று கூறிய வாறாம்.

அப்பொழுது முக்கணான் அடியவர் பக்தி பரவசத்தால் செய்த செயல்கள்

1043. ஆடினர் சிலவர் அங்கைகள் கொட்டி
அல்லமன் பெரியதோர் புகழைப்
பாடினர் சிலவர் விழிபொழி வெள்ளம்
பாய்வுறக் குவித்தகை தலைமேல்
சூடினர் சிலவர் நிலமிசை வீழ்ந்து
தொழுதனர் சிலவர் மெய்ப்புளகம்
மூடினர் சிலவர் பரவினர் சிலவர்
முக்கணான் அடியவர் அன்றே 59

(இ.ள்) முக்கணான் அடியவர் = மூன்று கண்ணையுடைய சிவபெருமானுடைய அடியவருள்; சிலவர் ஆடினர் = சிலர் ஆனந்தக் கூத்தாடினர்; சிலவர் அங்கைகள் கொட்டி அல்லமன் பெரியதோர் புகழைப் பாடினர் = சிலர் கைகளால்தாளம் கொட்டி அல்லமன் மிக்க புகழைக் கீர்த்தனை என்னும்படி பாடினர்; விழிபொழி வெள்ளம் பாய்வுறக் குறித்தகை தலைமேல் சூடினர் சிலவர் = சிலர் கண்ணிலிருந்து பொழிகின்ற ஆனந்தக்கண்ணீர் வெள்ளம் பாய குவித்த கையினைத் தலைமேல் சூடினர்; நிலமிசை வீழ்ந்து தொழுதனர் சிலவர் = சிலர் மண்ணிடை வீழ்ந்து வணங்கினர்; மெய்ப்புளகம் மூடினர் சிலவர் = சிலர் உடம்பின் கண் புளகத்தால் மூடப்பட்டவரானார்; பரவினர் சிலவர் = சிலர் முன்னின்று மலர்தூவி துதித்தனர். (அர்ச்சனை)

முடிபு - முக்கணான் அடியவருள் சிலர் ஆடினர்; சிலர் கைகொட்டி அல்லமன் புகழைப் பாடினர்; சிலர் விழிபொழி வெள்ளம் பாய்வுற குவித்த கையைத் தலைமேல் சூடினர். சிலர் நிலமிசை வீழ்ந்து தொழுதனர். சிலர் புளகம் மூடினர். சிலர் பரவினர். பரவுதலை இக்காலத்தவர் அர்ச்சனை என்பர்.

அல்லமன் சூனிய சிங்காதனத்தின் மேல் அமர்ந்துள்ள நிலையைக் கண்டவசவதேவன் பரமாநந்தவாரியில் மூழ்கியது

1043. இந்தியம் விடயம் கரணமெய் என்னும்
யாவையும் காண்கிலன் ஓங்கும்

Koviloor Digital Library

அந்தர அணைமேல் இவர்ந்திருந்து அருளும்
அண்ணலைக் கண்ட அப்பொழுதே
முந்திய பரமா னந்தவா ரிதியுள்
மூழ்கினன் அழுந்தினன் அம்மா
தந்திரம் எவற்றும் சிறந்தது சைவ
தந்திரம் எனும்அருள் நந்தி

(இ.ள்) தந்திரம் எவற்றும் சிறந்தது சைவதந்திரம் எனும் அருள்நந்தி = ஆகமங்கள் யாவற்றினுள்ளும் சிறப்புடையது சைவாகமமே என்று கூறி அருளும் வசவதேவன்; அந்தர அணைமேல் இவர்ந்திருந்து அருளும் அண்ணலைக் கண்ட அப்பொழுதே = சூனிய சிங்காதனத்தின் மேலே ஏறி இருந்தருளும் தலைவனாகிய அல்லமனை பார்த்த அதே காலத்தில் (அதற்குப்புறம்பான); இந்தியம் விடயம் கரணம் மெய் என்னும் யாவையும் காண்கிலன் = ஞானேந்திரியம், கன் மேந்திரியங் களையும், அவற்றிற்கு விடயமான சப்தம் முதலான பத்தினையும்; இந்திரியகள் விஷயங்களைப் பற்றி இயங்குகின்ற அந்தக் கரணங் களையும்; இவற்றிற்கு எல்லாம் இடமான உடம்பு ஆகிய யாவையும் காண்கிலன்; முந்தியபரமானந்த வாரிதியுள் மூழ்கினன் அழுந்தினன் அம்மா = முதன்மையான, மேலான ஆனந்தக் கடலில் மூழ்கி, மேல் எழாமல் அழுந்தியே விட்டான். (எ.று) இந்நிலை வியப்புக்குரியது.

முடிபு- அருள்நந்தி, அந்தர அணைமேல் இவர்ந்து இருந்தருளும் அண்ணலைக் கண்ட அப்பொழுதே, இந்தியம், விடயம், கரணம், மெய் என்னும் யாவையும் கண்டிலன். பரமானந்த வாரியுள் மூழ்கினன் அழுந்தினன் அம்மா. மூழ்கினன் என்பது முற்றெச்சம். மூழ்கி அழுந்தினன் என முடியும்.

அல்லமதேவன் வசவனைப் புகழ்ந்தது

1045. மண்டலம் அவத்தை குணம்அபிமானம்
மலமிவை அனைத்தையும் கடந்துள்
கண்டிடும் வண்ணம் புறத்துநீ எம்மை
காணிய அமைத்த இச்செய்கை
வெண்திரை சுருட்டும் கருங்கடல் உலகில்
வேறுளர் செய்வதன் றென்று
தொண்டர்கள் துதிக்கும் வசவனைத் துதித்தான்
சுரரெலாம் துதிக்கும் எம்பெருமான்

Koviloor Digital Library

(இ.ள்) சுரர் எலாம் துதிக்கும் எம்பெருமான் = தேவர்கள் எல்லாம் புகழத் தக்க எம் அல்லமதேவன்; (வசவனை நோக்கி) மண்டலம் அவத்தை குணம், அபிமானம், மலம், இவை அனைத்தையும் கடந்து உள் கண்டிடும் வண்ணம் = அக்கினி மண்டலம், ஆதித்த மண்டலம், சந்திர மண்டலம் என்னும் மூன்று மண்டலங்களையும், சாக்கிரம், சொர்ப்பனம், சுழுத்தி, துரியம் என்னும் அவத்தைகளையும், தமோ குணம், இரசோகுணம், சத்துவ குணம் என்னும் முக்குணங்களையும், அபினிவேசம் என்னும் பற்றினையும்; அறியாமையைச் செய்யும் அவித்தை என்னும் மலத்தையும், ஆகிய இவை அனைத்தையும் கடந்து அகத்தே என்னைக் காணுதல் போல; புறத்து நீ எம்மைகாணிய அமைத்த இச்செய்கை = அகத்தே என்னைக் காண்பது போல, புறவுலகத்திலே நீ எம்மை காணும் பொருட்டு அமைத்த இந்த செயப்படு பொருளாகிய சூன்யசிங்காதனத்தை; வெண்திரை சுருட்டும் கரும்கடல் உலகில் வேறுளர் செய்வது அன்று என்று - வெண்மையான அலையை வீசும் கருத்த நிறமுடைய கடல் சூழ்ந்த உலகில், உன்னைத்தவிர்த்து வேறுளார் எவரும் செய்வது அன்று என்று சொல்லி தொண்டர்கள் துதிக்கும் வசவனைத் துதித்தான் - அடியார்கள் துதிக்கும் வசவதேவனை ஆண்டவனாகிய அல்லமதேவனும் துதித்தான் (எ.று)

முடிபு - சுரர் எலாம் துதிக்கும் எம்பெருமான், வசவதேவனைப் பார்த்து, மண்டலமும், அவத்தையும், குணமும், அபிமானமும், மலமும் என்னும் இவை அனைத்தையும் கடந்து உள்ளே (எம்மை) கண்டிடும் வண்ணம் புறத்து, நீ எம்மைக்காண வேண்டி அமைத்த இச்செய்கை உலகில் வேறுளர் செய்வது அன்று எனறு கூறி, வசவனைத்துதித்தான். செய்கை செய்வதன்றென்று என்று கூட்டிப் பொருள்கொள்க.

1046. உன்னருள் உளதேல் கமலன்மால் தொழிலும்
ஒருசிறு துரும்பு செய்கிற்கும்
என்னநல் வசவன் புகன்றுகை கூப்பி
இணைவிழி புனலுக உருகித்
தன்னுணர் கிலனாய் வசமற நிற்பத்
தண்கதிர்ச் செம்மணி குயின்ற
பொன்னரி அணைமேல் விசும்புற இருந்தான்
புல்லரும் அல்லம தேவன் 62

Koviloor Digital Library

(இ.ள்) நல்வசவன் = அல்லமன் துதியைக் கேட்ட நல்ல வசவ தேவன்; (அல்லம தேவனைப் பார்த்து); உன் அருள் உளதேல் = உன்னுடைய திருவருள் மட்டும் இருக்குமேயானால்; கமலன் மால் தொழிலும், ஒரு சிறு துரும்பும் செய்கிற்கும் என்ன புகன்று = அயன், திருமால் என்னும் இருவர் செய்கின்ற படைத்தல், காத்தல் முதலான தொழில்களை ஒன்றாகிய சிறுதுரும்பும் செய்து விடும் எனக்கூறி; கைகூப்பி இணைவிழிபுனல் உருகித் தன் உணர்கிலனாய் வசமற நிற்ப = கைகுவித்துத் தொழுது, இரண்டு விழிகளிலிருந்தும் அன்பு கண்ணீர் சிந்த மனம் உருகி ஆன்மாவாகிய தன்னை உணராதவனாய்; தன் வசமிழந்து பரவசமாய் நிற்குமாறு; புல்லரும் அல்லமதேவன் = பொருந்துதற்கு அரிய அல்லமதேவன்; தண்கதிர் செம்மணி குயின்ற பொன்னரி அணைமேல் விசும்புற இருந்தான் = குளிர்ந்த ஒளிகளை வீசும் நல்ல மணிகள் பதித்துச் செய்யப்பெற்ற, பொன்னால் செய்த சிங்காதனத்தின் மேலே உள்ள அம்பராசனம் என்னும் விசும்பின்கண் பொருந்த எழுந்தருளி இருந்தான் (எ.று)

முடிபு - நல்வசவன் (அல்லமனை நோக்கி) உன் அருள் உளதேல், கமலன் மால் தொழிலையும், ஒரு சிறு துரும்பு செய்கிற்கும் என்னப் புகன்று, கைகூப்பி, விழிபுனலுக உருகி, தன்னை உணர்கிலனாய் வசமற நிற்ப. புல்லரும் அல்லமதேவன், மணிகுயின்ற பொன் அரியணை மேல் விசும்புற இருந்தான். சிறுதுரும்பும் என்ற உம்மை இழிவு சிறப்பும்மை.

இருபத்திரண்டாவது
சூனிய சிங்காதன ஆரோகண கதி முற்றிற்று

Koviloor Digital Library

இருபத்து மூன்றாவது

அல்லமன் ஆரும்பசிகெட உண்ட கதி

முன்னே தலைப்பு அமைத்தவர்கள் இதனை ஆரோகணகதி என்ற பெயரால் அமைத்துள்ளனர். ஆனால் இக்கதியின் முதற் செய்யுளையும் இக்கதியின் ஈற்றிலுள்ள 63ம் பாடலாகிய 'மாறனடித்த' என்று தொடங்கும் பாடலின் பொருளையும் ஆராய்ந்து உணர்ந்தால் 'ஆரும் பசி கெட உண்டகதி' என்று பெயர் வைத்தலே பொருந்தும் என்க. யாரும் என்னும் வினாச்சொல் ஆரும் என மருவிற்று.

ஆரும்பசிகெட உண்டகதி

வேறு

கலி விருத்தம்

1047. ஒருவர் உண்ண ஒருவர் பசி கெடார்
தரையில் [1]என்னும் தகுமொழி பொய்த்திட
அருளின் அல்லமன் ஆரும் பசிகெட
விரவி உண்ட மிகுதி விளம்புவாம் 1

(பா.ம்) [1]எண்ணும்

(இ.ள்) தரையில் = இவ்வுலகத்தின் கண்ணே; ஒருவர் உண்ண ஒருவர் பசிகெடார் என்னும் தகுமொழி பொய்த்திட = ஒருவர் உணவு அருந்த மற்றொருவர் பசி நீங்கார் என்று வழங்கும் பழமொழி பொய்யாய்ப் போகுமாறு; அருளின் அல்லமன் = எல்லா உயிர் களிடத்தும் அருளினை உடைய அல்லம தேவன்; ஆரும் பசிகெட = எல்லா உயிர்களும் பசி நீங்குமாறு; விரவி உண்ட மிகுதி விளம்புவாம் = அவ்உயிர்களுக்காகத் தான் கலந்துண்ட செயற் கருங் செயலை யாம் கூறுவாம்.

முடிபு - தரையில் ஒருவர் உண்ண ஒருவர் பசிகெடார் எனும் மொழி பொய்த்திட அல்லமன் ஆரும் பசிகெட உண்ட மிகுதியை விளம்புவாம். மிகுதி என்பது மிக்க பெருஞ்செயல் அதிசயமுமாம்.

அல்லம தேவர் சூன்ய சிங்காதனத்து இருந்தது

1048. தண்ணம் திங்களில் தண்ணெனத் [1]தன்கதிர்
வண்ணம் குன்றுறா ஞாயிறு வார்சிலைப்

Koviloor Digital Library

பண்ணம் குன்றுறு பான்மையின் ஆதனத்(து)
எண்ணந் தேவன் இருந்தருள் காலையில் 2

(பா.ம்) [1]தண்கதிர்

(இ.ள்) தன்கதிர் = தன்னுடைய வெயில் (ஒளி); தண்ணம் திங்களில்தண் என = குளிர்ந்த திங்களினுடைய நிலவொளியைப் போல் குளிர்ந்து விளங்குமாறு; வண்ணம் குன்று உறா ஞாயிறு = ஏனைய இயல்புகளெல்லாம் குறையாத சூரியனானவன்; வார்சிலை பண்ணம் குன்றுறு பான்மையின் = கட்டமைந்த வில்லாக செய்யப்படும்அழகிய மேருமலையின் மேல் விளங்கிய தோற்றத்தை ஒவ்வும்படி; எண் நம் தேவன் = கருதப்படும் நம்முடைய தேவனாகிய அல்லமன்; ஆதனத்து இருந்து அருள்காலையில் = சூன்யசிங்காதனத்தின் மேல் எழுந்தருளி இருந்த காலத்திலே. (எ.று)

முடிபு - ஞாயிறு தன்கதிர் திங்களில் தண்என வண்ணம் குன்றுறாமல் குன்று உறு பான்மையில் நம் தேவன் ஆதனத்து இருந்தருள் காலையில்.

வார்சிலை பண்ணம் குன்று என்றது மகாமேரு மலையினை. அது இறைவனுக்கு வில்லாக அமைதலின் வார்சிலை பண்ணம் குன்று எனக் கூறினார். அல்லமன் சூன்ய சிங்காதனத்தின் மேலே இருந்து ஞாயிறு மேருமலையின் உச்சியில் தன்னுடைய வெயிலை தண்மை தரும் படி மாற்றிக் கொண்டு அதன் மேல் இருந்ததைப் போல அல்லமன் இருந்தார் என்பது உவமை அணி. இங்கே உவமைப் பொருளைத் திருத்திக் கொண்டு உவமை கூறுவதால் உவமையணியில் ஒருவகைப்படும்.

ஆதனத்து உற்ற அல்லம தேவரை கண்டிருந்த வசவரின் நிலை

1049. வசவன் உள்ளம் வயல்புகு நீரென
[1]விசயன் அல்லமன் மேனி [2]வடிவமாய்
அசைவி லன்பிறி தொன்று மறிந்திலன்
இசையும் ஓவியம் என்ன இருந்தனன் 3

(பா.ம்) [1]விசையன்; விசையின்; [2]வடிவமா

(இ.ள்) வசவன் உள்ளம் = வசவ தேவரது மனமானது; வயல் புகு நீர் என = வயலிலே புகுந்த நீர் அவ்வயல் முற்றும் நிறைந்திருப்பது போல. (வேறு வயலில் புகாமல்) விசயன் அல்லமன் மேனி வடிவமாய் = வெற்றியையுடைய அல்லம தேவனது திருமேனி வடிவத்தின்

Koviloor Digital Library

அளவேயாகி (வேறு எந்த பொருளையும் அறியாமல்) இருக்க; அசை விலன் பிறிது ஒன்றும் அறிந்திலன் இசையும் ஓவியம் என்ன இருந்தனன் = (அவ்வசவதேவன்) உடல் மனம் முதலியன அசையாதவனாயும் வேறு ஒன்றையும் அறியாதவனாயும் எழுதிய சித்திரம் போல் இருந்தான். (எ.று)

முடிவு - வசவனது உள்ளம் வயல் புகு நீரென அல்லமன் மேனி வடிவமாய் (இருக்க) அவ்வசவன் அசைவிலன் பிறிதொன்றும் அறிந்திலன் ஓவியம் என்ன இருந்தனன்.

ஒரு வயலில் புகுந்த நீர் அவ்வயல் முற்றும் பரவி. அடுத்த வயலிற் செல்லாது இருத்தலைப்போல அல்ல மதேவரைக் கண்ட வசவன் உள்ளம் அல்லமதேவன் வடிவத்தளவேயாகி வேறுஎவரையும் எப்பொரு ளையும் உணராமல் இருந்துவிட அதனால் வசவன் அசையாதவனாய் பிறிதொன்றை அறியாதவனாய் சித்திரத்தை ஒத்து இருந்தேவிட்டான் என்ற செய்தியைக் கூறுவதால். தன்னுடைய திருமடத்திற்கு வர்துள்ள அடியார்கள் யாரையும் எண்ணி சங்கம பூசையை செய்யாமலிருந்து விட்டார் என்பதைக் குறிப்பிட்டார்.

சென்ன வசவனும் அல்லம தேவரைக் கண்டிருந்த நிலை

1050. **கழும ணித்தவிசு என்னும் கலத்திடை**
அழிவ றத்திகழ் அல்லமன் ஆகிய
செழிய நற்சுதை சென்ன வசவனும்
விழியி னுக்கு விருந்திட் டனனரோ 4

(இ.ள்) சென்னவசவனும் = அப்பொழுது சென்ன வசவதேவனும்; கழுமணித்தவிசு என்னும்கலத்திடை = தூய்மை செய்த மணிகள் பதித்துச் செய்த சூன்ய சிங்காதனம் என்னும் உண்கலத்தின்கண்ணே; அழிவு அறத்திகழ் அல்லமன் ஆகிய செழிய நற்சுதை = நிலை பெற விளங்கும் அல்லமன் என்னும் செழுமை வாய்ந்த நல்ல அமிழ்தத்தை ; விழியினுக்கு விருந்திட்டனன் = தன்னுடைய புறவிழிக்கும் அகவிழிக்கும் விருந்தாக அளித்தான் (எ.று). (அரோ - அசை).

முடிபு - சென்ன வசவனும் தவிசு என்னும் கலத்திடை திகழ் அல்ல மனாகியசுதையை விருந்திட்டனன். தவிசை உண்கலமாகவும் அல்லமனை சுதை யாகவும் உருவகித்தலால் உருவக அணியாகும்.

Koviloor Digital Library

மோளிகைமாறனும் மடிவால மாச்சையனும் அல்லம தேவரை கண்டு இருந்தது

1051. முனிவி னைக்கொலும் மோளிகை [1]மாறனும்
வினை யி னைத்தெறும் மெய்ம்மடி வாலனும்
தனைநி கர்க்கும் தவிசமர் பூவினை
மனமெ னப்படும் வண்டுற விட்டனர் 5

(பா.ம்) [1]மாரன்

(இ.ள்) முனிவினைக் கொல்லும் மோளிகைமாறனும் = சினத்தினைக் கொல்லும் மோளிகை மாற ஐயர் என்னும் தொண்டனும் ; வினையினைத் தெறும் மெய்ம்மடிவாலனும் = கர்மம் என்னும் பாசத்தை அழிக்கும் உண்மையான மடிவால மாச்சையனும்; தவிசு அமர்தனை நிகர்க்கும் பூவினை = சூனியசிங்காதனத்திலே எழுந்தருளி இருக்கும் தன்னைத் தானே ஒத்த அல்லம தேவனாகிய மலர்த்தேனை; மனம் எனப்படும் வண்டுற விட்டனர் = தங்களுடைய மனம் என்கின்ற வண்டு பொருந்தி உண்ணும்படி செலுத்தினர்.(எ.று)

முடிபு - மோளிகை மாறனும் மடிவாலனும் தவிசமர் பூவினை மனம் எனப்படும் வண்டு உற விட்டனர். பூவினை என்ற இடத்தில் உள்ள பூ என்னும் சொல் தேனை உணர்த்தலால் ஆகுபெயர். மோளிகை மாறய்யர் என்பவர் வீரசைவ மரபினர் இவரை ''அறுவகை உட்பகை அற்று. அகத்துளே உறுசுடர் நீங்கலாவுளத்தர்'' என்று வசவ புராணம் சிறப்பித்துக் கூறும். இவர் விறகு வெட்டி அதைவிற்று அப்பொருளைக் கொண்டு அடியார் பூசை செய்து வந்தார். இவரது அருட்செயல்களை வசவ புராணத்துட் காண்க.

இருவகைத் தொண்டரும் அல்லமனைக் கண்டிருந்தது

1052. முன்னி ருந்த முதுக்குறை வாளரும்
பின்ன டைந்த பெரியரும் [1]ஆகிய
மன்னி ருந்த மணித்தவி சின்புடைத்
துன்னி எங்கணும் சூழ்ந்தனர் தொண்டரே 6

(பா.ம்) [1]ஆகியே

(இ.ள்) முன் இருந்த முதுக்குறை வாளரும் = முற்காலத்திலிருந்தே வீர சைவ சமயத்தைப் பற்றி ஒழுகும் பேறறிவுக்கிடமான புராதனகணத் தரும்; பின் அடைந்த பெரியரும் = பிற்காலத்திலே வீரசைவ சமயத்தில்

Koviloor Digital Library

வந்து பொருந்திய பேரறிவாளராகிய நூதன கணத்தரும்; ஆகிய தொண்டரே = ஆகிய இருவகைத் தொண்டர்களும்; மன் இருந்த மணித்தவிசின்புடை துன்னி எங்கணும் சூழ்ந்தனர் = மன்னன் போல அல்லம தேவன் எழுந்தருளிருந்த சூனிய சிங்காதனத்தினது பக்கத்திலே நெருங்கி சூழ்ந்திருந்தனர். (எ.று)

முடிபு - முதுக்குறை வாளரும் பெரியருமாகிய தொண்டர் மணித்தவி சின் புடை துன்னி எங்கணும் சூழ்ந்தனர். வீரசைவ சமயத்துள் பழமையாக வாழ்ந்திருப்பவரைப் புராதனகணத்தர் என்றும் புதிதாக வந்து சேர்ந்த வரை நூதனகணத்தர் என்றும் பெயரிட்டு வழங்குவர். அதைக் கருதி முன்னிருந்த பின்னடைந்த என்று சிறப்பித்தார்.

அங்கு கூடியிருந்த தொண்டரின் இயல்பு எட்டு பாடல்களால் கூறப் படுகின்றது

1053. **புண்ட ரந்திரு நெற்றியில் பூசிமெய்க்**
கண்டி யென்னும் கலனணி வார்சிலர்
பண்டை [1]நான்மறை யின்பய னாகவே
கொண்ட அஞ்செழுத் துங்குறிப் பார்சிலர் 7

(பா.ம்) [1]நன்மறை

(இ.ள்.) சிலர் = சில தொண்டர்கள்; திரு நெற்றியில் புண்டரம் பூசி மெய் கண்டி என்னும்; கலன் அணிவார் = தூய் நெற்றியிலே திரு நீற்றைக் குழைத்து திரிபுண்டரமாக அணிந்து உடம்பின்கண் உருத்திராக்கக் கண்டிகை என்னும் அணியை அணிபவராய் விளங்கினர்; சிலர் = வேறுசில தொண்டர்கள்; பண்டை நான் மறையின் பயனாகவே கொண்ட அஞ்செழுத்தும் குறிப்பார் = பழைய நான்கு வேதங்களுக்கும் முடிபொரு ளாகவே கொண்ட ஸ்ரீ பஞ்சாட்சரமந்திரத்தை மனத்தால் கணிப்பவரா யிருந்தனர்.

முடிபு - சிலர் நெற்றியிலே புண்டரம் பூசி மெய்யிலே கண்டிகைக் கலன் அணிவார். வேறுசிலர் மறையின் பயனாகக்கொண்ட அஞ்செழுத் தையும் குறிப்பார். புண்டரமணிபவர் நூற்றொருதலத்துள் விபூதி தாரணத்தலத்தையும். கண்டிகை அணிபவர். உருத்திராக்க தாரணத் தலத்தையும் ஐந்து எழுத்தைக் குறிப்பவர். பஞ்சக் கர செபத் தலத்தையும் பின்பற்றியவராவர்.

1054. **நந்த னந்தரும் நாண்மலர் மஞ்சனம்**
சந்த னஞ்சுடர் தண்புகை ஆதிகொண்(டு)

Koviloor Digital Library

இந்தி யங்கள் எலாம்அடங்கு உள்ளமோ(டு)
அந்தி வண்ணனை [1]அர்ச்சிப்பர் ஓர்சிலர் 8

(பா.ம்) [1]அருச்சிப்பர்

(இ.ள்) நந்தனம் தரும் நாள்மலர், மஞ்சனம், சந்தனம், சுடர் தண்புகை ஆதி கொண்டு = நந்தவனம் கொடுக்கின்ற அன்றலர்ந்த பூவும் புனலும், சந்தனக்குழம்பும், தீபமும், தூபமும் ஆகிய பூசைப் பொருள்களைக் கருவியாகக் கொண்டு; இந்தியங்கள் எலாம் அடங்கு உள்ள மோடு = மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புற இந்திரியங்களெல்லாம் அடங்குதற்கு ஏதுவான மனஅடக்கத்துடன்; அந்தி வண்ணனை ஓர்சிலர் அர்ச்சிப்பர் = செவ்வானம் போன்ற திருமேனியையுடைய சிவபெருமானாகிய இஷ்டலிங்கப் பெருமானை வேறுசிலர் பூசிப்பர். (எ.று)

முடிபு - ஓர்சிலர் மலர் மஞ்சனம் சந்தனம் சுடர் புகை ஆதிகளைக் கொண்டு இந்திரியங்களெல்லாம் அடங்கும் உள்ளமோடு அந்தி வண்ணனை அருச்சிப்பர்.அந்தி வண்ணனை அருச்சிக்குமிவர் இலிங்க தாரணத்தலத்தைப் பின் பற்றியவாரவர்.

1055. தாவில் பூசனை தாம்புரி கிற்பதில்
பாவெலாஞ் சொலப் பட்டிடும் ஐம்புலக்
காவல் செய்யும் கருத்துடை யார்தமக்(கு)
ஏவல் செய்தல்நன் றென்றுசெய் வார்சிலர் 9

(இ.ள) சிலர் = வேறுசில தொண்டர்கள்; தா இல் பூசனை தாம் புரிகிற்பதில் - கேடில்லாத சிவ பூசையை தாங்கள் செய்வதைக் காட்டிலும்; பாவெலாம் சொலப்பட்டிடும் ஐம்புலக்காவல் செய்யும் கருத்துடையார் தமக்கு = எல்லாப் பாக்களாலும் புகழ்ந்து கூறப்படும் பெருமை வாய்ந்த ஐம்புலன் களை காக்கும் செயல்பூண்ட அடியவர்கள் தமக்கு; ஏவல்செய்தல் நன்று என்று செய்வார் = அவர்கள் ஏவிய பணியைச் செய்தல் நன்று என்று கருதிக்கொண்டு அன்பினைச் செய்வார். (எ.று)

முடிபு - சிலர் பூசனை புரிகிற்பதிலும் ஐம்புலக் காவல் செய்யும் கருத்துடையார் தமக்கு ஏவல் செய்தல் நன்று என்று செய்வார். இதுநூற்றொரு தலத்தில் திரிவாத சம்பத்தித் தலாமாகிய சங்கம பூசத் தலத்தை மேற் கொண்டவர்.

Koviloor Digital Library

1056. பூச னைத்தொழில் பூண்பதில் எண்மடங்(கு)
ஈச னைத்துதித் தேத்துதல் நன்றென
ஊசல் ஒத்த உளமில ராய்ப்புலத்
தூசி நிற்பத் துதிப்பவர் ஓர்சிலர் 10

(இ.ள்) பூசனைத் தொழில் பூண்பதில் = இறைவனைப் பூசிக்கும் சிவபூசையாகிய தொழிலைச் செய்வதைக் காட்டிலும்; ஈசனைத்துதித்து ஏத்துதல் எண்மடங்கு நன்று என = இறைவனை புகழ்ந்துபாடி வணங்குதல் எட்டு மடங்கு நன்றாகும் என்று கருதிக் கொண்டு; ஊசல் ஒத்த உளம் இலராய் = ஊஞ்சலைப் போல முன்னும் பின்னும் செல்லும் மனமில்லாதவராய்; புலதூசி நிற்ப = ஐம்புலனாகிய குதிரை நிற்கும் படி; துதிப்பவர் ஓர்சிலர் = ஓர்சிலர் இறைவனைப் புகழ்ந்து பாடுவார்கள். (எ.று)

முடிபு - சிலர் பூசனைத் தொழில் பூண்பதிலும் ஈசனைத் துதித்து ஏத்துதல் எண் மடங்கு நன்றென ஊசல் ஒத்த உளமிலராய் புலமாகிய தூசி நிற்கத் துதிப்பர். தூசி என்றால் குதிரைக்குப் பெயர். இங்கு ஐம்புலத்தைத் தூசியாக உருவகம் செய்தார். இத்தொண்டர் பத்தித்தலத்துள் கீர்த்தபத்தியை மேற் கொண்டவராவர்.

1057. அங்க இலிங்கம் அயிக்கியம் இதுவென
மங்க லந்தரு மாமறை யின் முடித்
தங்கு றும்தத் துவமசி தன்பொருள்
பங்க மின்றிப் பகர்பவர் ஓர்சிலர் 11

(இ.ள்) மங்கலம் தருமாமறையின் முடி = எல்லாமங்கலப் பொருளையும் கொடுக்கின்ற பிரபலசுருதி என்னும் பெரிய வேதத்தின் முடிவாக; தங்குறும் தத்துவமசி தன் பொருள் = பொருந்தும் தத்துவமசி என்னும் மகாவாக்கியத்தின் பொருளை எடுத்துக் கூறி; அதுவே அங்கலிங்க அயிக்கம் இது என ஆகும் என்று பங்கம் இன்றிப் பகர்பவர் ஓர்சிலர் = அங்கமும் இலிங்கமும் அயிக்கியமும் ஆகும் என வேறு பாடின்றி சொல்பவர் ஒருசிலராவர். (எ.று)

முடிவு - ஓர்சிலர் தத்துவமசி தன் பொருளை அங்கலிங்க அயிக்கியமாகிய இது என ஆகும் என்பதை பங்கமின்றி பகர்பவர். வேத முடிவிலே தத்துவமசி மகா வாக்கியத்தாலே ஆச்சாரியர் சிவசீவ அயிக்கியம் செய்தார். அதுவே பிரத்தியட்சமாய் தத்பதமான இலிங்கம் என்னும் சிவனையும் துவம்பதமான அங்கம் என்னும் சீவனையும்

Koviloor Digital Library

அசிபதமாகிய ஐக்கியம் என்னும் கூட்டுறவினாலே ஆன இலிங்க அங்க சையோகமே சிவசீவ அயிக்கம் என்று திருவுளம் பற்றினார். (வீரசைவக் பிரமாணம் 26)

அங்கலிங்க அயிக்கியம் இது என என்பதன் பொருள். அங்கம் என்பதின் பொருள் இது, இலிங்கம் என்பதின் பொருள் இது, அயிக்கியம் என்பதின் பொருள் இது என தத்துவமசி தன்பொருளை வைத்து பங்கமின்றி பகர்பவர் ஓர்சிலர் எனப் பொருள் கூறிக் கொள்க. இவற்றின் பொருளை சிவப்பிரகாச சுவாமிகள் தாலாட்டில் மூன்று கண்ணிகளால் உணர்த்துகின்றார்.

கடத்தின் உபாதியா காயம் உற்றவாபோல்
அடுத்த உபாதியால் அங்கலிங்க மென்றனோ (46)
தங்கும் இலிங்கமாந் தத்பதமத் தொம் பதமே
அங்கம அயிக்கியம் அசிபதமென்று ஆண்டானோ (47)
ஆகமுயிர் துரியனாய் நின்றபோது எமைத்தான்
சோக மனத் தானாகத் தோன்றும் பெருமானோ
(சிவ.பா.தா.48)

இவற்றிற்கு விளக்க உரையைக் கீழேகாண்க.

46 ஒன்றாகிய ஆகாயமானது கடம் முதலானவற்றின் உபாதியால் வேறு பட்டாற்போல பிரமம் என்னும் ஒன்றும் தன் சக்தியாலே தனக்கு உற்ற உபாதியினாலே அங்கம் லிங்கம் என்றும் இரண்டாக பிரிந்தது.

47 தத் பத் தங்கும் இலிங்கமாம் தொம்பதமே அங்கமாம் அசிபதமே அயிக்கியமாம் என்பது இதன் பொருள்.

48 ஆகம் உயிர் துரியனாய் நின்ற டோது - உடம்பு முதலான ஏழு உபாதிகளுடன் கூடி விளங்கிய சீவன் அவை நீங்கி சீவ துரியனாய் நின்ற காலத்தில் (கூடத்தனாய் இருந்த போது); பரதுரியத்துடன் அயக்கிய மாவதற்கு யான் சோகம் பாவனை செய்வதற்கு உபதேசித்தற்காக தோன்றிய பெருமான் சிவஞானி என்க. சோக மனத்தான் - சிவோகம் பாவனை செய்யும் மனத்தானாகும் படி தோன்றும் பெருமான் சிவஞானி.

1058. பாசம் ஏது பசுவெனப் பட்டது ஏது
ஈசன் யார்பதி எவ்வகை ஆருயிர்க்(கு)
ஆசு தீர அருளும் அருளுடைத்
தேசி காவெனத் தேர்பவர் ஓர்சிலர் 12

Koviloor Digital Library

(இ.ள்) ஓர் சிலர் = மற்றும் சிலர் (தேசிகரை அடுத்து); பாசம் ஏது = பாசம் என்று சொல்லக் கூடியது எத்தகைய இலக்கணத்தை உடையது? ; பசுஎனப் பட்டது ஏது = பசு என்று கூறப்பட்டதும் எத்தகைய இலக்கணம் உடையது? ; ஈசன் யார் = பதி என்கின்ற ஈசன் எத்தகைய இலக்கணம் உடையது?; பதி எவ்வகை ஆருயிர்க்கு ஆசு தீர அருளும் = பதி என்னும் இறைவன் . எந்த வகையினாலே அரிய உயிர்களுக்கு குற்றம் தீர அருள் செய்யும்? அருளுடைத் தேசிகா = அருளையுடைய தேசிகனே! என்று வினாவி; தேர்பவர் = ஆராய் பவராயிருந்தனர்.

முடிபு - ஓர்சிலர் ஆருளுடைத் தேசிகா ! பாசம் ஏது! பசுவெனப் பட்டது ஏது? ஈசன் யார்? பதி வகையால் உயிர்க்கு அருளும் (எனவினாவி) தேர்பவர்.

1059. **புறந்தி னஞ்செயும் பூசையில் நன்றெனச்**
சிறந்து அகஞ்செய் தியானம் மருவிமெய்ம்
மறந்தி ருந்த மனஞ்சிவ லிங்கமுற்று
இறந்தி டுந்திறம் எய்தினர் ஓர் சிலர் 13

(இ.ள்) ஓர்சிலர் = வேறு சில தொண்டர்கள்; தினம் செயும் புறப் பூசையில் = நாள் தோறும் செய்யும் புறப் பூசையாகிய சிவ பூசையைக் காட்டிலும்; நன்று என = நன்மை உடைத்து என்று கருதி; சிறந்த அகம் செய்தியானம் மருவி = சிறந்தாய் உள்ளிடத்தே செய்கின்ற தியானத்தைப் பொருந்தி; மெய்ம் மறந்திருந்த மனம் = தன்னுடைய கருவிகரணங்களை எல்லாம் மறந்திருந்த மனம்; சிவலிங்கம் உற்று இறந்திடும் திறம் எய்தினர் = சிவலிங்கமாகிய ஞேயப் பொருளைப் பொருந்தி ஞாதுரு ஞானங்களை எல்லாம் நீங்கப் பெற்றவராய் விளங்கினர். (எ.று)

முடிவு - ஓர்சிலர் புறத்தே தினம் செயும் பூசையைக் காட்டிலும் அகம் செயும் ஞானம் நன்றென மருவி (அத் தியானத்தில்) மெய் மறந்திருந்த மனம் (பின்னர்) சிவலிங்கமுற்று இறந்திடும் திறம் எய்தினார். தியானம் உற்றவர், பின்னர் சமாதி நிலைக்குச் செல்வர் ஆதலின் அந்நிலையை சிவலிங்க முற்று இறந்திடும் திறம் எனக் கூறினார்.

1060. **ஓடி [1]மீளும் உயிர்நின் றிடாதெனில்**
நீடும் மாமனம் நிற்பதன்று ஆதலால்
வீடு மேவரிது என்று விதிமுறை
நாடி வாயு [2]நலிபவர் ஓர்சிலர் 14

Koviloor Digital Library

(பா.ம்) [1]நீளும்; [2]நலி செய்வர்

(இ.ள்) ஓர்சிலர் = வேறுசிலர்; ஓடி மீளும் உயிர் நின்றிடாது எனில் = வெளியே பன்னிரெண்டு அங்குலம் சென்று உள்ளே திரும்பிவரக் கூடிய பிராணவாயு கும்பகத்தால் நிறுத்தப்படாவிட்டால்; நீடும் மாமனம் நிற்பதன்று = உலகத்திலோடுகின்றமனம் ஒன்றுபட்டு நிற்பது அன்று ; ஆதலால் வீடுமேவரிது = நிற்பதால்லாவிடில் முத்தியை பெறுவது அரிதாகும்; என்று = என்று கூறிக் கொண்டு; விதிமுறை நாடி வாயு நலிபவர் = யோக நூலின் விதி முறைப்படி ஆராய்ந்து பிராணவாயுவை மெல்ல அடக்குபவர் பலராயுள்ளனர். (எ.று).

முடிபு - ஓர்சிலர் உயிர் நின்றிடாது எனில் மனம் நிற்பதன்று ஆதலால் வீடுமேவே அரிது என்று விரிமுறையின் படி நாடி வாயுவை நலிபவராயுள்ளனர். நலிதல் என்பது பிராணவாயுவை மெல்ல மெல்ல அடக்குதலை.

1061. இனையர் ஆகி இருந்த அக்காலையில்
அனையன் ஆகிய அல்லமன் தன்னிடை
நினைவெ லாமுற நின்று தமதிடை
மனமி லாத வசவனைக் கண்டனர் 15

(இ.ள்) இனையர் ஆகி இருந்த அக்காலையில் = தொண்டரெல்லாம் இத்தம்மையுடைய செயலினராகி இருந்த அக்காலத்திலே அனையன் ஆகிய அல்லமன் தன்னிடை நினைவெலாம் உற நின்று = சூன்ய சிங்காதனத்து வீற்றிருக்கும் அத்தன்மையுடையவனாகிய அல்லமதேவனிடத்திலே மனம் எல்லாம் பொருந்த நின்று; தமதிடை மனமிலாத வசவனைக் கண்டனர் = அடியவராகிய தங்களிடத்தே சிறிதும் மனம் கருதல் இல்லாமல் இருந்த வசவ தேவனுடைய நிலையை அவர்கள் பார்த்தனர். (எ.று)

முடிபு - தொண்டர்கள் இனையராகி இருந்த அக்காலையில் அல்லமன் தன்னிடை நினைவெலாம் உற நின்று தமதிடை மனமிலாத வசவனைக் கண்டனர்.

தொண்டர்கள் கருதியது

வேறு

1062. பெரியவர் சிறியவர் என்னும் பெற்றிமை
அரவணி கடிவுள்தன் அடியர் தம்முளே

Koviloor Digital Library

தெரிபவன் எவன்அவன் சிறிய னேயென
விரிவுறு மறையெலாம் விளம்பும் என்பவே 16

(இ.ள்) விரிவுஉறு மறை எலாம் = அடியார் பக்தியை விரிவுறக் கூறும் சிவாகமங்கள் எல்லாம்; அரவு அணி கடவுள் தன் அடியர் தம்முளே = பாம்பை அணியாக அணிந்த சிவபெருமானுடைய அடியார்களுக்குள்ளே; பெரியவர் சிறியவர் என்னும் பெற்றிமை தெரிபவன் எவன் = இன்னார் பெரியவர் இன்னார் சிறயவர் என்னும் தன்மையைத் தெரிந்து கூறுவோன் எவனோ; அவன் சிறியனே என = அத்தகையோனை அறிவினால் சிறியவனே என; விளம்பும் என்பவே = கூறும் என்று அறிஞர் உரைப்பர். (எ.று)

முடிபு - மறைஎலாம் கடவுள் தன் அடியர்தம்முளே பெரியவர் சிறியவர் என்னும் பெற்றிமையை தெரிபவன் எவன் அவன் சிறியனே என விளம்பும் என்பவே.

தொண்டர் கருதியது

1063. ஆவுரித் திடினுநீ றணியும் அன்பன்அம்
மாவுரித் தவனென வணங்கத் தக்கவன்
பூவுரித்(து) அவன்பதம் புனையப் போற்றுற
நாவுரித் தெனமறை நான்கு மோதுமால் 17

(இ.ள்) நீறு அணியும் அன்பன் = திருநீற்றை அணிந்து கொள்ளும் தொண்டனானவன்; ஆஉரித்திடினும் = நீச குலத்தில் பிறந்து இறந்த பசுக்களின் தோல்களை உரித்தவனாய் இருந்தாலும்; (சிவவேடம் தாங்கிய பெருமையால்) அம்மா உரித்தவன் என வணங்கத்தக்கவன் = அழகிய யானையை உரித்தவனாகிய சிவபெருமான் என்றே வணங்கத் தக்கவனாவன்; அவன் பதம்புனையப்பூ உரித்து = அவனுடைய திரு வடியை அர்ச்சிப்பதற்கு பூக்களும் உரியது; போற்றுற நாவுரித்து = அவனைப் புகழ்ந்து போற்றுதற்கு நாவும் உரியது; எனமறை நான்கும் ஓதும் = என்று இவ்வாறு அடியார் பெருமையை நான்கு வேதங்களும் ஒரு முடிபாக்க கூறும். (எ.று) (ஆல் - அசை)

முடிபு - நீறு அணியும் அன்பன் ஆவை உரித்திடினும் (அவன்) மா உரித்தவன் என வணங்கத்தக்கவன் ஆகும். அவன் பதம்புனைய பூவுரித்து (ஆகும்) போற்றுதற்கு நாவுரிதத்து (ஆகும்) என நான்கு மறையும் ஓதும்.

Koviloor Digital Library

தொண்டர் கருதியது

1064. வந்தவர் வருபவர் வருகின் றார்களாம்
அந்தமில் அடியர்மாட்டு ஆற்றும் செய்கையைச்
சிந்தனை செய்கிலன் தேசி கன்செயும்
இந்திர சாலம்உற்று இருந்து நந்தியே 18

(இ.ள்) நந்தியே = வசவதேவன் தானே; தேசிகன் செயும் இந்திர சாலம் உற்று இருந்து = அல்லம தேவனாகிய ஆசிரியன் செய்கின்ற இந்திர சாலவித்தை போன்ற செயல் பொருந்தி மயங்கி இருந்து; வந்தவர் வருபவர் வருகின்றார்களாம் அந்தமில் அடியர்மாட்டு = முன்னே வந்திருந்தவரும் இப்பொழுது வருபவரும் இனிமேல் வரக்கூடியவர் களும் ஆகிய அளவற்ற அடியார்கள் இடத்து; ஆற்றும் செய்கையைச் சிந்தனை செய்கிலன் = தான்செய்ய வேண்டிய செயல் திறங்களை தான் சிறிதும் கருதாதாவனாக உள்ளான் (என்று தொண்டர்கள் கருதினார்கள்) (எ.று)

முடிபு - நந்தியே! தேசிகன் செயும் இந்திரசாலம் உற்று இருந்து அந்தமில் அடியர்மாட்டு ஆற்றும் செய்கையை சிந்தனை செய்கிலன் (என்று தொண்டர்கள் கருதினர்)

1065. பத்தியில் தவறினோன் பாலி ருந்து[1]நாம்
துய்த்துடல் சுமப்பதில் துறத்தல் நன்றென
மெய்த்தவக் குழாமெலாம் வெகுண்டு போயின
அத்தன்நல் தண்டநா யகனை விட்டரோ 19

(பா.ம்) [1]நாத்துயத்து

(இ.ள்) மெய் தவக்குழாம் எலாம் = உண்மையான தவத்தைச் செய்யும் தொண்டரின் கூட்டங்களெல்லாம்; பத்தியில் தவறினோன் பால் = அடியார் பத்தியில் தவறினோனிடத்தில்; நாம் இருந்து துய்த்து உடல் சுமப்பதில் = நாம் காத்து இருந்து கிடைத்த உணவை உண்டு இவ்வுடம்பை ஓம்பி சுமத்தலைக் காட்டிலும்; துறத்தல் நன்று என = விட்டு நீங்கி விடுதல் நன்றாய் இருக்கும் எனக் கருதிக் கொண்டு; வெகுண்டு = சினந்து; அத்தன் நல்தண்ட நாயகனை விட்டு போயின = தலைவனாகிய நல்ல வசவதேவனை விட்டு போய் விட்டன (ஆரோ - அசை)

முடிபு - தவக்குழாம் எலாம் பத்தியில்தவறினோன் பால் இருந்து நாம் துய்த்து உடல் சுமப்பதில் துறத்தலே நன்று எனக் கருதி வெகுண்டு

Koviloor Digital Library

தண்டநாயகனை விட்டுப் போயின. குழாம் என்பது உயர்திணைப் பொருள்கள் ஒன்றாகத்தொக்க தொகுதி. அது அஃறிணை பலவின் பால் முடிவு ஏற்றது.

1066. துன்றிய மெய்த்தவர் துறந்து போயபின்
மன்றல்செய் மற்றைநாள் மனையை ஒத்தொரு
தன்தனி நற்புரம் தனிப்பக் கண்டனன்
நன்றறி நற்செயல் நந்தி தேவனே 20

(இ.ள்) நன்று அறிநற்செயல் நந்தி தேவனே = நல்லவற்றையே மனத்தால் உணர்ந்து நல்லவற்றையே செயலால் செய்கின்ற வசவதேவன்; துன்றிய மெய்த்தவர் துறந்து போயபின் = தன் அரண் மனையிடத்தே பொருந்தி இருந்த உண்மையான தவம் செய்யும் தொண்டர் எல்லாம் நீங்கிச் சென்ற பிறகு; மன்றல் செய் மற்றை நாள் மனையை ஒத்து = திருமணம் நிகழ்ந்த அடுத்த நாள் வீட்டை ஒத்து; ஒரு தன்தனி நற்புரம் தனிப்பக்கண்டனன் - தன்னுடைய ஒன்றாகிய ஒப்பற்ற அரண்மனை ஒருவருமில்லாமல் தனித்து இருத்தலை பார்த்து உணர்ந்தான்.(எ.று)

முடிபு - நந்தி தேவனே தவர் துறந்து போயபின் மன்றல் செய் மற்றை நாள் மனையை ஒத்து தன் நற்புரம் தனிப்பக் கண்டனன்.

வசவதேவன் இன்று அடியார் பக்தியிலிருந்த வழுவினேன் என்று வருந்தியது

1067. வழுவினன் அன்புசெய் வழியை இன்றுநான்
குழுவுறும் அடியவர்க் குறித்து செய்தவிவ்
ஒழிவறும் அடிசிலுண்டு ஒழிந்தி டாதுதீர்ந்(து)
அழிவுறு மேயென அகந்த ளர்ந்தனன் 21

(இ.ள்) இன்று நான் அன்பு செய்வழியை வழுவினன் - (அப் பொழுது வசவதேவர் கருதியது) இன்றைய நாள் நான் அடியார் பக்தி செய்யும் நெறியினை பிழைத்தேன்; குழுவுறும் அடியவர்க் குறித்து செய்த இவ்ஒழிவறும் அடிசில் - கூட்டமாகப் பொருந்தும் அடியாரைக் கருதி சமைத்த இந்த மிகுதியான உணவுவகை எல்லாம்; உண்டு ஒழிந்திடாது தீர்ந்து அழிவுறுமே என அகம் தளர்ந்தனன் = அவ்வடியார் களால் உண்ணப்பட்டு செலவழியாமல் நீக்கப்பட்டிருந்து பயனின்றி அழிந்து போகுமே என்ற அதைக் கருதி மனம் தளர்ந்தான். (எ.று)

Koviloor Digital Library

முடிபு - இன்று நான் அன்பு செய்வழியை வழுவினன். (அதனாலே) அடியவர் குறித்துச் செய்த இவ்வடிவில் உண்டு ஒழிந்திடாது தீர்ந்து அழிவுறுமே என அகம் தளர்ந்தனன்.

இதுவுமது

1068. சங்கம பத்திசெய் தண்ட நாதனே
சங்கம பத்திசெய் தகைமை பூண்டுநான்
சங்கம பத்தியில் தவறினேன் என்றால்
சங்கம் பத்திசெய் தன்மை எண்மையோ 22

(இ.ள்) சங்கம பத்தி செய் தண்டநாதனே - குருபத்தி இலிங்க பக்தி சங்கம பத்தி என்ற மூன்றனுள் சங்கம பத்தியே சிறந்தது என்று கருதி அதனைச் செய்கின்ற தண்ட நாதனாகிய நான்; சங்கம பத்திசெய் தகைமை பூண்டு = நான் சங்கம பத்தியை செய்கின்ற தக்க செயலை இதுவரை மேற்கொண்டு ஒழுகி; சங்கம பத்தியில்தவறினேன் என்றால் - (இன்றைய நாள்) சங்கம பத்தியில் வழுவிவிட்டேன் என்றால்; சங்கம பத்திசெய் தன்மை எண்மையோ - சங்கம பத்தி செய்கின்ற இயல்பு அவ்வளவு எளிமையாக அமையுமோ? அமையாது என்க. (எ.று)

முடிபு - சங்கம பத்தி செய் தண்டநாதனாகிய (யானே) அச்சங்கம பத்தியை செய்தகைமை பூண்டு. நான் தவறினேன் என்றால். சங்கமபத்தி செய்தன்மை எண்மை ஆகுமோ? (ஆகாது) சங்கபத்தி செய்தல் எளிதன்று. அரிதாகும் என்பது இப்பாட்டின் கருத்தாகும்.

இதுவுமது

1069. இழிப்பினும் வெறுப்பினும் இல்லின் உள்ளன
அழிப்பினும் உடம்பினை அரிந்து கொல்லினும்
பழிப்பறு சங்கம பத்தி செய்பவன்
ஒழிப்பது பிறவியென்று உலகம் ஓதுமே 23

(இ.ள்) இழிப்பினும் = சங்கம பத்தி செய்பவரை சங்கமர்கள் இழிவாகப் பேசினாலும் ; வெறுப்பினும் = அல்லது அவர் மீது வெறுப்புற்றாலும்; இல்லின் உள்ளன அழிப்பினும் = வீட்டினில் உள்ளனவாகிய பொருள்களை அச்சங்கமர்கள் அழித்து விட்டாலும்; உடம்பினை அரிந்து கொல்லினும் = மேலும் அவர்கள் சங்கம பத்திசெய்பவர்களுடைய உடம்பினை கருவிகளால் அரிந்து கொல்லத் தொடங்கினாலும்; பழிப்பறு சங்கமபத்தி செய்பவன் = அவர்கள் செய்யும் துன்பங்களை எல்லாம் பொறுத்துக் கொண்டு குற்றமற்ற சங்கம

Koviloor Digital Library

பத்தியை உறுதியாகச் செய்து முடிப்பவனாகிய அவனால் ஒழிப்பது பிறவி என்று உலகம் ஓதும் = ஒழிக்கப்படுவது பிறவிநோயாகும் என்று அறிஞர் உலகம் கூறும். (எ.று)

முடிபு - இழிப்பினும் வெறுப்பினும் அழிப்பினும் கொல்லினும் (அவற்றை எல்லாம் பொறுத்துக் கொண்டு) சங்கம பத்தி செய்பவனால் ஒழிப்பது பிறவி என்று உலகம் ஓதும். ஒழிப்பது என்பது செயப்பாட்டு வினை.

அல்லமதேவன் அமுதுண்டு அடியார் பசியை நீக்கக் கருதியது

1070. இம்முறை சங்கம பத்தி எய்திய
எம்முடை நந்திதன் எண்ணம் முற்றுற
[1]அம்மடை அடிசிலுண்டு அலமன் மாதவர்
தம்முறு பசியெலாம் தணிப்ப உன்னினான் 24

(பா.ம்) [1]அம்முறை

(இ.ள்) இம்முறை சங்கம பத்தி எய்திய எம்முடை நந்திதன் எண்ணம் முற்றுற = மேலே கூறிய முறைப்படி உயர்ந்த சங்கம பத்தியை செய்யும் திறனை அடைந்துள்ள எம்முடைய பசவதேவனது மனக் கருத்து நிறைவேறும்படி; அலமன் அம்மடை அடிசில் உண்டு = அல்லம தேவன் அந்தமடைப் பள்ளியிலுள்ள உணவை எல்லாம் உண்டு; மாதவர்தம் முறு பசி எலாம் தணிப்ப உன்னினான் = பெரிய அடியார்கள் தாம் பெற்றிருக்கும் பசிநோயை எல்லாம் நீக்குவதற்குக் கருதினான். (எ.று)

முடிபு - இம்முறை சங்கம பத்தியை எய்திய நந்தின் எண்ணம் முற்றுற அல்லமன் அடிசில் உண்டு மாதவர் பசிஎலாம் தணிப்ப உன்னினான்.

அல்லம தேவன் தனக்கு உணவு படைக்குமாறு தேவனிடம் கூறுதல்

1071. ஒருவன்யான் சிறுபசி உடையன் சிற்றுணா
[1]விரைவுற இடுதிநீ வேண்டு மாறுபின்
பரிவுள அடியவர் பாற்செய் என்றனன்
பொருவறு வசவனை நோக்கிப் போதகன் 25

(பா.ம்) [1]விரவுற

Koviloor Digital Library

(இ.ள்) போதகன் பொருவறு வசவனை நோக்கி = ஞானாசிரியனாகிய அல்லமன் ஒப்பற்ற வசவ தேவனைப் பார்த்து; யான் ஒருவன் = யான் ஒருவனே; சிறுபசி உடையன் = யான் சிறிதளவே பசித்துள்ளேன் ; நீ சிற்றுணாவிரைவுற இடுதி = நீ சிறிய உணவை விரைந்து எமக்குப் படைப்பாயாக; பின் வேண்டுமாறு பரிவுள அடியவர் பால்செய் என்றனன் = எனக்கு உணவு இட்டபின் நீ விரும்பிய படி அன்புள்ள அடியவர்பால் செய்ய வேண்டிய சங்கம பூசையைச் செய்வாயாக என்று கூறினான்.

முடிபு - போதகன் வசவனை நோக்கி யான்ஒருவன் சிறுபசி உடையன் சிற்றுணவை நீ விரைவுற இடுதி பின் வேண்டுமாறு அடியவர் பால் செய் என்றனன்.

1072. ஐயனும் முனிவுறாது அருளும் வண்ணம்யான்
செய்யுநல் வினையென மகிழ்ந்து தேவனைப்
பையவுண் மனையிடைப் பணிந்து கொண்டுபோய்ப்
பெய்யுமென் மலர்மணிப் பீடத் தேற்றினான் 26

(இ.ள்) ஐயனும் முனிவுறாது = (அப்பொழுது வசவதேவன்) அடியார்களைப் போல அல்லம தேவனும் சினந்து சென்று விடாமல்; அருளும் வண்ணம் = எனக்கு உணவு படைப்பாயாக என்று வலிந்து கேட்கும்படி; யான் செய்யும் நல்வினை என மகிழ்ந்து = யான் செய்கின்ற நல்வினை என்னிடமிருக்கின்றது என்று மகிழ்ந்து; தேவனைப் பைய உண் மனையிடைப் பணிந்து கொண்டு போய் = தேவனை வணங்கி மெல்ல உண்ணும் மனையகத்தே அழைத்துக் கொண்டு போய்; பெய்யும் மென்மலர் மணிப்பீடத்து ஏற்றினான் = மலர்பெய்யப் பெற்ற மணிகள் பதித்த மனையின் மேல் எழுந்தருளச் செய்தான். (எ.று)

முடிபு - (வசவதேவன்) ஐயனும் முனிவுறாது அருளும் வண்ணம் யான் செய்யும் நல்வினை உளது என மகிழ்ந்து தேவனைப் பணிந்து பைய உண்மனையிடைக் கொண்டு போய் பீடத்து ஏற்றினான். உண்மினை = வினைத் தொகை. ஐயனும் = என்ற உம்மை எச்சஉம்மை.

1073. ஏற்றிய அருள்வச வேசன் எம்பிரான்
காற்றுணை மலர்களைக் கந்தம் மஞ்சனம்
நாற்றமென் மலர்நறும் புகை விளக்கெனப்
போற்றிய இவைகொடு பூசை செய்தனன் 27

Koviloor Digital Library

(இ.ள்) ஏற்றிய அருள் வசவவேசன் - அல்லமதேவனைப் பீடத்தின் கண் ஏற்றிய அருளுடைய வசவதேவன்; எம்பிரான் கால்துணை மலர்களை போற்றிய - எம்தலைவனாகிய அல்லம தேவனுடைய திருவடியாகிய இரண்டு மலர்களைப் போற்றுவதற்காக; கந்தம் மஞ்சனம் நாற்றம் மென்மலர் நறும்புகை விளக்கு என இவை கொடு பூசை செய்தனன் = மணப் பொருள்களும் தண்ணீரும் மணத்தையுடைய மெல்லிய மலர்களும் நறுமணமுள்ள புகைகளும் விளக்கும் என இப்பொருள்களைக் கொண்டு பாதபூசை செய்தான். (எ.று)

முடிபு - வசவவேசன் எம்பிரான் கால்துணை மலர்களை போற்றிய கந்தம், மஞ்சனம், மலர், புகை, விளக்கு என இவை கொடு பூசை செய்தனன். போற்றிய என்பது செய்யிய என்னும் வினை எச்சம். செய்தனன் என்ற முற்றோடு முடிந்தது.

1074. **பூசனை செய்தபின் போற்றி நின்று பொன்**
பாசனம் அமைத்துமென் பதம்ப டைத்துமேல்
யோசனை [1]குய்கமழ் கறியும் ஒள்ளிய
போசனம் முறையிடப் புரிந்து நந்தியே 28

(பா.ம்) [1]கைகமழ்

(இ.ள்) நந்தியே = வசவதேவன் தானே; பூசனை செய்தபின் = அல்லம தேவனுக்குப் பாத பூசைசெய்த பிறகு; போற்றி நின்று = துதித்து நின்று; பொன் பாசனம் அமைத்து = பொன்னாலே செய்யப்பட்ட உண் கலத்தை முன்னாலே வைத்து; மென்பதம் படைத்து = மென்மையான சோற்றினைப் படைத்து; மேல் யோசனை குய்கமழ்கறியும் = அதற்கு மேலே யோசனை என்னும் அளவு தாளிப்பு மணம் வீசுகின்ற கறிகளை யும்; ஒள்ளிய போசனமும் = சிறந்த பலகாரவர்க்கங்களும்; முறையிடப் புரிந்து = முறைமையாகப் படைக்கச் செய்து. (எ.று)

முடிபு - நந்தி பூசனை செய்தபின் போற்றி நின்று பாசனம் அமைத்து பதம் படைத்து மேல் கறியும் போசனமும் முறைமையாக இடப்புரிந்து. புரிந்து எச்சம் அடுத்த பாடல் முடியும். வீர சைவத்துறவிகள் இலையில் உண்ணும் வழக்கமில்லை. உணவுத்தட்டிலேயே உண்பார்கள். இங்கு பாசனம் என்பது உணவுத் தட்டினைக் குறிக்கும்.

1075. **அருந்துக என அடி தொழலும் அக்கலம்**
திருந்திய அமுதுளோர் அவிழும் சேடியா(து)

Koviloor Digital Library

அருந்தினன் ஓரிமைப் போதில் அல்லமன்
பொருந்திய அவர்இறும் பூதர் ஆகவே 29

(இ.ள்) அருந்துக என அடிதொழலும் = உணவு அருந்துக எனக் கூறி திருவடியினைத் தொழுதலைச் செய்தலும்; அக்கலம் திருந்திய அமுதுள் ஓர் அவிழும் சேடியாது = அந்த உண்கலத்திலுள்ள நல்ல அமுதினுள் ஓர் பருக்கையும் மிஞ்சாமல்; பொருந்திய அவர் இறும் பூதர் ஆகவே = சுற்றிலும் உள்ளவர் எல்லாம் வியப்புடையவர் ஆகும்படி; அல்லமன் ஓர் இமைப் போதில் அருந்தினன் = அல்லம தேவன். ஒரு மாத்திரைப் பொழுதினுள் உண்டுவிட்டான்.

முடிபு - (நந்தி) அருந்துக என அடிதொழலும் அல்லமன் அக்கலம் திருந்திய அமுதுள் ஓர் அவிழும் சேடியாது பொருந்திய அவர் இறும் பூதராக ஓர் இமைப் போதில் அருந்தினன். சேஷியாது என்ற வடசொல் சேடியாது எனத்திரிந்தது சேஷம் - எஞ்சியது. சேஷியாது என்னும் எதிர் மறைவினை எச்சம். அருந்தினன் என்னும் வினையுடன் முடிந்தது.

1076. பின்னரும் அம்முறை பெய்ய ஐயன்அவ்
அன்னமும் அம்முறை அருந்திப் பின்னரும்
பின்னரும் அம்முறை பெய்ய உண்டனன்
தன்னுளம் வியந்தனன் தண்ட நாயகன் 30

(இ.ள்) பின்னரும் அம்முறை பெய்ய - பின்பும் மேலே கூறிய முறைப்படி உணவினைப் படைக்க; ஐயன் அவ்அன்னமும் அம்முறை அருந்தி - அல்லம தேவனும் அவ் உணவுப் பொருள்களையும் சேடியாது ஓரிமைப்பொழுதினில் அருந்தி; பின்னரும் பின்னரும் அம்முறை பெய்ய = அடுத்து அடுத்து அவ்வுணவினை அம்முறைப்படி படைக்க; உண்டனன் = முன்தான் உண்ட முறைப்படி ஓர் அவிழும் சேடியாது ஓரிமைப் போதில் உண்டனன்; தண்ட நாயகன் தன் உளம் வியந்தனன் = வசவதேவன் அல்லமதேவன் இவ்வாறு உண்ணும் செயலைப் பார்த்து தன்னுடைய உள்ளம் வியந்தான். (எ.று)

முடிபு - பின்னரும் அம்முறை பெய்ய, ஐயன் அவ்அன்னமும் அம்முறை அருந்தி, பின்னரும் பின்னரும் அம்முறை பெய்ய (அம்முறை) உண்டனன். தண்ட நாயகன் (இச்செயலைப் பார்த்து) உளம் வியந்தனன். பின்னரும் பின்னரும் என்ற அடுக்கு விரைவின்கண் வந்தது.

1077. சிறுச்சிறிது அனமிடும் செய்கை யாலருள்
இறைக்கெழில் உதரவெந் நெருப்பெ மூந்ததால்

Koviloor Digital Library

விறற்கனல் அம்முறை விறகி டக்கனன்(று)
உறப்பெரி(து) எனஎழுந்து ஓங்கல் போலவே 31

(இ.ள்) விறல் கனல் அம்முறை விறகு இடக் கனன்று உறப்பெரிது என எழுந்து ஓங்கல் போலவே = வலிமையுடைய நெருப்பிற்கு சிறுகச்சிறுக விறகினை இட்டால் அது கனல் உடைத்தாகி மிகவும் பெரிதென வளர்ந்து ஓங்குதல் போல; அருள் இறைக்கு = அருளை யுடைய இறைவனாகிய அல்லம தேவருக்கு; சிறுச்சிறிது அனமிடும் செய்கையால் - சிறுகச் சிறுக உணவினைப் படைக்கும் செய்கையி னாலே; எழில் உதர வெந்நெருப்பு எழுந்ததால் = அழகிய வயிற்றிலுள்ள பசி என்னும் வெந் நெருப்புமிக்கு எழுந்தது. (எ.று)

முடிபு - கனலுக்கு அம்முறை விறகுஇடகனன்று எழுந்து ஓங்கல் போல; அருள் இறைக்கு எழில் உதரவெந்நெருப்பு சிறுச்சிறிது அனமிடும் செய்கையால் எழுந்தது. உதரவெந் நெருப்பு - எழுவாய். எழுந்தது பயனிலை.

1078. எண்ணிய எண்ணியாங்கு இயற்றும் ஏவலர்
அண்ணலும் வருகென அழைத்து நம்மனைப்
பண்ணிய பதமெலாம் படைமின் என்றலும்
துண்ணென அனமிடும் தொழில் தொடங்கினார் 32

(இ.ள்) அப்பொழுது அண்ணலும் = வியப்படைந்த வசவ தேவனும் எண்ணிய எண்ணியாங்கு இயற்றும் ஏவலரை வருகென அழைத்து = தலைவர்கள் கருதியதை அவர்கள் கருதிய வண்ணமே செய்து முடிக்கும் ஏவலாட்களை வாருங்கள் என அழைத்து; நம் மனை பண்ணிய பதம் எலாம் படைமின் என்றலும் = நம்முடைய இல்லத்தில் சமைத்து வைத்துள்ள உணவுகளை எல்லாம் அல்லம தேவருக்குப் படைப்பீராக என ஆணை இடலும்; துண்ணென அனமிடும் தொழில் தொடங்கினார் = அவ்வாணைபெற்ற ஏவலர் விரைந்து அல்லம தேவருக்கு உணவினைப் படைக்கும் தொழிலை மேற் கொண்டனர். (எ.று)

முடிபு - அண்ணலும் ஏவலரை வருக என அழைத்து நம்பினை பண்ணிய பதமெலாம் படைமின் என்றலும் (அவ்ஏவலர்) துண்ணென அன்னமிடும் தொழில் தொடங்கினார். துண்ணென என்பது விரைவு குறிப்புச் சொல்.

Koviloor Digital Library

ஏவலர் சோற்றினை அல்லம தேவர் முன் குவித்தது

வேறு

1079. **அளவறும் அடியர்க் கெல்லாம் ஆக்கிய அடிசில் குன்றம்**
கொளவுறு கூடை ஓடு கூடைகள் தாக்கக் கொண்டு
வளம்உறு கயிலை குன்றம் பெயர்திவண் வைத்ததென்னத்
தளவுறழ் அடிசில் எங்கள் தம்பிரான் எதிர்கு வித்தார் 33

(இ.ள்) அளவு அறும் அடியர்க்கு எல்லாம் ஆக்கிய அடிசில் குன்றம் = (ஏவலாளர்) எண்ணற்ற அடியவர்க்கெல்லாம் இடுவதற்காக சமைத்த சோற்று மலையை; கொளவுறு கூடை ஓடு கூடைகள் தாக்கக் கொண்டு = வாரிக் கொள்ளுதற்குப் பொருந்திய கூடையோடு மற்றொரு கூடைதாக்குமாறு வாரிக் கொண்டு; வளம் உறு கயிலை குன்றம் பெயர்த்தி வண்வைத்து என்ன = வளம் பொருந்திய (வெண்ணிறத்தை யுடைய) கயிலாயமலையை பெயர்த்து எடுத்து இங்கு கொண்டு வந்து வைக்கப்பட்டது என்று கருதும்படி; தளவு உறழ் அடிசில் - முல்லை மலரை ஒத்த வெண்மையான சோற்றை; எங்கள் தம்பிரான் எதிர்குவித்தார் = எங்கள் தலைவனாகிய அல்லம தேவன் முன் கொண்டு வந்து குவியலாகக் குவித்தனர்.(எ.று)

முடிபு - அளவறும் அடியர்க்கெல்லாம் ஆக்கிய அடிசில் குன்றத்தைக் கூடையோடு கூடைகள் தாக்கக் கொண்டு கயிலைக் குன்றம் பெயர்த்திவண் வைத்ததென்ன அடிசிலை எங்கள் தம்பிரான் எதிர் குவித்தார். கயிலைக் குன்றத்தைப் பெயர்த்து வைத்தாற்போல் முல்லை மலர் போன்ற சோற்றுத் திரளை கொண்டு வந்து குவித்தார் என்பது உவமையணி.

1080. **பருப்பொரு பொருப்பெ னத்தாம் படைத்தனர்சிலரெடுத்து**
விரைப்புது நெய்க விழ்த்து விடுத்தனர் சிலர் மணக்கும்
பொரிக்கறி பளிதம் பாகு புளிங்கறி பலவும் எல்லாம்
நிரைத்தொரு சிலர் சொரிந்து நின்றனர் முகில்கள் போல 34

(இ.ள்) சிலர் பருப்பு ஒரு பொருப்பெனத் தாம் எடுத்து படைத்தனர் = சில ஏவலர் கடைந்து வைத்திருந்த பருப்பினை ஒரு பொன்மலை என்று சொல்லும்படி எடுத்து அல்லம தேவர் முன் படைத்தனர்; சிலர் விரைப்புது நெய் கவிழ்த்து விடுத்தனர் = சில ஏவலர் மணமுள்ள புதிய நெய்யை கொண்டு வந்து கவிழ்த்து விட்டனர்; ஒரு சிலர் மணக்கும்

Koviloor Digital Library

பொரிக்கறி பளிதம், பாகு புளிங்கறி பலவும் எல்லாம் நிரைத்து முகில்கள் போல சொரிந்து நின்றனர் = ஒரு சில ஏவலர் மணம் வீசுகின்ற பொரித்த கறிகளையும் பச்சடியையும் வெல்லப் பாகினையும் (பாயசத்தையும்) புளி சேர்த்த கறிகளையும். இவற்றைப் போன்ற எல்லாவற்றையும் பாத்திரங்களில் நிரப்பி மேகம் மழை பொழிவதைப் போல பொழிந்தனர். (எ.று)

முடிபு - சிலர் பருப்பை எடுத்து பொருப் பெனத்தாம் படைத்தனர்; சிலர் புதுநெய்யை கவித்து விடுத்தனர். ஒருசிலர் மணக்கும் பொறிக் கரியையும் பளிதத்தையும் பாகையும் புளிங்கறி பலவற்றையும் எல்லாம் நிரைத்து முகில்போல் சொரிந்தனர்.

1081. **வடைபடு திகிரி ஆக [1]மாகனி கவண்கல் ஆக**
உடைபடு கழைக்க ரும்பங் கொண்கதையாகக் கொண்டு
[2]கடபட உலகிற் கெல்லாம் காரிய கருத்தன் முன்னர்ப்
படைபடை எனச்சொ ரிந்தார் படைமுகத் திளைஞர் போல 35

(பா.ம்) [1]மாங்கனி; [2]கடைபடும் உலகிற்கெனறீலாம்

(இ.ள்) வடைபடு திகிரியாக = ஒருசிலர் வடையை பொருந்திய சக்கரப் படை போலவும்; மாகனி கவண்கல்லாக = திரண்ட பலவகைக் கனிகளை கவணிலேவைத்து வீசும் எறிபடையாகவும்; உடைபடு கழைக் கரும்பு அங்கு ஒண்கதையாக = உடைக்கப்படும் கழை என்னும் வகையைச் சார்ந்த கரும்பானது அவ்விடத்தே சிறந்த குந்தப் படை யாகவும்; கொண்டு = தம் கையிலே எடுத்துக் கொண்டு; கடபட உலகிற்கு எல்லாம் காரிய கருத்தன் முன்னர் = குடத்தைப் போல; ஆடையைப் போல ஒருவரால் செய்யப்படும் காரிய உலகத்திற்கு எல்லாம்; நிமித்த காரணனாய் இருக்கின்ற அல்லமதேவன் முன்னர்; படை முகத்து இளைஞர் போல = படையினிடத்தேயுள்ள போர் வீரர்கள் தங்கள் படைகளை வீசி எறிவது போல படை படை எனச் சொரிந்தார் = படைக்கின்றோம் என்று சொல்லிக் கொண்டு அவர்முன் படைத்தார்கள். (எ.று)

முடிபு - வடை திகிரியாகவும் கனி கவண்கல்லாகவும் கரும்புகதை யாகவும் (சிலர்) கொண்டு காரிய கருத்தன் முன்னர் படை முகத்து இளைஞர் போல படை படை எனச் சொரிந்தார். கடைபடும் உலகுக் கெல்லாம் எனப் பாடங்கொண்டு. கீழ்பட்ட உலகங்களுக்கெல்லாம்

Koviloor Digital Library

காரியம் நடாத்துதற்குத் தலைவனாகிய அல்லமன் முன் என் உரை கூறுவார் சச்சிதானந்தம் பிள்ளை.

சுவடியில் கண்ட பாடம் கடபட உலகிற் கெல்லாம் காரிய கருத்தன் முன்னா் என்பதாகும் இதற்கு இயைய மேலே உரை கூறப்பட்டது.

அல்லம தேவருக்குப் பாலும் பழமும் கொடுத்தது.

1082. குளங்கரை ஆக அந்தக் குளத்தினுள் பசுவின் தீம்பால்
விளங்குறும் அமுத வேலை விடுத்தென விட்டார் சில்லோா்
உளங்கனி மூவர் செய்யுள் ஒத்தமுக் கனியும் ஏனோா்
வளங்கெழு தொடர்பு போலும் மற்றைய பதமும் தூர்த்தாா் 36

(இ.ள்) சில்லோா் = சிலஏவலர்; குளம் கரையாக = வெல்லக் கட்டிகள் எல்லாம் கரையாக அமைந்த; அந்தக் குளத்தினுள் = அத்தகைய ஏரியுள்; பசுவின் தீம்பால் = பசுவினது இனிய பாலினை; விளங்குறும் அமுதவேலை = தோன்றுகின்ற திருப்பாற் கடலை விடுத்தென விட்டாா் = ஊற்றினால் போல ஊற்றினாா்கள்; உளங்கனி மூவர் செய்யுள் ஒத்த முக்கனியும் = கேட்டவர் மனம் எல்லாம் உருகுவதற்குக் காரணமான மூவரால் அருளிச் செய்யப் பட்ட தேவாரப் பாடல்களை ஒத்த மா -பலா- வாழை முதலான முக்கனிகளையும்; ஏனோா் வளங்கெழு தொடர்பு போலும் = மாணிக்கவாசகா் முதலிய மற்றையவரது வளப்பத்தைப் பொருந் திய பாடல்களைப் போலவிளங்கும்; மற்றைய பழமும் தூர்த்தாா் = திராட்சை முதலிய பழங்களையும் கொண்டு வந்து பால் குளத்தில் நிரப்பினாா்கள். (எ.று)

முடிபு - சில்லோா் குளம் கரையாக (அமைந்த) அந்தக்குளத்தினுள் பசுவின்பாலை அமுதவேலையை விடுத்தென விட்டாா். மூவர் செய்யுளை ஒத்த முக்கனியையும் ஏனோா் தொடர்பு போலும் மற்றைய பழமும் (ஆகிய இவற்றைக் கொண்டுவந்து அப்பால் குளத்தினுள்) தூர்த்தாா். அல்லம தேவர் முன் சிலா் வெல்லக் கட்டிகளை கரையாக அமைத்துச் செய்த ஏரியுள் திருப்பாற்கடலை விட்டாற்போல பாலைச் சொரிந்தனா். பின்னா் அப்பால் குளத்தை பழங்களைச் கொட்டித் தூர்த்து விட்டனா் என்று கூறுவது. அவற்றின் மிகுதியைக் குறிக்கும். பாட்டின்

Koviloor Digital Library

பண்புகளை பழங்களில் வைத்து உணர்த்தினார். அத்தகைய பழங் களைப் போன்ற பாடல்கள் என்பது பாட்டின் குண அணிகளைக் குறிக்கும்.

1083. எண்ணிலர் [1]இடுவ எல்லாம் இனியன இன்னா என்னான்
கண்ணிமை ஒடுங்கும் முன்னர் கடிதயின்று [2]நுகர்வு றாமல்
வண்ணமென் மலர்க்கை வாங்கி வறிதிருந் தனனெங் கோன்தேர்ப்
பண்ணவன் பரிக்கு மேடு பள்ளமென் பன[3]எங் குண்டோ **37**

(பா.ம்) [1]இடுப ; [2]உதவுறமல் ; [3]அங்குண்டோ

(இ.ள்) எங்கோன் = எம்தலைவனாகிய அல்லமதேவன்; எண்ணிலர் இடுவ எல்லாம் = கணக்கற்ற ஏவலர் இடக்கூடிய பொருள் களை எல்லாம்; இனியன இன்னா என்னான் = இவை இன்சுவையு டையன இவை இன்னாச்சுவையுடையன என்று கருதானாய் (அப் பொருள்களை); கண்ணிமை ஒடுங்கும் முன்னர் கடிது அயின்று = திறந்த கண்ணிமை மூடுவதற்கு முன்னர் (அரை மாத்திரை நேரத்திற்குள்) விரைந்து அருந்திவிட்டு (பின்); நுகர்வுறாமல் வண்ணமென் மலர்க்கை வாங்கி வறிது இருந்தனன் = உண்ணும் தொழிலைச் செய்யாமல் அழகிய மென்மையான மலர் போன்றகையை உணவு எடுக்கும் தொழிலிருந்து நீக்கி செயலின்றி இருந்தான் கடிதயின்று (வாயும் கையும தொழிற் படாமல் வறிது இருந்தனன்); தேர் பண்ணவன் பரிக்கு மேடு பள்ளம் என்பன எங்கு உண்டோ = ஒற்றை ஆழித்தேரையுடைய சூரியனது தேர்க்குதிரைக்கு மேடு பள்ளம் என்பன எங்கும் உண்டோ? (இல்லை என்றபடி) சூரியனுடைய தேரில் கட்டிய குதிரைக்கு எவ்விடத்தும் மேடு பள்ளம் இல்லை. (எ.று)

முடிபு - எங்கோன் எண்ணிலர் இடுவ எல்லாவற்றையும் இனியன இன்னா என்னான். இமை ஒடுங்கும் முன்னர் கடிது அயின்று. நுகர்வுறாமல் கை வாங்கி வறித்திருந்தனன். பண்ணவன் பரிக்கு மேடு பள்ளம் என்பன எங்கு உண்டோ?; சூரியனுடைய குதிரைக்கு மேடு பள்ளம் என்பன எங்குமில்லை. அதைப்போல அல்லமன் உண்ணும் உணவுக்கு இனியன இன்னா இல்லை. இப்பாட்டு வேற்றுப் பொருள் வைப்பணி.

Koviloor Digital Library

1084. சற்றினும் உண்க என்று தமருப சரியா வண்ணம்
சற்றினும் இடுக என்று தம்பிரான் உண்ணு நின்றான்
மற்றிது கண்டு நின்றோர் மட்கலம் ஒழிய வேறு
பற்றிலை என்று நந்தி திருமுகம் பார்த்துச் சொன்னார் 38

(இ.ள்) தமர் சற்று இன்னும் உண்க என்று உபசரியா வண்ணம் = உணவு படைக்கும் உறவினர் இன்னும் சிறிது உண்க என்று உபசார மொழியைக் கூறாதபடி; தம்பிரான் சற்று இன்னும் இடுக என்று உண்ணு நின்றான் = அல்லம தேவன் இன்னும் சிறிது இடுங்கள் இன்னும் சிறிது இடுங்கள் என்று கூறிக் கொண்டு உண்ணும் தொழிலில் நின்றான்; மற்று இது கண்டு நின்றோர் = பின் இந்நிகழ்ச்சியைப் பார்த்து நின்ற ஏவலர்; நந்திதிருமுகம் பார்த்து = வசவதேவனது அழகிய முகத்தைப் பார்த்து; மட்கலம் ஒழிய வேறுபற்று இலை என்று சொன்னார் = உணவு சமைக்கும் மட்பாண்டங்களைத் தவிர்த்து சமைத்தவற்றுள் ஒரு பருக்கையாகிய சோறும் இல்லை என்று கூறினார்.(எ.று)

முடிவு - தமர் இன்னும் சற்று உண்க என்று உபசரியாவண்ணம் தம்பிரான் இன்னும சற்று இடுங்கள் என்று (கூறிக் கொண்டு) உண்ணா நின்றான் இது கண்டு நின்றோர் நந்தி திருமுகம் பார்த்து மட்கலம் ஒழிய வேறு பற்றிலை என்று சொன்னார். அந்தக்காலத்தில் உணவினை மடகலத்திலேயே சமைத்து வந்தார்கள் என்னும் உண்மை இப்பாட்டால் அறிந்து கொள்ளலாம். பற்று என்பது உணவு சமைக்கும் பாண்டத்தில் ஏட்டிக் கொண்டிருக்கும் பொருள்.

மற்றைய அடியவர் தம்மனையகத் திருந்தும் உணவு கொண்டு வந்து படைக்கக் கருதியது

1085. உண்விளை யாடல் செய்யும்
ஒருவனைக் கண்டு வேள்மேல்
கண்விளை யாடும் நெற்றிக்
கடவுள்மெய் அடியார் எல்லாம்
விண்விளை யாடும் சோலை
வியனக ரிடத்தில் செல்வப்
பெண்விளை யாடும் தம்இல்
[1]பேரனம் இடுதற் கெண்ணி 39

(பா.ம்) [1]போனகம்

Koviloor Digital Library

(இ.ள்) வேள்மேல் நெற்றிக் கண்விளையாடும் கடவுள் மெய் அடியார் எல்லாம்= மன்மதன்மேல் நெற்றிக் கண்ணுல் எரித்தல் என்னும் திருவிளையாட்டைச் செய்யும் சிவபெருமானுடைய உண்மைத் தொண்டர் எல்லாம்; உண்விளை யாடல் செய்யும் ஒருவனைக் கண்டு = உண்ணுதலாகிய திருவிளையாட்டினைச் செய்யும் ஒப்பற்ற அல்லம தேவனைக் கண்டு; விண்விளை யாடும் சோலை வியநகரிடத்து = வானத்திலே உலவும் சோலைகள் சூழ்ந்த பெரிய நகராகிய கல்யாண புரத்திலுள்ள செல்வப் பெண்விளையாடும் தம்இல் பேரனம் இடுதற்கு எண்ணி = செல்வப் பெண்ணுகிய திருமகள் விளையாடல் செய்கின்றதம் வீட்டிலே இருந்து மிக்க அன்னத்தை அல்லம தேவருக்கு இடுதற்கு கருதி (எ.று)

முடிபு - அடியார் எல்லாம் உண் விளையாடல் செய்யும் ஒரு வனைக் கண்டு நகரிடத்தில் தம்இல் போனகத்தை இடுதற்கு எண்ணி.

1086. **பாண்டின்மேல் ஏற்றி வந்தும் பானையில் சுமந்து வந்தும்**
வேண்டிய பாகம் உற்று வேறுவே றாய அன்னம்
ஆண்டகைக் குரவன் உண்ண அளவிலர் சொரிந்து உயர்த்தார்
ஊண்தழல் வெறுக்கும் வண்ணம் ஊட்டுவம் என்பார் போல 40

(இ.ள்) அளவிலர் = அளவற்ற மெய் அடியார்பலர்; ஆண் தகை குரவன் உண்ண = ஆண்மைப் பண்பு என்னும் தகுதியை உடைய அல்லமதேவன் உண்ண வேண்டி; வேண்டிய பாகம் உற்று வேறு வேறாய அன்னம் = வேண்டும் சமையல் பாகத்தைப் பொருந்தி வெவ்வேறாக உள்ள உணவு வகைகளை எல்லாம்; பாண்டின் மேல் ஏற்றி வந்தும் பானையில் சுமந்து வந்தும் = வண்டிகளின் மேல் ஏற்றி வந்தும். பானையில் நிரப்பி அவற்றைச் சுமந்து வந்தும்; தழல் வெறுக்கு வண்ணம் ஊண் ஊட்டுவம் என்பர் போல = நெருப்பு வெறுத்து ஒதுக்கும்படி அதற்கு விறாகிய உணவை ஊட்டுவோம் என்று எண்ணுபவரைப் போல; சொரிந்து உயர்த்தார் -அல்லம தேவன் முன்பு கொட்டி மலைபோல் உயர்த்திவிட்டனர். (எ.று)

முடிவு - அளவிலர் குரவன் உண்ண வேறு வேறாய அன்னங்களை பாண்டின் மேல் ஏற்றி வந்தும் பானையில் சுமந்து வந்தும், தழல் வெறுக்கும் வண்ணம் ஊண் ஊட்டுவம் என்பார் போல (அல்லம தேவன் முன்) சொரிந்து உயர்த்தார்.

Koviloor Digital Library

1087. மலையென அமல ஞான வாரிமுன் சொரிந்து யர்ப்பார்
இலைமலர் பசுங்காய் கந்தம் இளஞ்செழுந்தண்டால்செய்த
உலைஅமை பல்கா யம்பெய் ஒண்கறி அமுது வேறு
பலபல முறைம யங்கப் படைப்பர்வல் விரைந்து வந்து
41

(இ.ள்) வல்விரைந்து வந்து = (மெய் அடியார் எல்லாம்) மிகவும் விரைந்து வந்து; அமல ஞானவாரிமுன் = குற்றமற்ற ஞானக் கடலாகிய அல்லம தேவன் முன்; மலை என சொரிந்து உயர்ப் பார் = வெள்ளி மலையைப் போல சோற்றுத்திரள்களை கொட்டி உயர்த்து வாராயினர்; இலை மலர் பசுங்காய் கந்தம் இளஞ்செழும் தண்டால் செய்த உலை அமைபல் காயம் பெய் ஒண்கறி அமுது வேறு பலபல முறை மயங்கப் படைப்பர் = இலையும் மலரும் பசுங்காயும் கந்தமும் இளஞ்செழுந் தண்டும் ஆகிய இவற்றால் செய்த கறி யமுதும் உலையிலே அமையும்படியாக மிளகு முதலான பொடிகளைப் பெய்து, செய்த கறியாகிய அக்அமுதை வெவ்வேறாய் பற்பல முறை கலந்து கிடைப்ப படைப்பர்.

முடிபு - மெய்யடியார் எல்லாம் (பாட்டு 39) வல்விரைந்து வந்து அமல ஞான வாரிமுன் மலை என (சோற்றுக் குவியலை) சொரிந்து உயர்ப்பார். கறியமுதை வேறு பலபல முறை மயங்கப் படைப்பர். எத்தகைய கறியமுது எனின்?; இலையும் மலரும் பசுங்காயும் கந்தமும் இளஞ்செழுந் தண்டும் ஆகிய இவற்றால் செய்த கறி அமுது. எப்படிச் செய்யப்பட்டது எனில்?; உலையிலே அமையும்படி பலகாயங்களைப் பெய்து செய்யப் பட்ட ஒண்கறி அமுது. மலைஎனச் சொரிந்து உயர்ப்பர் என்றதனால் செயப்படு பொருளாகிய சோற்றுத்திரள் வருவிக்கப் பட்டது. இலை என்பது கீரைவகை; மலர் என்பது வாழைப்பூ முதலான பூவகை கந்தம்என்பது கிழங்கு வகைகளை; தண்டு என்பது வாழைத் தண்டு கீரைத்தண்டு முதலானவை. கறிவகைகளை இலை மலர் காய் கந்தம் தண்டு என ஐவகையாகப் (பதார்த்ங்களைப்) பிரித்துக் கொண்டார். இவ்வைவகைப் பொருள்களை உலையில் ஏற்றி காயம் பெய்து சமைத்ததேகறியமுது என்க.

இங்கு காயம் என்பது மிளகாயுடன் மிளகு, சீரகம், பெருங்காயம் மல்லி, பருப்பு ஆகிய இவற்றைச் சேர்த்துச் செய்தபொடி. இதனைப் பிற்காலத்தார். சம்பார்ப் பொடி என்பர். இச்சம் பாரப்பொடி பெய்து

Koviloor Digital Library

சமைத்ததே சாம்பாராகும். களித்தல் என்றால் தின்னுதல் எனப் பொருள்படும். அவற்றை நாம் இப்போது பதார்த்தம் என்று கூறு கின்றோம்.

1088.குய் கமழ் கறிகள் இட்டுக் குவிப்பவர் சிலரெ டுத்து
நெய்கவிழ் கைய ராகி நிற்பவர் சிலர்நி ரம்பப்
பெய்கவிழ் சொரியென் ஆன்பால் பெய்பவர் சிலரளைந்த
கைகமழ் தயிர்க்கு டத்தால் கவிழ்ப்பவர் சிலரங்கம்மா 42

(இ.ள்) சிலர் குய்கமழ் கறிகள் இட்டு குவிப்பவர் = சில அடியார் தாளிப்பு மணக்கும் கறிகளை அல்லம தேவன் முன் இட்டுக்குவிப் பவராயினர் ; சிலர் எடுத்து நெய் கவிழ்கையராகி நிற்பவர் = சில அடியார் நெய்யை எடுத்து கவிழ்த்து விடும் கையராகி நிற்பவராயினார் ; சிலர் நிரம்பப் பெய்கவிழ் சொரி என்று ஆன்பால் பெய்பவர் = சில அடியார் பசுவின் பலை நிரம்பப் பெய் ; நிரம்பக் கவிழ்த்து விடு நிரம்ப சொரி என்று ஊற்று பவராயினர் ; சிலர் அங்கு அளைந்த கை கமழ் தயிர்குடத்தால் கவிழ்ப்பவர் = சில அடியார் அவ்விடத்தே மோரால் பிரை ஊற்றிய பக்கம் எல்லாம் மணம் வீசுகின்ற தயிரைக் குடத்தோடு கவிழ்ப்பவர் ஆயினார். அம்மா - வியப்பிடைச்சொல்.

முடிபு - சிலர் கறிகள் இட்டுக் குவிப்பவர் . சிலர் எடுத்து நெய்யை கவிழ்கையராகி நிற்பவர் சிலர் ஆன்பாலை நிரம்பப்பெய் நிரம்பக்கவிழ் நிரம்பச்சொரி என்று பெய்பவர். சிலர் அளைந்த தயிரை குடத்தால் தவிழ்ப்பவர். (ஆயினார்) அளை என்பது மோர்க்கு ஒரு பெயர் அளைந்தயிர் மோரால் பிரை ஊற்றிய தயிர். அளைந்த என்பது அளை என்னும் பெயரின் அடியால் பிறந்த பெயர்எச்சம்.

1089. இட்டவர் மறிய அன்னம் இடுதற்கு விரைந்து செல்வார்
முட்டுவர் எதிர்ந டந்து மூரல்கை வாங்கி வாங்கி
கொட்டுவர் அடிசில் தந்த கூடைகள் கவிழ்த்தெ றிந்து
தட்டுவர் அனம்ப டைக்கும் தம்பிரான் அடியர் அன்றே 43

(இ.ள்) அனம்படைக்கும் = சோற்றினைப் படைக்கும் ; தம்பிரான் அடியர் = சினடியார்கள் சிலர் ; இட்டவர் மறிய = முன்னே சோறு படைத்தவர் திரும்பிவர; அன்னம் இடுதற்கு விரைந்து செல்வார் = சோற்றினை படைப்பதற்குச்சிலர் விரைந்து செல்வார். (அப்பொழுது); எதிர் நடந்து முட்டுவர் = ஒருவர் எதிர் ஒருவர் நடந்து முட்டிக் கொள்வர் ; மூரல் கை வாங்கி வாங்கிக் கொட்டுவர்

Koviloor Digital Library

= சிலர் சோற்றினை கையால் எடுத்து கொட்டுவர்; அடிசில் தந்த கூடைகள் கவிழ்த்து எறிந்து தட்டுவர் = சோற்றினைக் கொண்டு வந்த கூடைகளை கவிழ்த்து வீசித்தட்டுவர். (அன்று, ஏ இவை அசைகள்)

முடிபு - அனம் படைக்கும் தம்பிரான் அடியர் அன்னம் இட்டவர்மறிய அன்னம் இடுதற்கு விரைந்து செல்வர் (அப்பொழுது) எதிர் நடந்து முட்டுவர். மூரலைக்கையால் வாங்கிக் கொட்டுவர். அடிசிலை தந்த கூடைகளை கவிழ்ந்து எறிந்து தட்டுவர்.

1090. இன்னணம் படைத்த எல்லாம் இமைப்பினில் அயின்று சைவ
மன்னவன் வயிற்றின் வெந்தீ வளர்த்தினிர் நீயிர் எல்லாம்
என்னநல் வசவ தேவன் இருந்தபல் பண்டம் கொண்டு
முன்னவன் பசியை ஆற்ற முன்னிமற் றிதனைச் செய்தான்
44

(இ.ள்) நல்வசவ தேவன் = நல்ல வசவ தேவன்(உணவு படைக்கும் அடியார்களைப் பார்த்து); நீயிர் எல்லாம் = நீங்கள் எல்லோரும் இன்னணம் படைத்த எல்லாம் = இவ்வாறு உண்பதற்காகக் கொடுத்த பொருள்கள் எல்லாவற்றாலும்; இமைப்பினில் அயின்று = ஒரு மாத்திரைப் பொழுதில் உண்டு மன்னவன் வயிற்றில் வெம் தீவளர்த்தினிர் என்ன = (பசி தணியுமாறு செய்யாமல்) அவ் அல்லம தேவனது வயிற்றிலே கொடிய பசித்தீ வளர்க்குமாறு செய்து விட்டீர்கள் என்று கூறிக் கொண்டு; இருந்த பல் ப்ண்டம் கொண்டு = சமைக்காமல் இருந்த பலவிதமான பொருள்களைக் கொண்டு; முன்னவன் பசியை ஆற்ற முன்னி - முன்னவனுகிய அல்லமதேவரது பசியை ஆற்றக் கருதி; மற்று இதனைச் செய்தான் = பின்னர் கீழே வரும் குறிப்பிட்ட செயலைச் செய்யத் தொடங்கினுன். (எ.று)

முடிவு - நல்வசதேவன் (அடியவரைப் பார்த்து) இன்னணம் படைத்த எல்லாப் பொருளாலும் சைவ மன்னவன் இமைப்பினில் அயின்று வயிற்றின் வெந்தீயை நீயிர் எல்லாம் வளர்த்தினீர் என்ன(என்று கூறி) இருந்தபல்பண்டங் கொண்டு முன்னவன்பசியை ஆற்ற முன்னி மற்று இதனை செய்தான் (பழைய உரை ஆசிரியர் சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் அயின்று என்ற தன்வினையை பிறவினையாகக் கொண்டு உண்ணு வித்து எனப் பொருள் கூறுகின்றார்). அவ்வாறு இங்கு

Koviloor Digital Library

உரை கொள்ளாமல் இன்னணம் படைத்த எல்லாவற்றாலும் நீயிர் எல்லாம் வெந்தீ வளர்த்தினிர். என்பதே பொருத்தமாகும்.

எவரையும் களிக்கச் செய்யுமாறு சமைக்காமலிருந்த பொருள்களையும் அல்லம தேவருக்குப் படைத்தல்

1091. அவரையும் [1]பயறும் எள்ளும் அரிசியும் [2]அவலும் கொள்ளும்
துவரையும் கடலையும் செஞ்சோளமும் நெல்லும் புல்லும்
குவரையும் கயிலை யும்பொற் குன்றமும் போல ஞாலத்(து)
எவரையும் களிப்புச் செய்ய எங்கணும் குவிப்பித் தானுல் 45

(பா.ம்) [1]பயறும் கொள்ளும்; [2]அவலும் எள்ளும்

(இ.ள்) அவரையும் பயிறும் எள்ளும் அரிசியும் அவலும் கொள்ளும் துவரையும் கடலையும் செஞ்சோளமும் நெல்லும் புல்லும் = மொச்சை வகையினையும் பயிறு வகையினையும் எள்ளுவகை யினையும் அரிசிவகையினையும் அவல்வகையினையும் கொள் வகையினையும் துவரைவகையினையும் கடலைவகையினையும் நல்ல சோள வகையினையும். நெல்வகையினையும் வரகு, தினை முதலான புல்வகையினையும் ஆகிய இவற்றை எல்லாம்; குவரையும் கயிலையும் பொன் குற்றமும் போல = கருமலையும் பொன் மலையும் ஆகிய இம்மலைகளை ஒப்ப; ஞாலத்து எவரையும் களிப்புச் செய்ய = இவ்வுலகத்திலே உண்ணுது சென்ற அடியார்களே அன்றி மற்றுள்ள யாரையும் களிப்பிக்க வேண்டி; எங்கணும் குவிப்பித்தான் = எல்லா விடங்களிலும் குவிப்பித்தான் (எ.று) ஆல் - அசை

முடிபு - (வசவ தேவன்) அவரையும் பயறும் எள்ளும் அரிசியும் அவலும் கொள்ளும் துவரையும் கடைலையும் சோளத்தையும் நெல்லும் புல்லும் (ஆகிய இவற்றை) குவரையும் கயிலையும் பொற்குன்றமும் போல எவரையும் களிப்புச் செய்யவேண்டி (அல்லம தேவன் முன்பு எங்கணும் குவிப்பித்தான்).

சுவாமிகள் எவரையும் களிப்புச் செய்ய என்று கூறுவதால் இதுவரை மேலே படைத்த உணவு எல்லாம் பிணங்கிச் சென்ற அடியார்களை களிப்புச் செய்யப் படைத்தாகவும். இங்கே படைத்தவை எல்லாம் உலகிலுள்ள எல்லா உயிர்களையும் களிப்புச் செய்ய

Koviloor Digital Library

படைத்ததாகவும் நாம் கருதிக் கொள்ளவேண்டியுள்ளது. குவரை = கருத்தமலை.

1092. குன்றென குவித்த எல்லாம் கொள்ளெனக் கொண்டு நம்பன்
மென்றரை கணத்துள் இன்னும் மெல்வன [1]கொணர்மின் என்ன
வன்றிறல் தண்ட நாதன் மனத்தினுல் அவை இயற்றி
நின்றிட தம்பி ரானும் நினைவினுல் அவைய யின்றான் 46

(பா.ம்) [1]கொணர்தி

(இ.ள்) நம்பன் - அல்லமதேவன்; குன்று என குவித்த எல்லாம் = பல மலைகளைப் போல குவித்த பல பொருள்களை எல்லாம்; கொள் எனக்கொண்டு = உணவாகக் கொள்க என நிவேதித்தவுடனே அவற்றை ஏற்றுக் கொண்டு; அரைக் கணத்துள் மென்று = அரைக்கண நேரத்தில் எல்லாம் அவற்றை மென்று அருந்திவிட்டு; இன்னும் மெல்வன கொணர்மின்என்ன = மேலும் மென்று அருந்த வேண்டிய பொருள்களை கொண்டு வருவீர்களாக என்று கூற; வன்திறல் தண்ட நாதன் = உணவு படைத்தலில் வலிய திறமை படைத்த வசவ தேவன் (உடம்பினுல் செய்யும் செயலை விட்டு); மனத்தினுல் அவை இயற்றி = தன் மன நினைவினாலேயே பல பொருள்களையும் படைத்து; நின்றிட = நிவேதனம் பண்ணி நின்றிட; தம்பிரானும் நினைவினுல் அவை அயின்றான் = அல்லம தேவனும் அப்பொருள்களையும் தன் நினை வினுலேயே உண்டான். (எ.று)

முடிபு - நம்பன் குவித்த எல்லாம் கொள் எனக் கொண்டு. அரைக் கணத்துள் மென்று(தின்று விட்டு) இன்னும் மெல்வனகொணர்மின் என்ன (அப்பொழுது) தண்ட நாதன் அவை மனத்தினுல் இயற்றி நின்றிட தம்பிரானும் நினைவினுல் அதை அயின்றான்.

1093. நோக்கினுல் அளித்த எல்லாம்
நோக்கினுல் தொலைத்தான் நந்தி
வாக்கினுல் அளித்த எல்லாம்
வாக்கினுல் வள்ளல் உண்டு
போக்கினுன் இடுதல் உண்ணல்
என்னும்இப் போரின் கண்ணே

Koviloor Digital Library

தூக்கினுல் இருவர் தாமும்
தோல் வியுற்று உடைந்தார் இல்லை 47

(இ.ள்) நந்தி நோக்கினுல் அளித்த எல்லாம் நோக்கினுல் தொலைத்தான் = வசவ தேவன் விழியினுல் நிவேதித்த பொருள்களை எல்லாம் விழியனுலேயே உண்டு அல்லமன் தொலைத்தான்; வாக்கினுல் அளித்த எல்லாம் வள்ளல் வாக்கினுல் உண்டு போக்கினுன் = வசவ தேவன் தன் வாய் மொழியால் நிவேதித்த பொருள்களை எல்லாம் அல்லம தேவனுகிய வள்ளலும் தன்வாக்கினுலேயே உண்டு போக்கினுன்; இடுதல் உண்ணல் என்னும் இப்போரின் கண்ணே தூக்கினுல் = உணவைப் படைத்தலும் அவற்றை உண்டு விடுதலும் ஆகிய இம்மாறு பட்டசெயலின் கண்ணே யாருக்கு வெற்றியும் தோல்வியும் என்று ஆராய்ந்தால்; இருவர்தாமும் தோல்வியுற்று உடைந்தார் இல்லை = இவ்விருவர்களும் தாம் செய்யும் தொழிலில் தோல்வியுற்று பின்னிட்டார் இல்லை (பின்னடைந்தார் இல்லை). (எ.று)

முடிபு - நந்தி நோக்கினுல் அளித்த எல்லாம் வள்ளல் நோக்கினுல் தொலைத்தான், நந்தி வாக்கினுல் அளித்த எல்லாம் வள்ளல் வாக்கினுல் உண்டு போக்கினுன், இடுதல் உண்ணல் என்றும் இப்போரின்கண்ணே (வெற்றியும் தோல்வியும் யாருக்கு என்று) தூக்கினுல் இவர்தாமும் தோல்வியுற்று உடைந்தார் இல்லை.

உரையாசிரியர் சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் இருவரும் போர்புரிவார்போல இடுதலும் உண்ணலும் செய்தலில் இப்போரின் கண்ணே என்பார்.

தொண்டர்கள் இவ்விருவர் செயலினைக் கண்டு வணங்குதல்

1094. படைத்திடும் தொழில்மு யன்ற பத்தன தியல்பும் அன்ன
துடைத்திடும் தொழிலில் நின்ற தூயவன் இயலும் நோக்கி
அடுத்தநல் பத்தர் எல்லாம் அனையவர் இருவர் சீரும்
எடுத்துரைத் துளம்வி யப்புற் றிறைஞ்சினர் ஒருங்கு மாதோ
48

(இ.ள்) அடுத்த நல் பத்தர் எல்லாம் = அவ்விடத்தே பொருந்தி யிருக்கும் அடியார் எல்லாம்; படைத்திடும் தொழில் முயன்ற பத்தனது இயல்பும் = பற்பல பொருள்களைத் தேடிக் கொண்டுவந்து நிவேதிக்கும் தொழிலை முயன்று நடத்தும் வசவதேவனுகிய பத்தனுடைய

Koviloor Digital Library

இயல்பையும்; அன்ன துடைத்திடும் தொழிலில் நின்ற தூயவன் இயலும் நோக்கி = அப்பொருள்களை எல்லாம் உண்டு போக்கும் தொழிலில் நின்ற தூயவனுகிய அல்லம தேவனனுடைய இயல்பையும் பார்த்து; அனையவர் இருவர் சீரும் எடுத்து உரைத்து = அத்தகையோராகிய இருவரின் சிறப்பைபும் எடுத்துக் கூறி; உளம் வியப்பு உற்று = மனம்வியந்து; ஒருங்கு இறைஞ்சினுர் = இருவரையும் ஒன்று சேர வணங்கினுர். மாதோ = அசை. (எ.று)

முடிபு - அடுத்தநல் பத்தர் எல்லாம் படைத்திடும் தொழில் முயன்ற பத்தனது இயல்பையும் அன்ன துடைத்திடும் நின்ற தூயவன் இயல்பையும் நோக்கி அனையவர். இருவர் சீரையும் எடுத்து உரைத்து உள்ளம் வியப்புற்று ஒருங்கு இறைஞ்சினர்.

அத்தொண்டரின் மூன்று வகையான புகழ்உரைக் கூற்று

1095. இடுதற்கு வல்லான் நந்தி இடும் பொருள் எவற்றையுங்கை
தொடுதற்கு வல்லான் இந்த தூயவன் என்பர் இவ்வாறு
இடுதற்கு வல்லார் இல்லை என்பரிவ் வாறு நாம்கை
தொடுதற்கு வல்லார் தம்மை சொல்லவும் [1]கேளேம் என்பார் 49

(பா.ம்) [1]கேளோம்

(இ.ள்) நந்தி இடுதற்கு வல்லான் இந்த தூயவன் இடும் பொருள் எவற்றையும் கைதொடுதற்கு வல்லான் என்பர் = வசவ தேவன் பொருள்களை படைப்பதற்கு வல்லவனாவன்; அல்லம தேவனாகிய தூயவன் படைக்கும் பொருள் எல்லாவற்றையும் கையால் தொட்டு உண்டுவிடுதற்கு வல்லவன் என்று இருவர் புகழையும் சிலர் கூறுவர்; இவ்வாறு இடுதற்கு வல்லார் இல்லை என்பர் = இவ்வாறு படைத்தற்கு வல்லார் வசவ தேவனே அன்றி வேறொருவர் இல்லை என்று கூறி வசவனையே புகழ்வர் ஒருசிலர். இவ்வாறு நாம் கை தொடுதற்கு வல்லார் தம்மை சொல்லவும் கேளேம் என்பார் - இவ்வாறு கையினுல் தொட்டு உண்பதற்குவல்லவரை. நாம் சொல்லவும் கேட்டிலோம் என்று அல்லம தேவனையே சிலர் புகழ்வார். (எ.று)

முடிபு - (அடியவரில் சிலர்) நந்தி இடுதற்குவல்லான்; தூயவன் இடும்பொருள் எவையும் கை தொடுதற்கு வல்லான் என்பர். இவ்வாறு

Koviloor Digital Library

இடுதற்கு வல்லார் (நந்தியைத் தவிர்த்து) இல்லை என்பர். இவ்வாறு நாம் கை தொழுதற்கு வல்லார் தம்மை (அல்லமனே அன்றி வேறு எவரையும்) நாம் சொல்லவும் கேளேம் என்பார். ஒருசிலர் வசவ தேவனையும் அல்லம தேவனையும் சேர்த்துப் புகழ்ந்தனர். ஒரு சிலர் வசவதேவனை புகழ்ந்தனர். ஒரு சிலர் அல்லம தேவனையே புகழ்ந்தனர். எனவே புகழுரை மூன்றாயின.

அல்லமனுக்கு போதும் என்று நிறைவுதரும் உணவை வசவதேவருக்கு சென்ன வசவதேவர் கூறியது

1096. **கண்ணப்பன் அன்பி ஞனே கறியென அமைத்த ஊனை**
உண்ணப்பன் ஊனின் வேறாம் [1]உயிர் உணின் அமைவன் என்று
வண்ணப்பொன் அனைய சென்ன வசவதே சிகன்வணங்கி
விண்ணப்பம் செய்தான் துங்க விடைமுகம் கரந்தா ஞேடு 50

(பா.ம்) [1] உயிருள் நின்று - என்பது பிழையான பாடம். இதை உரை நோக்கி அறிக.

(இ.ள்) வண்ணப் பொன் அனைய சென்ன வசவதேசிகன் = மாற்று குறையாத பொன்னினை ஒத்த சென்ன வசவ தேசிகன் என்பான்; துங்கவிடை முகம் கரந்தாஞேடு வணங்கி = தூய இடப முகத்தை மறைத்துக் கொண்டு வந்து பிறந்துள்ள வசவ தேவனுடன் அவனை வணங்கி; கண்ணப்பன் அன்பிஞனே கறி என அமைத்த ஊனை உண்ணப்பன் = கண்ணப்ப தேவர் தன்னிடத்துள்ள பேரன்பிஞலே பக்குவப்படுத்தி உண்ட ஊனை உண்ட தலைவஞகிய அல்லமதேவன்; ஊனின் வேறாம் உயிர் உணின் அமைவன் என்று விண்ணப்பம் செய்தான் = உன் உடம்பின் வேறாகிய உன் உயிரை இன்று நிவேதனம் செய்தால் போதும் என்று நிறைவு அடைவன் - என்று; விண்ணப்பம் செய்தான். (எ.று)

முடிபு - பொன் அனைய சென்ன வசவ தேசிகன் விடை முகம் கரந்தாஞேடு வணங்கி கண்ணப்பன் அன்பிஞனே கறி என அமைத்த ஊனை. உண் அப்பஞகிய அல்லமதேவன்(இன்று) ஊனின் வேறாம் உயிரை உண்ணின் அமைவன் என்று விண்ணப்பம் செய்தான். உயிர் உனின் அமைவன் என்றது. ஆத்மநிவேதன பத்தியை மணிவாசகரும். உயிர் உண்ணுகின்ற அம்மானே என்பர். மேலும் அவர் கூறிய

Koviloor Digital Library

உயிருண்ணிப்பத்தினையும் படித்து அறிக. இது பத்திவகையுள் உயர்ந்த பத்தி யாகும். தன்னையும் தன்செயலையும் இறைவனிடத்திலே ஒடுக்கிக் கொள்வது. இதனை நம் செயல் அற்று நாம் அற்றபின் நாதன்தன் செயல் தானே என்று உந்தீபற என்று திருவுந்தியார் கூறும். அடுத்த பாட்டின் உரையுள் இதன் விளக்கத்தினைக் காண்க.

மடிவால மாச்சய்யன் கூறியதும்
அவர்கள் கூறியவாறு செய்ய வசவன் துணிந்ததும்
வேறு

1097. சென்ன வசவன் சொல்லியவச்
செயலே செய்யும் செயலென்று
மன்னும் அருளின் மடிவால
மாச்சி தேவன் வந்துரைப்ப
என்னை உடையான் நும்மொழியே
எனது மனதைத் தேற்றுமது
பின்னை உளதோ கதகமலால் பெருநீர்
தெளித்தற் கென்று ரைத்து 51

(இ.ள்) மன்னும் அருளின் மடி வால மாச்சி தேவன் வந்து = நிலை பெற்ற அருளையுடைய மடிவால மாச்சய்யனும் வசவ தேவனிடம் வந்து; சென்ன வசவன் சொல்லிய அச்செயலே செய்யும் செயல் என்று உரைப்ப = சென்ன வசவதேவன் உயிர் உணின் அமைவன் என்று சொல்லிய அச்செயலே செய்வதற்குரிய செயலாகும் என்று வழிமொழிந்து கூற; என்னை உடையான் = என்னை உடையவசவ தேவனும்; நும்மொழியே எனது மனதை தேற்றும் அது = உங்கள் இருவரின் மொழியே கலங்கியிருந்த என்னுடைய உள்ளத்தை தெளியச் செய்கின்ற அப்பொருளாக இருக்கும். (எது போல் எனில்); பெருநீர் தெளிதற்கு = கலங்கிய மிகுதியான நீரை தெளிவித்தற்கு; கதகம் அலால் பின்னை உளதோ என்று உரைத்து = தேற்றாங் கொட்டை அல்லாது வேறு பொருள் உண்டோ என்று கூறி. (எ.று)

முடிபு - மடிவால மாச்சி தேவன் வந்து சென்ன வசவன் சொல்லிய அச்செயலை செய்யும் செயல் என்று உரைப்ப(அதனைக் கேட்ட) என்னையுடையான் எனது மனதை நும் மொழியே தேற்றும் அது. பெருநீர் தெளிதற்கு கதகம் அலால் பின்னை உளதோ என்று உரைத்து.

Koviloor Digital Library

வசவ தேவன் தம்மையே நிவேதித்தது

1098. பொறிகள் கரணம் பூதங்கள் புலன்கள் மற்றும் பல்வகைய
கறிகள் ஆக ஆருயிரே கலந்துண் [1]பதமாய் நீ உண்ண
[2]பெறுக தில்யான் எனநின்று பிறவிப் பிணிதீர் மருத்து வன்தன்
நறிய மலர்மெல் அடிபணிந்தான் நமையாள் உடையஅருள் நந்தி 52

(பா.ம்) [1]பத்மா; [2]பெறுகதிலன்யான்.

(இ.ள்) நமை ஆள் உடைய நந்தி = நம்மை எல்லாம் ஆட்கொண்டு அருளும் பெருமை தங்கிய அருளையுடைய வசவதேவன் (அல்லமதேவன் முன்சென்று); பொறிகள் கரணம் பூதங்கள் புலன்கள் மற்றும் பல்வகைய கறிகளாக = ஐம்பொறிகளும் நாற்கரணங்களும் ஐம்பூதங்களும் ஐம்புலன்களும் ஆகிய இவைகள் எல்லாம் வெவ்வேறு வகையான பலவகையான கறிகளாகவும்; ஆர் உயிரே கலந்து உண்பதமாய் = என்னுடைய அரிய உயிரே அக்கறிகளோடு சேர்த்து உண்ணும் சோறு ஆகவும் அமையுமாறு நீ உண்ண யான் பெறுகதில் = நீ நிவேதனப் பொருளாக உட்கொள்ள யான் அப்பேற்றை பெறுவேனுக. இதில் பெருவிருப்ப முடையேன்; என நின்று = என்று கூறி திரு முன்னே நின்று பிறவிப் பிணிதீர் மருத்துவன்தன் = பிறவியாகிய நோயை தீர்த்ற்குரிய மருத்துவனுயுள்ள அல்லமனுடைய; நறிய மலர் மெல்லடிப் பணிந்தான் = நறு மணமுள்ள மலர் போன்ற மென்மையான திருவடி யினை வணங்கினுன். (எ.று)

முடிபு - அருள் நந்தி பொறிகளும் கரணமும் பூதங்களும் புலன்களும் கறிகளாக உயிரே உண்பதமாய் (அமைய) நீ உண்ணயான் பெறுகதில் என நின்று பிறவிப்பிணிதீர் மருத்துவன்தன் அடிபணிந்தான். வசவ வேன் அல்லம தேவருக்கு தம் உயிரை நிவேதித்த செயலையும் அதை ஏற்று அல்லமன் மகிழ்ந்து நிறைவடைந்த செயலையும் கீழேவரும் வசவபுராணப் பாடல் இரண்டினுல் உணர்க.

எண்ணு மிலக்கத் தெண்பதினு யிரஞ்சங் கமத்திற் கினிதாகப்
பண்ணு மமுது கறியெல்லாம் படைத்துத் தொலைந்தும் பசிதீராது
அண்ண லமுது தருகென்னு மளவில் வசவே சுரர் தம்மைத்
திண்ணமாக நிவேதித்தார் சிந்தை மகிழ்ந்து பிரபு தேவர்

(தண்டநாயகச் சருக்கம். 121)

எண். 82: பி. லீ. 52

Koviloor Digital Library

பொறிகள் கரணம் பூதங்கள் புலன்கள் மற்றும் பல்வகைய கறிகளாக என்றது. கரணார்ப் பிதம் காயார்ப்பிதங்களைக் குறிக்கும். ஆருயிரே கலந்துண்பது என்பது ஆன்மார்ப்பிதத்தைக் குறிக்கும். எனவே காயம் கரணங்களோடு கூடிய இறைவனுக்கே உரியதாக நிவேதித்தனர் என்பதாம்.

நல்லை நல்லை கணேந்திரனே நாதன் பத்திவித்தனையாய்
நல்லை நல்லை வசவண்ண நாடு மிரண்டாம் சம்புவே
நல்லை நல்லை திருநந்தி நரலோ கத்தின் உருத்திரனே
நல்லை நல்லை உனைப்போல்வார் நாங்கண் டறியோ
நானிலத்தில்

(தண்டநாயகச் சருக்கம், அல்லமாப்பிரபு புராணம்)

அல்லம தேவர் மகிழ்ந்து தம்மோடு அனைத்துக் கொண்டது

1099. வசவன் நிலைகண்(டு) அருள் ஞான
வள்ளல் அல்ல மப்பேரான்
பசியின் வந்தேன் அலன் பொருட்கு
படர்கா மக்கு வந்திலன்யான்
கசியும் நினது மனத்தன்பு காண
வந்தேன் என்று ஏத்தி
இசையின் மலியும் அரன் அடியார்
யாரும் மகிழ எடுத்தணைத்தான் 53

(இ.ள்) அருள் ஞான வள்ளல் அல்லமப் பேரான் = அருளை யுடைய ஞானத்தைத் தருபவனாகிய அல்லமதேவன்; வசவன் நிலைகண்டு = தம்மைத்தாமே நிவேதித்த வசவ தேவனது நிலையைப் பார்த்து (வசவதேவனை நோக்கி); யான் பசியின் வந்தேன் அலன் பொருட்கு படர்காமக்கு வேந்திலன் = யான் உன்னிடம் பசியினுலே உணவு வேண்டி வந்திலேன், பொருள் வேண்டியும் வந்திலன் விரும்பிய வேறு பொருளைக் கருதியும் வந்திலன்; கசியும் நினது மனத்து அன்பு காண வந்தேன் = உன்னுடைய இளகும் மனத்தின் அன்பினை அறிவதற்கே வந்தேன்; என்று ஏத்தி = என்று கூறிப் புகழ்ந்து; இசையின் மலியும் அரன் அடியார் யாரும் மகிழ = புகழால் மிகும் சிவனடியார் எல்லோரும் உவப்படையுமாறு; எடுத்து அணைத்தான் = வசவதேவனை கையால் எடுத்துத் தன் பார்போடு அணைத்துக் கொண்டான். (எ.று)

Koviloor Digital Library

முடிவு - அல்லமப் பெயரான் வசவன் நிலைகண்டு யான் பசியின் வந்தேன் அலன் பொருட்கும் காமக்கு வந்திலன். நினது மனத்தன்பு காண வந்தேன் என்று ஏத்தி. அரனடியார் யாரும் மகிழ எடுத்து அணைத்தான். காமக்கு என்ற சொல்லில் அக்கு என்பது சாரியையாகும்.

வசவதேவன் கூறிய பணிவானமொழி

1100. **கண்போல் உயிர்கள் கண்டறிய**
கதிர்போல் காட்டும் பெருமானே
உண்போன் [1]யானு ஊட்டும்உனக்(கு)
ஊட்டு வேனென்(று) எழுந்தமையால்
எண்போ(து) என்போல் பேதைமையார்
இல்லை இல்லை என்றன்பின்
பண்போ(டு) அமலன் எதிர்நின்றான்
பத்தி வடிவம் ஆயினுன் 54

(பா.ம்) [1]உண்போல் யானுய் (உண்போனுக ஏனவும் பாடம்)

(இ.ள்) பத்திவடிவம் ஆயினுன் = அன்பின் வடிவமாகிய வசவ தேவன். (அல்லமதேவனை நோக்கி); கண்போல் உயிர்கள் கண்டு அறிய = விழியின் இயல்பினைப்போல உயிர்கள் எல்லாம் பார்த்து அறியுமாறு; கதிர் போல் காட்டும் பெருமானே!= சூரியனுடைய இயல்பைப் போல் இருந்து உயிர்களை எல்லாம அறிவிக்கும் பெருமானே!; உண்போன் யானு = நுகர்பவன் யானுய் இருக்க; ஊட்டும் உனக்கு = என்னை நுகர்விப்பவனுய் இருக்கின்ற சிறப்பு வாய்ந்த உனக்கு; ஊட்டு வேன் என்று எழுந்தமையால் = உன்னை நுகரச் செய்வேன் என்று கருதிக் கொண்டு, அகங்காரத்தால் நான் எழுந்த காரணத்தினுலே; எண்போது = இச்செயலைக் கருதி உணரும்போது; என்போல் பேதைமையார் இல்லை இல்லை என்று = என்னைப் போன்ற அறிவில்லாதவர் யாரும் உலகத்தில் இல்லவே இல்லை என்று கூறி; அன்பின் பண்போடு அமலன் எதிர் நின்றான் = அன்பாகிய குணமே வடிவமாக அல்லமதேவன் முன் நின்றான். (எ.று)

முடிபு - பத்திவடிவம் ஆயினுன் உயிர்கள் கண்போல் கண்டிறிய (உயிர்களை) கதிர் போல் காட்டும் பெருமானே! யான் உண்போனுய் இருக்க(என்னை) ஊட்டும் உனக்கு. யான் ஊட்டு வேன் என்று எழுந்த மையால் எண்போது என்போல் பேதைமையார் இல்லை இல்லை என்று

Koviloor Digital Library

கூறி அன்பின் பண்போடு அமலன் எதிர் நின்றான். காணும் கண்ணிற்குக் காட்டும் உளம்போல். காண உள்ளத்தைக் கண்டு காட்டலின் (என்ற சிவஞானபோத நூற்பாக்கருத்து இங்கே வந்துள்ளது).

1101. செம்மை நெறியான் அருள்நந்தி
தேவன் தன்னைப் புகழ்வமோ
பொய்ம்மை தீரும் அல்லமனைப்
புகழ்வமோ இங்கு அன்றிஇவர்
தம்மை விழியால் காண்பதற்கு
தவஞ்செய்து உடலம் இதுபெற்ற
எம்மை யாமே புகழ்வமோ
எனநின் றனர்தம் பிரானடியார் 55

(இ.ள்) தம்பிரான் அடியார் = தமக்குத்தாமே தலைவன் என்னும் சிவபெருமானுடைய அடியவர்கள்; இங்கு = இவ்விடத்து; செம்மை நெறியான் அருள் நந்தி தேவன் தன்னைப் புகழ்வமோ = பத்திநெறியாகிய செம்மை நெறியை உடையவன் என்னும் வசவ தேவனை புகழ்வேமோ; பொய்மை தீரும் அல்லமனைப் புகழ்வமோ = பொய் ஒழுக்கம் நீங்கிய அல்லம தேவனைப் புகழ்ந்து கூறுவேமோ; அன்றி = இவ்விரண்டையும் விட்டு; இவர் தம்மை விழியால் காண்பதற்கு தவம் செய்து உடலம் இது பெற்ற எம்மை யாமே புகழ்வமோ என நின்றனர் = இவ்விருவர் தம்மையும் கண்ணாலே பார்ப்பதற்குத் தவத்தைச் செய்து இந்த உடம்பைப் பெற்ற எங்களை யாங்களே புகழ்ந்து கூறிக்கொள்வே மோ எனக் கூறி நின்றனர். (எ.று)

முடிபு - தம்பிரான் அடியார் இங்கு அருள் நந்தி தேவன் தன்னைப் புகழ்வோமோ அல்லம தேவனைப் புகழ்வோமோ அன்றி இவர் தம்மை விழியால் காண்பதற்குத்தவம் செய்து உடலமாகிய இதனைப் பெற்ற எம்மையாமே புகழ்வோமோ என நின்றனர்.

1102. [1]பரிந்த நந்தி முகம்நோக்கிப்
பசித்தார் என்று நீ தளரப்
பிரிந்த அந்த அடியர்தமைப்
பிறங்கல் அனைய நின்மாடத்(து)
அருந்த வணங்கிக் கொணர்தியென
அறிவா னந்த மயன்கூற

Koviloor Digital Library

விரைந்து விடைகொண் டெழுந்தன்பு
வெள்ளம் சென்றது அவரிடத்தில் 56

(பா.ம்) [1]பரிந்து

(இ.ள்) அறிவானந்தமயன் = அறிவுமயனுகவும் ஆனந்த மயனு கவும் உள்ள அல்லம தேவன் ; பரிந்த நந்தி முகம் நோக்கி = அடியவரிடத்தே அன்பு கொண்ட வசவ தேவனது முகத்தைப் பார்த்து; பசித்தார் என்று நீ தளரப் பிரிந்த அந்த அடியர்தமை = பசியுடையவராக இருந்தார்களே என்று நீ மனம்தளர்ந்து வருந்தும்படி உன்னைவிட்டுப் பிரிந்து போன அந்த அடியார்களை எல்லாம்; பிறங்கல் அனைய நின் மாடத்து = மலையை ஒத்த நின் மாளிகைக்கண்; அருந்த வணங்கிக் கொணர்தி என = உணவு அருந்துமாறு அவர்களை எல்லாம் வணங்கி அழைத்து வருவாயாக என்று கூற; அன்பு வெள்ளம் = வசவதேவனுகிய அன்பு வெள்ளம்; விரைந்து விடை கொண்டு எழுந்து அவரிடத்தில் சென்றது = மிகவிரைவாக அல்லமதேவரிடத்து விடை பெற்றுக் கொண்டு எழுந்து அடியவர் பால் சென்றது.(எ.று)

முடிபு - அறிவானந்த மயன், நந்தி முகத்தை நோக்கி நீதளர பிரிந்த அடியர் தமை நின்மாடத்து அருந்த வணங்கி கொணர்தி என(வசவ தேவனுகி) அன்பு வெள்ளம் விரைந்து விடை கொண்டெழுந்து அவரிடத்தில் சென்றது). அன்பு வெள்ளத்தையுடைய வசவதேவனை அன்புவெள்ளமாக வேகருதிக் கூறியுள்ளார். குணியைக் குணமாக் கூறுவதோர் மரபு; சென்றது என்பது குணத்திற்கு ஏற்ற ஒருமை முடிபு. (எ.று)

1103. சென்ற வசவன் அருட்குரவன்
திருமே னியிற்றான் அங்கணிந்த
மன்றல் மலரும் சந்தனமும்
வடிவில் திகழ [1]மடிநிமிர்ந்து
தின்றல் முதல கறிமணக்க
தேக்கு விடுத்து முகமலர்ந்து
கொன்றை கமழ்வே ணியனடியார்
குழாங்கள் இருப்பக் கண்டனனல் 57

(பா.ம்) [1]படிநிமிர்ந்து

(இ.ள்) சென்ற வசவன் = (அடியர் எல்லாம் பசியினுல் வருந்திக் கொண்டு இருப்பரே என்பதைக் கருதிக் கொண்டு) சென்ற வசவதேவன்;

Koviloor Digital Library

அருள் குரவன் திருமேனியில் தான் அங்கு அணிந்த மன்றல் மலரும் சந்தனமும் வடிவில் திகழ = அருளையுடைய ஆசிரியைனுகிய அல்லம தேவனது அழகிய உடம்பிண்கண் தான் அங்கு அங்கே சூட்டிய மணமுடைய பூக்களும் சந்தனமும் தங்கள் உடம்பில் விளங்க; மடிநிமிர்ந்து = அல்லமதேவனுக் கிட்ட உணவால் இவர்களின் வயிறு நிரம்பி; தின்றல் முதல் கறிமணக்க தேக்கு விடுத்து = தின்றல் முதலான பலவகைக் கறிகளின் மணம் வீச ஏப்பம் விட்டு; முகம்மலர்ந்து = முகமலர்ச்சியடைந்து; இவ்வாறு கொன்றை கமழ் வேணியன் அடியார் குழாங்கள் இருப்பக்கண்டனன் = கொன்றை மலர் மணக்கும் சடையையுடைய இறைவனது அடியார் கூட்டங்களெல்லாம் இருப்ப அந்நிலையைக் கண்ணால் கண்டான். (எ.று) (அல் - அசை)

முடிபு - சென்ற வசவன் அடியார் குழாங்கள் (எல்லாம்) குரவன் திருமேனியில் தான் அணிந்த மலரும் சந்தனமும் வடிவிலேதிகழ மடிநிமிர்ந்து தேக்குவிடுத்து முகமலர்ந்து இருப்பக் கண்டனன்.

1104. **கண்ட நந்தி அடிபணிந்து**
கடையேன் செய்த பிழைஎல்லாம்
உண்டு பொறுமின் வருகஎன
உள்ளம் களிப்புற்று ஆங்கிருந்த
தொண்டர் வசவ நின்பெருமை
சொல்ல எளிதோ வயிறாரப்
பண்டு போல [1]வாய்கை தொழில்
படாமல் அயின்றே இன்றுஎன்று 58

(பா.ம்) [1]வாய்கள் தொழில்

(இ.ள்) கண்ட நந்தி = அடியவரைக் கண்ட வசவதேவன்; அடிபணிந்து = அவர்களின் திருவடியைதான் வணங்கி; கடையேன் செய்த பிழை எல்லாம் உண்டு பொறுமின் வருக என = தாழ்ந்தோனுகிய அடியேன் செய்த குற்றங்களை எல்லாம் என்மனைக் கண்எழுந்தருளி உணவு உட்கொண்டு பொறுப்பீராக உண்பதற்கு வருக என்று கூற; உள்ளம் களிப்பு உற்று ஆங்கு இருந்த தொண்டர் = மனம் உவுகை அடைந்து அங்கே இருந்த அடியவர் கூட்டங்கள்; (வசவ தேவனைப் பார்த்து); வசவ நின் பெருமை சொல்ல எளிதோ = வசவ தேவனே உன்னுடைய பெரும் சிறப்பு சொல்லுதற்கு எளிதாயிருக்குமோ?; (எதிர்மறை ஓகாரத்தால் எளிதாயிருக்காது என்பது கருத்து). இன்று வாய்

Koviloor Digital Library

கை தொழில் படாமல் வயிறார பண்டுபோல அயின்றேம் என்று = இன்றைய நாள் எங்களுடைய உண்ணும்வாயும் உதவும்கையும் செயற்படாமலேயே வயிறு நிறைய வாயும் கையும் தொழில் பட உண்ட பண்டு போலவே உண்டோம் என்று கூறி. (எ.று)

முடிபு - கண்ட நந்தி (அடியவரின்) அடிபணிந்து கடையேன் செய்தபிழைகள் எல்லாவற்றையும் உண்டு பொறுமின் வருக எனக் கூற ஆங்கிருந்த தொண்டர் வசவ! நின் பெருமை சொல்ல எளிதோ இன்று வாயும் கையும் தொழில் படாமல் வயிறு ஆர பண்டு போல அயின்றேம் என்று. பண்டு உண்டது வாயும் கையும் தொழிற்படும்படி. இன்று உண்டது வாயும் கையும் தொழிற்படாதபடி. இரண்டினாலும் வயிறார உண்டோம் என்றதாயிற்று.

1105. **தேவர் உண்ண ஆவிஉணவு செந்தீ**
முகத்தில் இடுதல் போல
ஓவில் யாங்கள் எல்லேமும்
உண்ண அடிசில் அல்லமன்தன்
நாவில் மருவ விடும் நினையோர்
நாவோ புகழும் தரத்ததென
ஆவி அனைய நந்திசீர்
அமலன் அடியார் புகன்றேத்தி 59

(இ.ள்) அமலன் அடியார் = அமலனாகிய சிவபெருமானுக்கு அடியவராயிருக்கும் தொண்டர் எல்லாம் (வசவனை நோக்கி); தேவர் உண்ண அவி உணவு செந்தீ முகத்தில் இடுதல் போல் = எல்லாத்தெய்வக் கூட்டத்தினரும் உண்ணுமாறு அவர்களுக்குரிய அவிர்பாகத்தை சிறந்தயாகத்திலே வளர்த்தி சிவந்ததீயிலே இடுதலைப்போல; ஓவுஇல் யாங்கள் எல்லேமும் உண்ண = நீங்குதல் இல்லாத யாங்கள் எல்லோரும் உண்ணுமாறு; அடிசில் அல்ல மன்தன் நாவில் மருவவிடும் நினை = உணவினை அல்லமதேவன் தன் நாவிலே பொருந்துமாறு கொடுக்கும் உன்னை; ஓர் நாவோ புகழும் தரத்தது என = எங்களுடைய ஒரு நாக்கோ புகழ்ந்து பேசும் தகுதியுடையதாக இருக்கும் என்று கூறி; ஆவி அனைய நந்திசீர் புகன்று ஏத்தி = உயிரை ஒத்த நந்தி தேவனது பெரும் புகழை விரும்பிப் புகழ்ந்து. (எ.று)

முடிபு - அமலன் அடியார் (வசவனை நோக்கி) தேவர் உண்ண அவியுணவை தீமுகத்திலிடுதல் போல யாங்களெல்லாம் உண்ண

Koviloor Digital Library

அடிசிலை அல்லமன்தன் நாவில் விடும் நின்னை ஓர் நாவோ புகழும் தரத்தது எனக்கூறி நந்தி சீர்புகன்று ஏத்தி.

1106. உலகில் ஒருவன் சிவயோகி
உண்டது அம்ம சராசரமாம்
அலகில் [1]உயிர்கள் எலாம்உண்டது
ஆகும் என்ன மறைகூறும்
இலகும் உரையை காட்சியால் இன்றி
இங்கு உணர உணர்த்தினான்
கலக வினைகள் தீர்க்குமருள்
கண்ணன் திகழல் லமதேவன் 60

(பா.ம்) [1] அலகில் உயிரெலாம் உண்டது ஆகும்.

(இ.ள்) உலகில் ஒருவன் சிவயோகி உண்டது சராசரமாம் அலகில் உயிர்கள் எலாம் உண்டது ஆகும் என்ன மறை கூறும்= இவ்வுலகத்திலே ஒரு எண்ணிக்கை உடையவனுகிய சிவயோகி அருந்தியது இயங்கும் திணை இயங்காத்திணை ஆகிய அளவற்ற உயிர்களெல்லாம் அருந்திய தாகும் என்று சிவாகமங்கள் கூறும்; அம்ம! இலகும் உரையை = இவ்வாறு கூறப்பெற்று விளங்கும் ஆகம அளவையை; இன்று இங்கு காட்சியால் உணர உணர்த்தினுன் = இன்றைய நாள் இவ்விடத்தே காட்சி அளவை யினுலே எல்லோரும் உணர்ந்து கொள்ளும்படி அறிவித்தான் (அறிவித் தவன் யார் எனில்); கலகவினைகள் தீர்க்கும் அருள் கண்ணன் திகழ் அல்லம தேவன் = மாறுபாட்டினைச் செய்யும் இயல்பினைன யுடைய வினைகளை எல்லாம் தீர்த்து விடும் அருட் கண்ணனுகிய விளங்கும் அல்லமதேவன் என்க(எ.று) அம்ம வியப்பிடைச் சொல்.

முடிபு - உலகிலே ஒருவனுகிய சிவ யோகி உண்டது. சராசரமாம் அலகு இல் உயிர்கள் எலாம் உண்டது ஆகும் என்ன மறை கூறும் அம்ம. திகழ் அல்லமதேவன் இலகும் உரையை காட்சியால் இன்று இங்கு உணர உணர்த்தினுன் அம்ம! .

இக் கருத்தை,

திருத்தி யொண்சிவ யோகி பெறிற்சிவன்
திருத்தி யெய்துவன் அச்சிவ னெய்திய
திருத்தி கொண்டு செறியும் உலகெலாம்
திருத்தி எய்தும் சிவமயம் ஆதலால்

Koviloor Digital Library

சிவயோகி த்ருப்தி அடைந்தால் சிவன் த்ருப்தி (சகசதாநத்தலம் 8ம்பாட்டு) அடைவான். சிவன் திருப்பதி அடைந்தால் அவன் நிறைந்துள்ள எல்லா உலகும் த்ருப்தி அடையும் என்பது கருத்து. இக் கருத்தை கீழ்வரும் திருமந்திரப் பாடலாலும் உணர்க.

தண்டறு சிந்தை தபோதனர் தாமகிழ்ந்
துண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்று
எண்டிசை நந்தி எடுத்து துரைத் தானே (திரு.மந். 1858)

1107. ஆத லாலவ் அல்லமனை அருத்தல் எம்மை எலா மருத்தல்
பாதம் அவனைப் பணிதலெமைப் பணிதல் ஆகும் எஞ்ஞான்றும்
பேதம் இல்லை நல்வசவப் பெயரோய் செல்க என்னமலை
மாது தழுவக் குழைந்ததோள் வள்ளல் அடியார் தமைவணங்கி 61

(இ.ள்) ஆதலால் = ஆகையினுலே; அவ்அல்லமனை அருத்தல் எம்மை எலாம் அருத்தல் = அவ்அல்லமதேவனை உண்ணச் செய்வது எம்மை எல்லாம் உண்ணச் செய்வதாகும்; அவனைப் பாதம் பணிதல் எமைப் பணிதலாகும் = அவ்வல்லம தேவனை அவனது திருவடி யிடத்தே சென்று வணங்குதல் எம்மை வணங்குதற்கு ஒப்பாகும்; எஞ்ஞாறும் பேதமில்லை - எந்தக்காலத்திலும் எந்த இடத்திலும் அல்லம தேவருக்கும் எங்களுக்கும் வேறுபாடில்லை; வசவப் பெயரோய்! செல்க என்ன = (அல்லம தேவனை வணங்கி அவர் அருள்பெற்ற) வசவ தேவனே! அவரிடத்தில் செல்வாயாக என்று கூற; மலைமாது தழுவக் குழைந்த தோள்வள்ளல் அடியார் தமைவணங்கி = மலையரசன் மகளாகிய பார்வதியால் தழுவ அதனுல்குழைந்த தோளையுடைய சிவபெருமானுடைய தொண்டர் தமை வணங்கி விடைபெற்றுக் கொண்டு. (எ.று)

முடிபு - (அடியார்) ஆதலால் அல்லமனை அருத்தல் எம்மை எலாம் அருத்தல் ஆகும். அவனைப் பாதம் பணிதல் எம்மைப் பணி தலாகும்; எஞ்ஞான்றும் (எங்களுக்குள்) பேதமில்லை. வசவப் பெயரோய்! செல்க என்ன (வசவதேவன்) அடியார்தமை வணங்கி.

Koviloor Digital Library

1108. மீண்டு நந்தி அல்லமனுர்
மென்பூங் கமல அடியிறைஞ்சி
ஆண்ட பெருமான் அடியார்கள்
அன்னை உண்ட உணவுகரு
ஈண்டு மகவும் உண்ணல்போல்
எந்தை உண்ட எலாமுண்டு
பூண்ட மகிழ்வோ டிருந்தனர்நீ
புனைந்த மலரும் புனைந்தென்றான் 62

(இ.ள்) நந்தி மீண்டு = வசவதேன் அடியார் கூட்டத்திலிருந்து திரும்பி; அல்லமனுர் மென்பூங்கழல் அடி இறைஞ்சி = அல்லம தேவருடைய மெல்லிய பொலிவான தாமரை மலர் போன்ற திருவடியை வணங்கி; அன்னை உண்ட உணவு கரு ஈண்டு மகவும் உண்ணல் போல் = நற்றாய் உண்ட உணவினை அவளுடைய கருப்பையில் பொருந்தி இருக்கும் குழவியும் உண்ணுதல் போல; எந்தை உண்ட எலாம் = எங்கள் தந்தையாகிய நீ உண்ட உணவு எல்லாவற்றையும்; ஆண்ட பெருமான் அடியார்கள் உண்டு = சிவபெருமானுடைய அடியார்கள் எல்லாம் உண்டு; நீபுனைந்த மலரும் புனைந்து = நான் அர்ச்சிக்க நீ சூடிய மலர்களை எல்லாம் அவர்களும் சூடிக் கொண்டு; பூண்ட மகிழ்வோடு இருந்தனர் என்றான் = பொருந்திய மகிழ்வோடு இருந்தனர் என்று சொன்னான். (எ.று)

முடிபு - நந்தி மீண்டு அல்லமனுர் கமல அடி இறைஞ்சி (அல்லமனை நோக்கி, அன்னை உண்ட உணவு கரு ஈண்டு மகவும் உண்ணல் போல எந்தையாகிய(நீ) உண்ட எலாம். ஆண்ட பெருமான் அடியார்கள் உண்டு நீ புனைந்த மலரும் புனைந்த பூண்ட மகிழ்வோடும் இருந்தனர் என்றான். மகவும் உண்டு என்ற உம்மை எச்ச உம்மை.

அல்லமன் பூரணன் என்றது

1109. மாறன் அடித்த அடிபட்ட மன்னும் உயிரின் திறம் எல்லாம்
ஈறில் [1]புகழ்சங்கன வசவன் இட்ட அடிசில் உண்டுபசி
ஆறி இருந்த ஆதலினுல் அல்ல மன்பூ ரண னென்ன
கூறும் மொழிமெய் மெய்யென்று கூறி உலகம்
களித்ததால் 63

(பா.ம்) [1]புகழ் கங்கன வசவன்

Koviloor Digital Library

(இ.ள்) மாறன் அடித்த அடிபட்ட மன்னும் உயிரின் திறம் எல்லாம் = (அன்று) பாண்டிய மன்னன், வேலையாளாய் வந்த சொக்கலிங்கப் பெருமானை அடித்த அடி தம் மேலும் பட்டனவாய் பொருந்தி விளங்கும் உயிர்க்கூட்டங்கள் எல்லாம்; ஈறு இல்புகழ் சங்கு அன வசவன் இட்ட அடிசில் உண்டு = முடிவற்ற புகழானது சங்கைப் போல் மிக வெண்மையாக விளங்கப் பெறும் வசவதேவன் அல்லம தேவனுக்குப் படைத்த உணவு வகைகளை (உயிர்களாகிய) தாமும் உண்டு; பசி ஆறி இருந்த = பசி தணிந்து இருந்தன; ஆதலினுல் = அக்காரணத்தினுலே; உலகம் அல்லமன் பூரணன் என்ன கூறும் மொழி. மெய்மெய் என்று கூறி களித்து = அறிஞர் உலகமானது, அல்லமதேவன் உயிர்களிடத்து எல்லாம் நிறைந்தவன் என்று நூல்களால் கூறப்படும் மொழி உண்மையேயாகும் உண்மையேயாகும் என்று கூறி களித்தது. (எ.று) ஆல் - அசை.

முடிபு - மாறன் அடித்த அடிபட்ட உயிரின் திறம் எல்லாம் வசவன். அல்லமனுக்கிட்ட உணவை தாமும் உண்டு, பசி ஆறி இருந்த ஆதலினுல் உலகம் அல்லமன் பூரணன் என்னக் கூறும் மொழி மெய்மெய் என்று களித்தது.

இக்கிதியுள் 45ம் பாடலில் ''ஞாலத்து எவரையும் களிப்புச் செய்ய எங்கனும் குவிப்பித்தாஞல்'' என்ற தொடரையும் அதன் உரையையும் இப்பாடலோடு ஒப்புநோக்கிப்பார்க்க.

1110. இவ்வாறு அருந்தி அமைதி
பெறும் பரம யோகிதான்
தெவ்வா கியஐம் புலன்[1]வென்ற
திறல்கூர் வசவன் தனைமகிழ்ந்து
சைவா கமமும் நான்மறையும்
சாற்றும் பொருளை உணர்த்து
செவ்வாய் மலரத் திருவுள்ளம்
செய்து தனிவீற் றிருந்தனஞல் 64

(பா.ம்) [1]புலன் வென்று.

(இ.ள்) இவ்வாறு = மேற் கூறியவாறு; அருந்தி அமைதிபெறும் எங்கள் பரம யோகிதான் = அடியார்களுக்கும் உலக உயிர்களுக்கு மாக தான் உண்டு அதனுலே நிறைவு பெறும் எங்களுடைய மேலான

Koviloor Digital Library

யோகிய அல்லமதேவன் தான்; தெவ்ஆகிய ஐம்புலன் வென்ற திறல் கூர் வசவன் தனை மகிழ்ந்து = தனக்குப் பகையாகிய ஐம்புலன்களையும் வென்ற ஆற்றல் மிகுந்த வசவதேவன்தனை (ஆராய்ந்து பக்குவ நிலையைக் கண்டு) மகிழ்ச்சி அடைந்து; சைவாகமும் நான்மறையும் சாற்றும் பொருளை உணர்த்துதற்கு = சிவாகமங்களும் நான்கு வேதங்களும் தமக்குள் வேறுபாடு இன்றி ஒரு முடிபாகச் சொல்லும் சிறந்த பொருளை அறிவுறுத்தற்காக; செவ்வாய் மலர = அப்பொருளை செவ்வியவாயினுல் கூறவேண்டி; திருவுள்ளம் செய்து = கருதிக் கொண்டு; தனிவீற்று இருந்தனன் = சூன்ய சிங்காதனத்தினின்று நீங்கி தனியான இடத்தில் தனியாக வீற்றிருந்தான்; (ஆல் - அசை)

முடிவு - இவ்வாறு அமைதி பெறும் எங்கள் யோகிதான் வசவன் தனை மகிழ்ந்து ஆகமும் மறையும் சாற்றும் பொருளை உணர்த்துதற்குச் செவ்வாய் மலர்ந்து திருவுளம் செய்து தனிவீற்றிருந்தனன். உலக இன்பமாகிய ஐம்புல இன்பங்களை விட்டவர்க்கே இந்த ஞான உபதேசம் செய்யத் தக்கது ஆதலின் தெவ்வாகிய ஐம்புலன் வென்ற திறல்கூர் வசவன் என்று சிறப்பித்தார்.

இருபத்து மூன்றவது
அல்லமன் ஆரும் பசி கெட
உண்டகதி முற்றிற்று

Koviloor Digital Library

இருபத்து நான்காவது
மனோலய கதி

கலிவிருத்தம்

வேறு

கதி நுதலியது

1111. மயங்குதல் இன்றி மனேலயம் எய்தில்
சயந்தரும் முத்தி தலைப்படும் என்று
நயந்தரும் அல்லம நாதன் விளங்க
இயம்பிய வண்ணம் இயம்புதும் அன்றே 1

(இ.ள்) நயந்தரும் அல்லம நாதன் = ஒற்றுமை நயம் வேற்றுமை நயம் முதலான நயங்களால் உண்மைப் பொருள்களை உணர்த்துகின்ற அல்லம தேவன்; மயங்குதல் இன்றி மனேலயம் எய்தில் = மனமானது ஐயவிபரீதப் பொருள்களால் மயக்கமடையாமல் உண்மைப் பொருளை உணர்ந்து அப்பொருளில் அடங்கி நிற்குமே யாஞல்; சயம் தரும் முத்தி தலைப்படும் என்று = செயல் முடிவாகிய வெற்றியை தரும்முத்தி நிலை கிடைக்கும் என்று; விளங்க இயம்பிய வண்ணம் இயம்புதும் = நன்கு விளங்குமாறு கூறியவகையில் அச்செய்தியை இங்கு கூறுவோம்; (எ.று)

முடிபு - அல்லம நாதன் மனம் மயங்குதல் இன்றி லயம் எய்தில் முத்திதலைப்படும் என்று விளங்க இயம்பிய வண்ணத்தை (யாம்) இயம்புதும்.

(சி.ரை) வீரசைவர் பத்தர் மகேஸ்வரர் பிரசாதி, பிராணலிங்கி, சரணன், அயிக்கியன் என அறுவகைப்படுவர். அவருள் பத்தன் முதலான மூவரும் கர்மயோகி ஆவர். பிராணலிங்கி முதலான மூவரும் ஞான யோகி ஆவார். ஞானயோகிகளுக்குக் கூறப்பட்டது. வீர நிராபார தீட்சையாகும். அத்தீட்சை ஏழுவகைப்படும். அவற்றுள் ஆறாவது தீட்சை உயர்சிவத்து உளமடங்குறுமனேலயம். (அபிடேக மாலை 8ம் பாட்டு) என்பதாகும். அத்தீட்சை இக்கதியில் கூறப்படுகின்றது. **இப்பிரபுலிங்கலீலையில் சிவபூஜை முதலான கர்மங்களைக் கூறும், இட்டலிங்ககதியும் யோகத்தைக் கூறும். பிராணலிங்க கதியாகிய சாதகாங்க கதியும் ஞானத்தைக் கூறும் மனேலய கதியும் முக்கியமான கதிகளாகும் என்க. எனவே இவை மூன்றும் முறையே கர்மம், யோகம், ஞானம் என்னும் இவற்றைக் கூறுவன ஆகும்.**

Koviloor Digital Library

வசவதேவன் அல்லமதேவரிடம் சென்று தனக்கு உபதேசிக்குமாறு விண்ணப்பிக்கத் தொடங்கியது

1112. பத்தர்கள் தங்கள் பசிக்குணும் ஐயன்
தத்துவம் நல்கும் கருத்தோடு தங்க
அத்தலை அன்பொடு அகம்குழை கின்ற
வித்தக நந்தி விளம்புவன் நன்றே 2

(இ.ள்) பத்தர்கள் தங்கள் பசிக்கு உணும் ஐயன் = சிவபக்தர் களுடைய பசியினை நீக்குவதற்காகவே தான் உண்ணுகின்ற தலைவனு கிய அல்லமதேவன்; தத்துவம் நல்கும் கருத்தொடு தங்க = வசவதேவ னுக்கு (சைவாகமமும் நான் மறையும் சாற்றும் பொருளாகிய) உண்மைப் பொருளை உபதேசிக்கும் கருத்தொடு தனி இடத்தில் தங்கி இருக்க; அன்பொடு அகம்குழைகின்ற வித்தகநந்தி = தலை அன்போடு கூடி அதனுல் மனம் உருகுகின்ற சிறந்த வசவதேவன்; அத்தலை நன்றே விளம்புவன் = அல்லம தேவன் எழுந்தருளியிருக்கும் இடத்திற்குச் சென்று விளங்குமாறு நன்றாகக் கூறத் தொடங்கினுன். (எ.று)

முடிவு - ஐயன் தத்துவம் நல்கும் கருத்தொடு தங்க, அகம் குழைகின்ற வித்கக நந்தி அத்தலை(சென்று) நன்றே விளம்புவன். அத்தலை என்பது அல்லம தேவன் தனித்து எழுந்தருளி இருக்கும் இடத்தைச் சுட்டிற்று (அத்தலை என்பது தனித்த இடம்) இது வசவ தேவரது விண்ணப்ப மொழி இப்பாட்டு.

வசவதேவரது விண்ணப்பம்

1113. விருப்பு வெறுப்புரு வாம்விட யத்தோ(டு)
இருக்கும் மயல்சகம் என்ப திலாமல்
பரப்பிர மத்தியல் பார்ப்பது எனக்குத்
தெரித்தருள் என்றுரை செய்து துதித்தான் 3

(இ.ள்) விருப்பு வெறுப்பு உருவாம் விடயத்தோடு இருக்கும் மயல் சகம் என்பது இல்லாமல் = விருப்பின் வடிவமாகவும் வெறுப்பின் வடிவமாகவும் உள்ள ஐம்புலப் பொருள்களோடு பொருந்தியுள்ள மயக்கம் தங்கிய உலக உணர்வு என்பது இல்லாமல்; பரப்பிரமத்து இயல் பார்ப்பது = மேலான அட்சரப் பிரமத்தின் உண்மை இயல்பினையே உணர்ந்து கொண்டிருக்கும் நிலையை; எனக்குத் தெரித்தருள் என்று உரை

Koviloor Digital Library

செய்து துதித்தான் = எனக்கு உபதேசிப்பயாக என்று கூறுதலைச் செய்து, புகழ்ந்து கூறினான். (எ.று)

முடிபு - வித்தக (நந்தி) சகம்என்பது இலாமல் பரப்பிரமத்து இயலையே பார்ப்பதை எனக்குத் தெரித்தருள் என்று உரைசெய்து துதித்தான். எத்தகைய சகம் எனில்? விருப்பு உருவாகவும் வெறுப்பு உருவாகவும் (உள்ள) விடயத்தோடு இருக்கும் சகம், மயல்சகம் என்க(இரண்டாக) சகம் என்பது சகஉணர்வை(சகத்தை குறிக்கவில்லை)

1114. அண்ணலும் ஆர்வம் அடைந்த அருள் நந்தி
மண்ணுல கோர்தளை மாறுபு ஞானக்
கண்ணுறு மாறு கடாவினன் என்று
புண்ணிய னேடு புகன்றிடு கின்றான் 4

(இ.ள்) அண்ணலும் ஆர்வம் அடைந்து = வசதேவன் விண்ணப் பித்த விண்ணப்பத்தைக் கேட்ட அல்லம தேவனும் விருப்பம் அடைந்து; அருள் நந்தி மண்ணுலகோர் தளை மாறுபு ஞானக்கண்ணுறு மாறு கடாவினன் என்று = அருளையுடைய வசவதேவன் நில உலகத்தில் வாழும் மக்கள் பந்தத்திலிருந்து நீங்கி ஞானமாகிய விழியை பெற்றுக் கொள்ளும்படி கருதி. இவ்வினவினை நிகழ்த்தினான் (கேட்டான்) என்று அல்லமதேவர் கருதிக்கொண்டு; புண்ணியனேடு புகன்றிடு கின்றான் = (இவ்வினவினைக் கேட்ட) புண்ணியனுகிய வசவதேவனேடு கீழ்வரும் சொற்களைச் சொல்லத் தொடங்கினுன். (எ.று)

முடிபு - அண்ணலும் ஆர்வமடைந்து நந்தி மண்ணுலகோர் தளை மாறுபு ஞானக்கண் உறுமாறு கடாவினன் என்று புண்ணியனேடு புகன்றிடுகின்றான். உறுமாறு என்ற சொல்லுடன் கூட்டிக் கொள்க மாறுபு என்று எச்சத்தை மாறி அடையும் படி; மண்ணுலகோர் தளை கெடுவது க்ஷைஎன்பதன் பொருளாகும்; அவர்கள் ஞானக் கண்ணைப் பெறுவது தீ என்பதன் பொருளாகும். எனவே மலங்கெடுத்து ஞான விழியைப் பெறுவது தீக்ஷை என்பதன் பொருளாகும். மலங்கெடுத்து ஞான விழியைப் பெறுவது ஞானதீக்ஷை ஆதலின் அத்தீக்ஷையையே வசவதேவன் விரும்பினுன் என்று அல்லமதேவன் மகிழ்ச்சி அடைந் தான். எனவே வசவதேவருக்கு கூறுவது ஞான தீக்ஷைப் பொருளையே. என்க (கிரியாதீக்ஷைப் பொருள் அல்ல என்பது நினைவு கூறத்தக்கது). அவ்விரண்டில் தளைகெடலாகிய பாச நீக்கத்தை பின்வரும் நான்கு பாடல்களில் உபதேசிக்கின்றார்.

Koviloor Digital Library

தளைகெடல்

1115. யான்என தென்பத இருந்திடு காறும்
றாஞானம் உறானது நண்ணிலன் ஆகில்
தான்[1]நிலை யாத சகந்திகழ் கிற்கும்
தீனம் இலாத சிவம்திக ழாதே

(பா.ம்) [1]நிலையாக

(இ.ள்) யான் எனது என்பது இருந்திடுகாறும் ஞானம் உறான் = யான் என்கின்ற அகப்பற்றும் எனது என்கின்ற புறப்பற்றும் ஒருவனுக்கு இருந்திடும்வரை அவன் ஞானத்தை அடையான்; அது நண்ணிலன் ஆகில் = அந்த ஞானத்தை அடையான் ஆகில்; நிலையாத சகம் தான் திகழ்சிற்கும் = நிலை பேரில்லாமல் அழிந்த கொண்டே இருக்கும் உலகப் பொருளே விளங்கும்; தீனம் இலாத சிவம் திகழாதே = அழிதல் இல்லாத சிவம் விளங்காது.(எ.று) ஏகாரம் ஈற்றசை

முடிபு - (ஒருவனுக்கு) யான் எனது என்பது இருந்திடுகாறும் (அவன்) ஞானம் உறான். அது நண்ணிலன் ஆகில் நிலையாத சகம்தான் திகழ்கிற்கும் தீனம்இலாத சிவம் திகழாது.

(வி.ரை) திருவள்ளுவர் பற்று நீங்கலை துறவு என்னும் அதிகாரத்தும் ஞானக்கண் பெறுதலை அடுத்த மெய்யுணர்வு என்னும் அதிகாரத்தும் கூறியுள்ளார். அத்துறவு அதிகாரத்துள் ''யான் எனது என்னும் செருக்கறுப்பான். வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்'' என்ற குறட்பாவால் யான் எனது என்னும் செருக்கறுதலைக் கூறியுள்ளார். யான் எனது என்ற இரண்டனுள் எனது என்பவது புறப்பற்று ஆகும். புறப்பற்று உயிர்ச் சார்பு பொருட்சார்பு என இருவகைப்படும். உயிர்ச் சார்பாவன மனைவி மகவு பெற்றோர் உறவினர் முதலியோராவர். பொருட் சார்பாவது மண் பொன் முதலியன. அகச்சார்பாவன தூல உடம்பும் மனம் ஐம்பொறி முதலான சூக்குமஉடம்பும் ஆகும்.

''இருவகைப் பற்றிஇல் ஒருவனே ஞானி'' என்பது, வைராக்கிய தீபம் (39ம் பாட்டு).

இருவகைப்பற்று நீங்குவதற்குரிய உபாயத்தைக் கூறியது

1116. கறங்கெனு மாறுழல் கின்ற கருத்துப்
பிறந்திற வாத பெரும் பிரமத்தில்

Koviloor Digital Library

இறந்திடில் யானென தென்னும் அகந்தை
மறைந்திடும்அன்றி மறைந்திடு மோதான் 6

(இ.ள்) கறங்கு எனுமாறு உழல்கின்ற கருத்து = சுழல்காற்றாடி என்று கூறும்படி உலகப் பொருள்களிடத்தே. சுற்றிக் கொண்டே இருக்கின்ற மனமானது; பிறந்து இறவாத பெரும் பிரமத்தில் இறந்திடில் = பிறத்தல் இறத்தல் என்னும் இரண்டுடன் கூடாததாகிய பெரிய பிரமம் என்னும் சிவத்தில் அடங்கி நிற்கில்; யான் எனது என்னும் அகந்தை மறைந்திடும் = அப்பொழுது யான் எனது என்னும் இருவகை பற்றும் மறைந்து போகும்; அன்றி = அக்கருத்து பிரமத்தில் இறந்திடில் அன்றி; மறைந்திடுமோ = இருவகைப் பற்றும் மறையுமோ.எதிர்மறை ஓகாரத்தால் மறையாதென்க. (எ.று)

முடிபு - உழல்கின்ற கருத்து பெரும் பிரமத்தில் இறந்திடில் யான் எனது என்னும் அகந்தை மறைந்திடும் அன்றி மறைந்திடுமோ.

(வி.ரை) தோன்றி அழிவது உலகப் பொருள்களின் இயல்பு. தோன்றி அழியாமல் இருப்பது பிரமத்தின் இயல்பு. பகவத் கீதை அட்சரப் பிரமம் பரம் என்று பிரமத்தைக்கூறும் (அழியாத பிரமமே மேலானது) இதன் பொருள்.

யான் எனது என்னும் வேறுபாட்டுணர்வாலும் முத்தியை அடைய முடியாது என்பது

1117. யானிது செய்வல் எனக்கிது செய்வர்
ஏனையர் என்ன இருந்த கருத்தால்
மேல்நிகழ் முத்தி [1]விரும்பல் இருட்டால்
பானுவை மேவுறு பற்றை நிகர்க்கும் 7

(பா.ம்) [1]விரும்பில்.

(இ.ள்) யான் இது செய்வல் = தன்மையனுகியான் படர்க்கைய ராகிய ஏனையர்க்கு இக்காரியத்தைச் செய்வேன்; ஏனையர் எனக்கு இது செய்வர் = ஏனையராகிய படர்க்கையார் தன்மையனுகிய எனக்கு இந்தக்காரியத்தைச் செய்வர்; என்ன இருந்த கருத்தால் = தன்மையாரும் படர்க்கையாரும் என்று கூறும்படி இருந்த இவ்வேறுபாட்டுக் கருத்தாலே; மேல் நிகழ் முத்தி விரும்பல் = வேறுபடாத மேன்மையாக நிகழ்கின்ற மோட்சத்தை விரும்புதல் (எத்தகையது எனில்) இருட்டால் பானுவை மேவுறு பற்றை நிகர்க்கும் = இருளினை அறிகருவியாகக் கொண்டு. அதனுல் சூரியனை அறியக் கருதியதை ஒவ்வும் என்க. (எ.று)

Koviloor Digital Library

முடிபு - யான் ஏனையர்க்கு இது செயவல். ஏனையர் எனக்கு இது செய்வர். என்ன இருந்த கருத்தினுலே முத்தியை விரும்புதல் இருட்டால் பானுவை மேவுறு பற்றை நிகர்க்கும். மெய்ப்பொருளை உணரும் கருத்தும் யான் எனது என்ற வேறுபாட்டு உணர்ச்சி இன்றி இருக்க வேண்டும் என்பதாயிற்று. எனவே உலகப் பொருளை உணருகின்ற கருத்தெல்லாம் யான் எனது என்ற வேறு பாட்டுடன் இருக்கும் என்பதாயிற்று. மேற்கண்ட கருத்தை கீழ்வரும் நிரஞ்சனை மாலை பாட்டால் ஒப்பு நோக்குக.

யானு ரடிமை சிவனே யிறையென் றிருப்பது போய்
நீநா னெப்படும் பேத மிலாமை நெறியுதவு
மானு துயர்ந்தசற் பாவத்து மாலிங்க மாகி நின்றாய்
வானு டரியவனே கரபீடத்து மாணிக்கமே

(நிரக் - 26)

இப்பாட்டில் சத்பாவம் என்பது மகா பாவம் என்க. இதனியல்பை நாரத பக்தி சூத்திரத்தால் உணர்க. பாவம் என்பது எண்ணம்.

1118. **இருவினை தாம்வரும் யானென லால்அவ்**
இருவினை யால்வரும் இன்பொடு துன்பம்
இருவினை யான்னெனல் இன்றெனில் இல்லை
இருவினை இல்எனில் இல்லைபி றப்பே 8

(இ.ள்) யான் எனலால் = வினைகளை யான் செய்தேன் என்று தனக்கு உரிமையாகக் கருதிச் செய்தால்; இருவினைதாம் வரும் = அவ்விருவினைகள் தாம் தனக்கு உரிமையாக வந்து விடும்; இருவினையால் இன்பொடு துன்பம் வரும்= தனக்கு உரிமையாகக் கருதிச் செய்த இருவினைகளால் இன்பமும் துன்பமும் தனக்கு வந்து சேரும். யான் எனல் இன்று எனில் இருவினை இல்லை = வினைகளை யான் என்னும் பற்றோடு செய்தல் இல்லை எனில் அவ்இருவினை களும் தனக்கு இல்லை; இருவினை இல் எனில் பிறப்பு இல்லை = தனக்கு இருவினை இல்லாவிட்டால் தனக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. (எ.று)

முடிபு - யான் எனலால் இருவினை தாம் வரும்; அவ்இருவினை யால் இன்பொடு துன்பம் வரும்; யான் எனல் இன்றெனில் இருவினை இல்லை; இருவிளை இல்எனில் பிறப்பும் இல்லை.

சூக்கவுருவைத் தொட்டெழுந்த தூலவுருவைத்துதைந் தந்த ஆக்கை தன்னை யானென்றே அபிமானித்தே அறம் பாவம்

Koviloor Digital Library

ஆக்கும் பயனை முறையுறவே யருந்திப் பின்னும் அறம் பாவம்
ஆக்கி யான் என் செருக்காலே அடங்கிப் பிறக்கு மாருயிரே

என்னும் சிவ தருமோத்திரப்பாடலை ஒப்பு நோக்கி அறிக.

நடித்து மண்ணிடைப் பொய்யினைப்பல
செய்து நானென தெனும்மாயக்
கடித்த வாயிலே நின்று
முன்வினைமிகக் கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை
தேடிய அரும்பொருள் அடியேனை
அடித்தடித்து அக்கார முன்தீற்
றியஅற் புதம்அறி யேனே.

(திருவாசகம் அற்புதப் பத்து 3) என்ற திருவாசகப் பாடலாலும் அறிக.

1119. **மனத்தை அடக்க மனம்துணை ஆகும்**
பினைத்துணை இன்றது பெற்றனன் ஆயின்
தனிச்சிவ மேயொரு தானென வாழ்வன்
நினைத்து மறந்து [1]நிலத்துழ லானே 9

(பா.ம்) [1]நிலத்துலவானே

(இ.ள்) மனத்தை அடக்க மனம் துணை ஆகும் = மனத்தினை பிரமத்தில் அடங்கும்படி அடக்கி ஒழுகுவதற்கு அம்மனமே கருவியாக அமையும்; பினை துணை இன்று = வேறு துணையாகும் பொருள்கள் இல்லை; அது பெற்றனன் ஆயின் = மனத்தாலே மனத்தை அடக்குதல் என்னும் உபாயத்தை ஒருவன் பெற்றுவிட்டானுஞல் தனிசிவமே ஒருதான் என வாழ்வன் = ஒப்பற்ற சிவமே ஒன்றாகியதான்எனும்படி அத்துவிதவாழ்வைப் பெற்று வாழ்வர்; நிலத்து நினைத்து மறந்து உழலான் = உலகத்தில் பிறந்து ஒருபொருளை நினைத்தலாகிய சகலாவத்தையைப் பெற்றும் மறத்தலாகிய கேவலாவத்தையைப் பெற்றும் இறத்தலினும் பிறத்தலினும் உழலான் என்க. (எ.று)

முடிவு -மனத்தை அடக்க மனமே துணையாகும்; பின்னை துணை இன்று; அது பெற்றனன் ஆயின் சிவமே ஒருதான் என வாழ்வன்; நிலத்து நினைத்து மறந்து உழலான்

Koviloor Digital Library

(வி.ரை) மனத்தை அடக்க அம்மனம் துணையாகும். பினைத் துணை இல்லை என்னும் கருத்தே,

தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதி வகையும்

(யாத்திரை பத்து. 3)

என்ற திருவாசகப் பாடலல் உணர்க. இங்கே தாம் என்றது மனம் முதலான அந்தக் கரணங்களை.

1120. **வாரணம் ஆகும் மனத்தை அடக்கில்**
காரண மாயை களைந்தொழி யாத
பூரண மாகிய போதம் அடைந்திட்டு
ஆரணம் ஓதும் அரும்பொருள் ஆவான் 10

(இ.ள்) வாரணம் ஆகும் மனத்தை அடக்கில் = மதங் கொண்ட யானையை நிகர்க்கும் அடங்காத மனத்தை அதனையே துணையாகக் கொண்டு அடக்கி ஒழுகினுல்; காரணமாயை களைந்து = காரணமாகிய அவ்வியக்தம் என்னும் மாயையினையும், அம்மாயையிலிருந்து தோன்றிய வியக்தம் என்னும் காரண உடம்பு, சூக்கு உடம்பு, தூல உடம்பு என்னும் இவற்றை எல்லாம், நாம் அல்ல, என நீக்கி; ஒழியாத பூரண மாகிய போதம் அடைந்திட்டு = நீங்காத நிறைவையுடைய அறிவுப் பொருள் என்னும் கூடத்தனை உணர்ந்திட்டு; ஆரணம் ஓதும் அரும் பொருள் ஆவான் = வேதம் கூறுகின்ற மகாவாக்கியப் பொருளாகிய தத் பதப்பொருளாக ஆகிவிடுவான். (எ.று)

முடிபு : மனத்தை அடக்கில் மாயையை களைந்து, போதத்தை அடைந்திட்டு, அரும்பொருளாவான். காரணமாகிய மாயையினையும் அதிலிருந்து தோன்றிய காரியப் பொருள்களையும் அவ்வியக்தம் வியக்தம் என்பர். அவ்வியக்தம் என்பது வெளிப்படாதது. வியக்தம் என்பது வெளிப்பட்டது. காரணமாகிய மாயைக் கூறியதனுல் காரியப் பொருள்களையும் உரையில் வருவத்துக் கொண்டோம். அவ்விரண்டை யும் களைந்தால் எஞ்சி இருப்பவை துவம்பதமாகிய கூடத்தனும் தத்பதப் பொருளாகிய பிரமமும் ஆகும்.

வேறு

1121. **விரிந்த நெஞ்சம் கருவியாம் விடயம் உரை விரியாமல்**
ஒருங்கு நெஞ்சம் கருவியாம் தன்னை உணர ஒருங்காமல்

Koviloor Digital Library

விரிந்த நெஞ்சம் உடையவனை விடாது பிறவிஎன்றுணர்க
ஒருங்கு நெஞ்சம் உடையானை உறாது பிறப்பென்று
உணர்கவே 11

(இ.ள்) விடயம் உணர விரிந்த நெஞ்சம் கருவியாம் = புறத்தே உலகப்பொருள்களை எல்லாம் அறிந்து கொள்ளுவதற்கு ஐம்பொறி களின் வழியாய் விரிவு பட்டு செல்லுகின்ற மனம் துணைக் கருவியாகும் ; தன்னை உணர விரியாமல் ஒருங்குநெஞ்சம் கருவியாம் =அகத்தே தன்னை உணர ஐம்பொறிகளின் வழியே விரிந் தோடாமல் குவிந்திருக்கும் மனம் துணைக் கருவியாகும்; ஒருங்காமல் விரிந்த நெஞ்சம் உடையவனை விடாது பிறவி என்று உணர்க = ஒன்று பட்டுச் செல்லாமல் ஐம்பொறிகளின் வழியே விரிந்து ஓடும் மனத்தை உடையவனை பிறவித்துன்பம் விடாது என்று உணர்க; (அது போலவே) ஒருங்கு நெஞ்சம் உடையானை பிறப்பு உறாது என்று உணர்கவே = ஒன்றுபட்டு அகத்தே செல்லும் நெஞ்சமுடையவனை பிறவி நோய் பொருந்தாது என்பதை உணர்ந்து கொள்க.(ஏகாரம் ஈற்றசை)

முடிபு - விடயத்தை உணர விரிந்த நெஞ்சம் கருவியாம் தன்னை உணர விரியாமல் ஒருங்கு நெஞ்சம் கருவியாம்; ஒருங்காமல் விரிந்த நெஞ்சம் உடையவனை பிறவி விடாது என்று உணர்க. ஒருங்கு நெஞ்சம் உடையானை பிறப்பு என்றும் உறாது என்று உணர்க. இப்பாட்டு நிட்டானுபூதி 12ம் பாட்டின் உரைக்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

1122. **அந்தக் கரண சுத்தியே அறிவை அறிதல் சாதனம்அவ்**
அந்தக் கரண சுத்திதனக்(கு) அறையும் கருமம்
ஆரணங்கள்
அந்தக் கரண சுத்திதான் ஆவது அவாஅற் றிடுதலே
அந்தக் கரண சுத்தியினுல் அடைவன் பிண்டப்
பெயரன்றே 12

(இ.ள்) அந்தக் கரண சுத்தியே அறிவை அறிதல் சாதனம் = உள் கருவியாகிய மனம் முதலானவற்றின் தூய்மையே அறிவுப் பொருள்களை ஆராய்ந்து அறிதற்குக் கருவியாகும்; ஆரணங்கள் அவ் அந்தக் கரண சுத்தி தனக்கு கருமம் அறையும் = அறிவு நூல்கள் அந்த அந்தக் கரணங்களின் தூய்மைக்காகவே கருமயோகங்களைக் கூறும்; அந்தக் கரண சுத்திதான் ஆவது அவா அற்றிடுதலே = அந்தக் கரணத்தின் தூய்மைக்கு ஆரணங்கள் கருமத்தைக் கூறினுலும் அச்சித்தி உண்டாது

Koviloor Digital Library

அவா என்னும் ஆசை அறுதல் ஒன்றினுலேயே உண்டாகும்; அந்தக் கரண சுத்தியினுல் பிண்டப் பெயர் அடைவன் = ஒருவனுக்கு அந்தக் கரண தூய்மை ஏற்பட்ட காரணத்தால் அவன் முத்தி அடைவதற்கு ஏதுவான பிண்டத் தலத்தைப் பெற்றவனாவன்.(எ.று)

முடிபு - (ஒருவனுக்கு) அந்தக் கரண சுத்தியே அறிவை அறிதலுக் சாதனம் (ஆகும்). அவ் அந்தக் கரண சுத்தி தனக்கு ஆரணங்கள் கருமத்தை அறையும்; அந்தக் கரண சுத்திதான் ஆவது அவா அற்று இடுதலே (ஆகும்) அந்தக் கரண சுத்தியினால் (ஒருவன்) பிண்டப் பெயரை அடைவன்.

(வி.ரை) முதல் அடியில் குறிப்பிட்ட அறிவு பொருள்களாவன பிரமமும் ஈஸ்வரனும், கூடத்தனும், சீவனும் என நான்காகும். நான்கு சைதன்ய மாமே என்பது கைவல்யம். பதஞ்சலி யோகசூத்திரம் தவத்தையும் ஞான நூல்களைப் படித்தலையும் கடவுள் பழிபாட்டினையும் க்ர்ம யோகம் என்று கூறும். இக்ர்ம யோகதத்தால் சித்த சுத்தி உண்டாகும். மூன்றாவது அடியில் கூறிய ஆசை அறுதலைப் பற்றி திருமூலர் பாடலால் உணர்க

ஆசை யறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாடயினு மாசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே (திருமந்திரம் 1513)

பிண்டத்தலத்தைப் பெறும் இயல்பினை கீழ்வரும் சித்தாந்த சிகாமணிப் பாடலால் அறிக.

பண்டொ ராயிரம் பிறவியில் பயின்ற புண்ணியத்தான்
மண்டு தீவினைப் பரப்பறப் புனிதமா மனத்தைக்
கொண்ட தேகியே கடல்குடித் துயர்குறு முனிவ
பிண்ட நாமமுற் றிடுமென அறைகுவர் பெரியோர்
(சித். சிகா மணி. பிண்டத்தலம்.1)

1123. ஆசை அறுதல் வீட்டின்பம்
நேரே அடையக் காரணமாம்
ஆசை அறுதல் அலதுஇல்லை
பலநூல் அனைத்தும் ஆயந்திடினும்

Koviloor Digital Library

ஆசை அறுவோன் சிவனுதல்
திண்ணம் எனநன் றறிந்திருந்தும்
ஆசை உறுதல் என் கொண்டோ
அந்தோ மனிதர் அறியேமே 13

(இ.ள்) வீட்டு இன்பம் அடைய ஆசை அறுதல் நேரே காரணமாம் = ஒருவருக்கு முத்தி இன்பத்தை அடைவதற்கு அவா நீங்குதல் என்பது நேரான கருவியாகும் (ஒன்றை ஒன்று பின் பற்றிய கருவி அல்ல) இது நேரான கருவி என்க; பலநூல் அனைத்தும் ஆய்ந்திடினும் வீட்டின்பம் அடைய ஆசை அறுதல் அலது இல்லை = பல அறிவு நூல்களை எல்லாம் ஆராய்ந்தாலும் வீட்டின்பம் அடைவதற்குக் காரணம் அவா அறுதல் அல்லது வேறு காரணங்கள் இல்லை; மனிதர் ஆசை அறுவோன் சிவன் ஆதல் திண்ணம் என நன்கு அறிந்து இருந்தும் = மன உணர்வுடைய மக்களாவோர். அவா அறுவோன் சிவன் ஆதல் நிச்சயம் என்பதை நன்கு அறிந்து இருந்தும்; ஆசை உறுதல் என்கொண்டோ அந்தோ அறியேம் = உலகப் பொருள்களில் அவாக் கொள்ளுதல் என்ன காரணம் பற்றியோ. அந்தோ அறியேம் (எ.று); அந்தோஅறியோம் இரக்கக் குறிப்பு (ஏகாரம் ஈற்றசை)

முடிபு - ஒருவர்க்கு வீட்டின்பம் அடைய ஆசை அறுதல் நேரே காரணமாம். பலநூல் அனைத்தும் ஆய்ந்திடினும் வீட்டின்பம் அடையக் காரணம் ஆசை அறுதல் அல்லது இல்லை; மனிதர் ஆசை அறுவோம் சிவனுதல் திண்ணம் என நன்று அறிந்து இருந்தும் ஆசை உறுதல் என்கொண்டோ அந்தோ அறியேமே. ஆசை அறுதல்அவா அறுதல் - திருக்குறளுள் அவா அறுத்தல் என்னும் அதிகாரத்தைக் காண்க.

1124. ஆசு தீர்ந்த மனத்தினிடை அன்றி உணர்வு தோன்றாது
மாசு தீர்ந்த ஆடியிடை அன்றி வதனம் தோன்றுமோ
பாசம் நீங்கு பரஞ்சுடரை நினைக்கும் நினைவால்
பற்றுமனம்
காசம் நீங்கு கண்போல தன்னைக் காண விளங்குமால் 14

(இ.ள்) ஆசு தீர்ந்த மனத்தினிடை அன்றி உணர்வு தோன்றாது = அழுக்காறு அவா வெகுளி செற்றம் என்னும் நான்கு குற்றங்கள் நீங்கிய மனத்தின் கண்ணே அல்லாமல் குற்றம் நீங்காத மனத்தில் உணர வேண்டிய உண்மைப் பொருள் (அறிய வேண்டிய பொருள்) தோன்றாது. (பொய்ப் பொருளே தோன்றும்); மாசு தீர்ந்த ஆடியிடை

Koviloor Digital Library

அன்றி வதனம் தோன்றுமோ = குற்றம் நீங்கிய கண்ணுடியில் அல்லது குற்றமுடைய கண்ணுடியில் பார்ப்பவர் முகம் தோன்றுமோ. (தோன்றாது); பாசம் நீங்கு பரஞ்சுடரை = மாயை முதலான பாசங்களில் நீங்கிய நிஷ்கள சிவத்தை; நினைக்கும் நினைவால் பற்றும் மனம் = தியானிக்கும் மனத்திற்கு; காசம் நீங்கு கண்போல = காசம் என்னும் படலம் நீங்கிய கண்ணுக்கு பொருள்கள் விளங்குவது போல; தன்னைக் காணவிளங்கும் = ஆன்மாவும் பரமான்மாவுமாகிய தன்னைக்காண அப்பொருள் விளங்கும். (எ.று)

முடிபு - ஆசு தீர்ந்தமனத்திடை அன்றி உணர்வு (உணர் பொருள்) தோன்றாது மாசு தீர்ந்த ஆடியிடை அன்றி வதனம் தோன்றுமோ. பாசம் நீங்கு பரஞ்சுடரை நினைவால் பற்றும் மனத்திற்கு கண்போல தன்னைக் காணவிளங்கும் (ஆல்அசை); ஆசு இங்கு மனக்குற்றம் அவை அழுக்காறு அவா - வெகுளி செற்றம் முதலியன ; உணர்வு என்றது உணரும் பொருளை. கீழ்இரண்டு வரிகளால் சகளப் பொருளை தியானிக்காமல் நிஷ்களப் பொருளை தியானிப்பவர்களுடைய மனத்திற்கே தன்னைக் காண விளங்கும் என்ற செய்தியைக் கூறுகின்றார்.

மனம்ஒருங்கி தூய்மை பெற்ற நெஞ்சுடையோன்
அந்நெஞ்சாலில் தன்னை ஆராயுமுறை கூறப்படுகின்றது

1125. வானம் அல்லேன் வளிஅல்லேன்
அழல்நீர் அல்லேன் மண்ணல்லேன்
ஞானம் அல்லேன் வினை அல்லேன்
[1]நானே சிவமென்று எண்ணிஞேன்
[2]ஊனம் [3]இல்லா ஒருசிவமே
ஆவன் இவ்வாறு உன்னுதான்
ஈனம் எல்லாம் உடையவுடம்பு
எடுத்துச் சுழலும் எஞ்ஞான்றும்

(பா.ம்) [1]நாடுசிவம்; [2]ஊனை; [3]அல்லால்

(இ.ள்) வானம் அல்லேன் = ஆகாயமும் ஆகாயத்ததிலிருந்து தோன்றிய காரியப் பொருள்களும் நான் அல்லேன்; வளி அல்லேன் = காற்று என்னும் பூதமும் அதிலிருந்து தோன்றிய காரியப் பொருள்களும் நான் அல்லேன்; அழல்நீர் அல்லேன் = நெருப்பு என்னும் பூதமும் நீர் என்னும் பூதமும் அவற்றிலிருந்து தோன்றிய காரியப் பொருள்களும் நான் அல்லேன்; மண் அல்லேன் - நிலம் என்னும் பூதமும் அவற்றி

Koviloor Digital Library

லிருந்து தோன்றிய பொருள்களும் நான் அல்லேன்; ஞானம் அல்லேன் வினை அல்லேன் = ஞானேந்திரியங்களும் அல்லேன் கன்மேந்திரியங் களும் அல்லேன்; நானே சிவம் என்று எண்ணினேன் ஊனம் இல்லா ஒருசிவமே ஆவன் = இவை எல்லாம் நான் அல்லேன் என விலக்கி நானேசிவம் என்று உறுதியாகத் தன்னை எண்ணியவன் அழிதலில்லாத ஒப்பற்ற சிவமாகவே ஆகி விடுவன்; இவ்வாறு உன்னுதான் = இவ்வாறு கருதாதவன்; எஞ்ஞான்றும் = எக்காலத்திலும்; ஈனம் எல்லாம் உடைய உடம்பு எடுத்துச் சுழலும் = எல்லா வகையாக இழிவுகளையும் பெற்றிருக் கின்ற உடம்பினையே பெற்று பிறந்து இறந்து சுழலும். (எ.று)

முடிவு - வானம் அல்லேன் என்றும் வளிஅல்லேன் என்றும் அழலும் நீரும் அல்லேன் என்றும் மண் அலலேன் என்றும் ஞானம் அல்லேன் என்றும் வினை அல்லேன் என்றும் (கருதி இவைகளை எல்லாம் நீக்கிவிட்டு) நானே சிவம் என்று எண்ணினேன் ஒருசிவமே ஆவன். இவ்வாறு உன்னுதான் உடம்பு எடுத்து எஞ்ஞான்றும் சுழலும்.

(வி.ரை) வானம் முதலான ஐம் பூதங்களும் ஞானேந்திரியங் களும் கன் மேந்திரியங்களும் உடம்பைப் பற்றிய பொருள்கள் ஆதலின் இவற்றை நான் என்று பாவிக்கில் அந்தபாவனையினுலே உடம்பையே பெற்று பிறவியில் திரிவான் அவ்வாறு இன்றி தன்னை மேலான சிவம் என்று பாவிப்பின் அப்பாவனையினுலே சிவனே யாகுவன். அவரவர் எண்ணமே அவர்க்கு அடை பொருளாதலின் தேகோகம் என்று பாவி யாமல் சிவோகம் என்று பாவிக்க வேண்டும் என்றார்.

பூதநீயலை பொறிகளும் நீயலை புந்தி
யேதும் நீயலை இவற்றினை மயங்கி யானென்னும்
போதநீயலை யென்றுஇவை அனைத்தையும் போக்கிச்
சோதியாகிய பிரமமே நீ எனச் சொல்லி (பிர.கத.கதி. 13)

என்ற பாடலாலும் ஒப்பு நோக்கி உணர்க.

1126. தன்னைச் சிவம் என்று அறிந்தவனே
அறிந்தான் தன்னை உண்மையாத்
தன்னைச் சிவம்என்று அறியாதான்
அறியான் என்றும் தன்உண்மை
தன்னைச் சிவம் என்று அறிந்த அன்றே
தாழ்வாம் பாசம் தனைநீப்பன்

Koviloor Digital Library

தன்னைச் சிவம் என்று அறியாதான்
தனக்கு பிறப்பபே துணையாகும் 16

(இ.ள்) தன்னைச் சிவம் என்று அறிந்தவனே = ஆன்மாவாகிய தன்னை மாயையின் கூறு என்று அறிந்து கொள்ளாமல் சிவத்தின் கூறு என்று அறிந்த கொண்டவனே; தன்னை உண்மையா அறிந்தான் = தன் இயல்பை உண்மையாகத் தெரிந்து கொண்டவன் ஆவன் (இது உடன் பாட்டு வினையால் கூறியது); தன்னை சிவம் என்று அறியாதான் = தன்னைச் சிவம் என்று அறியாமல் மாயையின் கூறாகிய வானம் முதலான பொருள்களாக தன்னை அறிந்து கொண்டவன்; என்றும் தன் உண்மை அறியான் = எக்காலத்தும் ஆன்ம நிசம் என்னும் தன் உண்மையை அறியாதவன் ஆவான்(இது எதிர் மறைவினையால் கூறியது); தன்னைச் சிவம் என்று அறிந்த அன்றேதாழ்வாம் பாசம் தனை நீப்பன் = ஆன்மாவாகியதன்னை சிவத்தின் கூறு என்று அறிந்து கொண்ட அக்காலத்திலேயே இழிவான வானம் முதலான பாசங்களை எல்லாம் தான் அல்ல என்று நீத்து விடுவன். தன்னைச் சிவம் என்று அறியாதான் தனக்கு துணையாகும் = தன்னைச் சிவம் என்று அறியாதவனாய் (வானம் முதலான பாசப்பொருள்களை) தான் அறிந்தவனுக்கு பிறவிநோயே துணையாகப் பொருந்தம். (எ.று) கீழ்இரண்டு அடிகளாலும் பயன் கூறினார்.

முடிபு - சிவம் என்று தன்னை அறிந்தவனே தன்னை உண்மையாய் அறிந்தான். தன்னைச் சிவம் என்று அறியாதான் என்றும் தன் உண்மை அறியான்; தன்னைச் சிவம் என்று அறிந்த அன்றே தாழ்வாம் பாசம்தனை நீப்பன். தன்னைச் சிவன் என்று அறியாதான் தனக்குப் பிறப்பேதுணை யாகும்.

(வி.ரை) இப்பாட்டு சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரப் பொருளைக் கருதியது. தம்முதல் குருவாக முன்வந்து மாணவனுகிய ஆன்மாவைப் பார்த்து நீ ஐம்புல வேடர்களிடத்தே அயர்ந்து வளர்ந்து கொண்டுள்ளாய். நீ அவர்களின் அம்சம் அல்லை. நீ என் கூறு ஆவாய் என்று உணர்த்த அந்த உண்மையை உணர்ந்து அவரின் தொடர்பு நீங்கி அன்னியம் இல்லாமையினுலே அரன்கழலேயே செல்லும்.

இறை அம்சம் நீ பார் என்னும் ஆன்மிகமே

என்ற அபிடேகமாலை(போயகுலமொடு என்று தொடங்கும்

Koviloor Digital Library

பாடல் 7) பாடலாய் உணர்க. தன்னைச் சிவம் என்று அறிதலாவது தன்னை சிவத்தின் அம்சமாக அறிந்து கொள்வது

1127. தன்னைப் பேத மாய்க் காண்கை
சகத்தில் காணப் பட்டதாம்
தன்னைப் பேதம் அறச்சிவமென்
றறிவோன் ஞானி தாஞெருவன்
என்னக் கருதி மறையதுநீ
ஆஞய் என்ன அத்துவிதம்
தன்னைப் புகலும் கண்டதனைச்
சாற்றல் மறையின் கருத்தன்றே 17

(இ.ள்) தன்னைப் பேதமாய்க் காண்கை சகத்தில் காணப் பட்டதாம். = சீவஞகிய தன்னை ஈஸ்வரஞேடு கூட்டி இயக்கப் படுபவனும் இயக்குபவனும் ஆகிய வேறுபாடாக உணர்வது உலக நிலையில் காணப்பட்ட செயலாகும்; தன்னை பேதம் அற சிவம் என்று அறிவோன் ஞானிதான் ஒருவன் = கூடத்தஞகிய தன்னை தத்பதப் பொருளாகிய பரதுரியத்துடன் கூட்டி இயக்கப் படுபவனும் இயக்குபவனும் என்னும் (ஆகிய) வேறுபாடு நீங்க சிவம் என்றே அறிவோன் பாரமார்திக நிலையையுடைய ஞானி ஒருவனே; என்னக் கருதி = என்ற இதனை எண்ணி; மறை அது நீ ஆஞய் என்ன அத்துவிதம் தன்னைப் புகலும் = வேதமானது அது நீ ஆஞய் என்னும் கருத்தால் தத்துவம் அசி என்று அத்தவித நிலையைக்கூறும்; கண்டு அதனைச் சாற்றல் மறையின் கருத்து அன்று = உலக நிலையைய் கண்டு சீவ ஈசுவர நிலையை கூறுவது வேதத்தின் கருத்து அல்ல. (எ.று)

முடிபு - தன்னைப் பேதமாய்க் காண்கை சகத்தில் காணப்பட்டது ஆம். தன்னைப் பேதம் அற சிவம் என்று அறிவோன் (பாரமார்த்திக நிலையை உடைய ஞானிஒருவனே. என்ன (பாரமார்ததிக நிலையை) கருதி மறை அது நீ ஆஞய் என்ன அத்து விதம் தன்னைப் புகலும் கண்டு (உலக நிலையாகிய) அதனைக் கூறுதல் மறையின் கருத்து அன்று.

(வி.ரை) உலக நிலையில் காரிய உபாதியோடு கூடிய சீவனுக்கும் காரண உபாதியோடு கூடிய ஈஸ்வரனுக்கும் உண்டு. ஆதலால் இவர்களுக்கு அத்துவித நிலையாகிய அருக்கியம் பொருந்தாது. ஆஞல்காரிய உபாதி நீங்கிய ஜீவதுரியஞகிய கூடஸ்தனுக்கும். காரண உபாதி நீங்கிய பரதுரியஞகிய பிரமத்துக்கும் பாரமாத்திக நிலையில்

Koviloor Digital Library

அத்துவிதம்கூறப்படும் அவ் அத்து வித நிலையைக் கூறுவதே மகாவாக்கியத்தின் கருத்தாகும். அம்மகா வாக்கியத்தில் வாச்சியப் பொருளுக்கு ஐக்கியம் கூடாது. இலட்சியப் பொருளுக்கே ஐக்கியம் கூடும் என்க. வாச்சியப் பொருளாவன சீவனும் ஈஸ்வரனும் இலட்சியப் பொருளாவன கூடத்தனும் பிரமமும் ஆகும்.

தூய உணர்வுடையவர்க்கே மகாவாக்கியப்பொருள் விளங்கும் எனல்

**1128. தூய்தா கியநெஞ் சுடையார்க்கு தாமே [1]சிவமாத்
தோன்றுமால்
தீதா கியநெஞ் சுடையார்க்குத் தெளிய அபேதம் இகலின்றி
வேதா கமங்கள் விளம்பிடினும் விளங்காது என்றும்
வேறென்னும்
வாதால் அழிவர் அவர்மாயை மயக்க மயங்கும் மதியனுர்
18**

(பா.ம்) [1]சிவமாய்

(இ.ள்) தூய்தாகிய நெஞ்சு உடையார்க்கு தாமே சிவமா தோன்றும் = உடம்பு முதலான சீவ உபாதி நீங்கப்பெற்று. தூய்மையாய் விளங்கும் ஞானம் உடையார்க்கு; துவம்பதப் பொருளாகிய தாமே சிவமாகத் தோன்றும்; தீது ஆகிய நெஞ்சு உடையார்க்கு = உடம்பு முதலான சீவஉபாதிகளோடு கூடிய அறிவுடையயோர்க்கு; தெளிய அபேதம் இகல் இன்றிவேத ஆகமங்கள் விளம்பிடினும் என்றும் விளங்காது - தெளிவு பெறுமாறு அபேத நிலையாகிய அத்துவித நிலையை மாறுபாடுஇன்றி வேதங்களும் ஆகமங்களும் கூறிஞலும் எப்பொழுதும் விளங்காது; அவர் வேறு என்னும் வாதால் அழிவர் = தத்பதப் பொருளும்துவம்பதப் பொருளும் தமக்குள் வேறுபாடு உடையன என்னும் கருத்தால் கெட்டு ஒழிவர்; அவர் மாயை மயக்க மயங்கும் மதியினுர் = அத்தகையோர் மாயையின் ஆவரண சக்தியை மயக்க அவஞல் மயங்குகின்ற அறிவுடையவராய் இருப்பர். (எ.று)

முடிபு - தூய்து ஆகிய நெஞ்சு உடையார்க்கு தாமே சிவமாத் தோன்றும், தீது ஆகிய நெஞ்சு உடையார்க்கு அபேதநிலையை வேதமும் ஆகமங்களும் தெளிய இகலின்றி விளம்பிடினும் விளங்காது.(அவர்) வேறு என்னும் வாதால் அழிவர் அவர் மாயை மயக்க மயங்கும் மதியினோர்.

Koviloor Digital Library

மகாவாக்கியவிசாரம் செய்து சிவயோகத்தில் நிலைபெறும் சிவ யோகியின் சிறப்பைச் சொல்லியது

1129. நெஞ்சம் சோகம் பாவனையில்
நிற்க நிறுத்தி விடயங்கள்
அஞ்சும் [1]துவரத் துறந்தசிவ
யோகி ஒருவன் அடியிணையில்
துஞ்சும் திருமால் முதலமரர் உள்ளம்
அவனை துதித்தி இறைஞ்சா(து)
எஞ்சும் தவமா முனிவரிலை
எனநான் மறையும் இயம்புமால் 19

(பா.ம்) [1]துறவாத்

(இ.ள்) நெஞ்சம் சோகம் பாவனையில் நிற்க நிறுத்தி = மகா வாக்கியப் பொருளை ஆராய்ந்து உணர்ந்த மனத்தை அநுபூதிவருதற் காக சிவோகம்பாவனையில் நிற்குமாறு நிறுத்தி; விடயங்கள் அஞ்சும் துவரத்துறந்த சிவயோகி ஒருவன் = ஐம்பொறிப் பொருளாகிய ஐந்த விடயங்களையும் முற்றிலும் துறந்த சிவயோகம் புரியும் ஒருவனுடைய; அடிஇணையில் = இரண்டு திருவடிகளின் இடத்தே; திருமால் முதல் அமரர் உள்ளம் துஞ்சும் = அரி முதலான தேவர்களுடைய உள்ளம் எல்லாம் சென்று அடங்கிக் கிடக்கும்; நான் மறையும் = நான்கு வேதங்களும்; அவனைத்துதித்து இறைஞ்சாது எஞ்சும் தவமா முனிவர் இலை என இயம்பும் = அச்சிவயோகியை புகழ்ந்து கூறி வணங்காமல், எஞ்சிருக்கும் தவசிகளும் முனிவர்களும் இல்லை எனக்கூறும். (எ.று)

முடிவு - நெஞ்சத்தை சோகம் பாவனையில் நிற்கநிறுத்தி ஐந்து விடயங்களையும் முற்றிலும் துவர துறந்த சிவயோகி. அச்சிவ யோகியாகிய ஒருவன் அடிஇணையில் திருமால் முதல் அமரர் உள்ளம் துஞ்சும். நான் மறையும் அவனைத் துதித்து இறைஞ்சாது எஞ்சும் தவரும் முனிவரும் இல்லை என இயம்பும்.

1130. என்று கருணை பொழிவிழிஎங்
கோமான் உண்மை இனிதியம்ப
[1]நின்ற வசவ ராயன்உளம்
அழல்சேர் மெழுகின் நெக்குருகிச்

Koviloor Digital Library

சென்று குரவன் அடிபணிந்தான்
சென்ன வ்சவன் முதலாகத்
துன்று சரணா் உய்ந்தனம்
யாம்என்று துதித்துத் தொழுதனரால்

(பா.ம்) [1]நின்று

(இ.ள்) என்று = மேலே கூறியவாறு; (பந்தத்தின் இயல்பையும் ஞானத்தின் இயல்பையும் ஞானத்தால் அடைய வேண்டிய பொருளையும் அடைந்தாருடைய சிறப்பையும் இன்ன என்று கூறி) கருணை பொழி விழி எம் கோமான் உண்மை இனிது இயம்ப = அருளைப் பொழியும் கண்களையுடைய எமது தலைவனுகி அல்லம தேவன் உண்மைப் பொருள்களை இனிமையாக உபதேசிக்க; நின்ற வசவராயன் = இதனைக் கேட்டு நின்ற வசவ தேவனுடைய உள்ளம் அழல் சேர் மெழுகின் நெக்கு உருகி = மனமானது நெருப்பினைச் சேர்ந்த மெழுகினைப் போல நெகிழ்ந்து உருகி நிற்க; சென்று குரவன் அடிபணிந்தான் = போய் அல்லம தேவனது திருவடியினை வணங்கினுன்; சென்ன வசவன் முதலாகத் துன்று சரணா் = சென்ன வசவதேவன் முதாலாகப் பொருந்தி இருந்த அடியர் எல்லாம்; யாம் உய்ந்தனம் என்று துதித்து தொழுதனா் = தாங்களும் இவ்உபதேச மொழியினைக் கேட்டு உய்வு அடைந்தோம் என்று கூறி புகழ்ந்து வணங்கினா். (எ.று) ஆல் - அசை

முடிபு - என்று கோமான் உண்மை இயம்ப, நின்ற வசவராயன் உள்ளம் உருகி(நிற்க) சென்று குரவன் அடிபணிந்தான், சென்ன வசவன் முதலான சரணா் யாம் உய்ந்தனம் என்று துதித்துத் தொழுதனா்.

(சி.ரை) தத்துவப் பொருள்கள் பொது என்றும், உண்மை என்றும் இருவகைப் படும். அவ்விரண்டனுள் இங்கு அல்லமன் கூறியவை உண்மைப் பொருள் என்க.

அல்லமதேவன் தன் தொழிலில் நிற்றல்

1131. இவ்வாறு அருளால் தனையுணா்த்தி
இருந்த ஞானஇயல் வீர
சைவா சிரியன் அல்லமன்இத்
தரையில் பருவம் தலைசிறப்ப
உய்வான் நினைந்து தனைநோக்கி
உற்ற அடியாா்க் குபதேசம்

Koviloor Digital Library

செய்வான் இயன்ற வடிவொடுசென்
றருள்செய் செயல்செய் துலாவினுன் 21

(இ.ள்) இவ்வாறு அருளால் தனை உணர்த்தி இருந்த ஞான இயல்வீரசைவாசிரியன் அல்லமன் = மேலே கூறிய முறைப்படி அருள் எண்ணத்தால் தன்னை உணருகின்ற ஞானத்தை வசவ தேவனுக்கு உணர்த்தி இருந்த ஞான இயல்பினையுடைய வீரசைவ ஆசிரியனுகிய அல்லம தேவன்; இத்தரையில் = இந்த உலகத்திலே; பருவம் தலைசிறப்ப = பக்கு நிலை தீவிரதரமாய் சிறப்ப; உய்வான் நினைந்து = தாங்கள் கடைத்தேறும் நிலையினைக் கருதி; தனை நோக்கி உற்ற அடியார்க்கு = தன்னைக் கருதி வந்து அடைந்த அடியவர்க்கு ; உபதேசம் செய்வான் உபதேசம் செய்ய வேண்டி; இயன்ற வடிவொடு சென்று = அதற்குப் பொருந்திய தவக்கோலத்துடன் சென்று; அருள் செய் செயல் செய்து உலாவினுன் = உபதேசம் செய்யும் செயல்களை அவர்கட்குச் செய்து இந்நில உலகத்தில் இயங்கி நின்றான்.(எ.று)

முடிபு - இவ்வாறு தனை உணர்த்தி இருந்த வீரசைவ ஆசிரியனுகிய அல்லம தேவன் இத்தரையில் பருவம் சிறப்ப, தனை நோக்கி உற்ற அடியார்க்கு உபதேசம் செய்வான் இயன்ற வடிவொடு சென்று (அவர்க்கு) அருள் செய் செயல் செய்து உலாவினுன்.

(வி.ரை) தமிழ் நாட்டிலே வீரசைவர்களுக்குரிய பஞ்சாரிய வழிபாடு செய்யும் பொழுது அல்லம தேவரை பஞ்சப் பிரம மந்திரத்துள் முதல் மந்திரமாகிய ஈசான மந்திரத்திற்குரியவராய் வைத்து வழிபாடு செய்வது மரபு என்க. அதனைக் கருதி வீரசைவாசிரியன் அல்லமன் எனக் கூறினார்.

இருபத்து நான்காவது
மனோலயகதி முற்றிற்று

Koviloor Digital Library

இருபத்து ஐந்தாவது
மான்மிய கதி

இக்கதிக்குப் பார் வதீய பிரசன்னதே எனக் கன்னடப் பிரபுலிங்க லீலையில் பெயர் கூறப்பட்டுள்ளது.

கலிவிருத்தம்

கதி நுதலியது

1132. வியனிலம் மேவிய விழுமி யோர்க்கெலாம்
செயிரறும் அல்லமன் செய்த நன்றியைக்
கயிலையில் நுதல்விழிக் கடவுள் தன்புடை
மயிலிய லொடு சொலும் ஆறு கூறுவாம் 1

(இ.ள்) கயிலையில் நுதல் விழிக்கடவுள் = திருக்கயிலாய மலையில் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான்; வியன் நிலம் மேவிய விழுமியோர்க்கு எலாம் செயிர் அறும் அல்லமன் செய்த நன்றியை = அகன்ற நிலவுலகத்தில் பொருந்திய நல்லொழுக்கமுடைய அடியவர்கட்கு எல்லாம் குற்றமற்ற அல்லமதேவன் செய்த நற்செயலாகிய திருவிளையாட்டினை; தன்புடைமயிலியல் ஒடு சொலும் ஆறு கூறுவாம் = தன் இடப்பாகத்திலுள்ள மயில் போன்ற சாயலையுடைய உமாதேவியாரோடு உரையாடிய முறைமையினையாம் கூறுவாம் (எ.று)

முடிபு - கயிலையில் நுதல் விழிக் கடவுள் அல்லமன் விழுமியோர் கெலாம் செய்த நன்றியை தன்புடை மயிலியலொடு சொலும் ஆற்றைக் கூறுவாம்.

(வி.ரை) இறைவனும் இறைவியும் தமக்குள் உரையாடிப் பேசிக் கொள்வதால் மயிலியலொடு என்று ஒடு உருபு வைத்துக் கூறினர்.

1133. ஆயிடை அருள்நந்தி ஆதி மாதவர்
நேயமோடு அமர்வுற நிறுவி அல்லமன்
மாயிரு ஞாலமேல் மானி டர்க்கெலாம்
போயருள் செயுந்தொழில் பூண்டு ளானரோ 2

(இ.ள்) அல்லமன் = அல்லமதேவன்; ஆயிடை = கருநாடக நாட்டில் கல்யாணப் பட்டிணம் முதலான இடங்களில்; அருள் நந்தி ஆதி மாதவர் = அருளையுடைய வசவதேவர் முதலான பெருந்தவம் உடையோரை எல்லாம்; நேயமோடு அமர் உற நிறுவி = அன்புச் செயலோடு பொருந்தி இருக்குமாறு நிலைபெறச் செய்து விட்டு; மாயிரு ஞால மேல்

Koviloor Digital Library

மானிடர்க்கு எலாம் = மிகப் பெரிய உலகத்தினிடத்தே வாழ்ந்திருக்கும் நன் மக்களுக்கு எல்லாம்; போய் அருள் செயும் தொழில் பூண்டுளான் = அவர்களிடம் சென்று அவர்களுக்கு உபதேசிக்கும் செயலை மேற்கொண்டு உள்ள வனாயிருந்தான்.(எ.று) அரோ - அசை.

முடிபு - அல்லமன் ஆயிடை அருள் நந்தி மாதவர் அமர்வுற நிறுவி ஞாலமேல் மானிடர்க் கெலாம் போய் அருள் செய்யும் தொழிலைப் பூண்டுளான். (எ.று)

1134. **இன்னணம் அல்லமன் இருநி லத்துறத்**
தன்னிகர் கயிலையில் சிங்கம் தாங்கிய
பொன்னணை மிசையமர் புராரி தன்னெடு
மின்னணி முலையுமை விளம்பல் மேயினுள். 3

(இ.ள்) அல்லமன் இன்னணம் இருநிலத்து உற = அல்லமதேவன் இவ்வாறு பெரிய நிலவுலகத்தில் வாழ்ந்திருக்க ; தன்னிகா் கயிலையில் = தன்க்குத் தானே ஒத்த கயிலை மலையில்; சிங்கம் தாங்கிய பொன் அணை மிசை அமர் புராரி தன்னெடு = சிங்க உருவம் சுமந்த பொனன்னாற் செய்த ஆசனத்தின் மேல் எழுந் தருளி இருக்கும் திரிபுரங்களை எல்லாம் அழித்த சிவபெருமானொடு; மின் அணி முலை உமை விளம்பல் மேயினுள் = மின்னுகின்ற அணிகளை அணிந்திருக்கும் நகிலை உடைய உமாதேவி உரையாடத் தொடங்கினுள். (எ.று)

முடிபு - அல்லமன் இன்னணம் நிலத்திலேஉற கயிலையில் சிங்கம் தாங்கிய பொன் அணை மிசை அமர் புராரிதன்னெடு உமை விளம்பல் மேவினுள்.

1135. **அல்லமன் அருள்பெறற்கு அடைந்த நந்தியோ(டு)**
எல்லையில் நின்கணம் எனது நற்கலை
மெல்லிய நிலமிசை மேவிச் செய்ததென்
சொல்லுதி [1]எனவுமை இறைவன் சொல்லினுன் 4

(பா.ம்) [1]உமைக்கு

(இ.ள்) உமை = உமாதேவியாா் (இறைவனை நோக்கி); அல்லமன் அருள் பெறற்கு அடைந்த நந்தியோடு = அல்லம தேவருடைய திருவருளைப் பெறுதற்காக நிலவுலகத்தை அடைந்த நந்தி தேவனுடன்; எல்லையில் நின்கணம் = கணக்கற்ற உன்னுடைய கணங்களுள் எனது நற்கலை = என்னுடைய நல்ல சத்துவ குணக்கூறு அமைந்த நங்கையும்;

Koviloor Digital Library

மெல்லிய நிலமிசை மேவி = மென்மையான நிலஉலகத்தின் கண் சென்று; செய்தது என் சொல்லுதி என = செய்தநற்செயல்கள் என்ன என்பதை எனக்குச் சொல்லுவாயாக என்று கேட்க; இறைவன் சொல்லினுன் = சிபெருமான் சொல்லத் தொடங்கினுன்.

முடிபு - உமை அல்லமன் அருள் பெறற்கு அடைந்த நந்தியோடு நின்கணமும் எனது கலையும் நிலமிசை செய்தது என்? சொல்லுதிஎன இறைவன் சொல்லினுன்.

இறைவன் உமைக்குக் கூறியது

1136. நந்தி நல் வசவனாம் நாமம் கொண்டமர்ந்(து)
அந்தமில் எம்அடி யவரை யாம்எனப்
புந்திசெய்து அவர்விழை பொருள் அளித்து அமண்
[1]சிந்திஅந் நிலமிசைச் சிறப்புற் றானனரோ 5

(பா.ம்) [1]சிந்திய நிலமிசை.

(இ.ள்) நந்தி நல்வசவனாம் நாமம் கொண்டு அமர்ந்து = நந்தி தேவன் நல்ல வசவராஜன் என்னும் பெயரை பெற்றுக் கொண்டு கல்யாணபுரியல் தங்கி இருந்து; அந்தம் இல் எம் அடியவரை = அளவற்ற எம்முடைய தொண்டர்களை; யாம் எனப்புந்தி செய்து = யாமே என உள்ளத்தால் கருதிக் கொண்டு; அவர் விழை பொருள் அளித்து = அவ்வடியவர் விரும்பிய பொருள்களை எல்லாம் கொடுத்து; அமண் சிந்தி = சமண சமயத்தை எல்லாம் போக்கி; அந்நிலமிசை சிறப்புற்றான் - அந்நில உலகத்தில் சிறப்பை அடைந்தான் (எ.று) அரோ அசை.

முடிபு - நந்தி வசவனும் நாமம் கொண்டு அமர்ந்து எம் அடியவரை யாம் என புந்தி செய்து அவர்விழை பொருளளித்து அமண் சிந்தி அந்நிலமிசை சிறப்புற்றான்.

1137. அறஞ்செயும் நின்கலை ஆகும் மங்கைபோய்
சிறந்துள உலகில்மா தேவிப் பேர்பெறீஇ
மறஞ்செயும் மதன்வலி மாள மாய்த்துஎலாம்
துறந்தனள் குரவனைத் துருவிப் போயினுள் 6

(இ.ள்) அறம் செயும் நின்கலை ஆகும் மங்கைபோய் = முப்பத்து இரண்டு அறங்களையும் வளர்க்கின்ற சிறப்பு வாய்ந்த உன்னுடைய சத்துவகலை வடிவமான மங்கையானவள் நிலவுலகத்தில் சென்று; சிறந்துள உலகில் மாதேவிப் பேர் பெறீஇ = சிறப்பையுடைய நிலவுலகத்

Koviloor Digital Library

தில் மாதேவி என்கின்ற பெயரைப் பெற்றுக் கொண்டு பிறந்து வளர்ந்து; மறம் செயும் மதன்வலி மாள மாய்த்து = பாவத்தைச் செய்யும் மன்மதனுடைய வலிமை எல்லாம் அழியும்படி அழித்து; எலாம் துறந்தனள் = யான் எனது என்னும் அகப்பற்று, புறப்பற்று முதலான எல்லாவற்றையும் நீக்கியவளாய்; குரவனைத் துருவிப் போயினுள் = அல்லம தேவனுகிய குரவனை ஆராய்ந்து அடைந்து உபதேசம் பெற்று கதலிவனத்தின் கண்போயினுள் (எ.று)

முடிபு - நின்கலையாகும் மங்கை போய் உலகில் மாதேவிப் பேர்பெறீஇ மதன்வலி மாள மாய்த்து எலாம் துறந்து துருவிப் போயினுள்.

1138. **நண்ணிய நங்கண நாதர் தாமும்அக்**
கண்அகல் ஞாலம்உற்று எம்மை காணிய
வண்ணநல் வினைகள்பல் வகைபு ரிந்தவர்
எண்ணிய பலநக ரிடத்தும் வைகினுர் 7

(இ.ள்) நண்ணிய நம் கண நாதர் தாமும் = திருக்கயிலையை விட்டு நிலவுலகத்தை அடைந்த நம்முடைய சிவகணநாதர் தாமும்; கண் அகல்ஞாலம் உற்று = இடம் அகன்ற நிலவுலகததிலே பொருந்தி; எம்மை காணிய = எம்முடைய உண்மை இயல்பை அறிந்து கொள்வதற்காக; வண்ணநல் வினைகள் பல்வகை புரிந்து = அழகான நல்ல சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் வினைகள் பலவற்றை செய்து; அவர் எண்ணிய பலநகர் இடத்தும் வைகினுர் = அவர் வாழ்தற்குக் கருதிய பலவகையான நகரங்கள் தோறும் தங்கி இருந்தார்கள் (எ.று)

முடிபு - நம் கணநாதர் தாமும் அஞாலமுற்று எம்மைகாணிய நல் வினைகள் பலவகை புரிந்து அவர் எண்ணிய பல நகரிடத்தும்வைகினுர்.

1139. **அளக்கரும் விரதராய் அவரி ருந்திடத்**
துளக்கமில் நிலையுடைத் தூயன் அல்லமன்
கொளக்குறை படாதபேர் இன்பம் கூட்டுண
விளக்கினன் உலகினில் வீர சைவமே 8

(இ.ள்) அவர் அளக்கரும் விரதராய் இருந்திட = வசவதேவனும் மாதேவியும் சிவ கணங்களும்ஆகிய அவர் அளவிடுதற்கு அரிய விரத சீலராய் உலகத்தில் இருக்க; துளக்கம் இல் நிலை உடைத்தூயன் அல்லமன் = உறுதியான கொள்கையினை உடைய தூயோனாகிய அல்லமதேவ...; கொளக் குறையாத பெரிய குறைபடாத பேர் இன்பம் கூட்டு உண;

Koviloor Digital Library

கொள்ளக் கொள்ளக் குறையாத பெரிய சிவானுபவமாகிய இன்பத்தை உலக மக்கள் எல்லாம் சேர்ந்து உண்ணுமாறு; உலகினில் வீரசைவமே விளக்கினன் = உலகத்தில் வீரசைவ சமய நெறிப் பொருள்களையே விளக்கி உபதேசித்தான். (எ.று)

முடிபு - அவர் விரதராய் இருந்திட அல்லமன் கொளக் குறைபடாத பேர் இன்பம் கூட்டுண உலகில் வீரசைவமே விளக்கினன். வீரசைவமே என்று. ஏகாரம் - பிரிநிலை ஏகாரம்.

வேறு

1140. எவ்வகை சமயத் திற்கும் இறைவனே எனினும் நேயம்
சைவநல்சமயத் துற்றான் சைவத்தும்வீர சைவத்(து)
அவ்வவர் பிறவி நீக்கும் அல்லமன் விருப்பம் உள்ளான்
மைவரிக் கயல்நெடு ங்கண் மடவரால் என்றான் வள்ளல்
9

(இ.ள்) வள்ளல் = உலகமக்களுக்கு உலக போகங்களையும் வீட்டினையும் கொடுக்கின்ற வள்ளலாகிய சிவபெருமான்; மைவரி கயல் நெடும்கண் மடவரால் = கருநிறத்தையும் சிவந்த கோடுகளையும் உடைய கயல்மீன் போன்ற அகன்ற விழியையுடைய மடப்பம் வாய்ந்த உமாதேவியே(என்று விளித்துக்கொண்டு); அல்லமதேவன் எவ்வகை சமயத்திற்கும் இறைவனே எனினும் = அல்லமன் உலகத்தில் உள்ள உயர்ந்த எத்தகைய சமயத்திற்கும் தான் தலைவனாய் இருந்தாலும்; சைவ நல்சமயத்து நேயம் உற்றான் = சைவமாகிய நல்ல சமயத்திலே அன்புடையவனாக உள்ளான்; சைவத்தும் = அச்சைவசமயத்தினைக் காட்டிலும்; வீரசைவத்து அவ்வவர் பிறவி நீக்கும் விருப்பம் உள்ளான் = வீரசைவ சமயத்தைச் சார்ந்த ஒவ்வொருவருடைய பிறவித் துன்பத்தை யும் போக்கும விருப்பத்தை மிகுதியாக உடையவனாக உள்ளான். (எ.று)

முடிவு - வள்ளல் மடவரால் அல்லமன் எவ்வகை சமயத்துக்கும் இறைவனே எனினும் சைவ நல் சமயத்தில் (மிகுதியாக) நேயம் உற்றான். அச் சைவத்தும் வீரசைவத்து அவ்வவர் பிறவியை நீக்கும்விருப்பம் உள்ளான். ''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மா தொருபாகனுர் தான் வருவர்'' என்னும் சிவஞானசித்தியார் கருத்தின் படி எல்லாச் சமயத்திற்கும் மாதொரு பாகனுகக் கருதத்தக்க அல்லமன் இறைவன் என்க.

Koviloor Digital Library

1141. சமயம்எவ் வகையி னுந்தான் சைவமே லாயது என்கொல்
அமையுநல் வீர சைவம் அதனினும் சிறந்தது என்கொல்
இமையவர் பரவும்முக்கண் எம்பிரான் அருள்செய் என்ன
உமையவள் வினவ வேழம் உரித்தவன் விளம்பும் அன்றே
10

(இ.ள்.) உமையவள் = உமாதேவியார் சிவபெருமானைநோக்கி; சைவம் சமயம் எவ்வகையினும் தான் மேலாயது என்கொல் = சைவசமயமானது எவ்வகையான சமயங்களைக் காட்டிலும் தான் மேலாய் விளங்குவதற்கு காரணம் என்கொல்?; அமையும் நல் வீரசைவம் = பொருந்திய நல்ல வீரசைவசமயமானது; அதனினும் சிறந்தது என்கொல் = அச்சைவ சமயத்தைக்காட்டிலும் சிறப்புடையதாய் இருத்தற்குக் காரணம் என்கொல்? என்று; இமையவர் பரவும் முக்கண் எம்பிரான் அருள் செய் என்ன = தேவர்கள் முன்னின்று வணங்கத்தக்க மூன்று கண்ணையுடைய எம்பிரானே! அருள் செய்து கூறுவாயாக என்று வினுநிகழ்த்த வேழம் உரித்தவன் விளம்பும் = யானையை உரித்தருளிய சிவபெருமான் சொல்லத் தொடங்கும்.(எ.று) அன்று, ஏ;, அசைகள்.

முடிபு - உமையவள் சைவ சமயம் எவ்வகையினும் தான் மேலாயது என்கொல்? வீரசைவம் அதனினும் சிறந்தது என் கொல்? எம்பிரானே அருள் செய் என்ன வினவ வேழம் உரித்தவன் விளம்பும்.

1142. உரைக்குமெச் சமயத்திற்கும் உத்தர பாகம் சைவம்
[1]தரிக்கும்மச் சைவத் திற்குத் தரமென வீர சைவம்
தெரிக்குநல் காமி காதி சிரத்தினில் திகழும் கண்டாய்
அரிக்குரல் சிலம்பு அரற்றும் அடிமலர் தடங்கண் நல்லாய்
11

(பா.ம்) [1]தருகு மச்

(இ.ள்) அரிக்குரல் சிலம்பு அரற்றும் அடி மலர் தடம் கண் நல்லாய் = சிலம்புகள் உள்ளிடும் அரிகளால் ஒலிக்கின்ற கால்களாகிய மலரையும் அகன்ற விழியையும் உடைய நற்பண்பு வாய்ந்த உமா தேவியே!; உரைக்கும் எச்மயத்திற்கும் உத்தரபாகம் சைவம் = சொல்லப்படும் எல்லாச் சமயங்களுக்கும் முடிவான பொருளைக் கூறும் பகுதி சைவ சமயம் என்றும்; தரிக்கும் அச்சைவத்திற்கு உத்தரம் என வீரசைவம் = பெற்றுள்ள அந்த சைவசமயத்துக்கு முடிவான பொருளைக் கூறும் பகுதி வீரசைவ சமயம் என்றும்; தெரிக்கும் நல்காமிக ஆதி சிரத்தினில் திகழும்

Koviloor Digital Library

கண்டாய் - தெரிந்து கூறப்படும் நல்ல காமிகம் முதலான ஆகமங்களின் முடியில் கூறப் பெற்று விளங்கும் என்பதை நீ அறிவாயாக (எ.று)

முடிவு - நல்லாய் எச்சமயத்திற்கும் உத்தரபாகம் சைவம் என்றும். அதற்கு உத்தரம் வீரசைவம் என்றும். கூறுப்பட்டு காமிகாதி சிரத்தினில் திகழும் கண்டாய்.

1143. புறந்தரு சமயம் புக்கு புறமலாச் சமயத்து எய்தி
அறந்திகழ் சைவம் உற்றாங்கு அதில்சரி தாதி ஆற்றிச்
சிறந்துள வீரசைவம் சேர்ந்தபின் வீடு நண்ணும்
நறுந்தளிர் கவற்றும் மேனி நனைமலர் வல்லி அன்னாய்
12

(இ.ள்) நறும்தளிர் கவற்றும் மேனி நனைமலர் வல்லி அன்னுய் = மணமுள்ள தளிரை கவலை அடையச் செய்யும் மேனியையுடைய அரும்பினையும் மலரையும் பெற்றிருக்கும்கொடியைப் போன்ற மாதேவியே; புறந்தருசமயம் புக்கு = ஒருவன் சமணம் முதலான புறச் சமயங்களில் புகுந்து (அங்கு செய்த நல்வினைப் பயனுல்) புறம் அலாச் சமயத்து எய்தி = புறம் அல்லாததாகிய பாஞ்ச ராத்திரம் முதலான அகச்சமயங்களை அடைந்து (அங்கு செய்த நல்வினைப் பயனுல்) அறம் திகழ் சைவம் உற்று = பலவகை அறங்கள் விளங்கப் பெறும் சைவசமயத்தை அடைந்து; ஆங்கு அதில் சரிதாதி ஆற்றி = அங்கே அச்சைவ சமயத்தில் நின்று சரியை முதலானவற்றை எல்லாம் செய்து; சிறந்துள வீரசைவம் சேர்ந்தபின் வீடு நண்ணும் = தனிச்சிறப்பையுடைய வீரசைவசமத்தை சார்ந்து ஒழுகிய பின்னே வீடு பேற்றினை அடையும். (எ.று)

முடிபு - வல்லி அன்னாய் ஒருவன் புறம் தருசமயம் புக்குப்(பின்) புற மலாச் சமயத்து எய்தி (அதன்பின்) சைவம் உற்று அதில் சரிதாதி ஆற்றி (முடிவாக) வீரசைவம் சேர்ந்தபின் வீடு நண்ணும்.

1144. அருமறை முடியும் சீர்சால் ஆகம முடியும் ஒத்துப்
பொரும்மறம் இலாமல் முற்றும் பொருளினை விளங்கக்
காட்டித்
தரும்முறை அதனுல் வீர சைவமே தலைமைத் தாம்இவ்
இருமறு அறுநன் நூலும் இதில் பிர மாணம் ஆகும் 13

(இ.ள்) அருமறை முடியும் = அரிய வேதத்தில் கூறப்படும் முடிவான பொருளும்; சீர்சால் ஆகம முடியும் = சிறப்புபொருந்திய

Koviloor Digital Library

சிவாகமங்களில் கூறப்படும் முடிவான பொருளும்; பொரும் மறம் இலாமல் ஒத்து = தமக்குள் மாறுபடும் தீங்கு இல்லாமல் ஒத்து விளங்கி; முற்றும் பொருளினை விளங்கக் காட்டி = ஒருவன் முடிவாக அடையும் பொருளை விளங்குமாறு எடுத்துக் காட்டி; தரும் முறை அதனுல்= இவ்வாறு தரக்கூடிய முறைமையை உடைத்து ஆகையால்; வீரசைவமே தலைமத்தாம் = வீரசைவ சமய நெறியே தலைமை உடைத்தாகும்; இவ் இருமறு அறு நன் நூலும் = இவையாகிய குற்றமற்ற வேதம் சிவாகமம் என்னும் இரண்டு நல்ல நூலகளும்; இதில் பிரமாணம் ஆகும் = இவ்வீரசைவ சமயத்துள் பிரமாண நூலாகக் கொள்ளப்படும். (எ.று)

முடிபு - மறைமுடியும் ஆகம முடியும் பொரும் மறம் இலாமல் ஒத்து முற்றும் பொருளை விளங்கக் காட்டி (இவ்வாறு) தரும் முறை அதனுல் வீரசைவமே தலைமைத்தாம். இவையாகிய இரு நூலும் இதில் பிரமாணமாகும்.

(வி.ரை) இவ் என்பது வகர ஈற்று பலவின் பால் சுட்டுப் பெயராகும் இவ் இருநூலும் எனக் கூட்டி இவையாகிய இருநூலும் எனப் பொருள் உரைத்துக் கொள்க.

புறச் சமய நெறி நின்றும் அகச் சமயம் புக்கும்
புகல் மிருதிவழி உழன்றும் புகலும் ஆச்சிரம
அறத்துறைகள் அவை அடைந்தும் அருந்தவங்கள் புரிந்து
அரும் கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்தும்

சிறப்புடைய புராணங்கள் உணர்த்தும் வேத
சரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் இதற்சரியைச் கிரியா யோகம்
செலுத்திய பின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்

ஒருவன் உண்டு அவனைக்காட்டும் நூல் ஆரணமும், ஆகமும் ஆம் என்பது ஒழுவில் ஒழுக்கம் (பாட்டு 23) என்பதனுல் இவ்இருமறுவறு நன்னூல் என்பதற்கு மேற் கோளாகும் ஒழிவில் ஒழுக்கம்.

1145. ஒன்றொரு விடயம் [1]தன்னை உரு சுவை நிறைவென்
றாக்கி
என்றும்எம் முகத்து அளித்திட்(டு) எம்பிர சாதம் கொண்டு

Koviloor Digital Library

துன்றுறு கருமம் [2]உன்ஞ தூய்மைஇவ் வீர சைவத்து
அன்றிவேறு ஒருமார்க் கத்தில் அடுக்குமோ வடுக்கண்
மாதே 14

(பா.ம்) [1]விடயம் தன்னில்; [2]கருமம் உண்ணா

(இ.ள்) வடுக்கண் மாதே = மாவின் வடுவை ஒத்திருக்கும் கண்ணையுடைய உமாதேவியே; ஒன்று ஒரு விடயம் தன்னை = உண்பதற்காக வந்து பொருந்துகின்ற ஒரு பொருளை(அப்படியே உண்டு விடாமல்); உரு, சுவை, நிறைவு என்று ஆக்கி = அப்பொருளினுடைய வடிவம் என்றும், அதனுள் இருக்கும் சுவை என்றும், அதனை உண்டால் உண்டாகும் திருப்தி என்றும் மூன்றாகப் பகுத்துக் கொண்டு; என்றும் எம் முகத்து அளித்து இட்டு - எப்போதும் தியாகாங்கமாகிய உடம்பில் எழுந்தருளி இருக்கும் **இஷ்டலிங்க முகத்திற்கு உருவையும், போகாங்கமாகிய சூக்கும உடலில் பொருந்தி இருக்கும் பிராண லிங்க முகத்திற்கு சுவையையும் யோகாங்கமாகிய காரண உடம்பில் வீற்று இருக்கும் ஞானலிங்க முகத்திற்கும் திருப்தியை யும் (பாவலிங்கம்) நிவேதனம் செய்து**; எம்பிரசாதம் கொண்டு = நிவேதித்த பொருளாகிய பிரசாதத்தைத்தான் உண்டு; துன்று உறு கருமம் உண்ஞத்தூய்மை = தனக்கு மட்டும் பொருந்துவதாக சமைத்துக் கொண்ட பொருள்களால் உணவு உண்ஞத அத்தகைய தூய்மை; இவ்வீர சைவத்து அன்றி வேறு ஒரு மார்க்கத்தில் அடுக்குமோ = இவ்வீரசைவ நெறிக்கு அன்றி வேறு ஒரு சமய நெறிக்குப் பொருந்துமோ? பொருந்தாது.

முடிபு - வடுக்கண் மாதே விடயம் தன்னை உரு சுவை நிறைவு என்று ஆக்கி எம்முகத்து அளித்து இட்டு எம்பிரசாதத்தைக் கொண்டு துன்றுறு கருமத்தால் உண்ணாத தூய்மை இவ்வீரசைவத்து அன்றி வேறு ஒரு மார்க்கத்தில் அடுக்குமோ.

1146. ஆதலால் வீர சைவத்து அறிவினை அறியச் செய்தான்
மாதர்மா தேவி யாம்உன் வண்கலை மாதி னுக்கும்
மேதையாம் வசவன் ஆதி மெய்யடி யவர்க்கும் ஞான
போதகாசிரியன் என்னும் பொருவில்அல் லமன்வேற்
கண்ஞய் 15

(இ.ள்) வேல்கண்ஞய் = வேல் போன்ற விழியையுடைய உமாதேவியே! ஞானபோத காரிசியன் என்னும் பொருவிலா அல்லமன்

Koviloor Digital Library

= ஞானத்தையே உபதேசிக்கும் குரு என்று கூறப்படும் ஒப்பற்ற அல்லமதேவன்; ஆதலால் = மேற்கூறியவாறு வீரசைவம் சிறப்புடைய தாக விளங்கும் காரணத்தால்; வீரசைவத்து அறிவினை = வீரசைவ சமயப் பொருள் அறிவினை; மாதர் மாதேவியாம் வன்கலை மாதினுக்கும் = அன்பினையுடைய மாதேவி என்னும் பெயரைப் பெற்றிருக்கும் உன்னுடைய சத்துவகுணக் கூறாயுள்ள மடந்தைக்கும்; மேதையாம் வசவன் ஆதி மெய் அடியவர்க்கும் = அறிவுள்ளவராக உள்ள வசவ தேவன் முதலான உண்மைத் தொண்டர்களுக்கும். அறியச் செய்தான் = அறியுமாறு உபதேசித்தான். (எ.று)

முடிவு - வேற்கண்ணுய்! பொருவில் அல்லமன் மாதேவியாம் மாதினுக்கும் வசவ ஆது மெய்யடியவர்க்கும் ஆதலால் வீரசைவத்து அறிவினையே அறியச் செய்தான்.

1147. பருவபே தத்தால் பேதப் படும்பொருள் பருவம் கண்டு
திரு வின்மா முனிவர் யோக சித்தர்கள் முதலா னோர்க்குப்
பொருவிலா அல்ல மப்பேர் புண்ணியன் புகன்றாட்
கொண்டான்
குரவவார் குழன்ம டந்தாய் என்றனன் குன்ற வில்லி 16

(இ.ள்) குன்ற வில்லி = மேரு மலையை வில்லலாக உடைய இறைவன்; குரவவார் குழல் மடந்தாய் = குராமலரை அணிந்த நீண்ட கூந்தலை உடையபெண்ணே! (என்று உமாதேவியாரை விளித்துக் கொண்டு) பருவ பேதத்தால் பேதப் படும் பொருள் = கேட்பவரின் மனேபக்குவ நிலையால் வேறுபட்டு விளங்கும் பல பொருள்களை; பருவம் கண்டு = அவ்வவர்களின் பக்குவ நிலையை ஆராய்ந்து பார்த்து திருவின்மா முனிவர் யோக சித்தர்கள் முதலானேர்க்கு = அறிவுச் செல்வத்தையுடைய முனிவர் யோக பயிற்சியுடைய சித்தர்கள் முதலானோர்க்கு; பொருவிலா அல்லமப் பேர் புண்ணியன் புகன்று ஆட்கொண்டான் என்றனன் = ஒப்பில்லாத அல்லமன் என்னும் பேர் படைத்த அறவாளன் கூறி அவர்களை ஆட்கொண்டான் என்று கூறினன். (எ.று)

முடிவு - குன்றவல்லி ! மடந்தாய்! அல்லமப் பேர் புண்ணியன் பருவ பேதத்தால் பேதப்படும் பொருளை பருவம் கண்டு முனிவர் சித்தர் முதலானேர்க்குப் புகன்று ஆட்கொண்டான் என்றனன்.

Koviloor Digital Library

1148. அம்மையுள் மகிழ்வு பொங்க
அல்லமன் பெருமை கேளா
மம்மர் செய்து உளங்கலக்கும்
மாயையை கடந்தான் என்றல்
மெய்ம்மை நின்பவள வாயால்விளம்ப
நான் அறிந்தேன் என்று
மும்மதில் வலிதொ லைத்த
முக்கணு யகனைத் தாழ்ந்தாள் 17

(இ.ள்) அம்மை = உமாதேவியார்; உள்மகிழ்வு பொங்க அல்லமன் பெருமை கேளா = உள்ளத்தில் உவகை பொங்கி எழ அல்லம தேவனுடைய மான்மியத்தை இறைவனிடம் கேட்டு; மம்மர் செய்து உளங்கலக்கும் மாயையை கடந்தான் என்றல் மெய்மை = மயக்கத்தைச் செய்து உயிர்களினுடைய உள்ளங்களை எல்லாம் கலக்குகின்ற மாயையின் வல்லபத்தை அல்லமதேவன் கடந்தான் என்று கூறுவது உண்மையே; நின்பவளவாயால் விளம்ப நான் அறிந்தேன் = (சிவாகமங்களைக் கூறுகின்ற) உன்னுடைய பவளம் போன்ற வாயினால் அம்மெய்மையை விளம்ப நான் அறிந்து கொண்டேன் என்று கூறிக் கொண்டு; மும்மதில் வலி தொலைத்த முக்கண் நாயகனைத் தாழ்ந்தாள் = திரிபுரங்களின் வலிமையைத் தொலைத்த மூன்று கண்ணைப் பெற்றிருக்கும் தலைவனை வணங்கித்தருக்கு ஒழிந்தாள்(எ.று)

முடிபு - அம்மை மகிழ்வு பொங்க அல்லமன் பெருமையைக் கேளா அல்லமன் மாயையைக் கடந்தான் என்றல் மெய்ம்மை (அம்மெய்ம் மையை) நின்வாயால் விளம்ப நான் அறிந்தேன் என்று முக்கண் நாயகனைத் தாழ்ந்தாள்; பெருமை என்பது அல்லம தேவனது மான்மியத்தை. கயிலாய கதியில் உமாதேவியார் தருக்கிக்கூறிய சொற்களை 57ம் பாடலால் அறிக. அத்தருக்கு இப்பொழுது நீங்கி இறைவனை வணங்கினாள்.

1149. அங்குமை மாதி னோடும் அல்லமன் பெருமை கூறித்
திங்கள் வெண்முகிழ்பு னைந்த செஞ்சடை பரமன் மேவ
இங்குஅருள் மேகம் என்னும் இணையிலெம் குருகு கேசன்
மங்கல முத்தி இன்பம் வழங்குமத் தொழிலில் நின்றான் 18

Koviloor Digital Library

(இ.ள்) அங்கு = திருக்கயிலை மலையாகிய அவ்விடத்து; திங்கள் வெண்முகிழ் புனைந்த செஞ்சடை பரமன் = பிறைத்திங்கள் என்னும் வெண்மையான அரும்பினை அணிந்த சிவந்த சடையையுடைய மேலோனாகிய சிவ பெருமான்; உமைமாதினோடும் = உமாதேவியினுடன்; அல்லமன் பெருமை கூறி மேவ = அல்லம தேவனுடைய மான்மியத்தை மொழிந்து பொருந்தி இருக்க; இங்கு = இந்நிலவுலகத்திலே; அருள் மேகம் என்னும் இணையில் எம் குருகு கேசன் = அருள் மழை பொழியும் முகில் என்று கூறக்கூடிய எம்முடைய ஒப்பற்ற ஆசிரியனுகிய அல்லமதேவன்; மங்கல முத்தி இன்பம் வழங்கும் அத்தொழிலில் நின்றான் = (பக்குவமுடைய தொண்டருக்கு) நன்மை தரும் மோட்ச இன்பத்தை கொடுக்கின்ற உபதேசமாகிய அத்தொழிலில் நிலை பெற்று நின்றான்(எ.று)

முடிபு - அங்கு செஞ்சடைப் பரமன் உமை மாதினோடு அல்லமன் பெருமை கூறிமேவ, இங்கு எம் குருவாகிய குகேசன் முத்தி இன்பம் வழங்கும் அத்தொழிலில் நின்றான்.

1150. **மூத்தவர் இளைஞர் நோயர் முகிழ்முலை மாதர் நல்ல**
[1]தீத்தொழி லாளர் பொல்லாத் தீத்தொழி லாளர் என்றும்
பார்த்திலன் யாவர் மாட்டும் பரிந்தருள் மாரி பெய்து
காத்தனன் அமல ஞான காரணன் குருகு கேசன் 19

(பா.ம்) [1]சீர்த் தொழிலாளர்

(இ.ள்) அமல ஞான காரணன் குரு குகேசன் = அமல குருவும், ஞானகுருவும் காரண குருவும் ஆகிய குகேசன்; மூத்தவர் = வயது முதிர்ந்தவர் என்றும்; இளைஞர் = இளமை உடையவர் என்றும்; நோயர் = நோயினை உடையவர் என்றும்; முகிழ் முலைமாதர் = தோன்றும் நகிலையுடைய பெண்கள் என்றும்; நல்லதீத் தொழிலாளர் = நல்லயாக நெருப்பை வளர்க்கும் அந்தணர்; பொல்லாத் தீத் தொழிலாளர் என்றும் = பொல்லாத தீய தொழிலைச் செய்யும் புலையர் என்றும்; பார்த்திலன் = வேறுபாடு பார்த்திலன்; யாவர் மட்டும் புரிந்து அருள் மாரி பெய்து காத்தனன் = எல்லோர் மாட்டும் அன்பு கொண்டு உபதேச மொழியாகிய அருள் மழையைப் பொழிந்து அவர்களைக் காத்தனன். (எ.று)

முடிபு - குருவாகிய குகேசன் முத்தவர் என்றும் இளைஞர் என்றும் நோயர் என்றும் மாதர், நல்லதீத் தொழிலாளர் என்றும் பொல்லாத்தீத் தொழிலாளர் என்றும்பார்திலன் யாவர் மட்டும் புரிந்து அருள் மாரியைப்

Koviloor Digital Library

பெய்து காத்தனன். என்றும் என்னும் இடைச் சொல்லை மூத்தவர் முதலான பெயர்களினும் கூட்டி பொருள் கொள்க. நல்லதீத் தொழிலாளர் என்றது அந்தணரை. பொல்லாத் தீத் தொழிலாளர் என்றது புலையரை

1151. இன்னவாறு அருளி னானே
இவர் உறவு இவர் வேறு [1]என்னுன்
அன்னைபோல் உயிர்கட்கு எல்லாம்
ஆரருள் ஒருங்கு செய்தே
என்னையாள் எனக்கொண் டாளும்
இணையடி குருகு கேசன்
மன்னுமா தவர்கள் நெஞ்ச
மலர்தொறும் வாழா நின்றான் 20

(பா.ம்) [1]என்னது.

(இ.ள்) என்னை ஆள்என கொண்டு ஆளும் இணையடி குருகு கேசன் = அடியேனை தொண்டன் எனக் கொண்டு ஆட்கொள்ளும் இரண்டு திருவடிகளையுடைய ஆசிரியனுகிய குகேசன்; இன்னவாறு = மேற்கூறுயவாறு; அருளினுனே = தன்னுடைய திருவருள் பெருக்கால்; இவர் உறவு இவர் வேறு என்னான் = இவர் நண்பராவர் இவர்வேறு பட்டவராவா என்று கருதானாய்; உயிர்கட்கு எல்லாம் = எல்லா உயிர்களுக்கும்; அன்னை போல் = தாய் போல; ஆரருள் ஒருங்கு செய்தே = அரியதிருவருளை ஒரு சேரவழங்கி; மன்னும் மாதவர்கள் நெஞ்சமலர்தொறும் வாழா நின்றான் = நிலை பெற்ற பெரிய தவமுடையோர்களுடைய மனமாகிய தாமரை மலர்தோறும் அவர்களால் நினைக்கப் பட்டு வாழ்ந்து கொண்டு உள்ளான்.(எ.று)

முடிபு - குருகேசன் இன்னவாறு அருளினுலே இவர் உறவு என்னுன் இவர் வேறு என்னுன். உயிர் கட்கெல்லாம் அன்னை போல் அருளை ஒருங்கு செய்து மாதவர்கள் நெஞ்சமலர்தொறும் வாழாநின்றான்.

இந்நூலினை ஓதினுர்க்கும் கேட்டார்க்கும் உண்டாம் பயன்

1152. எல்லொளி இரவி போல இருள்மலம் இரித்து இலங்கும்
அல்லமன் சரிதம் ஓதில் அறம்பொருள் இன்பம் வீடாம்

Koviloor Digital Library

நல்லன பயனோர் நான்கும் நண்ணுவன் இதனைக் கேட்க
வல்லநல் வினையினானும் மற்றவை மருவி வாழ்வன் 21

(இ.ள்) எல் ஒளி இரவி போல இருள் மலம் இரித்து இலங்கும் அல்லமன் சரிதம்ஓதில் = விளங்கும் ஒளியையுடைய ஞாயிறை ஒப்ப இருள் போன்ற ஆணவ மலத்தை நீக்கி விளங்குகின்ற அல்லமதேவனது வரலாறு அமைந்த இந்நூல், அத்தகைய நூலை ஒருவன் ஓதில்; அறம் பொருள் இன்பம் வீடாம் நல்லன பயன் ஓர் நான்கும் நண்ணுவன் - அறமும் பொருளும் இன்பமும் வீடும் ஆகும் நல்லனவாகிய நான்கு பயனையும் அவன் அடைவன்; இதனைக் கேட்க வல்ல நல்வினை யினானும் = (ஓதினானே அன்றி) இவ்விலக்கியத்தைக் கேட்கவல்ல நல்ல புண்ணியச் செயலை உடையானும்; மற்று அவை மருவி வாழ்வன் = மேலே கூறிய அறம் பொருள் இன்பம் வீட்டினைப் பொருந்தி வாழ்வன். (எ.று)

முடிவு - அல்லமன் சரிதம் ஓதின்(ஓதிஞன்) அறம்பொருள் இன்பம் வீடாம் பயன் நான்கும் நண்ணுவன். இதனைக் கேட்கவல்ல நல்ல வினையினானும் அவை மருவி வாழ்வன்.

''எல்லே இலக்கம்'' என்பது தொல்காப்பிய நூற்பா.

''அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற் பயனே'' என்பது நன்னூல் நூற்பா.

மேலும் இந்நூலைக் கற்றவர், கூறக்கேட்போர்க்கு உண்டாகும் பயன்

1153. மதியிலார் மதிஞர் ஆவர் மகவிலார் மகவு உயிர்ப்பர்
நிதியிலார் நிதிப டைப்பர் நிலையிலார் நிலைத்து வாழ்வர்
பதியிலார் பதிகி டைப்பர் பழுதிலிவ் விருபத் தைந்து
கதியிஞல் நிரம்பு காதை கற்றவர் கூறக் கேட்பின் 22

(இ.ள்) பழுதுஇல் இவ் இருப்பத்தைந்து கதியிஞல் நிரம்புகாதை =குற்றம் இல்லாத துதிகதி முதலான இருபத்தைந்து கதிகளால் நிரம்பியுள்ள பிரபுலிங்க லீலையாகிய இக்காதையை; கற்றவர் கூறக் கேட்பின் =நன்கு கற்றவர்கள் கூறுபாடு செய்து கூற. அவற்றைக் கேட்பின்; மதிஇலார் மதிஞர் ஆவர் = அறிவில்லாதவராயிருப்பின் அறிவினைப் பெறுவர்; மகவிலார் மகவு உயிர்ப்பர் = மகப்பேறு இல்லாதவர் ஆயின் மகவினை ஈனுவர்; நிதி இலார் நிதி படைப்பர் =

Koviloor Digital Library

செல்வம் இல்லாதவராயின் அச்செல்வத்தைப் பெறுவர் ; நிலையிலார் நிலைத்து வாழ்வர் = வாழும் வீடில்லாதவர் வாழும் வீட்டினைப் பெற்று அதில் நிலை பெற்று வாழ்வர் ; பதிஇலார் பதிகிடைப்பர் = வாழ்த்தக்க ஊரினைப் பெறாதவர் வாழதக்க ஊரினைப் பெற்றுக் கொள்வர். (எ.று)

முடிபு - இவ்விருபத்து ஐந்து கதியினுல் நிரம்பு காதையை கற்றவர் கூறக் கேட்பின் (அக்கேட்டோர்) மதியிலாராயின் மதிஞர் ஆவர் மகவுஇலார் ஆயின் மகவை உயிர்ப்பர் 'நிதியிலார் ஆயின் நிதியைப் படைப்பர் நிலையிலார் ஆயின் (நிலைபெற்ற) நிலைத்து வாழ்வர். பதிஇலார் ஆயின் பதி கிடைப்பர். இங்கு நிலை என்றது வாழும் வீட்டினை.

நூல்செய்த காலம்

1154. பார்கெழு சகாத்தம் மூவைஞ் ஞூற்றெழு பான்நான்காவது
ஆகிய கரநா மங்கொள் ஆண்டுறு விடைஞா யிற்றில்
சீர்கெழும் அல்ல மன்றன் திருவிளை யாடல் காதை
கார் கெழு மிடற்றெங் கோமான் கருணைகொண்
டியம்பினுனே 23

(இ.ள்) பார்கெழு சகாத்தம் = உலகவழக்கிலே உள்ள சாலிவாகன சக ஆண்டு ; மூஐஞ்நூற்று எழுபான் நான்கு ஆவது ஆகிய = மூன்று ஐ நூறும் எழுபதும் நான்கும் ஒன்று சேர்ந்து ஆகிய 1574க்கு மேல் நிகழும் ; கர நாமம் கொள் ஆண்டுறுவிடை ஞாயிற்றில் = கர என்கின்ற பெயரைக் கொண்டுறும் ஆண்டிலே இடபராசியில் சூரியனிருக்கும் வைகாசி மாத்திலே (சிவப்பிரகாசப் பெயர் படைத்துளான்); சீர்கெழும் அல்லமன் தன் திருவிளையாடல் காதை = மிகுபுகழ் பொருந்திய அல்லம தேவனுடைய திருவிளையாடல் செய்தி அமைந்த இக்காதையை; கார்கெழு மிடற்று எம் கோமான் கருணை கொண்டு இயம்பினுன் = கருமை நிறம் பொருந்திய கழுத்தையுடைய எம்தலைவனாகிய சிவபெருமானுடைய திருவருளைக்கொண்டு கூறினான்.(எ.று)

முடிபு - சகாப்தம் முஐஞ்ஞூறு எழுபான் நான்கு ஆவது ஆகிய கரநாமங் கொள் ஆண்டில் விடை ஞாயிற்றில் சிவப்பிரகாசப் பெயர் படைத்தான் அல்லமன் திருவிளையாடல் காதையை எம்கோமான் கருணை கொண்டு இயம்பினுன். சோதிட அறிஞர் சாலியவாகனன் என்னும் பெயருடைய அரசன் ஆட்சிக்குவந்த யாண்டினைத் தொடக்க மாகக் கொண்டு காலத்தைக் கணக்கிடுவர். அவ்வியாண்டு சாலிவாகன

Koviloor Digital Library

சகயாண்டு என்று வழங்கப்பெறும். இந்நூல் சாலியவாகன சகயாண்டு 1574க்கு மேல் நிகழும் கரயாண்டு வைகாசித்திங்களில் இயற்றப் பட்டது என்க. சகயாண்டில் 78ஐம் சேர்த்தால் கிருத்து பிறந்த யாண்டு வரும். ஆகவே கி.பி 1652ல் இந்நூல் இயற்றப் பெற்றது என்க. சிவப்பிரகாச சுவாமிகளின் காலம்17ஆம் நூற்றாண்டு என்க.

இனிவரும் நான்கு செய்யுள்களில் புண்ணியர் உலகில் வாழ்க என்ற வாழ்த்துச் செய்யுள் ஒன்றே எட்டுச் சுவடியில் உள்ளது ஏனைய மூன்று பாடல்களும் சுவடியில் இல்லை அக்காரணத்திஞலே. இவ்வாழ்த்தும் செய்யுளை 23ஆம் செய்யுளின் பின் 24ஆம் செய்யுளாக சேர்ந்துக் கொண்டு ஏனைய மூன்றனையும் தனியாகத்தந்துள்ளோம்.

வாழ்த்து

1155. **புண்ணியர் உலகில் வாழ்க! புலம்செறு நோன்பு வாழ்க!**
பெண்ணெடு பாகன் பூசை பேணிவாழ் அடியர் வாழ்க!
கண்ணுதல் ஒருவன் சார்ந்த கற்புடைச் சைவம் வாழ்க!
அண்ணல்அல் லமன்சீர் கேட்கும் ஆதர வாளர் வாழ்க! 24

(இ.ள்) புண்ணியர் உலகில் வாழ்க = அறத்தினைச் செய்பவரே இவ்உலகில் வாழ்க!; புலம் செறு நோன்பு வாழ்க = ஐம்புலப் பற்றினை அழிக்கின்ற விரதங்கள் வாழ்க! பெண்ணொருபாகன் பூசை பேணி வாழ் அடியர் வாழ்க = சக்தி என்னும் பெண்ணை இடப்பாகமாகிய ஒருபாகத் தில் உடைய சிவபெருமானைக் கருதிச் செய்யும் சிவபூசையையே விரும்பி வாழ்கின்ற அடியர் கூட்டம் எல்லாம் வாழ்க!; கண்ணுதல் ஒருவன் சார்ந்த கற்புடைச் சைவம் வாழ்க = விழியை நெற்றியில் உடைய சிவபெருமான் ஒருவரையே பற்றுக்கோடாகச் சார்ந்துள்ள கற்புடைச் சைவம் என்னும் வீரசைவம் வாழ்க ; அண்ணல் அல்லமன் சீர் கேட்கும் ஆதரவாளர் வாழ்க = பெருமை தங்கிய அல்லம தேவரது பெருமையைக் கேட்கும் அன்புடையோர் எல்லாம் வாழ்க. (எ.று)

கீழ் எழுதப்படும் மூன்று பாடல்களும் சுவடியில் இல்லை அச்சுப் பிரதிகளில் மட்டும் உள்ளன இவை பிற்காலத்தவரால் எழுதி சேர்த்திருக்கலாம் எனக் கருதுகின்றோம்.

இந்நூல் முற்றும் படிப்பவரை சிவபெருமான் என்றே கூறுவேண்டும்

1156. **மாசறும் அல்ல மப்பேர் வள்ளல் சரிதம் தன்னில்**
ஆசறும் செய்யுள் எல்லாம் அன்புடன் படிப்பார் தம்மை

Koviloor Digital Library

ஏசறு மனிதர் என்ன இசைப்பதோ கரித்தோல் போர்த்த
ஈசனென் பதுவே அன்றி ஏதுமற் றேது அம்மா 25

(இ.ள்) மாசு அறும் = குற்றம் இல்லாத அல்லமப்பேர் வள்ளல் தன் சரிதம் தன்னில் =அல்லமன் என்னும் பெயரைத் தாங்கிய வள்ளலினது வரலாற்றை உரைக்கும் இப்பிரபுலிங்க லீலையுள்; ஆசு அறும் செய்யுள் எல்லாம் = குற்றம் நீங்கிய பாடல்கள் எல்லாவற்றறையும்; படிப்பார் தம்மை = படித்து பொருள் உணர்பவர்களை; கரித்தோல் போர்த்த ஈசன் என்பதுவே அன்றி ஏசு அறு மனிதர் என்ன இசைப்பதோ = யானைத் தோலைப் போர்த்த ஈசன் என்று கூறுவதே அன்றி; பழிப்பில்லாத கற்றமனிதர் என்று மட்டும் கூறலாமோ? கூறக் கூடாது என்ற படி; ஏது மற்று ஏது அம்மா = பின் இவ்வாறு சொல்லாமல் எவ்வாறு உரைப்பது - வேறு எவ்வாறும் கூற முடியாது என்பது கருத்து. (எ.று)

முடிவு - அல்லமப்பேர் வள்ளல்தன் சரிதம் தன்னில் எல்லாச் செய்யுளையும் அன்புடன் படிப்பார்தம்மை கரித்தோல் போர்த்த ஈசன் என்பதுவே அன்றி ஏசறு மனிதர் என்று இசைப்பது. மற்று ஏது மற்று ஏது அம்மா.இப்பிரபுலிங்கலீலையின் செய்யுள்கள் எல்லாம் முற்றப் படிப்பவரை சிவபெருமான் என்றே சொல்லி விடவேண்டும். அவரை கற்றவர் என்றோ பேரறிஞர் என்றோ புலமையர் என்றோ இவ்வாறு வேறு எந்த சொற்களாலும் சொல்லக் கூடாது என்பது கருத்து.

வாழ்த்து

1157. பொருவரும் பூதி வாழ்க பூதியை அணிவோர் வாழ்க
திருவளர் கண்டி வாழ்க சிறந்தஐந் தெழுத்தும் வாழ்க
குருவருள் வாழ்க மெய்யைக் கூறுநா வோர்கள் வாழ்க
வெருவரும் பிறவி தீர்க்கும் வித்தகர் வாழ்க வாழ்க 26

(பா.ம்) பொருவரும் பூதிவாழ்க = ஒப்பில்லாத திருநீறு வாழ்வதாகுக; பூதியை அணிவோர் வாழ்க = திருநீற்றை முறையுடன் அணிந்து கொள்ளும் திருநீற்றுத் தொண்டர் வாழ்க; திருவளர் கண்டி வாழ்க = செல்வம் வளர்தற்குக் காரணமான உருத்தி ராக்கம் வாழ்வ தாகுக; சிறந்த ஐந்தெழுத்தும் வாழ்க = சிறப்புடைய திரு ஐந்து எழுத்து வாழ்வதாகுக. குரு அருள் வாழ்க = ஆசிரியனுடைய திருவருள் வாழ்க; மெய்யைக்கூறும் நாவோர்கள் வாழ்க = மெய்ப்பொருள்களை உணர்ந்து கூறுகின்ற நாவினை உடையோர் வாழ்க; வெருவரும் பிறவி தீர்க்கும் வித்தகர் வாழ்க வாழ்க = அஞ்சத்தக்க பிறவி என்னும் நோயினை

Koviloor Digital Library

பூதியாலும் கண்டிகையாலும் ஐந்தெழுத்தாலும் குருவரு ளாலும் மெய்ப் பொருளாலும் தீர்த்துக் கொள்ளும் சிறந்தோர் வாழ்க வாழ்க. (எ.று)

முடிபு - பூதி வாழ்க, பூதியை அணிவோர் வாழ்க, கண்டி வாழ்க, ஐந்து எழுத்து வாழ்க, குருவருள் வாழ்க, மெய்யைக் கூறும் நாவோர்கள் வாழ்க. பிறவியைத் தீர்க்கும் வித்தகர் வாழ்க. பிறவி தீர்க்கும் என்பதில் தீர்க்கும் என்பதற்கு தீர்த்துக் கொள்ளும் எனப் பொருள் உரைத்தும் கொள்க.

1158. **அல்லமன் சரிதச் செய்யுள் அதனிலோர் செய்யுள் கற்க**
வல்லவர் அருத்தம் ஓத வல்லவர் வரைய வல்லோர்
செல்வம் ஈ தென்ன அன்பால் செவிப்புலன் நிறைக்க வல்லோர்
எல்லவரும்பூ மீதில் என்றும் வாழ்ந் திடுக அன்றே 27

(இ.ள்) அல்லமன் சரிதச் செய்யுள் அதனில் ஓர் செய்யுள் கற்க வல்லவர் = அல்லம தேவனுடைய வரலாற்றினைக் கூறும் இந்நூலினுடைய செய்யுளில் ஓர் செய்யுளைக் கற்க வல்லவர்; அருத்தம் ஓத வல்லவர் = பொருள் கூறுவல்லவர்; வரையவல்லோர் = எழுத வல்லவர்; செல்வம் ஈது என்ன = கேள்விச் செல்வமாகிய இதுவே சிறந்த செல்வம் என்று கூற; அன்பால் செவிப் புலன் நிறைக்க வல்லோர் = அன்பினலே செவியாகிய புலனில் நிறைப்பதற்கு வல்லவனும்; எல்லவரும் = இவ்வாறு மேலே கூறிய எல்லோரும்; பூமீதில் என்றும் வாழ்ந்திடுக = நில உலகத்தின் மேல் எப்பொழுதும வாழ்க. (எ.று) (அன்று ,ஏ - அசை)

முடிவு - அல்லமன் சரிதைச் செய்யுள் அதனில் ஓர் செய்யுள் கற்க வல்லவரும் அருத்தம் ஓத வல்லவரும் வரையவல்லோரும் செவிப்புலன் நிறைக்க வல்லோரும் ஆகிய எல்லவரும் பூமீதில் என்றும் வாழ்ந்திடுக. எல்லோரும் என்ற சொல் எல்லவரும் எனத் திரிந்தது

இருபத்தைந்தாவது
மான்மிய கதிமுற்றிற்று

ஸ்ரீ சிவப்பிரகாசர் அருளிச்செய்த
பிரபுலிங்க லீலை
இருபத்தைந்து கதிக்கும்
உரை முற்றும்

Koviloor Digital Library

பிரபுலிங்க லீலை
25 கதியின் பாடல் எண்ணிக்கை

வ. எண்	கதியின் பெயர்	பாடல் எண்ணிக்கை
1.	துதிகதி	20
2.	கைலாய கதி	61
3.	மாயையின் உற்பத்தி கதி	74
4.	மாயை பூசை கதி	59
5.	பிரபுதேவர் வந்த கதி	91
6.	விமலை கதி	50
7.	மாயை கோலாகல கதி	80
8.	வசவண்ணர் முதலியோர் வந்த கதி	45
9.	மாதேவி அவதார கதி	51
10.	மாதேவி அம்மை துறவு கதி	58
11.	கொக்கி தேவர் கதி	30
12.	முத்தாயி அம்மை கதி	27
13.	சித்தராமருக்கு உபதேசித்த கதி	76
14.	வசவண்ணரைச் சார்ந்த கதி	48
15.	மருள சங்கர தேவர் கதி	24
16.	இட்டலிங்க கதி	43
17.	கதலி வன கதி	20
18.	சாதகாங்க கதி	25
19.	கோரக்கர் கதி	63
20.	முனிவரர் கதி	23
21.	சூனிய சிங்கானத்தை இயற்றிய கதி	15
22.	சூனிய சிங்காதன ஆரோகண கதி	62
23.	அல்லமன் ஆரும்பசிகெட உண்ட கதி	64
24.	மனோலய கதி	21
25.	மான்மிய கதி	27
26.	காப்புச்செய்யுள்	01
	மொத்த செய்யுட்கள்	**1158**

Koviloor Digital Library

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

செய்யுள் முதற்சொல்	பாடல் எண்	செய்யுள் முதற்சொல்	பாடல் எண்
அக்கொடு	951	அத்த ஈச்சிறகு	929
அகழ்கின்	684	அத்தன்நேர்	910
அகழ்ந்திட	518	அத்திருமாலும்	20
அங்கம்	274	அத்திறம் செலும்	1016
அங்க லிங்	1061	அந்தக் கரண	1122
அங்கி	32	அந்தணன்	210
அங்கு மா	263	அந்தி	477
அங்குமை மாதி	1149	அந்நிலை	232
அங்கைச் சிவ	619	அப்பொழுது	473
அங்கையின்	825	அம்பர ஆசனம்	980
அங்கொரு	143	அம்பொன்	789
அசைவறும்	1038	அம்மை உள்	1148
அசைவில்	437	அமலை ஏவ	302
அடல்மலி வீரன்	712	அய்யஇநிமித்தம்	991
அடலுறும்	12	அயனும்	57
அடவிகன்	590	அயர்ந்து	446
அடிக்கமலங்கள்	238	அரங்கினிடை	205
அடியர்	620	அரசியல்	754
அடியவர்க்கு	729	அரத்தம்	387
அடியனேன்	800	அரவின் கால்	638
அடுத்த நாடிகள்	876	அரவு உலாம்சடை	43
அடுத்து	166	அரவுகௌவிய	50
அடைக்கலம் என்	770	அரவொடு மண்சு	1008
அடைக்கலம் என	566	அரனடியவர்	526
அடைந்துஉள	813	அரிமதர்	188
அண்ணலைம்	370	அரில்	443
அண்ணலும்	1114	அருகர் வாசகம்	1020
அணியெரிந்தன	695	அருகிருந்த	313
அணும யங்கும்	936	அருங்குரு லிங்க	601

Koviloor Digital Library

அருச்சனை முன்பு 384
அருந்தவம் அழிக்கும் 289
அருந்தவம் நெடு 284
அருந்தவம்பல 460
அருந்தவம் முய 948
அருந்தவமுனி 119
அருந்துக என 1075
அருமறை முடியும் 1144
அருள் எனும் 817
அருள் செய்து 561
அருள் செயும் 591
அருளால் மருள 795
அருளினால் நினது 804
அல்லம குரவன் 999
அல்லமர் இவர் 385
அல்லமன் அருள் 1135
அல்லமன் அறிந்து 303
அல்லமன்... அகம் 889
அல்லமன்... அறி 710
அல்லமன் அனை 378
அல்லமன் ஆயிடை 1024
அல்லமன் இயல்பு 81
அல்லமன் இயல்பு 322
அல்லமன் என்னும் 647
அல்லமன் ... ஞான 476
அல்லமன் எனும் 771
அல்லமன் கண்டு 891
அல்லமன் சரிதச் 1158
அல்லமன் புகன்ற 755
அல்லமன் பெரு 469
அல்லமன் வலி 317
அல்லமனை 970
அலர்கதிர் 993
அலைந்து 335
அவத்தைகள் 774
அவரையும் 1091
அவன் 485
அவிர்சடை 219
அழிவிலானை 629
அழிவரு 474
அழிவும் ஆக்கமும் 59
அழுது 454
அள்ளிக் 246
அளக்கரும் 1139
அளவறும் 1079
அளியன் 466
அறத்து 807
அறம் அழித்தனை 659
அறம் செயும் 1137
அறவினைக்கும் 869
அறிந்திடாமல் 637
அறிவருள் 490
அறிவு அறி 782
அறிவு எனும் 955
அறிவொடு 956
அறுசுவை 746
அறைந்த 624
அன்பனாய்க் 952
அன்பில் 204
அன்பினால் 429
அன்ன காலையில் 698
அன்ன நடையும் 139
அன்னம் 49
அன்னம் மீனுடன் 725
அன்ன 30
அன்னான் 105
அன்னை நீ இனிக் 854
அன்னையும் 585

Koviloor Digital Library

அனைய காலையில் 159
அனைய தேல் 72
ஆக்குறும் 21
ஆகமம் 808
ஆசுஅறு 818
ஆசு தீர்ந்த 1124
ஆசை அறுதல் 1123
ஆசை நின் 290
ஆட்டு 425
ஆடி 348
ஆடினர் சிலவர் 1043
ஆடுநர் தம்உடன் 1028
ஆடுவ கவாரி 1013
ஆணையை 377
ஆதரவு இலை 765
ஆதரவு உடை 767
ஆதலால்அவ் 1107
ஆதலால் அன்பு 768
ஆதலாலெழில் 355
ஆதலால் மனம் 721
ஆதலால் வீர 1146
ஆதனத்தில் 799
ஆதி ஆதாரம் 975
ஆதிநாதனது 915
ஆதிபகவன் 3
ஆதிய 198
ஆய்திருந்தனன் 148
ஆயிடை 80
ஆய காலையில் 309
ஆயிடை அருள் 1133
ஆயிடை நின்றோர் 750
ஆயிருக்கும் 961
ஆயின் மிக்கோர் 874
ஆயும் 170
ஆரை 426
ஆவணா 574
ஆவுரித் 1063
ஆவுறு 810
ஆன் றிரட்டுறும் 180
ஆன்ற 342
ஆன காலையில் 883
ஆனைமேல் 1009
இக்குழு 192
இகழ்ந்து எனது 803
இங்கு ஒரு 113
இங்கு மருள 791
இங்கு தன்னுள் 738
இட்டவர் 1089
இடுதற்கு 1095
இடை 189
இணங்கு மிக்க 790
இணை 88
இத்தனை 396
இந்த உலகிற்கு 327
இந்தக் 140
இந்தியம் 720
இந்தியம் விடயம் 1044
இந்திர திருவிற்கு 225
இந்திரன் இவன் 1026
இந்திரன் எதிர் 515
இந்துவார் 489
இந்நகர் 498
இப்பரிசு அருளினா 723
இப்பரிசு எறுழ்வலி 957
இப்பெரும் பீடம் 982
இம்முறை சங்கம 1070
இம்மை 552
இம்மா நகாரி 102

Koviloor Digital Library

இம்மம காரனும்	107
இயங்கள்	539
இயங்குவ	23
இரண்டோடு	329
இரப்பார்	104
இரவி வான	911
இருந்தபடி குகேச	941
இருந்த வாதி	37
இருந்த வார	47
இருவினை	1118
இல்லம் அகன்று	654
இலங்கி	431
இலங்கு நீறு எனும்	740
இலையினால்	997
இவ்வாறு அருந்தி	1110
இவ்வாறு அருளால்	1131
இவ்வகை	522
இவ்வணம்	195
இவ்வாறு அமர்	988
இவள் மனம்	376
இழிப்பினும்	1069
இளங்கொடி	213
இளையமா நகரின்	499
இறங்கு	247
இறுக்கினர்	668
இறைவண	38
இறைவி	250
இன்பம் நனிசெய்	606
இன்று காமனை	848
இன்றோர்	276
இன்னணம் அரச	155
இன்னணம் அல்ல	1134
இன்னணம் அலங்க	1001
இன்னண	69
இன்னணம் ஐயிரு	110
இன்னணம் சூள்	79
இன்னணம் நகரம்	589
இன்னணம் நன்	836
இன்னணம் படை	1090
இன்னணம் மாயை	291
இன்னமா	503
இன்னவாறு அருளி	1151
இன்னவாறு இங்கு	969
இன்னவாறு எழும்	1015
இன்னவாறு ஒலி	933
இன்னியங்களின்	928
இன்னவாறு பல	880
இனத்தியல்	190
இனியான்	251
இனையதி	29
இனையராகி இருக்	326
இனையராகி இருந்	1058
இனைய வாழை	858
இனையன	909
ஈங்குமாதேவி	493
ஈசன்	99
ஈசனார்	40
ஈசனை	831
ஈன்ற	510
உங்கள்	350
உடம்பு எலாம்	1031
உடம்புஎனும்	992
உடம்பு வாழ்தல்	916
உடம்பை	328
உடம்பொடு	1042
உடல	849
உடுப்போர்	98
உண்விளையாடல்	1085

Koviloor Digital Library

உணர்ந்திலன்	152	எல்லைஇல்	579
உதித்த ஞாயிறு	697	எவ்உருவினொடு	974
உயிர்ப்பிரசாத	775	எவ்வகைச்	1140
உயிர்எனும்	921	எவ்வண்ணம்	433
உயிர்த்த	278	எள்ளில்	356
உரகர்	58	என்னொடு	207
உரல்	227	என்ஒரு	702
உருப்ப	275	என்றுகருணை	1130
உரைக்கும்எச்	1142	என்குணம் மறமே	758
உரைசெயின்	716	என்குறை	713
உரைத்த மொழி	604	என்னோவ	264
உரை மனம்	762	என்பிழை	301
உலகில் ஒருவன்	1106	என்மன இருள்	671
உலகுள	235	என்றலும்	76
உலகுளாரர்	843	என்றவர்	681
உலகெலாம்	300	என்றவள்	586
உள்ளம்	559	என்றவன்	752
உளந்தெளி	532	என்றன்	423
உறவு	571	என்றறிவு	814
உறையில்	554	என்றிது	74
உன்அருள்உள	1046	என்று. கூற	967
ஊன்று	64	என்றுகூற எமை	794
எங்கள்	1007	என்றுகூறக்	462
எங்குரு	504	என்றுகூறிஅவ்	744
எடுத்து	51	என்று தனது	945
எண்ணிய	1078	என்று நல்	373
எண்ணிலர்	1083	என்று நினைந்து	655
எண்ணும்	33	என்று புலம்பி	280
எந்தை அல்லமன்	699	என்று பொன்னுட	353
எந்தை	53	என்றும்	117
எம்அடி மாசும்	1003	என்றுமங்கை	261
எமைஎலாம்	763	என்றுமாதரார்	555
எய்தற்கு அரிய	602	என்ன ஓதலும் அல்	417
எரிபுரை தளிர்	890	என்ன ஓதலும் நிரு	557

Koviloor Digital Library

எல்ஒளி	1152	ஒழியும் என்	920
என்னநல்விமலை	380	ஒழுகுறும்	27
என்ன நினைந்தே	546	ஒறுப்பவன்	674
என்னப்பலவும்	265	ஒன்றான	106
என்ன மன்மகள்	316	ஒன்றி	244
என்னை அறிவி	617	ஒன்றுஒரு	593
என்னை வைதவன்	683	ஒன்றுஒரு	1145
என்னை அஞ்சி	422	ஒன்று ஒன்று	816
என்னை காண்	1022	ஒன்றுமி	256
என்னை நீங்கி	447	ஒன்றையும்	374
என்னைநீவி	458	ஓங்கு இரு	664
எனக்கு அற	665	ஓங்கு உவா	42
ஏட்டினை	984	ஓடி	547
ஏதுசொல்லினும்	927	ஓடி மீளும்	1060
ஏது	578	ஓடும் பொன்	877
ஏற்றிய அருள்	1073	ஓடும் மாவை	875
ஏற்றுவார்	39	ஓடுற	319
ஐந்தொழில்	502	ஓதி	164
ஐம்பெரும் பூதம்	115	கங்கைவர்ர்	694
ஐய	550	கட்டுமின்	670
ஐயநினையும் நின்	616	கட்டுவார்	741
ஐயனும் முனிவு	1072	கடலின்	612
ஒட்டராமன்	656	கடிமலர்ப்	736
ஒட்டன் என்ற	660	கண்ணக	114
ஒடுக்குமனம்	971	கண்டநந்தி	1104
ஒண்தரைக்கண்	631	கண்டபோது	626
ஒருகண் ஆற்றல்	701	கண்டருள்	776
ஒருங்கு	333	கண்டவர்	587
ஒருத்தன் வந்தவாறு	700	கண்டனன்	395
ஒருவர் உண்ண	1047	கண்டனனோ	543
ஒருவன்யான்	1071	கண்டிலேன்	621
ஒருவன் வந்திடும்	1019	கண்டுகொள்	383
ஒருவிருந்தினர்க்கு	913	கண்டு வார்	442
ஒலிஎழுந்திட	934	கண்டுசெல்லும்	733

Koviloor Digital Library

கண்ணப்பன்	1096	கள்ள	132
கண்ணால்	609	கள்ளன்	420
கண்ணிற்கு	129	கற்பழி	569
கண்ணினால்	394	கற்றதன்	231
கண்ணுதல்	480	கற்றை	168
கண்நிறை	596	கறங்குஎனுமாறு	1116
கண்பிசைந்து	26	கறை	173
கண்போல்	1100	கறைஇல்	310
கதந்தரு	218	கன்றிய	14
கதிர்	320	கன்றின்வாய்	886
கதிர்விளை	496	கன்று	565
கயிலை என்னிடம்	315	கன்னற்	279
கயிலை	121	கன்னி லத்தம்	169
கயிலையில்	463	கன்னிகைஎன்றும்	285
கயிலையின்	323	கன்னி	249
கரங்கள்	866	காஞ்சிபுரம்	769
கரிகலம்	1014	காட்டினும்	840
கருங்கொடி	811	காணுதல்	887
கருத்தினை	305	காதி	62
கருத்து அழி	711	காந்தம்	127
கரும்பினும்	193	காந்தம் கண்ட	613
கருமமும் யோக	717	காம்படு	367
கருமயோகமும்	650	காமமுளை	248
கரையிது கல்விக்கு	981	காமருசித்த	648
கரைகுறுக	430	காமவெம்தழல்	183
கரைந்துகு மனம்	756	காமவெந்	404
கரைபொரு	983	காமிஆகி	427
கல்எறி பட	677	காய்	441
கலந்தவர்	572	காரணஉபாதி	976
கலையை	6	காரணம்	122
கழுமணித்தவிசு	1050	காரில்	258
களங்கம்	977	காலமும் கருமமும்	833
களங்க	84	காலன்நின்முகனம்	686
களத்திடை	223	காலை	271

Koviloor Digital Library

காலையில்	288	கொக்கிதேவன்	618
காவலன்	577	கொங்குஅவிழ்	153
காவி	452	கொங்கை	185
காவில் நீடும்	860	கொங்கைப்பார	544
கானல்	408	கொங்கைப்பொறை	534
குகைஇதயம்	942	கொடியவர்	673
குங்குமம்நறிய	995	கொடிய	412
குடிப்பன	821	கொண்டல்கள்	905
குடுமி அம்கிரி	964	கொல்லா	277
குண்டமே	778	கொலைகள்	505
குதிரை அம்	737	கொள்ளைவண்டு	25
குய்கமழ்	1088	கோடமை	958
குரவர் தம்	567	கோதையர்	542
குரவர் தாம்	293	கோயிலின்	575
குருசிவ	823	கோயிலின் மேவி	548
குருவருள்	156	சகளை இவ்வாறு	306
குழலும்	134	சங்கமொன்றுடன்	55
குழவி	60	சங்கம பத்திசெய்	1068
குழவியாய்	31	சங்கமம் தனக்கு	828
குளம்கரையாக	1082	சங்கர முனிநிலை	783
குறிப்பில்	688	சங்கரற்குத்தனை	797
குறிபல	812	சங்கரன் சடையில்	1004
குறில்	509	சங்கரி ஒருசூள்	118
குறுகலும்	678	சங்குஉலவு	200
குன்றெனக்கு	1092	சங்குந்தேவ	338
கூடை	174	சங்கொடு	111
கூத்தன்	636	சச்சிதானந்த	630
கூத்துக்கு	388	சத்தியால்	475
கூந்தல்	410	சந்தம்மேவுகல்	726
கூறஅரும்	1039	சமயம்எவ்வகை	1141
கெடுக்கவல்	873	சரிதைஒண்	779
கேட்ட ஆரியன்	801	சற்றுஇனும்	1084
கையில் சிவ	611	சற்றும்	352
கையொடு	389	சாக்கியனார்	672

Koviloor Digital Library

சாதனங்களுள் 690
சாதியும் 528
சாந்தன் 658
சாற்றுமச் 19
சிங்கமும் 411
சிட்டன் 796
சித்தராமனும் 882
சித்தராமனோடு 724
சித்தியும் 365
சிரல்நாடுறு 986
சிலைநுதல் 461
சிலைநுதல் வி 400
சிலை மதன் 398
சிவிகையின் 196
சிறப்புபெற்ற 685
சிறுச்சிறிது 1077
சிறுபொழுது 594
சினமுதலியமயல் 832
சினைமலர் 898
சீர்கெழுவசவன் 749
சீர்நிலை 592
சுத்தமெய்ஞ்ஞான 228
சுரகுலாதி(காப்பு) 1
சூத்திரப்பாவை 759
செங்கதிரவன் 902
செஞ்சரண் 747
செப்பமைந்த 52
செப்புறும் 581
செம்மை 1101
செய்தபிழை 939
செய்யதாள் 705
செய்யவல்ல 137
செருக்கு 691
செருக்கொடும் 61
செல்லுறழ் 234
செல்லல் 649
செவ்வாய் 340
செறிந்த மூல 914
சென்றருண் 226
சென்றவசவன் 1103
சென்றுதேடிநாம் 850
சென்னவசவன் 1097
சேடனும் புகழ் 667
சேய்எடுப்பவர் 696
சேல் 93
சொல்லரும் 283
சொற்றெரிந்த 35
சொல்லிய 764
சொற்போர் செய் 260
சொற்போர் புரிவர் 97
சொற்றிடும் 761
ஞானகுருபரன் 946
ஞானம் கொண்டு 963
ஞேயம் ஞானம் 852
தக்க 440
தக்கன் 273
தண்ண அம் 1048
தண்ட நாயகன் 888
தண்டநாயகன் 1021
தண்டநாயகன் 1018
தண்டநாயகன் 1032
தண்டநாயகனொ 844
தண்டினர் கரக 1005
தண்ணுமை 208
தத்துவம் முற்று 645
தந்திர முடிவு 1036
தந்தை தாய் 354
தந்தைதாய் உளம் 349

Koviloor Digital Library

தம்பிரான்	731	தாவில் பூசனை	1055
தமக்கு	553	தாழ்ந்தோர்	96
தமமில்	391	தான் அலாது	847
தயிலமுடன்	199	தான்உறும்	822
தரித்த	507	தான்எதிர்	599
தருக்க	382	தான்செய் வினை	605
தலைமைகொள்	829	தான்செயும்	295
தலையில்	841	திங்கள்	186
தலைவ	70	திருந்தஇவ்வகை	838
தளர்ந்துழி	116	திருந்திய	500
தளிரி	245	திருந்திய பளிங்கு	978
தளிர்க்குள்	906	திருநகர் இதனை	1000
தளிர்த்த	222	திருப்ப ருப்பதம்	931
தறிபோல்	331	திறந்து மூடும்நின்	739
தன்	82	திறை	103
தன்இனம்	704	தீங்கனி	146
தன்கனி	236	தீங்கினை எதிர்	675
தன்னை அறிந்து	536	தீங்கு	438
தன்னை ஓர்	896	தீதறு	243
தன்னைக்காண	533	தீதுசெய்	531
தன்னை கொல்லி	689	தீயனேன் அறிவி	703
தன்னைச் சச்சிதா	922	துதிப்ப	67
தன்னைச் சிவம்	1126	துயிலை இன்பு	867
தன்னை நிந்தை	167	துளிக்கும்	457
தன்னைப் பேத	1127	துறவறம் மனை	766
தனுஉள அளவும்	830	துறவு	583
தனையர்	450	துன்றிய மெய்த்	187
தன்னை விரும்பி	734	துன்று	1066
தாஇலாத	864	தூங்குஇசை	899
தாடலை	506	தூண்டு	112
தாணுவின் உயர்	772	தூது சென்றவர்	558
தாம்	217	தூது	549
தாய்க்கு வழுவில்	272	தூநிரு	486
தாய்வாய்	786	தூய்தாகிய	1128

Koviloor Digital Library

தூய	270	நல்லறிவு அவன்	953
தென்னவன்	147	நல்லன தீயன	949
தெரியல்	1035	நலம்உறும் ஓர்	780
தெள்ளுவார்	54	நலம்கிளர்மதன்கு	1010
தேறுநீர்	853	நலமலி	570
தேவரும்	1037	நள்ளா	257
தேவர் உண்ண	1105	நளிர்	95
தேசிகன் அல்லம	641	நற்குறி பலவும்	990
தொக்க	269	நற்றூமம்	202
தொடர்த்துளை	745	நறவ	90
தொடலும்	610	நறியபுகை	203
தொல்லை	191	நறும்பழம்	730
தொல்லை நின்திரு	418	நறுமலர்க் குழல்	903
தொல்லையில்	75	நறுமலர் நிறையும்	597
தொழிலால்	784	நன்னக	465
தோல்உடை	45	நன்மைஎன்பன	484
தோள்வலம்	1006	நன்றிகொள்	17
நகம்தரும்	34	நனவொ	432
நகைமதி பிள்ளை	897	நாடிய	282
நங்குரவனை	669	நாம்பாற்	341
நடம்பயில்	468	நாயின்	407
நண்ணிய நங்கண	1138	நாலு	424
நண்ணிவெண்	240	நாள்தொறும்	892
நண்ணுறு மதியில்	907	நாற்கதி	13
நந்தனம்தரு	1054	நாற்குணங்களும்	842
நந்திஎன்கின்ற	481	நான்நினைந்தனன்	919
நந்திதன் அன்பை	1033	நான்முக	24
நந்திநல் வசவன்	1136	நானியக்கில்	347
நந்தியென்தனை	478	நிகழ்ந்து உலகு	662
நரர்வடி வாயினும்	806	நித்தியன் நிமலன்	718
நல்எழில்	357	நிந்தைசெயல்	564
நல்லசகுனம்	262	நிந்தைசெய்து	748
நல்லசெய்து	870	நிரந்தரம்	216
நல்லமதம்	541	நில்லாதுபோம்	972

Koviloor Digital Library

நிலமகள்	760	படிகொண்	65
நின்கருத்து	562	படிமிசை	595
நின்தன்	175	படியில் கல்	512
நின்றபோது	312	படியில்வந்த	632
நின்றமனம்	973	படியில் வள்ளி	324
நின்றவர்	516	படை	68
நின்றவன்	598	படைத்திடும்	1094
நின்னால்	615	பண்டு	337
நின்னைஅறியா	938	பணிந்து	693
நின்னைஅறிவன்	788	பத்தர்	600
நின்னைநோக்கவும்	881	பத்தர்கள்	1112
நின்னையும்	318	பத்தரைப்	835
நினைவினால்	979	பத்திக் கடலே	793
நினைவவன்	242	பத்தியில்	1065
நீநவில் அல்ல	379	பதியும்அப்	1002
நீர்நிலை	392	பதியை	157
நெஞ்சம் ஆரழல்	845	பந்தபாசம்	633
நெஞ்சம் சோகம்	1129	பந்தம் அகன்ற	785
நெஞ்சம் மாதுஉமை	871	பயக்குறும்	494
நெஞ்சம் யாதினால்	421	பயனிலை	362
நெஞ்சுஎனும்	125	பயிலும்	519
நெடியவன் குறுகி	904	பரசிவம்	18
நெற்றித்தீவிழி	692	பரசிவலிங்க	753
நெறிபல	375	பரசிவ லிங்கம்	894
நெறிமுறை	488	பரம முத்தி	862
நையா	339	பரமனை	511
நோக்கினால்	1093	பரவு	135
நோய்ப்	368	பரவை	11
நோற்று	962	பரற்	444
பங்க அளற்று	8	பரிகளின்	1012
பங்கன்இருந்த	639	பரிந்த நந்தி	1102
பசிக்கு மருந்து	787	பருப்புஒரு	1080
பஞ்சின்	403	பருபவேதத்தால்	1147
படிக்குள்	89	பருவம்உற்	715

Koviloor Digital Library

பலரொடு	527	புண்டரம்	1053
பள்ளம்புகு	985	புண்ணிய	809
பற்றி	416	புண்ணியம்	573
பற்றும்	212	புண்ணியர்	1156
பறந்திடா	44	புத்த	46
பறை	397	புரத்தை	36
பனிவரை	947	புரம்சுடு	482
பாகம்	141	புல்மரம் நெளிபுழு	805
பாகம் ஒரு	5	புலம்பி நைந்து	625
பாகு	184	புலன்களை ஒழித்த	719
பாங்கியர்	297	புறத்து கருமம்	607
பாசம் ஏது	1062	புறங்கறை	15
பாடினன்	837	புறம்தரு சமயம்	1143
பாடும்	456	புறந்தினம் செயும்	1056
பாண்டில் மாவ	732	புறம்பு	865
பாண்டில்மேல்	1086	புனலின்	268
பாயும்	172	பூங்கொடி	501
பார்கெழு	1154	பூசனை செய்த	1074
பார்த்தருள்	652	பூசனை செயாதகை	820
பாவமும்	402	பூசனைத்தொழில்	1056
பாவி யேன்	627	பூசை	371
பானல்	405	பூதம் நீஅலை	851
பிணி	123	பூத லத்தை	83
பிறந்த ஆகம்	925	பூப்புனை கையும்	819
பிறந்தபயன்	943	பூம்தொடை	145
பிறந்த மெய்	508	பூவாய்	2
பிறப்பு எனும்	351	பூவினோடு	735
பிறப்புஒரு	642	பெடையொடு உற்று	92
பிறைதவழும்	201	பெடையொடு சுரு	483
பின்னரும்	1076	பெண்ணிற்கு	10
பின்னும்	63	பெய்யும்	66
பீடுஉறு கருவி	901	பெயர்க்குறு	959
பீடுஉறு மானிட	366	பெரியவர் சிறியவர்	1050
புகன்றவர்	124	பெரியவர் தன்மை	708

Koviloor Digital Library

பெருகு 415
பெருந்தகை மாச்சி 757
பெருந்தகை வசவ 521
பேரறிவு இன்னா 653
பேரா னந்தம் 336
பொங்கும் 414
பொடிஅணிந்து 622
பொருஅரும் 1157
பொருஇல்சற் 815
பொருஇலா 1029
பொருந்தும் 514
பொருப்புஇறை 895
பொருவு 369
பொலிவ 464
யொழிந்தி 286
பொறிகள் கரணம் 1098
பொறித்த 742
பொறியில் புறத்து 608
பொறியிலி 470
பொறிவழி செலாது 885
பொறைஉ றும்படி 687
பொறைக்க 86
பொன் 179
பொன்எயிலின் 211
பொன்னால் அமை 987
பொன்னிற்குன்று 893
பொன்னை 445
போக்க 467
போகபூமி 73
போக்கும் 130
போதகக் குருநம் 994
போதம் ஆகும் 965
போதன்ஆகிய 944
மக்கள் மானிடர் 872
மகனும் 448
மங்கல 171
மங்கை பால் 556
மங்கைமீர் 296
மங்கை வரும் 254
மங்கையை 588
மட்டவிழ் 582
மட்டற ஒடு 644
மட்டுக் கணை 138
மடந்தையை 576
மண்டலம் 1045
மண்டு 798
மண்ணிடை 1030
மண்ணுலகில் 428
மணம் 294
மணிஅமைந்த 161
மத்த 343
மத்தமது 471
மத்தர்வாத 861
மத்தளம் 439
மதலை 912
மதிபெறு 487
மதியிலார் 1153
மதுகை 308
மந்தரகிரி 126
மந்திர 372
மந்திரி 520
மயக்கும் 233
மயங்குதல் 1111
மயலளற்று 16
மயல்இலா 1034
மயில் 178
மரிப்பொடு 643
மருந்தினால் 926

Koviloor Digital Library

மருந்து	924	மாதர்வல்	230
மருண்ட	679	மாதிப்	136
மருவிநின்	1023	மாதுஉரு	151
மருள்	584	மாந்தளிர்	150
மலர்மிசை	676	மாயை இடையை	252
மலைஎன	1087	மாயைகவிழ	133
மலைமகள்	364	மாயைதன் தோல்வி	1011
மழுவலம்	359	மாயைதனை	436
மறவினை	663	மாயை தோன்றிய	968
மறிந்திடாது	879	மாயைப்பெயர்	128
மறைத்திருந்த	623	மாயைபோக	413
மறை பல	960	மாயைமுலைக்கு	206
மறையில்	966	மாயையால்	346
மறையும்	100	மாயையை	304
மன்னர்	259	மாயை வந்த	314
மன்னவன்	149	மாரவேள்	162
மன்னன் அறி	267	மாரன் எடுத்த	4
மன்னன் விச்	1017	மாலருந்திய	406
மன்னும் காம	878	மாலும்	154
மனத்திருள்	998	மாலை	399
மனத்தை	1119	மாற்றும்	390
மனம் இலிங்க	863	மாறன் அடித்த	1109
மனம் ஒருத்	868	மானனை	302
மனிதருள்	722	மானமும்	292
மாசறும்	1155	மானிட	298
மாசறு	479	மிடியட	472
மாணப்பூண்	41	மிடியன்	131
மாணும்	540	மின்போல் அழியும்	603
மாதர் இவ்வணம்	409	மீண்டு நந்தி	1108
மாதர் இவ்வகை	177	முக்கண் நாயகன்	727
மாதவர் இருவர்	651	முகங்கள்	56
மாதவர் எண்ணி	751	முகிழ்	358
மாதவர்	773	முகையிடை	580
மாதர்கள்	529	முடிக்கும்	434

Koviloor Digital Library

முத்தணி	109	யாவன் என்று	682
முதல்நிலை	1041	யாவும் ஆகி	634
முதல்வி	360	யான் இது	1117
முரசொடு	1040	யான்எனது	1115
முல்லை	48	யான் நினைந்த	918
முற்றிய	666	வசவன் உள்ளம்	1049
முற்றும்	940	வசவன் நிலை	1099
முன்இருந்த	1052	வசவன் பால்	856
முன் புகழ்	568	வசவனை	884
முன்னிய	108	வஞ்ச	419
முன்னுற	386	வஞ்சி நடந்தே	545
முனிவரர்	120	வடைபடு திகிரி	1081
முனிவினைக்	1051	வண்டு படாது	537
முனிவுறேல்	77	வண்டாமரை	266
மூத்தவர்	1150	வணங்கி	214
மூல	321	வணங்கிய அவ	714
மெய்த்தடம்	661	வணங்கிய அற	777
மெய்த்தவம்	401	வணங்கு மாதின்	628
மெய்ம்மை	78	வந்தநல் விருந்து	563
மெய்மை சிவ	325	வந்தவர் வருபவர்	1064
மேருமந்தர	908	வந்தனன் வசவ	513
மேவுதீ வினை	954	வந்தனை	640
மைத்தடம்	215	வந்து பரம	614
மைந்தனை	523	வந்து பொன்	311
மொழியி	525	வந்து வேந்தன்	459
மோகம் இல்	826	வயங்கும்	181
மோகினி சகளை	299	வயலிடம்	996
மோகினி தவம்	237	வரிக்கயல்	94
மோட்டி	229	வருக	345
யாக்கை தாம்	635	வருமுலை	144
யாக்கை தான்	917	வரையில்	839
யாம்தொழில்	680	வல்லன் என்று	781
யாவர்க்கும்	709	வல்லி உள்ளம்	253
யாவரும் தனது	950	வல்லி கொங்கை	560

Koviloor Digital Library

வல்லிதன்	394	விதுவை	158
வலம் ஆடின	989	வியல்நிலம் மேவிய	1132
வலம்புரி	241	விரதங்கள்	530
வலியவன்	706	விரிந்த நெஞ்சம்	1121
வழுவினன் அன்பு	1067	விரிந்த வாழையின்	857
வள்ளல் இன்று	802	விருந்தினுக்கு	497
வள்ளல்நல்	743	விருப்பு வெறுப்புரு	1113
வள்ளல் நாள்	855	விரைந்து	453
வறியன்	87	விலக்கும் உற்பவ	728
வாங்கிய	517	விலையில்	224
வாங்கும்	935	விலைவரம்பு	221
வாங்கு வாளினை	930	விலைவரம்பு	160
வாசவன்	363	விழற்கு இறைப்ப	657
வாடிய	491	விழுந்தன	492
வாதித்து	535	விழுவள்	455
வாய்த்துள	142	விள்அரு நல்சிவ	827
வாயில்	495	விளங்கிழை	71
வாயு	332	விளங்கொளி	28
வாயுரை	209	விளிம்பு	220
வார்க்குங்கும	9	வினை அடுத்த	859
வாரணம் ஆகும்	1120	வினைப்பயன்	449
வாவி ஆலயம்	651	வினையினால்	344
வாவியாவும்	85	வீடு	255
வாவிச்செங்கமல	91	வீடுவப்பவர்	846
வான்எறிந்து கை	937	வீடு விரும்பி	646
வானம் அல்லேன்	1125	வீரம்	538
வானிடைக்	1027	வீரமா	524
விஞ்சை மாதர்தம்	932	வீர மாதருக்கு	63
விஞ்சையர் உளர்	900	வீரவேள்	176
விஞ்சையர் மகிழ்	1025	வெங்கொலை	834
விடம்	194	வெண்திங்கள்	435
விடுவன காமம்	824	வெம்மை எதன்கண்	792
விடை	239	வெம்மை ஒழிந்து	334
விண்ணினை	287	வெருவற	361

Koviloor Digital Library

வெருவுறப்படும்	923
வெள்ளவேணி	7
வெள்ளிமால்	22
வேண்டிய	197
வேண்டிய வடி	381
வேந்தன்	551
வேயை	101
வேனெ	451
வேள் அளித்த	182
வேறாம்	330
வேனல்	165
வேனின	281
வைதவன்	707

Koviloor Digital Library

ஸ்ரீமுருகன் துணை
திருக்கயிலாய பரம்பரை
மயிலம் பொம்மபுர ஆதீனம்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்

மயிலம் & பொம்மையபாளையம்
திருமடம் வெளியீடுகள்

வெளியீடு எண்	நூல்களின் பெயர்	பதிப்பு ஆண்டு
20	இட்டலிங்க அபிடேக மாலை (மூலமும் - பழைய உரையும்)	1965
21	காசி வழித்துணை விளக்கம்	1965
22	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சுவிடு தூது (மூலமும் - குறிப்புரையும்)	1966
23	நெடுங்கழி நெடில், குறுங்கழிநெடில் (மூலமும் - உரையும்)	1967
24	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் (மூலமும் - குறிப்புரையும்	1968
25	கைத்தல மாலை,சிவநாம மகிமை (மூலமும் - உரையும்)	1969
26	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 1-ஆம் தொகுதி	1987
27	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 2-ஆம் தொகுதி	1988
28	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 3-ஆம் தொகுதி	1989
29	நிரஞ்சன மாலை (மூலமும் - உரையும்)	1990
30	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 4-ஆம் தொகுதி	1990

Koviloor Digital Library

வெளியீடு எண் :	நூல்களின் பெயர்	பதிப்பு ஆண்டு
31	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 5-ஆம் தொகுதி	1991
32	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 6-ஆம் தொகுதி	1992
33	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தாலாட்டு (மூலமும் - உரையும்)	1992
34	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 7-ஆம் தொகுதி	1993
35	அல்லமாபிரபு தேவர் சடுத்தலம்	1993
36	ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் திருப்பள்ளி எழுச்சி மூலமும் உரையும்	1993
37	சோணசைலமாலை, நால்வர் நான்மணிமாலை நன்னெறி மூலம் மட்டும்	1993
38	இட்டலிங்கப் பெருமான் தோத்திரத் திரட்டு - மூலம் மட்டும்	1993
39	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 8-ஆம் தொகுதி	1994
40	மிசிர சடுத்தலம் (குறிப்புரை)	1994
41	சோணசைலமாலை (நூலாய்வு)	1994
42	நால்வர் நான்மணிமாலை ஓர் ஆய்வு	1994
43	திருச்செந்தில் நிரோட்டகயமக அந்தாதி, பழமலை அந்தாதி (மூலமும் - உரையும்)	1994

Koviloor Digital Library

வெளியீடு எண்	நூல்களின் பெயர்	பதிப்பு ஆண்டு
44	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 9-ஆம் தொகுதி	1995
45	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சுவிடுதூது – 2ஆம் பதிப்பு	1995
46	பெரியநாயகியம்மை கலித்துறை (மூலமும் - உரையும்)	1995
47	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 10-ஆம் தொகுதி	1996
48	பரம ரகசிய சடுத்தலம் (மூலமும் - பழைய உரையும்)	1996
49	ஸ்ரீ பிட்சாடன நவமணிமாலை (மூலமும் - உரையும்)	1996
50	ஸ்ரீ பசவேசர் பொன்மொழிகள் 11-ஆம் தொகுதி	1997
51	சிவ சடுத்தல சாரம், சிவயோக இலக்கணம் அக்கமாதேவி சிருட்டி	1997
52	திருவெங்கைக் கலம்பகம் (மூலமும் - உரையும்)	1997
53	திருவெங்கை உலா(மூலமும் உரையும்)	1998
54	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் தனிப்பாடல்கள்(மூலமும் - உரையும்)	1998
55	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய தேசிகேந்திர சுவாமிகள் அட்டகம், போற்றிப் பஞ்சகம்.	1999
56	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பதிற்றுப் பத்தந்தாதி	1999

Koviloor Digital Library

வெளியீடு எண்	நூல்களின் பெயர்	பதிப்பு ஆண்டு
57	திருக்கூவப்புராணம் (மூலமும் - உரையும்)	1999
58	ஸ்ரீ மகான் பசவேசர் பொன்மொழிகள் 1 – 100 முதல் பகுதி	1999
59	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் சீர்த்தி மாலைத்திரட்டு – (6 தலைப்புகள்)	1999
60	ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பனுவல் திரட்டு (மூலமும் - உரையும்) (2 தலைப்புகள்)	2000
61	ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் மும்மணிக்கோவை	2000
62	ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நூற்றிரட்டு மூலம் (5 நூல்கள் தொகுப்பு)	2000
63	ஸ்ரீ மகான் பசவேசரின் பொன்மொழிகள் 101 – 200 இரண்டாம் பகுதி	2000
64	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத் தமிழ் (மூலமும் - உரையும்)	2000
65	ஒருவாறும் இன்றி பாடல் விளக்கம் (ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத் தமிழ் பாடல் விளக்கம்)	2001

Koviloor Digital Library

வெளியீடு எண்	நூல்களின் பெயர்	பதிப்பு ஆண்டு
66	கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்களில் திருக்குறள் ஆட்சி	2002
67	கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் நன்னெறி வெண்பா நாற்பது (மூலமும் - உரையும்)	2002
68	ஸ்ரீமகான் பசவேசரின் பொன்மொழிகள் நான்காம் பகுதி	2003
69	குருகுஜேசம் - முதல் தொகுதி	2003
70	நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்களில் கற்பனைகள்	2003
71	ஸ்ரீ மகான் பசவேசரின் பொன்மொழிகள் 3 ஆம் பகுதி	
72	சோணசைல மாலை (மூலமும் - உரையும்) - முதற்பதிப்பு	2003
73	நல்லாற்றூர் - துறைமங்கலம் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்கள் (இரண்டு தொகுதிகள்)	2004
74	குருகுகேசம் - இரண்டாம் தொகுதி	2005
75	நால்வர் நான்மணிமாலை மூலமும் உரையும்	2005
76	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் வரலாறு	2005


Koviloor Digital Library

வெளியீடு எண்	நூல்களின் பெயர்	பதிப்பு ஆண்டு
77	சோணசைல மாலை (மூலமும் - உரையும்) 2ஆம் பதிப்பு	2005
78	இட்டலிங்க பெருமான் தோத்திரத்திட்டு (5 நூல்கள் தொகுப்பு)	2005
78A	பசவேசர் பொன்மொழிகள் - 5	2008
79	பசவேசர் பொன்மொழிகள் - 6	2009
80	பசவேசர் பொன்மொழிகள் - 7	2010
81	பரசிவப் பாமாலை	2011
82	பிரபுலிங்க லீலை (மூலமும் - உரையும்)	2012

KOVILOOR ANDAVAR * LIBRARY, KOVILOOR *
A. No. 16233

Koviloor Digital Library

Koviloor Digital Library



சிவப்பிரகாச சுவாமிகளால் அருளிச் செய்யப் பெற்ற காப்பியம், தத்துவம், தோத்திரம் முதலிய நூல்கள் முப்பத்து இரண்டுள் காப்பிய வகையில் சேர்வது பிரபுலிங்கலீலை என்பதாகும். தமிழ் அறிஞர் உலகம் இக்காப்பியத்தை, 'காவிய இரத்தினம்' என்று போற்றிப் பாராட்டுகிறது. பெருமைசேர் இந்நூலால் மக்களின் மெய்ஞானம் பரிணமிக்கப் பெற்று ஆன்ம ஈடேற்றம் உற்று பல் வளங்கள் பெற மயிலந்தண் மாமலை ஸ்ரீமுருகன் திருவருளையும் நமது ஆதீன ஆதிகுரு ஸ்ரீபாலசித்தர், ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள் குருவருளையும் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

- ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள்
20ஆம் பட்டம்

ISPN-13-978-81-926955-0-1